[15th December 1971

[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்]

மன்றத்திற்குப் போய். எங்கள் தியேட்டர் மீது கொடுமை செய்கிறார்கள், அரசாங்கம் வரி பாக்கியை வசூலிக்கக் கூடாது, ஸ்டே வேண்டுமென்று கேட்டார்கள். உயர் நீதி மன்றம் ஸ்டே கொடுத்ததோடு மட்டுமில்லாமல் ஒரு காட்சி வசூலை நீங்கள் வரி பாக்கியாக எடுத்துக்கொள்ளுங்கள் என்ற தீர்ப்பினைத் தந்தார்கள். அப்படியே நாமும் எடுத்துக்கொண்டோம். 45,000 ரூபாய் அரசாங்கத்திற்கு வரி பாக்கி இருந்தது. இப்பொழுது 1½ ஆண்டுகளுக்குப் பிறகு 1½ இலட்சத்திற்கும் மேலாக அந்த பாக்கி கூடிவிட்டது. மீண்டும் உயர் நீதி மன்றத்திற்கு நாங்கள் மனுச் செய்தோம். டிக்கட்டிலே சீல் இல்லாமல் டிக்கட் விற்பனை செய்து நடக்கும் ஒரு சினிமா கொட்டகை இங்கேதான் இருக்கிறது, இது மிகவும் தவறு என்று மனுச் செய்தோம். அப்பொழுது அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், சர்க்கார் இரண்டு காட்சி வசூலை வேண்டுமானாலும் வரி பாக்கியாக எடுத்துக் கொள்ளட்டும், சினிமா கொட்டகையை நிறுத்தாதே என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் கேளிக்கை வரிச் சட்டத்தின்படி எந்தச் சினிமா கொட்டகையின் உரிமத்தையும் ரத்து செய்யும் அதிகாரம் இல்லை. சினிமாட்டோகிராப் சட்டத்தின்படி தான் அப்படி ரத்து செய்ய முடியும். இந்தச் சட்டத்திற்குள்ளே எப்படியாவது அதைப் புகுத்த வேண்டுமென்று சட்டத் துறையைக் கலந்து புதியதொரு சட்டத்தை இயற்ற அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிக்கல்களினால் தான் வரி பாக்கி வந்துவிடுகிறது. சிலர் சீல் போடாமலேயே திருட்டுத் தனமாக சினிமா டிக்கெட்டுகளை விற்று வருகிறார்கள். அதற்கு இப்பொழுது இருக்கிற சட்டத்திலேயே நடவடிக்கை எடுக்கிறோம். சட்டத்திலே ஐந்தாண்டுவரை வரி விதிக்கலாம் என்று இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது நிலுவைகள் இருக்கத்தான் செய்யும். சிலர் பேங்குகளில் இருக்கும் அந்தப் பணம் தங்கள் பெயரில் இல்லை என்று வாதாடுவார்களானால், அந்தப் பணத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். யாரையும் கொடுமைப்படுத்த இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை.

அடுத்து திரு. ஜெயராம செட்டியார் பேசும்பொழுது, நகராட்சி ஆணையாளருக்குச் சோதனை போடும் அதிகாரம் வேண்டும் என்றார். அப்படிச் சோதனை போடும் அதிகாரம் எற்கெனவே அவருக்கு இருக்கிறது. முனிசிபாலிடியிலே இருக்கும் சானிடரி இன்ஸ்பெக்டர்களுக்குக்கூட அந்த அதிகாரம் இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்கள். எக்சிகியூடிவ் அதிகாரிகள் இவர்களெல்லாம் கூட ஊராட்சி மன்ற எல்லைக்குள்ளே இருக்கும் சினிமா கொட்டகைக்குள்ளேயே சென்று சோதனைபோட அதிகாரம் இருக்கிறது. ஆனால், அவர்களெல்லாம் இதைச் செய்வதில்லை. நேற்று பேரவையிலேகூட இதுபற்றி நான் குறிப்பிட்டேன்.



15th December 1971]

[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்]

ஊராட்சி, பேரூராட்சி போன்றவைகளுக்கு வருகின்ற பணமாக இருப்பதால், அவர்களெல்லாம் கூட இந்தச் சோதனையிலே அக்கரை, காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்த வகையிலே அந்த வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்க இவர்களெல்லாம் உதவ வேண்டுமென்று கேட்டு இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 50 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken into consideration for making recommendations.

DEPUTY CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendation.

(5) *The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971).*

DEPUTY CHAIRMAN : The Hon. the Minister for Co-operation will now move the motion.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

இந்த மசோதாவிற்கான காரண விளக்கங்கள் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. புதிதாக எந்தக் காரணத்தையும் சொல்ல நான் எண்ணவில்லை. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971), as passed by the Assembly, be taken into consideration".

திரு. அய்யண்ணன் அம்பலம் : துணைத் தலைவரவர்களே. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டத்தை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தின் மீது இதற்கு முன்னால் இந்த மன்றத்திலே கூட்டுறவிலே தொடர்பு கொண்ட பல உறுப்பினர்கள் பேசும்பொழுது, இந்த அரசு கூட்டுறவுத் துறையிலே ஜனநாயகத்தைக் கொலை செய்துவிட்டது, ஜனநாயக ரீதியிலே தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் எல்லாம் வெற்றி பெறவில்லை

@ Printed as appendix V in pages 632-633

[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்]

மன்றத்திற்குப் போய். எங்கள் தியேட்டர் மீது கொடுமை செய்கிறார்கள், அரசாங்கம் வரி பாக்கியை வசூலிக்கக் கூடாது, ஸ்டே வேண்டுமென்று கேட்டார்கள். உயர் நீதி மன்றம் ஸ்டே கொடுத்ததோடு மட்டுமில்லாமல் ஒரு காட்சி வசூலை நீங்கள் வரி பாக்கியாக எடுத்துக்கொள்ளுங்கள் என்ற தீர்ப்பினைத் தந்தார்கள். அப்படியே நாமும் எடுத்துக்கொண்டோம். 45,000 ரூபாய் அரசாங்கத்திற்கு வரி பாக்கி இருந்தது. இப்பொழுது 1½ ஆண்டுகளுக்குப் பிறகு 1½ இலட்சத்திற்கும் மேலாக அந்த பாக்கி கூடிவிட்டது. மீண்டும் உயர் நீதி மன்றத்திற்கு நாங்கள் மனுச் செய்தோம். டிக்கட்டிலே சீல் இல்லாமல் டிக்கட் விற்பனை செய்து நடக்கும் ஒரு சினிமா கொட்டகை இங்கேதான் இருக்கிறது, இது மிகவும் தவறு என்று மனுச் செய்தோம். அப்பொழுது அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், சர்க்கார் இரண்டு காட்சி வசூலை வேண்டுமானாலும் வரி பாக்கியாக எடுத்துக் கொள்ளட்டும், சினிமா கொட்டகையை நிறுத்தாதே என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் கேளிக்கை வரிச் சட்டத்தின்படி எந்தச் சினிமா கொட்டகையின் உரிமத்தையும் ரத்து செய்யும் அதிகாரம் இல்லை. சினிமாட்டோகிராப் சட்டத்தின்படி தான் அப்படி ரத்து செய்ய முடியும். இந்தச் சட்டத்திற்குள்ளே எப்படியாவது அதைப் புகுத்த வேண்டுமென்று சட்டத் துறையைக் கலந்து புதியதொரு சட்டத்தை இயற்ற அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிக்கல்களினால் தான் வரி பாக்கி வந்துவிடுகிறது. சிலர் சீல் போடாமலேயே திருட்டுத் தனமாக சினிமா டிக்கெட்டுகளை விற்று வருகிறார்கள். அதற்கு இப்பொழுது இருக்கிற சட்டத்திலேயே நடவடிக்கை எடுக்கிறோம். சட்டத்திலே ஐந்தாண்டுவரை வரி விதிக்கலாம் என்று இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது நிலுவைகள் இருக்கத்தான் செய்யும். சிலர் பேங்குகளில் இருக்கும் அந்தப் பணம் தங்கள் பெயரில் இல்லை என்று வாதாடுவார்களானால், அந்தப் பணத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். யாரையும் கொடுமைப்படுத்த இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை.

அடுத்து திரு. ஜெயராம செட்டியார் பேசும்பொழுது, நகராட்சி ஆணையாளருக்குச் சோதனை போடும் அதிகாரம் வேண்டும் என்றார். அப்படிச் சோதனை போடும் அதிகாரம் ஏற்கெனவே அவருக்கு இருக்கிறது. முனிசிபாலிடியிலே இருக்கும் சானிடரி இன்ஸ்பெக்டர்களுக்குக்கூட அந்த அதிகாரம் இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்கள். எக்சிகியூடிவ் அதிகாரிகள் இவர்களெல்லாம் கூட ஊராட்சி மன்ற எல்லைக்குள்ளே இருக்கும் சினிமா கொட்டகைக்குள்ளேயே சென்று சோதனைபோட அதிகாரம் இருக்கிறது. ஆனால், அவர்களெல்லாம் இதைச் செய்வதில்லை. நேற்று பேரவையிலேகூட இதுபற்றி நான் குறிப்பிட்டேன்.



[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்]

ஊராட்சி, பேரூராட்சி போன்றவைகளுக்கு வருகின்ற பணமாக இருப்பதால், அவர்களெல்லாம் கூட இந்தச் சோதனையிலே அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்த வகையிலே அந்த வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்க இவர்களெல்லாம் உதவ வேண்டுமென்று கேட்டு இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 50 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken into consideration for making recommendations.

DEPUTY CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendation.

(5) *The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971).*

DEPUTY CHAIRMAN : The Hon. the Minister for Co-operation will now move the motion.

*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

இந்த மசோதாவிற்கான காரண விளக்கங்கள் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. புதிதாக எந்தக் காரணத்தையும் சொல்ல நான் எண்ணவில்லை. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971), as passed by the Assembly, be taken into consideration".

**திரு. அய்யண்ணன் அம்பலம்:** துணைத் தலைவரவர்களே. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டத்தை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தின் மீது இதற்கு முன்னால் இந்த மன்றத்திலே கூட்டுறவிலே தொடர்பு கொண்ட பல உறுப்பினர்கள் பேசும்பொழுது, இந்த அரசு கூட்டுறவுத் துறையிலே ஜனநாயகத்தைக் கொலை செய்துவிட்டது, ஜனநாயக ரீதியிலே தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் எல்லாம் வெற்றி பெறவில்லை

---

@ Printed as appendix V in pages 632-633

127-88—5

[15th December 1971

[திரு. அய்யண்ணன் அம்பலம்]

என்றெல்லாம் கூட்டுறவுத் துறை அமைச்சர்மீது குற்றம் சாட்டினார்கள். ஆனால் என்னுடைய ஒரு சில அனுபவத்தை இந்த மாமன்றத்திலே சொல்லலாம் என்று கருதுகிறேன். நான் கூட்டுறவுத் துறையிலே பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவன். என்னுடைய சங்கத்திலே உறுப்பினராக நான் சேர்ந்தேன். அந்தக் கூட்டுறவுத் துறை மத்திய பாங்கிக்கு தேர்தல் சங்க மேற் பார்வையாளர் மட்டத்தில் நடந்தது. அந்தத் தேர்தலிலே நான் பங்குகொள்ள வேண்டும் என்று இருந்து எனக்கு ஆதரவாக இருந்த 25 உறுப்பினர்களை நான் அழைத்துக் கொண்டு சென்றேன். ஆனால், தேர்தலிலே எனக்கு ஆதரவாக ஓட்டளிக்க வந்த 6, 7 உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என்ன காரணம் என்று கேட்டால், அந்தக் கூட்டுறவு சொசைட்டிக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களை வாபஸ் செய்துவிட்டதாக கோவாப்பரேடிவ் புத்தகத்திலே திருத்தம் எழுதிக் கொண்டார்கள். இதுதான் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. மதுரை மத்திய வங்கியை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே முதல் நாள் வரை கூட்டுறவு காரியதரிசியாக, அதாவது சம்பளம் பெற்ற ஊழியராக இருந்தவர் அடுத்த மாதம் அந்தச் சங்கத்திற்குத் தலைவராக வந்துவிட்டார்கள். 'அதைச் சட்டப்படி தடுக்க முடியவில்லை.' இந்த அளவிலே தான் தேர்தல் என்பது இருக்கிறது. அடுத்த ஆண்டு தேர்தலிலே பங்கு கொள்ளாமல் எச்சரிக்கையாக நான் இருப்பேன். இந்த நிலையிலே இங்கே ஜனநாயகம் இருக்கிறதா என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இது எல்லாம் இப்பொழுது நடைபெற்றதில்லை.

**திரு. அய்யண்ணன் அம்பலம்:** இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஒரு புரட்சியை இந்தக் கூட்டுறவிலே செய்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது என்னவோ 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததுதான். இந்த அளவுக்குக் கூட்டுறவுத் துறையிலே புரட்சி செய்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் போன்ற இளைஞர்களுக்கு எல்லாம் நல்ல ஊக்கம் தரும் வகையிலே . . . (சிரிப்பு) மதுரை மத்திய பாங்கை எடுத்துக்கொண்டால் நல்லது. அங்கே தலைவராக இருப்பவர்கூட என்னைப் போன்ற இளைஞர்தான். இந்த அர்த்தத்திலேதான் நான் அதைக் குறிப்பிட்டேன். சரித்திரத்தைப் பார்த்தால் பணக்காரர்கள்தான் அதிலே ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தச் சட்டம் அவைகளையெல்லாம் முறியடிக்கிறது என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்தோடு இப்பொழுது நவீன அரிசி ஆலை பல இலட்சம் ரூபாய் செலவு செய்து பெரியார் நீர்த்தேக்கத்தினால் இரண்டு போகம் விளைவிக்கக் கூடிய பகுதிகளிலே எல்லாம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் தாலுக்கா சங்கங்கள் நிர்வகிக்கச் செய்திருக்கிறார்கள். ஆனால் 3 ஆண்டுகள் ஆகியும்



15th December 1971]

[திரு. அய்யண்ணன் அம்பலம்]

அவைகள் எல்லாம் நிர்வகிக்கப்படாமல் இருக்கின்றன பண வசதியின்மையாலும், மற்றும் நிர்வாகக் காரணங்களினாலும், அவைகள் எல்லாம் செயல்படாமல் இருக்கின்றன என்பதை இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். அதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து அவைகள் செயல்படும் விதத்திலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 5.10 p.m. இந்தச் சட்டம் இன்னும் விவசாயிகளுக்கும் கீழ்த் தர மக்களுக்கும் நல்ல முறையிலே செயல்பட, அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே கூட்டுறவு கிராம நாணய சங்கங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த வகையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இதை ஆதரித்து, அமைகிறேன்.

*** திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள கூட்டுறவு சட்டத் திருத்த மசோதா அவசியமில்லாதது என்று நான் கருதுகிறேன். இதற்கு முன்னால், மாநில அளவிலுள்ள பல கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு 'அபெக்ஸ் சொஸைட்டீஸ்' என்ற வகையில் மாநிலச் சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாநில அளவிலே உள்ள மாநிலக் கூட்டுறவு வங்கி, சம்பந்தப்பட்ட வரையிலே அதற்கான சட்டமும் விதிகளும் செய்யப்பட்டு அது புதிய முறையில் திருத்தங்களுடன் நடைபெற்று வருகிறது. மாநில நிலவள வங்கியும் அதே முறையில் நடைபெற்று வருகிறது. அதைத் தவிர மாநில அளவில் செயல்படும் மார்க்கெட்டிங் சொசைட்டி ஸ்தாபனமும், மற்றும் இது போன்ற ஸ்தாபனங்களும் 'அபெக்ஸ் சொசைட்டீஸ்' என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாநிலச் சங்கங்களுக்கான விதிமுறைகள் இப்போது வகுக்கப்பட்டு வருகின்றன என்று நான் கருதுகிறேன். இவைகள் எல்லாம் மாநில அளவில் செயல்பட்டு வரும் கூட்டுறவு ஸ்தாபனங்கள். இந்தத் திருத்த மசோதா மாநில அளவில் இல்லாவிட்டாலும், மாநிலத்தில் ஏதாவதொரு பகுதியில் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்கள் சென்ட்ரல் சொசைட்டி என்ற பெயரால் அழைக்கப்பட வேண்டுமென்றும், முன்னால் மாநில அளவில் செயல்பட்டுக்கொண்டு வந்த சங்கங்களுக்கு உண்டான விதிமுறைகள் சென்ட்ரல் சொஸைட்டிக்கும் அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாநில அளவில் இல்லாது மாநிலத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் நடைபெறும் சங்கங்களை இம்மாதிரிக் கொண்டு வருவதன் நோக்கம் இப்போது மாநில அளவிலுள்ள பாங்கிகள், மத்திய பாங்கிகள், அபெக்ஸ் சொசைட்டிஸ் இவற்றின் நிர்வாகத்திலே அரசு தலையிடுவதற்கு, எத்தனை பேர் நிர்வாக சபை அங்கத்தினர்கள் இருக்க வேண்டும், அரசு எத்தனை பேரை நியமிக்கும், பிரதிநிதித்துவம் இன்னின்ன முறையில் இருக்கவேண்டும், ஆக மொத்தம் ஏற்படக் கூடிய நிர்வாகசபையில் எத்தனையில் ஒரு பங்கை அரசு நியமிக்கும் என்று விதிகள்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

செய்யப்படும். எப்படி இப்போது மத்திய வங்கிகள் நடை பெறுவதில் அரசு அந்த வங்கியினுடைய பெரும்பான்மைக்கு தகுந்தபடியாக—கோயம்புத்தூர் மத்திய வங்கிக்கு 11 பேர் அரசு நியமனம், காஞ்சீபுரம் வங்கிக்கு 9 பேர் நியமனம், இன்னும் சில வங்கிகளில் 6-7 என்ற வகையிலே நியமனம்—நிர்வாக சபையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்று கருதுகிறதோ அதைப் போல் அந்த நிர்வாகத்தைத் தன்னுடைய பிடிப்பிலே வைத்துக் கொள்வதற்கான வகையில் மாநில ஸ்தாபனங்கள் மட்டுமல்ல, மாநிலத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருக்கும் எந்த ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தையும் அதற்கு சென்ட்ரல் சொஸைட்டி என்ற பெயர் கொடுத்து, தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வது இந்த மசோதாவின் நோக்கம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 'நாமினேஷன்' என்பது மொத்தத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது என்று சட்டத்தில் சொல்லியிருக்கிறோம். இது நானாக விரும்பிச் செய்தது அல்ல. இந்தச் சட்டம் சென்ற முறை வந்த போது பேரவையில் (அசெம்பிளியில்), இந்தத் திருத்தம், அப்போது காங்கிரஸ் ஒன்றாக இருந்த கட்சியின் சார்பாகக் கொடுக்கப் பட்டது. அதைத் திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் கொடுத் தார்கள். அவர்கள் காங்கிரஸ் (ஓ)வைச் சேர்ந்தவர். அவர் கொடுத்த தீர்மானத்தை நான் ஏற்றுக்கொண்டேன். அதைத் தவிர நானாக ஒன்றும் செய்யவில்லை. 1/5 என்பது அவரால் கொடுக்கப்பட்ட திருத்தம். என்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி நடைபெற்று வருகிறது. ஐந்தில் ஒரு பங்குக்கு மேல் கூடாது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: காங்கிரஸ் ஆட்சி அரசு இருந்தபோது இருந்த சட்டத்தில் 'அரசு 3 பேர்களை நியமிக் கலாம்—அரசு பிரதிநிதிகளாக நியமிக்கலாம்' என்று இருந்தது. ஆனால் வழக்கத்தில் சம்பிரதாய நடைமுறையில் ஒருவருக்கு அதிகமாக நியமிக்கப்படுவதில்லை. அதற்கு அமைச்சர் அவர்கள் வேறு ஆதாரத்தைப் பார்க்க முடியாது. எல்லோருக்கும் தெரியாது. மூன்று பேரை நியமித்துக்கொள்ளலாம் என்பதற்கு உரிமை இருந்தாலும்கூட, ஒருவருக்கு அதிகமாக நியமனம் செய்ததில்லை. அப்படி ஒருவரை நியமித்தாலும்கூட, உத்தியோகப் பற்றற்றவர்களை நியமிப்பதில். உத்தியோகப் பொறுப்பிலே உள்ளவர்களைத்தான் நியமிப்பது என்பது நடைமுறையில் இருந்து வந்தது. அதை அமைச்சர் அவர்கள் இப்போது சொல்வது போல் மிகச் சாதுரியமாகச் சொன்னார்கள். அப்போது 3 பேர்கள்தான் இருக்க வேண்டும் என்று இருந்தது. இப்போது ஐந்தில் ஒரு பகுதியினர் இருக்க வேண்டும் என்று இன்னும் அதைத் தளர்த்தி யிருக்கிறோம் என்று மறைமுகமாகச் சொன்னார்கள்.





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நடந்ததைச் சொல்லு கிறேன். முன்னால் 3-ல் ஒரு பங்குதான் நீங்கள் செய்த சட்டம், 1961-ல். அது ஐந்தில் ஒரு பங்கு ஆகியது. காரணம் இந்தச் சட்டம் அசெம்பிளியில் விவாதத்திற்கு வந்தபோது இந்தத் 5-30 p.m.
திருத்தத்தைக் கொடுத்தவர் முன்னால் காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்திலே இருந்தவர் என்று சொன்னேன். அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருந்தோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: அங்கே என்ன நடை பெற்றது என்று தெரியாது. அதிகமாகப் பிரதிநிதித்துவம் வேண்டாம். ஐந்தில் ஒரு பங்கு வேண்டுமென்று நாங்கள் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். பார்ப்பவர்கள், ஏதோ 15 பேர் ஒரு சங்கத்தில் இருப்பார்கள், 3 பேர் அரசு நியமிப்பது என்று இருந்தது. 3 பேர் என்பதைவிட ஐந்தில் ஒரு பங்கு என்றால் இன்னும் குறைவாக இருக்குமென்று அரசுப் பிரதிநிதித்துவ நியமனத்தைக் குறைக்கும் வகையில் இருக்கும் என்று மேலெழுந்த வாரியாக கவனித்தவர்களும் உண்டு. ஆனால் 15-20 பேர் இருந்த ஸ்தாபனத்தில் 56, 57 பேர் வரப்போகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. நம்முடைய அமைச்சர் அவர்களின் அந்தச் சாதுர்ய மான விளக்கத்தைக் கண்டு அரசினுடைய தலையீட்டையோ நியமனத்தையோ குறைக்கிறார்கள் என்று மேலெழுந்தவாரியாகப் பார்த்தவர்களும் நம்பினவர்களும் உண்டு. அவர்கள் சாதுரியம். அதன்படி இப்போதுள்ள அந்த நிர்வாக சபை எத்தனை பேர்களைக் கொண்டதாக அமையப் போகிறது என்ற அவருடைய உள்ளக் கிடக்கை அவர்களுக்குத் தெரியாது. பின்னால் ஏற்படுத்தும் சட்டத்தில் இப்படி வரப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. சொல்லியிருக்கவும் முடியாது. அரசுக்கு அதற்கான அதிகாரம் பெற்றுக் கொண்டு . . .

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஐந்தில் ஒரு பங்கு என்பது நான் சொன்னதல்ல. உங்களுடைய திண்டிவனம் ராம மூர்த்தி அவர்கள் திருத்தம் கொண்டு வந்தார்கள். அவர் எதை நினைத்துக்கொண்டு அந்தத் திருத்தத்தைக் கொடுத்தாரோ எனக்குத் தெரியாது. அது தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும், ஏழை எளியோர் குறைந்தபட்ச நிலமில்லாதவராக இருக்க வேண்டும் என்று அந்த நாமினேஷனை நாங்கள் கட்டுப் படுத்தினோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: அவர்கள் சொல்லி இவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவர்கள் சொன்னது ரொம்ப நல்ல தாகப் போயிற்று என்று அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக் கலாம். நம்முடைய நோக்கத்திற்கு மிக அனுகூலமாக அமைந்திருக்கிறது என்று அவர்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கலாம். நான் எனது மனதிலே படுவதைச் சொல்கிறேன். இந்த மாநிலத்திலே பல்வேறு இடங்களிலே உள்ள குறைந்தபட்ச அளவிலே செயல்பட்டு

வரக்கூடிய எந்தச் சங்கத்தையும் அரசு கருதினால், இந்த அரசு கெசட்டிலே பிரசுரிப்பதன்மூலம், சென்ட்ரல் சொசைடி என்று அறிவித்துவிடலாம் என்பது இதிலே வருகிறது. அப்படியானால் மாநிலத்திலே உள்ள எந்த ஒரு சங்கத்தையும், அந்த சங்கத்தினுடைய விவகார எல்லை எதுவாக இருந்தாலும், எந்த முறையிலே செயல்பட்டு வந்தாலும், அரசு அது சென்ட்ரல் சொசைடியாக செயல்பட வேண்டுமென்று கருதினால், நோடிஃபிகேஷன் மூலம் சென்ட்ரல் சொசைடி என்று அறிவித்துவிடலாம். சென்ட்ரல் சொசைடி என்ற முத்திரை அதற்குக் கொடுக்கப்படுமானால், அதனுடைய நிர்வாகத்திலே அரசு கை வைக்கிறது, தலையிடுகிறது என்று அர்த்தம் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது மற்ற ஸ்தாபனங்களுக்கு நியமனம் செய்வது போல் அந்த ஸ்தாபனங்களுக்கும் அரசியல் பிரதிநிதிகளை நியமனம் மூலமாக, நாமினேஷன் மூலமாக நியமிப்பார்கள் என்ற நிலைமை அங்கு ஏற்படும். இது தவறு. சென்ட்ரல் சொசைடி என்று அறிவிக்கப்படுகிற ஸ்தாபனங்களுடைய விவகார எல்லைக்குள்ளே புதிய சங்கங்களை ஆரம்பித்தோ அல்லது இருக்கக்கூடிய சங்கத்தினுடைய பிரதிநிதித்துவத்தை அதிகரித்தோ அது தங்களுக்குச் சாதகமாக இருக்கும் வகையிலே அமைவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அது சாதகமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்காகத்தான் மாநில அளவிலே உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் எவை எவை என சட்டம் செய்யப்பட்டுவிட்டது. அவற்றில் தமிழ் நாட்டு கூட்டுறவு வங்கி நிர்வாக சபையின் எண்ணிக்கை, அதில் அரசு நியமனம், தேர்தல் முறை பற்றி விதிகளும் செய்யப்பட்டு விட்டன. தமிழ் நாட்டு நிலவள வங்கி, பிரதான நிலவள வங்கிகள் குறித்த சட்டத்தின் விதிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. இனி பிரதான நிலவள வங்கி என்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அரசும் கருதவில்லை. அமைச்சர்களும் கருதவில்லை. நோக்கம் நிறைவேறிவிட்டது. ஆகையினாலே மற்ற வட்டாரங்களுக்கு நிலவள வங்கிகள் அவசியமா என்பது இனிமேல் கவனத்திற்குக் கொண்டுவரப்படாத விஷயமாகவே கருதப்பட்டு விடும் என்றுகூட கருதுகிறேன். அதிலே பல அநுகூலங்கள்கூட இருக்கின்றன. இத்தகைய ஸ்தாபனங்கள் எல்லாம், அவை போதிய பலன் அளிக்கின்றனவா என்று பார்க்கவும் நல்ல நிர்வாக அமைப்பைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும் என்றும், உலக பேங்கினுடைய பிரதிநிதிகளும் ரிசர்வ் பேங்க் பிரதிநிதிகளும் கூடி ஏதோ கருத்துக்களைத் தெரிவித்துவிட்டார்கள் என்றும் பழியை அவர்கள் தலைமேல் தூக்கிப்போட்டுவிட்டு மற்ற வட்டாரங்களுக்கு நிலவள வங்கிகள் அவசியமில்லை என்றுகூட சொல்லப்படலாம். இது எப்படி இருந்தாலும் கொண்ட கருத்து நிறைவேறுவதற்கு அமைக்கப்பட்ட பாங்குகளே இருக்கின்றன என்று செய்து முடித்துவிட்டார்கள். அபெக்ஸ் சொசைடிகளுக்கும் விதிகள் இயற்றப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவற்றுடன்



மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் செயல்படும் ஸ்தாபனங்களுக்கு சென்டரல் சொசைடி என்று நாமகரணம் சூட்டி அவற்றுக்கும் மேற்கண்டவாறே விதிகள் இயற்றுவதற்குச் சட்டத்தையும் செய்து விதிகள் இயற்றும் அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. நான் முன்னாலே தெரிவித்த மாதிரிதான் கொண்டுவரப்படுகிறது. நான் கருதுவது, இப்போது ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கு எப்படிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டதோ. எப்படி தங்களுடைய கட்சியை வளர்ப்பதற்கு அவை அநுகூலமாக இருந்து வந்திருக்கின்றனவோ, அதேபோன்று இந்த ஸ்தாபனங்களிலும் அத்தகைய அதிகாரம் அல்லது ஆதிக்கம் தங்கள் கையிலே இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டமிட்டு இந்தத் திருத்தம் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள், கூட்டுறவுத் துறையிலே நல்ல பல முன்னேற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்ற நல்ல கருத்தோடு சந்தானம் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அரசு நியமித்தது. அதிலே முன்னாள் ரெஜிஸ்டிரார் இருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் ரெஜிஸ்டிராராக இருந்தவர் இருந்தார். இந்நாள் திட்டக்கமிஷன் மெம்பர் ஒருவர் அதிலே இருந்தார். தமிழ் நாட்டு கூட்டுறவு சங்கங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்க வேண்டிய மாநிலக் கூட்டுறவு யூனியன் செயலாளரும் அதிலே இருந்தார். மத்திய பாங்கின் தலைவராக இருந்த ஒருவர், மாநில வங்கிச் செயலாளர் ஒருவர், பாங்க் செயலாளர் ஒருவர், கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர், இவர்களும் சந்தானம் கமிட்டியிலே இருந்தார்கள். தமிழக அரசு இவர்களை நியமித்தது. 90,000 ரூபாய் செலவாயிற்று, அந்தக் கமிட்டிக்கு 508 பக்கங்கள். 316 சிபாரிசுகளுடன் 3 பாகங்களாகக் காலாகாலத்திலே பிரசுரிக்கப்பட்டு அரசினிடத்திலே சமர்ப்பிக்கப்பட்டும் விட்டது. என்ன ஆயிற்று? நல்ல பல யோசனைகளை அவர்கள் கூறியிருந்தார்கள். ஏழை மக்களுக்குப் பிரதிநிதித்துவம், பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். பிரதான சங்கங்களின் நிர்வாக சபைகளில், கிராமங்களிலே இருக்கக்கூடிய சபைகளில் 7 முதல் 15 பேர்களும், மத்திய மாநில சங்கங்களில் 9 முதல் 21 பேர்களும் இருக்கலாம் என்று பொதுவாக அந்தக் கமிட்டி சிபாரிசு செய்தது. இப்பொழுது கோவை மாவட்ட மத்திய வங்கியில் 51 பேர்கள், மாநில நிலவள வங்கியில் 56 5-30 p.m.
பேர்கள் இருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்லவில்லை. ஆரம்பச் சங்கங்களிலேயே பெண்களுக்கென பிரதிநிதித்துவம் ஒதுக்கிவைத்துவிட வேண்டும், ஏழை மக்களுக்காக இத்தனை ஸ்தானங்கள் சட்டபூர்வமாகவே ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என சந்தானம் கமிட்டி கூறுகிறது. எந்த இடத்தில் ஏழை மக்களுடைய கடன் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட வேண்டுமோ, எங்கே ஏழை மக்களுடைய நலன்கள் கவனிக்கப்பட வேண்டுமோ அந்த இடத்தில் பிரதிநிதித்துவம் கொடுப்பதைப் பற்றிக் கவலைப்படாமல், சந்தானம் கமிட்டி சிபாரிசை அமல்படுத்

[15th December 1971

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

தாமல், எந்த எந்த இடத்தில் முக்கியமான அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு, ஆதிக்கத்தைப் பெறுவதற்கு அநுகூலமாக இருக்குமோ, அதற்கேற்ற வகையிலே மட்டும்தான் இந்தச் சிபாரிசுகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்ல முன்வருகிறேன். ஆதிக்கக்காரர்களின் பிடிப்பிலிருந்து விடுவிப்பதாக திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வருகிறது. இது நல்ல பேச்சு. கவர்ச்சிகரமான பேச்சு. யாரையும் கிட்டத்தட்ட நம்பும்படியாகச் செய்யக்கூடிய பேச்சுக்கூட என்பதை நாம் மறக்க முடியாது. அது உண்மைதான். மாநில மத்திய பாங்குகளிலே தலைவர்களாக இருந்தவர்கள் பகதூர்கள், மிட்டாதார்கள் என்றெல்லாம் சொன்னவர்கள் இவர்கள். கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். சில வருஷங்களுக்கு முன்னாலே தமிழகத்திலே நடைபெற்றுவந்த மத்திய வங்கிகளின் தலைவர்களாக யார் யார் இருந்தார்கள் என்று ஒரு ஜாப்தா எடுப்போம். எவ்வளவு காலம் இருந்தார்கள், யார் எவ்வளவு குபேரசம்பத்துகள் வைத்திருந்தார்கள் என்று பார்ப்போம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எத்தனையாண்டுக் காலம் இருந்தார்கள்?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** 1950-லிருந்து 1971 வரையில் இருந்தேன். சரிதானா? இருந்தேன். நான் அந்த பாங்கிலே இருந்தேன். 1927-லேயிருந்து கூட்டுறவுத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறேன். அந்தக் கிராம சங்கத்திற்கு பங்கு விண்ணப்பம் செய்து, அதற்கு சேங்ஷன் செய்கிற வரையிலே ஆஸ்திப் பொறுப்பு ஸ்டேட்மென்ட் எடுக்கிற வரையிலே ஒவ்வொரு காரியத்தையும் குமாஸ்தா செய்ய வேண்டிய வேலை பூராவையும் இன்றைருவரை எதிர்பாராமல் செய்யும் பொறுப்புடன் இருந்தேன். பெயருக்கு கூட்டுறவாளனாக இருந்ததில்லை. அத்தனையையும் என் கைப்படவே செய்துகொண்டு வந்திருக்கிறேன். 1927-இலேயிருந்து அத்தனை அனுபவமும் எனக்கு உண்டு. பாங்கிலே பிரிசிடென்டாக இருக்கவில்லை என்பதைத்தான் இப்பொழுது தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பத்திலே 8,000 ரூபாய் கடன் வாங்கக்கூடிய சக்தி இருந்த சங்கத்திலே 6 லட்சம், 8 லட்சம் ரூபாய் லேவாதேவி செய்யக்கூடிய சங்கமாகச் செய்திருக்கிறேன். தொடர்ந்து கூட்டுறவு சுப்பர்வைசிங் யூனியனிலே பல்லாண்டுகளாகத் தலைவனாக இருந்திருக்கிறேன்.

அவ்வளவு அந்தப் பகுதியிலே சங்கங்கள் விருத்தியடைந்திருக்கின்றன. என்ன செய்திருக்கிறேன் என்பதைப்பற்றிப் புள்ளி விவரங்கள் சொல்ல முடியும். ஒரு எக்கர் 40 சென்ட் நிலம் உடைய நிறைவில்லாத அய்யாவு கோனாருக்கு கடன் கொடுத்து கிணறு வெட்டச் சொல்லி இப்போது அவர் 16 எக்கருக்குச்



15th December 1971]

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

சொந்தமுள்ளவராக, 3 பம்புசெட்டுகளுக்குச் சொந்தமுள்ளவராக விருத்தியடைந்திருக்கிறார். அதைப்போல பல அரிஜனக் குடும்பங்களைச் சொல்ல முடியும். அவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி ஏழை எளியவர்களுக்கு இவைகள் செயல்படுவதற்கு, எனக்குத் தெரிந்த அளவிலே நிலமற்றவர்களுக்கு நிதியற்றவர்களுக்கு வகை செய்திருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். நான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா விற்பனைக் கூட்டுறவு சங்கத்தில் எத்தனை ஆண்டுக் காலமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்? இன்றைக்கும் தலைவராக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு பல லட்சக்கணக்காகக் கொடுத்திருக்கிறது. நாங்களே 3 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். நான் ஏதோ கட்சியைக் கருதிச் செய்வதாக எண்ணியிருந்தால். அவரும் எனக்கு எழுதியிருக்கமாட்டார். நானும் கொடுத்திருக்கமாட்டேன். அதைத் தவிர இன்னும் பல சொசைடிகளில் அவர் டைரக்டராக இருக்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் நிலவள வங்கியில் துணைத் தலைவராக இருக்கிறார்கள். ராமநாதபுரம் சென்ட்ரல் பாங்கில் இயக்குநராக இருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவுத் துறையைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள், நன்றாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படி அவருக்குப் பண உதவி செய்திருப்பேன்? ராமச்சந்திரபுரம் நூரல் விடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருக்கிறார்கள். அப்புறம் லேபர் காண்டிராக்ட் சொசைடியிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள லேபர் காண்டிராக்ட், தொழிலாளர்களுடைய காண்டிராக்ட், சொசைடியிலே இருந்திருக்கிறார்கள். அதற்கு அரசின் உதவி 12,500 ரூபாய் கொடுக்கப்பட்டது. அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் யூனியனில் இருக்கிறார்கள். அவர்கள் காரியங்களை நன்றாகச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர் சந்தானம் கமிட்டியைப்பற்றிச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, அதன்படி யாரும் 6 வருடங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தனை ஆண்டுக் காலமாக உறுப்பினராக இருக்கிறார்களே?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அதைக் கொண்டுவர வேண்டுமென்று தான் சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, 3 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்தேன் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். சொசைடிக்கா, அல்லது தனிப்பட்டவருக்கா அது கொடுக்கப்பட்டது என்பதை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இன்றைக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் விற்பனை சங்கத்திற்கு அரசு பண உதவி செய்திருக்கிறது.

[15th December 1971

[மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்]

போனதடவை அங்கத்தினர் அவர்கள் சொன்னபோது "நீங்கள் செய்யவில்லை, முன்னால் இருந்த அரசு செய்தது" என்று சொன்னார்கள். அப்போதிருந்த நிலைமையில் அரசு பங்கு மூலதனமாக 1 லட்ச ரூபாய் கட்னூகை, ஜின்னிங் ஃபாக்டரிக்கும் 15 ஆயிரம் பங்கு மூலதனமாக, கோடவுன் கட்ட ஒரு லட்ச ரூபாய் கொடுத்து உதவியது. முன்னால் இருந்த அரசு கொடுத்ததே என்றார்கள். நாங்கள் கொடுத்தது எப்படி கட்சிக் கண்ணோட்டத்தோடு கொடுத்திருக்க முடியும்? நான் இப்போது சொல்கிறேன். நாங்கள் எந்த விதமான கட்சிக் கண்ணோட்டமுமில்லாமல் நடக்கிறோம். அவர்கள் தமிழக அரசு உதவ வேண்டுமென்றார்கள். 3,500 ரூபாய் கொடுத்தோம். இந்த அரசு கட்சிக் கண்ணோட்ட உத்தேசமில்லாமல் நடக்கிறது என்று எடுத்துக் காட்ட இதைச் சொல்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: கூட்டுறவுத் துறையில் எந்தெந்த சங்கங்களில் நான் அங்கத்தினராகவோ தலைவராகவோ இருந்தேன் என்று சில பல சங்கங்களைச் சொன்னார்கள். அதில் 5-40 p.m. சிலவற்றில் நான் இல்லை. நான் ஜில்லா காண்ட்ராக்ட் சங்கத்திற்குத் தலைவனில்லை. அதை என் தலையில் போட்டு நான் தான் நடத்த வேண்டுமென்று நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கூட கேட்டார்கள். என்றால் சரிவர நடத்த முடியாது, அது நடக்காது. வேறு யாருக்கும் பொறுப்பைக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டேன். தாலுகா காண்டிராக்ட் சொசைடி பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் இருக்கிறேனோ இல்லையோ, அதை விட்டு விடுங்கள். ஆனால் நான் இந்த காண்டிராக்ட் சொசைடியில் இருந்தது கிடையாது. இருப்பதாகச் சொன்னால் அபத்தம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூட்டுறவு பற்றி விவாதிக்கிற நேரத்தில் கூட்டுறவு உணர்ச்சியோடு விவாதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்ன வார்த்தையை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும். அவர் இந்த சந்தர்ப்பத்தில் நல்ல வார்த்தையைச் சொன்னார்கள். நான் பேசி சீக்கிரமாக முடித்து விடலாம், இன்னும் நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று கருதுகிறேன். நான் பேசுவதற்கு இடையில் அமைச்சரவர்கள் குறுக்குசால் ஓட்டாமல் இருக்க வேண்டும். எனக்கும் அவருக்கும் கிராம பாஷை தெரியும். அப்படியில்லாமலிருந்தால், சீக்கிரமாக என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ள முடியும். ஆகையினாலே நான் ஏதோ ஏழை எளியவர்களை முற்றிலுமே கவனிக்கவில்லையென்று சொல்லவில்லை. ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் ஆதிக்கம் போய்விடுகிறது என்ற பொறுமையின் காரணமாகப் பேசுகிறார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். கொஞ்சம் நியாயம் நீதி இவைகளுக்கு மதிப்புக் கொடுத்து உண்மையில்



15th December 1971]

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

அவ்வாறு நடந்திருக்கிறதா என்று இந்தப் பிரச்சார வகையில் இல்லாமல் இந்த வார்த்தைகளை உபயோகிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முறையில் நடைபெறவேயில்லை. அவர்கள் ஏழை எளியோர்களைப் பிரதிநிதிகளாக உண்டு பண்ணினோம் என்கிறார்கள். எங்கு பிரதிநிதிகளை உண்டுபண்ணுகிறார்கள்? கடன் மனுவைப் பரிசீலனை செய்யவேண்டிய ஆரம்ப நிலவள வங்கியில் அவர்கள் பிரதிநிதிகளாக இல்லை. அந்தச் சங்கத்தில் அங்கத்தினராக இருந்து கடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து சாங்ஷன் செய்ய வேண்டியதை விடுத்து, அங்கே பிரதிநிதிகளாக இல்லாமல் மாநில நிலவள வங்கியில் 56 பேரை பிரதிநிதிகளாக உட்கார வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அக்கரையைக் கவனிக்க அங்கிருப்பவர்களுக்கு என்ன விவரங்கள் புரியும்? யாருக்குக் கடன் கிடைக்கவில்லை என்று ஒவ்வொரு மனுவின் பேரிலும் பரிசீலனை நடைபெறுகிறதா என்று கவனிக்கவேண்டிய இடம் ஆரம்ப நிலவள வங்கி. இதை சந்தானம் கமிட்டி சொல்லியது. பெண்களுக்கும் ஏழைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும், குறைந்த நிலமுள்ளவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று சந்தானம் கமிட்டி சொல்லியது. அதைப்பற்றிக் கவனிக்கவில்லை. இதைத்தான் நான் சொல்கிறேன். ஆதிக்கம் பெற வேண்டுமென்பதற்காக பல்வேறு சங்கங்களில் உள்ள பிரதிநிதிகளுக்கு இந்த பிரதிநிதித்துவத்தைக் கொடுத்து அவர்களை மெஜாரிட்டியாகக் கொண்டு வந்து நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன என்று சொல்கிறேன். அதே போலத்தான் இந்த சங்கம் சம்பந்தப்பட்ட மட்டிலே கூட இன்னொன்று. இந்த 10—15 மத்திய நிலவள வங்கிகளுக்கு நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சங்கங்கள் மூலமாகப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது, அமைச்சர் முயற்சியினாலே. இந்தப் பட்டியலை எடுத்துக் கொண்டு அரசாங்க நியமனம் பெற்றவர்கள் எப்படி சாமானியமானவர்கள் என்று பட்டியலைப் பரிசீலித்துப் பார்த்தால் தெரியும். முதலமைச்சரவர்கள் வாங்கிப் பார்க்க வேண்டும். ஒரு ஜில்லாவிற்குப் பிரதிநிதியாக இருக்க முடியாது என்று இருந்த சில பட்டதாரிகள் அல்லது வசதியுள்ளவர்கள் வேறு ஜில்லாக்காரர்களாக இருந்தால், அந்த ஜில்லாவிலே அவர்களுக்கு நிலமிருக்கிறது என்று பெயர் செய்து, அப்படிப் பிரதிநிதித்துவம் பெற்றவர்களும் இருக்கிறார்களே. ஆகவே இந்த நோக்கம் நான் சொன்னபடி பல்வேறு வகைகளிலே உபயோகப்பட்டிருக்கிறது. நடந்தது நடந்து முடிந்து விட்டது. இப்போதிருக்கக் கூடிய மற்ற சங்கங்களிலே, மாநில சங்கங்களிலே அல்லாமல் மத்திய நிலக் கூட்டுறவு வங்கிகளிலும் வந்துவிட்டது. இனிமேல் மார்க்கெட்டிங் சொசைடி, தாலுகா அளவிலே இருக்கக் கூடிய சங்கங்கள் இவைகளையும் சென்ட்ரல் சொசைடி என்ற பட்டியலில் கொண்டு வந்து இந்த நியமனங்களிலெல்லாம் அரசு தலையிட்டு நியமனம் செய்து அதிலே ஆதிக்கம் பெற வேண்டும்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

என்ற கருத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறதென்று கருது கிறேன். இப்படிப்பட்ட முயற்சி வேண்டாம். கூட்டுறவுச் சட்டம் பல்வேறு வகைகளிலே உருக்குலைந்து போயிருக்கிறது. இதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். சட்டமோ, விதிகளோ சரியோ தப்போ செரியாது. தமிழில் அத்தனையும் உருவான ஒருங்கிணைந்த சட்டமாகக் கொண்டு வருவதற்கு வகை செய்ய வேண்டும். ஆங்கிலத்தில் சட்டமியற்றினாலும் தமிழில் கொண்டு வருவதற்கு வகை செய்ய வேண்டும். ஆங்கிலத்தில் இருப்பது நல்லது என்று சட்ட வல்லுநர்கள் சொன்னாலும், இதைச் செய்ய வேண்டும். சட்டத்திற்கு அர்த்தம் கூறப்படுகிற போது, ஆங்கிலத்தில் உள்ள ஷரா படி விளக்கம் சொல்கிறார்கள். ஏன் தமிழில் கொண்டு வந்திருக்கக் கூடாது? கொண்டு வந்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். தமிழில் இதற்கான சட்டமோ விதிகளோ சரியோ தப்போ தெரியாது. தமிழில் அத்தனையும் கொண்டு வர முயற்சி செய்தால், நன்றாக இருக்கும். அவசரப்பட்டு அவசரப்பட்டு இப்படிச் செய்வதால் இந்த மாதிரி நிலைமைகள் உள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கம், இந்த மார்க்-கெட்டிங் சொசைடி பற்றிச் சொன்னார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் மார்க்கெடிங் சொசைடி அதனுடைய லாபத்திலே 50 சதவீதம் விவசாயிகளுக்கு போனஸாக கொடுத்து வருகிறது. இந்த மாநிலத்திலுள்ள எந்த மார்க்கெட்டிங் சொசைடி அவ்வாறு கொடுத்து வருகிறது என்று கேட்க விரும்புகிறேன். எனவே, அந்த வகையிலே அது நல்ல முறையில் தான் செயல்பட்டு வருகிறது. பல ஆயிரக்கணக்கான ஸ்தாபனங்கள் செய்வதைப்போல், அந்த ஸ்தாபனத்திலேயும் செய்திருக்கலாம். அதிலே 1 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் பங்குத் தொகை போட்டிருக்கிறார்கள். இன்னும் கூட சொல்லுவேன், கூட்டுறவு ஸ்தாபனங்களிலே அரசு பங்குத் தொகை அளித்திருந்தாலும், கடன் கொடுத்திருந்தாலும், அரசு கருதினால் அந்த ஸ்தாபனங்களுக்கும் அந்தச் சங்கங்களுக்கும் அவைகளின் நிர்வாக ஸ்தாபனங்களிலே 5 சத விதம் அரசே நியமனம் செய்வது என்ற எண்ணம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திலே இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படு கிறது. ஒரு வேளை அதற்கான சட்டம் இந்த செஷனிலேயே கூட வந்தாலும் வந்துவிடலாம் என்று நான் நினைக்கிறேன். இப்படி எல்லாம் கூட்டுறவுத் துறையிலே தலையீடுகள் வருகின்றன. ஆங்கிலேயர்கள் ஆண்டபொழுது கூட இந்தக் கூட்டுறவுத் துறை நன்றாக நடத்தப்பட்டு வந்தது. இதற்கு முன்னால் அந்நிய ஆட்சி இருந்துகொண்டிருக்கும் பொழுது கூட, கூட்டுறவுத் துறையைச் சிறந்த முறையிலே நடத்தினார்கள். திரு. ராமலிங்கம் செட்டியார் போன்றவர்கள் எல்லாம் நல்ல கூட்டுறவாளர்களாக இருந்தார்கள். அவர்கள் எல்லாம் அரசினுடைய தலையீட்டையும் வன்மையாக எதிர்த்து வந்தார்கள். கூட்டுறவை நன்றாக வளர்த்து வந்தார்கள். இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட தமிழ் நாட்டில் கூட்டு றவுத் துறை நல்ல முறையிலே வளர்ந்து வருவதற்கு அவர்கள்



[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

எல்லாம் காரணமாக இருந்தார்கள். கூட்டுறவுத் துறை அரசி னுடைய தலையீடோ, அரசினுடைய அதிகமான உதவியோ இல்லாமல், மேல் நாடுகளிலே குறிப்பாக கனடா போன்ற நாடு களிலே நன்றாக வளர்ச்சியடைந்து வருகிறது. அந்த முறையிலே தமிழ் நாட்டிலே இதை வளர்ப்பதற்கான நல்ல பல சட்டங்களைக் கொண்டு வந்து, பணி செய்ய வேண்டுமென்றும், அத்தகைய முயற்சிகளிலே அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்றும் நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும், அமைச்சர் அவர்கள் இந்த மாதிரி இப்பொழுது "சென்ட்ரல் சொசைட்டி" என்று சொல்வது சரியல்ல. அரசு எந்த சொசைட்டியையும் 'சென்ட்ரல் சொசைட்டி' என்று நோட்டிபிகேஷன் மூலம் வெளியிடலாம். அப்புறம் அது யார், யார் சொசைட்டி என்ற முறையிலே கூட வெளியிடலாம். ஸ்ரீவில்லிபுத்தூர் மார்க்கட்டிங் சொசைட்டிபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கே யாவது கூட்டுறவு மேற்பார்வை யூனியன் பைலாப்படிதான் ஒரு மார்க்கட்டிங் சொசைட்டி நிர்வாகம் நடக்க வேண்டுமென்று ஒரு டிபுடி ரிஜிஸ்ட்டிரார் ஒரு உத்தரவை அனுப்புவாரா? அப்படி அனுப்புகிறார்கள் அய்யா? இதைக் கண்டு இங்கிருக்கும் உறுப்பினர்கள் கூட பரிதாபப்படுகிறார்கள். ஆகவே, இதை யெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு அந்தமாதிரிப் பழி தீர்க்கும் படலம் ஆரம்பிக்காமல், அது தான் அரசாங்கத்தின் கொள்கை என்றில்லாமல் கூட்டுறவுத் துறையை நல்ல முறையிலே வளர்த்தாக வேண்டும். இப்பொழுதே கூட்டுறவுச் சட்டம் ரொம்ப உருக் குலைந்து போயிருக்கிறது. எனவே, அந்தச் சட்டத்தை நல்லவித மாக அமைத்து, மேலும் இத்தகைய சீரழியும் படலங்கள் விருத்தியாகாமல் பார்த்துக்கொள்ளக் கூடிய நிலைமையிலே நல்ல ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே இதைச் சட்டமாக்காமல் இருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* திரு. சா. கணேசன்: துணைத் தலைவரவர்களே, இந்த 5-50
மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். கூட்டுறவுத் p.m.
துறையிலே நிரம்ப ஊழல் காணப்படுகிறது என்ற புகார் சர்வ சாதாரணமாக எங்கும் கேட்கப்படுகின்ற ஒன்று. இன்றும் காணப்படுகிறது என்று நான் கருதுகிறேன். சில இடங்களிலே நான் நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன்; பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே தான் நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

கூட்டுறவுத் தத்துவத்திற்கே முற்றிலும் முரணாக நம்முடைய மாநிலத்திலே இந்தத் துறை நடைபெறுகிறது. 'கூட்டுறவுத் தத்துவம்' என்றாலே, யார் யார் பங்குதாரர்களோ அவர்களுக் காகவே அது செயல்பட வேண்டும். ஒரு சொசைட்டியிலே கூட நான் பங்குதாரனாக இல்லை. ஆனால் நான் இங்கே இருக்கின்ற

[15th December 1971

[திரு. சா. கணேசன்]

ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்குப் போய் எனக்கு சீனி வேண்டும், அரிசி வேண்டும் என்று கேட்டால், தருவார்கள். அது கூட்டுறவு இல்லை. பெயர் வேறு ஏதாவது வைத்து, வள்ளுவன் சொசைட்டி, கம்பன் சொசைட்டி என்று நாம் போட்டு நடத்தலாம் கூட்டுறவு என்ற சொல்லுக்கே இது பொருள் இல்லை. கன்ஸூமர் சொசைட்டியாக இருந்தாலும் சரி, பணப் போக்குவரத்து சொசைட்டியாக இருந்தாலும் சரி, அது மார்க்கட்டிங்காக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அது அதிலேயுள்ள உறுப்பினர்களுக்கே பயன்பட வேண்டும். அந்த நிலை இன்றைக்கு இல்லை. அது முதலிலே சீர்படுத்தப்பட வேண்டும். எனக்குத் தெரிந்த வரையிலே, ஒரே ஒரு சொசைட்டி தமிழ் நாட்டிலே தான் நல்ல முறையிலே நடக்கிறது. அது தான் சந்திர சேகரபுரம் சொசைட்டி. அது அரசிடம் கடன் வாங்குவதில்லை. பங்குதாரர்களே அந்தப் பணத்தைப் போட்டுக்கொண்டு அவர்களே காரியங்களைச் செய்கிறார்கள். இது ஊரிலேயுள்ளவர்களின் பேச்சு மூலமாக எனக்குத் தெரிகிறது. அங்கே துளிக் கூட தவறு நடக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், அங்கு வரும் இலாப நஷ்டம், நன்மை தீமை, கெட்ட பெயர்—நல்ல பெயர் ஒவ்வொரு ஷேர் ஹோல்டரையும் பாதிக்கிறது என்ற அளவிலே அது செயல்படுகிறது. இன்னும் சிங்கப்பூர் பகுதியிலே இருக்கும் கோவாப்பரேடிவ் சொசைட்டி மூவ்மெண்ட் பூராவும் அப்படித்தான் நடக்கின்றது. அதனால் ஒரு ஷேர்ஹோல்டர் கூட நஷ்டப்படுவதில்லை. மேலும் அங்கெல்லாம் அரசாங்கம் எந்தவிதப் பண உதவியும் செய்வதில்லை. ஷேர்ஹோல்டர் எவ்வளவு பணம் அதிலே சேர்த்து வைத்திருக்கிறார்களோ, அது தான் மூலதனம். பாங்குகள் மூலதனத்திற்குப் பொருந்திய அளவில் கடன் தருகின்றன. அதாவது சார்ட்டர்டு பாங்க், மெர்கன்டைல் பாங்க் போன்றவைகள் அதே சமமான தொகையைக் கொடுக்கிறார்கள். அதற்காக அந்த பாங்குகளை தங்களுடைய பிரதிநிதிகளை நிர்வாகத்திலே டைரக்டர்களாகப் போட்டுவிடுகிறார்கள். எனவே, அங்கு நஷ்டம் வந்தாலும் அல்லது இலாபம் வந்தாலும், சொசைட்டியைத் தான் சேருகிறது. நமது தேசத்திலே நாளைய தினமே நான் ஒரு சொசைட்டியை ஏற்படுத்தலாம். நாங்கள் 50 பேர் சேர்ந்து கொண்டு ஆளுக்கு 10, 50 ரூபாய் என்று கொடுத்துவிட்டு, எங்களுடைய கேபிடல் 2,500 ரூபாய் என்று சொல்லி, 2½ இலட்சம் ரூபாய் கடன் வாங்கிவிட முடியும். இதை வங்கி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசாங்கத்திலிடமிருந்து வாங்கிவிடலாம். எனவே, இந்த மாதிரி வருவாயிலே இலாப நஷ்டம் வந்தால், நமக்கென்ன, செயல்படுகிறவர்கள் தங்களுக்கு இலாபம் வந்தால் போதும் என்றிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு இதனால் நஷ்டம் வந்தால், அவர்கள் கவலைப்படுவதில்லை. காரைக்குடியிலே நாம் பார்த்தோம், அங்கிருந்த ஒரு பாங்கியிலே சாதாரண மக்களும், தொழிலாளர்



15th December 1971]

[திரு. சா. கணேசன்]

களும், பெண்களும் போட்ட பணத்தையெல்லாம் ஏமாற்றிவிட்டு, திடீரென்று ஒரு நாள் அது முழுகிவிட்டது என்றார்கள். அர்பன் பாங்கைப் பொறுத்த வரையில் அரசாங்கம் கோண்டி. இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்புறம் "கோவாப்பரேஷன்" என்ற பெயர் வைத்துக்கொண்டிருப்பதிலே என்ன நியாயம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை மனதிலே கொண்டு இதைச் செம்மைப்படுத்துவதற்கே இந்தச் சட்டம் வழி வகை செய்ய வேண்டும். அந்தக் காலத்திலேயிருந்து நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். 'கோவாப்பரேஷன்' சம்பந்தமாக ஒரு கேசு வருமானால் ஒரு சொசைட்டியோ அல்லது ஒரு பாங்கோ இருக்கின்ற சாதாரண வக்கீலை வைத்து 25 ரூபாய்க்கு அமர்த்திக்கொள்கிறார்கள். ஆனால் பணத்தைக் கையாடியவர் அதாவது அந்த வழக்கை எதிர்த்து வழக்காடுபவர், 50 ஆயிரம் ரூபாய் சாப்பிட்ட பேர்வழி, 1,000 ரூபாய் பீஸ் கொடுத்து நல்ல வக்கீலை அமர்த்திக்கொள்கிறார் இதனால் கோவாப்ரேட்டிவ் கேசு தோற்றுவிடுகிறது. முடிந்தது வேலை. அதனால் முதலிலே இருந்தே சொல்லி வருகிறேன். எந்த சொசைட்டியிலே தவறு வந்தாலும், அந்த சொசைட்டியிலே இருப்பவர்களை வாதியாகவோ, பங்குதாரர் ஒருவர் பிரதிவாதியாகவோ சேர்ந்து கொண்டு வழக்காட இதிலே வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

இப்பொழுது தேவஸ்தானங்கள் போன்ற இடங்களிலே நான் ஒரு வழிபடுகின்றவன் என்ற முறையிலே நம்மாலே எப்படி வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ சேர்ந்துகொள்ள முடிகின்றதோ அப்படி இதிலே சேர்ந்து கொண்டு கேஸ் நடத்துவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே, உங்கள் மூலமாக, விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

அது போக, இந்த மாதிரி சொசைடிகளிலே தப்பு தவறு, லாப நஷ்டங்கள் ஏற்பட்டால், அந்த டைரக்டர்களுக்கே முழுக்க முழுக்கப் பொறுப்பு என்று ஏன் வைக்கக்கூடாது? முனிசிபாலிடியிலே 15 ரூபாய் சேங்க்ஷன் இல்லாமல் செலவு செய்துவிட்டால், சர்சார்ஜ் என்று போட்டு அந்த மீட்டிங்குக்கு ஆஜராகியிருக்கிற அத்தனை அங்கத்தினர்களும் கொடுக்க வேண்டும் என்ற விதி எப்படி இருக்கிறதோ, அதே மாதிரி, கொடுத்தேன், வரவில்லை என்றால், ஏன் கொடுக்கப்பட்டது, ஏன் வரவில்லை. யார் சேங்க்ஷன் பண்ணினார்கள் என்று கண்டு அவர்களே பொறுப்பு என்று செய்துவிட்டால், இந்தத் தப்புகள் வராது. அப்பொழுது நான் டைரக்டராக வருகிறேன், வருகிறேன் என்பதெல்லாம் போய், நான் வரமாட்டேன், வரமாட்டேன் என்று சொல்லக்கூடிய நிலையும் வரும். ஆகையினாலே ஜாக்கிரதையாக அவர்கள் செயல்படுவார்கள். இத்தகைய துறைகளிலே டைரக்டராக இருந்து பணி செய்ய, தேச சேவா உணர்ச்சியோடு முன்வர வழி ஏற்படும். இதை மனதிலே நாம் கொள்ளவும் வேண்டும். ஆகவே இப்பொழுது நடக்கிறதெல்லாம் எப்படி இருக்கிறது " A gain without risk "

[15th December 1971

[திரு. சா. கணேசன்]

என்று சொல்வார்கள். எந்தவிதமான பொறுப்புமில்லாமல் கிடைத்தவரையிலும் லாபம் என்ற நிலையிலேதான் மிகப் பெரும்பாலான டைரக்டர்கள் கோவாபரேஷன் சம்பந்தப்பட்ட இடங்களிலே இருக்கிறார்கள் என்பது உலகம் அறிந்த பரம ரகஸ்யம்.

அதே மாதிரி இந்த முறைகளிலும் சென்டிரல் சொசைடி, சென்ட்ரல் பாங்க் என்று வைத்துவிட்டால், இராமநாதபுரம் சென்ட்ரல் சொசைடிக்கும், கோயம்புத்தூர் சென்ட்ரல் சொசைட்டிக்கும் உறுப்பினர் எண்ணிக்கையிலே எதற்காக வித்தியாசம்? ஏதோ முனிசிபாலிடி மாதிரி ஜனத்தொகை அளவிலே காரியம் பண்ணுவதில்லை. எல்லாவற்றிற்கும் கீழேயிருக்கிற சிறிய சொசைடிக்கு 12, 8, 5 என்று, அதேமாதிரி மேலே போகப் போக 20, 30, 50 என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். மாவட்டத்திற்கு இருக்கிற மத்திய சொசைடிகள் அனைத்திற்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். பல ஊர்களிலே (குறுக்கீடு) சந்தானம் கமிட்டி சொன்னதைப்பற்றிப் பேசவில்லை. இப்பொழுது இருக்கிறது. கோயம்புத்தூரிலே, எண்ணிக்கை எனக்குச் சரியாகத் தெரியாது, 50, இராமநாதபுரத்திலே 30 என்ற நிலை இருக்கிறது. ஏன் இது? இதை ஒழுங்குபடுத்திவிட்டால், அரசாங்கத்திற்கும் அதிகப்படியான அங்கத்தினர்களை நியமிக்கிறார்கள் என்ற பழிச்சொல், நியாயமாகவோ அல்லது நியாயத்தப்பாகவோ ஏற்படாமலிருக்கும். இதையும் செய்ய வேண்டும்.

அதே காலத்திலே அரிஜனப் பெருமக்கள், பெண்மணிகள், நிலம் இல்லாத ஏழை மக்கள், இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் ஒன்றை மறந்துவிடப்படாது. நிலம் இல்லாதவர்களுக்காக என்று, இங்கே இடமில்லை. பெண்கள் என்பதற்காக இங்கே இடமில்லை. அரிஜன் என்பதற்காக இங்கே இடமில்லை. அவர்கள் கோவாபரேடர்ஸாக, பங்குதாரர்களாக அதிலே செயல்படுகிறவர்களை, குறைந்த பட்சம் ஓராண்டுக் காலத்திற்காகவாவது உறுப்பினர்களாக இருந்தவர்களை நியமிக்க வேண்டும் என்று சந்தானம் கமிட்டி கூறியிருந்தது. அந்த நிலையில் கொண்டுவர வேண்டும். அப்படியெல்லாம் இல்லாமல் பெண் என்பதற்காக—நான் யாரையும் குறை சொல்லவில்லை, கூடாது என்று சொல்லவில்லை—பெண்ணினம் என்பதற்காகப் பண்ணுகிறேன் என்பது நியாயமல்ல. இங்கே நடப்பது கோவாபரேஷன். இதை மனத்திலே வைத்துக்கொண்டு காரியம் செய்ய வேண்டும்.

6-00 p.m. அரசு தலையிடப்படாது என்பதை நான் முழுக்க மறுக்கிறேன். அரசு தலையிடப்படாது என்பதைக் கோவாபரேஷன் என்ற தத்துவ ரீதியிலே நான் வரவேற்கிறேன். ஆனால் இங்கே நடக்கிற நடைமுறையிலே மிகப் பெரும் அளவுக்கு பணத்தை அரசு அதிலே கொட்டியிருக்கிறதோ, போட்டிருக்கிறதோ, என்ன பண்ணியிருக்கிறதோ எனக்குத் தெரியாது.



15th December 1971]

[திரு. சா. கணேசன்]

இந்த நிலையிலே அரசு அதிலே தலையிடாமல் இருப்பதென்பது நியாயமில்லை. பாவம் என்று கூடகருதுகிறேன். இதைக் கருதி தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கையைக் கண்டிப்பாக நிர்தாட்சண்யமாக எடுக்க வேண்டும். இப்பொழுது வருகிற மசோதாவும், இதற்குப் பின்னே வரக்கூடிய திருத்தங்கள் எல்லாம் பயனுள்ளவையாக இருக்கும். இல்லாவிட்டால், மன்னிக்கவேண்டும், ஆட்சியிலே யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஏதோ சில அதிகாரம் ஏற்பட்டு (விடுவதனால் ஒன்றும்) பயனுள்ளதாக, துறை நலம் பெறுவதாக, மக்கள் சமுதாயம் வளம் பெறுவதாக அமையமாட்டாது. இந்த எண்ணங்களையெல்லாம் மனத்திலே கொண்டு இதைக் கடைப்பிடித்து செயல்படுத்த வேண்டும் என்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, அரசை நான் வேண்டிக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

* திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கூட்டுறவு சட்டத் திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சட்டங்கள் எந்த முறையிலே இயற்றப்பட்டாலும், அவை கிராமப்புற மக்களுக்கு எந்த அளவிலே பயன்படுகின்றன என்பதையும் அரசு கருத்தில் கொண்டிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். உதாரணமாக ஒன்றிரண்டைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

கிராமப்புறங்களிலே உள்ள விவசாயிகள் தங்களுடைய விவசாயக் காரியங்களுக்காக கடன் மனுவை கொடுத்தால், அவர்களுக்கு அந்தக் கடன்களை எவ்வளவு நாட்களிலே பட்டுவாடா செய்ய வேண்டும் என்ற ஒரு விதிமுறை கட்டாயம் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நடைமுறையில் ஒரு விவசாயி தன்னுடைய விவசாயத்திற்குத் தேவையான கடன் வேண்டுமென்று கூட்டுறவு சங்கத்திலே மனுப்போட்டால், அந்தச் சங்க நிர்வாகத்திலே உள்ளவர்கள், தங்களுடைய கமிட்டியைக் கூட்டி, அதிலே சிபாரிசு செய்த பின்னர் மேற்பார்வை யூனியனிலுள்ள சூப்ரவைசர் அந்தச் சங்கக் கடன் மனுவைப் பரிசீலனை செய்து, அவர் மத்திய வங்கிக்கு அனுப்பி, மத்திய பாங்கின் கூட்டத்திலே முடிவு செய்யப்பட்டு அந்த விவசாயிக்குக் கடன் வழங்கப்படுகிறது. இதற்குக் கிட்டத்தட்ட இரண்டுமாத காலம் ஆகிறது. முன்பெல்லாம் ஒரு விவசாயி கூட்டுறவுச் சங்கத்திலே கடன் மனுவைக் கொடுத்து அவர் சொத்தை அடமானமாக எழுதிக்கொடுத்து. அவர் கடன் பெற்றிருந்தால், அந்த அடமானத்தின் பேரிலே தொடர் கடனாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு அந்தச் சொத்து மீது வைத்துக் கடன் வழங்

[15th December 1971

[திரு. எஸ் வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

குவதிலே சிக்கல் இருக்கிறது. மீண்டும் ஏதாவது அடமானம் செய்திருக்கக்கூடும் என்று கடனை மறுக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தம் எந்த முறையிலே இருந்தாலும், ஒருவர் ஒருமுறை அந்தச் சொத்துக்களை அந்தச் சங்கத்திலே அடமானமாகப் பதிவு செய்துகொண்டு, அவருடைய சொத்துக்குத் தகுந்தமாதிரி எவ்வளவு கடன் வேண்டுமென்று கோருகிறாரோ அதைப் பெற்று, திருப்பி ஒரு பகுதியைச் செலுத்திவிட்டால், அவர் கடன் மனுவைக் கொடுத்த தேதியிலேயே கடன் கொடுக்க அந்தச் சங்கத்திலே வசதி செய்துகொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் கிராம மக்கள் கடன் மனுவை எடுத்துக்கொண்டு தொந்தரவு படாமல் உடனடியாகக் கடன்பெற வசதி பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையிலே இந்த அரசு அதைச் செய்ய வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் பகுதிகளிலே எல்லா இடங்களிலேயும் சிறு நீர்ப்பாசனக் கூட்டுறவு விவசாய சங்கங்கள் என்று வெகு வேகமாக ஆரம்பிக்கப்பட்டுவந்தன. நாங்களெல்லாம்கூட யோசித்தோம், இது சிறிய விவசாயிகளுக்கு நல்ல முறையிலே ஏதாவது செய்யும் என்று. ஆனால் இன்றுவரையிலே அதிலே எத்தனை சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்ற விவரமே இல்லை. எங்களுக்குத் தெரிந்த வரையிலே, எங்களுக்கும் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற அனுபவத்திலே, அதுபற்றி விசாரித்துத் தெரிந்துகொண்ட வரையிலே எந்தச் சங்கமும் செயல்படவில்லை. இன்னும் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லி, மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் கூட சந்தேகப்பட்டோம். இந்தக் கூட்டுறவு சிறு நீர்ப்பாசன சங்கம் மத்திய சங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதற்காகத்தானா என்று. குறிப்பாக அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விவரத்திற்கு கூட்டுறவு துணைப் பதிவாளரிடத்திலே சென்று 'கேட்டால், உங்கள் பகுதியிலே ஏற்கனவே ஒரு சங்கம் பதிவாகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. பத்து விவசாயிகள் ஆளுக்கு 10 ரூபாய் போட்டுவிட்டால், அந்தச் சங்கம் பதிவு செய்யப்படுகிறது. இதுவரை எந்தச் சங்கமும் செயல்படுவதாகத் தெரியவில்லை. அவர்கள் ஏதோ ஒரு பேப்பரிலே அந்தச் சங்கம் பதிவுசெய்யப்பட்டுவிட்டது என்ற மாதிரி இந்த பேப்பரைத்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதனுடைய பிரதிநிதிகள் மட்டும் மாவட்டக் கூட்டுறவு பாங்கிலே இருக்கிறார்கள். இது எந்த முறையிலே சிறந்ததோ, எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்தச் சங்கம் எந்த நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று ஏற்பட்டதோ அந்த நோக்கம் என்ன என்றும் சிறு விவசாயிகளுக்கு எந்த அளவு பயன்படும் என்றும் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



15th December 1971]

[திரு. எஸ் வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

அடுத்தபடியாக, இந்த மத்திய பாங்குக்கும் ஒவ்வொரு பாங்குக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கை என்ன என்பதைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிறு நீர்ப்பாசனத் தலைமை சங்கம், விவசாயக் கூட்டுறவு வங்கிகள் இந்த மாதிரி சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் எலலா இடத்திற்கும் எடுக்கப்பட்ட விதம் மிக துரிதமாக இருந்தது. நான் இந்த மன்றத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப்படுவதில் உள்ள வேகம் எங்கள் மத்திய கூட்டுறவு பாங்குக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் இல்லை. நம்முடைய மதிப்பிற்குரிய அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கத்திலிருந்து விலகி வந்த பிறகு நாளது வரையில் தேர்தல் நடத்தப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. சங்கத்தில் எல்லாப் பிரதிநிதிகளுமே இருக்கிறார்கள். இருந்தும் ஏன் நடத்தப்படவில்லை என்று தெரியவில்லை. அடுத்தபடியாக, கிராமப் புறங்களில் கூட்டுறவு ரூரல் ஹவுசிங் சொசைடிகள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களில் ஒருவர் தான் புதிதாக வீடு கட்ட வேண்டுமென்று மனுச் செய்து கொண்டால் முதலில் அவருடைய இடத்திற்குரிய கிரயப் பத்திரம் வேண்டுமென்று கூறப்படுகிறது. கிராமப் புறங்களில் பரம்பரை பரம்பரையாகச் சொந்த இடங்களில் இரண்டு மூன்று தலை முறைகளாக வசித்து வருகிறார்கள். அதற்கு எந்த வித தஸ்தாவேஜும் இருக்க முடியாது. பல தலைமுறையாக பரம்பரை பரம்பரையாக குடியிருந்து வருகிறார்கள். கட்டவிருக்கும் வீட்டிற்காக மனுச் செய்தால் முதலிலேயே மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்தச் சட்டத்தில் அதற்கு என்ன வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மனுச் செய்து கொண்டால், 2 ஆயிரம், 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று மனுச் செய்து கொண்டால், எல்லா மனுக்களும் சென்னைக்கு வந்துதான் அந்தக் கடன்கள் சாங்க்ஷன் ஆகின்றன. ஒருவர் சங்கத்திற்கு 5 ஆயிரம் வேண்டுமென்று மனுக் கொடுத்துவிட்டால், எங்களுக்கு 'அலாட்மெண்டு' இல்லை என்று திரும்ப டெபுடி ரெஜிஸ்ட்ராரிடமிருந்து பதில் வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் 10 ஆயிரம் ரூபாய் வீடு கட்டும் சங்கத்திற்கு 'அலாட்மெண்டு கொடுத்திருந்தார்கள். தீர்ந்து விட்டது என்று கூட்டுறவு டெபுடி ரெஜிஸ்டிரார் சொன்னார். இப்பொழுதுதானே 10 ஆயிரம் லோன் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால், அந்த 'அலாட்டுமெண்ட் கொடுக்கப்படவில்லை, பொள்ளாச்சிப் பகுதிக்கு என்று சொன்னார்கள். நாங்களெல்லாம் என்ன கருதுகிறோம் என்றால் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கடன் கொடுப்பதற்கு அந்த ஜில்லா அளவிலே மத்திய பாங்குக்கோ துணைப் பதிவாளர்களுக்கோ அனுமதி கொடுத்து ஒருவர் வீட்டுக் கடன் கேட்கும் போது கொடுக்க வகை செய்ய வேண்டும்.

[15th December 1971

[திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்த கிராமப் புற விடு கட்டுகிற கூட்டுறவுச் சங்கங்கள் இந்த மசோதாவிற்குச் சம்பந்தமில்லாதது. இந்த அமைச்சருக்கும் சம்பந்தமில்லாதது. இது தொடர்பு இல்லாத காரணத்தினால், தொடர்ந்து இதுபற்றிப் பேச வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** பேச வேண்டுமென்ற கருத்தில் பேசுகிறேன். கூட்டுறவு விடு கட்டும் சங்கம் என்ற பெயர் அப்படியே இருக்கிறது. கிராமாந்திரக் கூட்டுறவு சங்கம் என்று இருப்பதனால், குறிப்பிட விரும்புகிறேன். சம்பந்தப்படாமலிருந்தாலும் அரசு மேற்கொண்டு வழி வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் இந்த கிராமங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வியாபாரங்களுக்காக மத்திய பாங்கியில் காஷ் கிரெடிட் லோன் சாங்ஷன் செய்யப்படுகிறது. குறிப்பிட்ட அளவிலே அவர்கள் இதை அனுபவித்து வருகிறார்கள். ஆனால் பல சங்கங்கள் தங்களுடைய வியாபாரப் பொருள்களை வெளியே அனுப்பி, அதற்குரிய தொகை வந்து சேரும் வரையில், நூல் வாங்குவதற்கும் நூல் விநியோகிப்பதற்கும் பணம் இல்லாமல் கஷ்டப்பட நேரிடுகிறது. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் காஷ் கிரெடிட் கடன் தொகை சிறந்த முறையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டு பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவரவர்களே, இந்த மசோ
மாலை 6-10 தாவை ஆதரிக்கும் சமயத்தில் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சாதாரணமாக இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தை பரம்பரை பாத்தியமாக வைத்திருக்கிறவர்களிடத்திலிருந்து பிடுங்கி சாதாரண மக்களுடைய ஒரு பிரதிநிதியிடத்தில் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சில காரியங்கள் செய்யப்படும் என்று எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு வங்கியைத் திறக்கிற சமயத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் கருத்து சொன்னார்கள். அந்த மாதிரிச் செய்வதில் ஆட்சேபணையில்லை. அது வரவேற்கத்தக்கது தான். ஜமீன்தார்கள் ஸ்தாபனமாக சில வருடங்களுக்கு முன் வரை இருந்திருக்கிறது. தகப்பன் இருந்தால். அவனுக்குப் பிறகு மகன் இருப்பது என்று இப்படிப் பரம்பரை பாத்தியமாக இருந்து வந்தது. அதிலே நம்முடைய திரு. கிருஷ்ணசாமி நாயுடு போன்றவர்கள் நெடு நாட்களாக இருக்கிறவர்கள், இப்படி உண்மையானவர்கள் இருக்கிறார்கள். அப்படிச் செய்கிற நோக்கிலே யார் இதைத் தங்கள் சுய நலத்திற்குச் செய்துகொண்டு பரம்பரையாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களை மாத்திரம் நீக்கிவிட்டு எல்லோரையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்காமல் நல்லவர்களைப் பெரு நோக்கோடு பார்க்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். நான் இப்போது விருதுநகர் கூட்டுறவு



15th December 1971]

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

மார்க்கெடிங் சொசைடித் தலைவனாக இருக்கிறேன். அருப்புக் கோட்டை மார்கெடிங் சொசைடி வேலை செய்யவில்லை. அதையும் என் தலையில் கட்டினார்கள். சாத்தூர் மார்கெடிங் சொசைடி வேலை செய்யவில்லை. அதையும் என் தலையில் கட்டினார்கள். இருக்கிற கஷ்டம் என்னவென்றால் பிரதிநிதிகளுக்கு உப்பு உரங்களைக் கொடுக்கிறார்கள். நம்மிடம் கொடுத்து சொசைடிக்குக் கொடுக்கச் சொல்கிறார்கள். இரண்டு மூன்று சொசைடிகள் உப்பை விற்று விட்டார்கள். இப்போது உப்பு ஸ்டாக் இல்லை என்று டெபுடி ரெஜிஸ்ட்ராரிடத்திலே சொன்னால், அவர்கள் பேரில் நடவடிக்கையில்லை. மாண்புமிகு நண்பர் திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னார்கள், இப்படிக் கொடுக்கிற பணத்திற்கு டைரக்டர்கள் தான் பொறுப்பு என்று இப்படி ஏற்பட்டால், என்னைப் போன்றவர்களெல்லாம் டைரக்டர் வேலை வேண்டாம், சேர்மன் வேலை வேண்டாம் என்று விலகிப் போகவேண்டிய நிலைமை ஏற்படும். இந்த மாதிரி ஓட்டைகள் இல்லாதபடி செய்ய வேண்டும். சாதாரணமாக இந்த நில வள வங்கிகளில் எங்கள் ஊரில் ஒருவர் கடன் வாங்கியிருக்கிறார். கிணற்றுக்காக பொட்டல் காட்டைக் காட்டி வாங்கியிருக்கிறார். நாளைக்குக் கடன் திருப்பிக் கொடுக்காவிட்டாலும் அந்த பொட்டல் நிலம் தானே போகும் என்ற நிலைமையில் இருக்கிறது. இப்படிப் பணம் கொடுக்கப்படுகின்றது. கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிக் குவித்து ஏழை மக்கள் நன்றாக வாழ வேண்டுமென்று செய்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தோடு செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே. இந்த மசோதாவைப்பற்றி இத்தனை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இது குறிப்பிட்ட மாலை 6-20
ஒரே ஒரு காரியத்திற்காக ஏற்பட்ட மசோதாவாக இருந்தாலும், பொதுப்படையாக கூட்டுறவுத் துறையைப் பற்றிய பொது விவாதமாகவே நடந்தது. இதில் எவ்வளவு தூரம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையைப்பற்றி நல்ல கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதைக்காண உள்ளத்தில் மகிழ்ச்சியடைகிறேன். பொதுவாகச் சொல்கிறபோது இரண்டு முக்கியமான காரியத்தை எடுத்துச் சொன்னார்கள். முதலில் சொன்னார்கள். இந்த நாமினேஷன், நியமன உறுப்பினர்களைப்பற்றிச் சொன்னார்கள். இதில் அரசு தலையிடுகிறது என்று சொன்னார்கள் பொதுவாக முன்னேற்றமில்லையென்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, இது உருக்குலைந்து போய்விட்டது, சீரழிந்து விட்டது என்று சொன்னார்கள். இதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும் என்று கருதுகிறேன். இந்தத் தத்துவத்தைப்பற்றி திரு. சா. கணேசன் அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவுத் தத்துவம் என்றால், அதிலே இருக்கப்பட்ட பங்குதாரர்கள், சுயாட்சியாக அந்தந்த

[திரு. அய்யண்ணன் அம்பலம்]

என்றெல்லாம் கூட்டுறவுத் துறை அமைச்சர்மீது குற்றம் சாட்டினார்கள். ஆனால் என்னுடைய ஒரு சில அனுபவத்தை இந்த மாமன்றத்திலே சொல்லலாம் என்று கருதுகிறேன். நான் கூட்டுறவுத் துறையிலே பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவன். என்னுடைய சங்கத்திலே உறுப்பினராக நான் சேர்ந்தேன். அந்தக் கூட்டுறவுத் துறை மத்திய பாங்கிக்கு தேர்தல் சங்க மேற் பார்வையாளர் மட்டத்தில் நடந்தது. அந்தத் தேர்தலிலே நான் பங்குகொள்ள வேண்டும் என்று இருந்து எனக்கு ஆதரவாக இருந்த 25 உறுப்பினர்களை நான் அழைத்துக் கொண்டு சென்றேன். ஆனால், தேர்தலிலே எனக்கு ஆதரவாக ஓட்டளிக்க வந்த 6, 7 உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்று சொல்லி விட்டார்கள். என்ன காரணம் என்று கேட்டால், அந்தக் கூட்டுறவு சொசைட்டிக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களை வாபஸ் செய்துவிட்டதாக கோவாப்பரேடிவ் புத்தகத்திலே திருத்தம் எழுதிக் கொண்டார்கள். இதுதான் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. மதுரை மத்திய வங்கியை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே முதல் நாள் வரை கூட்டுறவு காரியதரிசியாக, அதாவது சம்பளம் பெற்ற ஊழியராக இருந்தவர் அடுத்த மாதம் அந்தச் சங்கத்திற்குத் தலைவராக வந்துவிட்டார்கள். 'அதைச் சட்டப்படி தடுக்க முடியவில்லை.' இந்த அளவிலே தான் தேர்தல் என்பது இருக்கிறது. அடுத்த ஆண்டு தேர்தலிலே பங்கு கொள்ளாமல் எச்சரிக்கையாக நான் இருப்பேன். இந்த நிலையிலே இங்கே ஜனநாயகம் இருக்கிறதா என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இது எல்லாம் இப்பொழுது நடைபெற்றதில்லை.

**திரு. அய்யண்ணன் அம்பலம்:** இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஒரு புரட்சியை இந்தக் கூட்டுறவிலே செய்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது என்னவோ 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததுதான். இந்த அளவுக்குக் கூட்டுறவுத் துறையிலே புரட்சி செய்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் போன்ற இளைஞர்களுக்கு எல்லாம் நல்ல ஊக்கம் தரும் வகையிலே . . . (சிரிப்பு) மதுரை மத்திய பாங்கை எடுத்துக்கொண்டால் நல்லது. அங்கே தலைவராக இருப்பவர்கூட என்னைப் போன்ற இளைஞர்தான். இந்த அர்த்தத்திலேதான் நான் அதைக் குறிப்பிட்டேன். சரித்திரத்தைப் பார்த்தால் பணக்காரர்கள்தான் அதிலே ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தச் சட்டம் அவைகளையெல்லாம் முறியடிக்கிறது என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்தோடு இப்பொழுது நவீன அரிசி ஆலை பல இலட்சம் ரூபாய் செலவு செய்து பெரியார் நீர்த்தேக்கத்தினால் இரண்டு போகம் விளைவிக்கக் கூடிய பகுதிகளிலே எல்லாம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் தாலுக்கா சங்கங்கள் நிர்வகிக்கச் செய்திருக்கிறார்கள். ஆனால் 3 ஆண்டுகள் ஆகியும்



[திரு. அய்யண்ணன் அம்பலம்]

அவைகள் எல்லாம் நிர்வகிக்கப்படாமல் இருக்கின்றன பண வசதியின்மையாலும், மற்றும் நிர்வாகக் காரணங்களினாலும், அவைகள் எல்லாம் செயல்படாமல் இருக்கின்றன என்பதை இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். அதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து அவைகள் செயல்படும் விதத்திலே 5.10 p.m. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தச் சட்டம் இன்னும் விவசாயிகளுக்கும் கீழ்த் தர மக்களுக்கும் நல்ல முறையிலே செயல்பட, அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே கூட்டுறவு கிராம நாணய சங்கங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த வகையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இதை ஆதரித்து, அமைகிறேன்.

*** திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள கூட்டுறவு சட்டத் திருத்த மசோதா அவசியமில்லாதது என்று நான் கருதுகிறேன். இதற்கு முன்னால், மாநில அளவிலுள்ள பல கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு 'அபெக்ஸ் சொஸைட்டீஸ்' என்ற வகையில் மாநிலச் சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாநில அளவிலே உள்ள மாநிலக் கூட்டுறவு வங்கி, சம்பந்தப்பட்ட வரையிலே அதற்கான சட்டமும் விதிகளும் செய்யப்பட்டு அது புதிய முறையில் திருத்தங்களுடன் நடைபெற்று வருகிறது. மாநில நிலவள வங்கியும் அதே முறையில் நடைபெற்று வருகிறது. அதைத் தவிர மாநில அளவில் செயல்படும் மார்க்கெட்டிங் சொசைட்டி ஸ்தாபனமும், மற்றும் இது போன்ற ஸ்தாபனங்களும் 'அபெக்ஸ் சொசைட்டீஸ்' என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாநிலச் சங்கங்களுக்கான விதிமுறைகள் இப்போது வகுக்கப்பட்டு வருகின்றன என்று நான் கருதுகிறேன். இவைகள் எல்லாம் மாநில அளவில் செயல்பட்டு வரும் கூட்டுறவு ஸ்தாபனங்கள். இந்தத் திருத்த மசோதா மாநில அளவில் இல்லாவிட்டாலும், மாநிலத்தில் ஏதாவதொரு பகுதியில் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்கள் சென்ட்ரல் சொசைட்டி என்ற பெயரால் அழைக்கப்பட வேண்டுமென்றும், முன்னால் மாநில அளவில் செயல்பட்டுக்கொண்டு வந்த சங்கங்களுக்கு உண்டான விதிமுறைகள் சென்ட்ரல் சொஸைட்டிக்கும் அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாநில அளவில் இல்லாது மாநிலத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் நடைபெறும் சங்கங்களை இம்மாதிரிக் கொண்டு வருவதன் நோக்கம் இப்போது மாநில அளவிலுள்ள பாங்கிகள், மத்திய பாங்கிகள், அபெக்ஸ் சொசைட்டிஸ் இவற்றின் நிர்வாகத்திலே அரசு தலையிடுவதற்கு, எத்தனை பேர் நிர்வாக சபை அங்கத்தினர்கள் இருக்க வேண்டும், அரசு எத்தனை பேரை நியமிக்கும், பிரதிநிதித்துவம் இன்னின்ன முறையில் இருக்கவேண்டும், ஆக மொத்தம் ஏற்படக் கூடிய நிர்வாகசபையில் எத்தனையில் ஒரு பங்கை அரசு நியமிக்கும் என்று விதிகள்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

வரக்கூடிய எந்தச் சங்கத்தையும் அரசு கருதினால், இந்த அரசு கெசட்டிலே பிரசுரிப்பதன்மூலம், சென்ட்ரல் சொசைடி என்று அறிவித்துவிடலாம் என்பது இதிலே வருகிறது. அப்படியானால் மாநிலத்திலே உள்ள எந்த ஒரு சங்கத்தையும், அந்த சங்கத்தினுடைய விவகார எல்லை எதுவாக இருந்தாலும், எந்த முறையிலே செயல்பட்டு வந்தாலும், அரசு அது சென்ட்ரல் சொசைடியாக செயல்பட வேண்டுமென்று கருதினால், நோடிஃபிகேஷன் மூலம் சென்ட்ரல் சொசைடி என்று அறிவித்துவிடலாம். சென்ட்ரல் சொசைடி என்ற முத்திரை அதற்குக் கொடுக்கப்படுமானால், அதனுடைய நிர்வாகத்திலே அரசு கை வைக்கிறது, தலையிடுகிறது என்று அர்த்தம் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது மற்ற ஸ்தாபனங்களுக்கு நியமனம் செய்வது போல் அந்த ஸ்தாபனங்களுக்கும் அரசியல் பிரதிநிதிகளை நியமனம் மூலமாக, நாமினேஷன் மூலமாக நியமிப்பார்கள் என்ற நிலைமை அங்கு ஏற்படும். இது தவறு. சென்ட்ரல் சொசைடி என்று அறிவிக்கப்படுகிற ஸ்தாபனங்களுடைய விவகார எல்லைக்குள்ளே புதிய சங்கங்களை ஆரம்பித்தோ அல்லது இருக்கக்கூடிய சங்கத்தினுடைய பிரதிநிதித்துவத்தை அதிகரித்தோ அது தங்களுக்குச் சாதகமாக இருக்கும் வகையிலே அமைவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அது சாதகமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்காகத்தான் மாநில அளவிலே உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் எவை எவை என சட்டம் செய்யப்பட்டுவிட்டது. அவற்றில் தமிழ்நாட்டு கூட்டுறவு வங்கி நிர்வாக சபையின் எண்ணிக்கை, அதில் அரசு நியமனம், தேர்தல் முறை பற்றி விதிகளும் செய்யப்பட்டுவிட்டன. தமிழ் நாட்டு நிலவள வங்கி, பிரதான நிலவள வங்கிகள் குறித்த சட்டத்தின் விதிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. இனி பிரதான நிலவள வங்கி என்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அரசும் கருதவில்லை. அமைச்சர்களும் கருதவில்லை. நோக்கம் நிறைவேறிவிட்டது. ஆகையினாலே மற்ற வட்டாரங்களுக்கு நிலவள வங்கிகள் அவசியமா என்பது இனிமேல் கவனத்திற்குக் கொண்டுவரப்படாத விஷயமாகவே கருதப்பட்டுவிடும் என்றுகூட கருதுகிறேன். அதிலே பல அநுகூலங்கள்கூட இருக்கின்றன. இத்தகைய ஸ்தாபனங்கள் எல்லாம், அவை போதிய பலன் அளிக்கின்றனவா என்று பார்க்கவும் நல்ல நிர்வாக அமைப்பைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும் என்றும், உலக பேங்கினுடைய பிரதிநிதிகளும் ரிசர்வ் பேங்க் பிரதிநிதிகளும் கூடி ஏதோ கருத்துக்களைத் தெரிவித்துவிட்டார்கள் என்றும் பழியை அவர்கள் தலைமேல் தூக்கிப்போட்டுவிட்டு மற்ற வட்டாரங்களுக்கு நிலவள வங்கிகள் அவசியமில்லை என்றுகூட சொல்லப்படலாம். இது எப்படி இருந்தாலும் கொண்ட கருத்து நிறைவேறுவதற்கு அமைக்கப்பட்ட பாங்குகளே இருக்கின்றன என்று செய்து முடித்துவிட்டார்கள். அபெக்ஸ் சொசைடிகளுக்கும் விதிகள் இயற்றப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவற்றுடன்



[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் செயல்படும் ஸ்தாபனங்களுக்கு சென்டரல் சொசைடி என்ற நாமகரணம் சூட்டி அவற்றுக்கும் மேற்கண்டவாறே விதிகள் இயற்றுவதற்குச் சட்டத்தையும் செய்து விதிகள் இயற்றும் அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. நான் முன்னாலே தெரிவித்த மாதிரிதான் கொண்டுவரப்படுகிறது. நான் கருதுவது, இப்போது ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கு எப்படிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டதோ. எப்படி தங்களுடைய கட்சியை வளர்ப்பதற்கு அவை அநுகூலமாக இருந்து வந்திருக்கின்றனவோ, அதேபோன்று இந்த ஸ்தாபனங்களிலும் அத்தகைய அதிகாரம் அல்லது ஆதிக்கம் தங்கள் கையிலே இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டமிட்டு இந்தத் திருத்தம் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள், கூட்டுறவுத் துறையிலே நல்ல பல முன்னேற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்ற நல்ல கருத்தோடு சந்தானம் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அரசு நியமித்தது. அதிலே முன்னாள் ரெஜிஸ்டிரார் இருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் ரெஜிஸ்டிராராக இருந்தவர் இருந்தார். இந்நாள் திட்டக்கமிஷன் மெம்பர் ஒருவர் அதிலே இருந்தார். தமிழ்நாட்டு கூட்டுறவு சங்கங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்க வேண்டிய மாநிலக் கூட்டுறவு யூனியன் செயலாளரும் அதிலே இருந்தார். மத்திய பாங்கின் தலைவராக இருந்த ஒருவர், மாநில வங்கிச் செயலாளர் ஒருவர், பாங்க் செயலாளர் ஒருவர், கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர், இவர்களும் சந்தானம் கமிட்டியிலே இருந்தார்கள். தமிழக அரசு இவர்களை நியமித்தது. 90,000 ரூபாய் செலவாயிற்று, அந்தக் கமிட்டிக்கு 508 பக்கங்கள். 316 சிபாரிசுகளுடன் 3 பாகங்களாகக் காலாகாலத்திலே பிரசுரிக்கப்பட்டு அரசினிடத்திலே சமர்ப்பிக்கப்பட்டும் விட்டது. என்ன ஆயிற்று? நல்ல பல யோசனைகளை அவர்கள் கூறியிருந்தார்கள். ஏழை மக்களுக்குப் பிரதிநிதித்துவம், பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். பிரதான சங்கங்களின் நிர்வாக சபைகளில், கிராமங்களிலே இருக்கக்கூடிய சபைகளில் 7 முதல் 15 பேர்களும், மத்திய மாநில சங்கங்களில் 9 முதல் 21 பேர்களும் இருக்கலாம் என்று பொதுவாக அந்தக் கமிட்டி சிபாரிசு செய்தது. இப்பொழுது கோவை மாவட்ட மத்திய வங்கியில் 51 பேர்கள், மாநில நிலவள வங்கியில் 56 5-30 p.m.
பேர்கள் இருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்லவில்லை. ஆரம்பச் சங்கங்களிலேயே பெண்களுக்கென பிரதிநிதித்துவம் ஒதுக்கிவைத்துவிட வேண்டும், ஏழை மக்களுக்காக இத்தனை ஸ்தானங்கள் சட்டபூர்வமாகவே ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என சந்தானம் கமிட்டி கூறுகிறது. எந்த இடத்தில் ஏழை மக்களுடைய கடன் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட வேண்டுமோ, எங்கே ஏழை மக்களுடைய நலன்கள் கவனிக்கப்பட வேண்டுமோ அந்த இடத்தில் பிரதிநிதித்துவம் கொடுப்பதைப் பற்றிக் கவலைப்படாமல், சந்தானம் கமிட்டி சிபாரிசை அமல்படுத்

[15th December 1971

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

தாமல், எந்த எந்த இடத்தில் முக்கியமான அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு, ஆதிக்கத்தைப் பெறுவதற்கு அநுகூலமாக இருக்குமோ, அதற்கேற்ற வகையிலே மட்டும்தான் இந்தச் சிபாரிசுகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்ல முன்வருகிறேன். ஆதிக்கக்காரர்களின் பிடிப்பிலிருந்து விடுவிப்பதாக திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வருகிறது. இது நல்ல பேச்சு. கவர்ச்சிகரமான பேச்சு. யாரையும் கிட்டத்தட்ட நம்பும்படியாகச் செய்யக்கூடிய பேச்சுக்கூட என்பதை நாம் மறக்க முடியாது. அது உண்மைதான். மாநில மத்திய பாங்குகளிலே தலைவர்களாக இருந்தவர்கள் பகதூர்கள், மிட்டாதார்கள் என்றெல்லாம் சொன்னவர்கள் இவர்கள். கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். சில வருஷங்களுக்கு முன்னாலே தமிழகத்திலே நடைபெற்றுவந்த மத்திய வங்கிகளின் தலைவர்களாக யார் யார் இருந்தார்கள் என்று ஒரு ஜாப்தா எடுப்போம். எவ்வளவு காலம் இருந்தார்கள், யார் எவ்வளவு குபேரசம்பத்துகள் வைத்திருந்தார்கள் என்று பார்ப்போம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எத்தனையாண்டுக் காலம் இருந்தார்கள்?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** 1950-லிருந்து 1971 வரையில் இருந்தேன். சரிதானா? இருந்தேன். நான் அந்த பாங்கிலே இருந்தேன். 1927-லேயிருந்து கூட்டுறவுத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறேன். அந்தக் கிராம சங்கத்திற்கு பங்கு விண்ணப்பம் செய்து, அதற்கு சேங்ஷன் செய்கிற வரையிலே ஆஸ்திப் பொறுப்பு ஸ்டேட்மென்ட் எடுக்கிற வரையிலே ஒவ்வொரு காரியத்தையும் குமாஸ்தா செய்ய வேண்டிய வேலை பூராவையும் இன்னொருவரை எதிர்பாராமல் செய்யும் பொறுப்புடன் இருந்தேன். பெயருக்கு கூட்டுறவாளனாக இருந்ததில்லை. அத்தனையையும் என் கைப்படவே செய்துகொண்டு வந்திருக்கிறேன். 1927-இலேயிருந்து அத்தனை அனுபவமும் எனக்கு உண்டு. பாங்கிலே பிரிசிடென்டாக இருக்கவில்லை என்பதைத்தான் இப்பொழுது தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பத்திலே 8,000 ரூபாய் கடன் வாங்கக்கூடிய சக்தி இருந்த சங்கத்திலே 6 லட்சம், 8 லட்சம் ரூபாய் லேவாதேவி செய்யக்கூடிய சங்கமாகச் செய்திருக்கிறேன். தொடர்ந்து கூட்டுறவு சுப்பர்வைசிங் யூனியனிலே பல்லாண்டுகளாகத் தலைவனாக இருந்திருக்கிறேன்.

அவ்வளவு அந்தப் பகுதியிலே சங்கங்கள் விருத்தியடைந்திருக்கின்றன. என்ன செய்திருக்கிறேன் என்பதைப்பற்றிப் புள்ளி விவரங்கள் சொல்ல முடியும். ஒரு எக்கர் 40 செண்ட் நிலம் உடைய கிணறில்லாத அய்யாவு கோனாருக்கு கடன் கொடுத்து கிணறு வெட்டச் சொல்லி இப்போது அவர் 16 எக்கருக்குச்

THE TAMIL NADU CO-OPERATIVE SOCIETIES (AMENDMENT)
BILL 1971 (L.A. BILL NO. 52 OF 1971)

15th December 1971]

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

சொந்தமுள்ளவராக, 3 பம்புசெட்டுகளுக்குச் சொந்தமுள்ளவராக விருத்தியடைந்திருக்கிறார். அதைப்போல பல அரிஜனக் குடும்பங்களைச் சொல்ல முடியும். அவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி ஏழை எளியவர்களுக்கு இவைகள் செயல்படுவதற்கு, எனக்குத் தெரிந்த அளவிலே நிலமற்றவர்களுக்கு நிதியற்றவர்களுக்கு வகை செய்திருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். நான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா விற்பனைக் கூட்டுறவு சங்கத்தில் எத்தனை ஆண்டுக் காலமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்? இன்றைக்கும் தலைவராக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு பல லட்சக்கணக்காகக் கொடுத்திருக்கிறது. நாங்களே 3 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். நான் ஏதோ கட்சியைக் கருதிச் செய்வதாக எண்ணியிருந்தால், அவரும் எனக்கு எழுதியிருக்கமாட்டார். நானும் கொடுத்திருக்கமாட்டேன். அதைத் தவிர இன்னும் பல சொசைடிகளில் அவர் டைரக்டராக இருக்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் நிலவள வங்கியில் துணைத் தலைவராக இருக்கிறார்கள். ராமநாதபுரம் சென்ட்ரல் பாங்கில் இயக்குநராக இருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவுத் துறையைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள், நன்றாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படி அவருக்குப் பண உதவி செய்திருப்பேன்? ராமச்சந்திரபுரம் நூல் விடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருக்கிறார்கள். அப்புறம் லேபர் காண்டிராக்ட் சொசைடியிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள லேபர் காண்டிராக்ட், தொழிலாளர்களுடைய காண்டிராக்ட், சொசைடியிலே இருந்திருக்கிறார்கள். அதற்கு அரசின் உதவி 12,500 ரூபாய் கொடுக்கப்பட்டது. அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் யூனியனில் இருக்கிறார்கள். அவர்கள் காரியங்களை நன்றாகச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அவர் சந்தானம் கமிட்டியைப்பற்றிச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, அதன்படி யாரும் 6 வருடங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தனை ஆண்டுக் காலமாக உறுப்பினராக இருக்கிறார்களே?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அதைக் கொண்டுவர வேண்டுமென்று தான் சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, 3 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்தேன் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். சொசைடிக்கா, அல்லது தனிப்பட்டவருக்கா அது கொடுக்கப்பட்டது என்பதை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இன்றைக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் விற்பனை சங்கத்திற்கு அரசு பண உதவி செய்திருக்கிறது.

[மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்]

போனதடவை அங்கத்தினர் அவர்கள் சொன்னபோது "நீங்கள் செய்யவில்லை, முன்னால் இருந்த அரசு செய்தது" என்று சொன்னார்கள். அப்போதிருந்த நிலைமையில் அரசு பங்கு மூலதனமாக 1 லட்ச ரூபாய் கட்டுகை, ஜின்னிங் ஃபாக்டரிக்கும் 15 ஆயிரம் பங்கு மூலதனமாக, கோடவுன் கட்ட ஒரு லட்ச ரூபாய் கொடுத்து உதவியது. முன்னால் இருந்த அரசு கொடுத்ததே என்றார்கள். நாங்கள் கொடுத்தது எப்படி கட்சிக் கண்ணோட்டத்தோடு கொடுத்திருக்க முடியும்? நான் இப்போது சொல்கிறேன். நாங்கள் எந்த விதமான கட்சிக் கண்ணோட்டமுமில்லாமல் நடக்கிறோம். அவர்கள் தமிழக அரசு உதவ வேண்டுமென்றார்கள். 3,500 ரூபாய் கொடுத்தோம். இந்த அரசு கட்சிக் கண்ணோட்ட உத்தேசமில்லாமல் நடக்கிறது என்று எடுத்துக் காட்ட இதைச் சொல்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: கூட்டுறவுத் துறையில் எந்தெந்த சங்கங்களில் நான் அங்கத்தினராகவோ தலைவராகவோ இருந்தேன் என்று சில பல சங்கங்களைச் சொன்னார்கள். அதில் 5-40 p.m. சிலவற்றில் நான் இல்லை. நான் ஜில்லா காண்ட்ராக்ட் சங்கத்திற்குத் தலைவனில்லை. அதை என் தலையில் போட்டு நான் தான் நடத்த வேண்டுமென்று நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கூட கேட்டார்கள். என்றால் சரிவர நடத்த முடியாது, அது நடக்காது. வேறு யாருக்கும் பொறுப்பைக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டேன். தாலுகா காண்டிராக்ட் சொசைடி பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் இருக்கிறேனோ இல்லையோ, அதை விட்டு விடுங்கள். ஆனால் நான் இந்த காண்டிராக்ட் சொசைடியில் இருந்தது கிடையாது. இருப்பதாகச் சொன்னால் அபத்தம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினாலே . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூட்டுறவு பற்றி விவாதிக்கிற நேரத்தில் கூட்டுறவு உணர்ச்சியோடு விவாதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்ன வார்த்தையை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும். அவர் இந்த சந்தர்ப்பத்தில் நல்ல வார்த்தையைச் சொன்னார்கள். நான் பேசி சிக்கிரமாக முடித்து விடலாம், இன்னும் நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று கருதுகிறேன். நான் பேசுவதற்கு இடையில் அமைச்சரவர்கள் குறுக்கு சால் ஓட்டாமல் இருக்க வேண்டும். எனக்கும் அவருக்கும் கிராம பாஷை தெரியும். அப்படியில்லாமலிருந்தால், சிக்கிரமாக என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ள முடியும். ஆகையினாலே நான் ஏதோ ஏழை எளியவர்களை முற்றிலுமே கவனிக்கவில்லையென்று சொல்லவில்லை. ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் ஆதிக்கம் போய்விடுகிறது என்ற பொறாமையின் காரணமாகப் பேசுகிறார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். கொஞ்சம் நியாயம் நீதி இவைகளுக்கு மதிப்புக் கொடுத்து உண்மையில்



[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

அவ்வாறு நடந்திருக்கிறதா என்று இந்தப் பிரச்சார வகையில் இல்லாமல் இந்த வார்த்தைகளை உபயோகிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முறையில் நடைபெறவேயில்லை. அவர்கள் ஏழை எளியோர்களைப் பிரதிநிதிகளாக உண்டு பண்ணினோம் என்கிறார்கள். எங்கு பிரதிநிதிகளை உண்டுபண்ணுகிறார்கள்? கடன் மனுவைப் பரிசிலனை செய்யவேண்டிய ஆரம்ப நிலவள வங்கியில் அவர்கள் பிரதிநிதிகளாக இல்லை. அந்தச் சங்கத்தில் அங்கத்தினராக இருந்து கடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து சாங்ஷன் செய்ய வேண்டியதை விடுத்து, அங்கே பிரதிநிதிகளாக இல்லாமல் மாநில நிலவள வங்கியில் 56 பேரை பிரதிநிதிகளாக உட்கார வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அக்கரையைக் கவனிக்க அங்கிருப்பவர்களுக்கு என்ன விவரங்கள் புரியும்? யாருக்குக் கடன் கிடைக்கவில்லை என்று ஒவ்வொரு மனுவின் பேரிலும் பரிசீலனை நடைபெறுகிறதா என்று கவனிக்கவேண்டிய இடம் ஆரம்ப நிலவள வங்கி. இதை சந்தானம் கமிட்டி சொல்லியது. பெண்களுக்கும் ஏழைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும், குறைந்த நிலமுள்ளவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று சந்தானம் கமிட்டி சொல்லியது. அதைப்பற்றிக் கவனிக்கவில்லை. இதைத்தான் நான் சொல்கிறேன். ஆதிக்கம் பெற வேண்டுமென்பதற்காக பல்வேறு சங்கங்களில் உள்ள பிரதிநிதிகளுக்கு இந்த பிரதிநிதித்துவத்தைக் கொடுத்து அவர்களை மெஜாரிட்டியாகக் கொண்டு வந்து நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன என்று சொல்கிறேன். அதே போலத்தான் இந்த சங்கம் சம்பந்தப்பட்ட மட்டிலே கூட இன்னொன்று. இந்த 10—15 மத்திய நிலவள வங்கிகளுக்கு நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறு சங்கங்கள் மூலமாகப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது, அமைச்சர் முயற்சியினாலே. இந்தப் பட்டியலை எடுத்துக் கொண்டு அரசாங்க நியமனம் பெற்றவர்கள் எப்படி சாமானியமானவர்கள் என்று பட்டியலைப் பரிசீலித்துப் பார்த்தால் தெரியும். முதலமைச்சரவர்கள் வாங்கிப் பார்க்க வேண்டும். ஒரு ஜில்லாவிற்குப் பிரதிநிதியாக இருக்க முடியாது என்று இருந்த சில பட்டதாரிகள் அல்லது வசதியுள்ளவர்கள் வேறு ஜில்லாக்காரர்களாக இருந்தால், அந்த ஜில்லாவிலே அவர்களுக்கு நிலமிருக்கிறது என்று பெயர் செய்து, அப்படிப் பிரதிநிதித்துவம் பெற்றவர்களும் இருக்கிறார்களே. ஆகவே இந்த நோக்கம் நான் சொன்னபடி பல்வேறு வகைகளிலே உபயோகப்பட்டிருக்கிறது. நடந்தது நடந்து முடிந்து விட்டது. இப்போதிருக்கக் கூடிய மற்ற சங்கங்களிலே, மாநில சங்கங்களிலே அல்லாமல் மத்திய நிலக் கூட்டுறவு வங்கிகளிலும் வந்துவிட்டது. இனிமேல் மார்க்கெட்டிங் சொசைடி, தாலுகா அளவிலே இருக்கக் கூடிய சங்கங்கள் இவைகளையும் சென்ட்ரல் சொசைடி என்ற பட்டியலில் கொண்டு வந்து இந்த நியமனங்களிலெல்லாம் அரசு தலையிட்டு நியமனம் செய்து அதிலே ஆதிக்கம் பெற வேண்டும்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

என்ற கருத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறதென்று கருதுகிறேன். இப்படிப்பட்ட முயற்சி வேண்டாம். கூட்டுறவுச் சட்டம் பல்வேறு வகைகளிலே உருக்குலைந்து போயிருக்கிறது. இதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். சட்டமோ, விதிகளோ சரியோ தப்போ செரியாது. தமிழில் அத்தனையும் உருவான ஒருங்கிணைந்த சட்டமாகக் கொண்டு வருவதற்கு வகை செய்ய வேண்டும். ஆங்கிலத்தில் சட்டமியற்றினாலும் தமிழில் கொண்டு வருவதற்கு வகை செய்ய வேண்டும். ஆங்கிலத்தில் இருப்பது நல்லது என்று சட்ட வல்லுநர்கள் சொன்னாலும், இதைச் செய்ய வேண்டும். சட்டத்திற்கு அர்த்தம் கூறப்படுகிற போது, ஆங்கிலத்தில் உள்ள ஷரா படி விளக்கம் சொல்கிறார்கள். ஏன் தமிழில் கொண்டு வந்திருக்கக் கூடாது? கொண்டு வந்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். தமிழில் இதற்கான சட்டமோ விதிகளோ சரியோ தப்போ தெரியாது. தமிழில் அத்தனையும் கொண்டு வர முயற்சி செய்தால், நன்றாக இருக்கும். அவசரப்பட்டு அவசரப்பட்டு இப்படிச் செய்வதால் இந்த மாதிரி நிலைமைகள் உள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கம், இந்த மார்க்கெட்டிங் சொசைடி பற்றிச் சொன்னார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் கோவாபரேடிவ் மார்க்கெடிங் சொசைடி அதனுடைய லாபத்திலே 50 சதவிதம் விவசாயிகளுக்கு போனஸாக கொடுத்து வருகிறது. இந்த மாநிலத்திலுள்ள எந்த மார்க்கெட்டிங் சொசைடி அவ்வாறு கொடுத்து வருகிறது என்று கேட்க விரும்புகிறேன். எனவே, அந்த வகையிலே அது நல்ல முறையில் தான் செயல்பட்டு வருகிறது. பல ஆயிரக்கணக்கான ஸ்தாபனங்கள் செய்வதைப்போல், அந்த ஸ்தாபனத்திலேயும் செய்திருக்கலாம். அதிலே 1 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் பங்குத் தொகை போட்டிருக்கிறார்கள். இன்னும் கூட சொல்லுவேன், கூட்டுறவு ஸ்தாபனங்களிலே அரசு பங்குத் தொகை அளித்திருந்தாலும், கடன் கொடுத்திருந்தாலும், அரசு கருதினால் அந்த ஸ்தாபனங்களுக்கும் அந்தச் சங்கங்களுக்கும் அவைகளின் நிர்வாக ஸ்தாபனங்களிலே 5 சத விதம் அரசே நியமனம் செய்வது என்ற எண்ணம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திலே இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு வேளை அதற்கான சட்டம் இந்த செஷனிலேயே கூட வந்தாலும் வந்துவிடலாம் என்று நான் நினைக்கிறேன். இப்படி எல்லாம் கூட்டுறவுத் துறையிலே தலையீடுகள் வருகின்றன. ஆங்கிலேயர்கள் ஆண்டபொழுது கூட இந்தக் கூட்டுறவுத் துறை நன்றாக நடத்தப்பட்டு வந்தது. இதற்கு முன்னால் அந்நிய ஆட்சி இருந்துகொண்டிருக்கும் பொழுது கூட, கூட்டுறவுத் துறையைச் சிறந்த முறையிலே நடத்தினார்கள். திரு. ராமலிங்கம் செட்டியார் போன்றவர்கள் எல்லாம் நல்ல கூட்டுறவாளர்களாக இருந்தார்கள். அவர்கள் எல்லாம் அரசினுடைய தலையீட்டையும் வன்மையாக எதிர்த்து வந்தார்கள். கூட்டுறவை நன்றாக வளர்த்து வந்தார்கள். இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட தமிழ் நாட்டில் கூட்டுறவுத் துறை நல்ல முறையிலே வளர்ந்து வருவதற்கு அவர்கள்



[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

எல்லாம் காரணமாக இருந்தார்கள். கூட்டுறவுத் துறை அரசினுடைய தலையீடோ, அரசினுடைய அதிகமான உதவியோ இல்லாமல், மேல் நாடுகளிலே குறிப்பாக கனடா போன்ற நாடுகளிலே நன்றாக வளர்ச்சியடைந்து வருகிறது. அந்த முறையிலே தமிழ் நாட்டிலே இதை வளர்ப்பதற்கான நல்ல பல சட்டங்களைக் கொண்டு வந்து, பணி செய்ய வேண்டுமென்றும், அத்தகைய முயற்சிகளிலே அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்றும் நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும், அமைச்சர் அவர்கள் இந்த மாதிரி இப்பொழுது "சென்ட்ரல் சொசைட்டி" என்று சொல்வது சரியல்ல. அரசு எந்த சொசைட்டியையும் 'சென்ட்ரல் சொசைட்டி' என்று நோட்டிபிகேஷன் மூலம் வெளியிடலாம். அப்புறம் அது யார். யார் சொசைட்டி என்ற முறையிலே கூட வெளியிடலாம். ஸ்ரீவில்லிபுத்தூர் மார்க்கட்டிங் சொசைட்டிபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கேயாவது கூட்டுறவு மேற்பார்வை யூனியன் பைலாப்படிதான் ஒரு மார்க்கட்டிங் சொசைட்டி நிர்வாகம் நடக்க வேண்டுமென்று ஒரு டிபுடி ரிஜிஸ்ட்டிரார் ஒரு உத்தரவை அனுப்புவாரா? அப்படி அனுப்புகிறார்கள் அய்யா? இதைக் கண்டு இங்கிருக்கும் உறுப்பினர்கள் கூட பரிதாபப்படுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு அந்தமாதிரிப் பழி தீர்க்கும் படலம் ஆரம்பிக்காமல், அது தான் அரசாங்கத்தின் கொள்கை என்றில்லாமல் கூட்டுறவுத் துறையை நல்ல முறையிலே வளர்த்தாக வேண்டும். இப்பொழுதே கூட்டுறவுச் சட்டம் ரொம்ப உருக்குலைந்து போயிருக்கிறது. எனவே, அந்தச் சட்டத்தை நல்லவிதமாக அமைத்து, மேலும் இத்தகைய சீரழியும் படலங்கள் விருத்தியாகாமல் பார்த்துக்கொள்ளக் கூடிய நிலைமையிலே நல்ல ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே இதைச் சட்டமாக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. சா. கணேசன்: துணைத் தலைவரவர்களே, இந்த 5-50
மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். கூட்டுறவுத் p.m.
துறையிலே நிரம்ப ஊழல் காணப்படுகிறது என்ற புகார் சர்வ சாதாரணமாக எங்கும் கேட்கப்படுகின்ற ஒன்று. இன்றும் காணப்படுகிறது என்று நான் கருதுகிறேன். சில இடங்களிலே நான் நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன்; பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே தான் நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

கூட்டுறவுத் தத்துவத்திற்கே முற்றிலும் முரணாக நம்முடைய மாநிலத்திலே இந்தத் துறை நடைபெறுகிறது. 'கூட்டுறவுத் தத்துவம்' என்றாலே, யார் யார் பங்குதாரர்களோ அவர்களுக்காகவே அது செயல்பட வேண்டும். ஒரு சொசைட்டியிலே கூட நான் பங்குதாரனாக இல்லை. ஆனால் நான் இங்கே இருக்கின்ற

[திரு. சா. கணேசன்]

ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்குப் போய் எனக்கு சீனி வேண்டும், அரிசி வேண்டும் என்று கேட்டால், தருவார்கள். அது கூட்டுறவு இல்லை. பெயர் வேறு ஏதாவது வைத்து, வள்ளுவன் சொசைட்டி, கம்பன் சொசைட்டி என்று நாம் போட்டு நடத்தலாம் கூட்டுறவு என்ற சொல்லுக்கே இது பொருள் இல்லை. கன்ஸூமர் சொசைட்டியாக இருந்தாலும் சரி, பணப் போக்குவரத்து சொசைட்டியாக இருந்தாலும் சரி, அது மார்க்கட்டிங்காக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அது அதிலேயுள்ள உறுப்பினர்களுக்கே பயன்பட வேண்டும். அந்த நிலை இன்றைக்கு இல்லை. அது முதலிலே சீர்படுத்தப்பட வேண்டும். எனக்குத் தெரிந்த வரையிலே, ஒரே ஒரு சொசைட்டி தமிழ் நாட்டிலே தான் நல்ல முறையிலே நடக்கிறது. அது தான் சந்திர சேகரபுரம் சொசைட்டி. அது அரசிடம் கடன் வாங்குவதில்லை. பங்குதாரர்களே அந்தப் பணத்தைப் போட்டுக்கொண்டு அவர்களே காரியங்களைச் செய்கிறார்கள். இது வெளியிலேயுள்ளவர்களின் பேச்சு மூலமாக எனக்குத் தெரிகிறது. அங்கே துளிக்கூட தவறு நடக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், அங்கு வரும் இலாப நஷ்டம், நன்மை தீமை, கெட்ட பெயர்—நல்ல பெயர் ஒவ்வொரு ஷேர் ஹோல்டரையும் பாதிக்கிறது என்ற அளவிலே அது செயல்படுகிறது. இன்னும் சிங்கப்பூர் பகுதியிலே இருக்கும் கோவாப்பரேடிவ் சொசைட்டி மூவ்மெண்ட் பூராவும் அப்படித்தான் நடக்கின்றது. அதனால் ஒரு ஷேர்ஹோல்டர் கூட நஷ்டப்படுவதில்லை. மேலும் அங்கெல்லாம் அரசாங்கம் எந்தவிதப் பண உதவியும் செய்வதில்லை. ஷேர்ஹோல்டர் எவ்வளவு பணம் அதிலே சேர்த்து வைத்திருக்கிறார்களோ, அது தான் மூலதனம். பாங்குகள் மூலதனத்திற்குப் பொருந்திய அளவில் கடன் தருகின்றன. அதாவது சார்ட்டர்டு பாங்க், மெர்கன்டைல் பாங்க் போன்றவைகள் அதே சமமான தொகையைக் கொடுக்கிறார்கள். அதற்காக அந்த பாங்குகளை தங்களுடைய பிரதிநிதிகளை நிர்வாகத்திலே டைரக்டர்களாகப் போட்டுவிடுகிறார்கள். எனவே, அங்கு நஷ்டம் வந்தாலும் அல்லது இலாபம் வந்தாலும், சொசைட்டியைத்தான் சேருகிறது. நமது தேசத்திலே நாளைய தினமே நான் ஒரு சொசைட்டியை ஏற்படுத்தலாம். நாங்கள் 50 பேர் சேர்ந்து கொண்டு ஆளுக்கு 10, 50 ரூபாய் என்று கொடுத்துவிட்டு, எங்களுடைய கேபிடல் 2,500 ரூபாய் என்று சொல்லி, 2½ இலட்சம் ரூபாய் கடன் வாங்கிவிட முடியும். இதை வங்கி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசாங்கத்தினிடமிருந்து வாங்கிவிடலாம். எனவே, இந்த மாதிரி வருவாயிலே இலாப நஷ்டம் வந்தால், நமக்கென்ன, செயல்படுகிறவர்கள் தங்களுக்கு இலாபம் வந்தால் போதும் என்றிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு இதனால் நஷ்டம் வந்தால், அவர்கள் கவலைப்படுவதில்லை. காரைக்குடியிலே நாம் பார்த்தோம், அங்கிருந்த ஒரு பாங்கியிலே சாதாரண மக்களும், தொழிலாளர்



[திரு. சா. கணேசன்]

களும், பெண்களும் போட்ட பணத்தையெல்லாம் ஏமாற்றிவிட்டு, திடீரென்று ஒரு நாள் அது மூழ்கிவிட்டது என்றார்கள். அர்பன் பாங்கைப் பொறுத்த வரையில் அரசாங்கம் கேரண்டி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்புறம் "கோஆப்பரேஷன்" என்ற பெயர் வைத்துக்கொண்டிருப்பதிலே என்ன நியாயம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை மனதிலே கொண்டு இதைச் செம்மைப்படுத்துவதற்கே இந்தச் சட்டம் வழி வகை செய்ய வேண்டும். அந்தக் காலத்திலேயிருந்து நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். 'கோவாப்பரேஷன்' சம்பந்தமாக ஒரு கேசு வருமானால் ஒரு சொசைட்டியோ அல்லது ஒரு பாங்கோ இருக்கின்ற சாதாரண வக்கீலை வைத்து 25 ரூபாய்க்கு அமர்த்திக்கொள்கிறார்கள். ஆனால் பணத்தைக் கையாடியவர் அதாவது அந்த வழக்கை எதிர்த்து வழக்காடுபவர், 50 ஆயிரம் ரூபாய் சாப்பிட்ட பேர்வழி, 1,000 ரூபாய் பீஸ் கொடுத்து நல்ல வக்கீலை அமர்த்திக்கொள்கிறார் இதனால் கோவாப்ரேட்டிவ் கேசு தோற்றுவிடுகிறது. முடிந்தது வேலை. அதனால் முதலிலே இருந்தே சொல்லி வருகிறேன். எந்த சொசைட்டியிலே தவறு வந்தாலும், அந்த சொசைட்டியிலே இருப்பவர்களை வாதியாகவோ, பங்குதாரர் ஒருவர் பிரதிவாதியாகவோ சேர்ந்து கொண்டு வழக்காட இதிலே வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

இப்பொழுது தேவஸ்தானங்கள் போன்ற இடங்களிலே நான் ஒரு வழிபடுகின்றவன் என்ற முறையிலே நம்மாலே எப்படி வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ சேர்ந்துகொள்ள முடிகின்றதோ அப்படி இதிலே சேர்ந்து கொண்டு கேஸ் நடத்துவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே, உங்கள் மூலமாக, விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

அது போக, இந்த மாதிரி சொசைடிகளிலே தப்பு தவறு, லாப நஷ்டங்கள் ஏற்பட்டால், அந்த டைரக்டர்களுக்கே முழுக்க முழுக்கப் பொறுப்பு என்று ஏன் வைக்கக்கூடாது? முனிசிபாலிடியிலே 15 ரூபாய் சேங்க்ஷன் இல்லாமல் செலவு செய்துவிட்டால், சர்சார்ஜ் என்று போட்டு அந்த மீட்டிங்குக்கு ஆஜராகியிருக்கிற அத்தனை அங்கத்தினர்களும் கொடுக்க வேண்டும் என்ற விதி எப்படி இருக்கிறதோ, அதே மாதிரி, கொடுத்தேன், வரவில்லை என்றால், ஏன் கொடுக்கப்பட்டது, ஏன் வரவில்லை. யார் சேங்க்ஷன் பண்ணினார்கள் என்று கண்டு அவர்களே பொறுப்பு என்று செய்துவிட்டால், இந்தத் தப்புகள் வராது. அப்பொழுது நான் டைரக்டராக வருகிறேன், வருகிறேன் என்பதெல்லாம் போய், நான் வரமாட்டேன், வரமாட்டேன் என்று சொல்லக்கூடிய நிலையும் வரும். ஆகையினாலே ஜாக்கிரதையாக அவர்கள் செயல்படுவார்கள். இத்தகைய துறைகளிலே டைரக்டராக இருந்து பணி செய்ய, தேச சேவா உணர்ச்சியோடு முன்வர வழி ஏற்படும். இதை மனதிலே நாம் கொள்ளவும் வேண்டும். ஆகவே இப்பொழுது நடக்கிறதெல்லாம் எப்படி இருக்கிறது " A gain without risk "

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

செய்யப்படும். எப்படி இப்போது மத்திய வங்கிகள் நடைபெறுவதில் அரசு அந்த வங்கியினுடைய பெரும்பான்மைக்கு தகுந்தபடியாக—கோயம்புத்தூர் மத்திய வங்கிக்கு 11 பேர் அரசு நியமனம், காஞ்சீபுரம் வங்கிக்கு 9 பேர் நியமனம், இன்னும் சில வங்கிகளில் 6-7 என்ற வகையிலே நியமனம்—நிர்வாக சபையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்று கருதுகிறதோ அதைப் போல் அந்த நிர்வாகத்தைத் தன்னுடைய பிடிப்பிலே வைத்துக் கொள்வதற்கான வகையில் மாநில ஸ்தாபனங்கள் மட்டுமல்ல, மாநிலத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருக்கும் எந்த ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தையும் அதற்கு சென்ட்ரல் சொசைட்டி என்ற பெயர் கொடுத்து, தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வது இந்த மசோதாவின் நோக்கம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 'நாமினேஷன்' என்பது மொத்தத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது என்று சட்டத்தில் சொல்லியிருக்கிறோம். இது நானாக விரும்பிச் செய்தது அல்ல. இந்தச் சட்டம் சென்ற முறை வந்த போது பேரவையில் (அசெம்பிளியில்), இந்தத் திருத்தம், அப்போது காங்கிரஸ் ஒன்றாக இருந்த கட்சியின் சார்பாகக் கொடுக்கப் பட்டது. அதைத் திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் கொடுத்தார்கள். அவர்கள் காங்கிரஸ் (ஓ)வைச் சேர்ந்தவர். அவர் கொடுத்த தீர்மானத்தை நான் ஏற்றுக்கொண்டேன். அதைத் தவிர நானாக ஒன்றும் செய்யவில்லை. 1/5 என்பது அவரால் கொடுக்கப்பட்ட திருத்தம். என்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி நடைபெற்று வருகிறது. ஐந்தில் ஒரு பங்குக்கு மேல் கூடாது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: காங்கிரஸ் ஆட்சி அரசு இருந்தபோது இருந்த சட்டத்தில் 'அரசு 3 பேர்களை நியமிக்கலாம்—அரசு பிரதிநிதிகளாக நியமிக்கலாம்' என்று இருந்தது. ஆனால் வழக்கத்தில் சம்பிரதாய நடைமுறையில் ஒருவருக்கு அதிகமாக நியமிக்கப்படுவதில்லை. அதற்கு அமைச்சர் அவர்கள் வேறு ஆதாரத்தைப் பார்க்க முடியாது. எல்லோருக்கும் தெரியாது. மூன்று பேரை நியமித்துக்கொள்ளலாம் என்பதற்கு உரிமை இருந்தாலும்கூட, ஒருவருக்கு அதிகமாக நியமனம் செய்ததில்லை. அப்படி ஒருவரை நியமித்தாலும்கூட, உத்தியோகப் பற்றற்றவர்களை நியமிப்பதில். உத்தியோகப் பொறுப்பிலே உள்ளவர்களைத்தான் நியமிப்பது என்பது நடைமுறையில் இருந்து வந்தது. அதை அமைச்சர் அவர்கள் இப்போது சொல்வது போல் மிகச் சாதுரியமாகச் சொன்னார்கள். அப்போது 3 பேர்கள்தான் இருக்க வேண்டும் என்று இருந்தது. இப்போது ஐந்தில் ஒரு பகுதியினர் இருக்க வேண்டும் என்று இன்னும் அதைத் தளர்த்தியிருக்கிறோம் என்று மறைமுகமாகச் சொன்னார்கள்.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நடந்ததைச் சொல்லுகிறேன். முன்னால் 3-ல் ஒரு பங்குதான் நீங்கள் செய்த சட்டம், 1961-ல். அது ஐந்தில் ஒரு பங்கு ஆகியது. காரணம் இந்தச் சட்டம் அசெம்பிளியில் விவாதத்திற்கு வந்தபோது இந்தத் 5-30 p.m.
திருத்தத்தைக் கொடுத்தவர் முன்னால் காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்திலே இருந்தவர் என்று சொன்னேன். அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருந்தோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: அங்கே என்ன நடைபெற்றது என்று தெரியாது. அதிகமாகப் பிரதிநிதித்துவம் வேண்டாம். ஐந்தில் ஒரு பங்கு வேண்டுமென்று நாங்கள் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். பார்ப்பவர்கள், ஏதோ 15 பேர் ஒரு சங்கத்தில் இருப்பார்கள், 3 பேர் அரசு நியமிப்பது என்று இருந்தது. 3 பேர் என்பதைவிட ஐந்தில் ஒரு பங்கு என்றால் இன்னும் குறைவாக இருக்குமென்று அரசுப் பிரதிநிதித்துவ நியமனத்தைக் குறைக்கும் வகையில் இருக்கும் என்று மேலெழுந்தவாரியாக கவனித்தவர்களும் உண்டு. ஆனால் 15-20 பேர் இருந்த ஸ்தாபனத்தில் 56, 57 பேர் வரப்போகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. நம்முடைய அமைச்சர் அவர்களின் அந்தச் சாதுர்யமான விளக்கத்தைக் கண்டு அரசினுடைய தலையீட்டையோ நியமனத்தையோ குறைக்கிறார்கள் என்று மேலெழுந்தவாரியாகப் பார்த்தவர்களும் நம்பினவர்களும் உண்டு. அவர்கள் சாதுரியம். அதன்படி இப்போதுள்ள அந்த நிர்வாக சபை எத்தனை பேர்களைக் கொண்டதாக அமையப் போகிறது என்ற அவருடைய உள்ளக்கிடக்கை அவர்களுக்குத் தெரியாது. பின்னால் ஏற்படுத்தும் சட்டத்தில் இப்படி வரப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. சொல்லியிருக்கவும் முடியாது. அரசுக்கு அதற்கான அதிகாரம் பெற்றுக் கொண்டு . . .

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஐந்தில் ஒரு பங்கு என்பது நான் சொன்னதல்ல. உங்களுடைய திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் திருத்தம் கொண்டு வந்தார்கள். அவர் எதை நினைத்துக்கொண்டு அந்தத் திருத்தத்தைக் கொடுத்தாரோ எனக்குத் தெரியாது. அது தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும், ஏழை எளியோர் குறைந்தபட்ச நிலமில்லாதவராக இருக்க வேண்டும் என்று அந்த நாமினேஷனை நாங்கள் கட்டுப்படுத்தினோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: அவர்கள் சொல்லி இவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவர்கள் சொன்னது ரொம்ப நல்லதாகப் போயிற்று என்று அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கலாம். நம்முடைய நோக்கத்திற்கு மிக அனுகூலமாக அமைந்திருக்கிறது என்று அவர்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கலாம். நான் எனது மனதிலே படுவதைச் சொல்கிறேன். இந்த மாநிலத்திலே பல்வேறு இடங்களிலே உள்ள குறைந்தபட்ச அளவிலே செயல்பட்டு

[திரு. எஸ் வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

குவதிலே சிக்கல் இருக்கிறது. மீண்டும் ஏதாவது அடமானம் செய்திருக்கக்கூடும் என்று கடனை மறுக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தம் எந்த முறையிலே இருந்தாலும், ஒருவர் ஒருமுறை அந்தச் சொத்துக்களை அந்தச் சங்கத்திலே அடமானமாகப் பதிவு செய்துகொண்டு, அவருடைய சொத்துக்குத் தகுந்தமாதிரி எவ்வளவு கடன் வேண்டுமென்று கோருகிறாரோ அதைப் பெற்று, திருப்பி ஒரு பகுதியைச் செலுத்திவிட்டால், அவர் கடன் மனுவைக் கொடுத்த தேதியிலேயே கடன் கொடுக்க அந்தச் சங்கத்திலே வசதி செய்துகொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் கிராம மக்கள் கடன் மனுவை எடுத்துக்கொண்டு தொந்தரவு படாமல் உடனடியாகக் கடன்பெற வசதி பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையிலே இந்த அரசு அதைச் செய்ய வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் பகுதிகளிலே எல்லா இடங்களிலேயும் சிறு நீர்ப்பாசனக் கூட்டுறவு விவசாய சங்கங்கள் என்று வெகு வேகமாக ஆரம்பிக்கப்பட்டுவந்தன. நாங்களெல்லாம்கூட யோசித்தோம், இது சிறிய விவசாயிகளுக்கு நல்ல முறையிலே ஏதாவது செய்யும் என்று. ஆனால் இன்றுவரையிலே அதிலே எத்தனை சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்ற விவரமே இல்லை. எங்களுக்குத் தெரிந்த வரையிலே, எங்களுக்கும் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற அனுபவத்திலே, அதுபற்றி விசாரித்துத் தெரிந்துகொண்ட வரையிலே எந்தச் சங்கமும் செயல்படவில்லை. இன்னும் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லி, மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் கூட சந்தேகப்பட்டோம். இந்தக் கூட்டுறவு சிறு நீர்ப்பாசன சங்கம் மத்திய சங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதற்காகத்தானா என்று. குறிப்பாக அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விரைத்திற்கு கூட்டுறவு துணைப் பதிவாளரிடத்திலே சென்று 'கேட்டால், உங்கள் பகுதியிலே ஏற்கனவே ஒரு சங்கம் பதிவாகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. பத்து விவசாயிகள் ஆளுக்கு 10 ரூபாய் போட்டுவிட்டால், அந்தச் சங்கம் பதிவு செய்யப்படுகிறது. இதுவரை எந்தச் சங்கமும் செயல்படுவதாகத் தெரியவில்லை. அவர்கள் ஏதோ ஒரு பேப்பரிலே அந்தச் சங்கம் பதிவுசெய்யப்பட்டுவிட்டது என்ற மாதிரி இந்த பேப்பரைத்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதனுடைய பிரதிநிதிகள் மட்டும் மாவட்டக் கூட்டுறவு பாங்கிலே இருக்கிறார்கள். இது எந்த முறையிலே சிறந்ததோ, எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்தச் சங்கம் எந்த நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று ஏற்பட்டதோ அந்த நோக்கம் என்ன என்றும் சிறு விவசாயிகளுக்கு எந்த அளவு பயன்படும் என்றும் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



[திரு. எஸ் வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

அடுத்தபடியாக, இந்த மத்திய பாங்குக்கும் ஒவ்வொரு பாங்குக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கை என்ன என்பதைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிறு நீர்ப்பாசனத் தலைமை சங்கம், விவசாயக் கூட்டுறவு வங்கிகள் இந்த மாதிரி சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் எலலா இடத்திற்கும் எடுக்கப்பட்ட விதம் மிக துரிதமாக இருந்தது. நான் இந்த மன்றத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப்படுவதில் உள்ள வேகம் எங்கள் மத்திய கூட்டுறவு பாங்குக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் இல்லை. நம்முடைய மதிப்பிற்குரிய அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கத்திலிருந்து விலகி வந்த பிறகு நாளது வரையில் தேர்தல் நடத்தப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. சங்கத்தில் எல்லாப் பிரதிநிதிகளுமே இருக்கிறார்கள். இருந்தும் ஏன் நடத்தப்படவில்லை என்று தெரியவில்லை. அடுத்தபடியாக, கிராமப் புறங்களில் கூட்டுறவு ரூரல் ஹவுசிங் சொசைடிகள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களில் ஒருவர் தான் புதிதாக வீடு கட்ட வேண்டுமென்று மனுச் செய்து கொண்டால் முதலில் அவருடைய இடத்திற்குரிய கிரயப் பத்திரம் வேண்டுமென்று கூறப்படுகிறது. கிராமப் புறங்களில் பரம்பரை பரம்பரையாகச் சொந்த இடங்களில் இரண்டு மூன்று தலை முறைகளாக வசித்து வருகிறார்கள். அதற்கு எந்த வித தஸ்தாவேஜும் இருக்க முடியாது. பல தலைமுறையாக பரம்பரை பரம்பரையாக குடியிருந்து வருகிறார்கள். கட்டவிருக்கும் வீட்டிற்காக மனுச் செய்தால் முதலிலேயே மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்தச் சட்டத்தில் அதற்கு என்ன வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மனுச் செய்து கொண்டால், 2 ஆயிரம், 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று மனுச் செய்து கொண்டால், எல்லா மனுக்களும் சென்னைக்கு வந்துதான் அந்தக் கடன்கள் சாங்க்ஷன் ஆகின்றன. ஒருவர் சங்கத்திற்கு 5 ஆயிரம் வேண்டுமென்று மனுக் கொடுத்துவிட்டால், எங்களுக்கு 'அலாட்மெண்டு' இல்லை என்று திரும்ப டெபுடி ரெஜிஸ்ட்ராரிடமிருந்து பதில் வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் 10 ஆயிரம் ரூபாய் விடு கட்டும் சங்கத்திற்கு அலாட்மெண்டு கொடுத்திருந்தார்கள். தீர்ந்து விட்டது என்று கூட்டுறவு டெபுடி ரெஜிஸ்டிரார் சொன்னார். இப்பொழுதுதானே 10 ஆயிரம் லோன் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால், அந்த அலாட்டுமெண்ட் கொடுக்கப்படவில்லை, பொள்ளாச்சிப் பகுதிக்கு என்று சொன்னார்கள். நாங்களெல்லாம் என்ன கருதுகிறோம் என்றால் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கடன் கொடுப்பதற்கு அந்த ஜில்லா அளவிலே மத்திய பாங்குக்கோ துணைப் பதிவாளர்களுக்கோ அனுமதி கொடுத்து ஒருவர் வீட்டுக் கடன் கேட்கும்போது கொடுக்க வகை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : தலைவரவர்களே, இந்த கிராமப் புற வீடு கட்டுகிற கூட்டுறவுச் சங்கங்கள் இந்த மசோதாவிற்குச் சம்பந்தமில்லாதது. இந்த அமைச்சருக்கும் சம்பந்தமில்லாதது. இது தொடர்பு இல்லாத காரணத்தினால், தொடர்ந்து இதுபற்றிப் பேச வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்** : பேச வேண்டுமென்ற கருத்தில் பேசுகிறேன். கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் என்ற பெயர் அப்படியே இருக்கிறது. கிராமாந்திரக் கூட்டுறவு சங்கம் என்று இருப்பதனால், குறிப்பிட விரும்புகிறேன். சம்பந்தப்படாமலிருந்தாலும் அரசு மேற்கொண்டு வழி வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் இந்த கிராமங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வியாபாரங்களுக்காக மத்திய பாங்கியில் காஷ் கிரெடிட் லோன் சாங்ஷன் செய்யப்படுகிறது. குறிப்பிட்ட அளவிலே அவர்கள் இதை அனுபவித்து வருகிறார்கள். ஆனால் பல சங்கங்கள் தங்களுடைய வியாபாரப் பொருள்களை வெளியே அனுப்பி, அதற்குரிய தொகை வந்து சேரும் வரையில், நூல் வாங்குவதற்கும் நூல் விநியோகிப்பதற்கும் பணம் இல்லாமல் கஷ்டப்பட நேரிடுகிறது. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் காஷ் கிரெடிட் கடன் தொகை சிறந்த முறையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டு பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாலை 6-10 **திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்** : தலைவரவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கும் சமயத்தில் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சாதாரணமாக இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தை பரம்பரை பாத்தியமாக வைத்திருக்கிறவர்களிடத்திலிருந்து பிடுங்கி சாதாரண மக்களுடைய ஒரு பிரதிநிதியிடத்தில் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சில காரியங்கள் செய்யப்படும் என்று எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு வங்கியைத் திறக்கிற சமயத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் கருத்து சொன்னார்கள். அந்த மாதிரிச் செய்வதில் ஆட்சேபணையில்லை. அது வரவேற்கத்தக்கது தான். ஜமீன்தார்கள் ஸ்தாபனமாக சில வருடங்களுக்கு முன் வரை இருந்திருக்கிறது. தகப்பன் இருந்தால், அவனுக்குப் பிறகு மகன் இருப்பது என்று இப்படிப் பரம்பரை பாத்தியமாக இருந்து வந்தது. அதிலே நம்முடைய திரு. கிருஷ்ணசாமி நாயுடு போன்றவர்கள் நெடு நாட்களாக இருக்கிறவர்கள்; இப்படி உண்மையானவர்கள் இருக்கிறார்கள். அப்படிச் செய்கிற நோத்திலே யார் இதைத் தங்கள் சுய நலத்திற்குச் செய்துகொண்டு பரம்பரையாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களை மாத்திரம் நீக்கிவிட்டு எல்லோரையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்காமல் நல்லவர்களைப் பெரு நோக்கோடு பார்க்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். நான் இப்போது விருதுநகர் கூட்டுறவு



மார்க்கெட்டிங் சொசைட்டித் தலைவனாக இருக்கிறேன். அருப்புக்கோட்டை மார்க்கெட்டிங் சொசைட்டி வேலை செய்யவில்லை. அதையும் என் தலையில் கட்டினார்கள். சாத்தூர் மார்க்கெட்டிங் சொசைட்டி வேலை செய்யவில்லை. அதையும் என் தலையில் கட்டினார்கள். இருக்கிற கஷ்டம் என்னவென்றால் பிரதிநிதிகளுக்கு உப்பு உரங்களைக் கொடுக்கிறார்கள். நம்மிடம் கொடுத்து சொசைட்டிக்குக் கொடுக்கச் சொல்கிறார்கள். இரண்டு மூன்று சொசைட்டிகள் உப்பை விற்றுவிட்டார்கள். இப்போது உப்பு ஸ்டாக் இல்லை என்று டெபுடி ரெஜிஸ்ட்ராரிடத்திலே சொன்னால், அவர்கள் பேரில் நடவடிக்கையில்லை. மாண்புமிகு நண்பர் திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னார்கள், இப்படிக் கொடுக்கிற பணத்திற்கு டைரக்டர்கள் தான் பொறுப்பு என்று இப்படி ஏற்பட்டால், என்னைப் போன்றவர்களெல்லாம் டைரக்டர் வேலை வேண்டாம், சேர்மன் வேலை வேண்டாம் என்று விலகிப் போகவேண்டிய நிலைமை ஏற்படும். இந்த மாதிரி ஓட்டைகள் இல்லாதபடி செய்ய வேண்டும். சாதாரணமாக இந்த நில வள வங்கிகளில் எங்கள் ஊரில் ஒருவர் கடன் வாங்கியிருக்கிறார். கிணற்றுக்காக பொட்டல் காட்டைக் காட்டி வாங்கியிருக்கிறார். நாளைக்குக் கடன் திருப்பிக் கொடுக்காவிட்டாலும் அந்த பொட்டல் நிலம் தானே போகும் என்ற நிலைமையில் இருக்கிறது. இப்படிப் பணம் கொடுக்கப்படுகின்றது. கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிக் குவித்து ஏழை மக்கள் நன்றாக வாழ வேண்டுமென்று செய்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தோடு செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்**: தலைவரவர்களே. இந்த மசோதாவைப்பற்றி இத்தனை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இது குறிப்பிட்ட மாலை
ஒரே ஒரு காரியத்திற்காக ஏற்பட்ட மசோதாவாக இருந்தாலும், 6-20
பொதுப்படையாக கூட்டுறவுத் துறையைப் பற்றிய பொது விவாதமாகவே நடந்தது. இதில் எவ்வளவு தூரம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையைப்பற்றி நல்ல கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதைக்காண உள்ளத்தில் மகிழ்ச்சியடைகிறேன். பொதுவாகச் சொல்கிறபோது இரண்டு முக்கியமான காரியத்தை எடுத்துச் சொன்னார்கள். முதலில் சொன்னார்கள். இந்த நாமினேஷன், நியமன உறுப்பினர்களைப்பற்றிச் சொன்னார்கள். இதில் அரசு தலையிடுகிறது என்று சொன்னார்கள் பொதுவாக முன்னேற்றமில்லையென்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, இது உருக்குலைந்து போய்விட்டது, சீரழிந்து விட்டது என்று சொன்னார்கள். இதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும் என்று கருதுகிறேன். இந்தத் தத்துவத்தைப்பற்றி திரு. சா. கணேசன் அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவுத் தத்துவம் என்றால், அதிலே இருக்கப்பட்ட பங்குதாரர்கள், சுயாட்சியாக அந்தந்த

[15th December 1971

[மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

சங்கங்களை நடத்திக்கொண்டு வரவேண்டுமென்பது அடிப்படைத் தத்துவம். அரசு தலையீடு இதில் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கானடாவில் இப்படிச் செய்யப்படுகின்றது என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் கானடா பற்றி அதிகமாகப் படிக்கவில்லை. போய்ப்பார்க்கவில்லை. ஆனால் ஸ்விடன் நாட்டைப்பற்றிப் படித்திருக்கிறேன். ஜப்பான் நாட்டைப்பற்றிப் படித்திருக்கிறேன். அங்கே அரசு தலையிடுவதில்லை. அது உண்மை. முன்னேற்றம் அடைந்த நாடுகளுக்கு இந்தத் தத்துவம் பொருந்தும். ஆனால் நமது நாட்டில், குறிப்பாக தமிழகத்தில் அந்தத் தத்துவத்தைக் கையாள முடியுமா என்று கவனிக்க வேண்டும். அவர்கள் நன்றாகச் சொன்னார்கள். பங்கு போடுகிறவர்கள், பங்குதாரர்கள். ஆகவே அவர்களுடைய ஆட்சியில் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் முழுக்க முழுக்க ஒப்புக்கொள்கிறேன். நல்ல தத்துவம். நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு ஒப்புக்கொள்கிறார்கள், வரவேற்கிறேன். பங்குதாரர்களாக இருப்பவர்கள் இதிலே தலையிடுவதிலே எந்தவிதமான தவறும் இருக்க முடியாது. வெளிநாடுகளிலே அரசு பங்கு போடுவதில்லை, இனாம் கொடுப்பதுமில்லை அல்லது மானியம் கொடுப்பதில்லை அல்லது அரசு எந்தவிதமான உதவியும் செய்வதுமில்லை. எனவே அரசு
6.20 p.m. அங்கே தலையிடுவதும் இல்லை. நான் ஒன்றைக் கேள்விப்பட்டேன், வெளிநாட்டிலே ஒரு வீடு கட்டுகின்ற சங்கம் 2,000 கோடி ரூபாய் பங்கு மூலதனமாகப் பெற்றிருக்கிறார்கள் என்று. அங்கே அப்படி நடக்கிறது. இங்கே எப்படி நடக்கிறது ? இங்கே பங்குதாரர்கள் என்று சொல்லும்பொழுது, அரசும் ஒரு பங்குதாரராக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அது முக்கியமான பங்குதாரராக இருக்கிறது இங்கே, அந்த நிலைமை முன்னேற்றம் அடையாத நாடுகளிலே எல்லாம் இருக்கிறது.

"Therefore that will have to be changed. Normally the co-operative principle, in so far as the developed countries are concerned, must be recast, so that the Co-operative Societies may be only quasi-Governmental organisations and not purely autonomous organisations."

நண்பர் திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுடைய சங்கத்தை எடுத்துப் பார்த்தாலும் கூட அது தெரியும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அரசு யாரை நியமனம் செய்கிறதோ அவர்கள் கூட்டுறவிலே உறுப்பினராக இருக்கிறார்களா என்று தெரிந்துகொண்டு நியமனம் செய்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதிலே நான் எடுத்துக் காட்டாகத் தான் சொல்லுகிறேன். எனவே, உறுப்பினர் அவர்கள் அதை தவறு இல்லாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். மாண்பு



15th December 1971]

[மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

மிகு திரு. கிருஷ்ணசாமி அவர்களுடைய விற்பனைச் சங்கத்திற்கு அரசு பங்கு மூலதனமாகக் கொடுப்பது ஒரு இலட்சத்து ஒன்பதாயிரம் ரூபாய்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஒன்பது ஆயிரம் ரூபாய் முன்னதாகவே கொடுக்கப்பட்ட தொகை.

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் பொதுப்படையான நிலைமையிலே தான் பேசுகிறேன். மாதிரிக்காகச் சொல்லுகிறேன். திரு. அய்யண்ணன் அம்பலம் அவர்கள் சங்கத்தை எடுத்துக் கொண்டாலும், ஏறத்தாழ 12 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்திருக்கிறது. அவருடைய மார்க்கட்டிங் சொசைடிக்கு அரசு கொடுக்கும் மூலதனத்தை வைத்து முக்கியமாகச் செயல்படும் அந்தச் சங்கங்களிலே அரசு முக்கியமான பங்குதாரராக இருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நாங்கள் அரசிடமிருந்து வாங்கும் தொகைகளுக்கு 6 சத விகிதம் வட்டி கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அரசு மூன்று விதமாக இந்தச் சங்கங்களுக்கு உதவி செய்கிறது. ஒன்று பங்குத் தொகை கொடுக்கிறது. அதிலே பொருள் மட்டும் தான் உண்டு. இரண்டாவதாக, கடன் கொடுக்கிறது. அதோடு மானியமாக, அப்படி என்றால் இனாமாக, பணம் கொடுக்கிறது. அந்தச் சங்கத்திற்கு அரசு இனாமாகக் கொடுத்திருப்பது 45,250 ரூபாய். அதிலே எந்தவிதமான வட்டியும் திருப்பிப்பெறுவது கிடையாது. அதைத் திரும்பக் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. அப்படி மானியமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பணத்திற்கு எல்லாம் நாங்கள் வட்டி கொடுத்துவிட்டோம் என்பது சரியான வாதமில்லை. ஆனால், சில விரல்விட்டு எண்ணக்கூடிய சங்கங்கள் 6 சதவிகிதம் வட்டி கொடுக்கிறார்கள். மானியத்திற்கும், நீங்கள் அரசு கொடுக்கின்ற பணத்திற்கு எல்லாம் நாங்கள் வட்டியைத் தந்தோம் என்றதால் தான், நான் அப்படிச் சொன்னேன். எனவே, இந்த ஒரு சங்கத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், இனாமாகக் கொடுத்திருப்பது 45, 250 ரூபாய். நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் என்ன சொன்னாலும் சரி, உள்ளபடியே அந்தரங்கத்திலே இந்த அரசு தவறாக நடக்கிறது என்ற எண்ணம் கொண்டவர் அல்ல. அவர்கள் கட்சி ஆட்சியிலே இருக்கும் பொழுது, அப்படி எதிர்பார்த்தால் அது வேறு. இப்பொழுது உள்ள அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்தக் கூட்டுறவுத் துறையிலே எந்தவிதமான கட்சிப் பாகுபாடும் செய்யவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் நம்புகிறார்கள். அதற்கு அடையாளமாகத் தான் அவர்கள் சென்ற வருஷம் பெற்ற தொகை

[திரு. சா. கணேசன்]

என்று சொல்வார்கள். எந்தவிதமான பொறுப்புமில்லாமல் கிடைத்தவரையிலும் லாபம் என்ற நிலையிலேதான் மிகப் பெரும்பாலான டைரக்டர்கள் கோவாபரேஷன் சம்பந்தப்பட்ட இடங்களிலே இருக்கிறார்கள் என்பது உலகம் அறிந்த பரம ரகஸ்யம்.

அதே மாதிரி இந்த முறைகளிலும் சென்டிரல் சொசைடி, சென்ட்ரல் பாங்க் என்று வைத்துவிட்டால், இராமநாதபுரம் சென்ட்ரல் சொசைடிக்கும், கோயம்புத்தூர் சென்ட்ரல் சொசைட்டிக்கும் உறுப்பினர் எண்ணிக்கையிலே எதற்காக வித்தியாசம்? ஏதோ முனிசிபாலிடி மாதிரி ஜனத்தொகை அளவிலே காரியம் பண்ணுவதில்லை. எல்லாவற்றிற்கும் கீழேயிருக்கிற சிறிய சொசைடிக்கு 12, 8, 5 என்று, அதேமாதிரி மேலே போகப் போக 20, 30, 50 என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். மாவட்டத்திற்கு இருக்கிற மத்திய சொசைடிகள் அனைத்திற்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். பல ஊர்களிலே (குறுக்கீடு) சந்தானம் கமிட்டி சொன்னதைப்பற்றிப் பேசவில்லை. இப்பொழுது இருக்கிறது. கோயம்புத்தூரிலே, எண்ணிக்கை எனக்குச் சரியாகத் தெரியாது, 50, இராமநாதபுரத்திலே 30 என்ற நிலை இருக்கிறது. ஏன் இது? இதை ஒழுங்குபடுத்திவிட்டால், அரசாங்கத்திற்கும் அதிகப்படியான அங்கத்தினர்களை நியமிக்கிறார்கள் என்ற பழிச்சொல், நியாயமாகவோ அல்லது நியாயத்தப்பாகவோ ஏற்படாமலிருக்கும். இதையும் செய்ய வேண்டும்.

அதே காலத்திலே அரிஜனப் பெருமக்கள், பெண்மணிகள், நிலம் இல்லாத ஏழை மக்கள், இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் ஒன்றை மறந்துவிடப்படாது. நிலம் இல்லாதவர்களுக்காக என்று, இங்கே இடமில்லை. பெண்கள் என்பதற்காக இங்கே இடமில்லை. அரிஜன் என்பதற்காக இங்கே இடமில்லை. அவர்கள் கோவாபரேடர்ஸாக, பங்குதாரர்களாக அதிலே செயல்படுகிறவர்களை, குறைந்த பட்சம் ஓராண்டுக் காலத்திற்காகவாவது உறுப்பினர்களாக இருந்தவர்களை நியமிக்க வேண்டும் என்று சந்தானம் கமிட்டி கூறியிருந்தது. அந்த நிலையில் கொண்டுவர வேண்டும். அப்படியெல்லாம் இல்லாமல் பெண் என்பதற்காக—நான் யாரையும் குறை சொல்லவில்லை, கூடாது என்று சொல்லவில்லை—பெண்ணினம் என்பதற்காகப் பண்ணுகிறேன் என்பது நியாயமல்ல. இங்கே நடப்பது கோவாபரேஷன். இதை மனத்திலே வைத்துக்கொண்டு காரியம் செய்ய வேண்டும்.

6-00 p.m. அரசு தலையிடப்படாது என்பதை நான் முழுக்க மறுக்கிறேன். அரசு தலையிடப்படாது என்பதைக் கோவாபரேஷன் என்ற தத்துவ ரீதியிலே நான் வரவேற்கிறேன். ஆனால் இங்கே நடக்கிற நடைமுறையிலே மிகப் பெரும் அளவுக்கு பணத்தை அரசு அதிலே கொட்டியிருக்கிறதோ, போட்டிருக்கிறதோ, என்ன பண்ணியிருக்கிறதோ எனக்குத் தெரியாது. இந்த நிலையிலே அரசு அதிலே தலையிடாமல் இருப்பதென்பது நியாயமில்லை. பாவம் என்று கூடகருதுகிறேன். இதைக் கருதி தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கையைக் கண்டிப்பாக நிர்தாட்சண்யமாக எடுக்க வேண்டும். இப்பொழுது வருகிற மசோதாவும், இதற்குப் பின்னே வரக்கூடிய திருத்தங்கள் எல்லாம் பயனுள்ளவையாக இருக்கும். இல்லாவிட்டால், மன்னிக்கவேண்டும், ஆட்சியிலே யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஏதோ சில அதிகாரம் ஏற்பட்டு (விடுவதனால் ஒன்றும்) பயனுள்ளதாக, துறை நலம் பெறுவதாக, மக்கள் சமுதாயம் வளம் பெறுவதாக அமையமாட்டாது. இந்த எண்ணங்களையெல்லாம் மனத்திலே கொண்டு இதைக் கடைபிடித்து செயல்படுத்த வேண்டும் என்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, அரசை நான் வேண்டிக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

* **திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கூட்டுறவு சட்டத் திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சட்டங்கள் எந்த முறையிலே இயற்றப்பட்டாலும், அவை கிராமப்புற மக்களுக்கு எந்த அளவிலே பயன்படுகின்றன என்பதையும் அரசு கருத்தில் கொண்டிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். உதாரணமாக ஒன்றிரண்டைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

கிராமப்புறங்களிலே உள்ள விவசாயிகள் தங்களுடைய விவசாயக் காரியங்களுக்காக கடன் மனுவை கொடுத்தால், அவர்களுக்கு அந்தக் கடன்களை எவ்வளவு நாட்களிலே பட்டுவாடா செய்ய வேண்டும் என்ற ஒரு விதிமுறை கட்டாயம் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நடைமுறையில் ஒரு விவசாயி தன்னுடைய விவசாயத்திற்குத்யான கடன் வேண்டுமென்று கூட்டுறவு சங்கத்திலே மனுப்போட்டால், அந்தச் சங்க நிர்வாகத்திலே உள்ளவர்கள், தங்களுடைய கமிட்டியைக் கூட்டி, அதிலே சிபாரிசு செய்த பின்னர் மேற்பார்வை யூனியனிலுள்ள சூப்ரவைசர் அந்தச் சங்கக் கடன் மனுவைப் பரிசீலனை செய்து, அவர் மத்திய வங்கிக்கு அனுப்பி, மத்திய பாங்கின் கூட்டத்திலே முடிவு செய்யப்பட்டு அந்த விவசாயிக்குக் கடன் வழங்கப்படுகிறது. இதற்குக் கிட்டத்தட்ட இரண்டுமாத காலம் ஆகிறது. முன்பெல்லாம் ஒரு விவசாயி கூட்டுறவுச் சங்கத்திலே கடன் மனுவைக் கொடுத்து அவர் சொத்தை அடமானமாக எழுதிக்கொடுத்து. அவர் கடன் பெற்றிருந்தால், அந்த அடமானத்தின் பேரிலே தொடர் கடனாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு அந்தச் சொத்து மீது வைத்துக் கடன் வழங்

[மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

இருக்கிறது. அவர்கள் என்னைப் பார்த்துத்தான் கேட்டார்கள், அதாவது தமிழக அரசைப் பார்த்துதான் கேட்டார்கள். தமிழக அரசு அவருக்கு கொடுக்கும் என்பது தெரிந்து தான் கேட்டார்கள் இவைகளையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நாங்கள் அதிலே எல்லாம் கட்சிக் கண்ணோட்டம் கொஞ்சம் கூட இல்லாமல் செய்திருக்கிறோம் என்பதை நிரூபிக்கத் தான் நண்பர் திரு. சா கணேசன் அவர்கள் கூட்டுறவுத் தத்துவத்தைப் பற்றிச் சொன்னபோது, நான் எப்படி இந்த அரசு மூன்று விதமாகப் பணத்தைப் பாவலாக கொடுக்கிறது, அதனால் எப்படி அந்தச் சங்கங்களைக் கண்காணிக்கவேண்டிய அவசியமும், அதிலே தலையிட வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டினேன். இப்பொழுது வேண்டுமானால் எந்தவிதமான நிலையிலேயும் இந்த அரசு தலையிட வேண்டாமென்று சொல்லுங்கள், கேட்டுக்கொள்ளு கிறேன். சந்திரசேகரபுரம் சொசைட்டி அரசிடம் பங்குத் தொகை கேட்பதில்லை. கடன் கேட்பதில்லை. மானியம் கேட்பதில்லை. எனவே அதிலே அரசு தலையிடவும் இல்லை. அங்கே யாரையும் நியமனம் செய்யவில்லை. அதேபோல் அர்பன் பாங்க் இருக்கிறது, டவுன் பாங்க் இருக்கிறது; அதிலே எல்லாம் நாங்கள் தலையிடுவதில்லை. கிட்டத்தட்ட 180 நகர வங்கிகள் இருக்கின்றன. அவற்றில் எந்த ஒரு வங்கியிலாவது இந்த அரசு தலையிட்டது என்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொல்ல முடியுமா? அவைகளுக்கு அரசு கடன் கொடுக்கவில்லை, வேறு வகையில் உதவி செய்யவில்லை, எனவே நாங்கள் அதிலே தலையிடவில்லை. ஆனால், அவர்களுக்கு வரிச் சலுகை மாத்திரம் காட்டிக்கொண்டு வரு கிறோம். சில சங்கங்களுக்கு, வங்கிகளுக்கு ரூ. 20,000 ரூ. 30,000 என்று காட்டிவருகிறோம். ஆனால், நாங்கள் பங்கு கொடுக்காமல், கடன் கொடுக்காமல் இருக்கும் இடங்களிலே தலையிடமாட்டோம் என்பதற்கு இவை ஒரு சான்றாகும். ஆகவே, இந்தத் தத் துவத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

மேலும் அவர்கள் சொன்னார்கள், ஏன் அரசாங்கம் உறுப்பினர் களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். நியமனம் செய்வது யாருக்கு என்று பார்க்க வேண்டும். நியமனம் செய் கிறோம் என்றால், மொத்த உறுப்பினர்களிலே 5 சத விகிதப் பேரைத் தான் நியமனம் செய்கிறோம். அதுவும், அப்படி நியமனம் செய்யப்படுபவர்கள் தாழ்த்தப்பட்ட மகனாக இருக்க வேண்டும், இல்லையென்றால் பெண்ணாக இருக்க வேண்டும், இல்லை யென்றால் நிலம் இல்லாத குறைந்தபட்ச அளவுக்கு சிறு விவசாயி களாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டின் அடிப்படையிலே தான் நியமனம் செய்கிறோம். இப்படிப்பட்ட நியமனம் தேவை யில்லை என்று சொல்லலாம். ஆனால் கடந்த 20 ஆண்டுக் கால மாக திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மத்திய வங்கியிலே தொடர்ந்து இயக்குநராக இருந்து வருகிறார். அவருக்கு நல்ல



[மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

அனுபவம் உண்டு. வேறு பல சொசைட்டிகளிலேயும் அவர்கள் இருந்துகொண்டு வருகிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். அப்படி இருக்க வேண்டியது தான். தமிழ் நாட்டிலே மாத்திரம் 16 மத்திய பாங்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு வங்கியிலேயும் சராசரி 20 பேர்கள் இயக்குநராக இருந்து வருகிறார்கள். கடந்த 50 ஆண்டுகளாக இவைகள் எல்லாம் செயல்பட்டுக்கொண்டு வந்திருக் கின்றன. அவைகள் எல்லாம் யாருக்காகச் செயல்பட்டன? மேல் மட்டத்திலே இருப்பவர்களுக்காகத்தான் செயல்பட்டு வந்தன. 1967-லே தேர்தல் அறிக்கை எழுதும் போது அண்ணா எழுதினார், ஏழை எளியவர்களுக்காக ஏற்பட்ட கூட்டுறவு இலாக்கா ஆதிக்கக்காரர்கள் கையிலே இருப்பதை முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் விடுவிக்கும் என்று சொன்னார். நான் கேட் கிறேன், இப்பொழுது 16 மத்திய வங்கிகள் தொடர்ந்து செயல் பட்டு வருகின்றன. அதிலே ஒவ்வொன்றிலேயும் 16 லிருந்து 20 வரை இயக்குநர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு வங்கியிலாவது அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின்போது ஒரு தாழ்த்தப்பட்ட மகனை இயக்குநராக ஆக்கியிருக்கிறார்களா? அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மகன் இயக்குநராக இருந்தது உண்டா? நான் இன்றைக்குச் சொல்லுகிறேன். இந்த அரசாங்கம் பணத்தைக் கொடுக்கிறது. தாழ்த்தப்பட்ட மகனை உங்களுக்குச் சமமாக வந்து உட்காரும் இயக்குநராக ஆக்குகிறது. 1967-க்குப் பிறகு தானே அந்தத் திருப்பம் வந்தது. அதற்குப் பிறகு தானே ஒவ்வொரு மத்திய வங்கியிலேயும் ஒரு தாழ்த்தப்பட்ட மகன் இயக்குநராக நாற்காலியிலே வந்து உட்கார வேண்டுமென்று சட்டம் வந்தது. அதற்குப் பிறகு தானே ஒவ்வொரு வங்கியிலேயும் பெண்கள் இருக்க வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். முன்னால் ஏன் இதையெல்லாம் செய்யவில்லை? இப்படிச் செய்ததால் நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு போன்றோர்கள் இப்படி நான்காம் தர மக்கள் எல்லாம் இந்த வங்கியிலே புகுந்து விடுவதால் கூட்டுறவு வங்கிகள் எல்லாம் உருக் குலைந்து போய்விட்டன. சீரழிவு அடைந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன். அவைகள் சீரழிவு அடையவில்லை. உருக்குலையவில்லை என்று உடனே அவர்கள் நான் அரசியல் நோக்கத்தோடு இப்படிச் சொல்லு கிறேன் என்று சொல்லுவார்கள். நீங்கள் சொல்லுவதும் அரசியல் நோக்கமுடன்தான் என்று நான் திருப்பிக் குற்றம் சாட்ட முடியும். இரண்டிக்கும் பொதுவாக ரிசர்வ் பாங்கியிலே இருப்பவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அரசியலிலே ஈடுபட்டவர்கள் இல்லை. அவர்கள் கூட்டுறவு பாங்கிகளை ஏ.பி.சி. என்று அதன் தரத்திற்கு ஏற்ற வகையிலே பிரித்து வைத்திருக்கிறார்கள். எனவே, நீங்கள் அவர்களைக் கேட்டுப் பாருங்கள்; நான்காம் தர மக்கள் இயக்குநராக பாங்கியிலே வந்து உட்கார்ந்ததால், அவைகள் எல்லாம் சீரழிந்தனா என்று. அப்பொழுது உண்மை வெளிப்படும். திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ள கூட்டுறவு வங்கி முன்னால் 'பி' என்ற தரத்தில் இருந்தது.

[15th December 1971

[மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்]

இப்போது 'ஏ' யாக உயர்ந்திருக்கிறது. புதுக்கோட்டை வங்கி 'சி' தரத்திலிருந்து 'ஏ'யாக உயர்ந்திருக்கிறது. அதே போல தஞ்சாவூரிலுள்ள வங்கிகள் முன்னால் இருந்ததைவிட சிறப்பாக நடந்து வருகின்றன. அகில இந்தியாவிலும் 200 மத்திய மாவட்ட வங்கிகள் இருக்கின்றன. அவற்றைவிட தஞ்சை மாவட்டத்தில் நடக்கிற வங்கிகள் சிறந்தவை என்று நான் சொன்னால் தவறு என்பீர்கள். ரிசர்வ் பாங்கு அதைத் தெரிந்து சொல்கிறது. அகில இந்தியாவிலும் சிறந்த வங்கி என்னும்போது, வேறு எந்த மாநிலத்தில் என்று நாம் ஐயப்படவேண்டியதில்லை. கும்பகோணத்தில் இந்த மன்ற உறுப்பினர் திரு. கோ. சு. மணி அவர்களைத் தலைவராகக் கொண்டு நடந்துவருகிற பாங்குதான் அந்தப் பெயரைப் பெற்றிருக்கிறது. அதற்காகப் பரிசு கொடுக்க மத்திய அமைச்சர் வருகிறார்கள். வரும்போது நம்முடைய ரா. கி. அவர்களும் அந்த விழாவிற்கு வந்து சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகையால் அவர்கள் சொன்னது போல சீர்குலைவு என்பது இங்கே இல்லை என்பதைச் சொல்லிவிட்டேன். அடுத்து, அவர்கள் இரண்டொன்று கேட்டார்கள். நண்பர் திரு. செங்கோட்டு வேலப்பகவுண்டர் ஒன்று கேட்டார்கள். நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்கள் சிறு விவசாயிகளுக்கென்று ஏற்படுத்தியிருக்கிறீர்களே, காரணம் என்ன என்று கேட்டார்கள். அவர்களுக்கு உலக வங்கியோடு தமிழக அரசு செய்துகொண்ட ஒப்பந்த நகல்களைக் கொடுத்துவிடுகிறேன். தெரிந்துகொள்ளலாம். 15 ஏக்கருக்குக் குறைந்துள்ளவர்கள் ஒரு கிணறு வெட்ட முடியாது என்று இருக்கும்போது, தமிழ் நாட்டில் பெரும்பாலோர் அரை ஏக்கர், கால் ஏக்கர் உள்ள ஏழை எளிய விவசாயிகள் எப்படிக் கடன் வாங்கிச் செய்ய முடியும்? அதற்கு உலக வங்கி சொல்கிறது. அவர்களை ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று 26 கோடி தருகிறார்கள் அவர்கள் விவசாயிகளுக்கு. சின்னஞ்சிறு விவசாயிகளுக்கு அந்தப் பணம் போய்ச்சேர வேண்டுமென்றால், அவர்களை ஒன்றாகச் சேர்க்க வேண்டிய நிலைமையிருப்பதால், நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கத்தை நாம் ஆக்கவேண்டிவந்தது. கோவை மாவட்டத்தில் அது நன்றாகச் செயல்படவில்லை என்பது எனக்குத் தெரியும். விரைவில் அங்கே வந்து நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம் அமைத்து ஏழை விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துவருகிறோம்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** லோன் வாங்கியிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பல கோடி வாங்கியிருக்கிறார்கள். சின்னஞ்சிறு விவசாயிகளுக்கு அது போகிறது. பணமே வேண்டாமென்று சொல்ல வேண்டும், இல்லாவிட்டால். நாம் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தம் உலக வங்கியிடம் மட்டும் தான் என்று நினைக்கவேண்டாம். அதில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் ரிசர்வ் பாங்கு கொடுக்கும் பணத்திற்கும் - பொருந்தும்.



15th December 1971]

[திரு. சி. பா. ஆதித்தனார்]

மத்திய நிலவள வங்கி கொடுக்கும் பணத்திற்கும் பொருந்தும். நிலம் எங்கிருந்தாலும், அதை வளர்ச்சி செய்ய எங்கே பணம் கொடுத்தாலும், இந்த அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். டைரக்டர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மூன்று கோடி ரூபாய் என்று இருந்தபோது, 20 பேர்கள் இருக்கிறார்கள். 30 கோடி ஆகும்போது அதிகப்படியான டைரக்டர்கள் தேவைப்படுகிறார்கள். அதற்குத் தனியாக நிர்வாகம் இருக்கிறது. இப்போது 263 வங்கிகள் இருக்கின்றன. அதில் எதுவும் நீங்கள் சொன்னபடி உருக்குலைந்து போகவில்லை. உங்கள் கண்ணோட்டத்தின்படி நான்காம் தர மக்களாகிய நாங்கள் 6-30 p.m. வந்த பிறகு, நிலவள வங்கிகள் எல்லாம் முன்பு எப்போதும் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக முன் காலத்தில் என்று சொன்னால் கோபப்படுவார்கள்— இந்த வருஷம் 67 லட்சம் ரூபாய் ஒரு வங்கிக்கு லாபம் வந்திருக்கிறது. கேள்விப்பட்டிருக்கிறீர்களா முன்னால்? அது மட்டுமல்லாமல், தரம்பிரித்துப் பார்க்கும்போது, இந்த வரவு செலவுகளைப்பற்றி கூட்டுறவு வங்கிக்கும் சேர்த்து எவ்வளவு லாபம் வந்திருக்குமென்று கருதுகிறீர்கள்? குத்து மதிப்பாகச் சொல்லுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** எங்கள் ஜில்லாவில் ரூ. 4 லட்சம், 6 லட்சம் என்ற அளவில் கிடைத்தது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது ஒரு கோடி 38 லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. இப்படி வருமளவிற்குத் திறமையாக நடைபெறுவதற்குக் காரணம் இருக்கிறது. இன்றைக்கு இந்த இயக்கம் மக்கள் மத்தியில் பரவியிருக்கிறது. சாதாரண ஏழை ஒருவன் மத்திய வங்கிக்குப் போய் உட்கார்ந்து என்னுடைய உரிமைப்படி பணத்தைக் கொடு என்று கேட்கக் கூடிய உரிமையும் வாய்ப்பும் இப்போது பெற்றிருப்பதால், மக்கள் உணர்ச்சியோடு இருக்கிற காரணத்தால், இந்த வங்கிகள் நல்ல வகையில் செயல்படுகின்றன. நேற்று பேசும்போது திரு. ரா. கி. சொன்னார்கள். அதைப் படித்துப் பார்த்து வேதனைப்பட்டேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏழை எளியவர்கள் எல்லாம் ரொம்ப சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வாங்கிய கடனைத் திரும்பக் கட்ட வழியில்லை. அதைத் தள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். போன வருஷம் ஏறக்குறைய ரூ. 1 கோடி. அளவிற்கு கடன் தொகையைத் தள்ளி வைத்திருக்கிறோம். இராமநாதபுரத்தில் ஆகட்டும், வேறு எந்த மாவட்டத்திலாகட்டும், மொத்த விளைவு ஒரு ரூபாய் என்று கொண்டால், அதில் ஆறு அணாவுக்குக் கூட விளைவு இல்லை என்று ரெவின்யூ அதிகாரி சர்டிபிகேட் செய்தால், அவர்களுக்கு நிச்சயமாக மூன்று ஆண்டுகளுக்குக் கடன் திருப்பித் தருவது தள்ளி வைக்கப்படும். சான்று வாங்காமல் அனாவரி சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்தும் அந்த ஊரில் தள்ளுபடி செய்யவில்லை என்பதை நான் நம்ப முடியாது. கலெக்டர் மாநாடு

[15th December 1971

[திரு. சி. பா. ஆதித்தனார்]

நடந்தபோதும் சொன்னோம். எனக்குத் தெரிந்து, எந்த ஊரி லும் ஆறு அணாவுக்குக் குறைந்து விளைந்தது என்று சொல்லியும், அங்கே கடன் தள்ளி வைக்கப்படாமல் இருந்ததில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் மல்லி ரெவின்யூ பிர்கா முழு வதும் 6 அணா விளைச்சல் இல்லை என்று சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து அந்த ஊரில் கடன் வசூலில் ஜப்தி செய்த பொருள்கள் கொடவன் கொள்ளாமல் வெளியிலும் இருந்தன.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் ஏதோ ஒரு பிர்க்காவில் கொடுக்கவில்லை என்று. 94 லட்ச ரூபாய்க்குக் கடன் தள்ளிவைக்கப்படுகிறது. உங்கள் பிர்க்கா என்று எந்தவிதக் குரோதமும் கிடையாது. நான் இன்றைக்கும் சொல்கிறேன், என்றைக்கும் சொல்வேன், நீங்கள் ரெவின்யூ அதிகாரிகளிடம் ரூபாய்க்கு ஆறு அணாவுக்குக் குறைந்து விளைந்திருக்கிறது என்று அணாவரி சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத் திருந்தால், கடன் தள்ளிவைக்கப்பட்டிருக்கும். அதற்கு மேல் விளைந்திருந்தால், தள்ளிவைப்பதில்லை. அப்படிக் கொடுத்திருந்து அதற்கு மாறாக இருக்குமானால். அதை என்னுடைய சவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்த நிமிடமே அதைச் சீர்படுத்தியிருக்க முடி யும். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இப்படித் தள்ளி வைப்பதிலே எங்களுக்கு ஒன்றும் நட்டம் இல்லை. எங் களுக்குச் செலவு ஒன்றும் கிடையாது. ரிசர்வ் பாங்கில் ஸ்டெபிலை சேஷன்ஃபண்ட் என்று ஒரு ஃபண்ட் வைத்திருக்கிறார்கள். நாங்கள் ஒரு பேனா எடுத்து எழுதவேண்டியதுதான். கலெக்டர் அணாவரி சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். கடன் இரண்டு கோடி ரூபாய். அதை மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வையுங்கள் என்று எழுதி வைத்தவுடனே வந்துவிடுகிறது. நாங்கள் கியாரண்டி கொடுத் தால் போதும். எங்களுக்குச் செலவெல்லாம் கால் காகிதமும் ஒரு சொட்டு மையும்தான். அதை ஏன் நாங்கள் செய்யாமலிருக்க வேண்டும்? அருள் கூர்ந்து இதைத் தெரிந்துகொள்ளுங்கள். அணாவரி சர்ட்டிபிகேட் உங்கள் கையில் இருந்தால், நாளைக்குக் கொடுங்கள் மறுநாள் செய்கிறேன். எங்களுக்கு அதிலே செலவில்லை.

மேலும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப் பினர் ரா. கி. அவர்கள் நேற்றுப் பேசுகிறபோது, முதலமைச்சரிடம் சொன்னார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் அதிகமான மழை சாதாரணமாகப் பெய்யும். இப்பொழுது ஏன் அங்கே மழை திடீ ரென்று குறைந்து விட்டது, அதுபற்றி ஒரு ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று நேற்று அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோதே, அங்கே திடீரென்று அதிகமாக மழை பெய்து, வெள்ளம் வந்து, ஆடுமாடுகள் எல்லாம் காட்டாறுகளில் அடித்துக்கொண்டு போகிற நிலைமை இருந்தது என்று தெரிந்துகொண்டேன்.



15th December 1971]

[திரு. சி. பா. ஆதித்தனார்]

**திரு. சா. கணேசன் :** சேர்மன் சார், இவர்கள் இரண்டுபேரும் தனியாகப் பேசிச்சரி செய்துகொள்ளலாமே.

MR. CHAIRMAN : There is a Defence Committee meeting at 7 p.m. The hon. Member may finish his speech.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினால் மாவட்ட அளவில் கிடைத்த நன்மைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் சொன்னார்கள். அவற்றையெல்லாம் சீர்படுத்தி நல்ல வாய்ப்பு கிடைப்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவு அவையின் முன் வைக் கப்பட்டிருக்கிறது. இதை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

* **திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக அண்மையில் மத்திய பாங்கில் தேர்தல் முறையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளால், தாழ்த்தப்பட்டவர்களோ பெண்களோ தேர்ந்தெடுக்கப்பட்டார் களா ? ஒருவரும் எந்த ஜில்லாவிலும் இல்லையென்று கருதுகிறேன். அமைச்சர் அவர்களின் உதவியினாலே அல்லது அவர்கள் நியமனம் செய்த அங்கத்தினர்கள் எல்லாம் சேர்ந்து செய்ததால் தாழ்த்தப் பட்ட ஒருவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அவரும் கூறுவதற்கில்லை. பெண்களும் அவ்வாறு தேர்ந்தெடுக்கப் படவில்லை. மனைவியும்—கணவனும், கணவன் மனைவி இருக்கிறார் களே, அவர்களும் ஜில்லாக்களில் நியமனம் செய்யப்பட்டார்களே தவிர, அவர்களும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே அவர்களைத் தேர்ந்தெடுக்கச் செய்வதற்கு எந்த முறையிலே. . .

**மிஸ்டர் சேர்மன் :** நீங்கள் பேசிவிட்ட பிறகு ஏதாவது ஒன்றி ரண்டு தான் கேட்கலாம். நீண்ட பேச்சு பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ரிசர்வ் பேங்க் சிபாரிசுப் படியும் சங்கங்கள் பதிவு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். வாஸ் தவம். அவர்கள் சொல்வதற்காக இங்கு அந்தத் திட்டத்தின்படி காரியங்கள் செய்கிறோம் என்பதை மறுக்கவில்லை. நாளைக்கு இன் னொரு மசோதா இருக்கிற காரணத்தால் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971), as passed by the Assembly be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 4, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

[15th December 1971

THE HON. THIRU SI. PA. ADITANAR: I move—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971), as passed by the Assembly be passed".

MR. CHAIRMAN: The question is—

6-40 p.m. "That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971), as passed by the Assembly, be passed".

The motion was put and carried and the Bill was passed.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

6-41 p.m. V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A. Statutory Rules and Orders.*

Nil.

*B. Reports, notifications and other papers.*

* 47. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971) as passed by the Assembly.

* 48. The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971), as passed by the Assembly.

* 49. The Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 49 of 1971), as passed by the Assembly.

* 50. The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 50 of 1971), as passed by the Assembly.

* 51. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971), as passed by the Assembly.

52. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on the 31st March 1971 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969:—

1. Thiru Saw Ganesan.
2. Thiru M. Sankaralingam.

* Circulated to all the M.L.Cs. on 14th December 1971.



15th December 1971]

# APPENDIX I.

[*Vide* item IV (1) on page 583.]

## L.A. BILL No. 38 OF 1971.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Payment of Salaries Act, 1951.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Tweny-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1971.

(2) Clauses (1) and (2) of section 3 and section 5 shall be deemed to have come into force on the 1st October 1971 and clause (3) of section 3 shall be deemed to have come into force on the 1st January 1967. Section 4 shall be deemed to have come into force on the 15th March 1971.

2. *Amendment of sections 4 and 5, Tamil Nadu Act XX of 1951.*—In sub-section (2) of section 4 and sub-section (2) of section 5 of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951) (hereinafter referred to as the principal Act), for the words "a conveyance allowance of one hundred rupees per mensem", the words "a conveyance allowance of two hundred rupees per mensem" shall be substituted.

3. *Amendment of section 12, Tamil Nadu Act XX of 1951.*—In section 12 of the principal Act,—

(1) after sub-section (1), the following sub-section shall be inserted, namely:—

"(1-A) Every member of the Legislative Assembly or of the Legislative Council, who does not hold any of the offices referred to in sections 3 to 6 and in sub-section (1) of section 6-A shall be entitled to receive a compensatory allowance of one hundred rupees per mensem.";

(2) in sub-section (2),—

(*a*) after the expression "clause (*a*) of sub-section (1)", the expression "and the compensatory allowance referred to in sub-section (1-A)" shall be inserted;

(*b*) in the proviso, after the word "salary", the words "and the compensatory allowance" shall be inserted.

(3) in sub-section (2-A), for the expression "Where any member", the expression "Where, on or after the 1st January 1967, any member" shall be substituted;

(4) in sub-section (5), after the expression "clause (*a*) of sub-section (1)", the expression "and the compensatory allowance referred to in sub-section (1-A)" shall be inserted.

4. *Amendment of section 13, Tamil Nadu Act XX of 1951.*—In section 13 of the principal Act, for sub-section (2), the following sub-section shall be substituted, namely :—

" (2) Any relinquishment made by any person referred to in sub-section (1) in respect of the whole or any portion of the salary or allowance payable to him may be cancelled by him ".

5. *Special provision.*—Notwithstanding anything contained in the principal Act as amended by the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1971, the compensatory allowance to a member of the Legislative Assembly or of the Legislative Council, who does not hold any of the offices referred to in sections 3 to 6 and in sub-section (1) of section 6-A of the principal Act on the date of the commencement of the Tamil Nadu Payment of Salaries (Amendment) Act, 1971, shall be paid on and from the 1st October 1971.

## APPENDIX II.

[*Vide* item IV (2) on page 586.]

L.A. BILL No. 41 OF 1971.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Act, 1967.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Act, 1971.

(2) Section 2 except in so far as it relates to item 11 (58) shall be deemed to have come into force on the 1st day of April 1964 and item 11 (58) shall be deemed to have come into force on the 7th day of April 1971.

2. *Amendment of the Schedule to Tamil Nadu Act 3 of 1967.*—In the Schedule to the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Act, 1967 (Tamil Nadu Act 3 of 1967),—

(1) after item 7, the following item shall be inserted, namely :—

" 7-A. The office of member of a District Development Council.";

(2) in item 11,—

(*a*) for the words, " The office of member or secretary ", the words " The office of chairman, member or secretary " shall be substituted;



(*b*) after sub-item (28), the following sub-items shall be added, namely :—

" (29) Panchayat Development Consultative Committee on Administartion and Works, Production Programmes and Welfare Services Programmes;

(30) State Cotton Committee;

(31) All-India Handicrafts Board;

(32) Central Advisory Committee for Consumer Co-operatives;

(33) Central Committee on Employment;

(34) Central Poultry Development Advisory Council;

(35) Coal Development Council;

(36) Committee on Untouchability, Economic Uplift and Educational Development of Scheduled Castes;

(37) Court of the Forest Research Institute and Colleges, Dehra Dun;

(37) Employeed' State Insurance Corporation;

(39) Export Advisory Committee for Books and Periodicals;

(40) Film Export Advisory Committee;

(41) Khadi and Village Industries Committee;

(42) Indian Coconut Development Council;

(43) Indian Sugarcane Development Council;

(44) Medical Benefit Council of the Employees' State Insurance Corporation;

(45) Mental Health Advisory Committee;

(46) National Committee for International Council of Scientific Unions;

(47) National Committee on Training in Community Development and Extension;

(48) National Commission on Labour;

(49) National Food and Agriculture Organisation Liaison Committee;

(50) National School Health Council;

(51) Panel for Air-conditioning and Refrigeration Industry;

(52) Railway Catering and Passenger Amenities Committee;

(53) Small Scale Industries (Official Level) Committee;

(54) State Advisory Committee for the Territorial Army in Delhi;

(55) Standing Technical Committee;

(56) State Advisory Committee for the Territorial Army in the State of Bihar;

(57) Selection Committees for the Marine Fisheries Training Centres at Colachel, Tuticorin, Mandapam, Nagapattinam, Cuddalore, Mettur and Madras;

(58) Tamil Nadu Agro-Industries Corporation.".

## APPENDIX III.

[*Vide* item IV (3) on page 588.]

L.A. Bill No. 49 of 1971.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Madurai City Municipal Corporation Act,* 1971.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Act, 1971.

(2) Section 4 shall be deemed to have come into force on the 1st May 1971.

2. *Amendment of section* 48, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In section 48 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) (hereinafter referred to as the principal Act), in sub-section (8),—

(*a*) for the words " three years ", the words " five years " shall be substituted;

(*b*) in the proviso, for the words " three months ", the words " one year " shall be substituted.

3. *Amendment of section* 61, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In section 61 of the principal Act, for the words " three years ", the words " five years " shall be substituted.

4. *Insertion of new section* 511-*A in Tamil Nadu Act* 15 *of* 1971.—After section 511 of the principal Act, the following section shall be inserted, namely:—

" 511-A. *Construction of references to " municipality ", " municipal town ", etc.*—In the application of any law, rule, by-law, regulation, notification, scheme, form or order to any area, in the absence of an intention to the contrary appearing in this Act and unless the Government otherwise direct—

(i) any reference to a municipality or a municipal council shall be deemed to include also a reference to the Municipal Corporation of Madurai constituted under this Act;



(ii) any reference to a municipal town or municipal area shall be deemed to include also a reference to the City of Madurai;

(iii) any reference to the Chairman or Vice-Chairman of a municipality shall be deemed to include also a reference to the Mayor or the Deputy Mayor or the Commissioner, as the case may be, of the Municipal Corporation of Madurai having jurisdiction. ".

5. *Extension of term of office of councillors of the Corporation of Madurai.*—Notwithstanding anything contained in the principal Act as amended by this Act, or in any other law for the time being in force, the term of office of the councillors of the Municipal Corporation of Madurai holding office as such on the date of the commencement of this Act shall extend up to the noon on the first day of May 1974 and thereafter the provisions of sections 61 and 62 of the principal Act as amended by this Act shall, so far as may be, apply to the next ordinary election to be held:

Provided that the State Government may, by notification, for sufficient cause direct that the term so extended be reduced by such period as may be specified in the notification and the State Government may, in the like manner, cancel or modify any such notification.

## APPENDIX IV.

L.A. Bill No. 50 of 1971.

[*Vide item IV* (4) on *page* 590.]

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Entertainments Tax Act,* 1939.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-second Year of the Republic of India as follows:—

1. *Sort title.*—This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Amendment) Act, 1971.

2. *Amendment of section* 4, *Tamil Nadu Act X of* 1939.—In section 4 of the Tamil Nadu Entertainment Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) (hereinafter referred to as the principal Act), for the words ' naye paise ' and ' naye paisa ' wherever they occur, the words 'paise' and 'paisa' shall respectively be substituted.

3. *Amendment of section* 4-*A*, *Tamil Nadu Act X of* 1939.—In section 4-A of the principal Act, to sub-section (1), the following Explanation shall be added, namely:—

" *Explanation.*—For the purpose of this sub-section, 'show' means, one complete exhibition or the repeated exhibition of a picture or pictures for one payment for admission ".

APPENDICES

[15th December 1971

4. *Amendment of section 10, Tamil Nadu Act X of 1939.*—(*a*) Section 10 of the principal Act shall be renumbered as sub-section (1) of that section and for the marginal heading the following marginal heading shall be substituteed, namely :—

" Manner of recovery of tax and priority of arrears of tax over other claims ";

(*b*) After sub-section (1) as so renumbered, the following sub-section shall be added, namely :—

" (2) without prejudice to the provisions of sub-section (1), and notwithstanding anything contained in any other law for the time being in force, any tax assessed on, or any other amount due under this Act from, the proprietor shall, subject to the claim of the Government in respect of land revenue, have priority over all other claims against the property of the said proprietor. "

5. *Amendment of section 10-A, Tamil Nadu Act X of 1939.*—In sub-section (1) of section 10-A of the principal Act, the expression " and the Madras City Land Revenue Act, 1851 (Central Act XII of 1851), as amended by the Madras City Land Revenue (Amendment) Act, 1867 (Tamil Nadu Act VI of 1867), " shall be omitted.

6. *Insertion of new sections 10-C, 10-D and 10-E in Tamil Nadu Act X of 1939.*—After section 10-B of the principal Act, the following sections shall be inserted, namely :—

" 10-C. *Further mode of recovery.*—(1) The assessing authority may at any time or from time to time, by notice in writing (a copy of which shall be forwarded to the proprietor at his last address known to the assessing authority) require any person from whom money is due or may become due to the proprietor or any person who holds or may subsequently hold money for or on account of the proprietor to pay to the assessing authority, either forthwith upon the money becoming due or being held at or within the time specified in the notice (not being before the money becomes due or is held) so much of the money as is sufficient to pay the amount due by the proprietor in respect of arrears of tax or the whole of the money when it is equal to or less than the arrears of such tax.

(2) The assessing authority may at any time or from time to time amend or revoke any such notice or extend the time for making any payment in pursuance of the notice.

(3) Any person making any payment in compliance with a notice under this section shall be deemed to have made the payment under the authority of the proprietor and the receipt of the assessing authority shall constitute a good and sufficient discharge of the liability of such person to the extent of the amount referred to in the receipt.

(4) Any person making any payment to the proprietor after receipt of the notice referred to in this section shall be personally liable to the assessing authority to the extent of the payment made or to the extent of the liability of the proprietor for the amount due under this Act, whichever is less.


APPENDICES

15th December 1971]

(5) Where any person to whom a notice under this section is sent objects to it by a statement on oath, that the sum demanded or any part thereof is not due by him to the proprietor or that he does not hold any money for or on account of the proprietor, then nothing contained in this section shall be deemed to require such person to pay the sum demanded or part thereof, as the case may be, to the assessing authority but if it is discovered that such statement was false in any material particular, such person shall be personally liable to the assessing authority to the extent of his own liability to the proprietor on the date of the notice or to the extent of the liability of the proprietor for the amount due under this Act, whichever is less.

(6) Any amount which a person is required to pay to the assessing authority or for which he is personally liable to the assessing authority under this section shall, if it remains unpaid, be a charge on the properties of the said person and may be recovered as if it were an arrear of land revenue.

*Explanation.*—For the purposes of this section, the amount due to a proprietor or money held for or on account of a proprietor by any person shall be computed after taking into account such claims, if any, as may have fallen due for payment by such proprietor to such person and as may be lawfully subsisting.

10-D. *Liability to tax of a partitioned Hindu family, dissolved firm, etc.*—Where a proprietor is a Hindu undivided family, firm or other association of person, and such family, firm or association is partitioned, or dissolved, as the case may be,—

(*a*) the tax payable under this Act by such family, firm, or association of person for the period up to the date of such partition or dissolution shall be assessed as if no such partition or dissolution had taken place and all the provisions of this Act shall apply accordingly; and

(*b*) every person who was at the time of such partition, or dissolution a member or partner of the Hindu undivided family, firm or association of persons and the legal representative of any such person who is deceased shall, notwithstanding such partition or dissolution, be jointly and severally liable for the payment of the tax, penalty or other amount payable under this Act by such family, firm or association of persons, whether assessment is made prior to or after such partition or dissolution.

10-E. *Rounding off of tax, penalty, etc.*—The amount of tax fee, penalty, fine or any other sum payable, and the amount of refund due, under the provisions of this Act shall be rounded of to the nearest rupee and, for this purpose, where such amount contains a part of a rupee consisting of paise, then, if such part is fifty paise or more, it shall be increased to one rupee and if such part is less than fifty paise, it shall be ignored ",.

7. *Insertion of new section 12-B in Tamil Nadu Act X of 1939.*—After section 12-A of the pricipal Act, the following section shall be inserted, namely :—

" 12B. *Power to summon witnesses and production of documents.*—(1) The authority competent to assess tax under this Act or any appellateor revising authority shall, for the purpose of this Act, have all the powers conferred on a Court by the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908) for the purpose of—

(*a*) summoning and enforcing the attendance of, any person and examing him on oath or affirmation; and

(*b*) compelling the production of any document.

(2) The authority referred to in sub-section (1) shall have powers to call for such information, particulars and records as he may require, from any person, for the purpose of assessment, levy and collection of tax under this Act.

8. *Amendment of section 15, Tamil Nadu Act X of 1939.*—In section 15 of the principal Act, after the words " offence against this Act ", the words " or the rules made thereunder " shall be inserted.

APPENDIX V.

[*Vide* item IV (5) on page 595.]

L.A. BILL No. 52 OF 1971.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies Act, 1961.*

Be it enacted by the Legislature of the Stateof Tamil Nadu in tht Twenty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Amendment) Act, 1971.

2. *Amendment of heading of Chapter IX-B, Tamil Nadu Act 53 of 1961.*—In the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961) hereinafter referred to as the principal Act), in Chapter IX-B, for the heading " APEX SOCIETIES ", the heading " APEX SOCIETIES AND CENTRAL SOCIETIES " shall be substiuted.

3. *Amendment of section 73-H, Tamil Nadu Act 53 of 1961.*—In the principal Act, in section 73-H,—

after clause (*b*), the following clause shall be inserted, namely :—





" (*b*) ' central society ' means registered society whose area of operation is confined to a part of the State of Tamil Nadu; and

(i) in which other registered societies are eligble to become members; or

(ii) which is classified by the Government, by notification, as a central socitey; " .

4. *Substitution of certain expressions in Chapter IX-B of Tamil Nadu Act 53 of 1961.*—In the principal Act, in Chapter IX-B,—

(i) except in clause (*a*) of section 73-H, for the words " appex society " and " apex societies " wherever they occur, the words " apex socitey or central society " and " apex societies or central societies " shall respectively, be substituted.

(ii) in the marginal headings, for the words " apex societies " ond " apex society " wherever they occur, the words ' apex societies and central societies " and " apex society and central society " shall respectively, be substituted.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Thursday, the 16th December 1971.*

The House met in the Council Chamber, Fort St. George, at four of the Clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. CHAIRMAN : Questions 195 to 198 are postponed.

*Technological Institute, Coimbatore.*

*199 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Technological Institute at Coimbatore has been closed indefinitely; and

(*b*) if so, the reason therefor?

**கோயம்பத்தூர் தொழில் நுட்ப கழகம்**

**திரு. எம். ராஜா அய்யர் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்பத்தூர் தொழில் நுட்ப கழகம் காலவரையின்றி மூடப்பட்டதா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை, 10—8—1971-லிருந்து 18--8—1971 வரைதான் மூடப்பட்டிருந்தது.

(இ) பட்டயப் பொறியாளர்களுக்காக, பகுதி நேரப்பொறியியல் பட்டப்படிப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதை எதிர்த்து பொறியியல் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளுக்கு அந்த நாட்களில் செல்லாமல் இருந்தனர்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, இந்த மாதிரியான டிப்ளமா ஹோல்டர்களை பி.ஏ. டிகிரிக்கு அனுமதிக்கக் கூடாது என்று போட்டிருப்பதால், மாணவர்களிடமிருந்து எதிர்ப்பு எங்கு பார்த்தாலும் கிளம்புகிறது. அதை எப்படி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தங்களுடைய எதிர் காலத்தில் வேலை வாய்ப்பு நிலையை இது கெடுக்கும் என்ற அச்சத்தின் காரணமாக, இந்த வேலை நிறுத்தம் செய்து, அவர்களுக்கு அப்படிப்பட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தக் கூடாது என்று குறிப்பிட்டார்கள். சாதாரணமாக ஏற்கனவே வேலையைப் பொறுத்து, தங்களுடைய தகுதிகளைப் பெருக்கிக்

[16th December 1971

கொள்வதன் மூலமாக, வேறு உயர்வு பெறுவதற்கு வழிவகை ஏற்படுகிறது. அதற்குப் பிறகு ஓரளவுக்கு அவர்கள் கிளர்ச்சி செய்ததன் காரணமாக, இனிமேல் எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் ஐந்து ஆண்டு பணியாற்றியிருக்க வேண்டும், அவர்களைப் பகுதி நேரப் படிப்புக்கு ஏற்றுக்கொள்வது என்றும் ஆண்டுக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கலாம் என்பதை ஒரு முறை தேர்ந்தெடுக்கலாம் என்றும் முதலில் 470 இடங்கள் பல்கலைக் கழகத்தால் அனுமதிக்கப்பட்டன. பிறகு 120 அனுமதிக்கப்பட்டன. 120 நிரப்பப்படாமல் 470 ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த 470 இடங்களை ஆண்டுக்கு ஒருமுறை நிரப்பும் முறை கையாளப்படுகிறது.

### *Building and Laboratory Grants*

* 200 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of High Schools for which (a) Building grants and (b) Laboratory grants exceeding Rs. 10,000 were sanctioned during the year 1970-71 in the State ?

### கட்டிட, ஆய்வுக்கூட மானியங்கள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில் 1970-71-ஆம் ஆண்டில், கட்டிட மானியமாகவும் ஆய்வுக்கூட மானியமாகவும் ரூ. 10,000-க்கு மேல் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

| கட்டிட மானியம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகள் | 191 |
| 2. தனியார் பள்ளிகள் | 33 |
| 3. நகராட்சிப் பள்ளிகள் | 2 |
| 4. அரசு உயர்நிலைப்பள்ளிகள் | 2 |
| மொத்த எண்ணிக்கை .. | 228 |

| ஆய்வுக்கூட மானியம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகள் | 49 |
| 2. தனியார் பள்ளிகள் | 13 |
| 3. நகராட்சி பள்ளிகள் | 2 |
| 4. அரசு உயர்நிலைப் பள்ளிக | 2 |
| மொத்த எண்ணிக்கை .. | 66 |



16th December 1971]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த விஞ்ஞானத்திற்காகக் கொடுக்கக் கூடிய கிராண்ட்டிலிருந்து சில பள்ளிகளுக்கு சாமான்களை வைத்துக்கொள்வதற்குக் க்ட்டிடம் இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக பழைய மாவட்டக் கழகப் பள்ளிகளுக்கு விஞ்ஞானத்திற்காகப் பணம் கொடுக்கிறோம். கட்டிடங்களைக் கட்டுவதற்கு மானியம் இல்லாமல் பல பள்ளிகள் இருக்கின்றன. ஆகையால் சில பகுதிகளைக் கட்டுவதற்கு அதை ஒதுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா? இல்லாவிட்டால் விஞ்ஞான கிராண்ட்டில் அவர்கள் சாமான்கள் வைத்துக்கொள்வதற்குக் கட்டுவதற்கு வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பயன்படுத்தப்படாமல், கட்டிட வசதியில்லாமல், கட்டிடம் கட்டாமல், கருவிகள் பயன்படுத்தப்படாமல் இருந்தால், வேறு பள்ளிகளுக்கு அவற்றை மாற்றிக்கொள்வதுதான் உடனடியாக நல்லது. மறுபடியும் வாய்ப்பு ஏற்படும்போது, அந்தப் பள்ளிக்குத் தரலாம். இப்போது குறிப்பாக 500 மாணவர்கள் அடங்கிய பள்ளிகள் பல அறிவியல் ஆய்வுக்கூடங்களை விரும்பியிருக்கின்றன. 500 மாணவர்களுக்கு மேல் இருக்க வேண்டுமென்றும் கட்டிடம் கட்டுவதற்கு இடம் இருக்க வேண்டுமென்றும் இந்த வசதிகள் கொண்ட பள்ளிகளுக்கு மட்டும் இப்போது இந்த ஆய்வுக் கூட மானியம் வழங்கப்படுகிறது.

### *Fundamental Engineering Research Centre, Adyar*

* 201 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the nature of the work done by the Fundamental Engineering Research Centre at Adyar, Madras?

### அடிப்படைப் பொறி இயல் ஆராய்ச்சி நிலையம், அடையாறு

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. வி ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை அடையாற்றிலுள்ள அடிப்படைப் பொறி இயல் ஆராய்ச்சி நிலையத்தால் செய்யப்பட்ட பணிகளின் தன்மை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கிண்டி பொறியியல் கல்லூரியில் உள்ள பல துறைகளிலும் நடைபெறும் ஆராய்ச்சி மாற்றும் அபிவிருத்தி வேலைகளை இந்நிலையம் ஒருங்கிணைக்கின்றது.

### *Hindi Pandits*

*202 Q.—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that protected Hindi Pandits serving as Secondary Grade Teachers after inservice training, were ousted from aided secondary schools in Dindigul, Madurai district for fall

[16th December 1971

in strength in such high schools in September 1970 contrary to the orders of the Director of School Education, Madras in his proceedings No. Rc. 62566/J4/69, dated 2nd June 1969;

(b) whether any alternative jobs have been provided to such teachers; and

(c) if not, the reasons therefor?

*இந்தி ஆசிரியர்கள்*

**திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல்லில் மானியம் பெறும் இடை நிலைப் பள்ளிகளில் பயிற்சிக்குப் பிறகு இடை நிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்த காப்பு பெற்ற இந்தி ஆசிரியர்கள், அத்தகைய உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்த காரணத்தால் 2—6—1969 நாளிட்ட Rc. 62566-J4/69 என்னுள்ள நடவடிக்கைகளில், சென்னை கல்வித் துறை இயக்குநரின் ஆணைகளுக்கு முரணாக 1970 செப்டம்பர் திங்களில் பணியிலிருந்து அகற்றப்பட்டது உண்மையா?

(இ) அவர்களுக்கு மாற்றுப்பணி ஏதேனும் அளிக்கப் பட்டதா?

(உ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஒரே ஒரு ஆசிரியர் தான் பாதிக்கப்பட்டார்.

(இ) இவருக்கு அரசுக் கழக உயர்நிலைப் பள்ளியில் மாற்று வேலை தரப்பட்டது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Lecturers and Assistant Professors in Aided Colleges*

*203 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the University Grants Commission scales of pay for Lecturers and Assistant Professors in Aided Colleges for the IV Plan period have been accepted by the Government and implemented by the Institutions?

*அரசு மானியம் பெறும் கல்லூரி விரிவுரையாளர்கள் உதவிப் பேராசிரியர்கள்*

**திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர்கள், உதவிப் பேராசிரியர்கள் ஆகியோருக்கு 4-வது



16th December 1971]

திட்டக் காலத்தில் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவின் சம்பள விதங்கள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அக்கல்லூரி களால் செயற்படுத்தப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பல்கலைக் கழக மானிய குழு ஒப்புதல் அளித்த சம்பள விகிதங்களின்படி தங்களுடைய ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்க தனியார்க் கல்லூரிகள் முன் வந்தால் அதற்கான மானியம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு விட்டது. இந்தச் சம்பள விகிதங்களை ஏற்றுக் கொள்வது பற்றி முடிவு செய்வது தனியார்க் கல்லூரி நிர்வாகங்களைப் பொறுத்ததாகும். ஓரிரண்டு கல்லூரிகளைத் தவிர மற்ற தனியார்க் கல்லூரிகள் அனைத்தும் இந்த சம்பள விகிதங்களை ஏற்றுக்கொண்டுவிட்டன என்று தெரிகிறது.

*Accounts for Thanjavur Medical College Hostel*

*204 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that no audit was conducted on the accounts of Thanjavur Medical College Hostel from 1962; and

(b) if so, the reason for the delay?

*தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியின் கணக்குகள்*

**திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியின் கணக்குகள் 1962-ஆம் ஆண்டு முதல் தணிக்கை செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை

*Adulteration of Tea*

*205 Q.—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

[16th December 1971

(*a*) whether it is a fact that the Tiruchirapalli **Municipality** has found out widespread adulteration of Tea with a coal tar dye and a Sweetner containing cyclamates capable of producing cancer and also a particular brand of Ice cream with blotting paper; and

(*b*) if so, the action taken thereon ?

தேயிலையில் கலப்படம்.

**திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகராட்சியினர், தேயிலையில் நிலக்கில் சாயப் பொருளும் (coal tar dye), புற்றுநோயினை விளைவிக்கும் "சைக்ளோமேட்டு" அடங்கிய இனிப்பூட்டும் பொருள் ஒன்றும், குறிப்பிட்ட ஒரு வகை "ஐஸ்கிரீமில்" மையொற்றித்தாளும் பரவலாகக் கலப்படம் செய்யப்பட்டிருந்ததாகக் கண்டு பிடித்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) :** விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether the Government would consider it feasible in the case of those convicted for adulteration of tea with coal tar dye, to put posters **in front** of those shops indicating that such and such a shop-keeper has been fined for adulteration, because I remember during war time certain areas were declared to be out of bounds for troops ? May I know whether this could be done by public health authorities ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the suggestion has to be considered by the Government.

*Government College of Indian Medicine*

* 206 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU **D. SANTOSHAM**) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the Government College of Indian Medicine from Palayamkottai to Madras; and

(*b*) if so, the reasons therefor ?

@ Printed as Appendix I on pages 697-698.



16th December 1971]

அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியைப் பாளையங்கோட்டையிலிருந்து சென்னைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) :** அரசு இந்திய மருத்துவக் கல்லூரியை பாளையங்கோட்டையிலேயே தற்போது நீடிக்க விடுவது என்று அரசு தீர்மானித்துள்ளது. அதை மாற்றுவது குறித்து தற்போது ஆலோசனை இல்லை.

*College in Siddha Medicine*

* 207 *Q.*—THIRU KATTOOR GOPAL [on behalf of THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNDAKKUDI ADIGALAR)] : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a College in Siddha Medicine to award a degree after training; and

(*b*) if so, the details thereof ?

சித்த வைத்தியக் கல்லூரி

**திரு. காட்டூர் கோபால் [தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் குன்றக்குடி அடிகளார் சார்பில்] :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சித்த வைத்தியத் துறையில் பயிற்சியளித்துப் பட்டம் வழங்கக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆயின் அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) :** சித்த வைத்திய முறையில் பயிற்சியளித்துப் பட்டம் வழங்குவதற்காக தற்போது அரசினர் இந்திய முறை வைத்தியக் கல்லூரி ஒன்று திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையில் இயங்கி வருகிறது. மேலும் சென்னையில் ஒரு கல்லூரி தொடங்க வேண்டும் என்பது பற்றி அரசு ஆராய்ந்துவருகிறது.

**திரு. காட்டூர் கோபால் :** தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்தில் பட்டம் பெறுகிற மருத்துவர்கள் தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழக மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்தப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொழிலாளர் காப்பீட்டுக் கழக மருத்துவ மனைகள் இன்றைக்கு இயங்கி வருகிற முறையில் அவர்களை உதவியாகத்தான் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அவர்களுடைய எண்ணிக்கை அடிப்படையில் தொழிலாளர் எண்ணிக்கை இருக்கிற முறைக்கு ஏற்றதாக அமையவில்லை. இருந்தாலும் பெரிய மருத்துவ மனைகளில் பி.ஐ.எம். பட்டதாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்திருக்கிறோம். விரைவில் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

### *Cashew Factories*

* 208 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any increase in the number of private by run cashew factories in the State during the year 1970-71 : and

(b) if so, the reason therefor ?

### முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம்மாநிலத்தில் 1970-71-ஆம் ஆண்டில் தனியாரால் நடத்தப்படும் முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். 1970-71-ல் நான்கு புதிய முந்திரிப்பருப்பு பிரி தொழிற்சாலைகள் தொழில் வணிக இயக்குநர் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) பதப்படுத்திய முந்திரிப்பருப்புக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது, இந்த எண்ணிக்கை உயர்வுக்குக் காரணமாகும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : முந்திரி அதிகம் சாகுபடியாவது புதுகை இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கை. திருப்பத்தூரில் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் முன்வருவார்களானால், உதவி செய்யப்படும்.

திரு. கே. ராஜாராம் : நமது மாநிலத்திலிருந்து வருடத்திற்கு எவ்வளவு ரூபாய் பெறுமானமுள்ள முந்திரி ஏற்றுமதியாகிறது என்ற புள்ளிவிவரம் அரசினிடம் இருக்கிறதா ?



THE HON. THIRU S. MADAVAN : The annual production of cashewnut shell is estimated at about 1,000 tons, which by 1973-74 is expected to increase to about 4,000 tons. முந்திரிப்பருப்பு உற்பத்தியைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : இந்தத் தொழிற்சாலைகள் இப்போது எத்தனை இருக்கின்றன, எங்கெங்கு இருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் 18 இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, தொழில் வணிக டைரக்டர் துறையில் பதிவாகியுள்ளது என்ற விவரம் என்னிடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச சம்பளச் சட்டம் கேரளத்தில் இருக்கிறது. அதைப் போல தமிழகத்தில் இல்லை என்பதையும் அதன் காரணமாக கேரளத்திலுள்ள தொழிலதிபர்கள் தமிழகத்திற்கு வந்துவிட்டார்கள் என்பதாகத் தெரிகிறது. அதை அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் நடத்த நமது மாநிலத்திற்கு வருவதாக இருந்தால், வரவேற்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு கேரளாவைப் போன்று ஊதிய நிர்ணயம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் நல அமைச்சரிடத்தில் கேட்க வேண்டும்.

### *Tank Factory*

* 209 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that compensation is still to be paid to owners, from whom lands were acquired about seven years back for establishing a Tank Factory at Avadi ;

(b) if so, the reasons for the delay : and

(c) the action proposed to be taken by the Government in the matter ?

### டாங்கித் தொழிற்சாலை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஆவடியில் டாங்கித் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்காக சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு இன்னும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காலதாமதத்திற்குக் காரணங்கள் யாவை ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) நில உடைமையாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஈட்டுத்தொகை, இடம் பெயராச் சொத்தைக் கோருதல்—கையகப் படுத்தல் சட்டம், 1952 பிரிவு 8 (3) மற்றும் (ஆ) வின் கீழ் மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயிக்கப்பட்டு, அதையொட்டி விலைமதிப்பு விவர அறிக்கை, 1966-ல் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டது. மேற்கூறிய சட்டம், உச்ச நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதால், ஈட்டுத்தொகை பற்றிய புதிய தீர்ப்பு அறிக்கையையும், நிலத்தின் புது மதிப்பீட்டையும் மத்திய அரசினர் அனுப்புமாறு விரும்பினர். சீராய்வு செய்யப்பட்ட நில மதிப்பீடு அறிக்கை மத்திய அரசினால் ஒப்புக்கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சியாளருக்கு டிசம்பர் 1970-ல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி சட்டத்தின் கீழ், சிறப்பு வட்டாட்சியர் அதிகாரம் பெற்ற அலுவலராகச் செயல்பட மத்திய அரசின் அனுமதி வழங்கும் உத்திரவு வாராமை காரணமாக நில உடைமையாளருக்கு ஈட்டுத்தொகை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

(ஈ) இந்த அரசு, மத்திய அரசினை, மேற்கூறிய உத்தரவை அனுப்புமாறு அடிக்கடி நினைவுபடுத்தி வருகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member].

## II. ANNOUNCEMENT REMESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971) and the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 53 of 1971) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

## III. CALLING ATTENTION TO NON-PAYMENT OF SALARIES AS PER REVISED SCALES OF PAY TO PHYSICAL DIRECTORS IN AIDED SECONDARY SCHOOLS IN THANJAVUR AND TIRUCHIRAPPALLI DISTRICTS.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள மானியம் பெறும் இடைநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, திருத்தப்பட்ட சம்பள விகிதங்களுக்கிணங்க சம்பளம் அளிக்கப்படாததால் அந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடு குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இரண்டாவது சம்பளக் குழு பல தரப்பட்ட ஆசிரியர்களுக்காகப் பரிந்துரைத்த திருத்தப்பட்ட சம்பள விகிதங்களை அரசு ஒப்புக் கொண்டு அரசாணை (நிலை) எண் 222, நிதி, நாள் 8—2—1971-ல் உத்தரவை வெளியிட்டது. இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளில் உடற்பயிற்சி இயக்குநர்களின் சம்பள விகிதத் திருத்தம் பற்றிய பரிந்துரை இல்லாமையால், மேற்சொன்ன அரசு ஆணையில் அவர்களின் திருத்தப்பட்ட சம்பள விகிதம் இடம் பெறவில்லை.

பிறகு நிதித்துறையில் அமைக்கப்பட்ட சம்பளக் குழுப் பிரிவு ஊதிய குழுவினால் பரிந்துரைக்கப்படாமல் விட்ட பகுதிகளுக்கான சம்பள விகிதங்களைத் திருத்துவதுபற்றி ஆராய்ந்தது 6—10—71-ல் உடற்பயிற்சி இயக்குநர்களின் விகிதத்தை 2—10—70-லிருந்து கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்தது :—

முந்திய சம்பள விகிதம் ரூ.—140-5-180-10-250.

திருத்தப்பட்ட சம்பள விகிதம் ரூ.—275-10-375-15-450.

அரசாணை (நிலை) எண் 1457, நிதி, நாள் 6—10—1971-ல் மேற்கண்ட திருத்தப்பட்ட சம்பள விகிதம் பற்றிய உத்தரவு வெளியிடப்பட்டது. அவ்வாணை அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு மட்டும் தான் பொருந்தும்.

அதனால், மான்யம் பெறும் பள்ளிகள், உள்ளாட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர்களுக்கும் மேற்சொன்ன திருத்தப்பட்ட சம்பள விகிதம் உண்டு என்று கல்வித் துறை குறிப்பாணை எண் 17140 எல். 2/71-5, கல்வி, நாள் 29-11-71-ல் உத்திரவை வெளியிட்டது.

மான்யம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் உடற்பயிற்சி இயக்குநர்களுக்குத் திருத்தப்பட்ட சம்பள விகிதத்தில் சம்பளம் கிடைக்க பள்ளிக் கல்வி இயக்குநரால் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## IV. GOVERNMENT RESOLUTION *RE* DRAFT RULES TO REGULATE CLASSIFICATION, METHODS OF RECRUITMENT, ETC., IN RESPECT OF MUNICIPAL SERVICES (PENSIONABLE).

MR. CHAIRMAN : The Hon. the Minister for Education will now move the Resolution.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 350-A பிரிவிற்கிணங்க, தமிழ்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] 16th December 1971]

நாட்டிலுள்ள நகராட்சிப் பணிகள் (ஓய்வூதியம் பெறத்தக்க) குறித்து வகைப்பாடு, வேலைக்கு ஆள் சேர்த்தல் பணி, நிபந்தனைகள், ஒழுங்குமுறை, மேல்முறையீடு, ஓய்வூதியம் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்குக் கீழ்க்கண்ட வரைவு விதிகளுக்கு ஏற்பளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தினை முன்மொழிகிறேன்.

(1) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகள்—

பாகம் 1—தொடக்கம்.

பாகம் 2—பொதுவிதிகள்.

பாகம் 3—பிரிவு—1 தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொதுப் பணி விதிகள்.

பிரிவு—2 தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சிப் பொறியியல்—நீர்ப் பணிகள் பணி விதிகள்.

பிரிவு—3 தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி நகர அமைப்புத் திட்டப் பணி விதிகள்.

பிரிவு—4. கிளை 1 தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி பொதுச் சுகாதார ஒழுங்கு முறை விதிகள்.

கிளை—2 தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி மருத்துவப் பணி விதிகள்.

பிரிவு—5 தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சிக் கல்விப் பணி விதிகள்.

(2) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சிப் பணிகள் (ஒழுங்கு முறை, மேல் முறையீடு) விதிகள்.

(3) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சிப் பணிகள் ஓய்வூதிய விதிகள்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

"That in pursuance of section 305-A of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nādu Act V of 1920) the House do resolve to approve the following draft of the rules to regulate the classification, methods of recruitment, conditions of service, discipline and appeal and pension in respect of the Municipal Services (Pensionable) in the State of Tamil Nadu:

1. THE TAMIL NADU MUNICIPAL SERVICE RULES, 1950.

Part I—Preliminary.

Part II—General Rules.

Part III—



[Mr. Chairman] [16th December 1971

*Section* 1.—The Tamil Nadu Municipal General Service Rules, 1970.

*Section* 2.—The Tamil Nadu Municipal Engineering and Water Works Service Rules, 1970.

*Section* 3.—The Tamil Nadu Municipal Town Planning Service Rules, 1970.

*Section* 4—

*Branch I.*—The Tamil Nadu Municipal Public Health Regulations, 1970.

*Branch II.*—The Tamil Nadu Municipal Medical Service Rules, 1970.

*Section* 5.—The Tamil Nadu Municipal Educational Service Rules, 1970.

2. THE TAMIL NADU MUNICIPAL SERVICES (DISCIPLINE AND APPEAL) RULES, 1970.

3. THE TAMIL NADU MUNICIPAL SERVICES PENSION RULES, 1970."

***திரு. எம். ராஜா அய்யர்**: தலைவரவர்களே, இந்தத் தமிழ்நாடு நகராட்சிப் பணி விதிகள்பற்றி ஓரிரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். இதைச் சென்ற முறையே நான் சொன்னேன். நான் சொன்னவற்றில் பல கருத்துக்கள் ஏற்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இரண்டே இரண்டு குறைகள் இன்னும் இதிலே காணப்படுகின்றன. அரசுப் பள்ளிகளிலேயும், தனியார் பள்ளிகளிலேயும், ஆசிரியர்களாக இருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகை இப்பொழுது நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக "முனிசிபல் எடுகேஷன் ஆபிசர்" என்பவர்களை ஸ்டேட் லெவலில் வைத்திருக்கிறோம். அதே மாதிரியாக முனிசிபல் நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை எல்லாம் மாநில அளவில் பொறுக்குவது என்றிருக்கிறது. இந்தத் தலைமை ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதை "Promotion from categories 1 to 3 of class IV" என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (பக்கம் 75 இலே). இதைத்தான் சென்ற முறையும் நான் குறையாகக் கருதினேன். இப்பொழுது உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் இங்கே நான் கூறுவது பிரிவிலிருந்தும் 1, 2, 3 கேடகரியிலிருந்துதான் வரவேண்டும். அதாவது "பி.டி. அசிஸ்டெண்ட், பி.டி. சூப்பர்வைசர்ஸ் ஆப் எலிமெண்டரி ஸ்கூல்ஸ் அண்டு டெபுடி இன்ஸ்பெக்டர்ஸ் ஆப் அப்பர் பிரைமரி ஸ்கூல்ஸ்" ". ஆனால், இப்பொழுது அரசுப் பள்ளிகளிலேயும் தனியார் பள்ளிகளிலேயும் பட்டதாரி தமிழ் ஆசிரியராக இருப்பவர்கள்—அதாவது அவர்கள் பி.ஏ., பி.டி., பட்டம் பெற்று, 5 ஆண்டு

அனுபவம் பெற்றிருப்பார்களேயானால், அவர்கள் தலைமை ஆசிரியராக வரத் தகுதியுடையவர்கள். பஸ்ட் கிரேடு டமில் பண்டிட் என்பது கேட்டகிரி 4 ஆகவிருக்கிறது. கேட்டகிரி 4—கிரேடு 1 தமிழ் பண்டிட் என்று தமிழ் மாநிலம் முழுவதிலும் எந்த நகராட்சிப் பள்ளிகளிலேயும் பி.எ., பி.டி., பட்டம் பெற்றிருக்கும் ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியராக உயர்த்தக்கூடிய ஒரு விதி இங்கேயே கொடுக்காதது ஒரு குறையாக இருக்கிறது. பக்கம் 73 லே "Promotion from categories 1 to 3 of Class IV" என்று போட்டிருப்பதை (1 to 4) என்று மாற்றி 4 ஆவது கிரேடு பஸ்ட்டு கிரேடு டமில் பண்டிட் என்று சேர்த்து விடுவார்களேயானல் பஸ்ட்டு கிரேடு டமில் பண்டிட்களும்—அதாவது அதிலேயார் யார் பி.எ., பி.டி., பட்டம் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் எல்
பி.எம். 4·20. லாம் தலைமை ஆசிரியராக இருக்க, அந்த செலக்‌ஷன் கமிட்டி அவர்களுடைய தகுதியைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு உண்டு. அந்த வாய்ப்பே இல்லாதபடி இருப்பது அவர்களுக்கு ஒரு பெரும் குறையாக இருக்கிறது. எனவே, இந்த வாய்ப்பை இந்த அரசு உண்டாக்கும் என்று கருதுகிறேன்.

அதேபோல், கிளாஸ் 4 பி—செகரட்டரியேட் அசிஸ்டெண்ட் என்றிருக்கிறது. அவர்களும் இப்பொழுது தலைமை ஆசிரியர்களாக வர யோக்கியதை உள்ளவர் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. அதிலே தனியார் பள்ளிகளிலேயும், அரசுப் பள்ளிகளிலேயும் பி.எ., பி.டி., பட்டம் பெற்றவர்கள், 5 ஆண்டுகள் ஆனதும், இங்கே தலைமை ஆசிரியர்கள் என்று நியமிக்கப்படத் தகுதி உள்ளவர்கள் என்று கருதப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பிரிவுகளிலேயிருந்து தலைமை ஆசிரியராக அரசுப் பள்ளிகளிலேயும், தனியார் பள்ளிகளிலேயும் வரலாம் என்ற சலுகை இருக்கும் பொழுது, ஏன் இந்தச் சலுகை நகராட்சிப் பள்ளிகளிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இல்லாமல் இருக்கவேண்டுமென்று கேட்கிறேன். பஸ்ட் கிரேடு டமில் பண்டிட்டுக்கான தகுதி இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருப்பது பழைய தகுதி தான்: இந்த விதிகள் எல்லாம் முன்பே வெளியிடப்பட்டுள்ளவை தான். நமது அரசு பெருமையுடன் பஸ்ட்டு கிரேடு பண்டிட்டுகளுக்கு "a degree in Tamil with Training" " இருந்தால் போதும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். இதன்படி முனிசிபல் சர்விசில் ஒருவர் பி.எ., பி.டி., ஆக இருந்தால் தான், அவர் பஸ்ட்டு கிரேடுக்கு இலாயக்கு என்றிருக்கிறது. தனியார் பள்ளிகளிலும் அரசுப் பள்ளிகளிலும் இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு பி.டி., பட்டம் தேவையில்லை. ஆனால் அவர் தனியாக பி.யூ.சி. பாஸ் செய்து பி.எ. தமிழ் பட்டம் பெற்று விட்டால் அவர் பஸ்ட் கிரேடு டமில் பண்டிட்டுக்கு இலாயக்கில்லை என்று இங்கு கூறுகிறது. பிற பள்ளிகளில் பி.எ.," தமிழாசிரியர் அல்லது செகண்டரி கிரேட்



பயிற்சி பெற்றிருப்பாரானல், "பஸ்டு கிரேடு டமில் பண்டிட்டுக்குத் தகுதி உடையவர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. qualification "The degree of B.A. with B.Ed. or B.T. or B.Sc. and B.T. or B.Ed." என்றிருக்கிறது. இந்தக்குறை நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாத்திரம் நேரிடாமல் இந்த விதியைத் திருத்தியமைக்க வேண்டும். கிளாஸ் 4 விலே இப்பொழுது இருக்கிறதை "A degree of B.A. or B.O.L. or Vidwan with Secondary Grade training or B.T. or Pandit's Training." என்று மாற்றினல், அது சரியாகிவிடும் என்று கருதுகிறேன். பக்கம் 7-லே கிளாஸ் 4, கேட்டகிரி 4-ன் கீழ் அதற்குரிய தகுதிகள் என்னவென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகவே முதலாவது தகுதி திருத்தியமைக்கப்பட வேண்டும். இப்பொழுது கடைசியாக வந்திருக்கும் அரசு ஆணை அதற்கொப்ப திருத்தப்பட வேண்டும். இப்பொழுதுள்ளபடி "A degree in Tamil with L.T., B.T. or B.Ed., B.O.L. and Oriental title and Pandit's or Secondary Grade Training)" என்றிருந்தால் ஒரு பி.எ., டிகிரி கட்டாயமாக எல்.டி. அல்லது பி.ஈடி. வேண்டும் என்று தான் ஆகிறது. 6, 7 மாதங்களுக்கு முன்னல் இந்தநிலை தான் இருந்தது. ஆனல், இந்த அரசு புதிய ஆணையின் மூலம் "வித்வான் டைட்டிலுக்கு" B.A. பட்டம் சமமாக்கி ஆணையிட்டுள்ளது. அதன்படி B.A. Tamil, Vidwan's title, degree in Tamil, B.O.L. or Oriental title with B.T., or Secondary Grade Training or Pandits Training" என்றிருந்தால் பஸ்ட்டு கிரேடு டமில் ஆசிரியராக முனிசிபல் ஹைஸ்கூலிலேயும் இவர்களுக்கு இடம் உண்டு என்ற நிலைமை ஏற்படும். இந்த செலக்‌ஷன் கமிட்டி ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்திலே எத்தனை ஸ்தானங்கள் காலியாகின்றன என்ற விவரங்களை எடுத்து, அவற்றை நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்றிருக்கிறது. Academic year" என்பது பஸ்ட் ஜூனிலே இருந்து ஆரம்பிக்கிறது. குறிப்பாக தலைமை ஆசிரியராக ஒருவர் பிரமோஷனிலே ஒரு மாவட்டத்திலேயிருந்து இன்னொரு மாவட்டத்திற்குப் போகும் பொழுது, பள்ளிகளின் பொறுப்பை உடனே அவர்கள் ஏற்க வேண்டும். அப்படி ஏற்க வேண்டுமானல், ஜி.ஓ. விலே குறிப்பிட்டிருக்கும் "இன் எவரி அக்கடமிக் இயர்" என்பதை ஏற்காமல். மே மாதத்திலேயே இந்த நியமனங்களை எல்லாம் செய்துவிடுவார்களானல், தலைமை ஆசிரியர்கள் பொறுப்புகளை ஏற்கத் தோதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஒரேயொரு விண்ணப்பம் செய்து முடித்துக்கொள்கிறேன். நமது அரசு 14—1—1970லிருந்து நகராட்சி சிப்பந்திகளுக்கு ஓய்வு ஊதியம் அளிக்க உத்திரவிட்டிருக்கிறது. இப்படி ஓய்வு ஊதியத்திற்கு உத்திரவிட்டு இரண்டு ஆண்டுகள் ஆன போதும் கூட பல ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கப்படவில்லையென்று அறிகிறேன். சீக்கிரமாக இது அவர்களுக்குக் கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த விதிகளில் கடைப்பிடிக்கவேண்டிய வகுப்பினரைப்பற்றி ஒரு ஷெட்யூல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஷெட்யூலில் ஷெட்யூல் காஸ்ட்ஸ் என்பதை மூன்ருகப் பிரித்து மாநிலம் பூராவும் இருக்கக்கூடிய வகுப்பினர் ஆறே வகுப்பு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றப்படி ஒரு 46 வகுப்பினரை கன்னியாகுமரி ஜில்லாவைத் தவிர, செங்கோட்டை தாலுகாவைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலும் ஷெட்யூல் காஸ்டாக கருதப்படுவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு 21 வகுப்பினரை கன்னியாகுமரி ஜில்லாவிலும், திருநெல்வேலி ஜில்லாவில், செங்கோட்டை தாலுகாவில் மட்டும், ஷெட்யூல் காஸ்டாகச் சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சிரமம் என்னவென்ருல், கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள வண்ணுன், வெட்டுவான் ஆகியோர் அங்கிருந்து பிழைப்பதற்கு மற்ற ஜில்லாக்களுக்கு வந்து விட்டார்கள். அங்கே வந்த பிற்பாடு, அவர்களது பிள்ளைகள் நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஷெட்யூல் காஸ்டைச் சேர்ந்தவர்கள் என்று சலுகைகளுக்காக மனுச் செய்தால், அதை ஒப்புக்கொள்வதில்லை. ஆகையினுல் கன்னியாகுமரி ஜில்லாவைச் சேர்ந்த வண்ணுன், வெட்டுவான் என்பவர்கள் பிற ஜில்லாக்களில் குடியேறினுலும், அவர்களுக்குச் சலுகை இருப்பதற்கு ஏதாவது விதிகளில் வழி செய்ய வேண்டும். அதே மாதிரி மற்ற ஜில்லாக்களில் சாம்பான் என்று இருக்கிறது. சாம்பான் என்ருல் ஆதித்திராவிடர்கள். திருச்சிக்கு வடக்கே அவர்களை ஆதித்திராவிடர்கள் என்கிருேம். அவர்களை அப்படி கௌரவமாகச் சொல்வது வழக்கம். சாம்பான் என்ற வகுப்பினர் கன்னியாகுமரி ஜில்லாவில் போயிருந்தால், அவர்களை ஷெட்யூல் காஸ்ட் என்று எடுத்துக்கொள்வதில்லை. இந்த விதிகள் அப்படியிருக்கின்றன. ஆகையினுல் ஒரு ஜில்லாவை விட்டு வேறு ஜில்லாக்களில் குடியேறினுல், எந்த வகுப்பாக இருக்கட்டும், மாநிலம் பூராவிற்கும் அதை ஒரே வகுப்பினராகப் போட்டால் நலம். வேறு மாவட்டங்களில் போய்க் குடியேறினுலும், சலுகை அநுபவிக்கும் படியான நிலைமை வருகிற மாதிரி அரசு ஆலோசிக்க வேண்டும். இம்மாதிரி இரண்டொருவர் குறைகளைத் தெரிவித்ததனுல் இதைக் கவனிக்க நேர்ந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னுல் செங்கோட்டைத் தாலுகாவில் குடியிருக்கக்கூடிய



ஒருவர் மதுரை ஜில்லாவிலிருந்து வந்திருந்தால், ஷெட்யூல் வகுப்பினரென்று சலுகைகள் எல்லாம் கிடைத்திருக்கும். செங்கோட்டைக்குப் போய் குடியேறினவுடனே சலுகை இல்லையென்று சொல்லிவிட்டார்கள். அப்புறம் அமைச்சரவர்களுக்கு மனு கொடுத்து ஸ்பெஷல் கேசாக சலுகைகள் வாங்கிக் கொடுத்தோம். அவ்வளவு சிரமமில்லாமல் இந்த விதிகளிலே வேறு ஜில்லாக்களில் குடியேறினுலும், சலுகைகள் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தையொட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சிலபல கருத்துக்களை எடுத்துக் கூறினுர்கள். 4.30 p.m.
ஆகவே அதைப் பொறுத்த வரையிலும், அரசாங்கத்தினுடைய முடிவுகள் கல்வித் துறையைப் பொறுத்தும் மற்றவைகளைப் பொறுத்தும் எந்த அளவிலே இருக்குமோ, அதற்கேற்றபடி திருத்தியமைக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட கல்வித் துறையைப் பொறுத்து, மற்ற உயர் நிலைப் பள்ளி, அரசு உயர் நிலைப் பள்ளியைப் பொறுத்து என்ன விதிகள் கொடுக்கப்படுகின்றனவோ, அவைகளைத் திருத்தியமைக்க வழியுண்டு. செய்கையளவிலே இதைச் சேர்க்க முடியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதற்கு சொல்ல விரும்புகிறேன். மெட்ராஸ் பப்ளிக் கமிஷன் மேன்யூவலிலே எப்படித் தயாரித்திருக்கிருர்களோ அப்படி எற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் திருத்தத்தை அவர்கள் செய்து தருவார்களேயானுல், நாமும் எற்றுக்கொள்வதற்கு இயலும். அந்த வகையில் செய்ய வேண்டும். மற்றத் துறைகளில் இப்படிக் கடைபிடிக்கவேண்டிய காரணத்தினுல் இந்தத் துறையும் இப்படிக் கடைபிடிக்கவேண்டியிருக்கிறது. இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The question is—

"That in pursuance of section 305-A of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the House do resolve to approve the following draft of the rules to regulate the classification, methods of recruitment, conditions of service, discipline and appeal and pension in respect of the Municipal Services (Pensionable) in the State of Tamil Nadu.

1. THE TAMIL NADU MUNICIPAL SERVICE RULES, 1970.

Part I—Preliminary.

Part II—General Rules.

Part III—

*Section* 1.—The Tamil Nadu Municipal General Service Rules, 1970.

*Section* 2.—The Tamil Nadu Municipal Engineering and Water Works Service Rules, 1970.

*Section* 3.—The Tamil Nadu Municipal Town Planning Service Rules, 1970.

*Section* 4.—

*Branch I*.—The Tamil Nadu Municipal Public Health Regulations, 1970.

*Branch II*—The Tamil Nadu Municipal Medical Service Rules, 1970.

*Section* 5.—The Tamil Nadu Municipal Educational Service Rules, 1970.

2. THE TAMIL NADU MUNICIPAL SERVICES (DISCIPLINE AND APPEAL) RULES, 1970.

3. THE TAMIL NADU MUNICIPAL SERVICES PENSION RULES, 1970."

The Resolution was put and carried.

## V. Government Bills.

### THE ATMIL NADU COPERATHVE SOCIETIES (SECOND AMENDMENT) BILL, 1971 (L.A. BILL NO. 40 OF 1971)

THIRU G. SWAMINATHAN: On a point of order, Sir. We are taking into consideration L.A. Bill No. 40 to-day as a non-Money Bill. Under Section 73-P(3), the Tamil Nadu Co-operative union shall be deemed to be an Apex Society for the purposes of Chapter IX-B. In the Bill that we passed yesterday, Section 73-L provides for guarantee by the Government of principal of, and interest on, loans and advances, taken by Apex societies and central societies. Under Article 199 (1) (b) of the Constitution of India a Bill is a Money Bil if it continues provisions for the regulation of the borrowing of money or the giving of any guarantee by the State, or the amendment of the law with respect to any financial obligations undertaken or to be undertaken by the State.

Since the guarantee is being given by the State Government the present Bill should be considered only as a Money Bill and not as non-Money Bill'. Under Section 13-P (3) of the present Bill, Co-operative Union is considered to be an Apex Society and so, Sir as an Apex Society, it is being given guarantee by the Government.





Sir, what I wish to say is, according to Article 199 (1) (*b*), this Bill should be considered only as a Money Bill, so whatever we have transacted yesterday and whatever we are going to transact to-day taking it as a non-Money Bill, would only become infructuous. Even though the Speaker who alone has the power to certify a Bill has not certified this Bill as a Money Bill, if somebody goes to Court, this will be considered only as a 'Money Bill'. So what we are transacting will become infructuous.

MR. CHAIRMAN: Under Article 199 (3), if any question arises whether a Bill introduced in the Legislature of a State which has a Legislative Council is a Money Bill or not, the decision of the Speaker of the Legislative Assembly of such State thereon shall be final.

Article 199 (4) provides: "There shall be endorsed on every Money Bill when it is transmitted to the Legislative Council under Article 198, and when it is presented to the Governor for assent under Article 200, the certificate of the Speaker of the Legislative Assembly signed by him that it is a Money Bill . . . .

THIRU G. SWAMINATHAN: Sir, my point is this. Actually it may be a Money Bill and it may be treated by the Speaker as a Non-Money Bill rightly or wrongly and we pass it in the Council as a non-Money Bill. The jurisdiction of the Court is there. Tomorrow if it goes to Court, it may be held by the Court that it is a Money Bill. That is my contention, Sir.

MR. CHAIRMAN: We need not worry about what will happen if it goes to the court. Whether it is to-day's Bill or the Bill passed yesterday we shall follow the classification according to the certificate of the Speaker.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*இந்தச் சட்டத்திற்கான காரண விளக்கங்கள் முன்வடிவுடன் இணைக்கப்பட்டு ஒப்புதலுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.*

On the point raised by the hon. Member Thiru Swaminathan, I want to make one clarification even in the beginning, because I had to grapple with a certain amount of confusion and the same confusion is sought to be raised here. We are dealing with "the Co-operative Union" which is very different from Supervisory unions. A co-operative union does not transact business. If that is understood, the question of guarantee does

@ Printed as Appendix II on pages 697A-697C.

[Thiru Si. Pa. Adietanar] [16th December 1971

not arise. We are only providing for the proper functioning of these Unions which are associations of co-operators. The word 'Co-operative Union' is probably misleading. Had it been "Co-operators' Union", it would have been more easily understood. This happens to be an All-India name and there are Co-operative Unions in other States also; and we have to follow the same wording. Let us not be misled by the wording.

I move that this Bill be taken into consideration.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as passed by the Assembly, be taken into consideration".

* திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, கூட்டுறவு யூனியனுக்கும் அபெக்ஸ் சொசைடிக்கும் உள்ள வித்தியாசத்தை அமைச்சரவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு யூனியன் என்பது கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் கூட்டுறவைப்பற்றி நல்முறையில் விளக்கங்களைச்சொல்லி "எஜுகேஷன்" என்ற அளவிலே அதைப்பற்றி அறிவுறுத்தவும் அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவைப் பற்றி ஓரளவு புரிந்து கொண்ட எல்லோருக்கும் இது தெரிந்த விஷயமாகும். நேற்று நடந்த பிரச்னையை இன்றையதினம் எடுத்துச் சொன்ன காரணத்தை அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நேற்றைய மசோதாவில் 'அபெக்ஸ் சொசைட்டி' என்ற வரையறைக்கும் இன்று சொல்லப்படுகிற 'யூனியன்' வரையறைக்கும் தொடர்பு இருக்கிற காரணத்தால்தான் குறிப்பிட்டேன். Co-operative union shall be deemed to be an Apex Society for the purpose of Chapter XI-B என்று 73பி(3)-ல் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு யூனியனுக்கு நேற்றைய மசோதாவின் 73-எல் படி அரசாங்கம் உத்திரவாதம் கொடுத்திருக்கிறது என்ற அளவிலே நான் எடுத்துச் சொல்ல விழைந்தேன் என்பதைக் கூற விரும்புகிறேன். நான் முதலில் சொன்னதுபோல கூட்டுறவு யூனியன் என்பது நாடு மாநிலத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் கூட்டுறவுத் துறையின் தன்மையைப் பற்றித் தெளிவிக்கவும் தெளிவுபடுத்தவும் ஒரு அங்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். கூட்டுறவு யூனியன் நாட்டு மக்களுக்கு கூட்டுறவைப் பற்றிய விஷயங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதில் எந்த அளவிலே வெற்றி பெற்றிருக்கிறது என்று பார்க்கிற போது, என்னைப் பொறுத்த வரையில் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சரியான முறையில் நாட்டு மக்களுக்கு கூட்டுறவு விஷயங்களைப் பற்றி எடுத்துச் சொல்லத் தவறியிருக்கிறது என்று சொல்ல வேண்டும். கூட்டுறவுத் துறையில் தற்சமயத்தில் இரண்டுவிதமான "பத்திரிகைகள் வெளியிடுகிறார்கள். ஒன்று மெட்ராஸ் ஜர்னல் ஆப் கோஆபரேஷன்" என்று ஆங்கி



16th December 1971] [திரு. ஜி. சுவாமிநாதன்]

லத்திலும், இன்னொன்று "கூட்டுறவு" என்று தமிழிலும் பத்திரிக்கைகளை அவர்கள் வெளியிடுகிறார்கள். இந்தப் பத்திரிகைகள் 20, 30 ஆண்டுகளாகவே கூட்டுறவு யூனியனாலே வெளியிடப்பட்டு வருகின்றன என்று நினைக்கிறேன். இந்தப் பத்திரிகைகள் எவ்வளவு பிரதிகள் போகின்றன என்று பார்த்தால் கிட்டத்தட்ட 3 ஆயிரம் 4 ஆயிரம் பிரதிகளாவது போகுமா என்று சந்தேகமாக இருக்கிறது. உண்மையாக எவ்வளவு பிரதிகள் போகின்றன என்று தெரியவில்லை. இந்த அடிப்படையில் பார்க்கிற போது, ஜப்பான் நாட்டிலும் கூட்டுறவு சம்பந்தமாக பத்திரிகைகள் நடத்துகிறார்கள் என்று "ரீடர்ஸ் டைஜஸ்ட்" பத்திரிகையில் படிக்கிற வாய்ப்பு கிடைத்தது. "ஈ-நோ-ஹிகாரி" என்ற கூட்டுறவு பத்திரிக்கை அந்நாட்டில் 10 மில்லியன் அதாவது ஒரு கோடி பிரதிகள் விற்கப்பட்டு கூட்டுறவுத் துறையைப் பற்றி மக்கள் எல்லோரும் தெரிந்து கொள்கிற அளவிற்கு நடத்தப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அதுவும் கூட்டுறவுத் துறையாலேயே நடத்தப்படுகிறது என்றும் அறிகிறேன். வெறும் கூட்டுறவுத் துறை பற்றிய விஷயங்கள் மட்டும் அல்லாது பெண்களுக்குரிய பக்கங்களும் குழந்தைகளுக்காக பகுதிகளும் பிரசுரிக்கப்பட்டு எல்லோரும் வாங்கிப் படிக்கக்கூடிய அளவிலே மிக சிறப்பான முறையில் கூட்டுறவுத் துறையினரால் ஜப்பான் நாட்டில் நடத்தப்பெற்று வருகிறது. நம் நாட்டில் 1914-லிருந்து என்று நினைக்கிறேன், கூட்டுறவுத் துறை துவங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு பிரச்சாரம் இந்த இடைப்பட்ட காலத்தில் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று பார்த்தால் பத்திரிகைகள் 3 ஆயிரம் 4 ஆயிரம் பிரதிகள் தான் கூட்டுறவு யூனியனில் தற்சமயத்தில் வெளியிடப்படுகின்றன என்று சொல்கிறபோது எவ்வளவு தூரம் சரியற்ற முறையில் நடத்தப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும்.

இரண்டாவது சிறிது காலம் முன்வரை ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் தனது நிகர லாபத்திலிருந்து 2 சதம் வரை கூட்டுறவு யூனியனுக்குக் கொடுத்து வந்தது. இப்போது 5 சதவிதம் வரை கொடுக்க சட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆக கிட்டத் தட்ட 4 அல்லது 5 லட்சம் ரூபாய்வரை யூனியனுக்கு பொருள் சேர்ந்திருக்கும். இப்பொழுதுகூட இத்துறையினால் வெளியிடப்படும் பத்திரிகைகள் மக்களுக்கு கூட்டுறவைப் பற்றி நல்ல விளக்கம் 4·40 p,m,
அளிப்பதாக இல்லை. நான் சில சந்தர்ப்பத்தில் இந்தப் பத்திரிகைகளைப் பார்த்தேன். கூட்டுறவுத் துறையில் உள்ளவர்கள் கூட படிக்கக்கூடிய அளவு சுவையான செய்திகள் எதுவுமே அதில் இல்லை. இப்பத்திரிகைகளை இனிமேலேனும் நல்ல முறையில் வெளியிடவேண்டுமென அமைச்சரவர்களை கேட்டுக் கொள்கிறேன். பப்ளிகேஷன் என்ற முறையில் இந்தத் துறையில் வெளியீடுகளைக் கவர்ச்சியான முறையில் அமைத்து அவற்றிற்கு ஒரு விலையைக் கூட நிர்ணயிக்கலாம். யூ.எஸ்.எஸ்.ஆர்-

லிருந்து வரும் பிரசுரங்கள் அழகான படங்களோடு அந்தக் கட்சியை விரும்பாதவர்கள் கூட படிக்கக் கூடிய அளவிற்கு சிறந்ததாக இருக்கின்றன. நம்முடைய கூட்டுறவு யூனியனால் எந்த விதமான பிரசுரங்களாவது வெளியிடப்படுகின்றனவா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்லவேண்டும். கூட்டுறவு யூனியனிலிருந்து இந்தவிதமான சிறந்த பிரசுரங்களை வெளியிடச் செய்யவேண்டுமென அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றும் செய்யலாம். கூட்டுறவுத் துறையைப் பற்றி நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்ல சினிமாப் படங்கள் தயாரிக்கலாம். நான் சினிமா என்று சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் கூட வேடிக்கையாகக் கருதக்கூடும். இன்றைக்கு தமிழக அரசின் மிகப்பெரும் துறையாக இருப்பது கூட்டுறவுத் துறைதான்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வருவாய் இல்லை, வரவு தான். கிட்டத்தட்ட 300, 400 கோடி வரை ஆண்டுக்கு வரவு செலவு செய்யும் துறை இது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** எனவே நல்ல படங்களை எடுத்து மக்களுக்குத் கூட்டுறவுத் துறையைப் பற்றித் தெரிவிக்க யூனியன் தவறிவிட்டது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக இந்தக் கூட்டுறவு யூனியனில் ரிசர்ச் என்று சொல்லக் கூடிய ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். கூட்டுறவுத் துறையினால் நாட்டு மக்களுக்கு இதுவரை என்ன பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிய ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை மூலமாக கிராமங்களில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிறோம். இந்தக் கடன்களெல்லாம் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு சரியான முறையில் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதைப் பற்றிய ஆராய்ச்சி செய்ய வேண்டும். இந்த முறையில் யூனியன் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது இந்த மசோதாவில் என்ன புதிதாக செய்யப்பட்டிருக்கிறது, என்பதாகும். டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேட்டிவ் யூனியன். தாலுகா கோவாப்பரேட்டிவ் யூனியன் என்று புதிதாக அமைக்கிறார்கள். இந்த அமைப்புகளெல்லாம் "பேங்கிங் பங்ஷன்" என்று சொல்லக்கூடிய வங்கிகளது வேலைகளை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி செய்யப்படுமானால் யூனியன் வேலைகள் சரிவர நடைபெறாது. 11 எ-ல் ரஜிஸ்தாருக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது முக்கியமான பகுதி இப்படிக் கொடுப்பதற்கு முன்பே, ஏற்கனவேயே 11-வது பிரிவின்படி அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே போல ரெஜிஸ்தாருக்கு 13-வது செக்ஷன்படி பை-லா? போன்றவற்றைக் கண்காணிக்க அதிகாரம் கொடுக்கப்



பட்டிருக்கிறது. ஆனால் இப்போது 119-ஏ யில் மீண்டும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சங்கங்களின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடும் அளவிற்கு பயன்படுத்தக் கூடாது என்ற கட்டுப்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் தலைவர் அவர்கள் பேசுவதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** உறுப்பினர் அவர்கள் பெயர் கொடுத்திருப் பார்களே, காணோமே என்று பார்த்தேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அமைச்சர் அவர்கள் நேற்று ஒரு திருத்தம் தந்து இன்றும் ஒரு திருத்தம் தந்திருக் கிறார்கள். இன்னும் கூட இந்தச் சட்டத்தில் வேறு திருத்தங்கள் வரும் என்று எதிர்பார்க்கிறேன். இப்படி அமைச்சர் அவர்களின் திருத்தங்களை ஒன்றன்பின் ஒன்றாக . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒரு அவசியமான திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்யவேண்டி யிருக்கிறது. நேற்று நான் பேசியபோது ஸ்ரீவில்லிபுத்தூர் லேபர் காண்டிராக்ட் சொசைட்டியில் உறுப்பினர் அவர்கள் இருந்திருக்கிறார்கள், அதற்கு அரசினரின் உதவி ரூ. 12, 500 கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதற்கு உறுப்பினர் அவர்கள் மறுத்துப் பேசி 'அபத்தம், அபத்தம்' என்று சொல்ல, முதலமைச்சர் அவர்கள் இப்படி அபத்தத்தை எல்லாம் கூட்டுறவிலே கொண்டு வருகிறீர்களே என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அதனுடைய முழு புள்ளி விவரங்களும் என் கைவசம் இருக்கின்றன. அதிலே, திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு. . .

THIRU G. SWAMINATHAN: On a point of order, Sir, during the discussion of a Bill, the Hon. Minister tries to reply to what had happened yesterday.

MR. CHAIRMAN: The Hon. Minister is only giving some information.

* THE HON. SI. PA. ADITANAR: Mr. Chairman, Sir, let not the hon. Member make me raise a point of privilege.

From the date of starting of the Society, namely, 29th January 1967, Thiru R. Krishnaswamy Naidu was the President of this 4·50 பி.ப.
Labour Contract Society at Srivilliputhur. It was caled Ramnad District Labour Contract Society. This was in 1967 and there

were the general elections then. Just after the elections, when the previous Ministry was in office, on 27th March 1967, a sum of Rs. 12,500 was given to the Society. It may be remembered that the date is 27th March 1967, that is, when the late Revered Chief Minister was in charge of the administration. In that year there was a loss of Rs. 2,089 for that Society, and then Thiru R. Krishnaswamy Naidu did not continue after 28th January 1968. These are the facts.

I appeal to the hon. Members not to make me raise a question of privilege. I am merely mentioning it so that the hon. Member may have an opportunity to correct himself. The hon. Member said that he was not a member of such a Society, and he went to the extent of saying "Abatham, Abatham" and appealed to the Hon. the Chief Minister. I have got all the details here in the records, namely, from what date he was the President and how much money he received from the new Government, .........

AN. HON. MEMBER : Did he receive the money for his own benefit ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Of course, the money has been received for the Society. According to the Bye-laws as the President is liable. I am giving an opportunity to the hon. Member to correct himself. If he does not correct himself, I will raise a matter of privilege, because he would be regarded as having given wrong information and misled the House

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, 1927-ம் ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா காண்டிராக்ட் சொசைட்டியில் நான் ஏதோ ஒரு ஆண்டு பதவியிலிருந்ததாயும். 43, 44-லிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஏதோ பதவி வகித்ததாயும் சொன்னார்கள். 1967-68-ல் இராமநாதபுரம் ஜில்லா காண்டிராக்ட் சொசைட்டி அட் ஸ்ரீவில்லிபுத்தூரில் என்னைத் தலைவராகப் போட்டிருந்தார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** என்னுடைய பேச்சில் கொஞ்சம்கூடத் தவறுதல் கிடையாது. நான் பேசுகிறபோது சொன்னது, லேபர் காண்டிராக்ட் சொசைட்டியில் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள தொழிலாளர் காண்டிராக்ட் சொசைட்டியில் உறுப்பினர் அவர்கள் இருந்திருக்கிறார்கள். அதைத் தான் இப்படிச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அவ்வாறு நினைத்து. ஸ்ரீவில்லிப்புத்தூரில் நான் சொசைட்டியில் இருந்ததில்லை என்று சொன்னேன். ஜில்லா காண்டிராக்ட் சொசைட்டி ஏற்பட்டு, அதில் என்னை நியமனம் செய்தபோது, நான் அது சரியாக நடக்காது எனக்கு அதில் பதவி வகிக்க இஷ்டமில்லை என்று சொன்னேன். அது சரிவர நடக்காது என்று சொன்னேன்.



என்னுடைய தகவல் இல்லாமலேயே, அரசாங்கம் இந்தச் சங்கத்திற்கு ஏதோ ஒரு தொகையை ஒதுக்கி, அதை செகரட்டரி வாங்கி கணக்கில் போட்டிருந்தார்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கான்ட்ராக்ட் சொசைடி நான் அப்படித்தான் சொல்லியிருந்தேன். அதிலே அபத்தம் இல்லை. 4.50 p.m.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஸ்ரீவில்லிபுத்தூர் என்று சொன்னதாலே அபத்தம் என்று சொன்னேன் அது ஜில்லா சங்கம்.

**மிஸ்டர் சேர்மன் :** நீங்கள் இரண்டு பேருமே நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? நீங்கள் பேசும்போது அவர் உட்கார வேண்டும். அவர் பேசும்போது நீங்கள் உட்கார வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அவர் பொறுப்பேற்ற தேதி 29—1—1967. அவருக்கு அரசு பணம் அனுப்பிய தேதி 27—3—1967. அவர் விலகிய தேதி 26—1—1968.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** லாரி ஒன்று வாங்கிக் கொள்வதற்காக 40,000 ரூபாய் சேங்ஷன் ஆகியிருந்தது. அதையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்கள். அதைப் பெற முடியாது, லாரிக்கு அவசியமில்லை. அந்த சொசைடிக்கு அது அவசியமில்லை, அந்த சொசைடி சரிவர நடைபெறாது என்றே கடிதமும் எழுதியிருக்கிறேன். எனக்கு அந்தப் பொறுப்பு வேண்டியதில்லை. வேறு யாரேனும் இருந்தால், ஏற்றுக் கொள்ளட்டும் என்று ராஜிநாமா செய்துவிட்டு அந்த ரிக்கார்டு களையும் அங்கேயிருந்த டிபார்ட்மென்ட் செக்ரடரியிடத்திலே ஒப்படைத்துவிட்டேன். இரண்டு கூட்டங்கள்கூட மதுரையில் நடந்தன. மற்றபேர் அங்கே போய் 'டி.ஏ., கியே' வாங்கினார் களோ என்னவோ, தெரியவில்லை.

[illegible] என்று தான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நான் இராமநாதபுரம் ஜில்லா சங்கத்தைப்பற்றிச் சொல்லவில்லை. நானே நேற்று சொல்லியிருக்கிறேன். இராமநாதபுரம் ஜில்லா சங்கத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அது வேண்டாம் என்று மறுத்துவிட்டேன் என்றே ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறேன். ஆகையினாலே ஸ்ரீவில்லி புத்தூரிலே ஒரு லேபர் கான்ட்ராக்ட் சொசைடி என்று சபையில் சொன்னால் அது சரியில்லை என்பதற்காகத்தான் அவ்வாறு தெரிவித்தேனே தவிர வேறு அல்ல.

இப்பொழுது அமைச்சர் அவர்கள் தான் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் திருத்தத்தைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. நேற்று உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விற்பனை வரி சம்பந்தமான திருத்தம் கொண்டுவருகிறபோது, ஒவ்வொரு திருத்தமும் எதற்காகக் கொண்டுவரப்படுகிறது, ஏன் அவ்வாறு கொண்டுவருகிறோம் என்பதைப்பற்றி விளக்கங்கள் எல்லாம் சொன்னார்கள். ஆனால் நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவருகிற திருத்தத்தைப்பற்றி—முன்னாலே இருக்கிறது தெரியாது, பின்னாலே இருக்கிறது தெரியாது—திருத்தங்கள் எல்லாம் அங்கத்தினர்களுக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன என்று இரண்டு வரியிலே முடித்துவிடுகிறார். அவர்களே உள்ள சட்டம் இவ்வாறு இருக்கிறது, இப்பொழுது இவ்வாறு திருத்தப்படுகிறது, ஏன் திருத்தப்படுகிறது என்று சொன்னால், வேலை ரொம்பக் குறைந்துவிடும். அவர்கள் அனுபவம் உள்ளவர்கள். அதே துறையிலே ஈடுபட்டிருக்கிற அவர்களுக்கு விளங்கக்கூடிய அளவுக்கு எங்களுக்கு விளங்க அவசியமில்லை. அவர்களே இந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்தவுடனே இந்தத் திருத்தச் சட்டம் எதற்காகக் கொண்டுவரப்படுகிறது என்ற விவரங்களைக் கூறுவதில்லை. இன்றைக்கு மட்டுமல்ல, என்றும் கூறுவதில்லை. இனிமேல் கூற வேண்டும் என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டத்திலே 6 திருத்தங்கள் என்று கூறப்பட்டிருக்கின்றன. 6 நம்பர் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 5 திருத்தங்கள்தான் ஒன்று பெயர் மட்டுந்தான். இது சம்பந்தப்பட்ட சமாதானங்கள் சொன்னால், போதுமானதாக இருக்கும். அவர்கள் பார்-அட்-லா பாஸ் செய்தவர்கள். அடிக்கடி கோர்ட்டிலே கேட்கிற கேள்வி, Answer to the Point என்று முடித்துக்கொள்வார்கள். ஆனால் அப்படிப்பட்ட பார்-அட்-லா பாஸ் பண்ணிய அமைச்சர் அவர்கள் விஷயத்தை விட்டுவிட்டு வெளியே போய்விட வேண்டாம். நாங்கள் போனால், விஷயத்தை விட்டுவிட்டு வெளியே போக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படிச் சட்டம் படித்தவர்கள் விஷயத்தை விட்டு விட்டு போகக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாம் கூட்டுறவிலே அக்கறை உள்ளவர்கள். கூட்டுறவிலே சம்பந்தப்பட்டவர்கள். அமைச்சர் அவர்களும் அங்கத்தினர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும்போது, ஏதோ வேடிக்கை பார்க்கிற மாதிரியிலே, ரசிக்கிற மாதிரியிலே வேடிக்கையாக, விளையாட்டாக, அங்கே ஒரு கருத்தொருமித்த எண்ணங்கள் குவிவதற்கு இல்லாமல், ஆங்கிலம் தெரிந்தவர்கள் 'சீரியஸ்' என்று சொல்வார்கள். அப்படி கவனிக்காமல் வினயமாக அந்த விஷயத்தைக் கவனிக்காமல், வேடிக்கை விளையாட்டாக இப்படிப்பட்ட முக்கியமான விஷயங்கள் விவாதத்திற்கு வரும்போது சபையின் கவனத்தை அப்படிக் கொண்டு போகாமலிருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.





முதல் திருத்தம், சட்டத்தில் உள்ளபடி நிகர லாபத்தில் ரிசர்வ் ஃபண்டாக சேம நிதியாக 25 சதவிதம் கொண்டுபோகப்பட வேண்டும் என்று கருதுகிறேன்.

நான் உட்காரமாட்டேன். கடைசியிலே சொல்லலாம். அதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இப்போது இரண்டாவது விதியிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால் . . .

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** நான் நிற்கிறேனே சாமி.

**திரு. வி. தங்கபாண்டியன்** On a Point of Order அமைச்சரைப் பார்த்து 'சாமி' என்று சொல்லலாமா?

**திரு. சா. கணேசன்:** 'சாமி' என்றால் பெரியவரே என்றுதான் அர்த்தம்.

**திரு. வி. தங்கபாண்டியன்:** சொல்லலாமா என்றுதான் கேட்டேனே தவிர சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அப்படி இருக்கிறதாகக் கருதுகிறேன். அது 20 சதவீதத்துக்குக் குறையாமலும் 30 சதவீதத்துக்கு மேற்படாமலும் ஒதுக்கப்பட வேண்டும் என்று திருத்தம் கொண்டுவரப் படுகிறது. இது ஏன் என்று காரண காரியத்தோடு விளக்கியிருந்தால், இதைப்பற்றிப் பேசுவதற்கு அவசியமிருக்காது. என்னைப் போன்றவர்களுக்கு மேலெழுந்த வாரியாகத் தோன்றுகிறது. ஒருகால் 5 சதவீதம் கூட்டுறவு அபிவிருத்திக்கு என்று முன்பே சட்டத்தின் மூலமாக நிகர லாபத்திலே ஒதுக்கப்பட்டு விட்டதாலே, இந்த சேம நிதிக்குப் போகிற தொகை இந்த 5 சதவீதம் குறையட்டும் என்பதற்காக அளித்திருக்கிறார்களோ என்னவோ தெரியாது. 30 சதவீதத்துக்கும் மேற்படாமல் என்று சொல்லப்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன்.

அப்புறம் இந்தச் சட்டத்தினுடைய 9-வது பாகத்திலே 'சி' 73 செக்ஷன் 'ஓ' முதல் 'ஆர்' என்ற நம்பர் வரை புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருந்துவரும் தமிழ் நாட்டு கூட்டுறவு யூனியனை அதன் சொத்துக்களுடன் இணைத்து புதிய யூனியனைகவும் இந்த ஜில்லா தாலுகா அளவில் யூனியன்களும் அமைப்பதற்கு இந்தத் திருத்தச் சட்டம் வருகிறது என்று கருதுகிறேன். இப்பொழுது தமிழ்நாடு யூனியன் என்று 5·00 p.m.
இருக்கிறது. இப்பொழுது கொண்டுவரப்படுகிற ஜில்லா, தாலுகா, மாநில யூனியன்கள் அமைக்கப்படுவதன் கருத்து என்னவென்று சொல்லப்படுகிறதோ, இதே பணியைத்தான் முன்னுள்ள யூனியன், மாகாண யூனியன் செய்துகொண்டு வந்திருக்கிறது. அதிலிருந்து பிரசாரகர்கள் வந்திருக்கிறார்கள். நிழற்படங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றிருக்

[திரு ஆர். கிருஷ்ணசாமி] [16th December 1971]

கின்றன. அதிலே அக்கறையாக சீனியர் இன்ஸ்பெக்டருடன் பல கிராமங்களுக்கு, நகரங்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெறும் தினங்களிலே பல தினங்கள் நானும் சென்றிருக்கிறேன். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கவலைப் பட்டதைப் போல், கூட்டுறவுத் துறை எவ்வளவு விரிவடைந்து வருகிறதோ, எவ்வளவு மக்களுடைய வாழ்விலே, அவர்களுடைய தேவைகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தம் கொண்டிருக்கிறதோ, இன்னும் பொது மக்களுக்குச் சேவை செய்வதற்கு அந்தத் துறை தயாராக இருந்துகொண்டிருக்கிறதோ, அந்த அளவில் அதனுடைய பயனைப் பெறக்கூடிய மக்கள் கூட்டுறவைப் பற்றிய தத்துவங்கள், நோக்கங்களைப்பற்றி, நடைமுறையைப்பற்றி, தெரிந்துகொள்ளாமல் அதனுடைய பலனைப் பெறுவதற்கு மட்டும் அவசரப்படுகிறார்கள். அதனுடைய விவரங்களைச் சரிவரப் புரிந்துகொள்வதற்கு ஆசையில்லாதவர்களாக, மேலெழுந்தவாரியாக இருக்கிறார்களே என்ற கவலையும் எனக்கு உண்டு. இப்பொழுது செய்து கொண்டு வரும் பிரசாரம் போதும் என்று நான் கருதவில்லை. அவர்கள் பிரசுரங்கள் வெளியிட்டு பொதுமக்களுக்கு வழங்கும்படியாக தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் செய்து வந்ததும் எனக்குத் தெரியும். அவர்கள் பிரசுரித்த பிரசுரங்களைத் தமிழ்நாடு கூட்டுறவு யூனியனிலே நானே வந்து வாங்கிக்கொண்டு போயிருக்கிறேன். என் கட்டுக் கட்டாக இங்கே கிடக்கிறது, என் விநியோகத்திற்கு அனுப்பப் படாமல் இருக்கிறது என்று வருந்தியதும் உண்டு. இந்தத் துறையிலே ஒரு சரியான பிரசாரத்தைச் செய்வதற்காக, காரியங்கள் செய்வதற்காக, முன்னாலிருந்த தமிழ்நாடு கூட்டுறவு யூனியனை அபிவிருத்தி செய்து மாநிலமெங்கும் பணிபுரிய ஏற்பாடுகளைச் செய்யலாம். இன்னும்கூட ஜில்லா அளவிலே இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருதி இந்தச் சட்டத்தை அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். தாலூகா, ஜில்லா அளவில் யூனியன்கள் அமைக்கும்போது, அதற்காகச் செய்யப்பட்ட பைலாக்களைப் பற்றிய விவரங்கள் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் கேட்டால். கிடைப்பதில்லை. சர்க்காரில்தான் கேட்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி யூனியன் அமைப்பதற்கு. 'ஆர்கனைசர்' தாலூகாவுக்கு நியமிக்கும்போது, இன்னின்ன தாலூகாவுக்கு இன்னின்ன 'ஆர்கனைசர்' என்று டெபுடி ரிஜிஸ்ட்ராருக்குச் சொல்லப்பட்டதா? அவர்களை ஆர்கனைசராகக் கொண்டுதான் தாலூகா யூனியன்கள் அமைக்கப்படுகின்றனவா. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா யூனியன் அமைக்கப்பட்டது. அதற்கு 'ஆர்கனைசர்' நியமிக்கப்பட்டார். இப்போது ஜில்லா யூனியனும் அமைக்கப் பட்டுவிட்டதா என்பது தெரியாது. ஸ்ரீவில்லிபுத்தூர் யூனியன் அமைப்பதற்கான தகவலே எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், பொது மக்கள் மத்தியில் கூட்டுறவுத் துறைபற்றிய அறிவு அதிகமாக வளர்வதற்கு, அவர்கள் அதைப்



[Thiru Si. Pa. Aditanar] [16th December 1971]

பற்றித் தெரிந்துகொள்வதற்கு யூனியன் அமைக்கப்படும்போது, யார் யார் என்ற வித்தியாசம் இல்லாமல், அதில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் சேர்ந்து அமைக்கப்படாமல், அவர்களுடைய கட்சி எண்ணங்கள் மேலோங்கி அதில் உள்ளவர்களைக் கொண்டு யூனியன் அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச செய்கிறார்கள் என்று அறிகிறேன். ஏற்கனவே உள்ள யூனியன்கள் அனேகம் இதே போன்று மாநாடுகள் நடத்துவதுண்டு. இதில் மகாநாடு நடத்துவது பற்றியில்லை. மாநில அளவில் கூட்டுறவு மகாநாடு தமிழ் நாடு கூட்டுறவு யூனியன் நடத்தியது. சமீபத்தில் காஞ்சிபுரத்தில் நடந்தது. அமைச்சர் அவர்கள் கூட அம்மகாநாட்டுக்கு வருவதாக இருந்து வரவில்லை. காஞ்சிபுரம் மகாநாடு மாநில மாநாடுகளில் கடைசி மகாநாடு. இந்த யூனியன்கள் இத்தகைய மகாநாடுகளை நடத்தலாம். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டும் அமைப்பாளர்களாக அமைக்கப் பட்டு, அவர்கள் சிபாரிசு செய்யும்படி அமைப்புகள் நடக்கின்றன என்று கருதுகிறேன். நியமனம்தான் செய்தார்கள். அவர்களாகவே அமைப்பாளர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவோரை டெபுடி ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடா என்று தெரியவில்லை. ரிஜிஸ்ட்ராராக நியமனம் செய்தாரா என்று தெரியாது. சட்டத்தில் அதற்கான இடம் பெறுவதற்கு இப்போதுதான் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. கூட்டுறவு ஸ்தாபனங்களின் நிகர லாபத்தில் 5 சதவீதம் கூட்டுறவு அபிவிருத்தி நிதிக்கு வரவேண்டுமென்று சட்டத்திருத்தம் இருக்கிறது. ஏற்கனவே 2 சதவீதம் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு என்று கொடுக்க வேண்டுமென்பதாக இருந்தது. ஆகையால் அந்த 5-ம் 2-ம் சேர்ந்து 7 ஆகிறது. நிகர லாபத்தில் வரும் 7 சதவீதம் தொகை இந்தக் கூட்டுறவுக் கல்வி, பிரசாரம் ஆகியவற்றிற்காக ஒதுக்கி வைக்கப்படுகிறது. நான் அஞ்சுகிறேன். அமைச்சர் அவர்களுடைய கருத்து இப்போது இந்த ஸ்தாபனங்கள் அமைக்கின்ற முறைகளைக் கவனிக்கும்போது கூட்டுறவுக் கல்வி, அபிவிருத்தி, பிரசாரம் இத்தகைய வகைகளில் காரியம் செய்வதற்காக கட்சியின் சார்பில் உள்ளவர்களை நியமித்து இந்த வருமானங்கள், சாதனங்கள், வாகனங்கள் ஆகியவற்றைக் கொண்டு அவர்களுடைய ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் முறையில் இந்த ஸ்தாபனத்தை தங்களுக்குப் பயன் படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இப்படிச் செய்கிறார்களோ என்று நினைக்கிறேன். மனதில் தோன்றியதை ஒளிவு மறைவு இல்லாமல் சொல்கிறேன். அதற்கெல்லாம் வேறு வகையில் இந்த யூனியன் அவசியம் என்று கருதியிருந்தால், இந்த முறையில் அது அமைய வேண்டிய அவசியமில்லை என்று நான் என் கருத்தை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** நீங்கள் மட்டும் இவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளலாமா? மற்றவர்கள் பேசவேண்டாமா? கூட்டுறவு பற்றிப் பேசுகிறீர்கள். நீங்கள் கூட்டுறவு செய்யவில்லை. சீக்கிரம் முடித்துக்கொண்டால் நல்லது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** அமைச்சர் அவர்கள் அதிகமான நேரத்தைக் கேட்டிருக்க வேண்டும். அடுத்து, இதில் ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுப்பதைப் பற்றியிருக்கிறது. ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுப்பது சம்பந்தமாக, ரிஜிஸ்ட்ரார் விரும்பினால், பொது ஜன நலனை முன்னிட்டு சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை மற்ற அபிவிருத்தித் திட்டங்களை அங்கத்தினர்கள் டெபாசிட்டர்கள் நலனைக் கருதி, அவர்கள் இப்படித்தான் நடத்தவேண்டுமென்று கட்டாயப்படுத்த, அவர்களுக்கு உத்தரவிட ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுப்பதாக, இந்த 119 (எ)யில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் இருப்பதை நல்ல முறையில் செயல்படுத்துவது சர்க்கார்தான். சர்க்காரே ரிஜிஸ்ட்ரார் என்ற முறையில் காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்று சொல்லலாம். அந்த முறையில் இதை அனுகூலமாக உபயோகித்துக்கொண்டு அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கும் இன்னின்ன சங்கம் இன்னின்ன காரியங்களை இப்படிச் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்கும் இதைச் செய்ய வில்லையென்றால், வேறு வகையில் நிர்பந்தம் இல்லாத முறையில், இந்தக் கூட்டுறவு செயல்பட வேண்டும்.

முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே
அன்றலகை முலைப்பாலுண்டு
மருதிடைச் சென்று உயர்சகடம் விளவுதைத்து
பொதுவர் மனை வளர்ந்தமாலே
ஒருவருக்கும் தெரியாது இங்கு உன் மாய்கை
யாரறிவார் உண்மையாக
திருவுளத்தின் கருத்தெதுவோ அதுவெனக்கும்
கருத்தென்றான் தெய்வமன்றான்
நின் மாயை யார் அறிவார் உண்மையாக

என்று வில்லிபாரதத்தில் சொல்வதைப் போல், அமைச்சர் அவர்களுடைய எண்ணத்தை, கற்பனையை அவர்களுடைய எதிர்கால நோக்கத்தை, மாயையை நான் அறிய முடியாது. நான் சந்தேகிக்கிறேன். இந்தக் கருத்துக்களோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறதோ என்றுதான் சந்தேகிக்கிறேன். அதைப் போக்கி நல்ல வகையில் செய்வதற்கான வழிமுறைகளை வகுத்துச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



*திரு. எம். ஆறுமுகசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மசோதாவின் மீது சில கருத்துக்களை நான் தெரிவிப்பது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். பொதுவாக மிகவும் விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நமது நாட்டில் இந்தக் கூட்டுறவுகள் மிகவும் அதிகமான பங்கை வகிக்கின்றன. கேந்திரமான இடத்தை இது பெற்றிருக்கிறது நம்முடைய பொருளாதாரத்தில் என்று சொன்னால், மிகையாகாது. ஆனால் நம்முடைய நாட்டில் இந்தக் கூட்டுறவுத் துறை நிர்வகிக்கப்பட்டு வந்துள்ள விதம், அதைப்பற்றி மக்கள் பேசிக்கொள்வது இந்தக் கூட்டுறவுத் துறைக்கும் பெருமையளிப்பதாக இருக்கவில்லை. கோவாபரேஷன், மிஸ்அப்ரோபிரியேஷன், ஆர்பிட்ரேஷன், பின்னர் லிக்விடேஷன் என்று சொல்வார்கள். கூட்டுறவுச் சங்கம் என்றால், கடந்த காலத்தில் இதெல்லாம் நினைவுக்கு வருகிறது. இப்படிக் கூட்டுறவு என்று சொன்னாலே பொது மக்கள் பயப்படும்படியாகக்கூட தங்களுடைய முதலீடுகளுக் நஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆபத்து வந்துவிடும் என்ற நிலைமைதான் கடந்த கால சரித்திரமாக இருக்கிறது. அதைக் காட்டிலும் இன்னும் மோசமாக அதை நிர்வகித்து வந்தவர்கள் பெரும்பாலும் வேளாண்மைக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லாதவர்கள். அத்தோடு சமூகத்தில் ரொம்பப் பெரியவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் தொடர்ந்து நீண்ட பல காலமாக மாநிலம் முழுவதும் அட்டை மாதிரி ஒட்டிக் கொண்டிருந்தார்கள். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இரண்டு பெரிய குடும்பங்களின் கையில் மாட்டிக் 5-10 p.m.
கொண்டிருந்தது, இந்தக் கூட்டுறவுத் துறை. இதை மாநிலம் முழுவதிலும் சொல்ல இயலும். ஓரளவுக்கு நானும் சில காலம் கூட்டுறவு சொசைட்டியின் தலைவராக, வீடு கட்டும் கூட்டுறவு சொசைட்டியின் தலைவராக இருந்திருக்கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில். அப்படிப் பெரிய தனக்காரர் —கையிலேதான் இவைகள் இருந்தன. நான் கூறுவது, தஞ்சாவூர் மாவட்டத்திலே இவை தோன்றிய காலத்திலேயிருந்தே இப்படிப்பட்டவர்கள் கையிலே இருந்தது என்பதுதான். அவர்களுடைய பெயர்களையெல்லாம் சொல்ல வேண்டியதில்லை. இந்த அவையிலே கூட அவர்கள் இருந்திருக்கிறார்கள். அப்படி எல்லாம் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். அதனாலே அந்தக் அவர்கள் கையிலே அவைகள் இருந்தன. அதனாலே அந்தக் கூட்டுறவு சங்கங்கள் முன்னேற்றம் அடைய முடியவில்லை. காரணம் என்னவென்று சொன்னால், பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அரசியல் கட்சி நலன்களுக்கு பயன்படுத்தப்படக் கூடாது என்றார்கள். நூற்றுக்கு 99 சதம் இவைகள் அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. நான் மாவட்டக் கழகத் தேர்தலிலே வேட்பாளராக 1954-லே நின்றிருக்கிறேன். அப்பொழுது எனக்கு வாக்களித்ததற்காக ஒரு ஊருக்கே ஐந்து ஆண்டுக்காலம் கடன் கொடுக்காமல்

வைத்திருந்தார்கள். 1959-ஆம் ஆண்டு வரை அந்த ஊருக்குக் கடன் வழங்கப்பட வில்லை. அவர்கள் சொன்னார்களாம், இன்றைக்கு நீங்கள் வாக்களித்தால்தான், உங்களுக்குக் கடன் கொடுக்கவில்லை, அதற்குப் பிராயச்சித்தமாக அந்தப் பெரிய மெத்தையில் மூன்றாவது மாடியிலே இருப்பவரிடம் சென்று. உங்களைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுங்கள் என்று பகிரங்கமாகச் சொன்னார்களாம். இப்படியெல்லாம் இருந்த ஒரு துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பதற்காக அதிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இது ஒரு பெரிய "சோஷியோ பெனோமினன்"; ஒரு சமூக மாற்றப் பிரச்சனை. மிகச் சாதாரணமான மனிதர்கள் கையிலே பொறுப்பை ஒப்படைக்கும் பொழுதே நாம் பயப்படுகின்றோம். அவர்கள் எதாவது தவறு செய்வார்களோ என்று பயப்படுகிறோம். இந்த மேஜையிலே கூட பொருளாதார அந்தஸ்திலே உயர்ந்தவர்கள் தான் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று சொல்லப்பட்ட காலம் உண்டு. அது இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதைப் போல கூட்டுறவு வங்கிகளிலே கூட மிகச் சாதாரண விவசாயிகளின் குழந்தைகள் முதன் முறையாக வங்கிகளின் தலைவராக வந்ததை நாம் பார்க்கிறோம். நான் ஆளுங்கட்சிக்கு மாறுபட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவன். என்னுடைய அரசியல் கட்சிக்காரர்கள் இந்த வங்கிகளின் தலைவர்களாக பல ஆயிரக்கணக்கான பேர் அதைப் பற்றி நான் பிறகு சொல்லுகிறேன். ஆனால், இந்த மாற்றத்தை நான் வரவேற்கிறேன். இந்த மாற்றத்தைக் கண்டு நான் கொதிப்படையவில்லை. மிகச் சாதாரணமான ஆட்கள் இந்த வங்கிகளின் தலைவர்களாக பல ஆயிரக்கணக்கான பேர் வந்திருக்க முடிகிறது—வந்திருக்கிறார்கள் என்பது ஒரு சமுதாய மாற்றம் ஆகும். அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை. இப்படிப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம்தான் இன்றைய அளவிலே செய்ய முடியுமே தவிர, அதை வேறு வகையிலே செய்ய முடியாது. இந்த ஸ்தாபனங்கள் எல்லாம் பல நேரத்திலே அரசியல் காரணங்களுக்காக கடந்த காலத்திலே பயன்பட்டு வந்திருக்கின்றன. எனவே, இந்த மாற்றத்தை வரவேற்கிறேன். ஆனால், மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகும், வேறு யாரோ சிலர் வந்து, அந்தப் பழைய முறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினால், அது சரியாகாது, எனவே, அதையெல்லாம் கட்டுப்படுத்த அரசு முன்வர வேண்டும்.

இன்றைக்கு எடுத்துக்கொள்ளுங்கள், தஞ்சாவூர் மாவட்டத்திலே எவ்வளவு ரூபாய் யார். யார் கையிலே முடங்கியிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அவர்கள் எல்லாம் இன்றைக்கு சுதந்திரமாக உலாவிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு இலட்சம், 2 இலட்சம் ரூபாய் என்று கபளீகரம் பண்ணியவர்கள் எல்லாம் அப்படி உலவுகிறார்கள். அவர்கள் எல்லாம் எந்தக் கட்சிக் காரர்கள் என்று நான் சொல்ல ஆசைப்படவில்லை. கூட்டுறவுத்



துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அப்படிப் பட்ட புள்ளிகள் பெயர்களை எல்லாம் இங்கே என்னைச் சொல்லச் சொன்னால், நான் இங்கே அதைப் படிக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் எல்லாம் ஒரு குற்றமும் செய்யாதவர்கள் போல் உலவுகின்றார்கள். எனக்குத் தெரியும். ஒரு கிராமத்திலே ஒரு அடமான வங்கி பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கடனாக கொடுத்தது. அதனுடைய சின்ன அப்பன், பெரிய அப்பன், தகப்பனார் என்று போய்க் கொண்டிருக்கிறதே தவிர. இன்னமும் கூட வேறு பிறருக்கு அவர்கள் கொடுக்கவில்லை. சாதாரண ஆட்கள் இந்த கூட்டுறவுத் துறைக்காக இந்த அரசு அளிக்கும் விசேஷச் சலுகைகள் எல்லாம் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது கிடைக்காமல் அவைகளையெல்லாம் சமுதாயத்தின் மேல்தட்டிலே இருப்பவர்கள்தான் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால், அந்த நிலைமை மாறினாலும். இப்பொழுது கிராமங்களிலே என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், 'ரிச் பெசன்ட்ஸ்' என்று சொல்லக் கூடிய பெரிய நடுத்தர வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அந்தச் சலுகைகள் போகின்ற மாதிரி நிலைமை இருக்கிறது. எனவே, இது எல்லாம் மிகச் சாதாரண ஆட்களுக்குப் போய்ச்சேர வேண்டும். அப்படிச் சொன்னால், அதிலே வேறு பல கஷ்டங்கள் இருக்கின்றன. நானே ஒரு கடனுக்கு இந்தத் துறையிலே மனுப் போட்டேன். அந்த மனு கொடுத்ததற்குப் பிறகு—என்னுடைய வாழ்க்கையிலே அப்பொழுதுதான் முதல் தடவையாக அந்த மனுவைக் கொடுத்தேன்—அதிலே இருக்கும் கஷ்டங்கள் எனக்குத் தெரிய வந்தன. பழைய மாமூல்படி, கிராம கணக்குப்பிள்ளை அவர்கள் இருக்கிறார்களே. அவரிடம் போய் சிட்டாவையும், அடங்கலையும், நற்சான்றிதழ்களையும் நீங்கள் வாங்கிக்கொண்டு வருவது என்று சொன்னால், சாதாரணமா? 12 ஏக்கர் இருக்கும் இடத்திலே 6 ஏக்கர் என்று கணக்குக்கொடுக்கிறார். மீதி 6 ஏக்கர் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை என்கிறார். பத்திரம் இருக்கிறது, பதிவு செய்த டாக்குமெண்ட் இருக்கிறது. அதெல்லாம் இல்லை என்று அவர் சொல்லுகிறார். மறுபடியும் அவரிடத்திலேதான் நாம் போக வேண்டியிருக்கிறது. அதற்கு அப்புறம் வந்தால், இங்கே என்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் எஸ்டிமேட்டிற்கு ஒரு கணக்குப் பெற வேண்டியிருக்கிறது. அதையும் தாண்டிப் போனால், வியாபாரிகள். மோட்டார் விற்பனையாளர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க ஏதாவது ஒரு முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். யாருக்காக நாம் நல்ல காரியங்களைச் செய்கிறோமோ அந்தச் சாதாரண மக்களுக்கு, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு, சாதாரண நடுத்தரவர்க்கத்திற்கு அந்த முன்னேற்றம் எல்லாம் போய்ச்சேர வேண்டும். அப்படிப்பட்ட மக்களை வட்டிக்காரர்கள் சுரண்டி விடாமலிருப்பதற்கு 'இதைக் கொடுத்து' 'அதைத் தடுக்க'

ஏற்பாடுகள் எடுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட கடன்கள் எல்லாம் விரைவில் அவர்களுக்குக் கிடைக்க இந்தச் சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும். அப்படியில்லாமல் நாம் வெறுமனே பேசிக்கொண்டிருந்தால், ஜமீன்தார்களை அழித்துவிட்டு, பெரும் நிலச் சொந்தக்காரர்களை அழித்துவிட்டு, புதிதாக ஒரு கூட்டத்தினர் கிராமப்புறங்களிலே செழிப்பமையச் செய்வது மாதிரி ஆகிவிடும் என எச்சரிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள், கட்சிக்காரர்களையெல்லாம் இந்தச் சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்க்க கூடாது என்று. 'கூட்டுறவு' என்ற ஒரு ஜாதிக்காரரே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 20, 30 ஆண்டுகளாகக் கூட்டுறவு விடுதிகளிலே இருந்துகொண்டு அவற்றைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு கூட்டம் இருக்கிறது. கூட்டுறவாளர்கள் என்ற பட்டத்தை வாங்கிக்கொண்டு, அந்த பட்டம் தங்களுடைய சந்ததியினருக்கும் வர வேண்டுமென்று நினைக்கிறார்கள். எனவே, இந்தத் துறையிலே உண்மையிலேயே போதிய உற்சாகம் காட்டுகின்ற இளைஞர்களை எல்லாம் அவர்கள் இருக்கும் இடத்திலே போடவேண்டும். கட்சிக் கண்ணோட்டத்துடன் அதைச் செய்யாவிட்டாலும் கூட, நான் பணிவன்போடு கூறுவதெல்லாம், அப்படிப்பட்ட இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதுதான். பொறுப்பிலே இருக்கும் கட்சியைச் சார்ந்தவர்கள் அப்படிப்பட்ட இடங்களிலே பெரும்பான்மையாகத்தான் இருப்பார்கள். இதைத் தவிர்க்க முடியாது. இதைச் சொல்லும்பொழுது, பலருக்குச் சங்கடமாக இருக்கலாம். எங்கள் கட்சியே கூட நாளைக்கு ஆட்சிக்கு வருமானால், நாங்களும் அப்படித்தான் செய்யவேண்டி வரும். அப்படியிருப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் மற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்தத் துறையிலே அதிகமாக ஈடுபாடு கொண்டவர்கள், உழைக்கக் காத்திருப்பவர்கள், உற்சாகமாக வேலை செய்யத் துடிப்பவர்கள் போன்றவர்களைத் தேடிப் பிடித்து அவர்களாக முன்வர சங்கோஜப்பட்டாலும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தரவேண்டும் இந்தக் கூட்டுறவுத் துறையிலே என்று நான் கேட்டுக்கொண்டு, இந்த நேரத்திலே சில வார்த்தைகளைப் பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்காக துணைத் தலைவருக்கு நன்றியைக் கூறி அமைகிறேன்.

திரு. பி. நாராயணசாமி: மாண்புமிகு துணைத் தலைவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையைப் பற்றிய விளக்கங்களை நம்முடைய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நீண்ட நாட்களாகப் பேசி வருவதையோ இன்றைக்குப் பேசியதை நான் கேட்டேன். அப்பொழுது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கொண்டு வந்திருக்கின்ற சட்டத் திருத்தம் கட்சிக்காரர்களுக்குப் பயன் படவும், அந்தத் துறையிலே இருக்கின்ற வசதிகளையெல்லாம் கூட அவர்கள் பயன்படுத்தவும் வழி வகை செய்யும் என்ற குறை



பட்டுக்கொண்டார்கள். அதிலே நாங்கள் வருத்தப்பட விட்டாலும் கூட, அவர்களின் பரந்த மனப்பான்மையைப் பார்க்கும் பொழுது எனக்கு என்னவோ போல் இருக்கிறது. குறிப்பாக, கூட்டுறவுத் துறையிலே நம் தமிழ்நாடு அகில இந்தியாவிலேயே இரண்டாவது நிலையிலே நின்றும் ஒரு தகுதியைப் பெற்று, நல்ல முறையிலே வளர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

திரு எஸ். டி. ஆதித்தன்: மகாராஷ்டிரம் முன்பு முதல் நிலையிலே இருந்தது. இப்பொழுது நமது தமிழ்நாடு தான் முதல் நிலையிலே இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. நாராயணசாமி: இன்னும் சொல்லப் போனால் விவசாயிகளுக்கு என்று நம்மால் இத்துறையிலே ஏற்படுத்தப் படும் ஸ்தாபனங்களிலே நூற்றுக்கு பத்து பேர் கூட அப்படிப்பட்ட விவசாயிகள் அங்கம் வகிக்க முடியாத நிலைமை இருந்துகொண்டு தான் இருக்கிறது.

மக்களுக்கு இன்னும் 90 சதவிகிதம் கூட்டுறவை இன்னது எனப் புரியாத நிலையில் இருக்கிறார்கள். அது யாருடைய குற்றம் என்று பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர் சொல்லவில்லை. காரணம் என்னவென்றால், அது குறிப்பிட்டவர்கள் சொத்தாக இருந்தது. திரு. ஆறுமுகசாமி சொன்னார்கள், இது இரண்டு குடும்பங்களுடைய சொத்து போல் இருக்கிறது என்று. தேர்தல் நடக்கிறது தெரியாது. யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று தெரியாது. ஏதோ அவர்கள் வீட்டுச் சொத்தாக, பாங்கை நடத்துவது போல். அங்கிருந்த விவசாயிகளும் மக்களும் நினைத்தார்கள், 20, 30 வருடங்களாகத் தலைவர்களாக இருக்கிறார்கள் என்றால், குடும்பச் சொத்துக்கு இன்னார் இன்னார் டைரக்டர்களாக இருக்க வேண்டும், இன்னார் இன்னார் தலைவராக வர வேண்டும், உபதலைவராக வரவேண்டும் என்று இருந்தது. இன்னாருக்குத்தான் கடன் கொடுக்க வேண்டுமென்றும், ஜாமீன் கையெழுத்து போட வேண்டும். கூட்டுறவுச் சங்கத் தலைவர் என்று அந்த காலத்தில் சொல்ல மாட்டார்கள். ஐயா என்றுதான் சொல்வார்கள். அப்படியிருந்த நிலைமை மாறி, இப்பொழுது கூட்டுறவு இயக்கம் மக்களுக்குப் பயனுள்ளதாக ஆகியிருக்கிறது. நம்முடைய நாயுடு அவர்களே வருத்தப்பட்டுச் சொன்னார்கள். இன்னின்ன துறையில் நன்மைகள் ஏற்பட, திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது ஏழைகளுக்கு வாய்ப்பாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது. அவர்கள் உற்பத்தி பண்ணுகிற பொருள்களை நியாயமான விலைக்கு எடுத்துக்கொள்வது. நியாயமான விலையில் உணவுப் பண்டங்களை, பதார்த்தங்களைக் கிடைக்கிற அளவிலே செய்வது. இவ்வளவு முக்கியமான நோக்கத்தோடு அமைக்கப்பட்டது இந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் என்ற உணர்வே 5·20 P.m.

இது வரையில் மக்களுக்கு ஏற்படவில்லை. ஆகையினால் இந்த யூனியன் பெரும் பங்காக ஒரு வட்டக் கழகம் என்றோ, மாவட்டக் கழகம் என்றோ அமைக்கப்படவேண்டும். கழகம் என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் என்று அவர் நினைத்தார் போலிருக்கிறது. சங்கம் என்று இருந்ததைக் கழகம் என்று மாற்றி யிருக்கிறார்கள். அது தமிழாக மாற்றப்பட்ட கொடுமையைத் தவிர, வேறு எந்தக் கொடுமையையும் செய்ததாகத் தெரியவில்லை. அதேபோல் தனிப்பட்ட முறையில் சந்தேகங்கள். அவர் அமைச்சர்களைச் சந்தேகமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். தனிப்பட்ட விரோதமாக இருக்கலாம் போலிருக்கிறது. அவர்கள் இருவருக்கும் உள்ளுக்குள்ளே என்ன வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இரண்டு பேரையும் நல்லது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர் எழுந்தால் அவர் எழுந்திருக்கிறார். சாதாரணமாகக்கூட பேசவில்லையானால் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த 90 சதவிகித மக்கள் இருக்கிறார்கள் அல்லவா. இவர்களுக்குக் கூட்டுறவுத் துறையைப் பற்றித் தெரியாதிருக்கிறது. மக்களுக்கும் பயன்படக்கூடிய அளவு தெளிவாக சிறப்பாக வழி காட்டலாம். தெளிவாக வழி காட்டும் நிலையில் இந்த இயக்கம் இருக்கிறது. கூட்டுறவுத் துறை ஒன்றினால்தான் முன்னேற முடியும். எந்த சமதர்மத்தை ஆக்குவதாக இருந்தாலும், பொதுவுடைமைத் தத்துவத்தை ஆக்குவதாக இருந்தாலும், இந்த கூட்டுறவுத் துறையினால்தான் மக்களை வாழ்விக்க முடியும். கட்சி நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. யார் இருக்கிறார்கள், யார் செய்கிறார்கள், எந்தக் கட்சிக்காரர்கள் ஆதிக்கம்கொண்டு போகிறார்கள் என்று பார்க்கிறார்கள். கூட்டுறவு யூனியனில் கார்கள் இருக்கின்றன என்றால், அவைகள் புதிதாக வாங்கப்படவில்லை. பெரியவர் சொன்ன மாதிரி, கார் பரம்பரையாக இருக்கிறது. காரில் எதிர்போவது போன்றவற்றை வெள்ளம் கொண்டுவந்து காண்பித்து, ஏழை எளியவர்களுக்காக, அவர்கள் நல்வாழ்வுக்காக என்ன துறையைப் பற்றிச் சொல்வது நல்லதல்ல. யார் யாரையோ 'அப்பாயிண்ட்' செய்கிறார்கள், சங்கங்களுக்குப் போட்டுக்கொண்டார்கள் என்று சொன்னதற்கு, திரு. ஆறுமுகசாமி பதில் சொன்னார்கள். எந்த ஆளும் கட்சியாக இருந்தாலும் அவர்கள் ஆட்களைத் தான் போட்டுக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். எங்களிடம் சொன்னால், நாங்கள் செய்வோம். வேறு யாரிட்டே சொன்னால், செய்வார்கள், செய்ய மாட்டார்கள். குறை சொல்ல வேண்டுமென்பவர்களிடம், நாங்கள் மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொன்னாலும், யார் நம்பிக்கொண்டிருப்பார்கள்? கூட்டுறவுத் திட்டத்தை நிறைவேற்றுகிறவர்கள் கையில் கொடுப்பதுதான் நாட்டில் பழக்கம். ஒன்றிரண்டு தவறு செய்தால், அதைக் கவனிக்க வேண்டியதுதான். தந்தை மகனைப் பொறுத்த வரையில். கே. எஸ். மணிப் பையன் சபை உறுப்பினராக இருக்கிறார். என்னைவிடச் சிறியவன். நான் பையன் என்றுதான் கூறுவேன், நம்முடைய அவையிலே



உறுப்பினராக இருக்கிறார். அவரை கும்பகோணம் மத்திய வங்கித் தலைவராகப் போட்டிருக்கிறோம். முன்னாலிருந்த கதையைச் சொல்லத் தயாராக இல்லை. முன்னால் பெரியவர்கள் இருந்தார்கள். அந்த வங்கி அகில இந்தியாவிலே முதற் பரிசு வாங்கப் போகிறது. கடன் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அந்த சமயத்தில் வசூலாகப்பாக வசூலையும் முதல் தரமாகச் செய்திருக்கிறார்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** வசூல் என்று சொல்கிறபோது, வசூல்கள் பணமாக வந்திருக்கிறதா, புக் அட்ஜஸ்ட்மெண்டாக வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. நாராயணசாமி.** 'புக் அட்ஜஸ்ட்மெண்டு' பண்ண முடியாது. 'புக்' கிடையாது. கட்டியிருந்தால் தான், வரவு வைக்க முடியும். 'புக் அட்ஜஸ்ட்மெண்டு' கிடையாது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பழைய கடன்களை வரவு வைத்து, புதிதாகக் கடன் கொடுத்தால், புக் அட்ஜஸ்ட்மெண்டு தான்.

**மாண்புமிகு திரு. பெ. தர்மலிங்கம்:** புக் அட்ஜஸ்ட்மெண்டு படி லோன் கொடுத்து வாங்கித் திருப்பிக் கட்டுகிறது. அது மாதிரியில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** திரு. கே. எஸ். மணி செய்தார்கள் என்று சொன்னதாகத் தவறாகக் கருத வேண்டாம். தனிப்பட்ட முறையில் அவர்கள் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை.

**திரு. பி. நாராயணசாமி :** இதிலே, விவசாயிகளுக்கு விவசாய காலத்தில் கொடுத்து, எப்போது அறுவடை ஆகிறதோ அப்போது கடன் திருப்பி வாங்கிக்கொள்கிறார். ரொக்கமில் கொடுக்கிறார். வாங்குகிறார். மாநிலத்தில் முதல் தரமாக, இந்தியாவில் முதல் தரமாகச் செய்திருக்கிறார். அதற்காக நம்முடைய பரிசை வாங்க இருக்கிறார். அமைச்சர் ஏற்படுத்திய புதிய முறைகளில் அவர் தலைவராக வந்திருக்கிறார். ஒன்றே ஒன்றை எடுத்துக் காட்டுகிறேன். தயவுசெய்து உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கோளாறுகள் இருந்தால், திருத்திக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 90 சதவிகித மக்களுக்குக் கூட்டுறவுத் துறை என்ன என்பதைக் கூட்டுறவுக் கழகத்தின் மூலம் பிரச்சாரம் செய்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் நேற்றையதினம் பொதுவே அவையின் முன்னால் வைக்கப்பட்ட இந்த மசோதாவைப்பற்றிப் பேசாமல், பொதுப் படையாகக் கூட்டுறவுத் துறையில் இருக்கப்பட்ட நன்மைகள்

திட்டங்களைப்பற்றிப் பேசியதற்காக நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் நல்ல கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். அவர்கள், கூட்டுறவுத் துறையின் சார்பாக நடக்கிற பத்திரிகைகள் சிறந்த முறையில் சரியாக நடைபெறவில்லையென்று சொன்னார்கள். இது போல இன்னும் கூட்டுறவுத் துறையில் [illegible] புத்தகங்கள். மக்களுக்கு நல்ல தெளிவான கருத்துக்களைச் சொல்கிற, எடுத்துக் காட்டுகிற புத்தகங்கள் வெளியிட முடியுமென்று சொன்னார்கள். அதையும் ஒப்புக் கொள்கிறேன். அவர் மேலும் சொன்னார்கள், சினிமா படம் பிடித்து நல்ல பிரச்சாரம் கூட செய்யலாம் என்று சொன்னார்கள். திரு. மா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் [illegible]. நான் அதை நம்பிக்கையோடு அதையும் செய்து முடிக்கவேண்டியது அவசியம் என்று ஒப்புக் கொள்கிறேன். இந்த பிரச்சாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற கூட்டுறவு யூனியன், கூட்டுறவுப் பிரச்சாரக் கழகமானது அவ்வளவு சரியாக வேலை செய்யவில்லையென்று சொன்னார்கள். நான் அதையும் ஒப்புக் கொள்கிறேன். இந்தக் குறைகளெல்லாம் இருப்பதன் காரணமாகத் தான் இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டியதாயிற்று. இப்போது நடக்கிற யூனியன் மிக நன்றாக, சிறப்பாக நடக்கவில்லையென்று சொன்னார்கள். அப்படி இல்லாமல் சிறப்பாக நடக்கிறது என்று பாராட்டியிருந்தால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவே தேவையில்லையே. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் வரிசையாக, அடுக்கடுக்காக எடுத்துக் காட்டிய குறைகளைப் போக்கிட வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத்தை இன்றைக்கு உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன். அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ரெஜிஸ்ட்ராருக்கு [illegible] அதிகாரம் கொடுத்திருக்கிறது [illegible] என்று கேட்டார்கள். நான் இரண்டுக்குமாகப் பதில் சொல்ல முடியும். எந்த ஒரு கழகத்திற்கும் அறிவுரை செய்வார்கள் என்று

5-30 P.m. மட்டும் சொல்லியிருந்தால், இரண்டு வரியில் மசோதா முடிந்து போயிருக்கும். [illegible] பகுதி [illegible] 20 வரி கொண்டிருக்கிறது. இன்னின்ன நிலைமையில் சூழ்நிலைகளில் வரம்புக்குட்பட்டு அவர் அறிவுரை சொல்லவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்று நான் இன்னும் சற்று நேரத்தில் விளக்குகிறேன். ஆனால் இது போன்ற சட்டம் மஹாராஷ்டிர மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கே ரெஜிஸ்டிரார்கள் கூட்டுறவுத் துறையில் நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் அறிவுரை சொல்லுகிறார்கள். அந்த அதிகாரிகள், கூட்டுறவுத் துறையில் உள்ளவர்கள் நடந்து வருகிறார்கள். அது இங்கேயும் தேவைப்படுகிறது. அதைப் பின்னால் விளக்குகிறேன். அதற்கு முன்னால் நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 'உள்ளத்தைத் தெரிந்துகொள்ள





முடியவில்லையே பராபரமே' என்று என்னென்னமோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். உள்ளத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. ஏனென்று சொன்னால்.

'The Devil himself does not know the ethought of man'.

THIRU G. SAWMINATHAN: On a point of order( Sir. I would like teo know whom ethe Hon. Minister refers to as 'devil'.

THE HON. THIRU SI. PA. ADITANAR: I only said: "the Devil himself does not know the thought of man".

அவர்கள் 'சாமி' என்றுசொன்ன உடனேயே அவர்கள் என்னைக் கடவுளாகச் செய்துவிட்டார்கள் என்றும் நினைக்கவில்லை. இந்தப்பழமொழியைச் சொன்னது நான் அவர்களைப்பற்றித் தப்பாக சொல்வதற்காக இல்லை. அவர்கள் கூட்டுறவுத் துறையில் செய்கிற பணிகளை நான் பாராட்டுகிறேன். அவர்கள் இப்படிப் பட்ட பணிகளை மேலும் மேலும் செய்ய வேண்டுமென நான் உள்ளபடியே கருதுகிறேன். இல்லையென்று சொன்னால், அவர்கள் தலைவராக இருக்கப்பட்ட சங்கத்துக்கெல்லாம் கேட்ட சமயத்தில் கேட்டபடி உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றியிருக்காது. ஒன்று கேட்டார்கள். "இப்போது திருத்தம் கொண்டுவந்திருக்கிறீர்களே. நிகர லாபத்தில் ரிசர்வ் பண்டு என்று தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறதே. அதற்கு 20% இருக்க வேண்டுமென்று உள்ளதை ஏன் 30% என்று ஒதுக்கியிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். ஏன் அப்படி அவசியப் படுகிறது என்று சொன்னால், சில கூட்டுறவு சங்கங்கள் அவர்களுக்கு என்ன லாபம் வந்தாலும், அவர்களுக்கு எவ்வளவு தான் வரிச் சலுகைகள் கொடுத்தாலும், பண உதவி செய்தாலும், வருகிற லாபத்தையெல்லாம் தனியாக ஒதுக்கி வைத்துக்கொண்டு, இந்தக் கூட்டுறவு சொசைட்டியில் பங்குதாரர்களாக உள்ளவர்களுக்கு நாமம் போடுகிற நிலையில் இருக்கிறார்கள். they do not docleare dividend. ஆகையால் அது மிகவும் அவசியமென்று நான் நினைக்கிறேன். கூட்டுறவுத் துறையில் அதிகச் சலுகைகள் காட்டாத காரணம், பொதுமக்கள் அதிக முதலீடு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான்.

உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் முதலீடு செய்தவர்களுக்குப் பங்கீடு சரியாக வரவில்லை என்று சொன்னால், அட்ஜுடிகேஷன், லிக்விடேஷன் என்றெல்லாம் வரும் என்று சொன்னார்கள். லாபம், பங்கீடு தங்களுக்கு வரும் என்ற காரணத்தால் தான், கிராமத்தில் உள்ளவர்கள் முதலீடு செய்கிறார்களே தவிர, அவர்களுக்கு லாபம் வராது என்று நினைத்தால் அவர்கள் முதலீடு செய்வதில்லை. அதனால் தான் அவைகளுக்கு அரசு மேலும் மேலும் முதலீ செய்யவேண்டியிருக்கிறது. நண்பர் எந்தக் கம்பெனியிலும் 10% ரிசர்வ் பண்டாக ஒதுக்கினாலே அது போதுமான தென்று கருதுவார்கள். கூட்டுறவுத் துறையில் 20% போதுமான

தாகும். ஆனல் இந்தத் துறையில் 30% ஒதுக்கப்பட்டிருக்கிறது. பங்கு போட்டவர்கள் எல்லாம் பயன்பெற வேண்டுமென்பதற்காகத் தான் இந்த உச்ச வரம்பு கொண்டு வந்திருக்கிறேம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஒரு விஷயம். ஏற்கனவே 20% . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நான் கால் வலிக்க நின்று கொண்டிருக்கிறேனே என்பதற்காக இப்படி எழுந்து பேசுகிருர்கள். அதற்காக நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இன்னென்றும் சொன்னர்கள். "சென்னையில் மட்டும் ஒரு யூனியன் இருப்பதால், எத்தனையோ பிரசுரங்கள் அச்சடித்து வைத்திருக்கிறீர்கள். அடுக்கடுக்காகக் கிடைக்கின்றன. அவைகள் கிராமங்களில், தாலுகாக்களில், வட்டங்களில் வினியோகம் செய்யாமல் கிடக்கிறதை நானே பார்த்தேன்", என்று சொனர்கள். இங்கே இப்படி குவிந்து கிடக்கக்கூடியவைகளை ஸ்ரீவில்லிபுத்தூருக்குக் கொண்டு போக முடியாததற்குக் காரணம் என்னவென்று சொன்னல், கிராம மட்டத்தில் அல்லது தாலுகா மட்டத்தில் ஒரு யூனியன் இல்லாததே. அப்படி ஒரு யூனியன் இருக்குமேயானல், அவைகள் இதோடு தொடர்பு கொண்டு தாலுகாக்களுக்கும், கிராமங்களுக்கும் நிச்சயமாக இந்தப் பிரசுரங்களை வினியோகம் செய்யலாம். அதற்கான வாய்ப்பு இருக்கிறது. சூப்பர்வைசரி யூனியன் என்பவைகளுக்கும் இன்னும் நாள் கெடு கொஞ்சம் தான். சீக்கிரமாக அதை நிறுத்திவிடுகிறேம். இந்த சூப்பர்வைசரி யூனியனல்தான் இவ்வளவு குழப்பங்களும் வந்தன.

அரசின் கூட்டுறவுத் துறை சார்பாக நாங்கள் முன்பு ஒரு கருத்தரங்கை ஒரு வட்டத்தின் தலைநகரான மதுராந்தகத்திலே நடத்தினேம். அதில் தினமும் 50,000 பேர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அதில் பொருள் காட்சியும் வைத்திருந்தோம். அத்தனை பேரும் ஆவலோடு வந்து பார்த்தார்கள். கிராம கைத் தொழில் எப்படி நடைபெற வேண்டும், கூட்டுறவு யூனியன் எப்படி நடைபெற வேண்டும் என்பதையெல்லாம் அந்தப் பொருள் காட்சியின் மூலம் விளக்கியிருந்தோம். அதையும் ஆவலுடன் வந்து பார்த்தார்கள். இது மறைந்த தலைவர் அண்ணு முதலமைச்சராக இருந்தபோது நடந்தது. கடைசி நாளில் அண்ணு அவர்கள் அந்த விழாவில் கலந்துகொண்டு பேசுகிறபோது சொன்னர்கள். பெரிய பெரிய நகரங்களில் நடைபெறுகிற கண்காட்சிகள் மக்களுக்குப் பயன்படாது. ஆனல் அதே கண்காட்சி கிராமங்களில் நடந்தால், அது ஏராளமான மக்களுக்குப் பயன்படும் என்று. ஆகையால் வட்ட அளவிலே இப்படிப்பட்ட கருத்தரங்குகள், கண்காட்சிகள் நடைபெற வேண்டும் என்று சொன்னர்கள். அவர்கள் அன்று சொன்னது உண்மையான ஒன்று. உதாரணமாக இங்கு சென்னையில் எவ்வளவு கருத்தரங்குகள் நடத்தினலும், அது



எங்கோ உள்ள தொப்பளாம்பட்டிக்கு எப்படிப் போய் எட்டும்? அது 120 தாலுகாக்களில் 120 வட்டங்களில் எப்படிப் போய் எட்டும்? ஆகையால் அங்கெல்லாம் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இன்னென்றும் சொன்ஞர்கள். கட்சியை பலப்படுத்துவது என்று என்னவோ 5·40 p.m.,
சொன்னர்கள். நான் இன்று மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற அரசும் சரி, கூட்டுறவுத் துறையும் சரி, கட்சி நோக்கோடு எதையும் செய்ய வேண்டியதில்லை. அப்படி இருக்குமேயானல், வேறு கட்சியில் உள்ளவர்களை நியமனம் செய்திருக்கமாட்டோம். நாங்கள் சுதந்திரா கட்சியில் உள்ளவர்களையும், காங்கிரஸ் (ஓ)க்காரர்களையும் நியமித்திருக்கமாட்டோம். இந்த ஆண்டு நடந்த தேர்தலில் கழக வேட்பாளரை நேர்முகமாக எதிர்த்து நின்ற காங்கிரஸ் (ஓ) வேட்பாளரை நாங்கள் அடுத்த மாதமே நியமித்திருக்கிறேம். நண்பர் திரு. ஏகாம்பர ரெட்டியார் எதிர்த்து நின்றவர். அவரையே நியமித்திருக்கிறேம். அதற்கு என்ன காரணம்? நாங்கள் கட்சி நோக்கத் கிறேம். அதற்கு என்ன காரணம் நாங்கள் கட்சி நோக்கத்தோடு செயல்படவேண்டிய அவசியமில்லாததற்குக் காரணம், கட்சியை மேலும் பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றுததற்குக் காரணம், ஒரு பெரிய பலத்தை மக்கள் எங்களுக்கு அளித்திருக்கிருர்கள். இந்த ஆண்டு தமிழகச் சட்டசபையின் சரித்திரத்திலேயே 184 பேர்கள் கொண்ட ஒரு கட்சியை மக்கள் அமைத்துத் தந்திருக்கிருர்கள். ஏன் இதை மேலும் பலப்படுத்த வேண்டும்? என்ன அவசியம் எங்களுக்கு இருக்கிறது? அப்படி பலப்படுத்த வேண்டும் என்று நாங்கள் நினைத்தாலும், நினைக்காவிட்டாலும், தானகவே பலப்பட்டு வந்திருக்கிறது. எப்படி வளர்கிறது? நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இருக்கிருர்கள். என்மீது அன்பும் பற்றும் கொண்டவர்கள். அவர்களுக்கு வேண்டிய நேரத்தில் நல்ல கோரிக்கைகளை விடுக்கிருர்கள். நான் செய்கின்றேன். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் நகர்ந்து, என்மீது கொண்டிருக்கிற அன்பு, என்னுடைய கட்சியின் மீது அன்பாக மாறி, எங்களிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வந்து சேர்கின்ற தன்மை உண்டாகிறது.

**திரு. கே. ராஜாராம்:** இந்த ரகஸ்யம் உங்கள் இரண்டு பேருக்குள்தான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** இவ்வாறு ஏற்படுகின்றபோது, கட்சி நோக்கம் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லச் சொல்ல, "ஒன்றுமே வேண்டாம் உலகு ஆளுவான்". "வேண்டுங்கால் வேண்டாமை வேண்டும்" என்று சொன்னது போல நாங்கள் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னல்கூட,

நாங்கள் பலப்படவேண்டியதில்லை, இல்லை, என்று சொன்னாலும்கூட தானாகவே பலப்படுவதற்குக் காரணம் எங்களுக்குக் கட்சி நோக்கம் இல்லை. தியாகிகளுக்கு என்று நாங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம். காலையில் பேரவையில் கேட்டார்கள். காங்கிரஸ் கட்சித் தியாகிகளுக்கு 7,000 பேர்களுக்கு இன்றைக்கு 40 லட்சம் ரூபாய் கொடுத்துக்கொண்டு வருகிறீர்களே, ஏன் மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று. இப்படிக் கொடுப்பதால் என்ன ஆகிறது? நாங்கள் கட்சிப் பாகுபாடு இல்லாமல் செய்தாலும், கொஞ்சம் கொஞ்சமாக, அதை வாங்குகிற நண்பர்களுக்கு என்ன எண்ணம் உண்டாகிறது? நாங்கள் கட்சி வேறுபாடு காட்டுவதில்லை என்பதற்கு இதை எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கட்சியின் அரசு இன்றைக்கு பெரிய வெற்றியைத் தேடித்தந்திருக்கிறது. பங்களா தேசத்தில் பாகிஸ்தான் சரணாகதி அடைந்திருக்கிறது என்பதையெல்லாம் பார்க்கிறோம். அவர்களையெல்லாம் பாராட்டுகிறோம். முன்னால் ஒரு முறை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு நடந்தபோது, இவர்கள் ஆசி சொன்னார்கள். அப்படி ஆசீர்வாதத்தைச் சொன்னபோது, அவர்கள் சொன்னார்கள். என்னைப் பெற்றெடுத்த தந்தை உயிரோடு இல்லை. ஆனால் இந்தத் தந்தை திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் வாழ்த்தியபோது, என் தந்தையே வாழ்த்துவதைப் போல் இருக்கிறது என்று சொல்ல, இவர்கள் கண்ணிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் வந்தது. அவ்வளவு தூரம் நாங்கள் அன்போடு பழகுவதால் கட்சி வேறுபாடுகளையே மறந்து மாற்றுக் கட்சிக்காரர்களோடு பழகுவதால், அவர்கள் கேட்கிறவற்றைக் கட்சிப் பாகுபாடு இல்லாமல் செய்வதால், தானாகவே நட்பு வளர்கிறது. நாங்கள் கட்சி நோக்கத்தோடும் செய்வதுமில்லை, அது தேவையும் இல்லை என்பதை நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் மிக நன்றாகச் சொன்னார்கள். இப்பொழுது நடைபெற்றுக்கொண்டு வருவதைப் பார்த்து, மக்கள் முதலீடு செய்வதற்குப் பயப்படுகிறார்கள் என்ற அடிப்படையே அதிலேதான் இருக்கிறது. எப்படி ரெஜிஸ்டிரார் அறிவுரை செய்ய வேண்டுமென்றால், பின்னால் வந்த பிறகு நேர் வதைவிட வருமுன் காப்பது நல்லது என்று. ஒரு சங்கம் இருக்கிறது. அது கையிலே, ஏராளமாக லாபத்தைப் பெற்று அதே சமயத்தில் அதைப் பங்கிடு செய்ய முடியாமல் அல்லது விரும்பாமல் இருக்கிறது. அப்பொழுது அறிவுரை செய்ய முடியும். 6% அதிகமே இல்லை நாங்கள் இந்த மாதிரி டிவிடெண்ட் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம். 6% கொடுங்கள். அது முடியவில்லை



என்றால், 5% கொடுங்கள். அதுவும் முடியவில்லை என்றால், 4% ஆவது கொடுங்கள். பங்கு முதலீடு போட்டவர்களுக்கு அதுவும் இல்லையென்றால், அதுசரியில்லை நான் சொல்கிறேன். 26 ஆயிரம், 27 ஆயிரம் ரூபாய் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பாதித்திருக்கின்றன. அவைகளுக்கு இந்த மாமன்றத்தின் மூலமாகச் சொல்கிறேன். எந்த ஒரு கூட்டுறவுக் கழகமாவது 4%-க்குக் குறைவாக டிவிடெண்ட் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்குமானால், அது இருப்பதைவிட இல்லாதது மேல் என்ற அடிப்படையில் அதைச் செயல்பட வைத்துக்கொண்டிருக்கிறேன் எனது நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் அதை ஆமோதிப்பதைப் பார்த்து அவர்களும் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று கருதுகிறேன். மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மீது நம்பிக்கை ஏற்படுகிறது என்றால், முன்னால் இருந்ததைப்பற்றி மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. முந்தாநாள் காலை ஒரு உறுப்பினர், பேரவையில் சொல்லும்போது, கூட்டுறவுச் சங்கங்கள் என்று சொல்வதைவிட கோவாபரேடிவ் ராபர்ஸ் சொசைடி—கூட்டுறவுத் திருடர்கள் சங்கம் என்று சொல்லலாம் என்றார்கள். It is high time you changed the image in your mind உங்கள் மனதில் அப்படி இருந்திருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட சித்திரம் உங்கள் மனதில் இருக்குமானால், விரைவாக அழித்து விடுங்கள். கொடுக்கின்றோம் அதனாலே வீண் போய்விடும் என்ற எண்ணம் உங்களுக்குக் கொஞ்சம்கூட தேவையில்லை என்று அவர்களுக்கு வற்புறுத்துவோம் என்று சொல்கிறேன் அவர்களுக்குத் தெரிந்திருக்காது. நான் இந்த 4%ஐ ரிசர்வ் பாங்கியிடம் சொல்லி அவர்களும் ஒப்புக்கொண்டு 4 சத விகிதம் டிவிடென்டை குறைந்தபட்ச டிவிடெண்டாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறேன். இதற்குப் பிறகு, இதிலே அதிகமாக நண்பர் திரு. ஆறுமுகசாமி போன்றவர்களெல்லாம் முதலீடு செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.

நண்பர் திரு. மன்னை நாராயணசாமி அவர்களும் அவர்களுடைய அனுபவத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் கூட்டுறவு மசோதா விவாதத்திலே கலந்துகொண்ட அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

[Mr. hairman] [16th December 1971]

Clauses 2 to 7, Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE. HON. THIRU SI. PA. ADITANAR : Mr. Chairman, I move—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as passed by the Assembly, be passed."

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, நான் அதிகமாக ஒன்றும் பேச முன்வரவில்லை. அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து இரண்டொரு சந்தேகம் வந்தது. விளக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே 2% கல்வி நிதிக்காக ஒதுக்க வேண்டும், ஒரு சொசைடியின் லாபத்திலேயிருந்தது, என்று இருக்கிறது. அடுத்த படியாக, இப்பொழுது செய்திருக்கும் திருத்தத்தின்படி 5% பிரசாரத்திற்காக யூனியனுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது ஆகிறது. ஆக 7% அது போக இப்பொழுது 4, 5 பிரித்து கொடுக்க வேண்டும் என்று கருதுகிறீர்களா? அல்லது 4% பிரித்துக்கொடுத்து விட்ட பிறகு மிச்சம் இருப்பதில் யூனியனுக்கு 5 சத விகிதம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தா என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்த 2% என்பது எச்செலவும் போக நிகர லாபத்தில் கொடுப்பது. ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு 10,000 ரூபாய் வருமானம் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு சாதாரணமாக 1,000 ரூபாய் லாபம் வரமுடியும். அதிலே 2% சங்கத்திற்கு கொடுப்பது என்பது 20 ரூபாய் கொடுப்பது என்பது அதிகமாக இருக்காது. அதை யாரும் எடுத்துக்கொள்ளப் போவதில்லை. அது கூட்டுறவுத் துறைக்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும் மற்றும் புதிதாகத் துவக்குகின்ற சங்கங்களுக்கும் உதவுவதற்காகத்தான் போடுகிறோம். தனித் தனியாக ஒவ்வொரு சங்கமும் ரிசர்ச்சுக்காக என்று பணம் எடுத்து வைப்பதென்பது முடியாது. எடுத்துக்காட்டாக நான் சொல்ல வேண்டுமென்றால், நாம் புதிதாக தமிழகத்திலே கூட்டுறவுத் துறையிலே பேப்பர் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்காரின் ஆதரவும் பெருவாரியாக இருக்கிறது. புளிச்ச மாம் என்ற மரத்தை விவசாயிகள் உற்பத்தி செய்து அதன் மூலம் நான்காயிரம், ஐயாயிரம் ரூபாய் வருமானம் பெறப் பயன்படும் என்று, அதைக்கொண்டு



16th December 1971] [திரு. சி. பா. ஆதித்தனார்]

பேப்பர் தொழிற்சாலை பல மாவட்டத்திலேயும் கொண்டு வர வேண்டுமென்று திட்டம் இருக்கிறது. அதற்கு முன்னாலே முன்னோடியாக ஏதாவது தேவைப்படும் என்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் பண்ட் என்று தனியாக வைக்கிறோம். வேறு வியாபார நிறுவனங்களில் என்ன செய்கிறார்களென்றால், ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் என்பதற்கு தனியாகப் பணம் எடுத்து வைத்துக்கொள்கிறார்கள். அது மாதிரி கூட்டுறவுத் துறையிலே கிடையாது, சிறு சிறு சங்கங்களிலே சிறு சிறு பங்குதாரர்கள் பணம் போட்டிருப்பதால் இதை மொத்தமாக எடுத்து அதைக் கூட்டுறவுத் துறை தவிர வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது என்று விதிகள் செய்யப்படுகின்றன.

**திரு. கே. ராஜாராம் :** டிவிடெண்ட் கொடுப்பது அப்புறம் தான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முன்னால் 2 அல்லது 2,500 ரூபாய் உச்ச அளவு வைத்திருக்கிறோம். இப்போது 5 சத விகிதம் என்று இருக்கும்போது உச்ச அளவு ரூ. 2,500 ஆக இருக்கிறதா? அதை விட அதிகமாக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது ஒன்றுமில்லை.

MR. CHAIRMAN : The question is—

'That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as passed by the Assembly, be passed".

The motion was put and carried and the Bill was passed.

(2) THE TAMAL NADU AGRICULTURAL PRODUCE MARKEAS (AMENDMENT) BILL, 1971 )C.A. BILL NO. 53 OF 1971).

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாட்டில் வேளாண்மை விளைபொருள்களின் கொள்முதல் விற்பனை ஆகியவற்றை முன்னிலும் சிறந்த முறையில் முறைப்படுத்துவதற்காகவும் வேளாண்மை விளைபொருள்களை விற்பனை செய்வதற்கான அங்காடிகளை முறையாக நிறுவி நிர்வகிப்பதற்காகவும் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) கீழ் மாவட்டங்களில் அங்காடிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் [illegible]ரும் விற்பனைக் குழுவினுள் அவருக்கு வழங்கப்பட்ட

Printed as appendix III on page 697.

[திரு. அ. பெ. தாமலிங்கம்] [16th December 1971

உரிமத்தின் நிபந்தனைகளின் படியன்றி மற்றப்படி அறிவிக்கப்பட்ட வேளாண்மை விளைபொருள் ஒன்றை வாங்குவதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக அதனைச்சேமித்து வைக்கவோ எடை போடவோ அதனை அழுத்திச் சீர் படுத்தவோ அல்லது செயல் முறைக்கு உட்படுத்தவோ இடம் ஒன்றை அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் அமைக்கவுங்கூடாது நிறுவவும் கூடாது, மற்றும் அந்த இடத்தை மேற்சொன்னவற்றிற்காகப் பயன்படுத்தவோ, தொடர்ந்து பயன்படுத்தவோ அல்லது தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கவோ கூடாது. அங்காடி குழுவினால் நிறுவப்பட்ட அங்காடிகள் மூலம்தான் அறிவிக்கப்பட்ட வேளாண்மை விளைபொருள்கள் விற்கப்படவேண்டும் அல்லது வாங்கப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் விதித்துறை எதுவும் சட்டத்தில் இல்லை. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிக் சட்டம் உற்பத்தியாளர்களுக்குப் பயனுறும் வகையில் அமைய வேண்டுமானால், கொள்முதல் அல்லது விற்பனையைக் கட்டாயமாக்கும் விதித்துறை சட்டத்தில் அவசியம் இருக்கவேண்டுமென்று உற்பத்தியாளர்களுக்குப் பயனுறும் வகையில் அமைய வேண்டுமானால், கொள்முதல் அல்லது விற்பனையைக் கட்டாயமாக்கும் விதித்துறை சட்டத்தில் அவசியம் இருக்கவேண்டுமென்று உற்பத்தியாளர்களுக்குப் பயனுறும் குறித்து அறிவிக்கும் நாள் முதற்கொண்டு அறிக்கையிடப்பட்ட ஒரு பகுதிக்குள் உள்ள அங்காடிக்கு வெளியில் அறிக்கையிடப்பட்ட வேளாண்மை விளைபொருளை விற்பனை செய்வது அல்லது வாங்குவதைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. 1966-ம் ஆண்டு ஆந்திரப் பிரதேச வேளாண்மை விளைபொருள் கால்நடை அங்காடிகள் சட்டத்திலும் இத்தகைய விதித்துறை உள்ளது.

தலைவர் அவர்களே, இம்மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 53 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

* **திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவையின் முன் வைத்துள்ள இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா விவசாயிகள் தங்களுடைய வியாபாரப் பண்டங்களை விற்பதில் பேரம் செய்வதற்கு ஒரு பெரும் வசதியை அளிக்கிறது என்பது நான் இதை வரவேற்பதற்கான முதல் காரணமாகும். பல இடங்களில் இன்றைய தினம் விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப்பண்டங்களை விற்கும்போது நடைபெறுகின்ற வியாபார சூதாட்டங்களினால் தங்களுக்கு உரிய லாபத்தைப் பெற முடியாத நிலைமை இன்று இருந்து வருகிறது. சென்ற ஆண்டில் இந்தியா முழுவதுமே



16th December 1971] [திரு. எம். ஆறுமுகசாமி]

விவசாயப் பண்டங்கள். உணவு தானியங்கள் என்றும் இல்லாத அளவுக்கு உற்பத்தியாகியிருக்கின்றன. இருப்பினும் விவசாயிகளுடைய வருவாய் அரசாங்கம் காட்டுகிற புள்ளிவிவரப்படி பார்த்தால், மிகக் குறைந்த சதமே அதிகமாகியிருக்கிறது. அமெரிக்க நாட்டில் 1967-68-ல் உணவுப் பண்ட உற்பத்தி என்றுமே இல்லாத அளவுக்கு, அவர்கள் போட்ட இலக்குக்கு மேலாக உற்பத்தி செய்யப்பட்டும், அதன் மூலம் விவசாயிகளின் வருவாய் 10 சதவிகிதம் தான் உயர்ந்தது. மிகவும் முன்னேற்றகரமான அஃப்ளுயண்ட் சொசைடி (affluent society) என்று சொல்லப்படுகிற வளமான வாழ்க்கையைக் கொண்ட அந்தச் சமுதாயத்தில் கூட விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விலையைப் பெற முடியவில்லை. அப்படியிருக்கும்போது, நம்முடைய நாட்டில் இது எவ்வளவு தூரம் வேறுபாட்டில் இருக்குமென்று சொல்லத் தேவையில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் இந்த மசோதா ரொம்ப நாள் கழித்து வருகிறது என்று நினைக்கிறேன். இப்போதாவது இந்த மசோதா சட்டமாக்கப்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் சமர்ப்பிக்கும்போது தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட மார்க்கெட் காம்ப்ளக்ஸ் இந்த ராஜ்யத்தில் 5 இடங்களில் என்று சொல்லப்பட்டிருந்தது. நான் கூட ரொம்ப மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய ஊர் அதில் இருந்தது. திடீரென்று பார்த்தால், அந்த மார்க்கெட் காம்ப்ளெக்ஸ் வேறு ஊருக்கு நகர்ந்து விட்டது. என்ன காரணம் என்றால், இந்த ஊரிலுள்ள வியாபாரிகள் அதை நகர்த்தி அங்கே தள்ளிவிட்டார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. வெளியில் பேசப்பட்டது. நான் அதிகமாக அந்த இடத்திலே இருக்கிறேன் என்பதால் குறிப்பிடவில்லை. சென்ற முறை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்குப் போயிருந்த போது, என்னிடத்தில் சொன்னார்கள். பூதலூரிலிருந்து மாற்றி தஞ்சாவூருக்குக் கொடுத்திருக்கிறார்கள். எல்லா பூர்வாங்க வேலையும் முடிந்துவிட்டதாக கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். பூதலூர் அல்லது தஞ்சாவூர் எங்கே கட்டினாலும், என்னைப் பொறுத்த வரையில் ஒன்றுதான். சொந்த ஊர் என்பதற்காகப் பேசவில்லை. நான் அந்தத் தொகுதியிலிருந்து வரவில்லை, நான் அந்தத் தொகுதியின் நலனை மட்டும் பார்த்துக்கொள்பவனும் அல்ல. வியாபாரிகள் அதில் எவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். மூட்டைகள் கொண்டு வந்து போடவும், மாடுகளைக் கட்டவும் கொஞ்ச நேரம் இளைப்பாறவும் கோடவுன் போன்ற இடமாகப் பயன்படுத்துவதற்காக ஏற்பட்ட அந்த இடத்தைக் கூட தங்களுடைய வர்த்தகத்திற்கு இடையூறாகக் கூடும் என்று அந்தச் சின்ன ஊரில் உள்ளவர்கள் கருதுகிறார்கள் என்றால், எவ்வளவுதான் உற்பத்தி

அதிகரித்தாலும் அதனுடைய வருவாய் விவசாயிகளுக்கு எப்படிப் போய்ச் சேரும்? அவர்களுக்கு தக்க வருவாய் போய்ச் சேராவிட்டால், நாம் போடுகிற பல திட்டங்கள்—இயந்திரத் தொழிற்சாலைகள் எல்லாம்—விவசாயத்தை நம்பி யிருப்பவை எப்படி வளர முடியும்? தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது விவசாயம். எனவே விவசாயிகளுக்குப் பொருளாதாரத் திட்டங்களைப் போட்டு, பலவிதமாக அவர்களை ஊக்குவித்து, உற்பத்தியை அதிகப்படுத்தும் வேளையில் அந்தப் பொருள்களுக்கான வர்த்தக பேரத்தில் அவர்களது சக்தி குறையாமல் இருப்பதற்கு இந்த மசோதா உதவுகிறது என்பதால் இதை ஆதரிக்கிறேன். சில இடங்களை "ஏரியா ஆஃப் ஆபரேஷன்" என்று சொல்லும் பகுதிகளை அமைச்சர் அவர்கள் விரிவான முறையில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த மசோதாவை "இம்ப்ளிமெண்ட்" செய்யும்போது, கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களே ஓர் உழவர், உழவர்களுக்குள்ள கஷ்டங்கள் எல்லாம் நன்றாகப் புரிந்தவர். இதற்கு மேல் நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

6·00 * **திரு. ஆர். தர்மலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிக்க வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த வேளாண்மைத் துறை விளைபொருள் சட்டத் திருத்தத்தை ஆதரித்து, நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1959-லேயே அன்றைக்கிருந்த ஆட்சியாளர்கள் பரீட்சார்த்தமாக வட ஆற்காடு மாவட்டத்திலேயும், தென் ஆற்காடு மாவட்டத்திலேயும் இருக்கும் மார்க்கட் கமிட்டிக்கு வேளாண்மை விளைபொருட்கள் கொண்டு வரவேண்டுமென்று வேளாண்மை விளைபொருள் சட்டம் கொண்டு வந்தார்கள். அன்றைக்கிருந்த அரசை இடைத் தரகர்களாகிய சில வியாபாரிகள் அன்றைய தினம் அமைச்சரைச் சந்தித்து இது எங்களுக்குத் தீங்கானது. எங்களுக்கு இடைத் தரகு வராது. ஆகவே இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கையையும் விடுத்து, அப்படி நீங்கள் தடுத்து நிறுத்தவில்லை என்று சொன்னால், வருகிற தேர்தலிலே நாங்கள் உங்களை ஆதரிக்கமாட்டோம் என்று சொல்லி அவர்களைப் பயமுறுத்தி இந்தச் சட்டத்தைக் கொண்டுவராமல் இருக்க வேண்டும் என்றார்கள். அப்படிக்கொண்டு வருவதானால் நீங்கள் மாநில் பூராவுக்கும் கொண்டு வாருங்கள். ஒரு மாவட்டத்திற்கு மட்டும் கொண்டுவருவது சரியில்லை என்று அன்றைக்கு இடைத் தரகர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அன்றைய அரசு இருந்து இடைக்காலத் தடை உத்தரவு போட்டு, அதை அப்படியே நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பிறகு இதைக் கொண்டுவரவில்லை. இதைச் சொல்லுகின்ற நேரத்திலே நேற்றைய தினம் சட்டப் பேரவையிலே பேசிய மாண்புமிக்க





உறுப்பினர்கள் பலர் இதனால் வியாபாரிகளுக்குத் தீங்கு வருகிறது என்று கூறினார்கள். இதனால் வியாபாரிகளுக்குத் தீங்கு வரவில்லை. ஆனால் தீங்கு வருவது விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையிலே உள்ள இடைத் தரகர்களுக்குத் தான். விவசாயி கஷ்டப்பட்டு விளைபொருளை உற்பத்தி செய்கிறான், அவன் பாடுபட்ட பொருளைக் கொண்டுவந்து அவனுக்கு இஷ்டப்பட்ட சமயத்திலே அவனுக்குத் தகுந்த விலை வேண்டுமென்று அந்த விவசாயி கருதினான். ஆனால் இந்த இடைத்தரகர்கள் இந்த விலைக்கு மேல் உன் பொருள் போகாது. நாளைக்கு விலை குறைந்து விடும், இந்த விலைக்கே விற்றுவிடு என்று அவர்களைக் கட்டாயப் படுத்தி, அவர்களுக்கு என்று ஒரு விலையும், அதே நேரத்திலே வியாபாரிகளுக்கு இன்னும் ஒரு விலை அதிகமாக வைத்து விற்கிறார்கள். அது மட்டுமில்லை. விவசாயிகள் கொண்டு வருகின்ற பொருள்களுக்கு ரூபாய்க்கு 1 பைசா, 2 பைசா என்று விவசாயி களிடம் தரகு வாங்குகிறார்கள். அதைப் போலவே அந்தப் பொருட்களை வாங்குகின்ற வியாபாரிகளிடமிருந்து ரூபாய்க்கு 1 பைசா என்று இடைத்தரகு வாங்குகிறார்கள். இப்படி இரண்டு பக்கமும் வாங்கிக்கொண்டு அவர்கள் பணம் சம்பாதிக்கிறார்கள். ஆனால், இந்தச் சட்டம் விவசாயி தான் கட்டிய பொருளைக் கொண்டுவந்து, தான் இந்த விலைக்கு விற்க வேண்டுமென்றால், இன்றைக்கு விற்கலாம். இது குறைந்தவிலை, எனவே தேவை யில்லை என்று கருதி, ஒருவாரம் கழித்து விற்றால், அதிகமாகப் பணம் வரும் என்று நினைத்தால், ஒரு வாரத்திற்கு வைத்துவிட்டுப் போகலாம். அதற்கெல்லாம் இந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது. ஆனால், இன்றைக்கு இடைத்தரகர்களை அது பாதிக்கிறது என்ற காரணத்தினால், பல உறுப்பினர்கள் சட்டப் பேரவையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, வியாபாரிகள் எல்லாம் வியாபாரத்திலே ஈடுபடாமல் போய்விடுவார்கள் என்கிறார்கள். இந்த அவையிலே நான் கூறிக்கொள்வேன், வியாபாரிகள் யாருக்கும் இதனால் பாதகம் கிடையாது. உற்பத்தி ஒரு இடத்தில் இருந்தாலும், விவசாயிகள் கொண்டுவரும் விளைபொருள் 1 மூட்டையாக இருந்தாலும், 10 மூட்டையாக இருந்தாலும், அவற்றைக் கொண்டு வந்து மார்க்கட் கமிட்டியிலே வைக்கிறார்கள். அதை வியாபாரிகள் வந்து பார்க்கிறார்கள். அதை எந்த விலைக்கு வாங்கினால், தங்களுக்குக் கட்டுப்படியாகுமோ, அதற்கு ரகசிய முறைப்படி அவர்கள் குறிப்பு எழுதி, ஒரு பெட்டியிலே போடுகிறார்கள். அந்த விலைகளை வைத்துக்கொண்டு அங்கே இருக்கின்ற சூபரின்டெண்ட் அதிகமான விலையைப் படிக்கிறார்கள். அதாவது அதை விவசாயி களுக்கு ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கு சம்மதம் இல்லையென்றால், 5 நிமிடத்திலே அப்படிச் சொல்லி விடுங்கள் என்றுதான் சட்டம் இருக்கிறது. குறைந்த விலையாக இருந்தால், அந்த விவசாயிகள் உடனே சொல்லிவிடுகிறார்கள். இந்த விலைக்கு விற்க நான் இஷ்டப்படவில்லை. நான் இன்னும் ஒரு

வாரம் அல்லது 10 நாள் வரை பொறுத்திருக்கிறேன் என்கிறார்கள். என்னுடைய சரக்கை எடுத்து அடுக்கி வையுங்கள் என்கிறார்கள். அதன்படியே அந்த அதிகாரி அடுக்கிவைத்துவிட்டு 10 நாளைக்கு விவசாயியிடமிருந்து ஒரு பைசா கூட வாங்காமல் இனமாகப் பொருளை அடுக்கி வைக்கிறார். இந்த விவசாயி நாளைக்கு விலை நன்றாக வரும் என்று கருதி எடுத்து வையுங்கள் என்றால், வைக்கிறார்கள். இப்படிப்பட்டால் விற்று, பணத்தை அன்றே வாங்கிக்கொண்டு போகிறார்கள். எடையும் 80 கிலோ, 75 கிலோ என்று சுத்தமான எடையும், சுத்தமான விலையும், அன்றே பணமும் அவனுக்குக் கிடைக்கிறது. இதைப் பார்த்து சிலர் தங்களுக்கு வரும் இலாபம் போய்விட்டதே என்பதால் தான், இது கூடாது, இந்தச் சட்டம் வேண்டாமென்று சொல்லி வருகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், இந்தச் சட்டத்தின்படி மாவட்டத்திற்கு ஒரு மார்க்கட் கமிட்டி இருக்கிறது. அந்த மார்க்கட் கமிட்டியிலே 18 பேர் இருக்கிறார்கள். விவசாயிகளின் பிரதிநிதிகளாக 9 பேரும், வியாபாரிகளின் பிரதிநிதிகளாக 4 பேரும், மற்ற 4 பேர் அரசால் நியமிக்கப் படுகிறார்கள் ஒருவர் அதிகாரி வேளாண்மை நிரந்தர அங்கத்தினர். இந்தக் கமிட்டியிலே வியாபாரிகளுக்குக் கிடைக்கிறது என்றால், அங்கே இருக்கிற அவர்களுடைய 4 பிரதிநிதிகள் சும்மா இருப்பதில்லை. அதே நோக்கிலே விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காக 9 பேரை அங்கே நியமித்திருக் கிறார்கள். விவசாயி ஒருவர் தான் அங்கே தலைவராக வரக் கூடும்; வியாபாரி வரக் கூடாது. அப்படி வந்தால், அந்த மார்க்கட் கமிட்டி சரியாக நடக்காது என்று, இன்றைக்கில்லை காங்கிரஸ் ஆட்சியின் போதே சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை இன்றைக்கு விரிவாக்கி, விவசாயப் பொருள்களை முதலிலே மார்க்கட் கமிட்டியிலே கொண்டுவந்து தான் விற்க வேண்டும். இதை வியாபாரி வாங்கிக்கொண்டுபோய், எங்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்றிருக்கிறது. விவசாயி தான் பாடுபட்டு விளைவித்த பொருளைக் கொண்டுவந்து, மார்க்கட் கமிட்டியிலே வைத்து, இனமாக எல்லாச் சலுகைகளையும் பெற்று இதை விற்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தச் சட்டம். ஆனால், தனிப்பட்ட இடைத் தரகர்கள் விவசாயிகளிடம் பணம் வாங்குகிறார்கள். மார்க்கட் கமிட்டி ஒரு பைசா கூட அவர்களிடம் வாங்குவதில்லை. ஆனால் வியாபாரிகளிடம் இடைத் தரகர்கள் ரூபாய்க்கு ஒரு பைசா, இரண்டு பைசா என்று வாங்குகிறார்கள். 100 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களுக்கு 2 ரூபாய் வியாபாரியிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் 2 ரூபாயும் இந்த இடைத் தரகர்கள் வாங்குகிறார்கள். ஆனால் மார்க்கட் கமிட்டியோ விவசாயிகளிடம் வாங்காமல் எடை போடவும், இனமாக தண்ணி கொடுக்கவும், மாடு கட்ட இடம் கொடுப்பதற்காகவும், வியாபாரிகளுக்கு தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பதற்காகவும்



100 ரூபாய்ப் பொருளுக்கு 25 பைசா குறைந்தது, அதிகமாக வாங்குவது 45 பைசா தான்—அதை வாங்குவது ஒருவரிடம் தான்; அதையும் வியாபாரியிடம் தான். எனவே, வியாபாரிகள் இதை வரவேற்கிறார்கள். பெரிய, பெரிய வியாபாரிகள் எல்லாம் இதை வரவேற்கிறார்கள். ஆனால், இடையிலே இந்த இடைத் தரகர்கள் தான் தீங்கானது என்று பேசி வருகிறார்கள். ஆகையால் இந்தச் சட்டத்தை இவ்வளவு சிக்கிரத்திலே கொண்டு வந்ததற்காக நான் பெருமைப்படுவதோடு, அதை வரவேற்று அமைகிறேன்.

* **திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. தர்மலிங்கம் அவர்கள் வட ஆற்காடு மார்க்கட் கமிட்டியின் தலைவர். இந்த மன்றத்திலே அவர் தன்னுடைய அனுபவத்தையெல்லாம் எடுத்துச் சொன்னார். நான் ராமநாதபுரம் மார்க்கட் கமிட்டியின் தலைவர். என்னுடைய அனுபவம் இந்த மாதிரி விளைபொருட்களை மார்க்கட் கமிட்டிக்குக் கொண்டுவந்து விற்க வேண்டும் என்று சொல்லும்பொழுது விருதுநகரில் இருக்கும் வியாபாரிகள் கட்டுப்பாடாக மார்க்கட் கமிட்டிக்கு எந்தவிதமான சரக்கும் வராத நிலைமையிலே காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நமது விவசாய அமைச்சர் அவர்கள் சமீபத்திலே விருதுநகருக்கு வந்திருந்தபோது கூட, இதுபற்றி நான் சொன்னேன். விருதுநகர், பாளையம் போன்ற இடங்களிலே 5, 6 இலட்சம் ரூபாய் செலவு செய்து இந்த விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் கூட்டுறவு மார்க்கட்டிங் பெடரேஷன் தலைவராக இருப்பதால், அவருக்கு வேண்டிய மிளகாய் வத்தல் வாங்க வேண்டும் என்பதால், அங்கே ஏதோ வேலை நடக்கிறது. எங்கள் வட்டாரத்திலே இருக்கின்ற சூழ்நிலையிலே இப்படிப்பட்ட மார்க்கட் கமிட்டி இருப்பதாலே இலாபம் இல்லை என்றுதான் நினைக்கிறேன். இந்த இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டும் என்று சொல்வது நமது சோஷலிச சமுதாயத்தின் எண்ணத்தின் அடிப்படையில். அவர்கள் 100 ரூபாய்க்குச் சாதாரணமாகப் பருத்தி வியாபாரம் செய்வதில், மிளகாய் வத்தல் வியாபாரம் செய்வதில் எவ்வளவு லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பது நண்பர் திரு. தங்கபாண்டியன் அவர்களுக்குத் தெரியும். இதையெல்லாம் ஒழிக்க, வியாபாரிகளுக்கு நஷ்டமில்லாதபடி, அவர்கள் சேமித்து வைத்துக் கொண்டு கொள்ளை லாபம் சம்பாதிக்க இடமில்லாத வகையில் உள்ள இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன். இந்த மார்க்கெட்டிங் கமிட்டி நன்றாக வேலை செய்ய வேண்டுமானால், இந்தத் திருத்தம் வேண்டும். முக்கியமாக எங்கள் ஜில்லாவிற்கு அவசியம் என்று உணர்கிறேன். அதே சமயத்தில் சரக்கைக் கொண்டுவந்து ஒரு வாரம் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் பணமும் கொடுக்க வேண்டும். ஒரு கமிஷன் கடையில் வைத்தவுடனே பணமும் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 80 சதவீதம் கொடுக்கிறோம்.

6·10 பி.ப. **திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** ஏற்கெனவே விவசாயம் நடக்கிற காலத்தில் முன் பணம் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். இதெல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அந்தக் கூட்டத்திற்கு நான் போகவில்லை. ஒரு விவசாயியைக் கொண்டு கூட பிரசங்கம் செய்யச் சொன்னார்கள். எங்களுக்கு வியாபாரிகள் இருக்கிறதனால், பிரயோசனமாக இருக்கிறது என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அவர்களும் நன்றாக பதில் சொன்னார்கள் என்று கேள்விப்பட்டேன். நான் விவசாயியாக இருந்திருக்கிறேன். நான் பட்ட கஷ்டம், எவ்வளவு தூரம் வட்டி கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால், ஆச்சரியமாக இருக்கும் என்று. அந்தக் கூட்டத்தில் அமைச்சர் கூறியிருக்கின்றார். விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும்படியான சூழ்நிலை ஏற்படவேண்டும். மற்றபடி ஸ்பெகுலேஷன் மார்க்கெட், அதாவது வியாபாரிகள் வாங்கி எந்த விலைக்கு வேண்டுமானாலும், விற்றுக்கொண்டிருப்பதை இந்தச் சட்டம் ஆட்சேபணை செய்யவில்லை. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக நன்றி சொல்கிறேன். வியாபாரிகளுக்கு என் பேரில் கூட கோபம், செட்டியார் இதை ஆதரிக்கிறார்களேயென்று. என் பையன் கூட கமிஷன் கடை வைத்திருக்கிறான். அவனுக்கும் பாதகம் தான். நான் மார்க்கெட்டிங் கமிட்டித் தலைவராக, விவசாயப் பிரதிநிதியாக இருக்கிற காரணத்தினால், விவசாயிகளின் நன்மை பெரியதே யொழிய, இந்த 4 பேராகவுள்ள வியாபாரிகளின் நன்மையைப் பார்த்தால், பெரும்பான்மையான மக்களுக்கு எந்தக் காரியம் செய்யப்படுகிறதோ, அதற்கு ஒத்துப்போகவில்லையென்றால், அழிக்கப்பட்டு விடுவோம் என்ற அடிப்படையிலே, இந்த மசோதாவை நான் ஆதரித்து இந்த மசோதா நிறைவேறி விவசாய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டு இதை ஆதரிக்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும்.

* **திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, இந்த மசோதாவை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இத்தகைய மசோதா எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும். மார்க்கெட் கமிட்டிகள் அமைக்கப்பட்டு பல வருஷங்கள் ஆனாலும் கூட, அவை சரிவர எந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்டனவோ அதன்படி நடத்தப்பட்டு அதன் பூரண பலனை விவசாயிகள் அனுபவிக்கவில்லை. அவர்கள் அனுபவிக்கும்படியாகச் செய்வதற்கு இந்த அரசு ஒவ்வொரு மார்க்கெட்டினுடைய ஏரியாவிலும் என்ன விளைபொருளை எந்த ஏரியாவுக்குள் கொண்டுபோய் விற்க





வேண்டும், வாங்க வேண்டுமென்று கெஜட் மூலம் பிரசுரம் செய்கிறார்களோ, அதற்குப் பின்னால் இந்த விளைபொருளை விற்கவும், வாங்கவும் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதனால் கமிட்டிகளுக்குப் பெரும் பொறுப்பு ஏற்படுகிறது. வியாபாரம் பரந்த அளவில், சிறிய கிராமம் முதல் இந்த வியாபாரங்களில் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகர், ராஜபாளையம் ஆகிய இரண்டு இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தாலும் கூட, பல்வேறு இடங்களிலும் அதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கோ ஏற்பாடு செய்வதற்கோ அரசு ஏற்பாடு செய்வது மிக மிக முக்கியம். இல்லாவிட்டால், சிறிய விவசாயிகளுக்குப் பாரமாகி விடும். ½ ஏக்கர், 1 ஏக்கர், வைத்திருக்கிறவர்கள் 30 மைல், 40 மைல் தூரத்திற்கு விளை பொருள்களைக் கொண்டு செல்ல வேண்டுமானால், வண்டிச்சத்தம் என்னாகும்? ஆட்டில் பாதி ஓனாய் என்கிற மாதிரி ஆகிவிடும். அண்மையிலுள்ள இடங்களில் மார்க்கெட்டிங் கமிட்டி யார்டுகளை ஏற்பாடு செய்யலாம். சேலம் ஜில்லாவில் நல்ல முறையில் இந்த மார்க்கெட் கமிட்டி யார்டுகளைக் கிராமப்புறங்களில் ஏற்படுத்தி மணிலாக் கொட்டைகளை விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அளவில் விரிவான ஏற்பாடுகளைச் செய்தாலொழிய, இந்த நோக்கம் நிறைவேறாது என்று சொல்லிக்கொள்கிறேன். மைசூர் மாநிலம் சம்பந்தப்பட்ட மட்டில் மார்க்கெட் கமிட்டிகளுடைய பணிகளை, பஞ்சாயத்துக்களின் உதவி கொண்டு நிறைவேற்றுவதாக நான் கேள்விப்பட்டேன். சரியான தகவலா என்பது எனக்குத் தெரியாது. பஞ்சாயத்து ஏரியாவிலே அந்த மார்க்கெட் கமிட்டி அந்தப் பணியை அந்தந்தப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இப்படிப் பஞ்சாயத்துக்கள் கமிட்டிகளுக்கு ஒத்துழைப்பு கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது எவ்வளவு சரியென்று அரசு கவனிக்க வேண்டும். கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டிகளும் நம் மாநிலத்தில் பல இடங்களில் இருக்கின்றன. ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டி தவிர, மற்றதெல்லாம் அரசு நினைத்தால் நடக்கும். இல்லாவிட்டால் நடக்காது. உரவகைகளை விநியோகிக்க வேண்டுமென்று சொன்னால், வாங்க வேண்டும், விநியோகிக்க வேண்டும் என்றால், இப்படி நட்டப்பட்டான பொருள்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். மற்ற சந்தர்ப்பத்தில் அவைகளுக்குப் பணியில்லை. இந்தக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டிகளையும் சாதகமாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். கூட்டுறவு கிராமச் சங்கங்களோ வேறு சங்கங்களோ கிராமம் கிராமமாக இருக்கின்றன. இந்தச் சங்கங்களைப் பயன்படுத்திக் கொண்டு மார்க்கெட் கமிட்டி பொருள்களை விற்றுக் கொடுப்பது என்ற பணியைச் சரிவரச் செய்வதற்கு, அவைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு

விதி முறைகளை அமைத்துக் கொள்வது நல்லது. அதற்குப் பணம் கொடுக்க வேண்டும். கடன் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். வியாபாரிகள், விவசாயிகள் பொருள்களைக் கொண்டு வந்து வைத்தால் 80 சதவிகிதம் 70 சதவிகிதம் கொடுக்கிறார்கள். அப்படி விவசாயிகள் பொருள்களைக் கொண்டு வந்தால், பக்கத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு மார்கெட்டிங் சொசைட்டிகள் மூலமாக இவர்களுக்கு சீட்டுக் கொடுத்தால், பணம் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்ய முடியும். இதைக் கூட்டுறவு முறையிலும் இணைத்து அந்த வகையில் செயல்பட முடியும் என்று கருதுகிறேன். அந்த வகையில் பார்க்கிறபோது, மிளகாய் வத்தலுக்கு 100-க்கு 3 ரூபாய் கமிஷன் வருகிறது என்றால் அந்தக் கமிஷனை இந்த மாதிரியாக இடையில் விற்றிருப்பவர்கள் அடைகிறார்கள். இந்த மாதிரி விற்றிருப்பவர்கள் ஒரு டெலிஃபோனை வைத்துக்கொண்டு எவ்வளவோ சம்பாதிக்க முடிகிறது. இந்த இடைத் தரகர்கள் இல்லையானால், உண்மையில் வாங்கி விற்கக் கூடிய வியாபாரிகளுக்கும் இந்தக் கமிட்டிக்கும் தொடர்பு வந்து, இடைத் தரகர்களிடத்திலே இந்த உழைப்பின் பயன், இந்தப் பணம் சேராமல், அது உழைப்பவர்களுக்குப் போய்ச்சேரும் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பலன் அவர்களுக்குப் போய்ச்சேரும் வகையில் ஆலோசனை செய்து இன்னும் கூட இந்த விற்பனைக் கமிட்டி நல்ல வகையில் செயல்படுவதற்கு ஒரு நல்ல வியாபார விவசாய அனுபவம் உள்ள, வியாபாரத்தில் பழக்கம், அனுபவம் இருக்கிறவர்களையெல்லாம் வைத்து, ஒரு கமிட்டி அமைத்து, அதன் ஆலோசனைகளைக் கலந்து அறிந்து என்ன குறைபாடுகளுக்குச் சட்டம் நிறைவு செய்யவேண்டுமோ அந்த ஏற்பாடுகளைச் செய்வது அவசியம் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மேலவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை அனைவரும் வரவேற்பதிலிருந்து இது நாள் வரையில் கஷ்டப்பட்ட விவசாயிகளுடைய நிலைமை நிச்சயமாக மாற்றம் அடையும் என்ற நம்பிக்கையோடு ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதாவைப்பற்றிப் பேசிய அங்கத்தினர்களே மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் பல்வேறு இடங்களில் இதற்குப் பெரிய எதிர்ப்புகள் இல்லாவிட்டாலும், நீண்ட நெடுங்காலமாக இதிலே ஈடுபாடு கொண்ட வியாபாரப் பெருமக்களும் அவர்களிடத்திலே பணியாற்றுபவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற கருத்துக்களை எனக்கு மனுக்கள் மூலமாகவும் நேரிடையாகவும் தெரிவித்தார்கள். அவர்களிடமெல்லாம் நான் தெரிவித்தது, இது நாள் வரையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாமலிருந்த காரணத்தினால்தான், வியாபாரிகள் என்றுமே கமிஷன்



வியாபாரிகள், இடைத் தரகர்கள் என்ற தவறான கருத்தும், அதைப் போலவே விவசாயிகள் என்றுமே ஏமாளிகள் என்ற எண்ணமும் இருந்து வந்திருக்கின்றன. அவற்றை மாற்றி இருவருக்கும் ஒரு நல்ல நேச மனப்பான்மையை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கட்டாயமாக அமுலாக்கப்படுகிறது என்பதை அவர்களிடத்தில் நான் எடுத்துச் சொன்னேன். ஒரு சிலர் வேறு பல காரணங்களைச் சொன்னார்கள். அதிலே இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிற பல்வேறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். நான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று ஆங்காங்கே உள்ளவர்களின் கருத்துக்களைக் கேட்டு வந்தேன். 6-20 p.m.
ஆங்காங்கே அவர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளித்தும் வந்திருக்கிறேன். இந்தச் சட்டம் இப்போது கொண்டு வரப்பட்டதல்ல. 1933-ம் ஆண்டிலேயே இந்தச் சட்டம் முதன் முதலில் கொண்டுவரப்பட்டது. அது பரிட்சார்த்தமாக கோவை மாவட்டத்தில் திருப்பூரில் பருத்திக்கும், தென் ஆற்காட்டில் நிலக்கடலைக்கும், ஆந்திராவில் விஜயவாடாவில், புகையிலைக்கும் ஆக மூன்று இடங்களில் பார்க்கப்பட்டு, அது நல்ல முறையில் பயன்தருகிறது என்று பார்த்த பிறகுதான், தமிழகத்தில் 1957-ம் ஆண்டு மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழு தமிழகத்தில் உள்ள வியாபாரிகள், விவசாயிகள் ஆகியோருடைய கருத்துக்களை அறிந்து, நிச்சயமாக, கட்டாயமாக இந்தச் சட்டம் இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தை அப்போதே பரிந்துரைத்திருக்கின்றது. அதற்குப் பிறகு 1959-ம் ஆண்டு இது சட்ட வடிவமாகக் கொண்டுவரப்பட்டு, இடைக் காலத்திலே நடக்கப்பட்டு வந்தது. இன்றைய தினம் இது நிறைவேற்றப்பட இருக்கிற நேரத்திலே தங்களுடைய எதிர்ப்புகளையெல்லாம் வியாபாரிகள் சொன்னார்கள். ஆனால், இந்தச் சட்டத்தின் மூலமாக வியாபாரிகளுக்கு ஒரு பெரிய லாபம் இருக்கின்றது. ஏதோ வியாபாரிகள் என்று சொல்பவர்களெல்லாம், இடைத் தரகர்கள், தரகர்கள், எல்லாம் ஏதோ திருடர்களைப்போல் மோசம் செய்பவர்கள் என்றெல்லாம் ஒரு எண்ணம் இருந்து வந்தது. அது மாறுவதற்கு இந்தச் சட்டத்திலே இப்போது இடமிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. விற்பனை வரி அதிகாரிகள், வியாபாரிகள் என்பவர்கள் எல்லாம் கள்ளக் கணக்குகளை எழுதுபவர்கள், அவைகளைப் பூஜை அறைகளில் ஒளித்து வைத்திருப்பவர்கள், என்ற பழி அவர்கள் மீது சுமத்தப்பட்டு வந்தது. அந்தப் பழியும் இந்தச் சட்டத்தினால் துடைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக இந்த ஒழுங்கு முறை

விற்பனைக் கூடத்திலே அவர்கள் கொள்முதல் செய்வார்களேயானால், வியாபாரிகள் கொள்முதல் செய்யும்போது, அந்தச் சரக்குகளுக்கு வரி கொடுக்க வேண்டியதில்லை. அவற்றை அவர்கள் விற்கின்ற போதுதான் வரி கொடுக்க வேண்டும். அவர்கள் எத்தனை மூட்டை கொள்முதல் செய்கிறார்கள் என்பதற்கு விற்பனைக் கூடத்திலே கணக்கு இருக்கிறது. அவர்கள் 500 மூட்டை கொள்முதல் செய்கிறார்களென்றால், இந்த 500 மூட்டைகளை வெளியே விற்கிறார்கள். தவறான கணக்குகளை எழுதுகிறார்கள். 500 மூட்டை வாங்கி 300 மூட்டை விற்கிறார்கள் என்ற தவறான எண்ணம் அவர்களுக்கு வராது. ஆகவே, அவர்களுக்கு இதிலே நல்ல லாபம் இருக்கிறதென்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட அளவில், மதிப்பிற்குரிய நண்பர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னதைப் போல், இன்னின்ன பொருள்கள் இன்னின்ன சந்தைகளில் விற்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்துகிறோம். அதைப் போல இந்தச் சந்தை இப்போது நிறுவப்பட்டாலும், இதனுடைய முக்கிய நோக்கங்களை வியாபாரிகளிடத்திலேயும் விவசாயிகளிடத்திலேயும் எடுத்துச் சொல்லி, இதனாலே இன்னின்ன லாபங்கள் இருக்கின்றன, வெளியிலே விற்பதாலே கஷ்டங்கள், நஷ்டங்கள் இவ்வளவு இருக்கின்றன, ஆகையினாலே இங்கே வந்து விற்பதாலே வாங்குவதாலே லாபமிருக்கிறது என்ற பிரசாரத்தையும் செய்வதற்கு இதிலே வழி வகை செய்திருக்கிறோம்.

அதைப் போலவே, விவசாயிகளும் தாங்கள் விளைவித்த பொருள்களை எல்லாம் கொண்டுவந்து ஒரு இடத்திலே விற்பதற்கும் இதிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சரியான எடை போடுவதற்கும், அதைப் போலவே சரியான சரக்குகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கும் வசதி செய்யப்படுகிறது. கொண்டு வருகிற சரக்குகளை அங்கே காய வைத்து சுத்தப்படுத்துவதற்கு களங்கூட அமைக்கப்படுகின்றன. விவசாயிகள் தங்கள் மாடுகளைக் கட்டுவதற்கும் கொட்டகை போட வேண்டுமென்று அங்கே இருக்கிற தலைவர்களுக்கு இப்பொழுது சொல்லப்படுகிறது. அதைப் போலவே இன்னும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விவசாயிகளுக்கு போதும் சௌகரியம் செய்து கொடுக்கப்படுகிறது.

இன்னும் ஒன்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள். புதூரிலே நிறுவப்பட வேண்டிய விற்பனைக் கூடம் வியாபாரிகளின் யோசனையின் பேரில் மாற்றப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் அப்படி ஒன்றுமில்லை. இப்பொழுது வல்லத்திலே, தஞ்சாவூரிலே ஒரத்தநாடு விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. எந்தெந்தப் பொருள்கள் எங்கெங்கே விளைகின்றன என்பதை உத்தேசித்துத்தான் அந்தந்தப்





பொருள்கள் அந்தந்தப் பகுதிக்கேற்றவாறு இணைக்கப்படுகின்றன. இப்பொழுது விருதுநகரிலே நான் நேரிலேயே பார்த்தேன். நமது திரு. ஜெயராம செட்டியார் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு விற்பனைக் கூடத்திற்குத் தலைவர். பெரிய, அழகான கட்டிடத்தைக் கட்டிவைத்திருக்கிறார்கள். அதற்குக் கீழ்ப் புறத்திலேயே இரண்டு பேட்டைகள் இருக்கின்றன. அதையும் பார்த்தேன். அங்கேயும், கடலைக் காய், பருத்தி முதலியவைகளெல்லாம் இருந்தன. நமது மதிப்பிற்குரிய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள், அதைக் கொஞ்சம் அதிகமாகச் சீர்படுத்த வேண்டும், அதிலே அதிகமாக அக்கறை செலுத்த வேண்டுமென்று. என்ன காரணத்தாலேயோ, அது கட்டாயமாக இல்லாத காரணத்தாலோ என்னவோ ஏதோ மார்க்கெட் கமிட்டியாக விருதுநகரிலே இருக்கிறதே தவிர, ஒரு அழகான கட்டிடம் இருக்கிறதே தவிர, அங்கே விவசாயிகள் போவதை நான் பார்க்கவில்லை. அதே நேரத்தில் கீழ்ப்புறத்திலே இருக்கிற இரண்டு பேட்டைகளைப் பார்த்தபோது, கடல்போல் பருத்திகளெல்லாம் இருந்தன. சர்க்காரைக்கூட தோற்கடிக்கும் திட்டமாக இருக்கும்போல் இது இருக்கிறதே என்றேன். அவர்களெல்லாம் என்னை அழைத்து வரவேற்புக் கூட கொடுத்தார்கள். அதிலே அவர்கள் பேசினார்கள். வியாபாரிகள் சார்பிலே பேசினார்கள். விவசாயி என்று ஒருவரை அழைத்து வந்து பேசச் செய்தார்கள். அவர் பேச்சிலேயிருந்து அவர் விவசாயி அல்ல என்று தெரிந்துகொண்டு விவசாயிகளைப் பற்றி எனக்குத் தெரியும். நீங்கள் விவசாயிகளுக்குச் சாதகமாக இல்லை என்றேன். அவர் ஒரு சின்ன தரகர் என்று பிறகு குறிப்பிட்டார்கள். அங்கே அவர்கள், “ அந்த மார்க்கெட்டின் மூலமாக நாங்கள் பல பள்ளிக்கூடங்கள், பல சமய ஸ்தாபனங்கள் எல்லாம் நடத்துகிறோம். அவைகளெல்லாம் பாதிக்கப்படும் ”, என்றார்கள். நான் நிச்சயமாக அவை பாதிக்கப்படமாட்டாது என்று உறுதி சொன்னேன். அவர்கள் அந்தச் சரக்குகளை எப்படிக் கொள்முதல் செய்கிறார்கள், எப்படி விற்பனை செய்கிறார்கள் என்பதையும் விசாரித்துப்பார்த்தேன். அவர்கள் கொள்முதல் செய்கின்றபோது, இன்னின்ன நிறுவனங்களுக்கு இரண்டு இரண்டு காசு, இன்னின்ன காரியங்களுக்கு ஒரு காசு, ஏதோ தம்பிடிக்குத் தம்பிடி வட்டி என்று அந்தக் காலத்திலே சொல்வார்களே. அப்படி காசு காசு என்றார்கள். அதைப் போல விற்பவர்களிடத்திலேயும் மாமூலாக உண்டியலுக்கு இப்படிப்போட வேண்டும். அதிலே தர்ம ஸ்தாபனங்கள் நடத்துகிறோம் என்றார்கள். நான் அவர்களிடத்திலே, “ உங்களுடைய முதலை நீங்கள் இதற்குப் போட வேண்டாம். லட்சக் கணக்கான ரூபாய் முதல் போட்டிருக்கிறோம் என்கிறீர்கள். நீங்கள் இதை வணிகத் துறைக்கு மட்டுமல்லாமல் தொழில் துறைக்கும் பயன்படுத்துங்கள் ” என்று சொன்னேன். “ வணிகத் துறை மூலமாக விவசாயிகளுக்கு நன்மை செய்ய இந்த அரசு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [16th December 1971

பல முயற்சிகள் எடுத்துக்கொள்கிறது, எனவே விவசாயிகளை அரசு பார்த்துக்கொள்ளும். உங்களுடைய மூலதனமான லட்சக் கணக்கான ரூபாயை வேறு பல தொழில் வளம் பெருக பயன்படுத்துங்கள்" என்றேன். அதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த மார்க்கெட்டிங் சட்டம் கட்டாயமாக வரவில்லை என்றால், நிச்சயமாக ஆங்காங்கே மார்க்கெட் கமிட்டிகள் சரியான முறையிலே இயங்காது.

இன்னும் ஒன்றையும் பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். இதைச் சிறு சிறு இடங்களிலே நிறுவ வேண்டுமென்றார்கள். அதுவும் இந்த அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. 18 மைல் சுற்றளவு என்று இப்பொழுது கட்டாயமாக வருகிற காரணத்தால், ஆங்காங்கே பல்வேறு பகுதிகளில் என்னென்ன விளை பொருள்கள் விளைகிறதோ அந்தந்தப் பகுதிகளுக்குள் அந்த விளை பொருள்களை விற்க வேண்டுமென்று 'நோட்டிபை' செய்து அங்கே விற்பதற்கும் வாங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வழிவகை இதிலே செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் பூதலூரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே அதிகமாக என்ன பொருள் விளையும் என்று எனக்குத் தெரியும். ஆனால் அதை விற்பனை செய்து வாங்க யாரும் வருவதில்லை. அவர்களுடைய ஊருக்கு அது பக்கத்திலே இருந்தாலும், அது சரியாக இயங்காத காரணத்தால், வல்லத்திலே அந்தப் பொருள்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கே அதிகமான விளைச்சல் வந்ததற்குப் பிறகு, அவர்களே விரும்புவார்களானால், அதைப் பூதலூரில் திறக்க எந்தவித ஆட்சேபணையும் இல்லை. மத்திய சர்க்கார் நிதி உதவி காரணமாக மார்க்கெட் காம்ப்ளெக்ஸ் 5 வந்தது. தஞ்சை மாவட்டத்திலேயும், திருச்சி மாவட்டத்திலேயும் அந்த 5-ம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அது வந்ததற்குக் காரணம், போக்குவரத்துச் சாலைகளையெல்லாம் இணைக்க, அந்த மார்க்கெட் காம்ப்ளெக்ஸிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதையிலேயே உடனடியாகத் தஞ்சை மாவட்டத்திலே அதைச் செயல்படுத்தியிருக்கிறோம்.

மதிப்பிற்குரிய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இன்னும் ஒன்றையும் சொன்னார்கள். இந்தக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிகளையெல்லாம் இதிலே சேர்க்க வேண்டுமென்று. நான் கூட்டுறவு அமைச்சரிடம் இதுபற்றிக் கேட்டேன். இதையும் கொடுத்துவிடுங்கள், நாங்களே அதையெல்லாம் பார்த்துக் கொள்கிறோம் என்றேன். அவரும் சரி என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய நம்முடைய வட ஆற்காடு மாவட்ட ஒருங்கு முறை விற்பனைக் கூடத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கொண்டு வரப்படுகின்ற சரக்குகள் ஒரு வாரத்



[திரு அ. பெ. தர்மலிங்கம்]

திற்குள் விற்கப்படாவிட்டால், அதை மீண்டும் விற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் அவர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று அதிலே 75% விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கலாம் என்ற விதியையும் ஏற்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். இப்போது 7 நாட்களுக்கு இலவசமாக வைக்கலாம். அதற்குப் பிறகு விற்று விட வேண்டிய நிர்ப்பந்தமிருக்கிறது. எனவே அதற்குப் பிறகும் அங்கே வைத்து விற்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதைப் போலவே அங்கேயே வியாபாரிகளுக்கு ஒரு வணிக வங்கியோ அல்லது வேறு வங்கியோ ஏற்படுத்தி, அந்த சரக்கு களுக்கேற்ற விலையை அவர்களுக்கு ஒதுக்கி கடனைப் பெற்று வியாபாரம் செய்வதற்கு வழிவகை செய்வதற்கும் ஆலோசனைகளை இப்பொழுது அந்தக் குழுவிற்குச் சொல்லியிருக்கிறேன். இன்னும் ஒன்றையும் மதிப்பிற்குரிய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். அனுபவமுள்ள வியாபாரிகளையும், விவசாயிகளையும் சேர்த்து கலந்து ஆலோசிப்பது நல்லது என்று சொன்னார்கள். இப்பொழுதுள்ள அமைப்பு முறையே இந்த மார்க்கெட்டிங் கமிட்டிக்கு அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பிரதிநிதிகள், வியாபாரப் பிரதிநிதிகள் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குப் பிறகு தான் இந்தக் குழு அமைக்கப்படுகிறது. எனவே, அவர்களுடைய நல்ல யோசனைகளெல்லாம் அங்கே சேருவதற்கு வழிவகைகள் செய்யப் பட்டிருக்கின்றன. பொதுவாக பல்வேறு வசதிகளை அந்த மார்க் கெட் கமிட்டி மூலமாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று அவர் களிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறேன். 6-30 p.m.

சென்ற 1970-71 ஆண்டிலே மட்டும் நமது மாநிலத்திலே ஒரு சில மாவட்டங்களிலே தான் அது நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. உதாரணமாக தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைத்த வருமானம் ரூ. 9,91,311. வட ஆற்காடு மாவட்டத்திலே, 5,34,936 ரூபாய்; தஞ்சை மாவட்டத்திலே ரூ. 7,11,734; திருச்சி மாவட்டத் திலே ரூ. 4,53,593; திருநெல்வேலி மாவட்டத்திலே ரூ. 2,55,924; மதுரை மாவட்டத்திலே சமீபத்திலே தான் துவக்கப்பட்டது. அங்கே வருமானம் ரூ. 31,085; கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 60,770; இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 2,87,722; கோயம் புத்தூர் மாவட்டத்தில் ரூ. 8,31,556; தர்மபுரி மாவட்டத்தில் இன்னும் துவக்கப்படவில்லை. துவக்க இருக்கின்றோம். செங்கல் பட்டு மாவட்டத்தில் சமீபத்திலே தான் ஆரம்பித்திருக்கிறோம். எனவே 11 மாவட்டங்களில் 9 மாவட்டங்களிலே 70-71-ல் ரூ. 41,63,238 கிடைக்கப்பெற்றிருக்கிறது. நூற்றுக்கு 25 காசி லிருந்து 45 காசு வரையில் தான் வசூலிக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 41,63,238.

இந்த விற்பனைக் குழுவிடத்திலே கூட கேட்டுக்கொண்டிருக்கிறோம். இங்கே வருகின்ற மாடுகளுக்குத் தண்ணீர் காட்ட தொட்டியைக் கட்டிவைப்பதோடும். விளைபொருள்களைக் காய வைக்க களத்தை அமைப்பதோடு மட்டும் நின்று விடாதீர்கள். அந்த விவசாயிகளுக்கு சாலைகள் அமைத்துக்கொடுக்க வேறு வசதிகள் இல்லை. பஞ்சாயத்து யூனியன்களிலே பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அதைப்போல வேறு துறையிலேயும் பணமில்லை என்று சொல்கிறார்கள். ஆகையினாலே இதன் மூலம் வருகின்ற பணத்தை அந்தந்த மாவட்டங்களிலே எந்தப் பகுதியில் அதிகம் வருகிறது என்று பார்க்காமல், சாலை வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் அந்த பணத்தைப் போடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் 25 காசு முதல் 45 காசு வரையில் தான் வசூலிக்கலாமென்று சட்டம் இருந்தும் அது அத்தனையும் எல்லா மாவட்டங்களிலேயும் வசூலிக்கப்படவில்லை. ஒரு சில இடங்களிலே 25 காசு வசூலிக்கிறார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கிட்டத்தட்ட ரூ. 42 லட்சம் வருமானம் வந்திருக்கிறதே, இது இப்படி நாலாறு விதம் வருகிற வருமானம் மூலமாகத் தானா அல்லது லைசென்ஸ் தொகையையும் சேர்த்தா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : லைசென்ஸ் தொகையையும் சேர்த்துத் தான்.

எனவே சாலை வசதிகளையும் செய்து கொடுக்க அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் சாலை வசதி செய்து கொடுக்கவும் வழி செய்யப்படுகிறது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் 25 முதல் 45 காசு வரை என்று இருக்கிறது. எல்லோரும் 45 காசு வசூல் செய்வதில்லை. 30 காசு, 35 காசு என்று பொருளுக்குத் தகுந்த மாதிரி, இடத்திற்குத் தகுந்த மாதிரி வைத்திருக்கிறார்கள். அப்படி இருந்தே சென்ற ஆண்டு ரூ. 41,63,238 வந்திருக்கிறது. ஆனால் எல்லா இடத்திலேயும் ஒரே மாதிரியாக இல்லை. நான் அந்தக் கணக்குகளையும் சொல்ல முடியும், பல்வேறு இடங்களிலே பல்வேறு பொருள்களுக்கு எப்படி எப்படி வசூல் செய்கிறார்கள் என்று. உதாரணமாக ஒரு மூட்டை நெல் ரூ. 60 என்று வைத்துக் கொள்வோம். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ரூ. 60-க்கு எங்கே விற்கிறது என்று கேட்கவேண்டாம். விற்க வேண்டுமென்று ஆசை. 10 மூட்டைக்கு ரூ. 600. அதை வெளியாரிடத்திலே, நாங்கள் லட்சக் கணக்கான ரூபாய் முதல் போட்டோம், விவசாயிகள் கேட்டபோது நோட்டு எழுதாமலேயே கொடுக்கிறோம், என்கின்றவர்கள் எப்படி வசூல் செய்கிறார்கள் என்று சொல்கிறேன். ரூ. 600-க்கு 'அன்லோடிங் சார்ஜஸ்' ரூ. 2, அதைப் போல கமிஷன் ரூபாய்க்கு இரண்டு பைசா—12 ரூபாய் ஆகிறது. ஆக



14 ரூபாய் அங்கே வசூல் செய்யப்படுகிறது. ரூ. 600-க்கு ரூபாய் 586 தான் பெற முடிகிறது. அதைப்போல விற்கின்ற நேரத்தில் ரூ. 600-க்கு கமிஷன் 12 ரூபாய். சார்ஜஸ் 50 பைசா. ஆக 612½ ரூபாய். ஆனால் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வாங்கப்படும்போது 600 ரூபாயிலே 50 காசு போக ரூ. 599.50-க்குத்தான் கொள் முதல் செய்யப்படுகிறது. அதிலே விவசாயிகளுக்கு லாபம். இதைப் போல வெல்லம், நிலக்கடலை எல்லாம் இருக்கிறது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இது விவசாயிகளுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் லாபம். வியாபாரிகளுக்குத் கெடுதலாக இருக்கின்றதென்று பல்வேறு நண்பர்கள் இங்கே குறிப்பிடவில்லை, மற்றவர்கள் குறிப்பிட்டார்கள்.. அதனாலே இதைச் சொல்ல விரும்புகிறேன். இதனாலே யாருக்கும் நஷ்டமில்லை. உண்மையிலேயே விவசாயிகளுக்கு இந்த நேரம் மிக நல்ல நேரம். எவ்வளவோ புரட்சிகரமான எழுச்சி மிக்க பல்வேறு திட்டங்களை நடத்தி வருகிற இந்த நேரத்தில் நீண்ட நெடுங்காலமாக இருந்த 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சவில்லை' என்ற பழமொழியை மாற்றி உழுபவனுக்கும் மிச்சப்பட வேண்டும் என்ற சிரிய நோக்கத்தோடு பணியாற்றுகின்ற இந்த அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை எல்லோரும் சேர்ந்து ஆதரிப்பதிலே இருந்து, இனி உழவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதைக்கூறி, இதை நிறைவேற்றிக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 53 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, "சட்ட பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 53/1971) நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 53 of 1971), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4.00 p.m. to-morrow. 6-00 p.m.

The House then adjourned.

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

115. Notifications issued with G.O. Ms. No. 2007, Rural Development and Local Administration, dated the 1st September 1971, in regard to resignation of Director of Rural Development as a member of the Tamil Nadu Khadi and Village Industries Board. [Laid on the table of the House under section 29(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959)].

116. Order issued with G.O. Rt. No. 1891, Revenue, dated the 21st October 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Convener, Kasthuribai Children's School, Vellore. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

117. Notification issued with G.O. Ms. No. 2858, Public (Services-A), dated the 17th September 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of the Posts of Secretary, Official Language Committee, Special Officer (Translation) and Special Officer (Inspection) in the Office of the Official Language Committee from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

### *B. Reports, Notifications and other Papers.*

* 53. Copy of G.O. No. 1414, Social Welfare Department, dated the 16th December, 1971, in regard to constitution of State Defence Personnel's Amenities Committees.

@ 54. The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 40 of 1971), as passed by the Assembly.

@ 55. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment), Bill, 1971 (L.A. Bill No. 53 of 1971), as passed by the Assembly.

* Laid on the table of the House on 15th December 1971.

@ Circulated to all M.L.Cs. on 15th December 1971.



## APPENDIX.

(*Vide* answer to starred question No. 205 on page 640).

**விடை :**

(அ) & (இ) : 1970-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி நகராட்சியில் 69 தேயிலை மாதிரிகள் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றில் 24 மாதிரிகளில் நிலக்கரித்தார்ச்சாயம் கலப்படம் செய்யப்பட்டிருந்ததாகவும் எஞ்சிய 5 மாதிரிகளில் அதே பொருள் கொண்டு இலேசாகக் கலப்படம் செய்யப்பட்டிருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டது. 4 மாதிரிகள் தள்ளப்பட்டன. ஏனெனில், அந்த மாதிரிகள் பாதுகாப்பான நிலையில் அரசு பகுப்பாய்வாளரை வந்தடையவில்லை. எஞ்சியுள்ள 36 மாதிரிகள் சரியானவை என்று கண்டுபிடிக்கப்பட்டன.

கலப்படம் செய்யப்பட்ட 24 நேர்வுகளைப் பொறுத்தவரையில் சம்மந்தப்பட்ட நபர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 12 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டன. அபராதமாக மொத்தம் ரூ. 2.100 வசூலிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 12 வழக்குகளில் ஒரு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதி மன்றத்தினால் விடுவிக்கப்பட்டார். ஒரு வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர் அபராதம் விதிக்கப்பட்டார். எஞ்சியுள்ள 10 வழக்குகள் நீதி மன்றத்தில் முடிவுறு நிலையில் உள்ளன.

இலேசாகக் கலப்படம் செய்யப்பட்ட 5 மாதிரிகளைப் பொறுத்த வரையில், வழக்குகள் ஏதும் தொடரப்படவில்லை. சம்மந்தப்பட்ட விற்பனையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

மேலே கூறப்பட்ட 4 மாதிரிகள் தள்ளி விடப்பட்டன. ஏனெனில், அவை அரசு இரசாயன ஆய்வாளருக்கு, பகுப்பாய்வு செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்டதில் கொள்கலன் உடைந்து போனதாலோ அல்லது மட்டமான தரமுடைய தக்கைகளால் அடைக்கப்பட்டிருந்ததால் அதன் உள்ளிருந்த பொருள் அதன் வழி யாய் வெளி வந்ததாலோ அவை பாதுகாப்பான நிலையில் அரசு ஆய்வாளரை வந்து அடையவில்லை. 1971-ஆம் ஆண்டில் சனவரி முதல் ஆகஸ்ட் வரை திருச்சி நகராட்சியில் 70 தேயிலை மாதிரிகள் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றில் 23 மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. கலப்படம் செய்யப்பட்ட 23 நேர்வுகளிலும் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 9 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டு அபராதமாக மொத்தம் ரூ. 1 680 வசூலிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 14 வழக்குகள் நீதி மன்றத்தில் முடிவுறு நிலையில் உள்ளன.

இனிப்பூட்டும் பொருட்கள் : 1970-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி நகராட்சியில் 11 எண்ணிக்கை இனிப்பூட்டும் பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டன. டல்சின் ( **Dulcin** ) உட்பட சைக்ளமேட் என்னும் பொருளைச் சேர்த்துக் கலப்படம் செய்யப் பட்டிருந்தன, என்று அறிவிக்கப்பட்டது. சில மாதிரிகளில்

[16th December 1971

73-S. *Provisions of this Chapter to override other provisions.*—The provisions of this Chapter shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other provisions of this Act or in any rule or by-law (including the by-law of any registered society) or in any other law for the time being in force.

4. *Amendment of section 96, Tamil Nadu Act 53 of* 1961.—In section 96 of the principal Act,—

(i) in clause (*a*) of sub-section (2), for the expression "order under section 28-A, sub-section (1) of section 72 or section 85 ", the expression "order under section 28-A, sub-section (1) of section 72, section 85 or section 119-A " shall be substituted;

(ii) in sub-section (5), for the words " The decision or order ", the words and figures "Subject to the provisions of sections 97 and 98, the decision or order" shall be substituted.

5. *Substitution of new section for section* 111, *Tamil Nadu Act* 53 of 1961.—For section 111 of the principal Act, the following section shall be substituted, namely :—

" 111. *Power to exempt registered societies.*—Without prejudice to the power confered by section 110, the Government may, by general or special order, whether prospectively or retrospectively,—

(*a*) exempt any registered society from any of the provisions of this Act, or

(*b*) direct that such provisions shall apply to such society with such modifications as may be specified in the order ".

6. *Amendment of section* 119, *Tamil Nadu Act* 53 *of* 1961.—In section 119 of the principal Act, in clause (*a*) of sub-section (2), after the words "reserve funds", the words "and other funds " shall be inserted.

7. *Insertion of new section* 119-A *in Tamil Nadu Act* 53 *of* 1961.—After section 119 of the principal Act, the following section shall be inserted, namely :—

"119-A. *Power of Registrar to give, directions in the public interest, etc.*—(1) Subject to the rules made in this behalf, where the Registrar is satisfied that in the public interest or for the purposes of securing proper implementation of co-operative production and other development programmes approved or undertaken by the Government or to secure the proper management of the business of any class of registered Societies generally, or for preventing the affairs of any registered society being conducted in a manner detrimental to the interests of the members, or of the depositors or the creditors thereof, it is necessary to issue directions to any class of registered societies generally or to any registered society or registered societies in particular, he may by order,



16th December 1971]

issue directions to them from time to time, and all registered societies or the registered society concerned, as the case may be, shall be bound to comply with such directions.

(2) The Registrar may, by order, modify or cancel any directions issued under sub-section (1), and in modifying or cancelling such directions may impose such conditions as he may deem fit".

## APPENDIX III.

[*Vide* item V (2) on page 679.]
*L.A. Bill No.* 53 *of* 1971.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Agricutural Produce Markets (Amendment) Act, 1971.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint and different dates may be appointed for different areas.

2. *Amendment of section* 6, *Tamil Nadu Act* 23 *of* 1959.—In section 6 of the Tamil Nadu Agricutural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959),—

(1) after sub-section (2), the following sub-section shall be inserted, namely :—

"(2-A) Notwithstanding anything contained in sub section (1), no person shall, after the date to be notified by the Government in this behalf in the *Tamil Nadu Government Gazette*, purchase or sell any notified agricultural produce in a notified market area outside the market in that area.

*Explanation.*—For the purposes of this sub-section, purchase or sale shall, unless otherwise prescribed, mean the first point of purchase or sale in the notified market area. ";

(2) in sub-section (3),—

(*a*) in clause (ii), the word "or" shall be added at the end;

(*b*) in clause (iii), for the expression "under clause (i) or (ii); or ", the expression " under clause (i) or (ii) " shall be substituted.

(*c*) clause (iv) shall be omitted.

[16th December 1971

சோடியம் பை கார்பனேட் "டில்வெண்ட்டா"கப் பயன்படுத்தப் பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட நபர்கள் மீது வழக்குகள் தொடரப் பட்டன. வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. அதன் மூலம் அபராதமாக மொத்தம் ரூ. 400 வசூலிக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டில் சனவரி முதல் ஆகஸ்டு மாதம் வரை திருச்சிராப்பள்ளி யில் இனிப்பூட்டும் பொருள்கள் விற்கப்படவில்லை. எனவே அப் பொருள்களின் மாதிரிகள் எடுக்கப்படவில்லை.

*ஐஸ்கிரீம்.*—1970-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி நகராட்சியில் 5 ஐஸ்கிரீம்கள் சோதனைக்காக எடுக்கப்பட்டன. எல்லா மாதிரி கள் கொழுப்புக் குறைந்த காரணத்தால் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு தரத்துக்கும் கீழ்ப்பட்டிருந்தன. அந்த மாதிரி கள் எவற்றிலும் மையோற்றும் தாள் கலப்படம் செய்யப்பட்டிருக்க வில்லை.

ஒரு ஐஸ்கிரீம் மாதிரி அரசுப் பகுப்பாய்வாளரால் தள்ளிவிடப் பட்டது. ஏனெனில் அந்த மாதிரி கிண்டி கிங் நிலையத்தை வந்தடைந்தபோது மிகவும் சிதறி இருந்ததாலும், அதனைப் பகுப் பாய்வு செய்ய இயலாததாலும் அந்த மாதிரி அரசுப் பகுப்பாய் வாளரால் தள்ளிவிடப்பட்டது.

மேலே குறிப்பிட்ட ஐஸ்கிரீம்களின் மாதிரிகள் 4 எண்ணிக்கை களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. மூன்று வழக்குகளில் தீர்ப்பளிக்கப் பட்டன. அதன் மூலம் மொத்தம் ரூ. 550 அபராதம் வசூலிக்கப்பட்டது. ஒரு வழக்கு நீதி மன்றத்தில் முடிவுறு நிலையில் உள்ளது.

## APPENDIX II.

[*Vide* item V (1) on page

*L.A. Bill No.* 40 *of* 1971.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies Act,* 1961.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Act, 1971.

2. *Amendment of section* 62, *Tamil Nadu Act* 53 *of* 1961.—In section 62 of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961) (hereinafter referred to as the principal Act), in clause firstly, for the words "not less than twenty-five per cent", the words "not less than twenty per cent but not exceeding thirty per cent" shall be substituted.



16th December 1971]

3. *Insertion of new Chapter IX-C in Tamil Nadu Act* 53 *of* 1961.—After Chapter IX-B of the principal Act, the following Chapter shall be inserted, namely :—

### CHAPTER IX-C.

### CO-OPERATIVE UNIONS.

73-O. *Definitions.*—In this Chapter, unless the context otherwise requires,—

(*a*) "co-operative union" means a society which has as its principal object the undertaking of co-operative education, propaganda or training; or mobilisation of savings;

(*b*) "district co-operative union" means a co-operative union registered as a district co-operative union under this Act;

(*c*) "taluk co-operative union" means a co-operative union registered as a taluk co-operative union under this Act;

(*d*) "Tamil Nadu Co-operative Union" means the Tamil Nadu Co-operative Union Limited.

73-P. *Co-operative unions.*—(1) There shall be a Tamil Nadu Co-operative Union for the State of Tamil Nadu and as many district co-operative unions and taluk co-operative unions, as may be deemed necessary.

(2) On and from the date of the commencement of the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Act, 1971 (hereinafter in this Chapter referred to as the Amendment Act), the existing Tamil Nadu Co-operative Union Limited (Registered No. X 387) shall be deemed to be, and shall be, the Tamil Nadu Co-operative Union.

(3) The Tamil Nadu Co-operative Union shall be deemed to be an apex society for the purposes of Chapter IX-B.

73-Q. *Registered societies to be members of co-operative unions.*—(1) Every registered society in the State of Tamil Nadu shall, with effect on and from the date of the commencement of the Amendment Act or with effect on and from the date of its registration, whichever date is later, be deemed to be a member of the taluk co-operative union or the district co-operative union or the Tamil Nadu Co-operative Union; as the case may be, if such registered society is eligible to become a member of any such union in accordance with the by-laws of such union.

(2) Every registered society shall pay to the co-operative union of which it is deemed to be a member under sub-section (1), an annual subscription at such rate as may be provided in the by-laws of such union.

73-R. *Vesting of assets and liabilities.*—On and from the date of the commencement of the Amendment Act, all assets and liabilities of the existing Tamil Nadu Co-operative Union Limited (Registered No. X 387) shall stand transferred to, and vest in, the Tamil Nadu Co-operative Union.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

**Firday, the 17th December 1971.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

### *Hamilton Bridge.*

* 214 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the stage at which the construction of the new Hamilton Bridge stands at present?

**ஹாமில்டன் பாலம்**

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*புதிய ஹாமில்டன் பாலம் கட்டும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது?*

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:*** *ஆமில்டன் பாலம் புதுப்பித்தல் வேலை இப்பொழுது முடிந்துவிட்டது. பாலம் போக்குவரத்துக்கு 25—11—71 முதல் திறக்கப்பட்டு விட்டது.*

### *Mobile Libraries.*

* 215 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of mobile libraries functioning in the Coimbatore district as on date; and

(*b*) the number during the year 1970-71?

**இயங்கும் நூலகங்கள்**

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் "இயங்கும் நூலகங்கள்" எத்தனை?*

*(இ) 1970-71-ஆம் ஆண்டில் செயல்பட்டு வந்த "இயங்கும் நூலகங்கள்" எத்தனை?*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 15—9—1971 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்த இயங்கும் நூலகங்கள் ஐந்து.

(இ) ஏப்ரல் 1970-லிருந்து ஆகஸ்ட் 1970-வரை 11 இயங்கு நூலகங்கள் இயங்கி வந்தன. செப்டம்பர் 1970-லிருந்து தற்போது வரை 5 இயங்கு நூலகங்கள் இயங்கி வருகின்றன.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த இயங்கு நூலகங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் இப்போது விற்கப்பட்டு விட்டனவா? அல்லது அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த வாகனங்கள் பழமையாகிவிட்டபடியாலும், அடிக்கடி பழுதுபார்க்க வேண்டியிருந்ததால் பெரும் செலவு ஏற்படுவதாலும் அவை நீக்கி வைக்கப்பட வேண்டியிருந்ததால் நீக்கி வைக்கப்பட்டன. நிதி வசதி பெருகினால் மேலும் சில வாகனங்களை வாங்க முயற்சிக்கலாம். இப்போது 5 வாகனங்கள் இருக்கும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: அந்த வாகனங்கள் பல மாதங்களாக மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலக காம்பவுண்டுக்குள்ளேயே மழையிலும், வெயிலிலும் காய்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றை விற்றுவிடுவது அரசாங்கத்தின் பணத்தை மிச்சப்படுத்துவதாக இருக்கும். அதை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த 6 வாகனங்கள் பழுதுபட்ட காரணத்தால் நீக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஏலத்தில் விடுகிறார்களா, அல்லது விற்க இருக்கிறார்களா என்ற விவரக் குறிப்பில்லை. எதற்கும் பயன்படாத பொருள்களை ஒன்று ஏலம் போட வேண்டும், அல்லது விற்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க தக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

### *UNESCO-Courier.*

* 216 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have passed orders that the "UNESCO-Courier" in Tamil should be purchased by all schools and colleges in Tamil Nadu?

### யுனெஸ்கோ கூரியர்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழில் வெளியிடப்பட்டுள்ள யுனெஸ்கோ கூரியர் (UNESCO Courier) என்னும் பத்திரிகையை தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகள் கல்லூரிகள் யாவும் வாங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாநில 'யுனெஸ்கோ' குழுவின் பரிந்துரையின் பேரில், மாநில அரசு, கல்வி நிலையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் எல்லாத் துறைத் தலைவர்களுக்கும், 'யுனெஸ்கோ கூரியர்' (தமிழ்ப் பதிப்பு) என்னும் வெளியீட்டினை நூலகங்கள் மற்றும் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் பார்வைக்குக் கொண்டு வரவும், அவைகளை அவற்றின் சந்தாதாரராக ஆகும்படி கேட்டுக்கொள்ளும்படியும் அறிக்கை, அனுப்பியுள்ளது.





திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, தமிழில் யுனெஸ்கோ கூரியர் வெளியிடுவதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்கிறதா? இந்த தமிழ்ப் பதிப்பை எல்லாப் பள்ளிகளும் கண்டிப்பாக வாங்கவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதற்கு யுனெஸ்கோ ஓரளவுக்கு நிதி வழங்குகிறது. யுனெஸ்கோ நிதியை வைத்துக் கொண்டு "சதர்ன் லாங்குவேஜ் புக் டிரஸ்ட்" (Southern Language Book Trust) என்னும் குழுவினர் இவற்றை வெளியிடுகிறார்கள். எல்லா நூலகங்களுக்கும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் கல்வித் துறை சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இப்போது 1,698 பள்ளிகளில் கூரியர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சுற்றறிக்கை விட்டதன் காரணமாக, ஓரளவுக்கு வாங்குகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: இந்த சஞ்சிகை வார சஞ்சிகையா? அதற்கு சந்தா எவ்வளவு? பள்ளிகள் அல்லாத வெளியார்களுக்கும் சந்தாவில் இது அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாதப் பத்திரிகை. ஒரு ரூபாய் அதன் விலை என்று கருதுகிறேன். வெளி சந்தாதாரர்களையும் சேர்த்துக் கொள்வார்கள்.

### *Mock Parliament.*

* 217 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any financial assistance is granted to States by the Union Government for organising and conducting Mock Parliament in Schools and Colleges; and

(b) if so, the details thereof?

### போலி நாடாளு மன்றம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போலி நாடாளுமன்றம் அமைத்து நடத்துவதற்காக மத்திய அரசால் மாநில அரசுக்கு நிதி உதவி ஏதேனும் அளிக்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மையப்பாராளுமன்றத் துறை, மாநிலத்தில் இந்தத் திட்டத்தை அமுல் செய்யும் பொழுது, வேண்டிய நிதி வசதி அளித்து ஊக்குவிக்க முன் வரும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இப்போது இந்த மத்திய அமைப்பிலிருந்து நாம் நிதி வாங்கவில்லையா என்பதையும் இதை அரசு உடனடியாகச் செயல் படுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி நிதி வாங்கவில்லை. என்னென்ன வகையில் அது அமையலாம் என்ற குறிப்பு மத்திய அரசிடமிருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டிலும் முக்கிய மான இடங்களிலும் அல்லது குறிப்பிட்ட தலைநகரங்களிலே முக்கியமான பள்ளிகளிலே இதைப் பரிட்சார்த்தமாக ஏற்று நடத்தலாம் என்ற அடிப் படையில் அதுபற்றி செயல்குறிப்புகளைப் பள்ளிக் கல்வி இயக்குனரிடம் கேட்டிருக்கிறது அரசு. அது வந்தவுடனே மத்திய அரசிற்கு அனுப்பி நடைமுறைப் படுத்தலாம் என்றிருக்கிறோம். இந்தத் திட்டத்தை தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாக மத்திய அரசிற்குத் தெரிவிக்கப்பட்டது. விரைவில் இதற்கான செயல்குறிப்பு அனுப்பப்படும் என்று சொல்லப்படுகிறது. மாதிரி பாராளுமன்றம் 1½ மணி நேரம் நடத்தலாம், 1½ மணி நேரம் கேள்வி நேரம் வைக்கலாம், அதன் மூலமாகப் பயிற்சி தரலாம் என்ற குறிப்புகளை அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, பள்ளிகளிலும் கல்லூரி களிலும் இந்த நாடக முறையை ஏற்று நடத்தினால் பதவிப்போட்டி, தேர்தல் முறையில் சண்டை ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருப்பதால், அரசாங்கம் அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதனால் போட்டிகள் ஏற்படு வதற்கு வழியிடையாது. மிகவும் உற்சாகத்தோடு அதில் கலந்து கொள்கி றார்கள். போட்டி உணர்ச்சிகள் இருந்தாலும், அவற்றைக் கொட்டுவதற்கு அதுதான் ஏற்ற இடம். 1½ மணி நேரம் அந்தப் பார்லிமெண்டை நடத்தலாம். உடகாரலாம். சிலர் மந்திரிகளாக இருக்கலாம். எதிர்க் கட்சித் தலைவராக எண்ணிக்கொண்டிருக்கலாம். இங்கே வந்தால் என்னென்ன கேட்கலாம், செய்யலாம் என்று நினைக்கிறார்களோ அந்தக் கனவுகளை அங்கே கொட்டுவதற்கு வழி ஏற்படும். பயிற்சி ஏற்படும். பேரவை அமைப்பதிலும் அதில் யார் தலைவராக வருவது, செயலாளராகத் தேர்ந்தெடுப்பது என்பதற்றில் மாச்சரியங்கள் வரலாம். போலி பார்லிமெண்ட் என்று வைப்பதால், அப்படிப்பட்ட நிலை ஏற்படாது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இது போலி பார்லிமெண்ட் என்பதில் இந்த 'போலி' என்ற வார்த்தையைக் கொஞ்சம் அழுத்தமாகத் தெரிவித்து அறிக்கை அனுப்ப வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பார்லிமெண்டில் ஏற்படுகிற கோளாறு என்ன வென்றால், இதை உண்மையான பார்லிமெண்ட் என்று நினைத்துக்கொண்டு, சட்டங்களை இயற்றி, அவைகளை அமுலாக்க வேண்டுமென்று கூச்சலிடுவதும்





குழப்பம் விளைவிப்பதும் ஏற்படுகிறது. ஆகவே, இது போலிதான் என்று அவர்களுக்கு அழுத்தந்திருத்தமாக அரசாங்கம் தெரிவிக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 'மாக் பார்லிமெண்ட்' என்று தான் அதற்குப் பெயரே இருக்கிறது. மாதிரி பார்லிமெண்ட் என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

## *Talks with Reserve Bank Governor.*

* 210 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state whather the Hon. the Chief Minister had talks with the Reserve Bank Governor on the 19th October 1970?

### ரிசர்வ் வங்கி கவர்னருடன் கலந்துரையாடல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

19—10—1970 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரிசர்வ் வங்கி கவர்னருடன் கலந்துரையாடினாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். இம் மாநிலத்தின் வேளாண்மை, தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி செய்வது பற்றிய பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : நமது மாநிலத்திற்கு ரிசர்வ் வங்கியில் அதிகப் பற்று இருப்பதைப் பற்றி அவருடன் பேசப் பட்டதா என்பதையும் டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மகாநாட்டில் பேசப்பட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வாய்ப்பு ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் அதைப்பற்றிப் பேசப்பட்டு வருகிறது.

## *Scarcity of small coin changes.*

* 211 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there was any clash in Madras City Hottls about 13th May 1971, on account of scarcity of small coin changes; and

(*b*) if so, the details thereof?

### சில்லறை நாணயங்கள் பற்றாக்குறை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சில்லறை நாணயங்கள் பற்றாக்குறை நிலவியதன் காரணமாக 1971-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ஆம் நாள் வாக்கில் சென்னை மாநகரிலுள்ள ஹோட்டல்களில் மோதல் ஏதேனும் நடந்ததா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

[17th December 1971

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) 13—5—1971 அன்று இரவு 9.30 மணிக்கு திரு ஜானகிராமன் என்பவர் திருவல்லிக்கேணி காவல் நிலையத்திற்கு வந்து புகார் ஒன்றைக் கொடுத்தார். அதில் தானும் தனது நண்பர்கள் மூவரும் அன்று சாலையில் உள்ள ஒரு ஓட்டலுக்குச் சென்று காப்பி அருந்தியதாகவும் ஐம்பது காசு பில்லுடன் ஒரு ரூபாய் நோட்டை, ஓட்டல் மேலாளரிடம் கொடுத்தபோது அவர் உரிய சில்லறையை கொடுக்கவில்லையென்றும், சில்லறை கொடுக்க வேண்டுமென்று மேலாளரை தாங்கள் கோரியபோது, வற்புறுத்தியபோது, ஓட்டல் தொழிலாளர்கள் தங்களைத் தாக்கியதாகவும் அப்புகாரில் குறிப்பிட்டிருந்தார். அந்நாளன்று இரவு 9.15 மணிக்கு அந்த ஓட்டலைச் சேர்ந்த ஐந்து தொழிலாளர்கள் (எதிர்) புகார் ஒன்றைக் கொடுத்தனர். அதில், தங்களை ஊர்பேர் தெரியாத நால்வர் தாக்கியதாகக் குறிப்பிட்டிருந்தனர். அதே இரவு 11 மணிக்கு மேற்படி ஓட்டல் மேனேஜர் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் புகார் ஒன்றைக் கொடுத்தார். அதில் தனது ஓட்டல் தொழிலாளர்களை சிலர் தாக்கினர் என்றும் ஓட்டல் சொத்துக்களை சேதப்படுத்தினர் என்றும் குறிப்பிட்டிருந்தார். இம்மூன்று புகார்களும் பதிவு செய்யப்பட்டன. எனினும், இப்புகார்களில் குற்றவாளி எவர் என்று கண்டுபிடிக்க இயலவில்லை. எனவே இவ்வழக்குகளில் மேல் நடவடிக்கை எடுக்கத் தகுந்தவை அல்ல என்று கருதப்பட்டுவிட்டன.

## *Idol thefts*

* 212 *Q*.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that some persons were arrested in connection with the theft of idols by Arantangi Police or by the Police at any other place in our State during February 1970;

(*b*) if so, the value of idols and the names of places from where they were stolen; and

(*c*) the action taken against the culprits?

### விக்கிரகத் திருடுகள்

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விக்கிரகத் திருடுகள் தொடர்பாக, அறந்தாங்கிக் காவல் நிலையக் காவலராலாவது, அல்லது நம் மாநிலத்துள் வேறு எந்த இடத்தையும் சேர்ந்த காவலராலாவது 1970 பிப்ரவரியில் சிலர் கைது செய்யப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவ்விக்கிரகங்களின் மதிப்பு என்ன? அவை திருடப்பட்ட இடங்கள் யாவை?

(உ) குற்றவாளிகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) 1970 பிப்ரவரித் திங்களில், தெய்வச்சிலைகள் களவுபோனது தொடர்பாக அறந்தாங்கி காவல்துறையினரால் எவரும் கைது செய்யப்படவில்லை. ஆனால், தெய்வச் சிலைகள் களவு போனதன் தொடர்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் எட்டுபேர் கைது செய்யப்பட்டனர்.



17th December 1971]

(இ)—

| | தெய்வச்சிலைகள் மதிப்பு. ரூபாய். | இடங்கள். |
|---|---|---|
| 1. | 2,500 | எடுத்துவாயநத்தம். |
| 2. | 500 | வீரசோழபுரம். |
| 3. | 700 | பண்டாலம். |
| 4. | 2,000 | பெருவங்கூர். |
| 5. | 5,000 | கீழ்ப்பட்டு. |

(உ) குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கள்ளக்குறிச்சி, துணை மாஜிஸ்டிரேட்டினால் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர் எனினும், அவர்கள் முதல் தடவை குற்றம் செய்தவர்கள் என்ற முறையில் குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் 4 (1) பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்டனர்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ரூ. 5 லட்சம் விலையுள்ள விக்ரகங்களைத் திருடிச் சென்றவர்கள் பிடிபட்டு, அறந்தாங்கி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டனர் என்று 'இந்து' பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. நானும் தனிப்பட்ட முறையில் விசாரிக்கும்போது, அதுமாதிரி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் அதைப்பற்றிச் செய்தி இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகையால் மீண்டும் தீர ஆராய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சில நேரங்களில் கேள்வியில் பிப்ரவரி திங்களில் அறந்தாங்கியில் நடைபெற்றதா என்று கேட்டால், பதில் எழுதுகிறவர்கள் பிப்ரவரியில் இல்லை என்று எழுதிவிடுகிறார்கள். ஒரு வேளை தேதி மாறுபாடாக இருக்கலாம். இருந்தாலும் உறுப்பினர் சொல்லியதை மனதில் கொண்டு மீண்டும் ஆராயச் சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அண்மையில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இந்த விக்ரகங்கள் திருடப்பட்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசு இனிமேலாவது தக்க நடவடிக்கைகள் எடுக்குமா? கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சிவபுரம் கோயிலைச் சேர்ந்த 75 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நடராஜர் விக்ரகம் திருட்டுப்போனதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சிவபுரத்தில் திருட்டுப்போன நடராஜர் விக்ரகம் ரூ. 75 லட்சத்திற்கு நியூயார்க் நகரத்தில் "பென்ஹெல்லர்" என்பவரிடம் விற்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக 4 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திலகர், திலகரின் சகோதரர் தாஸ், சிவபுரம், லான்ஸ்டேன் என்ற வெளிநாட்டவர், ராமசாமி ஸ்தபதி, சிவபுரம் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சிலைகளை வெளிநாட்டிலிருந்து மீட்பதற்கு மத்திய அரசு 'சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்' தக்க முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கான முயற்சிகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன.

[17th December 1971

*திரு. சா. கணேசன்:* இந்த விக்கிரகங்களைத் திருடியவர்கள் முதல் தரம் குற்றம் செய்தவர்கள் என்ற காரணத்திற்காக எச்சரிக்கையோடு விடுவிக்கப் படுகிறார்கள் என்ற கருத்து உள்ளதாக முதலமைச்சர் அவர்கள் விடை தந்தார்கள். இப்படிப்பட்ட பெரிய திருட்டுக்களைச் செய்தவர்களை முதல் தரம், இரண்டாம் தரம் என்று பிரித்து விடுவது மிகவும் பாபம், நியாயமற்றது என்பதை உணர்ந்து, அதன்மேல் அப்பீல் செய்தாவது, இந்த கேஸ் போனாலும் இப்படிப்பட்ட கேஸ்களில் இதுபோன்ற நிலைமை ஏற்படாமல் தக்க தண்டனை கிட்டும்படிக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* எனக்கேகூட முதல் தரம் என்று இவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இன்னும் இது பற்றி அப்பீல் செய்யாமலிருந்தால், அதுகூட உள்ளபடியே ஆராயப் படவேண்டிய ஒன்றுதான்.

*திரு. சி. வி. ராஜகோபால்:* இந்தச் சிலைகள் திருடப்பட்டு அதைத் திருடிய வர்கள் மன்னித்து விடப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்களே, அந்த நான்கு பேரும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* நாட்டு நெருக்கடியில் இப்போது எல்லாக் கட்சியும் ஒரு கட்சிதான்.

*திரு. எம். ஆறுமுகசாமி:* திருடு போகும் தெய்வ விக்ரகங்கள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விக்ரகங்களை இனியேல் தடுப்பதற்கு அரசு ஏதாவது வகை செய்யுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* வெளிநாடுகளுக்கு இப்படி திருடி அனுப்பப்படுகிற சிலைகளை மீட்டுக்கொண்டு வருவதற்காக 1971 செப்டம்பர் திங்களில் கனடா—ஒசாவில் நடைபெற்ற அகில உலக நிறுவனமான "இண்டர் போல்" கூட்டத்தில் நமது போலீஸ் தலைமை அதிகாரி இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி இப்படி வருகின்ற சிலைகளைத் திருப்பி அனுப்பு வதற்கு எல்லா நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். அதற்கிணங்க ஒரு தீர்மானமும் அங்கே நிறைவேற்றப்பட்டிருக் கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு நாடும் இங்கிருந்து திருடப்பட்டுச் செல்கின்ற சிலைகளைத் திருப்பி அனுப்ப ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்க லாம்.

*திரு. எம். ஆறுமுகசாமி:* விக்கிரகங்களைத் திருடியவர்கள் கைது செய்யப் பட்டாலும்கூட, விக்ரகம் கையகப்படுத்தப்படாத வரையில் அவர்கள் மீது வழக்கு ஏற்படாது என்ற தைரியத்தில் மேலும் மேலும் ஊக்கம் பெற்று அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்பதை அரசு அறியுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* உண்மைதான். இப்போது கூட சிவபுரம் சிலைத் திருட்டு வழக்கில் திலகர், அவர் சகோதரர் மற்றவர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும் விக்ரகங்கள் கிடைக்கப்பெற்ற பிறகுதான் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. இப்போதுள்ள சூழ் நிலை அதுதான்.



17th December 1971]

*திரு. ஜி. சுவாமிநாதன்:* சிவபுரம் நடராஜர் சிலையைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட 6 ஆண்டுகளுக்கு முன்னால் அது கோயிலிலிருந்து திருட்டுப்போயிருந்தும், அந்த விவரம் இதுவரையில் யாருக்கும் தெரியாமல், அமெரிக்காவில் விற்கப்பட்ட பிறகுதான் நம்முடைய கோயிலிலிருந்து திருடப் பட்ட விக்ரகம் என்று தெரிந்திருக்கிறது. இதை மனதில் கொண்டு கோயில் களிலிருந்து இத்தகைய திருட்டுப்போகாமல் தடுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* நல்ல வேளை 6, 7 ஆண்டுகளுக்கு முன்பாக என்று சொல்கிறார்கள். இப்போது கோயில் நிர்வாகம் நன்றாக நடைபெறுகிறது.

*மிஸ்டர் சேர்மன்:* சுவாமிகளே, அந்த வேலையைப் பார்த்துவிட்டால், யாருக்கும் இந்தத் தொந்தரவு இருக்காது. (சிரிப்பு).

## *Naxalites*

* 213 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of Naxalites who have been arrested in Tamil Nadu in the last week of April 1971; and

(*b*) whether the Government have seized their secret documents?

### *நக்ஸலைட்டுகள்*

*திரு. வி. தங்கபாண்டியன்:* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள நக்ஸலைட்டுகள் எத்தனை பேர்?

(இ) அவர்களின் ரகசிய குறிப்புகளை அரசாங்கம் கைப்பற்றியுள்ளதா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி* 27-4-1971 முதல் 5-5-1971 வரையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

(இ) இக்கால அளவில் காவல்துறையினரால், சிறப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட சில தீவிரவாதிகளும், தீவிரவாதிகள் என ஐயுறப்பட்டோரும், தீவிரவாதிகளின் அனுதாபிகளும் விசாரணைக்காகக் காவல்துறையினரால் கொண்டுவரப்பட்டு சோதனையிடப்பட்டனர். குறிப்பிட்ட சிலர் சில வெளியீடுகளை வைத்திருந்ததாகத் தெரிந்தது. அவ் வெளியீடுகள் காவலரால் பறிமுதல் செய்யப்பட்டன.

*திரு. வி. தங்கபாண்டியன்:* தலைவர் அவர்களே, இந்த நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டாலும்கூட, இப்போதிருக்கிற சட்டத்தின் பிரகாரம் கடுமையாக தண்டிக்க வாய்ப்பில்லாததால், மீண்டும் தொடர்ந்து இத்தகைய காரியங்களைத் தமிழ்நாட்டில் செய்வதற்கு வாய்ப்பு இருப்பதால், புதிய சட்டத்தை இயற்றி, அந்த நக்சலைட் இயக்கத்தைத் தடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

[17th December 1971

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த இயக்கம் அகில இந்திய அளவில் இப்போது விரிவடைந்துகொண்டிருக்கிற காரணத்தால், இதற்கு மத்திய சர்க்காரே ஒரு வழி வகுப்பதுதான் நல்லது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: கைது செய்யப்பட்ட ஆறு பேர்கள் எந்தெந்த ஊர்களைச் சேர்ந்தவர்கள்? எந்தெந்த ஊர்களில் கைது செய்யப் பட்டார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது அந்த விவரம் இல்லை.

## *Indo Marine Agencies*

* 227 *Q.*—Thiru P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that a concern by name "Indo Marine Agencies" which was engaged in the export of fish and the legs of frogs to foreign countries after freezing them at Ennore near Madras had closed down; and

(*b*) if so, the reason therefor?

### இந்தோமரைன் ஏஜென்சீஸ்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையை அடுத்துள்ள என்னூரில் "இந்தோமரைன் ஏஜென்சீஸ்" என்ற பெயரில் மீன்கள், தவளைகளின் கால்களைக் குளிர்ப் பதனம் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த நிறுவனம் ஒன்று மூடப் பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: (அ) & (இ) என்னூரில் அரசுக்குச் சொந்தமாகவுள்ள மீன் உறையவைக்கும் தொழிற்சாலை திருவாளர்கள் இன்டோ-மரைன் ஏஜென்சீஸ் (தமிழ்நாடு) நிறுவனத்திடம் குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகைத் தொகையும் உரிய தண்ட வட்டியும் சேர்த்து மொத்தம் ரூ. 61,701.50-ஐ மேற்படி நிறுவனம் செலுத்தத் தவறிய தால், மேற்படி நிறுவனம் மீனளத்துறை இயக்குநரிடம் எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள விதித்துறைகளையொட்டி மீனளத்துறை இயக்குநர் அக்குத்தகையை ரத்து செய்தார். இந்நிறுவனம் மேற்படி தொழிற்சாலையை மீனளத்துறையிடம் 31—7—1971-ஆம் நாளன்று ஒப்படைத்தது. இந்நிறுவனம் மூடப்பட்டுள்ளதா இல்லையா என்பது பற்றித் தகவலேதும் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதேபோன்று தவளைக் கால்களைப் பதனம் செய்யும் வேறு நிறுவனங்கள் தமிழகத்திலே இருக் கின்றனவா? கால்களை அகற்றும்போது, மயக்க மருந்து கொடுத்து, அந்தத்



17th December 1971]

தவளைகளுக்கு வேதனை தெரியாமல் கேரளாவில் எடுக்கிறார்கள். அதைப் போல இங்கேயும் செய்வதற்கு அரசு ஆதரவளிக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: அரசாங்கச் சார்பில் தூத்துக்குடியில் இப்படிப்பட்ட நிறுவனம் ஒன்றுண்டு. இப்போதுள்ள இரண்டும் தவிர, தனியார் சிலர் இதுபோன்ற நிறுவனத்தை வைத்திருக்கி றார்கள். தவளைக் கால்களை மயக்கம் கொடுத்து எடுக்கிறார்களா இல்லையா என்பது அரசிற்குத் தெரியாது.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்தைச் சேர்ந்த உரிமையாளர் ஒருவர் அரசியல் காரணமாக நிறுவனம் மூடப்பட்ட தாக ஆளும் கட்சியைக் குறை கூறி, பத்திரிகையில் கட்டுரை வெளியிட்டது அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், அப்படிக் கூறியிருக்கலாம்.

## *Fish-freezing Plant at Ennore.*

* 228 *Q.*—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the details of the working of the Fish-freezing Plant at Ennore during 1970-71 and 1971-72?

### என்னூர் மீன் உறையவைக்கும் தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

என்னூரிலுள்ள மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் செயல்பட்டது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: என்னூரில் உள்ள மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை சென்னை, திருவாளர்கள் இந்தோ-மரைன் ஏஜென்சீஸ் (தமிழ்நாடு) என்னும் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப் பட்டுள்ளது. இந்த நிறுவனம் மீன் வகைகளை உறைய வைத்துப் பதப்படுத்தி 1970-71-இலும் 1-4-71 முதல் 30-9-71 வரையில் உள்ள கால அளவிலும் தமிழ் நாட்டின் துறைமுகங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த மீன்களின் அளவு வருமாறு:

| ஆண்டு. | ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு. (கி. கிராமில்) | மதிப்பு. |
|---|---|---|
| 1970–71 | 158,931 | ரூ. 25,42,641 |
| 1971–72 (30-9-71 வரையில்) | 16,116 | ரூ. 3,09,457 |

இத்தொழிற்சாலையின் குத்தகை ரத்து செய்யப்பட்டு, 1—8—1971-லிருந்து மீனளத் துறையே இத்தொழிற்சாலையை எடுத்துக் கொண்டது.

THIRU A. R. DAMODARAN : May I know what is being done at the freezing plant at the present moment by the Fisheries Department?

*மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :* 30—9—1971 வரையிலும் அரசே நடத்திக்கொண்டு வந்திருக்கிறது. அதை வேறொருவருக்குக் குத்தகைக்குவிட ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

*Hindi Pandits.*

*218 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether representations have been received by the Government for employment from partially qualified Hindi Pandits ousted out of high schools while implementing the two language policy of the Government; and

(b) whether there is any proposal to provide alttrnate jobs to such of those Pandits, who have put in 5 or more years of service before they were ousted out?

*இந்தி பண்டிதர்கள்*

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசின் இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்தும்பொழுது உயர்நிலைப்பள்ளிகளிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட, ஓரளவு தகுதி பெற்ற இந்தி பண்டிதர்களிடமிருந்து மீண்டும் வேலை வாய்ப்பளிக்கக் கோரி விண்ணப்பங்கள் எதுவும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) வேலையிலிருந்து நீக்கப்படுமுன், 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்டு பணி புரிந்த பண்டிதர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) ஆம்.

(இ) முழு நேர இந்தி ஆசிரியர்கள் அனைவரும் மாற்று வேலையில் அமர்த்தப்பட்டுவிட்டனர். பகுதிநேர ஆசிரியர்களுக்கு மாற்று வேலை தருவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU G. SWAMINATHAN : Are the Government aware that most of these teachers are now suffering without any employment? Is there any difficulty for the Government to post them as supernumerary clerks or attenders and give them an opportunity to qualify themselves further?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, மொத்தம் 2,631 பேர்களிலே இன்னும் தற்காலிகமாகவும் தகுதி இல்லாமலும் பகுதி நேர ஆசிரியாக இருந்து வருவோரில் 643 பேர்கள் தவிர மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். பள்ளிக் கல்வித் துறையில் உள்ள வேறு எந்த வேலைக்கேனும் தகுதி படைத்தவர்களாக இருந்தால், அவர்களை ஏற்றுக் கொள்வதில் சிரமம் இருக்காது. ஆசிரியாக இருக்க வேண்டுமென்றால், ஆசிரியர் பயிற்சி தேவைப்படுகிறது. வேறு வேலைக்கு என்றாலும், அதற்கான குவாலிபிகேஷன் வேண்டியிருக்கிறது. கொஞ்சம் தகுதி பெற்றவர்களில் 24 பேர்கள் இப்படிப்பட்ட பகுதி நேர ஆசிரியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தகுதியோடு வருவார்களானால், சேர்த்துக் கொள்வதில் தடையில்லை. இப்போது அவர்களையெல்லாம் வேலை தேடும் எாய்ப்பகத்தில் பதிவு செய்து வைத்துக்கொண்டு, எந்த வேலையும் வரும்போது, அதற்கானவர்களை அனுப்புவதில் இவர்களுக்குச் சலுகை தரும் தன்மை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கத்திற்குப் பள்ளிக் கல்வி இயக்குனர் எழுதியிருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றிய முடிவு விரைவில் ஏற்படும்.





*திரு. ஜி. சுவாமிநாதன் :* எழுத்தர்களாகவோ, அட்டெண்டர்களாகவோ கூட பள்ளியில் வேலை செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அந்த வேலையையாவது சிபாரிசு செய்ய அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* எழுத்தர்கள், அட்டெண்டர்கள் என்ற வகையில் வேண்டுமென்றாலும் அதற்கான தகுதி இருந்தால், எடுக்கலாம் என்று முன்பே உத்தரவிருக்கிறது. அதன்படி இல்லாமல் இருப்பதால், சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்தத் தகுதியிருந்தால், முதல் சலுகை தர வேண்டுமென்றிருக்கிறது.

*திரு. எஸ். முத்துசாமி :* இந்தி ஆசிரியர்களாக இருந்துவிட்டு இப்போது அட்டெண்டர்களாகப் பணியாற்றுகிறவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறியவர்களுக்கு செகண்டரி கிரேடு தேர்வு எழுதி ஆசிரியாக வரும் வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தனியாக விண்ணப்பித்தால்,, அதற்கான தனிச் சலுகை தருவதற்கான முயற்சியை எடுக்கலாம்.

MR. CHAIRMAN : We can take up questions 219 and 220 together.

*219 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether the Government have received any representation from unqualified Hindi Pandits ousted from service in 1968 and still unemployed for want of alternative jobs under the scheme of appointment of Apprentice Teachers; and

(b) if so, the action taken or proposed to be taken in the matter?

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1968-ல் வேலை நீக்கம் செய்யப்பட்டு வேறு வேலை கிடைக்காமல் இன்னும் வேலையின்றி இருக்கின்ற, பயிற்சித் தகுதி பெறாத இந்தி ஆசிரியர்களிடமிருந்து, வேலை பழகும் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் முறையீடுகள் எவையேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

[17th December 1971

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தொழில்பழகு ஆசிரியர் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலாது.

* 220 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to employ unqualified Hindi Pandits ousted from service in 1968 and still unemployed under the scheme of appointment of Apprentice Teachers?

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

1968-ல் வேலைநீக்கம் செய்யப்பட்டு இன்னும் வேலையின்றி இருக்கின்ற பயிற்சித் தகுதி பெறாத இந்தி ஆசிரியர்களை வேலை பழகும் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின்கீழ் வேலையிலமர்த்தும் செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Thiru G. SWAMINATHAN : What is the difficulty in appointing them as untrained teachers, allowing them cpportunitits to qualify themselves later on?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த வகையிலும் கூட அடிப்படைக் கல்வித் தகுதி இருக்க வேண்டும். அடிப்படைக் கல்வித் தகுதி இருந்தால் அன்டிரெய்ன்டு " untrained " ஆக இருந்து எடுத்துக்கொண்ட பிறகு பயிற்சி பெறலாம். அந்த அளவுக்குப் பயிற்சிக் குறைவு ஏற்பட்டால், கீழே தள்ள வேண்டியிருக்கிறது. அவர்களை வேறு வகையில் எப்படிப் பயன் படுத்தலாம் என்று அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

Thiru G. SWAMINATHAN : Sir, even when these teachers were appointed, they were only partially qualified and they were taken as Hindi Pandits. I want to know the reason why the same consideration could not be shown to them now.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே சொல்லப்படுகிற வகைகளுக்கு மட்டும்தான் அவர்களைப் பயன்படுத்தினார்கள். அதிலும் இந்தி படித்தவர்களை ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், சேர்த்துக் கொள்ள அவசியம் ஏற்பட்டது. பகுதி நேரமாகவும் பின்னால் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று செய்யப்பட்டது. பிறகு வேறு வேலைக்குத் தகுதி படைத்தவர்களாக ஆக்கிக்கொள்ள முடியவில்லை. அந்தச் சூழ்நிலையில்தான் இவர்கள் தகுதி பெற வேண்டுமென்று கூறப்படுகிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : ஒரு ஆசிரியர் இந்தி 'பிரவீண' தகுதி பெற்று ஆசிரியராக இருந்தார். பாரதியார் பாடல்களை இந்தியில் அமைத்தார். தமிழ்ப் பண்டிதப் பரிட்சையிலும் தேறியிருக்கிறார். ஆனால் இப்போது ஹையர்கிரேடு ஆசிரியராக வேலை பார்க்கிறார். அவர் பண்டிதர் வேலை கேட்டு இரண்டு மூன்று வருஷங்களாக முயற்சி செய்து வருகிறார். கிடைக்கவில்லை. அந்த வகையில் தகுதியுள்ளவர்களுக்கான சௌகரியம்—வேறு தகுதி வாய்ந்த வேலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?



17th December 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போன்று தமிழ் பண்டிதருக்கான பயிற்சி பெற்றவராக இருந்தால், அந்த வேலையில் அமர்த்திக்கொள்வதில் அதிக இடர்பாடு இருக்காது. அந்தத் தகுதியைத் தெரிவித்து விண்ணப்பித்தால், அந்த வேலையில் அமர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளலாம். அவர்கள் ஹையர் கிரேடில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், தகுதி பெறாத நிலையில் வைக்கப்பட்டிருப்பார்கள். தமிழ்ப் பண்டிதராக இருப்பதற்கு பயிற்சி அவரிடத்தில் இருந்தால், விண்ணப்பித்து வேலையைப் பெற்றுக்கொள்வதில் ஆட்சேபணை இருக்காது.

## *Clash between Students and Railway Workers.*

* 221 Q.—Thiru S. MUTHUSWAMY and Thiru P. THIRU-GNANASAMBANDAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether there was any clash between the Pushpam College students, Poondi and Railway Workers at Thanjavur Railway Station on 31st August 1971; and

(b) if so, the details thereof?

மாணவர்களுக்கும் ரயில்வே தொழிலாளர்களுக்குமிடையே மோதல்.

திரு. எஸ். முத்துசாமி :
திரு. பி. திருஞான சம்பந்தம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆகஸ்டு 31-ஆம் நாளன்று தஞ்சாவூர் ரயில்வே நிலையத்தில் பூண்டி, புஷ்பம் கல்லூரி மாணவர்களுக்கும் ரயில்வே தொழிலாளர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் 31—8—1971 அன்று காலை 9.30 மணிக்கு பிளாட்பாரத்தில் சிகரெட் விற்பவருக்கும் புஷ்பம் கல்லூரி மாணவர்களுக்கும் நேர்ந்த சச்சரவில் சிகரெட் விற்பவரும் இரண்டு ரெயில்வே தொழிலாளிகளும் காயமுற்றனர். இதனால் இரயில்வே தொழிலாளிகள் ஆத்திரமுற்று மாணவர்களில் சிலரைத் தாக்கி காயப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாணவர்கள் தனிப்பட்டவர்களால் காயப்படுத்தப்பட்ட பிறகு அங்கு ஏதாவது சம்பவங்கள் நிகழ்ந்தனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாணவர்களுக்கும் ரயில்வே தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. மாணவர்கள் அங்குள்ள கடையில் சிகரெட் வாங்கிக்கொண்டு காசு கொடுக்க மறுத்தார்கள். உடனே தகராறு ஏற்பட்டது. அதைத் தவிர்த்து விலக்க ரயில்வே தொழிலாளர்கள் வந்தார்கள். அந்தச் சமயம் அடுத்த ரயில் கிளம்பும்போது, மாணவர்கள் ரயிலுக்குள்ளே அடிக்கத் தொடங்கினர். அவுட்டர் போனவுடன்

ரயில் நிறுத்தப்பட்டது. ரயில்வே தொழிலாளர்கள் மாணவர்களை விரட்டினர். மாணவர்களுக்கும் ரயில்வே தொழிலாளர்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டதால், மாணவர்கள் 9 பேருக்கும் ரயில்வே தொழிலாளர் இருவருக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கும் நிலைமை ஏற்பட்டது. 9-30-க்கு இது நடந்தது. 9-40-க்கு எஸ்.பி. காவலர்களுடன் வந்து அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி இரு சாரார் மீதும் வழக்குத் தொடுத்து அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒரு வார காலம் பூண்டி கல்லூரி மூடப்பட்டு பிறகு, சமாதானம் செய்யப்பட்டு இப்போது அமைதியான சூழ்நிலையில் இருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி:** இந்தத் தகராறில் மாணவர்கள் அடுத்த பால் மாணவர்களிடத்தில் தகாத முறையில் நடந்துகொண்டதுதான் பிரதான காரணம் என்று சொல்லப்படுவதுபற்றி அரசு அறியுமா ?(சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் மக்களுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தின் விளைவாகத்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டு, தொழிலாளர்கள் அவர்களைத் துரத்த ஆரம்பித்தவுடன், பொது மக்களும் சேர்ந்துகொண்டு மாணவர்களைத் துரத்தி அடிக்க ஆரம்பித்தார்கள். அதுதான் இதில் உள்ள நிலைமை. இப்போது அமைதியான சூழ்நிலை நிலவுகிறது.

**திரு. சா. கணேசன்:** பொது மக்கள் ஓரளவுக்குக் கடுமையாக நடந்து கொண்டதன் காரணமாக, இப்போது கல்லூரிகளில் வேலைநிறுத்தம் போன்றவை இல்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது இல்லை. அதற்குக் காரணம் அதுதானா என்பது ஆராயவேண்டிய ஒன்று.

**மிஸ்டர் சேர்மன்:** உறுப்பினர் ஆண் பால் பெண் பால் என்று சொல்லியிருந்தால், தகராறு இருக்காது. அதைக் குழப்பி விட்டீர்களே!

## *Government Arts College, Madras*

* 222 *Q.*—THIRU S. MUTHUSWAMY and THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the Government Arts College at Mount Road, Madras has been closed indefinitely from September, 1971; and

(*b*) if so, the reasons therefor?

**சென்னை, அரசினர் கலைக்கல்லூரி**

**திரு. எஸ். முத்துசாமி:**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை, அண்ணா சாலையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரி 1971 செப்டம்பர் திங்களிலிருந்து காலவரையின்றி மூடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) கல்லூரி 25—8—1971 லிருந்து 5—9—1971 வரை மூடப்பட்டிருந்தது.

(இ) கல்லூரிக்குழு தேர்வை ஒட்டி நடந்த நிகழ்ச்சிகளால் கல்லூரி மூடப்பட்டது. இப்பிரச்னை இப்பொழுது சுமுகமாகத் தீர்ந்துவிட்டது.

## *Kumbakonam Arts College*

* 223 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there were clashes among the students of the Kumbakonam Arts College, about 31st October 1971; and

(*b*) if so, the details thereof?

**கும்பகோணம் கலைக் கல்லூரி**

**திரு. எஸ். முத்துசாமி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 அக்டோபர் 31-ஆம் நாளளவில் கும்பகோணம் கலைக் கல்லூரி மாணவர்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) 29—10—71 அன்று அலுவலில் சேர்ந்த புதிய கல்லூரி முதல்வருக்கு மாலை போடுவதில் இரு பகுதி மாணவர்களுக்குள் நேர்ந்த கருத்து வேற்றுமையினால் சச்சரவு நேர்ந்தது.

## *Eye Disease*

* 224 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a new type of eye disease was detected and treated in Madras City during May, 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken to stop this epidemic?

**கண் நோய்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டு மே திங்களில் சென்னை மாநகரில், புதுவகையான கண் நோய் பரவியிருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இந்தக் கொள்ளை நோயை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மன்றத்தின் முன் விவர அறிக்கையொன்று [a] வைக்கப்பட்டுள்ளது.

---

a Printed as Appendix I on pages 754.

## Air Pollution

* 225 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have ordered any inquiry into the air pollution caused by smokes from Madras Oil Refinery near Madras; and

(b) if so, the details thereof?

### காற்றுத் தூய்மை கெடுவது

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னைக்கு அருகிலுள்ள சென்னை எண்ணெய்த் தூய்மை ஆலையிலிருந்து வெளியேறும் புகையினால் காற்றுத் தூய்மை கெடுவதைப்பற்றி விசாரணை செய்யுமாறு அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## M.Sc. Pharmacology

* 226 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that there are no employment opportunities for a number of post-graduates of M.Sc. Pharmacology; and

(b) if so, the action taken by the Government in this regard?

### மருந்தியலில் எம்.எஸ்ஸி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருந்தியலில் எம்.எஸ்ஸி. பட்ட மேற்படிப்பு பட்டம் பெற்ற பலருக்கு வேலை வாய்ப்பில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1971 செப்டம்பர் வரையில் தேர்வடைந்த 24 எம்.எஸ்.ஸி. (மருந்தாக்கியல்) பட்டதாரிகளில் 6 பேர்கள் மட்டும் அரசு பணிகளில் அமர்த்த முடிந்தது.

(இ) இப்படிப்பு 1971-72-லிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த 26 பேர்களில் 20 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்கள். அவர்களை பி.எஸ்ஸி. அளவில் தகுதியுள்ள கல்லூரிகளில் கூட எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள் எந்த வேலையும் இல்லாமல் துர்பாக்கியமான நிலையில் இருக்கிறார்கள்.



மருத்துவக் கல்லூரிகளில் ஃபார்மகாலஜி டிபார்ட்மெண்டில் அசிஸ்டெண்ட் புரபொசராகவோ அசிஸ்டெண்ட் இன் ஃபார்மகாலஜியாகவோ அந்த இருபது பேருக்கும் வேலை கிடைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அந்த 20 பேர்களில் பலர் பெண்களாக இருக்கிறார்கள். ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அமைச்சர் அவர்கள் அனுதாபத்துடன் இதைக் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த பார்மகாலஜி அல்லது மருந்தாக்க இயல் கல்லூரியில் பாடம் நடத்துவதற்கு மட்டும் தோன்றிய வகுப்பு அல்ல. அந்த வகுப்பில் இருப்பவர்கள் நல்ல ஆற்றல் பெற்றவர்களாக இருந்து உண்மையாக "drug industries and pharmaceutical industries" ஆகியவற்றில் அவர்களுடைய திறமையினால் சிறப்பான இடம் பெறவேண்டியவர்கள். அதற்கு அந்தத் துறையில் உள்ளவர்களை அரசாங்கம் முயற்சிக்கச் சொல்லி அணுகலாம் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களுக்காகத் தனியாக ஆசிரியர்கள் இடங்களை அதிகப்படுத்துவது என்பது ஏற்கனவே மருத்துவக் கல்லூரிகள் மிகுதியாக உள்ளதால் ஏற்படும் செலவை மேலும் அதிகப்படுத்துவதாகும்.

திரு. எம். ராஜா அய்யர்: இந்த மருந்தாக்கத்தில் எம்.எஸ்ஸி. மேல் படிப்பு பட்டம் பெற்றவர்களிடம் வேலையின்மை இருப்பதால், மேலும் மாணவர்களை எடுக்காமல் அரசாங்கம் தடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருந்தாளர்களாகத் தேர்ச்சி பெறச் செய்வதற்கு மூன்றாண்டுகள் படிப்பிற்கும் மற்ற வகையில் அரசாங்கம் செலவிடுவது வீணாக்குவதற்காக அல்ல. அவர்கள் பெறுகிற திறமை பல துறைகளில் வளரும் என்று எதிர்பார்க்கப்பட்டு, அந்தத் துறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். எல்லோரும் அரசாங்கத்தையே எதிர்பார்ப்பது அவ்வளவு ஏற்றதல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன்: மருந்து உற்பத்தித் தொழிற்சாலையில் இந்தத் துறையில் மேற்படிப்பு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். தமிழ் நாட்டைப்பொறுத்த வரையில், எம்.எஸ்ஸி. (ஃபார்மகாலஜி) பட்டப் படிப்பு பெற்றவர்களை எடுத்துக்கொள்ளும் அளவுக்கு பெரிய நிறுவனம் ஒன்றும் இல்லை என்பதையும் அவர்கள் வேண்டுமென்றால், பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில்தான் வேலை செய்ய முடியும் என்பதையும் கருத்தில் கொண்டு அவர்கள் இங்கே 20 பேர்கள்தான் இருப்பதால், எந்த முறையிலாவது வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திரும்பத்திரும்ப அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்பது சரியல்ல. நாட்டிலுள்ள மக்கள் பல்வேறு துறையில் பயிற்சி பெற்றவர்கள் புதிய துறையில் பயிற்சி பெற வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் பொது நோக்கம்.

THIRU A. R. DAMODARAN : Sir, while I agree with the Hon. Minister that it may not be possible for the Government to find jobs for all the M.Sc. Pharmacologists, they have got the basic

[17th December 1971

qualification of B.Sc. (Chemistry). May I know, Sir, whether in view of that fact, these people could not be considered for the posts of Tutors and Demonstrators in our Colleges at least?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, these people may be considered for appointment according to their qualifications not only in Medical Colleges but also in other Colleges.

THIRU G. SWAMINATHAN : These people are not taken even in Arts Colleges and are being told that since they are having Post-graduate qualifications as M.Scs., they are not fit to become Tutors and Demonstrators. In view of their Post-graduate qualifications, they are not able to get jobs even in Arts Colleges. May I request the Government to take them at least as Tutors, Demonstrators or Lecturers in Arts Colleges for their basic B.Sc. qualification?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, if the hon. Member makes a representation in writing giving particulars and details, I can forward it to the Hon. the Education Minister and he may try to absorb them.

*Chief Ministers' Conference*

* 229 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that a proposal has been made in the Chief Ministers' Conference held in New Delhi in October, 1971 to delegate the power of the State to collect Agricultural Income-tax to Central Government;

(b) if so, the nature of the proposal; and

(c) the views of the Government in the matter?

*முதல் அமைச்சர்கள் மகாநாடு*

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) வேளாண்மை வருமான வரியை வசூலிக்கும் மாநில அரசின் அதிகாரத்தை மத்திய அரசுக்கு ஒப்படைப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்று 1971 அக்டோபர் திங்களில் புதுடில்லியில் நடந்த முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் கொண்டுவரப்பட்டதென்பது உண்மையா?*

*(இ) ஆம் எனில், அச்செயற்குறிப்பின் தன்மை யாது?*

*(உ) இப்பொருள் பற்றி அரசின் கருத்துக்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ), (இ), (உ) வேளாண்மை வருமான வரியை வேளாண்மை வருமானமல்லாத பிற வருமானத்தின் மீதான வருமான வரியுடன் இணைக்கும் செயற்குறிப்பை இந்திய அரசு புதுடில்லியில் 12—10—1971-ஆம் நாளன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாநில அரசுகளின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் பொருட்டு வெளியிட்டது. தமிழக அரசு இச்செயற் குறிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.*



17th December 1971]

*திரு. ஜி. சுவாமிநாதன் : எந்த முறையில் இணைத்துச் செய்யலாம் என்று அவர்கள் கருதினார்கள்? எந்தெந்த மாநிலங்கள் ஒப்புதல் தெரிவித்தன? நம் மாநிலம் எதிர்ப்பு தெரிவித்திருந்தால், அதற்குக் காரணம் என்ன?*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அக்ரிகல்சர் இன்கம்டாக்சை சாதாரண வருமான வரியில் இணைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நமது அரசு சம்மதிக்கவில்லை. யாரும் ஒத்துக்கொள்ளவில்லை. முதலமைச்சர் அவர்கள் வருமான வரியைத் தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அந்த நிலைமையில் முடிவு பெற்றது.*

MR. CHAIRMAN : Question 230 is postponed.

*Concessions to Backward Communities*

* 231 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Ministe rfor Backward Classes be pleased to state—

(a) whether the Government are aware of the fact that many persons who belong to the Backward Communities but are economically well off, avail of the concessions to the detriment of the poorer persons in their community; and

(b) if so, the action proposed to be taken in the matter?

*பின்தங்கிய வகுப்பினர் சலுகை.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தும் பொருளாதார நிலையில் வளம் பெற்றுள்ள பலர் அவர்களின் வகுப்பினர்களில் வறியோர்களின் நலனைப் பாதிக்கக் கூடிய வகையில் சலுகைகளைப் பெறுகிறார்கள் என்பதை அரசு அறியுமா?*

*(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?*

*மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) இல்லை.*

*(இ) கேள்விக்கு இடமில்லை.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் பலர் பொருளாதாரத்தில் முன்னிலையில் இருக்கிறார்கள். இந்தச் சலுகை அவர்களுக்குக் கிடைக்கிறது என்று தெரிகிறது. அந்த நிலைமை இருக்கிறதா?*

*மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலைவர் அவர்களே, அப்படி சில வகுப்பார் தமிழகத்தில் பணக்காரர்களாக, வசதியுள்ளவர்களாக இருந்தாலும், சலுகை பெற முயற்சிக்கிறார்கள் என்பதறிந்து அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை இந்தக் குழுவினரால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஜி. சுவாமிநாதன்: என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** மாணவர்களுக்குக் கொடுக்கிற சர்டிபிகேட்டில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கிராம முன்சிப் ஆகியோர் கையெழுத்திட்டிருக்கவேண்டும். அவற்றில் தவறு நேர்ந்தால் அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், கிராம முன்சிப்பும் தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டம் இருக்கிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: பல முன்னேற்றமடைந்த வகுப்பார் இந்தப் பின்தங்கிய வகுப்பில் மறைமுகமாகத் தங்களைச் சேர்த்துள்ளார்கள் என்பது அரசிற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** அப்படிப்பட்ட தகவல் அரசிற்கில்லை.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் என்று சொல்வது பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வைக் கணக்கிடாமல் ஜாதி வேற்றுமையைக் குறிப்பதாக இருந்தால் ஏழையின்பால் அன்புகொண்டு நடவடிக்கை எடுக்கும் இவ்வரசு பொருளாதாரத் துறையில் சலுகை வழங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** பின்தங்கியோர் பட்டியல் என்பது சமுதாயத்தில் பின்தங்கிய, கல்வித்துறையில் பின்தங்கிய நிலையைக் காட்டுவதே தவிர பொருளாதாரத் துறையை மட்டும் வைத்து பின்தங்கியவர் என்று சொல்வதற்கில்லை.

திரு. வி. வெங்கா: வசதியற்றவர்கள் பின்தங்கியோர் சலுகைக்குத் தகுதியானவர்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த அளவுக்கு வருமானம் இருந்தால், கொடுக்கலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** இரண்டாயிரம் ரூபாய்க்கும் அதற்கும் குறைவாக வருட வருமானம் இருந்தால் சலுகை உண்டு. அதிகமாக உள்ளவர்களுக்குச் சலுகையில்லை.

### *Concessions to Puramalai Kallars*

*232 Q.—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Backward Classes be please to state—

(*a*) the concessions granted to the Puramalai Kallars in Madurai District; and

(*b*) whether there is any proposal with the Government to evolve a Reclamation Scheme for Mudukulathur Maravars also?



### புறமலைக்கள்ளர்களுக்கு சலுகைகள்

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) மதுரை மாவட்டத்தில் புறமலைக்கள்ளர்களுக்கு அளித்துள்ள சலுகைகள் என்ன?

(இ) முதுகுளத்தூர் மறவர்களுக்கும் மறுவாழ்வு திட்டம் (Reclamation) அமைக்க அரசிடம் ஏதாவது செயற்குறிப்புகள் உண்டா?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** பேரவை முன் ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவர் அவர்களே, சமீபத்தில் கூடிய நலக் குழு இதுபற்றி முடிவெடுத்தது அரசிற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** மறவர்களைப் பற்றிய குறிப்பில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இதர இடங்களிலுள்ள மறவர்கள் நிலையைப் பார்க்கும்போது, கல்வி, வேலை வசதி ஆகியவற்றில் முன்னேற்றம் இல்லை என்று திரட்டப்பட்ட புள்ளிவிவரத்திலிருந்து அறிய முடிகிறது என்று அறிக்கை வெளியிட்டவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 3—1—1971-ல் அமைச்சர்கள் கூட்டத்தில் இது குறித்துக் கேட்கப்பட்டபோது, இப்போது ஏற்பட்டிருக்கிற நிதிநிலை காரணமாக மேற்படி பரிந்துரையை பிந்திய ஒரு நாளைக்கு வைத்து ஆராயலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. வி. தங்கபாண்டியன்: இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மறவர்களுக்கு டீ—நோட்டிபைடு டிரைப் என்ற அளவில் ஒதுக்கப்பட்ட சமுதாயத்திற்கு அளிக்கிற சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தச் சலுகையை இந்த வகுப்பாருக்குக் கொடுத்தால், இன்னும் பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் முன்னுக்கு வர வாய்ப்பாக இருக்கும் என்பதை அரசு ஆராய்ந்து மீண்டும் பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலுள்ள மறவர்கள் அனேகமாக குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களாகத் தான் கருதப்படுகிறார்கள்.

திரு. டி. கே. சுப்பையா: கேள்வியிலே புறமலைக் கள்ளர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் பிற மலைக் கள்ளர் என்றிருக்கிறது. எது சரி?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** இரண்டையுமே சரியானதாக எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, அவர்களை புறமலைக்கள்ளர் அல்லது பிறமலைக் கள்ளராக எடுத்துக்கொண்டாலும், அவர்கள் எந்தப் பகுதியில் இருக்கிறவர்கள்?

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** புறமலைக்கள்ளர் என்போர் அனேகமாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் பரவியிருக்கிறார்கள்.

---

@ Printed as Appendix II on page 57.

[17th December 1971

*Chennakesavaperumal Koil, Mallangineru*

* 233 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowents be pleased to state—

(*a*) the extent of land belonging to Chennakesavaperumal Koil in Mallangineru Panchayat of Ramanathapuram District;

(*b*) the annual income derived therefrom by the temple;

(*c*) the person under whose custody the jewels and other valuables of the temple are kept; and

(*d*) whether the jewels and other valuables of the temple are annually checked?

மல்லாங்கிணறு, சென்னகேசவப்பெருமாள் கோயில்

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மல்லாங்கிணறு பஞ்சாயத்திலுள்ள சென்னகேசவப்பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு?

(இ) அந்த நிலத்திலிருந்து ஆண்டுதோறும் கோயிலுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

(உ) அந்தக் கோயில் நகைகளும் வேறு பொருட்களும் யாருடைய பாது காப்பில் உள்ளன?

(எ) கோயில் பொருள்களும் நகைகளும் ஆண்டுதோறும் தணிக்கை செய் யப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :**

| | எக்கர் | சென்ட் |
|---|---|---|
| (அ) மொத்த நிலங்கள். | 31 | 12 |

இதில் 15.00 எக்கர் நிலங்கள் சில கட்டளைகளுக்குரியவை.

(இ) ஆலயத்திற்குக் கிடைக்கும் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,895-96.

(உ) கருவூலம் : பதவி காலம் முடிந்த தர்மகார்த்தா திரு. நா. மனோகரன், ஆலய மிராசு கணக்கு பட்டர், பரிசாரகர், மெய்காவலர், பண்டார் ஆகிய ஆறு பேரிடம் ஆறு சாவிகள் உள்ளது. ஆகவே அவை அவர்களின் கூட்டுப் பொறுப்பில் உள்ளது.

நகை இரும்புப் பெட்டி : ஆலய மிராசு கணக்கு திரு நா. ராஜேந் திரன் வசம் உள்ளது.

**மூலஸ்தான சிலைகள், உற்சவ விக்ரகங்கள், பூஜை பாத்திரங்கள், மடப்பள்ளி பாத்திரங்கள் :** பட்டர் திரு. ஆதி நாராயண பட்டர் வசம் உள்ளது.

வாகனங்கள் : வாகன அறை பதவிக்காலம் முடிந்த அறங்காவலர் திரு. நா. மனோகரன் வசம் **உள்ளது.**



17th December 1971]

**கணக்குகள், தஸ்தாவேஜுகள் :** பதவிக்காலம் முடிந்த தர்மகர்த்தர் திரு. நா. மனோகரன் வசம் உள்ளது.

(எ) கோயில் பொருள்களும் நகைகளும 1963-ல் தணிக்கை செய்யப் பட்டன. அதன்பின் இவ்வாண்டும் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

*Irrukkangudi Mariyamman Koil Devasthanam*

* 234 Q.—Thiru S. S. THENNARASU : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether the Irrukkangudi Mariyamman Koil Devasthanam in Sathur Taluk, Ramanathapuram District, is under the administration of Hindu Religious and Charitable Endowments Department; and

(*b*) if so, whether there is any specific proposal with the Government to utilize the income of the temple for the welfare of the people of that area?

இருக்கங்குடி மாரியம்மன் கோவில் தேவஸ்தானம்

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டத்திலுள்ள இருக்கன் குடி மாரியம்மன் கோவில் தேவஸ்தானம் இந்து அறநிலைய இலாகாவிற்கு உட் பட்டதா?

(இ) ஆம் எனில், அக்கோயில் வருமானத்தை அந்தப் பகுதி பொது மக்களுக்குப் பயன்படுத்த அரசிடம் சிறப்புக் குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) அக்கோவில் வருமானத்தில் ஒரு பகுதியை அந்தப் பகுதி பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் அங்கே ஒரு சித்த வைத்தியசாலை நடத்தப் பட்டு வருகிறது.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** தலைவர் அவர்களே, இருக்கங்குடி மாரியம்மன் கோவிலில் உண்டியல் சம்பந்தமாக பொதுமக்களுக்கும் கோயில் பூசாரிக்கும் தகராறு ஏற்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி வருமானத்தைப் பற்றியது. அந்த வருமானத்தின் மூலம் பொது மக்களுக்குப் பயன் ஏற்படக்கூடிய திட்டம் என்ன இருக்கிறது என்று கேட்டிருக்கிறார்.

*Temple Renovation Committees*

* 235 Q.—Thiru S. S. THENNARASU : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the temples for which Temple Renovation Committees have been appointed; and

(*b*) the members of that Committee to whom cars have been provided?

[17th December 1971

### திருப்பணிக் குழுக்கள்

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) எந்தெந்த கோவில்களுக்குத் திருப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அத்திருப்பணிக்குழு உறுப்பினர்களுள் யார் யாருக்கு கார்கள் வழங்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஒரு விபர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) திருப்பணிக்குழு உறுப்பினர்களில் யாருக்கும் தனிப்பட்ட முறையில் கார் வழங்கப்படவில்லை. ஆனால் கீழே தரப்பட்ட ஆலயங்களின் திருப்பணிக் குழுக்களுக்கு கார் வழங்கப்பட்டிருக்கிறது.

1. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் ஆலயம், திருவானைக்காவல்.

2. ஸ்ரீ சங்கமேஸ்வரன் ஆலயம், பவானி, கோவை மாவட்டம்.

3. ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயம், திருவண்ணாமலை, வடஆற்காடு மாவட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: திருப்பணிக்கு வழங்கப்பட்ட கார்கள் திருப்பணி முடிந்த பிறகு திரும்பப் பெறப்பட்டனவா? பெறவிட்டால் எந்தத் திருப்பணிக் குழுவிடமிருந்து பெறவில்லை? ஏன்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, திருப்பணிக் குழுவிற்கு அளிக்கப்பட்ட கார்கள் திரும்ப வந்ததும் அவ்வப்போது விற்கப்பட்டு விட்டன. தற்போது திருவண்ணாமலை திருக்கோயில் திருப்பணிக் குழு, திருவானைக்காவல் திருக்கோயில் திருப்பணிக் குழு ஆகியவற்றில் இரண்டு கார்கள் உபயோகத்தில் இருக்கின்றன. அம்மாதிரி திருப்பணிக்கு வாங்கப்பட்ட கார்கள் அந்தப் பணி முடிந்தவுடன் அவ்வப்போது விற்கப்பட்டுவிடுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: திருவானைக்காவல் திருப்பணி முடிந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் திரும்பப் பெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே திருவானைக்காவல் திருப்பணி முடிந்து இப்போது மதில் சுவர் திருப்பணி நடந்துகொண்டிருப்பது அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நல்ல பதில் இது.

---

a Printed as Appendix III on pages 755-757.



17th December 1971]

### *Books on Hindu Temples*

* 236 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether the Government have published books on Hindu Temples district war;

(*b*) if so, the details thereof; and

(*c*) the proposals, if any, for further similar publications?

### இந்து கோயில்கள் பற்றிய புத்தகங்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாவட்டவாரியாக இந்துக் கோயில்கள் பற்றிய புத்தகங்களை அரசு வெளியிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இது போன்ற புத்தகங்களை மேலும் வெளியிடுவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு. திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி, சென்னை மாவட்டங்களில் உள்ள கோயில்களைப் பற்றி இரண்டு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(உ) மற்ற மாவட்டங்களில் உள்ள கோயில்களைப் பற்றிய புத்தகங்களை தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூலம் வெளியிடுவது ஆணையரின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர்: மற்ற மாவட்டங்களில் உள்ள கோயில்களைப் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவதற்கு ஏதேனும் மதிப்புக் கழகங்கள், ஆசிரியர் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தனிப்பட்ட குழுக்கள் ஏதும் நியமிக்கப்படவில்லை. தெய்விகப் பேரவையின் சார்பில் அந்தப் பதிப்புகள் வெளிவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

### *Libraries in Temples*

* 237 *Q.*— THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNDRAKUDI ADIGALAR) AND THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal with the Government to open libraries in all the class I temples?

### திருக்கோவில்களில் நூலகங்கள்

@ தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார் & திரு. செ. முத்துச்சாமி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

---

@ Question put by Thiru Saw Ganesan on behalf of Thavathiru Deivasigamani Arunachala Desikar (Kunrakkudi Adigalar).

எல்லா முதல் வகுப்புத் திருக்கோவில்களிலும் நூலகம் வைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் ஆலயங்களில் நூலகங்கள் வைப்பது, பராமரிப்பது குறித்து ஏற்கனவே துணை ஆணையர்களுக்கும். உதவி ஆணையர்களுக்கும் அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

## *Archakar Training Scheme*

* 238 Q.—THIRU SAW GANESAN (on behalf of THAVATHIRU DEIVASAGAMANI ARUNACHALA DESIKAR KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether any representation has been received by the Government to undertake and implement the Archakar Training Scheme; and

(*b*) if so, the present stage thereof?

## அர்ச்சகர் பயிற்சித் திட்டம்

திரு. சா. கணேசன் (தவத்திரு தெய்வசிகாமணி அருணசல தேசிகர் குன்றக்குடி அடிகளார் சார்பில்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அர்ச்சகர் பயிற்சித் திட்டத்தை பொறுப்பு ஏற்று நடத்தித் தருவதாக அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆயின், அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் உள்ளது.

திரு. சா. கணேசன்: அப்படிப் பொறுப்பேற்று நடத்தித் தருவதாக அரசுக்குக் கோரிக்கை விடுத்தவர்கள் யார்? அவர்கள் பொருத்தமானவர்களா என்பதை அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை தந்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள். அவரைப் பொருத்தம் உள்ளவராகத் தான் அரசு கருதுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: எந்த அடிப்படையில் பொருத்தமுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த நாட்டிலே இந்து மதத்தைப் பேணிப் பாதுகாப்பதிலும் தமிழ் நாட்டின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பாதுகாப்பதிலும் அவர்கள் நல்ல முறையில் பல பணிகள் ஆற்றிவருகிறார்கள். ஆகவே அவர்களைப் பொருத்தமானவர் என்று அரசு கருதுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. இன்னும் பலர் அப்படி வரலாம், அவர்களிலே சில பேரைத் தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்படலாம். ஆகையால் எந்த அடிப்படை தேவைப்படுகிறது என்பதைத் தான் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்தத் தகுதியெல்லாம் யார் யார் பெற்றிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் தகுதியுள்ளவர்கள் என்று அரசு கருதும்.

திரு. எஸ். முத்துசாமி: சாதாரணமாக மனிதனாகப் பிறந்தவர்கள் வளர்ச்சி பெற்ற பிறகு எல்லாப் பயிற்சியும் பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாகிறார்கள். அப்படியிருக்கும்போது, கோயில் திருப்பணி செய்வதற்கான பயிற்சியில் எல்லா மனிதர்களுக்கும் உரிமை இருக்கிறதா இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: எல்லா மனிதருக்கும் உரிமை இருக்கிறது. எந்த ஜாதியைச் சேர்ந்தவருக்கும் உரிமை இருக்கிறது என்று கருதித்தான் நம் அரசு கோயில்களில் எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகராகலாம் என்று சட்டமியற்றியிருக்கிறது.

மிஸ்டர் சேர்மன்: சட்டதிட்டங்களை மனிதருக்குத்தான், மாவுக்கு அல்ல. (சிரிப்பு).

## *Palani Temple*

* 239 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether it is a fact that the devotees at Palani Temple are harassed by beggars including those who suffer from contagious diseases; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this matter?

## பழனி கோயில்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பழனி கோயிலுக்கு வரும் பக்தர்கள், தொத்து நோயாளிகள் உட்பட பிச்சைக்காரர்களின் தொல்லைக்குள்ளாகின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: பழனி கோயிலின் அடிவாரத்திலிருந்து மேல் வரையில் வழி நெடுகிலும் ஒவ்வொரு படியிலும் குறைந்தது ஐந்து பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அப்படி நூற்றுக்கணக்கானவர்கள் பிச்சையெடுக்கிறார்கள். அது போகிறவர்களுக்கு இடையூறாக இருக்கிறது. அத்துடன் அவர்களிடம் சேருகிற சில்லறைக் காசுகளை சிலர் வாங்கி சில்லறை வேண்டுமென்போருக்கு விற்கிறார்கள். இதனால் அந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் புழங்கிய சில்லறை மறுபடியும் அங்கே போகிறவர்கள் கையில் வந்து புழங்குகிறது. இதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பழனி கோயிலுக்கு வழிபடச் சென்று வருகிற பக்தர்களுக்கு இப்படிப்பட்ட தொல்லைகள் இல்லை என்று விவரம் தந்திருக்கிறார்கள். ஆனால் சமீபத்தில் அங்கே

நியமிக்கப்பட்ட அதிகாரியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு படிகளிலும் மற்ற இடங்களிலும் உள்ள பிச்சைக்காரர்கள் அப்புறப்படுத்தப்பட்டு, இப்போது தூய்மையாக வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்தில் தொழுநோய்க்காரர்களானாலும் மற்றவர்களானாலும் ஒன்றுதான் என்ற அடிப்படையில் அவர்களும் அங்கே இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சமமாக இருந்தாலும், அங்கே வருவோர்க்கு அவர்கள் தொல்லை கொடுக்கிற காரணத்தால்தான், அப்புறப்படுத்த வேண்டுமென்று அரசு கருதுகிறது.

## *Price of Sugar*

* 7 S.N. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(*a*) whether it is a fact that there has been a sharp increase in the price of sugar to consumers in the State; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this matter?

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம் மாநிலத்தில், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சர்க்கரை விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ஒரு கிலோ சர்க்கரை ரூ. 2 வீதம் வழங்கப்படுவதற்காக, உற்பத்தியாளர்களின் இசைவுடன் அரசு, 1971 டிசம்பரில் வழங்கப்படவிருக்கும் இருப்பில் 10 சதவீதத்தை எடுத்துக் கொண்டுள்ளது. இவை அரசுக் கடைகள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்ட பின்னரும் பல இடங்களில் சர்க்கரை அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது என்பதையும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட வீடுகளுக்கும் வாங்குவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருப்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் 10 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று ஆலைச் சொந்தக்காரர்களைக் கேட்டபோது, ஒத்துக்கொண்டு கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாடு முழுவதும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மத்திய அரசாங்கம் 60 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் நமக்கு வருவதாக இருக்கிறது. அது வந்தால், தமிழ் நாட்டில் ரூ. 2-க்கு விற்பதில் சங்கடம் இருக்காது.





திரு. டி. கே. சுப்பையா: சர்க்கரை விலை ரூ. 2 ஆகும்போது உற்பத்தியாளர்களுக்கு இப்போது கொடுக்கும் விலையை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வேளாண்மைத் துறை அமைச்சருக்குப் போட வேண்டிய கேள்வி இது.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. RESOLUTION *re* FELICITATIONS TO BANGLA DESH.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மன்றத்தில் முன்மொழிகிறேன்:

"வங்க தேசத்தில் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இம்மன்றம் தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது. வங்காள தேசத்தின் உரிமைப் போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தான் போர் வெறிக்குத் தக்க பாடம் கற்பித்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தச் சட்ட மன்ற மேலவை பாராட்டுக்களைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புக்கள் ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள், வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இந்த சட்ட மன்ற மேலவை தனது மரியாதையைத் தெரிவித்துக்கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜிபூர் ரஹிமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சட்ட மன்ற மேலவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும் இந்தியாவுக்கு விரோதமாக பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்குத் துணை நின்ற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்தச் சட்ட மன்ற மேலவை இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது."

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை இங்கிருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித் தருவார்கள் என்பதில் எனக்கு எள்ளளவு ஐயமும் இல்லை. கடந்த 12 நாட்களாக நடைபெற்ற போராட்டத்தில் வங்காள தேசம் மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறது. இந்த வெற்றிக்கு வங்காள தேசத்தின் தாயக விடுதலை வீரர்களுடைய ஆற்றலும் அவர்கள் உயிரைப் பணயமாக வைத்து நடத்திய போராட்டமும், வங்காள தேசத்தினுடைய பிரச்சினையை மனிதாபிமான உணர்வோடு அணுகி அதற்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்று தொடங்கி, அத்தகைய அருமையான யோசனைக்குப் பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி யாகியாகான் அவர்கள் இணங்கி வராத காரணத்தாலும், வேறு சில ஆதிக்க நாடுகளுடைய ஆதரவு தனக்கு இருக்கின்றது என்ற தைரியத்தாலும்

[டாக்டர் மு. கருணாநிதி] [17th December 1971

அவர்கள் இந்தியாவின் மிக முக்கியமான நகரங்களான ஆக்ராவிலும், ஸ்ரீநகர் போன்ற இடங்களிலும் விமானத் தாக்குதல்களை நடத்தியதை ஒட்டி, இனியும் இந்தியா இவைகளை சகித்துக்கொண்டிருக்க முடியாது, பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலையில் தான் நாம் நம்முடைய போர்க் குரலை எழுப்பியது. நம்முடைய போர்க் குரல் முதலிலே சர்வாதிகார ஆணவக்காரர்களால் அலட்சியப்படுத்தப்பட்டாலும், ஏனையோர் எதிர்பார்த்தது போல் நாம் நம்முடைய உள்ளத்திலே கொண்டிருந்த உறுதிக்கு, தூய்மைக்கு, உண்மைக்கு பெரும் வெற்றியினை இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.

நமக்கு மண்ணாசை கிடையாது என்பதற்கு அடையாளமாக வங்காள தேசம் விடுதலை பெற்று, வங்காள தேசத்தின் சுதந்திரக் கொடி பறக்க விடப்பட்டு, அதன் தொடர்பாக இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், இந்தியாவின் சார்பில் நேற்றைய தினம் பிரகடனம் செய்தார்கள். நாங்கள் மண்ணாசை கொண்டவர்கள் அல்ல, அதற்கு எடுத்துக் காட்டாக மேற்குப் பகுதியிலே சுடுவது நிறுத்தப்படும் என்று அவர்கள் அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்த நேரம் இரவு 8 மணிக்குச் சுடுவது நிறுத்தப்படும் என்று இன்றைய நாளைக் குறிப்பிட்டார்கள்.

நமக்கு மேலும் இன்னொரு வெற்றி கிடைத்திருக்கிறது என்பதற்கு அடையாளமாக "President Yahya Khan has agreed to cease-fire from 19.30 hours" என்ற இன்னொரு செய்தியும் நமக்கு இப்போது கிடைத்திருக்கின்றது. பாகிஸ்தான் டைம் 7.30 இந்தியன் டைம் 8 என்ற பி.டி.ஐ. செய்தி நமக்குக் கிடைத்திருக்கின்றது. ஆகவே நம்முடைய தூய்மையான அணுகுகிற முறைக்கு, ஜனநாயகத் தத்துவத்துக்குக் கிடைத்கின்ற அரிய வெற்றியாகும் இந்த வெற்றி.

வங்காள தேசம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலே உருவாயிற்று என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். ஜனநாயக முறையிலே, மக்கள் அளித்த தீர்ப்பு புறக்கணிக்கப்பட்டு, ஜனநாயகத்தினுடைய அரவணைப்போடு வெற்றி வீரனாகப் பவனி வந்த முஜ்பூர் ரஹமான் ஏமாற்றப்பட்டு, சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு, அந்த வீரத் தளபதியினுடைய அணிவகுப்பில் நின்ற ஏராளமான வீரர்களும் அவரைத் தேசத்தந்தை என்று கொண்டிருந்த வங்கத்துப் பெருமக்களும், பாகிஸ்தான் ராணுவ வெறியர்களால் அலைக்கழிக்கப்பட்டு, உயிர் பறிக்கப்பட்டு, அந்த நாட்டினுடைய பெண்களின் கற்பு சூறையாடப்பட்டு, பிஞ்சுக் குழந்தைகள், வயதானவர்கள், முதியவர்கள் என்று இல்லாத அளவுக்கு கொடுமைபடுத்தப்பட்ட கோர நர்த்தனம் அங்கே நடைபெற்று, அகதிகளாக ஒரு கோடிக்கு மேற்பட்டவர்கள் இந்தியாவை நோக்கி வருகின்ற சீர்குலைவுக்கு அந்த நாடு ஆளாகி, இவ்வளவு அல்லலையும் ஏற்றுக்கொண்டு, நாங்கள் சுதந்திர நாடு, எங்களுக்கு யாகியாகான் தலைவர் அல்ல, யாகியாகான் எங்களுக்கு அதிபர் அல்ல, எங்களுக்கு இதோ புதிய தலைவர், புதிய பிரதமர் என்று ஒரு சாதாரண மரத்தடியில் மிகச் சாதாரணமாகக் கூடி நின்று கொடி உயர்த்தி வங்காள தேசம் உருவாயிற்று என்று உலகத்திற்கு அறிவித்தார்கள்.



17th December 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

இதுவா வங்காள தேசம், இதுவா பெருங் கூட்டம், இவரா பிரதமர், இவரா அதிபர் என்றெல்லாம் உலகத்திலே நியாயத்தை உணராத சில பேர் பரிகசிக்கத் தான் செய்தார்கள். ஆனால் நியாயம் வெல்லும், நிச்சயமாக வெல்லும், தாமதமானாலும் தடைகள் பல வந்தாலும், அனைத்தையும் கடந்து வெல்லும் என்பதற்கு அடையாளமாக இன்று கிழக்கு வங்காளத்தினுடைய பழைய தலைநகராக இருந்த டாக்கா நகரத்திலுள்ள வங்காள தேசச் சுதந்திரக் கொடி பட்டொளி வீசி பறக்கின்ற அளவுக்கு அந்த நாடு விடுதலை கீதம் பாடிக் கொண்டிருக்கிறது.

அந்த நாட்டுக்குத் தமிழ் நாட்டிலுள்ள 4½ கோடி மக்களின் சார்பாக நாம் தெரிவிக்கின்ற வாழ்த்து, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 55 கோடி மக்களின் சார்பாகத் தெரிவித்திருக்கின்ற வாழ்த்தோடு இணைகிறது என்று பெருமையோடு தெரிவித்து, அந்த விடுதலை தானைத் தலைவன் இன்று சிறைச்சாலையிலே இருப்பதை எண்ணி எண்ணி மனம் கசிந்து உருகுகின்ற நாம், அந்த வீரனுடைய விடுதலைக்காகப் பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதற்காகத்தான், உலக நாடுகள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிராமல் அந்த வீரன் விடுதலை பெறுவதற்கான வழி முறைகளுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று தீர்மானத்தின் மூலம் வலியுறுத்தியிருக்கிறோம்.

இந்தப் பெரும் போரில் பெரிய வெற்றியினை நமக்குத் தேடித் தந்திருக்கின்ற நம்முடைய விடுதலை வீரர்களையும், இந்திய வீரர்களையும் என்றென்றைக்கும் நாம் மறக்க முடியாது. அவர்களை வழி நடத்திச் சென்ற முப்படைத் தளபதிகளையும் நாம் என்றென்றைக்கும் மறக்க முடியாது. அத்தகைய பாராட்டுக்கு உரியவர்களையும், மிகத் திறமையோடு இந்தியாவினுடைய பெருமையை உலகத்திலே உயர்த்திக் காட்டியிருக்கின்ற இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும் பாராட்டுவதற்கும், புகழுவதற்கும், போற்றுவதற்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தப் போரின் காரணமாக உயிர் இழந்தவர்களுடைய குடும்பங்கள், அங்கவீனம் ஆனவர்களின் குடும்பங்கள்—இவைகள் எல்லாம் நம்முடைய அரவணைப்புக்கு உரியவை. நம்முடைய ஆதரவுக் கரம் அந்தக் குடும்பங்கள் பக்கம் நீண்டிட வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்கிறது என்றாலும், எல்லோருடைய ஒத்துழைப்பும் அதற்குப் தேவை என்று தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிந்து அமைகிறேன்.

MR CHAIRMAN : Resolution moved—

"வங்க தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இம்மன்றம் தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது. வங்காள தேசத்தின் உரிமைப் போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தானின் போர் வெறிக்குத் தக்க பாடம் கற்பித்த இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தச் சட்ட மன்ற மேலவை பாராட்டுக்களைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புகள் ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள், வங்க தேச விடுதலை அனைவருக்கும் இந்தச் சட்ட மன்ற மேலவை தனது மரியாதையைத் தெரிவித்துக்கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜ்பூர் ரஹமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்தச் சட்டமன்ற மேலவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும், இந்தியாவுக்கு விரோதமாக பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்கு துணை நின்ற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்தச் சட்ட மன்ற மேலவை இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது."

* திரு. கே. ராஜாராம்: மாமன்றத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை முழு மனதுடன் நான் வழி மொழிகிறேன். இவ்வளவு துரிதமாகப் போர் முடியும் என்றும், 14 நாட்களுக்குள் இம்மாதிரிப் பாராட்டுதல் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவோம் என்றும் நாம் யாரும் எதிர்பார்க்கவில்லை.

போரை ஆரம்பித்த பாகிஸ்தான் ஜனாதிபதி யாகியா கான் அவர்கள், இது இறுதிப் போராட்டம் என்றும், அவருடைய அயல்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் பூட்டோ அவர்கள் இது 1,000 ஆண்டுக்காலம் தொடர்ந்து நடக்கும் என்றும் சொல்லியிருந்தார்கள். அவ்வளவு காலம் இல்லை என்றாலும், நீண்டகாலம் நடக்கும் என்று நாம் எல்லா விதமான கஷ்டங்களுக்கும் தயாராக இருக்க வேண்டுமென்று எண்ணியிருந்தோம். பதினைந்தாம் தேதி இரவு நமது மாநிலப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் இராஜாஜி ஹாலில் நடைபெற்ற போது, நம் அத்தனை பேருடைய உணர்ச்சியும் அம்மாதிரித்தான் இருந்தது. எப்படிப்பட்ட தியாகத்துக்கும் நமது தமிழகம் தயாராக இருக்க வேண்டும் என்று அங்கு அப்போது கூடியிருந்த அனைத்துக் கட்சியினரும் முடிவு செய்து கொண்டார்கள். எதைக் கேட்டாலும் கொடுக்கவும், எதைச் செய்யச் சொன்னாலும் செய்வதற்கும் தமிழக மக்கள் தயாராக இருக்க வேண்டும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநிலம் முழுவதும் ஒரே மக்களாக, ஒரே குரலாக இயங்குவோம் என்று அப்போது உறுதியளித்திருந்தோம். நேற்றுக்கூட இரண்டு மன்றத்தின் உறுப்பினர்களும் மூன்று மணிக்கு ஒரு ஊர்வலத்தை ஆரம்பித்து, அமெரிக்க கான்ஸல் அவர்களுடைய காரியாலயத்திற்குச் சென்றோம். அப்போதுகூட யுத்தம் இவ்வளவு சீக்கிரம் முடிந்து விடும் என்று யாரும் எண்ணவில்லை. அங்கே நாம் மாலை நான்கு மணிக்குப் போய்ச் சேர்ந்து 'வங்கக்கடலில் அமெரிக்காவின் ஏழாவது கடற்படையினைக் கொண்டு வந்திருப்பது ஒரு பயமுறுத்தலாகும், அதை உடனே வாபஸ் வாங்க வேண்டும்' என்ற கண்டனத்தினைத் தெரிவிக்கும் வகையில் ஒரு கண்டனக் குறிப்பை அவர்களிடம் கொடுத்தோம். அப்படிச் செல்லும்போது, இன்னும் பல ஆண்டுகளுக்கூட யுத்தம் செய்யத் தயாராயிருக்கிறோம் என்ற உணர்ச்சியோடு தான் சென்றோம். ஆனால் நாங்கள் அவர்களிடம் மனுவினைக் கொடுத்த அரைமணி நேரத்திற்குள் கிழக்குப் பாகிஸ்தான் என்று அவர்கள் குறிப்பிட்ட பங்களா தேஷில் மேற்குப் பாகிஸ்தான் படைகள் சரணடையும் என்று எதிர்பார்க்கவில்லை. மாலை நான்கு மணிக்கு மனுவைக் கொடுத்தோம். 4½ மணிக்கு அவர்கள் சரணாகதி அடைந்துவிட்டார்கள்.



திரு. சா. கணேசன்: அதற்கு முன்பே அவர்கள் முடிவு பண்ணி விட்டார்கள்.

திரு. கே. ராஜாராம்: நமக்குத் தெரியாதல்லவா? முதலமைச்சர் அவர்கள் நாங்கள் ஊர்வலமாகச் சென்றதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. எவ்வளவு அழகாக இருந்தது தெரியுமா? எங்களுக்காகவே வருணபகவான் கருணைகொண்டு மழையை ஒரு மணி நேரம் நிறுத்திவைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. மாலை 2½ மணிக்கு மழை நின்றது. 3 மணிக்குப் புறப்பட்டு மூன்றேமுக்கால் மணிக்குப் போய்ச் சேர்ந்தோம் அங்கே. நடந்தே சென்றோம். அப்படிச் செல்லும்போது, இவ்வளவு துரிதமாக யுத்தம் முடியும் என்று நாங்கள் எண்ணவில்லை. இப்போது யுத்தம் முடிந்துவிட்டது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. நேற்று மாலை ஜெனரல் யாஹ்யா கானுடைய ரேடியோப் பேச்சு—அதைப் பேச்சு என்று சொல்ல முடியாது, அழுகை என்றே சொல்லலாம். அழுதார், நன்றாக அழட்டும்—அப்படி அமைந்திருந்தது என்று பார்த்தோம். சத்தியமும் நியாயமும் உலகில் கடைசியில் நிலைத்து நிற்கும், இடையிலே எவ்வளவோ வரும் போகும், ஆனால் சத்தியத்தின் வலிவே, நியாயத்தின் வலிவே நிலைத்து நிற்கும் என்பதை இதன் மூலம் அறிகிறோம். பிறருடைய மண்ணில் நமக்கு ஒரு அங்குலம்கூடத் தேவையில்லை என்பதைத் திரும்பத்திரும்ப அறிவித்தோம். பக்கத்திலுள்ள வங்காள தேசம் அன்றைக்கு பாகிஸ்தானின் ஒரு பகுதி, அதில் ஏதோ நடக்கிறது, நமக்கு என்ன என்று நாம் அன்றைக்குச் சும்மா இருந்திருக்க முடியும். ஆனால் அங்கே நடந்த கொடூரத்தின் விளைவாக ஒரு கோடி பேர் அகதிகள் நமது நாட்டிற்குத் துரத்தியடிக்கப்பட்டனர் பாகிஸ்தான் கொடுங்கோலர்களால். ஆக்கிரமிப்பு போல நமது நாட்டில் அவர்களைக் கொண்டுவந்து குவித்தார்கள். நாளொன்றுக்கு மூன்று கோடி ரூபாய் என்ற அளவில் அவர்களுக்குச் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினை நமக்கு ஏற்படுத்திவிட்டார்கள். நமது பொருளாதார நிலையை அவர்கள் சீர் குலையச் செய்துவிட்டார்கள். இவ்வளவுக்கும் பிறகும் நமது பிரதமர் அவர்கள் மிகப் பொறுமையோடு, நேற்றையதினம் மேற்கு பாகிஸ்தான் படையினர் பங்களா தேஷில் சரணடைந்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டவுடன், இனியும் நமக்குப் போர் தேவையில்லை என்ற ஒரு முடிவினை தாமாகவே முன்வந்து—யூனிலேடரல் என்று சொல்லப்படும் வகையில் ஒரு தலைப்பட்சமாகவே, பாகிஸ்தான் என்ன சொன்னாலும் சரி, அதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை, இனி நமக்கு யுத்தம் தேவையில்லை என்று போர் நிறுத்த உத்திரவினை நமது படைகளுக்கு நம் பிரதமர் அனுப்பியதன் மூலம், நமக்கு ஆக்கிரமிப்பு எண்ணம் சிறிதும் இல்லை என்பதை உலகிற்கு அறிவித்தார்களே, இது நமது இந்தியப் பாரம்பரியத்தின் அடிப்படையில் ஏற்பட்ட மிகமேலான நன்றாகும். இதன் மூலம் பிற நாட்டினரை அடிக்கம் கொள்ள வேண்டும், பிற நாட்டைக் கைக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நமக்குச் சிறிதும் இல்லை என்பதை உலகிற்கு அறிவித்துவிட்டார்கள் மதிப்பிற்குரிய நமது பிரதமர் அவர்கள். பிற நாட்டைப் பிடிப்பதற்கா நாம் சண்டையிட்டோம்? இல்லையே! நமக்குப் பக்கத்திலுள்ள பங்களா தேசத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். ராணுவத்தைக் கொண்டு பெருமளவிற்கு அடக்கு முறையைக் கைக்கொண்டார்கள். சுமார் பத்து லட்சம் மக்கள், குழந்தைகள் பெண்கள் உட்பட மிகக் கொடூரமான முறையில் கொன்று குவிக்கப்பட்டார்கள். இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்தது அமெரிக்கா,

[திரு. கே. ராஜாராம்] [17th December 1971

ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் அமெரிக்கா இதையெல்லாம் பார்த்துக் அன்றையதினம் யாகியாகானைத் தட்டிக்கேட்டு இருந்தால், இக்கொடுமைகள் நடந்திருக்காது என்பதை நிச்சயமாகக் கூறலாம். அவ்வளவு பயங்கரமான படுகொலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலிருந்து அம்மக்கள் இன்று விடுதலை பெற்று இன்று புதியதொரு சுதந்திர தேசமாக, சுதந்திர நாடாக மலர்ந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது உரையின் முதல் பாராவில் வங்க தேசத்தை வரவேற்றுப் பாராட்டியிருப்பது மிகவும் சந்தோஷத்திற்குரிய ஒன்றாகும். அடுத்து, நமது பிரதமர் அவர்களுடைய இராஜதந்திரம் இருக்கிறதே, அது மிகவும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும் அவர்கள் ரஷ்யா நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினைக் குறிப்பிடுகிறேன். அன்றையதினம் பல பேர் பலவிதத்தில் ஒப்பந்தத்தினைக் குறை கூறினார்கள் "தும்பலைக் கொடுத்துவிட்டு, இருமலை வாங்கிக்கொண்டார்கள். வறுக்கும் பாத்திரத்திலிருந்து துள்ளிக் குதித்து நெருப்பிலேயே விழுந்து விட்டார்கள்" என்றெல்லாம் பலர் அதைச் சாடினார்கள். பத்திரிகைகள் அவ்வொப்பந்தத்தினைக் கண்டித்து எழுதின. ஆனால் இன்றைக்கு அது எவ்வளவு மகத்தான சாதனை என்பதைப் பார்க்கிறோம். ரஷ்யா மட்டும் நமக்குச் சாதகமாக இல்லாது இருந்திருந்தால், யுத்தத்தின் போக்கே வேறு விதமாக இருந்திருக்கலாம். இறுதியில் நாம் வெற்றிபெறுவது என்பது உறுதிதான். இந்நிலையில் ரஷ்யா நமக்குச் செய்துள்ள உதவியினை மறக்கவே முடியாது. ஐக்கிய நாடுகள் சபையிலும் சரி, பாதுகாப்புக் கவுன்ஸிலிலும் சரி, அவர்கள் நமக்குச் செய்துள்ள உதவி மிகவும் பெரிதாகும். இம்முறையில் ரஷ்யா நமக்குச் செய்துள்ள உதவிகள் குறித்து முதலமைச்சர் அவர்கள் தமது உரையில் தனியிடம் ஒதுக்கியது பாராட்டத்தக்கதாகும். மிகவும் நல்ல தீர்மானம். 'இந்த யுத்தம் நீண்டகாலம் நடக்கக்கூடும், எனவே எந்தத் தியாகத்துக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்' என்று சொல்லவேண்டும் என்று இருந்தேன். அதற்குக்கூட இடம் இல்லாதவாறு யாகியாகான் அவர்கள் யுத்தத்தினை இன்று முடித்துவிட்டார்கள். ஆனால் நமது நாடு இன்னும் பொருளாதாரத் துறையில் எவ்வளவோ தொல்லைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில்தான் நாம் அனைவருமே இன்னும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. வரும் நாட்களில்தான் இன்னும் ஒற்றுமையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையின்கீழ் செயல்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. யுத்தம் நின்றுவிட்டது என்று இருந்துவிடாமல், மேலும் மேலும் இந்த ஒற்றுமையை, ஐக்கியத்தினைப் பலப்படுத்த வேண்டும். யுத்தம் நின்றுவிட்டாலும், அதன் விளைவுகளைப் பல மாதங்களுக்கு நாம் அனுபவிக்கவேண்டி நேரும். இப்போதே பார்க்கிறோம், மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, சர்க்கரை கிடைக்கவில்லை என்று. மண்ணெண்ணெய் வண்டிக்கு முன் 500 பேர் காத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எங்கே போய் மறைந்துவிட்டதோ தெரியவில்லை. எனவே இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக்கொண்டு சில சுயநலக்காரர்கள் வேறு விதமாக நடந்துகொள்ளாமல், அரசு பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கஷ்டங்கள் எதுவும் ஏற்படாதவாறு ஒருவர் கிழக்கே, ஒருவர் மேற்கே என்று பார்த்துக் கொண்டிராமல் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக வழி மொழிந்து பங்களா தேஷ் நீடூழி வாழ வேண்டும், இந்திய ஒற்றுமை நீடூழி வாழ வேண்டும், நமது பிரதமர் அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன், வணக்கம்.



17th December 1971]

*திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தினை மிக மன நிறைவோடு, மகிழ்ச்சியோடு வரவேற்று, அதுபற்றி ஒரு சில சொற்களைச் சொல்லி எனது கடனை நிறைவேற்ற முன் வருகிறேன். வங்க தேசம், பங்களா தேஷ் புதிதாக மலர்ந்திருக்கிறது. உலக ஜனநாயக தோட்டத்தில் அறக் கொடியில் இன்று மலர்ந்துள்ளதொரு புதிய மலர் அது. அந்த மலர் இன்றைக்கு மலர்ந்து ஒளி வீசுகிறது. அந்தத் தேசத்தினை எல்லாத் தமிழர்களோடு நானும் மனமார வாய்மணக்க வாழ்த்தி, நமது ஆசியையும் அன்பையும் தெரிவித்து வாழ்க, வளர்க என்று வாழ்த்தி அதற்கு என்றைக்கும் நமது அன்பும் ஆசியும் உண்டு என்று தெரிவித்துக்கொள்ள முன்வருகின்றேன்.

இம்மலர்ச்சியின் மூலம் பழையதொரு உண்மை இப்போது புதிதாக வலுப் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். 'அறம் வெல்லும், பாபம் தோற்கும், தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், ஆனால் தருமம் மறுபடி வெல்லும்' என்ற உண்மை இன்றைக்கு மிகத் தெள்ளத் தெளிவாக வலுப்பெற்றிருப்பதை இதன் மூலம் நாம் பார்க்க முடிகின்றது. இது மட்டுமின்றி, இந்தியாவிற்கு இதன் மூலம் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருந்தாலும் சரி, ஒரு பெரிய நன்மையும் இதன் மூலம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். கடந்த காலங்களிலே பாகிஸ்தான் இருமுறை வெறியோடு நம்மீது போர் தொடுத்தும், அயூப்கான் போன வழியிலேயே யாகியாகானும் போய் ஒழிந்தார் என்ற ஒரு உண்மை நிலையை உண்டாக்கிய ஒரு பெருமையிருக்கிறதே, அது இன்னும் பல்லாண்டுகளுக்கு நிலைத்து நின்று, நமது தேசத்தின் சுபிட்சை நிலை நாட்டும்.

இந்த நிலையிலேயே திறமாகச் செயல் ஆற்றிய இந்திரா காந்தி அவர்களின் வீரத்தையும் ராஜ தந்திரத்தையும் பல்லோருடனும் கூடி நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதே போலவே நமது மாநில முதலமைச்சரவர்கள் இத்துறையில் எந்த மாநிலத்திற்கும் முந்திய நிலையில் நின்று செயல்பட்ட அருமைப்பாட்டையும் தீவிர முயற்சியையும் இந்த சந்தர்ப்பத்திலே நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் போரின் முடிவினாலே நாடு பிடிக்கும் எண்ணம் நமக்குத் துளியுமில்லை என்று தெள்ளத் தெளிவாக ஆகியிருக்கும். விவேகானந்தர் சொன்னார்: "இந்தியாவிலே ஒரு நாளும் குண்டு விழாது, ஏனென்றால் இந்திய நாடு பிற நாட்டின் மீது குண்டு போட்டு தன்வயப்படுத்த வேண்டும், அடக்கி நின்று ஆள வேண்டுமென்று முயன்ற வரலாறு இல்லை" என்றார். அந்த நிலையிலே என்றும் நாம் மிக மகிழ்ச்சியோடு இருக்க முடியும் என்பதையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தியாவினுடைய லட்சியமெல்லாம் ஜனநாயகத்தையும் மனிதாபிமானத்தையும் பாராட்டுவது, பாதுகாப்பது என்பதுதான் என்பதை இந்த யுத்தம் நன்றாகப் புலப்படுத்திவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலே இந்திய ராணுவ வீரர்களும் வங்க தேச விடுதலை வீரர்களும் ஆற்றிய போர்ச் சாகஸங்களை, அரும் தியாகங்களை. அவர்களுடைய எல்லையற்ற மன உறுதியை நான் பாராட்டி, அதற்கு வணக்கத்தைச் செலுத்துகிறேன். அங்ஙனமே ரஷியா முதலிய நாடுகள் நமக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே கை கொடுக்க முன்வந்ததற்கு அவர்களுக்கு நம் நன்றியைப் புலப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அங்ஙனமே பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள் இதிலே மிக ராஜதந்திரமாக ஒதுங்கி நின்ற சாதுர்யத்தைப் பாராட்டுகிறேன். அங்ஙனமே அமெரிக்கா அதிபர் நிக்ஸன் இதிலே பன்றிக் குடாவிலே தமது அறுபட்ட மூக்கை வங்கக் குடாவிலே ஒட்ட

[திரு. சா. கணேசன்] [17th December 1971

வைத்துக் கொள்ளலாம் என்று தலையை நுழைத்தார். முகத்தில் கரியையும் பூசிக்கொண்டார். இதனாலே அமெரிக்க மக்கள் மீது கோபமில்லை. அமெரிக்கப் பத்திரிகைகள் எழுத்துக்களையெல்லாம் பார்க்கிறபோது, அமெரிக்க மக்கள் முழுக்க முழுக்க நிக்ஸன் ஆட்சியை, அவருடைய போக்கை, அவருடைய நோக்கை ஆதரிக்கவில்லையென்று தோன்றுகிறது. ஆனால் அமெரிக்க அதிபரின் இந்த ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமான செயலின் மூலமாக அவர் ஜனநாயகத்திற்கும், அதைவிட அமெரிக்காவின் பாரம்பரியத்திற்குமே புதை குழியைத் தோண்டி விட்டார் என்பதை உலக வரலாற்றிலே அழியாத நினைவுச் சின்னமாக வைத்து விட்டுத்தான் அவருடைய வரலாறு நிறைவுபெறும் என்பதை நாம் இந்த சந்தர்ப்பத்திலே மறக்காமல் அழுத்தமாக கண்டிக்கிறோம். அமெரிக்க அதிபரின் ஒருதலை சார்பாகவிருந்த தீய உடன்பாட்டை மனப்பூர்வமாகக் கண்டிக்கவும் நாம் முன்வருகிறோம். இந்த சமயத்திலே இன்றைய தினம் மலர்ந்திருக்கிற இந்தப் புதிய வங்க தேசத்திற்கு நல் வரவு கூறி அது பல்லாண்டு, அமைதியோடு, அன்போடு, அறநெறி, வளத்தோடு என்றும் நல் வாழ்வு வாழ வேண்டுமென்று எல்லாப் பேரன்புடையவர்களுடன் ஒருவனாக இருந்து நானும், தலைவரவர்களே, உங்கள் மூலமாக வாழ்த்தி இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த முதலமைச்சரவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியறிதலையும், வாழ்த்தையும் தெரிவித்து, ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

THIRU A. R. DAMODARAN : Sir, I have great pleasure in wholeheartedly supporting the Resolution that has been proposed by the Hon. the Chief Minister. When we heard the news yesterday, Sir, that the forces, the Pakistani forces in Bangla Desh had surrendered and when we heard the very statesmanlike statement made by the Hon. the Prime Minister in the Lok Sabha that the objective of India in establishing the tradition of liberty and democracy in Bangla Desh having been achieved, it was no longer necessary for India to carry on the battle and that, therefore, she had ordered a unilateral cease-fire on the western front, my happiness exceeded all bounds and so also to-day, Sir, when I heard the Hon. the Chief Minister's announcement that the Commander-in-Chief, the military dictator, Governor of Pakistan Yahya Khan had agreed to the cease-fire. I must indeed give credit for the wonderful manner in which this battle has been conducted not only by the Leaders of all Political Parties representing the people of India in the Lok Sabha but also by the armed forces, the Army, the Navy and the Air force. I wish, Sir, on this occasion to pay my humble tribute and homage to those members, young men, who have lost their lives in this battle. Sir, although a cease-fire may have been accepted, I still believe, that we are in a state of great emergency because knowing the military junta of Pakistan, I am not prepared to accept at face value what they have accepted to-day. Conditions of war are likely to continue, although bullets may not be fired and, therefore, I would take this opportunity of reminding the people of Tamil Nadu in particular that although a cease-fire may have been ordered, it is our duty to respond to the appeal that has been made by the Hon. the Chief Minister and to ensure that our promise of collecting Rs. 10 crores for the



17th December 1971] [Thiru A. R. Damodaran]

National Defence Fund is kept up. Not only that, Sir, but because of the heavy economic consequences of these 15 days' battle, it should be our endeavour to see that in the next 12 months at least, we step up production on all fronts because this great financial strain that has been placed upon our country cannot be so easily resolved except by the hard work of the Indian people themselves. Too long have we depended, Sir, on foreign aid, on economic aid and on military assistance and I am glad that at least in this war, we have come to know who are our lukewarm friends because I believe that it is possible for us, the 550 million of us, if we really believe in democracy and in the values of democracy, to spare no efforts in seeing that we build up our strength so that further aggression is impossible either on the Western front or on the North-Eastern front or on the Eastern front.

To the people of Bangla Desh and to Sheikh Mujibur Rehuman, we offer our felicitations and we also offer our help and co-operation in building a nation based on the principles of secularism because hitherto hte greatest danger that has faced India has been the communal propaganda of the State of Pakistan. May I venture to hope on this occasion, Sir, that in Bangla Desh also as has already been announced by their Leaders, the people of Bangla Desh will be able to participate in the Government that may be established in the State without discrimination, based on caste, creed or religion? This has been a great battle and although some nations, many nations might have felt frightened of supporting our stand, I am sure, knowing international politics for what it is, that the very same people who hastened to cut off economic aid will restore this economic aid because the World likes a winner more than it likes a loser. But whatever be the conditions that may be prevailing in the international field, Sir, as one who has believed in the values of democracy, may I express the shock of the Indian nation at the stand taken by the Nixon administration in the United States of America? I particularly refer, Sir, to the Nixon administration because I have still a hope that the liberty-loving people of the United States would take the opportunity of informing their own President that the people of the United States of America were never behind him in the dastardly moves that were envisaged against the Indian Sub-Continent. It is possible, Sir, that the military might of a country may overawe many a smaller country but I am glad that we in India have been able to withstand this tremendous pressure that has been put on us in the International Council. While this is not an occasion for us to gloat over our military victory, I still feel that we have rendered an eminent service to the liberty-loving people of the World in upholding the cause of the down-trodden and the oppressed people of Bangla Desh.

To the Union of Soviet Socialist Republic and other friends, India owes a deep debt of gratitude because in this great struggle the major military power has been a great source of strength to us and I hope that in the future this will open up new possibilities

[Thiru A R. Damodaran] [17th December 1971

of co-operation between nations which will enable us to get over the many difficulties that we have experienced in this war.

I would like to end, Sir, by paying once again my tribute to the Armed Forces—to the gallant sons of our soil, who have laid down their lives in this great struggle and I hope that in Tamil Nadu, we will spare no effort to see that in all fields of activity we maintain the maximum production so that the temporary set-back that might have been caused to our nation in the economic field will be made up by the hard work and effort of all workers, students and people in various other walks of life. Thank you, Sir.

* திரு. எம். ஆறுமுகசாமி: மேலவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் நமக்கெல்லாம் மிகவும் களிப்பூட்டுகின்ற செய்தி கிடைத்தது, அது வங்காள தேசம் தன்னுடைய சுதந்திரத்தைப் பெற்றது என்கிற செய்தி. இன்றைய தினம் இந்தத் தீர்மானத்தை அவையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வைக்கும் காலையில் மற்றொரு களிப்பிற்குரிய செய்தியை வெளியிட நேர்ந்தது. அதாவது நம்மோடு யுத்தத்திற்கு வந்த பாகிஸ்தான், யுத்தத்தை நிறுத்திக் கொண்டது என்பதாகும். நேற்றைய தினமே நாம் யுத்தத்தை நிறுத்திவிட்ட போதிலும் கூட, யுத்தம் நிற்கவில்லை. ஆனால் இன்றைய தினம் எந்த யாகியா கான் இந்த தேசத்தோடு இறுதி யுத்தத்தைத் தொடுப்பதாகக் கூறிக்கொண்டு, யுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தாரோ, அவர் வாயாலேயே இந்த யுத்தத்தை 15 தினங்களுக்குள்ளாகத் திரும்பப் பெற்றுக்கொண்டார் என்று ஏற்பட்டது களிப்பிற்குரிய விஷயமாகும். நமக்குப் பக்கத்தில் சுதந்திரமான நாடு ஒன்று தோன்றியிருப்பதில் நாம் ரொம்பவும் மகிழ்ச்சியடைகிறோம். அதைக் காட்டிலும் பெரிய மகிழ்ச்சிக்குரிய விஷயம் எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டது போல, இதிலே சுதந்திர உணர்வும், ஜனநாயக உணர்வும் வென்றது என்பதுதான். நாம எவ்வளவு பெரிய ராணுவத்தை, திறமை மிக்க ராணுவ வீரர்களை மிக நூதனமான போர்க் கருவிகளை வைத்திருந்தாலும், எவ்வளவு வலுவான ஒரு நாடு நமக்குப் பின்னே இருந்தாலும், நாமும் கூட ரொம்பவும் கட்டுப்பாடாக இருந்து அரசாட்சியில் இருப்பவர்கள் திறம்பட நடத்தினாலும், இவைகள் மட்டும் ஒரு யுத்தத்தில் வெற்றியை ஈட்டித் தராது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும். நம்மைக் காட்டிலும் வலுவான வீரர்களாக எதிரிகள் இருப்பினும் கூட அவர்களிடத்தில் தார்மீக பலமில்லை, தர்மம் இல்லை, அறம் அவர்கள் பக்கத்தில் இல்லை. ஜனநாயகம் அவர்கள் பக்கத்தில் இல்லை. ஜனநாயகம் இந்தப் போராட்டத்திலே, இந்தப் போரிலே வெற்றியடைந்தது. இந்தப் போர் நீண்ட காலப் போராக இருக்கும் என்று நாம் எதிர் பார்த்தோம என்று பல நண்பர்கள் சொன்னார்கள். நவீன காலத்தில், இன்றைய காலத்திலே நீண்ட காலப் போர் நடப்பது கஷ்டம் என்று தெரியும். இருப்பினும் கூட இரண்டு பக்கத்தில் இருக்கும் பெரிய நாடுகள், இதை வியட்னாம் போல, நீண்ட கால யுத்தமாகத் தொடர்ந்து நடக்க அனுமதிக்கலாம் என்று இருந்த நிலையில் நம்முடைய ராணுவ வீரர்கள் வேகமான தாக்குதல்களின் மூலமாக, வீரம் மிக்க சாகஸங்கள் மூலமாக வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



17th December 1971] [திரு. எம். ஆறுமுகசாமி]

அடுத்தபடியாக, வங்காள தேசத்தில் என்ன நடந்தது? அந்த தேசத்து மக்கள், கிழக்கு வங்காள மக்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். தங்களுடைய வாக்குகளை யாருக்கு வேண்டுமானாலும் உபயோகிக்கலாம் என்ற உரிமையின்படி ஒரு கட்சியை, அவாமி லீக் கட்சியை தங்களுடைய கட்சியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அப்படித் தேர்ந்தெடுத்த குற்றத்திற்காக அவர்கட்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் என்ன? மனித சமுதாய வரலாற்றில் நாம் இப்படிப்பட்ட கொடுமையைக் கேள்விப்பட்டது கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்ட குற்றத்திற்காக தேசத்தை ஆளவேண்டிய ஒருவர் சிறையில் இருப்பதையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் காடுகளிலே திரிவதையும், அவர்களுக்கு வாக்களித்த மக்கள் துப்பாக்கி முனையால் சுட்டுக் கொல்லப்பட்டு கோடிக் கணக்கிலே அகதிகள் ஆக்கப்படுவதையும் இப்போது தான் மனித சமூக வரலாற்றிலே பார்த்திருக்கிறோம். கோடிக்கணக்கான அகதிகளை இங்கே அனுப்பினார்கள். அப்படிப்பட்ட கொடுமையிலிருந்து இந்த மக்கள் இன்று மீண்டிருக்கிறார்கள். தங்களுக்கான வாழ்க்கை நிர்வாக முறையை தாங்களே அமைத்துக்கொள்ள வேண்டும். அங்கே எப்படிப்பட்ட வாழ்க்கை முறையை, எப்படிப்பட்ட அரசை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்தியா ஒரு போதும் உத்திரவு போடப்போவது கிடையாது. அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஒரு ஜனநாயக ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும்படியாக விடப்போகிறோம் என்று நம்முடைய பிரதமர் சொல்லியிருக்கிறார், நேற்றைய தினம். எவ்வளவு வேகமாக அந்த நாட்டிலிருந்து வெளியேற முடியுமோ அவ்வளவு வேகமாக வெளியேறுவோம் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு வெற்றியைப் பெற்ற வங்க தேச மக்களை நாம் பாராட்டுவோம். ஏனென்றால் இந்தப் போரிலே அவர்களும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நாம் பாராட்டுகிறோம்.

இதற்கு மேலாக இந்த தேசத்திலே இந்த அவைக் கூட்டம் தொடங்கிய அன்றைய தினம், தலைவர் அவர்களே, யுத்தம் தொடங்கியது. இந்த அவைக் கூட்டம் முடிவதற்கு முன்தினம் யுத்தம் முடிகிறது. இவ்வளவு துரிதத்திலே இந்த வெற்றி நமக்கு எப்படிக் கிடைத்தது? இந்த தேசம் இது போன்றதொரு ஐக்கியத்தை, சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு ஒரு போதும் பார்த்தது கிடையாது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் பேசியபோதுகூட, யுத்தம் சீக்கிரம் நின்றுவிட்டதே என்று அனுதாபப்படுவதுபோல் தோன்றியது. அதுவல்ல. இந்த ஒற்றுமையை, இந்த ஐக்கியத்தை நாடு பூராவும் இருக்கக்கூடிய மக்கள் நன்றாகத் திரண்டு தேசத்தைப் பாதுகாக்க எழுப்பியும் இந்த கோபத்தை இன்னும் கொஞ்ச நாளைக்குக் கேட்டுக்கொண்டிருக்க மாட்டோமா என்ற உணர்வு அவர்கள் பேச்சில் இருந்ததை நான் கவனித்தேன். நான் கூறுவேன், இந்த தேசம் பூராவும் ஒன்றாகத் திரண்டிருந்தது. பஞ்சாப் மக்களுக்குத் தூரத் தொலைவிலேயுள்ள தமிழ் மக்கள் எந்தவிதத்திலும் யுத்தத்தில் பின்தங்கியிருக்கவில்லை என்பதைக் காட்டியிருக்கிறோம். யுத்த நிதிக்கு முதல் தவணையாக 10 கோடி ரூபாயை வசூல் செய்கிறோம், யுத்தத்திற்காக எந்தக் கடமையையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைக் காட்டியிருக்கிறோம். தமிழ் நாடு யுத்தத்தைப் பார்த்ததில்லை. ஆனால் தமிழர்கள் யுத்தத்தைப் பார்த்திருக்கிறார்கள். தமிழர்கள் பல அரங்குகளிலே போரிட்டிருக்கிறார்கள். தொலை தூரத்திலே, ஆப்பிரிக்காவிலே இருக்கக்கூடிய லிபியாவிலேகூட பாலைவனத்திலே போரிட்டிருக்கிறார்கள். கடுங் குளிர் பிரதேசமான

நேஃபா பகுதியிலே போரிட்டிருக்கிறார்கள். ஆகவே தமிழர்கள் போருக்குச் சென்றிருக்கிறார்கள், வெற்றியைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாடு அண்மையில் போரைப் பார்த்ததில்லை. இந்த முறை தமிழகத்தின் பக்கத்திலேயே போர் வந்துவிட்டது போன்ற உணர்வு தமிழ் மக்கள் மத்தியிலே இருந்தது. இந்த உணர்வைத் தோற்றுவிக்க தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள், தமிழ் நாட்டிலே இந்த நேரத்தில் தலைமை அமைச்சராக இருக்கிற டாக்டர் கருணாநிதி அவர்கள், இது போன்ற கட்சிகளின் தலைவர்களை இந்த நேரத்திலே ஒன்றுபடுத்தி யாரையும் தனிமைப்படுத்திவிடாது, மாறுபட்ட கருத்துக் கொண்ட தலைவர்களைக்கூட இந்த தேசத்தின் ஐக்கியம் பெரிது, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் இந்தப் போராட்டத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று திரட்டினார்கள். இந்த தேசத்தில் நாம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய ஒற்றுமையை, மனோபலத்தை எந்த சக்தியும் உடைத்துவிடாது. அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களுடைய ஏழாவது கடற்படையை வங்க விரிகுடாவில் நுழைத்தால், இந்தியா அல்ல, தமிழ் நாடே சுக்கலாக உடைத்துவிடும் என்ற அளவுக்கு அமெரிக்கன் கான்ஸல்-ஜெனரல் அலுவலகத்திற்கு முன்னாலே நேற்று சத்தம் எழுந்தது. இந்தியா அல்ல, நாங்களே, தமிழ் நாடே அந்த அமெரிக்கா ஏழாவது கடற்படையை உடைத்துவிடுவோம் என்ற குரலை மெரிக்க கான்ஸல்-ஜெனரல் அலுவலகத்திற்கு முன்னாலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பியபோது, இந்தத் தமிழகம் முழுவதுமே பின்னாலே நின்றது. இப்படி ஒரு ஐக்கியம் இந்த தேசத்திலே இருந்தது. காரணம் என்ன? தேசம் எதற்காகப் போரிடுகிறது என்பதை எப்போதைக் காட்டிலும் இப்போது நமது மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டிருந்தார்கள்.

இதற்கு அடுத்தபடியாக யார் யார் நமது நண்பர்கள் என்பதைத் தெரிந்து கொண்டோம். வங்க தேசம் கொடுமைக்காளாகியது.

"ஆடை குலைவுற்று நிற்கிறாள்—அவள்
ஆவென்றழுது துடிக்கிறாள்—வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன்—அவள்
மைக்குழல் பற்றி பிழுக்கிறான். அப்படி இழுக்கிறபோது
"நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ" என்றார் பாரதி.

ஐக்கிய நாடுகள் மன்றத்திலே எத்தனை பெட்டைகள், எத்தனை நெட்டை மரங்கள் இருந்தன என்பதைப் பார்த்தோம். அங்கே வீரர்களும் இருந்தார்கள். நியாயத்திற்காக நிற்பவர்களும் இருந்தார்கள். அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். அந்தப் பெட்டைகளைப் பார்த்துச் சிரிக்கிறோம். அந்த நெட்டை மரங்களைப் பார்த்து காரி உமிழ்கிறோம்.

வாழ்க இந்தியா, இந்தியாவின் வெற்றி என்றும் நிலைத்திருக்க, சுதந்திர வங்காள தேசம் நீடுழிவாழ்க என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, நமது அருமை முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நமக்குக் கிடைத்திருக்கும் மகத்தான வெற்றிக்காக முஸ்லிம் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்வதுடன், நமது ராணுவ வீரர்களுக்கும், இந்திரா அம்மையார் அவர்களுக்கும் என் சார்பிலும், என் கட்சியின் சார்பிலும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





ஆறும் தேதி நமது சட்ட மன்றத்தில் பாகிஸ்தானைக் கண்டித்து ஒரு தீர்மானம் நாம் நிறைவேற்றினோம். ஆறும் தேதி அந்தத் தீர்மானத்தில் நான் பேசியபோது, இன்னும் 10 நாட்களில் பாகிஸ்தான் வீழ்ச்சியடையக்கூடும் என்று பேசினேன். பதினாறும் தேதி அது வீழ்ச்சியடைந்த நல்ல செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. நமக்குக் கிடைத்த வெற்றி மகத்தான வெற்றி. இந்த வெற்றி பொன்னெழுத்துக்களால் நம்முடைய சரித்திரத்திலே பொறிக்கப் படவேண்டிய வெற்றி. சென்ற ஐந்தாந் தேதி நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலைவாணர் அரங்கத்திலே பேசினார்கள். அன்று ஒன்று சொன்னார்கள். எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. தாம் அமெரிக்கா சென்றபோது அங்கு கோல்டா மேயர் என்ற இஸரேல் நாட்டு பிரைம் மினிஸ்ட்டர் வந்திருந்ததாகவும், அவர்களுக்கு அமோக வரவேற்பு கொடுக்கப்பட்டதாகவும், அதற்குக் காரணம் 30 லட்சம் பேரைக்கொண்ட ஒரு நாட்டைச் சேர்ந்த கோல்டா மேயர் மகத்தான வெற்றி பெற்றதுதான் என்றும் சொன்னார்கள். நாம் 13 நாட்களில் பங்களா தேசில் நல்ல வெற்றி பெற்றிருக்கின்றோம். இந்த வெற்றியின் காரணமாக முதல்வர் அவர்கள் எந்தக் குறைப்பட்டார்களோ அந்தக் குறை நீங்கிவிடும். நமக்கு அகில உலக அரங்கத்தில் எந்த அளவிற்கு மதிப்பு இருந்ததோ, அது 10 மடங்கு உயர்ந்துவிடும் என்று நிச்சயமாக நினைக்கிறேன். அத்தகைய மகத்தான வெற்றியை நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு பாகிஸ்தான் இரண்டாகப் பிளந்துவிட்டது. இந்த யுத்தம் ஒரு அறுவை சிகிச்சை என்று சொன்னேன். இந்த அறுவை சிகிச்சையினாலே பாகிஸ்தான் இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டுவிட்டது. இனி அது என்றைக்குமே சேரப்போவதில்லை. பங்களா தேஷ் பிரிந்த பிறகு, பாகிஸ்தான் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது. இனி பாகிஸ்தான் என்றைக்குமே நிமிர்ந்து நிற்க முடியாது. பாகிஸ்தானால் இனிமேல் ஆபத்து இருக்கக்கூடும் என்று நண்பர் தாமோதரன் அவர்கள் பேசினார்கள். அதை நான் ஏற்க முடியாது. பாகிஸ்தான், பங்களா தேஷ் பிரிந்த பிறகு வரும் 100 ஆண்டுகளுக்கு வாலாட்ட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதல்வர் அவர்கள் இந்த யுத்தம் சம்பந்தமாகப் பேசியபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்ன ஒரு கருத்துக்காக இஸ்லாமிய சமுதாயம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த யுத்தம் இந்து-முஸ்லீம் யுத்தம் அல்ல என்பதை விளக்கும்போது, இந்த யுத்தத்தில் முக்கியமான எதிரிகள் யாஹியா கானும், முஜீபர் ரஹ்மானும் தான். யார் இதிலே இந்து, யார் இதிலே முஸ்லீம்? ஆகவே இந்தக் கண்ணோட்டத்துடன் இந்தப் பிரச்சினையைப் பார்க்கக்கூடாது என்று சொன்ன விளக்கம் அகில உலகமே, சர்வசாதாரண சிறு குழந்தைகூட தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விளக்கம். அந்த விளக்கத்தைச் சொன்னதற்காக இந்த நாட்டிலிருக்கக் கூடிய இஸ்லாமிய சமுதாயம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நானும் நன்றியுணர்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த யுத்தத்திற்குக் காரணமே யாஹியா கான் என்பதிலே சந்தேகமே இல்லை. ஆக்ரா, பத்தன்கோட் முதலிய நகரங்களிலே முதன் முதலிலே குண்டைப் போட்டவன் யாஹியாகான் தான். அதற்கு முன்பு நடந்த

நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசினாலும் 8 மாதங்களுக்கு முன்பு வங்க தேசத்திலே 20 லட்சம் பேரைப் படுகொலை செய்ததாகச் செய்தி வந்தது. 15 லட்சம் பேர் செத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி லட்சோப லட்சம் மக்களைப் படுகொலை செய்து அவன்தான் யுத்தத்தைத் துவக்கினான். அதற்குப் பிறகு ஒரு கோடி அகதிகளை இந்தியாமீது சுமத்தினான். அவர்களுக்கு சுமார் 500 கோடி ரூபாய் அளவில் செலவு செய்யக்கூடிய வகையேற்றப்பட்டு, இந்தச் சூழ்நிலை தான் இந்த யுத்தம் ஆரம்பித்ததற்குப் பின்னணியாக அமைந்தது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது நாட்டின் வீரர்களுக்கும், யுத்தத்தில் போராடிய வீரர்களுக்கும் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் அஞ்சலி செலுத்துவதுடன், பங்களா தேஷ் வாழ்க, செழித்து ஓங்குக என்று வாழ்த்துச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

* திரு. டி. கே. சண்முகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தத் தீர்மானத்தினை வழி மொழிந்து பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுதந்திரம் பெற்ற வங்க தேசமானது மொழி வழி அடிப்படையில் தோன்றிய ஒரு புதிய நாடு என்பதனை நாம் இங்கே நினைவு கூர்வது தவறாகாதெனக் கருதுகிறேன். மத வழிப்பட்ட அரசியல் தத்துவத்திலிருந்து மொழி வழிப்பட்ட தேசிய இனத்தவர் விடுதலை பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். நம் பாரத நாட்டினைப் போன்ற சமயச் சார்பற்ற ஓர் அரசியலை, விடுதலை பெற்ற வங்க தேசம் இன்று ஏற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வங்க தேசத்தின் மக்களை மேற்குப் பாகிஸ்தானியர் அடக்குமுறைக் கொடுமைகளிலிருந்தும், பல்லாண்டுகளாக அவர்கள் அனுபவித்து வந்த ஆதிக்கக் கொடுமைகளிலிருந்தும் விடுவித்துள்ள நம் அரும் பெரும் சாதனையானது, வலிமை மிக்க புதிய பாரதம் தோன்றி விட்டது என்ற உண்மையினை உலகுக்கு உணர்த்தி நிற்கின்றது என்று சொன்னால் மிகையாகாது. சுதந்திரத்தில் ஆர்வமுடைய மக்கள்—அடிமைப்பட்டு அல்லலுறும் மக்கள்—அவர்கள் எந்த நாட்டவராயினும் இனி இந்தியாவைத் தங்கள் பாதுகாவலனாகக் கருதுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வங்க தேசத்தார், மொழியாலும், மதத்தாலும், பழக்க வழக்கங்களாலும், பூகோள அமைப்பாலும் பாரதப் பெருநாட்டோடு மிக நெருங்கிய தொடர்பு உடையவர்கள். அவ்வாறிருந்தும், சுதந்திர வங்கம் பிறப்பதற்கு உதவிய பாரதம், இந்த உதவியைக் காரணமாகக் காட்டி கிழக்கு வங்கத்தின் மீது சிறிதளவும் ஆதிக்கம் செலுத்த விரும்பாமல், அதனைச் சுதந்திரமாக இயங்க விட்டிருப்பது இந்திய நாட்டுக்கு மண்ணாசை கிடையாது என்ற உண்மையினையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இந்த மகத்தான சாதனைக்கு உலக வரலாற்றில் வேறு சான்றே கிடையாது என்பதனை உறுதியாகக் கூறுவேன்.

இந்தப் போரில் நம் பாரதத்தின் முப்படைகளும் காட்டியுள்ள மகத்தான வீரம் நினைந்து நினைந்து போற்றத் தக்கதாகும். நவீன விஞ்ஞான சாதனைகளினால் உருவாக்கப் பெற்ற போர்க் கருவிகளை ஒரு நாட்டுக்குக் கொடுத்து





விடுவதினாலேயே, அதற்கு வெற்றியும் தேடிக் கொடுத்துவிட முடியாது என்பதனை, இன்று பாகிஸ்தானுக்கு அருமை நண்பனாகிவிட்ட அமெரிக்காவுக்கு உணர்த்தியிருக்கின்றன நம் வீரஞ் செறிந்த பாரதப் படைகள். அந்த முப்படைகளின் ஆற்றல் மிக்க தளபதிகளுக்கும் அருஞ் சமராடி வெற்றி பெற்ற வீரர்களுக்கும், வீரப் போரில் புகழுடம்பெய்திய பெருமக்களுக்கும் தமிழரசு கழகத்தின் சார்பில் வீர வணக்கம் செலுத்துகிறேன்.

நாமனைவரும் சோதனைக்குள்ளாக்கப்பட்ட இந்த நேரத்திலே இந்தியா ஒரே குரலில் பேசியது. அந்தக் குரல் பெருமைக்குரிய நம் பிரதமர் இந்திரா அம்மையாரின் குரலாக இருந்தது. பல்வேறு மக்களையும், இனங்களையும், பல்வேறு ஜாதிகளையும், பலதரப்பட்ட கட்சிகளையும் கொண்ட பாரத சமுதாயம் ஒரே மனித வடிவத்தில் காட்சியளித்தது. அந்தப் பெருவடிவம் பிரதமர் இந்திரா அம்மையாரைத் தவிர வேறில்லை. இந்த ஒன்றுபட்ட தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சிதான் பாரதம் பெற்ற மகத்தான வெற்றிக்குக் காரணமாகும்.

இந்திய அரசுக்கு உதவி புரிவதிலே, இந்தியப் பிரதமரின் கரத்தை வலுப்படுத்துவதிலே நம் பெருமைக்குரிய தமிழக அரசும், உணர்ச்சியும், எழுச்சியும் மிக்க அதன் முதல்வர் கலைஞர், டாக்டர், தமிழ்வேள் கருணாநிதி அவர்களும் காட்டிய ஆர்வம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததென்று பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநிலங்களுக்கு சுயாட்சி கோருவோர், தேச பக்தியிலே, தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியிலே, வேறு யாருக்கும் பின்வாங்கியவர்கள் அல்லர் என்பதனை, சோதனை மிக்க இந்தக் கட்டத்திலே தமிழக முதல்வர் அவர்கள் புலப்படுத்தியமைக்காக, சுயாட்சி கோரும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் உளமார, தாவாரப் பாராட்டுகிறேன்.

விடுதலை பெற்ற புதிய வங்க தேசத்திற்கு மொழி வழி இன உணர்ச்சியுடன் வரவேற்புக் கூறுகிறேன். தேச பக்தியுடைய இந்தியன் என்ற முறையில் வாழ்த்துக் கூறுகிறேன்.

வல்லரசுகளெல்லாம் உருட்டி, மிரட்டிய நிலையிலும் அஞ்சாது நின்று, உறுதி காட்டி, பாரதப் பெருநாட்டுக்கு வெற்றி தேடித்தந்த வீரத்தாய் இந்திரா காந்தி அம்மையாருக்கு, திக்கு நோக்கி அஞ்சலி செலுத்துகிறேன். இந்த சமயத்தில் போர்க்களப் புலவன் மகாகவி பாரதியின் பாடல் என் நினைவுக்கு வருகிறது. "இம்மென்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம்" என்ற முறையிலே அடக்குமுறைக் கொடுமைகள் தோன்றி, செம்மையெல்லாம் பாழாகி, கொடுமையே அறமாகி, ராணுவ வெறியாட்டம் நடந்த நேரத்திலே, நம்முடைய பண்பு மிக்க பாரதத்தின் பிரதமர், மகாகாளி பராசக்தியாக மாறி, கடைக்கண் வைத்தார். அதன் விளைவாக பன்னிரண்டே நாட்களில் வீழ்ந்தான் காவலன். வங்கக் குடியரசு பூத்துக் குலுங்குகிறது. அடிமைக்குத் தளையில்லை; யாரும் இப்போது அடிமையில்லை என்ற நிலை பிறந்திருக்கிறது.

சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு சர்வாதிகாரியாக யாஹியா கானின் பிடியிலே கிடந்து துன்புறும் வங்க மாவீரர் முஜ்பூர் ரஹ்மான் அவர்கள் விடுதலையை உலக நாடுகள் அனைத்தும் வலியுறுத்த வேண்டும் என்னும் முதல்வர் அவர்களின் கோரிக்கையை வரவேற்கிறேன்.

[திரு. டி. கே. சண்முகம்] [17th December 1971

புராணத்திலே கொடியவனாகத் திரிந்த மகிஷாசூரனை துர்க்காதேவி அழித்ததாகக் கூறப்படுகிறது. அதனால் "மகிஷா சூர்பத்மினி" என்ற பெயரும் துர்கைக்கு உண்டு என்று சொல்லப்படுகிறது. அது கற்பனை, கதை, என்று கேள்விப்பட்டிருக்கிறோம். உண்மையென்று நம்புவோரும் இருக்கிறார்கள். அது எப்படியானாலும் நம் கண்ணெதிரே இன்று நவீன மகிஷாசூரனாக வெறியாட்டம் ஆடிய யாகியாகானின் கொட்டத்தினை அடக்கினார் பிரதமர் இந்திரா அம்மையார். இந்த "யாகியா சூரமர்த்தினிக்கு" மீண்டும் கரம்கூப்பி சிரந்தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றேன்.

சோதனைக் காலம் வரும்போது தான் உண்மையான நண்பர்கள் யார், பகைவர்கள் யார் என்பது புரிகிறது. இந்த நேரத்திலே நாகரீகத்தை உலகுக்கெல்லாம் கற்றுக் கொடுப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அமெரிக்கப் பெருநாடு நடந்துகொண்ட முறை நமது வருங்கால சந்ததியார் கூட மன்னிக்க முடியாததாகும். அதே நேரத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பெரு நாடான சோவியத் குடியரசு நமக்குக் கொடுத்துள்ள பேராதரவு நாமடைந்துள்ள இந்த வெற்றிக்குப் பின்பலமாக அமைந்துள்ளது என்பதை நன்றியுணர்வுள்ள ஓர் இந்தியன் என்ற முறையிலும், நன்றி மறப்பது நன்றன்று என்ற வள்ளுவப் பெருந்தகையின் வழி வந்த தமிழ் மகன் என்ற முறையிலும், தமிழரசுக் கழகத்தின் சார்பில் நன்றி கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தினை வழி மொழிந்து அமைகிறேன். வணக்கம்.

* THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, this is a great hour in the history of our Nation. Not many words are necessary on my part as a teacher representative to associate myself with the historic Resolution, which the Hon. the Chief Minister has moved on the floor of this sacred House to-day. Sir, it is but fitting that our leader, the Hon. the Chief Minister of Tamil Nadu felicitates the leader of India, the Hon. the Prime Minister. These two are great leaders of democracy. To-day, democracy has triumphed over dictatorship. The forces of good have triumphed over the forces of evil. Secularism has triumphed over communalism. Large-heartedness and cosmopolitan attitude have triumphed to-day. All that is good in life have proved their triumph to-day. It is but proper that the 'Leader of Democracy' in Tamil Nadu—the Hon. the Chief Minister, who stands on the solid backing of the people of Tamil Nadu, as the accredited democratic representative in the Legislative Council—to-day felicitates another who is the leader of the country. Sir, I have great pleasure in associating myself with this historic Resolution. Sir, in war what is required is resolution, not the resolutions that are passed on the floor of these Legislatures, but a different kind of resolution—" Resolution in war and magnanimity in victory ", they say. If there is one embodiment of these virtues to-day, you see it in the Hon. the Prime Minister of India. What great resolution, what grit and determination she exemplified at a time of crisis in our country. It is easy to be calm and collected in ordinary times, but it is very difficult to bear one's head resolutely in a crisis. It is rhetorical to say : " I must stick to the truth, even though the World may stand against me ". Literally, the whole world stood against us—110 Nations stood against us while a



17th December 1971] [Thiru M. Rajah Iyer]

small block only supported us. Even though literally the world was against us, there was a lady with extra-ordinary determination and strength of will who said : " I will stick to my stand for it is correct ". Some time back, I had the good fortune to travel with a military officer. He led his regiment to put down the Naga rebels. Sir, the army was ambushed and many of the soldiers were destroyed by the wily, cunning and unscrupulous Nagas. The army found out their hide-out. They encircled their hide-out and would have decimated it in no time, but they got a call from Delhi saying " No reprisal, let them go ". With a heavy heart these people had to come back. This is not the kind of mentality you should have in war. " There are our enemies. We are ambushed. We are not able to take the war to their hide-out "—That was the kind of spirit that was in evidence when we were attacked once, twice or three times. But to-day, when the war was carried to our country, here was our leader who showed extra-ordinary resolution necessary to win the war. Having won the war, she has shown great magnanimity in saying : " We do not want to kill unnecessarily one life " and she took the initiative in calling for a cease-fire.

In every respect, I consider it to be a historic day when the great leader of Tamil Nadu felicitates the great leader of our country and I whole-heartedly associate myself with this great move.

Of course, the sudden termination of war has caused a little inconvenience also. To-morrow, the teachers of the City are to take out a big procession to condemn the Pakistani aggression and to dedicate themselves and to pledge their loyalty to the country. Sir, I hope that it will have to convert itself into a victory parade that we will see all over the country.

With these few words, I associate myself with this Resolution, Sir.

MR. CHAIRMAN : The hon. Lady Member will now speak.

* THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, I wish to associate myself with the historic resolution moved by our Hon. Chief Minister. I thank you, Sir, for giving me an opportunity to say a few words on this very mementous occasion when our Prime Minister has announced the cessation of war and the surrender of enemy troops last evening, and later in the night, announced a unilateral cease-fire on the western front, it was a clear indication of the highest principle of India's stand, for which this war was fought and won. In the world of to-day, when political morality in every country is almost at its lowest ebb, India's stand on the Bangla Desh has clearly shown to the world that India, the land of Mahatma Gandhi, has not forgotten the lesson that he had taught us. Many of us will remember how Mahatma Gandhi went on foot from village to village in the very places where this war was fought and won. It was given to India, 20 or 25 years later, to free that nation for which, I think, he spent all his strength, even fighting his own people in his own country when they differed from him.

[Thirumathi S. Manjubhashini] [17th December 1971

Sir, certain countries may have failed to recognise this fact that India stood for certain basic principles and fought this war and won; but people all the world-over have not come to regard India with very great respect. It was given to a women, Sir, to fight this war and win. Two wars were fought before in which we had to compromise. It was given to a woman to take a firm stand on this issue. It has proved to the world that the women who form 50 per cent of the population, can be given greater positions of responsibility and that they will carry them out with great dignity and honesty. Sir, on behalf of the women in this State. I wish to state that we pledge ourselves to carry out any measure, to contribute to the development and progress of this country without depending on any foreign aid. Jai Bangla. Jai Hind.

* THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, I rise to associate myself with this Resolution moved by the Leader of the House-the Hon. the Chief Minister felicitating the Prime Minister of India on the success that our troops have achieved in freeing Bangla Desh. Sir, I craved your leave to associate myself with this resolution specially because reference was made to the historic march the legislators made at a short notice of half-an-hour to the American Consulate. We can tell you that our hearts were palpitating, when we heard that the 7th Fleet was racing towards Chitagong while the time was being gradually extended for surrender. In this process, we thought, it was necessary to ask for the withdrawal of the 7th Fleet; and that was the main aim of our march yesterday to the American Consulate. As we went along, the cries were raised "Pakistan Down, Down" and "Bangla Desb Zindabad"; our aim was that the 7th Fleet must be withdrawn and that was the cry which we finally gave opposite the American Consulate. Sir, you can understand many of us who are past the age of 50 marching at a very brisk speed, toning up to the Nation's emergency need and calling for the destruction of the 7th Fleet. Sir, the 7th Fleet is somewhere in hiding and I hope that our Navy will chase it and see that it is well off our territorial waters.

Sir, on this occasion, what reminds me is of Rabindranath Tagore who sang a famous song-Gitanjali. He said:

"Where the mind is without fear
the head is held high

Where knowledge is free

Where the clear stream of reason is not lost
in the dreary desert sand of dead habit

Where the world is not broken up into fragments
by narrow domestic walls

Where the mind is led forward by thee into
ever-widening thought and action

Into the Haven of Freedom my father
let my country awake."



17th December 1971] [Thiru G. Vasantha Pai]

But, Sir, soon he saw a portion of the country, namely, Bangla Desh, which is to day being liberated by the Mukti Bahini and by the Indian troops was under dictatorship of Qaide-Azam, then Ayub Khan and then Yaha Khan. Sir, he must now be feeling very happy that this country from which he sang this song of liberation, meaning the whole of India, was liberated. Now that even a portion of the country which was under the slavery of a dictator has been liberated, I am sure the soul of Tagore will feel immensely gratified.

Sir, I associate myself with all the sentiments that have been expressed in this House and we feel that Bangla Deshis have lived up to the call of that great leader Sheik Mujibur Rehman and have liberated the country from the pangs of religious jehad of military junta of Pakistan and liberated themselves into a nation dedicated to secularism. Sir, our warm triubtes are paid to the freedom fighers of Bangla Desh. Our still warmer tributes are to the Indian Navy, Air Force and Army which went to the liberation of Bangla Desh, because we are dedicated to the principle that democracy is above dictatorship. Sir, in spite of the heavy odds in the World Assembly that were against us, of 110 to 11, we lived up to the reputation that we are a country loving democracy and that our Government is dedicated to the task of fighting against a dictatorship. We showed to President Nixon that he was no longer a leader of democracy, though his country fought for that very ideal. We show to him and we have demonstrated to the people of America that our affection for them will still be there, provided Mr. Nixon is thrown out of the Presidency in the next election.

Sir, on this occasion, was also pay our tributes to the Chiefs of Staff—the Army, the Navy and the Air Force—who stuck to their duty and did yeoman service to the country. Sir, our tributes are due to the Hon. the Prime Minister of India who showed that she is not only endowed with the great erudition of her father but also with the dauntless resolution of the great leader of this country. Sardar Vallabhbhai Patel. We feel that when these two great leaders have passed away from our midst, they have come in one person, namely, Indira Gandhi, the erudition and the firm resolution of both the persons having been combined in one and the same person.

Last but not least, may I join in the chorus of praise that has been sung today to the Soviet Union which stood by us through thick and thin, right from the time Kashmir was sought to be made an issue in the United Nations Organisation, in the liberation of Goa and in the last war and this war, in active participation with us and giving us all the confidence, when the American Navy's 7th Fleet, which is one of the strongest in the world, was moving towards our frontiers, threatening us and trying to bully us. But we, as a nation, stood against that bully and we have come out successful. Even though we were once under slavery

for over 300 years, we have risen into a nation which is robust in spirit and strength whom no power in this world can cow down. Sir, I join wholeheartedly with the resolution moved in this House and I wish that all our grtitude is conveyed to the Jawans, to the freedom fighters and to the persons at the helm of the Government behind whom we were solidly there. Thank you, Sir, once again for this opportunity to associate myself with this Resolution.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் மிக்க மகிழ்ச்சியுடனும், வெற்றி மகிழ்ச்சியுடனும் ஆதரிக்கின்றேன்.

வரலாற்றை, இந்திய வரலாற்றை வாஷிங்டனிலும், பீகிங்கிலும் உட்கார்ந்து தொலை பேசி மூலமாக, எழுதி விடலாம் என்று சிலர் கனவு கண்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த வாஷிங்டனுக்குச் சென்ற நமது பிரதமர் அவர்கள் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டு வரலாற்றினை எழுதக் கூடியவர்கள் இந்திய மக்கள் தான், அங்கே உள்ள பாகிஸ்தான் சர்வாதிகாரி அல்ல என்பதை இந்த வெற்றி மூலமாக நமக்குத் தேடித் தந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அமெரிக்கர்கள் தங்களது 7-வது கப்பற் படையைக் கொண்டுவந்து நம்மை மிரட்டிப் பார்த்தார்கள். வட வியட்நாமில் சீனாவுக்கு எதிராக நின்று அமெரிக்கர்கள் தோல்வி கண்டார்கள். அத்தகைய சீனாவுடன் உறவு கொண்டு இந்தியாவை மிரட்டிப் பார்க்கலாம் என்று அமெரிக்கர்கள் நினைத்தார்கள். ஆனால் அந்த கனவு பலிக்கவில்லை ஆனால் நாம் இன்று மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறோம். இது நம்முடைய படைகளின் வெற்றி மட்டும் அல்ல. இது நம் மக்களின் வெற்றியாகும்.

இந்தியப் படைகள் செல்லும் போதெல்லாம் அங்கே மக்கள் நம் படைகளுக்கு ஆதரவாக இருந்து இந்த வெற்றியினை நமக்கு அளித்திருக்கிறார்கள். ஆக, இந்தியப் படைகளை அழித்துவிடலாம், ஒழித்துவிடலாம் என்று கொக்கரித்தவர்கள், இறுதியான போர் என்று சொன்னவர்கள் எல்லாம் இன்று போர் நிறுத்தத்துக்கு வந்து விட்டார்கள். ஆகவே இன்றைய தினம் போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது, இந்திய பிரதமர் யுத்த நிறுத்த பிரகடனம் செய்திருக்கிறார்கள் என்ற செய்தியும் நமக்கு இப்போது வந்திருக்கிறது. இது நமக்கு ஒரு மகத்தான வெற்றி. வங்க தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து, சுதந்திர தேசம் உதயமாகியதைப் பாராட்டும் நேரத்திலே, இப்போராட்டத்தில் இன்னுயிர் தந்த வங்க தேச வீரர்களுக்கும் நமது பாராட்டுதலையும் மரியாதையையும் தமிழக ஆசிரியர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்ளுவதோடு, அம்மக்களின் புனர் வாழ்விற்காக எவ்வளவு உதவிகளைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்யத்தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, நாளைய தினம் நடைபெறவிருக்கும் ஆசிரியர்களின் கண்டனப் பேரணிக்கு நமது கல்வி அமைச்சர் அவர்கள் தங்கள் முழு ஆசியையும் அளிப்பார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு. வங்க தேசம் வாழ்க என்று வாழ்த்தி, எனது உரையினை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இங்கே நான் முன்மொழிந்த வங்க தேச வாழ்த்துத் தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் ஒரே மனதாக வரவேற்று, தங்க





ளுடைய இதய வாழ்த்துக்களை இணைத்து, வழிமொழிந்து உரையாற்றியிருக்கின்றார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன். யுத்தம் முடிந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு, உடனடியாக வேறு வேலைகளில் ஈடுபடலாம் என்று நம்மில் யாரும் எண்ணிவிடக் கூடாது. இப்போது ஆரம்பித்து முடிந்த யுத்தத்தின் விளைவுகளையெல்லாம் எதிர்த்து நாம் ஒரு யுத்தம் நடத்தியாக வேண்டியிருக்கிறது—என்பதை நிச்சயமாக நெஞ்சத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது cease-fir அதாவது சுடுவது நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுடுவது நிறுத்தப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் இப்போது இருக்கும் இடத்திலேதான் இருக்கும். அவைகளை எப்படி, எப்போது, எந்த முறையில் அகற்றுவது என்பது ஒரு பிரச்னை. அவற்றுக்குப் பிறகு, போரே இறுதியாக நிறுத்தப்பட்டு விட்டது என்ற நிலை ஏற்பட வேண்டும். நம்முடைய தீர்மானத்தில் வலியுறுத்திக்கூறப்பட்டிருப்பதைப் போல, வங்க தேசத்தின் விடுதலை வீரர், தானைத் தலைவர் முஜிபூர் ரஹ்மான் அவர்கள் விடுதலை பெற்றாக வேண்டும். இப்படிப் பல பிரச்னைகள் இருக்கின்றன. எனவே யுத்தம் முடிந்துவிட்டது என்று அவர்கள் துப்பாக்கியைக் கீழே போடுவதற்கு முன்பே நாம் நம்முடைய துப்பாக்கியைக் கீழே போட்டுவிடக்கூடாது என்று அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இது வரையில் ஒரு கோடி அகதிகளைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை நமது நாடு ஏற்றுக்கொண்டிருந்தது. இப்போது அதற்கும் மேலே, இன்னும் கொஞ்ச காலத்திற்கு வங்க தேசத்திலுள்ள ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்களைக் காப்பாற்றி, அவர்கள் அனைவருக்கும் நல்வாழ்வு மீண்டும் மலருவதற்கு ஆக்க வேண்டிய பெரும் பணிகள், பெரும் பொறுப்புக்கள் இந்தியாவிற்கு இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வங்க தேச சுதந்திர குழந்தையைக் காப்பாற்றி, அதை ஆளாக்கிவிடும் வரையில், அதை நாம் நம்முடைய அரவணைப்பில் வைத்துக்கொண்டிருக்கும் தேவையிருப்பதால், அதற்கு ஏற்ப பெரும் செலவுகள் எல்லாம் இந்தியாவிற்கு வந்து சேரும் என்பதையும் நாம் மறந்துவிடாமல், அதே நேரத்தில் வருங்காலத்தில் நமது நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் எல்லாம் எப்படி எப்படியெல்லாம் இருக்கும் என்பதையும் யோசித்துப் பார்த்திடவேண்டும். ஆகவேதான் நான் மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். யுத்தம் அறவே இறுதியாக முடிந்துவிட்டது என்று கருதிக்கொண்டு நமது யுத்தப் பணிகளை நிறுத்திவிடக்கூடாது என்று. இதை நான் சொல்லுவதற்குக் காரணம் தமிழகத்தின் சார்பிலே ஒரு பெரும் நிதியை போருக்காக வசூலிப்பதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும், தமிழகத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் பொது மன்றங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவினை அமைத்து—தமிழ் மாநிலத்தின் இந்தியப் பாதுகாப்புக் குழு என்ற முறையில்—இந்நிதியினை வசூலிப்பதற்கான முடிவினை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அது தொடர்ந்து நடத்தப்பட்டாக வேண்டும். ஆகவே வாக்கு அளித்தவர்கள் 'இனி அதை நிறைவேற்ற வேண்டுமா' என்ற கேள்வியினை தங்களுடைய உள்ளத்திலே எழுப்பிக்கொள்ளத் தேவையில்லை. நிறைவேற்றியே தீர வேண்டும், அதிலும் குறிப்பாக நமது சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் இந்த யுத்த நிதிக்கு ஒரு தொகையை அளிப்பதாக

[டாக்டர் மு. கருணாநிதி] [17th December 1971

வாக்களித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குத் தருவதாக வாக்களித்தவர்களில் இன்னும் கொடுக்காதவர்கள் பலர் இருக்கின்றார்கள். அதற்குள் இன்னொரு நிதி வந்து விட்டது. இதிலும் இன்னும் உடனடியாகக் கொடுக்காதவர்கள் பலர் இருக்கின்றார்கள். யார் யார் கொடுத்தார்கள் என்ற பட்டியல் அடுத்துவரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் வைக்கப்பட இருக்கிறது. யார் யார் கொடுக்கவில்லை என்ற பட்டியல் நிச்சயம் வைக்கப்பட மாட்டாது. கொடுத்தவர்கள் பட்டியல்தான் வைக்கப்படும். ஆகவே அந்தப் பட்டியல் வைக்கப்படுவதற்கு முன்பு யுத்த நிதிக்கான தொகையினை அனைவரும் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதிலே நமது மாநிலம் முன்னோடியாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆர்வத்தோடு இதில் ஈடுபட்டால்தான், நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு நாடே நம் பின்னால் நிற்கும் என்று கூறிக்கொண்டு, நேற்றைய தினம் நமது சட்டமன்ற உறுப்பினர்களும் பேரவை உறுப்பினர்களும் அமெரிக்க தூதரகத்திற்கு இங்கேயிருந்து ஊர்வலமாகச் சென்று தங்களுடைய உணர்ச்சியினைக் காட்டிக்கொண்டதற்கும், தமிழ்நாடு எப்படிப்பட்ட அக்கறையோடு இப்பிரச்சனையை அணுகுகிறது என்பதை எடுத்துக்காட்டியதற்கும், அவர்களுக்கு உள்ள உள்ளக்கொந்தளிப்பினை எடுத்துக் காண்பிக்கும் நேரத்தில் தமிழ்நாடு கடைப்பிடிக்கும் பண்பாட்டை அந்த ஊர்வலத்தில் காண்பித்துக் கொண்டதற்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட மேலவை உறுப்பினர்களையும் பேரவை உறுப்பினர்களையும்—அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். இந்த உணர்ச்சி இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் பரவி நிற்கும் உணர்ச்சியாகும். கடந்த காலங்களிலே இப்படிப்பட்ட நேரங்களிலே இந்தியா ஒன்றுபட்டு நிற்கும் என்று மும்முறை உலகத்திற்கு உணர்த்தியிருக்கின்றது. சீன ஆக்கிரமிப்பு நடைபெற்ற காலத்திலே, உங்களுக்கெல்லாம் நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகிறேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று காலையில்தான் வேலூர் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். விடுதலையான பேரறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டும் வகையில் அன்று வேலூர் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் நேரத்தில் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'நம்மில் இருபதாயிரம் தோழர்களுக்கு மேற்பட்டவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டோம். அவை அனைத்தையும் மறந்து விடுவோம். உள்ளத்தழும்புகளைத் துடைத்து எறிந்து உடலில் ஏற்பட்ட தழும்புகளைத் தடவிக்கொடுத்துக்கொண்டு, இன்றைக்கு நாட்டைப் பாதுகாப்பதற்கு சீனா ஆக்கிரமிப்பதை எதிர்த்து நிற்க நாம் அனைவரும் நமது இந்தியப் பிரதமரின் தலைமையில் ஒன்று கூடுவோம்' என்று குரல் கொடுத்தார்கள். அது போன்றே இன்றைக்கு அனைத்துக் கட்சியினரும் நமது பிரதமரின் தலைமையில் ஒன்றுபட்டு 'இந்தியா ஒன்றே' என்று ஒருமித்த குரலில் நமது ஒற்றுமையினையும் ஐக்கியத்தினையும் உலகிற்கு எடுத்துக்காண்பித்தோம். இதையடுத்து அயூப்கான் காலத்திலே பாகிஸ்தான் ஆக்கிரமிப்பினைத் தொடுத்தபோதும் இந்தியாவிலுள்ள அனைத்துக் கட்சிகளும் தங்கள் அரசியல் வேற்றுமைகளை மறந்து, கட்சி மாச்சரியங்களையெல்லாம் தூரத்தள்ளிவிட்டு, ஒரே அணியில் நின்றன. அதையடுத்து இப்போது ஏற்பட்டுள்ள சோதனையிலும் இந்தியா தான் யார் என்பதை அனைத்து உலகத்திற்கும் காண்பித்துக்கொண்டிருக்கிறது



17th December 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

இது நீடிக்க வேண்டும். 'போர் நின்றுவிட்டால் இது நீடிக்குமா' என்ற ஐயப்பாட்டினை ஒரு சில எதிர்க் கட்சித் தலைவர்களும் நண்பர் திரு. ஆறுமுக சாமி அவர்களும் எடுத்துச்சொன்னார்கள். அவர்களிடம் நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம், இது நீடிக்கும், நீடிக்க வேண்டும் என்பதுதான். கொள்கை வேறுபாடுகள், கருத்து மாறுபாடுகள் நமக்குள் ஆயிரம்தான் இருந்தாலும், சோதனைக் காலங்களிலே என்றைக்கும் நாம் ஒன்று சேரக்கூடியவர்கள் என்ற உணர்ச்சி மட்டும் நம் உள்ளத்தில் என்றென்றைக்கும் இருக்கும் என்பது மட்டுமில்லை, எத்தகைய கருத்து வேறுபாடுகளும் நமது இந்தப் பண்பாட்டினை நிச்சயமாகக் குலைத்துவிடாது என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதற்குத் தக்க உதாரணமாகத்தான் சூழ்நிலை இன்றைக்கு அமைந்திருக்கிறது என்று எடுத்துச்சொல்லி மாநில அரசின் சார்பிலே இப்போர் மூண்ட காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பைத் தந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுவதோடு, நன்றி தெரிவித்துவிட்ட காரணத்தினாலேயே அத்தியாயம் முடிந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிடாமல், மேலும் மேலும் இத்தகைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பினை நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இத் தீர்மானத்தினை இம்மாமன்றம் முழு மனத்தோடு, ஒரு மனத்தோடு ஆதரித்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*மிஸ்டர் சேர்மன்:* இந்தத் தீர்மானத்தை உங்களுடைய ஒப்புதலுக்கு வைப்பதற்கு முன்னால், நானும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று இருக்கின்ற வழக்கத்தின் காரணமாகவே, சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். கிழக்கு வங்கம் விடுதலை பெற்றது என்று சொன்னால், சூரியன் கிழக்கே உதிக்கிறான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதைப் போலவே மேற்குத் திசையில் சூரியன் மறைகிறான் என்பதையும் நாம் நம்முடைய உலகத்தினுடைய ஒரு பகுதியில் இருக்கின்றவர்கள் கூறுவதால் ஒப்புக்கொள்வது உண்மையாகும். எனக்கிருக்கிற கவலையெல்லாம் யாகியா கான் வங்கத்தில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றிப் பார்க்க மறுத்துவிட்டாலும், தேர்தலில் நின்று 169 இடங்களில் 167 இடங்களைக் கைப்பற்றிய அவாமி லீக் கட்சியை மறந்து விட்டாலும், அதனுடைய தலைவரான மிகச் செல்வாக்கு பெற்ற முஜிபூர் ரஹிமான் அவர்களை மறந்து விட்டாலும், ஒரு 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் என்ன நடந்தது என்பதை அவர் படிக்க மறந்துவிட்டாரே என்பதுதான். உலகத்திலே வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், நமக்கு இரண்டு சர்வாதிகாரிகள் நம் கண்களுக்குத் தென்படுவார்கள். இந்த இரண்டு சர்வாதிகாரிகள் சாதாரண சர்வாதிகாரிகள் அல்ல. மூன்று லட்சம் ராணுவ வீரர்களை ஒரு கட்சியாக அமைத்து அந்தக் கட்சிக்கு பாசிஸ்டு இயக்கம் என்று பெயர் வைத்து, ஹிட்லரின் கைக்கருவியாக உலகப் போர் நடத்திய முஸோலினி மிலான் நாட்டுத் தெருவில் செத்தபோது, அந்தப் பிணத்தை எடுக்க இரண்டு நாட்கள் யாரும் வராமல், கழுகுகள் கொத்தித் தின்ற பிறகு பிணம் எடுக்கப்பட்டது என்பதை யாகியா கான் மறந்து விட்டார். அவருக்குத் துணையாக நின்ற ஹிட்லர், முதல் மகாப்போரில் ஜெர்மன் அவமானப்பட்டது என்ற ஓரே காரணத்திற்காக, பல்வேறு நாடுகளின்

மீது படையெடுத்து, கடைசியில் அந்தப் பொதுவுடைமை நாட்டின் தலைநகரமான கிரெம்லின் மாளிகையில் போய், இனி தப்ப முடியாது என்று கருதி, தானும் தன்னுடைய மனைவி ஈவாபிரானும் மாலை 5 மணிக்கு விஷம் அருந்தி விட்டு இறந்தார்கள் என்பதை மறந்து விட்டார். இவைகளையெல்லாம் விட நமக்கிருக்கிற பெருமை பட்டாளத்தில், நடந்த சண்டையில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 14 பேர்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். நமக்குப் பின்னாலே தான் பஞ்சாபியர்கள் 100-க்கு 10 பேர் என்று இருந்தார்கள். வேறு எந்தப் போரிலும் இல்லாத அளவிற்கு இதில் இருந்தார்கள் என்று நண்பர் ராஜா அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது, இதை எனக்கு அவர் குறிப்பிட்டார்கள். முந்தா நாள் ராஜாஜி மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் கூட ராஜா "தமிழர்கள் ஹையர் பர்செண்டேஜில் இருந்தார்கள்" என்று சொன்னார்கள். "ஹையஸ்டு பர்செண்டேஜ்" என்று சொல்லுங்கள் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்ள எழுந்தபோது, கவர்னர் அவர்கள் தடுத்து நிறுத்தி விட்டார்கள். இல்லாவிட்டால் அவரை ஹையஸ்டு பர்செண்டேஜ் என்று சொல்லச் சொல்லியிருப்பேன்.. 100-க்கு 14 பேர்கள் தமிழர்கள் அங்கே முன்னாலே நிற்கிறார்கள் என்ற பெருமை நமக்கு உண்டு. அந்த 14 பேர்களையும் உயிரோடு பார்ப்போமா என்ற நம்பிக்கையில்லை. எனினும் இந்த வரலாற்றில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள் என்பதையெல்லாம் படிக்கிறபோது, அத்தகையோர் தம்முடைய ரத்தத்தை போருக்குப் பயன்படுத்தினார்கள் என்ற பெருமை மிக்க வரலாறாக ஆகும் என்று பார்க்கிறோம். ஆகையினாலே தான் இந்தப் போர் நமது திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னது போல், 4-ம் தேதி ஆரம்பித்தது. உங்களையெல்லாம் விட நான் கொஞ்சம் அதிருஷ்டசாலி என்பேன். நீங்கள் பாகிஸ்தான் விமானம் எப்படியிருக்கும் என்று பார்க்கவில்லை. நான் 4-ம் தேதி பகல் 3 மணிக்கு டில்லியில் பார்த்தேன். ஆனால் நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும் நாம் சண்டையை நேரடியாகப் பார்த்ததில்லை. எம்டன் குண்டு போட்டான் என்பதற்கு அடையாளம் இருக்கிறது. ஏதோ ஒரு பொருட்காட்சி சாலையாகப் பார்க்கிறோம். எம்டன் என்பவன் ஏன் வந்தான், எப்படி வந்தான், ஏன் குண்டு போட்டான் என்ற வரலாறு சிறுவர்களுக்குத் தெரியாது. அந்த அளவிலே பாதுகாப்பாக கடைசியில் இருக்கிறோம் என்பதல்ல. கடல் ஓரத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. கடைசியில் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே, கடல் பக்கத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது. இந்த செவந்த் ஃப்ளீட் ( Seventh Fleet ) என்று சொல்கிற அந்தக் கப்பல் இங்கே வந்துகொண்டிருப்பதற்கு வேலையில்லை. அது ஷியாங்கே ஷேக்கைக் காப்பாற்றி நின்று கொண்டிருந்தது. அவர் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருந்தார். தய்வானைக் காப்பாற்ற நின்று கொண்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையில் அந்தத் தய்வானைப் பிடுங்கி வெளியே விட்டு சினாவை உள்ளே அனுப்பி, தய்வானுக்கு வேலையில்லாமல் போயிற்று. அவ்வளவு பெரிய கப்பல், 150 ஆகாய விமானங்களை வைத்துக் கொண்டிருக்கிற கப்பல் அது. அதன் கூடாரங்கள் விரிந்தவுடனே, ஆகாய விமானம் பறக்கும் என்று அதை வர்ணிக்கிறபோது, அதற்காக நாம் பயப் படத் தேவையில்லை. அதை நம்மை பயம் காட்ட அனுப்புகிறார்கள். சோறு தின்னாத பிள்ளைக்கு அதன் தாயார் 5 கண்ணன் வரான், 6 கண்ணன் வரான்





என்று சொல்வாள். அதைப் போல் இருக்கிறது. நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு வீரக் கதைகளைச் சொல்வதில்லை. 5 கண்ணன், 6 கண்ணன் என்று சொல்லி, அவன் சாகின்ற வரையிலும் அந்த நிலைமையில் இருக்கிறான். வேறு ஒன்றும் நடக்கப்போவதில்லை. முதல்வர் அவர்கள் சொன்ன மாதிரியும், ராஜாஜி ஹாலில் எடுத்துக் கொண்ட முடிவின்படி நம் முயற்சியில் கொஞ்சமும் தளராமல் நமக்கிருக்கிற வசதிகளைக் குறைத்துக் கொண்டாகிலும் அந்த அம்மையார் கையை ஓங்கச் செய்வேன் என்று திருமதிபஞ்சயாஷிணி அவர்கள் சொன்னார்கள். பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வெற்றி தேடித் தந்தார்கள், ஆகவே எங்களுக்கு 50 சதவிதம் வரவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். இப்போதே இந்த நிலைமை வந்து விட்டது. அவர்களுக்குக் கொடுப்பதில் தகராறு இல்லை. பெண்களுக்கு தமிழகத்தில் பெயருக்குப் பின்னாலே ஜாதிப் பெயர்கள் கிடையாது. அவர்கள் ஜாதிப் பெயர்களைப் கேட்டுக்கொள்வதில்லை. ஆண்கள் தான் கேசவலு நாயுடு, அரங்கசாமி முதலியார், ஆதிநாராயண செட்டி என்று ஜாதிப் பெயர்களைப் போட்டுக் கொள்கிறார்கள். பெண்கள் பின்னாலே அப்படி இருக்கிறதா? சத்தியவாணி பெயருக்குப் பின்னாலே ஜாதி உண்டா? தமிழர்களில் பெண்கள் தான் ஃபார்வர்டு, சோஷலிஸ்டு. அவர்களுக்குப் பெருமை தருவதில் என்றும் பின்னடையப்போவதில்லையென்பதையெல்லாம் சொல்லிக்கொண்டு இந்த தீர்மானத்தை உங்களுடைய ஒப்புதலுக்கு வைக்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"வங்க தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இம்மன்றம் தனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது. வங்காள தேசத்தின் உரிமைப் போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தானின் போர் வெறிக்குத் தக்க பாடம் கற்பித்த இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு இந்த சட்ட மன்ற மேலவை பாராட்டுதல்களைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புக்கள் ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள், வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இந்த சட்ட மன்ற மேலவை தனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜ்பூர் ரஹிமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த சட்டமன்ற மேலவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும் இந்தியாவுக்கு விரோதமாக பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்கு துணை நின்ற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்த சட்ட மன்ற மேலவை இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது."

The Resolution was put and carried unanimously.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. to-morrow.

The House then adjourned.

[17th December 1971

## APPENDIX I.

(*Vide* answer to Starred Question No. 224 on page 17.)

(அ) ஆம்.

(இ) சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருவாரியான மக்கள் 1971 மே திங்களில் தொற்றும் தன்மையுள்ள ஒருவகை கண் நோயினால் ( Conjunctivities ) பாதிக்கப்பட்டனர்.

2. 1971 மே மாதத் தொடக்கத்தில் இந்நோய் பரவுவதாக அறிவிக்கப் பட்டது. இது விரைவில் தொற்றுநோயாகப் பரவத் தொடங்கி மே மாதம் மூன்றும் வாரத்தில் உச்ச நிலையை அடைந்தது. அப்போது இந்நோயினால் பாதிக்கப்பட்ட 70 முதல் 80 சதவீத நோயாளிகள், மருத்துவமனைகளில் வெளி நோயாளிகளாகச் சிகிச்சையளிக்கப்பட்டனர். இத்தொற்றுநோய் முதற்கண் ஒரு கண்ணில் பற்றி விரைவாக மற்றொரு கண்ணுக்குப் பரவுகிறது. இதனால் இமைப்புருவங்கள் பெரிதும் வீங்கிக் கொண்டு, கண்ணிலே உறுத்தல் அதிகமாகிறது. பலருக்கு இமைகளில் ரத்தப்போக்கு காணப்படுவதுடன் இமையும் வீங்கி விடுகிறது.

3. சிலருக்கு விழி வெண்படலத்தில் மேலெழுந்த வாரியாகப் புள்ளிகள் தோன்றி, அதனால் கண் பார்வை மங்கிவிடுகிறது. இந்நோய் கண்டுள்ளவர் களுக்கு காதுக்கு முன்னேயுள்ள சுரப்பி வீங்கிவிடுகிறது.

4. இந்நோய் வாலாயமாக கிருமி நோயால் இமைப் படலத்தில் ஏற்படும் கண் நோயன்று. ஆனால் காற்றின் மூலம் வந்த நச்சுக் கிருமிகளினால் பரவும் நோயென ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

(உ) இந்நோய்க்கு 'குளோராம்பெனிகால்' நீரம் மருந்தும் 'சொப்ரா மைசின்' நீர்ம மருந்தும் பயன்படுத்தப்பட்டன. காதுக்கு முன்னேயிருக்கின்ற சுரப்பி வீங்கியுள்ள நோயாளிகளுக்கு 'சல்பானிலமைடு' மாத்திரைகளும் 'டெட்ராசைகிளினும்' பயன்படுத்தப்பட்டன. நோயாளிகளுக்கு ' சில்வர் சால்ட் (அர்கிரால் 20 சத விகிதம்) கொண்டும் சிகிச்சையளிக்கப்பட்டது.

மாதிரிகள் குன்னூரிலுள்ள பாஸ்டர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டன. நோயாளிகளின் இமைப்புருவங்களிலிருந்தும், தொண்டையிலிருந்தும் எடுக்கப் பட்ட கசிவு நீர்மப் பொருள்களை குன்னூர் பாஸ்டர் நிலையம் ஆய்வு செய்து, இந்நோய் "டிரேனைவரஸ்" 7 ஆம் வகையைச் சேர்ந்த நச்சுக் கிருமி களினால் ஏற்படுகிறதென்று அறிவித்துள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கைக்குட்டைகளையும், துண்டுகளையும் தொடவேண்டாமென்றும், நீச்சல் குளங்களிலும், குளங்களிலும் நீராட வேண்டாமென்றும் மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

இந்நோய் பரவி வருவது குறித்து மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மாவட்ட நல அதிகாரிகள், வட்ட மருத்துவமனை மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்நோய்க்குச் சிகிச்சையளிக்கப் படவேண்டியமுறை, மேற்கொள்ளவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு விரிவான கட்டளைகள் அனுப்பப்பட்டன.

இப்போது ஒரு சிலர்தான் சிகிச்சை பெறுவதற்கு அரசு கண் மருத்துவ மனைக்கு வருகின்றனர்.



17th December 1971]

## Appendix II

(*Vide* answer to Starred Question No. 232 on page . . . 23.)

(அ) பிறமலைக்கள்ளர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக 4 உயர்நிலைப்பள்ளிகள், 34 இடைநிலைப்பள்ளிகள், 204 ஆரம்பப் பள்ளிகள் மதுரை மாவட்டத்தில் அரசால் நடத்தப் படுகின்றன. மேலும் 16 மாணவ மாணவிய ருக்கான உணவு இல்லங்களும் நடத்தப்படுகின்றன. நடப்பு ஆண்டில் மேலும் இரு இல்லங்கள் திறக்கப்படவிருக்கின்றன. விடுதியில் தங்கியிருப்பவர் களுக்கு ஆண்டுக்கு இருமுறை இலவச சீருடை வழங்கப்படுகிறது. பள்ளிக் கல்விக்காக மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. மேலும் கல்லூரிக் கல்வி உயர்படிப்புக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை கள் வழங்கப்படுகின்றன. அரசினரால் நடத்தப்படும் பள்ளிகளில் படிக்கும் பிறமலைக்கள்ளர் மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு, சீருடை, மற்றும் சிலேட்டுப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

இதுவன்றி பிறமலைக்கள்ளர்களுக்கு விவசாய முன்னேற்றத்திற்காக உழவு மாடுகள், விவசாய கிணறுகள் வெட்டுவதற்கு உதவிகள் முதலியனவும் வழங்கப் படுகின்றன.

பிறமலைக்கள்ளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக செக்கணூ ரணியில் பல நோக்கு பொறியியல் பட்டறை ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் ஆண்டுதோறும் 15 பேர் பயன் பெற்று வருகின்றனர். உசிலம்பட்டியில் தையல் மற்றும் பூவேலை பயிற்சி நிலையம் ஒன்றும் பிறமலைக் கள்ளர் பெண்களுக்காக நடப்பு ஆண்டில் துவக்க அரசு அனுமதி வழங்கி யுள்ளது. இந்த ஆண்டு (1971–72) பிறமலைக்கள்ளர் சீரமைப்பு பணிகளுக்காக ரூ. 71,50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

## APPENDIX III.

(*Vide* answer to Starred Question No. 235 on page 724.)

**விவரப்பட்டியல்**

கீழ்க்கண்ட ஆலயங்களுக்கு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளன.

**மதுரை பிரிவு.**

1. கூடலழகர் கோயில், மதுரை.
2. ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம், மதுரை.
3. ஸ்ரீ இராமநாதசுவாமி தேவஸ்தானம், இராமேஸ்வரம்.
4. ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.
5. ஸ்ரீ பூவநாதசுவாமி கோயில், கோயில்பட்டி.
6. ஸ்ரீ சுவாமி நெல்லையப்பர் காந்தியம்மன் கோயில், திருநெல்வேலி.
7. ஸ்ரீ ஏகாந்தலிங்கசுவாமி கோயில், காண்டீஸ்வரம், ஸ்ரீவைகுண்டம் வட்டம்.

[17th December 1971

### கோயம்புத்தூர் பிரிவு

1. ஸ்ரீ மகோதீஸ்வரர் சுவாமி கோயில், கொடுமுடி, ஈரோடு வட்டம்.
2. ஸ்ரீ ரங்கநாதசுவாமி தேவஸ்தானம், காரமடை, அவிநாசி வட்டம்.
3. ஸ்ரீ தோனியம்மன் கோயில், கோயம்புத்தூர்.
4. ஸ்ரீ பட்டீஸ்வர சுவாமி கோயில், பேரூர், கோயம்புத்தூர் வட்டம்.
5. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், சென்னிமலை, ஈரோடு வட்டம்.
6. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், சிவன்மலை, தர்மபுரி வட்டம்.
7. ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில், குமாரசாமி பேட்டை, தர்மபுரி வட்டம்.
8. ஸ்ரீ மாரியம்மன் கோயில், ஊட்டி.
9. ஸ்ரீ சங்கமேஸ்வரர்சுவாமி கோயில், பவானி.

### திருச்சி பிரிவு

1. ஸ்ரீ ரங்கநாதசுவாமி தேவஸ்தானம், ஸ்ரீரங்கம்.
2. ஸ்ரீ மாரியம்மன் கோயில், சமயபுரம், திருச்சி மாவட்டம்.
3. புதுக்கோட்டை தேவஸ்தானம் (14 கோயில்கள் 14 கமிட்டிகள்).
4. ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் & தண்டாயுதபாணிசுவாமி கோயில், செட்டிகுளம்.

### சென்னை பிரிவு

1. ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில், நுங்கம்பாக்கம், சென்னை-34.
2. ஸ்ரீ வல்லீஸ்வரர் கோயில், மயிலாப்பூர், சென்னை-4.
3. ஸ்ரீ ஸ்ரீனிவாசபெருமாள் கோயில், எழும்பூர், சென்னை-8.
4. ஸ்ரீ கட்சாலீஸ்வரர் கோயில், அர்மீனியன் தெரு, சென்னை.
5. ஸ்ரீ வடபழனி ஆண்டவர் கோயில், வடபழனி, சென்னை-26.
6. ஸ்ரீ கங்காதரேஸ்வரர் கோயில், புரசவாக்கம், சென்னை-7.
7. ஸ்ரீ திருவட்டீஸ்வரர் கோயில், திருவட்டீஸ்வரன்பேட்டை, சென்னை-7.
8. ஸ்ரீ கோதண்டசாமி கோயில், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்.
9. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம்.
10. ஸ்ரீ சுந்தரேஸ்வரர்சுவாமி கோயில், கோவூர், செங்கல்பட்டு மாவட்டம்.
11. ஸ்ரீ கட்சாலீஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்.
12. ஸ்ரீ மருந்தீஸ்வரர் கோயில், திருவான்மியூர், சைதாப்பேட்டை வட்டம், செங்கல்பட்டு.
13. ஸ்ரீ வேதகிரீஸ்வரர் கோயில், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம்.
14. ஸ்ரீ தேவிகருமாரியம்மன் கோயில், திருவேற்காடு, செங்கல்பட்டு மாவட்டம்.



17th December 1971]

15. ஸ்ரீ நித்தியகல்யாணிசுவாமி கோயில், திருவிடந்தை, செங்கல்பட்டு மாவட்டம்.
16. ஸ்ரீ நாகேஸ்வரர்சுவாமி கோயில், திருநாகேஸ்வரம், செங்கல்பட்டு மாவட்டம்.
17. ஸ்ரீ அனந்தீஸ்வரர் கோயில், சிதம்பரம், தென்ஆற்காடு மாவட்டம்.
18. ஸ்ரீ தேவநாதசுவாமி கோயில், திண்டிவனம், தென்ஆற்காடு மாவட்டம்.
19. ஸ்ரீ பாடலீஸ்வரர் கோயில், திருப்பாப்புலியூர், தென் ஆற்காடு மாவட்டம்.
20. ஸ்ரீ நாகம்மன் கோயில், தம்பூர், தங்கல், தென் ஆற்காடு மாவட்டம்.
21. ஸ்ரீ பிரலயநாதீஸ்வரர் கோயில், பெண்ணாடம், தென் ஆற்காடு மாவட்டம்.
22. ஸ்ரீ சத்தியஞான சபை, வடலூர், தென் ஆற்காடு மாவட்டம்.
23. ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் கோயில், விருதாசலம், தென் ஆற்காடு மாவட்டம்.
24. ஸ்ரீ நெய்வேலி க்ரூப் கோயில்கள், நெய்வேலி.
25. ஸ்ரீ அருணாசலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டம்.
26. ரேணுகாம்பாளம்மன் கோயில், படவேடு, வட ஆற்காடு மாவட்டம்.
27. ஸ்ரீ பார்த்தசாரதி கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-5.
28. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், குமரகோட்டம், காஞ்சிபுரம்.

### தஞ்சாவூர் பிரிவு.

1. ஸ்ரீ சிவலோகநாதசுவாமி கோயில், அச்சலபுரம், சீர்காழி வட்டம்.
2. ஸ்ரீ வால்மீகிநாதசுவாமி கோயில், தீபம்பல்புரம், பாபநாசம் வட்டம்.
3. ஸ்ரீ ஆத்மநாதசுவாமி கோயில், ஆவுடையார் கோயில், அறந்தாங்கி வட்டம்.
4. ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் கோயில், அம்பல், நன்னிலம் வட்டம்.
5. ஸ்ரீ ருத்ராபதீஸ்வரர் கோயில், திருச்செங்காட்டான்குடி, நன்னிலம் வட்டம்.
6. ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் வட்டம்.
7. ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில், அதனூர், பட்டுக்கோட்டை வட்டம்.
8. ஸ்ரீ சட்சிநாதசுவாமி கோயில், அவாலியநல்லூர், பாபநாசம் வட்டம்.
9. ஸ்ரீ தேனுபரீஸ்வரர் கோயில், பட்டீஸ்வரம், கும்பகோணம் வட்டம்.
10. ஸ்ரீ வேதாரணீஸ்வரர் கோயில், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி வட்டம்.
11. ஸ்ரீ சௌரிராஜ பெருமாள் கோயில், திருக்கண்ணபுரம்.
12. ஸ்ரீ கல்யாணசுந்தரேஸ்வரர் கோயில், மிமிசால், அறந்தாங்கி வட்டம்.
13. ஸ்ரீ மாசிலாமணிநாதசுவாமி கோயில், தரங்கம்பாடி, மாயூரம் வட்டம்.

2. திருப்பணிக்குழு அமைக்கப்பட்ட பட்டியலில் இதைத் தவிர, உதவி கமிஷனர்களின் மேற்பார்வையில் உள்ள 277 கோயில்களிலும் திருப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

*Saturday, the 18th December 1971.*

The House met in the Council Chamber, Fort St. George, at four of the Clock, Mr. Chairman (The Hon. Thiru C. P. CHITRA-RASU in the Chair.

## I. OBITUARY REFERENCE *RE* DEATH OF THIRU M. SIVASUBRAMANIA PANDIAN, FORMER MEMBER OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

MR. CHAIRMAN : I have to inform the House, with deep regret, of the demise of Thiru M. Sivasubramania Pandian, former Member of the Tamil Nadu Legislative Council on the 4th December 1971 at Urkadu village, in Ambasamudram taluk.

He was a Member of the Tamil Nadu Legislative Council during 1964-70 representing the Tirunelveli Local Authorities Constituency.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, all the hon. Members stood in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

## II. QUESTIONS AND ANSWERS

### STARRED QUESTIONS.

*Employees Strike.*

* 195 † *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the employees of New Woodlands Hotel at Mylapore, Madras resorted to a strike on the morning of 3rd August 1971 :

(*b*) whether there was any clash between the employees and the management as a result thereof ; and

(*c*) if so, the details thereof?

---

† Postponed from the List of Questions for 16th December 1971.

[18th December 1971

### தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

*திரு. பி. திருஞானசம்பந்தம் :* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மைலாப்பூரில் உள்ள நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் 3-8-1971-ம் நாள் காலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) அதன் விளைவாக தொழிலாளர் நிர்வாகிகளுள் மோதல் ஏற்பட்டதா?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, (அ), (இ) & (உ) சென்னை மயிலையில் உள்ள நியூ உட்லன்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்கள் 3-8-71ல் வேலை நிறுத்தம் செய்யவில்லை. ஆனால் அன்று ஓட்டல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தின் உண்மை ஊழியர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அன்று பிற்பகல் 1 மணி முதல் கதவடைப்பு செய்ததாக நிர்வாகத்தினர் அறிவித்தனர்.

பின்னர் 21-8-71 அன்று நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர் களுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி 26-8-71 அன்று நிர்வாகத்தினர் ஓட்டலைத் திறந்தனர். மேலும் இருதரப்பாருக் கிடையே சமாதானம் ஏற்பட்ட காரணத்தால் நிர்வாகத்தினரும் யூனியன் தொழிலாளர்களும் ஏற்கெனவே கொடுத்திருந்த போலீஸ் புகார்களை திரும்பப் பெறுவதற்கு ஒப்புக்கொண்டனர்.

### *Clandestine Weapons Factory*

* 196 † *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM AND THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Police Department has unearthed on 17th August 1971 a factory which was manufacturing weapons clandestinely at Coimbatore town; and

(*b*) whether any person has been arrested in this connection?

### ரகசிய ஆயுத தொழிற்சாலை.

*திரு. பி. திருஞானசம்பந்தம்*
*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கோவை நகரில் ரகசிய ஆயுத தொழிற்சாலை ஒன்றை 17-8-1971-ம் நாள் காவல் துறையினர் கண்டு பிடித்தனரா?

(இ) இது தொடர்பாக யாரேனும் கைது செய்யப்பட்டனரா?

† Postponed from the List of Questions for 16th December 1971.



18th December 1971]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(1) எஸ். தேவதாஸ்.

(2) எம். வெள்ளிங்கிரி.

(3) ஜி. குமரன்.

(4) டி. ரத்தினம்.

(5) பி. வி. நாராயணன்.

(6) ஜாய் மாஸ்டர்.

(7) எம். சுகுமாரன்.

### *Non-Gazetted Government Officers of the Revenue Department, Thanjavur.*

* 197 † *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there was any protest demonstration and one-hour strike by the Non-Gazetted Government Officers of the Revenue Department, Thanjavur about 16th June 1971 ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the action taken thereon?

### தஞ்சாவூர் வருவாய்த் துறையைச் சேர்ந்த என்.ஜி.ஓ.வினர்.

*திரு. எம். ஆறுமுகசாமி :* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் வருவாய்த் துறையைச் சேர்ந்த என்.ஜி.ஓ. வினர் 16-6-1971-ஆம் நாள் அளவில் கண்டன ஆர்ப்பாட்டமும், ஒரு மணி நேர வேலை நிறுத்தமும் செய்தனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* (அ) ஜூன் 16-ம் நாளன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன் அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்கள் அரை மணி நேரம் அலுவலகத்திற்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

(இ) சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் ஓட்டுக்கள் எண்ணப்படும் போது ஒரு இளநிலை எழுத்தரிடம் ஒரு அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் நடந்து கொண்டதாகக் கூறப்பட்டுள்ள முறையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

(உ) மாவட்ட ஆட்சியாளரிடம் இருந்து கிடைக்கப் பெற்ற அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு இது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது.

† Postponed from the list of questions for 16th December 1971.

[18th December 1971

*Toddy Shops*

* 198 † *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to place a paper on the table, indicating the number of toddy shops opened districtwise?

**கள்ளுக் கடைகள்.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாவட்ட வாரியாகத் திறக்கப்பட்ட கள்ளுக்கடைகள் எத்தனை என்பதைக் குறிப்பிடும் விவர அறிக்கை ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சட்டமன்றத்தில் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, இதற்கு முன்பு மாநிலத்தில் எத்தனை கள்ளுக்கடைகள் இருந்தன? இப்போது திறக்கப்பட்டிருக்கும் கள்ளுக்கடைகள் ஜனத்தொகை அடிப்படையிலா, விஸ்தீரணத்தின் அடிப்படையிலேயா? எந்த விதத்தில் இவ்வளவு கள்ளுக்கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அங்கங்கு இருக்கிற மக்கள் தொகையினுடைய அடிப்படையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்தக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பு எவ்வளவு கடைகள் இருந்தன என்று சொல்ல இயலாது. காரணம், முன்பு இணைந்திருந்த சென்னை மாகாணமாக இருந்ததால் அத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, சாதாரணமாக குளிர் பிரதேசத்தில் கள்ளு போன்ற பானங்கள் தேவை என்று சொல்வார்கள். நீலகிரி ஜில்லாவில் ஒரு கள்ளுக் கடை கூட இல்லையே, காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குளிர் பிரதேசத்தில் இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பான பானங்கள் வேண்டுமென்று அவர்களே தேர்ந்தெடுக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** சில பகுதிகளில் கள்ளுக் கடைகள் ஸ்தாபிக்கப்பட்டு அவை நடைபெறாமல் மூடியிருக்கின்றன. பாதையில் கள்ளுக்கடைக் கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. நடைபெறாத கள்ளுக்கடைகளை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏலம் எடுத்திருப்பவர்கள் ஆட்சேபிக்கக்கூடும். அவர்களாகவே அதை அகற்றலாம். அரசு அதைச் செய்ய முன்வந்தால், அவர்கள் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடும்.

---

† Postponed from the List of Questions for 16th December 1971.

@ Printed as Appendix I on page



18th December 1971]

THIRUMATHI S. MANJUBHASHINI : Sir, will the Hon. the Chief Minister tell us what is the amount of income derived by way of licences?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாக இந்த ஆண்டு ரூ. 15 கோடி வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு மேலும் அடுத்த ஆண்டு வரக்கூடும்.

**திரு. சா. கணேசன் :** ஜனத்தொகை அடிப்படையில் கள்ளுக் கடைகள் திறக்கப்பட்டிருக்குமானால், 1288 கடைகள் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு இருக்கும்போது சென்னையில் 35 என்று இருக்கிறதே. இது ஜனத்தொகையின் அடிப்படையில் இல்லை என்று நான் எடுத்துக்கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தஞ்சாவூரில் ஜனத்தொகை அடிப்படையில் அல்ல. தென்னை மரத்தொகை அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** மொத்த வருவாய் ரூ. 15 கோடி என்று தெரிவித்தார்கள். அது கள்ளுக்கடை மூலமாக வந்ததா? எல்லா மதுபானக் கடைகளின் மூலமாக வந்ததா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கள்ளுக்கடை மூலமாக மாத்திரமல்ல. மொத்தமாகச் சொன்னேன். கள்ளுக்கடை மூலமாக ஏலத்தில் ரூ. 8,94,85,002, சுமார் 9 கோடி வந்தது, 7,153 கடைகளுக்கு. சாராயக் கடைகள் மூலமாக ரூ. 6,57,07.253 வந்திருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத்தின் போது, பொது இடங்களிலே பள்ளிகளுக்கு அருகில், கோயிலுக்கு அருகில் உள்ள கள்ளுக் கடைகளைப்பற்றி ஏதாவது புகார் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்கப்படுமானால், அவை அங்கிருந்து அகற்றப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல புகார்கள் கொடுத்தும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் எடுத்துச் சொல்லியும் கூட, தஞ்சையிலுள்ள பல கடைகள் எடுக்கப்படாமல், அதே இடத்தில் இருக்கின்றன என்பதை அறிந்து அவற்றை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லப்பட்ட அந்தக் கடைகள் எடுக்கப்படாமலிருந்தால்—மக்களின் பிரதிநிதிகள் என்னிடத்தில் அதைப் பற்றி நேரடியாகப் புகார் கொடுத்திருக்கிறார்கள்—மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதைப் பற்றிக் கேட்கும்போது, அதற்குரிய காரணத்தை, அவை அந்த இடத்திலிருந்து ஏன் எடுக்கத் தேவையில்லை என்பதை என்னிடத்தில் கூறியிருக்கிறார்கள். அதே முறையில் உறுப்பினர் அவர்களும் அதைப் பற்றிப் புகார் தந்தால், விசாரிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** சிலர் கள்ளுக்கடைகளை ஏலம் எடுத்து முன் பணம் கட்டிய பிறகு அக்கடைகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஆகையால் அவர்கள் கட்டிய முன்பணத்தைத் திருப்பிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட உத்தேசம் எதுவுமில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** கோயில்கள், பள்ளி வாசல்கள் சமீபமாக உள்ள கடைகளை எடுக்கும்படி புகார் செய்தும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொன்னதற்கு அதை எடுப்பதற்கான காரணம் இல்லை என்று அவர் பதில் சொன்னதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பள்ளி வாசல்கள், பள்ளிக்கூடங்கள், கோயில்கள் ஆகியவற்றின் சமீபத்தில் அக்கடைகள் இருக்கக் கூடாது என்று அரசாங்கம் கொள்கை வகுத்திருக்கும்போது, அந்தப் பதில் எப்படிப் பொருத்தமானது என்று புரியவில்லை. அப்படிப்பட்ட புகார்களின் பேரில் நடவடிக்கை எடுத்து அந்தக் கடைகளை அப்புறப்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பள்ளிவாசல், ஆலயங்களுக்கு எதிரில் என்றால், மூன்று மைல்களுக்கு எதிரில் ஒன்றுமே இல்லாவிட்டால் கூட, அதை 'எதிரில்' என்றும் சொல்லலாம். அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, அவர் தொலைவு ஆகியவற்றைக் கணக்கெடுத்துப் பார்த்து நடவடிக்கை எடுக்கிறார். பள்ளிவாசலுக்கு எதிரில் மூன்று மைலுக்கு எந்தவிதமான கட்டிடமும் இல்லாமல் கடைகள் இருந்தால், உடனே அதைப் பள்ளிவாசலுக்கு எதிராக என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது எவ்வளவு தொலைவு இருக்கிறது, சட்டத்திற்கு உட்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் புகாருக்குப் பதில் எழுதுகிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** திருச்சியில் பள்ளிவாசலுக்கு 100 அடிக்கு எதிரிலே கடையிருக்கிறது. நானும் அதை எழுதி கலெக்டரிடத்தில் கொடுத்திருக்கிறேன். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படி ஒரு கேள்வி வருமென்று மாண்புமிகு உறுப்பினர் காத்திருக்காமல் என்னிடம் கூறியிருந்தால், நான் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருப்பேன்.

**திரு. கே. ராஜாராம் :** பல கடைக்காரர்கள் முன்பணம் கட்டி எடுத்து நடத்த முடியாமல் இருப்பதாகக் கூறினார்கள். அப்படியானால் கள்ளைக் குடிப்பதற்கு மக்கள் அதிகமாக வரவில்லையா? நஷ்டம் வருவதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிக் குடிப்பதற்கு ஆட்கள் வரவில்லை என்றால், அது மகிழ்ச்சிக்குரிய ஒன்றே தவிர வருத்தமடைவதற்கு ஏற்ற ஒன்றல்ல. தஞ்சை மாவட்டத்தில் நாயுடு அவர்களுக்கு வேண்டியவர் எடுத்த கடைகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெறுகின்றன.



**திரு. ஜி. சுவாமிநாதன் :** எதிர்க் கட்சித் தலைவருக்கு அப்படி வேண்டியவர்கள் யார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது ரொம்ப பரிசுத்தமான விஷயம். இங்கே பேசக்கூடாது.

**திரு. கே. ராஜாராம் :** எனக்கு வேண்டியவர்கள் எடுத்த கடை நன்றாக நடைபெறுகிறது என்று சொல்வதில் மகிழ்ச்சி. முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் கடைகளெல்லாம் எப்படி நடைபெறுகின்றன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எனக்கு வேண்டியவர்கள் யாரும் எடுக்கவில்லை.

**திரு. கே. ராஜாராம் :** அப்படியானால் எனக்கு வேண்டியவர்கள் யாரும் எடுக்கவில்லை என்று வைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வேண்டியவர்களின் கடைசியில் 'கள்' இருக்கிறது. வேண்டியவர் 'கள்'.

### *Statue of Thiru Jawaharlal Nehru*

* 240 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has passed unanimous resolutions on 5th June 1970 and 19th March 1971 and sent them to the Government to accord permission to erect a statue of Late Thiru Jawaharlal Nehru, former Prime Minister of India, in the Marina ; and

(*b*) if so, the action taken thereon?

### திரு. ஜவஹர்லால் நேரு அவர்களின் உருவச் சிலை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மறைந்த முன்னாள் தலைமை அமைச்சர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களின் உருவச் சிலையை மெரினா கடற்கரையில் அமைக்க அனுமதி வழங்கக் கோரி 5-6-1970-ம் நாளன்றும், 19-3-1971-ம் நாளன்றும் சென்னை மாநகராட்சி ஒருமனதாகத் தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம், ஐயா.

(இ) இப்பொருள் அரசினரால் சீர்தூக்கப் பெற்று சென்னை மாநகராட்சியின் நிதிப் பற்றாக்குறையின் காரணத்தால் இப்பொருள் நிதிப்பற்றாக்குறை இல்லாத வரும் நாளில் மேற்கொள்ளலாம் என்று சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :* இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏகமனதாக நேருஜி அவர்களுடைய சிலையை வைக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டும் நிதிப் பற்றாக்குறை காரணமாக மறுக்கப்பட்டதா? அல்லது வேறு ஏதாவது காரணமிருக்கிறதா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டு விட்டது. அதை மறுப்பதற்கில்லை. நிதிப் பற்றாக்குறை சரிக் கட்டப்பட்ட பிறகு ஏற்றுக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது.

THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, are the Government aware that Panditji was very much against erection of statues for any one, let alone himself? Considering that, will the Government respect his wishes and not put up any statue, but do something else, especially for children to whom Panditji was very much attached?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அவர்களைக் கேட்டால், பெரியவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். மற்றவர்கள் உள்ளத்தில் எப்படிப்பட்ட இடம் பெற்றிருக்கிறார்கள், மற்றவர்கள் அவர்களைப் பாராட்ட வேண்டிய தன்மைகளைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமே தவிர, பண்டித நேரு போன்றவர்களைக் கேட்டால், அவர்கள் ஒரு நாளும் தனக்குச் சிலை வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் அவர்களுக்குச் சிலை வைக்காமல் இருக்கவும் முடியாது.

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :* நேருஜி சிலை வைப்பதற்கு எவ்வளவு ரூபாய் செலவில் திட்டம் அரசிற்கு அனுப்பப்பட்டது?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* ரூ. 25 ஆயிரம் செலவில் வைக்கலாம் என்றிருக்கிறார்கள். எப்படிப்பட்ட சிலை வைக்கலாம் என்பதற்காக வணிக இயல் துறை ஆராய்ந்து, சிலை பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. நிதிநிலை சரியானதும் வைக்கலாம் என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

THIRUMATHI S. MANJUBHASHINI : Sir, I am afraid that the Hon. Minister has not understood my question very properly. Panditji was alaways very much against erection of statue for anybody. Since he was one of the greatest leaders of the country, will the Government respect his wishes and not raise any statue for him or for anybody else but do something different which is beneficial to the children because Panditji did not believe in erecting statues?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அவர்களுடைய எண்ணங்களை வேறுபல வகைகளில் நிறைவேற்றி வருகிறோம். உலகமெல்லாம் அவர்களைக் கொண்டாடுகிற





காரணத்தால், நாட்டில் பலருக்கும் சிலை வைக்கும் நிலையை ஒட்டி பண்டித நேருவிற்கும் சிலை வைக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அதை மாநகராட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :* சென்னையில் சிலை வைப்பதற்கு சென்னை மாநகராட்சி பல இடங்களைக் குறிப்பிடுவதைப் போல, அந்த இடங்களில் ஒன்றாக பிரதானமாக மன்றோ சிலை உள்ள இடம் பொருத்தமானதாக இருக்குமா என்று ஆராயப்படுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* மாநகராட்சி மன்றத்தில் போட்டிருக்கிற தீர்மானத்தில் சென்னை மெரினா கடற்கரையில் வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கூறியிருக்கிறார்கள். மன்றோ சிலையை அகற்றும் எண்ணம் இல்லை. பற்பல வெள்ளைக்கார கவர்னர்கள் மாதிரி இல்லாமல், சர் தாமஸ் மன்றோ அவர்கள் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்ற உணர்வில் அவருக்குச் சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் உள்ள சிறந்த காட்சிப் பொருள்களைச் சேர்ந்த சிலைகளில் அது ஒன்றாக இருப்பதால், அதை அகற்ற வேண்டுமென்ற நிலை வந்தபோது முன்னால் இருந்த அரசும் இந்த அரசும் அதை மேற்கொள்ள முயலவில்லை.

*திரு. எம். ஆறுமுகசாமி :* பண்டித நேரு அவர்கள் சென்னை நகரத்தில் திரு. காமராஜ் அவர்கள் சிலையைத் திறந்துவைத்த போது, உயிரோடு இருப்பவர்களுக்குச் சிலை வைப்பதை நான் எதிர்க்கிறேன் என்று நேரு பேசியது அமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அப்படி அவர்கள் பேசியதுண்டு. அவர்களே தவிர்க்க முடியாத நிலையில் அதே சிலையைத் திறந்துவைக்கும் கட்டத்திற்கு ஆளானார்கள். ஆகவே நெருக்கடி எந்த நிலையில் உள்ளவர்களையும் பெரியவர்களையும் உட்படுத்திவிடுகிறது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

## *Special Concession to Children of Tamil Pandits.*

*211 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the special concession, if any, given to children of Tamil Pandits to study at the Colleges?

## தமிழ்ப்பண்டிதர்களின் மக்களுக்கு சிறப்புச் சலுகைகள்.

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்ப்பண்டிதர்களின் மக்கள் கல்லூரிகளில் படிப்பதற்கு சிறப்புச் சலுகைகள் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளனவா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தமிழாசிரியர்களின் பிள்ளைகளுக்கு கல்லூரிப் படிப்பினைத் தொடர தனிப்பட்ட சலுகை ஏதும் கொடுக்கப்படவில்லை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, இத்தகைய கோரிக்கை தமிழாசிரியர்களிடமிருந்து வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களுக்கு என்று தனியாகச் சலுகை இல்லை. ஆசிரியர்களுக்கு என்று சிலபல சலுகைகள் தரப்படுகின்றன. பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் போன்றவர்களுக்குள்ள சலுகைகள் இருக்கின்றன. மத்திய அரசின் தேசிய உபகாரச் சம்பளத் திட்டம்; ஆசிரியர் குழந்தைகளுக்குத் தேசிய உபகாரச் சம்பளத் திட்டம், தேசிய கடன் உபகாரச் சம்பளத் திட்டம் ஆகியவற்றின் கீழ் முறைப்படி மற்றவர்கள் பெறுகிற அதே அடிப்படையில் தமிழாசிரியர்கள் பிள்ளைகளும் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. உறுப்பினர் கேட்டது போல தமிழாசிரியர்களுக்குத் தனிச் சலுகை என்றால் பிறகு கணித ஆசிரியர், ஆங்கில ஆசிரியர் என்று பலவாகப் பிரியும். அது சரியாக இருக்காது. பொதுவாக ஆசிரியர்களுக்கு இருக்கிற எல்லாச் சலுகைகளும் அவர்களுக்கு உண்டு.

*Family Pension*

* 242 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of applications received for Family pension from families of deceased teachers in 1969-70 by the District Educational Officers in the various Districts of the State?

குடும்ப ஓய்வூதியம்

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு 1969-70-ல் இறந்துபோன ஆசிரியர்களது குடும்பத்தினரிடமிருந்து குடும்ப ஓய்வூதியம் கேட்டு, வந்துள்ள மக்களின் எண்ணிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 194 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவற்றில் 108-க்கு ஓய்வு ஊதியங்கள் வழங்கப்பட்டு விட்டன. மற்றவை பரிசீலனையில் உள்ளன.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** பரிசீலனையில் உள்ள மற்ற விண்ணப்பங்கள் எவ்வளவு நாளாக பரிசீலனையில் உள்ளன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 1969-70-ல் வந்தவை 194. பரிசீலிக்கப்பட்டவை 108. குடும்ப ஓய்வு ஊதியம் அவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் 86 சென்ற ஒரு ஆண்டு காலமாக இருக்குமென்று கருதுகிறேன்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தே 1½ வருஷ காலமாக சில விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அதற்காக ஏதாவது கடிதம் எழுதினாலும்,



அந்தக் குடும்பத்தார் மிகவும் துயர நிலையில் இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எழுதியும் அந்தக் கடிதங்களுக்கு பதிலே வருவதில்லை. பதில் போட வேண்டுமென்ற நியதி இருந்தாலும், அப்படிச் செய்வதில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடம் வந்து கேட்கிறார்கள். நான் எழுதினாலும், பதில் இல்லை. இயக்குனர் அலுவலகத்திலிருந்து பதிலையாவது உடனடியாக அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றிய விவரங்கள் பெற வேண்டியிருப்பதால்தான், பரிசீலனையில் இருக்கின்றன. அவற்றை விரைவில் திரட்டி நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: விவரங்கள் சேகரிப்பதைப்பற்றியும் எந்தக் கடிதமும் வரவில்லை. ஏதாவது பதில் எழுதியிருந்தார்களானால், அதன் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றாவது தெரிந்திருக்கும். பல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் துர்பாக்கியமான நிலையில் பட்டினியும் பசியுமாக இருக்கிறபடியால், இவற்றை அனுதாபத்துடன் கவனித்து உடனடி நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினரின் கருத்துக்கள் மனதில் கொள்ளப்பட்டு அவற்றின் நிலை ஆராயப்பட்டு அதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்க முயற்சி எடுக்கப்படும்.

* 243 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the benefit of liberalised Family Pension (life pension) granted in G.O. Ms. No. 380, dated 9th April 1969, is being refused by the South Madras District Educational Officer to the wives of deceased teachers already getting family pension ; and

(b) if so, the reasons therefor?

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 9-4-1969-ஆம் நாளிட்ட அரசாணை எண். 380-இல் வழங்கப்பட்டுள்ள தாராள குடும்ப ஓய்வூதிய (ஆயுள் ஓய்வூதியம்) நன்மைகளை தென் சென்னை மாவட்டக் கல்வி அதிகாரி ஏற்கெனவே குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்ற, இறந்துபோன ஆசிரியர்களின் மனைவியர்களுக்கு அளிக்க மறுத்து வருகின்றார் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

[18th December 1971

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன். (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளைக்குப் பிறகு இறந்த ஆசிரியர்களின் குடும்பத்திற்குக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இறந்த ஆசிரியர்கள் எல்லோருடைய குடும்பத்திற்கும் இந்தச் சலுகை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1-4-1969-க்குப் பிறகு வேலையிலிருந்தோ ஓய்வு பெற்றோ இறந்தவர்களின் மனைவி களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 1-6-1969-க்குப் முன்னால் இருந்து 1969 சட்டப்படி அரசாங்க ஆசிரியர் பெறும் ஓய்வூதியத்தில் பாதி பெறுவார்கள் என்ற அடிப்படையில் அவர்கள் பெற்று வருகிறார்கள்.

## Pension Bonus

* 244 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Ex-gratia payment of one month's pension bonus made to the teachers retired from Aided Private Institution was sought to be adjusted against their pension of April 1971; and

(b) if so, the reason therefor?

## ஓய்வூதியக் கொடை

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் தனியார் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட கருணை அடிப்படை யிலான ஒரு திங்கள் ஓய்வூதியக் கொடையை 1971 ஏப்ரல் திங்களுக்குரிய அவர்களது ஓய்வூதியத்தில் சரிக்கட்ட முயலப் பட்டது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 20-7-71 அன்று தான், அரசல்லாத பள்ளிகளிலிருந்து 2-10-70-க்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு, ஒரு மாத மிகை ஓய்வு ஊதியம் கொடுக்கலாம் என்று அரசு ஆணையிட்டது. இந்த ஆணைக்கு முன்னாலேயே, 1971 மார்ச் மாதம் அவ்வாசிரியர்களுக்கு மிகை ஓய்வு ஊதியம் கொடுத்தது ஒழுங்கற்ற முறையாதலால், மாநிலக் கணக்காய்வுத் தலைவர், அத்தொகையைப் பிடிக்கும்படி, கருவூல அலுவலர்களுக்கு ஆணையிட்டார்.



18th December 1971]

## Gratuity to Music Professors

* 245 Q.—THIRU T. K. SHANMUGHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that gratuity is being paid to the Professors of Music in the Central Karnataka College of Music, Madras;

(b) if so, whether this gratuity remains unpaid to any Professors of Music so far;

(c) whether any complaint has been received by the Government in this regard; and.

(d) the action taken thereon by the Government?

## இசைப் பேராசிரியர்களுக்கு பணிக்கொடை

திரு. டி. கே. ஷண்முகம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மத்திய கர்நாடக இசை கல்லூரியில் இசைப் பேராசிரியராகப் பணியாற்றுபவர்களுக்கு பணிக்கொடை (gratuity) வழங்கி வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், அப்பணிக்கொடை இதுவரையில் இசைப் பேராசிரியர் எவருக்கேனும் கொடுக்கப்படாமல் இருக்கிறதா?

(உ) அது சம்பந்தமாக அரசுக்கு புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா?

(எ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ, எ) காலம் சென்ற இசைப் பேராசிரியர் திரு. சாமிநாதப் பிள்ளைக்கான ஓய்வு ஊதியம், பணிக் கொடை முதலியன அவரது மனைவிக்குக் கொடுப்பதற்கான உத்திரவுகள் 1967-ஆம் வருடம் ஜூலை மாதம் 28-ம் தேதியே பிறப்பிக்கப்பட்டன. ஆனால் நடை முறையில் உள்ள விதிப்படி ஓய்வு ஊதியம், காலம் சென்ற பேராசிரியர் ஓய்வு பெறும் வயதை அடைந்த நாள் தொட்டு ஐந்து வருடங்களுக்கு மட்டுமே அவரது மனைவிக்குக் கொடுக்க முடியும். ஆகையால் தலைமைக் கணக்காயர் (Accountant General) 1967-ம் ஆண்டு பிறப்பித்த உத்திரவை மாற்றும் படியும் மேற்படி பேராசிரியர் பணியாற்றி வந்த பணிக்கான விதியில் ஏற்பட்ட மாறுதல் குறித்தும் விளக்கம் கேட்டார். ஏற்கனவே உத்திரவிட்டபடி மேற்படி பேராசிரியரின் மனைவிக்கு அவர் ஆயுட்காலம் வரை ஓய்வு ஊதியம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாறே 15-4-71-ல் ஆணையிடப்பட்டது. விரைவில் அது வழங்கப்படும்.

[18th December 1971

**திரு. டி. கே. ஷண்முகம்:** தலைவர் அவர்களே, ஓய்வூதியம் கொடுப்பதற்கு அரசு ஆணையிட்டிருக்கிறது என்றால், எப்போது கிடைக்கும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்தக் குடும்பத்தினர் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிரபல பாடகராகிய சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள், தன்னுடைய குருநாதராகிய புல்லாங்குழல் சுவாமிநாதபிள்ளைக்காகப் பெரும் சிரமம் எடுத்துக்கொண்டு இது சம்பந்தமாக பல மனுக்களை அனுப்பியிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அரசு விரைவில் அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அக்கவுண்டண்ட் ஜெனரல் அந்த விதிகளைத் தளர்த்தினாலொழிய கொடுக்கக் கூடாது என்று ஆட்சேபனை எழுதினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் குறிப்பிட்டபடி விதி தளர்த்தப்பட்டு கொடுப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் கொடுக்கப்படும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** கிராஜுவிடி எத்தனை பேருக்கு மாதாமாதம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

### *History of Tamil Nadu*

*246 Q.—THIRU SAW. GANESAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether foreign scholars find a place in the team of writers appointed to write the history of Tamil Nadu? If not, whether there is any proposal to appoint any in the said team;

(*b*) whether there is any proposal to seek the help of the Central Government for this purpose; and

(*c*) whether there is any proposal or arrangement to secure economic assistance and co-operation of the UNESCO?

### *தமிழக வரலாறு*

**திரு. சா. கணேசன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக வரலாற்று நூல் எழுத நியமிக்கப்பெற்றுள்ள குழுவில் வெளிநாட்டு அறிஞர்கள் இடம் பெற்றுள்ளனரா ? அன்றேல் இடம் பெறச் செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) இப்பணிக்கு மைய அரசிடம் உதவி கோரும் கருத்து உண்டா ?



18th December 1971]

(உ) ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானத் துறை அமைப்பின் பொருளாதார ஒத்துழைப்பு உதவிகள் பெறும் ஏற்பாடோ அன்றி உத்தேசமோ உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) தமிழக வரலாற்று நூல் எழுத நியமிக்கப்பெற்றுள்ள குழுவில் வெளிநாட்டு அறிஞர்கள் இடம் பெறவில்லை. அவசியம் ஏற்பட்டால் இக்கருத்து பரிசீலிக்கப்படும்.

(இ) & (உ) குழுவின் பணிகள் குறித்து செலவினங்களைத் தமிழ்நாடு அரசே ஏற்கின்றது. மைய அரசு அல்லது ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானத்துறை அமைப்பு ஆகியவற்றிடமிருந்து உதவி பெற வாய்ப்பு உண்டா என்பது பரிசீலிக்கப்படும்.

*247 Q.—THIRU SAW. GANESAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any arrangements have been made to secure, for the team appointed to write the History of Tamil Nadu, the help, assistance and co-operation of the Universities in this State and other States. Foreign Universities, Archaeological Societies and Research Scholars in History; and

(*b*) if so, the details thereof?

**திரு. சா. கணேசன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக வரலாற்றை எழுத நியமிக்கப் பெற்றுள்ள குழு தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலுமுள்ள பல்கலைக் கழகங்கள், வரலாற்று ஆராய்ச்சி நிலையங்கள், வரலாற்றுத் துறையில் வல்ல தனிப்பட்ட அறிஞர்கள் ஆகியோரின் உதவி, துணை, ஒத்துழைப்பு முதலியவற்றைப் பெற ஏற்பாடுகள் ஏதேனும் செய்யப் பெற்றுள்ளனவா ?

(இ) அங்ஙனமாயின் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) தமிழகம் மட்டும் அல்லாமல் பிற மாநிலங்ககள், நாடுகள் ஆகியவற்றிலும், தமிழ் நாட்டு வரலாறு எழுதத் துணை புரியக் கூடிய எல்லா அமைப்புகள் அறிஞர்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றுத் தமிழக வரலாற்றுக் குழு செயல்படும். இந்த வகையில் அரசு மட்டத்தில் உதவி அல்லது ஆணைகள் தேவைப்படும்போது அரசு தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

குழு கேட்டுக் கொண்டதன் பேரில் மைசூரில், மைய ஆட்சிப் பொறுப்பில் இயங்கிவரும் கல்வெட்டு ஆய்வு அலுவலகம் வெளியிடவிருக்கும் தமிழ்நாடு பற்றிய 25,000 கல்வெட்டுப் படிகளையும், அவை குறித்த குறிப்புகளையும் வரைந்து வெளியிடும்படியும் அவை

[18th December 1971

வெளியிடப் படும்வரை தேவையானபோது அவற்றைப் பார்வையிடத் தமிழக வரலாற்றுக் குழுவின் உறுப்பினர் அல்லது அலுவலருக்கு உரிமையும் வசதியும் அளிக்கும்படியும் மைய அரசு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**திரு. சா. கணேசன்:** வெளிநாடு சம்பந்தப்பட்ட பேரறிஞர்கள் இதில் நியமனம் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதற்குக் காரணம் நம்முடைய இன்றியமையாத பெரும் சான்றுகள் பல் இங்கிலாந்திலும், பிரான்சிலும், அமெரிக்காவிலும் இருக்கிற காரணத்தால், அங்குள்ள சிலரும் இதில் உறுப்பினராக்கப்பட்டு, தமிழகம் சம்பந்தப்பட்ட வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டி அவற்றின் கருத்துக்கள் நமக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்வதற்கு உடனடியாக அரசு முன்வர வேண்டுமென்று கருதி அப்படிச் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கிற குழுவினர் அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று விரும்புவார்களானால், அரசு செய்ய ஆயத்தமாக இருக்கும். வெளிநாட்டு அலுவலர்களும் இதில் இணைந்து அவர்களுடைய ஆராய்ச்சிக் கருத்துக்களைப் பெற்றுத் தர வேண்டுமென்று விரும்பினால், அந்தக் குழுவினர் அரசிற்குத் தெரிவித்தால், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. சா. கணேசன் :** இந்தத் துறையில் டாக்டர் இலியோசா போன்றவர்கள் இன்றியமையாத உதவிகளை, சிறந்த உதவிகளைச் செய்யக் கூடுமாகையால், அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு இப்போதே முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் சேர்த்துக்கொள்வதனால் பயன் ஏற்படும் என்று கருதினால், சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபணை இருக்காது. அதில் கஷ்டமிருக்காது. அவர்கள் பாண்டிச்சேரியிலிருந்து ஆராய்ச்சி நடத்துகிறார்கள். அடிக்கடி இங்கேயும் வருகிறார்கள். அவர்களைச் சேர்த்துக்கொள்வது பலன் தருமென்று தெரிந்தால், அரசு ஆராயும்.

**திரு. கே. ராஜாராம் :** தமிழ் நாட்டின் சரித்திரத்தை எழுதும் போது, இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் தமிழ் நாட்டின் பங்கு என்ன? என்னென்ன வரலாறு நடந்தது என்பதைத் தனி அத்தியாயமாகச் சேர்த்து எழுதுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வரலாற்றுக் காலத்திற்கு முன்தொட்டு தொடர்ந்து எழுத வேண்டுமென்ற குறிப்பை அவர்களுக்குத் தந்திருக்கிறோம். அந்தந்தக் காலத்து நிகழ்ச்சிகள், அவற்றில் பெருமை பெற்றவர்கள் பற்றியெல்லாம் இந்த நாளிலிருந்து இந்த நாள் வரை என்று பிரித்து எழுதப் படும்போது, அவை இடம்பெறும்.



18th December 1971]

**திரு. சா. கணேசன் :** தமிழக வரலாற்றிற்கு இன்றியமையாத கல்வெட்டு படிவங்கள் இன்றைய தினம் மத்திய கல்வெட்டுத் துறையிலே நீலகிரியிலிருந்து மைசூருக்கு மாற்றப்பட்டிருக்கிற பகுதியில் அடைபட்டுக் கிடப்பதை விரைவில் இங்கே கொண்டு வந்து நம்முடைய துறை மூலமாக விரிவாக அச்சிட்டுவிட்டால், வரலாறு எழுதுவதற்கு மிகுந்த பயனையும் நன்மையையும் தருமென்று உணர்ந்து, அதை முதலில் செய்ய அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மைசூரில் உள்ள மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ள 25 ஆயிரம் கல்வெட்டுகளுக்கான படிகளை எடுத்து வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்வெட்டுப் படிகள் உள்ளபடியே பெரும்பாலும் தமிழகத்திலிருந்து திரட்டப் பட்டவைதான். தமிழகத்தில் தற்போது இருப்பதுதான் முறையும் கூட. ஆனால் அங்கே கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள். ஏற்கனவே அது உணர்த்தப்பட்டிருக்கிறது. மைசூரிலிருந்து அவை தமிழகத்திற்கு வருவதற்கான முயற்சிகளை எடுக்கலாம். அவர்களுக்கு உதவி செய்யும்போது அந்தப் படிவங்களைப் பயன்படுத்திக்கொள்ளவும் இந்தக் குழுவினருக்கு இடம் தர வேண்டுமென்று மத்திய அரசிற்கு எழுதப் பட்டிருக்கிறது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டு வரலாறு எழுதும் திட்டம் எவ்வளவு ரூபாய் செலவில் அமைக்கப் பட்டிருக்கிறது ? எத்தனையாண்டுக் காலத்தில் இத்திட்டம் முடிவுபெறும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதற்கென்று ஒரு தோராயமான நிதி ஒதுக்கப்படும். அதனுடைய செயலைப் பொறுத்துத்தான் அது வரும். இந்தக் குழுவினர் செயல்குறிப்புகள் தரும்போது, அதையொட்டி ஆராயப்படும். அதன்பிறகு பரிசீலிக்கலாம்.

*Tamil Nadu Retired Municipal Employees Association.*

*248 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any petition has been received from the 'Tamil Nadu Retired Municipal Employees Association' requesting the sanction of pension to the employees who retired prior to 14th January 1970 ; and

(b) if so, the action taken thereon?

### தமிழ் நாடு ஓய்வு பெற்ற நகர மன்ற அலுவலகர் கழகம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு ஓய்வு பெற்ற நகர மன்ற அலுவலகர் கழகத்திலிருந்து 14-1-1970-க்கு முன் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு ஓய்வு ஊதியம் வேண்டி விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு பதில் அளிக்கப் பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தற்போது 14-1-70-க்கு முன் ஓய்வு பெற்ற அலுவலர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் ? அவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டி வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 14-1-70-க்குப் பிறகு அலுவலர்களுக்கு ஓய்வூதியம் தருவது என்ற முறையில் அவர்கள் செலுத்தவேண்டிய பிராவிடண்ட் பண்ட் மற்றவைகளை ஓரளவுக்குச் செலுத்தியதை நிறுத்தி வைத்திருக்கிறோம். ஆகையால் அது அவர்களுக்குத் தரப்படுகிறது. முதலில் அவர்கள் எவ்வளவு பி. எஃப். செலுத்தினார்களோ அதற்கு ஈடாக நகராட்சி அந்த அளவுக்கு அளித்தது. இப்போது ஓய்வூதியம் தருவதற்கு நகராட்சி மன்றம் எந்த அளவுக்கு ஒத்துக்கொள்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் முறையில் இருக்காது. ஓய்வூதியம் தருவதற்காக அவர்கள் தாமே நிறுத்திக்கொள்கிற வகையில் எற்கனவே 6¼ சதவிதம் இருந்ததை 8 1/3 சதவீதம் என்று ஆக்கி அந்த அளவுக்கு மொத்தமாக நிதி சேர்த்து பென்ஷன் கொடுக்கிறார்கள். அதுவரையில் அட்ஹாக் பேசிசில் ஓய்வூதியம் தருவதற்கு முயலவேண்டும். அதைத் தனியாக அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : 14-1-71-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்கள் வாங்கிய சம்பளம் குறைவு. இப்போது வேலையிலுள்ளவர்கள் அதிகம் வாங்குவதாகச் சொல்கிறார்கள். முன்பு வாங்கிய சம்பளத்தில் 3/8 கொடுத்தால் போதுமென்றும் சொல்கிறார்கள். அப்போது அரசு ஓய்வு ஊதியமாகக் கொடுக்கும் தொகை குறைவாகவே இருக்குமென்று அபிப்ராயப்படுகிறார்கள். அது மட்டுமல்ல. இப்போது அப்படி ஓய்வு பெற்றவர்களில் உயிரோடு இருப்பவர்கள் 733 பேர்கள்தான். அவர்களும் குறைந்து கொண்டே வருகிறார்கள். அவர்களுக்கு ஓய்வு ஊதியம் தருவதால் மிகக் குறைந்த தொகைதான் அரசிற்குச் செலவாகும். இதைக் கருத்தில் கொண்டு அமைச்சருக்கும் கொடுக்கலாமென்ற அபிப்பிராயம் இருப்பதுபோலத் தெரிவதால், அதை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எந்த வகையில் கொடுப்பது என்பது ஆராயப்பட்டு வருகிறது. நகராட்சியோடு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டியிருப்பதால், அது பரிசீலிக்கப் படுகிறது.

### *Dindigul Arts College.*

* 249 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the students of the Dindigul Arts College have gone on strike in November 1971;

(*b*) whether the College was closed; and

(*c*) if so, the action taken thereon?

### திண்டுக்கல் கலைக் கல்லூரி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் கலைக் கல்லூரி மாணவர்கள் 1971 நவம்பர் திங்களில் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) அந்தக் கல்லூரி மூடப்பட்டதா ?

(உ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. ஆனால் அவர்கள் ஊர்வலமாக வந்து முதலமைச்சரைக் கண்டு சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

(இ) யும் (உ) வும்: கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, திண்டுக்கல் கல்லூரி முதல்வராக இருப்பவர் முன்பு தஞ்சையில் முதல்வராக இருந்தார். அவர் கண்டிப்பான முறையில் கல்லூரியை நடத்த வேண்டுமென்ற அபிப்ராயத்தில் உள்ளவர். அப்படியிருப்பது சரியல்ல என்று கருதும் அளவில், மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்களுடைய கோரிக்கையில் ஒன்று, தகாத முறையில் நடந்ததற்காக அபராதத் தொகை வசூலிக்கக் கூடாது என்பது. ஒருவிதமாகச் சொல்லித் தீர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு கிளர்ச்சியில்லை.

[18th December 1971

*Salary of Ex-Medical Officers of Panchayat Union Dispensaries.*

* 250 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the salary of a number of Medical Officers of Panchayat Union Dispensaries in Thanjavur district have not been paid for more than a year;

(b) if so, the number of persons thus affected ; and

(c) the reason for the delay in settlement?

*ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களின் முன்னாள் மருத்துவ அதிகாரிகள் சம்பளம்.*

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களின் முன்னாள் மருத்துவ அதிகாரிகள் பலருக்கு ஓராண்டுக் கால அளவிற்கும் மேலாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லையென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) இதில் தாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கிடமில்லை.

(உ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஆவூர், பாபநாசம் தாலுகா தஞ்சாவூர் மாவட்டத்தில் மருத்துவ அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற ஒருவருக்கு ஓராண்டு காலமாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர் பெயர்கூட எனக்குத் தெரியும். அமைச்சர் எப்படி இல்லையென்று சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் குறிப்பிடுவது ஆவூர் என்பது. நாங்கள் எடுத்துக் கொண்ட மருத்துவ மனைகளில் அந்தப் பெயரில் ஒன்றும் இல்லை. அதற்கு வேறு பெயர் இருந்து, அதைத் தெரிவித்தால் அது பற்றி ஆராயப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆவூரில் ரூரல் சென்டர் என்ற முறையில் இருந்தது. பிறகு பஞ்சாயத்து யூனியன் எடுத்து நடத்துகிறது. அதற்குப் பிறகுதான் ஓராண்டு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.



18th December 1971]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனில் எடுக்கப்பட்டது குறித்து சுகாதார இலாகாவிலிருந்து பதில் அளிக்க எனக்கு வாய்ப்பில்லை.

THIRU G. SWAMINATHAN : I do not know, Sir, how the question has gone to the Minister for Public Health. I put the question to the Hon. the Minister in charge of Panchayat Unions.

THE HON. THIRU K. ANBAZHAGAN : The question is addressed to the Minister for Public Health and, therefore, that question has reached me and the Government also have undertaken certain dispensaries from the Panchayat Union, about 11 dispensaries in that area. According to the order of 2nd October 1960 or some other date, all those Doctors are paid properly and the particular place is not referred to here. The reply is " Consequent on the abolition of District Board, certain Local Fund Medical Institutions were taken over by Government with effect from 2nd October 1960 and they are :

at Thirumullaivasal,
Manamalkudi,
Avadayarkoil,
Ammapet,
Adirampatnam,
Ayyampet,
Sundaraperumal Koil,
Poraiyar,
Pandarvadai,
Sankaranpandal and Manalmedu.

In G.O. Ms. No. 1848, Health, dated 7th October 1960, necessary orders were issued for absorbing the Medical Officers into Government Service in the above institution. It was also ordered that they were entitled to arrears of pay, D.A. and other allowances, etc. As such the particular dispensary is not even referred to here.

*Trade Union Leaders*

* 251 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the labourers resorted to strike on 17th August 1971 demanding the release of the Trade Union Leaders arrested in Madras City; and

(b) if so, the details thereof?

[18th December 1971

### தொழிற்சங்கத் தலைவர்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில் கைது செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரி சென்னை நகரில் உள்ள தொழிலாளர்கள் 17-8-1971-ஆம் நாள் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) சென்னை சதர்ன் ஆடோமாடிக் தொழிற்சாலை மற்றும் கிண்டி, திருவொற்றியூர், அம்பத்தூர், ஆவடி, என்னூரில் உள்ள 23 தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை (திரு. குசேலரின்) விடுதலை கோரி 17—8—1971 அன்று வேலைநிறுத்தம் செய்தனர். தொழிலாளர்கள் அனைவரும் 18-8-71 அன்று வேலைக்குத் திரும்பினர்.

### Leprous Beggars

*252 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether the Government are aware of the large number of leprous beggars in the streets of Madras City?

### தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகர வீதிகளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் ஏராளமாக உள்ளனரென்பதை அரசு அறியுமா?

The Hon. Thirumathi SATYAVANIMUTHU : Yes. The Government have, therefore, taken action to establish Special Care and Rehabilitation Homes for beggars suffering from leprosy.

Thirumathi S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, will the Minister tell us if they are rounding up infectious leprous beggars and sending them to the new Homes which have been recently started at Chingleput out of the money collected from the people towards Beggar Relief Fund?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆமாம்.

Thirumathi S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, will the Hon. Minister tell us how many of those leprous beggars have been sent to the Home till now?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சரியாக இன்னும் கணக்கெடுக்கப்படவில்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.



18th December 1971]

### Collection of Chanks

*253 Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the leases granted to collect chank from the seas have been withdrawn ;

(b) if so, the details thereof; and

(c) the alternative arrangements ordered by the Government for chank fishing?

### சங்குகள் சேகரித்தல்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு அரசின நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடலிலிருந்து சங்குகள் சேகரிப்பதற்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) சங்கு எடுப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ள மாற்று ஏற்பாடுகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) புதுக்குடாவிலிருந்து கோடிக்கரை வரையிலுமுள்ள சங்கு குளிக்கும் துறை, கீழக்கரையைச் சேர்ந்த திரு. S.M.A. பஷீர் மொகைதீன் அவர்களுக்கு 6—6—1970-லிருந்து மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. கீழ்க் காணும் சங்கு குளிக்கும் துறைகள், கீழக்கரையைச் சேர்ந்த திருவாளர்கள் ஹாஜி S.V.M முகமுது ஜமாலுதீன் சகோதரர்களுக்கு 2—2—1971-லிருந்து மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன—

(1) தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை மாவட்டங்களில் சங்கு குளிக்கும் துறை ;

(2) புதுக்குடாவிற்கும் கோடிக்கரைக்கும் இடையே உள்ள பகுதி தவிர்த்து தஞ்சாவூர் சங்கு குளிக்கும் துறை ;

(3) சிவகங்கை சங்கு குளிக்கும் துறை ;

(4) பாக் வளைக்குடா பகுதி சங்கு குளிக்கும் துறை ;

(5) கன்னியாகுமரி சங்கு குளிக்கும் துறை.

மேற்சொன்ன சங்கு குளிக்கும் துறைகளின் குத்தகைகள், சட்ட நடை முறைகளை கடைப்பிடித்தபின்பு, 10—6—1971 முதல் ரத்து செய்யப்பட்டன.

(உ) சங்கு குளிக்கும் ஏழைகளுக்கு உதவும் வகையில், தூத்துக்குடி சங்கு குளிக்கும் துறை தவிர தமிழ்நாட்டின் எஞ்சிய கடற்கரைப் பகுதிகள் முழுவதும் உரிமம் பெற்ற சங்கு குளிப்பவர்கள் கட்டணம் எதுவுமின்றி சங்கு குளிக்கும் பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட சங்கு குளிப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 என்னும் குறைந்த கட்டணம் விதித்து மீனளத் துறை உரிமம் வழங்கும். அவர்களால் எடுக்கப்பட்ட

[18th December 1971

சங்குகளை மூழ்ந்து விற்பனை செய்வதற்காக, உரிமம் பெற்ற சங்கு குளிப்போர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதை ஊக்குவிக்க அரசு கருதியுள்ளது.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து 2—2—71-லிருந்து 3 ஆண்டுகளுக்கு விடப்பட்ட குத்தகை 4 மாதங்களுக்குள் ரத்து செய்யப்பட்டதாக அறிகிறேன். அந்தக் குத்தகைதாரர்களிடம் பல ஊழியர்கள் இருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் வேறு வேலை வாய்ப்புக்கு அரசு வழிவகை செய்திருக்கிறதா? குத்தகைதாரர்கள் 3 ஆண்டு தங்களுக்குக் குத்தகை கிடைக்குமென்று அரசுக்குப் பணம் செலுத்தியிருப்பார்கள். நான்கு மாதத்திற்குள் ரத்து செய்திருப்பதால் அவர்களுக்கு ஏதேனும் நஷ்டஈடு கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்களிடத்தில் பணிபுரிகிற தொழிலாளர் குத்தகை மூலமாக சங்கு குளித்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களை ரத்து செய்த பிறகு, தொழிலாளர்கள் தாமாகவே சங்கு குளித்து எடுத்து அதிகப்படியான லாபம் பெறுகிறார்கள். குத்தகைதார்கள் ரத்து செய்யப்பட்ட பிறகு, அவர்களுக்கு சர்க்கார் வேண்டிய தொகை கொடுத்தாகிவிட்டது. அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதற்கில்லை.

*Community Wells*

* 254 *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of community wells sunk in Aranthangi Taluk during the drought-period in 1968–69;

(*b*) the wells that have not been energised till date; and

(*c*) the reasons therefor?

சமுதாயக் கிணறுகள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968-69 ஆண்டு வறட்சிக் காலத்தில் அறந்தாங்கி வட்டத்தில் தோண்டப்பட்ட சமுதாயக் கிணறுகள் எத்தனை ?

(இ) இதுவரை மின்சக்தி அளிக்கப்படாமலுள்ள கிணறுகள் எத்தனை ?

(உ) அதன் காரணம் யாது ?

THE HON. THIRU SI. PA. ADITANAR—Sir, (*a*) and (*b*) Reduction ranging between 20 and 75 per cent on the sale price was allowed. The reduction sale was confined to soiled and damaged goods and out-of-fashion goods lying un-sold.



18th December 1971]

THIRU G. SWAMINATHAN : Sir, I presume the Hon. Chairman has called question No. 254. I think the reply given by the Hon. Minister is not relevant to this question.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I am so sorry.

(*a*) 7 tubewells were sunk under drought Relief Scheme.

(*b*) One tubewell sunk at Silathur.

(*c*) It was not supplying adequate water for irrigation.

THIRU G. SWAMINATHAN : Are all the wells not supplying adequate water for irrigation or only one well is not supplying water for irrigation?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The question is about only one well which was not giving adequate water for irrigation which was not energised.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, சமுதாயக் கிணறு வெட்டும் போது சொந்தக்காரர்களிடம் அதற்கு அனுமதி வாங்கப்படுகிறதா ? அவர்கள் தண்ணீர் கொடுக்க மறுத்தால் என்ன செய்வது ? அரசாங்கத்தில் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I am under the impression that Community Wells are sunk only on public land or common land.

THIRU G. SWAMINATHAN : Am I to understand that only one well has not been energised in Aranthangi tank?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I am referring to the wells sunk during the drought period 1968-69.

*Aerial Spraying*

* 255 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to purchase Helicopters for Aerial Spraying of insecticides in the State ; and

(*b*) if so, the details thereof?

பூச்சி மருந்து தெளித்தல்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் விமானத்திலிருந்து பூச்சி மருந்து தெளிப்பதற்காக "ஹெலிகாப்டர்கள்" வாங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

[18th December 1971

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்க 2 ஹெலிகாப்டர் விமானங்கள் வாங்க தமிழக அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இதற்கான திட்டத்தை அனுப்பும்படியாக வேளாண்மைத் துறை இயக்குநரை அரசு கேட்டுள்ளது. வேளாண்மைத் துறை இயக்குநரிடமிருந்து இந்தத் திட்டம் வந்தவுடன் ஹெலிகாப்டர் விமானங்களை வாங்க உடனடியாக இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** எவ்வளவு ரூபாய் செலவில் இந்த ஹெலிகாப்டர்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இரண்டு என்றுதான் போட்டிருக்கிறோம். அவை எவ்வளவு, எந்த வகையானவை என்பதைப் பூராவும் விசாரித்ததற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர் விமானங்களை ஓட்டுவதற்கு சாதாரணமாக விமானிகள் கிடைப்பதில்லை. தனியார் நிறுவனங்கள்கூட விமானிகள் கிடைக்காமல், அதிகமான பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அடிக்கடி அவர்கள் போய்விடுகிறார்கள். அப்படியிருக்கும்போது, அரசாங்கம் விமானம் வாங்குவதற்கு முன்பு விமானிகள் கிடைப்பார்களா என்று ஆராய்ந்ததா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே இந்த மன்றத்தில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் பிறகு இந்திய அரசிற்கு நான்கு ஹெலிகாப்டர்கள் விமானங்களை நிலையாக சென்னையில் நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் அதற்கு விரைவில் ஆவன செய்வதாக உறுதியளித்திருக்கிறார்கள்.

**திரு. வி. வெங்கா :** இந்த ஆண்டு விவசாய இயக்குனர் விமானங்கள் மூலமாகப் பூச்சி மருந்து தெளிக்க வேண்டாமென்று உத்தரவிட்டிருப்பதாக அறிகிறேன். அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இன்றைய தினம் தமிழ் நாட்டில் எவ்வளவு அடிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தோமோ அதற்கு மேலே அடிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து உதவித் தொகை வரத் தாமதமாவதால் தற்சமயம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. அய்யண்ணன் அம்பலம் :** பூச்சி மருந்து தெளிப்பதை, அரசாங்கம் பொது சுகாதார விதிகளின்மூலம் வியாதிகளைத் தடுப்பதுபோல. நெற்பயிருக்கு வருகிற நோய்களைத் தடுப்பதற்கு, இனமாக அடித்துக்கொடுக்க அரசு முன்வருமா?



18th December 1971]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, தற்போது அந்த உத்தேசமில்லை. தீவிரப் பயிர் சாகுபடித் திட்டத்திற்கு இன்றைய தினம் விமானங்கள் மூலமாக இலவசமாகப் பூச்சி மருந்து தெளிப்பதைச் செயல்படுத்தி வருகிறோம்.

*Model Farm at Pudupakkam*

* 256 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the officials of the Government inspected the Model farm at Pudupakkam near Madras City about the first week of April 1971 organised by TAFE; and

(*b*) if so, the details thereof?

*புதுப்பாக்கம் மாதிரிப் பண்ணை*

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகருக்கு அருகில் இருக்கும் புதுப்பாக்கத்தில்உள்ள, டிராக்டர்கள் வேளாண்மைப் பண்ணைக் கருவிகள் நிறுவனத்தினால் (TAFE) அமைக்கப்பட்ட மாதிரிப் பண்ணையை அரசு அதிகாரிகள் 1971 ஏப்ரல் திங்கள் முதல் வாரத்தில் பார்வையிட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) புதுப்பாக்கம் மாதிரிப் பண்ணையில் பருப்பு வகைகள் பெருக்கு திட்டத்தின் கீழ் பயிர் கட்புல விளக்கம் ஒன்று சென்ற ஏப்ரல் மாதத்தில் நடைபெற்றது. இத்திட்டத்தின் கீழ் விளைவிக்கப்பட்ட உளுந்துப் பயிரை விவசாய இயக்குநர் அவர்களும், செயலாளர், விவசாயத் துறை அவர்களும் பார்வையிட்டனர்.

*Kodayar Power Station.*

* 257 *Q.*—THIRU K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the year in which the erection of Kodayar Power Station was started ;

(*b*) when the construction of this Power Station will be completed; and

(*c*) whether electricity generated there will be supplied to Kanyakumari District?

*கோதையாறு மின் நிலையம்*

**திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி :** மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்— ?

(அ) கோதையாறு மின் நிலையம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அம் மின்நிலையம் எப்போது பூர்த்தி அடையும் ?

(உ) அதிலுள்ள மின்சாரம் குமரி மாவட்டத்திற்கு வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) கோதையாறு நீர்மின் திட்டம் குறித்த கட்டுமானப்பணி 1964-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

(இ) 60 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய கோதையாறு 1-ஆம் மின்நிலையம் 22—12—1970 அன்று தொடங்கப்பட்டுள்ளது. 40 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய கோதையாறு 2-ஆம் மின்நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் தொடங்கப்படும்.

(உ) ஆம்.

**திரு. காட்டூர் கோபால் :** கோதையாறு மின் திட்டம் முடிவுறும் நிலைமையில் இருப்பதால், அதில் பணியாற்றும் கட்டுமான திட்ட ஊழியர்களுக்கும் வேறு திட்டங்களில் பணி அளிப்பதற்கு அரசு வாய்ப்பு அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** வேறு திட்டங்களில் பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*Ceiling on Bus routes*

* 258 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the names of individuals and firms from whom bus routes are to be taken over by the Government consequent on fixing of ceiling of bus routes by the Government; and

(b) the number of buses taken over so far?

பேருந்து வழித் தடங்களுக்கு மேல் வரம்பு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேருந்து வழித் தடங்களுக்கு அரசு மேல் வரம்பு முடிவு செய்ததன் விளைவாக, எந்தத் தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் பேருந்து வழித் தடங்களை அரசு மேற்கொள்ளவிருக்கிறது ?

(இ) இது வரை மேற்கொள்ளப்பட்ட பேருந்துகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :** (அ) & (இ) விவர அறிக்கை @ சட்டப்பேரவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

@ Printed as Appendix II on pages 840-843.



*Lorry Accident at Mettupatti*

* 259 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that twelve persons died and twenty-one persons were injured because of a lorry entering into a procession on 3rd April 1971 at Mettupatti near Salem;

(b) whether the families of the deceased and the injured persons were given compensation; and

(c) the amount given by the lorry owner as compensation?

மேட்டுப்பட்டி லாரி விபத்து

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலத்துக்கு அருகில் மேட்டுப்பட்டி என்னும் ஊரில் 3—4—1971-ஆம் நாளன்று சரக்குப் பேருந்து ( Lorry ) ஊர்வலத்தில் புகுந்ததால் 12 பேர் உயிரிழந்ததாகவும், 21 பேர் காயம் அடைந்ததாகவும் வந்த செய்தி உண்மையா ?

(இ) இறந்தவர்களின், காயம் பட்டவர்களின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டதா ?

(உ) சரக்குப் பேருந்து ( lorry ) சொந்தக்காரர் எவ்வளவு ரூபாய் நட்ட ஈடாகக் கொடுத்தார் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :** (அ) ஆம். 13 பேர்கள் உயிரிழந்தனர். 22 பேர்கள் காயமடைந்தார்கள்.

(இ) இறந்தவர்களுடைய குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து சேலம் மாவட்ட ஆட்சியாளரால் பண உதவி வழங்கப்பட்டது.

(உ) லாரி சொந்தக்காரர் நட்ட ஈடாக யாதொரு தொகையும் கொடுக்கவில்லை.

**திரு. வி. வெங்கா :** தலைவர் அவர்களே, இதுபோன்ற லாரி விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் தொடர்ந்து வேலை செய்வதால் தான் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்குத் தொழிலாளர் சட்டப் பிரகாரம் எட்டு மணி நேரம் நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :** சட்டம் எட்டு மணி நேரம் என்று இருக்கிறது. எட்டு மணி நேரம் எப்போது ஆரம்பிக்கிறது, எப்போது முடிகிறது என்றுதான் தெரியவில்லை.

[18th December 1971

*Strikes and Lockouts.*

* 260 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Labour be pleased to state the number of strikes and lockouts in industries that took place in the State during 1970-71?

*வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும்*

***திரு. எம். ஆறுமுகசாமி :*** *மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :*

*இம் மாநிலத்தில் 1970-71-ல் தொழிற்சாலைகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் எத்தனை ?*

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :*** *1970-ல் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளில் நடந்த வேலை நிறுத்தங்கள் (கதவடைப்பு களின்) எண்ணிக்கை —277*

*31—3—71-ல் எண்ணிக்கை — 64*

*Land Reform Measures*

* 261 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to lay on the Table of the House the recent survey report by the Director of Tenancy Records on the impact of land reform measures in the State?

*நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள்*

***திரு. ஜி. சுவாமிநாதன் :*** *மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*இம் மாநிலத்தில் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து குத்தகை ஆவணங்கள் இயக்குநரால் செய்யப்பட்ட ஆய்வு அறிக்கை மேலவையின் முன் வைக்கப்படுமா?*

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** *சிறிய உழவர்களின் பொருளாதார நிலைமைகள், சிறு நிலவுடைமைகள் குறித்த பிரச்சினைகள், குத்தகையுரிமைகள் பதிவுச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள இடையூறுகள் ஆகியவை பற்றி பல்வேறு கருத்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்று அரசுக்குப் பணிந்தனுப்பப்பட்டுள்ளது. அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் முற்றிலும் ஏட்டளவே ஆகும்; இவ்வறிக்கையைப் பேரவைமுன் வைப்பதனால் உருவான பலன் ஏதும் விளையாது எனலாம்.*



18th December 1971]

***திரு. ஜி. சுவாமிநாதன் :*** *அந்த இயக்குநர் திரு. பத்ரிநாத் என்பவர் ஒரு அறிக்கை வெளியிட்டு, அந்த அறிக்கை பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு, பல உறுப்பினர்களுக்குக் கூட அனுப்பப் பெற்றுள்ளது. இப்படி எல்லோருக்கும் தெரிந்த அந்த அறிக்கையை எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுப்பதில் தவறு என்ன ? தனிப்பட்ட செலவில் அது வெளியிடப்பட்டதா ? அரசாங்கத்தின் செலவிலா ?*

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** *அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் வெளியிடப்பட்ட அறிக்கை. அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் சட்டப்படி அனுப்பக் கூடாதவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைக் கொண்டு வந்து இங்கே வைப்பதில் எந்தப் பயனும் இல்லை. அதில் ஏற்பட்டிருக்கிற செலவு ஒன்றை தவிர வேறு ஒன்றுமில்லை.*

*Salem Steel Plant.*

* 262. Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the final proposals, the approval for the designs and estimates and the final sanction for the commencement of work in connection with the Salem Steel Plant have been obtained ; and

(b) when the work will be commenced?

**சேலம் உருக்காலை**

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :*** *மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—*

*(அ) சேலம் உருக்காலை நிறுவும் பணிக்கான இறுதியாக்கப்பட்ட ஆலோசனைகளும், வடிவமைப்பு மதிப்பீடு ஆகியவற்றிக்கு அங்கிகாரமும் வேலை தொடங்குவதற்கு முடிவான அமைதியும் பெறப்பட்டு விட்டனவா ?*

*(இ) வேலை எப்போது தொடங்கும் ?*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *சேலம் உருக்காலை நிறுவுவதற்கு தமிழ் நாடு அரசு உரிமைப்படுத்த வேண்டிய பரப்பளவு பற்றி மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. தொழில் நுட்ப ஆலோசனைப் பொறியாளர்கள் மத்திய அரசுக்கு உருக்காலைக்கான தொழில் நுட்பப் பொருளாதார விவர அறிக்கையை சமர்ப்பித்த பின்புதான் உற்பத்திக்கலவை, உருக்காலை நிறுவுவதற்கான மதிப்பீடு ஆகியவைகுறித்து மத்திய அரசு முடிவெடுக்கும். இவ்வறிக்கை 1972-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய அரசுக்குச் சமர்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உருக்காலைக்கு வேண்டிய 1,473 ஏக்கரை நில உரிமைப்படுத்தும் வேலை வேகமாக நடைபெற்று வருகிறது. சேலம் உருக்காலைக்குச் சம்பந்தப்பட்ட மற்ற வேலை விவரங்கள் பற்றி மத்திய அரசு அவ்வப்போது எடுக்கும் முடிவுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[18th December 1971

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு அங்கே கிடைக்கும் ஓர் உருக்கு செய்வதற்கு எத்தனை சதவிகிதம் இருக்க வேண்டுமோ அதற்கும் குறைவாக இருப்பதாகவும், அதனால் நெய்வேலியிலுள்ள நிலக்கரி பொறுத்தமானதாக இல்லையென்றும் ஆராய்ச்சி செய்தவர்கள் அண்மையில் கருத்து தெரிவித்திருப்பதாகத் தெரிகிறதே, அதனால் ஏதேனும் தடைப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கஞ்சமலையிலுள்ள இரும்பு தாதுவைப்பற்றி சந்தேகம் எழுப்பப்படவில்லை. நெய்வேலி லிக்னைட் பற்றி அதிகமாக சல்ஃபர் இருக்கிறது என்று கருத்து சொல்லப் படுகிறது. அது உண்மையாக இருந்தாலும் கூட, லிக்னைட் டைப் பயன்படுத்தாமல் 'கோல்' ஐப் பயன்படுத்த சேலம் உருக் காலை வரவேண்டுமென்று நாம் வாதிட்டு வருகிறோம். அப்படி நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் ஆராயப்பட்டது. முன்னால் 1964-ல் லிக்னைட் எடுத்த பகுதிக்கும் இப்போது எடுக்கிற பகுதிக்கும் வேறுபாடு நிலக்கரியில் இருக்கிறது. ஆகையால் சல்ஃபர் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம் என்று காரணம் கூறப் படுகிறது.

*Kamadhenu Super Market, Madras.*

* 230 *Q.*—THE HON. THIRU SI. PA. ADITANAR : I had confusion about the question numbers. Is it about question No. 230, Sir?

MR. CHAIRMAN : There is no confusion about the question number.

* 230 @ *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government are aware of 50 per cent of reduction granted on sales by the Kamadhenu Super Market at Madras during August, September 1971 on textile: and

(*b*) if so, the details thereof ?

சென்னை, காமதேனு சிறப்பு அங்காடி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்.—

(அ) 1971 ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் சென்னை, காமதேனு சிறப்பு அங்காடி நெசவுத் துணிகளின் மீதான விற்பனையில் 50 சதவீத விலைக் குறைப்பு அனுமதித்ததை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

---

@ Postponed from the List of Questions for 17th December 1971.



18th December 1971]

THE HON. THIRU SI. PA. ADITANAR : (*a*) and (*b*) Reduction ranging between 20 per cent and 75 per cent on the sale price was allowed. The reduction sale was confined to soiled and damaged goods, out-of-fashion goods lying unsold.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள நெசவுத்துணிகள் அப்படி விற்கப்பட்டன? அந்த ரிடக்ஷன் கொடுத்தால் எவ்வளவு ரூபாய் அந்த சொசைடிக்கு நஷ்டமாகும் என்று கணக்கிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏறக்குறைய 80 ஆயிரம் ரூபாய் விலையுள்ள சரக்குகள் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட நஷ்டம் என்று சொல்வது ரூ. 20 ஆயிரம். இந்த நஷ்டத்திற்கும் ஈடு செய்தபிறகு ஏறக்குறைய 3 லட்சம் ரூபாய் மிச்சப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவுட் ஆஃப் பேஷன் என்ற அளவில் துணிகள் விற்கப்பட்டதாகச் சொன்னார் கள். அப்படியென்றால் அவை மிகுந்த நாளாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி எவ்வளவு காலம் இருந்தது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அழுக்கடைந்து போன, பேஷன் மாறிப்போனது, எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாக ரூ. 20 ஆயிரம் நஷ்டத்திற்கு விற்ற பிறகும் கூட அந்த வருடத்தில் 3 லட்சம் லாபம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்.

THIRUMATHI S. MANJUBHASHINI : Sir, considering that the 'Kamadhenu' Market has made a profit of Rs. 3 lakhs, will the Hon. Minister consider giving dividends to the members who have taken shares in the 'Kamadhenu' Market ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I believe dividend can be expected only from the T.U.C.S.

THIRUMATHI S. MANJUBASHINI : No, Sir. They pay money and become members and they are supposed to get dividends from the 'Kamadhenu' Market just as in the other Urban Co-operative Societies.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Probably the hon. Member is referring to what is known as bonus. I will ask the concerned management to consider this proposition.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்த காமதேனு, டி.யு.சி.எஸ். ஆனால் நடத்தப்படுகிறது என்று நினைக்கிறேன். இப்போது மூன்று லட்சம் ரூபாய் லாபம் கிடைத்ததாகச் சொன்னார்கள். அது டி.யு.சி.எஸ். லாபமா? காமதேனுவுக்குப் பிரத்யேக லாபமா?

[18th December 1971

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே. டி.யு.சி.எஸ்.க்குத் தனிக் கணக்கு, காமதேனுவுக்குத் தனிக் கணக்கு. இரண்டையும் சேர்த்துக் குழப்பி, லாப நஷ்டம் தெரியாமல் இருந்ததால், இந்தத் துறையிலிருந்து தனிக் கணக்கு உத்தரவு போடப்பட்டது. காமதேனு கணக்கு தனியாக வைத்து முதல் வருஷம் நஷ்டமாகி பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி இப்போது லாபத்தில் நடக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know the accounting period of 'Kamadhenu' Market because it was reported to have been sold in August and September and the Hon. Minister has mentioned a profit of $3\frac{1}{2}$ lakhs? May I know whether it relates to this particular accounting period or to previous period?

THE HON. THIRU SI. PA. ADITANAR : It relates to this particular accounting period because I made sure that it was so before I came to the House.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் மூன்று லட்சம் ரூபாய் அதற்கு லாபம் கிடைத்ததாகச் சொல்கிறார்கள். எவ்வளவு தொகை முதலீடு செய்ததற்கு, எவ்வளவு நாளைக்கு இந்த 3 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அந்த வருஷக் கணக்கைப்பற்றிச் சொன்னேன். மொத்த முதலீடு எவ்வளவு என்பது நினைவில்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

### *Agricultural Research Stations*

*263 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether all the Agricultural Research Stations in the State have been brought under the control of the Agricultural University;

(*b*) if not, the names of the Research Stations that have not been brought under the control so far; and

(*c*) the reasons therefor?

### வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள்

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் யாவும் வேளாண்மைப் பல்கலைக் கழக ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனவா?



18th December 1971]

(இ) இல்லையெனில், இதுவரை அவ்வாறு கொண்டுவரப் படாமல் உள்ள ஆராய்ச்சி நிலையங்கள் யாவை?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### *Simpson Group Workers' Issue*

*8 *S.N.Q.*—THIRU NEELA NARAYANAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that there is a lot of confusion prevailing among the workers as a result of the contradictory versions about the assurances reported to have been given by the Hon. Chief Minister with regard to the Simpson Group Workers' Issue;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) the details of the assurances given by the Hon. Chief Minister?

### சிம்ஸன் நிறுவன தொழிலாளர் பிரச்சினை

**திரு. நீல நாராயணன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சிம்ஸன் நிறுவன தொழிலாளர் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படும் உறுதி மொழிகளைப் பற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் பல்வேறு வகைகளில் எடுத்துச் சொல்வதால், தொழிலாளர்களிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

(உ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள உறுதி மொழிப் பற்றிய விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) முதலமைச்சர் கொடுத்த உறுதி மொழிகளைப் பற்றி தொழிலாளர் தலைவர்கள் சிலர் பல்வேறு வகையில் கூறி தொழிலாளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

(இ) இந்தக் குழப்பத்திலிருந்து தொழிலாளர்களை மீட்க உண்மையான நிலையை முதலமைச்சரும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அவ்வப்போது விளக்கம் கூறி வந்துள்ளார்கள்.

---

@ Printed as Appendix III on pages 843-844

(உ) முதலமைச்சர் கொடுத்த உறுதி மொழிகளாவன:—

(1) சிம்சன் நிறுவன தொழிலாளர் சங்கத் தேர்தலை குறிப்பிட்ட தேதியில் சங்கத்தின் சட்டத் திட்டப்படி ஒத்திவைக்காமல் நடத்தப்படும். தேதியைப் பற்றி ஐயப்பாடு ஏற்பட்டால் லேபர் கமிஷனர் முடிவிற்கு விடப்படும்.

(2) தேர்தல் நேரத்தில் இது பற்றி ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமானால் லேபர் கமிஷனரின் சட்டபூர்வமான ஆலோசனையை பெற்றுக்கொள்ளலாம்.

(3) பழிவாங்குதல் எதுவும் கிடையாது.

(4) தொழிலாளர்கள் மேல் போடப்பட்ட வழக்குகள் அமைதியான சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் பரிசீலனை செய்து திரும்பப்பெறப்படும்.

(5) கம்பெனியில் ஆட்குறைப்பு செய்யப்பட்ட 98 பேர்களுக்கு சிம்சன் குரூப் கம்பெனியைச் சார்ந்த மற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத்தர ஒரு மாதத்திற்குள் முயற்சி எடுக்கப்படும்.

(6) யூனியன் தொடுத்திருக்கும் வழக்குகளில் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. ராஜாராம் :** அத்துடன் அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் வராமல் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வேறு எந்த விதத் தொந்தரவும் இல்லாமல் இருக்க முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அதற்குச் சொல்லியிருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அவர்களிடமிருந்துதான் மற்றவர்களுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, இந்த உடன்பாட்டின்படி, வேலைநிறுத்தம் முடிந்து வேலைக்குச் சென்றதன் பிறகு சிம்சன் நிறுவனங்களில் பெரிய குழப்பம் ஏற்பட்டு அதனால் மிகவும் பெரிய இயந்திர சாதனங்கள் சேதமடைந்தன என்று பத்திரிகையில் செய்திகள் வந்திருக்கின்றன. எந்தத் தரப்பிலிருந்து இது செய்யப்பட்டது? இந்த உடன்பாட்டினை யார் மீறினார்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கேள்விக்கு நான் கொஞ்சம் விளக்கமாகவே பதில் சொல்ல விரும்புகிறேன்.

வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட வேண்டுமென்பதற்காக நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பலரும் மிகுந்த அக்கறை காட்டி முயற்சியில் ஈடுபட்டார்கள். கடைசியாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம், தொழிலாளர் நலத்துறை



அமைச்சருடன் பேசி இப்போது நான் இங்கே படித்துக்காட்டிய —நான் ஏற்கனவே தொழிற் சங்கத் தலைவர்களிடத்தில் கொடுத்திருந்த—அந்த உறுதி மொழிகளை அவர்களே மீண்டும் வலியுறுத்தி அவர்களே உறுதிமொழிகளைப் பற்றி எடுத்துச் சொல்லி, மற்ற தொழிற் சங்கத் தலைவர்கள் அந்தக் கூட்டணித் தலைவர்கள் அனைவரிடத்திலும் அதைப் பற்றி விளக்கிய பிறகு, தலைவர்கள் ஒன்றுகூடி தொழிலாளர்களிடத்தில் வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டிருப்பதாகவும் வேலைக்குத் திரும்புவார்கள் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் இதற்கிடையில் 16-ம் தேதிக்கு முதல் நாள் நடைபெற்ற இன்னொரு தொழிலாளர்கள் கலந்துகொண்ட இன்னொரு கூட்டத்தில் அந்த சிம்சன் கம்பெனி பழைய யூனியன் தலைவர் வந்து. "இன்னும் 15 நாட்கள் பொறுத்திருந்தால் சர்க்கார் வளைந்து கொடுத்திருக்கும், அதற்குள் அவசரப்பட்டு விட்டீர்கள். இருந்தாலும் பரவாயில்லை. நாளைக்கு வேலைக்குப் போனவுடனேயே திரும்பி வந்துவிடுங்கள்" என்று பேசி வழி அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதற்கிடையில் 14-ம் தேதி காலையில் ஒரு ஷிப்டுக்கு தொழிலாளர்கள் செல்ல வேண்டியிருக்க, வேலைக்குத் திரும்புவதாகச் சொன்ன மூன்று ஷிப்டுக்கான தொழிலாளர்கள் ஒரே நேரத்தில் அங்கே நுழைந்திருக்கிறார்கள். அப்படி நுழைந்ததன் காரணமாக உள்ளே இருந்தவர்களுக்கும் இவர்களுக்கும் கை கலப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி கலவரம் யாரால் நிகழ்ந்தது, பொருள்கள் யாரால் சேதமாக்கப்பட்டன என்று கேட்டார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் ரூபாய் அல்லது 2 லட்சம் ரூபாய் வரையில் அந்த நிறுவனத்தின் பொருள்கள் சேதமாகியிருக்கின்றன. நாம் இங்கே உன்னிப்பாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். திரு. காட்டூர் கோபால் தலைமையில் உள்ள யூனியன், கூட்டு சேர்ந்திருக்கிற தொழிற் சங்கத் தலைவரின் வாதப்படி சிம்சன் நிறுவனத்திற்கு மிக மிக வேண்டிய யூனியன் என்று குற்றம் சாட்டப்படுகிறது. அப்படிப்பட்ட யூனியன் சிம்சன் நிறுவனத்திலுள்ள பொருள்களை நிச்சயமாகச் சேதம் செய்திருக்காது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் சிம்சன் கம்பெனியில் என்னென்ன நடைபெற்றிருக்கிறது என்பதற்கான படங்களை இந்த மன்றத்தில் காட்ட விரும்புகின்றேன். (பல புகைப்படங்கள் மாண்புமிகு முதலமைச்சரால் காட்டப்படுகின்றன) அந்தக் கம்பெனியிலிருந்த குளிர்பதனப் பெட்டி இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது. மற்றொரு இடத்திலுள்ள கண்ணாடி போடப்பட்ட கதவுகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. அலுவலகத்திலுள்ள நாற்காலிகள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன இன்னொரு கட்டிடத்தில் உள்ள கண்ணாடிகள் நொறுங்கி சேதமாகியிருக்கின்றன. இன்னொரு இடம் நொறுக்கப்பட்டு இடிபாடுகளுக்கு இடையே கிடக்கிறது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் எல்லாம் கண்ணாடிகள் நொறுக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. அங்கிருந்த குளியல் அறை எந்த அளவிற்கு சேதமாகியிருக்கிறது என்று இந்தப் படத்திலிருந்து

[18th December 1971

தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு சேதம் விளைக்கப்பட்டிருக்கிறது. இன்று காலை நம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று சேதமடைந்த இடங்களைப் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் என்னிடத்தில் சொன்னது இன்னும் ஒரு வார காலத்தில் இப்போது அந்த இடத்தைத் திறந்தால் கூட வேலை ஆரம்பிக்க முடியாத அளவுக்கு நிலைமையிருக்கிறது. அங்கே சிதறிக்கிடக்கிற கண்ணாடிகளைப் பொறுக்குவதற்கே ஒரு வார காலமாகும். அதற்குப் பிறகுதான் அங்கே வேலை தொடங்க முடியும் என்று கூறப்படுகிறது. ஆகவே நிறுவனத்தோடு கலந்து பேசியதில் அண்ணாசாலையில் உள்ள சிம்சன் தொழிற்சாலையை உடனடியாகத் திறக்கலாம். செம்பியம் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒவ்வொன்றாகவே திறக்கப்பட முடியும் என்றும், அதில் முதலில் திங்கள் கிழமை சிறிய கம்பெனிகள்தான் திறக்கப்பட முடியும், ஒவ்வொரு நாளும் ஒரு கம்பெனி திறக்க முடியும் என்ற நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். அதற்கு நான் சம்மதித்து ஒரு நாளைக்கு ஒன்றாகத் திறந்து விடுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. நான் இன்னும் சொல்கிறேன். அளிக்கப்பட்ட உறுதி மொழிகள் அப்படியே இருக்கின்றன. இந்த நிகழ்ச்சி நடைபெற்று விட்டது என்பதற்காக அதற்காக நடவடிக்கை எடுக்கும் நிலைமை கூட இல்லை. ஆனால் அந்த மோதலில் காயம், அடிதடிகளுக்குப் பிறகு அங்குள்ள ஆபிசர்களை வெளியே விடமுடியாத அளவுக்கு இரவு 12 அல்லது ஒரு மணி வரையில் உள்ளே வைத்துக் கொண்டு திரு. காட்டூர் கோபால் யூனியனுக்கு எதிர் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் மறைத்துக்கொண்டிருக்க பிறகு போலீசார் போய் அவர்களை விடுவிக்கிற அளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது. இவ்வளவு தூரத்திற்குப் பிறகும் நான் சொல்கிறேன். ஏற்கனவே அளித்த உறுதிமொழி அப்படியே இருக்கிறது. திங்கட் கிழமை முதல் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்றும் திரும்பாமல் மீண்டும் இதைப்போன்ற கலவரங்களில் ஈடுபடுவார்களானால், அதற்குப் பிறகும் இந்த அரசாங்கம் பெருந்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றால், அதற்குப் பெருந்தன்மை என்ற பெயர் இருக்காது, கோழைத்தனம் என்ற பெயர்தான் அதற்கு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, இது மிகவும் பெரிய பிரச்னையாக வளர்ந்துவிட்டது. இதில் சில தினங்களாக முதலமைச்சர் அவர்களிடத்திலும் தொழிலாளர் தலைவர்களிடமும் திரு. காட்டூர் கோபால் அவர்களிடமும் நான் பேசி சுமுகமான நிலைமையில் தீர்த்து வைக்க வேண்டுமென்ற காரணத்தால் முயற்சித்து வந்தேன். முதலமைச்சர் அவர்களுடைய இப்போது சற்று முன் தந்த இந்த வாக்குறுதிகள், ஐந்தாறு ஷரத்துக்கள் எல்லோராலும் பாராட்டப்பட்டன. இந்த நேரத்தில் இது ஒரு நல்ல முடிவு என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நம்பி



[திரு. கே. ராஜாராம்]

தொழிலாளர்கள் எல்லாம் வேலைக்குப் போகவேண்டியதுதான் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக மறுநாள் வேலைக்குச் சென்ற தினம் காலை 7½ மணிக்குள்ளாகவே எனக்கு டெலிபோனில் பலாத்காரமான சம்பவங்கள் நடக்கின்றன என்று தகவல் வந்தது. நான் முதலமைச்சருக்கு டெலிபோன் செய்தேன். அவர்கள் உடனடியாக அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டார்கள். இதில் கடைசி இரண்டு தினங்களாக விசாரித்துப் பார்த்த அளவில் என்ன தெரிகிறது என்றால், வேலைக்குச் செல்லக் கூடிய தொழிலாளர்கள் மட்டும் வேலைக் காலத்துக்குப் போகவில்லை, டோக்கன் இல்லாத வேறு பலரும் உள்ளே நுழைந்திருக்கிறார்கள். முதலமைச்சர் சொல்லியது போல, மூன்று ஷிப்டு தொழிலாளிகள் திடீரென்று உள்ளே சென்றிருக்கிறார்கள். அது தவறு. முதல் ஷிப்டுகாரர்கள்தான் போயிருக்க வேண்டும். டோக்கன்களைப் பார்த்துத்தான் உள்ளே விட்டிருக்க வேண்டும். நாளை மறுதினம் தொழிற்சாலை திறந்து விட்டால், யார் உள்ளே போக வேண்டுமோ அவர்களை மட்டும் உள்ளே விட வேண்டும். தொழிலாளர் அல்லாத யாரும், அரசியல்வாதிகளோ அன்-சோஷியல் எலிமென்ட்ஸ் எவரும் அந்த மாதிரி உள்ளே போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி அதை மீறி கலகம் செய்பவர்களை உடனே அங்கேயே கைது செய்ய வேண்டும். இந்தக் குழப்பத்தை உண்டு பண்ணியது பற்றி ஒரு குறிப்பிட்ட நபரைச் சொல்கிறார்கள். அவர் காட்டூர் திரு. கோபால் அவர்கள் யூனியனைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார்கள். காட்டூர் திரு. கோபால் அவர்களைக் கேட்டால், அந்தப் பெயர் உள்ளவர் நிச்சயமாக எங்கள் யூனியனில் இல்லை என்கிறார்கள். பலாத்காரத்தில் இறங்கி ஒரு தொழிலாளி மற்றொரு தொழிலாளியை அடித்தால், உடனே கைது செய்வதற்கு போலீஸ் பந்தோபஸ்து வைக்க வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டத்தொடரில் அப்ரோபிரியேஷன் பில்லில் பேசும்போது அரசாங்கம் செய்த நல்ல முடிவுகளுக்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேச வேண்டுமென்றிருந்தேன். துரதிருஷ்டவசமாக அந்த நிலைமை தவறிவிட்டது. இன்னும் முடியாமல் இருப்பது வருத்தத்தைக் கொடுக்கிறது. ஆகையால் இனிமேல் டோக்கன் உள்ள தொழிலாளர்களை மட்டும் உள்ளே விட வேண்டும். நான்கைந்து நாட்களுக்குப் போலீஸ் பந்தோபஸ்து வைத்திருக்க வேண்டும். இந்த இரண்டையும் செய்தால் பிரச்னை தீர்ந்துவிடும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதில் குற்றம் செய்தவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நேற்றைய நிகழ்ச்சியில் கூட 25 அல்லது 30-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டு தரப்பிலும் உள்ளவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவராக இருப்பவரும் அமைப்புச் செயலாளராக இருப்பவரும் விட்டிருக்கிற அறிக்கையில் தாங்கள் யார் மீது

புகார் கொடுத்தோமோ அவரைக் கைது செய்யவில்லை, அவரை விட்டுவிட்டு யாரையோ கைது செய்திருக்கிறார்கள் என்று கூறி யிருக்கிறார்கள். இவர்கள் யார் மீது வேண்டுமானாலும் புகார் கொடுப்பார்கள். அவர்களை எல்லாம் கைது செய்ய வேண்டுமென்றால் நானே கூட அடித்தேன் என்று என் மீது புகார் கொடுப்பார்கள். புகார் கொடுத்ததற்காக கைது செய்தால் போலீசார் புலன் விசாரித்து கைது செய்ததாக அர்த்தமாகாது. இப்போது கைது செய்யப்பட்டவர்களில் இரு தரப்பினரும் இருக்கிறார்கள். கலவரத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கிற முயற்சி இது. தவறான செய்திகள் பரப்பப்படுகின்றன என்பதற்கு ஒன்றைச் சொல்கிறேன். 16-ம் தேதி நான் சட்டப்பேரவையில் இருக்கும்போது, திருமதி அனந்தநாயகி அவர்கள் அவசரமாக என்னிடத்தில் வந்து ஷண்முகம் என்கிற தொழிலாளி திரு. காட்டூர் கோபால் யூனியனைச் சேர்ந்தவரால் தாக்கப்பட்டு இன்னும் சற்று நேரத்தில் உயிர்விடும் நிலைமையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அவர்கள் வேண்டுமென்றே சொல்லவில்லை. அவர்களுக்கு அப்படிப்பட்ட தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஒரு கம்பெனியிலிருந்து இன்னொரு கம்பெனிக்கு இப்படிப்பட்ட தவறான தகவல்களை எவ்வளவு வேகமாகப் பரப்புகிறார்கள். ஆங்காங்கு உள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதற்கும் எத்தகைய முயற்சியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதற்கும் இது ஒரு உதாரணம். நான் சர்வ கட்சி தொழிற் சங்க அமைப்பைக் குறை கூறுவதாகக் கருதக்கூடாது. அந்தக் கட்டுச் சோற்று மூட்டையில் எலி இருக்கிறது. அவர்களே அதை உணர்வார்கள். மூட்டை கட்டியாகிவிட்டது. எலி இருக்கிறது உள்ளே. அதை வெளியே சொல்வதற்கு அவர்களுக்கு வெட்கமாக இருக்கிறது. மனம் புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள். அது எனக்கும் நன்றாகத் தெரியும். எதிர்க் கட்சித் தலைவருக்கும் ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் இருக்கிற அக்கறை தொழிற் சங்கத்திலிருந்து இதற்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற ஒரு சில தீவிர வாதிகளுக்கு இல்லை. இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற வேண்டும், இப்படி அமளி நடைபெறவேண்டும். அராஜகம் நடைபெற வேண்டுமென்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நடந்தால் மீண்டும் நடைபெறும் தொழிலாளர் தேர்தலில் தலைவராக வரலாம் என்ற எண்ணத்தில் நடைபெறுகிறது. இது ஒரு சதித் திட்டமாக நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் அதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு அதற்கு இடம் தராத வகையில் தொழிலாளர்களே தொழிலாளர்களுக்கான நலன்களைத் தேடிக்கொள்ள வகை செய்யும்.

திரு. கே. ராஜாராம் : முதலமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. கட்டுச் சோற்று மூட்டைக்குள் இருக்கிற எலியைப் பிடிக்க வேண்டும். அதற்குத்தான் தொழிற்சாலைக்குள் போகும்போது அதற்கான டோக்கன் உள்ளவர்களை மட்டும் அனுப்ப வேண்டு



மென்று சொன்னேன். அப்போது இந்தத் தகராறு இருக்காது. அடிபட்டவர்களை போலீஸ் வானில் ஏற்றி ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சைக்கு விட்டவர்களிற் சிலரையே கைது செய்ததாக மறுபடியும் புகார் வந்திருக்கிறது. அதனால்தான் போலீசார் தொழிற் சாலைகளின் உள்ளே இருந்து பந்தோபஸ்து செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** யார் என்னிடத்தில் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டார்களோ அதே தொழிலாளர்கள்தான் போலீசார் உள்ளே சென்றதும் தடுத்தவர்கள்.

## *Workers Contribution to Defence Fund*

* *S. N. Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that workers have come forward to donate one day's wages as their contribution to the Defence Fund;

(*b*) if so, whether the Government are aware of the fact that there is no provision in the Payment of Wages Act permitting the management to recover a day's wages at the time of disbursement of wages and donate it to the Defence Fund; and

(*c*) if so, whether the Government will exempt the donations made by the workers to the Defence Fund from the provisions of the Payment of Wages Act and do the needful for the recovery of wages at the time of disbursement of wages on the basis of an agreement entered into between the Management and the Trade Unions concerned?

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) யுத்த நிதிக்கு தொழிலாளர்கள் தங்களின் ஒருநாளைய ஊதியத்தை நன்கொடையாக அளிக்க முன்வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், சம்பள பட்டுவாடா சட்டத்தில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கும்போதே நிர்வாகத்தினரே ஒரு நாளைய சம்பளத்தை பிடித்து யுத்த நிதிக்கு அளிக்க சட்டத்தில் இடம் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், சம்பள பட்டுவாடா சட்டத்தின் யுத்த நிதி அளிப்புக்கு விலக்களித்து சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களும் நிர்வாகத்தினரும் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் மூலமாகவே தொழிலாளர்களது யுத்த நிதி அளிப்பினை சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

[18th December 1971

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இது குறித்து தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை பொதுச் செயலாளரிட மிருந்து மடல் வரப்பெற்றது.

(இ) 1971-ம் ஆண்டு இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்படி 4—12—1971-ல் சம்பளப் பட்டுவாடா சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அத்திருத்தப்படி தேசிய பாதுகாப்பு நிதிக்காகவோ அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு திட்டத்திற் காகவோ சம்பளப் பிடித்தங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(உ) இதை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய விதிமுறை களை இயற்ற அரசு ஆவன செய்து வருகிறது.

## UNSTARRED QUESTIONS.

### *Remuneration paid to Law Officers*

5 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the remuneration paid to (i) the Advocate-General; (ii) Public Prosecutor; (iii) Government Pleader; (iv) Additional Government Pleader ; (v) Additional Public Prosecutor during the years 1969–70 and 1970–71 ; and

(*b*) The Commissioner of Police, Madras City noticed that account?

A.—(*a*) and (*b*) A statement @ is placed on the table of the House.

### *Pedestrian traffic*

6 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Commissioner of Police, Madras City has issued appeals to owners of buildings not to obstruct pedestrian traffic, about May 1971; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) Yes.

(*b*) The Commissoner of Police, Madras City noticed that several persons repairing their houses, or putting up new constructions had piled up sand, bricks, blue metal, iron rods etc., on foot paths and pavements. These caused obstruction on the footpaths and pavements and pedestrians were obliged to walk on the road hindering the free flow of traffic and involving risk of being run over by vehicular traffic. Hence, at the Weekly Press Conference on 21st May 1971, the Commissioner of Police appealed to the public not to be obstruct footpaths and pavements with building materials. He also instructed Inspectors and Sub-Inspectors to look for such obstructions, warn the persons responsible to remove the obstructions and if they failed to do so, to prosecute them.

@ Printed as Appendix IV on page 844–845



18th December 1971]

During the period from 21st May 1971 to 30th June 1971, 131 cases were booked against those who obstructed footpaths and pavements with building materials. 116 cases ended in conviction and 15 cases are still pending trial.

### *Purchase made by the Mylapore Police Station from Hotels*

7 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the amount for which the Mylapore Police Station in Madras City has made purchases from Local (i) Vegetarian and (ii) Non-Vegetarian Hotels during 1970-71 monthwise?

A.—Purchases have been made only from Vegetarian Hotels. Month-wise particulars are given below :

| *Month.* | | *Amount.* |
|---|---|---|
| | | RS. P. |
| April 1970 | ... ... ... ... ... | 1,102.22 |
| May 1970 | ... ... ... ... ... | 1,074.34 |
| June 1970 | ... ... ... ... ... | 379.42 |
| July 1970 | ... ... ... ... ... | 1,474.28 |
| August 1970 | ... ... ... ... ... | 654.76 |
| September 1970 | ... ... ... ... | 578.42 |
| October 1970 | ... ... ... ... ... | 1,229.40 |
| November 1970 | ... ... ... ... | 309.38 |
| December 1970 | ... ... ... ... | 778.76 |
| January 1971 | ... ... ... ... ... | 372.50 |
| February 1971 | ... ... ... ... | 1,122.50 |
| March 1971 | ... ... ... ... ... | 1,970.70 |
| Total | ... | 11,046.68 |

### *Murder of the Agricultural Officer of Kadaladi.*

8 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Agricultural Officer of Kadaladi Panchayat Union, Mudukulathur Taluk was murdered in Melakidaram around the second week of June 1971; and

(*b*) if so, the details thereof ?

*A.*(*a*) and (*b*) : Ramachandran, Extension Officer, Animal Husbandry, Kadaladi was murdered on 10th June 1971 night by one Muthumani, Librarian, Kilakidaram. The motive for the murder is a wordy altercation between the accused and deceased about language problem in a hotel, just prior to the occurrence. Accused has been secured and the case was charged on

[18th December 1971

12th July 1971. This relates to Mudukulathur Police Station Crime No. 187 of 1971 under section 302, Indian Penal Code. The accused Muthusami was committed to sessions, Ramanathapuram on 2nd August 1971 by the Sub-Magistrate, Mudukulathur. The bail application of the accused was dismissed on 30th August 1971.

*Fire Stations*

9 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to set up fire stations at Cumbam, Gudalur and Uthamapalayam in view of the recent frequent hay stack fire incidents; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) No

(*b*) Does not arise.

*Women's Polytechnic, Coimbatore*

10 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of students admitted in the Womens' Polytechnic, Coimbatore during the years 1970–71 and 1971–72 course-wise?

*A.*—

*Government Polytechnic for Women, Coimbatore*

| *Courses offered.* | | 1970–71. | 1971–72. |
|---|---|---|---|
| 1. Pre-Technical Course | .. .. | 40 | 40 |
| 2. Commercial Practice | .. .. | 50 | 60 |
| 3. Crafts Course in Bakery and Confectionery. | .. .. | — | 10* |

*School of Arts and Crafts, Madras.*

11 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the incentives available for students joining the School of Arts and Crafts at Poonamallee High Road, Madras?

*A.*—The following incentives are available for the students of the College of Arts and Crafts, Madras:

(i) Scholarships and stipends are awarded to a percentage of students;

(ii) Drawing materials are distributed free of cost;

(iii) Diploma Course students are taken on educational tours every year at Government cost;

(iv) Railway concession forms are issued to the students for going to their native places during holidays;

**Note*: New Course introduced during 1971–72 only.



18th December 1971]

(v) Railway concessions and season tickets are given to students coming from suburban places;

(vi) Necessary grant towards conducting the annual exhibition of the paintings, sculpture and drawing, etc. and the College annual day celebration is sanctioned.

*Grant-in-aid Code*

12 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Grant-in-aid Code for the schools is published by the Education Department every year; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

*Science Laboratory Grant*

13 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of aided High Schools selected for Science Laboratory Grant during the year 1970–71 districtwise?

A.

| *Revenue District.* | *No. of Schools.* |
|---|---|
| Madras ... ... ... ... ... | 4 |
| North Arcot ... ... ... ... ... | 2 |
| Thanjavur ... ... ... ... ... | 1 |
| Tiruchirappalli ... ... ... ... | 1 |
| Madurai ... ... ... ... ... | 1 |
| Salem ... ... ... ... ... | 1 |
| Nilgiris ... ... ... ... ... | 1 |
| Ramanathapuram ... ... ... ... | 1 |
| Kanyakumari ... ... ... ... | 1 |
| | 13 |

*Ph. D. Qualifications*

14 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of officers and teachers with Ph. D. qualifications in Education and Educational Psychology working in Education Department and Teachers' Training Colleges in the State as on date?

*A.*—One Officer with Ph.D. in Education (now on other duty) and one Officer in Educational Psychology are working in Arts Colleges. No one is working in Training Colleges.

[18th December 1971

*Condoms*

15 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the CARE Organisation is distributing condoms to workers through industrial undertakings; and

(b) if so, the details thereof?

A.—(a) and (b): The CARE organisation is distributing condoms free of cost to industrial workers who come under the CARE Nutritional Programme.

*Advertisements for Beggars Relief Fund*

16 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether advertisements were given to newspapers and journals by the Government for raising Beggars Relief Fund: and

(b) if so, the names of newspapers and the expenditure incurred thereon, newspaper-wise?

A.—(a) Yes.

(b) (1) Malaimurasu—Rs. 132.00.

(2) Swadesamitran—Rs. 264.00.

(3) Thennagam—Rs. 300.00.

(4) Viduthalai—Rs. 180.00.

(5) Murasoli—Rs. 198.00.

(6) Daily Thanthi—Rs. 768.00.

(7) Dinamani—Rs. 561.00.

(8) Malaimani—Rs. 198.00.

(9) Nammadu (Bill not settled for want of clarification).

*District Munsifs under suspension*

17 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of District Munsifs who are under suspension as on 1st July 1971;

(b) the period of their suspension: and

(c) the steps taken to expedite their cases?

A.—(a) Two.

(b) and (c) Of the two District Munsifs, one is under suspension from 23rd July 1968 and the other from 22nd October 1970. The action is being expedited.



18th December 1971]

*Cases Pending in the High Court*

18 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of cases pending, namely (i) Civil, (ii) Criminal and (iii) Writs in the High Court as on date?

A.—A statement @ is placed on the table of the House.

***ரசாயன உரங்கள்***

*19 கே. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) நமது மாநிலத்தில் 1969 ஏப்ரல் முதல் தேதியன்று கையிருப்பில் இருந்த ரசாயன உரங்கள் எவ்வளவு?*

*(இ) அதன் பின் 1971 மார்ச் முடிய ஆண்டுதோறும் நமது மாநிலத்தின் உபயோகத்துக்குத் திட்டமிடப்பட்ட உர வகைகளின் குறியளவு என்ன?*

*(உ) இந்தக் காலத்தில் ஆண்டுதோறும் நமது மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்ட உர வகைகளின் அளவென்ன?*

*(எ) அதில் அந்தந்த ஆண்டுகளில் வாங்கிக் கொண்ட உர அளவு என்ன?*

*(ஐ) ஆண்டுதோறும் விநியோகிக்கப்பட்ட அளவென்ன?*

*(ஒ) 1970-71 ஏப்ரல் முதல் தேதியில் இருப்பாக இருந்த அளவு என்ன ?*

*(ஔ) 1971 ஏப்ரல் தேதியில் இருப்பிலிருந்த உர வகைகளும், அவற்றின் அளவும் என்ன? இந்த உரங்கள் எவ்வெப் பொழுது இருப்புக்கு வந்தன?*

*ப.—அவையின் முன், விவர அறிக்கை @ ஒன்று வைக்கப் பட்டுள்ளது.*

***ரப்பர் தோட்டங்கள்.***

*20 கே.—திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு துறையில் இரப்பர் தோட்டங்கள் எத்தனை ஏக்கர் இருக்கிறது?*

*(இ) இரப்பர் பால் எடுக்கும் நிலையில் எத்தனை ஏக்கர் இருக்கிறது?*

---

@ Printed as Appendix V on pages 845

@ Printed as Appendix VI on pages

[18th December 1971

(உ) இரப்பர் பால் எடுக்காத் நிலையில் 5,275 ஏக்கர் இருக்கிறது?

(எ) மாதந்தோறும் எத்தனை டன் ரப்பர் கிடைக்கிறது?

ப.—(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுத் துறையில் இரப்பர் தோட்டங்கள் 6,350 ஏக்கரில் இருக்கிறது.

(இ) இரப்பர் எடுக்கும் நிலையில் 1,075 ஏக்கர் இருக்கிறது.

(உ) இரப்பர் பால் எடுக்காத நிலையில் 5,275 ஏக்கர் இருக்கிறது.

(எ) பத்து மாதங்களுக்கு மாதந்தோறும் சராசரி 30, 379 கிலோ அல்லது 35 டன் இரப்பர் பால் கிடைக்கிறது. (ஆண்டில் 10 மாதங்கள் தான் இரப்பர் பால் எடுக்க இயலும்).

### கோதையாறு அணை.

21 கே—திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோதையாறு மேல் அணையின் நீளம், உயரம் என்ன?

(இ இவ்வணையில் எவ்வளவு தண்ணீர் கொள்ளும்?

(உ) கோதையாறு கீழ் அணையின் உயரம், நீளம் என்ன?

(எ) இவ்வணையில் எவ்வளவு தண்ணீர் கொள்ளும்?

A.—(a) Length 595 feet.
Height 275 feet.

(b) Gross capacity 4197 million cft.
Net capacity 4186 cm. feet.

(c) Length 500 feet.
Height 200 feet.

(d) Gross capacity 31.36 cm. feet.
Net capacity 25.77 cm. feet.

### *Registration under Hackney Carriages Act.*

22 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the registration under the Hackney Carriages Act has fallen in the year 1971-72: and

(b) the reasons therefor?

A.—(a) No.

(b) Does not arise.



18th December 1971]

### *Prosecutions for violating speed limits.*

23 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state the number of persons, against whom prosecutions were launched for violating speed limits during the months of January, February, March, April and May 1971 (monthwise) in Madras City?

A.—Number of cases detected for overspeeding during 1971 is as follows:—

January 1971—244.
February 1971—46.
March 1971—140.
April 1971—314.
May 1971—284.

### *Collection of Motor Vehicles Tax*

24 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Indian Oil Corporation has offered to collect the Motor Vehicle Taxes on behalf of the Police in Madras City; and

(b) if so, the details thereof?

A.—(a) Yes.

(b) The Indian Oil Corporation suggested that tax might be collected at six of their retail outlets in Madras. This suggestion was not accepted.

### *Traffic Accidents*

25 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state whether the hit and run traffic accidents are on the increase in Madras City in 1971?

A.—Yes. Hit and run traffic accidents are on the increase in Madras City in 1971.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III.—ANNOUNCEMENTS.

### (1) *Messages from the Governor.*

MR. CHAIRMAN: I have received messages from the Governor recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 and the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971.

(2) *Messages from the Assembly.*

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislaive Assembly, transmitting copies of the following Bills, as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying the that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution.

1. The Tamil Nadu Appropriation (No. 3) Bil, 1971 (L.A. Bill No. 54 of 1971).

2. The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. No. 55 of 1971).

3. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971);

4. The Tamil Nadu Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971).

## IV.—ADJOURNMENT MOTION AND STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *re*. HEAVY FLOODS IN AND AROUND MADURAI CITY AND THE DAMAGES CAUSED TO PROPERTIES AND THE RELIEF OPERATION TO REDRESS DIFFICULTIES.

MR. CHAIRMAN : I have received notice of an adjournment motion from the hon. the Leader of the Opposition regarding the heavy floods in Madurai. Since the Hon. the Chief Minister is going to make a statement under rule 82 on the same subject, the adjournment motion will be taken up after the statement is made by the Hon. the Chief Minister.

The Hon. the Chief Minister will make a statement under rule 82.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கைக்குப் பிறகு தான் பேச அனுமதிக்க முடியாது. ஆகையால் நான் இரண்டு வார்த்தைகள் பேசி விடுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : பேசுங்கள்.

THIRU K. RAJARAM : Mr. Chairman, Sir, under rule 43 of the Legislative Council Rules, I give notice to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance, namely,

"the recent heavy rains in and around Madurai City resulting in floods and the consequent death of several persons and the damages caused to the properties of the people in Madurai, Sholavandan and some other places and the necessity for immediate relief operations to be taken to redress those difficulties caused to the people in those areas and the failure of the Government in vacting the hut dwellers in the river bed of Vaigai in time"



தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமானதொரு விஷயம். எனவேதான் சபையின் நடவடிக்கைகளைச் சிறிது ஒத்திவைத்து, இதுபற்றிப் பேச வேண்டுமென்று கோருகிறேன். இப்போதைக்கு இது மதுரையைப் பொறுத்த விஷயமாகத்தான் அமைந்திருக்கிறது என்றாலும், இது போன்ற நிகழ்ச்சிகள் பல்வேறு இடங்களிலே ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. தமிழகத்தில் பல்வேறு இடங்களிலே ஆற்றுப்படுகையிலேயே, அதாவது வெள்ளம் போகக்கூடிய இடத்திலேயே, குடிசைகளைக் கட்டிக்கொண்டு மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் வெளியேற்ற வேண்டுமென்று பல முறை அதிகாரியிடமும் சம்பந்தப்பட்டவர்களிடமும் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். அங்கேயுள்ள மக்கள், 'வைகை அணைக்கட்டு கட்டப்பட்டுவிட்டது. எனவே வெள்ளமே வராது' என்று எண்ணத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியிருக்கின்றார்கள். ஆனால் திடீரென்று வெள்ளம் வரும்போது இப்படிப்பட்ட கதிதான் ஏற்படுகிறது, பல இடங்களிலே கெட்டிக் கட்டிடமாகவேகூட கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களை வெளியேற்ற வேண்டும், காலி செய்ய வேண்டும் என்று பல முறை சொல்லியும் கூட முனிசிபல் எலெக்ஷன், கார்ப்பொரேஷன் எலெக்ஷன் என்று ஏதாவது வருகிறது. அப்போது ஓட்டர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகின்றார்கள். அதனால் வந்த வேதனை இது. அன்றைக்குப் பல தடவை போலீஸ் வேன்களிலிருந்து ஒலி பெருக்கிமூலம் இரவு 12 மணி வரையில்கூட அவர்களையெல்லாம் கேட்டுக் கொண்டார்கள், இரவே காலி செய்துவிட வேண்டுமென்று. ஆனாலும் அவர்கள் காலி செய்யவில்லை. அவர்கள் எண்ணினார்கள், வைகை அணை கட்டப்பட்டிருப்பதால் தண்ணீர் வெள்ளம்போல வராது என்று. இப்போது வைகை மட்டும் இல்லை, அதற்குக் கீழே மழை பெய்து பேரணையிலிருந்தும் தண்ணீர் விடப்பட்டு பெருமளவிற்கு வெள்ளம் வந்து விட்டது. எனவே இப்படிப்பட்ட நீர் நிலைகளிலும் ஆற்றுப்படுகையிலும் வீடுகளைக் கட்டுவது கண்டிப்பாகத் தடுக்கப்பட வேண்டும். சென்னையில்கூட எவ்வளவோ தாழ்ந்த பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டு மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். பெருமழை ஏற்படும்போது, அவர்களுடைய வீடுகள் இடிந்துவிழுகின்றன அல்லது வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. பிறகு அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் இருபது ரூபாய், முப்பது ரூபாய் என்று கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே கொஞ்சம் கடினமாக நடந்துகொண்டு நீர் நிலை உள்ள பகுதிகளில் குடிசைகள் கட்டப்படக்கூடாது என்பதற்குக் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சென்னையிலோ அல்லது மதுரையிலோ மட்டுமின்றி, எல்லா மாவட்டங்களிலுமே கவனிக்கப்பட வேண்டும். குறிப்பாக வைகை ஆற்றங்கரையில் நிறையபேர் கட்டிடங்களாகவே வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றார்கள். அவர்களை

யெல்லாம் ஏற்கெனவே காலி செய்திருந்தால், இப்படிப்பட்ட கோர சம்பவங்கள் நிகழ்ந்திருக்காது. ஆகவே காலி செய்யாததால், அரசாங்கம் தவறிவிட்டது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். இதுபற்றி விவாதம் செய்ய சம்மதிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். முதலமைச்சர் அவர்கள் 'ஸ்டேட்மெண்ட்' வாசித்துவிட்டால், எதுவும் ஒன்றையும் பேச முடியாது. எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முதலில் அனுமதித்து ஒரு மணி நேரமாவது இதுபற்றிப் பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே. வைகை அணைக்கு மேலே பெருமழை காரணமாக 16-ஆம் தேதி இரவு 9 மணிக்கு வைகையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் என்றும், அதன் காரணமாக வைகையில் வெள்ளம் வரும் என்றும், வைகைக்கரை ஓரங்களில் இருப்பவர்கள் உடனடியாக காலி செய்ய வேண்டும் என்றும், 16-ஆம் தேதி மாலை 6 மணிக்கெல்லாம் எச்சரிக்கை செய்யப்பட்டது. மீண்டும் இரவு 9 மணிக்கு மேல் எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால் அங்கே குடிசை போட்டுக் கொண்டிருந்த அவ்வளவு பேரும், 'குடிசைகளைப் பிரித்திட வேண்டும் என்பதற்காக அரசாங்கத்தில் வேண்டுமென்றே ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்கின்றார்கள்' என்று கருதிக்கொண்டு இப்படிப்பட்ட எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தத் தேவையில்லை யென்று நினைத்துக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டார்கள். அவர்கள் குடிசைகளை விட்டு வெளியேற மறுத்துவிட்டார்கள். எனவே கொடுத்த எச்சரிக்கைகள் பயனற்றுப் போய்விட்டன. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தேர்தலில் ஈடுபடவேண்டியிருக்கும் காரணத்தினால், இதிலே தயக்கம் ஏற்படுகிறது என்றும், இக்குடிசைகள் எல்லாம் முன்பே பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அவர்களே குறிப்பிடுகின்றார்கள், தேர்தல் காரணமாகத் தயக்கம் ஏற்படுகிறது என்று. தேர்தலில் ஈடுபடும்போது இரண்டு கட்சிகளில் ஒரு கட்சி ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க் கட்சியாகவும் இருக்கும்போது. ஆளும் கட்சியினர் இப்படிப்பட்ட பணிகளைச் செய்திடவேண்டும் என்று சொல்லும் நோக்கில், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள்—எது எதிர்க் கட்சியாக இருந்தாலும் எது ஆளும் கட்சியாக இருந்தாலும்—இப்படிப்பட்ட நேரங்களிலே குடிசைகளைப் பிரிக்கும் போது, அவற்றைப் புகைப்படங்களாக எடுத்து பத்திரிகைகளில் போட்டு, 'குடிசைகளைப் பிரித்துவிட்டார்கள்' என்று அதைத் தங்கள் கட்சி நலன்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் முறை இருக்கிறது. எனவேதான் இதுபற்றி அடிக்கடி சொல்லிவந்திருக்கிறேன். சென்னையில் குடிசை மாற்று வாரிய விழாக்கள் நடைபெறும் நோக்கில், அங்கே வந்துள்ள அமைச்சர் பெருமக்களுக்கு வலியுறுத்திக் கூறிவந்திருக்கிறேன், 'இது போன்ற விஷயங்களிலே





அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, அரசு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டு குடிசைகளை அகற்ற முனையும்போது, எதிர்ப்பினைத் தெரிவிக்காமல் அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்போது ஒருமித்த கருத்தோடு செயல்படுவதற்கான முறையில் அவற்றைச் செய்ய முனைந்திட வேண்டுமென்று அடிக்கடி கேட்டுவருகின்றேன். அப்படிச் செயல்பட்டால்தான், இதிலே முழுமையான வெற்றியினைப் பெற முடியும். அப்படிப்பட்ட காரணத்தினால்தான், வைகையிலுள்ள அந்தக் குடிசைகளெல்லாம் பிரிக்கப்பட வேண்டுமென்று பல முறை முயற்சிகள் செய்த காலத்திலும், வேறு பல அரசியல் கட்சிக்காரர்கள் அங்கேயுள்ள குடிசை வாசிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதால்தான், அவர்களை வெளியேற்ற முடியாது போய்விட்டது. பிறகு வைகை அணையிலிருந்து நீர் திறந்துவிடப்பட்டதின் காரணமாகவும், வைகைக்கும் பேரணைக்கும் நடுவில் மழை காரணமாகவும் வைகையில் சுமார் 44,000 கியூசெக்ஸ் தண்ணீர் வந்து 16-ஆம் தேதி இரவு 3 மணிக்கு மேல் பெரு வெள்ளம் வந்தது. இந்த வெள்ளத்தின் காரணமாக வைகை நதிக்குள் குடிசை போட்டுக்கொண்டிருந்தவர்களுடைய குடிசைகள் அடித்துச்செல்லப்பட்டன. வைகையில் இரு கரைகளும் நிரம்பி தாழ்ந்த பல பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால் பல குடிசைகள் சேதமடைந்தன.

சேத விவரங்கள்பற்றிச் சொல்லப்போனால், மதுரை நகரைச் சுற்றி தாழ்ந்த பகுதிகளில் சுமார் 200 குடும்பங்கள் வீடுகளை இழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. வீடு இழந்தவர்கள் எண்ணிக்கையை அதிகாரிகள் கணக்கெடுத்துக்கொண்டுள்ளார்கள்.

சோழவந்தான் அருகில் சுமார் 200 வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிகிறது. மேலும் மதுரை-சோழவந்தான் சாலை சேதமடைந்துள்ளது.

ஆட்கள் சேத விபரங்கள் சொல்லப்போனால், வெள்ளத்தில் சிக்கி இதுவரை 7 பேர் இறந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

நிவாரண வேலைகள் பற்றிச் சொல்ல வேண்டுமானால், 17-ஆம் தேதி அதிகாலை 7 மணிக்கே மதுரை கலெக்டர் போலீஸ் தீயணைப்புப் படைகளுடனும் மதுரை கமிஷனருடனும் பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளையும் பார்வையிட்டு, வீடு இழந்தவர்கள் அனைவரையும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் தங்குவதற்கும் உணவு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. வெள்ளத்தில் சிக்கியவர்களை, போலீஸ் தீயணைக்கும் படையினர் மிகுந்த சிரமத்துடன் காப்பாற்றினர். மேலும் செல்லூர் மாட்க்

[திரு. மு. கருணாநிதி] [18th December 1971

குளம் போன்ற கண்மாய்கள் கரைகள் உடைந்ததால், மேலும் சில இடங்கள் பாதிக்கப்படக்கூடும் என்பதால் அந்தக் கண்மாய்களின் கரைகள் உடனடியாகப் பலப்படுத்தப்பட்டன.

மேலும், இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு திருச்சியிலிருந்து ஒரு ஹெலிகாப்டர் அரசின் அனுமதியுடன் வரவழைக்கப்பட்டு, நேற்று பிற்பகல் 2-45 மணிக்கு ஹெலிகாப்டர் மூலம் ஆறு பேர்கள் காப்பாற்றப்பட்டனர். ஆனால் திடீரென்று ஹெலிகாப்டரிலிருந்து தொங்கவிடப்பட்ட கயிற்றை விட்டுவிட்ட ஒருவரைக் காப்பாற்ற முயன்றபோது, ஹெலிகாப்டர் தண்ணீரில் சிக்கி மூழ்கியது. அதிலிருந்து விமானி நீந்தி வைகையின் நடுவில் இருந்த குடிசை யின்மேல் ஏறி உட்கார்ந்து தப்பினார். உடன் சென்ற நியனைக்கும் படையினைச் சேர்ந்த குழந்தைவேலு என்பவர் மூழ்கி இறந்து போனார். அவர் உடல் இன்று காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை இந்தப் பேரவை யின் சார்பில் தெரிவித்துக்கொள்ளுவதோடு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அந்தக் குடும்பத்தினருக்கு ரூபாய் 5,000 அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நேற்று மாலை விமானியும் அந்தப் பகுதியிலிருந்த எட்டுப் பேர் களும் மீட்கப்பட்டுள்ளார்கள். இதுவரை சுமார் 30 பேர்களுக்கு மேலாக மீட்கப்பட்டுள்ளார்கள். இன்னும் சுமார் 12 பேர்களை மீட்க ஏற்பாடாகியுள்ளது. இன்று காலை கொச்சியிலிருந்து ஒரு கப்பற்படை ஹெலிகாப்டர் மதுரை புறப்பட்டுள்ளது. இன்று மாலைக்குள் அவர்களும் மீட்கப்படுவார்கள். வீடு இழந்தவர்களுக்கு தற்போதுள்ள அரசு விதிகளின்படி உதவித்தொகை உடனடியாக அளிக்கப்படும்.

தலைவர் அவர்களே, இந்த விவரங்களுக்குப் பிறகும் இதுபற்றி விவாதிக்க ஒரு மணிநேரம் ஒத்திவைத்துப்பேசத் தேவையில்லை என்று கருதுவதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனு மதிக்கவேண்டாம் என்று தலைவரவர்களே, தங்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

MR. CHAIRMAN : In view of the statement made by the Hon. the Chief Minister, I withhold my consent to the raising of the matter.

## V. GOVERNMENT MOTIONS

(1) *Suspension of Rule 42 (3) of the Council Rules.*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :

" தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (3) துணைவிதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும் "



18th December 1971]

(Deputy Chairman in the Chair)

DEPUTY CHAIRMAN : The question is :—

" That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub rule (3) thereof and that more than one matter, under that rule, be permitted to be raised to-day. "

The motion was put and carried.

## VI. CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE

(1) *Drought relief operation in Ramanathapuram district*

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி களைக் குறித்து மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலைகளுக் காக ரூ. 2 கோடி திட்டம் துவக்கப்பட்டு, பல வேலைகள் முற்றுப் பெறாமலும், முடிந்த வேலைத் திட்டங்களுக்கு, நிதி கொடுக்கப் படாமலும், அதனால் ஊராட்சி ஒன்றியத்தில் பொது நிதி பாதிக்கப் பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் எப்பொழுதும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கிராமப்பணிகள் சிறப்புத் திட்டம் ஒன்றை நிறை வேற்றுவதற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டம் 1970-71-ல் தொடங்கி 1973–74 வரையில் 4 ஆண்டு கால அளவில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் புறம்பான இத் திட்டத்திற்கு அவர்கள் முழு நிதியும் அளிப்பர். இத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் சென்ற ஆண்டு தொடங்கி முடிவுறாத பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 50.72 இலட்சத் திற்கு மேற்படாத செலவை மேற்கொள்வதற்கு இந்திய அரசு தமது நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. 1971, ஜூலைத் திங்களில் இந்திய அரசு ரூ. 20 இலட்சம் தனிப்பட்ட மானியம் வழங்கி யுள்ளது. இத்தொகையில் ரூ. 10 இலட்சம் இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் 30-9-1971 வரையில் இப்பணித் திட்டத்தின் கீழ் ரூ. 42.10 இலட்சம் செலவாகியுள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இப்பணிக்குரிய நிதி முன்ன தாகக் கொடுக்கப்படாமையால், மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் இப்பணிக்கான செலவு குறித்து மொத்தம் ரூ. 25.16 இலட்சம் தங்களது நிதியிலிருந்து முன்பணமாக வழங்கின. இதன் விளைவாக ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை மிகவும் பாதிக்கப் பட்டது.

[திரு. ப. உ. சண்முகம்] [18th December 1971

இந்திய அரசு இப்பணிக்காக 26—11—1971-ல் மேற்கொண்டு ரூ. 20 இலட்சம் வழங்கியுள்ளது. மாநில அரசு நிலைமையை கவனமுடன் சீர்தூக்கிப் பார்த்த பின்னர், இந்திய அரசு 26—11—1971 அன்று வழங்கியுள்ள ரூ. 20 இலட்சம் தவிர இத் திட்டத்திற்கான செலவு குறித்து மாநில நிதியிலிருந்து ரூ. 20 இலட்சம் முன்பணமாக வழங்கியுள்ளது. இந்த மொத்தத் தொகையாகிய ரூ. 40 இலட்சத்தில் ரூ. 30 இலட்சம் இராமநாத புரம் மாவட்டத்தில் ஏற்கனவே செலவாகிய தொகையை ஈடு செய்வதற்காக அம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பொழுது வழங்கப்பட்டுள்ள தொகையிலிருந்து ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து முன்பணமாக வழங்கப்பட்ட ரூ. 26.16 இலட்சத்தை ஈடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கட்டளையிடப் பட்டுள்ளது.

இப்பணித்திட்டம் 4 ஆண்டு கால அளவில் நிறைவேற்றப்பட வேண்டும். இதன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இந்திய அரசிடமிருந்து நிதி கிடைக்கும் பொழுது மேற்கொண்டும் நிதி ஒதுக்கல் செய்யப்படும்.

## (2) Inconvenience caused to the public due to stoppage of buses in Thanjavur district.

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர், விளாங்குடி, திருவையார், கும்பகோணம். திருக்காட்டுப்பள்ளி, கல்லணை முதலிய இடங்களில் ஓடிக்கொண்டிருந்த சுமார் இருபது பஸ்கள், பஸ் சர்விஸ் நிர்வாகி களுக்குள் ஏற்பட்ட வழக்கின் காரணமாய், பேருந்துகள் ஓடாத தால் பிரயாணிகள் அவதியுறுகிறார்கள்.

The Hon. Thiru S. RAMACHANDRAN : Mr. Chairman, Sir, Thiruvalargal Swami Motor Transports (Private) Limited, Thanjavur are one of the big fleet owners of Thanjavur district owning 47 route permits. Due to some misunderstanding among the share-holders of the Company, the services operated by the Company deteriorated gradually resulting in the stoppage of vehicles of the Company, one after the other. Actually the Company operated only 13 buses during the commencement of this quarter i.e., October 1971 and even out of these 13 vehicles, they stopped 8 vehicles from the routes after using them without payment of tax during the grace period. Hence only 5 vehicles of the Company were plying on the routes during November, 1971. Even these five vehicles have been stopped from the routes with effect from 28th November 1971. Hence none of the buses of the Company are now plying on any of the routes.



18th December 1971] [Thiru S. Ramachandran]

Substitute services have been arranged with the buses of other operators on 35 routes i.e., with identical route and timings. Alternate arrangements have been made to run buses on the 12 remaining routes by extension of other route buses, additional trips by other routes buses, etc. In a few cases, though temporary permits have been granted for such alternate arrangements, actual running of buses has not commenced. But buses of other operators are plying on these routes and sectors on these routes. Thus the traffic requirements are met by substitute services or other arrangements in all the 47 routes served formerly by the buses of Swami Motor Transport (Private) Limited. There are no routes unserved by bus service, on account of the stoppage of buses by this fleet operator.

## V. GOVERNMENT MOTIONS.

### (2) *Rules governing the election of Members of Standing Committee of Municipal Corporation of Madras.*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 6-12-1971-ஆம் நாளன்று சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட சென்னை மாநகராட்சி நிலைக் குழு உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான விதிகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

DEPUTY CHAIRMAN : Does any hon. Member wish to speak ?

No Member rose.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the rules governing the election of members of the standing committees of the Municipal Corporation of Madras which were placed on the table of the House on 6th December 1971 be taken up for consideration."

The motion was put and carried.

* திரு. கே. ராஜாராம் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கார்ப்பரேஷன் விதிகள் பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபிப்ப தற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதை நிறைவேற்றியதாக எதுவும் முடிவு செய்யப்படவில்லை. அதற்குள் 'அப்பிரோப்பிரி யேஷன் பில்' எடுத்துக் கொள்ளப்பட்டது. அதை நிறைவேற்ற வேண்டாமா? கன்சிடரேஷனுக்குத் தான் அனுமதி வழங்கப் பட்டது.

DEPUTY CHAIRMAN : Nobody rose.

திரு. கே. ராஜாராம் : நிறைவேற்றப்பட்டதாகச் சொல்ல வில்லையே. 'அனவுன்ஸ்மென்ட்' பண்ணவில்லையே என்று சொல் கிறேன்.

DEPUTY CHAIRMAN : I asked whether any hon. Member wished to speak. Nobody rose I, therefore put the motion to the vote of the House and declared that the motion was carried.

[18th December 1971

## VII. GOVERNMENT BILLS.

### (1) *The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 (L.A. Bill No. 54 of 1971).*

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** *தலைவர் அவர்களே. சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.*

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1971 (L.A. Bill No. 54 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken into consideration for making recommendations.

DEPUTY CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

### (2) *The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971).*

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன்:** *தலைவர் அவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு b (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1971) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.*

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971),as passed by the Asembly, be taken into consideration for making recommendations."

*திரு. எம். ராஜா அய்யர் :* *துணைத் தலைவர் அவர்களே, இதிலே பேசுவதற்கே கூச்சமாகவிருக்கிறது. சொல்ல வேண்டிய குறைகளையெல்லாம் பல முறை எடுத்துச் சொல்லிவிட்டோம். இன்னும் குறைகள் இருக்கக்கூடாதா என்ற குறை இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. குறைகள் எல்லாம் வெகு வேகமாகத் தீர்ந்து கொண்டு வருகின்றன. அவ்வளவு வேகமாகத் தீர்க்கப்படுகின்றன. இன்னும் குறைகள் இருக்கின்றனவா என்று அன்று முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அரசு இந்த நிதி ஒதுக்கல் மசோதாவைக் கொண்டு வந்ததற்குப் பாராட்டுகிறேன். ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்திற்கான உத்திரவை சீக்கிரத்தில் அனுப்பி வைக்கும்படியாக அக்கவுண்டண்ட்-ஜெனரல் ஆபிசுக்குத் தெரிவித்து அதற்கான ஏற்பாடுகளைச்*

---

@ Printed as Appendix VII on pages 849–850.

(b) Printed as Appendix VIII on pages 851–852.



18th December 1971] *[திரு. எம். ராஜா அய்யர்]*

*செய்தால், ஆசிரியர்களுக்குப் பெரிதும் ஏமாற்றம் தடுக்கப்படுவதோடு, கஜானாவுக்குச் சென்று திரும்பும் ஒரு வேலை ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு சீரான ஒரு முறையை வகுக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். சில ஆசிரியர்களுக்குக் கூட அப்படித்தான் ஓய்வு ஊதியம் ரூ. 50 ஆக இருக்கிறது. மிகச் சிறந்த தலைமை ஆசிரியர்களுக்குக் கூட அப்படித் தான் இருக்கிறது. சென்னை கிருஸ்தவ காலேஜ், ஹைஸ்கூலிலிருந்து ஓய்வு பெற்ற திரு குருவில்லா ஜாகெப் என்ற கல்வி நிபுணர் ரூ. 35 தான் பென்ஷனைப் பெறுகிறார். அவர் செய்த சேவைக்கு ரூ. 35 தான் பென்ஷன் என்றால், அது எவ்வளவு குறைவாக இருக்கிறது ? ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்தை சரியான முறையில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி அரசு செய்தால், அவர்கள் எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெறலாம். ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் எந்த ஆண்டு ஓய்வு பெற்றிருந்தாலும், அவர் ஓய்வு பெறும் தினத்தன்று வாங்கும் சம்பளத்தில் எட்டில் மூன்று பங்கு ஓய்வு ஊதியமாகக் கொடுப்பதில் அரசுக்கு ஒன்றும் செலவு அதிகமாகிவிடாது. ஒரு தலைமை ஆசிரியருக்கு அதிகபட்சம் மாதச் சம்பளம் ரூ. 300-க்கு மேல் இருக்காது. அப்படியானால் எட்டில் மூன்று பங்கு ரூ. 120 தான் அவர் ஓய்வு ஊதியமாகப் பெறுவார் ஏப்ரல் 1-ம் தேதி அல்லது இந்த ஆண்டு. இந்தத் தேதியிலிருந்து என்று குறிப்பிட்டு, அது முதல் அவர்கள் வாங்கிக்கொண்டிருக்கும் சராசரி சம்பளத்தில் எட்டில் மூன்று பங்கை ஓய்வு ஊதியமாகப் பெறும் வழியை அரசு செய்ய வேண்டும். இது கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் பொருந்த வேண்டும். அவர்களுக்கு இப்பொழுது ரூ. 150 ஓய்வு ஊதியமாகக் கிடைக்கும். அதை எட்டில் மூன்று பங்கு என்று அமைப்பதால் அரசுக்கு அதிகமாகச் செலவாகிவிடாது.*

*கடைசியாக, ஒன்றே ஒன்று. நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிபெறும் மாணவர்களின் அந்தஸ்தை போஸ்ட் கிராஜுவேட் அந்தஸ்து என்று கருத வேண்டும். அந்தப் பயிற்சிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள்—ஆசிரியர்கள் பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., போன்ற பட்டங்கள் பெற்றவர்கள். அவர்களை ஒரு பட்ட மேல் படிப்பு மாணவர்களாகவே கருத வேண்டும் துரதிருஷ்டவசமாக அவர்களுக்கு உரிய ஸ்தானம் அளிக்கப்படவில்லை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இதர கல்லூரிகளுக்கு ஒப்பாகக் கருதப்படவில்லை. இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய விரிவுரையாளர்களுக்கும் இதர கல்லூரிகளில் இருக்கக்கூடிய விரிவுரையாளர்களுக்கும் இருக்கக்கூடிய பாகுபாடு நீக்கப்பட வேண்டுமென்று அரசை வேண்டிக்கொள்கிறேன். வணக்கம்.*

**திரு. டி. கே. சுப்பையா:** *தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். நேற்றைய தினம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர் முடிந்*

[திரு. டி. கே. சுப்பையா] [18th December 1971

தால்கூட இன்னும் தேசியப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டியிருப்பதாக வலியுறுத்திச் சொன்னார்கள். இந்த தேசியப் பாதுகாப்புக் குழு திருச்சி மாவட்டத்தில் ஒரு சிலரால் தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கும் இந்தக் கமிட்டிக்கும் எந்த விதமான தொடர்பும் சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. திரு. கே. ஏ. பி. விஸ்வநாதன் அவர்களைத் தலைவராகவும், திரு. பழனியாண்டியைக் காரியதரிசியாகவும் கொண்டு அக்குழு அமைக்கப்பட்டு, அவர்கள் நிதியும் வசூலித்து வருகிறார்கள். இந்த நெருக்கடி நேரத்தில், அரசு தலையிட்டு ஒருங்கிணைக்கப்பட்ட அரசு அங்கீகாரம் பெற்ற கமிட்டியை உடனடியாக அமைப்பது அத்தியாவசியமாகும். அவர்கள் ஒவ்வொரு கட்சியும் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பி வைக்க சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் உடனடியாகப் பரிசிலனை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, நமது அரசாங்கத்திலே, அப்போதைய நேரத்தில், 60 வயது வரை சமூக நல ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, உத்தியோகம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது 55 வயதுக்கு மேற்பட்டால், அவர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்கிறார்கள். அது குறித்து உயர்நீதி மன்றத்துக்குச் சென்றோம். அவர்களுக்குச் சாதகமாக உயர்நீதி மன்றமும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் 20, 30 பேர் தான் தமிழகத்திலே இருக்கிறார்கள். இதை அரசாங்கம் தீவிரமாகக் கவனித்து, மீண்டும் அவர்களுக்கு 60 வயது வரை வேலை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது வந்த வெள்ளத்தால் எங்கு பார்த்தாலும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. புள்ளம்பாடி வாய்க்கால் யாருக்குச் சொந்தம் என்று தெரியவில்லை. இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்டக் கலெக்டர் ஏதாவது ஒரு நிதியிலிருந்து பணம் கொடுக்கிறார். விவசாயம் நல்ல நிலையில் இருக்கும்போது, இந்த மாதிரியான அசந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஆவன செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு, என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பாதுகாப்பு நிதியாக 10 கோடி ரூபாய் திரட்டுவதில் முதலமைச்சர் அவர்கள் முக்கியமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரிய சமுதாயம் இதில் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறது. போர் நின்று விட்டது என்று யாரும் கருதவில்லை. எதிரியின் கப்பல்கள் நின்றுகொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற எல்லாக்



18th December 1971] [திரு. எஸ். முத்துசாமி]

காரியங்களிலும் ஆசிரிய சமுதாயம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மிக விரைவாக, வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய நாட்டிலேயே குடும்பக் கட்டுப்பாடு திட்டம், தமிழ் நாட்டில் உள்ள அளவுக்கு எந்த மாநிலத்திலும் கடுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. நேற்றுகூட தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்கள். "இது வரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது. அரசாங்கத்தின் கொள்கைப்படி நாங்கள் தமிழ் நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட காரணத்தால் மக்கள் தொகை தமிழ் நாட்டில் குறைந்தது. அதன் காரணமாக 39 ஆக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. இது சரியல்ல. மீண்டும் 41 ஆகவே இருக்கும்படி செய்ய வேண்டும். என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அந்த நியாயமான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை ஆக எல்லா மாநிலங்களையும்விட அருமையான முறையில் தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறதை நாம் பார்க்கிறோம்.

இந்தத் திட்டத்தில் 7,500 ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த காலத்தில் என்ன நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்ததோ, அதே நடைமுறையை இந்த ஆண்டும் கடைப்பிடிக்க வேண்டுமென்று அந்தத் துறை தீர்மானித்திருக்கிறது. இந்தத் துறைக்கு சற்றும் சம்பந்தமில்லாமல் எல்லா ஆசிரியர்களுக்கும் டார்ஜெட் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் 2 அல்லது 3 பேரை இந்தத் திட்டத்திற்காகக் கொண்டு வர வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கூறினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நான் எடுத்துக் கூறிய கருத்துக்களைக் கேட்ட பிறகு, இது சரியல்ல என்று அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரிய சமுதாயம் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை நல்ல முறையில் பிரசாரம் செய்யத் தயாராக இருக்கிறது. ஒவ்வொரு ஆசிரியரும் 2. 3 பேரைக் கொண்டு வரவேண்டுமென்று கட்டாயப்படுத்தும் முறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் இது சம்பந்தமான சுற்றறிக்கைகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் இந்த சந்தர்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு தீர்மானம் வர இருந்தது. யுத்த நெருக்கடியின் காரணமாக அந்தத் தீர்மானம் ஒத்தி

[திரு. எஸ். முத்துசாமி] 18th December 1971

வைக்கப்பட்டிருக்கிறது. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த பரிசீலனை விஷயம் எந்த அளவில் இருக்கிறது? இப்போது வராதா, அப்போது வராதா, எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள அந்த ஆசிரியப் பெருமக்களின் பிரதிநிதிகள் தயாராக வெளியே காத்துக்கொண்டிருக்கிக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அணுகிட முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

எந்த நேரத்தில் இந்தச் சலுகை கிடைக்கும் என்பதைப்பற்றி ஒரு அறிவிப்பு வெளியிட வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்பத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இது நெருக்கடி காலமாக இருக்கிறது என்று குறிப்பால் உணர்த்தலாம் என்று கூட நினைக்கிறேன். எதுவாக இருந்தாலும், இந்த ஆசிரியர்களின் பிரச்னை நீண்டகாலமாகவே தீர்க்கப்படாமலிருக்கிறது. இந்த நேரத்தில் யுத்த நெருக்கடி நல்ல முறையில் தீர்க்கப்பட்டு, வெற்றி கிடைத்திருக்கிறது என்பதையும், அதே சமயத்தில் 5½ லட்சம் அரசாங்க ஊழியர்களில் 2½ லட்சம் பேர் ஆசிரியர்கள் என்பதையும், அவர்கள் செய்கின்ற உதவிகள் எந்த சமுதாயத்தையும் விட கூடுதலாகும் என்பதையும் இந்த சந்தர்பத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. இன்னும் பழங்காலத்தில் இருந்த ஒரே சிக்கலான நடைமுறைகளும் சட்ட திட்டங்களும் இருந்து வருகின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்த சட்ட திட்டங்களை தான் இன்னமும் பின்பற்றி வருகிறார்கள். பல்வேறு ஆசிரியர்கள் இந்த ஓய்வு ஊதியத் தொகை வராமல் ஆண்டுக் கணக்கில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நடைமுறைகளை எளிதாக்க வேண்டும். (சிம்பிளிபை செய்ய வேண்டும்). ஒரு ஆசிரியர் ரிடையர் ஆகிறார் என்றால் உடனடியாக அவருக்குரிய பென்ஷன் கிடைக்கத் தக்க வகையில் கல்வித் துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையும் உள்ளாட்சித் துறையும் ஒன்றான பிறகு பல்வேறு நல்ல திட்டங்கள் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 1-ம் தேதியில் ஊராட்சி ஒன்றியங்களில் சம்பளம் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஜனவரி மாதம் முதல், மாதா மாதம் ஒழுங்காக 1-ம் தேதி சம்பளம் கிடைக்க வழி செய்திருக்கிறார்கள். அதே போல முனிசிபாலிட்டிகளிலும் 1-ம் தேதி சம்பளம் கிடைக்காமல் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். முனிசிபாலிட்டிகளிலும் 1-ம் தேதியே சம்பளம் கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



18th December 1971] [திரு. எஸ். முத்துசாமி]

அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகிற பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் 15 சதவிகிதம் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்டிருக்கிறது. செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும், ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் 10 சத விகிதம் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசுப் பள்ளிகளில் கொடுக்கப்படுவதைப் போலவே, மற்றப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகைகள் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது இல்லாமல், அரசு ரெகுலேட்டட் பள்ளிகளில் இருக்கின்றவர்களுக்கு 1/3 செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது 33-1/3 சதவிகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதே போல் மற்ற ஆசிரியர்களுக்கு கிடைக்கும் முயற்சிகளில் அரசு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் சற்றுக் கடுமையாக இருந்தாலும், இந்த ஆண்டு இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் சங்கம் எடுத்துச் சொல்லுகின்ற நல்ல கருத்துக்களையெல்லாம் இந்த அரசு ஏற்றுக்கொண்டு, நல்ல பல சட்ட திட்டங்களை உருவாக்கினாலும், அவைகளை அதிகாரிகள் ஆண்டுக் கணக்கில் அமுல்படுத்த முடியாமல் வைத்து விடுகிறார்கள். அதிகாரிகள் இன்னும் சற்று வேகமாக நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று ஆசிரியர் சமுதாயம் நம்புகிறது. அரசு வழங்கும் சலுகைகளை ஆசிரிய சமுதாயம் அனுபவிப்பதற்கு அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1971-ம் ஆண்டு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட செலக்ஷன் கிரேடு, பெசட்டடு போஸ்ட் போன்ற நன்மைகள், அரசு அறிவித்தும் கூட பல ஹெட்மாஸ்டர்களுக்கு அந்த நன்மை அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. கல்வித் துறையும் உள்ளாட்சித் துறையும் ஒன்றாக இருந்தும் கூட, இந்த நன்மைகள் சரிவரக் கிடைப்பதில்லை. எல்லா செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என்று அதிகாரிகளைப் புள்ளி விவரங்கள் கேட்டபோது, 8,000க்கு பதிலாக 5,000 என்று கணக்குக் கொடுத்தார்கள். அதன் காரணமாக 3.000 ஆசிரியர்களுக்கு அரசு வழங்கிய சலுகை கிடைக்காமலிருக்கிறார்கள். இதற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய மேலவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். அய்யாசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டு விட்டு சுருக்கமாக என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக இந்த மன்றத்தில் மருத்துவர்கள், சலவையாளர்கள் இரண்டு வகுப்பாரையும் ஷெடியூல் வகுப்பில் சேர்க்க வேண்டுமென்ற

கோரிக்கையைப் பல தடவை எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். எங்களுக்கு இருக்கக்கூடிய குறைகள் நிவர்த்திக்கப்படுவதற்கு வேறு மார்க்கம் இல்லாத நிலைமையிருக்கிற காரணத்தால், அது ஒன்று தான் வழி என்று வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக பிற்பட்டோர் நல ஆய்வுக் குழு ஒன்றை அமைக்கப் போகிறோம், அக்குழு பரிசீலித்து அறிக்கை சமர்ப்பித்த பிறகு அதைக் கவனித்து ஆவன செய்கிறோம் என்று ஆறுதலான வார்த்தைகளைக் கூறினார்கள். அதன்படி பிற்பட்டோர் நல ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. அவர்களும் ஒரு ஆண்டுக்காலம் தமிழகமெங்கும் சுற்றி ஆங்காங்குள்ள நிலைமைகளை விசாரித்து அறிந்தார்கள். சென்ற இடங்களில் எல்லாம் பிற்பட்ட சமூகங்களில் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்களது சமூகத்தின் குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள். அதைப் போல மருத்துவர்களும், சலவையாளர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அதன் பின்னர் பிற்பட்டோர் நல ஆய்வுக் குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலும் கூட பிற்பட்டோர் நல ஆய்வுக் குழுத் தலைவர் மிக நல்லவிதத்தில் இவ்விரு சமூகத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர்கள் தீண்டப் படுகிறவர்கள் என்று மதிக்கப்படுவதால், ஷெடியூல் வகுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுவதற்கு இடம் இல்லையென்று இங்கு பல தடவை எடுத்துக் காட்டப்பட்டதற்கு மாறாக அந்த ஆண்டு குழு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விரு சமூகத்தினரும் பல இடங்களில் தீண்டப்படாதவர்களாகவே கருதப்படுகிறார்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, வெகு விரைவில் அது சம்பந்தமாக நல்லதொரு அறிவிப்பு வெளிவரும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். கடந்த ஆண்டு பொங்கலுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுப் பொங்கல் பரிசாக மூன்று பரிசுகள் வழங்கப் போகிறேன், ஒன்று அரசு ஊழியர்களுக்கு, அடுத்து ஆசிரியர்களுக்கு, மூன்றாவதாக மருத்துவர்களுக்கும் சலவையாளர்களுக்கும் என்று அறிவித்தார்கள். அந்தச் செய்தியைப் கேட்டவுடன், தமிழகத்திலுள்ள மருத்துவர்களும் சலவையாளர்களும் மிக மிக ஆவலோடு அந்தப் பரிசை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அரசு ஊழியர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன. அதைப் போல் ஆசிரியர் சமூகத்திற்கும் சில சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால் மூன்றாவது குறிப்பிட்ட பிற்பட்டவர்கள், அதாவது மருத்துவர்கள், சலவையாளர்கள் விஷயத்தில், முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் கூறாமல் இருந்து விட்டார்கள். இப்போது இடக்கால வரவு செலவுத் திட்டம் வந்த நேரத்திலாவது அது சம்பந்தமாக அறிவிப்புகள் வரும் என்று எதிர்பார்த்தோம். அதுவும் வரவில்லை. இனி அடுத்து வருகின்ற இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தின் போது இந்த அரசாங்கத்தின் கொள்கை மேன்மை தங்கிய கவர்னர் அவர்களால் அறிவிக்கப்படும் என்பதை





நாம் அறிவோம். அந்த நேரத்திலாவது தவறாமல் இந்த இரு சமூகத்தினருக்கு சில வாய்ப்பு வசதிகள் அளிக்கிற நிலைமையை உண்டாக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆறுதலாக எடுத்துக் கூறியது போல், ஷெடியூல் வகுப்பில் இவர்களைச் சேர்க்காவிட்டாலும் கூட, சில சலுகைகளை மாநில அரசைப் பொறுத்தவரையிலாவது இவ்விரு சமூகங்களுக்கும் நாங்கள் வழங்க முயற்சி செய்கிறோம், ஆய்வுக் குழு அறிக்கை வரட்டும் என்று எடுத்துக் கூறியதற்கேற்ப அந்த அறிவிப்புகளை விரைவில் செய்து இந்த இரு சமூகங்களுக்கும் நல்லதொரு பாதுகாப்பும் வாழ்வும் பெற உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து வருகிற புதிய ஆண்டு வரவு செலவுத் திட்டம் இதற்காக நல்லதொரு அறிவிப்பைக் கொண்டதாக இருக்கும் என்று எதிர் பார்க்கிறேன். இந்த சமூகத்தினரின் நிலைமைகளைப்பற்றிப் பிற்பட்டோர் நல ஆய்வுக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மிகத் தெளிவாக நன்றாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதையும் படித்து நன்றாக ஆராய்ந்து பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே அதற்குரிய வகையில் அவர்களுடைய அறிவிப்பு இருக்குமென்று எதிர்பார்த்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதா அங்கீகாரத்திற்கு வந்துள்ள சந்தர்ப்பத்தில் ஒரு சில விஷயங்களைக் குறிப்பிடலாம் என்று ஆசைப் படுகிறேன். நம் மாநிலத்தில் புதிதாக பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகும் அரசு நெடுந்தூர ஹைவேஸ் இலாகா மூலமாகவும் பல ரோடுகள் இப்போது போட்டிருக்கிறார்கள். ரயில்வே ரோடுகள் குறுக்காக போகக்கூடிய இடங்களில் கூட காவல் ஆள் இல்லாத கேட்கள் பல இடங்களில் இருக்கின்றது. அதே கேட்டில் 60 பேர் செல்லக்கூடிய பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. அந்த ரோடுகள் தார் ரோடுகள் ஆக்கப்பட்ட பின்னாலும் கூட, அதற்கு கேட்டுகள் அமைக்கப்பட வேண்டும்மென்றும் போக்குவரத்து அதிகமாகியிருக்கிறதென்றும், காவல் உள்ள கேட் அமைக்க எவ்வளவு செலவு ஆகுமோ அதற்கான நிதி உங்களுடைய செலவிலே கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசினர் கேட்டார்கள் என்று வெகு காலமாகச் சொல்லப்படுகிறது. இதிலே நமக்கு நியாயம் இருக்கிறது. பிரதானமான ரோடு தார் ரோடாக இல்லாத சந்தர்ப்பத்தில் கூட, மங்கம்மாள் சாலைகள் பிரதான பாதைகளாக இருந்தன. ரயில்வே ரோடு பின்னால் வந்ததால் அவர்கள் தான் அதற்கான கேட் அமைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் நியாயம் என்று பலர் சொல்லுகிறார்கள். நம்முடைய அரசு மத்திய அரசை ரயில்வே இலாகாவை அணுகி, பிரதானமாக தொன்றுதொட்டு இருந்து வந்த, சரளை ரோடாகவும் தார் ரோடாகவும் இல்லாத பெரும் பாதை மார்க்கங்களாக இருந்து வந்துள்ள இடங்களிலே இடையில் வந்துள்ள இந்த ரயில்வே பாதைகளை அவர்கள் போட்டிருக்கிறார்கள். இதில் இந்த

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [18th December 1971

கேட்டுகள் அமைக்கும் பொறுப்பையும் செலவையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வாதாடி இதில் நியாயம் பெற வேண்டும். எங்கள் ஊர் பக்கத்தில் மங்கம்மா சாலை என்று ஒன்று போகிறது. 100 அடி அகலம் இருக்கிறது. மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்கிறது. பல மார்க்கங்களில் பிரிந்து போகிறது. 1972-ல் தான் ரயில் ரோடு குறுக்காக வந்திருக்கிறது. ஆகவே எது முந்தியது என்று சொன்னால் சாலை தான் முந்தியது ரயில் தான் பின்னால் வந்திருக்கிறது. மதுரையிலிருந்து திருநெல்வேலி வரையில் போகும் மிகப் பிரதானமான சாலை மங்கம்மாள் சாலை என்று சொல்லப்படுவது. இதைப் பிரதானமாக வைத்துக்கொண்டு அதிலிருந்து வேறு முக்கியமான சாலைகளைப் போடுவதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து, புதிய பாதை மார்க்கங்களுக்கு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்து. அப்படிப்பட்ட புதிய முயற்சியால் புதியதாக பாதைகள் போடுவதாக இருந்தால், அவை ரயில் பாதைகளைக் கடக்கும் இடத்தில் கேட்டுகளை அமைப்பதற்கான செலவை மாநிலம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுவதில் அர்த்தம் இருக்கிறது. அப்படியில்லாமல் ஏற்கெனவே உள்ள பெரும் பாதைகளின் குறுக்கே ரயில்கள் கடந்துசெல்லும் இடங்களிலே இன்னும்கூட கேட்டுகளைப் போட்டு ஆட்களை வைக்காமலிருப்பது மிகுந்த கஷ்டங்களைக் கொடுக்கிறது. ஒரு கிராமத்திலே என்னிடம் சொன்னார்கள், "எங்கள் ஊருக்கு வரும் வழியில் இப்படிப்பட்ட காவல் கதவுகள் இல்லாத கேட் இருக்கும் இடத்தில் ரயில் வரும் போது மிகவும் பயமாக இருக்கிறது, கேட் இருக்க வேண்டிய இடத்தில் கதவுகளோ ஆளோ இல்லாத கேட் இருப்பதால் ரயில் வரும்போது பயமாக இருக்கிறது. யாரிடம் சொல்லியும் ஒன்றும் கவனிக்கவில்லை. எனவே ரயில் வரும் நேரத்தில் அவர்கள் கவனத்தை ஈர்க்கும் முறையில் ஒரு 500 பேர் அல்லது ஒரு ஆயிரம் பேர் பாதையின் குறுக்கே நின்று ரயிலை நிறுத்தி எங்களுடைய கோரிக்கையைத் தெரிவித்தால், நியாயம் கிடைக்குமா ?" என்று கேட்டார்கள். அந்த மாதிரியெல்லாம் செய்யக் கூடாது என்று சொன்னேன் அந்த ஊர்க்காரர்களிடம். மங்கம்மாள் சாலையைப் போன்றே ஏராளமான சாலைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சாலைகளின் குறுக்கே ஆட்கள் இல்லாத கேட்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைக் கடந்து பெரிய பெரிய பஸ்கள் போய்கொண்டிருக்கின்றன. அது சில சமயம் ஆபத்தாக முடியக்கூடிய நிலை இருக்கிறது. எனவே இவைபற்றியெல்லாம் மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச்சொல்லி அவர்களுடைய செலவிலேயே இவற்றை அமைப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நமது மாநிலத்தில் 2,000 அல்லது 2,500-க்கு மேற்பட்ட உயர் நிலைப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றில் அநேகம் கிராமப்புறங்களிலேயே இருக்கின்றன. பெரும்பாலான



18th December 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

பள்ளிகளுக்குப் போதுமான கட்டிட வசதிகள் இல்லை. என்னுடைய சொந்த கிராமத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் நான் அங்கு இருக்க முடியாமற் போய்விட்டது. அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அதிலே 600 மாணவ , மாணவிகள் கல்வி பயிலுகின்றார்கள். ஆனால் அவர்கள் மலஜலம் கழிப்பதற்கு வசதியே இல்லாத நிலை அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கிறது. இதைத் தவிர அங்கே மூன்று வகுப்புகள் மரத்து நிழலிலே நடைபெறுகின்றன. கிராமப் புறங்களில் பள்ளிக்கூடங்கள் ஏராளமாக அமைக்கப்பட்டு, கல்வி நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. ஆனால் இப்படிப்பட்ட சில அசௌகரியங்கள் இருப்பதைத்தான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஊருக்குப் பக்கத்திலேயே பாப்பைய நாயக்கன்பட்டியில்கூட ஒரு பள்ளிக்கூடம், உயர்நிலைப் பள்ளிக்கூடம் இருக்கிறது. இப்படிப் பள்ளிக்கூடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு சில முக்கிய குறைகளைப் போக்க அவசரமாக சிறிது கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் இராஜபாளையம் ஒரு லட்சம் பேருக்கு மேல் ஜனத்தொகை உள்ள பெரிய ஊர். ஆனால் அங்கே போதிய மருத்துவ வசதி கிடையாது. . அங்கே ஒரு மருத்துவ மனையைக் கட்டுவதற்கு என்று அங்கே உள்ள தொழில் அதிபர்களும் மற்றவர்களும் சேர்ந்து ஒரு ஐந்து லட்சம் ரூபாயை அளிக்க முன்வந்திருக்கின்றனர். அரசாங்கம் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அங்கே இந்த கட்டிடத்தினைக் கட்டி நல்ல மருத்துவ மனையினை அங்கே ஏற்படுத்தித்தர வேண்டும் என்று அரசாங்கத்தை வேண்டி கேட்டுக் கொள்ளுகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள்கூட சமீபத்தில் அங்கே போயிருந்தபோது, நமது மாவட்டத்தினைச் சேர்ந்தவர் என்ற முறையில் பலர் இது விஷயமாக அவர்களை அணுகிக் கேட்டார்கள். எனவே அரசு இதைத் கவனத்தில் கொண்டு ராஜபாளையத்தில் சிறந்த ஒரு மருத்துவ மனையைக் கட்டிக்கொடுக்க வேண்டும், அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் ஒரே ஒரு விஷயம். இன்றைக்கு எல்லா ஆறுகளிலும், சிறிய ஆறுகளாக இருந்தாலும் பெரிய ஆறுகளாக இருந்தாலும், படுகையில் 'புரஸாபிஸ்' என்று சொல்லப்படும் சீமைக் கருவேலமரம் பெருமளவிற்கு வளர்ந்து பல இடங்களிலே காடுகளைப் போலத் தோற்றமளிக்கின்றன. அதனால் ஆற்றின் போக்கே மாறி. பாசன வசதியும் பெருமளவிற்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது. எனவே நீர்ப்பாசன இலாகாவோ பொது மராமத்து இலாகாவோ இதில் கவனம் செலுத்தி மண்டிக்கிடக்கும் இந்தப் புதர்களை அப்புறப்படுத்திச் செப்பனிட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையினை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்

திரு. சா. கணேசன்: மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் சில இன்றியமையாத கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர உங்கள் அனுமதியோடு நான் முன்வருகின்றேன். முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகையைப்பற்றிச் சொல்லிவிட்டு முடித்தார்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் வைகையில் வெள்ளத்தினால் ஏற்பட்ட கொடுமைகளையும் துன்பங்களையும் விளக்கமாகச் சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள். இலக்கியங்கள் பேசும் வைகையைப் பற்றிச் சொல்லும்போது, 'வைகை எனும் பொய்யாக்கொடி' என்று குறிப்பிடுவது உண்டு. வைகை என்றைக்குமே பொய்த்ததில்லை என்று பண்டைக்காலத் தமிழ் இலக்கியங்களிலே குறிப்பிடப்படுகிறது. இப்போது நீருக்குப் பதிலாக அங்கே மணல்தான் ஓடுகிறது என்பதனைப் பார்க்கிறோம். அதோடு இவ்வளவு கஷ்டங்கள் ஏன் மதுரையில் வந்தன என்பதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு வைகை ஆற்றின் மையத்திலேயே ஏராளமான குடிசைகள் போட்டுக்கொண்டு அங்கேயே பலர் வாழத்தொடங்கியது ஓர் பெரிய குறை. அதனால் ஆற்றின் அழகு கெட்டது என்பது மட்டுமின்றி ஆற்றின் போக்கு தடைப்பட்டது, அழகும் பாழ்பட்டது, அழிவும் ஏற்பட்டது என்பதை மனதில் கொண்டு இப்போது இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு உள்ளானவர்களுக்கு எவ்வளவு இதயபூர்வமாக நாம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோமோ, அதே போல, இனியும் இதுபோன்ற ஆற்றுப் படுகைகளில் குடிசைகளைப் போட்டுக்கொண்டு மக்கள் வாழாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசினை இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு இன்னும் ஒன்றினைக் குறிப்பிட விரும்புகிறேன். உதக மண்டலத்திலே இது வரையில் இருந்துவந்த பிகினிஹவுஸ் என்ற இடத்தில் இருந்து வந்த கல் எழுத்துக்களைக் கண்டறியும் துறையானது இப்போது மைசூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பே இதுபற்றி அன்றையதினம் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. பக்தவத்ஸலம் அவர்களை அங்கு அழைத்துச் சென்று அந்த இடத்தையும், பல சான்றுகளைச் சேமித்து வைத்திருக்கின்றார்களே அவற்றையும் அவர்களுக்குக் காண்பித்தேன். அதுபற்றி உடனே செயல்படுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அங்கே உள்ள புஸ்தகங்கள் இருக்கின்றனவே, அவை இந்தியாவிலேயே வேறு எந்த லைப்ரெரியிலும் கிடையாது. தமிழ் நாட்டின் வரலாற்றுச் சான்றுகள் மட்டுமின்றி, தமிழ் நாட்டின் வரலாற்றுக்கு அடிப்படையாக உள்ள 'ஜ்யாக்ஞகிரஃபி' உள்பட, ஆர்கியாலஜி உள்பட, ஆர்கிடெக்சர் உள்பட அனைத்து நூல்களையும் அங்கே அற்புதமாகச் சேமித்து வைத்திருக்கின்றார்கள். அவை மட்டுமில்லாமல் ஏராளமான 'எஸ்டம்பேஜஸ்' அதாவது பழங்காலக் கல்வெட்டுகளின்



படிவங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களிலே மை தடவி சிறப்பான முறையில் தயார் செய்யப்பட்ட காகிதங்களிலே அவற்றினை ஒத்தியெடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட படிவங்கள் சுமார் 25,000-க்கு மேற்பட்டவை அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையிலுள்ள பல்வேறு கோவில்களிலே காணக்கிடக்கும் அருமையான பழம்பெரும் கல்வெட்டுக்களின் படிவங்கள் அங்கே சேமித்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் பண்டைக்காலத்து மன்னர்களுடைய கல்வெட்டுகளின் படிவங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அன்று மகேந்திரவர்மன் காலத்திலிருந்து எழுதி வைத்திருந்த எழுத்துக்கள் எல்லாம் தேய்ந்துவிட்டது. போகிறவர்கள், வருகிறவர்கள் எல்லாம் செய்த காரியங்களினால் அவை தேய்ந்து சுவராகி விட்டன. அந்தக் கல் எழுத்துக்களைக் காண முடியாவிட்டாலும், கோபிநாத் ராவ் அவர்களால் எடுக்கப்பட்ட ஒத்தி ஏடு இன்றும் இங்கே இருக்கிறது. இம்மாதிரிப் பற்பல ஏடுகள் உள்ளன. அவைகளையெல்லாம் திரும்ப தமிழகத்திற்குக் கொண்டுவரவேண்டும். இந்தத் துறை முழுவதும் இந்தியாவுக்குப் பொதுவானது என்ற ஒரு பெரு நோக்கத்தை நாம் ஒத்துக்கொண்டாலும், அவை முற்றிலும் தமிழகத்தைச் சேர்ந்தது என்பதை யாரும் மறந்து விட முடியாது, மறைத்து விடவும் முடியாது. ஏற்கனவே இப்படித்தான் ஏராளமான சேகரிப்புகள் எல்லாம் கல்கத்தாவிலிருந்த போது மெக்கன்சிஸ் என்பவரால் சேகரிக்கப்பட்டு, அவைகள் முன்பு வைசிராயாகவிருந்த கர்ஸனால் லட்சம் பவுன் கொடுத்து வாங்கப்பட்டு கல்காத்தாவில் வைக்கப்பட்டிருந்தன. பிறகு அவைகளுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் இல்லாத ஒரு நிலையில், அவைகளை ஆங்கிலேய அரசாங்கம் சென்னைக்குக் திருப்பி அனுப்பி வைத்தார்கள். அவைகள் தான் இன்று 'ஓல்டு மேனஸ்கிருப்ட் லைப்ரரி'யாக இங்கு இருக்கின்ற பகுதி என்பதை நம்மில் ஒருசிலராவது அறிவார்கள் என்று நம்புகிறேன். எந்தக் காரணங்களுக்காக அப்படியே இன்னும் வைத்திருந்தாலும், எத்தனை நாளைக்கு அந்தக் காகிதங்கள் காக்கப்படும் என்று சொல்ல முடியாது. ஊட்டியிலிருந்த வரையில் அங்குள்ள சீதோஷ்ண நிலையால் கரையான், செல் இவைகள் அரிக்காமல் காப்பதற்கு வசதியாகவிருந்தது. மைசூர் போன்ற 'டிராப்பிகல் கிளைமேட்' உள்ள இடங்களில் இருந்தால், அழிக்கப்பட்டுவிடும். ஆகவே மைசூருக்கோ, சென்னைக்கோ இல்லாமல் மறுபடியும் ஊட்டிக்கே கொண்டுவர வேண்டும். அன்றையதினம் இருந்த ஒரே ஒரு பிரச்னை இடம் போதவில்லை. போதிய இட வசதியிருந்தால், மேலும் சீராகச் செய்யலாம் என்பதுதான். அப்பொழுது அந்த முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். ஐந்து இலட்சம் ரூபாய் தானே செலவாகும், ஒரு கட்டிடத்தையே இங்கு கட்டி விடலாம் என்று அந்த சமயத்திலே ஒத்துக்கொண்டார். நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் இந்த விஷயம்

[திரு. சா. கணேசன்] [18th December 1971

தெரியும் என்று நம்புகிறேன். அன்றையதினம் அவர்களும் கூட இருந்தார்கள் என்று நினைக்கிறேன். ஒரு ஐந்து, ஆறு இலட்சம் ரூபாய்க்கு ஒரு கட்டிடத்தைக் கட்டி நம்முடைய வரலாற்று அடிப்படையான இவற்றை சேமித்து வைத்து, அந்த அடிப்படையிலேதான் வரலாறு எழுதப்பட வேண்டும். தமிழ் நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கு ஏற்கனவே உள்ள இலக்கியங்கள், கல்வெட்டுச் சொற்களும் எழுத்துக்களும் மிக முக்கியம். இந்தக் கல் எழுத்து இலக்கியங்கள், பிற நூல்கள் இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டும், மேலை நாடுகளில் பதுங்கிவிட்ட நம்முடைய செப்பேடுகள், செப்புப் படிமங்கள், அவற்றிலே இருக்கின்ற எழுத்துக்கள் எல்லாவற்றையும் திரட்டி, தொகுத்து எழுதி நம்முடைய வரலாற்றை வைத்தால், நிலையானதாகவிருக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது அரசு கல்வெட்டுகளில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. ஆகவே இவற்றை மனதில் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(டிபுடி சேர்மன் மணி அடித்தார்)

ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். இங்கே இருக்கின்ற நூல்களை அச்சிடுகின்ற முறையைப் பார்த்தால், பயங்கரமாகவிருக்கிறது. 150, 200, 250 பிரதிகளுக்குமேல் அச்சிடுவதில்லை. 100 பக்கங்களுக்கு மேல் இல்லாத பிரதிகள் ரூபாய் 40, 50 என்ற நிலையிலிருக்கிறது. ஆகையினால் ஏராளமான பிரதிகள் அச்சடித்தால் 2 ரூபாய், 3 ரூபாய் என்ற அளவில் விற்கலாம். அதன் மூலமாக வரலாற்று அறிவு பெருகும் என்பதை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை விவாதத்திற்கு நாம் முதலில் எடுத்துக்கொள்ளும்போது, நமது நாட்டினுடைய நிலைமை மிகவும் இருண்ட சூழ்நிலையில், பாகிஸ்தானுடன் நடக்கும் போர் இன்னும் எவ்வளவு நாட்கள் நடக்குமோ என்ற எண்ணத்திலிருந்தோம். அந்த விவாதம் முடிகின்ற நேரத்தில், அந்த இருண்ட சூழ்நிலை நீங்கி மிகவும் தெளிவான நிலைமையில், சுமுகமான நிலைமையில் இருக்கின்றோம். போர் நின்று விட்டது. ஆனால் போரை முன்னிட்டு, பல புதிய வரிகளைப் போடுவதற்கு மத்திய அரசும் மாநில அரசும் முன்வந்தன. அந்த வரிகள் இந்த வருஷத்தோடு, போரை முன்னிட்டுப் போடப்பட்டதால், நின்றுவிடுமா அல்லது மீண்டும் தொடர்ந்து நிரந்தரமாக நிலைத்து விடுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இவைகள் போருக்காகப் போடப்பட்ட வரிகள் என்ற எண்ணம் மக்களிடையே இருந்துவருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



18th December 1971] [திரு. கே. ராஜாராம்]

அடுத்தபடியாக, நமது மாநிலத்தில் 'சோஷியல் வெல்பேர் வொர்க்கர்ஸ்' ஒரு பத்து பதினைந்து நபர்கள் 60 வயது வரையில் உத்தியோகத்தில் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டு 55 வயதிலேயே விட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு 15 பேர் தான் என்று நினைக்கிறேன். அவர்களும் கோர்ட்டுக்குப் போய் ஹைகோர்ட் அவர்களை 60 வயது வரையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு அந்த வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஹிந்தி பண்டிட்டுகள் பல பேர் வேலையிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு வேறு வகையில் வேலை கொடுப்பதாக நமது அரசு வாக்குக் கொடுத்தது. அவர்களுக்குப் பிழைப்புக்கு கஷ்டமில்லாமல் ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி கொடுத்தபடி, ஏராளமான பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும், என்ன காரணத்தாலோ ஒரு சிலருக்குக் கொடுக்கப்படாமலிருக்கிறது. அவர்களுக்கு அப்படிப் போதிய தகுதி இல்லாமலிருந்தால், பியூன் வேலை அதாவது 4-வது கிரேடு அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவாவது போட்டுக் கொடுத்தால் போதும் என்று கேட்டுக்கொள்கிறார்கள். குடும்பத்தை வைத்து நடத்த வேண்டியவர்களாக இருக்கிற அவர்களுக்கு எதுவும் ஒரு வேலை கொடுக்க வேண்டும். அவர்கள்பால் தயை காட்ட வேண்டுமென்றும் அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களைப் பற்றி நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். அவைகளுடைய நிலைமை கை கால் ஒடிந்த தன்மையில் இருந்துகொண்டிருக்கிறது. ஏராளமான வேலைகளைக் கொடுத்திருக்கிறோம். அரசாங்கத்தினுடைய பணிகளை அவர்கள் கவனித்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இருக்கிற வருவாய்த் துறைகள் என்னென்னவோ அவைகளெல்லாம் தீர்ந்துவிட்டன. செலவுகள் இப்போது அதிகமாகியிருக்கின்றன. ஏற்கனவே 100 ரூபாய் செலவழித்த ஒரு வேலைக்கு இப்போது ரூ. 300 செலவாகிறது. ஆகவே பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மிகவும் கஷ்டமான நிலையில், வருவாய் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே மாநில அரசு அவர்களது வருவாய்த் துறையை இன்னும் எலாஸ்டிக்கா, வளைந்து கொடுக்கும் தன்மையில், அதிகமாகக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமையை அதாவது பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து, முனிசிபாலிடி இவைகளின் நிதி நிலையை ஆராய ஒரு கேபினட் சப்-கமிட்டி அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் கொண்ட கமிட்டி போட்டு, ஸ்தல ஸ்தாபனங்களுடைய பொருளாதார நிலையை ஆராய்ந்து, வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [18th December 1971

அடுத்தபடியாக, ஒரு விஷயம். அன்றைய தினம் நான் பேசும் போது வற்புறுத்தாமல் விட்டுவிட்டேன். இனி தூத்துக்குடி துறைமுகத் திட்டமும், சேது சமுத்திரத் திட்டமும் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டும். இப்போது போர் நின்றுவிட்டது. மத்திய அரசுக்கு ஒரு 6 மாத காலத்திற்குப் பொருளாதாரக் கஷ்டமிருக்கும். நமது அரசு இதை வற்புறுத்தாமல் இருந்து விடக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் உருக்காலை விஷயமாக நமது தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஆங்காங்கே பேசுவதும், கேள்விகளுக்குப் பதில் சொல்வதும் நமக்குக் கொஞ்சம் நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மத்திய கனரகத் தொழில் அமைச்சர் டில்லியிலே ஒன்று சொல்லுகிறார். சென்னையிலே அதற்கு நேர் மாறாகச் சொல்லுகிறார். டில்லியிலே பேசும்போது, சேலம் திட்டம் செயல்படுவது கஷ்டம் என்று சொல்லுகிறார்கள். தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் சரியாகயில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இங்கு வந்ததும் அதை விரைவில் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள்.

இந்த மாநிலத்துக்கு முக்கியமான திட்டம் அது. அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும். மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், மத்திய அரசு அதற்கு உதவி கொடுக்கவில்லை என்றால், மாநில அரசின் நிதியிலிருந்து அதை நிறைவேற்றுவோம் என்று வெகு தெளிவாகச் சொன்னார்கள். அதை இன்றைய முதலமைச்சர் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

சேலம் திட்டத்தை எப்படியும் நிறைவேற்ற வேண்டும். நஷ்டமடையும் திட்டம் இல்லை அது. லாபகரமாக நடக்கும் என்று டெக்னீஷியன்கள் சொல்லியிருக்கிறார்கள், ஜெர்மானியர்கள் சொல்லியிருக்கிறார்கள். தொழிலமைச்சர் அவர்களும் இது நஷ்டமில்லாத் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்

(Mr. Chairman in the Chair.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு விவாதத்தை மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் பொதுவான கருத்துக்கள் பலவற்றை எடுத்துச்சொல்லும் வாய்ப்பாகக் கருதிக் கொண்டு அவர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நமது சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. ச. கணேசன் பேசும் நேரத்திலே உலகத் தமிழ் மாநாட்டில் கருத்தரங்கத்தில் நாங்கள் எல்லாம் உட்கார்ந்திருப்பது போன்ற ஓர் உணர்ச்சியைப் பெற்றோம். அந்த அளவுக்கு கல்வெட்டுக்களைப்பற்றியும், நம்முடைய பழமையான ஆதார ஏடுகள் காப்பாற்றப் பட வேண்டும் என்பதைப்பற்றியும் எடுத்துச் சொல்லி, முதலிலே வைகையிலே தொடங்கி உதகையிலே முடித்தார்கள். முன்னாலே



18th December 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

இருந்தவர்கள் அதிலே அக்கறை காட்டவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டி, இந்த அரசு அக்கறை காட்ட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டினுடைய பழம் பெரும் ஆதாரங்களைக் காப்பாற்றுவதில் இந்த அரசு எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதையும், அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல, அவர்கள் மேலும் அதற்குத் தொடர்பான கருத்துக்களை இந்த மன்றத்திலே மாத்திரம் இல்லாமல் என்னிடத்திலும், கல்வி அமைச்சர் அவர்களிடமும் எடுத்துரைத்தால், அது பயன் பெறும் வகையில் செய்வதற்கு முனைவோம் என்று நம்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. சுப்பையா அவர்கள் பேசும் நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்புக் குழுக்கள் அமைந்திருப்பதையும், குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் பாதுகாப்புக் குழு மாவட்ட அளவில் அமைக்கப்பட்டிருப்பதையும் எடுத்துச் சொல்லி அதற்கான ஆதாரங்களையும் என்னிடத்தில் தந்தார்கள்.

மாநில அளவில் நாம் கட்சிச் சார்பற்ற முறையில் ஒரு பாதுகாப்புக் குழுவினை அமைத்திருக்கிறோம். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலே இந்தப் பாதுகாப்புக் குழுக்கள் அமைவது தான் முறையாக இருக்கும் என்றும், அந்த வகையிலே இன்றைக்குக் காலையில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, ஆங்காங்கு அவர்களுடைய தலைமையில் அவர்களே முன் நின்று இந்தக் குழுக்களை அமைக்க வேண்டுமென்றும், அதிலே கட்சிச் சார்பற்ற முறையில் அனைவரும் அங்கம் பெற வேண்டும் என்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

இப்படி அமைக்கப்பட்டிருக்கின்ற இந்தக் குழுக்களையெல்லாம் நான் புறக்கணிக்க வேண்டுமென்று சொல்ல மாட்டேன். எவ்வளவோ தமிழ் நாட்டிலே மக்களிடையே சிறந்த செல்வாக்குப் பெற்றவர்கள் அப்படிப்பட்ட குழுக்களை அமைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அமைக்கின்ற குழுக்களில் இணைத்துக் கொள்ளுகின்ற அளவிலே அந்தக் குழுக்களில் உள்ளவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்து, அவர்களும் இணைந்துகொள்ள வேண்டும்.

தனித்தனியாக முயற்சிகள் நடைபெறும் நேரத்தில் சில தவறுகள் விளையவிட்டால், தவறுகள் நடைபெற்றதாக மற்றவர்களால் குற்றம் சாட்டப்படுவதற்கு இடம் ஏற்படும். அரசினுடைய நோக்கில் இந்த முயற்சிகள் நடைபெறுவது தான் நல்லது. இன்று காலையில் கலெக்டர்கள் மாநாட்டில் கூட இதனையும் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்

பல இடங்களில், தொழிலாளர்கள், மாணவர்கள், மற்றவர்கள், உண்டியல் மூலம் யுத்த நிதி சேர்க்கின்ற முயற்சிகள் நடைபெறுகின்றன. உண்டியல் மூலம் நிதி வசூலிப்பதில் எந்த விதமான தடையும் இல்லையென்றாலும், அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் பெற்று அரசாங்க முத்திரையோடு அந்த உண்டியல்கள் எடுக்கப்பட வேண்டும். அவைகளைத் தான் பொது மக்கள் ஒப்புக்கொண்டு யுத்த நிதி அளிக்க வேண்டும். அதை மீறி தனித்தனியாக அரசாங்க முத்திரை இல்லாமல் உண்டியல் எடுக்கப்படுமானால், அரசாங்க அங்கீகாரம் இல்லாமல் அந்த முயற்சிகளில் யாராவது ஈடுபட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதையும் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய நண்பர் திரு. அய்யாசாமி அவர்கள் பொங்கல் பரிசாக 3 செய்திகளைச் சொல்லப் போகிறேன் என்று அறிவித்து, பிறகு முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர், ஆகியோரைப் பற்றி எதுவும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். நான் சொன்னது வேண்டுமென்றால், மன நிறைவு அளிக்கத் தக்கதாக இல்லாமலிருக்கலாம். சொல்லாமல் விட்டு விட்டேன் என்று சொல்வது தவறு.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு கடன் உதவி செய்வதன் மூலமாகவும், அவர்கள் தொழில்களுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதின் மூலமும் அவர்களுக்கு இந்த அரசு உதவிகளைச் செய்யும் என்று அறிவித்தது 3 செய்திகளிலே ஒன்றாகும். ஆகவே ஒன்றுமே செய்யவில்லை, அறிவித்தபடி நடைபெறவில்லை என்று கூறுவது சரியான தகவல் அல்ல. அவர்கள் அனைவரும் ஷெட்யூல்டு வகுப்பில் சேர்க்கப்பட்டு அவர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்து நீண்ட நாட்களாக இந்த மன்றத்தில் வலியுறுத்தப்பட்டு வருகின்ற ஒரு கருத்தாகும். அந்தக் கருத்துக்கு ஏகபோகச் சொந்தக்காரராக மறைந்து விட்ட நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் இருந்தார்கள்.

அந்தக் கருத்தை இந்த அரசு அறவே புறக்கணித்து விடவில்லை. அது முடியாது என்று கூறிவிடவில்லை. அதனுடைய நியாயங்களை இன்றைக்கும் இந்த அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. அவர்களை அந்தக் குறிப்பிட்ட வகுப்பாக இணைக்க வேண்டுமென்று இல்லாவிட்டாலும், அவர்கள் பெறுகிற நன்மைகளையெல்லாம் முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள் பெறுவதற்கு எந்த வகையில் என்ன மாற்றங்களைச் செய்யலாம் என்பதை இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் பின்தங்கியோர் நலக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் கருத்துக்களையெல்லாம் கேட்கப்பட்டு அவைகளை இன்றைக்குப் படிப்படியாக



நிறைவேற்றி வருகிறோம். ஆக முழுமையாக நிறைவேற்றுவதற்கு நிதிநிலை நமக்கு வாய்ப்பு அளிக்காத காரணத்தால் தான், சற்றுத் தடங்கல் இருக்கிறதேயல்லாமல் வேறில்லை. ஆகவே உரிய நேரத்தில் அவைகள் எல்லாம் கவனிக்கப்படும் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த வரிகள் எல்லாம் போர்க் காலத்தில் போடப்பட்டவை, போர் நின்று விட்டது என்று அடிக்கடிச் சொன்னார்கள். நேற்றையதினம்தான் பேசியிருக்கிறோம். போர் நின்றுவிடவில்லை. போரால் ஏற்பட்ட விளைவுகளை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம்.

பிரதமர் அவர்களும் நேற்றைக்குப் பேசும்போது நாம் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும், எந்த நேரத்திலும் 1 மாதத்துக்குள், 2 மாதத்துக்குள் வேறு குழப்பங்கள், அதற்கான முயற்சிகள் எதிரிகளிடத்திலிருந்து செய்யப்படலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே போர் நின்று விட்டதென்றால், பிறகு மாவட்டங்களில் பாதுகாப்புக் குழுக்கள் எதற்காக, 26-ம் தேதி கூட்டம் எதற்காக, 10 கோடி யுத்த நிதி வசூலிக்கும் முயற்சி எதற்காக என்று மக்கள் என்னைத் தொடங்கி விடுவார்கள். ஆகவே போர் நின்று விட்டதாக இன்றைக்கு அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. போர் நின்று விட்டாலும், இதனால் ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்கள், கஷ்டங்கள் இவைகளிலிருந்து நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தை நாம் அடைவதற்கு நிறைய ஈடு கொடுத்தாக வேண்டியிருக்கிறது

வரி விதிப்புகளைப்பற்றி நான் சட்டப் பேரவையிலும் இங்கும் அறிக்கைகளை வைத்தபோது கூட, அதில் நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன் நமக்கும் பற்றாக்குறை இருக்கிறது. அதே நேரத்தில் இந்தப் போரின் விளைவாக மத்திய அரசிலிருந்து நமக்குக் கொடுக்க வேண்டியவைகளைக் கொடுப்பதற்கும் தயக்கம் காட்டப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆகவே அங்கே துப்பாக்கி சுடுவது நிறுத்தப்பட்டு விட்டது. மார்ச் மாதத்தில் வரிகள் நீக்கப்படுமா என்று கேட்பதற்கு. இப்போதே கேட்டு வைத்திருக்கிறார்கள். அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள். மார்ச் மாதத்துக்குப் பிறகு இந்த வரிகளைக் கை விடுங்கள் என்ற முழக்கத்துக்குத் தோதாக அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேனேயல்லாமல் வேறில்லை. அதே நேரத்தில் நம்முடைய பொருளாதார நிலைமைகளை எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோஷியல் சர்விசில் இருந்தவர்களுக்கு ஓய்வுபெறும் வயதை 55 வயதாக்கியதால் ஏற்பட்ட சங்கடத்தை எடுத்துச் சொன்னார்கள். எனக்கு உள்ளபடியே இருக்கிற வருத்தமெல்லாம் 7,000 அரசியல் தியாகிகளுக்கு இந்த நான்கு ஆண்டுக்காலத்தில் இந்த அரசின் சார்பாகக் கிட்டத்தட்ட ஒரு கோடி நாற்பது லட்சத்துக்கு மேல்

*[டாக்டர் மு. கருணாநிதி]* [18th December 1971

செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 55 வயதாகியதும் தியாகிகளையெல்லாம் இந்த அரசு மதிக்கவில்லையென்று பேசப்படுவதும் எழுதப்படுவதும் நிறைய இருக்கிறதேயல்லாமல், 7.000 தியாகிகளுக்கு நாம் இந்த உதவித் தொகை அளிக்கிறோம் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் எல்லோருமே எதிர் கட்சித் தலைவர் அல்லவே. ஆகவே தான் இந்த உள்ளம் அங்கே இல்லை என்பதற்காகச் சொல்லுகிறேன். எல்லோரும் எதிர்க் கட்சித் தலைவராக இருக்க முடியாது. அதற்காகப் பாராட்டும் கடமை இல்லையென்பதல்ல. பொதுவாக 55 வயது என்ற அளவில் நிர்ணயம் செய்திருக்கிற காரணத்தால், இதையும் சேர்த்துச் செய்ய வேண்டியிருக்கிறதேயல்லாமல் வேறு அல்ல. இங்கு பல்வேறு பிரச்னைகள் எடுத்துக் கூறப்பட்டன. பஞ்சாயத்து யூனியன்கள், நிர்வாகம், இவைகளில் சீர்திருத்தங்கள் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. முத்துசாமி அவர்களும், திரு. ராஜா அய்யர் அவர்களும் எப்போதுமே வலியுறுத்தி சொல்லுகிற ஆசிரியர்களுடைய பிரச்னைகளை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். காலத்தை இங்கேயே அறிவிக்க வேண்டுமென்று நண்பர் திரு முத்துசாமி கேட்டுக்கொண்டார்கள். நான் உறுதியாகச் சொல்லுகிறேன். உரிய நேரத்தில் அவைகள் எல்லாம் கவனிக்கப்படும் என்று மாத்திரம் இங்கே என்னால் அறிவிக்க முடியும் என்று கூறி, இங்கே நல்ல பல கருத்துக்களை நிதி நிலை ஒதுக்கீட்டின் மீது எடுத்துக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் மனப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1971 (L.A. Bill No. 55 of 1971), as passed by the Assemby, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken into consideration for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendation.

### (3) *The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971)*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவு @ (சட்டமன்றச் சட்டமுன் வடிவு எண். 47/1971) சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியபடி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

@ Printed as Appendix IX on page 853



18th December 1971] *[திரு. ப. உ. சண்முகம்]*

நமது மாநில வருவாயைப் பெருக்கும் பொருட்டு, அரசு அறிவிக்கும் நாளன்றும், அந்நாள் முதற்கொண்டும் பதிவுப் பத்திரங்கள் எல்லாவற்றின் மீதான முத்திரைத்தாள் தீர்வையில் கூடுதலாக 2½ சதவிகிதத்திற்கு மேல் வரி விதிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இச் சட்டமுன் வடிவின்கீழ் கூடுதலாக விதிக்கப்படும் மேல்வரி, பரிமாற்ற உண்டிகள், காசோலைகள், புரோநோட்டுகள், கப்பல் சரக்குப் பட்டியல்கள், கடன் உத்தரவாதப் பத்திரங்கள், கட்டுறுதிப் பத்திரங்கள், பங்குமாற்றும் சீட்டுப் பத்திரங்கள், பதிலாள் அதிகாரப் பத்திரங்கள் (பிராக்சிஸ்), உடைமைகளைப் பெறுவதற்கான பத்திரங்கள் (ரசீட்ஸ்) ஆகியவற்றிற்குப் பொருந்தாது. இவற்றின் மீது முத்திரைத் தாள் தீர்வை விதிக்க பாராளுமன்றத்திற்கே அதிகாரம் உண்டு. இது தொடர்பாக 1971-ஆம் ஆண்டு முத்திரைத்தாள் ஆயத்தீர்வைகள் (திருத்த) அவசரச் சட்டத்தை குடியரசுத் தலைவர் சாற்றுரைத்துள்ளார் என்பதை நாம் கண்டு குறிப்பிடலாம். 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் மேற்படி அவசர சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி சட்டத்தின் 3-எ பிரிவின் பரிமாற்ற உண்டிகள், புரோநோட்டுகள், கப்பல் சரக்குப் பட்டியல்கள், கடன் உத்தரவாதப் பத்திரங்கள், கட்டுறுதிப் பத்திரங்கள், பங்குமாற்றம், கடன் சீட்டுப் பத்திரங்கள், பதிலாள் அதிகாரப் பத்திரங்கள், உடைமைகளைப் பெறுவதற்கான பத்திரங்கள் ஆகியவற்றின் மீது கூடுதலாக முத்திரைத்தாள் தீர்வை விதிக்க வகை செய்கிறது. எனவே கூடுதலாக இப்புதிய பிரிவை இந்திய முத்திரைத்தாள் சட்டத்தில் 3-எ பிரிவாகச் சேர்த்துக் கொள்ள கருதப்பட்டுள்ளது.

இச்சட்டமுன் வடிவை மேலவை ஏற்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 47 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations.

The motion was put and carried and the Bill was taken into consideration for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

### (4) *The Tamil Nadu betting and entertainments, Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971)*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 1971-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன் வடிவை@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 48/1971) சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியபடி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு இம்மேலவையை வேண்டுகிறேன்.

@ Printed as Appendix X on pages 97–98

[திரு. ப. உ. சண்முகம்] [18th December 1971

இம்மாநிலத்தில் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படுவதற்குரிய குதிரைப் பந்தய வரியின் மீது, ஐந்து சதவிதம் மேல்வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட முன் வடிவின் 2வது பகுதியால் மேற்சொன்ன குதிரைப் பந்தய வரிச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ள புதிய **3-A** பிரிவு இதற்கு வகை செய்கிறது.

திரைப்படக் காட்சிகளின் நேர்வில், நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படாதபொழுது (கேளிக்கை வரித்தொகை விட்டபட) ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல்வரியாக ஐந்து காசும், நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்படுகின்றபொழுது, ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல்வரியாக பத்து காசும். குதிரைப் பந்தயங்களின் நேர்வில் நுழைவுக் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படாத பொழுது (கேளிக்கை வரித்தொகைவிட்டபட) ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல்வரியாக ஐம்பது காசும், நுழைவுக் கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படுகின்றபொழுது ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்தின் மீதும் கூடுதல் மேல்வரியாக ஒரு ரூபாய் விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சட்டமுன் வடிவின் 3-வது பகுதியால் தமிழ்நாடு 1939–ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ள புதிய **4-B** பிரிவு இதற்கு வகை செய்கிறது.

மேற் சொன்ன வரி விதிப்புகள் 1—1—72 முதற்கொண்டு செயலுக்கு வரும்.

மேலவைத் தலைவரவர்களே மேலவை இச்சட்டமுன் வடிவை ஏற்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே. முதலில் சிறு விளக்கம் தேவையாக இருக்கிறது. இப்போது சபை முன் இருக்கும் மசோதா

"The Tamil Nadu Betting and entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971) : "

இரண்டு சட்டங்களுக்கான திருத்தம் ஒரே மசோதாவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டம் தனித்தனியாக ஒவ்வொரு சட்டத்திற்கும் கொண்டுவர வேண்டும். அப்படியில்லாமல் ஒரே சட்டத்தின் மூலம் இரண்டு சட்டங்களுக்குத் திருத்தங்களைக் கொண்டுவருவது செல்லுமா, பரிசீலிக்கப்பட்டதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



18th December 1971]

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரே திருத்தச் சட்டம் கொண்டு வருவது தவறில்லை. எல்லாம் கேளிக்கை வரியின்கீழ் வருவதால் தவறு ஒன்றுமில்லை.

திரு. கே. ராஜாராம்:

"clause 3 of the Bill-ல் Additional Sur-charge on tax on payment for admission to entertainments"
என்று சொல்லியிருக்கிறது.

Clause 2 of the Bill provide for insertion of the new section 5-A, providing for every of sur-charge on betting tax, after section 5 of the Tamil Nadu Betting tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).

இப்படி வேறு சட்டமாக இருக்கிறது. ஆகவே தனித் தனியாகச் சட்டம் கொண்டுவருவது தான் நல்லது.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது குறித்து பரிசீலித்துத் தான் ஒரே சட்டமாகக் கொண்டு வரப்பட்டது. அதில் தவறு ஒன்றும் இல்லை.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவின் மீது என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். குதிரைப் பந்தயத்திற்கு நுழைவுக் கட்டணத்தின் மீது கூடுதல் வரி போடப்படுகிறது. இந்தக் குதிரை வளர்க்கிறார்களே, இவர்கள் பெரும் பணக்காரர்கள்தான். சாதாரண ஆட்கள் நாய்க்குட்டிகூட வைத்துக் கொள்ள முடியாது. பெரிய பணக்காரர்கள் குதிரை வளர்க்கிற காரணத்தால், அந்தக் குதிரைச் சொந்தக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் 5%-ம் குதிரை மீதும் 2%-ம் போட்டால், நன்றாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நண்பர் திரு. கே. எம். எஸ். அவர்கள் பேரவையில் பேசும்போது, இப்படித்தான் குறிப்பிட்டார்கள். இருவருக்கும் உள்ள சந்தேகங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. என்ன யோசனையை திரு. கே. எம். எஸ். அவர்கள் பேரவையில் குறிப்பிட்டார்களோ அதே யோசனையைத் தான் நண்பர் வி. வி. ஆர். அவர்கள் இங்கே சொல்லுகின்றார்கள். புதிய வரிகளைப் போடுவதுபற்றி யோசனையைத் தெரிவித்தார்கள். நண்பர் திரு. கே. எம். எஸ். அவர்கள் சொன்னார்கள், குதிரைப் பந்தயப் பரிசுத்தொகைமீது வரியைப் போடுகிறீர்கள். திடீரென்று எங்களுக்குப் பரிசு விழுந்துவிட்டால் என்ன பண்ணுவது என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள். நண்பர் வி.வி.ஆர். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன், அரசாங்கம் இதைப் பற்றி வரும் பட்ஜெட்டின்போது கவனித்துக்கொள்ளும் என்று.

* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I have no objection to these taxes that have been proposed. I would like to state only one thing, Sir. The Hon. the Minister for Revenue, as I have already pointed out, is very fond of these sur-charges, Sir, because he brings sur-charge on Sales Tax, sur-charge on Stamp duty, sur-charge on Entertainment Tax, sur-charge on Betting Tax etc. During an emergency, we will allow the Hon. Minister to levy these sur-charges. I, on my part, have no objection. I am neither interested in horses nor in racing and I have no possible objection to the sur-charge on all these taxes. I think all these taxes are going to fetch Rs. 1½ crores and Rs. 2 crores. In an emergency the people of Tamil Nadu will very willingly pay these taxes. I only wish that the Hon. the Minister for Revenue, after the emergency is over, sits down and makes a logical study of all these taxation proposals and brings forward a consolidated Bill because such calculations in sur-charges are extremely difficult to trade and commerce. This is the only appeal I have to make. After the emergency, he may consolidate all these taxes and put 40 present or 50 present whatever he likes. It may be nice for the Government to levy this because when they go to the people they can say : We have levied only 5 present or 10 present But ultimately when a man registers a document relating to property he knows it runs into hundreds or thousands. Politically it may be convenient but economically it is difficult for all of us in trade. This is the only suggestion I want to make, Sir, namely that the Hon. the Minister for Revenue may consolidate all surcharges on taxes in a comprehensive Bill which he may bring during the Budget.

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது நல்ல யோசனைதான் அரசு அதை பரிசீலிக்கலாம். ஆனால் ஸர்சார்ஜ் என்று விதிப்பது தற்காலிகமானதுதான். இதை நிரந்தரமாக்குவதில் சங்கடம் ஒன்றும் இல்லை. துவக்கத்திலேயே குறிப்பிட்டேன், இது எமெர்ஜென்சிக்காக இல்லை என்று. நிரந்தரமாகப் போடக்கூடிய வரிகளைப்பற்றி அரசு பிறகு பரிசீலிக்கலாம் என்று சொல்லி, இப்போது இம்மசோதாவினை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Betting and Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 48 of 1971), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

The House will now adjourn *sine die.*

The House then adjourned *sine die.*



## VIII PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

118. Notification issued with G.O.Ms. No. 1562, Home, dated the 9th June, 1971 in regard to an amendmnt to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. (*Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 Central Act IV of 1939*).

### B. Reports, Notifications and Other Papers.

* 56. A note on the Sethusamudram Project,

57. Answers to unstarred question Nos. 5 to 25.

* Circulated to all M.L.Cs. on 17th December 1971.

## APPENDIX I

[*Vide* answer to Starred Question No. 198 on page 762.]

தமிழ் நாட்டில் மாவட்ட வாரியாக உள்ள கள்ளுக்கடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை :—

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | இதுவரை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள கள்ளுக்கடைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. சென்னை | 35 |
| 2. செங்கற்பட்டு | 570 |
| 3. தென் ஆர்க்காடு | 346 |
| 4. வட ஆர்க்காடு | 783 |
| 5. தருமபுரி | 345 |
| 6. சேலம் | 399 |
| 7. கோயம்புத்தூர் | 833 |
| 8. நீலகிரி | இல்லை. |
| 9. திருச்சிராப்பள்ளி | 768 |
| 10. தஞ்சாவூர் | 1,288 |
| 11. மதுரை | 415 |
| 12. இராமநாதபுரம் | 501 |
| 13. திருநெல்வேலி | 528 |
| 14. கன்னியாகுமரி | 206 |
| | 7,018 |

## APPENDIX II

(*Vide* answer to Starred Question No. 258 on page 787)

(*a*) *Statement showing the particulars of individuals and firms affected by ceiling on number of bus route permits owned*

| *District* (1) | *Name and address of the operator* (2) |
|---|---|

*Chingleput district*

1. Thiruvalargal Associated Transports (Madras) (P) Limited, Madras-2.
2. Thiru K. B. Nawabjan, V.M., Bus Service, Madras-2.
3. Thiru S. V. Natesa Mudaliar, S.L.N.S. Transport, Kancheepuram.





*Coimbatore district*

1. The Erode Service, Head Quarters Road, Coimbatore.
2. Thiru A. K. Elliah Chettiar, A.K.E. Transports, Coimbatore.
3. The City Transports (P) Limited, Mettupalayam Road, Coimbatore.
4. The Thondamuthur Tarding Company Limited, Coimbatore
5. The Mettupalayam–Coonoor Service (P) Limited, Mettupalayam.
6. Messrs. Nachimuthu Industrial Association, Jail Road, Coimbatore.
7. The Coimbatore Motor Transport Co-operative Society for Ex-Servicemen Limited, Coimbatore.
8. The Gobald Motor Service (P) Limited, Mettupalayam.
9. Messrs. B.M.S. (P) Limited, Coimbatore.

*Dharmapuri district*

1. Messrs. S.D.U.M.S. (P) Limited, Dharmapuri.
2. Thiru S.A. Muninatha Chetty, Pennagaram.

*Erode district*

1. Messrs. Anjaneya Motor Transports (P) Limittd, Erode.
2. Messrs. Coimbatore–Salem Transports (P) Limited, Erode
3. Messrs. Sowdambigai Motor Service, Dharmapuram.
4. Messrs. Tiruppur–Karur Transports (P) Limited, Tiruppur
5. Thiru P. N. Ramaswami Gounder, Sri Ram Transports, Sathiamangalam.
6. Messrs. Erode Transports (P) Limited, Erode

*Kanyakumari district*

Nil.

*Madurai district*

1. Aruppakkottai Sri Jaya Vilas (P) Limited, Aroppukottai.
2. Thiru Murugan Transport, Palani Road, Dindigul.
3. Thiru Rahim Transport, Periakulam.
4. Thiru Rahim Roadways, Periakulam.
5. Thiru Sri Palaniappa Transports (Bus Service), Madurai
6. Thiru Sri Venkateswara Transport, Madurai.

*The Nilgiris district*

1. Thiru United Nilgiris Service (P) Limited, Kotagiri.
2. Thiru Nilgiris Motor Transport (P) Limited, Coonoor.
3. Thiru Rajalakshmi Motor Service, Ooty.

[18th December 1971

*North Arcot district*

1. Thiru Mir Mohamed Ali, M. M. Ali Motor Service, Vellore.
2. Thiruvalargal Balasubramaniar Bus Service (P) Limited, Tiruvannamalai.
3. Thiruvalargal Lakshmi Saraswathi Motor Transport Company, Katpadi Road, Vellore.
4. Thiru S. Khader Sheriff, M.B.D. Motor Service, Arcot.
5. Thiru B. Rajagopal Naidu, Sri Lakshmi Sarswathi Motor Service, Gudiyatham.

*Ramanathapuram district*

1. Messrs. Commercial Transport Company (P) Limited, Sivagangai.
2. Messrs. Jayaram Motor Service, Rajapalayam.
3. Messrs. Madura Roadways (P) Limited, Ramanathapuram.

*Salem district*

1. Thiru Salem Co-operative Motor Transport Society for Ex-Servicemen Limited, Salem.
2. Thiru V. K. Elayalwar, Sreedharan Bus Service, Attur.
3. Thiru Rasipuram Union Motor Service (P) Limited, Rasipuram.

*South Arcot district*

1. The South Arcot District Co-operative Motor Transport Society for Ex-Servicemen Limited, Cuddalore-1.
2. Thirumathi K. Meenakshikutty, Proprietrix, Prabha Transport, Vridhachalam.

*Thanjavur district*

1. Messrs. Swamy Motor Transports (P) Limited, Thanjavur.

*Tiruchirappalli district*

1. Thiruvalargal L.G. Balakrishna and Brothers (P) Limited, Karur.
2. Thirumathi Saraswathi Ammal, Proprietrix, Ramajayam Transports, Tiruchi.
3. Thiruvalargal Tiruchi Srirangam Transport Company (P) Limited, T.V. Koil.
4. Thiru A. Somasundaram Reddiar, Proprietor, Sundaram Transports, Tiruchi.
5. Thiruvalargal Rajamani Motors, Pudukkottai.



18th December 1971]

*Tirunelveli district*

1. Messrs. Lion Automobile Service Company, Tirunelveli Junction.
2. Messrs. Sri Ram Popular Service (P) Limited, Palayamcottai.
3. Thiru K. Ganapathia Pillai, Proprietor, Sri Ganapathi Motor Service, Tirunelveli.
4. Thirumathi M. Rajagopalammal, M. R. Gopalan Motor Service, Tirunelveli.

## Appendix III.

### STATEMENT PLACED ON THE TABLE OF THE HOUSE.

(*Vide* Answer to Starred Question No. 263 on page 793.)

**வினாவின் (இ) பகுதி**

*கீழே குறிப்பிட்டுள்ள ஆராய்ச்சி நிலையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவில்லை :*

**1. வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள்**

*(1) வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்.*

*(2) வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.*

*(3) வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.*

*(4) கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்*

**2. வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள்**

*(5) அரிசி ஆராய்ச்சி நிலையம், திருர்குப்பம்.*

*(6) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பாலூர்.*

*(7) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நாஞ்சநாடு.*

*(8) கரும்பு ஆராய்ச்சி துணை நிலையம், சிறுகமணி.*

*(9) கரும்பு ஆராய்ச்சி துணை நிலையம், குடியாத்தம்.*

*(10) பழ ஆராய்ச்சி நிலையம், கூனூர்.*

*(11) வாழை ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.*

*(12) பழ ஆராய்ச்சி நிலையம், கன்யாகுமரி.*

*(13) பழ ஆராய்ச்சி நிலையம், கல்லார்.*

*(14) பழ ஆராய்ச்சி, பர்லியார்.*

*(15) புகையிலை ஆராய்ச்சி நிலையம், சேலம்.*

**3. திட்டங்களாக தொடரப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலையங்கள் துணை நிலையங்கள்**

*(16) அரிசி ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்*

*(17) பருப்புவகை ஆராய்ச்சி துணை நிலையம், ஐயம்கொண்டான்.*

[18th December 1971

(18) முந்திரி ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.

(19) தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்.

(20) ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம். சேலம்.

(21) பருத்தி ஆராய்ச்சி நிலையம். ஸ்ரீவில்லிபுத்தூர்

(22) வாழை ஆராய்ச்சி நிலையம். வேலூர்.

(23) தென்னை ஆராய்ச்சி நிலையம். ராமநாதபுரம்.

(24) மலைவாழை துணை நிலையம், மங்களங்கொம்பு (மதுரை மாவட்டம்).

### வினாவின் (உ) பகுதி

மதுரை, கோவை மாவட்டங்களிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களும், கல்லூரிகளும் மட்டும் தற்போதைக்கு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பிற்கு மாற்றவேண்டுமென்றும், மற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் வேளாண்மைத்துறையிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அரசு தீர்மானம் செய்தது. இந்த தீர்மானத்தை தொடர்ந்து 1971-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டம் கொண்டு வரப்பட்டு. அச்சட்டம் 1971-ம் ஆண்டு ஜூன் 1-ஆம் நாள் முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாடு முழுவதும் நீடிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம், சட்டத்தில், விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுக்கு பொருந்தும். ஆனாலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு எந்த அரசுக் கல்லூரியையோ, ஆராய்ச்சி நிலையங்களையோ மாற்றுவதற்கான வகை செய்யும் முறையில் சட்டத்தில் தேவையான விதித்துறைகளும் செய்யப்பட்டுள்ளன.

## APPENDIX IV

(*Vide* answer to unstarred question No. 5 on page 800.)

கேள்வியின் (அ) பிரிவு: சென்னை உயர்நீதி மன்றத்துடன் இணைந்துள்ள சட்டத்துறை அலுவலர்கட்கு 1969-70-லும் 1970-71-லும் தரப்பட்ட ஊதியத்தைக் காட்டும் அறிக்கை இதோ தரப் பட்டிருக்கிறது :—

***1969-70, 1970-71-வரை சட்டத்துறை அலுவலர்கட்கு வழங்கப்பட்ட கட்டணம்.***

| வரிசை எண்ணும், சட்டத்துறை அலுவலர் பதவிப் பெயர். | வழங்கப்பட்ட தொகை. 1969–70. | | 1970–71. | |
|---|---|---|---|---|
| | ரூ. | பை. | ரூ. | பை. |
| 1 அட்வகேட் ஜெனரல் | 19,530 | 00 | 42,845 | 00 |
| 2 அரசு வழக்கறிஞர் .. | 71,928 | 88 | 54,596 | 00 |
| 3 அரசு கூட்டு வழக்கறிஞர் .. | 18,606 | 81 | 9,144 | 39 |
| 4 அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர். | | | | |
| குற்ற விசாரணைக் கூட்டு வழக்கறிஞர் .. .. | 85,887 | 00 | 83,925 | 00 |



18th December 1971]

கேள்வியின் (ஆ) பிரிவு: அவர்கள் வாதாடும் அரசு வழக்குகளின் எண்ணிக்கைக்கேற்றபடியும், நிலையாணைகளில் குறிப்பிடப் பட்டுள்ள தொகை அளவுக்கேற்பவும் சட்டத்துறை அலுவலர் கட்குக் கட்டணங்கள் வழங்கப்படுவதால், இது தொடர்பான செலவினைக் குறைப்பதற்கில்லை.

## APPENDIX V.

(*Vide* answer to Unstarred Question No. 18 on page 805).

I. No. of cases pending in the High Ciurt as on 10th August 1971.

| | |
|---|---|
| (1) Civil Suits. ... ... ... ... ... | 493 |
| (2) Original Matrimonial Suits. ... ... ... | 36 |
| (3) Testamentary Original Suits. ... ... | 44 |
| (4) Insolvency Petitions. ... ... ... ... | 246 |
| (5) Insolvency Applications. ... ... ... | 161 |
| (6) Company Petitions. ... ... ... ... | 51 |
| (7) Company applications. ... ... ... | 249 |
| (8) Original Petitions. ... ... ... ... | 21 |
| (9) Applications. ... ... ... ... ... | 336 |
| (10) Liquidation cases. ... ... ... ... | 30 |
| **II. Civil Appellate side.** | |
| First Appeals. ... ... ... ... ... | 5,007 |
| Original Side Appeals. ... ... ... ... | 239 |
| Letters Patent Appeals. ... ... ... ... | 267 |
| Writ Appeals. ... ... ... ... ... | 1,088 |
| Second Appeals. ... ... ... ... ... | 4,728 |
| Civil Miscellaneous Appeals. ... ... ... | 864 |
| Civil Miscellaneous Special Appeals. ... ... | 207 |
| Civil Revision Petitions. ... ... ... ... | 2,371 |
| Tax cases. ... ... ... ... ... ... | 1,503 |
| Referred cases. ... ... ... ... ... | 9 |
| Matromonial cases. ... ... ... ... ... | 20 |
| Supreme Court Leave Petitions. ... ... ... | 87 |
| Special Tribunal Appeals. ... ... ... | 241 |
| Civil Miscellaneous Petitions. ... ... ... | 8,173 |
| **III. Criminal.** | |
| Referred Trials. ... ... ... ... ... | 51 |
| Criminal Appeals. ... ... ... ... | 1,081 |
| Criminal Revision Petitions. ... ...... ... | 904 |
| Criminal Miscellaneous Petitions. ... ... | 191 |
| **IV. Writs.** | |
| Writ Petitions ... ... ... ... ... | 5,176 |

[18th December 1971

## APPENDIX VI.

[*Vide* answer to Unstarred Question No. 19 on page 805.]

(அ) மத்திய தொகுப்பு உரங்களில் இருப்பு விவரம்.

| தொடர் எண். | உரத்தின் பெயர். | மெட்ரிக் டன். |
|---|---|---|
| 1. | அமோனியம் சல்பேட் .. .. | 1,11,648 |
| 2. | யூரியா .. .. .. .. | 78,113 |
| 3. | அமோனியம் சல்பேட் நைட்ரேட் .. | 1,398 |
| 4. | கால்சியம் அமோனியம் நைட்ரேட் 20·5 சதவீதம் .. .. | 7,681 |
| 5. | கால்சியம் அமோனியம் நைட்ரேட் 26 சதவீதம் .. .. | 4,768 |
| 6. | டை அமோனியம் பாஸ்பேட் .. | 74,718 |
| 7. | அமோனியம் பாஸ்பேட் .. .. | 11,936 |
| 8. | அமோனியம் குளோரைட் .. | 3,308 |
| 9. | மூரியேட் ஆப் பொட்டாஷ் .. .. | 10,295 |
| 10. | சல்பேட் ஆப் பொட்டாஷ் .. .. | — |
| 11. | என். பி. கே. காம்ப்ளக்ஸ் 14:14:14. | 20,107 |
| 12. | என் பி. கே. காம்ப்ளக்ஸ் 15:15:15. | 5,426 |
| 13. | என். பி. கே. காம்ப்ளக்ஸ் 12:24:12. | 3,170 |
| 14. | என். பி. கே. காம்ப்ளக்ஸ் 14:28:14. | 1.151 |

(இ) குறியளவு லட்சம் டன்னில்.

| ஆண்டு. | நைட்ராஜன் உரம். (தழைச்சத்து) | பாஸ்டேட் உரம். (மணி சத்து) | பொட்டாஷ் உரம். (சாம்பல் சத்து) |
|---|---|---|---|
| 1969–70 | 1·75 | 0·52 | 0·52 |
| 1970–71 | 1·80 | 0·60 | 0·50 |

(உ) தொகுப்பு உர ஒதுக்கீடு.

| ஆண்டு. | | உரத்தின் பெயர். | அளவு. (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| 1969–70 | .. | யூரியா | 60,000 |
| 1970–71 | .. | 1. அமோனியம் சல்பேட் | 90,000 |
| | | 2. யூரியா | 1,01,700 |

(எ) தொகுப்பிலிருந்து வாங்கிய உரங்கள்.

| ஆண்டு. | | உரத்தின் பெயர். | அளவு. (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| 1969–70 | .. | யூரியா | 60,000 |
| 1970–71 | .. | 1. அமோனியம் சல்பேட் | 12,914 |
| | | 2. யூரியா | 23,570 |



18th December 1971]

(ஏ) தொகுப்பு உரங்கள்.

| தொடர் எண். | உரத்தின் பெயர். | பயன்படுத்திய அளவு. 1969–70 (மெட்ரிக் டன்) | 1970–71. |
|---|---|---|---|
*41 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether any Research on the incidence of Tuberculosis is being conducted at the Tuberculosis Centre at Chetput, Madras?

### சேத்துப்பட்டு காசநோய் மருத்துவமனை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

காசநோய் ஏற்படுவது பற்றி சென்னை, சேத்துப்பட்டில் உள்ள காசநோய் மருத்துவமனையில் ஆராய்ச்சி ஏதேனும் நடத்தப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

## *Soda Drink Factories*

* 42 *Q*.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the number of Soda Drink Factories in this State as on date; and

(*b*) the total number of persons employed in these factories?

### சோடா பானத் தொழிற்சாலைகள்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் நாளது வரையில் உள்ள சோடா பானத் தொழிற்சாலைகள் எத்தனை?

(இ) இத்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் முப்பது சோடா தொழிற்சாலைகள் இந்நாள் வரையில் தொழில் வர்த்தக இயக்குநர் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) இந்த முப்பது தொழிற்சாலைகளில் மொத்தம் நானூற்றுத் தொண்ணூற்றிரண்டு தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, இந்த சோடா பானத் தொழிற்சாலைகளில், பிரதானமாக இருக்கக்கூடிய தொழிற்சாலையில் அடிக்கடி வேலை நிறுத்தம் நடைபெறுவதும், அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சட்ட பூர்வமாகக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள் வழங்கப்படாமல் இருப்பதும் இந்த அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா ?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சட்டபூர்வமாக வர வேண்டிய நன்மைகளைச் சட்டபூர்வமாகப் பெற்றுக் கொள்ளலாம். வேலை நிறுத்தம் நாட்டிற்கு ஆபத்து என்பதைத் தொழிலாளர் தலைவர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு என் நன்றி.

THIRU D. SANTOSHAM : Some of these smaller factories have been very much affected by bigger factories like ' Cocoa Cola ' and other bigger factories. I think industries like this should be made more profitable for the smaller capitalists. Would the Government consider the ways and means of either granting tax exemptions or other incentives so that they may be able to compete on equal footing with the bigger companies?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பொதுவான கொள்கைப் பிரச்னை. தனிப்பட்ட தொழிற்சாலையைப்பற்றிக் கேட்டால் பரிசீலிக்கலாம். என்னிடம் உள்ளவிவரப்படி, மூன்று தொழிற்சாலைகளில் தான் 100 பேர்களுக்கு மேலே வேலை செய்கிறார்கள்; மற்ற தொழிற்சாலைகள் எல்லாம் 23 அல்லது 24 பேர்கள் வேலை செய்கிற சிறிய தொழிற்சாலைகள் தான்.

THIRU M. RAJAH IYER : Was it brought to the notice of the Government that some of these factories prepared spurious stuff with the labels of ' Cocoa Cola ' and other standard bottles and marketed them? Has it come to the notice of the Government? If so, what action do the Government propose to take?

மாண்புமிகு திரு. செ. மாதவன் இது போன்ற கலப்படங்களைத் தடுப்பதற்குச் சட்டம் இருக்கிறது.

## *Mulberry Silk Production*

* 43. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Mulberry Silk Production has increased in the State in recent years; and

(*b*) if so, the details thereof?

### மல்பரி பட்டு உற்பத்தி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மல்பரி பட்டு உற்பத்தி அண்மை ஆண்டுகளில் பெருகியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) முசுக்கொட்டை பட்டு உற்பத்தி 1966-67-ல் 487.40 கிலோவிலிருந்து 1970-71-ம் வருடத்தில் 1,500 கிலோவாக உயர்ந்திருக்கிறது. 1971-72-ல் உற்பத்தி 20,000 கிலோ வரை, உயரலாமென மதிப்பிடப்படுகிறது.

[4th December 1971

*Small Scale Industries*

* 44 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the number of loan applications received for development of industries in the Conference of Small Scale Industries held during November 1969 at Sivagangai and Rajapalayam in the Ramanathapuram District;

(*b*) among them the number sanctioned; and

(*c*) the total amount of loan involved on the applications so sanctioned?

சிறு தொழில்கள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை, இராசபாளையம் ஆகிய ஊர்களில் 1969 நவம்பர் மாதத்தில் நடைபெற்ற சிறுதொழில் வளர்ச்சி மாநாட்டில் தொழில் வளர்ச்சிக்காக கடன் கேட்டு பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றில் எத்தனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன?

(உ) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மீது அளிக்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 742.

(இ) 155.

(உ) அவற்றில் 138 விண்ணப்பங்களின் மீது 1—10—1971 முடிய அளிக்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை ரூபாய் 1,84,350.

*Conference of Public Works Department Secretaries and Chief Engineers*

* 45 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether any Conference of Public Works Department Secretaries and Chief Engineers of different States was held about 5th June 1971 at New Delhi;

(*b*) whether any representative of this State attended the meeting; and

(*c*) if so, the details thereof?

பொதுப்பணித் துறைச் செயலாளர்கள், தலைமைப் பொறியாளர்கள் மாநாடு.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) புது டில்லியில், 1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் 5-ஆம் நாள் அளவில் பல்வேறு மாநிலங்களின் பொதுப் பணித்துறைச் செயலாளர்கள், தலைமைப் பொறியாளர்கள் ஆகியோரின் மாநாடு ஏதேனும் நடைபெற்றதா?



4th December 1971]

(இ) இம்மாநிலத்தின் பிரதிநிதி யாரேனும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டாரா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பொதுப்பணித்துறை செயலாளரும் நெடுஞ்சாலை கிராமப் பணித் தலைமைப் பொறியாளரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(உ) தேசிய நெடுஞ்சாலை வேலைகளையும் இதர மத்திய அரசு திட்டங்களையும் முக்கியமாக 1971-72-ம் ஆண்டிலும் அதற்குப்பின்வரும் ஆண்டுகளிலும் மாநிலங்கள் நிறைவேற்றக்கூடிய தகுதியை ஆய்வுசெய்யும் பொருட்டு இந்தக் கூட்டம் நடந்தது.

*Small Dams*

* 46 *Q.*—THIRU K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether any investigation work has been undertaken for the construction of small dams to harness the waters which go waste in Thadikkaran Konam Hill area, Thovalai Taluk, Kanyakumari District, under Minor Irrigation Scheme; and

(*c*) if so, the action taken thereon?

சிறு அணைகள்

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுக்கா தடிக்காரன் கோணம் மலைப்பகுதியில் வீணுகும் தண்ணீரை தேக்க சிறு பாசன திட்டத்தின் அடிப்படையில் சிறு அணைகள் கட்ட ஆய்வு வேலைகள் நடந்ததுண்டா?

(இ) அப்படியாளுல், அதன்பேரில் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தடவையாற்றின் குறுக்கே ஓர் அணையும், தடவையாற்றின் குறுக்கே உள்ள முதல் அணையிலிருந்து செல்லும் சமமட்ட கால்வாயை கடக்கும் காட்டாற்றின் குறுக்கே மற்றொரு அணையும், ஆக இவ்விரண்டையும் கட்ட ரூ. 10 லட்சம் செலவில் ஓர் திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி : தலைவரவர்களே, இந்த வேலை நடப்பதற்கான எஸ்டிமேட்டுகள் எல்லாம் தயாராகி விட்டனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கெனவே சொல்லியதுபோல், தலைமைப் பொறியாளர் இதைப் பரிசீலித்து வருகிருர். இந்த வேலைக்கு ஏற்படக்கூடிய செலவு சுமார் 10 லட்சம் ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது அவசியமான திட்டம் என்று கருதப்படுவதால்,

## *Concessional Tickets*

* 47 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal under consideration of the Government to offer concessional tickets in State Transport Buses to the members of the public as is provided in Railways during holidays?

### *மலிவுக் கட்டணப் பயணச் சீட்டுகள்*

*திரு. எம். ஆறுமுகசாமி :* மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

விடுமுறை நாட்களில் ரயில்வேக்களில் மலிவுக் கட்டணங்களில் பயணச் சீட்டுகள் கொடுக்கப்படுவதுபோல அரசுப் பேருந்துகளிலும் பொதுமக்களுக்கு அத்தகைய பயணச் சீட்டுகள் கொடுப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

*மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் :* இல்லை.

*திரு. எம். ஆறுமுகசாமி :* தலைவரவர்களே, இயயில்வேக்களில் எல்லாம் சுற்றுப்பயணத்தை உற்சாகப்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் வர்த்தக ரீதியில் இந்தச் சலுகை 'கன்செஷன்' கொடுத்து வருகிறார்கள். அது போலவே, அரசு பேருந்து போக்குவரத்திலும் கொடுத்தால், ஆம்னிபஸ் போன்றவைகள், திருட்டுத்தனமாக நடத்தும் வர்த்தகம் குறைக்கப்படும் என்று கருதுகிறேன். எனவே அரசு இதை மீண்டும் பரிசீலித்து கன்செஷன் டிக்கட்டை அரசுப் போக்குவரத்து பஸ்களில் வழங்குவதற்கு முன்வருமா ? அரசாங்க பஸ்களிலே வேலை செய்கின்றவர்களுக்கும் இரயில்வே ஊழியர்களுக்கு அளிப்பதுபோல் 'பாஸ்' வசதி அளிக்க அரசு முன்வரவேண்டும்; அதன் மூலம் ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பதுபோல் ஊக்கம் ஊட்டுவதாக இருக்கும். அரசுக்கும் அதிக லாபம் கிடைக்கும் என்பதால், அதையும் அரசு கவனிக்குமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் :* தலைவர் அவர்களே, இப்போதே அரசுப் போக்குவரத்துத் துறையில் பல சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இரயில்வேத் துறையில் அளிப்பது போன்ற சலுகைகள் இல்லை என்பதைத் தான் என்னுடைய பதிலில் குறிப்பிட்டேன். சாதாரணமாக மாமல்லபுரம், வேடந்தாங்கல் பகுதிகளுக்குச் செல்லவும், சென்னை நகரத்தைச் சுற்றிப்பார்க்கவும், இந்த வசதிகள், குறைந்த கட்டணச் சலுகைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அதே போல், அரசுப் பேருந்துகளைப் பயன்படுத்துகிற மாணவர்களுக்கும் இந்த மாதிரிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இரயில்வேயில் வேறு முறையைக் கையாளுகிறார்கள், அரசுப் போக்குவரத்துத் துறையில் நாம் வேறு முறையைக் கையாண்டு வருகிறோம். ஆம்னிபஸ்ஸில் போவதைத் தடுக்க இது பயன்படும் என்று சொன்னார்கள். இப்போதுகூட இரவு நேரத்தில் ஓடுகிற அரசுப் பேருந்துகளில் விதிக்கப்படும் கட்டணம் ஆம்னிபஸ்களில் விதிக்கப்படுவதை விடக் குறைவாகத்தான் இருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் எதிர்பார்க்கும் சலுகைகள் இப்போதே இருக்கின்றன. அரசுப் போக்குவரத்துத் துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில், இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் ஒரு கோரிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஊழியர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இன்னமும் இருந்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





*திரு. டி. கே. ஷண்முகம் :* தலைவரவர்களே, குடும்பநலத்திட்ட நாடகங்களிலும், சிறு சேமிப்புத் திட்ட நாடகங்களிலும் நடிக்கும் நாடகக் குழுவினருக்குக் கடைசி நேரத்தில் அனுமதி கிடைப்பதால், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தில் சென்று கட்டணச் சலுகைக்குரிய பரிந்துரை பெற்று ரயிலில் டிக்கட் வாங்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். எனவே இரயில் கட்டணத்தில் சலுகை அளிப்பது போல் அரசு பேருந்துகளிலும் மேற்குறிப்பிட்ட நாடகக் குழுவினருக்குச் சலுகை அளிக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் :* தலைவரவர்களே, கடைசி நேரத்தில் தான் இந்தச் சலுகையைப் பெறவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். முன்கூட்டியே மனுப்போடுவார்களானால், கடைசி நேரத்தில் சிரமப்படாமல், முன்கூட்டியே அனுமதிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. இரயில்வேயில் அளிக்கப்படுகிற சலுகைகள் அனைத்தையும் அரசுப் போக்குவரத்தில் உடனடியாகக் கொண்டுவரவேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

*திரு. கே. அறிவழகன் :* தலைவரவர்களே, கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி மாணவர்கள் ஊர்ச்செலவு செல்லும் நேரத்தில் மலிவுக் கட்டணம் அனுமதிக்கப்படுமா ? ஆரம்பப்பள்ளி மாணவர்கள் செல்லும் பஸ்கள் விட்டுவதற்கான திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

*மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் :* இப்போது மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லத்தான் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. வேண்டுமானால் அவர்கள் 'ஸ்பெஷல் பஸ்' எடுத்துக்கொண்டு சுற்றுலா சென்றால், மலிவான கட்டணத்தில் அனுமதிக்கலாமா என்பதைப்பற்றி யோசித்துவருகிறோம். இப்போது பஸ்களை ஏலம் விடுவதற்குப் பதிலாக, அரசாங்கமே அவைகளைப் புதுப்பித்து மறுபடியும் விடுகிற நிலைமையை உண்டாக்கிவருகிற காரணத்தால், மாணவர்களும் மற்றவர்களும் தனியாக பஸ்களை வாடகைக்கு எடுத்துச் செல்லும்போது, சலுகை அளிக்கலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

*திரு. கே. ராஜாராம் :* தலைவரவர்களே, உபயோகத்துக்கு வராத "கண்டெம்" செய்யப்படக்கூடிய பஸ்களை, ஏலத்தில் விடவேண்டிய பஸ்களைத் தான் மாணவர்களின் சுற்றுலாவுக்குக் கொடுக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் :* ஏலத்தில் விடுகிற காரணத்தாலேயே அந்த பஸ்கள் உதவாது என்று பொருள் அல்ல. உதவாது என்ற காரணத்திற்காக ஏலத்தில் யாரும் அவைகளை எடுக்கவில்லை. அவைகளைப் புதுப்பித்து வேண்டிய தகுதிகளையெல்லாம் பெற்று அதற்குப் பின்னர்தான் அவைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த பஸ்கள்தான் மாணவர்களுக்கு

விடப்படும் என்பதும் அல்ல. அந்த பஸ்களும் இருப்பதால், மாணவர்களும் மற்றவர்களும் முன்வந்தால் அவற்றை அளிக்கலாமா என்று யோசனை செய்கிறோம். பொதுமக்களுக்குத் தேவையான அளவுக்கு வசதிகளைச் செய்து விட்டு, அதற்குப் பிறகு இத்தகைய முறைகளை மேற்கொள்ளலாம் என்றிருக்கிறோம்.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, if there is any scheme for selling ' Go as you please ' tickets in the City buses on holidays at present?

THE HON. THIRU S. RAMACHANDRAN : It is already in existence on holidays.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சபாநாயகர் அவர்களே, ஆம்னிபஸ்களை விட அரசாங்கத்தின் இரவுநேர பஸ்களில் வருமானம் குறைவாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் : தலைவரவர்களே, கட்டணம் தான் குறைவு என்று என்னுடைய பதிலில் குறிப்பிட்டேன்.

### *Buses owned by educational Institutions*

* 48. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal with the Government to give tax exemption to the buses owned by the Educational Institutions?

### கல்வி நிலையப் பேருந்துகள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

கல்வி நிலையங்கள் வைத்துள்ள பேருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் : இல்லை.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவரவர்களே, கல்வி நிலையங்களில் வைத்துக் கொள்ளப்படும் பஸ்களுக்கு வரி விலக்கு கொடுத்தால், ஏராளமான கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகளில் பஸ்களை வைத்துக்கொண்டு, சுற்றுலா செல்லவும், உள்ளூரில் பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களை இட்டுச்செல்லவும், அவற்றைப் பயன்படுத்த வசதியாக இருக்கும் என்று சொல்கிற காரணத்தால், அரசு இது பற்றி மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன் : இப்போதே கூட கல்வி நிலையங்களில் பஸ்களுக்கு ' அன்லேடன் வெயிட் ' என்ற அடிப்படையில் வரியிலே ஒரு சலுகை தரப்பட்டிருக்கிறது. சாதாரணமாக மற்றப் பேருந்துகளுக்கு இடங்களின் சீட்டுகளின் அடிப்படையில் வரி வசூலிப்பதற்கு மாறாக, கல்வி நிலையங்களின் பஸ்களுக்கு ' அன்லேடன் வெயிட் ' என்ற அடிப்படையில் வரி வசூலிக்கும் முறையில் சலுகை ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருவதால், மேலும் எந்தச் சலுகையும் தருவதற்கில்லை.



### *Conference of the Indian Labour Organisation*

1 S.N.Q. Thiru KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state the suggestions made by the Hon. Miniser for Labour on behalf of the Government of Tamil Nadu on the amendment to the Minimum Bonus Act at the Conference of the Indian Labour Organisation held at Delhi?

### இந்தியத் தொழிலாளர்கள் மாநாடு.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

டில்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர்கள் மாநாட்டில் குறைந்த பட்ச போனஸ் சட்டத் திருத்தம் பற்றி தமிழக அரசின் சார்பில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அக்டோபர் திங்கள் 22, 23, ஆகிய நாட்களில் டில்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர்கள் மாநாட்டில் குறைந்த பட்ச போனஸ் இப்போது 4 சதவிகிதம் என்றிருப்பதை 8.33 சதவிகிதமாக கொடுக்க உடனடியாக சட்டம் கொண்டுவர வேண்டும் என்றும், நாட்டில் பல பகுதிகளில் போனஸ் பற்றிய தகராறுகள் ஏற்படுவதால் இச்சட்டம் கொண்டு வருவதில் இந்திய அரசு இனியும் கால தாமதம் செய்யக் கூடாது என்றும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்திக் கூறினேன். இக் கருத்திற்கு ஏனைய மாநில தொழிலாளர் நல அமைச்சர்களும் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். தொழிலாளர் தலைவர்களும் தமிழக அரசின் இக்கருத்தினை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, 14—11—1971-ம் தேதி நாடெங்கிலும் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் சார்பில் நூற்றுக்கணக்கான கூட்டங்கள் நடந்து மாண்புமிகு மேலவை உறுப்பினர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் அதில் கலந்து கொண்டு இந்த சட்டத் திருத்தத்திற்குக் குழுக்கள் அமைப்பது என்றால், முத்தரப்பு மகாநாடு கூட்டுவது என்ற நிலைமை இல்லாமல், உடனடியாக சட்டத்திருத்தப் பரிகாரம் காண வேண்டுமென்று வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்களே அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே தமிழக அரசு இந்திய தொழிலாளர் நல அமைச்சரிடத்தில் இதற்கு விரைவில் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கமிட்டி நியமிப்பதால் பலனில்லை என்றும் தெரிவித்திருக்கிறது. ஆனால் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று திட்டவட்டமாக இன்னும் தெரியவில்லை.

THIRU D. SANTOSHAM : May I know whether there was any calculated basis on which this recommendation of 8.33 per cent was made?

[4th December 1971

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அது குறித்து இந்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் அவருடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், நான்கைந்து 'கேட்டகரி' யாகப் பிரிக்க வேண்டுமென்று. அது இன்னும் முடிவடையவில்லை. பரிசீலனைக்கு வரும்போது அதுபற்றிய கருத்து தெரிவிக்கப்படும்.

DEPUTY CHAIRMAN : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

## III. ANNOUNCEMENTS

### (1) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

DEPUTY CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. to-day, the following programme of business has been decided :

December 4th and 6th—Discussion on the Electricity Board Budget.

December 7th —Non-Official Business.

December 8th and 9th—Discussion on the Electricity Board Budget—cont.

December 10th —Non-Official Business.

Further programme of business will be decided later. The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

## IV. INFORMATION *re* DECLARATION OF WAR WITH IN IA BY PAKISTAN

4-40 p.m. * திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அவையின் மற்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னால், ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்றிரவிலிருந்து நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது, அவசரநிலை பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. இன்று பாகிஸ்தான் நம்மோடு யுத்தம் என்று "டிக்ளேர்" செய்திருக்கிறது. நேற்றிரவு வட இந்தியாவிலுள்ள பல இடங்கள் பாகிஸ்தான் விமானங்களால் தாக்கப்பட்டிருக்கின்றன. இன்று கூட சில நகரங்கள் தாக்கப்பட்டதாக ரேடியோவில் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட அவசர நிலை ஏற்பட்டிருக்கும்போது, நாம் வாளாவிருப்பது நல்லதல்ல. மத்திய அரசிலிருந்து நம் அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா, நாம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதெல்லாம் தெரியவில்லை. நமக்கெல்லாம் அரசு வழிகாட்ட வேண்டும். எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு சபையின் ஒத்துழைப்பும், எல்லா அரசியல் கட்சி அங்கத்தினர்களின் ஒத்துழைப்பும் எந்த அளவுக்குத் தேவை என்று அறிய முடியவில்லை. ஆகவே அரசாங்கம் இதிலே நமக்கு வழிகாட்ட வேண்டும். அரசு சார்பில் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



4th December 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நேற்றிரவு முதல் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் போர் தொடுத்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு மாநில அரசுக்கு முன்கூட்டியே தெரிவித்திருக்கிறபடி, என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எல்லாம் இந்த அரசு எடுத்து வருகிறது. இது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தது. ஆனால் இந்த மன்றத்தின் மூலம் நம் கருத்தை அறிவிக்க வேண்டியது இன்றியமையாதது ஒன்று. இன்று பாராளுமன்றத்தின் இரு அவைகளும் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றன. அந்த அடிப்படையில், நாளை மறுநாள் மறுபடியும் இங்கே அவை கூடுகிறபோது, நாம் விரிவான முறையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அதைச் சட்ட மன்றத்தின் பேரவை, மேலவையில் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கிறது. அப்போது இங்கேயுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்லி, எப்போதும் போல் நம் எல்லோருடைய ஏகோபித்த முழு ஆதரவையும் தர இருக்கிறோம். நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் தமிழகம் எப்போதும் போல் சிறந்த முறையில் ஒற்றுமையாக இருந்து பணியாற்றும் என்ற முறையிலேயும் இந்த நாட்டின் விடுதலையையும் பாதுகாப்பையும் பேணிக்காப்பதில் இந்த அவையின் அக்கறையைக் காட்டும் முறையிலேயும் அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றலாம் என்றிருக்கிறோம். நாளை மறுநாள் அந்தத் தீர்மானம் வர இருக்கிறது. அப்போது எல்லோரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும், அந்தக் கருத்துக்களை மத்திய அரசுக்கும் நாட்டுக்கும் தெரிவிக்கவும் வாய்ப்பு ஏற்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU G. VASANTHA PAI : May I know from the Hon. the Minister for Education and Local Administration whether, in view of the fact that the Airport has been declared as a 'protected area ', the reception arranged for the Hon. Chief Minister will be held at any other place? I think it will be advisable that Members of the Legislative Council should not give room for others to enter the Airport. There will be a big gathering there. So, I request that it may be held in any other place like the Beach or somewhere else rather than in a protected area like the 'air port'.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று, மீனம்பாக்கம் விமான தளம் ப்ரொடெக்டட் ஏரியாவாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, நாட்டிலே நெருக்கடி நிலை இருப்பதால், தனக்கு எப்படிப்பட்ட வரவேற்பும் தர வேண்டாம், யாரும் மாலை அணிவிக்க வேண்டாம், எந்தவித ஆடம்பர நிகழ்ச்சியும் வேண்டாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நானும் ஒரு அறிக்கை பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறேன். ஆகவே, ஒருவர் இருவர் வந்தாலும் கூட, அங்கேயிருக்கிற அதிகாரிகள் என்ன

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

விதிமுறைகள் வகுத்திருக்கிறார்களோ, அவைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். அந்த விதிமுறைகளை மீறி ஆகாய விமான கூடத்தில் நடக்கக் கூடாது. நாளை மாலை மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்பதற்காக வென்று ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் கூட்டமாக, கண்டனக் கூட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்த முறையில் அறிக்கையும் விடப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, I was not objecting to the garlanding or anything like that. I was pointing this out because I have received three invitations.

THE HON. THIRU P. U. SHANMUGAM : We have gone a step further.

THIRU G. VASANTHA PAI : I was only mentioning this because I have received three invitations and two of them are without names. I fear that invitees who ought not to be there will be there and it may lead to some trouble.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவசரநிலைப் பிரகடனம் வருவதற்கு முன்னால் அழைப்புகள் எல்லாம் அனுப்பப்பட்டன. அவசரநிலைப் பிரகடனத்துக்குப் பிறகு இன்று தான் அறிக்கை விடப்பட்டிருக்கிறது. கூடுமானவரையில் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் அங்கே நடக்க வேண்டியிருக்கும். அதிகாரிகள் என்ன சொல்கிறார்களோ அதற்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்று நான் விடுத்த அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறேன்.

## V. ADJOURNMENT MOTIONS.

THIRU SAW. GANESAN : Under rule 44, I have given notice of an adjournment motion.

(1) *Strike in the Simpson group of Industries.*

DEPUTY CHAIRMAN : I have received a notice of an adjournment motion from the Leader of the Opposition regarding strike in the Simpson Group of Industries. I shall give my decision on Monday.

(2) *Firing at Karivalam Vandanallur.*

DEPUTY CHAIRMAN : I have received another notice of an adjournment motion from the hon. Member Thiru T. K. Subbiah regarding firing at Karivalam Vandanallur of Sankarankoil Taluk, Tirunelveli district. I shall give my decision on Monday.

(3) *Failure of Government to provide police protection to Thiru Karumuthu Shivalingam Chettiar of A. Thekur and his family.*

DEPUTY CHAIRMAN : I have received noice of an adjournment motion from the hon. the Leader of the Opposition regarding the failure of the Government to provide police protection to Thiru Karimuthu Shivalingam Chettiar and his family and the dacoity, etc. I would like to know how this matter will come under adjournment motion under our rules.



திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக தமிழ்நாட்டில் இம்மாதிரி ஒரு சம்பவம் ஏற்படும் என்று யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பட்டப் பகலில் காலை 7½ மணியிலிருந்து 9 மணிக்குள்ளாக, இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலுகாவில் ஆ. தெக்கூர் என்ற கிராமத்தில் திரு. சிவலிங்கம் செட்டியார் என்பவர்—சிறை சென்ற ஒரு அரசியல் தியாகி, வயதானவர்—வீட்டைச் சுற்றிலும் 30, 40 பேர்கள் நின்றுகொண்டு, யாரும் உதவிக்கு வராமல் பார்த்துக்கொண்டு காவலுக்கு நிற்க, 16 பேர்கள் வீட்டுக்குள்ளே நுழைந்து, துப்பாக்கியும் வேறு சில ஆயுதங்களும் வைத்துக்கொண்டு பயமுறுத்தி அங்கேயிருந்த பல ரிக்கார்டுகள், பணம், நகை சுமார் மூன்று லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை 'டே லைட் டெகாயிட்டி அண்ட் ராபரி' daylight dacoity and robery robbery ) என்ற அளவில் கொள்ளையடித்துக்கொண்டு போகக்கூடிய சம்பவம் நடந்திருக்கிறது. இதை மிகவும் தந்திரமாக அவர்கள் செய்திருக்கிறார்கள். 16 ஆண்டுகளுக்கு முன்னால் அவராலும் அவருடைய மருமகனாலும் புறக்கணிக்கப்பட்ட அவருடைய சொந்த மகள் ஒத்தியைக் கூடவே அழைத்து வந்து வீட்டுக்குள்ளே விட்டு, இதை ஒரு குடும்பத் தகராறு போன்று செய்து விடலாம் என்று செய்திருக்கிறார்கள். ஆனால் இப்படி நடக்கும், தன் உயிருக்கும் சொத்து உடைமைக்கும் ஆபத்து வரும், ஒரு கிரிமினல் கேஸ் சம்பந்தமாக 8 மாதம் செய்கோவில் தண்டித்திருக்கிறார்கள், அதற்காக தனக்கு ஏதேனும் கெடுதல் செய்ய அவர்கள் சதி நடவடிக்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தனக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று 20 நாட்களுக்கு முன்னால் அரசாங்கத்துக்கு, டி. எஸ். பி. க்கு, ஆளுநருக்கு, மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் தந்தி அடித்திருக்கிறார். தனக்குத் தகுந்த பந்தோபஸ்து கொடுக்க வேண்டும், அதற்கான கட்டணத்தைக்கூடச் செலுத்துகிறேன் என்று தெரிவித்திருக்கிறார். அப்படியிருந்தும் கூட, எந்த வித உதவியும் அவருக்கு கிடைக்கவில்லை. காரணம் அந்த விஷயத்திலே யார் யார் பேரில் சந்தேகப்பட்டார்களோ அதிலே ஒரு நபர் சந்தேகத்திற்கு இடமில்லாமல் வேரு ஊரில் இருந்தார் என்பதற்காக அவருக்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுக்காமல் விட்டு விட்டார்கள். அவர் கேட்ட பந்தோபஸ்து கொடுத்திருப்பார்களேயானால், அதற்கான செலவையும் அவர் கொடுத்திருப்பார். ஆனால், இப்பொழுது அவருடைய மருமகளுக்குக் கை முறிந்தது, மகனுக்கும் அடி, இவருக்கும் அடி, இத்தோடில்லாமல், 3 இலட்சம் பெருமானமான ரொக்கத்தையும், நகைகளையும், ரிக்கார்டுகளையும், டிகிரி ஒன்றையும் அந்தக் கொள்ளை அடித்தவர்கள் கொண்டு போயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளை இப்படியே விட்டுக் கொண்டிருக்கலாமா? தமிழ் நாட்டிலே இப்படி பட்டப் பகலிலே நடைபெறும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இதில் இந்த அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிகிறது. இந்தச் சம்பவம்பற்றிச் சம்பவம் நடந்த மாலையே எனக்கு டெலிபோன் மூலம் தகவல் கிடைத்தது. அப்பொழுது முகாமிட்டிருந்த எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் ஆ. மேலூரிலிருந்து எனக்கு இதுபற்றி டெலிபோன் செய்தார்கள். நான் உடனே ஐ.ஜி. அவர்களுடன் தொடர்பு கொண்டு, இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவரும் உடனே

[4th December 1971

[திரு. கே. ராஜாராம்]

'ஓயர்லெஸ் மெசேஜ்' மூலம் தகுந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, ஆவன செய்யச் சொல்லியிருப்பதாகவும், எனவே நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் நவம்பர் 25 ஆம் தேதி எனக்கு வாக்குறுதி அளித்தார்கள், ஆனால், இன்று வரை சிவலிங்கம் அவர்களின் மகனையும், அவருடைய மகளுடன் தொடர்பு கொண்டிருந்த ஒரு அந்நியரையும் பிடித்து வைத்திருக்கிறார்களே தவிர, அவருடைய பொருள்களைக் கொள்ளை அடித்தவர்களையும் அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களில் யாரையும் 'அரஸ்ட்' செய்யவில்லை, எந்தவிதமான ஒரு நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இது அரசாங்கத்திற்கு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டின் நிர்வாகத்திற்கும் பெரிதும் பாதகத்தை உண்டுபண்ணக் கூடிய ஒன்றாகும். ஆகையால் இது பற்றிய விவாதம் விரிவாக இந்த அவையிலே நடைபெற்றால் தான், அரசாங்கத்திற்கு இதிலே என்னென்ன காரியங்களை உடனே செய்ய வேண்டும் என்பது புரியும். எனவே, அதற்காக இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒரு குடும்பத்தையோ, ஒரு உயிரையோ பாதிக்கக் கூடிய விஷயம் மாத்திரமில்லை, மிகவும் அவசரமும், அவசியமும் கொண்ட விஷயமாகும் என்று சொல்லி, இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : Thiru Saw. Ganesan, M.L.C. has also given a similar notice which reads as follows :—

"இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா ஆ. தெற்கூரில் உள்ள திருவாளர் கருமுத்து சிவலிங்கம் இல்லத்தில் நவம்பர் இறுதி வாரத்தில் பயங்கர ஆயுதந்தாங்கி சுமார் நாற்பது ஐம்பது பேர் நுழைந்து திரு. சிவலிங்கத்தையும் அவர் குடும்பத்தினரையும் தாக்கி, வீட்டில் இருந்த லட்சக்கணக்கான ரூபாய், நகை, தஸ்தாவேஜிகளைப் பகற்கொள்ளையடித்துச் சென்றமை அப்பகுதியில் பெரும் பீதியை விளைவித்திருக்கிறது. அது பற்றித் தக்க நடவடிக்கை எடுத்துப் பொதுமக்களிடையில் உண்டாகியுள்ள பீதியை தணிக்க போலீஸ் துறையினர் தவறிவிட்டனர்".

Now I request the hon. Member to explain how it comes under the rules governing adjournment motions.

* திரு. சா. கணேசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சம்பவம் நடந்த இடத்தைப்பற்றியும், பாதிக்கப்பட்ட நபரைப் பற்றியும், இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றவர்களைப் பற்றியும் நான் நன்றாக அறிவேன். இந்தக் கொள்ளைக்குக் காரணமாக இருந்து, நேரிலே தாங்களே சென்று தலையிட்டு செயலில் ஈடுபட்டவர்க்கும், பாதிக்கப்பட்டவருக்கும் பன்னெடுங் காலமாக விரோதம் இருந்து வருகிறது. ஒரு நாள், 1½ நாள் முழுவதும் தந்திகள் கொடுத்தும், பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தகவல் கொடுத்தும், அங்கிருந்து எந்தவிதமான உதவியும், சம்பவம் நடந்த பிறகும், இவருக்குக் கிடைக்காமல் போனதை மிகத் தெளிவாகப் பலர் அறிவார்கள். அதற்கும் மேலே ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் வெளியே வரக் கூடாது என்று சொல்லி, வாள், ஈட்டி, கம்பு போன்ற பயங்கர ஆயுதங்களுடன்



4th December 1971]

[திரு. சா. கணேசன்]

நின்றுகொண்டு, ஊரிலே உள்ளவர்கள் யாரையும் கதவைக்கூட திறக்க வொட்டாமல் செய்து, கொள்ளையடித்துவிட்டு ஊருக்கு வெளியே நின்றிருந்த காரிலே ஏறிச்செல்லும் அளவுக்கு, ஊருக்குள்ளே எந்தவிதமான நடமாட்டமும் இல்லாமல் அச்சுறுத்திக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இதிலே போலீசார் இப்பொழுது ஓரளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது உண்மை என்று நான் அறிவேன். ஆனால், அதே நேரத்திலே பிரான் மலைப் பக்கத்திலேயுள்ள ஒரு குடிசையிலே இருந்த தமயந்தியையும், அவருடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் சுப்பிரமணிய சேர்வை என்ற ஒருவரையும் கைது செய்ததைத் தவிர, தாக்கப்பட்டவர் தாக்கியவர்களின் பெயரோடு, இனத்தோடு, ஊரையும் கொடுத்திருந்தும் கூட அவர்கள்மீது நேற்று வரை எந்தவித நடவடிக்கையும் எடுத்து கைது செய்துகொண்டு வந்ததாகத் தெரியவில்லை. ஒரு கால் அரசாங்கத்திற்கு இருக்கும் சௌகரியங்களின் காரணமாக வேறுவிதமான செய்திகள் கிடைத்திருக்கிறதோ என்னவோ, அது எனக்குத் தெரியாது. இந்த சம்பவத்திலே முழுக்க இந்த அரசாங்கம் செயல் புரியவில்லை என்பது மட்டுமில்லை, அந்தப் பகுதி முழுவதிலும் இருக்கின்ற மக்களிடம் ஒரு வித பீதி பரவியிருக்கிறது. அங்கிருக்கிற திரு. கருமுத்து தியாகராஜ செட்டியாரே கூட என்னிடம் நேரில் சொன்னார், "இப்படி இருக்கிறதே, இனி நாம் எல்லாம் எப்படி ஊருக்குள்ளே வாழமுடியும்? இங்கு எத்தனையோ தொழில்களிலே ஈடுபட்டிருக்கும் எல்லோரும் எப்படி பந்தோபஸ்தாக இருக்க முடியும்?" என்று அவர்து கவலையைத் தெரிவித்தார். இப்படிப்பட்ட நிலைமையிலே ஆட்சி இருக்கிறது என்றால், நான் இந்த ஆட்சி மீது குற்றம் சுமத்தவில்லை, குறை கூறுகிறேன். இத்தகைய நிலைமையிலே எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்காதிருந்த அதிகாரிகளைக் கண்டிக்கும் பொழுது, அதற்கு மேலே இதிலே சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களைக் கொடுத்திருந்தும் அவர்களை இதுவரை கைது செய்து நடவடிக்கை எடுக்காமலிருப்பது பயங்கரமானது மட்டுமில்லை, கொடுமையானதும் ஆகும். இதனால் இனி மற்றவர்களும் பீதியோடு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே இந்த அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்று புள்ளிவிவரங்களோடு, காரண காரிய விஷயங்களோடு இந்த சம்பவத்தைப்பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன். இன்னும் சொல்லப்போனால், சம்பவம் நடந்த உடனடியான சந்தர்ப்பத்திலே அங்கே போய் நேரிலே விவரம் தெரிந்து வந்தவர்கள் எல்லாம் இந்தச் சபையிலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கருத்துக் கேட்கலாம். அவர்கள் எல்லாம் நடந்தது என்ன என்று பிரதியட்சமாக அரசுக்கு எடுத்துச் சொல்லலாம். அதன் மூலமாக இந்த அரசு தனது கடமையைச் செய்வதற்கு மேலும் நல்ல வாய்ப்பும் வசதியும் ஏற்படும். இதிலே பல காரணங்களாலே சிலர் போற்றலாம், சிலர் தூற்றலாம். ஆனால், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அரசியல் கட்சிகளை மனதில் கொள்ளாமல், 'செயல்', அதன் விளைவு, அதனால் ஏற்பட்டிருக்கின்ற நிலை, அதன் மீது இந்த அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை இவைகளை 'அறம்' 'சட்டம்' என்ற ரீதியிலே அணுகி செயல்படுவதற்கு விவாதம் நடத்தி ஒரு தீர்வு கண்டால், நமக்கு உள்ளபடியே நம்பிக்கை பயப்பதாக இருக்கும்

[திரு. சா. கணேசன்]

என்று கருதுவதாலேதான், இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்கிறேன். இந்த வேண்டுதலை ஏற்று, இந்த சபையை ஒத்திவைக்க வேண்டுமென்றும் தலைவர் ஆணையிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : I want to know the viewpoint of the Government in the matter.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முகவை மாவட்டம் நெற்குப்பை காவல் சரகத்தைச் சேர்ந்த ஏ. தெக்கூர் கிராமத்தில் 25—11—1971 அன்று காலை 7-30 மணி அளவில் திரு. கருமுத்து சிவலிங்கம் செட்டியார் என்பவரது வீட்டிற்குள் ஆயுதம் தாங்கி 50-லிருந்து 60 பேர் அடங்கிய கூட்டத்தினர் நுழைந்து ரூ. 3 லட்சம் பெறுமான வெள்ளிச் சாமான்கள், அடமானப் பத்திரங்கள், ரூபாய் நோட்டுகள் முதலியவற்றைக் கொள்ளை அடித்துச் சென்று விட்டதாகப் புகார் ஒன்று நெற்குப்பை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. அது நெற்குப்பை காவல் நிலையத்தில் குற்ற எண் 124/71-ஆக இந்தியக் குற்றவியல் சட்டம் 147, 148, 395, 398 பிரிவுகளின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டு, உடனே புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு கொள்ளையடிக்க வந்த கூட்டத்தில் தன் மகள் தமயந்தி என்ற பெண்ணும் இருந்ததாகப் புகார் கொடுத்த சிவலிங்கம் செட்டியார் தமது புகாரில் கூறியிருந்தார். அந்தப் பெண்ணும், அவளுடன் கள்ள நட்புக் கொண்டுள்ள சுப்பிரமணியம் சேர்வை என்பவரும், இன்னும் பிறரும், அக்கூட்டத்தில் இருந்ததாகத் தெரிய வருகிறது. கணவனுடன் வாழாமல் இருக்கும் தமயந்தி, புகார் கொடுத்துள்ள தனது தகப்பனார் சிவலிங்கம் செட்டியார் வசமுள்ள சொத்தில் பாத்தியதை கோரியது சம்பந்தமாக இந்நிகழ்ச்சி நடை பெற்றிருக்கலாம் என்று விசாரணையில் தெரிய வருகிறது. மேற்கொன்ன தமயந்தியும், அவளுடன் கள்ளநட்பு கொண்டுள்ள சுப்பிரமணியம் சேர்வையும் 1—12—1971 அன்று இவ்வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், பணங்கள் முதலியன கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தலைமறைவாக இருக்கும் மற்ற எதிரிகளைத் தேடி போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேற்படி புகார் வந்த உடனேயே, அக்கிராமத்திற்கு ஆயுதப் பிரிவு காவற் படையினர் அனுப்பப்பட்டு, தக்க பாதுகாப்பு சிவலிங்கம் செட்டியாருக்கு அளிக்கப்பட்டது. தகவல் கிடைத்த உடனேயே, மாவட்டக் காவல்துறைத் துணை அதிகாரியும் (Deputy Superintendent of Police) வட்டாரக் காவல் துறை அதிகாரியும் (Inspector of Police) நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு விரைந்து சென்று ஆவன செய்தனர். 25—11—1971 இரவு மாவட்ட காவல்துறை அதிகாரியும் அங்கு சென்றார். புலனாய்வு தீவிரமாகவும், தாமதமின்றியும் நடைபெற்று வருகின்றது. இப்புலன் விசாரணைக்கென தனியாகக் காவல்துறை அதிகாரிகள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

25—11—1971, 26—11—1971 தேதிகளில் ஆயுதப்பிரிவு காவற்படையினர் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்தனர். இப்பொழுது தினமும் ஒரு காவலரும் மூன்று காவலர்களும் கிராமத்தில் காவற்பணி புரிகின்றனர். இப்பொழுது அக்கிராமத்திலும், சுற்றுப் புறத்திலும், அமைதி நிலவுகின்றது. மக்கள் எவ்வித பீதியும் இன்றியே இருக்கின்றனர்.

இக்குற்றம் சம்பந்தமாக போலீசார் புலனாய்வு செய்து கொண்டிருப்பதால், மேற்கொண்டு இவ்வழக்கு பற்றிய விவரங்களை வெளியிடுவது உகந்தது அன்று. சிவலிங்கம் செட்டியாருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கோ, பிற நடவடிக்கைகளை எடுப்பதற்கோ காவல் துறையினர் தவறிவிட்டனர் என்ற கூற்றுக்கு ஆதாரமே இல்லை. மாறாக, எவ்வளவு விரைவில் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அவ்வளவு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தகுந்த பாதுகாப்பும் சிவலிங்கம் செட்டியார் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. தாமதமின்றி புலன் விசாரணையும் நடைபெற்று வருகிறது.

DEPUTY CHAIRMAN : I have heard the views of both the hon. Member and the Government. Though the subject-matter sought to be raised by the hon. Members is a specific matter of recnt occurrence, it involves nothing more than the ordinary administration of law. Therefore, I withhold by consent to the raising of the matter.

(4) *Lathi-charge on students going to make representations to the Vice-Chancellor of the Madras University.*

DEPUTY CHAIRMAN : Next notice has been given by the hon. Member Thiru T. K. Subbiah. I request the hon. Member to read the notice and explain how it comes under the rules governing adjournment motions.

* **திரு. டி. கே. சுப்பையா :** 3—12—1971-இல் சென்னை நகரில் பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம் நமது கோரிக்கைகளைத் தெரிவிக்கச் சென்ற மாணவர்கள் போலீசார் பிரம்படிக்கும் தடியடிக்கும் ஆளாகி மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெறும் அளவிற்கு அவர்கள் துன்புறுத்தப்பட்ட நிலைமை பற்றி விவாதிக்க இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டுகிறேன்.

தலைவரவர்களே, பள்ளி மாணவர்கள் புதுப்புது கோரிக்கைகளை எல்லாம் ஏந்தியிருக்கிற நாட்களில் அவர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கிற சலுகைகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன என்ற நிலையில் துணை வேந்தரிடம் தெரிவிக்கச் சென்றிருந்த நேரத்தில், அவர்கள் தடியடிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தொடர்ந்து இம்மாநிலத்தில் மாணவர்கள் அடிதடிக்கு ஆளாவதும் அவர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்வதும் பெரும் பதட்ட நிலையை உண்டு பண்ணுகிறது. பெற்றோர்களும் இந்த நிலையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை விரிவாக ஆராய வேண்டியது அரசின் கடமையாகும். பொதுவாக மாணவர்கள் அடிபடுவது என்பது தவிர்க்க முடியாத நிலைமையாக தொடர்ந்து

[4th December 1971

[திரு. டி. கே. சுப்பையா]

வருகின்ற காரணத்தினால், இதைப் பரிசீலனை செய்ய இந்த சபையை ஒத்தி வைத்து பலருடைய கருத்துக்களை அறிய இதை வாய்ப்பாகக் கருதி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்கிறேன்.

DEPUTY CHAIRMAN: What is the view point of the Government in the matter?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்த ஒத்தி வைப்புப் பிரேரணையில் அவர் கூறியிருப்பது போல, நேற்று இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னையிலுள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒரு கோரிக்கையைத் துணை வேந்தரிடம் அளிக்க வேண்டுமென்று ஊர்வலமாகப் புறப்பட்டு வந்து கோரிக்கையை அளிக்க முயன்றனர். பல கல்லூரிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்றாகத் திரண்டு இந்தக் கோரிக்கையைக் கேட்க வந்தார்கள். சென்னையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஊர்வலம் மற்றவைகள் நடத்த வேண்டுமானால், முன் கூட்டி அனுமதி பெற வேண்டுமென்ற நிலை தான் இருக்கிறது. இருந்தாலும் மாணவர்கள் அனுமதி பெறாமல் வந்தாலும் அதிலே தகராறு, மற்றவைகள் ஏற்படக்கூடாது என்ற முறையில் அவர்கள் செல்லட்டும், தங்களுடைய கோரிக்கைகளைத் துணை வேந்தரிடம் தெரிவித்து விட்டுப் போகட்டும் என்று பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. போலீசார் சொன்ன வீதிகளிலெல்லாம் வராமல் வேறு வீதிகளில் தான் போவோம் என்று மாணவர்கள் சென்றபோது, தகராறு வரவேண்டாம் என்று அவர்கள் சொல்கிற படி செல்லட்டும் என்று மாணவர்களை அந்த வீதிகளிலும் அனுமதித்தார்கள். சில கல்லூரிகள் வேலை செய்தன. சில கல்லூரிகள் வேலை நிறுத்தம் செய்தன. மாநிலக் கல்லூரியில் வேலை நடைபெற்றது. அங்கே ஒரு சில மாணவர்கள் அந்த மாணவர்களையும் தங்களுடன் இழுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் உள்ளே புகுந்தார்கள். அப்போது அவர்களைத் தடுத்து நிறுத்தவேண்டிய அவசியம் காவல் துறையினருக்கு ஏற்பட்டது. மாணவர்கள் உள்ளே புகுந்து உள்ளே இருப்பவர்களை வெளியே வரச் சொல்லி அதனால் தகராறுகள், கிளர்ச்சிகள் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படக் கூடாது, வேண்டுமானால் 5 மாணவர்கள் உள்ளே சென்று அவர்களோடு பேசி வெளியே அழைத்துக் கொண்டு வரட்டும், அத்தனை பேரையும் உள்ளே அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லி 5 பேர்கள் உள்ளே போயிருக்கிறார்கள். சில மாணவர்கள் வெளியே வந்தார்கள். பலபேர் வரவில்லை. அந்த நிலைமையில் மாணவர்கள் பெரு முழக்கமிட்டு பல்கலைக் கழகத் துணை வேந்தரைப் பார்க்க வேண்டுமென்றார்கள். குறிப்பிட்டவர்கள் பார்க்கட்டும் என்று சொல்லி, காவல் துறையினர் 5, 6 பேர் சென்று பார்த்தால் போதும் என்று சொன்னார்கள். மாணவர்கள் 15, 20 பேர் போக வேண்டும் என்றார்கள். அப்படியே அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி, பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி மறுபடி இருக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அண்மையில் சென்னைப் பல்கலைக்கழக செனட் சிண்டிகேட் முடிவுப்படி இப்போது முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, பட்டமளிப்பு விழாவைப் பொறுத்தவரை, பல்கலைக் கழகங்களெல்லாம் முடிவு செய்தவகையில் பல பல்கலைக் கழகங்கள் பட்டமளிப்பு விழாவை நிறுத்தி விட்டிருக்கின்றன. அதனால் அதிகமான பலன்கள் ஏற்படாது என்ற



4th December 1971]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

காரணத்தினால், அந்தக் கல்லூரிகள் மூலமாகப் பாடங்களைப் பெறுகிற சூழ்நிலை நல்லது என்று கருதப்பட்டது. ஒரு காலத்தில் வைஸ்சேன்ஸலர் கையாலே அந்தப் பட்டங்களை வழங்குகிற நிலையில் எண்ணிக்கை இருந்தது. இப்போது எண்ணிக்கை மிகுந்துவிட்டதின் காரணத்தினால் நான்கு நாட்கள் பட்டமளிப்பு விழா நடத்த வேண்டியிருக்கிறது. பட்டங்களை தருபவர்கள் அந்த பல்கலைக்கழக அலுவலர்கள்தான். அவர்கள் கையால் பட்டம் கொடுக்கப் பட்டு நான்கு நாட்கள் நடைபெறுகின்றன. இது ஏதோ சடங்கு மாதிரி நடக்கிறது. வருகிறவர்களுக்கு வேறு உற்சாகமும் மற்றவைகளும் இல்லாத காரணத்தால் பல பல்கலைக் கழகங்கள் எடுத்த முடிவுப்படி இங்கே சென்னைப் பல்கலைக்கழக செனெட், சிண்டிகேட் இந்த பட்டமளிப்பு விழா சரிபடாது என்ற முறையில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இப்போது மறுபடியும் பட்டமளிப்பு விழா இருக்க வேண்டுமென்று மாணவர்கள் கூறினார்கள். பல்கலைக் கழகத் துணைவேந்தரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். சிண்டிகேட், செனெட் முடிவு செய்திருக்கிற காரணத்தினால், பட்டமளிப்பு விழா வேண்டுமென்று அவர்களிடத்தில் சொல்லுங்கள், அவர்கள் முடிவைத் தெரிந்து நான் முடிவு எடுக்கிறேன் என்று துணை வேந்தர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதற்குள்ளாக வெளியே மாணவர்கள் முழக்கங்கள் செய்து, உள்ளே சென்ற மாணவர்கள் வெளியே வருவதற்கு முன் கிளர்ச்சி ஏற்பட்டது. ஒரு பகுதியில் ஏற்பட்டது. எல்லா மாணவர்களும் என்று சொல்ல மாட்டேன். விளக்குகளை உடைக்க ஆரம்பித்தார்கள், ஜன்னல்களை உடைக்க ஆரம்பித்தார்கள். வன்முறையில் இறங்க ஆரம்பித்தார்கள். அண்ணா அவர்களுடைய கல்லறைப் பகுதியில் உள்ள எல்லா விளக்குகளையும், ஒளி விளக்குகளையெல்லாம், டூம் விளக்குகளையெல்லாம் உடைக்கிற நிலைமை ஏற்பட்டது. போலீசார் அவர்களை சமாளிக்கவேண்டிய, தள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அங்கே ரோடு போடுவதற்காக கற்களைப் பரப்பியிருக்கிறார்கள், பொதுப் பணித்துறையினர். அதுவும் வாய்ப்பாக இருந்த காரணத்தினால், ஒரு இடத்தில் குவிந்திருந்தது, ரோடு முழுவதும் பரவுகிற சூழ்நிலை ஏற்பட்டது. உள்ளே இருந்த மாணவர்களிடம் பல்கலைக் கழகத் துணை வேந்தர் இந்த அளவிற்கு வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அவர்களை விட்டு போலீஸ் வானிலிருந்து சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான படங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. மாணவர்கள் போலீஸ் வானில் ஏறி நின்று ஒலி பெருக்கி மூலமாக "வைஸ்-சென்சலர் சொல்லியிருக்கிறார் கலைந்து போங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். வன்முறையைச் சிலர் கையாண்டதன் காரணமாக போலீசார் பிரம்படி தந்தாவது கலைக்க வேண்டுமென்று பிரம்படி கொடுத்திருக்கிறார்கள். பிறகு மாணவர்கள் மாநிலக் கல்லூரிக்குள் புகுந்து அங்கேயுள்ள மாணவர்களோடு கைகலப்பு ஏற்பட்டது. கலந்துகொண்ட மாணவர்களுக்கும் கலக்காத மாணவர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. பெரும் கூட்டம் கூடி விட்டபடியால் (டீர் காஸ்) கண்ணீர்ப் புகை போட்டு அவர்களைக் கலைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படிக் கலைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக, இரு சாராருக்கும் காயங்கள் ஏற்பட்டு, 9 மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். இதைப் போன்று டெபுடி கமிஷ

*1971 டிசம்பர் 4]*

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

*வருக்குக் காயம் ஏற்பட்டு அவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். 10 போலீஸ் அதிகாரிகளுக்குக் காயம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல், மாணவர்கள் திட்டமிட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. எல்லா மாணவர்களுக்கும் அந்த எண்ணம் இராவிட்டாலும், அந்த எண்ணத்தோடு கூடிய மாணவர்கள் செய்திருக்கிறார்கள் என்பது தான் உண்மை. எல்லா விளக்குகளும் உடைக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக கல் வீச்சல்களில் எங்கேயாவது ஒரு விளக்கு உடைபடும், கம்பத்தில் குறிவைத்து அடித்தாலொழிய எல்லா விளக்குகளும் உடையாது. திட்டமிட்டு குறி வைத்து அடிக்கிற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த வகையில் பெரிய பாறாங்கற்கள் அண்ணா சமாதி அருகில் கிடந்திருக்கின்றன. ஆகவே தான் கூடுமான வரையில் மாச்சரியம் ஏற்படாத அளவிற்கு அமைதியான முறையில் கலைக்கிற முயற்சியை, காவல் துறையினர் இயன்ற அளவிற்கு எடுத்துக்கொண்டு, முடியாத நிலைமையில் டீர் காஸ் போட்டு கலைத்திருக்கிறார்கள். அப்படித் தடுக்காமல் இருந்திருந்தால், இந்த அளவிற்கு முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால், விபரீத விளைவுகள் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். எதிர்பாராத விதத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. இவை விரும்புவதற்குரிய நிகழ்ச்சிகள் இல்லைதான் இப்படிப்பட்ட சூழ்நிலையை மாணவர்கள் ஈடுபடுகிற சூழ்நிலையும் இந்த நிலைமைகள் ஏற்படுவதும் மகிழ்ச்சியடைவதற்குரியன அல்ல. எங்கு பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மற்ற மாநிலங்களிலே ஏற்பட்டிருக்கின்றன. அதனால் தமிழகத்தில் ஏற்பட வேண்டுமென்று சொல்லவில்லை. வேறு பல இடங்களில் பல்கலைக் கழகங்கள் இப்படிப்பட்ட முடிவினை எடுத்திருக்கின்றன. மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்களைத் தனித் தனியாகப் பார்த்தால், நல்லவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒன்று*
5.10 p.m. *சேருகிற நிலைமையில் அசாத்தியமான தைரியம் ஏற்பட்டு சிலபல நிலைமைகள் ஏற்பட்டு, விடுகின்றன. கூடுமான வரையில் பாதகம் ஏற்படாத அளவிற்கு, காவல் துறையினர் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைச் சமாளிக்க இந்த முயற்சி எடுக்கப்பட்டதே தவிர வேறு அல்ல. இப்படி ஒரு அமைதியான சூழ்நிலையும் மற்ற நிலைமைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லா அரசியல் கட்சிகளும் பொது மக்களும் சேர்ந்து பாடுபட்டு முடிவுகளைக் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். இதில் தொடர்ந்து அரசு ஈடுபடும் என்று கூறி, இதை விவாதிப்பதன் மூலம் பலன் ஏற்படாது என்ற காரணத்தினால், ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.*

DEPUTY CHAIRMAN : Now I have heard both sides. Though the subject-matter of the motion is a specific matter of recent occurrence, the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law. Therefore, I withhold my consent to the raising of the matter.

THIRU A. R. DAMODARAN : I have a submission to make. In view of the fact that the Hon. Minister has photographic evidence, I request that these photos may be placed on the table of the House, Sir.



4th December 1971]

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

THIRU G. VASANTHA PAI : Sir, I second it.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது காவல்த் துறை அதிகாரி எடுத்த படங்கள். அவர்களுடைய ரெஃபரென்ஸ்களுக்காக வைக்கப்பட்டிருப்பதைக் குறிப்புக்காகச் சொன்னேன். பார்க்க வேண்டும் என்றால் பார்க்கலாம். அதுபற்றி ஒன்றும் ஆட்சேபனையில்லை.*

VI. *Statment under Rule 82 re Method of Election of Members to the Standing Committees under the Corporation of Madras.*

DEPUTY CHAIRMAN : Under rule 82 of the Tamil Nadu Legislative Council Rules, I have permitted the Hon. the Minister for Education and Local Administration to make a statement on the method of election of Members to the Standing Committees under the Corporation of Madras and he will now make the statement.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியை ஆறுநிலைக் குழுக்களின் மூலம் நிர்வகிப்பதற்காக 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது. ஒவ்வொரு நிலைக் குழுவிலும் 11 உறுப்பினர்கள் இருப்பர். மாநகராட்சி உறுப்பினர்களிலிருந்து பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் இந்த நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இத் திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டது. இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோது, விகிதாச்சார பிரிதிநிதித்துவ முறையைப் பின்பற்றுவது உகந்ததாக இருக்கும் என உறுப்பினர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மை வாக்களிப்புமூலம் தேர்ந்தெடுக்கும் முறை குறித்த விதித்துறைகளை நீக்க அதிகார பூர்வமான திருத்தம் கொடுக்கப்பட்டது. அரசு வரையறுக்கக் கூடிய முறையில் தேர்தல் நடத்துவதற்கு வகை செய்யப்பட்டது. நிலைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை இயற்றும்போது ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.*

*இதற்கிணங்க, ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரிதிநிதித்துவ முறைக்கு வகைசெய்யக்கூடிய வரைவு விதிகள இயற்றப்பட்டு வெளியிடப்பட்டன. 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் 348 (ஏ) பிரிவிலுள்ள விதித்துறையின்கீழ் இதுகுறித்து சென்னை மாநகராட்சியில் கருத்துக் கேட்கப்பட்டன. மாநகராட்சி மன்றம் 11—10—1971 நாளிட்ட 709/71-ஆம் எண் தீர்மானத்தில், விகிதாச்சர்ர பிரிதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பெரும்பான்மை வாக்களிப்பு முறையைப் பின்பற்றவேண்டுமென அரசிடம் வேண்டு கோள் விடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. விவாதங்களின் அடிப்படையிலும் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையிலும் இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. பெரும்பான்மை வாக்குமூலம் தேர்ந்தெடுக்கும் முறை, 1961-ஆம் ஆண்டிற்கு முன்பு செய்யப்பட ஆரம்பித்து சென்னை மாநகராட்சி நிலைக்குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பின்பற்றப்பட்டது. பெரும்பான்மை வாக்களிப்பு முறை, எல்லா நகராட்சிகளாலும் மதுரை மாநகராட்சி*

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

யாலும் பின்பற்றப்படுகிறது. எனவே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்த மட்டிலும் இந்த முறையிலிருந்து மாறுபட்ட ஒரு முறை பின்பற்றப் படுவதைச் சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்கவில்லை. பொது நிர்வாகத்திற்காகவும், நிலைக் குழுக்கள் செவ்வையாகச் செயல்படவகை செய்வதற்காகவும் மாநகராட்சி நிர்வாகத்தின் பொறுப்பேற்று நடத்தும் சென்னை மாநகராட்சி மன்றம் போன்ற முக்கியமான நிறுவனத்தின் கருத்துக்களைப் புறக்கணிக்க இயலாதென அரசு முடிவுசெய்தது.

எனவே, பெரும்பான்மை முறையைப் பின்பற்றலாம் என்று மாநகராட்சி மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டு உள்ளதென் பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 348-வது பிரிவின்கீழ் இந்த விதி சட்ட மன்றத்தின் முன்பு விரைவில் வைக்கப்படும். இந்த விதித் துறைகளின்கீழ், அந்த விதிகள் மாற்றியமைக்கப் படவேண்டுமென்று இரண்டு அவைகளும் ஒப்புக்கொண்டால், இரண்டு அவைகளாலும் ஒப்புக் கொண்டபடி திருத்தியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே அவ்விதிகள் செயலுக்கு வரும்.

எனவே, இதை நான் அவையின் நாட்டத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THIRU K. RAJARAM : I would like to have a discussion on the motion moved now. பின்னாலே "டேட்" அதற்காக ஒதுக்கியிருக்கிறீர்களா

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் கொடுத்த தன்மைக்கு இப்பொழுது திருத்தம் செய்யவேண்டிய நிலைமை வந்திருக்கிற காரணத்தால், மீண்டும் இரு அவைகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையிலேதான் இந்த அறிக்கையை நான் வைத்திருக் கிறேன். இதற்கான விதிமுறைகள் நாளை மறுநாள் வந்துவிடும். இரண்டை யும் சேர்த்து ஒரு நாள் ஒதுக்கி விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## VII. *Calling Attention to uncarthing of packet in converting black money into white through the and of State raffles.*

DEPUTY CHAIRMAN : Thiru M. Arumugaswamy will now call the attention of the Hon. the Minister for Public Health on behalf of Thiru G. Swaminathan.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"மாநில அரசுப் பரிசுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி 'கறுப்புப் பணத்தை' 'வெள்ளைப்பணமாக' மாற்றும் மோசடி ஒன்றை அண்மையில் கண்டு பிடித்தது குறித்து".





மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை யில் வெளிவந்த செய்தியைத் தவிர, மாநில அரசுப் பரிசுச் சீட்டுகளைப் பயன் படுத்தி கறுப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றும் மோசடி ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அரசுக்குத் தனியாகத் தகவல் எதுவும் இல்லை. முதலாவது இரண்டாவது பரிசு பெறுபவர்கள் குறித்து தகவல்களைச் சேகரிக்க வருமான வரி அதிகாரிகள் மாநிலப் பரிசுச்சீட்டுத் துறைக்கு அவ்வப் பொழுது கேட்க வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான எல்லாத் தகவல் களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பரிசுச் சீட்டை வைத்திருப்பவர் தமிழ்நாடு பரிசுச்சீட்டுச் சட்டத்தின் 36-ஏ விதிகளின் கீழ் பரிசுத் தொகை யைப் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆவார். பரிசுக்குரிய தொகையை பரிசுச் சீட்டை வைத்திருப்பவர் கேட்க வரும்போது அதை மறுக்க இந்தத் துறை யினருக்கு எவ்வித உரிமையுமில்லை.

## VIIIN GOVERNMENT MOTION.

### *Suspension of rule 23 (1) of the Council Rules (Transaction of Government Business on a non-official day).*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"தமிழ் நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1) வது விதி நீக்கி வைக்கப் பட்டு, இந்த அவை 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ஆம் நாள் சனிக் கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

DEPUTY CHAIRMAN : The question is—

"That rule 23 (1) of the Tamil Nadu Legislative Council Rules be suspended and this House do resolve to transact Government Business on Saturday, the 4th December 1971."

The motion was put and carried.

## IX. THE TAMIL NADU ELECTRICITY BOARD BUDGET FOR 1971-72.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம்மன்றத் தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக் கையும் சட்ட மன்றத்தினுல் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப் புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத் தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்

[4th December 1971

[திரு. ஓ. பி. ராமன்]

பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். டி. ஆதித்தன் :** தலைவர் அவர்களே, மின்துறை அமைச்சர்
5-20 p.m. அவர்களுடைய உரையிலே இந்த வருஷத்திலே மிக முக்கியமான ஒரு விஷயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது காடம்பாறைத் திட்டம் என்று சொல்லப் படுகிறது.

இந்தக் காடம்பாறைத் திட்டம் இந்த நாட்டிற்கே ஒரு புதுமையான திட்டமாகத் தோன்றுகிறது. தமிழகத்திலே இந்தத் திட்டம் புதுமையானதுடன் இப்பொழுதுதான் முதல் முதலாக நிறைவேற்றவிருக்கும் திட்டம் ஆகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையிலே, பொதுவாக மின்சார பளு 'லோட்' எடுத்துக்கொள்வது பகலிலே அதிகமாகவும் இரவிலே குறைவாகவும் இருக்கிறது. இரவு நேர மின்சுமை அதிகப் படுவதன் மூலம் இந்தக் குறைபாடுகளைப் போக்க முடியும். இரவு நேரத்திலே உபரியாக கிடைக்கக்கூடிய மின் சக்தியைக் கொண்டு தண்ணீரை மின் ஏற்றத்தின் மூலம் மிக உயரம் அனுப்பி அந்த இடத்திலே வைத்துக்கொண்டு .அதற்குப் பின்னாலே அந்தத் தண்ணீரைப் பழையபடி கீழே வருகின்ற வேகத்திலே மின் சக்தியாக உற்பத்தி செய்துகொள்வது, இந்தத்திட்டம் அதாவது, வழக்கமாக ஒரே அமைப்பாக தண்ணீர் விழுகிறது, அருவியிலே. ஆனால், நமக்கு சில நேரத்திலே அதிகமாக மின்சக்தி வேண்டியிருக்கிறது, சில நேரத்திலே குறைவாக வேண்டியிருக்கிறது. மின்சாரத்திற்கு வேண்டிய பளுவானது எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அல்லது எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகிறதோ அதற்குத் தகுந்தபடி தேவைகள் மாறுவதில்லை. ஒரே அளவாக அருவியிலே விழுகின்ற தண்ணீர் இருப்பதாலே, ஒரு குறிப்பிட்ட நேரத்திலே உற்பத்தியாகிற மின் சாரம் பயனற்று வீணாகிப் போகின்ற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதற்காக புதியதொரு திட்டம் ஏற்படுத்தப்படுகிறது. அதுதான் காடம் பாறைத் திட்டம்.

அநேகமாக தொழிற்சாலைகளிலே பழக்கம் உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கும். சில நேரத்திலே அதிகமாக எண்ணெய் ஓட்டமோ அல்லது அதிகமாக நீர் ஓட்டமோ ஏற்படுகிறபோது அவைகளை "பைபாஸ்" செய்து சேமித்து வைத்துக்கொண்டு திரும்பவும் உபயோகிக்கும் பழக்கம் தொழிற்சாலைகளிலே உண்டு.

அந்த வழக்கத்தை மின்சக்தியில் இந்தவிதமாக உபயோகப்படுத்துவது தென்னகத்தில் முதல் தடவை என்று சொல்லப்பட்டிருக்கிறது புதிதாகத்தான் இருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஏற்கனவே நீலகிரியில் இருக்கிறது.



4th December 1971]

**திரு. எஸ். டி. ஆதித்தன் :** நன்றி. எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் புதிதாகவே இருக்கிறது. இந்தத் திட்டத்தை முன்னுக்குக் கொண்டு வருவது நன்மை பயக்கக்கூடிய காரியமாகும். முக்கியமாக தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தெரியும் சில நேரங்களில் அதிக லோட் ஏற்பதில்லை. பெரிய ஊர்களில் இருக்கிற சிறு தொழிற்சாலைகளில் சாயங்காலம், கருக்கல் நேரத்தில் 1 அல்லது 2 மணி நேரத்திற்கு அநேகர் தங்களுடைய இயந்திரங்களை ஓட்ட முடிவதில்லை. அப்படி இப்போது இருக்கிறது. திருநெல்வேலியை எடுத்துக் கொண்டால் கருக்கல், சாயங்கால நேரத்தில் சிறு தொழில் இயந்திரங்களை ஓட்ட முடியாத தன்மை இருக்கிறது. அந்த நேரத்தில் பல இடங்களில் விளக்குகளுக்கு கரண்ட் உபயோகப்படுத்துகிற நிலைமை இருப்பதால், அந்த நேரத்தில் சாதாரணமாக ஓர்க்ஷாப்பிலோ மற்ற இடங்களிலோ வேலை செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதாவது வோல்ட்டேஜ் குறைந்துவிடுகிறது. அத்தோடு 6 மணி முதல் 8 மணி வரை அடியோடு எலக்டிரிசிடி "பெயிலியர்" ஆகிவிடுகிறது. அவ்வாறு விடுபடுகிற தன்மை இதன் மூலமாகக் குறையும் என்றால், இது முக்கியமாகப் பொது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்; தொழில்கள் செய்பவர்களுக்கும், முக்கியமாக சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும் என்று சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, 1969-70 தமிழ்நாடு எலக்டிரிசிட்டி 13-வது அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டில் 3-வது பக்கத்தில் இன்னொரு மகிழ்ச்சிக்குரிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

So far, 339 towns and 16,462 villages, that is, 71 per cent and 25,566 hamlets, 66.6 per cent, have been electrified in Tamil Nadu and Tamil Nadu continues to lead the whole of India in the field of rural electrification.

இந்த விதமாக 339 பட்டணங்களிலும் 16,462 கிராமங்களிலும் 25,566 சின்ன ஊர்களிலும் மின்சக்தி கொடுத்திருப்பதால், தமிழ்நாடு இன்றையதினம் இந்திய உபகண்டத்திலே கிராம மின்சார விநியோகத்தில் முதலாவதாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது 1969-70-ம் ஆண்டு அறிக்கையானாலும் கூட, அதற்குப் பின்பும் அதே போன்று தமிழ்நாடானது மற்ற எல்லா மாநிலங்களையும் விட கிராம மின்சக்தி விநியோகத்தில் முதலாவதாக இருக்கிறது, முன் அணியில் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. 1969-70 ஆண்டு அறிக்கையைப் போலவே 1970-71, 1971-72 அறிக்கைகளிலும் அதேமாதிரி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய நிலையில் இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒவ்வொரு வருஷமும் கணக்குகளைப் பார்க்கும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டதற்குப் பிறகு, அதற்கு முன்னால் மின்சார விநியோகத்தில் தமிழ்நாடு எவ்வளவு வேகமாக முன்னேறி வந்ததோ அதைப் போல் பன்மடங்கு விரிவாக. விரைவாக கிராம மின்சக்தி விநியோகத்தில் முன்னேறி வந்திருக்கிறது என்பதற்கு அடையாளமாகப் பலவிதமான புள்ளி விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வருஷத்தில் பல வட்டங்களில்

[திரு. எஸ். டி. ஆதித்தன்]

மின்சக்தி விநியோகம் முழுமை பெற்றதைக் கொண்டாடிக் கொண்டு வருகிறோம். பல ஜில்லாக்களில் கொண்டாடி வருகிறோம். பல பஞ்சாயத்து யூனியன்களில் கொண்டாடுகிறோம். பல தாலுக்காக்களில் கொண்டாடி வருகிறோம். 4, 5 மாவட்டங்களில் முழுமை நிறைவேறும் தருவாயில் இருக்கிறது. இன்னும் அடுத்த ஆண்டில் 4, 5 மாவட்டங்களில் நிறைவேறும். கடைசியாக ஒரு 4, 5 மாவட்டங்கள் 1972-ல் முற்றுப் பெறும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கலைஞர் முதல்வர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல், வாக்கு கொடுத்திருப்பதுபோல், 1972-ம் ஆண்டுக்குள் தமிழ்நாடு மாநிலம் முழுவதுமே எல்லா இடங்களுக்கும் ஒன்று தவறாதபடி மின்சக்தி விநியோகம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார். இது மிகவும் முற்போக்கான திட்டம். மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருக்கிறது.

மின்சார வாரியத்தில் இப்போது கிட்டத்தட்ட 84 ஆயிரம் பேர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 2, 3 வருஷங்களுக்கு முன்பு குறைவாக இருந்தது. இப்போது இந்த வருஷக் கணக்கில் அமைச்சர் அவர்களுடைய உரையில் 84 ஆயிரம் பேர்கள் வரையில் வேலை செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அத்தனை பேருக்கும் சமீபத்தில் முதல்வர் அவர்கள் சம்பள உயர்வு கொடுத்தும் அவர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சி பெற்றிருப்பதும் இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டிய விஷயமாகும். அது மட்டுமல்ல. 240 நாட்கள், அதாவது 8 மாதம் வேலை செய்து கொண்டிருந்தாலும், இன்னும் சிலர் 1, 2 வருஷமாக வேலை செய்து கொண்டிருந்தாலும், அவர்களைக் காஷுவல் லிஸ்டிலும், டெம்பரரி லிஸ்டிலும் வைத்திருந்தார்கள். நம்முடைய அரசானது அவர்களுக்கும் சாசுவத நிலைமை, நிரந்தர நிலைமை, கொடுக்கும்படி செய்துள்ளது. அதுவும் புரட்சிகரமான ஒரு மாறுதலாகும்.

சாதாரணமாக, தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தெரியும், எத்தனையோ மில்களில் வேலையாள் வழக்கமாக 240 நாட்கள் வேலை செய்வது மட்டுமல்ல, 10 வருஷமாக வேலை செய்துகொண்டிருப்பான். அவனுடைய பெயர் காஷுவல் லிஸ்டில் தான் இருக்கும். அதுவும் எப்படி இருக்கும் என்றால், ஒரு வருஷம் சிவசுப்ரமணியன் என்று இருக்கும். 240 நாட்கள் ஆகிவிட்டால், அவன் சட்டப்படி உரிமைகள் பெற தகுதி உடையவனாகிறான். ஆகவே, 239 நாட்கள் கழிந்தவுடன் சிவசுப்ரமணியன் என்ற பெயர் மாறி, சுப்பிரமணியன் என்று வேலை செய்வான். அதற்கு மறு ஆண்டில் சிவன் என்ற பெயரால் வேலை செய்வான். அதற்கு மறு ஆண்டில் சிவசுப்ரமணியன் என்ற பெயரில் வேலை ஆரம்பிப்பான். இந்த முறை தொழிற்சாலைகளில் ஒரு சாதாரணப் பழக்கமாகிவிட்டது. இங்கு மட்டுமல்ல. இது போன்று அஹமதாபாத்தில் பார்க்கிறோம், பம்பாயில் பார்க்கிறோம். நாடு முழுவதும் பெயர் மாற்றம் பார்க்கிறோம். ஒருநாள் ஒரு பெயரிலோடு இருப்பவன் மறுநாள் அந்தப் பெயரோடு இருக்கிறானோ இல்லையோ என்பது சந்தேகமாக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலை மின்சார வாரியத்தில் சமீப காலம் வரை இருந்ததை நம் அரசு மாற்றி அவர்களுக்கு சாசுவத நிலைமை, நிரந்தர நிலைமை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரியது என்று பல இடங்களில் பல மின்சாரத் தொழிலாளர்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள்.



[திரு. எஸ். டி. ஆதித்தன்]

இன்னொன்று போனஸ் விஷயம். ஒரு தொழிலில் சம்பந்தப்பட்ட நான் வெகு விசேஷமாகச் சொல்லக்கூடியது இல்லை. ஏனென்றால் இருதரப்பிலும் பல அபிப்பிராயங்கள் உண்டு. இதுவரையிலும் குறைந்தபட்ச போனஸ் 4% என்று இருந்தது. மத்திய சர்க்கார் அமைச்சர்களில் ஒருவரான திரு. காடில்கார் என்ன செய்திருக்கிறார் என்றால், 8-1/3, அதாவது ஒரு மாதச் சம்பளம், போனஸாக கொடுக்க வேண்டும், நவம்பர் மாதம் 11-ந் தேதிக்குள் கொடுக்க வேண்டும், அப்போது தான் தீபாவளிக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்றும், சட்டபூர்வமாக இல்லாவிட்டாலும் ஒரு அறிக்கையின் மூலம், வெளியிட்டு, தொழிலதிபர்கள் அத்தனை பேரும் கூடுமான வரையில் காப்பாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இது மிகவும் ஆச்சரியத்திற்குரிய விஷயம். அமைச்சர் அவர்கள் சட்டபூர்வமாகக் கொண்டு வந்திருந்தால், அத்தனை பேரும் கடைப்பிடித்திருப்பார்கள். அவர் என்ன சொன்னார் என்றால் கிட்டத்தட்ட அதுமாதிரி ஒரு ஒப்பந்தம் வந்துவிட்டது, முக்கூட்டில் அரசு, தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு கூட்டத்தில் முடிவாகியிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முடிவு அப்படி எடுக்கப்படவில்லையென்று தொழிலதிபர்கள் ஒரு அறிக்கை விட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு சிக்கலான சூழ்நிலையில் 84 ஆயிரம் பேர்களை வேலைக்கு வைத்திருக்கும் மின் வாரியம் நம்முடைய அரசு ஆணையின் பேரில் அந்த ஏற்பாட்டை இயன்றவரை அனுசரித்து உடனேயே ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இன்னும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில், பல இடங்களில் எவ்வளவோ ஆட்சேபணைகள் இருக்கின்றன. அதே போன்று தொழிலதிபர்கள் சம்பந்தப்பட்டவரை, பல இடங்களில் ஆட்சேபணை இருக்கிறது. அமைச்சர் திரு. ஆர். காதில்கர் சொன்னதை அமுல் செய்தவர்கள் அதிகமில்லை. அதை அமுலுக்குக் கொண்டு வந்த பெருமை நம்முடைய மின்வாரியத்தையும் மின்துறை அமைச்சர் அவர்களையும் சாரும். தமிழ்நாடு அமைச்சரவை முன்மாதிரியாக நடந்து வருகிறது என்ற பெருமை நம்மைச் சேர்ந்திருக்கிறது.

என் சம்பந்தப்பட்டவரையில், இன்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். "இண்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்" பிரகாரம், அதாவது தொழிற் 5-30 p.m.
தகராறுச் சட்டத்தின் பிரகாரம், தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியா பூராவுமாக எத்தனையோ தொழிற் தகராறுகள் ஏற்பட்டு கோர்ட்டுக்குப் போகின்றன. கணக்குப் பார்த்தால், கோர்ட்டுக்குப் போகிற அல்லது மத்தயஸ்தத்துக்குப் போகிற நிலைமையில் உள்ள சச்சரவுகள், தகராறுகள் குறைந்த பட்சம் 100-க்கு 75-க்குமேல் 85 வரை போனஸ் சம்பந்தமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்ராயம். போனஸ் சம்பந்தமாக, சமாதானம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக தொழிற் கூடங்களில் சண்டைகளும் சச்சரவுகளும் அதிகப்படுகின்றன. எங்கு பார்த்தாலும், ஸ்டிரைக் அதிகமாகிறது. "லாக்அவுட்" அதிகப்படுகிறது. ஆகவே, இந்த போனஸ் விஷயம் சண்டைகள் இல்லாமல் தீர வேண்டுமானால், கட்டாயமாக இவ்வளவு போனஸ் கொடுத்து விடு என்று சட்டமியற்ற வேண்டுமே தவிர, சட்டம் இயற்றிய பின்னாலும் இவ்வளவு லாபம் வந்தது, ஆகவே இவ்வளவு சதவீதம் 40 சதவீதம் 60 சதவீதம் கொடு என்று சண்டையிடுவதற்கு வழியே இருக்கக் கூடாது.

4th December 1971]

[திரு. எஸ். டி. ஆதித்தன்]

அதாவது, போனஸ் சம்பந்தப்பட்ட மட்டில் கணக்குப் பார்க்க இடம் கொடுப்பது நல்லதல்ல; அது தொழிற் கூடங்களுக்கும் நல்லதல்ல. அதனாலே தொழிலிலே முட்டுக்கட்டை தான் ஏற்படுமே தவிர, தொழிற் தகராறுகளிலே சமாதானம் ஏற்பட வழியில்லை. 8¼ சதவீதம் போனஸ் கொடுப்பதாக இருந்தாலும், கொடுத்துவிடலாம்; 12 சதவீதம் போனஸ் கொடுப்பதாக இருந்தாலும், கொடுத்துவிடலாம்; அல்லது 25 சதவீதம் போனஸ் கொடுப்பதாக இருந்தாலும், கொடுத்துவிடலாம். ஆனால் "8¼ சதவீதம் போனஸ் கொடுத்துவிட்டு, அதற்குப் பின்னாலே கணக்குப் பார்த்து போனஸ் இவ்வளவு கொடுக்க வேண்டும்" என்று திரும்பவும் தொழிலாளர்கள் சண்டைக்கு வருகிற நிலைமை இருக்கிறதே, அது நல்லதல்ல. ஆகவே, இந்தத் தொழிற் சட்டம் அதற்குத் தகுந்த வகையிலே திட்டவட்டமாக திருத்தம் செய்யப்பட வேண்டும். அதாவது கட்டாயம் போனஸ் இவ்வளவுதான் கொடுக்க வேண்டும், அதற்குக் குறைச்சலோ, கூடுதலோ கிடையாது என்று சட்டம் இயற்றினாலொழிய, இன்றிருக்கும் தொழிற் தகராறுகள் தீருவது மிகக் கஷ்டம் என்று நான் நம்புகிறேன். நாட்டிலே நிலைமைகள் இன்றைக்கு எப்படி, எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் நான் ஏற்கனவே சொன்னேன். நூற்றுக்கு எழுபத்தைந்து தொழிற் தகராறுகளில் எத்தனை கோர்ட்டுக்கு வந்து நிற்பவைகள் என்று எடுத்துக்கொண்டாலும், எத்தனை தொழிலாளர்களின் ஸ்டிரைக் மூலம் கோர்ட்டுக்கு வந்து நிற்பவைகள் என்று எடுத்துக்கொண்டாலும், எத்தனை லாக்அவுட் செய்வதன் மூலம் கோர்ட்டுக்கு வந்து நிற்பவைகள், என்று எடுத்துக்கொண்டாலும், அவை அத்தனையும் இந்த போனஸ் தகராறின் காரணமாகத்தான் என்று தெரிய வருகிறது. எனவே, நாட்டுக்கு இவைகளினால் ஒரு பெரிய இழப்பு ஏற்படுகிறது. இந்த போனஸ் சம்பந்தமாக உள்ள சண்டை தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் உண்மையான சண்டையாக இருக்கிறது; அவைகள் எல்லாம் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெரிய இழப்பாக இருக்கின்றன. அந்த நிலையிலே, தொழிற் சட்டம் திட்டவட்டமாக இருக்கும் வகையிலே, இத்தனை பர்சன்ட் தான் போனஸ், அதற்கு மேலும் கிடையாது, அதற்குக் குறைவாகவும் கிடையாது என்று இந்த போனஸ் சட்டத்தைத் திருத்தினாலொழிய, நாட்டிலே இன்றைக்குக் காணப்படும் தொழிற் தகராறுகள் தீராது என்று நான் நம்புகிறேன்.

தலைவரவர்களே, இன்னும் எத்தனையோ நன்மையான காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறது. அதிலே ஒன்று, 'பீக் லோடு' மாலை நேரத்திலே 'லோடு' அதிகப்பட்டு விடுவதாலே, அந்த நேரத்திலே 'கரண்ட் கட்' மூலமாக, சிறு தொழில்கள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கின்றன என்று நான் சொன்னேன். குறிப்பாக நகர்ப்புறங்களிலே நம்முடைய வீடுகளிலே இட்டிலிக்கு மாவரைக்கும் நிலைமை நின்று விட்டது. நாளைக்கு தோசைக்காக இன்றைக்கு மாவரைப்பது பல வீடுகளிலே நின்று விட்டது. காரணம், நனைந்த உளுந்தையும், அரிசியையும் அரைத்துக்கொடுக்க மாவரைக்கும் இயந்திரம் எல்லா தெருக்களிலும் இரண்டு, மூன்று என்று வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். இவர்கள் நனைந்த உளுந்தை அரைத்துத் தருகிறார்கள், நனைந்த அரிசியை அரைத்துத் தருகிறார்கள். இப்படிப்பட்ட சிறு தொழில்களுக்குக் கூட சாயங்கால நேரங்களிலே கரன்ட் நின்று போய்விடுமானால், அது மிகவும் கஷ்டமான நிலைமையை மக்களுக்கு உண்டாக்குகிறது. மற்றும், மாலையிலேயே



[4th December 1971

[திரு. எஸ். டி. ஆதித்தன்]

அப்படிப்பட்டவைகளை அரைத்து விட வேண்டும் என்பதும் முடியாத ஒன்றாகும்; கருக்கல் நேரத்திலேதான் அவைகளை அரைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட சிறு தொழில்களுக்குப் பாதகம் இல்லாத நிலைமையிலே, அவைகளுக்கு 'எலெக்ட்ரிசிட்டி கட்' இல்லாமல் செய்வது முக்கியமான ஒன்றாகும். அப்படிப்பட்ட நல்ல காரியத்தை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இது மிகவும் பாராட்டுக்குரிய காரியமாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். இன்னும் இது போன்ற சில்லரைத் தொழில்கள் அநேகம் இருப்பதாக நான் நம்புகிறேன். இந்த மாவரைக்கும் தொழிலுக்கு எந்தவிதமாக 'எலக்ட்ரிசிட்டி கட்டிலே' இருந்து 'எக்ஸம்ஷன்' கொடுத்திருக்கிறார்களோ, அதே போல் மற்றைய சிறு தொழில்களின் கோரிக்கைகளைப் பொறுமையாக ஆராய்ந்து, சாயங்கால நேரத்திற்கு 'எலக்ட்ரிசிட்டி கட்' இல்லாமல் அவைகளுக்கும் 'எக்ஸம்ஷன்' கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் கடைசியாகச் சொல்ல வேண்டியது ஒன்றிருக்கிறது. அதுபற்றி அநேக உறுப்பினர்கள் இந்த அவையிலும் சரி, அடுத்த அவையிலேயும் சரி, சொல்லியிருக்கிறார்கள். பலர் தமக்கு 'எலக்ட்ரிசிட்டி கனெக்ஷன்' அதாவது 'மின் இணைப்பு வேண்டும்' என்று கேட்டு, மனு கொடுத்ததற்குப் பின்னாலே, 15 நாளோ, 20 நாளோ, ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ என்று கழிந்ததற்குப் பிறகும் அவர்களுக்கு அந்த இணைப்பு கிடைப்பதில்லை என்றும், மின் இணைப்பு வந்துவிடும் என்ற நினைப்பிலே பயிரைச் செய்துவிட்டு அந்தப் பயிர் எல்லாம் காய்ந்து போனதற்குப் பிறகு கூட அது கிடைப்பதில்லை என்றும் குற்றம் சாட்டி இந்த அவையிலேயும், அடுத்த அவையிலேயும் பல முறை உறுப்பினர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதற்கு என்னுடைய ஒரு யோசனை என்னவென்றால், இவ்வளவு காலத்திற்குள்ளே "மின் இணைப்பு" கொடுத்துவிட வேண்டும், அதற்கு மேலே காலதாமதம் செய்யக் கூடாது என்று திட்டவட்டமாக ஒரு அறிவிப்பு இருக்க வேண்டும். கூடிய பட்சம் 45 நாள் அல்லது அதற்கு மேலே என்று போகும் பட்சத்தில், அதற்காக எந்தெந்த அலுவலர்கள் இருக்கிறார்களோ அவர்களின் கவனத்திற்கு இந்தப் பேப்பர்கள் போகும்படியான நிலைமை இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பேப்பர்கள் கீழேயுள்ள அதிகாரிகளிடம் இருக்கும் பொழுது—40 நாளோ அல்லது இரண்டு வாரமோ அவைகள் பைசல் செய்யப்படாமல் இருக்கும்பொழுது—பாதிக்கப்பட்டவர்கள் மேலேயுள்ள அதிகாரிகளிடம் சென்று, அதுபற்றி முறையிட்டால், அவைகள் எல்லாம் உடனே பைசல் செய்யும் நிலைமை இருக்க வேண்டும். இன்றைய நிலையில் அப்படிப்பட்ட மின் இணைப்புகள் மிகவும் காலதாமதம் செய்து கொடுக்கப்படும் என்றிருக்கிறது.

சாதாரணமாக முன்பு எல்லாம் 'மின் இணைப்பு' கேட்பவர்கள் ஊரிலே 5-40 p.m
பெரியவராக இருப்பார்கள்; அப்படிப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேர்தான் தமக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டார்கள். அப்படி மிகவும் கொஞ்சம் பேர்தான் மின் இணைப்பு கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை மாறிவிட்டதாலும், வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை எல்லா இடங்களிலும் பசுமைப்புரட்சி முக்கியமான விஷயமாக இருப்பதால், அதிலே மக்கள் எல்லோரும் ஆர்வம் கொண்டிருப்ப

4th December 1971]

[திரு. எஸ். டி. ஆதித்தன்]

தாலும், யாரும் மின் இணைப்பு கேட்பது சர்வ சாதாரணமாக இன்றிருக்கிறது. அது மாத்திரமில்லாமல் குடிசையிலே இருப்பவர்கள் கூட தங்களுடைய வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்கும் நிலைமை இருப்பதாலே, மின் இணைப்பு கேட்டவர்களின் இலக்கமானது ஒரு பங்கிலிருந்து, இன்றைக்கு 10 அல்லது 20 பங்காகப் பெருகியிருக்கிறது. ஆகவே, குறைவாக இருக்கும் அலுவலர்களால் இவை அத்தனையும் உடனடியாகச் செய்ய முடியவில்லை என்பது ஒரு காரணம். இன்னொரு காரணம், அப்படி மின் இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய பொருள்கள் செப்புக் கம்பி, அலுமினியக் கம்பி, டிரான்ஸ்பார்மர் போன்றவைகள் உற்பத்தி நாட்டிலே அதிகம் இல்லை; அதனாலே அப்படிப்பட்ட பொருள்கள் அதிகமான அளவிலே மின் வாரியத்தினிடம் ஸ்டாக் இல்லை, என்பது. இந்த இரண்டு காரணங்களாலே மின் இணைப்பு கொடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த மின் இணைப்பு விஷயமாக எவ்வளவு சீக்கிரமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்ய ஆவன செய்ய வேண்டும். மின் இணைப்பு கொடுப்பதற்கு ஒரு நாள் குறிப்பிட்டு, இத்தனை நாளைக்குள்ளே அதைச் செய்ய வேண்டும் என்று சட்ட திட்டங்களை ஏற்படுத்தி, 'ரூல்களிலே' மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்றால், மாற்றி அதை சர்க்கார் துரிதமாகப் பைசல் செய்ய ஏற்பாடு பண்ணுவதோடு இந்த மின் இணைப்பு சாமான்களின் உற்பத்தி அதிகமாக இந்த நாட்டிலே பெருகுவதற்கு வேண்டிய வழி முறைகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

முக்கியமாக நான் நினைக்கிறேன். வட நாட்டில் பற்பல இடங்களில் மின் இணைப்பு சம்பந்தமாக பற்பல விதமான கருவிகளோ சாமான்களோ உற்பத்தி அதிகமாக இருக்கிறது. தென்னாடு சம்பந்தப்பட்ட மட்டில், பல்புகள் செய்கிறவர்களோ, டிரான்ஸ்பார்மர் செய்கிறவர்களோ, கேபில் கம்பிகள் செய்கிறவர்களோ மிகவும் குறைவாக இருக்கிறார்கள். எந்த பல்பைப் பார்த்தாலும் சரி, வட இந்தியப் பெயராக இருக்கிறது. பம்பாயினுடைய பெயர் இருக்கிறது. கல்கத்தாவினுடைய பெயர் இருக்கிறது. மெட்ராஸுடைய பெயர் அதிகமாக இருக்கிறதாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த வரையிலும் தமிழகத்திலே ஒரே பல்பு ஃபாக்டரிதான் இருக்கிறது என்று எனக்கு ஞாபகம். அதுவும் விசேஷமாக உற்பத்தி செய்வதாகத் தெரியவில்லை இப்படிப்பட்ட நிலைமையில், மின்சார வாரியமே ஒரு தொழில் ஸ்தாபனமாக இருக்கிற நிலைமையில், அது ஒரு அரசினுடைய டிபார்ட்மெண்டாக இல்லாதபடி, தொழில் ஸ்தாபனமாக இருக்கிற நிலைமையில், மின் வாரியம் தாங்களே தங்களுக்கு வேண்டிய எல்லா விதமான பல்புகளையும், இன்னும் கேபில்களையும், மற்றப் பொருள்களையும் ஏன் தயார் செய்துகொள்ளக் கூடாது? இது தீவிரமாக ஆலோசிக்க வேண்டிய விஷயமாகும். இப்போது கூட மின் வாரியத்தார் பிராகட் 10 ஆயிரம், 25 ஆயிரம் வேண்டுமென்றால் காண்டிராக்ட் விடுகிறார்கள். இந்த முறையை மாற்றி தொழில் ஸ்தாபனத்தில் ஏற்கனவே இவைகளைச் செய்தவர்கள் இருந்தால், அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது அல்லது கேபில் முதலியவைகளுக்கு சொந்தத்தில் தொழில் ஸ்தாபனமாக ஃபாக்டரி ஏற்படுத்துவதைப் பற்றி மின் வாரியம் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் இன்றைக்குத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்ய முடியுமே தவிர, வேறு வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி, வணக்கம்.



4th December 1971]

DEPUTY CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m., on Monday, the 6th December 1971.

The House then adjourned.

## X. Papers Laid on the Table of the House.

### A. *Statutory Rules and Orders.*

* 61. Notification issued with G.O. Ms. No. 1775, Home, dated the 30th June 1971, in regard to exemption from payment of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, for the scooter bearing registration number MSQ 2080 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 62. Notification issued with G.O. P. No. 2358, Revenue, dated the 26th August 1971, in regard to exemption from liability the sale of toddy, from tax payable under the Tamil Nadu General Sales Tax Act. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 63. Notification issued with Roc. No. 27390/70-P1, dated the 5th March 1970, in regard to Amalgamation of T. Agaram Panchayat with Pennadam Town Panchayat in South Arcot district. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958.)]

* 64. Notification issued with G.O. Ms. No. 2158, Agriculture, dated the 3rd August 1971 in regard to the Chingleput Market Committee to establish regulated markets at Kancheepuram, Nasarathpettai, Ponneri, Thirukalukundram, Maduranthakam, Thiruvellore, Thiruthani, Uthiramerur and Red Hills in Chingleput district to provide facilities for the purchase and sale of groundnut. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959.)]

* 65. Notification issued with G.O. Ms. No. 2351, Public (Services-A), dated the 28th July 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to exclusion of post of Private Secretary to Chief Minister from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

* 66. Notification issued with G.O. Ms. No. 1045, Labour, dated the 31st August 1971, in regard to certain amendments to the Tamil Nadu Weights and Measures (Enforcement) Rules, 1967. [Laid on the table of the House under section 43 (4) of the Tamil Nadu Weights and Measures (Enforcement) Act, 1958 (Tamil Nadu Act XX of 1958).]

[4th December 1971

* 67. Notification issued with G.O. Ms. No. 1875, Rural Development and Local Administration, dated the 11th August 1971, in regard to rules regarding election of Members of the Taxation Appeals Committee of the Municipal Corporation of Madurai. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

* 68. Notification issued with G.O. Mss No. 1194, Rural Development and Local Administration, dated the 15th May 1971, relating to rules for reguulating the grant of leave and leave allowances to the holders of the posts of Assistant Commissioners, Personal Assistant to Commissioner, Corporation of Madras, under the Madras Corporation Service Leave Rules, 1969. [Laid on the table of the House under section 348(d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

* 69. Notifications issued with G.O. Ms. No. 942, Rural Development and Local Administration, dated the 17th April 1971, in regard to amendments to the rules relating to the Receipts and Expenditure of Panchayat Union Councils published with the Rural Development and Local Administration Department Notification S. R. O. No. A-123 of 1962, dated the 1st February 1962, at pages 22-31 of Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 14th February 1969, as subsequently amended. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958.)]

70. Notification issued with G.O. Ms. No. 70, Excise and Prohibition, dated the 30th September 1971, in regard to appointment of Police Officers of and above the rank of Sub-Inspector of Police to perform within their respective jurisdiction, the acts and duties mentioned in sections 43 to 56 (both inclusive) of the Tamil Nadu Abkari Ordinance. [Laid on the table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

71. Notifications issued with G.O. Ms. No. 1883, Rural Development and Local Administration, dated the 13th August 1971, in regard to certain amendments to the conduct of Election of Members of Town Panchayats Rules, 1964. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

72. Notification issued with G.O. Ms. No. 1884, Rural Development and Local Administration, dated the 13th August 1971, in regard to an amendment to the Tamil Nadu Panchayat Union Councils (Election of Chairman and Vice-Chairman) Rules, 1960. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



4th December 1971]

73. Order issued with G.O. Rt. No. 1703, Revenue, dated the 21st September 1971, in regard to exemption granted to the benefit film show organised by the Principal, St. George's School and Orphanage, Madras, on the 16th October 1971 at Safire Theatre, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

74. Notification issued with G.O. Ms. No. 1953, Agriculture, dated the 7th July 1971, relating to regulation of trade in sugarcane jaggery in the Coimbatore district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

75. Notification issued with G.O. Ms. No. 38, Excise and Prohibition, dated the 30th August 1971, making the Tamil Nadu Arrack (Levy of Excise Duty) Rules, 1971. [Laid on the table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

76. Notification issued with G.O. Ms. No. 2438, Home, dated the 4th September 1971, in regard to concessional rate of tax payable in respect of tractor TMC 2198 and trailer TMC 2199 belonging to Sri Paramakalyani Education Society, Madras. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

77. Notification issued with G.O. Ms. No. 1919, Home, dated the 15th July 1971, in regard to concessional rate of tax payable in respect of the MSL 4123 belonging to the Missionaries of Charity, Madurai. [Laid on the table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

78. Notification issued with G.O. Ms. No. 1565, Home, dated the 9th June 1971 in regard to general exemption from payment of motor vehicles tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, for the vehicles belonging to the Co-operative for American Relief Everywhere, the United States Technical Co-operation Mission and the United Nations Agencies. [Laid on the table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

79. Notification issued with G.O. Ms. No. 2057, Home, dated the 26th July 1971 in regard to exemption from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, for the vehicles bearing registration number MDJ 5745 and MDJ 4391 belonging to the Schieffelin Leprosy Research Sanatorium, Karrigiri, North Arcot district. [Laid on the table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

[4th December 1971

80. Notification issued with G.O. Ms. No. 418, Co-operation, dated the 8th September 1971 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970. [Laid on the table of the House under section 38-A of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]

81. Notification issued with G.O. Ms. No. 1606, Rural Development and Local Administration, dated the 22nd August 1970 in regard to an amendment to the rules relating to the proceedings of panchayats and committees of panchayats. [Laid on the table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

82. Notification issued with G.O. Ms. No. 1608, Industries, dated the 1st July 1971 in regard to amendments to the Madras Silkworm Seed (Production Supply and Distribution) Rules, 1958. [Laid on the table of the House under section 19 of the Tamil Nadu Silkworm Seed (Production, Supply and Distribution) Act, 1956 (Tamil Nadu Act XXIII of 1956).]

83. Notification issued with Roc. No. 28361/70-P1, dated the 6th March 1970 in regard to exclusion of Ammanakuppam village from the existing Chinnababusamudram Panchayat for constitution of a separate panchayat. [Laid on the table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

84. Notification issued with G.O. Ms. No. 1749, Home, dated the 26th June 1971 in regard to collection of reduced rate of tax payable in respect of the lorry MDH 2762 belonging to the Lawrence School, Lovedale, Ootacamund. [Laid on the table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

85. Notification issued with G.O. Ms. No. 1748, Home, dated the 26th June 1971 in regard to exemption of spare buses from double taxation when used in case of break-down of route buses of the Stage Carriages operating on Inter-State routes between Tamil Nadu and Kerala. [Laid on the table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

86. Notification issued with G.O. Ms. No. 1714, Home, dated the 30th June 1971 in regard to exemption from payment of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, the Truck-trailer bearing registration number MDY 1702 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



4th December 1971]

87. Notification issued with G.O. Ps. No. 2420, Revenue, dated the 1st September 1971 in regard to exemption from liability to tax in respect of the sale of service books of Government Servants. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

88. Notification issued with G.O. Ms. 817, Home, dated the 22nd March 1971 in regard to an amendment to the Tamil Nadu Neera or Padani Rules, 1939. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

89. Notification issued with G.O. Ms. No. 1118, Home, dated the 23rd April 1971 in regard to an amendment to the Madras Rectified Spirit Rules, 1959. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

90. Notifications issued with G.O. Ms. No. 1173, Rural Development and Local Administration, dated the 13th May 1971 relating to rules for co-option as councillors of persons belonging to Scheduled Caste or Scheduled Tribes and Co-option of women and rules for the election of members and Chairman of the standing committee. [Laid on the table of the House under section 432(2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

91. Notification issued with G.O. Ms. No. 441, Co-operation dated the 25th September 1971 in regard to amendment to the Tamil Nadu Co-operative Societies Rules 1963. [Laid on the table of the House under section 119(4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

92. 13th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1969-70. [Laid on the table of the House under section 79(1)(A) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 26. Erratum issued with Roc. No. 192653/69-P1, dated the 12th March 1970, to the notification relating to exclusion of local areas from the existing Valvachagostam, Kothanallur, Thiruvithancode and Eraneil Town Panchayats for constitution of separate panchayat.

* 27. Erratum issued with Roc. No. 194675/69-P1, dated the 4th March 1970 to the notification relating to bifurcation of Neduveerapattu Panchayat for constitution of a separate Panchayat.

4th December 1971]

* 28. Erratum issued with Roc. No. 179515/69-P1, dated the 4th March 1970 to the notification relating to exclusion of of certain areas from the Andhiyur Town panchayat for constitution of a separate panchayat.

* 29. Notification issued with G.O. Ms. No. 1825, Home, dated the 5th July 1971 in regard to certain amendments to the Tamil Nadu Opium Rules, 1969, under the Opium Act, 1878. (Central Act I of 1878).

* 30. The Annual Report on the activities of the District Development Councils for the year 1967-68 issued with G.O. Ms. No. 522, Rural Development and Local Administration, dated the 25th March 1970.

31. Notification issued with G.O. Ms. No. 1848, Revenue, dated the 29th June 1971 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deeds to be executed in favour of the Life Insurance Corporation of India by its Policy holders who obtain loans not exceeding Rs. 50,000 (Rupees fifty thousand only) for construction of houses and for purchase of built houses under the own your Home Scheme.

32. Erratum issued with Roc. No. 192674/69-P1, dated the 12th March 1970 relating to exclusion of local areas from the existing Colachel, Manavalakurichi Villukkiri, Kadiapattanam and Thalakulam Town Panchayats in Kanyakumari district for constitution of separate panchayats.

33. Erratum issued with Roc. No. 192657/69-P1, dated the 12th March 1970 relating to exclusion of local areas from the Kanyakumari, Suchindram, Agasteeswaran, Thamarakulam, Azhagappapuram and Marungoor town panchayats for constitution of separate panchayats.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 37 on page 5]

*கமுதியிலுள்ள அரசு (கழக) உயர் நிலைப்பள்ளி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவு அறநிலைய நிறுவனத்தின் நிர்வாகத்திற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மாற்ற ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

*1. பள்ளியின் அலுவல்களைக் கவனிக்க தலைமை ஆசிரியரை அலுவல் உறுப்பினராகக் கொண்ட ஒரு நிருவாகக் குழு அமைக்கப்பட வேண்டும்.*

*2. கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், தளவாடங்கள், இதர கருவிகள் இவற்றிற்கான விலையைப் பெற்றுக்கொண்டு நிருவாகத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும்.*

• Sent by post to all M.L.Cs. on 18th November 1971.



4th December 1971]

*3. தவறான நிருவாகம் என்று நிரூபிக்கப்படும்பொழுது அல்லது தனியார் நிருவாகத்தின் கீழ் இயங்கும் எல்லாப் பள்ளிகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பள்ளியை எடுத்துக்கொள்ளும் போது ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்கள் 'தளவாடங்கள்' கருவிகள் முதலியனவற்றை விலையேதும் ஈடாக கொடுக்காது திரும்பக் கைக்கொள்ளும் உரிமை அரசிற்கு உண்டு.*

*4. தனியார் பள்ளி நிருவாகத்தின்கீழ் பணியாற்ற விரும்பும் ஊழியர்கள் அவர்களது விருப்பத்தை எழுதி கொடுத்துவிட்டு அவ்வாறே பணியாற்றலாம். ஏனையோர் 16—5—1970 நாளிட்ட அரசு ஆணை எண் 761-ல் ஆணையிட்டபடி தமிழ்நாடு கல்வி கீழ்நிலை பணியாளர் தொகுதியில் (பி) ஏற்றுக்கொள்ளப் படுவர்.*

*5. வகுப்பு வேற்றுமை எதுவுமின்றி மாணவர்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.*

*6. நிருவாகத்தினர் பள்ளியின் பெயரில் ரூ. 70,000-க்குக் குறையாமல் தோற்றுவிக்கவேண்டும். இக்கட்டளை (Cash endowment) ரொக்க கட்டளை தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களாகவோ அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டு கூட்டு நிறுவனத்தில் ஏழாண்டு தவணை வைப்பிலோ இருக்கவேண்டும். வேறு எந்த வகை முதலீடும் சட்டப்படி செல்லக்கூடிய பள்ளிக்குரிய கட்டளை நிதியாகக் கருதப்படமாட்டாது.*

*7. மேற்கூறிய கட்டளை நிதியில் ஒரு பகுதியாகிய ரூ. 35,000-ஐ உடனே செலுத்தவேண்டும். எஞ்சிய ரூ. 35,000-ஐ ஐந்து ஆண்டு தவணையில் ஆண்டிற்கு ரூ. 7,000 செலுத்தவேண்டும். ஒவ்வொரு தவணையும் மார்ச்சு மாத இறுதிக்குள் செலுத்தப்பட வேண்டும்.*

*8. 10—6—65 நாளிட்ட கல்வி அரசு ஆணை எண் 1067 படி நிருவாகத்தினர் பள்ளியின் பாதுகாப்பிற்காக ஆண்டுதோறும் நிருவாகத்தினரின் உதவித் தொகை ரூ. 5,000-க்கு குறையாமல் கொடுக்கவேண்டும்.*

*9. போதுமான தக்க இடவசதி, சுகாதார வசதி, விளையாட்டிடம், மேசை, நாற்காலி, பரிசோதனைக் கருவிகள் அடங்கிய பரிசோதனைசாலை முதலியன செய்துத் தரப்படவேண்டும்.*

*10. பள்ளிக் கட்டணம் வசூலித்தல் கூடாது.*

## APPENDIX II.

[Vide answer to starred question No. 38 on page 7]

*கமுதியிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப்பள்ளி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவு அறநிலைய நிறுவனத்தின் நிர்வாகத்திற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மாற்ற ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

4th December 1971]

1. பள்ளியின் அலுவல்களைக் கவனிக்க தலைமை ஆசிரியரை அலுவல் உறுப்பினராகக் கொண்ட ஒரு நிருவாகக் குழு அமைக்கப்பட வேண்டும்.

2. கட்டிடங்கள் விளையாட்டு மைதானங்கள், தளவாடங்கள், இதர கருவிகள் இவற்றிற்கான விலையைப் பெற்றுக்கொண்டு நிருவாகத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும்.

3. தவறான நிருவாகம் என்று நிரூபிக்கப்படும் பொழுது அல்லது தனியார் நிருவாகத்தின்கீழ் இயங்கும் எல்லாப் பள்ளிகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பள்ளியை எடுத்துக்கொள்ளும் போது ஒப்படைக்க கட்டிடங்கள், தளவாடங்கள், கருவிகள் முதலியனவற்றை விலையேதும் ஈடாக கொடுக்காது திரும்பக் கைக்கொள்ளும் உரிமை அரசிற்கு உண்டு.

4. தனியார் பள்ளி நிருவாகத்தின்கீழ் பணியாற்ற விரும்பும் ஊழியர்கள் அவர்களது விருப்பத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அவ்வாறே பணியாற்றலாம். ஏனையோர் 16—5—70 நாளிட்ட அரசு ஆணை எண் 761-ல் ஆணையிட்டபடி தமிழ்நாடு கல்வி கீழ்நிலை பணியாளர் தொகுதியில் (பி) ஏற்றுக் கொள்ளப்படுவர்.

5. வகுப்பு வேற்றுமை எதுவுமின்றிப் மாணவர்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

6. நிருவாகத்தினர், பள்ளியின் பெயரில் ரூ. 70,000-க்குக் குறையாமல் ரொக்கக் கட்டளை (Cash endowment) தோற்றுவிக்க வேண்டும். இக் கட்டளை தேசியப் பாதுக்காப்புப் பத்திரங்களாகவோ அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டு கூட்டு நிறுவனத்தில் ஏழாண்டு தவணை வைப்பிலோ இருக்கவேண்டும். வேறு எந்த வகை முதலீடும் சட்டப்படி செல்லக் கூடிய பள்ளிக்குரிய கட்டளை நிதியாகக் கருதப்படமாட்டாது.

7. மேற்கூறிய கட்டளை நிதியில் ஒரு பகுதியாகிய ரூ. 35,000 உடனே செலுத்தவேண்டும். எஞ்சிய ரூ. 35,000-ஐ ஐந்து ஆண்டு தவணையில் ஆண்டிற்கு ரூ. 7,000 செலுத்தவேண்டும். ஒவ்வொரு தவணையும் மார்ச்சு மாத இறுதிக்குள் செலுத்தப்படவேண்டும்.

8. 16—6—65 நாளிட்ட கல்வி அரசு ஆணை எண். 1067 படி நிருவாகத்தினர் பள்ளியின் பாதுகாப்பிற்காக ஆண்டுதோறும் நிருவாகத்தினரின் உதவித் தொகை ரூ. 5,000-க்கு குறையாமல் கொடுக்கவேண்டும்.

9. போதுமான தக்க இடவசதி, சுகாதார வசதி, விளையாட்டிடம், மேசை, நாற்காலி, பரிசோதனைக் கருவிகள் அடங்கிய பரிசோதனைசாலை முதலியன செய்துத் தரப்படவேண்டும்.

10. பள்ளிக் கட்டணம் வசூலித்தல் கூடாது.

கீழ்க்கரையிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியை அங்குள்ள உச்வதான் அசானு முகம்மதியர் சங்கத்திற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மாற்ற ஒப்பளிக்கப்பட்டுள்ளது.



[4th December 1971

1. கட்டிடங்கள், மைதானங்கள், தளவாடங்கள், இதர கருவிகள் இவைகளை கட்டிட மேம்பாடு முதலியவைகளுக்கான விலையைப் பெற்றுக் கொண்டு நிர்வாகத்தினரிடமே ஒப்படைக்கவேண்டும். அவ்விலை சொத்துகளுக்குத் தற்பொழுதுள்ள மதிப்பீட்டின்படி பொதுப்பணித் துறை அவர்கள், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களுடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்பட வேண்டும்.

2. தனியார் பள்ளி நிருவாகத்தின் கீழ் பணியாற்ற விரும்பும் ஊழியர்கள் அவர்களது விருப்பத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அவ்வாறே பணியாற்றலாம். ஏனையோர் தமிழ்நாடு கல்வி கீழ்நிலை பணியாளர் தொகுதி (ஏ) யில் ஏற்றுக் கொள்ளப்படுவர். கமுதியிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப்பள்ளியின் மாற்றத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனை எண்கள் 1,3,5-10 இப் பள்ளிக்கும் பொருந்தும்.

## THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Monday, the 6th December* 1971.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the Clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

### I. QUESTIONS AND ANSWERS.

### STARRER QUESTIONS.

### *National Cadet Corps*

*49. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to improve the enrolment of students in the N.C.C. in High Schools?

**தேசிய மாணவர் படை**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உயர் நிலைப் பள்ளிகளில், மாணவர்கள் தேசிய மாணவர் படையில் சேருவதை அதிகரிப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தேசிய மாணவர் படை இளநிலைப் பிரிவில், சென்ற 1970–71-ல் ஆண்டில் 100 அதிகாரிகளும், 10,000 மாணவர்களும் கொண்ட 100 புதிய அணிகள் ஆரம்பிக்க அரசு உத்திரவிட்டது. இதே போன்று 1971–72-க்கான செயற்குறிப்பை நிதி வசதிக் குறைவால் கைவிட வேண்டியதாயிற்று.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, for giving incentive to our boys and girls to join the N.C.C., will the Government issue a general circular to various colleges to the effect that only those who are already in N.C.C. will be given preference in the matter of admission to colleges?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்போதே கல்லூரிகளில் எடுத்துக்கொள்வதற்கான தகுதிகளிலே என்.சி.சி.-யும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், மற்ற பல கல்லூரிகளிலும் அதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தேசிய மாணவர் படையை விரிவாக்குவதில் மத்திய அரசு நிதி அளிக்கிறதா? அல்லது மாநில அரசு இதில் பங்கு கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்திய அரசு அதற்கான அளவுக்கு சில அதிகாரிகளைத் தருகிறார்கள். பெரும்பாலான அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் நாம்தான் பெரும்பங்கு செலவை

ஏற்றுக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக 100 மாணவர்களுக்கு ஒரு அதிகாரி என்ற அளவில் 10 ஆயிரம் மாணவர்கள் கொண்ட படை அமைக்க வேண்டுமென்றால், அதற்குத் தொடரும் செலவு ரூ. 5,30,500 என்றும் தொடரா செலவு 35 ஆயிரத்திற்கு ரூ. 5,65,500 ஏற்படுகிறது என்றும் குறிப்பு தருகிறது. நிதி நிலை இடம் தராததால், மேற்கொண்டு அணிகளை ஏற்படுத்தவில்லை. 1971-72-ல் ஏற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும்.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, இடைக்காலத்தில் ஒன்றிரண்டு ஆண்டுகள் என்.சி.சி. இல்லாமல் இருந்திருக்கிறது. தொழிற்கல்வி போன்ற கல்லூரிகளில் சேருவதற்கான விண்ணப்பங்களில் என்.சி.சி.-யில் சேர்ந்திருக்கிறீர்களா என்ற கேள்வி இருக்கிறது. இடைக்காலத்தில் அது இல்லாததால் அந்தப் பயிற்சி பெறாதவர்களுக்கு அதைப் பூர்த்தி செய்வது கடினமாக இருக்கிறது. அதுபோன்ற நிலைமைகளில் அவர்களுக்குச் சங்கடம் எதும் ஏற்படாமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** . தலைவர் அவர்களே, இப்போதே அப்படி என்.சி.சி. பயிற்சி பெற்றவர்கள் மருத்துவக் கல்லூரிக்கும் பொறியியல் கல்லூரிக்கும் மனுப்போடுகிறவர்களாக இல்லை. குறிப்பிட்ட சிலர் என்.சி.சி. பயிற்சி பெறுகிறார்கள். அதற்கு என்று மற்ற மாணவர்களின் தகுதியைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. மற்ற நிலைமைகளும் கணக்கில் எடுக்கப்படுகின்றன. மற்ற மாணவர்களுக்குள்ள அதே அடிப்படையில் அவர்களின் திறமையும் ஆராய்ந்து பார்க்கப்படுகின்றது.

*Midday Meals*

*50 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that dead bandicoot was found in mid-day meals intended for children at a Municipal school at Gori-palayam; and

(*b*) if so, the action taken by the Government to get the midday meals cooked in a safe and clean manner?

மதிய உணவு

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோரிப்பாளையத்திலுள்ள நகராட்சிப் பள்ளியொன்றில் பள்ளிச் சிறுவர்களுக்கென்று சமைக்கப்பட்டிருந்த மதிய உணவில் பெருச்சாளி போன்று செத்துக்கிடந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மதிய உணவைப் பாதுகாப்பாகவும், சுத்தமான முறையிலும் தயாரிக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 23—11—1970 அன்று கோரிப்பாளையம் நகராட்சிப் பள்ளிக்கு வந்த ஐந்து உணவுப் பாத்திரங்களுள் ஒன்றின் அடியில் எலி ஒன்று காணப்பட்டதாக அப்பள்ளியில் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது.

(இ) மீண்டும் இதுபோன்று நடைபெறாதிருக்கத் தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) பண்டகசாலையில் சேரும் உணவுப் பொட்டலக் காகிதங்களை உடனுக்குடன் நீக்கவேண்டும்.

(2) சமையற் கூடத்திலும், பண்டகசாலையிலும் எலிகள் முதலியன வாராமல் தடுக்கக் கம்பி வலைத் தடுப்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

(3) சமையலுக்குப் பயன்படும் பாத்திரங்களையும் ஏனைய பாத்திரங்களையும் மூடிவைக்காமல் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது போடும் பொறுப்பை ஆசிரியர்களிடமிருந்து எடுத்து கல்வித்துறை வேறு ஏற்பாடு செய்து உணவு வழங்கும்படி நடவடிக்கை எடுக்க அரசிற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது இப்போதே சென்ட்ரல் கிச்சன் ஸ்கீம் என்ற அடிப்படையில் சமைக்கப்பட்டு வருகிறது. இங்கே குறிப்பிடப்பட்ட பள்ளியைப் பொறுத்த வரையில், இதற்கென்று மத்திய சமையல் கூடம் வைக்கப்பட்டு, சமையல்காரர்கள் வைத்து சமைத்து அதிலிருந்து மற்றப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றது. 'கேர்' நிறுவனம் தருகிற நிதி உதவியின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் மைய சமயல் கூடம் நிறுவுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது கிட்டத்தட்ட 70-க்கு மேற்பட்ட ஒன்றியங்களிலே வைக்கப்பட்டிருக்கிறது.

. **திரு. ஜி. சுவாமிநாதன் :** எலி இறந்துகிடந்த அந்த உணவை எத்தனை மாணவர்கள் சாப்பிட்டார்கள் ? அதனால் ஏதாவது கெடுதல் விளைந்ததா ? எலி கிடக்கிற அளவுக்கு மோசமான அளவிற்கு உணவைத் தயார் செய்தவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

ஒரு முறை அதிகாரிகள் கூடி பரிசீலிக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு

**மாண்புகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பெருச்சாளி கிடக்கவில்லை. எலிதான் கிடந்தது. பெருச்சாளி என்றால் உள்ளே போயிருக்காது. மேலே வந்திருக்கும். ஐந்து பாத்திரங்களில் ஒரு பாத்திரத்தில் எலி இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டவுடனேயே உணவு வழங்குவது நிறுத்தப்பட்டது. அதனால் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. தலைமைச் சமையல்காரர், ஒரு உதவி சமையல்காரர், இரண்டு பேரும் அதன் காரணமாக விசாரணை செய்யப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். மீதமுள்ள எட்டு சமையல்காரர்கள் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[6th December 1971

## *Pension*

* 51. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of applications received so far for pensionary benefit from widows of teachers as per G.O. Ms. No. 380, Education, dated 9th April 1969; and

(b) the number of applications so far disposed?

## ஓய்வூதியம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 9—4—1969 நாளிட்ட 380-ஆம் எண் அரசு ஆணைக்கிணங்க ஆசிரியர்களின் விதவைகளிடமிருந்து ஓய்வூதியத்திற்காக இது வரை வரப்பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) இதுவரை முடிவெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஜூலை, 1971 வரை.—

(அ) 164 மனுக்கள் வந்தன.

(இ) 108 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 9–4–1963-க்கு பின்னால் இறந்த ஒரு ஆசிரியர் மனைவி இதற்காக ஒரு விண்ணப்பம் அனுப்பியும் கூட 380-வது அரசு ஆணையின்படி கொடுக்க வேண்டியது கொடுக்கப்படாமல் இருக்கின்றது. பல மாவட்டங்களில் இந்த நிலை இருப்பதாகத் தெரிகிறது. அது அரசிற்குத் தெரியுமா? மேலும் 9–4–1969-க்குப் பின்னர் தற்போது உயிருடன் உள்ள எல்லா விதவைகளுக்கும் இந்தச் சலுகையை அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இன்னும் 56 பேர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல், மேற்கொண்டு சில விவரங்கள் தேவைப்படுவதால், மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு எழுதப்பட்டிருக்கிறது. தனிக் கல்வி அதிகாரிகள் விவரங்கள் கேட்டிருக்கிறார்கள். விவரங்களைப் பார்த்து பின் செய்யவேண்டியிருக்கிறது. பொதுவாக இந்த ஆணையின் படி வந்து சேராமல் ஏதாவது இருந்தால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. டி. சந்தோஷம்: மிகவும் குறைவான பேர்கள்தான் உதவித் தொகைக்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த மனுவைச் செய்வதற்கு முன்பு அதற்கான சான்றிதழ்கள் முதலியன சேகரிப்பதிலிருந்த கஷ்டத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. மிகவும் சிரமப்பட்டு அந்தத் தொகையைப் பெற வேண்டியிருக்கிறது. அதனால்தான் மிகவும் குறைவான மனுக்கள் வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் மனு போடுவதிலுள்ள சிரமங்களைக் குறைக்க அரசு முன்வருமா?



6th December 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விண்ணப்பங்கள் குறைவு என்று சொல்வதற்கில்லை. மனுச் செய்தவர்களில் விதவைகள் எத்தனை பேர் என்று தான் கேள்வி. அதைச் சொன்னேன். அதற்கான விண்ணப்பங்கள் 3 ஆயிரம், 4 ஆயிரம் அளவில் வந்து பரிசீலிக்கப்படுகின்றன. கண் அற்றுப்போய் அல்லது வேறுவித உடல் நோய் வந்து, அதனால் ஆசிரியர் வேலையை விட நேரிட்டால், அப்படிப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து தரப்படுகிற நிலை இருக்கிறது. திடீரென்று ஆசிரியர் இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வந்த விண்ணப்பங்களில் 56 பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விண்ணப்பங்கள் ஆறு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதிகாரிகள் கூடி பரிசீலிக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, விதவைகளுக்குப் பென்ஷன் வழங்கும்போது, மினிமம் பென்ஷன் என்று சொல்கிற அந்த ரூ. 50-ஐ வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதிலே ரூ. 50 லிருந்து சிலர் ரூ. 60, ரூ. 75 வரையில் அவரவர்கள் தன்மைக்குத் தகுந்தபடி பெறுகிறார்கள். சிலருக்குச் சிறிதளவு வேறு வருமானம் வருகிறது. அதையும் கணக்கிட்டு அந்தக் குழுவினர் தந்து வருகிறார்கள். எல்லோருக்கும் ஒருவிதமான நிதி அளிக்கப்படுவதில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 9–4–1969-க்கு பிறகு இறந்த ஆசிரியர்களுடைய விதவைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அதற்கு முன்பு இறந்த ஆசிரியர்களின் அத்தனை விதவைகளுக்கும் இதைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள், விதவைகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கும்போது, ஆசிரியர் இறுதியில் பெற்று வந்த சம்பளத்தையும் அதற்கு முன்னர் சில வருஷங்களாகப் பெற்றுவந்த சம்பளத்தையும் கணக்கிட்டு, ஒரு வகை ஓய்வூதியம் நிச்சயம் செய்கிறார்கள். அதில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுடைய விதவைகளுக்கெல்லாம் ரூ. 10, 12 சம்பளம் வருகிறது. குறைந்த அளவு முதியோர் பென்ஷன் மாதிரி ரூ. 30 அல்லது ரூ. 50 எது குறைந்ததோ அதைக் கொடுக்க வகை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால், ஆராய்ந்து சொல்ல முடியும்.

## *Lady Wellington Training College, Madras*

* 52. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of applications received by the Lady Wellington Training College, Madras for the Tamil teachers training (women) course started on 1st June 1970 districtwise;

(b) the number of candidates selected; and

(c) the details of selection?

### சென்னை வில்லிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) சென்னை வில்லிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரிக்கு 1–6–1970 தொடங்கிய பெண்கள் தமிழாசிரியைப் பயிற்சிக்கு மாவட்ட வாரியாக வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ?

(உ) தேர்வு முறையில் விபரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ), (உ) : அவைமுன் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 50 பேர் அளவில் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு இண்டர்வியூ கார்டு அனுப்பப்பட்டிருக்கிறது. 50 பேரும் வந்த பிறகு, அதில் உள்ளவர்களின் பலரின் பெயர்கள் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக வேறு சிலர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். என்பதையும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் கடைசியில் விளம்பரப் பலகையில் போடப்படவில்லை என்பதையும் அமைச்சர் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் அறிய மாட்டேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போதுதான் அது தெரிகிறது. அதுபற்றிய குறிப்புகள் தருவார்களானால், விவரம் அறிந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மார்க்குகள் அடிப்படையில் எடுக்கும்போது, குறைந்த மார்க் வாங்கிய சிலருக்குக் கொடுக்கப்பட்டு அதிக மார்க்குகள் வாங்கியவர்களுக்குக் கொடுக்கப்படாமலிருக்கிறது. இது சம்பந்தமாகக் கல்வி இயக்குநருக்கு நானும் சம்பந்தப்பட்டவரும் பல முறை கடிதம் எழுதினோம். இயக்குநரிடமிருந்து இதுவரையில் அதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை என்பதை அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : அதனுடைய காப்பியை அமைச்சருக்கு அனுப்பிவிடுவது தானே ?

### Surplus Teachers

* 53 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the rules in force with regard to the number of surplus teachers (n plus 1) allowed with regard to aided elementary and aided High Schools?

@ Printed as Appendix on pages 106–107



### உபரி ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மானிய உதவிபெறும் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகள் தொடர்பாக அனுமதிக்கப்படுகிற உபரி ஆசிரியர்களின் எண்ணிக்கை ( ) குறித்து நடைமுறையிலுள்ள விதிகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 10 அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகள் உள்ள தொடக்கப்பள்ளிகளிலும் உயர் தொடக்கப்பள்ளிகளிலும் சிறப்பு ஆசிரியர்கள் யாரும் இல்லாமலிருப்பின் ஒரு ஆசிரியரைக் கூடுதலாக நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படுபவர் தொடக்கப் பள்ளிகளில் ஹையர் கிரேடைச் சேர்ந்தவராகவும் உயர் தொடக்கப்பள்ளிகளில் செகண்டரி கிரேடைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

உயர்நிலைப்பள்ளிகளில் விதிகளின்படி நியமிக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் மேலாக, 10, 11-ம் வகுப்புகளில் விருப்பப்பாடங்கள் கற்றுத் தருவதற்காக ஆசிரியர்கள் நியமிக்கலாம். அப்படி நியமிக்கப்படக்கூடியவர்களுக்கு வாரத்திற்கு 15 மணி நேரத்திற்குக் குறையாமல் கற்பிக்கும் வேலை இருந்தால் மட்டுமே நியமிக்கலாம். அவ்வேலை வாரத்திற்கு 15 அல்லது 16 மணி நேரம் மட்டும்தான் இருக்குமாயின் பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியைப் பெற்ற பின்னரே மாவட்டக் கல்வி இயக்குநரும் பெண்கள் பள்ளி ஆய்வாளரும் கூடுதல் ஆசிரியர் நியமனத்துக்கு ஒத்துக்கொள்ளலாம்.

ஒவ்வோராண்டும், கூடுதலாக நியமிக்கப்பட ஐந்தாண்டுத் திட்ட வேலைகளின் கீழ் ஒப்பளிக்கப்படும் ஆசிரியர் பதவிகளின் மொத்த எண்ணிக்கைக்கு மிகாதவாறுதான் மேற்சொன்னவாறு நியமனங்கள் செய்ய முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் ஆரம்பப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் 10 ஆசிரியர்களுக்கு ஒரு ஆசிரியர் உபரியாக நியமிக்கப்பட்டார்கள். தற்சமயத்தில் ஆரம்பப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் அது மாதிரி நியமிக்கப்படுகிறார்களா ? இல்லாவிட்டால் ஒரு ஆசிரியர் விடுமுறை எடுக்கும்போது, வேறு ஆசிரியர்கள் அங்கே இல்லாத நிலைமை ஏற்படுவதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அதை நிவர்த்திக்க ஏதாவது திட்டம் கொண்டுவர இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விதிமுறைப்படி 10 ஆசிரியர்களுக்கு மேல் தேவைப்படுகிற சூழ்நிலைக்கேற்ப ஒரு ஆசிரியர் கூடுதலாகப் போடலாம் என்றிருக்கிறது. இப்போது ஒதுக்கப்படுகிற ஆசிரியர் இல்லாமையால் தேவையை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. நிதி நிலைமை அந்த அளவுக்கு இடமளிக்காததால் அப்படிப்பட்ட நிலைமை உள்ளது. கல்வித் துறை அதிகமான அளவில் ஆசிரியர்கள் தர வேண்டுமென்று விண்ணப்பித்து வருகின்றது. நிதிநிலைமை சரியாகும்போது, கூடுதலான ஆசிரியர்களைப் போடுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளலாம்..

### Lightning Arrester

* 54. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the lightning arrester installed at the Gangaikonda-Cholapuram Temple by the Archaeological Department was stolen away during October, 1970;

(b) the number of times lightning arresters were stolen similarly from 1967; and

(c) the action taken by the Government to prevent such recurrence of thefts in future?

### இடி தாங்கி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், தொல்பொருள் ஆராய்ச்
(அ) 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், தொல்பொருள் ஆராய்ச் சித் துறையால், கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் பொருத்தப்பட்ட இடி தாங்கி திருடப்பட்டது உண்மையா?

(இ) 1967-ஆம் ஆண்டிலிருந்து இதுபோன்று திருடப்பட்ட இடி தாங்கி களின் எண்ணிக்கை யாது?

(உ) அது போன்ற திருட்டுகள் வருங்காலத்தில் நிகழா வண்ணம் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மூன்று தடவைகள்.

(உ) இந்த மாதிரியான திருட்டுகளைத் தடுக்கத் தனியான பிரத்யேக காவல் பிரிவுகள் படை அமைக்கப்பட்டிருக்கின்றன. தவிர, இரவு நேரங்களில், காவல் படை ரோந்துகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அந்த இடிதாங்கி திருடப் பட்ட பகுதி கிட்டத்தட்ட 60 அடி நீளமுள்ளதாக இருந்திருக்கிறது. வேண்டு மென்றே சிலர் இதைத்திருடிப்போவதாகத் தெரிகிறது. தொல்பொருள் இலாகா சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றிக் காவல் நிலையத்திற்குப் புகார் செய்தபோது, அதைப்பற்றி அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் திருடிக்கொண்டு போகிறவர்கள் அதை வைத்து வியாபாரமாக நடத்து கிறார்கள் என்பதையும் அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலிருந்து நான் சொன்ன விவரம் தெரிகிறது. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் தனியான இடத்தில் மக்கள் நடமாட்ட மில்லாத பகுதியில் போக்குவரத்து குறைந்த இடத்தில் இருக்கிறது. பக்கத்தில் நெடுஞ்சாலை எதுவுமில்லை. அதனால் 22—3—1967-ல் ஒரு முறையும் இன்னொரு நாள் ஒரு முறையும் 1—5—1969-ல் மூன்றாவதாகவும் திருடு போய்விட்டது. அதற்குப் பிறகுதான் அதைப் பாதுகாக்க தனிப் படை ஒன்று அமைக்கப்பட்டது. அந்த ஊரைப் பொறுத்த வரையில், இரவு நேரத்தில் ரோந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் சொல்லி யதைப் போல கம்பிகள் 70 அங்குல நீளம், 1 அங்குல அகலம், 1/8 அங்குல



மும் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதைத் திருடிக் கொண்டு போகாத அளவில் பாதுகாப்பு நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டிருக் கிறது.

திரு. சா. கணேசன்: அந்தக் கம்பி செப்புக் கம்பியாக இருப்பதனாலும், அது 200 அடிக்கு மேல் நீளமாக இருப்பதாலும், அதைத் திருடி அதன் மூலம் நிறைய பொருள் சம்பாதிக்க முடியும் என்ற நிலை நிலவுவதாலும் சம்பந்தப் பட்ட கோயில் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இதைச் செய்துகொண்டிருக் கிறார்கள் என்று பெரும்பாலோர் நம்புவதாலும் இதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டும். அத்தோடு தொல்பொருள் துறையும் அக்கோயில் நிர்வாகமும் அரசும் சேர்ந்து குறைந்தபட்சம் ஒரு காவலை அங்கே போடவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அங்குள்ள பொருள் களும் பண்டங்களும் ஏராளமான விலை மதிக்கத்தக்கதாக உள்ளதால், அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி அடிக்கடி திருட்டு ஏற்படுகிற தன்மையில் அதுபற்றி காவல் துறையினருக்கு தகவல் தந்தும் அவர்களும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றுதான் பதில் வந்திருக்கிறது. ஆகவே மூன்று முறை திருட்டுப்போனதைப்போல நான்காவது முறையிலும் திருட்டுபோகாமல் இருப் பதற்காக இரவு நேரங்களில் ரோந்து போட வேண்டுமென்று உத்தரவு பிறப் பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த கம்பி அமைக்கப் படுவது மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சித் துறை யினால். அதைப் பாதுகாப்பதும் நிர்வகிப்பதும் அங்குள்ள ஏரியா கமிட்டியால் நியமிக்கப்படுகிற எண்டோமெண்ட் போர்ட் கமிஷனரும் எக்ஸிகியூட்டிவ் ஆபீசரும் ஆவார்கள். அந்தக் குற்றம் நடந்தது பற்றி யார் முதலில் புகார் தெரிவித்தார்கள்? அந்த திருட்டிற்கு பொறுப்பாளியாவது யார்? அந்த எக்ஸி கியூட்டிவ் ஆபீசர்தான் என்ற முடிவுக்கு அரசு வருகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கோயில் மத்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் அதன் கண்காணிப்பில் இருக்கிறது. இருந்தாலும் பொருள்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அங்குள்ள நிர்வாக அதிகாரியினுடையது. திருட்டுப்போகாமல் பாதுகாக்க வேண்டியது காவல் துறை தொல் பொருள் துறை கண்காணிக்க முடியுமே தவிர அதற்கான பொறுப்பு அங்குள்ள நிர்வாக அதிகாரி, காவல் துறையைச் சார்ந்தது. திருட்டுப்போனபின் அதற்காக யார் ரெஸ்பான்சிபிள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. டி. சந்தோஷம்: தலைவர் அவர்களே, ஒரே பொருள் மூன்று தடவை திருடப்பட்டிருக்கிறது. மூன்று முறையிலும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. திருட்டுப்போனதும் மிகப் பெரிய பொருளாக இருக்கிறது. மெட்ராஸ் சி.ஐ.டி. யில் உள்ள உயர்ந்த போலீஸ் அதிகாரிகளைக் கொண்டு இதில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டதா? அப்படிச் செய்தும் அதைக் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு அவ்வளவு திறமையானவர்கள் திருடிச் சென்றிருக்கிறார் களா? வேறு காரணம் ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் களவுபோன பகுதியை நான் குறிப்பிட்டேன். 70 அடி நீளமுள்ள பகுதியாக இருக்கிறது. போலீசார்

வழக்கு தொடுத்தும் ஆட்களைக் கண்டுபிடிக்க முடியாதிருப்பதால் மேலும் தீவிரமான முறையில் கண்காணிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : நானே அங்கே நேரில் சென்று பார்த்தேன். இடிதாங்கியின் மொத்த நீளம் 220 அடி. கிட்டத்தட்ட நான்கைந்து மணி நேரம் இருந்து அதிலிருந்து 60 அடி வரை வெட்டிச் சென்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதில் 70 அங்குலம் என்றிருக்கிறது. 70 அடியாகக் கூட அது இருக்கலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இப்போது களவு போன சாமான்களை விற்றால், சுமார் எவ்வளவு ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கும்.

## *Headmaster*

* 55. *Q*.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that one Guruva Reddiyar, Headmaster of a Government High School in Johlpatti, Ramanathapuram district, was reverted on a charge of misappropriation of funds;

(*b*) if so, the amount that was misappropriated by him; and

(*c*) the number of Headmasters in Ramanathapuram district who have been similarly punished during 1970–71 for misappropriation of funds ?

### தலைமை ஆசிரியர்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜோகில்பட்டி அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் வேலை செய்த குருவா ரெட்டியார் என்ற தலைமை ஆசிரியர் பணம் கையாடல் செய்தார் என்று பதவி இறக்கம் ( செய்யப்பட்டார் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எவ்வளவு பணம் கையாடல் செய்தார்?

(உ) 1970-71-ல் இதேபோன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை தலைமையாசிரியர்கள் பணம் கையாடல் செய்ததன் காரணமாக தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூபாய் 1349-55.

(உ) ஒருவருமில்லை.





## *Invigilators.*

* 56. *Q*.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there have been any instances of examinees attacking invigilators at the recent Madras University Examinations; and

(*b*) if so, the details thereof?

### தேர்வுக் கண்காணிப்பாளர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அண்மையில் நடந்த சென்னை பல்கலைக் கழகத் தேர்வின்போது தேர்வுக் கண்காணிப்பாளர்கள், தேர்வு எழுதும் மாணவர்களால் தாக்கப்பட்ட நிகழ்ச்சி ஏதும் நடந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1970 ஏப்ரலில் நடந்த பல்கலைக் கழகத் தேர்வுகளில் இசுலாமியா கல்லூரி, வாணியம்பாடி, தேசிய கல்லூரி , திருச்சிராப்பள்ளி ஆகியவைகளில் இரு நிகழ்ச்சிகள் நடந்தன. 1971-ஆம் ஆண்டு நடந்த தேர்வுகள் குறித்த விபரங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, நமது நாட்டில் இதுமாதிரி நிகழ்ச்சி நடப்பதற்கு முன்பு தேர்வுகளில் கண்காணிப்பவர்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லாத முறையில் கண்காணிக்கும் சூழ்நிலை இருந்தது. இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடக்காதபடியும் கண்காணிக்க அனுப்பப் படுகிற பேராசிரியர்கள் தங்களுக்கு அந்தப் பொறுப்பு வேண்டாமென்று சொல்லாத நிலைமையும் ஏற்படுவதற்கு வழிசெய்யும் வகையில் அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாநிலம் எங்கும் இருக்கிற எல்லாக் கல்லூரிகளிலும் தேர்வு நடைபெறுகிறபோது, குறிப்பிட்ட இந்த இரண்டு கல்லூரிகளில் எதிர்பாராத வகையில் இந்நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டி கண்காணிப்பதற்காக ஒவ்வொரு வகுப்பறையிலும் போலீசாரை வைத்தாலும், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு வழியிருக்கிறது. தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆங்காங்கு செய்யப்படுகின்றன. குற்றம் செய்த மாணவர்கள் முறைப்படி பல்கலைக் கழகத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். திருச்சி தேசியக் கல்லூரியிலிருந்து குற்றம் செய்த இரண்டு மாணவர்களில் ஒருவர் இனிமேல் அறவே எந்தத் தேர்வும் எழுதக் கூடாது என்று நிறுத்தப்பட்டிருக்கிறார். மற்றவர்கள் மூன்றாண்டு தொடர்ந்து எழுதக் கூடாது, அதற்குப் பிறகு எழுதலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. வாணியம்பாடி கல்லூரி மாணவர் இரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ந்து தேர்வு எழுதக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. மாணவர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்போது அவர்களை சரியாக அடையாளம் கண்டுபிடிக்க முடியாதவாறு ஆசிரியர் யார் என்று குறிப்பிட முடியாத காரணத்தால், வழக்கு தள்ளுபடியானது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தேர்வின் போது ஆசிரியர்களுக்குப் பதில் போலீசாரைக் கண்காணிப்பாளராக நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒரு வகுப்பில் பல மாணவர்கள் இருப்பார்கள். அதற்கு ஒரு போலீசாரை வைத்தால் போதுமா என்ற பிரச்சினை வரும். நிலைமை இன்னும் விபரீதமாகத்தான் அது பயன்படும். லட்சக்கணக்கான மாணவர்கள் எழுதும்போது, ஒரிரு இடங்களில்தான் இதுபோன்ற அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் ஆங்காங்குள்ள கல்லூரி முதல்வர்களும் மற்றவர்களும் நடவடிக்கை எடுப்பார்கள். இதுபோன்று நடைபெறும் என்று எதிர்பார்த்து யாராவது பாதுகாப்புக் கேட்டால், அதைத் தருவதற்குக் காவல்துறையினர் ஆயத்தமாக இருப்பார்கள்.

## *Central Research Institute for Siddha*

* 57. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any Central Research Institute for Siddha is proposed to be opened in the State by Central Council for Research in Indian Medicine and Homoeopathy, New Delhi; and

(*b*) if so, the details of the assistance offered by the State Government for this project?

## சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புது டில்லி, இந்திய மருந்து-ஹோமியோபதி ஆராய்ச்சி மத்தியக் குழு, இம்மாநிலத்தில், சித்த மருத்துவத்திற்காக மத்திய ஆராய்ச்சி நிறுவனம் ஏதும் திறக்கத் திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், இத்திட்டத்திற்காக மாநில அரசு வழங்கும் உதவி பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அ) இந்திய மருத்துவத்திலும் ஹோமியோபதியிலும் ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு தமிழ்நாட்டில் ஒரு மத்திய சித்த ஆராய்ச்சி நிலையம் நிறுவ ஆலோசனை கூறியுள்ளது.

(இ) ஆராய்ச்சி நிலையம் நிறுவ சுமார் 2 ஏக்கர் நிலமும், சுமார் 10,000 சதுர அடி பரப்புள்ள கட்டிடமும் தரும்படி மாநில அரசை மத்தியக்குழு கேட்டுள்ளது. ஆராய்ச்சி நிலையத்திற்காக வாடகைக்கு கீழ்ப்பாக்கத்திலுள்ள ஒரு கட்டிடத்தை அரசு எடுத்துள்ளது. இது மத்தியக் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டு ஆராய்ச்சி நிலையத்தை உடனே துவங்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.



## *Quarters for Doctors.*

* 58. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to construct quarters for Doctors working in Government dispensaries; and

(*b*) if so, the details thereof?

## மருத்துவர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசினர் மருந்தகங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தவர்கள் தஞ்சையில் வந்து பேசும் போது, கிராமங்களிலுள்ள மருத்துவ மனைக்கு மருத்துவர்கள், செவிலியவர்கள் போகாத காரணத்தால், மத்திய அரசிலிருந்து கொடுக்கிற பணத்திலிருந்து இதைப்போன்று வசதியுள்ள கட்டிடங்கள் கட்டித் தருவதற்கான செயல்குறிப்பு அரசாங்கத்தில் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அது என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செயல்குறிப்பின்படிதான், தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொள்கிற மருத்துவ மனைகளை அவர்களாகவே கட்டுகிறபோது அத்துடன் இணைத்து குடியிருப்பும் கட்டுவதற்கு நிதி இடம் தரவில்லை என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் குறிப்பின்படி, அவர்கள் உதவித் தொகையில் கட்டப்படுகிற குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனை (Family Planning Centres) எங்கெங்கு கட்டப்படுகின்றனவோ, அவைகளோடு சேர்த்து குடியிருப்புக்கு என்று டாக்டர்களுக்கும் செவிலியர்களுக்கும் வீடுகள் கட்டப்படுகின்றன. இப்போது பல இடங்களில் அந்தக் Family Planning குடும்பக் கட்டுப்பாடு மருத்துவமனைகள் (Family Planning Centre) கட்டுவதற்கு இடமில்லாமல் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அவைகளைக் கட்டுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகும். டாக்டர்களுக்குத் தனியாகக் குடியிருப்புக்கு தமிழ்நாட்டு நிதியிலிருந்து கொடுப்பதற்கு அதிக வாய்ப்பில்லை.

## *Nurses' Conference*

* 59. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a resolution was passed at the Nurses' Conference held in April this year and sent to the Government requesting the adoption of nurse-patient ratio in the Government Hospitals at 1 : 5; and

(b) if so, the decision taken by the Government regarding this?

### செவிலியர் மாநாடு

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசாங்க மருத்துவமனைகளில் பணியாற்றும் செவிலியர் ( Nurse ஒருவர் 5 நோயாளிகள் வீதம் கவனித்துக்கொள்ளும்படி வழிவகை செய்யுமாறு இந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற செவிலியர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அரசாங்கம் அதுபற்றி எடுத்துள்ள முடிவு என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ஆம். அரசாங்க மருத்துவ மனைகளில் 8 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் வீதம் நியமிப்பது என்ற தற்போதைய திட்டத்தை மாற்றியமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. இருப்பினும் எந்தெந்த மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக நெருக்கடி ஏற்பட்டிருந்ததோ அவ்விடங்களில் அதிகப்படியான செவிலியர்களை அரசு சமீபத்தில் நியமித்துள்ளது.

பயிற்சி நிலையங்களாக உள்ள மருத்துவமனைகளில் ஒரு செவிலியருக்கு 9 படுக்கைகள் என்ற விதமும் பயிற்சி நிலையங்களல்லாத மருத்துவமனைகளில் ஒரு செவிலியருக்கு 6 படுக்கைகள் என்ற விதமும் தற்போது நிலவுகிறது.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள எல்லா மருத்துவ மனைகளிலும் ஏராளமான நோயாளிகள் படையெடுக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட செவிலியருக்கு இவ்வளவு நோயாளிகள் என்று நிர்ணயம் செய்தால்தான், அவர்கள் அந்த நோயாளிகளை நல்லமுறையில் கவனிக்க முடிகிறது. இப்போது பெரும்பாலான நகரங்களிலுள்ள மருத்துவ மனைகளில் குறிப்பிட்ட நோயாளிகளுக்கு மேல் செல்கிற காரணத்தால், செவிலியர்கள் நல்லமுறையில் கவனிப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இத்தனை படுக்கைக்கு ஒரு செவிலியர் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு கட்டிடத்தில் இவ்வளவு படுக்கைகள்தான் இருக்கலாமென்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. படுக்கை என்பது கட்டிலோடு கூடியிருப்பது. அப்படி கட்டிலில் கிடக்காமல் தரையிலும் பல நோயாளிகள் கிடத்தப்படுகிறார்கள். எமர்ஜன்சி சிட்சையின் அடிப்படையில் ஆங்காங்குள்ள டாக்டர்கள் அவர்களை ஏற்றுக்கொள்கிறார்களே தவிர, கட்டிட வசதி போதுமானதாக இல்லை. படுக்கை போடுவதற்கும் தக்க இடமில்லை. ஆகவே ஆங்காங்குள்ள சூழ்நிலைகளை அனுசரித்து, நெருக்கடிகளை உத்தேசித்து, சமாளிப்பதாக.இருப்பதால், அந்த அடிப்படையில் எண்ணிக்கையை விரிவுபடுத்த இயலாது. எங்கெங்கு படுக்கைகளை அதிகப்படுத்தி செவிலியர்களை அதற்கேற்ப அதிகப்படுத்த முடியுமோ அங்கெல்லாம் அது செய்யப்பட்டு வருகிறது.



THIRU D. SANTOSHAM : Sir, it is stated that the Nurse-patient ratio in Western countries is 1 : 5 and it is said that it is the optimum ratio that should prevail if there should be efficient service. Has this been taken into account by our Government, Sir?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேல்நாடு என்று சொல்கிறபொழுதே, நம்மைவிட மேலான சூழ்நிலை உள்ள நாடு என்று பொருள். மேற்கு திசையில் உள்ளது என்பது மட்டுமல்ல. அங்குள்ள பொருளாதார நிலைமைக்கு இரண்டு பேருக்கு ஒரு செவிலியர் கூட அமைக்கின்ற நிலை இருக்கலாம். நம் நாட்டில் பெரும்பாலானவை இலவச மருத்துவ மனைகள்தான். அங்கே அப்படியல்ல. அங்குள்ள பொருளாதார சூழ்நிலையைக் கருதி, அதில் உள்ள சிரமத்தை செவிலியரே உணர்வார்கள் என்பதை நம்முடைய அங்கத்தினர்களும் உணர்ந்து உதவ வேண்டுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இவ்வளவு படுக்கைகள் இருக்கலாம் என்று சொல்லும்போது அதிகப்படியான நிரந்தர எக்ஸ்ட்ரா படுக்கைகள் சேர்க்கப்படுகின்றன. அதற்கான அளவில் செவிலியர்களை அதிகப்படுத்துவதில் என்ன கஷ்டம், அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதிகப்படியான படுக்கை என்பது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட approved எண்ணிக்கை அல்ல. ஏற்றுக்கொள்ளப்படாத எண்ணிக்கையில் நோயாளிகள் சேர்க்கப்படுகிறார்கள். மருத்துவத்துறையில் ஏற்கப்படுகின்ற அளவுக்கு ஏற்கப்பட்டு அதற்கான செவிலியர்களையும் நியமிக்க அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது.

### *Live Eyed Eggs*

* 60. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have received live eyed eggs of Kokance Salmon from British Columbia, Canada, for experimental purposes; and

(*b*) if so, the details thereof?

### மீன் முட்டை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) பரிசோதனைக் காரியங்களுக்காக கனடா, பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய நாடுகளிலிருந்து கோகனன்ஸ் சாலமன் மீன் முட்டையை அரசு பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) நீலகிரியிலுள்ள டிரவுட் (trout) மீன்வாழ் நீர் நிலைகளில், வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் புதிய வகை மீன்களை விட்டு வளர்க்கவும் உதகமண்டலத்திலுள்ள நீர்வாழ் உயிரியல் ஆராய்ச்சி நிலையத்தில் இந்த வகை மீன்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும், ஆய்வு நடத்தவும், சால்மன், கனடா,

பிரிட்டிஷ் கொலம்பியா, விக்டோரியா, மீன்-வனவிலங்கு பொழுது போக்குப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த சம்மர்லாந்து டிரவுட் ஹாட்சரியிடமிருந்து (Summtrland Trout Hatchery) நன்கொடையாகப் பெறறது.

THIRU A. R. DAMODARAN : Sir, I was under the impression that Salmon is generally grown in flowing rivers. May I know whether it is the intention of the Government to grow these species in perennial rivers and if so, what are the rivers in Tamil Nadu that are perennial?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தமிழ் நாட்டில் நீலகிரியிலும் கொடைக்கானலிலும் ஓடும் நீர்நிலைகளில் இப்படிப்பட்ட மீன் குஞ்சு பொறிக்கிற நிலைமையை வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் தான் அப்படி வைக்க முடிகிறது. அப்படி வைக்கப்பட்டுள்ள இடங்களில் மீன் பிடிப்பதற்கு உரிமம் பெற்று மீன் பிடிக்கும் முறையை இப்போது அரசாங்கம் வைத்திருக்கிறது.

**திரு. டி. சந்தோஷம் :** அந்த சோதனை முடிந்துவிட்டதா? அப்படியானால் சோதனையின் முடிவென்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சோதனை மூலமாக நல்ல வகையில் மீன் குஞ்சுகள் பொறிக்கப்பட்டு அவை வளர்க்கப்பட்டு வருகின்றன. வளர்க்கப்பட்ட மீன்களைத்தான் பொழுது போக்கிற்காக உரிமம் பெற்று சிலர் பிடித்து வருகிறார்கள்.

### *Fish Processing Unit.*

* 61 *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to establish fish processing unit in Thondi town, Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

**மீன் பதனிடும் நிறுவனம்**

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி நகரில் மீன் பதனிடும் நிறுவனம் ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, தொண்டி ஒரு வளமான துறைமுகம். அங்கே மீன் பிடிக்கிறவர்கள் சிறந்த முறையில் அந்தத் தொழிலை நடத்திவருகிறார்கள். ஆகவே அரசாங்கம் இதுபற்றி, மீண்டும் பரிசீலனை செய்து தொண்டியில் இப்படிப்பட்ட நிலையம் அமைக்க ஏற்பாடு செய்ய முன் வருமா ?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே மண்டபத்திலும் ராமேஸ்வரத்திலும் கீழ்க்கரையிலும் 50 டன், 60 டன் அளவில் உறைந்த மீன்களைச் சேமித்து வைக்கிற இடமும் மீன் உறைய வைக்கும் திட்டமும் செயல்முறையில் இருக்கின்றன. புதிய வகையில் தொண்டியில் மீன் பதனிடும் நிலையம் அமைக்க செயல்குறிப்பு ஏதுமில்லை.

### *Coffee Seeds*

* 62. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of a fall in the prices of coffee seeds; and

(*b*) if so, the action taken by the Government to reduce the price of coffee in hotels?

**காப்பிக் கொட்டை.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காப்பிக்கொட்டை விலை குறைந்துள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், சிற்றுண்டிச் சாலைகளில் காப்பியின் விலையைக் குறைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) (1) சென்னை ஓட்டல் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டம் 27—8—1970-ஆம் நாளன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் காப்பி விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அவர்களிடம் வலியுறுத்தப்பட்டது. காப்பி விலை கோப்பை ஒன்றுக்கு 30 காசிலிருந்து 25 காசாகக் குறைக்கப்பட்டது.

(2) ஓட்டல் அதிபர்கள் சங்கத்துக்குக் காப்பிக் கொட்டை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு 11—9—1970 அன்று பங்களூரிலுள்ள காப்பி வாரியத்துக்கு கடிதமெழுதப்பட்டது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்துக்கு காப்பிக் கொட்டை ஒதுக்கீடு எதுவும் செய்ய இசைவதற்குத் தன்னுலியலாதென்று காப்பி வாரியம் தெரிவித்திருந்தது. இருப்பினும், காப்பி வாரியம் வரையறுத்துள்ளவாறு தொகுப்பு அனுமதிகளை பெறுவதன் மூலம், சங்கம், திங்கள் தோறும் நடத்தப்படும் தொகுப்பு ஏலங்களில் கலந்துகொண்டு தனக்குத் தேவையான அளவு காப்பிக் கொட்டையை வாங்குவதில் தனக்கு மறுப்பில்லை என்று காப்பி வாரியம் தெரிவித்திருந்தது. இந்த நிலைமை குறித்து ஓட்டல் அதிபர்கள் சங்கத்துக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

(3) உற்பத்தி குறைந்த காரணத்தால் காப்பிக் கொட்டை விலைகள் 1970-ல் மிக உயர்ந்த அளவை எட்டியிருந்தன ; அவை இப்பொழுது இறங்கியுள்ளன.

*Hartal*

* 63. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is fact that the merchants of Erode Town went on a hartal on 16th October 1970; and

(*b*) if so, the reason therefor?

கடையடைப்பு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஈரோடு நகர வியாபாரிகள் 16—10—1970-ல் கடையடைப்புச் செய்தனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (*a*) There was a partial hartal by the merchants of Erode on 16th October 1970.

(*b*) The hartal was in response to a call by the Erode Chamber of Commerce who were agitated over the sealing of a shop in Erode on 8th October 1970 in the course of inspection by the officers of the Commercial Taxes Department.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வருமான வரி அதிகாரிகள் அந்தக் கடையைச் சோதனை செய்யும்போது, தவறான முறையில் நடந்து கொண்டார்கள் என்றும் வெள்ளைத்தாளில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கச் சொன்னார்கள் என்றும் அதன் காரணமாகத்தான் அங்கே ஹர்த்தால் நடந்தது என்றும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அங்கத்தினருக்குத் தெரிந்த தகவலை அவர்கள் சொன்னார்கள். அரசாங்கத்திடம் இருக்கிற தகவல் வேறாக இருக்கிறது. அதிகாரிகள் அந்தக் கடையைச் சோதனைச் செய்யச் சென்றபோது கடை முதலாளி கடையை அப்படியே விட்டுவிட்டு ஓடி விட்டார், மீண்டும் வரவேயில்லை. கடைசியில் ஒன்றும் செய்யமுடியாமல் கடையை சீல் செய்யவேண்டியிருந்தது. முதலாளிக்குச் சொல்லியனுப்பியும் அவர் வர மறுத்துவிட்டார். பிறகு ஆர்.டி.ஓ., டி.எஸ்.பி. ஆகியோரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு கடை திறக்கப்பட்டது. உள்ளேயிருந்து ஏமாற்றப்பட்ட பல ஏய்ப்புக் கணக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு வரி விதிக்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் அங்குள்ளவர்கள் ஹர்த்தால் செய்யத் தூண்டினார்கள் என்பது அரசாங்கத்திடம் உள்ள தகவல்.

*Agro Service Centres*

* 64. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Agro Industries Corporation to introduce Agro Service Centres in the State; and

(*b*) if so, the details thereof?



வேளாண்மைப் பணி நிலையங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் வேளாண்மைப் பணி நிலையங்களைத் தொடங்குவது குறித்த செயற்குறிப்புகள் வேளாண்மைத் தொழில் கழகத்தின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN: Question 65 is postponed.

*Hill Allowance.*

* 66. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the employees of the Tamil Nadu Electricity Board have requested the Government that their hill allowance too should be increased on a par with Government servants in the hill areas; and

(*b*) if so, the action taken thereon?

மலை வாழ்படி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மலைப் பகுதிகளில் வாழும் அரசு ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டது போன்று, தங்களுக்கும் 'மலை வாழ்படி' அதிகரிக்கப்படவேண்டுமென்று மின்வாரிய ஊழியர்கள் தமிழ்நாடு அரசை வேண்டியுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) இல்லை. எனினும், மின்சார ஊழியர்கள் மின்சார வாரியத்திடம் வேண்டியதின் பேரில், அவ்வாரியம் ஊழியர்களுக்கு கடந்த ஜூன் மாதம் 1-ம் தேதிமுதல் மலைவாழ்படி அதிகரிக்கவிருக்கிறது. இதன்படி ஊழியர்கள் தங்களது ஊதியத்தில் (பாதி கிராக்கிப் படி உட்பட) 10 சதவிகித அளவிற்கு மலைவாழ்படி பெற இருக்கின்றனர்.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

*Kalyana Mandapam of Thiruvalluvar Temple*

* 67. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 89 on 8th September 1970 the stage at which the construction of Kalyana Mandapam of Thiruvalluvar Temple now stands?

திருவள்ளுவர் கோயில் கல்யாண மண்டபம்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 6—9—1970 அன்று 89-ஆம் எண் சட்டமன்ற மேலவை வினாவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருவள்ளுவர் கோயில் கல்யாண மண்டபம் கட்டும் பணி தற்போது எந் நிலையில் உள்ளது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** திருமண மண்டபம் மச்சு மட்டம் வரை கட்டப்பட்டுள்ளது.

*Temple Car of Sri Ramaswamy Koil, Maduranthakam*

* 68. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether judgement has been delivered in the case against one T. Dhanapal, for his alleged act of setting fire to the temple car of Sri Ramaswamy Koil, Maduranthakam on 5th September 1969; and

(*b*) whether the Government have taken any steps to recover the loss to the temple from the properties of the person who set fire to the temple car?

மதுராந்தகம் ஸ்ரீ ராமசாமி கோயில் தேர்

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 5—9—1969-ல் மதுராந்தகம் ஸ்ரீ ராமசாமி கோயில் தேருக்கு டி. தனபால் என்பவர் தீ வைத்ததாக அவர் மீது தொடரப்பட்ட வழக்கின் மீது தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டதா?

(இ) தேருக்கு தீயிட்டவரின் சொத்துக்களிலிருந்து, கோவிலுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு பற்றுவதற்காக அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, அந்தத் தேருக்குத் தீயிட்ட வழக்கில் தானே தீ வைத்ததாக விசாரணையின்போது ஒத்துக்கொண்டதாகவும், அதனால் அவர் தண்டிக்கப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால் அவருக்கு நிலபுலம், ஆஸ்தி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கே ஒரு புதிய தேரைச் செய்வதற்காக லட்சக்கணக்கில் பண வசூல் செய்வதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நஷ்டத்தை உண்டுபண்ணியவருக்கு சொத்துக்கள் இருப்பதால் அந்த நஷ்டத்திற்கு ஈடாக அந்தச் சொத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்ட மாஜிஸ்ட்ரேட்(நீதி)யின் முன்னால் குற்றம் சாட்டப்பட்டு அதற்கான தண்டனையும் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் மீண்டும் செங்கற்பட்டு மாவட்ட மாஜிஸ்ட்ரேட்(நீதி)யின் முன்னால் குற்றம் சாட்டப்பட்டு அதற்காக வழக்கு மேல் விசாரணைக்கு திருப்பப்பட்டு, மாவட்ட மாஜிஸ்ட்ரேட் மறு விசாரணையில் குற்றவாளியை தனது 14—5—1970-ம் தேதிய உத்தரவின் மூலம் விடுதலை செய்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டு விட்டபடியால், இழப்பினை ஈடுகட்ட குற்றவாளியிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*Gratuity Scheme*

* 2. *S.N. Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to bring in any legislation with regard to the implementation of the gratuity scheme for the workers of all sectors; and

(*b*) if so, the present stage of the scheme?

பணிக்கொடைத் திட்டம்

**திரு. காட்டூர் கோபால்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைத்துத் துறை தொழிலாளர்களுக்கும் பணிக்கொடைத் திட்டம் அமுலாவது சம்பந்தமாக அரசாங்கம் சட்டம் கொண்டுவருவது பற்றி செயற்குறிப்பு ஏதும் உண்டா?

(இ) ஆமெனில் தற்போதைய நிலைமை என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) & (இ) சென்னையில் 1970 ஏப்ரல் திங்களில் நடந்த தென்மண்டலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்க மத்திய அரசுச் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும் என்று இவ்வரசு கருத்துத் தெரிவித்தது. புது டெல்லியில் 1971-ஆம் ஆண்டில் முறையே ஆகஸ்ட், அக்டோபர் திங்களில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டிலும், இந்தியத் தொழிலாளர் மாநாட்டிலும் இது பற்றி விவாதிக்கப்பட்டது. பணிக்கொடை வழங்கும் திட்டம் குறித்து மத்திய அரசுச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கருத்து தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. அதற்கு ஒருமித்த ஆதரவு கிடைத்தது. இந்திய அரசு அச் சட்டத்தை கொண்டு வருவதற்கு மேலும் தாமதம் ஏற்பட்டால் மாநில அரசே தனியாக சட்டம் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கூறினேன். எனவே முறைப்படி தொழிலாளர்கள் அனைவருக்கும் இத்திட்டத்தை நீடிக்க உடனடியாக சட்டம் இயற்றி இத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதன் அவசியத்தை மாநில அரசுகள் ஏற்றுக் கொண்டன. இந்திய அரசு இப்பொழுது நடைபெறும் நாடாளுமன்றக் கூட்டத்தில் அதற்குரிய சட்டத்தை கொண்டுவர இருப்பதாகத் தெரியவருகிறது.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—(*) An asterisk at the commencement of a speech indicates revision by the Member.]

[6th December 1971

## II. WELCOME ADDRESS TO THE CHIEF MINISTER ON HIS RETURN FROM THE U.S.A.

*மிஸ்டர் சேர்மன் :* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, பல ஆண்டுகள் வெள்ளையர் பிடியிலிருந்த பெரு நாட்டைப் போரிட்டு மாண்ட விடுதலை வீரர்களின் ரத்தாபிஷேகத்தால் அமெரிக்க அன்னையின் விலங்கினை ஒடித்த மாவீரன் வாஷிங்கடன் நடமாடிய எழில் மிக்க நகரத்திற்கு சென்று வந்திருக்கிறீர்கள்.

கால வெள்ளத்தாலும் கரைந்து போகாத பெருமைக்குரிய பெருமகன் ஆப்ரகாம் லிங்கன் கம்பீரமாக வீற்றிருந்து அரசோச்சும் சிலையைக் கண்டு வந்திருக்கிறீர்கள்.

உடல் தோல் ஒன்றின் நிறத்தின் மாறுபாட்டாலேயே, நீங்கள் மனிதர்களே அல்ல, அமெரிக்க சீமான்கள் அன்றாடம் பயன் படுத்தும் காலணிகள், கரண்டிகள், தட்டுகள், தளவாடங்கள் என்று எந்த அமெரிக்க நாட்டின் அரசியல் சட்டம் கூறியதோ, அந்த நீதியில்லாத சட்டத்தை—மனிதனை மனிதன் என்று ஒப்புக் கொள்ளவே பயந்த சட்டத்தை—சூரியன் கீழுள்ள சமுதாயத்தின் பகுதியை, மற்றொரு பகுதியை வெறும் மண் என்றும், கல் என்றும், சட்ட வல்லுனர்கள் விமர்சனம் கூற எந்த சட்டம் இடம் தந்ததோ அந்த சட்டத்தை நொறுக்கி, கருப்பர்கள் மனிதர்களே, அவர்களும் இந்த மண்ணின் மக்களே என்று சட்டமியற்றி எண்ணற்ற ஆண்டுகளாக அந்த ஏழைகள் சிந்திய வற்றாத கண்ணீரை வற்றச் செய்த மனிதாபிமானி ஆப்ரகாம் லிங்கன் எனும் கௌரவ மிக்க ஒரு மகனின் சிலையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

மர வீட்டிலிருந்த ஒரு படகோட்டி, வெள்ளை மாளிகையில் குடியேறினான் ஐக்கிய அமெரிக்காவில் குடியரசு தலைவன் என்ற பெருமையோடு.

நீக்ரோக்கள் என்ற அந்த ஏழைகள் அழுத கண்ணீரைக் கண்டு கண்ணில் தீப்பொறி பறக்கக் கூறினான் :

"If I have got a chance, I will hit it hard".

"எனக்கு ஒரு வாய்ப்பு கிட்டுமானால் இந்த கொடுமையை ஒரேயடியாக தலையில் அடித்து நொறுக்குவேன்" என்று அவன் எடுத்துக் கொண்ட சூள் உரைப்படி அவன் வெள்ளை மாளிகையில் அடியெடுத்து வைத்தவுடன் சட்டத்தால் செய்து முடித்தான். இனி வெள்ளையரும், கருப்பரும் சட்டத்தால் சமமானவரே என்ற சங்கநாதம் செய்தான். என்றாலும் அந்த கருணையின் வடிவம் வில்லியம் பூத் என்ற ஒரு கொடியவனால் ஒரு கலையரங்கில் இரவு 11 மணிக்கு சாய்க்கப்பட்டுவிட்டது. விம்மினர் விடுதலை விரும்பிகள். அது வேண்டாதவர்கள் எக்காளமிட்டனர். விடுதலை பெற்ற நீக்ரோக்கள் அவன் புனித உடலைக் கண்ணீரால் கழுவினர்.

நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே—நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று மக்களைத் தட்டிக் கேட்டு, மரணக் கோயிலில் சாய்ந்துவிட்ட ஜான் கென்னடி நடமாடிய நாட்டை கண்டு வந்திருக்கிறீர்கள்.

நச்சரவங்கள் நடமாடிய காட்டை அழித்து விட்டோம், இனி நச்சரவங்கள் இல்லை என்ற நிம்மதியில்லாமல் லூதர் கிங் போன்றவர்கள் கொல்லப்பட்ட சோகக் கதைகள் இன்றும் முடிந்தபாடில்லை.



6th December 1971]

ஒரு காலத்தில் தனி மனிதனுக்கே உரிமை வழங்காத நாட்டில் இன்று உலகுக்கு நீதி வழங்க ஒரு ஐக்கிய நாட்டு சபை எழில் மிக்க மாடங்கள், இயற்கை வளங்கள், நயாகரா நீர்வீழ்ச்சி எல்லாவற்றையும் பார்த்து நமது திரு நாட்டின் அரசியல் விளக்கங்கள் கூறி மத்திய மாநில உறவுகளின் தேவைகளைச் சொல்லி, தமிழ்க்குடி பிறந்தோரை நலம் கேட்டு தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்து, இரு பெரும் கல்விமான்களுக்கு அழைப்பு விடுத்து, கண்ணின் ஒளி பெற்று வெற்றியோடு திரும்பி வந்திருக்கிறீர்கள்.

மக்களாட்சியின் மாண்பினை அறிந்த ஒவ்வொருவரும் ஜனநாயகத்தில் கட்டளையிடுகிறவர்கள் மக்களே, அவைகளை நிறைவேற்றித் தர நாம், அதை நிறைவேற்றுவதற்கான சட்டங்களைத் தந்தவர்களும் அவர்களே, என்ற உண்மையை நம்பி ஆட்சி நடத்துகிறோம். மக்களாட்சியில் இருவேறு கருத்துக்கள் மோதிக்கொள்வதால் எழும் சுடரொளியே ஆட்சியை நடத்திச் செல்லும் விளக்குத் தூண்களாய் அமைகின்றன. மக்களில் ஒருவனாக பிறந்து தன் அசாதாரண திறமையினாலே, செயற்கரிய செய்து அந்த மக்கள் மத்தியிலே குன்றின் மேலிட்ட விளக்கென திகழ்கிறானே அவன் புகழ் சாவதில்லை. சாவென்பதே விழிக்காத தூக்கமென்றான் அலெக்சாண்டர். சாவின் சன்னிதானத்தில் அனைவரும் சமம் எனும் உண்மையை ஒப்புக்கொண்டே சாவெனும் சாக்காட்டில் ஒருவனானான். இறப்பெனும் அச்சத்தால் எந்த வீரனும் கண் மூடுவதில்லை. கோழையே சாவுக்கு அஞ்சுகிறான்.

தாயகம் தலைகுனிந்து நிற்கும் சோகத்தை நீக்க நாட்டில் ஒவ்வொருவனும் தலை நிமிர்ந்து போராடி தாய் நாட்டை நிமிர்த்தினான் என்பதுதான் வரலாறு. அதில் நமது தமிழகம் விடுபட்டதல்ல. ஒரு நாட்டை உருவாக்க வீரர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள், மேதைகள், சட்ட நிபுணர்கள் தேவைப் படுகிறார்கள். அவர்களில் நீங்கள் கவிஞராய், கலைஞராய், மருத்துவராய், எழுத்தாளராய், நடிகராய், நாடகாசிரியராய், முதல்வராய் திகழ்கிறீர்கள். இது தமிழகம் பெற்ற பரிசென நினைக்கிறோம்.

தனி மனிதன் உயர்வுக்காக பலர் உயிரிழப்பது மன்னராட்சி என்றும், பலர் உய்ய ஒருவன் உயிர் விடுவது மக்களாட்சி என்றனர். அந்த ஒருவனாக நாம் இருப்போம் என்று எண்ணித்துணிந்து செயலாற்றுவதில் நீங்கள் யாருக்கும் பின் வாங்கியதில்லை என்பதை நான் அறிவேன். இந்த மா மன்றம் அறியும், இந்த நாடு அறியும், நீங்கள் பெற்ற புகழில் எங்களுக்கு மகிழ்ச்சியும், நீங்கள் பெற்ற ஆற்றலில் எங்களுக்கு வலிமையும் உண்டென்பதைக் கூறி உங்கள் பயணம் வெற்றிகரமாக முடிந்து நலத்தோடு தாயகம் திரும்பிய உங்களை நீண்ட ஆயுள் பெற்று மீண்டும் புதிய தெம்போடு செயலாற்றுவீர்கள் என்று கேட்டுக்கொண்டு இந்த மா மன்றம் நிறைந்த நெஞ்சத்தோடு உங்களைப் பாராட்டுகின்றது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் தாங்கள் நான் மிகுந்த பெருமை அடையத்தக்க விதத்தில் என்னை வரவேற்று வாழ்த்தியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

C. 127-78—4

# III. GOVERNMENT RESOLUTION.

## Condemnation of Pakistan aggression on India.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தினுடைய ஒப்புதலுக்காக வைத்திட முன் வருகின்றேன் :

"கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக் குரலை மதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திரப் பங்களாதேஷ் முழக்கத்தைச் செய்ய முன் வந்தபோது அவர்கள் மீது ஈவு இரக்கமின்றி ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு பல லட்சக்கணக்கானவரைக் கொன்று குவித்ததோடு அல்லாமல், ஒரு கோடி அகதிகளை இந்தியா மீது சுமத்தியதின் மூலம் இந்திய நாட்டின் மீது மறைமுகத் தாக்குதலைத் தொடங்கிவிட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின் மீது படையெடுக்கவே துணிந்துவிட்ட செயலை தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இம்மன்றம் வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிரிகளை முறியடித்து இந்தியா பெரு வெற்றி பெறுவதற்கு எல்லா விதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்கு தருமென்கிற உறுதியை மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீரமறவர்களை வாழ்த்துவதிலும், அவர்தம் அருந்தியாகச் செயல்களைப் போற்றுவதிலும் இம்மன்றம் பெருமை கொள்கிறது.

வெளிப்பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை எதுவும் உருவாகாத சூழ்நிலைதான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணியாகத் திரண்டு நின்று எதிரியை வென்றிட வேண்டிய அவசியத்தையும் இம்மன்றம் வலியுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்துவத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இம்மன்றம் பிரகடனம் செய்கிறது.

தொடக்க காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய அரசு உலக நாடுகள் அனைத்துக்கும் தெளிவாக்கியிருப்பதோடு, நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன்வந்துள்ள நாடுகளுக்கு இம்மன்றம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகை சூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும், உறுதியும் கொண்டிட, போருக்குத் தேவையான ஆள், பொருள், கருவி அனைத்தையும் வழங்கிடவும், இந்தியப் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணையாக இருக்கவும் தமிழ்நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பும் நல்கிட வேண்டுமென்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

இந்த மிக முக்கியமான தீர்மானத்தை இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சியினுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித் தருவார்கள் என்ற நிறைந்த நம்பிக்கை எனக்கு உண்டு. இன்றைக்கு



இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நெருக்கடியை எப்படியும் நாம் சமாளிப்போம் என்கின்ற உறுதியைப் பெற்றிருக்கிறோம் என்றாலும், எப்படி எப்படி சமாளிக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதன்படி நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்தியாவிற்கும் பாகிஸ்தானத்திற்கும் இன்று நேற்று அல்ல, நீண்ட நெடுங்காலமாகவே கடும்பகை இருந்து வருகின்றது. இந்தப் பகைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய தருணமாகத்தான் இந்தத் தருணம் வாய்த்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பாகிஸ்தான் சர்வாதிகாரி இந்தியாவின் மீது படையெடுத்திருக்கிறார் என்று கூறுவதைவிட, ஜனநாயகத்தின்மீது ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார், மதச்சார்பற்ற நம்முடைய கொள்கையின் மீது தன்னுடைய சைன்யத்தை அனுப்பியிருக்கின்றார், நமது வாழ்க்கை முறைமீது குண்டுகளைப் பொழியத் தொடங்கியிருக்கின்றார் என்று கூறுவதுதான் மிகப் பொருத்தமானதாகும். சில சிலஇடங்களில், நான் சென்றுவந்த அமெரிக்க நாட்டிலேகூட, ஏடுகளிலே எழுதியதை நான் கண்டுவந்தேன். இந்தியாவிலே, பாகிஸ்தானத்திற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடி இன்று நேற்றல்ல, பல நூற்றாண்டுக் காலமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இந்து-முஸ்லீம் போராட்டத்தின் ஒரு பகுதி என்ற ஒரு தவறான விமர்சனத்தைச் சில பேர் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தியாவில் வாழுகின்ற முஸ்லீம் பெரு மக்களுடைய தொகை பாகிஸ்தானத்திலே வாழுகின்ற மக்கள் தொகையை விட அதிகமானதாகும். அவர்களுக்கு நன்மை செய்வதிலும், முஸ்லீம் மக்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அவர்களும் இந்த நாட்டு மக்கள், அனைவரும் இந்தியர்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையிலே அரசு நடத்தி, ஜனநாயக நெறி இந்தியாவிலே போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். ஆகவே இது நிச்சயமாக இந்தியர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் நடைபெறுகிற போராட்டம் அல்ல. அக்கிரமமாகவும், தணியாத வெறி காரணமாகவும், பல முனைகளிலே கேடு உண்டாக்க வேண்டுமென்பதற்காகவும், மறைமுகமாக இருக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்கின்ற நிலைமையிலேதான் இன்று பாகிஸ்தானின் சர்வாதிகாரி இத்தகைய காரியங்களைச் செய்து வருகின்றார். இந்தப் போராட்டத்திற்கு முன்பு ஆரம்பமான நிகழ்ச்சிகளை நாம் ஒரு முறை மனதிலே நினைவுபடுத்திக்கொள்வது நலமென்று நான் கருதுகிறேன். சென்ற ஆண்டு பாகிஸ்தானுடைய ஒரு கூறு என்று கருதப்படுகிற அல்லது சொல்லப்படுகிற கிழக்கு வங்காளத்தில் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயக முறைப்படி பெரும்பான்மையான இடங்களில் இன்று சிறையிலே இருக்கிற முஜிபுர் ரஹ்மான் தலைமையிலே அவருடைய கட்சி வெற்றி பெற்றது. பி.ப. 4·50.
பெரும்பான்மையான இடங்களைப் பெற்ற பிறகு, ஜனநாயக முறைப்படி, அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அவருக்குத் தர வேண்டிய உரிமையைத் தராமல்; அவர் பெற்றிருக்க வேண்டிய பதவிகளை அவர் பெறவொட்டாமல் செய்து, அந்தத் தேர்தல் முடிவுகள் நடைமுறைக்கு வராதபடி, ஜனநாயகத்தைக் காலிலே போட்டு மிதித்து விட்டு, ராணுவ ஆட்சி பல நடவடிக்கைகளை அதிவேகமாகவும், மிகத் துரிதமாகவும் எடுத்து, பல லட்சக்கணக்கான மக்களை வேண்டுமென்றே கொலை செய்கின்ற அளவிற்கு பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி நடந்துகொண்டார். அந்த நேரத்திலே அங்கேயிருந்து ஒரு கோடிக்கு மேற்பட்ட அகதிகள் இந்தியாவிற்கு வர நேரிட்டது. இப்படி ஒரு கோடி அகதிகள் இந்தியாவிற்கு வருகிறார்கள் என்றால், அது சாதாரணமான விஷயமல்ல. சில பேர் என்னைத் தெரியாமல் கேட்டார்கள், நான் சென்ற இடங்களிலே நிருபர்கள் கேட்டார்கள். "ஏற்கெனவே 55 கோடி

னர் இருக்கிற இந்திய பெரு நாட்டில் ஒரு கோடி அகதிகள் வருகிறார்கள்
என்றால் 56 கோடி மக்கள் என்று தானே பொருள், இது ஒரு பெரிய
தொல்லையா, இதற்காக அலட்டிக் கொள்கிறீர்களே", என்றார்கள். நான் சொன்
னேன். "55 கோடி மக்கள் 56 கோடி மக்களாகிறார்கள் என்றால்,
வதில்லை. 55 கோடி மக்கள், 56 கோடி மக்களாகிறார்களென்றால், அவர்களுக்குப்
அவர்களைப் பராமரிக்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்படு
பிறக்கின்ற குழந்தைகள் மூலம் 56 கோடி ஆவார்கள். அந்தக் குழந்தைகளைக்
காப்பாற்றுவதற்குக் குடும்பங்கள் இருக்கும். பெற்றோர், உறவினர் இருப்பார்
கள். அந்த அந்த வீட்டுத் தலைவர்கள் இருப்பார்கள். ஆனால் இன்றைக்கு
வந்திருக்கக் கூடிய மக்கள் பெருக்கம் திடீரென்று இந்தியாவிலே குடியேறியவர்
களால் ஏற்பட்ட பெருக்கமாகும். வேலை செய்யக் கூடிய நல்ல வாலிப வயது
டையவர்கள், சோம்பேறிகளாக, அகதிகளாக முகாம்களிலே இருந்துகொண்டு,
தங்களுடைய வாழ்க்கையை எண்ணியவாறு நொந்த மனத்தோடு, சர்க்காரு
டைய தயவை எதிர் பார்த்துக் கொண்டு, இருக்கக் கூடிய சூழ்நிலை உருவா
கிறது. அவர்களை நேரிடையாகக் கவனிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள்
சர்க்காருக்கு ஏற்படுகிறது. ஏறத்தாழ இதுவரையிலே 500 கோடி
ரூபாயை இந்த அகதிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம்." இவைகளை நான்
அவர்களுக்கு எடுத்துச் சொன்னதற்குப் பிறகு இந்தியாவின் நியாயத்தை
அவர்கள் புரிந்து கொண்டார்கள். பத்திரிகைகளிலே அமெரிக்கா போன்ற
நாடுகளிலே இவை வெளியிடப்பட்டன. அந்த நாட்டு மக்கள் இந்தியாவின்
பக்கம் இருக்கிற நியாயத்தை உணர முடிந்தது. நியூயார்க் டைம்ஸ் போன்ற
பத்திரிகைகள் அமெரிக்க நாட்டு மக்களின் குரலை எதிரொலிக்கின்றன. இதற்
குப் பின்னாலே இந்தியாவின் நியாயத்தை அவர்கள் எடுத்துப் பேசுகிறார்கள்.
அங்கே காட்டப்பட்ட ஒரு டெலிவிஷன் காட்சியிலே அவர்கள் பாகிஸ்தானில்
உள்ள நிகழ்ச்சிகளை உள்ளவாறு காட்டினார்கள். எந்த அளவிற்கு மக்களிடத்
திலே பாகிஸ்தானிகள் நடந்து கொள்கிறார்கள், எவ்வளவு கோரமான கொடுமை
களை இழைக்கிறார்கள் என்பதை நெஞ்சுருகக் காட்டினார்கள். பாகிஸ்தான்
ராணுவ வெறியர்கள் மக்களின் வயிற்றைக் கிழிக்கின்ற காட்சியினை டெலிவிஷ
னிலே கண்டேன். அது மாத்திரமல்ல, பெண்கள், ஆண்கள், வயோதிக மக்கள்
இவர்களை துப்பாக்கியாலே சுட்டு வீழ்த்துகிற கொடுமையினையும், அவர்கள்
கழுத்திலேயிருந்து வயிறு வரையில் கத்தியால் பிளக்கிற பயங்கரத்தையும்,
அந்தப் பிணங்களைப் புதைக்கக் கூட முடியாமல் வன்முறை நிகழ்வதையும்
பெண்கள் பட்டப்பகலிலே, வெட்ட வெளியிலே கற்பழிக்கப்படுகிற கொடூரமான
காட்சியினையும் அமெரிக்க நாட்டு டெலிவிஷன் நிலையம் அனைவருக்கும் காட்டி
னார்கள். அவைகளையெல்லாம் பார்த்த நேரத்திலே தாங்க முடியாத அளவிற்கு
வேதனை நம்மைப் போன்றவர்களுக்கு நிச்சயமாக ஏற்படும். நியாயத்தை
அனைவரும் உணரத் தக்க விதத்திலே அந்த டெலிவிஷன் காட்சி அமைந்தது.
இன்றைக்கு அகதிகளாக வந்திருப்பது, நான் இந்தத் தீர்மானத்திலே எடுத்
துக் காட்டியது போல, ஒரு மறைமுகமான படையெடுப்பு. ஏற்கனவே
இதைப் பாகிஸ்தான் இந்தியா மீது செய்து விட்டது என்று இந்தியத் தலைமை
யமைச்சர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் தன்னுடைய உலகச்
சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு எல்லா நாடுகளிலும் விளக்கியிருக்கிறார்கள்.
இந்தியாவின் நியாயத்தை எடுத்து உரைத்திருக்கிறார்கள். இந்தியா-பாகிஸ்தான்
தகராறு என்று யாரும் இதைக் கருதாதீர்கள். பாகிஸ்தான் எப்படி
நடந்துகொள்கிறது, இப்படி ஒரு கோடி அகதிகளை இந்தியாவிற்கு அனுப்பிய
தால் இந்தியாவில் எப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதையும்,
இதற்கு ஒரு அரசியல் தீர்வு காணவேண்டும், அப்படிப்பட்ட அரசியல் தீர்வு





காண்பதற்கு மனிதாபிமானத்தோடு இங்கே புகுத்தப்பட்டிருக்கிற அகதிகளை
அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டாக வேண்டும், இந்த அகதிகள் இங்கே
இருப்பதால் இந்தியாவிற்கு எப்படிப்பட்ட சுமை ஏற்படுகிறது என்பதை
யெல்லாம் விளக்கமாக எடுத்து வைத்தார்கள். அந்த விளக்கத்தின் மூலம் பல
நாட்டு அரசியல் வாதிகள், பல நாடுகளிலே அரசாட்சியிலே இருக்கின்றவர்கள்,
பல நாட்டு மக்கள் இந்தியாவினுடைய உண்மையான நிலையைப் புரிந்து கொண்
டிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் தலைமையமைச்சர் கேட்டுக் கொண்
டதற்கிணங்க ஒரு நல்ல அரசியல் தீர்வு காண்பதற்கு அல்லது
பாகிஸ்தான் சரியான பாதையிலே சென்று இந்தியாவிலே புகுத்தப்
பட்டிருக்கிற ஒரு கோடி அகதிகளை மீண்டும் திரும்பப் பெற்றுக்
கொள்வதற்கான அறிவுரைகளை மிக முக்கியமான இடத்திலே உள்ள
நாடுகள் வழங்கவில்லை. வழங்காதது மட்டுமல்ல, தன்னுடைய நேசக்
கரத்தை பாகிஸ்தான் பக்கத்திலேதான் வைத்திருப்போம் என்பதற்
கான சூசகமான சொல்லை அவர்கள் காட்டியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே
இந்தியா தானே வலுவிலே சென்று போரிலே ஈடுபட்டது என்று இல்லாமல்
இந்தியாவின் மீது பாகிஸ்தான் பாய்ந்தது என்பதற்கு அடையாளமாக ஆக்ரா
விலும், அமிருதசரசிலும், ஸ்ரீநகர் பக்கத்திலும், இன்னும் வேறு பல இடங்க
ளிலும் குண்டுமாரி பொழிந்திருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது
போல, இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்திருக்கிறது என்று கூறுவதை
விட, தூங்கும் புலியை இடறினார்கள் என்று சொல்வது மிகப் பொருத்தமாக
இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தியா அகதிகள் பிரச்சினையைத்
தீர்க்க வேண்டுமென்று கருதியது. இந்தியா அரசியல் தீர்வின் மூலம் இந்தப்
பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கூறியது. தன்னாலே ஒரு கோடி அகதி
களைச் சுமக்க முடியாது, எனவே அவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்
டும் என்று எடுத்துக் காட்டிய இந்தியா தன்னுடைய நியாயமான வேதனையை
அகில உலகத்திற்கும் எடுத்துக் கூற இந்தியாவின் சார்பிலே சுற்றுப் பிரயா
ணத்தை மேற்கொண்ட திருமதி இந்திரா காந்தியின் மூலம் விளக்கம் அளித்
தது. நம்முடைய நாட்டு மானத்தையும், நாட்டினுடைய மண்ணின் சுதந்திரத்
தையும் காக்க எதிரியை நாம் தாக்குவது என்பதிலே தவறு கிடையாது என்ற
அளவிற்கு திருப்பித் தாக்குகிற முயற்சியிலே இன்றைக்கு நாம் பெரிய வெற்றி
களைப் பெற்றிருக்கிறோம். பலத்த சேதத்தை பாகிஸ்தானுக்கு ஏற்படுத்தி வரு
கிறோம். நமக்கு 17 விமானங்கள் இதுவரையிலே சுட்டு வீழ்த்தப்பட்டன
என்ற கணக்கு என்றால், பாகிஸ்தானின் விமானங்கள் 47 சுட்டு வீழ்த்தப்பட்டி
ருக்கின்றன. அதேபோல பெரிய கஷ்டத்திற்கு ஆளாகிற அளவிற்கு பாகிஸ்
தானுடைய 67 டாங்கிகள் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. மூன்று
கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. வங்கக் கடலில் வந்த சப்மரின்
அடித்துத் துரத்தப்பட்டு உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்
பட்ட இழப்பை இன்றைக்கு பாகிஸ்தான் பெற்றிருக்கிறது. இது பாகிஸ்தா
னுக்கு ஏற்பட்ட இழப்பின் ஆரம்பம். இழப்பின் முடிவு பாகிஸ்தானமாகவே
இருக்கக் கூடும் என்ற அளவிற்கு இன்றைக்கு நிலைமை போய்க்கொண்டிருக்
கிறது.

இன்று காலையிலே டில்லி நாடாளுமன்றத்தில் நாமெல்லாம் மகிழத் தக்க
வண்ணம் நம்முடைய நாட்டுத் தலைமையமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைச் பி.ப. 5.00.
செய்தார்கள். பங்களா தேஷை இந்தியா பாராட்டுகிறது, அங்கீகரிக்கிறது.
பங்களா தேஷை இந்தியா மட்டும் அங்கீகரித்தால் போதுமா என்ற கேள்வி
எழும். இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற பங்களா தேஷ் வெகு

விரைவிலே மற்ற உலக நாடுகளாலும் அங்கீகரிக்கபப்டும் என்று நாம் நிச்சய
மாக நம்பலாம். ஐக்கிய நாடுகள் மன்றத்தாலும் அங்கீகரிக்கப்படும்.
தம்மாலே முதன் முதலில் அங்கிகரிக்கப்பட்ட செஞ்சீன ஐ.நா. சபையால் அங்கி
கரிக்சப்படாமல் இதுவரையிலே இருந்து வந்தது. ஆனால் பல ஆண்டுகளுக்குப்
பிறகு இது ஐ.நா. மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு அந்த மன்றத்திலே
அமர்ந்திருக்கிறது. நம்மாலே அங்கீகரிக்கப்பட்டுள்ள பங்களா தேஷ் கொஞ்ச
நாட்கள் கடந்தாலும், அங்கிகரிக்கப்படும் என்றும், ஐ.நா. மன்றத்திலும் உறுப்
பினராகும் என்றும் நாம் அனைவரும் உறுதியாக ஒப்புக்கொள்ளலாம். இப்ப
டிப்பட்ட இந்தப் போராட்ட சூழ்நிலையில் வெளிப் பகையை விட உட்பகைதான்
மிகவும் ஆபத்தானது. அதை நாம் சமாளித்துத் தீரவேண்டும். நான்
உட்பகை என்று கூறுவது ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்குமிடையே ஏற்ப
டுகின்ற மோதல்களை அல்ல. நம்மிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை அல்ல.
இந்தப் போரை பயன்படுத்திக்கொண்டு இதுதான் சமயம் என்று கள்ளச்
சந்தையார்கள், இருட்டுச் சந்தையார்கள், கொள்ளை வியாபாரிகள் இவர்கள்
எல்லாம் எப்படியும் இந்த நேரத்திலே மக்களை ஏமாற்றலாம். எப்படி, எப்படி
மக்களை ஏமாற்றலாம் என்றெல்லாம் அந்த வித்தையை கற்றுக்கொண்டு வரு
வார்கள். காலையிலே பேரவையிலேகூட என்னுடைய பேச்சின் முடிவிலே
குறிப்பிட்டேன், முன்பு எல்லாம் யுத்தம் முடிந்து ஒரு பெரும் புள்ளி
யைப் பார்த்து 'இவர் எப்படி இருக்கிறார்' என்று கேட்டால், யுத்தத்திற்குப்
பிறகு நன்றாக இருக்கிறார், யுத்தத்திலே நன்றாக சம்பாதித்தார் என்றெல்லாம்
சொல்லுவார்கள் என்று. யுத்தத்திலே கால் இழந்தவன் இவன், கை இழந்
தவன் இவன், உயிர் இழந்தவன் இவன் என்றுதான் சொல்லக் கேள்விப்படு
வோம். ஆனால் யுத்தம் நடக்கும் சமயத்திலே, சிலர் யுத்தத்தினால் சொத்து
சேர்த்தார்கள், இலாபம் பெற்றார்கள் என்ற கணக்கிலே வருகிறார்கள். ஆனால்
இந்தத் தடவை, இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்தத் தீர்மானத்தை
நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், நாம்
அனைவரும் ஒரு உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தடவை யுத்தத்
தால் கால் இழந்தவன் இவன், யுத்தத்தால் கை இழந்தவன் இவன், யுத்தத்தால்
மார்பிலே காயம் வாங்கியவன் இவன் என்று காட்ட வேண்டுமே தவிர, யுத்தத்
தால் இவன் சம்பாதித்தான் என்று காட்டினால் அதைவிட நமக்குப் பெரிய
அவமானம் எதுவுமே இல்லை என்று இந்த மன்றத்திலேயுள்ள அனைவரும்
நன்றாக உணர வேண்டும். ஆகவே, அப்படிப்பட்டவர்கள்தான், பதுக்கல்
வியாபாரிகள்தான் பாகிஸ்தான் எதிரியை விட இந்தியாவுக்கு, இந்தியப்
பெருமக்களுக்குப் பெரும் எதிரிகள் ஆவார்கள் என்ற உணர்ச்சியோடு இந்தப்
போராட்ட காலத்திலே நடந்துகொள்ள வேண்டும். அப்படி நடந்துகொள்ளும்
காலத்தில் அரசு அப்படிப்பட்ட சமூக விரோதிகள் மீது எந்தவித நடவடிக்
கையும் எடுக்கத் தயங்காது என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட
நடவடிக்கைகளை அதிகாரிகள்தான் எடுக்க வேண்டும் என்றில்லாமல், சமூக
விரோதிகளை அடையாளம் காட்டுகின்ற அந்தப் பெரும் பொறுப்பைப் பொது
மக்களும் எடுத்துக்கொள்ளலாம்; மக்கள் பிரதிநிதிகளும் எடுத்துக்கொள்ள
லாம். அப்படிப்பட்ட சமூக விரோதிகள் அடையாளம் காட்டப்படுகின்ற
அளவுக்கு நீங்கள் எல்லாம் செயல்புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன். அப்படி அவர்கள் அடையாளம் காட்டப்படுவார்களானால், நம்முடைய
அதிகாரிகளும், அதிகாரிகளின் சார்பாக இந்த அரசும் நிச்சயமாக அவர்கள்
மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நான் இங்கே தெரி
வித்துக்கொள்ளுகிறேன்.





யுத்த நேரத்தில் போர்க் களத்திலே இருக்கின்ற வீரர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கவும், போர்க் காலத்துச் செலவுகளை ஈடுகட்டவும், ஒவ்வொரு நாளும் செலவழிந்து வருகின்ற ரூபாய்க்கு வழி வகை செய்யவும், அரசு மாத்திரமல்லாமல் இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த வகையிலே யுத்த நிதி கட்டப்படுமானால், அதற்கு நம்மால் இயன்ற தொகையைத் தந்திட வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் நல்ல காரியத்திற்குத் தொகை வழங்க என்றுமே தயங்கமாட்டார்கள். அதுவும் இப்படிப்பட்ட நெருக்கடியான காலத்திலே இந்த மண்ணுக்கு வந்த ஆபத்தை நீக்குகின்ற வகையில் அவர்கள் மனம் தளராமல் பெரும் தொகையைத் தந்து விடுவார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். இன்று காலையிலே பேரவை யிலே கூட நான் அறிவித்திருக்கிறேன், அமைச்சர் பெருமக்கள் 500 ரூபாய் யுத்த நிதிக்குத் தருகிறார்கள் என்றும், சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 100 ரூபாய்க்குக் குறையாத தொகையைத் தரவிருக்கிறார்கள் என்றும் அறிவித்திருக்கிறேன். அவர்களுக்கு எல்லாம் இந்த மன்றம் இளைத்த தில்லை. இங்கிருக்கும் உறுப்பினர்கள் நூற்றுக்கு மேல் இருநூறு கூட கொடுக்கத் தயாராக இருப்பார்கள் என்பதை அறிவேன். ஆகவே, 100 ரூபாய்க்குக் குறையாத ஒரு தொகையை இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (கை ஒலி எழும்புகிறது.) தருவீர்கள் என்பதற்கு அடையாளமாக நான் உங்களுடைய கையொலி யைப் பெற்றிருக்கிறேன். ரத்த தானம் செய்வது யுத்த காலத்திலே மிக முக்கி யமான செயலாகும். அதற்கு ஏற்ற வகையிலே இங்குள்ள சட்டப் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ரத்த தானம் செய்ய, தங்க ளுடைய குரூப்புகளை பார்த்து கணக்கு எடுக்க இங்கேயே நாளை அல்லது மறு நாள் மருத்துவர்கள் வந்து சோதனை செய்யவிருக்கிறார்கள். ரத்த தானம் செய்ய விரும்புகின்ற சட்டப் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர் களும் இங்கேயே யுத்தத்திலே ஈடுபட்டிருக்கும் ஜவான்களுக்குத் தேவையான ரத்தத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் தருகின்ற ரத்தத்தினால் தேவையான ரத்தங்களை எல்லாம் தந்துவிடுகிறோம் என்பதில்லை. நாம் தருகின்ற பணத்தின் மூலம் போருக்குத் தேவையான எல்லாப் பணத்தை யும் தந்துவிடுகிறோம் என்பதில்லை. இப்படி நாம் கொடுப்பதன் மூலம் ஓர் அடையாளமாக நம்முடைய உணர்ச்சிகளைக் காட்டுகிறோம். "சிறு துளி பெரு வெள்ளம்" என்பது போல், இந்த அடையாளம் இந்தியா முழுவதும் நிச்சயமாகப் பரவும், அப்படிப் பரவும்பொழுது இந்தியா வெற்றிகளைப் பெறுவ தற்கான வாய்ப்புக்கூறுகள் அதிகமாகும்.

இந்தியாவின் வெற்றி ஐயப்பாட்டிற்குரியது என்று யாரும் கருதத் தேவை யில்லை. உங்களுக்கு நன்றாகத் தெரியும், இன்னும் 10 அல்லது 15 நாட்களிலே கூட போர் முடிந்துவிடக் கூடும் என்ற அளவுக்கு இன்றைக்கு நம்முடைய வீரர்கள் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். யாஹ்யாகான் சொல்லியிருக்கிறார், இதுதான் என்னுடைய கடைசி யுத்தம் என்று. அவரு டைய ஜாதகத்தை அவ்வளவு முன் கூட்டியே தெரிந்திருப்பதற்கு நாம் எல்லாம் மகிழ்ச்சியடைய வேண்டும். ஆகவே, பாகிஸ்தான் இதைக் கடைசி யுத்தமாக நடத்தட்டும்; இனிமேல் நாங்கள் யார் பக்கமும் திரும்ப மாட்டோம் என்கின்ற பாடத்தைக் கற்பிக்கும் பெரும் அளவுக்கு இந்தியா அவருக்கு நல்ல ஒரு அடியைக் கொடுக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதற்கு ஏற்ற வகையில் வீரம் செறிந்த தமிழ் நாட்டு மக்கள் இந்திய அரசுக்கும், பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கும் நம் எல்லையைக் காக்க எடுக்கும் பணி

களிலே எந்த நேரத்திலேயும் நல்ல ஒத்துழைப்பைத் தருவார்கள் என்பதற்கு அடையாளமாக இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற இருக்கிறோம். நான் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் ஏகமனதாக இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

■ திரு. கே. ராஜாராம்: மன்றத் தலைவரவர்களே, நமது முதல்வர் முன்மொழிந்த தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக நான் முழு மனதோடு ஆதரிக்கின்றேன். நாம் சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட 25-ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25-ஆண்டுகளாக ஜனநாயக ரீதியில குடியரசு அமைத்து மக்கள் நல்வாழ்விற்காக அரசாங்கத்தை நடத்தி வருகிறோம். ஆனால் அதே நேரத்தில் நம்முடன் சுதந்திரம் அடைந்து நம்மை விட்டுப் பிரிந்த பாகிஸ்தான் இடைக்கால அரசாங்கத்தில் உதவிப்பிரதம மந்திரியாக இருந்த லியாகத் அலிகான் தலைமையில் ஒரு அரசாங்கத்தை முதலிலே அங்கே அமைக்க ஆரம்பித்தும், தேர்தல் நடத்துவதற்கு முன்னாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். பாகிஸ்தான் பிறக்கும்போதே கொலையோடு பிறந்தது; அதற்குப் பின்னால், ஜனநாயகம் என்பதற்கு இடமில்லாமல் ராணுவ ரீதியில் யதேச்சாதிகார ஆட்சி நிறுவப்பட்டு தொடர்ந்து ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்களால் நான்கு முறை நாம் தாக்கப்பட்டு எவ்வளவோ பொறுமையை எல்லாம் மேற்கொண்டு, அந்தப் பொறுமையை இன்றைக்கு இழக்கும் தருவாயில் நாம் இருக்கிறோம். நான்கு முறைகளும் நாம் பாகிஸ்தானுக்குப் பாடம் கற்பித்துக் கொடுத்திருக்கிறோம். கடைசி முறையாக "இது கடைசி யுத்தம்" என்று யாஹியாகான் சொன்னது போல், இது கடைசி யுத்தமாகவே இருக்க வேண்டும். பாகிஸ்தான் மக்கள் நல்லவர்கள். அந்த மக்களுக்கும் இன்றிருக்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தமே கிடையாது. தேர்தலின் மூலம் வந்த அரசாங்கம் இல்லை அது. ஆகவே, பாகிஸ்தான் அரசு என்று சொல்லும்போது, அங்கே ஆளுபவர்களைத்தான் நாம் சொல்கிறோம். அவர்கள் நமக்கும் அந் நாட்டு மக்களுக்கும் இடையிலே பெரிய குரோதத்தையும், விரோதத்தையும் உண்டுபண்ணிக் கொண்டு, தங்களுடைய ஆட்சியை நீடித்துக்கொள்வதற்காகவே ஆட்சியை நடத்தி வருகிறார்கள். யுத்தத்திலேயும் அதைப் போலவேதான், யுத்தம் இல்லையென்றால், அவர்கள் ஒரு நாள் கூட அங்கே ஆட்சியிலே வீற்றிருக்க முடியாது. அதற்காகவே யுத்தம் நம் மீது ஆரம்பித்திருக்கிறார்கள். பாகிஸ்தானை ஆளுபவர்கள் கடைசி முறையாக யுத்தம் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நாமும் அப்படித்தான் நினைக்கிறோம். நம் தலைமுறையோடு நமக்கும், பாகிஸ்தான் நாட்டு மக்களுக்கும் இருக்கக் கூடிய விரோத உணர்ச்சி மறைந்துவிட வேண்டும். நம்முடைய சந்ததியாருக்கு அந்த விரோத உணர்ச்சியை விட்டுப்போக வேண்டாம் நாம். எப்படியாவது இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டும். இனிமேல் நாமும் பாகிஸ்தான் மக்களும் சகோதரர்களாக வாழ வேண்டிய நிலைமையை இந்த
பி.ப. 5·10, யுத்தம் கொடுத்துவிட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்த ராணுவ ஆட்சி மறைந்து அங்கும் பூரணமான ஜனநாயக ஆட்சி நிறுவுவதற்கு வழி பிறக்கட்டும் இந்த யுத்தத்தின் மூலம். இப்போது கடந்த டிசம்பரில் நடந்த தேர்தலின் மூலம் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுவிடும் என்று நம்பினோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, அந்த நாட்டின் பிரதமராக இருந்து நம்முடைய அண்டை நாட்டுப் பிரதமர் என்ற பேருடன் ஆட்சியை ஜனநாயக ரீதியில் நடத்திக்கொண்டு வரவேண்டிய வீரர் முஜிபுர் ரஹ்மான் அவர்கள் கைதியாக ராணுவத்தினர் கையில் இப்போது இருக்கிறார். இதைக் காட்டிலும் ஜனநாயகத்திற்கு இழிவு வேறு ஒன்றும் வேண்டியதில்லை. இந்த ஒரு விஷயத்திலேனும் உலகத்தில் ஜனநாயகத்திற்கு ஆதரவு கொடுக்கும்



எல்லா அரசாங்கங்களும் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும். ஆனால் என்ன காண்கிறோம், பல அரசுகள் தங்கள் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடத்தாலும் கூட, தங்களுடைய சுயநலத்தை முன்னிட்டு, பாகிஸ்தானில் ஜனநாயகம் நிறுவாமலிருக்க, மேலும் ராணுவ ஆட்சி நடத்திக் கொண்டிருப்பதற்கு வழி செய்து கொண்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் செக்யூரிட்டி கவுன்சிலில் இரண்டு தினங்களாக நடக்கும் வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்: நேற்று ஒரு தீர்மானம் ரஷியாவினால் 'வீடோ' செய்யப்பட்டது. இன்று காலை மற்றொரு தீர்மானமும் ரஷியாவினால் 'வீடோ' செய்யப்பட்டது என்று பார்க்கும்போது, நமக்கு ரஷியா, நாம் எதிர்பார்த்தது போலில்லாமல், எவ்வளவோ பெரிய நட்பு நாடாக மாறிக்கொண்டிருக்கிறது. இது நமக்கு மன மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட அமெரிக்காவும் மற்ற சில நாடுகளும் ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைப்பதற்கான வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து நமது பிரதமர் முன் யோசனையுடன் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும், ரஷியாவோடு செய்துகொண்ட ஒப்பந்தமும் நமக்கு எவ்வளவு நன்மையைக் கொடுத்திருக்கிறது என்று சொல்லி அவரைப் பெரிய ராஜதந்திரி என்ற முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தகுந்த காலத்தில் உரிய நேரத்தில் பங்களா தேஷை நாங்கள் அங்கீகரிப்போம் என்று சொன்னபடி, இன்று காலையில் அங்கீகரித்தார்கள். டில்லியில் பாராளுமன்றத்தில் சபையே அதிரும்படி கூச்சலோடு அவரை 'ஜோன் ஆஃப் ஆர்க்' என்றும், ஜான்சி ராணி என்றும் புகழ்ந்து எதிர்க் கட்சியினர் பாராட்டியிருக்கிறார்கள். ஆரம்பத்தில், முதல்வர் அவர்கள் சொன்னது போல, தமிழ்நாடு அவரைப் பின்பற்றி இந்த முயற்சியில் முழுதாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கும். போரில் இருக்கிறவர்கள் மட்டும் ஒரு போரை நடத்தி விட முடியாது. போர்முனைக்குப் பின்னால் நாட்டிலுள்ள நாம் வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்ய வேண்டும். உற்பத்தி குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு முன் இருந்ததைவிட அதிக உணர்ச்சியுடன் தொழிலாளர்களும் தொழில் அதிபர்களும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். போரில் ஈடுபட்டிருக்கிறவர்களின் சௌகரியங்களை மற்றவர்கள் கவனிக்க வேண்டும். நாம் அனைவரும் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்பவர்கள், அவர்களுடைய குடும்பங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும். சிப்பாய்களோ மற்றவர்களோ அவர்களுடைய குடும்பங்களுக்கு எந்த விதமான குறைபாடும் ஏற்படாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக முக்கியக் கடமையாகும். வீட்டைப்பற்றிய சிந்தனை போரில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு கொஞ்சங்கூட இருக்கக் கூடாது. தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கிற வீரர்கள் யுத்தம் ஆரம்பித்த தினத்திலிருந்தே தமிழ் நாட்டின் பெருமையைக் கொடி தூக்கி, தமிழ் நாட்டின் புகழையும் நிலை நாட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய குடும்பங்களை நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். அதற்கென தனிக் குழு அமைத்து அவர்களுக்கு வீட்டுச் சிந்தனை இல்லாமல் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். அத்துடன் விலைவாசியை யுத்தத்தின் காரணமாக அதிகப்படுத்தி, பண்டங்களை மறைத்து, பதுக்கல் செய்வதைத் தடுக்க வேண்டும். நேற்றே ஆரம்பித்து விட்டார்கள். முதல்வர் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பி நமது ஊருக்கு வந்து சேர்ந்த அன்றே சென்னை நகரத்தில் மண்ணெண்ணை கிடைக்கவில்லை, மக்கள் டின்களை வைத்துக் கொண்டு தெருக்களில் அலைகிறார்கள். அதனால் முதல்வர் அவர்கள் உஷாராகிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனே நாம் கொஞ்சம் தயவு தாட்சண்யமில்லாமல் இம்மாதிரிப் பதுக்குபவர்களை ஒடுக்கி சாமான்கள் தாராளமாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

THIRU A. R. DAMODARAN : May I correct the misapprehension, Sir? The Civil Supplies Commissioner has instructed the kerosene agents not to sell kerosene and even to-day in South Arcot district, the Collector has instructed all Kerosene dealers not to sell kerosene because they are taking account of the stock position. Let use not accuse one particular community that they are doing something bad...

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, சிவில் சப்ளை கமிஷனர் அவர்கள் எண்ணெய் ஆலை அதிபர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சுவார்த்தை நடத்தி இன்று முதல் விற்பதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விற்கச் சொல்லியிருக்கிறோம். மாவட்டங்களில் எப்படிக் கொடுப்பது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் சொல்லி ஏற்கெனவே உள்ள கார்டு முறையைக் கொண்டு கொடுக்கலாம் என்று பரிசீலிக்கிறோம். அப்படிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விலையை நிர்ணயித்துச் சொல்லியிருக்கிறோம். எனவே, தடங்கல் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். சம்பந்தப்பட்ட உணவு அமைச்சரைப் பாராட்டுகிறேன். இதில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எங்கிருந்து எந்தத் தகவல் கிடைத்தாலும், ஒரு போராட்டம் நடத்துவது போன்று, முன் ஜாக்கிரதையுடன் உடனுக்குடன், உணவு அமைச்சர் சொன்னது போல, ஒவ்வொரு அமைச்சரும் தத்தம் இலாகாவில் எங்கேனும் பதுக்கல் ஏற்பட்டால் உடனே அதைக் கண்டு பிடித்து, தண்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் தங்களுக்குள் எந்தவிதமான மாச்சரியம் இருந்தாலும் வேறுபாடுகள் இருந்தாலும், அவைகளை மறந்து விட்டு ஒரே நோக்குடன் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும். அங்கே நம் சகோதரர்கள் போர்க்களத்தில் உயிரைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கு உயிரைக் கொடுக்கவில்லையென்றாலும் மாச்சரியங்களையும் மன வேறுபாடுகளையும் மறந்து, கோரிக்கைகளைச் சற்றும் மனதில் கொள்ளாது விட்டுவிட்டு, போராட்டமாகக் கருதி, பொருள் உற்பத்தியில் ஈடுபட வேண்டும், கவனிக்க வேண்டும். முதல்வர் அவர்கள் வெளி நாடு சென்று திரும்பி வந்து சேர்ந்திருக்கிறார்கள். சென்னை நகரில் நேற்று தான் கவனிக்க நேர்ந்தது, 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஸ்டிரைக் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களைப் பார்த்து அழைத்து, நீங்கள் எல்லாவற்றையும் மறந்து தொழிலில் ஈடுபடுங்கள் என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, போர்க் காலத்தில் தவறான செய்தி கொடுப்பது கோயபல்ஸ் பிரச்சாரமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 10 ஆயிரம் தொழிலாளர்கள் அல்ல, 4 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

**திரு. கே. ராஜாராம் :** எண்ணிக்கையைப்பற்றி திருத்திக்கொள்கிறேன். ஏனென்றால், அபிப்பிராய பேதமான எந்த வார்த்தைக்கும் போகத் தயாரில்லை. எனவே தொழிலாளர்களின் மன வேறுபாட்டை முதலமைச்சர் அவர்களால் தீர்க்க முடியும் என்று நம்புகிறேன். நாளையே இதைத் தாமதமில்லாமல் ஒரு முடிவிற்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தத் தீர்மானத்தில் எங்குமே தொழிலாளர்களைப்பற்றி இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். காலையில் கூட கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் இதைப்பற்றிப் பேசினார்கள். ஒரு வகையில் அவர்கள் எல்லாம் கூட்டு சேர்ந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். அது மட்டுமல்லாமல், விரைவிலே மாநிலம் தழுவிய போராட்டத்தை நடத்துவதற்கு அவர்கள் சிறப்பாகத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து இந்தப் போர் நெருக்கடிபற்றி எந்த அளவு கருதுகிறார்கள் என்று புரிகிறது. இன்று காலையில் திரு. தங்கமணி அவர்கள் பிரச்னையை எழுப்பியபோது, நான் இதற்கு ஒரு தீர்வு சொன்னேன். இப்போது ஏற்பட்டிருக்கிற முக்கியமான கோரிக்கை சிம்ப்சனில் இருக்கிற தொழிலாளர்களுடைய யூனியன் தலைவர் மாற்றப்பட வேண்டும் என்பதாகும். இதை அரசாங்கம் செய்ய முடியாது. அவர்கள் தான் மாற்றிக்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நீண்ட நாளைய கொள்கை ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் தான் இருக்க வேண்டும் என்பது. அது மாத்திரமல்ல, அந்த யூனியனுடைய தலைவராக இருப்பவர் வெளியாராக இருக்கக் கூடாது. அந்தத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர் தலைவராக வரவேண்டுமென்பதாகும். நீண்ட நாட்களாகச் சொன்னோம். யாரும் கேட்கவில்லை. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் வெளியே உள்ளவர்கள் தலைவர்களாகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது சொல்கிறேன். காலையில் சில கட்சிக்காரர்கள் பேரவையில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன். அதைப் போலவே யூனியனுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவர் வெளியேயிருந்து யாரும் இருக்கக் கூடாது. எந்தக் கட்சியையும் ஆதரிக்கக் 5.20 P.m. கூடாது. அப்படி ஒரு முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தத் தொழிற்சாலையில் இருக்கிற தொழிலாளர்தான் தலைவராக வரவேண்டும். இப்போது வெளியே இருக்கிறவர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். இப்போது ஒரு தொழிற்சாலையில் இரண்டு யூனியன் இருந்தால், ஒரு தலைவர் இன்னொரு தலைவரை மிஞ்சுகிற அளவிற்குச் செல்வாக்கு பெறவேண்டுமானால், அந்தத் தலைவரால் பெற்றிருக்கிற நன்மைகள் போதாது, என் தலைமையில் கீழ் வந்தால் அதிகமாக வாங்கித் தருவேன் என்று சொல்லி தொழிலாளர்களை அவர்கள் பக்கம் இழுக்கிறது. குறிப்பிட்டு எந்த ஒரு கட்சியையும் சொல்லவில்லை. கம்யூனிஸ்ட்டுகள் இருக்கிற இடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தால், 'அவர்கள் வாங்கிக் கொடுத்தது குறைவு, நாங்கள் அதிகமாக வாங்கிக் கொடுக்கிறோம்' என்று சொல்வார்கள். அதைப் போலவே கம்யூனிஸ்ட்டுகள் இருக்கிற இடத்திலே காங்கிரஸ்காரர்கள் இருப்பார்களேயானால் 'அவர்கள் வாங்கிக் கொடுத்தது குறைவு, நாங்கள் அதிகம் வாங்கிக் கொடுக்கிறோம்' என்று தூண்டுவார்கள். ஆகவேதான் வெளியிலே உள்ளவர்கள் அங்கே சென்று செல்வாக்குத் தேடுகிற அந்த நிலைமையை மாற்றி, ஒவ்வொரு தொழிற்சாலையிலேயும் அங்கே இருக்கிற தொழிலாளர்தான் அங்கே தலைவராக வரவேண்டும், ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன்தான் இருக்கவேண்டும் என்ற முடிவை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. ஆனால் இந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிற எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் அதற்குத் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். காலையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி போன்றவர்களெல்லாம் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சொல்வார்களானால், ஒரு வாரத்திற்குள்ளே நாமெல்லாம் கூடி தொழிற்சாலைகளிலே வெளியார் யாரும் தலைவர்களாக இருக்

க்கூடாது என்று முடிவு எடுத்துவிட்டால், நாட்டிலே தொழில் அமைதி நிலவி, இந்தியாவுக்கே தமிழ்நாடு அந்த வகையிலேயும் வழிகாட்டக் கூடிய முறையிலே அமையும்.

■ திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை மிகவும் நல்ல முறையிலே அமைந்தது. இன்று மாலையிலேயே சென்னையிலுள்ள தொழிலாளர் சமூகத்திற்கே இந்த விளக்கம் சேர்ந்துவிடும், இரண்டு தினங்களுக்குள்ளாக இதைச் சுமுகமான முறையில் தீர்த்துவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். என்னைப் பொறுத்த வரையில், நேற்று மாலையில் தான் இந்த விஷயம் என்ன என்பதைப்பற்றி நமது தொழிலாளர் அமைச்சர் அவர்களையும் நண்பர் திரு. கோபால் அவர்களையும் கலந்துகொண்டு, சில விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு பேசக்கூடிய நிலைமையிலே இல்லை. அதற்கான நண்பர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அழைத்து முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வைக்க நான் தயாராக இருக்கிறேன். அவர்களெல்லாம் கூடிப்பேசி இதைத் தீர்த்துவைக்க முடியும் என்றே நானும் நம்புகிறேன். முதலமைச்சர் அவர்களே இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொல்வது சிம்ப்சன் பிரச்சினைக்கு மட்டுமல்ல. தமிழ் நாட்டிலேயுள்ள எல்லாத் தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும் ஒரு முடிவு கண்டுவிடலாம்.

திரு. கே. ராஜாராம்: இதுபற்றி இந்த யுத்த காலத்திலேயாவது ஒரு முடிவை ஏற்படுத்தி, தமிழ் நாடு முழுவதும் தொழில் அமைதி நிலவ ஏற்பாடு செய்தால், அதில் பெரு மகிழ்ச்சி அடைபவர்கள் என்னைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த யுத்த முயற்சிகளுக்கு தமிழ் நாடு அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக முழு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுப்போம் என்று உறுதி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

■ திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே தமிழக முதல்வராலே பிரேரேபிக்கப்பெற்றிருக்கிற தீர்மானத்தின் முக்கியத்துவத்தையும், அதனுடைய தேவையையும் நான் நன்கு உணர்ந்தேன். இதிலுள்ள கருத்தின் ஒவ்வொரு துளியையும் மனப்பூர்வமாக மதித்து ஆதரிக்கிறேன்.

இன்றைய தினம் நமது பாரத தேசத்தின்மீது தொடங்கியிருக்கிற போர் அநியாயமானது, அக்கிரமமானது, ஒழுங்குமுறைக்கு முற்றிலும் முரணானது ஆகும் என்பதை அறிவோர்கள் எண்ணுவதைப் போல், மக்கள் யாவரும் எண்ணுகிறார்கள் என்பதையும் நான் உணர்கிறேன்.

பாகிஸ்தான் வெறுப்பும் துவேஷமும் கொண்ட நிலையிலேதான் அந்த மக்கள் சுமுகமாக, சுபிட்சமாக வாழ்வதற்கு அந்த தேசத்தில் அரசியலை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிற சர்வாதிகார மனம் உள்ளவர்கள் இடம் கொடுக்கவில்லை. அவர்களுடைய சர்வாதிகார வெறி, ஆதிக்க வெறி, போர் வெறி அத்தகைய கொடுமையை விளைவித்திருக்கிறது. இப்பொழுது இந்த நாட்டின்மீது பாகிஸ்தான் போர் தொடுத்திருப்பது நான்காவது தரம் என்று பலர் சொல்வார்கள். பல வகையிலே பார்த்தால், இது எத்தனையாவது தரம் என்று சொல்ல முடியாது. ஏற்கனவே ஒரு கோடிக்கு அதிகமான மக்களை அகதிகளாக ஆக்கி—நான்



அவர்களை அகதிகள் என்று கூட சொல்ல விரும்பவில்லை. நம் தேசத்திற்கு விரட்டியடித்ததன் மூலம் அவர்கள் நம் மீது ஏற்கனவே படையெடுப்பதைத் தொடங்கிவிட்டிருக்கிறார்கள். அதையும் நாம் ஒரு படையெடுப்பாகக் கொள்ள வேண்டும். இன்று கருவிகளின் மூலமாக, குண்டுகளின் மூலமாக எடுக்கின்ற படையெடுப்பைவிட அது மிகப்பலமான படையெடுப்பு என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. அதோடுகூட அந்த தேசத்திலே உண்மையிலே நம்மீது படையெடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சாதாரண மக்கள் அதிகம் இருக்க மாட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். சட்ட ரீதியாக ஜனநாயக ரீதியிலே தேர்தல் நடந்து முடிந்து இந்த ஆண்டுத் துவக்கத்திலே, ஜனவரியிலே, யாஹ்யாகான் கீழ் வங்கத்திற்குச் சென்ற காலத்திலே, 'நான் வருங்காலப் பிரதமரைச் சந்திக்க வந்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டார். அப்படிக் குறிப்பிட்டவர், அங்கேயே மார்ச் மாதத்திலே முதல் சட்டசபை கூடும், ஒழுங்கான முறையிலே தேர்தல் முடிந்து சிவில் ஆட்சி அங்கே நிலவும் என்றும் வாக்குறுதி கொடுத்தார். அப்படியிருந்தும் சொன்னபடி செய்யாமல் போனதற்குக் காரணம் என்ன என்பதையெல்லாம் நாம் அறிவோம். பூட்டோ போன்ற விஷ உணர்வு உடையவர்கள், இந்தியாவின்மீது என்றுமே காட்டத்தைக் கொண்டிருப்பவர்கள் செய்த ஜனநாயக விரோதமான பிரசாரமும் துர்போதனையுந்தான் என்பதையும் நாம் அறிவோம். முஜிபுர் ரஹமானுக்கு இந்திய தேசத்தின்மீது பகையில்லை என்ற ஒரு காரணந்தான் அவரைப் பிரதமராக அங்கே ஆக்குவதற்கு அவர்கள் இசையாமல் இருந்தவொன்று என்பதையும் நாம் மனதிலே இந்தச் சமயத்திலே கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் பல்வேறு காரணங்களாலே அவர்கள் இந்தத் தேசத்தின் மீது கொண்டிருக்கிற கொடிய தீய அநியாய எண்ணங்களையெல்லாம் நாம் நன்கு உணர வேண்டும்.

இப்போது இந்தத் தேசத்தின்மீது படையெடுத்துள்ளார்கள். இந்த தேசத்திலே நாமெல்லாம் ஓரளவுக்கு ஒவ்வோர் பகுதிக்குப் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள். நம்முடைய கடமை பெரிது. கடமையிலே முதன்மையானது என்று நான் கருதுவது, இந்தப் பாகிஸ்தான் ஆதிக்கத்தின்மீது எல்லா மக்களிடத்திலும், எல்லா மக்களின் உள்ளத்திலும், வெறுப்பையும், கோபத்தையும், சினத்தையும், ஆக்ரோஷத்தையும் ஊட்ட வேண்டும். வெறுமனே காசு கொடுப்பதும், ரத்தம் கொடுப்பதும் மட்டும் போதாது. அவை மிக இன்றியமையாதவைதாம். ஆனால் அதைவிட மிகப் பெரிதானது, அவசியமானது இந்தத் தேசத்திலே மூலை முடுக்கெல்லாம் உள்ள எல்லா மக்களின் உள்ளத்திலும் நம்மீது அநியாயமாகப் போர் தொடுத்திருக்கிற அக்கிரமக்காரர்களின் இடத்திலே எல்லையற்ற அளவுக்குக் கோபமும், வெறுப்பும், துவேஷமும், ஆத்திரமும் உண்டாகும்படியான நிலைமையை நாம் செய்ய வேண்டும் அப்படிச் செய்தால்தான் இந்தப் போரிலே வெற்றி மிகத் துரிதமாக நமக்குக் கிட்டும் என்பதையும் நாம் மனத்திலே கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் நாம் மனத்திலே கொண்டு செயல்பட வேண்டும். இந்த நிலையிலே இந்தப் பெரும் பணிக்கு, வந்த போரைத் தடுத்து நிறுத்தி, அபாயத்தை நீக்கி, நாட்டிலே அமைதியை நிலைநாட்டுவதற்கு, நாம் மேற்கொண்டிருக்கிற—போரை என்று நான் சொல்ல மாட்டேன்—எதிர்த் தாக்குதலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நம்மால் முடிந்த அத்தனை தியாகத்தையும் நாம் செய்ய சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நான் பிரதிக்ஞை எடுத்துக்கொள்கிறேன். எந்த வகையான தியாகமானாலும், அதைச் செய்ய நானும் சம்பந்தப்பட்டிருக்கிற சுதந்திராக் கட்சியும் பூரணமாக ஒத்துழைத்து, தமிழக முதல்வர் கையை வலுப்படுத்தி, அதன் மூலமாக

[திரு. சா. கணேசன்] [6th December 1971

தமிழகத்தின் முழு ஆதாரவும் இந்திய தேசத்திற்கு இந்தியப் போருக்கு ஏற்படு வதற்கு நான் உறுதி தருகிறேன். இந்த நிலையிலே அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, நாங்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், இங்கே உள்ளவர்கள், முதல் தவணையாக 250 ரூபாய் தர சம்மதிக்கிறோம். என்பதையும் உங்கள் முன்னிலையிலே தெரிவித்து, இந்தப் போருக்கு நாம் எவ்வளவு முடியுமோ
5.30. P.m, அவ்வளவையும் செய்ய நாம் தயாராக வேண்டும், அதற்கு நம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டைத் தட்டி எழுப்ப வேண்டும், உணர்ச்சி உடையவர்களாகவும், ஆக்ரோஷம் உள்ளவர்களாகவும் ஆக்க வேண்டும், இந்தப் பகைப் படைகளை விரட்டியடிக்க நாம் ஒவ்வொருவரும் எதையும் செய்யத் தயார் என்ற நிலையைப் பெற வேண்டும் என்று கூறி, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து அமைகிறேன், வணக்கம். ஜெய் ஹிந்த்.

(Deputy Chairman in the Chair.)

* THIRU A. R. DAMODARAN: Mr. Deputy Chairman, Sir, I rise to support the motion that has been moved by the Hon. the Chief Minister of Tamil Nadu and although I speak in a very humble capacity to-day, Sir, I have no doubt that this appeal will find an echo in the hearts not only of Tamilians but of all Indians. Man's inhumanity to men has darkened many a page of human history but the blood-stained page of the Bangla Desh tragedy will be remembered for ever by this world. This is not to say that during this very century alone other blood-thirsty acts have not taken place, but that a Military dictatorship should so ruthlessly ride roughshod over a democratically elected Assembly and that such inhuman, callous, cruel treatment should have been meted out to a defenceless people will go down in history as one of the blackest acts that Commander Yahya Khan could have performed for the benefit of his Nation. This is not a war between India and Pakistan though unfortunately it has become so. As the Prime Minister and other leaders have pointed out, it is rightly a war between the values of Military dictatorship and the values of Democracy. If we, in India, have always cherished the system of elected representatives and if we have cherished the values of democracy, then, the miseries of the people of East Bengal cannot but evoke the strongest feelings of kinship and sympathy. That the people of Bangla Desh should receive our support to-day and that the Bangla Desh Government should have received the recognition of our Government is indeed a fitting thing, and I hope that in this supreme hour of need our people will respond to the appeal of our leaders and try to do what they can even though they may be 2,000 miles away from the battle-field. There are none-the-less big battles to be won because the army has to be fed, the transport system has to be maintained and enemies within our own borders have to be apprehended and saboteurs have to be checked and in all these activities, we in Tamil Nadu—though we may be very far from the border—have a signal duty to perform which we should do faithfully. I shall not refer to some of the fears that were mentioned regarding the malpractices that are likely to occur on this occasion. But I would like to state that if the business community and the trading community do not respond to the appeal of our national leaders, then there is no



6th December 1971] [Thiru A. R. Damodaran]

future for them, because society and the public will condem them for ever. If we are to preserve our democratic system of Government and if we are to preserve those values which we have cherished, then I would say that every Indian should respond to the appeal and not seek to make profit out of our distress.

The Bangla Desh tragedy has aroused strange opinions the world over. To-day we find ourselves some what isolated, if I may say so, in the world forum as the voting in the Security Council may indicate and I am glad, Sir, that this has come to-day, because I have been one of those who have always felt that during the past 25 years we have sadly neglected our national self-interest and we have not conducted our policy in the way in which it should have been done. At least we have realised—our leadership has realised—that in the world of to-day, one must depend on one's own strength, the strength of the nation and the strength of the people, and even though we may be isolated and world opinion may not be as favourable to us as some of us would have antici-pated, it is not a strange thing to us, because the same thing happened when Pakistan attacked us in 1964. Since then, we have learnt bitter lessons and my mind goes back to that great leader of India, Shri Lal Bahadur Shastri, who led India during that period of time and who gave a fitting reply to the aggressors who invaded the borders of Rajasthan and Punjab.

I am glad to-day that India has risen as one united nation, not only to defend its borders, not only to defend those values which it holds supreme, but to give a fitting reply to even adverse world opinion, because if we do not prove to the world now that we are capable of the greatest sacrifice in defending our Nation, in defending those values which we have cherished, then India, as a country, as a Nation, would command no respect amongst other Nations. Whatever may be the strength of world opinion, whatever interests may dictate other countries in following the policies that they are following to-day, I think, we can stand together, Sir—the 550 million of us, united in our endeavour and in our resolve to bring a quick end to teh agony that is being experienced by millions of refugees and our own people. The world will remember India and will, at any rate, cherish the ideals for which India has stood and has fought this war. I wish, Sir, that all of us will respond to the appeal made by the Hon. the Chief Minister. The monetary donations are very small contribution that we can make. But in our own field of activity, in our business life, whether we are Captains of industry, whether we are workers in factories or whether we are even political workers, we should see that during this period of war, no controversy is imported into our National politics and that even though the Governments are elected on party tickets, they will conduct themselves as all party Governments, as a National Government so that no element of controversy can enter the National political arena to-day. If we can preserve this unanimity and unity, I have no doubt, Sir, that in spite of all the forces that may be arrayed against us, the victory will be ours. There are many dark forces in Asia which

threaten us to-day and greater and greater sacrifices may have to be made. The Indian people have to make these sacrifices if they have to prove themselves worthy of being called a free, independent and honourable Nation.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நான் ஆதரிக்கும் வகையிலே ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நேற்று கலைவாணர் அரங்கத்திலே அவருக்குப் பாராட்டு தெரிவிக்கும்போது ஒரு விஷயத்தைத் தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். அது எனக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது. 10 கோடி மக்களைக் கொண்ட பாகிஸ்தானும் 55 கோடி மக்களைக் கொண்ட நம்மோடு ஏன் சண்டை போடுகிறது என்றால், நாம் 55 கோடி பேரும் ஒன்றாக இல்லாமல், ஒற்றுமையாக இல்லாமல், ஜாதி, மதம் மற்ற வகைகளிலே நாம் வேறுபட்டிருக்கிறோம் என்ற நம்பிக்கையிலே அவர்கள் நம்மோடு சண்டைக்கு வருகிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு இந்தியாவின் மீது தொடுக்கப்பட்டிருக்கிற போரை முறியடிப்பதற்கு தமிழகத்து மக்கள் முதலமைச்சருடைய கரத்தை வலுப்படுத்துவதன் மூலம் நம்முடைய பிரதமர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்துவார்கள். அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கே பாராளுமன்றத்தில் காங்கிரஸ் (ஓ) கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். என். மிஸ்ரா அவர்கள் பேசும்போது, நம்முடைய பிரதமர் அவர்களை, யாஹ்யாகான் ஒரு ராணுவ வீரர் என்றால், இவர் துர்க்கையாகக் காட்சியளிக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி நமக்கு வீராங்கனையாகத் தோற்றம் அளிக்கும் நம்முடைய தலைவியை நாம் பின்பற்றி, நம்முடைய நாட்டினுடைய பாதுகாப்பைப் பலப்படுத்தி, நம்முடைய நாட்டைக் காப்பாற்றுவதற்கு எல்லாக் கட்சிகளும் தங்களுடைய கட்சி வித்தியாசங்களை மறந்து விட்டு பிரதமர் அவர்களுடைய கரத்தைப் பலப்படுத்துவதற்கும், எல்லா விதமான தியாகங்களையும் செய்வதற்கும் முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பின்னால் சென்று, அவர்கள் எடுக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளிலும் நாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நமது முஸ்லிம் லீக் கட்சியினுடைய தலைவர் காயிதே மில்லத் அவர்கள் ஸ்டேன்லி ஆஸ்பத்திரியில் உடல் நலமற்று கவலைக்கிடமான நிலையில் இருந்தும் கூட பாகிஸ்தானைக் கண்டித்து, இந்தியாவிற்கு முழு ஆதரவையும் கொடுத்து அறிக்கை வெளியிட்டது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கிறது. நமது நாட்டிற்கு பாகிஸ்தானால் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று பேசுவதை நான் ஏற்க முடியவில்லை. நம் நாட்டோடு பாகிஸ்தானை ஒப்பிட்டால், நான் சொல்வேன், பாகிஸ்தான் சுண்டைக்காய் நாடு. அவர்கள் எந்த வகையிலே எடுத்தாலும் நம்மைவிடப் பன் மடங்கு குறைந்தவர்கள். ஜனத்தொகையில் எடுத்தாலும், ராணுவ பலத்தில் எடுத்தாலும், பணபலத்தில் எடுத்தாலும், அல்லது ஆயுத பலத்தில் எடுத்தாலும் நான்கில் ஒரு பங்கு தான் உள்ளவர்கள். ஆனாலும் திரும்பத் திரும்ப அவர்கள் நம் மீது தாக்குதல் கொடுக்கிறார்கள் என்றால், அதற்கு என்ன காரணம்? நம்மிடையே உள்ள





பிளவுகள் என்று நமது அருமை நண்பர் திரு. ஜெயராம ரெட்டியார் சொன்னார்கள். அதைக் கூட என்னால் ஏற்க முடியவில்லை. நான் ஒன்று சொல்லுகிறேன். இஸ்ரேல் நாடு அரேபிய நாடுகள் மீது பாய்ந்து போர் ஆக்கிரமிப்பு செய்து வெற்றி கண்டது. அது எப்படி என்றால், இஸ்ரேல் போராடினாலும், அதற்குப் பின் பலமாக முழுக்க, முழுக்க அமெரிக்காவும், இங்கிலாந்தும் இருந்தன. இன்றைக்கு பாகிஸ்தான் நம்மைத் திரும்ப, திரும்பப் போருக்கு தூண்டுகிறது என்றால், அதற்குச் சீனாவும், அமெரிக்காவும் பக்க பலமாக வரக்கூடும் என்ற நிலைமையிலே தான் அப்படிச் செய்ய முடியுமே தவிர, வேறு காரணமில்லை. அல்லது அவர்கள் தனித்து நம்மோடு போராடத் துணிவார்கள் என்றால், அது பைத்தியக்கார துணிவாகத் தான் இருக்கும். ஆகவே, அவர்களுடைய பின் பலம் இதுவாகத்தான் இருக்கலாம். ஆனாலும், அவர்கள் நேரடியாக, தனித்து இந்தியாவை எதிர்க்க இறங்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். இன்றைக்கு யுத்தம் போகின்ற போக்கைப் பார்த்தால், எல்லா முனைகளிலேயும் நம்முடைய எதிரி தோற்கடிக்கப்படுகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் யுத்தம், ஒரு பத்து நாளில் நாம் பங்களா தேஷைப் பிடித்துவிடுவோம் என்ற நிலைமையிலே சென்று கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்திலே மேற்கு பாகிஸ்தான் அத்தனையும் நம்மிடம் சரணாகதி அடையும் நிலைமையிலே தான் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. யுத்தம் என்பது விரும்பத் தக்கவில்லை. ஆனாலும் சில சூழ்நிலைகளால் அதை எடுத்துப் போட வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டு விடுகிறது. ஒரு நோய்க்கு சிகிச்சை செய்ய பல முறைகள் உண்டு. அதிலே ஒன்று தான் அறுவை சிகிச்சை என்பது சொல்வதில்லை. ஆனாலும் நிர்ப்பந்தம் அதை ஏற்றுக்கொள்ளும் வகையிலே அமைந்துவிடுகிறது. எனவே, இந்த யுத்தம் அறுவை சிகிச்சை மாதிரியான ஒரு முறை என்று தான் சொல்லுவேன். இந்த யுத்தம் குறிப்பாக, உண்மையாகவே அறுவை சிகிச்சை தான். இந்த யுத்தத்தின் மூலம் பாகிஸ்தான் 'அறுவை' செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் துண்டுகள் மறுபடியும் சேராது என்று திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியும். அந்த வகையிலே இந்தப் போர் அறுவை சிகிச்சை மாதிரி என்று தான் சொல்ல வேண்டும். இந்த யுத்தத்தைத் துவக்கியவர் யாஹ்யாகான் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். இந்த யாஹ்யா கான் தேர்தலிலே நின்று அங்கு அதிகாரத்திற்கு வந்தவர் அல்ல. அவர் படைப் பலத்தின் உதவியைக் கொண்டு பாகிஸ்தானின் ஜனாதிபதி ஆகியிருக்கிறார். அதனால் தான் அவர் சர்வாதிகாரி என்று சொல்லுகிறோம். சர்வாதிகாரி என்பது மட்டுமில்லை, ஒரு கொடுங்கோன்மையானவன் என்று சொல்லக்கூடிய அளவில் இலட்சோப இலட்ச வங்காள தேச மக்களை படுகொலை செய்தவன். மற்றும் நம்முடைய முதல்வர் அவர்கள் தாம் டெலிவிஷனிலே பார்த்ததாக இங்கே சொன்ன தகவல்கள் எல்லாம் நம்முடைய நெஞ்சத்தைத் தொடக்கூடியதாக இருந்தன. அத்தகைய கொடுங்கோன்மையாளன் இன்றைக்கு இந்தியாவின் மீது படையெடுத்திருக்கிறான். கொடுங்கோன்மையாளர்களின் கதி முடிவிலே என்ன ஆகின்றது என்பதைச் சரித்திரம் நமக்கு போதிக்கிறது. ஹிட்லர் ஒரு சர்வாதிகாரியாக இருந்ததோடு மட்டுமில்லாமல், கொடுங்கோன்மையாளனாகவும் இருந்தான். அவன் முடிவு என்ன ஆயிற்று என்று நமக்குத் தெரியும். முசோலினி ஒரு சர்வாதிகாரியாகவும், கொடுங்கோன்மையாளனாகவும் இருந்தான். அவனுடைய கதியும் என்ன ஆயிற்று என்பது நமக்குத் தெரியும். இன்றைக்கு யாஹ்யாகான் ஒரு கொடுங்கோன்மையாளனாக இருந்துகொண்டு சர்வாதிகாரியாகவும் ஆட்சி செய்கிறான். எந்த கதி ஹிட்லருக்கும், முசோலினி

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] 6th December 1971]

ளிக்கும் நேர்ந்ததோ அதே கதி தான் யாஹ்யாகானுக்கும் வரும் என்று நிச்சயமாக நான் சொல்ல முடியும். பாகிஸ்தானை இந்தியா எதிர்ப்பது இது முதல் தடவை அல்ல. இது மூன்றாவது அல்லது நான்காவது தடவை என்று கூட சொல்லலாம். ஒவ்வொரு முறையும் பாகிஸ்தானை எதிர்ப்பதிலே இந்திய முஸ்லிம்கள் எந்த முறையிலே தங்களுடைய பங்கினை செய்திருக்கிறார்கள் என்பதை உலகம் அறியும். இன்றைக்கு 'பரம வீர சக்கரா' என்ற வீர விருதினை, பாகிஸ்தானை எதிர்த்துப் போராடிய ஒரு இந்திய முஸ்லீம் அப்துல் ஹமீது என்பவர் தான் இந்தியாவில் முதன்முதலாகப் பெற்றார். அத்தகைய தியாக உணர்வுடன் போராடியவர்கள் தான் இந்திய இஸ்லாமியர்கள். அதே முறையில் தான் இன்றைக்கும் அவர்கள் பாகிஸதான் புறமுதுகு காட்டி ஓடக் கூடிய வகையில் தியாகம் செய்ய, எதிர்த்துப் போராடச் சித்தமாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அராபிய மொழியிலே ஒரு வாசகம் உண்டு. அந்த வாசகத்தை அராபியிலே சொல்லிவிட்டுத் தான் தமிழிலே அர்த்தம் சொல்லுவது பொருத்தமாக இருக்கும். அந்த வாசகம் 'உப்புல் வதனி மினல் இமான்". "இமானின் இறை நம்பிக்கையின் ஒரு பகுதி தேச விஸ்வாசம்" என்பது. இந்த இஸ்லாமிய கிரந்தங்கள் போதிப்பது ஒவ்வொரு முஸ்லீமும் தான் வசிக்கும் தேசத்திற்கு விசுவாசமாக இருந்து தான் ஆகவேண்டும் என்பது. இது உண்மையான முஸலீம்களுக்கு கட்டளையாகும். ஆகவே, எந்த உண்மையான முஸ்லீமும் தான் வசிக்கும் தேசத்திற்கு விசுவாச மில்லாமல் நடக்கவே முடியாது. அப்படி மீறி நடப்பவர்கள் உண்மையான இஸ்லாமியத்தைப் பின்பற்றக் கூடியவர்களல்ல. அப்படிப்பட்டவர்கள் உண்மையான முஸ்லீமாக இருக்கவே முடியாது என்பதைத் திட்டவட்டமாக நான் சொல்லுகிறேன். இன்றைக்கு நடக்கும் யுத்தத்தில் எல்லாத் தியாகங்களையும் இந்திய முஸ்லீம்கள் செய்யத் தயங்க மாட்டார்கள், போர்க்களத்தின் முன் அணியிலே நின்று போராடுவார்கள் என்ற உறுதியை நான் எங்களுடைய முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் இங்கே தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து, அமைகிறேன்.

* THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, I rise to support this resolution. To-day we have met in an atmosphere when we think of ourselves as one nation, united that we fight for democracy against dictatorship. Sir, on this August occasion, let me join hands with the Government and the Opposition parties and everyone to see that this hour is not wasted in speeches but utilised for deds. President Nixon of the United States of America has forgotten the high principles that were laid down years ago by that great soldier of democracy, Abraham Lincoln, who said "Four scores and seven years ago, our fathers brought forth upon this continent, a new nation, conceived in Liberty, and dedicated to the proposition that all men are created equal". To-day, Sir, President Nixon has forgotten this. President Nixon has forgotten the famous Gettysburg speech of Abraham Lincoln wherein he said:—I am reading his speech so that if there is a chance for anybody to note what President Nixon has forgotten he may be made to refresh his memory.

"We have come to dedicate a portion of it, as a final resting place for those who here gave their lives that that nation might live It is altogether fitting and proper that we should do this. But in larger sense we cannot dedicate—we can not consecrate—we



6th December 1971] [Thiru G. Vasantha Bai]

can not hallow this ground. The brave men, living and dead, who struggled here, have consecrated it far above out poor power to add or detract. The world will little note, nor long remember, what we say here, but it can never forget what they did here. It is for us, the living, rather to be dedicated here to the unfinished work which they have, thus far, so nobly advanced. It is rather for us to be here dedicated to the great task remaining before us—that from these honoured dead we take increased devotion to that cause for which they gave the last full measure of devotion—that we here highly resolve that these dead shall not have died in vain; that this nation under God shall have a new birth of freedom; and that Government of the people, by the people, for the people, shall not perish from the earth."

This is what was said by Abraham Lincoln in his Gettysburg speech. Has President Nixon forgotten this or conveniently done so to espouse the cause of the military junta in Pakistan? I should like to substitute the words "Government of West Pakistan" or "President Yahya Khan of West Pakistan" for the word "Pakistan" in this resolution. Against this military junta ruling the roost in West Pakistan and its naked dictatorship, the people of Bangla Desh have risen as one man in the cause of democracy and freedom and let us not forget that we, in going to their aid, are espousing the cause of democracy so that Government of the people, for the people and by the people may long remain not only in Bangla Desh but also throughout the freedom loving nations of the word including the United States of America and to let President Nixon know that we, Indians, shall keep our pledge to the last man in the cause of democracy and democratic government. Thank you, Sir, for giving me this opportunity to speak.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு இந்தியா போரிலே ஈடுபடுத்தப்பட்டது என்று சொல்லும்பொழுது, இது எதனாலே, எதற்காக என்று நான் விளக்கமாகச் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை. இன்றைக்கு நடக்கின்ற போர் ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடக்கும் போரே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கை வைத்து அதையே நல்ல முறையிலே நடத்திக் கொண்டு, இந்த நாட்டை முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்லுவதைக் கண்டு சகிக்காத பல தீய சக்திகளைக் கொண்ட மற்ற நாடுகள் பாகிஸதான் பின்னால் நின்றுகொண்டு பாகிஸ்தானைத் தூண்டிவிட்டு இப்படி சம்பந்த மில்லாமல் நம்மைப் போரிலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அதோடில்லாமல் இந்தப் போரே மனித குலத்திற்கு ஒரு பெரிய தீங்காக வந்திருக்கிறது. நாம் பத்திரிகை வாயிலாக, பங்களா தேசத்திலே எண்ணற்ற கொடுமைகளை அவர்கள் செய்தார்கள் என்று பார்த்தோம். அதைப்பற்றிப் படிக்கும் பொழுதும், கேட்கும்பொழுதும் நாம் எந்த உலகத்திலே இருக்கிறோம், இது நாகரீகமான உலகம்தானா என்று சந்தேகிக்கக்கூடிய நிலைமையிலே இருக்கிறோம். அந்த அளவுக்குக் கொடுமைகளையும், கொள்ளைகளையும் செய்து, பெண்களைத் துன்புறுத்தியது போன்றவைகளை எல்லாம் பார்க்கும்பொழுது. நாம் எந்த உலகத்திலே எந்த நூற்றாண்டிலே இருக்கிறோம் என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால், இந்தப் போர் மனித குலத்தின் பாதுகாப்பிற்

காகவும், ஜனநாயகத்திற்காகவும் நடக்கும் போரே தவிர, இது ஒரு நாட்டைப் பிடிக்கும் போர் அல்ல; அல்லது வேறு கொள்கைகளுக்காக நடத்தப்படும் போரும் அல்ல. இது மனித குலத்திற்கு வந்த தீங்கை, அபாயத்தைப் போக்குவதற்காக நம்மை நாமே இதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியிருக்கிற போர். நாமே இதிலே ஈடுபடவில்லை. பல நண்பர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், பல நாடுகளின் தூண்டுதலின் பேரில்தான் பாகிஸ்தான் இந்த ஜனநாயக நாட்டின் மீது போரைத் தொடுத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய போர் வீரர்கள் எல்லாம் நல்ல முறையிலே வீரமாகப் போர் புரிந்து, கடந்த இரண்டு நாட்களிலே நமக்கு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏதோ சம்பளத்திற்காகப் பணிபுரியும் போர் வீரர்கள் என்ற எண்ணமில்லாமல், அவர்கள் இந்த நாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும் வந்த தீங்கைப் போக்கக் கருதித்தான் போரிட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. எனவே, இந்தச் சமயத்திலே அப்படிப்பட்ட வீரர்களுக்கு எங்களுடைய கட்சியின் சார்பாகப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்தோடு நம் பாரதப் பிரதமர் இந்த நாட்டின் வெற்றிக்காக எடுக்கின்ற ஒவ்வொரு யுத்த நடவடிக்கைக்கும் நாங்கள் பரிபூரணமான ஒத்துழைப்பைத் தரவும், எந்த விதமான தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படியே நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் நம் நாட்டின் பாதுகாப்பிற்காக எடுக்கும் நடவடிக்கைகளுக்கும், முயற்சிகளுக்கும், நம்மிடையே இருக்கும் சிறு, சிறு மாச்சரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, எங்களுடைய ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கிறோம். இந்த நாடு வெற்றி பெறவும், மனித சமுதாயம் முன்னேறுவதற்கும் எந்த விதத் தியாகத்தையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று எங்களுடைய உழைப்பாளர் கட்சியின் சார்பாக உறுதி கூறி, அமைகிறேன்.

திரு. டி. கே. ஷண்முகம்: அன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய பேரவைத் தலைவாவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்துள்ள இத் தீர்மானத்தை மிகுந்த உணர்ச்சியோடு வரவேற்கிறேன். இதனை வழி மொழிந்து பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

சர்வாதிகார வெறியர்களுக்குச் சாவு மணி அடித்தாக வேண்டும் என்ற கொள்கையில் நான் சார்ந்துள்ள தமிழரசுக் கழகம் தோன்றிய காலந்தொட்டு வெள்ளி விழா கொண்டாடவிருக்கும் இந்த நாள் வரையில் உறுதியாக இருந்து வருகிறது என்பதையும் இனி என்றுமே உறுதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமையாகும். பாகிஸ்தான் தோன்றியது முதல் இன்று வரை ஜனநாயக முடிவுகளுக்கு முரணாகவே செயல்பட்டு வருகிறது என்பதை உலகம் அறியும். நாமும் அறிவோம். வங்காள தேச மக்கள் ஒரு முகமாக வாக்களித்துக் காட்டிய ஜனநாயக முடிவுகளை சர்வாதிகாரி யாஹ்யா கான் ஏற்க மறுத்து வீரர் முஜிபுர் ரஹ்மான் அவர்களை வஞ்சகமாகச் சிறைப் படுத்திய போக்கினையும், அதனைத் தொடர்ந்து நடத்தி வரும் அடக்குமுறைக் கொடுமைகளையும், நாகரிகத்தின் உச்சத்தில் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அமெரிக்க நாட்டினரின் பெரும் பகுதியினர் ஏன் கண்டிக்க மறுக்கிறார்கள் என்பதுதான் எனக்குப் பெரு வியப்பாக இருக்கிறது. மாநில சுயாட்சிக்கு ஜனநாயக முறையிலே தீர்ப்பளித்தது வங்காள தேசம். அந்த முடிவுக்குப் பணிய மறுத்த இந்த வெறி பிடித்த சர்வாதிகாரத்திற்கு ஒரு முடிவு காண



மிகத் திறமையாகச் செயலாற்றி நம்மை வழிநடத்திச் செல்லும் மாபெரும் வீராங்கனை மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுபடுத்த, அமெரிக்க நாட்டிவருக்குத் தமிழகத்தின் ஜனநாயக உணர்வினைத் தெள்ளத் தெளிவாக விளக்கி அங்குள்ள நல்லுள்ளம் படைத்த மக்களின் பேராதர்வினைப் பெற்று வந்திருக்கும் நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் காட்டும் வழியில் செல்லவும், அவருடைய கரத்தை வலுப்படுத்தவும், தமிழரசுக் கழகம் மட்டுமல்ல தமிழகக் கலை உலகமே தயாராயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தியா வெல்க! இந்தியா வெல்க' என்று வீர முழக்கத்தோடு கூறி அமைகிறேன்.

* திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று இந்த அவையின் முன் வைத்துள்ள தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இன்றைய தினம் நாம் விரும்பாமலேயே நம்முடைய நாட்டின் மீது ஒரு யுத்தம் சுமத்தப்பட்டிருக்கிறது. இது நமது நாட்டு மக்கள் விரும்பாமல் நம் மீது சுமத்தப்பட்ட யுத்தம். ஒருவேளை நம்முடைய நாட்டை வேறு அந்நியர் யாரேனும் ஆண்ட காலத்தில் ஏற்பட்டிருந்தால், நியாயமாக அது இருக்கலாம். அது நமக்குத் தெரியாமல் செய்யப்படும் ஒரு விஷயம். ஆனால் நாம் இன்று சுதந்திரமான ஒரு நாடு என்று விளங்குகிறோம். யுத்தத்தைப்பற்றி, அதைப் பற்றிய ஒரு இலக்கணத்தைச் சொல்லும் போது, முதலாவது மகா யுத்தத்தின்போது ரஷியாவின் மாவீரன் லெனின் குறிப்பிட்டான். " The war should be judged by the participants of the war and on which aim they fight for ". என்று ஒரு யுத்தத்தை நிர்ணயிக்கிறபோது அதனுடைய தன்மையை நிர்ணயிக்கிறபோது, அதிலே 6.00. P.m. பங்கெடுத்துக் கொண்டிருக்கிற கட்சிகளின் தன்மை என்ன, அவைகள் எந்த லட்சியத்திற்காகச் சண்டையிடுகின்றன என்பதைப் பார்த்து நிச்சயிக்க வேண்டும் என்று சொன்னான். ஒரு ஏகாதிபத்தியம் தனக்குக் கீழே இருக்கக் கூடிய ஒரு காலனி நாட்டை மற்றொரு காலனியைப் பிடிப்பதற்காக யுத்தத்தில் ஈடுபட வைத்தால், நிச்சயம் அது மக்கள் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டதாக இருக்காது; சுதந்திர மக்களின் விருப்பத்தைப் பொறுத்துச் செய்யும் யுத்தமாக இருக்காது. நம் நாடு சுதந்திரமாக விளங்குகிறது. நம் நாட்டில் யுத்தம் தேவையா இல்லையா என்பதை முடிவு செய்ய நாம் யாரையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நிலையில் இல்லை. நம்மை பிரிட்டிஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், வேறு நாட்டுக்காரர்கள் ஆளும்படியான நிலைமை ஒரு காலத்தில் இந்த தேசத்தில் இருந்தது. ஆனால் இன்று நாம் அந்த நிலையில் இல்லை. நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நாமே நிச்சயிக்கக் கூடிய சுதந்திரர்களாக இருந்து வருகிறோம். அப்படிப்பட்ட சுதந்திர நாட்டில் முதன் முதலாகப் போர் தொடங்கியிருக்கிறது. சுதந்திரத்திற்கும் சுதந்திர விரோத போக்கிற்கும் இடையே இந்த யுத்தம் நடக்கிறது. இங்கே ஒரு ஜனநாயக அரசியலை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். எந்த முனையில் நம்முடைய படைகள் முன்னேறுகின்றன, நமக்கு ஏற்பட்டிருக்கிற டேங்குகளின் சேதம் என்னவென்பதைச் சொல்லுகிறோம். பாராளுமன்றத்திலே விவாதிக்கிறோம். இன்றையதினம் இங்கே கூடி நாம் எப்படி இந்த நாட்டுக்கு யுத்தக் கடமைகளை ஆற்றுவது என்பதுபற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்படிப் பேசி நாம் முடிவு செய்யக்கூடிய உயர்ந்த ஜனநாயகத்தை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஜனநாயகத்துக்குச் சவால் விடப்பட்டிருக்கிறது—யாஹ்யாகான் என்ற சர்வாதிகாரியால் இந்த இயல்புகளைத் தடுப்பதற்கு, அதை அழித்து ஒழிப்பதற்கு ஒரு சதி தொடங்கப்பட்டிருக்கிறது. இது நமது சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் விடப்பட்ட சவாலாகும். காலம்

[திரு. எம். ஆறுமுகசாமி] [6th December 1971

காலமாக, வழிக்காலமாக நாம் பேணிப் பாதுகாத்துவரும் நல்ல மரபுகள், பண்பாடுகள், கலாசாரங்கள் இருக்கின்றனவே, இவை அழிவதற்காக, 'ஜெனோசைட்' என்று சொல்வார்கள். அப்படிக் கோடிக் கணக்கான மக்களைக்கொன்று குவித்து அதன் மீது நின்றுகொண்டு ராஜாதிகாரத்தை நடத்தவேண்டும் என்று கொக்கரிப்பவன் சவாலை விட்டிருக்கிறான். எனவே, இங்கே நம்முடைய முதல்வர் அவர்கள் தீர்மானத்தில் குறிப்பிட்டதைப் போலவும், உரையில் குறிப்பிட்டது போலவும், ஒரு தத்துவத்திற்காக, ஒரு நெறி முறைக்காக, இந்த யுத்தம் நடக்கிறது. ஆகவே, அந்த நெறி முறைகளில் நாம் பின்வாங்காமல் இருப்போம். நமக்கு யார் பக்கமிருந்து உதவி வருகிறது என்பதில் நமக்கு அக்கறை கிடையாது. நமக்கு யார் பக்கமிருந்து உதவி வந்தாலும், நாம்தான் போரிட வேண்டும். இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள், நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையின் காரணமாக இதுவரை நமக்குப் பக்கபலமாக, நட்பு நாடுகளே இல்லாமல் இருந்து வந்தோம் என்று—இன்றைய தினம் அப்படி அல்லாமல், மிகப் பெரிய சோவியத் யூனியன்—உலக வல்லரசுகளிலே ஒன்றான நாடு—இதோ நான் வருகிறேன் என்கிறது. இந்தியாவோடு யாரேனும் சண்டைக்குப் போனால் . . . . போகாதீர்கள், மரியாதையாக இருங்கள் என்றும் சொல்லியிருக்கிறது. மீறிப் போனால் என்ன செய்வது என்பதை நாளைக்குப் பார்ப்போம் என்னும் பொருளில் கோசிஜின் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வளவு மகத்தான ஒரு பெரிய வல்லரசை நாம் பின்பலமாகக் கொண்டிருக்கிறோம். எனவே, நம்முடைய அரசாங்கத்திற்குப் பின்னால் ஒரு சோஷலிஸ்ட் நாடு, உலகத்திலேயே முதலாவதாக சோஷலிச அரசை அமைத்த நாடு, காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய நாடுகளுக்கு ஆதரவாக இருந்த நாடு நமக்குப் பின்னாலே இருக்கிறது. மற்றவர்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதைப்பற்றிக் கவலையில்லை. ஏனென்றால் நமக்கு எப்படிப்பட்ட வாழ்க்கைமுறை தேவை என்று நாம் கருதுகிறோமோ, அதை ஆமோதித்து நிற்கிறது அந்த நாடு. அந்த நாட்டை நாம் பாராட்டுகிறோம். அந்த நாட்டிற்கு நன்றி கூறுகிறோம், அதைப் போற்றுகிறோம். "உங்களுடைய உதவியை என்றென்றும் இந்தியா மறக்காது" என்று நாம் அவர்கட்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இருப்பினும் நாம் சோவியத் யூனியனை மட்டும் நம்பியிருக்கவில்லை. பின் மற்றவர்களையும் பார்க்கிறோம். என்ன பார்க்கிறோம்? இங்கே அதர்மத்திற்கும், அறத்திற்கும், ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே ஒரு போராட்டம் நடக்கிறது. அப்படிப்பட்ட போராட்டத்தில் பலர் தங்களுடைய சுய சொரூபத்தைக் காட்டுகிறார்கள். உலகத்தின் பல நாடுகள், எனக்கு முன்னாலே பேசிய நண்பர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஜனநாயகத்தைப்பற்றிப் பெரிதாக பீற்றிக் கொள்ளும் நாடுகள் யார் பக்கம் நிற்கிறார்கள்? உலகத்திலேயே பெரிய சோஷலிஸ்ட் நாடு என்ற மாசேதுங்கின் சீனா, அந்தக் கொள்கைக்கார நாடு, இந்த சர்வாதிகாரியின் பக்கம் இருக்கிறது. தர்மத்தை மதிப்பவர்கள், தங்களுடைய ஆட்சியைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி, தங்களுடைய நாட்டின் எல்லையைப் பெருக்கிக் கொள்வது எப்படி என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே எந்தப் பிரச்னையையும் பார்ப்பவர்கள் இங்கே கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து ஒரு கோடி மக்களை இந்த நாட்டில் பிச்சைக்காரர்களாக, அனாதைகளாக அடித்து விரட்டிவிட்டு, அதன்பிறகு இந்தத் தேசத்தின் எல்லையிலே யுத்தத்தைத் தொடுத்து, அமைதியான நகரங்களின்மீது குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடியவர்களின் பக்கம் நாட்டின் பக்கம் நியாயமிருக்கிறது என்று பேசும் கேவலமான இழிநிலையை இன்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நிக்சன் அவர்கள் என்ன



[6th December 1971 [திரு. எம். ஆறுமுகசாமி]

நடவடிக்கை எடுத்தாலும், அமெரிக்க மக்கள் உண்மையைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள், நம் பக்கமாக உலக நியாயம் வெகுதுரிதமாக மாறும், ஆதரவாக வரும் என்று நாம் எதிர்பார்ப்போமாக.

அதற்கு அடுத்தபடியாக, யுத்தத்தை நாம் நடத்துகின்ற வேளையிலே ஒன்றை உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டும். யுத்தம் என்பது போர்க்களத்திலே எல்லையிலே நடைபெறுவது மட்டுமல்ல, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் நடக்கிறது. ஒவ்வொரு கழனியிலும், ஒவ்வொரு செண்ட் நிலத்திலும் நடக்கிறது. ஒரு தானிய மணியைப் பத்தாயிரமாகப் பெருக்கி உற்பத்தி செய்து குவிக்க வேண்டும் நாம். ஒவ்வொரு தொழிற்சாலையும் உருளைகளை ஒரு நிமிஷங்கூட நிற்காது தங்குதடை இல்லாது ஓடச்செய்ய வேண்டும். நமது சக்தி முழுவதையும் வீணாக மாச்சர்யங்களைப் பேசிக்கொண்டு வீணாக்கக்கூடிய நேரமல்ல இது. எதைப்பற்றியும் பேசாமல், தேசத்தின் உற்பத்தியைப் பெருக்கி தேசத்திற்காகப் போராடுகின்ற அந்த ராணுவ வீரர்களுக்கு இதோ உங்களுக்கு சப்ளைகள் தங்குதடை இல்லாமல் வரும் என்று கூறுவது ஆகியவற்றில் முன்னணியில் இருக்க வேண்டும். அதற்கு மாறாக, எதுவும் செய்யக் கூடாது. உள்நாட்டில் "லா அண்டு ஆர்டர்" ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாக்க வேண்டும். மற்ற எல்லா காலங்களையும்விட இன்று இது முக்கியமானது. இரண்டு நாட்களாக சிலர் புளுகுகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். காலை முதல் சாயங்காலம் வரையில் திண்ணைத் தூங்கிப் பேச்சாளர்கள் நின்று கொண்டு பேசுகிறார்கள். நம்முடைய சேதத்தைச் சொல்லவில்லை, இங்கே கூடுதலான சிவிலியன் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், நம்முடைய எல்லையிலேகூட எதிரிகள் முன்னேறுகிறார்கள் என்று சொன்னால், அப்படிப் பேசுபவன் இந்த நாட்டின் முதல் நம்பர் துரோகி. இதை நாம் முதலில் தடுக்க வேண்டும்.

இரண்டாவது இந்தத் தேசத்திலே இதைச் சொல்வது மட்டும் போதாது என்று அன்பர் திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். துவேஷத்தை வளர்க்க வேண்டும் என்றார்கள். நாம் நம்முடைய எதிரியை வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், நாம் எதிரியை எதிர்ப்பதற்கும், வெறுப்பதற்கும் பழக வேண்டும். பாகிஸ்தான் என்பது ஒரு கொடிய நாடு, நமக்கு நச்சரவமாக வந்து வாய்த்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பாகிஸ்தானை இந்தத் தேசத்தில் சிருஷ்டித்தபோதே ஒரு நூற்றாண்டு யுத்தத்தைத் தயார்படுத்திவிட்டுப் போய்விட்டது. பூகோள ரீதியாக ஒன்றாக இல்லாத நாட்டை, சமயத்தால் மட்டும் ஒன்று சேர முடியாத நாட்டை, மொழியால், இனத்தால், கலாசாரத்தால் மற்ற எல்லா வகையிலும் வேறுபட்ட மக்களை ஒன்றாக பிணைத்து ஒரே நாடு என்று செய்துவிட்டுப் போய்விட்டது. அதன் விளைவு நமது தேசத்தின் நடுபாகத்திலே உட்கார்ந்துகொண்டு மூன்று புறமும் நமது பூபாகம், நான்காவது புறத்தில் நமது கடல், இப்படிப்பட்ட இடத்திலே இருதயத்திலே வந்திருக்கும் கேன்சர் நோய் போன்று கிழக்கு வங்காளம் இருந்து வந்தது. அந்தக் கேன்சர் நோயை இந்த யுத்தத்திலே அறுத்து எறியப்போகிறோம். அது நமது நேச நாடாக "ஃபிரண்லி பஃபர் ஸ்டேட்" ஆக இருக்கவேண்டும். ஏற்கெனவே சுதந்திர திபேத்தைச் சீனாவுக்கு இழந்துவிட்டோம். அப்படி இழந்துவிடாது இருந்திருப்போமானால், சீனா நம்மை அந்தப் பக்கம் இருந்து தாக்க முடிந்திருக்காது. அதே போல அல்லாது இன்றைக்கு மிகக் கேந்திரமான இடத்தில் இருக்கக்கூடிய கிழக்கு வங்காளத்தை ஒரு நட்பு நாடாக, ஒரு சுதந்திர நாடாக நாம் பார்க்கப் போகிறோம். நமது சுதந்திரத்தைப் பாதுகாக்க அது அத்தியாவசியமானதாகும். எப்படிப் பார்த்தாலும், நமது சுதந்திரத்திற்

காகவும் ஜனநாயகத்திற்காகவும் நடக்கும் போராட்டத்தில் நாம் கட்சி மாச்சரியங்களை மறந்து, ஜாதி, சமூக மொழி மத வேறுபாடுகளையெல்லாம் மறந்து இன்றையதினம் நமது தேசத்தின் திருவாளர் ரெட்டியார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், ஒன்றுபடல் அவசியமாகும். இன்றைய தினம் நமது தேசத்தின் தலைவி இந்திரா காந்தி அம்மையார், தமிழ்நாட்டிற்கு, இன்று தலைவராகவுள்ள திருவாளர் டாக்டர் கருணாநிதி அவர்கள், இந்த இரண்டு பேர் தலைமையில் செயல்படும் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் இந்த தேசத்தின் எல்லையைப் பாதுகாப்பதற்காக, இந்த நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக, பன்னிரெண்டரை லட்சம் சதுர மைலைக்கொண்ட இந்திய நிலப் பரப்பில் ஒரு அங்குல நிலப்பரப்பைக்கூட விடாது பாதுகாக்க, அடுத்தவன் நாடு நமக்குத் தேவையில்லை. இவர்கள் எடுக்கும் அத்தனை முயற்சியிலும் நாம் ஒன்றுபடுவோம், அதற்காக எத்தனை தியாகங்கள் கேட்டாலும் செய்யத் தயங்கமாட்டோம். நாம் தியாகம் செய்தே வளர்ந்தவர்கள், அழிந்துவிடவில்லை, நம்மிலே பலர் பல விதத் தியாகங்களை இந்தத் தேசத்தின் சுதந்திரத்திற்காகச் செய்தவர்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். மறுபடியும் நமக்கு அறைகூவல் வந்திருக்கிறது. அதனை ஏற்று பல தியாகங்கள் செய்ய முன்வருவோம் என்று கூறி இந்த அவையிலே முதல்வர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை நான் உளப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்றும் கூறி அமர்கிறேன். வணக்கம்.

*THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, I consider it my duty to associate myself with this momentous resolution in my humble capacity as a teachers' representative. People have spoken from various angles. The hon. Member who spoke just before me pointed out how wars are fought and won not only in battle-fields but in factories, in streets, and in farms. But the solid fact remains that wars are made in the minds of men. It is indeed there that wars have got to be fought and won. I have been a humble soldier in my life, fighting not against physical adversaries but against ignorance, against illiteracy, and against superstitions. We find that invisible forces are more dangerous than the visible aeroplanes and tanks that we see before our eyes. I have now drawn inspiration from the Hon. the Chief Minister's visit to America. He has done a tremendous job; he has educated public opinion there. The basic illusion from which most of the countries suffer is that every Indian is a Hindu and he was opposed to the other religionists. It is a very difficult job to explain that an Indian is an Indian and not necessarily a Hindu. Hindus, Muslims, Christians and Buddhists are all Indians here. That is the concept which he could propagate in a foreign country in no time with his capacity and that is the concept which we in the class-rooms are enabling in our own humble measure, to take root, right from the early stage and we try to teach them the great values of democracy.

My hon. Friend Thiru Vasantha Pai quoted the great Gettysburg speech. It is there in the lips of every school-boy. I know every school-boy reads it. Does he live up to it? He says, "The world will little note, nor long remember what we say here, but it can never forget what they did here". When I ask a boy,





"What is the mistake that Lincoln committed here?", he blinks. Every boy repeats parrot-like the words "The world will little note, nor long remember, what we say here". It must be a folly. Are we not noting what was said there? Didn't Lincoln err in this particular place? Such famous speeches are always remembered. Such historic acts are never forgotten. The Gettysburg speech must not be a mere speech, a mere collection of words, words and words but ideas that go into the blood of the boys. There is a great work that we, teachers, have got to do and we have to accept the challenge. For the past 38 years, I have been doing it in my own humble measure, but the challenge is all the greater to-day.

The Hon. the Chief Minister appealed for blood donation and I cannot come in that queue at all. But I can certainly raise a new generation of students. I can infuse fresh blood into the students so that the little child may catch something of that new blood and live up to the new ideology which we think to-day is at stake. As has been so well pointed out, it is not a mere fight between two countries but it is a fight between two ideologies. The Hon. the Chief Minister has very well pointed out that the great ideals of secularism and democracy are at stake here. In fighting that not merely the soldiers but in a great measure, the teachers also can do their humble bit and in that respect, Sir, I pledge the whole-hearted devotion and loyalty of all the teachers, not only of the two districts I have the honour to represent, but of the teachers in Tamil Nadu all over. Even the school boys must have a new spirit and there can be no more demonstrations and there can be no more such futile questions as to whether convocations are necessary. We must create a social order where convocations have a meaning, where education has got a purpose. We must create in the children a passion for constructive work and we must rouse in them an inspiration to live up to the great ideals that are at stake. So, the student community, I am sure, Sir, will forget all the little things over which they have been dissipating their energies and would constructively come forward to assist in war effort by looking after the families of jawans by doing their humble measure of work. May I point out that the society we see to-day is much different from what it was 38 years ago? There are no more distinctions between the poor and rich boys in the class-rooms. There are no more distinctions on grounds of religion in class-rooms. When I look back, my mind goes to the period when I entered the teaching perfession and I now see the very pleasant picture of a poor child in the school never feeling that it is poor, because to-day the poor child wears the same uniform as the rich boy, rubs shoulders with each other, reads the same text-book and receives the same instruction and such distinctions are not there in the class-rooms, and I with society follows it up, so that such distinctions are not there in society also. I remember what the great leader General Eisenhower said when he inaugnrated a great confederation of the world teachers' organisation. He said: "When I had been at school.

[Thiru M. Rajah Iyer] 6th December 1971]

I was a poor boy. I came from a very poor home. But thinking back now, I realise that I belonged to a poor home. When I was at school, I hardly knew how poor I had been ". That is the kind of feeling which I want every student to-day to have namely, that there is no distinction between the rich and the poor boy, between one belonging to a religion or community and the other to another religion or community. It should be such a classless and casteless society. There may be ranks but there shall not be any caste or class prerogatives and inherited privileges. We should create a classless society in our class rooms in the educational institutions and in this mighty endeavour which is as important to-day, as ever, we pledge our whole-hearted support.

* THIRUMATHI MARY CLUBWALA JADHAV : Mr. Chairman, Sir, as a humble social worker, I pledge, on my behalf and on behalf of the social welfare agencies, our support to the war efforts, be it for blood-bank, be it A.R.P., be it civil defence, be it nursing division, or be it raising of resources. Whatever it is, we would like to give our full support and offer our services through the Hon. the Chief Minister. Sir, I am myself ready even to go to the battle-front (Cheers) as a nurse, as a leader or anything else. Thank you.

**திரு. எஸ். முத்துசாமி:** தலைவரவர்களே, இன்று பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனத் தீர்மானம் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் ஆசிரியர்கள் இனத்தின் சார்பாக முழு மனதோடு வரவேற்கிறேன். இந்த நெருக்கடி நேரத்தில் முதலமைச்சரவர்கள் அமெரிக்கா சென்று உடல் நலத்தைப் பாதுகாத்துக்கொண்டு, இவ்வளவு நெருக்கடிக்கிடையிலும் பாதுகாப்பாக இங்கு தெம்புடன் தலைமையேற்று நடத்துவதற்கு வந்து சேர்ந்திருப்பது பற்றி மன மகிழ்வோடு அவரை வரவேற்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நடைபெறுகிற போராட்டம் மாபெரும் போர், இறுதிப் போர் என்று கொழுப்பாக யாஹ்யாகான் கொக்கரித்துக்கொண்டிருக்கிறார். இப்படி சர்வாதிகாரி யாஹ்யாகான் இப்போது போர் தொடுத்திருப்பது மக்கள் புரட்சியை நடத்தி வெற்றி கண்ட இந்தியா மீதாகும். அமெரிக்க மக்கள் புரட்சி நடத்திய சரித்திரத்தைப் படித்திருக்கிறோம். ரஷ்யப் புரட்சியைப்
பி.ப. 6·20, பற்றியப் படித்திருக்கிறோம். ஜார் மன்னனை வீழ்த்தி, அங்கு மக்கள் புரட்சி செய்ததை ரஷ்ய சரித்திரத்திலே படித்திருக்கிறோம். அமெரிக்க புரட்சி என்பது இங்கிலாந்து நாட்டிலிருந்து கொண்டு, இங்கிலாந்து வெள்ளையர்கள் தங்களை ஆளக் கூடாது என்று சொல்லி நடத்தப்பட்ட புரட்சி, அப்படி புரட்சி நடத்தி அரசாங்கம் அமைத்து அந்தப் பாரம்பரியத்தைப் வைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்கத் தலைவர்கள் இன்றைக்கு பங்காள தேசத்திலே நடைபெறுகிற மக்கள் புரட்சியை அடக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும் பாகிஸ்தானத்து சர்வாதிகாரத்திற்கு, அந்த நாட்டு ராணுவ வெறியர்களுக்குப் பின்பலமாக நின்றுகொண்டிருக்கும் காட்சியினை இன்று பார்க்கிறோம். அமெரிக்க சுதந்திரப் போரில் அமெரிக்க வெள்ளையர்கள், இங்கிலாந்து வெள்ளையர்கள் தங்களை ஆளக் கூடாது என்று புரட்சி செய்தது போலதான் பாகிஸ்தானத்து முஸ்லீம் வங்காள தேச முஸ்லீம்களை ஆளக் கூடாது என வங்காள தேச மக்கள் புரட்சி செய்கிறார்கள். இதை அமெரிக்கா உலகமே மறுக்கிறது. அமெரிக்கா இந்தியாவிற்குச் • செய்துகொண்டிருக்கும் துரோகங்களின் உச்சகட்டமாக இப்போது செய்து கொண்டிருக்கிறது



6th December 1971] திரு. எஸ். முத்துசாமி

என்பதை இந்த நாட்டு மக்கள் நிச்சயமாக மறக்கமாட்டார்கள். தங்களை இனம் கண்டு கொள்ள முடியாத நிலையில் உற்ற நண்பனாக நடித்துக்கொண்டிருந்த அமெரிக்க அரசாங்கம் இன்றைக்கு அதனுடைய துரோகச் செயலை நன்கு சித்தரித்துக் காட்டி விட்டது. ஏற்கனவே சீனர்கள் இந்த நாட்டின் மீது படையெடுத்த நேரத்திலே இந்தியாவிற்குத் தன்னால் வழங்கப்பட இருந்த பாதுகாப்புத் தளவாடங்கள் வழங்காமல் இருந்த நிலையிலும் பாகிஸ்தான் முன்பு படையெடுத்த நேரத்தில் உணவுப் பொருள்களை கூட அனுப்பாமல் நிறுத்தி விட்ட நிலையிலும், யார் உண்மையான நண்பர்கள், யார் உண்மையான எதிரிகள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறியக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. மக்கள் அறியக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இன்றைக்கு நமக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு சோவியத் யூனியன் முன்வந்திருக்கிறது. ஆனால் அமெரிக்கர்களும், மற்றவர்களும் நமக்கு விரோதமாக, நம்முடைய எதிரிகளுக்குச் சாதகமாக நடந்துகொள்கிறார்கள். ஆனால் ரஷ்ய அரசு 1962-ல் சீனர்கள் இந்தியாமீது படையெடுத்த நேரத்திலும் மிக்க விமானங்களின் பகுதிகளை ஒப்பந்தப்படி தவறாமல் அனுப்பியதை நாடு அறியும். ரஷ்யா உத்த நண்பனாக, உயிர் நண்பனாக அன்றும் இன்றும் விளங்குகிறது. இவர்களையெல்லாம் அடையாளம் கண்டுகொள்கிற வாய்ப்பு இன்றைக்கு நமக்குக் கிடைத்தது. இன்றைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இந்தியத் தலைமை நிலை குலையாமல் செயல்பட்டு வருவதைக் கண்டு இந்த நாட்டு மக்கள் அத்தனை பேரும் உள்ளம் பூரிக்கிறார்கள். நான் பெருமிதமடைகிறேன். நம்முடைய தலைமை சிறிதும் நிலை குலையாமல் இந்தப் போரை எதிர்த்து முறியடிப்பதற்கு நல்ல முயற்சிகளிலே ஈடுபட்டிருப்பதைக் கண்டு நாமெல்லாம் பெருமைப்படுகிறோம். வாஷிங்டனிலிருந்து இந்தியாவை ஆளவேண்டுமென்று நிக்ஸன் நினைக்கிறார் போலும். அமெரிக்காவிலும் உள்ள ஆட்சியாளர்கள் எப்படி நினைத்தாலும், அந்த நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்று எண்ண இடமுள்ளது. இந்தியத் தலைமை எஃகுபோல் நிலை குலையாமல் இருக்கிறதோ, அதே போல நம்முடைய மாநிலத் தலைமையும் நிலை குலையாமல் இருக்கிறது. இதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட நிலைமையை நாம் பெற்றிருக்கிறோம். அன்னியன் உள்ளே நுழையாதவாறு நம்முடைய வீரர்கள், பயிற்சி பெற்ற சிறந்த நம் வீரர்கள் எதிரிப்படையை தூள் தூளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே என்னுடைய ஒத்துழைப்பைத் தருகின்ற முறையிலே என்னுடைய ஒரு மாத ஊதியத்தை போர் நிதிக்கு வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் கூட்டணியில் உள்ள 1 லட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்களும் உயர்நிலை ஆசிரியர்களும் இத்தகைய நெருக்கடி நேரத்தில் தங்களால் ஆன எல்லா உயர்ந்த உதவிகளையும் செய்வார்கள் என்ற உறுதியையும் அளிக்கிறேன். கடந்த காலத்தில் 1962-ல் சீனு படையெடுத்த நேரத்திலும், 1965-ல் பாகிஸ்தான் நம் மீது போர் தொடங்கிய நேரத்திலும், தமிழ் நாட்டு ஆசிரியர்கள் தங்களாலான எல்லா உதவிகளையும் செய்தார்கள். அதேபோல் இப்பொழுதும் செய்வார்கள் என்ற உறுதியினை அளித்து நேரத்திலே சுருக்கமாகக் கூறிக்கொண்டு இந்த வாய்ப்பினைத் தந்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மன்றத்தில் முன் மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்த கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மற்ற உறுப்பினர்களும் மிக்க உணர்ச்சிகரமாக, அரசுக்கு எல்லா வகைகளிலும் எந்த விதமான வேறுபாடுமில்லாமல் ஆதரவினை அளிப்போம் என்கின்ற உறுதியினை வழங்கியமைக்காக நான் பெரிதும்

[டாக்டர் மு. கருணாநிதி] [6th December 1971

மகிழ்ச்சியடைகிறேன். இது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும். அவர்கள் அனைவருக்கும் நான் மனமார நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். போர் முனையில் போராடுகிற, நாட்டுக்காகச் சேவை செய்யச் சென்றிருக்கிற வீரர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாத ஒன்று என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். போர் நடைபெறுகிற நேரத்தில் போருக்குச் செல்கிற வீரர்கள் திரும்பி வந்தால்தான் நிச்சயம் என்ற மன உறுதியோடு களம் நோக்கிச் செல்கின்றவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குடும்பங்களை, தியாக உள்ளம் படைத்தவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பினை அரசு மட்டுமல்லாமல் பொது மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும், பொது நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொதுப் பணியில் ஈடுபட்டிருக்கிற மன்றங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே தமிழகத்திலே இருக்கிற அமைப்புகள் அனைத்தும் அந்தச் சீரிய பணியினைத் தொடர்ந்து நடத்திட முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த வீரர்கள் தங்களுடைய வீட்டிலே விடை பெற்றுக்கொண்டு களம் சென்ற பின்னாட்களுக்குப் பிறகு அவர்கள் அணிந்திருந்த உடைகள் மட்டும் அடையாளமாக அவர்கள் வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்படும் என்பதை நாம் நன்றாக அறிவோம். அப்படிப்பட்ட நிலைமைகள் இப்படிப்பட்ட போராட்டத்திலே தவிர்க்க முடியாதவைகளாகத்தானிருக்கும். அப்படிப்பட்ட தியாக மறவர்களுடைய சேவைகளையெல்லாம் நாம் பாராட்டுகின்ற வகையிலே அந்த வீரர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்கின்ற அந்த உறுதியினைப் தந்தாக வேண்டும். அதே நேரத்தில் உடை அணிந்து, கையிலே போர்க்கருவிகள் எடுத்து, அவர்கள் களம் சென்று எதிரிகளோடு போராடுகின்ற இப்படிப்பட்ட போராட்டத்திலே ஈடுபடுகிறார்கள் என்று மாத்திரமல்லாமல், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களும் இங்கே எடுத்துக்காட்டியது போல, அனைவருமே இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற உணர்ச்சியினைப் பெற்றாக வேண்டும். நாம் ராணுவ உடை அணியாத சிப்பாய்களாக அந்தப் போர் முனையிலே நின்று கொண்டிருக்கிறோம். நாம் சட்ட மன்றத்திலே அமர்ந்திருந்தாலும், பேரவையிலே அமர்ந்திருந்தாலும், வேறுபல நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்கிறோம் என்றாலும், யுத்த தளவாடங்களோடு போர் முனையிலே நாம் நிற்காவிட்டாலும், போர் முனையிலே தான் நின்றுகொண்டிருக்கிறோம் என்ற அந்த உணர்வினைப் பெற்றாக வேண்டும். இப்படிச் செயல்படுவதிலே இந்தியாவிலே இருக்கிற மற்ற மாநிலங்களோடு எல்லா வகைகளிலும் தமிழகம் நிச்சயம் போட்டியிடும் என்ற உறுதியினை இங்கே பேசிய எல்லாக் கட்சித் தலைவர்களும் எனக்குத் தந்திருக்கிறார்கள். முன்முறையிலேயே இது பற்றி வெகு விளக்கமாகப் பேசியிருக்கிற காரணத்தாலும், எல்லாக் கட்சித் தலைவர்களும் உணர்ச்சி மிகுந்த கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருப்பதாலும், இந்த மன்றம் இந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றித் தருமென்ற முழு நம்பிக்கையை நான் பெறுகிறேன். நான் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, நம்முடைய சுதந்திரக் கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. சா. கணேசன் அவர்கள் ஒரு மாத சம்பளத்தை யுத்த நிதியாகத் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் யுத்த நிதிக்கு 1,500 ரூபாய்க்கு செக் ஒன்றினைத் தலைவர் அவர்கள் மூலம் வழங்கியிருக்கிறார்கள். தருவதாக வாக்களித்துள்ள அத்தனை பேருக்கும், தர இருக்கின்ற அத்தனை பேருக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அடையாள



6th December 1971] [டாக்டர் மு. கருணாநிதி]

மாக ஆரம்பித்திருக்கிற இப்படி யுத்த நிதி சேர்க்கின்ற முயற்சி வெகு வேகமாக நடைபெறுவதற்கு எல்லாத் தரப்பிலும் உள்ளவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்சிக்குக் கட்சி மோதிக் கொள்கிற வைகளையெல்லாம், இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி தீருகிற வரையில், ஒதுக்கி வைத்து விட்டு, அதற்குப் பிறகு வேண்டுமென்றால் வெற்றி யாரால் கிடைத்தது என்ற போட்டியிலே ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளலாம் என்கிற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று கலைவாணர் அரங்கத்திலே நடைபெற்ற கூட்டத்திலே குறிப்பிட்டது போல, ஒருவருக்கு ஒருவர் தாக்கிக்கொள்வதையெல்லாம் இந்த நேரத்திலே ஒத்தி வைப்போம். அது மாற்றுக் கட்சியாக இருந்தாலும், என்னுடைய கட்சியாக இருந்தாலும், அதையும் சேர்த்தே சொல்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையிலே கட்சிப் பாகுபாடுகளை மறந்து, நம்முடைய மனமாச்சரியங்களை மறந்து இந்த நாட்டைக் காப்பாற்ற நடைபெறுகிற பெரும் போராட்டத்தில் அனைவரும் பங்கு பெற வேண்டுமென்று மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீரமானத்தை அனைவரும் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுகொண்டு அமருகிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய உறுப்பினர்கள் போல், நானும் சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் போரைப் பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபோது பலவற்றைக் குறிப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் "பாகிஸ்தான், பாகிஸ்தான்" என்றார்கள். இப்படி பாகிஸ்தான், பாகிஸ்தான் என்று சொன்னால் என்ன பொருள் என்று நண்பர் திரு. வகாப் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். பாகிஸ்தான் என்று சொன்னால் "தூய்மையான இடம்" என்று பொருள். தூய்மையான இடத்திலே ரத்தம் சிந்தக் கூடாது என்று சொன்னதற்காக 1,400 ஆண்டுகளுக்கு முன்னால் முகம்மது நபிகள் நாயகம் மெக்காவிலே இருந்து மெதினா வரை கல்லால் அடித்துத் துரத்தப்பட்டார். அதற்குப் பின்னாலே இந்தியாவிலே வந்த முகலாய மன்னர்களை பார்க்கும் பொழுது, எனக்கு முகலாய மன்னன் அக்பர் என்றால் ஒரு ஆசையும், அவுரங்கசிப் என்றால் ஒரு வெறுப்பும் ஏற்படுவதும் உண்டு. அவுரங்கசிப் ஆர்மோனியத்தையே உடைத்தான்; ஆர்மோனிய சப்தத்தை அவன் கேட்பதே இல்லை. ஆனால், அவனே தன்னுடைய கடைசி காலத்திலே இறக்கும் தருவாயிலே இருக்கும் பொழுது ஒன்றைச் சொன்னான்

"I brought nothing when I was born, but I am carrying a caravan load of sins".

நான் பிறக்கும் பொழுது எதுவும் கொண்டு வரவில்லை, ஆனால் போ[illegible] ஒட்டகத்தின் பட்டாளத்தின் அளவுக்கு பாபங்களை சுமந்து [illegible] றேன் என்று சொன்னானும். அதைப் போலவே நான் மதி[illegible] மன்னன் அக்பர். அக்பர் இந்து முஸ்லிம்கள் சமரசமாக இருக்க வேண்டுமென்று சொல்லி, நெற்றியிலே 'திலகம்' இட்டுக்கொண்டு சென்றிருக்[illegible]. அது தவிர அவருடைய அமைச்சர் அவையிலே பீர்பால், தோடர்மால், [illegible] போன்றவர்களை எல்லாம் வைத்திருந்திருக்கிறான். அது மட்[illegible] ராஜ புத்திரர் அரசர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்[illegible], ராஜ



63038

புத்திர மாதர்களைக்கூட திருமணம் செய்து கொண்டான் என்று தெரிகிறது. அது போலவே பழக்கத்தில் இருந்த ஒரு குரானுக்கு இன்னொரு குரானை 'அபுல் பாசல்' என்பவரை வைத்து எழுதச் சொல்லி, அதற்கு "தீன் இலாஹி" என்ற பெயரையும் வைத்தான் என்று தெரிகிறது. அந்த இடத்திலேயாவது இந்த முஸ்லிம் பெரும் மக்கள் அப்படிப்பட்ட எண்ணங்களை ஒத்துக்கொண்டார்களா? அதற்குப் பிறகு இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமையில் யாஹியாகான் உள்ளபடியே இஸ்லாமிய சமுதாயக் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறாரா? குரானிலே கண்டிருக்கிறபடி நடக்கிறார்களா? நபிகள் நாயகம் சொல்லுகிறார்களே, நம்முடைய மதத்தைச் சார்ந்தவனை மாத்திரமில்லாமல், வேற்று மதத்தைச் சார்ந்தவனையும் கொள்ளை அடிக்கும் எந்த முஸ்லீமும் நல்ல முஸ்லீமாக, தொண்டு புரிகின்ற முஸ்லிமாக ஆகமாட்டான் என்று. உள்ளபடியே அதை எல்லாம் இவர்கள் பின்பற்றுகிறார்களா? உள்ளபடியே உலகம் என்றுமே ஒன்றாக இருக்கும் என்று நம்ப முடியவில்லை. அப்படி நம்புவது பைத்தியக்காரத்தனம். யார் இந்த நாட்டிலே நாம் ஒற்றுமையாக இருக்கக் கூடாது என்று சொன்னார்கள்? எல்லோருமே நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று தான் சொன்னார்கள். வள்ளுவர் கூட "அன்பின் வழியது உயர்நிலை, அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என்று குறிப்பிட்டு, அன்பின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்கள். அப்படி திருவள்ளுவர் சொன்ன கொள்கையிலே நம்பிக்கை வைத்து சிலர் சென்று கொண்டிருந்தார்கள். பகையை பகையால் வெல்ல முடியாது, அன்பால் தான் வெல்ல முடியும் என்று மகான் புத்தர் தம் போதனையை உலகுக்கு அளித்தார். அதைப் பின்பற்றி சிலர் சென்று கொண்டிருந்தார்கள்.

"The world is not moved by force of arms, but by ideals to liberate."

என்று சீனப் பெருங்கவிஞன் சொன்னான். ஆனால், உலக மக்கள் அத்தனை பேரும் சமாதான போதனையை நோக்கிச் செல்வார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. இன்று நடைபெறுகின்ற நிலைமையில், கோசிஜின் அவர்கள் சொன்ன மாதிரி இந்தப் போரிலே யாருமே தலையிடாமலிருந்தால், உள்ளபடியே கிழக்குப் பாகிஸ்தானில் மாத்திரமில்லாமல் மேற்கு பாகிஸ்தானிலும் ஒருமையான அமைதியை நிலவச் செய்துவிடுவார்கள் நம்முடைய வீரர்கள் என்று நாம் நம்புகிறோம்.

நானும் 4-ஆம் தேதி டெல்லியிலே அகப்பட்டுக்கொண்டேன். டெல்லியிலே இருந்து சென்னைக்கு வருவது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. டெல்லியிலே இருக்கும் விமானத்திலே ஏறினேன், ஏறியதும் வெளியே வந்து விடுங்கள் என்கிறார்கள். ஒரே இருட்டு. எந்த இடமும் தெரியவில்லை. ஒரு சத்தம் கேட்கிறது. விமானதள கட்டிடத்திற்கு அப்பால் வெளியே நில்லுங்கள் என்கிறார்கள். நண்பர் திரு. சோமசுந்தரம் கூட வந்திருந்தார். டெலிபோன் செய்யலாமா என்று கேட்டால், மறுபடியும் ஒரு சோல்ஜர் வந்து நீங்கள் யாரும் வீட்டுக்குப் போகாதீர்கள் என்று சொன்னான். 5 ஆம் தேதி நான் வருவதாக இருந்தும், முதலமைச்சர் அவர்கள் முன்பே இங்கு வந்து விட்டதால் நானும் சீக்கிரமே இங்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எங்களை மறுபடியும் ஏற்றி உட்கார வைத்தார்கள் விமானத்திலே. மறுபடியும் ஒரு ஜவான் வந்து நின்றார், நமக்கு "படக்கு, படக்கு" என்று அடித்துக் கொள்கிறது. விமானத்திலே என்னோடு 100 பிரயாணிகள் இருக்கிறார்கள்.



விமானத்தை ஓட்டுகின்றவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் மிகவும் பயந்தவர்களாக இருக்கிறோம். எங்களுக்கு பக்கத்திலே 120 மைலுக்கு அப்பாலே குண்டு போடுகிறார்கள் என்ற செய்தி வந்தது. நாங்கள் எல்லாம் நிகழ்ச்சிகளை பாராளுமன்றத்திலே முடித்துவிட்டு, டீ தண்ணீராவது குடிப்பது என்று கருதி கையிலே தட்டை எடுக்கும் பொழுது, விளக்கை அணைத்துவிட்டான். நமது குடியரசுத் தலைவரைக் கொண்டுவந்து, அனுப்பி வைப்பதே பெரும் பாடாக போய்விட்டது எங்களுக்கு. கேன்டில் விளக்கைக்கொண்டு வந்து அவரை அனுப்பி வைத்தோம். பிறகு தான் நாங்கள் பில்டிங்க்கு வந்து சேர்ந்தோம். இந்த நிலைமையிலே அங்கே இருட்டடிப்பு செய்யப்பட்டது. இவ்வளவு பாதுகாப்பாக இருக்கும் நானே, 66 வயதான நானே, இப்படி பயப்படுகிறேன். 20, 30 வயதானவர்கள் வாழ்க்கைக் கனவுகளை மனதிலே கொண்டிருக்கிறவர்கள் பயப்பட்டால், அதிலே அர்த்தம் இருக்கிறது. நான் கொஞ்சம், கொஞ்சமாக சாவின் சன்னிதானத்திலே இருக்கும்பொழுதே இப்படி பயப்படுகிறேன் என்றால், தனிப் பாதையிலே எதிரிகளின் தாப்பிலே இருந்து என்ன வரும் என்று தெரியாமல் இருக்கிறார்களே அந்த நம்முடைய வீரர்கள், அந்த வீரர்களின் கதி என்ன ஆகும் என்று சிந்திக்கும் பொழுது, விமானம் கிளம்பி 140 மைல் தாண்டி வந்துவிட்டது. உடனே அறிவிக்கிறார்கள் நாம் அபாயமான இடத்தை தாண்டி வந்துவிட்டோம், "we have crossed the danger zone" என்கிறார்கள். எனக்கு நல்ல வேளை ஆக்ரா பகுதியைத் தாண்டிவிட்டோமே என்ற ஒரு நிம்மதி வருகிறது. ஆனால், தீரா ஆசையின் காரணமாக ஒருவன் தன் மனைவியின் ஞாபகார்த்தமாகக் கட்டிய ஒரு கல்லறை அங்கே தான் இருக்கிறது. மும்தாஜ் பீகம் மீது ஆசை வைத்து ஷாஜஹான் கட்டிய தாஜ் மகால் அங்கே தான் இருக்கிறது. அந்த தாஜ் மகால் மீது அவன் குண்டு போட்டால் என்ன ஆவது என்று நினைத்தேன். இவைகளை எல்லாம் நான் சொல்லுவதற்குக் காரணம் என்னவென்று பார்க்க வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் தகராறு இல்லை. ஆனால், நாம் தான் முஸ்லீம்களைப்பற்றி என்னென்ன பேசுகிறோம்? இன்னும் சொல்லப்போனால் திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற முஸ்லீம்கள் என்னை 'மாமா, மாமா' என்று கூப்பிடுகிறார்கள். வயது ஆனதாலே நான் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறேன்; அதுவே சிறு வயதாக இருந்தால் கொஞ்சம் சங்கடமாகத் தான் இருக்கும். வடக்கே இருப்பவர்களிடத்திலே இப்படிப்பட்ட ஒற்றுமை நிலைமை வராது. வடக்கே முஸ்லீம் சாயா, இந்து சாயா என்று பிரித்துக் கொடுக்கிறான். அவர்கள் எப்பொழுதுமே ஒன்றாக இருக்க மாட்டார்கள். நமக்கு அம்மாதிரி வருவதில்லை. எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர் திரு. வகாப் அவர்கள். அதைப் போலவே நம்முடைய காயதே மில்லத் அவர்களும். எனவே அந்த விதத்திலே நம்மிடையே வித்தியாசம் இல்லை. எனவே, வெற்றிகரமாக இந்தப் போர் முடிவதற்கு நாம் போருக்குத் தேவையான ஆள், பொருள், கருவி அனைத்தையும் தந்து தீரவேண்டுமென்று நமது முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நானும் வழிமொழிந்து, அதை நிறைவேற்றித் தர உங்களுடைய ஓட்டுக்கு விடுகிறேன்.

MR. CHAIRMAN: The Resolution will be passed unanimously with acclamation.

(Acclamation by Members)

MR. CHAIRMAN: The Resolution is passed unanimously with acclamation.

MR. Chairman [6th December 1971

The House will now adjourn and meet again at 4.00 p.m. on Tuesday, the 7th December 1971.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### *A. Statutory Rules and Orders.*

* 93. Notification issued with G.O.Ms. No. 1527, Agriculture, Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 94. Notification issued with G.O. Ms. No. 1951, Agriculture, dated the 7th July 1971 relating to control over the purchase and sale of castor in the taluks of Gudiyatham, Vaniyambadi, Tiruputhur and Polur in the North Arcot district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959.)]

* 95. Notifications issued with G.O. Ms. No. 74, Excise and Prohibition, dated the 7th October 1971 relating to the specification of the maximum quantity of liquor that may be transported within the State of Tamil Nadu. [Laid on the table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

* 96. Notification issued with G.O. Ms. No. 2245, Revenue, dated the 13th August 1971 in regard to setting up of three additional check posts around Madras City. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 97. Notification issued with G.O. Ms. No. 2349, Agriculture, dated the 20th August 1971 in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

### *B. Reports, Notifications and other Papers.*

& 34. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussion on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1970–71. (English and Tamil).

* 35. Speech of Hon. Thiru O. P. Raman, Minister for Electricity, initiating the Discussion on the Annual Financial Statement for 1971–72 and the Supplementary Financial Statement for 1970–71 of the Tamil Nadu Electricity Board. (English and Tamil).



6th December 1971]

* 36. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on the 31st March 1971 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969:

1. Thiru A. R. Damodaran.
2. Thiru S. T. Adityan.
3. Thiru M. Arumugaswami.
4. Thiru Kattoor Gopal.

(as on 27th November 1971.)

37. Report of Thiru P. Ramakrishnan, I.C.S. (Retd.), Retired Judge, High Court, Madras, on the Police firing incident which took place at Perumanallur, Coimbatore District, on the 19th June 1970. (English and Tamil.)

38. Report of Thiru N. Ananthapadmanabhan, I.A.S., Commissioner of Land Revenue, Prohibition and Excise, Madras on the Police Firing incident which took place at Silvarpatti village, Madurai district on the 12th July 1970. (English and Tamil.)

---

& Circulated to all M.L.Cs. on 3rd December 1971.

* Laid on the table of the House on 4th December 1971.

[*Vide* Answea to Starred qustion 52 on page 56]

விடை.

அ

| | | புலவர். | வித்வான். |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1 | 27 |
| 2 | கன்னியாகுமரி | 106 | 2 |
| 3 | மதுரை | 1 | 15 |
| 4 | வட ஆற்காடு | .. | 3 |
| 5 | ராமநாதபுரம் | .. | 8 |
| 6 | சேலம் | 1 | 10 |
| 7 | தென் ஆற்காடு | .. | 8 |
| 8 | திருச்சிராப்பள்ளி | .. | 13 |
| 9 | தஞ்சாவூர் | .. | 36 |
| 10 | திருநெல்வேலி | 2 | 15 |
| 11 | சென்னை | .. | 1 |
| 12 | செங்கற்பட்டு | .. | 1 |

இ

| | | |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 8 |
| 2 | கன்னியாகுமரி | 8 |
| 3 | மதுரை | 4 |
| 4 | வட ஆற்காடு | 2 |
| 5 | இராமநாதபுரம் | 3 |
| 6 | சேலம் | 4 |
| 7 | தென் ஆற்காடு | 2 |
| 8 | திருச்சிராப்பள்ளி | 4 |
| 9 | தஞ்சாவூர் | 10 |
| 10 | திருநெல்வேலி | 4 |
| 11 | சென்னை | 1 |
| | | 50 |

உ

1. மதுரை தமிழ்ச்சங்கம் புலவர் பட்டம் பெற்றவர்களை விட வித்வான் பட்டம் பெற்றவர்களே விரும்பிச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.சி. (B.C.) புலவர் பட்டம் பெற்றவர்களும் விரும்பிச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

3. ஆசிரியராக அனுபவம் இல்லாத எவரும் தெரிந்தெடுக்கப்படவில்லை.

4. மாவட்ட வாரியாகவே தேர்வு நடத்தப்பட்டது.

5. முதன்மையில் அனுப்பி வைக்கப்பட்ட அனைவரும் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.





6 அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

7 பணியிலிருப்போரைச் சார்ந்துள்ளவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

8 இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் அனுபவம் கொண்ட வித்வான்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

9 ஐந்தாண்டுக்கு மேல் அனுபவமுடைய மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்,

10 முதற் வகுப்பு வித்வான்களுக்கும் பல்கலைக் கழகப் புதுமுக வகுப்புத் தேறியவர்களுக்கும் (பொதுக் கல்வித் தகுதி) முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

11 இதே அனுபவமுடைய பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த வித்வான்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Tuesday, the 7th December 1971.*

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### *A. L. Mudaliar Committee*

*69 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to implement the recommendations of the A. L. Mudaliar Committee, on the medium of instruction in schools and colleges?

### ஏ. எல். முதலியார் குழு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் பயிற்று மொழி குறித்து ஏ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தமிழ் பயிற்று மொழி வகுப்புகளுக்குமட்டும் வசதி செய்யப்பட்டிருந்த அரசாங்கக் கல்லூரிகள் அனைவற்றிலும் டாக்டர் லட்சுமணசாமி முதலியார்க் குழுவின் பரிந்துரையின ஏற்று ஆங்கில பயிற்று மொழி வகுப்புக்கள் திறக்கப்பட்டு விட்டன. பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்சியை வலுவாக்க வேண்டுமென்று அக்குழு செய்துள்ள பரிந்துரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நம் மாநிலம் ஒன்றில்தான் மூன்றாவது வகுப்பு முதற்கொண்டே பள்ளியில் ஆங்கிலம் கட்டாயமாக பயிற்றுவிக்கப்படுவது குறிப்பிடத் தக்கது.

**திரு. கே. அறிவழகன்:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலும் தமிழ் பாட மொழியாகப் பயிற்றுவிக்க வகுப்புகள் நடத்துவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று டாக்டர் ஏ. எல். முதலியார் குழு ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அப்படி எத்தனை கல்லூரிகள் அதை ஏற்று நடத்துகின்றன? முக்கியமாக சென்னையில் உள்ள கல்லூரிகள் அந்தக் கொள்கையை ஏற்று நடத்துகின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழில் பயில வருகிற மாணவர்களைப் பொறுத்து தமிழில் பயிற்றுவிப்பதற்கான வகுப்புகளைத் திறக்க வேண்டுமென்று டாக்டர் ஏ. எல். முதலியார் குழுவினர் சிபாரிசு செய்திருந்தார்கள். சில தனியார் கல்லூரிகளிலே அதற்கான வகுப்புக்கள் திறந்திருக்கிறார்கள். அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், சேகரித்து விவரம் சொல்ல முடியும். தென் மாவட்டங்

[7th December 1971

களில் உள்ள கல்லூரிகளில்தான் அதிகமாகத் திறந்திருக்கிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் தமிழ் வகுப்புகளைத் திறப்பதில் தனியார் கல்லூரி அதிகமாக ஊக்கம் காட்டவில்லை.

Thiru D. SANTOSHAM : Mr. Chairman, Sir, is it a fact that in some Colleges no students or very few students only opted for Tamil medium and in such colleges some students were actually forced to take Tamil medium ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, யாரையும் வற்புறுத்தக் கூடாது என்ற நிலைமை தான் இருக்கிறது. ஆகவே முதலில் ஆங்கில வகுப்புகளுக்குப் போய்ப் பார்க்கிறார்கள். அங்கே இடம் நிரம்பி விட்டது என்ற நிலையில் வேறு வகுப்பிற்கு வருகின்ற கட்டாயம் ஏற்படுகிறது. இருக்கிற இடங்கள் ஆயிரம் என்றால், அதற்கு 7,000 பேர்கள் விண்ணப்பிக்கிறார்கள். அவர்கள் விருப்பத்தைக் கேட்டால், அனைவரும் அங்கே போக வேண்டுமென்கிறார்கள். கல்லூரி முதல்வரைக் கேட்கும்போது ஆங்கில வகுப்பில் இடமில்லாததால், தமிழ் வகுப்பில் இடமிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைக் கேட்டு அதில் சேருகிறார்கள். ஆகவே, யாரையும் ஆங்கில வகுப்பு கிடையாது என்றும் கட்டாயமாக தமிழ் வகுப்புதான் என்றும் வற்புறுத்துவது இல்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, அந்த ஏ. எல். முதலியார் குழுவினுடைய ரிப்போர்ட்டின் பிரதிகள் அங்கத்தினர்களின் தகவலுக்குத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்பே இது தெரிவிக்கப் பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். தேவையானால் உறுப்பினர்களுக்குத் தரலாம்.

Thiru A. R. DAMODARAN : Sir, has any complaint been received from students in Madras City that Tamil medium sections are not sufficiently available either in Government Colleges or in private Colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட கோரிக்கை எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஆங்கிலப் பயிற்சி மொழியிலே பாடமும் தமிழ் பயிற்சி மொழியிலே உள்ள பாடமும் சில கல்லூரிகளில் சரி சமமாக இருக்கிற நிலைமையில் மாணவர்கள் இரண்டு மூன்று மணி நேரம் வகுப்பறைகள் இல்லாத காரணத்தால் பாடம் பயில முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படிப்பட்ட நிலையில் உள்ள கல்லூரிகளில் இட வசதி செய்து கொடுக்க அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சில அரசாங்கக் கல்லூரிகளில் இந்த ஆண்டு அந்த நெருக்கடி ஏற்பட்டது. எல்லாக் கல்லூரிகளிலும் ஒவ்வொரு பிரிவிலும் ஆங்கில வகுப்பு தொடங்க வேண்டிய நோக்கம் ஏற்பட்டதன் காரணமாக, 90-க்கு மேற்பட்ட பிரிவுகளில் அப்படிப்பட்ட இட நெருக்கடி ஏற்பட்டது. அதனால்தான் எட்டு மணி முதல் 1 மணி வரையிலும் சில பிரிவுகளையும் 10¾ மணியிலிருந்து 4½ மணி வரையில் சில பிரிவுகளையும் வைத்து சமாளிக்கச் சொல்லியிருக்கிறோம். இட வசதியைப் பெருக்குவதற்கான முயற்சி கல்லூரிக்கல்வி இயக்குனரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



7th December 1971]

திரு. கே. அறிவழகன் : தலைவர் அவர்களே, மாறுவதற்கு ஏற்ற வகையில் பாட மொழி இருக்கவேண்டுமென்று சொல்கிற வகையில் பி.ஏ., பி.எஸ்ஸி. தமிழில் படித்த மாணவர்கள் எம்.ஏ., குறிப்பாக எம்.எஸ்ஸி. தமிழில் படிக்க வேண்டுமென்று நாடெங்குமிருந்து கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எம்.பி., எம்.எஸ்ஸி. யிலும் தமிழ் வகுப்புகள் திறக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும், மூன்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களைக் கலந்து அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டுமென்ற நிலையிருக்கிறது. எம்.எஸ்ஸி. வகுப்புகள் பயிற்றுவிக்க ஏராளமான புத்தகங்கள் தேவைப்படுமென்றும் அதை உருவாக்கியதற்குப் பிறகுதான் தமிழ் வகுப்புகள் திறக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரலாறு, பொருளாதாரம் போன்றவைகளில் எம்.ஏ. வகுப்புகள் திறக்க நடவடிக்கை எடுக்கலாமா என்ற யோசனை பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விளக்கம் தருவதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூடி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்தபிறகு உடனடியாகப் புத்தகங்கள், மற்றவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவையில்லாமல் துவக்கினால், அதில் இடர்ப்பாடுகள் ஏற்படும் என்பதால்தான் முன்னேற்பாடு செய்வதில் அரசு முனைப்பாக இருந்து வருகிறது.

## *Authors of Tamil Books*

* 70 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have any proposal to give financial assistance to authors of Tamil books for printing purposes; and

(b) the number and names of books so selected during the year 1970–71?

### தமிழ்ப் புத்தக எழுத்தாளர்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்ப் புத்தக எழுத்தாளர்களுக்கு, புத்தகங்களை அச்சிடும் காரியங்களுக்காக நிதியுதவியளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) 1970-71-ஆம் ஆண்டில் அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் எத்தனை? அவைகளின் பெயர்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்போது தமிழில் மூல நூல்கள் எழுதுவதற்கு அறிஞர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. அப்படி ஒப்படைக்கப்பட்ட சில தினங்களில் அந்தப் பொறுப்பு ஒன்றிரண்டு

அறிஞர்களிடமிருந்து ரத்து செய்யப்பட்டு வேறு துறையில் புத்தகம் எழுதுகிறீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். ஆகையால் தமிழில் நூல் எழுதுவதற்கு முறையான திட்டம் இல்லை என்று தெரிகிறது. என்னென்ன நூல்களை எந்தெந்தத் துறையில் எழுதலாம் என்று ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு அதில் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 6—12—1968-ல் இதற்கான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வழங்குவதற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதில் வித்துவான் பே. வி. வேணுகோபாலப் பிள்ளை, திரு. கி. வா. ஜகந்நாதன், டாக்டர் மே. சுந்தரம், திரு. மா. கி. தசரதன், திரு. ஔவை துரைசாமி, திரு. க. வெள்ளைவாரணன் ஆகியோர் இருக்கின்றனர். இத்திட்டத்தின்படி நூலை அதன் ஆசிரியரே வெளியிடவிரும்பினால், 1,000 பிரதிகள் வெளியிட ஆகும் செலவில் பாதித் தொகையை அரசு இரு தவணைகளில் மானியமாக வழங்கும். வெளியிடப்பட்ட நூலில் 100 பிரதிகள் இலவசமாக அரசுக்கு அளிக்கப்பட வேண்டும். 1968-69-ல் திரு. கே. பழனிச்சாமி புலவர் எழுதிய "ஓதாளர் குறவஞ்சி" என்னும் நூலுக்கு இரு தவணைகளில் ரூ. 1,125 வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி 14 நூல்கள் வந்தன. அதில் ஒன்பது நூல்களை நிதி அளிப்பதற்கு ஏற்றதல்ல என்று தள்ளிவிட்டார்கள். நிதியுதவி அளிக்கலாமென்று சில தேர்ந்தெடுக்கப்பட்டன. 'கவிதை விருந்து' என்பது பேராசிரியர் வ. பெருமாள் அவர்கள் எழுதியது, 'தமிழ்த்தாய்' என்ற நூல் திரு. பாக்கியமுத்து அவர்கள் எழுதியது. புலவை சுந்தரசண்முகம் அவர்கள் எழுதிய 'கெடிலக்கரை நாகரிகம்' என்ற நூலை அரசு நிலையில் அச்சிடுவதற்கான முறைபற்றி எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குனருடன் தொடர்பு கொண்டுள்ளது. காலஞ்சென்ற திரு. ஜே. எம். சோமசுந்தரம் அவர்கள் எழுதிய 'தமிழ்நாட்டுக் கலைவளம்' என்ற நூலை வெளியிட உதவிதர வேண்டுமென்று கேட்டார்கள். இதன் ஆசிரியர் காலமாகிவிட்டதால், அவருடைய குடும்பத்தாரின் இசைவு பெற்று, மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்பட்டது. 'பெண் ஓவியம்' என்ற நூலை திரு. எம். சதாசிவம் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதன் ஆசிரியரே அதை வெளியிட உதவி கோரியிருக்கிறார். இதன் தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குனரிடம் குறிப்புரைகள் கோரப்பட்டுள்ளன. ஆக அந்தக் குழு நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தரும்போது அப்பரிவுரைகளின்படி அரசாங்கம் உதவி அளிக்கிறது.

**திரு. வி. தங்கபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்த எழுத்தாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, எந்த அடிப்படையில் வைத்து நடத்தப்படுகிறது? எல்லா எழுத்தாளர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அரசியல் வேறுபாடுகள் இல்லாத வகையில் ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எல்லா எழுத்தாளர்களுக்கும் உதவி செய்யவேண்டுமென்றால் அரசாங்கமே ஒரு புத்தகக் கம்பெனியாக நடத்த வேண்டியிருக்கும். என்றென்றைக்கும் பயன்படக் கூடியதாக இருந்து மிகச் சிறந்த நூலாக இருந்து அதனை வெளியிடுவதற்கு அவசியமும் இருந்து அதன் ஆசிரியர்களுக்கு நிதிநிலைமை உள்ளதா என்பதனையும் ஆராய்ந்து செய்யவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கேற்ப



அக்குழுவினர் ஆராய்ந்து வருகிறார்கள். ஆகவே முக்கியமான புத்தகங்களை இன்றியமையாத தேவைப்படுகிற புத்தகங்களை மட்டுமே அந்தக் குழுவினர் தேர்ந்தெடுத்து வருகிறார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, most of these gentlemen on this Committee are scholars in Tamil. But in view of the fact that we have Degree courses in Science subjects, may I know whether any technical people are associated with these Committees?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இது கல்லூரிப் பாடப்புத்தக நூல்களுக்கான உதவி அல்ல. பொதுவாக இருக்கிற தமிழ்த்துறையில் வளர்ச்சி கருதி உருவாக்கப்பட்ட திட்டம். அதற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தனியாகப் புத்தகங்களை வெளியிடுகிறார்கள். கல்லூரிப் பாடப் புத்தகங்களைத் தனியாக எழுதச்சொல்லி அதற்கான ஆசிரியர்களுக்கு உதவி செய்து புத்தகங்களை வெளியிடும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் 150-க்கு மேற்பட்ட புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறோம். மேற்கொண்டு 150 வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அரசாங்க உதவியோடு வெளியிட்ட 150 புத்தகங்களில் எவ்வளவு, என்ன முறையில் விற்பனையாயிற்று என்று அரசு தெரிவிக்குமா? பல பாடப் புத்தகங்கள் விற்பனையாகாமல் இருப்பதையும் அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கல்லூரிப் புத்தகங்களில் அவ்வளவுதான் விற்பனை எதிர்பார்க்க முடியும். பாடப் புத்தகங்கள் பல விலை போகாமல் இருக்கின்றன. அதற்காக புத்தகங்களை வெளிக்கொணராமல் இருக்க முடியாது. மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் சில புத்தகங்கள் இரண்டு மூன்று பதிப்புகள் போடப்பட்டும் உள்ளன. சில ஒரு பதிப்போடு வெளியிடப்பட்டு நின்றுவிட்டன. வேறு யாரும் இதைக் கொண்டு வரவும் மாட்டார்கள். அரசாங்கம்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்த முறையில் அரசாங்கம் தேவைப்படுகிற பாடப் புத்தகங்களைக் கொண்டு வருவதில் நாட்டம் செலுத்துகிறது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவர் அவர்களே, கல்லூரிப் பாடப்புத்தகங்கள் போதுமான அளவு இன்னும் வரவில்லை என்ற அடிப்படையில் ஒரு துறையில் எழுத எனக்கு ஒரு நூல் அளிக்கப்பட்டது. சில நாள் கழித்து அதை ரத்து செய்துவிட்டு என்னை வேறு துறையில் எழுதுகிறீர்களா என்று கேட்கப்பட்டது. எனக்குத் தந்திருந்ததை வேறு ஒருவருக்குத் தந்திருக்கிறார்கள், ஒரு துறையில் இரண்டு, மூன்று புத்தகங்கள் வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப் புத்தகங்களை எழுத முன்வருகிறவர்களுக்கு அனுமதி கொடுத்த பிறகு, அதை ரத்து செய்யாமல் இருப்பதற்கும் ஒவ்வொரு துறையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் வெளிவரவும் அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எந்த அடிப்படையில் என்ன காரணத்தால் அந்த நிலைமை ஏற்பட்டது என்று தெரியவில்லை. ஒன்றுக்கு மேல் ஒவ்வொரு துறையிலும் பல புத்தகங்கள் இருந்தால்தான் அதிலிருந்து

[7th December 1971

பொறுக்கித் தேர்ந்தெடுக்க முடியும். அதனுல்தான் புத்தகங்களின் எண்ணிக்கை பெருக வேண்டுமென்று கூறியிருக்கிறுர்கள். அதற்கு இந்திய அரசும் நிதி உதவி செய்கிறது. அந்த உதவி கொஞ்சம் இடையில் தேங்கியிருந்தது. இப்போது அதிகமான புத்தகங்கள் வெளியிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் விவரத்தை தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்ல முடியும்.

*Pension*

71 Q.—THIRU G. SWAMINATHAN AND THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any disparity in payment of pension to L.T. Assistants who retired from service in Non-Government High Schools prior to 1st July 1960 and subsequent to 1st July 1960; and

(*b*) if so, whether there is any proposal to remove this disparity?

ஓய்வுக் கால ஊதியம்

திரு. ஜி. சுவாமிநாதன் :
திரு. டி. சந்தோஷம் : } மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகள் அல்லாத பிற உயர்நிலைப் பள்ளிகளில் 1—7—1960-க்கு முன்பு ஓய்வுபெற்ற எல்.டி. ஆசிரியர்களுக்கும், 1–7–1960-க்குப் பின்பு ஓய்வுபெற்ற எல்.டி. ஆசிரியர்களுக்கும் ஓய்வுக் கால ஊதியம் வழங்குவதில் வேறுபாடு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், இந்த வேறுபாட்டை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. சந்தோஷம் : தலைவர் அவர்களே, 1-7-1960-க்கு முன்னர் ஓய்வு பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்ட உதவிச் சம்பளம் ரூ. 30. இப்போது அது ரூ. 60 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அவர்கள் எப்படியும் 60 வயதிற்குத்தான் ஓய்வு பெற்றிருப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் 70 பேருக்கு மேல் இருக்காது. அதிக நாளும் இருக்கமாட்டார்கள். ஆகவே வெகு சீக்கிரத்தில் அவர்களுக்கான ஓய்வுச் சம்பளத்தை அதிகரித்து மற்றவர்களுக்கு அளிப்பதைப்போல சம்பள விகிதத்தில் கொடுக்க சீக்கிரம் அரசாங்கம் முடிவெடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1—7—1960-ல் முதல் சம்பள கமிஷன் சிபாரிசு அடிப்படையில் எல்லாம் மாற்றப்பட்டன. 1—7—1960-ல் அது அமுலுக்கு வந்ததன் காரணமாக அதற்குப் பின் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அந்த முறையில் அளிக்கப்பட்டது. அதற்கு முன்னர் இருந்த ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியத்தை இப்போது கொடுக்கிற நியதியின் அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்தது. எவ்வளவு பேர் இருக்கிறுர்கள், அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற விவரம் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதிகத் தொகை அதற்காகாது என்ற நிலைமை இருந்தால், அதை ஏற்றுக்கொள்வது கஷ்டமாக இருக்காது என்றுதான் அதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.



7th December 1971]

திரு. ஜி. சுவாமிநாதன் : 1—7—1960-க்கு முன்னர் உள்ளவர்களுக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு ரூபாய் என்ற கணக்கில் கொடுக்கிறுர்கள். பணியாற்றிய ஆண்டுக்கு இப்போது 5 ரூபாய் என்ற அடிப்படையில் கொடுக்கிறுர்கள் 1—7—1960-க்கு முன்னர் ஓய்வுபெற்று உபகாரத்தொகை பெறுபவர்கள் மொத்தம் 70 பேர்தான் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த முறையில் அரசு ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கிடையேயுள்ள இந்த மாறுபாட்டை நீக்குவதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் கூறியபடி பள்ளிக் கல்வி இயக்குநரிடம் விவரம் கேட்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்க வேண்டிய தொகை அதிகமாக இல்லாமலிருந்தால், ஏற்றுக்கொள்வதில் ஆட்சேபனை இல்லாமல் இருக்கும் என்றுதான் விவரங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : 1—6—1970-ல் 58 வயதானபிறகு சராசரி 3/5 பாகம் சம்பளத்தில் ஓய்வு ஊதியமாகக் கொடுக்கப்படுமானுல், அது அதிகமாக இருக்காது. அந்த நிலையில் ஆராய்கிறுர்களா என்று அறிய விரும்புகிறேன். எப்போது அவர்கள் ஓய்வுபெற்றிருந்தாலும் அவர்கள் ஓய்வுபெறும்போது பெற்ற சம்பளத்தில் 3/8 பாகம் ஓய்வு ஊதியமாகக் கொடுத்தால் அவர்களுக்கு அரசாங்கம் உதவிசெய்வதாக இருக்கும். அந்த அடிப்படையில் இது ஆராயப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரங்கள் வந்தபிறகு தக்க முடிவெடுக்கலாம்.

*Application Fee*

* 72 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that some of the private colleges in the State are collecting Rs. 5 and above as P.U.C. application fee while it is only 0.50 paise in the case of Government Colleges: and

(*b*) whether there is any proposal with the Government to make this application fee uniform in the State?

விண்ணப்பக் கட்டணம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசினர் கல்லூரிகளில் புகுமுக வகுப்பு விண்ணப்பத்துக்கான கட்டணம் 0.50 காசு மட்டும் வாங்குகையில், இம் மாநிலத்திலுள்ள தனியார் கல்லூரிகளில் சில ரூ. 5-ம் அதற்கு மேலும் கட்டணம் வாங்கி வருவது உண்மையா ?

(இ) இந்த விண்ணப்பக் கட்டணம் இம் மாநிலம் முழுவதும் ஒரே சீராக இருக்குமாறு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த தனியார் கல்லூரிகளில் விண்ணப்ப பாரங்களுக்கு இவ்வளவு கட்டணம் தான் வசூலிக்கலாம் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் ஏதாவது ஆலோசனை சொல்லியிருக்கிறாரா? எவ்வளவு அதிக பட்சமாக தனியார் கல்லூரிகளில் விண்ணப்பங்களுக்கு வசூலிக்கிறார்கள் என்று தெரிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் விண்ணப்பத்தாள் கட்டணம், பதிவுக் கட்டணம், நுழைவுக் கட்டணம் என்று மூன்று வகையில் ரூ. 4-25-லிருந்து ரூ. 11 வரையில் வசூலிக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் குழு, இதைப்பற்றி ஆராய்ந்து எல்லாக் கல்லூரிகளும் கடைப்பிடிப்பதற்கான ஒரு முறை வகுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் விண்ணப்பத்தாளுக்கு ஒரு ரூபாய் கட்டணம் என்றும் பதிவுக் கட்டணத்திற்கு இரண்டு ரூபாய் என்றும் நுழைவுக் கட்டணமாக 4 ரூபாய் என்றும் விதிக்கலாம் என்று பரிந்துரை செய்தார்கள். அந்தப் பரிந்துரையை எல்லாக் கல்லூரிகளும் பின்பற்ற வேண்டுமென்று பல்கலைக் கழகத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப் பட்டது. கல்லூரிக் கல்வி இயக்குநரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பல கல்லூரிகள் அதைக் கடைப்பிடிக்கின்றன. 33 கல்லூரிகள் மட்டுமே தனித் தனியாக அவர்களுடைய விருப்பம்போல அந்தக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவ்வளவுதான் வசூலிக்க வேண்டுமென்று கட்டுப்படுத்தும் அதிகாரம் பல்கலைக் கழகத்திற்குத்தான் இருக்கிறது. அரசினர் கல்லூரிகளில் நுழைவுக் கட்டணம் ரூ. 1-ம் பதிவுக் கட்டணம் ரூ. 2-ம் விண்ணப்பத்தாளுக்கு 50 காசும் ஆக ரூ. 3-50 வசூலிக்கப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, பதிவுக் கட்டணம், விண்ணப்பத் தாள் விலை இரண்டையும் சேர்த்தே ரூ. 3 என்று ஒரேயடியாக வைத்து விட்டால், கல்லூரிக்கு நஷ்டம் இல்லை என்பதைப் பல வகையாலும் அறிந்துள்ளோம். அப்படியிருக்க, எந்தக் கல்லூரியும் விண்ணப்பத்தாளுக்கும் பதிவுக்கும் சேர்த்து ரூ. 3-க்கு மேல் வாங்கக்கூடாது என்று கட்டாயப்படுத்த பல்கலைக் கழகத்தின் மூலம் அரசு செய்ய முன்வருமா? அதற்கு மேல் வாங்குவது சட்ட விரோதமானது என்று தடுக்கவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப் பல்கலைக் கழகம் தான் செய்ய வேண்டும். ஆகவே நான் பல்கலைக் கழகத்தை மீண்டும் வற்புறுத்தியிருக்கிறோம். கல்லூரிக் கல்வி இயக்குநரும் எல்லாக் கல்லூரி முதல்வர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் எழுதியிருக்கிறார்கள். பல்கலைக் கழகம் எப்படி கல்லூரிகளை வற்புறுத்துவது என்ற முறையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த வகையில் செய்யலாம் என்பதை அரசாங்கமும் ஆலோசிக்கும்.



THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, in their anxiety to get admission, some students get application forms and try to get them registered in half a dozen colleges and run from one college to the other to get admission. In England, Sir, I understand that there is a Centralised Scheme for admissions, and the applications are received by one Central Organisation and then distributed to the various agencies according to the preference of the students. Will our Government also work out some such Centralised Scheme so that the applications are collected by the Central Organisation and then distributed to the various Colleges?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தைக்கூட கல்லூரி முதல்வர்களுக்கு எல்லாம் கூறும்படியாக ஒரு கூட்டத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் இதற்கே ஒத்து வாராதபோது அதற்கும் ஒத்து வர மறுக்கிறார்கள். குறைந்த அளவு ரூ. 4-க்கு மேல் வாங்குவதில்லை என்ற முடிவிற்கு வந்தாலும் நல்லது. பல கல்லூரிகளில் இடம் தேடவேண்டிய அவசியம் மாணவர்களுக்கு ஏற்படும்போது ஒவ்வொன்றிற்கும் விண்ணப்பத் தாள் கட்டணம், பதிவுக் கட்டணம், செலவிடவேண்டியிருக்கும் நுழைவுக் கட்டணம் என்றால் எங்கே சேருகிறார்களோ, அங்கே செலுத்த வேண்டியிருக்கும். பரிட்சார்த்தமாக அரசாங்கம் கல்லூரியைப் பொறுத்தவரையில், தென்னார்க்காடு, வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு நடைமுறையில் நான்கு கல்லூரிகளுக்கும் சேர்த்து ஒரே விண்ணப்பத்தாள் ஒரே பதிவுத்தாள் பெற்று அதில் விண்ணப்பித்தால் அவற்றை நான்கு கல்லூரிகளுக்கும் பிரித்துப் போடுவது என்று, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் நடைபெறுவதைப் போன்று, கடைப்பிடிக்கப்படுகிறது. தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அந்தந்த ஜில்லா அளவில் ஒத்து வந்தால், அது ஓரளவுக்கு நலம் பயப்பதாக இருக்கும். அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** விண்ணப்பத் தாள் விலை, நுழைவுக் கட்டணம், பதிவுக் கட்டணம் இந்த மூன்றும் சேர்ந்து ரூ. 4-க்கு மேல் போகக் கூடாது என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை விடுத்திருக்கிறார்கள். தென் மண்டலத்திலுள்ள எல்லாக் கல்லூரி களும் அதை அமுல் நடத்துகின்றன. குறிப்பாக, மதுரைப் பல்கலைக் கழகத் திலுள்ள கல்லூரிகள் இதனை அமுல்படுத்துகின்றன என்று நினைக்கிறேன். அமைச்சர் கூறிய 33 கல்லூரிகளில் எந்தப் பல்கலைக் கழகத்தில் அதிகக் கல்லூரிகள் இருக்கின்றன என்று அறிய விரும்புவதோடு தனியார் பள்ளிக்குக் கொடுக்கிற மானியத்தில் இவர்கள் கூடுதலாகப் பெறுகிற தொகையைக் குறைத்துக் கொண்டு கொடுப்பதற்கு அரசு சட்டம் கொண்டுவந்து அதன் மூலமாக அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிக் கூடுதலாக வசூலிக் கின்றவை எந்தக் கல்லூரிகள் என்ற விவரமில்லை. எந்த அளவுக்கு அதைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஆராய வேண்டும். ஆராய்ந்து தக்க முடிவெடுக்கலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கும் அதிகமாக வசூல் செய்த கல்லூரிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா? அல்லது அப்படி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

[7th December 1971

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது நடவடிக்கை எடுக்க சட்டம் இடம் தராது. பல்கலைக் கழகம் தான் அதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி : கல்லூரி அட்மிஷனுக்காக தனியார் கல்லூரிகள் சிலவற்றில் அதிகமான பணம் கேட்கப் பெற்று மாணவர்களைச் சேர்க்கிறார்கள். இனிமேலாவது அதுபோன்று வாங்காமலிருப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதை எந்த வகையிலும் கட்டுப் படுத்துவதற்கில்லை. யாராவது புகார் செய்தால்தான் அதன் மேல் நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி யாரும் புகார் செய்ய முன்வருவதில்லை. வாங்கு கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். கொடுக்கிறார்கள் என்பதும் தெரியும். அதைச் சட்டப்படி கட்டுப்படுத்தும் நிலையில்லை. ஆங்காங்குள்ள பொதுநலனில் அக்கறை கொண்டவர்கள் இந்த நிலைமை ஏற்படாதவாறு செய்தால் தான், அதற்கு முடிவு காண முடியும். சட்டப்படி நடவடிக்கை எடுக்க இடமிருக்கிறதா என்பதை ஆராய வேண்டும். இப்போது அதற்கான வழியில்லை. அதுபற்றிப் புகார் செய்தால், அதன் மீது விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதுதான் இப்போதுள்ள விதி.

*Arignar Anna Government Arts College for Women, Walajapet*

* 73 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the basic necessities such as electrification, gas and water supply are still to be provided in the laboratories attached to the Arignar Anna Government Arts College for Women, Walajapet; and

(*b*) if so, when they are proposed to be given ?

**வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி**

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாலாஜாப்பேட்டையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள ஆய்வுக் கூடங்களில் மின் இணைப்பு, வாயு, தண்ணீர் வழங்கல் போன்ற அடிப்படைத் தேவைகள் இன்னும் செய்து தரப்படவில்லையென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவற்றை எப்போது செய்துதரக் கருதப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வாலாஜாப்பேட்டை அரசினர்க் கலைக்கல்லூரியில் கட்டட வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டன. ஒருசில அறைகளுக்கு மின்சார வசதி விரிவாக்கும் வேலை நடந்து வருகிறது. இது விரைவில் முடிக்கப்படும்.



7th December 1971]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மலஜலங்கள் கழிப்பதற்கான வசதிகள் கூட செய்யப்படாதவை பல இருக்கின்றன. துரிதமாக அந்த ஒரு தேவையைப் பூர்த்திசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மற்றவைகளுக்கும் போதுமான கட்டிட வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. கட்டிட வசதியைப் பெருக்குவதற்கு ஆங்காங்குள்ள ஈட்டு மானியத் தொகையைச் சேர்த்து கட்டிடக் குழுவினர் திரட்டும் நிதியையும், பொதுமக்கள் தரும் தொகையையும் கொண்டு அரசாங்கம் ஒதுக்குகிற பணத்தில் கட்டிடம் கட்டுகிறார்கள். அவற்றில் இப்படிப்பட்ட கழிவிடங்கள் இன்றியமையாத வசதிகள் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறது. குறிப்பாக, பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளில் கட்டாயம் இவை அமைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. நிதிநிலை காரணமாக பல இடங்களில் கட்டிடங்கள் இல்லாமல் இருந்தாலும், கட்டிடம் உள்ளவைகளில் கழிவிட வசதிபோன்ற இன்றியமையாதவைகளை அமைக்க வற்புறுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஒரு இடத்தில் 1969-ல் கல்லூரிக் கட்டிடம் அமைக்கப்பட்டுவிட்டது. கிட்டத்தட்ட இரண்டாண்டுகளுக்கு மேலாகியும் அத்தியாவசியமான மின் இணைப்பு, தண்ணீர் வசதி இல்லாமல் அந்தக் கல்லூரி நடப்பதற்கு அரசு எப்படி அனுமதித்து வருகிறது? குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்குள் இவற்றை ஏற்பாடு செய்யவில்லை என்றால், கல்லூரியை எப்படி நடத்த முடியும்? பி.எஸ்.ஸி., கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ் போன்ற பாடம் பயிலும் மாணவிகள் பரிட்சை எப்படி எழுதுவார்கள் என்று அரசு எதிர் பார்க்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது அங்கே தண்ணீர் வசதி மற்றவை எல்லாம் செய்து தரப்பட்டுவிட்டது. லைட் போட ரூ. 29 ஆயிரம் எஸ்டிமேட் போட்டுச் செய்கிறார்கள். விரைவில் அதுவும் முடிந்துவிடும். தண்ணீர் இப்போது கொடுக்கப்பட்டுவிட்டது.

THIRU G. SWAMINATHAN : Sir, I understand that even though there is a gas plant, there is no connection and the students are not able to use Bunsan Burners but have to resort to kerosene stoves. Will the Government look into this matter?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : The provision for electricity and gas to the laboratories has been made and the gas pipe lines and the gas plant are under construction.

மற்ற ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

*Apprentice Teachers*

* 74. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

[7th December 1971

(a) the number of applications received districtwise for appointment as Apprentice Teachers under the various categories; and

(b) the number likely to be appointed in each district?

### தொழில் பயிலும் ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்வேறு வகைகளின் கீழ் ஆசிரியத் தொழில் பயிலும் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு மாவட்டவாரியாக வரப்பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்படவிருப்பவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) அவையின் முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, மொத்தம் 25,498 ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்காக இந்த திட்டத்தின் கீழ் மனுச் செய்திருக்கிறார்கள். அதில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் மாத்திரம் 19 ஆயிரம் இருக்கிறார்கள். அவர்களில் 2,700 ஆசிரியர்களுக்குத்தான் இப்போது அப்ரண்டிஸ் டீச்சர் என்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரத்திற்கும் மேலான ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மனுச் செய்தவர்களில் 11 ஆயிரம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கம் வேறு ஏதாவது உதவி செய்ய திட்டம் வைத்திருக்கிறதா? பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இத்தனை பேர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலையைப் போக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதிய ஆசிரியர் பதவி உண்டாக்கப்படுவது மட்டுமல்லாமல் ஆங்காங்கு ஏற்படுகிற வேலை, பள்ளிகள் அதிகரிப்புக்கு ஏற்பவும், ஓய்வு பெறுகிறவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் நிரப்புகிற சூழ்நிலை இப்போதிருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் நெருக்கடி நிலை நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே இந்த ஆண்டிலேயே அத்தனை பேருக்கும் வேலை கொடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால், இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் நிலைமை திருந்திவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Hindi Pandits*

* 75 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have ordered in G.O. Ms. No. 477, Education, dated 6th April 1968, that all qualified Hindi Pandits be given protection of their salaries in whatever capacity they are absorbed consequent on the decision of the Government to abolish the Three language formula;

* Printed as Appendix I on page 179.



7th December 1971]

(b) whether such protection was denied to the four Hindi Pandits absorbed in the Nilakottai Panchayat Union, Madurai District on 1st February 1969; and

(c) if so, the reasons therefor?

### இந்திப் பண்டிதர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மும்மொழித் திட்டத்தை நீக்க அரசு எடுத்த முடிவின் விளைவாக தகுதிபெற்ற இந்திப் பண்டிதர்கள் எந்த அடிப்படையில் வேலைக்கு எடுக்கப் பட்டிருப்பினும் அவர்களது ஊதியத்தில் எத்தகைய இழப்பும் ஏற்படாத வகையில் காப்பளிக்கவேண்டுமென 6—4—1968-ஆம் நாளிட்ட 477-ஆம் எண் கல்வித் துறை அரசு ஆணையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) 1—2—1969-ல் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட நான்கு இந்திப் பண்டிதர்களுக்கு இந்தப் பாதுகாப்பு மறுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Street Vendors*

* 76 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have stayed the proceedings of the Virudhunagar Municipality relating to the action against the street vendors who had encroached the "U1" Street, a very narrow lane situated in the heart of Virudhunagar town and who were obstructing the public in many ways;

(b) if so, the number of months which have passed since the issue of such order;

(c) the reason for the issue of such order; and

(d) whether any recommendation has been received from the District Collector in this regard?

[7th December 1971

**சில்லறை வியாபாரிகள்**

*திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) விருதுநகர் மத்தியில் 'உள் தெரு' என்ற மிகக் குறுகலான தெருவில் ஆக்கிரமிப்புச் செய்து பொது மக்களுக்குப் பலவகையில் இடையூறு செய்து வரும் சில்லறை வியாபாரிகள் மீது நகராட்சி எடுத்த நடவடிக்கையை நிறுத்த அரசு உத்தரவிட்டிருக்கிறதா?*

*(இ) அப்படியானால், அந்த உத்திரவு பிறப்பித்து எத்தனை மாதங்களாகின்றன?*

*(உ) இந்த உத்திரவு பிறப்பித்தது என்ன காரணத்திற்காக?*

*(எ) மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை பெறப்பட்டதா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ), (இ), (உ) & (எ) உள் தெருவில் தற்காலிக கடைகள் நெடுங்காலமாக இருப்பதாலும், இந்தத் தெருவை உபயோகிப்பதில்லையாதலாலும் அரசு, நகராட்சி இயக்குநரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு இப்பொழுது உள்ள உள் தெருவிலேயே சந்தை இயங்க அனுமதித்துள்ளது. மேற்படி ஆணை ஜூலை 1971-ல் பிறப்பிக்கப்பட்டது. இவ்விஷயத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையும் பெறப்பட்டது.*

*திரு. எஸ். எஸ். தென்னரசு: நீண்டகாலமாக அங்கே மார்க்கெட் வைத்துக் கொள்ளலாம் என்றும் புதிய மார்க்கெட் கட்டுகிற வரையில் அதற்கு வியாபாரிகளை அனுமதிக்கலாம் என்றும் நகராட்சி ஆய்வாளர் உத்தரவிட்டும் அரசியல் வேற்றுமை காரணமாக நகராட்சித் தலைவர் இப்போதே இடத்தைக் காலி செய்ய முயற்சிப்பது அரசிற்குத் தெரியுமா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 15-ஆண்டுக் காலமாக அங்கே கடைகளை வைத்திருந்தார்கள். அது சிறிய தெருவாக இருப்பதால், காலையிலும் மாலையிலும் கடைகளை வைத்து அடைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டு, அதை மாற்ற வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது. அதை மாற்றியதற்குப் பிறகு வேறு இடம் கிடைக்காத சூழ்நிலையில் வேறு இடத்தில் தனியாக மார்க்கெட் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கட்டுகிறவரையில் இவர்களைக் கிளப்பக்கூடாது என்ற விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. அதற்கிடையில் கிளப்ப வேண்டுமென்று நகராட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார். இந்த நெருக்கடி நிலைமையைக் கண்டு மாவட்ட ஆட்சியாளர் புதிய கட்டடம் கட்டுகிற வரையில் அந்த இடத்தை விட்டு அவர்களைக் கிளப்ப வேண்டாமென்று உத்திரவு போட்டிருக்கிறார். கட்டி முடிந்த பிறகு அவர்களை அந்த இடத்திற்குக் கிளப்பலாம் என்ற நோக்கத்தில் அக்கடைகளை அகற்ற வேண்டாமென்று இப்போது உத்தரவு போட்டிருக்கிறார்.*

## *Allocation of Beds in Hospitals*

* 77 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state the rules regarding the allocation of beds to Honorary and paid Civil Surgeons in Hospitals attached to Medical Colleges?



7th December 1971]

**மருத்துவமனைகளில் படுக்கைகளை ஒதுக்குவது**

*திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள மருத்துவமனைகளில் பணி புரியும் ஊதியம் பெறும் சிவில் சர்ஜன்களுக்கும், கௌரவ சிவில் சர்ஜன்களுக்கும் படுக்கைகளை ஒதுக்குவதில் அரசின் கொள்கை யாது?*

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கல்வி பயிற்சியுள்ள மருத்துவமனையில் உள்ள படுக்கைகளைச் சமமாக பகிர்ந்து கௌரவ மருத்துவர் அல்லது அறுவை மருத்துவருக்கும் ஊதியம் பெறும் அறுவை மருத்துவர் அல்லது மருத்துவருக்கும் கொடுக்கப்படுகிறது. இந்திய மருத்துவக் கவுன்சில் சிபாரிசுபடி குறைந்த படுக்கை வசதியுள்ள மருத்துவமனையில் கௌரவ மருத்துவர் அல்லது அறுவை மருத்துவருக்கு ஊதியம் பெறும் மருத்துவருக்கு ஒதுக்கப்படுவதைக் காட்டிலும் சில படுக்கைகள் குறைவாக ஒதுக்கப்படுகிறது.*

## *Medical College Admissions*

* 78 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the Supreme Court has held that the method of selection of candidates for the Medical Colleges in the State is unconstitutional; and

(b) if so, the action taken thereon?

**மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்**

*திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) இம் மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளுக்கான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை அரசியலமைப்பு விதி முறைகளுக்குப் புறம்பானது என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பது உண்மையா?*

*(இ) ஆமெனில், அது குறித்து எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?*

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 'யூனிட்' வாரியாக மாவட்டம் அல்லது மண்டலம் வாரியாக தேர்ந்தெடுக்கும் முறை செல்லுபடியற்றதெனத் தலைமை நீதிமன்றம் தள்ளிவிட்டது.*

*(இ) 1971-72-ம் ஆண்டு முதற்கொண்டு மாநிலம் முழுவதின் அடிப்படையில் மாணவர்கள் தேர்வுகள் நடத்தப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.*

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, there are usually differences in the standards and in the marks given in the various Universities. Madurai University may accord more marks and Madras University less marks or even *vice versa.*

[7th December 1971

Would it not be desirable to separate these Universities and localise the selection for Madurai University, i.e., for Colleges in Madurai, Tirunelveli and so on ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the problem does not end there. Even among the Colleges there is difference in valuation and even among teachers there is difference in valuation. Even with regard to the same teacher, the valuation differs from one paper to another. Therefore, there cannot be any strict rule to be adopted.

THIRU G. SWAMINATHAN : In view of the difference in valuation, will the very examination be abolished ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : That stage cannot be reached now because the country has to develop further.

THIRU K. S. ABDUL WAHAB : Every year after the close of the medical college admissions, students go to the High Court and the Supreme Court. May I know how many students went to the High Court this year?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Till now nobody has gone to the High Court.

THIRU A. R. DAMODARAN : Sir, May I know in view of the stage of war and the emergency that exists at present, whether there is any proposal to increase the intake of medical colleges in 1972-73.

THE HON. THIRU K. ANBAZHAGAN : We don ot propose to extend such emergency till 5 or 6 years, i.e., till the students that are admitted this year returned to work. It will take 5 to 6 years and therefore we do not think there will be such utility.

THIRU G. SWAMINATHAN : Is there any proposed to reduce the number of seats in the Medical Colleges in view of recommendation of the All-India Medical Council ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : We also take into consideration the opinion of the Opposition Leaders and after the view of one number counteracts that of another member.

MR. CHAIRMAN : Questions 79 and 80 are postponed.

*Administrative Reforms Commission*

* 81 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 201 on 23rd July 1971—

(a) whether the Administrative Reforms Commission has been asked to examine the proposal of the abolition of the Board of Revenue; and



7th December 1971]

(b) whether the Commission has been asked to suggest the alternative to the Board of Revenue?

*நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 23-7-1971 ஆம் நாளன்று விடையளிக்கப்பட்ட 201 ஆம் எண் சட்டமன்ற மேலவை வினாவையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) வருவாய் வாரியத்தை நீக்கும் செயற்குறிப்பு குறித்து ஆய்வு செய்யும்படி நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளதா ?*

*(இ) வருவாய் வாரியத்திற்கு பதிலாக மாற்று ஏற்பாடு செய்வது குறித்துக் கருத்துரை வழங்குமாறு ஆணைக்குழு கேட்கப்பட்டுள்ளதா ?*

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** *ஆம்.*

*Urban Land Holdings*

* 82 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the details of the steps taken by the Study Group to investigate ceiling on urban land holdings?

***நகர நிலச் சொத்து***

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*நகர நிலச் சொத்து மேல்வரம்பு குறித்து புலனாய்வு செய்ய ஆய்வுக் குழுவால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் யாவை ?*

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** *நகர்ப்புறச் சொத்துக்கு மேல் வரம்பு விதிப்பது குறித்து பல்வேறு கூறுகள், உட்கிடக்கைகள் பற்றி விரிவாகப் பரிசீலிப்பதற்கு மாநில அரசால் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழு 22-9-1971-ல் முதல் தொடக்கக் கூட்டத்தை நடத்தியது. ஆய்வுக்காக, நகர்ப்புறச் சொத்துக்கள் பற்றித் தேவையான புள்ளி விவரங்களை இக்குழு திரட்டி வருகிறது. நகர்ப்புற நிலச் சொத்துக்கு மேல் வரம்பு விதிப்பது குறித்து இந்திய அரசு ஆய்வுக் குழுவின் அறிக்கையையும் இது பரிசீலித்து வருகிறது.*

THIRU A. R. DAMODARAN : May I know Sir, whether the Study Group has invited other members of the General Public to submit memoranda to them or whether they have not started the work at all?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இன்னும் அந்த நிலை வரவில்லை. இப்போது ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கிறது.*

[7th December 1971

## *School of Arts and Crafts*

* 83 *Q.*—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of (i) Women and (ii) Men passed from the School of Arts and Crafts at Poonamallee High Road, Madras, every year?

**கலை-கைப்பணிப் பள்ளி**

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :* மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலுள்ள கலை-கைப்பணிப் பள்ளியிலிருந்து ஆண்டுதோறும் தேறிய (1) மகளிர், (2) ஆடவர் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவர அறிக்கை ஒன்று * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## *Salt Factories*

* 84 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a number of unlicensed salt factories are functioning in Vedaranyam, Adiramapattinam and Muthupet areas of Thanjavur district; and

(*b*) if so, the action taken thereon?

**உப்புத் தொழிற்சாலைகள்**

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம், அதிராமபட்டினம், முத்துப்பேட்டை பகுதிகளில் உரிமம் பெறாத உப்புத் தொழிற்சாலைகள் பல இயங்கி வருகின்றனவென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஒவ்வொரு உப்புத் தொழிற்பிரிவும் 10 ஏக்கருக்கு மேற்படாமலிருப்பதால் உப்பு உற்பத்தி செய்ய அனுமதி பெறத் தேவையில்லை என்று துணை உப்பு ஆணையாளர் அரசுக்கு அறிவித்துள்ளார்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* இதுபோன்ற உரிமம் பெறாத உப்புத் தொழிற்சாலைகள் பல இயங்கி வருவதால், அரசிற்கு வருமானத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா? அதைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா? 10 ஏக்கருக்குமேல் பல இருக்கின்றன.

* Printed as Appendix II on pages 180–181.



7th December 1971]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 10 ஏக்கருக்குக் குறைவாக இருந்தால், அனுமதி தேவையில்லை என்று மத்திய அரசாங்கம் தெரிவித்தது. பத்து ஏக்கருக்குக் குறைவாக இருந்தால், சரியாக அவை உற்பத்தி செய்கின்றனவா என்று மட்டும்தான் அவர்கள் கண்காணிக்கிறார்கள்.

Thiru G. VASANTHA PAI: Sir, may I invite the attention of the Hon. Minister that during my recent visit to Adirampattinam and Vedaranyam, I found a lot of unlicensed salt dealers who have more than 10 acres manufacturing salt? Will the Government take action to stop it?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மாண்புமிகு அங்கத்தினர் இந்த சபைக்குத் தந்த தகவல் சம்பந்தப்பட்ட மத்திய அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## *Highways leading to Madurai*

* 85 *Q.*—Thiru S. S. THENNARASU: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware that the highways leading to Madurai, breach and cause hindrance to traffic every year during the rainy season; and

(*b*) if so, the steps taken by the Government to repair these roads?

**மதுரைக்கு வரும் நெடுஞ்சாலைகள்**

*திரு. எஸ். எஸ். தென்னரசு :* மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மழைக்காலங்களில் மதுரைக்கு வரும் நெடுஞ்சாலைகளில் ஆண்டு தோறும் உடைப்பெடுத்து, போக்குவரத்து பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் என்றால், அந்த நெடுஞ்சாலைகளைச் சரியான முறையில் பழுது பார்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) மதுரை-சிவகங்கா ரோடில் மழைக் காலங்களில் உரங்கண்பதி குளம் நிறைந்து வழியும்போது போக்குவரத்து பாதிக்கப்படுவது உண்டு. இதை தவிர்ப்பதற்காக கி. மீ. 14/4-ல் ஒரு பெரிய பாலம் கட்டும் வேலை ஒன்று நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1972-73-ம் ஆண்டில் இந்த வேலையை எடுத்துக்கொள்வது குறித்து நிதி நிலைமையை அனுசரித்து ஆவன செய்யப்படும்.

*திரு. எஸ். எஸ். தென்னரசு :* தலைவர் அவர்களே, சிவகங்கையிலிருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் உறங்கண்பதி கிராமத்தில் 15 ஆண்டு காலமாக ஒரு பாலம் கட்டப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

[7th December 1971

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எத்தனை ஆண்டுக்காலமாக அப்படி இருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை. ஆனாலும் அதற்கு 4 லட்சம் ரூபாயில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மிஸ்டர் சேர்மன் :** அந்த பதி உறங்கவே இல்லை போல் இருக்கிறது. (சிரிப்பு)

THIRU A. R. DAMODARAN : Sir, the overbridge that has been recently constructed at Tambaram keeps falling, every time there is a heavy rain. May I know the reason why so much repair is required for a new overbridge that has been constructed at a cost of Rs. 24 lakhs?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : If the hon. Member puts a separate question, I shall gather details and answer it.

THIRU A. R. DAMODARAN : The reason why I put the question was that it is in the Highways leading to Madurai.

### *Statues*

* 86 Q.—THIRU T. K. SHANMUGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether all the statues erected on the Madras Beach Road have been cast in metal and installed permanently?

### சிலைகள்

**திரு. டி. கே. ஷண்முகம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை கடற்கரை சாலையில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் அனைத்தும் நிரந்தரமான உலோகத்தினால் செய்யப்பட்டு வைக்கப்பட்டு விட்டனவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. டி. கே. ஷண்முகம் :** எல்லாச் சிலைகளும் உலோகத்தினால் வைக்கப் பட்டு விட்டதா என்பது கேள்வி. அமைச்சர் அவர்கள் பதில் சரியாகக் காதில் விழவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எல்லாச் சிலைகளும் நிரந்தரமான உலோகத்தால் செய்யப்பட்டு வைக்கப்பட்டுவிட்டதா என்பது. அதற்கு இல்லை என்று பதில் சொன்னேன். திருவள்ளுவர், வீரமாமுனிவர், ஔவையார், அறிஞர் அண்ணா சிலைகள் உலோகத்தால் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாரதியார், பாரதிதாசன், வ.உ.சி., கம்பன், கண்ணகி ஆகிய சிலைகள் இப்போது உலோகத்தால் செய்யப்பட்டிருக் கின்றன. கால்டுவெல், ஜி. யு. போப் சிலைகள் உலோகத்தால் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது முடிவடையும் தருவாயி லிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.



7th December 1971]

**திரு. டி. கே. ஷண்முகம் :** இந்தச் சிலைகள் எல்லாம் உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது வைக்கப்பட்ட சிலைகள். ஏறத்தாழ மூன்றாண்டுகள் ஆகின்றன. மூன்றாண்டுகளுக்குப் பிறகும் இன்னும் நிரந்தரமான உலோகத்தால் ஏன் செய்து வைக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே பதில் சொல்லிய போது இப்போது எல்லா சிலைகளும் உலோகத்தால் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Is there any proposal to shift these statues to the Exhibition Hall of the Museum so that people can have a good view of all the high personages at one and the same place, or at least to construct a Wax Museum on the model of the one at New York so that people coming from other places can see all the personages at one and the same place and appreciate the spirit of Tamil culture?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Hon. the Minister for Toursim has a proposal for the construction of a Wax Museum. If the question is put to him, he woll be in a position to answer.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, இன்று கடற்கரையில் வைத்திருக்கும் பல சிலைகள் அவர்களுடைய உண்மையான தோற்றத்திலிருந்து மாறுபட்டிருப்பதாகப் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். எனவே அவற்றைத் திருத்தி நல்ல முறையில் வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக இன்ன சிலை என்று சொன்னால், பதில் சொல்லலாம். அதிலும் பார்ப்பவர்கள் கருத்திற்குத் தகுந்தபடி சிலைகள் தோற்றமளிக்கும்.

**மிஸ்டர் சேர்மன் :** ரொம்பப் பேர் அந்த சிலைக்குரியவர்களை உயிரோடு இருக்கும்போது பார்த்திருக்க மாட்டார்கள்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, அந்தச் சிலைகளில் தமிழுக்காக அதிகமாகப் பாடுபட்ட அன்னிய நாட்டைச் சேர்ந்த திரு. ஜி. யு. போப் அவர்களுடைய சிலை மேடையில் இல்லாததோடு அதையொட்டி எந்தவித மறைப்பும் இல்லாமல் அங்கு வைத்திருக்கும் ஓலைகள் எல்லாம் கிழிந்து போய் ஆபாசமாகக் காட்சி அளிக்கிறது. அந்தச் சிலையை நிர்மாணிக்கிறவரையில் நல்லமுறையில் மறைத்து வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? போப் அவர் களுடைய நினைவுக்கு அந்த இடம் அவ்வளவு ஆபாசமாகத் தோற்றம் அளிக்க வேண்டியதில்லை. அதை மூடிவைக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தமிழ் அறிஞர்களுக்குச் சிலை வைப்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் வரவேற்றதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். போப் அய்யர் சிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தை கவனத்தில் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எதிர்க் கட்சித் தலைவர் கூறியதற்கிணங்க நேற்றும் இன்றும் அங்கே மறைவு வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இடையில் மழையும் புயலும் ஏற்பட்டதன் காரணமாக அங்குள்ள தட்டிகள் பிய்ந்து போயிருந்தன. இப்போது அதை சரியான முறையில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : சிலைகள் பலவும் பல ஜீவஜந்துக்களால் அசிங்கப்படுத்தப்படுகிற காரணத்தால், அவர்களுக்கு நாம் செலுத்த வேண்டிய உண்மையான மரியாதைக்கு ஏற்ப, அதன் மீது எவ்வித தவறுகளும் நேராத வழியிலே அதற்காக வெளித் தடுப்புகள் 'புரொட்டக்ஷன்' சுவர்கள் எழுப்பி, மேலே விதானம் முதலியன கட்டி, அதைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிலைகளைச் சுற்றி சுவர் கட்டவும் மேலே கூரை போடவும் இப்போது திட்டமில்லை. சிலைகளை சுத்தமாகவும் நல்ல முறையிலும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. விசேஷ அதிகாரிகள் அதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, சிறப்பு வாய்ந்த தலைவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிற சிலைகள் ஏதோ மண்ணால் செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் இரண்டு மூன்று வருஷங்களுக்கொரு முறை பழுதாகி விடுகின்றன. ஆகவே அதைச் செப்பால் செய்து வைக்க முன்வருவார்களா?

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் நிரந்தர உலோகத்தால் செய்யப்பட்டதற்கு ஒவ்வொரு சிலைக்கும் எவ்வளவு ரூபாய் செலவாகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் தற்போதில்லை.

## *Smoke Emission from Buses*

* 87 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Indian Institute of Technology, Madras, conducted experiments at Adyar Transport Depot, on smoke emission from the Tamil Nadu State Transport Department Buses, in 1970–71; and

(b) if so, the details thereof?

## பேருந்துகளிலிருந்து வெளிப்படும் புகை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்துகளிலிருந்து வெளிப்படும் புகை குறித்து அடையாறு போக்குவரத்து நிலையத்தில் சென்னை இந்தியத் தொழில் நுட்ப இயல் நிறுவனம் 1970-71-ல் சோதனைகள் நடத்தியதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?



The Hon. Thiru S. RAMACHANDRAN: (a) Yes.

(b) The Internal Combustion Engines Laboratory of the Indian Institute of Technology conducted experiments at the Adayar depot on control of smoke emissions by State Transport buses.

Thirumathi S. MANJUBHASHINI: Will the Government place before the House the results of the experiments conducted by the Transport Department at Adayar and how do the Government propose to dispel the emission of smoke which is supposed to be highly dangerous to the health of the people?

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, the experiment is only in the beginning stage and they have to conduct experiments at various levels and they require so much sophisticated equipments to continue their further research. But anyhow at a preliminary investigation they have come to the conclusion, that is, as follows:—

"A 'bad injector' appears to be the most common malady. Our results show that of all the remedial steps taken, the 'injector reconditioning' is the most effective so far. The number of buses which had to be sent for 'pump servicing' and improvement of compression presure' was relatively small. The same trends can be expected even for a large fleet. While other causes cannot be neglected, proper maintenance of injectors alone is expected to result in a large-scale reduction in smoke".

The report is being examined by the Tamil Nadu State Transport Department and they are taking action to recondition the engines.

Thiru G. VASANTHA PAI: Will the Government kindly consider conducting some post-mortem examination on dead crows which are even now falling in the Adyar area?

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, this question does not relate to my Department.

Thiru G. SWAMINATHAN: There was a proposal to fit these exhaust pipes upwards and I find some of the exhaust pipes are in the usual place emitting smoke on the face of the pedestrians. Will the Government kindly look into the matter and see that the pipes are put in the vertical position so that the smoke may go up?

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, already in some of the buses we are having exhaust pipes facing upwards. As and when vehicles are taken for B.C. repairs, these modifications are being made. It is not possible to have the exhaust pipes facing upwards in all the vehicles at one and the same time. Gradually we are carrying it out.

[7th December 1971

### *Bus service from Hyderabad to Madras.*

* 88 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the decision taken by the Government of Andhra to operate a bus service from Hyderabad town to Madras has been communicated to our State Government; and

(b) if so, the action taken thereon?

### ஹைதராபாத்—சென்னை பேருந்து போக்குவரத்து

**திரு. வி. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஹைதராபாத் நகரத்திலிருந்து சென்னை நகரத்திற்கு பேருந்து போக்குவரத்து ஏற்படுத்தப் போவதாக ஆந்திர அரசாங்கம் செய்துள்ள முடிவை நமது மாநில அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து ஐதராபாத்துக்கும், சென்னையிலிருந்து மைசூருக்கும் பெங்களூருக்கும் அரசாங்கப் பேருந்து விடுவதற்கு செயல் குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன் :** சென்னையிலிருந்து பெங்களூருக்கு இப்போதே அரசுப் போக்குவரத்துத் துறை மூலம் பேருந்து விடப்படுகிறது. சென்னையிலிருந்து ஐதராபாத்துக்கு விடுகிற அளவுக்கு நமக்குப் போதிய பயணிகள் இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. கிட்டத்தட்ட முக்கால் பங்கு தூரத்தை ஆந்திர மக்களின் வசதிக்காகப் பயன்படுத்துவதற்கு இங்கேயிருந்து பஸ்களை அனுப்புவது என்பதும் இரண்டு மாநிலங்களுக்கு இடையில் நடைபெறுகிற போக்குவரத்தில் நாம் அதிக தூரம் பிற மாநிலத்தில் ஓட்டுவதும் நமக்கும் நல்லதல்ல, தேவையுமில்லை என்பதால் இங்கேயிருந்து ஐதராபாத்துக்குப் பேருந்து விடும் நோக்கமில்லை.

### *Trade Union*

* 3 *S. N. Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the action taken by the Tamil Nadu Government on the concept of one Trade Union for one Industry;

(*b*) whether this has been discussed in the State Labour Advisory Committee; and

(c) if so, the details thereof?



7th December 1971]

### தொழிற்சங்கம்.

**திரு. காட்டூர் கோபால் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் என்பதன் அடிப்படையில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

(இ) இதுபற்றி மாநில தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுவில் விவாதிக்கப்பட்டிருக்கிறதா ?

(உ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) பிரதிநிதித்துவ சங்கம் ஒன்றிற்கு ஏற்பளிப்பதற்காக மத்தியச் சட்டம் ஒன்றில் சட்ட விதித் துறை ஏற்படுத்தவேண்டும் என்றும், தொழில் உறவுகள் ஆணைக் குழு முடிவு செய்கிறபடி உள்ளூர்ப் பகுதியில் ஒரு தொழிலுக்கு அல்லது தொழிற்சாலைக்கு அல்லது தொழிற் பிரிவிற்கு தொழில் உறவுகள் ஆணைக் குழு சான்றளிக்கும் தொழிற் சங்கம் ஒன்று மட்டுமே இருக்க வேண்டுமென்றும், 1970 ஜூலையில் நடந்த தொழிலாளர் நிலைக் குழுவின் கடைசிக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டது. மத்திய நிலையிலும், மாநில நிலைகளிலும் தொழில் உறவு ஆணைக் குழுக்கள் இருக்க வேண்டுமென்றும், அந்தக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டது.

(இ), (உ) : தொழில் நிறுவனங்களில் நிர்வாகிகளும் தொழிலாளர்களும் கூடிப் பேசி முடிவெடுக்க வசதி செய்வதற்காக பிரதிநிதித்துவ தொழிற் சங்கங்களுக்கு ஏற்பளிக்கவும் அவர்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் குறிப்பிடவும், தொழிலாளர் நேர்மையற்ற பழக்கங்களைக் கடைப்பிடிக்காதிருக்கச் செய்யவும் வகை செய்கிற மசோதா ஒன்றை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் 23-9-71-ல் நடந்த மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் கடைசி கூட்டத்தில் இம்மசோதா ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம் மசோதாவை விரிவாக ஆராயவும் இப்பொருள் குறித்து மேற்கொண்டு கருதிப் பார்க்கவும் தங்களுக்கு மேலும் அவகாசம் அளிக்கப்பட வேண்டுமென்று அக்கூட்டத்தில் இருதரப்பினரும் கூறினர். இப்பொருளை மட்டும் ஆராய்வதற்கென்று தனிப்பட்ட கூட்டம் நடத்தப் படுமென தலைவர் (தொழிலாளர் நல அமைச்சர்) அறிவித்தார்.

**திரு. டி. சந்தோஷம் :** தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் என்பது மிகவும் நல்ல ஒரு நோக்கு. ஆனால் நடைமுறையில் அதைக் கொண்டுவருவதில் சில இடைஞ்சல்கள் ஏற்படும். இப்போது பல தொழிற்சங்கங்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அரசியல் அடிப்படையில், கட்சி அடிப்படையில் தொழிற்சங்கங்கள் ஏற்படுவதுதான். இதை அமுல் நடத்த வேண்டுமென்றால், அரசாங்கம் அரசியல் சம்பந்தமில்லாத ,கட்சி சம்பந்தமில்லாத தொழிற் சங்கம்தான் அங்கீகரிக்கப்படும் என்ற விதிமுறையை அமுலுக்குக் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இப்போது கட்சி அடிப்படையில்தான் சங்கம் இருக்க வேண்டுமென்று இல்லை. ஆனால் கட்சி எப்படியோ வந்து புகுந்து கொள்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, in view of the statement made by the Hon. Chief Minister yesterday that in case all group workers agree that there should be no outside leaders for Trade Unions; he would be consider the matter will the Government also consider bringing in a legislation as suggested by the hon. Member Thiru D. Santhosam to the effect that there should be no outside interference or political interference in Trade Unions?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை நினைவில் கொண்டுதான் அதைப்பற்றி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்து பேசி முடிவெடுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. அதன்படி செய்ய அரசுக்கும் மிகுந்த ஆசையிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : இந்தக் கேள்வியில் " One trade Union for one industry" என்று இருக்கிறது. ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்று அர்த்தம் ஆகிறது. அப்படியா? அல்லது ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் என்று அர்த்தமா? ஒரு தொழில் என்று சொல்லும்போது, நூற்றுக் கணக்கான ஸ்பின்னிங் மில்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றிற்கும் சேர்ந்து ஒரு யூனியன் வைத்துக்கொள்ள முடியாது. ஒரு மில்லுக்கு ஒன்று என்றுதான் இருக்கும் என எண்ணுகிறேன். அது சரியா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிரேட் யூனியன் ஆக்டில் இப்போதிருக்கிற சட்டப்படி அவர்களே அமைத்துக்கொள்ளலாம். சில இடங்களில் ஒரு தொழிலுக்கு என்றும் இருக்கின்றன. டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி, இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரி என்று தனியாக வைத்திருக்கிறார்கள். நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒத்துக்கொண்டால், நாமும் ஏற்றுக்கொண்டு மத்திய அரசு அனுமதி பெற்று சட்டம் கொண்டு வரலாம். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு அங்கத்தினர் என்று வைத்துக்கொள்ளலாம். இப்போதுள்ள பிரச்னை ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் என்றும் அதில் அரசியல் வாதிகள் குறுக்கிடு, தொழிலாளர் அல்லாத வெளியார் குறுக்கிடு இருக்கக்கூடாது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகிறவர்கள் தலைவராக வருகிற வரையில் அவர்களே தேர்தலை நடத்துகிற முறை வேண்டுமென்று ஒத்துக் கொண்டால், அதைச் சட்டமாக்கத் தயாராக இருக்கிறோம் என்று இன்று காலை முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

MR. CHAIRMAN : Questions are over.





## II. ANNOUNCEMENT RE DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. today, the following revised programme of business has been decided :

| | | |
|---|---|---|
| 8th December 1971 (Wednesday) | Further discussion on the Tamil Nadu Electricity Board Budget for 1971-72. | 4-50 p.m. |
| 9th December 1971 (Thursday) | | |
| 10th December 1971 (Friday) | | |
| 11th December 1971 (Saturday) | The Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1971. | |
| 12th December 1971 (Sunday) | Holiday. | |
| 13th December 1971 (Monday) | 1. Presentation of the First Supplementary Statement of Expenditure for 1971-72.<br>2. Presentation of the Demands for Grants for Excess<br>3. Non official Business.<br>Expenditure for 1967-68. | |
| 14th December 1971 (Tuesday) | Discussion on the First Supplementary Statement of Expenditure for 1971-72 and the Demands for grants for Excess Expenditure for 1967-68. | |

| | |
|---|---|
| 15th December 1971 (Wednesday) | Consideration of Official Bills. |
| 16th December 1971 (Thursday) | 1. Rules relating to the election of Members to the Standing Committees of the Municipal Corporation of Madras. |
| | 2. Government Resolution relating to the approval of the Tamil Nadu Municipal Service (Discipline and Appeals) Pension Rules, 1970. |
| | 3. Consideration of Official Bills. |
| 17th December 1971 (Friday) | 1. Consideration of Official Bills. 2. Non-official Business. |
| 18th December 1971 (Saturday) | Consideration of Appropriation Bills and other Official Bills. |
| 19th December 1971 (Sunday) | Holiday. |

The House will meet on 20th December 1971, if necessary. The Council will meet from 4 p.m. to 7 p.m. daily.

## III. STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULE *re* AID TO DISABLED JAWARES AND THE FAMILIES OF JAWANS DYING IN THE WAR AND INCREASE OF AMOUNT TO WINNERS OF CERTAIN GALLANTRY AWARDS.

MR. CHAIRMAN : Now the Hon. the Chief Minister will make a statement under rule 82 of the Council Rules.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவரவர்களே, போர்க்களத்தில் தமிழ்நாட்டு வீரர்கள் பலர் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் நாட்டைப் பாதுகாப்பதில் கால், கை இழந்து முடமாகிறார்கள். அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு எடுத்திருக்கிறது.

தமிழ்நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர் குடும்பங்களுக்கும், அங்கஹீனமாகி பணியாற்றிட தகுதியிழந்தவர் குடும்பங்களுக்கும், ஐயாயிரம் ரூபாயும், மூன்று ஏக்கர புஞ்சை அல்லது 1½ ஏக்கர நஞ்சையும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும், உடைகளுக்கும் உதவி அளிக்கப்படும்.



[டாக்டர் மு. கருணாநிதி]

வீர விருதுகள் பெறுவோர்க்கு தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரம வீர சக்கர விருது பெற்றவர்க்கு பத்தாயிரம் ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை 15 ஆயிரமாக இனிமேல் உயர்த்தி வழங்கப்படும். மகாவீர சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும். வீர சக்கர விருது மூவாயிரம் என்று இருந்ததை ஐயாயிரம் ரூபாயாக உயர்த்தித் தரப்படும். சேனா விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிரம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது என்று இவைகளை அறிவித்து அமருகிறேன்.

## IV. ADJOURNMENT MOTION *re* STRIKE IN THE SIMPSON GROUP OF INDUSTRIES.

MR. CHAIRMAN : I have received notice of a motion from Thiru K. Rajaram, M.L.C., for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the strike in the Simpson Group of Industries in which about 15,000, workers are invited and consequent stoppage of production of materials which are necessary for the country in the present crisis and failure of the Government to solve the problem and maintain law and order. I want to know from the Leader of the Opposition how the matter falls within the scope of the rules, governing adjournment motions.

*திரு. கே. ராஜாராம் :* மாண்புமிகு மன்றத் தலைவரவர்களே, இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி நான் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. போர் நடந்துகொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் சிம்ப்சன் தொழிற்சாலைகள் பலவற்றில் நமக்குத்தேவையான பலவிதமான சாதனங்கள் செய்யப்பட்டு போருக்கு அனுப்பப்பட வேண்டிய நிலையில் இருக்கும்போது, அந்தத் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் நடைபெற்று, இவைகள் மூடப்பட்டுக்கிடப்பது நமக்கெல்லாம் மன வருத்தத்தைக் கொடுக்கிறது. அதற்கு மேல் நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. இந்தத் தீர்மானத்தை இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கும்போது, இதைப்பற்றி முதலமைச்சரவர்கள் நேற்றுத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். இந்த வேலை நிறுத்தம் எவ்வளவு பாதகமானது என்பதை உணர்ந்திருக்கிறோம். ஆகையினால் உடனடியாக அவர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டியது முக்கியமாகும் என்று எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர்கள் இந்த மாதிரி யூனியன்களில் தலைமை வகிப்பது, யூனியன்களைப் பிடித்து வைத்திருப்பது என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டால், நலமாக இருக்கும் என்று சொன்னார்கள். இந்தக் கொள்கையை, என்னைப் பொறுத்த வரையில், மனப்பூர்வமாக, இந்த விஷயத்திலே அவர் என்ன நினைக்கிறாரோ, அதைப் பெரிதும் நானும் ஏற்றுக்கொள்கிறேன் என்பதை அவரிடம் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பது நல்லதல்ல. எனவே அவர்களை எப்படியாவது வேலைக்குப் போய்ச் சேரும்படி அவருடைய சாமர்த்தியம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும்

[திரு. கே. ராஜாராம்]

உபயோகித்துச் செய்ய வேண்டும் என்று தான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேனேயொழிய, இதற்குப் பெரிய விவாதம் தேவையில்லை. நேற்றே இதைப்பற்றி 1/2 மணி நேரம் பேசியிருக்கிறோம். அதனால் பெரிய விவாதம் வேண்டியதில்லை. எதையாவது பேசி அவர்களைத் திரும்ப வேலைக்குச் செல்லும்படி செய்ய வேண்டும். எப்படியாவது அவர்களைக் கூப்பிட்டுப் பேசி அவர்கள் வேலைக்குச் செல்லச் செய்ய வேண்டும். பல பிரச்னைகளைப்பற்றிச் சொல்கிறார்கள். இதைப்பற்றி விவரமாக எடுத்துச் சொல்லி நல்ல சூழ்நிலையைக் கெடுத்துவிட நான் விரும்பவில்லை. லா அண்ட் ஆர்டரைப்பற்றிச் சொல்கிறார்கள். வேறு எதை எதையோ பற்றிச் சொல்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை. எப்படியாவது அவர்களை மீண்டும் வேலைக்குத் திரும்பிச் செல்லச் செய்ய வேண்டும். இதற்கு எதைச் செய்வாரோ எனக்குத் தெரியாது. இன்னும் இரண்டொரு நாளில் அவர்கள் செல்லும்படி பொது மக்கள் சார்பாகவும், தொழிலாளர் சார்பாகவும், தமிழ்நாட்டின் பெருமை, கௌரவம் ஆகியவைகளை வைத்து நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். யுத்த நேரத்தில் இப்படி தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் இருப்பது நாட்டுக்கு நல்லதல்ல. அரசாங்கம் இதைப் பார்த்துக் கொண்டிராமல், முதலமைச்சரவர்கள் நேற்று பேசியதிலிருந்து, ஒரு நல்ல முடிவிற்கு இதைக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அவர் பேசியதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, இந்த வேலைநிறுத்தத்தை அவர் விரும்பவில்லை, எனவே இதை வெகு சீக்கிரம் ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டியதைச் செய்வார் என்று கருதுகிறேன். யார், யாரை அழைத்துப் பேச வேண்டுமோ அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி இரண்டொரு தினங்களில் இந்த முக்கியமான பிரச்னையை ஒரு நல்ல முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் அதை தொழிலாளர்கள் பொதுவாக ஒப்புக்கொள்ளவில்லையென்றும் சொல்கிறார்கள். எனவே முதலமைச்சரவர்கள் எப்படியாவது பேசி இதைத் தீர்த்து வைக்க வேண்டும், தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பும் வகையிலேயும், பொதுவாக வேலை நிறுத்தங்கள் ஏற்படாது இருக்கவும் வேண்டியதைச் செய்ய வேண்டும். அதற்கான முறையிலே எதைச் செய்வாரோ, எனக்குத் தெரியாது. இதை அவசரமாக ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளிலே அவர் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நோக்கத்தோடு தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

MR. CHAIRMAN: I want to know the viewpoint of the Government in the matter.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மிகுந்த அக்கறையோடு இந்தப் பிரச்னையை அரசு கவனிக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பிரச்னை தீர வேண்டும் என்பதில் எந்த அளவிற்கு நல்ல நோக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் எண்ணி அவரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பலர் வேறு விதமாகப் பயன்படுத்த எண்ணியிருக்கிற நேரத்தில், எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நாட்டின் நன்மையைக் கருதி இந்தப் பிரச்னை தீர வேண்டும் என்கின்ற நல்ல எண்ணத்தோடு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை



[டாக்டர் மு. கருணாநிதி]

அளித்திருக்கிறார்களேயல்லாமல், ஒத்தி வைத்து இந்தச் சபையில் நீண்ட ஒரு விவாதத்தை நடத்த வேண்டுமென்கிற நோக்கம் அவருக்கு நிச்சயம் இருக்காது என்பதை நான் நன்றாக அறிவேன். நேற்றைய தினம் நான் வெளியிட்ட கருத்து வெளியார் தலையீடு இல்லாமல், யூனியன்களுக்கு வெளியார் தலைமை வகிப்பது என்பது மாற்றப்பட்டு, அந்தந்தத் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களில் ஒருவரே யூனியனுக்குத் தலைவராக வர வேண்டும் என்பதாகும். இந்தக் கருத்தை அவர்கள் பரிபூர்ணமாக ஏற்றுக்கொள்வதாகச் சொன்னதற்காக நான் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், காங்கிரஸ் கட்சியிலே அவர் நீண்டகாலமாக அனுபவம் உள்ளவர். பெரும் பொறுப்புகளை வகித்தவர், காங்கிரஸ் கட்சியின் பெரிய தலைவர்கள் வரிசையில் ஒருவராக இருப்பவர். காலையிலே பேரவையிலே காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக உள்ள திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இந்தக் கருத்தை ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நல்ல வேளையாக அந்தக் கட்சியிலே பொறுப்புள்ள இடத்திலே இருக்கிற எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அந்தக் கருத்தை ஒத்துக் கொண்டிருப்பதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். வெளியார் தலையீடு இருக்கத்தான் வேண்டும் என்ற கருத்து இன்று காலையிலே சொல்லப்பட்டது. அந்த வாதத்திற்கு முற்றிலும் புறம்பாக எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நான் சொன்னகருத்தைப் பரிபூர்ணமாக ஏற்றுக்கொள்கிறேன என்று சொன்னதொன்றே எனக்கு மிகுந்த மனத் திருப்தியை அளிக்கின்றது. அவர்கள் மிக்க உணர்ச்சியோடும், உற்சாகத்தோடும் இந்தப் பிரச்னை தீர முதலமைச்சர் தன்னுடைய சாமர்த்தியத்தையெல்லாம் காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். என்னிடத்திலே சாமர்த்தியம் இருப்பதாக ஒத்துக்கொள்கிற மிகக் குறைவான காங்கிரஸ்காரர்களிலே அவர் ஒருவர் என்பதை நான் நன்கு அறிவேன். இந்த விஷயத்லே சாமர்த்தியத்தைக் காட்டுவதற்கு நான் தயாராக இல்லை. நாட்டு நிலையைத்தான் காட்ட விரும்புகிறேன். இதிலே சாமர்த்தியத்தைக் காட்டுவது பொருத்தமானதாக இருக்காது. நாட்டு நிலை, உண்மையான நிலை உணரப்பட வேண்டும். காலையிலே பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசவேண்டுமென்று சொன்னார்கள். நான் கூப்பிட்டுப் பேசத் தயாராக இருக்கிறேன். அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதா அல்லது வெளியில் உள்ள தொழிற்சங்கத்திற்குச் சம்பந்தப்படாத தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதா என்பதுதான் பிரச்னை. இதற்கென்று ஒரு கமிட்டி அமைத்துக்கொண்டு, தொழிற்சாலைக்குச் சம்பந்தப்படாதவர்கள் எல்லாம், எதிர்க்கட்சியிலே உள்ளவர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு ஒரு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் யார், யாரை அழைத்துப் பேசுவது என்பதைப்பற்றி நான் யோசித்து அவர்களோடு பேசலாம் என்று கருதி யிருக்கிறேன். அப்படிப் பேசுவேன் என்ற உறுதியை ஏற்றுக் கொண்டு தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் சென்று விடுவார்களானால், அவர்களை அழைத்துப் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஒப்பந்தம் என்றாலே என்றைக்கும் அது முற்றிலும் சரியானதாக அமைந்துவிடாது. மறுபடியும் அது மறுபரிசிலனை செய்யவேண்டிய நிலையிலேகூட இருக்கும். காவிரி பிரச்னை சம்பந்தமாக நான் ஒரு ஒப்பந்தம் செய்தேன். அது எந்த அளவிற்கு

[டாக்டர் மு. கருணாநிதி]

இன்றைக்கு இருக்கிறது என்று பார்த்தால் தெரியும். எனவே ஒப்பந்தத்தில் தவறே இல்லாத ஒப்பந்தம் என்று எதையும் கூறிவிட முடியாது. 1924-ல் செய்து கொண்ட காவிரித் தண்ணீர் ஒப்பந்தம் கூட இன்றையதினம் எந்த அளவிற்குப் போயிருக்கிறது என்று தெரியும். ஒரு யூனியன் தலைவர் செல்வாக்கு உள்ளவர் என்று சொல்ல மற்றவர் 10 வாங்கிக் கொடுத்தால், நான் 15 வாங்கித் தருவேன் என்று சொன்னால், தொழிலாளர்கள் அவர் பக்கம் போகத் தயாராக இருப்பார்கள். ஆனால் நிறைவேறுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதை விட நிர்வாகத்தினிடத்தில் கேட்பதற்கும் உங்களுடைய தொழிற்சாலையை மூடிவிடு என்று சொல்வதற்கும் அதிக வித்தியாசம் இல்லாத அளவிற்குப் போனால், எந்த அளவிற்கு போர்க்காலத்தில் உற்பத்தி தேவை என்று கருதுகிறார்களோ—எதிர்க்கட்சித் தலைவர் கருதுகிறார்களோ—அந்த உற்பத்தியை அடைய முடியாத பரிதாபகரமான சூழ்நிலை ஏற்பட்டு விடும். நெருக்கடியான நேரத்தில் இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்கள் செய்வது, கிளர்ச்சிகள் செய்வது என்பது இந்தத் தடவை நமக்குப் புதிதாக இருக்கிறது. அவரும் பல ஆண்டுக்காலமாக பொறுப்பான பதவியில் இருந்திருக்கிறார்கள். நாங்கள் 1967 இலிருந்து ஆளும் கட்சியாக ஆகியிருக்கிறோம். அதற்கு முன்பு இதே கோட்டையில் எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிறோம். அண்ணா அவர்களுடைய தலைமையில், 15 பேராக இருந்த நேரத்திலும், நாவலர் நெடுஞ்செழியன் எதிர்க் கட்சித் தலைவராக இந்த நேரத்திலும் நாங்களெல்லாம் வீற்றிருந்த நேரத்திலே, யுத்தத்தை சந்திக்க வேண்டிய அவசியம் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட போதெல்லாம், எந்த அளவு அரசோடு நாங்கள் ஒத்துழைத்திருக்கிறோம் என்பதையும், இன்னும் சொல்லப்போனால் நெருக்கடிக்காக எங்களுடைய கட்சியினுடைய தேர்தலை நாங்கள் ஒத்தி வைத்திருக்கிறோம் என்பதையும் யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் இப்போது நாங்கள் ஆட்சியில் இருக்கிற நேரத்திலே நடக்கிற காரியங்கள் விசித்திரமாக இருக்கின்றன. பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஒரு அறிவிப்பைத் தந்தார். பல் கலைக் கழகத் துணை வேந்தரை 10 பேர் சென்று பார்த்து கோரிக்கையைக் கொடுத்து பதிலைப் பெறுவதற்கு மாறாக 10 ஆயிரம் மாணவர்கள் திரண்டு செல்கிறார்கள் என்பதும், மறு பரிசிலனை செய்கிறேன் என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் சொல்லியபிறகு பல்கலைக் கழக துணைவேந்தர் மீது வரவேண்டிய கோபத்தையெல்லாம் எதிரேயுள்ள அண்ணாவினுடைய சமாதி மீது காட்டுகிற அளவிற்கு மாணவர்கள் செல்கிறார்கள் என்பதும், அங்கு கட்டப்பட்டிருந்த அருமையான விளக்குகளையெல்லாம் உடைக்கிறார்கள் என்பதும் இந்த அவசர காலத்தில், ஏன் சாதாரண காலத்தில் கூட, எவ்வளவு பொருத்தமானது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். நான் கூட போலீசாரிடத்தில் வந்த பிறகு கொஞ்சம் வருத்தப்பட்டேன். "நீங்கள் அண்ணாவினுடைய சமாதியை உடைக்கிறார்கள் என்றால், பார்த்துக் கொண்டு இருந்திருக்கலாம். சமாதியை முழுக்கவும் உடைத்து உள்ளே இருக்கிற அண்ணாவினுடைய மிச்சமிருக்கிற உடலை எடுத்துக்கொண்டு போகப் போகிறார்களா? எல்லாவற்றையும் உடைத்தாற்கூட மறுபடி கட்டிக் கொள்ளமுடியும். விட்டிருந்தால் நாட்டிற்காவது தெரியும். எப்படிப் பட்டவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாடு அறியுமே. ஏன் தடுத்தீர்கள்?" என்று கேட்டேன். நம்முடைய நாவலர் அவர்களும் மற்றவர்களும், "அதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்? அவர்கள் வந்த விஷயம் வேறு, செய்த விஷயம் வேறு. போலீசார் தலையிடாமல் இருந்திருந்தால் பொது மக்கள் தலையிட்டிருக்கக் கூடும். எந்த அசம்பாவிதமும் வராமல் போலீசார் தடுத்தார்கள்", என்று விளக்கங்களைத் தந்தார்கள். அதைப் போலவே இன்று காலையில் கூட்



[டாக்டர் மு. கருணாநிதி]

புதுக் கல்லூரியில் (நியூ காலேஜில்) மாணவர்கள் நாங்கள் இந்த ஹாப் இயர்லி எக்ஸமினேஷனை எழுதமாட்டோம் என்று கூறி, அதற்காக ஒரு வேலைநிறுத்தம் செய்து, 500 பேர் சாலை ஓரத்தில் உட்கார்ந்து போகிறவாக்கில் கல் எறிய ஆரம்பித்தபோது போலீசார், 'நீங்கள் கலைந்து செல்கிறீர்களா அல்லது பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யவா?" என்று கேட்ட பிறகு அங்கிருந்து போயிருக்கிறார்கள். நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்தில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டு, கடைசி யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கிற எதிரிகளை சந்திக்கின்ற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெறுவது ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட மாணவர்களையும் தொழிலாளர்களையும் சில பேர் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் மிக முக்கிய இடம் வகிப்பவர்கள் யுத்தத்தின் காரணமாக கொண்டு வந்த பாதுகாப்புச் சட்டம் தேவையில்லை என்று வாதிடுபவர்கள், தூண்டிவிட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்கிற காரியம் நல்ல காரியம் என்று வெளிக்குத் தெரிகின்ற காரணத்தினால், எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிற கட்சிகளெல்லாம் கூட அவர்களோடு ஒன்றிப்போக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. யாருக்கும் தராத இடத்தைத் தந்து இந்த இடத்தில் கூட்டம் போட்டுப் பேசுங்கள் என்று அழைத்துப் பேசவேண்டிய அளவிற்கு சத்தியமூர்த்தி பவனங்கள் பயன்படுகின்றன. காரணம், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்ப்பாக எது நடைபெற்றாலும் ஆதரிப்பது என்ற அளவிற்கு யாரும் வந்துவிடலாம். இது நாட்டினுடைய மொத்த நன்மைக்கு இடையூறாக ஆகிவிடும் என்பதைச் சொல்கிறேன். நான் இவ்வளவு விஷயங்களையும் எதிர்க் கட்சித் தலைவர் நிச்சயமாக நடுநிலையோடு ஆராய்ந்து பார்க்கக் கூடிய உள்ளம் படைத்தவர் என்ற காரணத்தினால் சொல்கிறேனேயல்லாமல் வேறு அல்ல. மீண்டும் மீண்டும் சொல்கிறேன். சிம்ப்ஸன் தொழிலாளர்கள் இப்போது பாதிக்கு மேல் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். 18 ஆயிரம், 20 ஆயிரம் என்று தருகிற கணக்கெல்லாம் சரியான கணக்கல்ல. திரு. காட்டூர் கோபால் செய்த ஒப்பந்தம், முன்பு திரு. குருமூர்த்தி என்ன ஒப்பந்தம் செய்துகொண்டாரோ, அதை விட தொழிலாளர்களுக்கு லாபகரமான ஒப்பந்தம். அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை திரு. காட்டூர் கோபால் செய்துகொண்டிருக்கிறார். இன்னும் ஏதாவது தேவையென்றால், அவரை உட்கார வைத்துப் பேசி, நிர்வாகத்தினரை வைத்துப் பேசுவதில் எந்த விதமான கஷ்டமும் கிடையாது. ஆனால் அவசர நிலையில் இதைத் தீர்ப்பதற்கு முதலில் வழி காட்டிகளாக இருக்கவேண்டியவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறவர்களே தவிர வேறு யாரும் அல்ல. அவர்கள் உடனடியாகக் கிளர்ச்சியைக் கை விட்டு வேலைக்குத் திரும்புவார்களானால், அதற்குப் பிறகு யார் யார் இதைப்பற்றிப் பேசுவதற்குத் தகுதி படைத்தவர்களோ அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களையெல்லாம் கலந்து பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். இந்த விளக்கத்திற்குப் பிறகு சபையை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அவசியமில்லை என்பதை, தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

MR. CHAIRMAN : In view of the statement of the Hon. the Chief Minister, no further discussion seems necessary. Hence consent to raising of the matter is withheld.

[7th December 1971

## V. CALLING ATTENTIONS TO THE PLAGUE CONDITIONS PREVAILING IN COIMBATORE DISTRICT IN OCTOBER 1971.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, I like to call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, the plague condition prevailing in Coimbatore district in October 1971. 5-1 p.m

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, cases of 'rat fall' were reported on 22nd October 1971 and subsequent days in certain areas in the Tiruppur Municipality in the Coimbatore district. The Bacteriologica examination of the smears at the Coimbatore Medical College Laboratory and Pasteur Institute, Coonoor, indicated the presence or organisms resembling plague bacilli.

Subsequent to the occurrence of rat fall at Tiruppur, the following towns in Coimbatore district also reported rat falls: Erode, Pollachi, Coimbatore, Mettupalayam, Udumalpet, Gobichettipalayam. Up to 23rd November 1971, there were 320 rat falls in the entire State.

The bacteriological reports received from the Director, King Institute, Guindy on the smears of the dead rats, except those mentioned in the next paragraph indicate 'negative for the presence of P. Pestis'.

There were also reports of smear being suggestive of P. Pestis in the following towns: Coimbatore-1, Tiruppur-2, Mettupalayam-1 Pallipalayam, on the border of Salem district-1. All the other slides were reported as negative. Culture results so far have been negative.

The Collector of Coimbatore has issued a notification declaring the entire Coimbatore district as an area threatened with an outbreak of plague.

The stock of plague vaccine then available with the King Institute, Guindy was utilised and 2,105 anti-plague inoculations were conducted in the affected areas.

The Haffkins Institute, Bombay has been requested to send immediately the anti-plague vaccine now available with it and also to supply 1,00,000 c.c. immediately. They have sent 3,000 c.c. available with them and reported that it would take time to supply one lakh doses required. Hence, the Government of India were requested to rush anti-plague vaccine that might be available in other parts in India. The Government of India have informed that they have requested the Lister Institute of Preventive Medicine, London to supply anti-plague vaccine. Two consignments, one of 15,000 doses and the other of 35,000 doses have so far been received from this Institute and distributed to the various mofussil centres. Further, Government of India were also in contact with World Health Organisation to secure plague vaccine from Paris and Teheran.



7th December 1971]

[Thiru K. Anbazhagan]

The Government have issued orders sanctioning an expenditure not exceeding Rs. 1,82,600 towards the purchase of chemicals, drugs, equipments, etc., in connection woth the anti-plague measures. The District Health Officer, Coimbatore has been instructed to appoint 100 mazdoors, when necessary. Orders have also been issued sanctioning a temporary advance of Rs. 3,000 to the Additional Director of Health Services and Family Planning to meet any unforeseen expenditure such as freight charges for despatching medicines, etc., to the affected places.

The Director of Health Services and Family Planning has issued a circular in Tamil notifying the public regarding the symptoms of plague and what they should do as soon as they see a rat fall and how they should protect themselves medically.

The Additional Director of Health Services and Family Planning has toured the area and given instructions for organising anti-plagus measures. The Assistant Director in-charge of Epidemics has also inspected the area and supervised the anti-plague operations.

Investigations among rodents are being continued with the co-operation of the National Institute of Communicable Diseases.

One Health Inspector was deputed to the National Institute of Communicable diseases, Delhi for being given training in the use of jet gun for carrying out mass anti-plague inoculations and the Director, National Institute of Communicable Diseases, Delhi was also requested to supply on loan, a jet gun for use in the State. A jet gun has accordingly been supplied by him on 27th November 1971 to the Director of Health Services and Family Planning who has sent it to Tiruppur.

So far, no human cases have been reported anywhere in the State though more than a month has elapsed since the first report of rat fall.

All preventive measures are being carried out in the affected areas. Additional staff have already been posted, wherever necessary. Regular inspections are conducted by the officers of the Directorate of Health Services and Family Planning. Further, periodical meetings are being held by the Secretary to Government, Health and Family Planning Department to review the situation.

Further, Sir, I have also visited the place and have seen that all the officers are very keen in seeing that the plague infection does not take place.

* THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I may be allowed to get a clarification. I want to know the duration of the period for which the human beings should be careful after

[7th December 1971

[Thiru G. Swaminathan]

the death of rats, or in other words, the period for which plague bacilli would be alive and also the period for which the vaccine now purchased can be used.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I am not myself very clear about the two points raised. Anyhow, from my visit to the affected place, I am having an idea that for about four or five days, from the date of rat fall, people have to be very careful. Even if there was some infection, it could be tackled later. Plague infection is tackled not only on the preventive side but also after the infection takes place and when some people are affected.

DEPUTY CHAIRMAN : Now we shall take up non-official business.

VI. POINT OF ORDER *re* PART-DISCUSSED RESOLUTION OF THIRU G. VASANTHA PAI.

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. I want to mention that in November 1970, when I moved a resolution in the Council, the Hon. the Minister for Education replied and then it was specifically ordered by the Hon. Chairman that for my reply, the resolution would be taken up on the next non-official day. In fact, I was asked how many minutes I would take for my reply and I said "20 minutes" and then only, the Hon. Chairman specifically adjourned the matter to the next non-official day. I understand that the office has not posted my resolution, though it was part-heard and though it was specifically ordered by the Hon. Chairman to be posted on the next non-official day. I think this is a breach of my privilege, Sir. This matter ought to have been posted today. Rule 9 (b) of the Council Rules does not apply to this but only to new matters, since this is a matter which has already been dealt with Rule 9 (b) will not apply to a matter in which the Hon. Chairman has given a specific ruling. The facts would be clear if the official proceedings of the House for November 1970 were gone through. Last time when I enquired why my resolution was not posted, it was said that there was no non-official day. Even today it has not been posted. Since there are two non-official days, I thought my resolution would be posted and I was surprised to find that it was not posted.

DEPUTY CHAIRMAN : The non-official resolution given note of by Thiru G. Vasantha Pai regarding the medium of instruction in Schools and Colleges was considered by the Legislative Council at its meetings held on 28th March and 28th November 1970 and the Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education, replied to the debate. The mover of the motion will have a right of replying to the discussion on the resolution and the resolution will have to be put to the vote of the House afterwards. But subsequently the session was prorogued with effect from 2nd January 1971 and again from 12th April 1971.



7th December 1971]

[Deputy Chairman]

Under rule 9 (b), such a resolution shall be carried over to the next session from the stage reached by it in the expiring session, provided that a fresh notice is given for motions regarding the same. As the hon. Member has not given fresh notice, the resolution cannot be taken up for further consideration.

THIRU G. VASANTHA PAI : On a point of clarification, Sir. I want to mention that when the Hon. Chairman has definitely said that I would have a right to reply on the next non-official day, this rule will not apply. I want a ruling from the Chair. When the Hon. Chairman has ordered that I could reply on the next non-official day, can anybody else say that I should not reply? I most respectfully submit that under these circumstances, rule 9 (*b*) will not apply.

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. I wish to know whether the rules confine the Chairman or the Chairman is above the rules.

DEPUTY CHAIRMAN : The Hon. Chairman has also to act as per rules. If the session is prorogued, the pending matters would lapse.

THIRU G. VASANTHA PAI : Sir, I would like to point out that prorogation does not apply to the Legislative Council but only to the Legislative Assembly. Ours is a body which continues perennially and there is no question of prorogation. If any authorities are required in support of this, I shall place them before the House. For the House of Lords, and for the Legislative Council, the Upper House, there is no question of prorogation.

DEPUTY CHAIRMAN : I am sorry the hon. Member is confusing things. According to our rules, prorogation takes away many of our rights and renewal of notice is required in many respects. We can go only by the Council Rules which have been framed by the Council, which are being adopted and accepted by the Council and which are to be enforced.

THIRU G. VASANTHA PAI : Sir, may I respectfully submit that the Council Rules provide that if the Hon. Chairman ordered that a matter should be taken up on a particular day, then that order will over rule the other provisions? My respectful submission is that the Council Rules would not prevail over the ruling of the Hon. Chairman.

THIRU A. R. DAMODARAN : Sir, I move that Rule 9 (*b*) of the Council Rules be suspended and the resolution of the hon. Member be taken up.

DEPUTY CHAIRMAN : The hon. Member can even now give fresh notice and his resolution will be taken up on the non-official day.

[7th December 1971

THIRU G. VASANTHA PAI : Sir, I am giving fresh notice even now by my submission.

DEPUTY CHAIRMAN : Let the hon. Member give the notice in writing as per the rules.

THIRU G. VASANTHA PAI : Sir, I shall do it.

VII. POINT OF INFORMATION READJOURNMENT MOTION.

திரு. டி. கே. சுப்பையா : தலைவரவர்களே, என்னால் கொடுக்கப்பட்டிருந்த ஒத்தி வைப்புத் தீர்மானமானது 6-ம் தேதி வருவதாக இருந்தது. 6-ம் தேதி வாராதது இன்றும் வரவில்லை. இதன் விவரத்தை அறிய விரும்புகிறேன்.

DEPUTY CHAIRMAN : The notice of adjournment motion given by the hon. Member will be taken up on one of the succeeding days of the session.

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. Adjournment motion denotes urgency in the matter. May I know how many days it will take for the adjournment motion to see the light of day, Sir ?

DEPUTY CHAIRMAN : It all depends upon the time taken by the Government to get the reply for the adjournment motion.

VIII. NON-OFFICIAL RESOLUTIONS.

(1) *Comprehensive Legislation for teachers serving in aided institutions.*

DEPUTY CHAIRMAN : Thiru M. Rajah Iyer will now move his resolution and get it seconded.

THIRU M. RAJAH IYER : Mr. Deputy Chairman, Sir, I move—

" That this House recommends to the Government to bring in a comprehensive legislation with a view to giving statutory protection to teachers serving in aided institutions under private management ".

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, நான் இந்தத் தீர்மானத்தை வழி மொழிகிறேன்.

DEPUTY CHAIRMAN : Resolution moved—

" That this House recommends to the Government to bring in a comprehensive legislation with a view to giving statutory protection to teachers serving in aided institutions under private management ".

*THIRU M. RAJAH IYER : Mr. Deputy Chairman, Sir, I
5-20 p.m. almost feel apologetic in moving this resolution. I have been giving notice of this resolution for the past four or five years and it never used to find a favourable priority in the ballot. Today it is uppermost and I find that the Government have already committed themselves to bringing forward a comprehensive legislation in this regard and that a resolution of mine urging the



7th December 1971]

[Thiru M. Rajah Iyer]

Government to do something which they have already decided to do looks rather unnecessary at this stage. But, still, I wish to point out one or two things, Sir, so that they might be borne in mind when the legislation is brought forward. We, teachers, as I pointed out yesterday, are anxious to do our duty by the country and by the little children entrusted to our care. While teachers in the Government and local bodies' service enjoy security of service, the greatest handicap for teachers in aided school service has been the great insecurity of tenure. Sir, even today, teachers are being sent out at the whims and fancies of the correspondents. Correspondents are a law unto themselves in a few cases. I cannot tar every management with the same brush. I am conscious of a number of ideal managements. I am not casting a wholesale reflection on aided management as a whole. There are exemplary managements, managements that have contributed to the advancement of education in our State, managements of whom the Government could be proud. Unfortunately, there are a few who have commercialised education in the name of managing educational institutions. Even the other day, the Hon. the Minister for Education intervened and said that there were a few managements that were educational trusts and that there were a few educational commercial concerns where the entire motive seemed to be to make money. This malady is particularly acute in the elementary schools, Sir. In a number of private aided elementary schools today, I may be pardoned if I say so, there are unscrupulous managements. At the time of appointing a teacher, they have to make some consideration available for it, to put it mildly, to the manager. The manager makes a living out of the school. In those days, the management had to contribute its share to the Teachers' Provident Fund and this teacher had to give in writing that he would contribute the Management's share of the provident fund also from out of the slender salary that he would draw. On top of all these things, the teacher had to sign a blank paper and give it to the manager at the time of his appointment. This blank paper will be used at any time as a paper of resignation by the management so that the teacher could be got rid of if he was found to be too inconvenient to the management in some respects. We used to call this 'triple benefit' for the management—some consideration at the time of appointment, management's contribution to the provident fund paid by the teacher and an un-dated signed blank paper to be used by the management at its desire and according to its whim and fancy. These things must end and they must end statutorily. That is what I am anxious to point out. I am not magnifying these defects in aided schools but I wish not even a trace of them be found in Tamil Nadu today.

Speaking about High Schools, Sir, the teachers of the High Schools are a little better-placed because they are governed by a contract between the teacher and the management. There

[Thiru M. Rajah Iyer]

are certain clauses which bind the manager to a particular course of action and if a teacher were to be ousted from service with notice or without notice, depending upon the category of charges, the teacher could get redress by preferring an appeal to the relevant appellate authority and there is a specific clause to be observed by the management side that if an appeal has been preferred to the appellate authority, the manager shall not send him out till the appeal is disposed of. Still we find there are some Managements which send away teachers in spite of the fact that an appeal by the affected teacher is pending before the Director of Secondary Education. The Director of Secondary Education sends an emergent communication to the erring management saying "You shall not send away the teacher, till his appeal is disposed of by me. It is a violation of the sacred teacher-manager agreement to which you have committed yourself. You have signed in that agreement saying that you are bound by the various clauses there. There is a clause in black and white saying that if there is an appeal, the manager shall not send away the teacher nor shall the teacher stay away, if the appeal is preferred by the management against the teacher". In spite of such a binding clause, the managements send away teachers and they care a hoot for the directive from the Heads of Departments or from the Government themselves. How is it that the managements are emboldened to flout the directives of the department? It is because they are aware of the fact that this poor teacher cannot have any statutory right to enforce the order which he gets from the department or the Government. This order binds the teacher but allows the manager to be in the wrong. The management is in a position to flout it because they know that this cannot be enforced in a court of law. Our directives to the managements must have a legal basis. That is what I am anxious to point out. Some of the teachers have gone to courts of law. Very many esteemed friends of mine have taken the matter to the High Court and to the Supreme Court and have won the case, went back, served in that management school for a day or two and then came out with flying colours. They did not want to serve under that management but they only wanted to establish their right and to show that the management has erred in sending them out. There were schools ready with open arms to take them. Today what is the power the Government have to punish the managements which flout their orders? The Government can declare a particular correspondent unfit to be a correspondent. He is conscious of it and he has perhaps another obliging nephew or cousin of his who is prepared to act as correspondent and he can carry on the same fight against the teacher. Besides dubbing a management or declaring a correspondent as unfit to be a correspondent, with drawing the recognition of the school is the alternative remedial measure. But it affects hundreds and thousands of students studying there and receiving education there. It affects the other teachers also.



[Thiru M. Rajah Iyer]

For the sake of one teacher, the entire institution cannot be penalised. So, the Government cannot withdraw or withhold the grant of the school or withdraw the recognition; and on various other conditions, the correspondents are aware that the Government will not take action against them and even if they take action against the correspondent, the teacher who has been victimised and who has been driven into the streets has no source of redressal altogether. That is the unfortunate position of the helpless teacher which I want the Government to bear in mind when they bring forward a comprehensive legislation. The teachers could go to courts of law with petitions and get their rights upheld by the courts of law and it was available up to a particular point of time. To-day, Sir, the position is much worse after a particular judgment of the Supreme Court. I am referring to a particular judgment, dated 16th March 1971, Sir. After March 1971, unfortunately it looks as though a teacher cannot go to a court of law through a writ petition and get justice—what the High Courts and the Supreme Court themselves grant to be just on behalf of the teacher concerned, what they consider to be just, they are not able to dispense that justice, unfortunately because legally they find that the Government cannot come to the rescue of the teacher concerned.

This is the judgment of the Supreme Court where Their Lordships J. M. Shellat and C. A. Vaidyalingam have pronounced—Excuse me for reading just a sentence or two from this very important judgment. This is an appeal preferred by an aided Elementary School teacher, Sir and what applies to elementary schools applies *ipso facto* to aided high schools and colleges too. 5-30 p.m.

"Ordinarily the relations between the management of an Elementary school and teachers employed in it would be governed by the terms of the contract of employment and the law of master and servant. In the absence of any statute controlling or abrogating such a contract of employment and providing to the contrary, Their Lordships pointed out, the mere fact that such a school has obtained recognition and aid from the Education Department would not mean that the relationship between the Management and its employees has ceased to be governed by the contract of employment under which the employees are recruited and by the law of 'Master and Servant' unless there is some provision in the Act over-riding that law, as one finds in the statutes dealing with industrial disputes and similar other matters."

There is a specific law which gives protection to the industrial labourer about whose loyalty and about whose devotion to duty in this grave crisis, we are very much concerned. There is protection for an industrial labourer and the courts grant it.

[7th December 1971

[Thiru M. Rajah Iyer]

Today the position of a teacher is much worse than a labourer in a factory because in the Industrial Disputes Act, there is a specific statutory protection for the labourer, but there is no such protection for a teacher.

The Judges go on to say—"You may take action against the correspondent if you like but you cannot take action against the teacher because the teacher is a third party". Finally they end with the sentence: "The appeal against the order passed by the Management against a teacher is provided for under the rules, so as to enforce the satisfaction of conditions under which recognition and aid would be granted or withdrawn, and not for regulation as between the teacher and the Management the relation of 'Master and Servant' arising under the contract of employment"

The Law Journal, commenting on this has just one significant sentence: "If this is the state of law, then the Education Act and the rules stand in need of immediate amendment making the orders of the educational authorities legally enforceable either by way of writ proceedings or by way of suit. Otherwise the large number of teachers of grant-in-aid and management schools will go without any effective remedy and the appellate proceedings before the educational authorities would not serve any useful purpose at all".

The educational authorities are only wasting their time over such appeals, and unless there is any statutory basis for them, they cannot make their orders enforceable. So I would request the Government to bear the judgment of the Supreme Court in mind when they bring forward the comprehensive legislation that they have promised.

We find teachers in Government schools, local bodies and aided schools have all been given the same service conditions, salary and retirement benefits. It goes to the credit of this Government that at one stroke they have almost ushered in a classless society among teachers. Whether a teacher is serving in an aided school or a local body school or a Government school, it makes no difference so far as salary is concerned. They all have the same retirement benefit, namely, 3/8th of the average salary of the last 12 months But only in respect of security of tenure whereas the Government and local body teachers enjoy much better security, unfortunately the aided school teachers who do very good service—in fact, we praise the work done by aided institutions and their contribution to the advancement of education in the State—are not given the same security. It is a pity that teachers who do this monumental work should suffer from this great handicap which would not enthuse them to throw themselves heart and soul into and dedicate themselves to the great task—the nation building task—of imparting education.



[Thiru M. Rajah Iyer]

7th December 1971]

Sir, I want this insecurity to be removed and the Government promised to do it. Sir, Dr. Paul's Committee was appointed and its report has been before the Government for some time. Last time it was pointed out that Dr. Paul's Committee's report would be followed up. Unfortunately in taking action upon the report of the Committee, there has been some delay. I would like the Government not to delay any further, taking necessary action on the report and to follow it up by a comprehensive Act of the Legislature which would give aided school teachers a statutory protection of service to which they are very eagerly looking forward.

திரு: எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, இன்று திருவாளர் ராஜா அய்யர் அவர்களின் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கக் கூடிய நடைமுறைகளை, கல்வி இலாகாவில் இருக்கக் கூடிய விதி முறைகளை, சட்டமாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேச அனுமதி வழங்கியதற்காக நன்றி தெரிவித்துப் பேசத் தொடங்குகிறேன். 1969-70 கல்வி ஆண்டுத் தொடக்கத்தில் இந்த ஆசிரியப் பெருமக்களுக்கு சட்ட விதியைக் கொண்டு வரவேண்டுமென்பதற்காக ஒரு குழு இதே சட்ட மன்றத்தால் அமைக்கப்பட்டு, அது ஆராய்ந்து விதிகளைக் கொடுத்து, இப்போது சட்டமாகக் கூடிய இந்த நேரத்தில் நான் இரண்டொரு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், எய்டட் பள்ளி ஆசிரியர்கள் சட்டப் பாதுகாப்பு இல்லாமல் போனது எப்போது என்று பார்த்தால், திருவாளர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்த நாட்டினுடைய ராஜ தந்திரியாகவும் சாணக்கியராகவும் சொல்லப்பட்ட அந்த மாபெரும் தலைவருடைய காலத்தில் அப்போதிருந்த சட்ட முறைகள் மாற்றப்பட்டு Rules relating to elementary schools— Part I சட்டமாக்கப்பட்டு Part II சட்டமாக்கப்படாமல் விட்ட காரணத்தினால், இந்த ஆசிரியப் பெருமக்கள் 1936, 1937-லிருந்து இவ்வளவுகாலம் அடிமைப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் காலத்தில் விடப்பட்ட ஒன்றை இன்றைக்கு இருக்கக் கூடிய இந்த முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் காலத்தில் உருப்படியான சட்டத்தைப் பிறப்பித்து பாதுகாப்பளிக்க வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக இன்னும் சட்டம் ஆக்கப்படாமல் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதற்கு அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலித்து விரைவாகக் கொண்டு வருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். தலைமை நீதி மன்றத்தில் சொல்லப்பட்டது. எஜமான், வேலையாள் என்ற நிலையில் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். சாதாரணமாக குடிமகன் ஒவ்வொருவருக்கும் தங்களுடைய நிலைகளில் எதிர்த்து கோர்ட்டுகளில் சூட் "ஃபைல்" செய்வதற்கும், ரிட் " பைல்" செய்வதற்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. தலைமை நீதி மன்றத் தீர்ப்புப்படி, ஒரு எய்டட் பள்ளி ஆசிரியர் அந்த நிர்வாகத்தை எதிர்த்து நிர்வாகத்தின் அநியாயங்களை எதிர்த்து கோர்ட்டில் சூட் "ஃபைல்" செய்வதற்கோ ரிட் "ஃபைல்" செய்வதற்கோ உரிமை இல்லையென்று தலைமை நீதி மன்றம் தீர்ப்பு கூறியிருக்கிறது. நேற்றுக் கூட அப்ரஹாம் லிங்கன் கூறியவைகளை, அங்கு

[திரு. எஸ். முத்துசாமி]

முதலமைச்சர் அவர்கள் சென்று வந்த நிலைகளையெல்லாம் பற்றித் தலைவரவர்கள் பாராட்டிப் பேசினார்கள். அந்த அப்ரஹாம் லிங்கன் காலத்தில் இருக்கக் கூடிய நிலைமையைப் போல் இன்று எய்டட் பள்ளி ஆசிரியப் பெருமக்கள் இருக்கக் கூடிய நிலை இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் கோர்ட்டில் சூட் "ஃபைல்" செய்வதற்கோ ரிட் போடுவதற்கோ உரிமை இல்லையென்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை தயவு செய்து கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஜமான் வேலையாள் என்ற முறையிலேதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலே ஆசிரியப் பெருமக்கள் தங்களுக்கு இழைக்கப்படக்கூடிய இன்னல்களை எடுத்து கல்வி இலாகாவுக்கு எவ்வளவு தான் சொன்னாலும், அது சட்ட மாக்கப்படவில்லை என்று தள்ளி விடுகிறார்கள், தலைமை நீதி மன்றத்திலேகூட இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது Rules relating to elementary Schools இரண்டாவது விதி சட்டமாக்கபடாத காரணத்தால் மாநில அரசு பாதுகாப்பு அளிக்க முடியவில்லை என்று. எக்சிக்யூடிவ் ரூல்சாகவே அவை இருக்கிற காரணத்தால்தான், பாதுகாப்பு இல்லை. நமது தமிழ்நாட்டில் சட்டத் துறை இதுவரை இதைச் சட்டமாகச் செய்யாமலிருக்கிற காரணத்தால்தான், அண்டான்—அடிமை என்ற உறவு முறை நீடித்து வருகிறது. இதை விரைவாகப் போக்க தக்க முயற்சிகளிலே நமது அரசினர் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது யுத்த காலமாக இருக்கிற காரணத்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் குறிப்பிட்டது போல், ஆயிரக்கணக் கான ஆசிரியர்கள் அவதியுறுகிறபடியாலும், இந்த ஆண்டான்—அடிமை உறவு முறையை நீக்க, நமது முதலமைச்சர் அவர்கள் பெரிய மனது கொண்டு ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன். வணக்கம்.

* **திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பதவிப் பாதுகாப்பு அடங்கல் சட்டம் ஒன்று கொண்டுவர வேண்டும் என்பதை ஆதரித்து நான் எனது கருத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் சட்டப் பேரவையில் விரைவில் அடுத்தக் கூட்டத் தொடரிலேயே இத்தகைய ஒரு சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்கிற நேரத்தில் நாம் இது பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.

ஓராண்டிற்கு முன்னால் இந்தப் பேரவையில் இது போன்ற எனது தீர் மானத்தின் மீது இத்தகைய விவாதத்திற்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர் கள் அளித்த வாக்குறுதியின் பேரில் டாக்டர் பால் தலைமையிலே ஒரு கமிட்டியை நியமித்து, அது நாடு முழுவதும் சுற்றிவந்து, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் இருந்து ஆசிரியர்கள் சார்பிலும், பள்ளி நிர்வாகிகள் சார்பிலும் உள்ள கருத்துக்களை அறிந்து ஒரு அறிக்கை அளித்திருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒரு சட்டம் கொண்டுவரப்படும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டப் பேரவையில் வாக்குறுதி அளித் திருக்கிறார்கள் கல்வியமைச்சர் அவர்கள். இந்த நேரத்தில் இதனுடைய



[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

தேவையை மிக விரிவாகச் சொல்ல வேண்டிய தேவையில்லை என்றாலும் இந்த விவாதத்தில் எனது கருத்துக்களை மிக அழுத்தமாகச் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள் எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த நாட்டிலே ஒரு சிறந்த பொதுப்பணியைச் செய்துவந்தன. நல்ல நோக்கம் உடையவர்கள், நல்ல பணம் படைத்தவர்கள், நல்ல மனம் படைத்தவர்கள், இந்த நாட்டிலுள்ள ஏழைக் குழந்தைகள் பிற இடங்களுக்குச் செல்லாமல் அவரவர்கள் ஊரிலேயே கல்விபெற வாய்ப்பு அளிக்க பல பள்ளிகளைத் தொடங் கினார்கள். அவை சிறந்த கல்விப் பணியைச் செய்தன. நாமெல்லாம் அதைப் பாராட்டி வளர்த்தோம். தொழிற்சாலைகளைத் தோற்றுவித்தவர்கள் நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறதோ இல்லையோ, அங்கே பின்தங்கிய மக்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறதோ இல்லையோ, லாபம் வேண்டும் என்ற நோக்கத்தை முதலாவதாக வைத்திருக்கிற காரணத்தால், தொழிற்சாலைகளிலே தொழில் செய்ய வருபவர் களைப் பாதுகாக்க ஆரம்பத்திலேயே மிக எச்சரிக்கையாகச் சட்டம் செய்து கொண்டோம். ஆனால் கல்வி நிலையங்களை நடத்துபவர்கள் தங்கள் வருவாயில் பெரும் அளவை அளித்து, கல்வி நிலையங்களைத் தோற்றுவித்து, கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால் அவர்களை எஜமானர்களாகவும், அங்கே பணிபுரிகிற ஆசிரியர்களை வேலைக்காரர்களாகவும் கருதி பாதுகாப் பதற்கான சட்டத்தைத் தோற்றுவிக்கும் சூழ்நிலை கல்வித் துறைக்கு அப் பொழுது ஏற்படவில்லை. அது நாளாவட்டத்தில் மாறி இப்பொழுது இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான் நாமும் சட்டம் இயற்றும் சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். தற்போது அரசு பள்ளிகள் தனியார் பள்ளிகள் என்ற வேறுபாடு இல்லாத நிலைமையைச் செய்த நமது அரசை இந்த உலக முழுதுமே வியந்து பாராட்டுகிறது. அரசினர் பள்ளி களில் பணிபுரிகிறவர்கள், இதற்கு முன்னாலே டிஸ்ரிக்ட் போர்டு பள்ளிகளாக இருந்து இப்பொழுது அரசுப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கிற பள்ளிகளில் இருப்பவர்கள், ஸ்தல ஸ்தாபனம் என்ற யூனியன், நகராட்சி இவைகளில் உள்ள பள்ளிகளில் இருப்பவர்கள், தனியார் பள்ளிகளில் இருப்பவர்கள் ஆகிய எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்திலும், ஓய்வு ஊதியம் பெறுவதிலும், விடு முறைகள் பெறுவதிலும், மற்ற எல்லாவித சலுகைகள் பெறுவதிலும் ஒரே முறையை வழங்கிவிட்ட பிறகு, இந்தப் பதவிப் பாதுகாப்பிற்கு மட்டும்தான் தனியான சட்டத்தை இயற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அரசு நல்ல முறையில் பாதுகாப்பு அளித்திருந்தும்கூட தனியார் பள்ளி நிர்வாகிகள் சட்டத்தின் துணைகொண்டு தப்பித்துக்கொள்கிறார்கள்.

எனக்குப் பல நிகழ்ச்சிகள் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு நிகழ்ச்சியை மட்டும் சொல்கிறேன். மற்ற மாவட்டங்களிலேயும் அம்மாதிரி இருக்கக்கூடும். றைப்பள்ளிவிளை என்றவிடத்தில் ஒரு தனியார் பள்ளியில் 3 வருஷம் தொடர்ந்து வேலைபார்த்த திரு. கந்தசாமி என்ற ஆசிரியர் வேலை பெற நிர்வாகத்திற்கு முதலில் ரூ. 3,000 கொடுத்திருந்தார். வேலை பெற்ற பிறகு, அந்த மூவாயிரம் ரூபாய் கொடுத்து மூன்று வருஷங்கள் கழித்து—இரண்டா வது வருஷ முடிவிலேயே வேலையை உறுதிப்படுத்தியிருக்கவேண்டும், அவ்வாறு

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

செய்யவில்லை—மேலும் இரண்டாயிரம் ரூபாய் வேண்டும் என்று கேட்டார்கள். அவரும் கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்து, கொடுக்கத் தாமதமானதால், வேறொருவரிடத்திலே ஐயாயிரம் ரூபாய் வாங்கியாகிவிட்டது, நீ வெளியே போ என்று காரணம் காட்டாமலேயே அவர் வெளியேற்றப்பட்டார். கல்வி இலாகா அதிகாரி அப்படி அவரை வெளியேற்றியது தவறு என்று ஆணை பிறப்பித்தது. அதற்குப் பிறகு மேனேஜ்மென்ட்டார் கல்வி இயக்குநருக்கு அப்பீல் செய்தனர். அந்த நிர்வாகம் செய்தது தவறு, அந்த ஆசிரியரைத் திரும்பவும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கல்வி இலாகா இயக்குநர் அவர்கள் உத்தரவிட்டு, மீண்டும் இன்னும் ஏன் அவரை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்று எக்ஸ்பிளனேஷன்—காரணம் கேட்டு உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் கேட்டாகிவிட்டது. அதற்குப் பிறகும் அந்த நிர்வாகம் அவரை எடுக்கத் தயாராகவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் அந்த நிர்வாகம் இதற்கு முன்னால் கல்விக் கூடங்களை ஆரம்பித்தவர்களுடைய நல்ல நோக்கத்தோடு நடைபெறுகிற நிர்வாகம் அல்ல. இதைப் போன்று பல நிகழ்ச்சிகளைப் பல இடங்களில் நம்மால் காண முடிகிறது. எனவே நாம் பதவிப் பாதுகாப்பு சட்டம் ஒன்றைச் சட்ட ரீதியாகக் கொண்டுவந்து பாதுகாப்பு அளிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை அரசு உணர்ந்து சட்டத்தை அமைத்துக்கொண்டிருக்கிறது. அதை இன்னும் வேகப்படுத்த வேண்டும் என்று இந்த மன்றம் கருதுவதால் எனது கருத்தையும் நான் கூறிக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளிலே இன்னும் ஒன்றைப் பார்க்கிறோம். மூன்று நான்கு வருஷங்களாகப் பணிசெய்து, உறுதிப்படுத்தப்பட்ட ஆசிரியர்களைக்கூட ஏதாவது காரணம் காட்டி, வெளியேற்றி விடுகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது, ஆகவே தேவையில்லை ஆசிரியர் என்று சொல்லி வெளியேற்றுகிற சூழ்நிலை ஏற்பட்டுவருகிறது. அந்தச் சூழ்நிலையைக் கூட, நமது அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகு, அந்நிலையை மாற்றுவதற்கு, அண்மையில் கல்வி இலாகா இயக்குநரின் மூலமாக ஒரு அறிக்கையை நமது அரசு பிறப்பித்திருக்கிறது. மாணவர் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டதன் காரணமாக, தேவையில்லை என்று நிரந்தரமாக்கப்பட்ட ஒரு ஆசிரியரை வெளியேற்றுகிற சூழ்நிலை ஏற்பட்டால், அவரை வெளியேற்றாமல், சூப்பர்நியூமரியாக வைத்துக்கொண்டு, அவர் வாங்கிக்கொண்டுவந்த சம்பளத்தையே கொடுத்து, அடுத்து வருகிற அரசுப் பள்ளிகளிலே நுழையும்படி பார்த்துக்கொள்ளலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அரசின் வரலாற்றிலே எந்தக் காலத்திலேயும் செய்யப்படாத ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு உயர்ந்த உத்தரவு என்பதை ஆசிரியர் சமுதாயம் உணர்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அத்தகைய உதவி செய்து பாதுகாப்பு நிலையை உருவாக்கிறோம். நாம் எந்த அளவுக்கு அவர்கள் நடக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த அளவுக்குத் தனியார் பள்ளி நிர்வாகத்தினர் இல்லாத நிலையை நாம் பார்க்கிறோம். கேள்வி நேரத்தின்போது

5-50 p.m.

கூட மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 4 ரூபாய்க்கு மேல் நுழைவுக் கட்டணம், விண்ணப்பத் தாள், பதிவுக் கட்டணம், போன்றவற்றிற்கு தனியார் கல்லூரிகள் வசூலிக்கக் கூடாது என்று அரசு சொல்லியிருக்கிறது என்றும் பல்கலைக் கழகங்கள் கூட அதை அமுல்



[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

நடத்த முயலுகிறது என்றும் ஆனால் பல கல்லூரிகள் அதனை மீறி நடக்கிறது என்கிறார்கள். நான் ஒரு கல்லூரியின் முதல்வராக இருப்பதால், கல்வி இலாகாவின் அப்படிப்பட்ட உத்தரவு வந்திருப்பதே எனக்குத் தெரியும். இதற்கு மேல் வசூலித்தால் நடவடிக்கையே எடுப்போம் என்று கூட விதித்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்க நம்மிடம் சட்ட ரீதியாக உரிமை இல்லாவிட்டாலும் கூட, பல்கலைக் கழகங்கள் தான் அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூட கூறினார்கள். அதுவும் கூட கல்வி இலாகாவின் இயக்குநர் மூலம் 'நாங்கள் நடவடிக்கை எடுப்போம்' என்று சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது. சில தனியார் கல்லூரிகள் 10 அல்லது 15 ரூபாய் விதித்துவிட்டு, அந்த வகையிலே தங்களுடைய பண வசதியையும், தனியார் வாழ்க்கை நிலையையும் உயர்த்தும் நிலைமையிலே ஒரு ஏற்பாட்டை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்திலே நாங்களே சிண்டிகேட்டின் மூலம் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம், அப்படி 4 ரூபாய்க்கு மேலே புதிதாக வந்த கல்லூரிகளிலே 10, 12 ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நம்முடைய அரசினுடைய நல்லெண்ணத்தையும், நன்னடத்தையையும் துஷ்பிரயோகம் செய்யும் வகையிலே சில தனியார் கல்வி நிறுவனங்கள் துணிந்திருக்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. அப்படிப்பட்ட துஷ்பிரயோகம் ஒன்றாகவிருந்து, இப்பொழுது பலவாறு அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி வந்திருப்பதால், ஒரு சட்டத்தின் மூலமாகத் தான் அதை அகற்றிக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

நான் முதலிலே கூறியபடி, ஒரு தனியார் பள்ளிக் கூடத்திலே பணிபுரியும் ஒரு ஆசிரியர் வேலை இழந்தாலும் கூட, அவரை "சூப்பர் நியூமரி" ஹேண்டாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை மிக்க முக்கியமான ஒன்றாகும். எனவே, அதைப்பற்றி இனிமேல் சிந்திப்பார்களா? பக்கத்திலே இருக்கும் பள்ளி அரசுப் பள்ளியாக மாறி, தனியார் பள்ளியிலே, 'செக்ஷன்' குறைந்தால், அங்கு வேலை இழக்கும் ஆசிரியர்களை "சூப்பர்நியூமரரி" ஹேண்டாக வைத்துக்கொள்ளலாம். அதைப் போலவே, நம்முடைய அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாக ஆக்கினால், 10, 12 ஆண்டுகளுக்குப் பிறகு மாணவர்களின் எண்ணிக்கை பள்ளிகளிலே குறைந்துவிடும். அப்பொழுது நிரந்தரமாக்கப்பட்ட ஆசிரியர்கள் வேலை இழக்கக் கூடிய நிலைமை வரும். அப்பொழுது புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கும் பொழுது சட்டத்தை "ரிலாக்ஸ்" பண்ணி அப்படி வேலை இழந்தவர்களை மறுபடியும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இவை எல்லாவற்றிற்கும் தேவையான உருப்படியான ஒரு சட்டம் தேவை. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே காட்டாத்துறை. அருமனை: ஐரேனிபுரம் போன்ற இடங்களில் பள்ளிக்கூடங்கள் வந்துவிட்டதால், தனியார் பள்ளிகளிலே வேலை இழக்கும் நிலையிலே இருந்த ஆசிரியர்களை "சூப்பர்நியூமரி" ஹேண்ட்ஸாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, ஆணை பிறப்பிக்க வேண்டியிருக்கிறேன். மணவாளக்குறிச்சியிலே—இப்பொழுது இல்லை, முன்னால் இருந்த காங்கிரஸ் ஆட்சியிலே—அந்தப் பகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தை அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று கருதி, அடுத்த காம்பவுண்டிலே வேறு ஒரு பெயரைப் போட்டு ஒரு பள்ளியை

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

ஆரம்பித்துவிட்டார்கள். அதன் காரணமாக தனியார் பள்ளியிலே பணிபுரிந்த ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டது. அதை இப்பொழுது இருக்கும் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு போய், அவர்கள் பக்கத்திலே இருந்த அரசினர்ப்பள்ளியை, பெண்கள் பள்ளியாக மாற்றினார்கள். பிறகு அப்படி வேலை இழக்கும் தருவாயில் இருந்த ஆசிரியர்களுக்கு அங்கே வேலை கிடைத்தது. இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகள் இந்த ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியிலும் எப்பொழுதுமே நடைபெற்றதில்லை என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது போலவே பல இடங்களில் இந்த நிலைமைகள் வாராமல் ஆசிரியர்களைப் பாதுகாக்க ஒரு அடங்கல் சட்டம் கொண்டு வர வேண்டும். ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளிகளுக்கு மட்டுமல்ல, கல்லூரிவரை எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் ஏற்ற ஒரு அடங்கல் சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், எல்லாப்பள்ளிகளுக்கும் அரசே ஆசிரியர்களுக்கு வேண்டிய சம்பளம் கொடுக்கிறோம், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு "பில்டிங் கிராண்ட்" என்றும், பிறகு "மேட்சிங் கிராண்ட்" என்றும் கொடுக்கிறோம். எனவே, கடைசியில அரசாங்கமே அத்தனை கல்லூரிகளையும், பள்ளிகளையும் ஏற்று நடத்துவது தான் வருங்காலத்திலே நல்லது என்று தனியான எனது கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன். சில இடங்களிலே சில கல்வி நிறுவனத்தார் அரசாங்கத்தின் 'பில்டிங் கிராண்டை'ப் பெற்று, நல்ல கட்டிடங்களைக் கட்டிக் கொள்கிறார்கள். ஆனால், பல இடங்களிலே அப்படிக் கட்டப்படுவதில்லை. எங்களுடைய பகுதியிலே நாங்கள் ஆரம்பித்திருக்கும் அறிஞர் அண்ணா கல்லூரியில் இப்பொழுது பி.ஏ. இரண்டு வகுப்பினைக் கொண்டிருக்கிறது, பி.எஸ்.சி. யிலே இரண்டு வகுப்புகளைக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அங்கே நாங்கள் 3 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டிடங்களை அமைத்துக்கொண்டிருக்கிறோம். மேலும், மேலும் அங்கே கட்டிடங்கள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னும் அதற்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் செய்துவிட்டு சில ஆண்டுகளுக்குப் பிறகு நாங்களே அந்தக் கல்லூரியை அரசினர் கையிலே ஒப்படைக்கத் தயாராக இருக்கிறோம். எல்லா கல்லூரிகளும் அரசினர் கையிலே இருந்து அதாவது தேசியமயம் ஆக்கப்பட்டு ஒரே விதமான கல்வி புகுத்தப்பட வேண்டுமே ஒழிய, ஜாதியின் பெயராலே கல்வி நிறுவனங்களை நிறுவிக் கொண்டு, அப்படிக் கல்வி நிறுவனங்களை வைத்துக்கொள்ள இனிமேல் இந்தக் கால கட்டத்தில் அனுமதிக்கக் கூடாது என்பதைப்பற்றி இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அப்படி ஜாதியின் பெயராலே, மதத்தின் பெயராலே நடத்தப்படும் கல்லூரிகளிலே ஒரு ஜாதியினருக்குத் தான் இடம் தருகிறார்கள், ஒரு மதத்தைச் சார்ந்தவர்களுக்குத்தான் இடம் என்கிறார்கள். இப்படிப் பட்டசில பள்ளிகளிலே ஆசிரியர்கள் நியமனம் பெறுவது என்றால், ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் தான் பெறுகிறார்கள். எனவே, ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கக் கூடிய ஒரு கால கட்டத்திலே அதுவும் இந்தப் போர் நெருக்கடியிலே அந்த பேதங்களை எல்லாம் நாம் மறக்கக் கூடிய நிலையிலே இருக்கும்பொழுது. இந்த நெருக்கடியிலாவது ஜாதிப் பெயராலே, மதப் பெயராலே பள்ளிகள் இருக்கக் கூடாது என்ற நிலைமையினை இந்த அரசு ஏற்படுத்த முயல வேண்டும். ஜாதிப் பெயராலே, மதப் பெயராலே



[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

எந்தெந்தப் பள்ளிகள், கல்லூரிகள் நடைபெறுகின்றனவோ, அவைகளின் மானியத்தை அரசாங்கம் நிறுத்திவிடும் என்று சொன்னால் அவைகள் உடனே பெயர்களை மாற்றிக்கொள்ளும். ஒரு கல்லூரிக்குள்ளே நுழையும் போதே அது ஜாதிப்பெயராலே, மதத்தின் பெயராலே இருக்குமானால், வருங்கால சந்ததியினர் ஒன்றுபட்டு கல்விச் சட்டத்திலே ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு, கல்வி நிலையங்களின் பெயரால் ஜாதி சமயத்தை வளர்க்கும் நிலைமையை மாற்றும் வகையிலே கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் மானியம் வழங்க வேண்டும். இப்படி ஜாதிப் பெயரைச் சேர்த்துக்கொள்ளாத கல்வி நிலையங்களுக்குத்தான் மானியம் தரப்படும் என்ற விதி செய்யப்பட வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவிலே லுதரன் மிஷன் சார்பிலே நடைபெறும் பள்ளிகள் அரசாங்க கிராண்ட் வாங்குவதில்லை. தற்போது தான் அரசு விதிகளுக்குட்பட்டு கிராண்ட் வாங்குகிறார்கள். அரசாங்க கிராண்ட் வாங்க வேண்டுமாயின் சாதி சமய பேரால் இயங்கக் கூடாது என விதி வகுக்க வேண்டும். அப்படி யார், யார் மதப் பெயராலே நடத்த வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவர்களுக்கு எந்தவிதமான நிதி உதவியும் இந்த அரசு செய்யாது என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவது அவசியமானஒன்றாகும், உயர்ந்த ஒன்றாகும் என்று சொல்லிக் கொள்வேன். ஆகவே, இவைகளையெல்லாம் மனதில் கொண்டு இந்தச் சட்டத்திலே இவைகள் எல்லாம் சீரிய முறையிலே இடம் பெற்றுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கும் வகையிலே நல்ல ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு மட்டுமில்லாமல், நல்ல கல்வியை நாட்டு மக்களுக்குக் கொடுத்து உதவும் நிலைமையிலே ஒரு நல்ல சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, அமருகிறேன்.

* திரு. கே. அறிவழகன்: தலைவரவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற தனியார் தீர்மானத்தில் ஆசிரியர்கள் அடங்கல் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரவேண்டியதன் அவசியம், இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. இந்தக் கல்வித் துறையில் மிகச் சிறப்பான பணியை தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் நேரத்திலே கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் மிக நல்ல ஊதியம் பெறத்தக்க சூழ்நிலைகளை உருவாக்குகின்ற இந்த நேரத்திலே தனியார் நிறுவனத்தார் என்று பலர் இந்த நாட்டிலே இருந்து கொண்டு கல்விநிலையங்களை அறநிலையங்களாக நடத்தாமல் வணிக நிலையங்களாக நடத்துகின்ற நிலைமையினை மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் மிகச் சிறிய நிறுவனங்களாக கல்வித் துறையிலே இருக்குமானால், அதிலே இருக்கும் குறைபாடுகள் குறைவாக இருக்கும் என்று குறிப்பிடலாம். தனியார் நிறுவனம் மிகப் பெரிய அமைப்பாக இருக்கிறது என்று சொல்லப்படுமானால், அந்தப் பெரிய நிறுவனத்திலே இருக்கின்ற குறைகள், ஆசிரியர்கள் படுகின்ற அல்லல்கள் மிக எளிதாக வெளியே வருவதில்லை. அது எல்லாம் வெளியே வருவதற்கு மிக நீண்ட காலம் பிடிக்கின்றது. ஆகவே, கல்வித் துறையிலே மிகப் பெரும் நிறுவனத்திலே இருக்கின்றவர்கள் இந்த நாட்டில் கல்வித் துறையே தங்களால் தான் மிகச் சிறப்பாக இருக்கிறது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்படிக் கருதிக்கொண்டிருக்கின்ற தனியார்கள் கல்வித் துறையிலே எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. நாமது கல்வி அமைச்சர்

[7th December 1971

[திரு. கே. அறிவழகன்]

அவர்கள் சில நாட்களுக்கு முன்னுல் கூட சொல்லியிருக்கிறுர்கள், ஒவ்வொரு
புதிய கல்வி நிறுவனமும் கல்வித்துறையிலே இருக்கும் பிரச்சினைகளைத்
தீர்க்கின்ற முறையிலே மிகச் சிறப்பாக இயங்க வேண்டுமென்று குறிப்பிட்
டிருக்கிறுர்கள்.

தனியார் கல்வி நிறுவனத்தைப்பற்றிச் சிறப்பாகப் பேசுகிறுர்கள். இந்தக்
கல்வி நிறுவனங்கள் இவ்வளவு ஆண்டுகளாக இருந்தும் எந்தவிதமான
நன்மையையும் கல்வித் துறையிலே செய்துவிடவில்லை. மாணவர்களிடம்
ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தக் கூடிய முயற்சியிலே கூட அவர்
கள் இறங்கவில்லை; அப்படி இறங்கி வெற்றி பெறவும் இல்லை. இன்னும் சொல்லப்
போனுல், அந்த முயற்சியை தொடங்கிக் கூட வைக்கவில்லை. அவர்கள்
செய்வது எல்லாம் அரசாங்கத்தின் மான்யத்தைப் பெறுவதும, சிலர் நிறுவ
னத்தை நடத்திக் கொண்டு அதிலே ஆதிக்கம் செலுத்துவதற்கு வசதி இருக்
கிறது, அதன் மூலம் தங்களுடைய கருத்துக்களை அரசாங்கத்திடம் சொல்
வதற்கு ஒரு வசதி இருக்கிறது என்பதுதான். எனவே, தங்களால் செய்யக்
கூடிய சில பல காரியங்களைச் செய்து கொண்டு, அதிலிருந்து இலாபம் பெற
முடிகிறது என்பதற்காக இவைகளை நடத்துகிறுர்களே தவிர, பொது நன்மைக்
காக, கல்வித் துறையின் வளர்ச்சிக்காக, நாட்டு மக்களின் சிந்தனையோட்
டத்தின் வளர்ச்சிக்காக, பகுத்தறிவு வளர்ச்சிக்காக நம்முடைய கல்வி
நிலையங்கள் குறிப்பாக தனியார் கல்வி நிலையங்கள் எந்த முயற்சியும் எடுத்துக்
கொண்டதாகத் தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அப்படி
நடத்தப்படும் ஒரு தனியார் நிறுவனத்தின் பெயரைச் சொல்ல முடியுமா?

திரு. கே. அறிவழகன்: நம்முடைய நாட்டுக் கல்வி நிலையங்களிலே மாற்றம்
ஏற்படாமல் போவதற்குக் காரணம் தனியார் கல்லூரிகளின் ஆதிக்கம் தான்.
காரணம் இருக்கிறது. பல்கலைக் கழகத்தின் செனட் ஆனுலும், சிண்டிகேட்
ஆனுலும் அதிலே அமர்ந் திருப்பவர்கள் தனியார் கல்லூரியை நடத்திக்கொண்
டிருப்பவர்கள். நான் வேண்டுமானுல் இவ்வாறுள்ள சில நிறுவனங்களின்
பெயரைக் கூற முடியும். தனியார் கல்வி நிலையங்களை நடத்திக்கொண்டிருப்ப
வர்கள் தான் சிண்டிகேட்டிலே உறுப்பினர்களாக இருக்கிறுர்களே தவிர,
அரசாங்கத்தின் 'நாமிநேஷனிலே' உறுப்பினர்கள்தான் இருக்கிறுர்கள்.
இப்போது இருக்கின்ற சென்னைப் பல்கலைக் கழக சட்டத்தின் படி கல்வி
இலாகாவின் டைரக்டர் கூட எக்ஸ்-அபிசியோ உறுப்பினராக இருக்கிறுர். இது
எல்லாம் தனியார் நிறுவனங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நிலைமையிலே
தான் இருக்கிறது. இதைப்பற்றி எல்லாம் கூட முன்னுள் பல்கலைக் கழகத்
துணை வேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் பல முறை செனட்டிலே
யும், சிண்டி கேட்டிலேயும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்திலேயும் குறிப்

"There are college professors and tutors who are terminated
from service without any ceremony, without any sermon".

எந்த விதமான பிரச்னையையும் எடுத்து வைக்காமல் காரணகாரியங்களைக்
6-00 p.m. காட்டாமல் ஆசிரியர்களைப் பல்வேறு கல்லூரிகளில் நீக்கி விடுகிறுர்கள். இந்தக்
கொடுமை நடக்கிறது என்று சொன்னுர்கள். ஒரு ஆசிரியை, மால்கம் ஆதி
சேஷய்யா அவர்களின் சகோதரியாரே தவருக இப்படி ஒரு கல்லூரியிலிருந்து
நீக்கப்பட்டார்கள். சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் பலமுறை முயற்சி
செய்து, டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் மிகுந்த அக்கறையோடு பல



7th December 1971]

[திரு. கே. அறிவழகன்]

முறை முயற்சி செய்தார்கள் என்றுலும் அவர்கள் திருப்பி எடுத்துக்கொள்ளப்
படவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இன்றைக்கும் இருந்து வருகின்றன.
நமது கல்விச் சட்டத்தின் கீழ் இருக்கக் கூடிய தனியார் கல்லூரி நிர்வாகமாக
இருந்தாலும், பள்ளி நிர்வாகமாக இருந்தாலும், ஆசிரியர்களைக் காரணம்
காட்டாமல் வேலையிலிருந்து நீக்கி விடுகிற நிலைமைகள் இருந்துகொண்டிருக்
கின்றன. அவர்களின் வேலைக்குப் பாதுகாப்பு இல்லாமல், அவர்களுடைய
வாழ்க்கை வசதிக்குத் தேவையான பாதுகாப்புகள் இல்லாத முறையிலேயே
நம்முடைய தனியார் நிறுவனங்கள் இயங்கிக்கொண்டு வருகின்றன. மாண்பு
மிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் சுப்ரிம் கோர்ட்டிலே 1971-ம் ஆண்டிலே
தரப்பட்ட தீர்ப்பைப் படித்துக் காட்டினுர்கள். நம்முடைய நாட்டு அரசாங்க
அதிகாரிகள், கல்வித் துறை அதிகாரிகளுக்கு இருக்கக் கூடிய அதிகாரங்கள்
போதுமானதாக இல்லாத காரணத்தால், மிக விரைவிலே விரிவான சட்டங்கள்
இயற்றப்பட்டு நம்முடைய அதிகாரிகளின் கை பலப்படுத்தப்பட வேண்டும்
என்று சுப்ரீம் கோர்ட் கூறியிருக்கிறது. மாணபுமிகு உறுப்பினர் திரு ராஜா
அய்யர் அவர்கள் இதைச் சுட்டிக் காட்டினுர்கள். தனியார் கல்லூரிகளிலும்
பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காக ஒரு தனிச் சட்டம்
இயற்றப்பட வேண்டும். ஆசிரியர்கள் எந்தவிதமான காரணமும் இன்றி வேலை
நீக்கம் செய்யப்படுகிறுர்கள். அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள
மறுக்கிறுர்கள். எனவே தனியார் கல்லூரிகளையும், பள்ளிகளையும் சேர்ந்த நிர்
வாகிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும்.
தனியார் நிறுவனங்கள் மைனுரிடி கம்யூனிடிகளுக்காக நடத்தப்படுகின்றன.
தனியார் நிறுவனங்கள் மைனுரிடி பிரச்னைகளுக்காக இருக்கின்றன. அங்கு
அவர்களுடைய மத, மொழி, போதனை அளிப்பதற்காக நடத்தப்படுகின்றன
என்றுல் மைனுரிடி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். எங்கே மைனுரிடிகளின்
உரிமைகள் எழுகிறது என்றுல், பள்ளிக் கட்டடம் ஆசிரியர்களை மாணவர்களை
அடக்க ஆதிக்கம் செலுத்த தான் பயன்படுகிறது. கல்லூரிகளில் விஞ்ஞானம்,
பி.எஸ்.ஸி. போன்ற அறிவியல் துறைகளை சொல்லித்தரும் கல்வி நிலையங்களை
நடத்துவதில் மைனுரிடி உரிமை எங்கே வருகிறது என்று தெரியவில்லை. இது
பொதுவான பிரச்னை எனவே இந்த நிலையில் மைனுரிடி நலன்களுக்காகத்
தனியார் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன என்று சொல்வதிலே பொருளில்லை.
இப்படிப்பட்ட நிலையில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்
களின் பாதுகாப்பிற்காக அரசாங்கம் ஒரு விரிவான சட்டம் இயற்ற வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

* திரு. எம். அய்யாசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய இந்தத்
தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டி
அமைய விரும்புகிறேன். கல்வி நிறுவனங்களில், அரசாங்க மானியம் பெறும்
தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் எந்த அளவிற்குப்
பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறுர்கள் என்பதை விளக்குவதற்காக மதுரையில்
உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியின் நிலையைப்பற்றிக் கல்வியமைச்சரின் கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே இது பற்றி, மதுரை
சோமசுந்தரபுரம் காலனியில் நடைபெற்று வந்த ஆரம்பப் பள்ளிபற்றி, அது
எவ்வளவு மோசமான நிலையில் நடந்துகொண்டிருந்தது என்பதைப் பற்றி இந்த
மன்றத்திலே எடுத்துக் கூறி, அது சம்பந்தமாக, அந்த ஆசிரியர்கள் கொடுத்த

[திரு. எம். அய்யாசாமி]

ஒரு மகஜரையும் மாண்புமிகு கல்வியமைச்சரிடத்திலே கொடுத்தேன். அந்த மகஜர் மீது மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுத்து இன்றைக்கு அந்தப் பள்ளி மூடப்பட்டிருக்கிறது. இதற்காக வழங்கப்பட்ட அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறது. அதற்காக நான் கல்வியமைச்சரைப் பாராட்டுகிறேன். அந்தப் பள்ளிக் கூடம் எப்படி நடந்து கொண்டிருந்தது என்று சொன்னால் அந்த இலாகாவில் இருக்கக் கூடியவர்கள் எவ்வளவோ. . . .

மிஸ்டர் சேர்மன்: அது தான் போய்விட்டதே.

திரு. எம். அய்யாசாமி: அது சம்பந்தப்பட்ட விஷயம் இன்னும் இருக் கிறது. அந்த நிறுவனத்திற்கு என்று இருக்கக் கூடிய ஒருவர். ஆனால் அதைக் கவனித்து வந்தவர் அவருடைய மைத்துனராவார். அவர் செகிரியூ இன்ஸ் பெக்டராக வேலை பார்த்துக்கொண்டு, 4, 5 ஆண்டுகளாக அந்தப் பள்ளிக் கூடத்தை நிர்வகித்துக்கொண்டிருந்தார். அங்கே வேலைபார்த்த ஆசிரியர் களுக்கெல்லாம் முறையாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. சம்பளம் கொடுக் கப்பட வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினால், உடனே அவர்கள் வேலை யிலிருந்து நீக்கப்படுகிறார்கள். எத்தனையோ தடவை கல்வி இலாகாவிற்குப் புகார் செய்யப்பட்டு, அவர்கள் கடுமையான உத்திரவுகளைப் போட்டும் கூட, அவர்கள் தங்கள் இஷ்டம்போல் நடந்து வந்த காரணத்தினால் இந்த நிறுவனத் திற்கு வழங்கப்பட்ட அனுமதி இன்றைக்கு ரத்துச் செய்யப்பட்டு விட்டது. ரத்துச் செய்யப்பட்டதோடு இந்தப் பள்ளியில் படித்த பிள்ளைகளைப் பக்கத்தில் உள்ள பள்ளியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உத்திரவு போடப் பட்டது. அந்தப் பள்ளிகள் இந்தப் பள்ளியில் படித்த பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு 'ரிகார்ட் ஷீட்' தேவை என்று சொன்னபோது, இந்தப் பள்ளி நிர்வாகம் அவர்களுக்கு 'ரிகார்ட் ஷீட்' தர மறுத்து விட்டது. எனவே அந்தப் பிள்ளைகளை 'ரிகார்ட் ஷீட்' இல்லாமலேயே சேர்த்துக்கொள்ளலாம் என்று இலாகா உத்திரவு போட்டது. இன்றைக்கு அந்தப் பள்ளியை மாநகராட்சி எடுத்து நடத்தலாம் என்று கல்வி இலாகா சொல்லி, அது மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே இந்தப்பள்ளியில் வேலை செய்த ஆசிரியர் களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கல்வி இலாகா தெரிவித்தி ருக்கிறது. ஆனால் இந்தப் பள்ளியில் ஏற்கெனவே வேலை செய்த ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல், மாநகராட்சியில் மற்றப் பள்ளிகளில் வேலை செய்து கொண்டிருந்த ஆசிரியர்கள்தான் இந்தப் பள்ளியில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அந்தப் பள்ளியில் ஏற்கெனவே வேலை செய்த ஆசிரியர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதனால் அவர்கள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏற் கெனவே தனியார் நிறுவனமாக இருந்தபோது பல ஆண்டுகள் சம்பளம் இல்லாமல் வேலை பார்த்தார்கள். இப்பொழுது மாநகராட்சிப் பள்ளியாக மாறிய பிறகும், அவர்களுக்கு வேலையோ, சம்பளமோ இல்லாத நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எந்த அளவிற்கு ஆசிரியர்கள் பாது காப்பற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதற்காக இதைக் குறிப்பிட விரும்பு கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. ஆகவே ஆசிரியர்களுக்குப் பாது



[திரு. எம். அய்யாசாமி]

காப்பு அளிக்க இது போன்ற ஒரு சட்டம் செய்வதை மனமார வரவேற்கிறேன் என்று கூறி விரைவில் இதை ஒரு சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

* தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்): மாண்புமிகு அவைத் தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் தனியார் பள்ளிகளில் வேலை பார்க்கக் கூடிய ஆசிரியர்களின் பாதுகாப்பு, வேலைக்கு உத்திரவாதம் ஆகியவை பற்றி ஒரு விரிவான சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு கல்வி யமைச்சரவர்கள் சட்டம் செய்வதைக் கொஞ்சம் முன் பின்னாகச் செய்தாலும், கல்வி இயக்குநர் அவர்களின் வேலைகள் பல்கிப் பெருகி வளர்ந்திருக்கின்ற காரணத்தால், வழக்குகளை மாநிலக் கல்வி இயக்குநரே விசாரித்து உத்திரவு போடுவது என்பது உள்ளபடியே விரைவாக நடக்கக் கூடியதாக இல்லை. எனவே உடனடி அவசரத் தேவையை உணர்ந்து அந்த நடவடிக்கைகளை யெல்லாம் துரிதப்படுத்துவதற்கு ஒரு டிரிப்யூனலை உடனடியாக அமைத்து, வேலையிழந்திருக்கிற ஆசிரியர்கள், அல்லது அநீதியாகத் தண்டிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கு நியாயம் வழங்குதல் நல்லது. எனவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6-10 p.m.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் இங்கே ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் விதி முறைகளைச் செம்மைப்படுத்த சட்டவரைவு கொண்டு வரவேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மன்றத்தினைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாகப் பல கருத் துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே கல்வி நிலையங்களெல்லாம் சீராக அமைக்கப்பட்டு, எல்லாவிதமான கல்வி நிலையங்களும் ஒரே விதமாக விதி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் சென்ற 4 ஆண்டுக் காலமாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதை மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். மாண்புமிகு உறுப் பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பல்வேறு துறைகளிலே பல்வேறு வகையாகப் பள்ளிகளெல்லாம் பிரிந்திருக்கிற காரணத்தினால், ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு வகையில் விதிமுறைகளை வகுத்துக்கொண்டு நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு அரசாங்கத்தினுடைய பொறுப்பு வளர்ந்து வருகிறது. ஒரு 20, 30 ஆண்டு காலத்திற்கு முன்பு அரசுக்கும் கல்விக்கும் இருந்த தொடர்பினுடைய அளவை விட இப்போது அரசு கல்விப் பொறுப்புகளை ஏற்று கடமைகளையாற்றுகிற தன் மைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக்கொண்டு வருகின்றன. ஆனாலும் அதைச் சீர்ப்படுத்துகிற முயற்சியிலே நாம் ஈடுபட்டு வருகிறோம். ஆசிரியர் களுக்குப் பாதுகாப்பில்லை என்பதற்கான விளக்கங்களை மன்ற உறுப்பினர்கள் சில பல எடுத்துக் காட்டுகளின் மூலமாகக் கூறினார்கள். அவைகள் ஓரளவிற்கு உண்மைதான். சில தனியார் பள்ளிகள் ஒழுங்காக நடைபெற்றாலும், பல பள்ளிகளில் ஒருவரை வெளியேற்றுவது என்பது, தள்ளுவது என்பது, வேலையை விட்டு நீக்குவது என்பது அவர்களுக்கு எளிதான ஒன்றாக இருக் கிறது. நீக்கப்பட்டவர் வாதிட்டு மறுபடியும் நியாயமான அடிப்படையில் இடம் பெறுவது என்பது கடினமான ஒன்றாக இருக்கிறது. கடைசி வரையில்

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

வாரிட்டு, குற்றம் இருக்கக் கூடிய சூழ்நிலையில் அவர்கள் வேலையை இழந்து விடும்படியான சூழ்நிலை இருக்கிறது. நியாயமான அடிப்படையில் நீதி பெற வேண்டுமானால், பல நீதி மன்றங்களின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கிய பிறகு உரிமையைப் பெற வேண்டியிருக்கிறது. இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. விதி முறைகளை மீறி நடக்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத அளவிற்குச் சட்ட திட்டங்களும் விதி முறைகளும் இருக்கின்றன என்பது, இந்த மன்றத்தில் பல தடவை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கங்கள் தரும்போது, கூறப்பட்டிருக்கின்றது. இப்போது நம்முடைய சட்டத்தின் அடிப்படையில் பார்த்தால் ஒன்று அவர்களுக்குக் கொடுத்திருக்கிற அனுமதியை ரத்து செய்யலாம், அல்லது அவர்களுக்கு வழங்குகிற மான்யத் தொகையை ஓரளவிற்கு செம்மைப்படுத்தக்கூடிய அளவிற்கு திருத்த வேண்டுமென்ற கருத்து இந்த மன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட காரணத்தினால், டாக்டர் பால் தலைமையில் கல்வித் துறையில் அனுபவம் கொண்ட ஆசிரியப் பெருமக்கள், ஆசிரியர்கள் துறையில் பணியாற்றுகிறவர்கள், ஆசிரியர்கள் நலன்களில் அக்கறை கொண்டவர்கள், கல்வி சீர் பெற வேண்டுமென்று எண்ணுபவர்கள், கல்விச்சாலைகள் செம்மையாக நடைபெற வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, அவர்கள் தமிழகத்தினுடைய பல்வேறு இடங்களுக்குச் சென்று கருத்துக்களை அறிந்து, எந்தெந்த வகையிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். எந்த வகையிலே இந்தச் சட்டம் செய்யவேண்டுமென்பதையும் பரிசீலனை செய்திருக்கிறார்கள்

" A Public Education Act covering all aspects of Education may be enacted by Government so that suitable rules providing for all the requirements arising in the light of the recommendations made by us can be framed.

The rules relating to Managing Bodies, conditions of recognition, appointment of teachers, their service conditions, should be statutory and other rules relating to aid and code of conduct of teachers may be non-statutory "

என்ற சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்கள் கூறிய பரிந்துரைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து சட்ட வடிவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு முடிவு செய்ய இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போன்று, நேற்று சட்ட மன்றப் பேரவையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இதை விரைவிலே சட்டமாகக் கொண்டு வருவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்டத்துறையால் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சட்டத் துறையிலே இந்த மசோதா அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை சட்டப்பிரிவினர்தான் உருவாக்க வேண்டுமென்று தெரிவித்து, சட்டம் சம்பந்தமான சிக்கல்கள் இல்லாதபடி செய்ய வேண்டும் என்று கல்வித் துறைச் செயலாளரை விளக்கங்கள் கேட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இந்தச் சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவருடைய அனுமதி பெற்றுவர வேண்டுமென்று அரசியல் நிர்ணயச் சட்ட அடிப்படையில் இருக்கிறது என்று சட்டத் துறை கருத்து தெரிவித்திருக்கிறது. ஆக, இந்தியக்



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

குடியரசுத் தலைவருடைய அனுமதியைப் பெற்று இந்தச் சட்டத்தை சட்ட மன்றத்தில் கொண்டுவர வேண்டும். ஆகவேதான், அடுத்த தொடரில் கட்டாயம் கொண்டு வரவேண்டுமென்று ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்குள்ளாக குடியரசுத் தலைவர் அனுமதி பெற்று அடுத்த தொடர் கூட்டத்தில் கொண்டுவந்து பிரச்னைகளையெல்லாம் ஆராய்ந்து, அதன் மேல் பல சிறிய பரிந்துரைகளைச் செய்வதற்கு உறுப்பினர்களுக்கெல்லாம் நல்ல வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன். மேலும் செம்மைப்படுத்துவதன் மூலமாக ஆசிரியர்கள் பணிகள் காப்பாற்றப்பட சட்ட வரைவு கொண்டு வர வேண்டியது முக்கிய நோக்கமாக இருக்கிறது. மேலும் பல்வேறு முறைகளில் இருப்பவர்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்ற தன்மையைப் பெற்றிருக்கிறோம். ஜாதி மதத்தின் அடிப்படையிலே ஏற்படுவதன் காரணமாக என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை திரு. சங்காலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதற்கு நாளுக்கு நாள் மதிப்பில்லாத நிலைமை வந்துகொண்டிருக்கிறது. 50 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இருந்த மத வெறி உணர்வும் ஜாதி வெறி உணர்வும் இப்போது பள்ளிக்கூடங்களில் அதிகமாகத் தலை காட்டுகிற சூழ்நிலைகள் வரவில்லை. அப்படிக் கொஞ்சநஞ்சமிருந்தால் பாதுகாப்பளிக்கின்ற தன்மையில் அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, சிறுபான்மையினர்களின் நலனுக்குப் பாதுகாப்பு தந்திருக்கிற காரணத்தினால், கேள்விகள் கேட்க முடியாத அளவிற்கு சுப்ரீம் கோர்ட் வரையிலும் போய் ரிட் போட்டு நீதி பெறக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்த வரையில், விதி முறைகளைக் கையாள வேண்டும். அரசாங்க ஆசிரியர் பயிற்சி, தனியார் பயிற்சிப் பள்ளிகளின் விதி முறைகள் வெவ்வேறாக இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் சட்டப் பாதுகாப்பின்கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். என்றாலும் கூட இருப்பவைகளை ஒருமுறையின் கீழ் கொண்டு வருவதற்கு எந்த நிலைமைகளைப் பின்பற்றலாம் என்று பரிசீலனை செய்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் இந்த மன்றத்தில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. முத்துசாமி அவர்களும், திரு. அறிவழகன் அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். மற்றும் இந்தத் துறையில் அனுபவம் பெற்றவர்கள் இருந்து பரிசீலனை செய்திருக்கிறார்கள். கல்வித் துறைச் செயலாளர், அதிகாரிகள் உட்கார்ந்து ஆராய்ந்து இது ஒரு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு, சட்டத் துறையிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் திருத்தங்கள் செய்ததற்குப் பிறகு இதைச் சட்டமாக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கத்திற்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் நல்லது. ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல. நிர்வாகம் செய்கிற எங்களுக்கு மிக நல்லது. வேறு எந்தத் துறையையும் விட அதிகமான குழப்பங்கள் உள்ள துறை கல்வித் துறைதான் என்பதை பல்வேறு துறைகளையும் நிர்வகித்துப் பார்த்திருக்கிற என்னால் உணர முடிகிறது. ஏனென்றால் அவ்வளவு சிக்கல்கள், அவ்வளவு வேறுபட்ட நிலைமைகள் இருக்கின்றன. தன்மைகள் பள்ளிக்குப் பள்ளி வித்தியாசப்படுகின்றன. ஒரு பக்கம் தனியார் பள்ளி, மற்றொரு பக்கம் டிஸ்டிரிக்ட் போர்டு பள்ளி, இன்னொரு பக்கம் அரசாங்க பள்ளி, இப்படி இருக்கின்றன. தனியார் பள்ளிகளை ஆரம்பித்தவர்கள் தங்களுடைய 'வில்' லிலே விதிகளை ஏற்படுத்திச் செல்கிறார்கள். இந்தப் பள்ளி இன்ன அடிப்படையில் இதற்காக இருக்க

[7th December 1971

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

இந்தச் சொத்துக்களை வழங்குகிறோம், இப்படி நிர்வகிக்க வேண்டும், இன்னார் நிர்வாகியாக இருக்க வேண்டும், இப்படி நடத்த வேண்டுமென்று சொத்தை எழுதி வைத்து, விதிகளையும் வகுத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திற்குப் போனால் வழக்கு மன்றம், ஏற்படுத்தியவர்களின் நோக்கப்படிதான் நடக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. இதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. கல்வித் துறையை நடத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் ஆசிரியர்கள், பாடங்கள், பிள்ளைகள் எல்லாம் எந்த இடத்திலிருந்தாலும், விதிமுறைகள் ஒரே மாதிரி இருக்க வேண்டும். யார் நடத்தினாலும் சரி, இந்தச் சட்டத்திற்கு உட்பட வேண்டும். சட்ட வடிவு கொடுக்க அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு ஆயத்தமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் கூறிய கருத்துக்களை அரசு கொள்கையளவிலே ஏற்றுக்கொள்கிற காரணத்தினால், சட்டவடிவு செய்ய முயற்சி செய்துகொண்டிருக்கிறது. பெரும்பாலும் பொதுவாகச் சொல்லியிருந்தாலும், பள்ளிகளைப் பொறுத்துத்தான் இதைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக கல்லூரிகளைப் பொறுத்த வரை இது தனியார் துறையைக் கூட சேர்ந்ததாக அமையும். இதற்குச் சட்டங்கள் இயற்ற வேண்டுமானால் இதற்குப் பல்கலைக்கழகங்கள் சிபாரிசு செய்யுமானால், அந்த அடிப்படையில் பல்கலைக்கழகச் சட்டங்களைத் திருத்தி இந்தச் சட்ட மன்றத்தில் கொண்டுவந்து, திருத்தச் சட்டங்களோடு அவற்றை நிறைவேற்ற முடியும். இப்பொழுது நாம் கொண்டுவர இருக்கிற திருத்தச் சட்டம் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும், பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும் தனியார்
6-20 p.m. துறையில் நடத்துகின்றவர்களைக் கட்டுப்படுத்துகிற முறையில்தான் அமையும். கல்லூரிகளைப்பற்றி இருக்குமேயானால், இந்த அடிப்படையிலே பல்கலைக்கழகச் சட்டத் திருத்தத்தையும் திருத்தித்தர வேண்டும் என்று பல்கலைக்கழகத்தால் சிபாரிசு செய்யப்பட்டு. அவர்களும் கேட்பார்களானால், அதையும் செய்யத் தயாராக இருக்கிறோம். இதுமாதிரிச் சங்கடங்கள் அங்கேயும் இருக்கின்றன. இங்கே பள்ளிகளைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோன்றே, அங்கேயும் அனுமதியை ரத்து செய்யலாம் அல்லது மானியத்தை நிறுத்தலாம். ஆகவே இதே அடிப்படையில் பல்கலைக் கழகச் சட்டமும் திருத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இந்தப் பள்ளிகளுக்கான சட்டம் வந்து நிறைவேறுகிறபோது, அவர்களுக்கும் இந்தக் கருத்தைத் தெரிவித்து, அவர்களுடைய சம்மதத்தையும் பெற்று, அந்தச் சட்டத்தையும் முறைப்படி திருத்தலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் எடுத்துக்கூறியிருக்கிற தீர்மானத்தின் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தாலும், சட்ட வடிவம் விரைவில் வர இருப்பதாலும் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவேண்டியதில்லை என்று கூறி அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சட்டமாக வரும் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

THIRU M. RAJAH IYER : Sir, as I was listening to the Hon. the Minister for Education, I was under the impression that the Hon. Minister was going to accept the resolution. But the last sentence does not fit in with the rest of his speech. However, in



7th December 1971]

[Thiru M. Rajah Iyer]

view of his statement that such a bill giving statutory protection is already there on the anvil and with due deference to the Hon. Minister's request, I beg leave of the House to withdraw my resolution.

MR. CHAIRMAN : Does the hon. Member have the leave of the House to withdraw the Resolution ? 6-20 p.m.

The Resolution was, by leave, withdrawn.

(2) Working of Sub-ordinate Judiciary.

THIRU D. SANTOSHAM : Sir, I move—

" That this House recommends to the Government to constitute a Committee to examine the frame-work organisational set-up and working of the Subordinate Judiciary in Tamil Nadu and suggest improvements to promote efficiency, economy, contentment and integrity ".

THIRU G. SWAMINATHAN : I second it.

MR. CHAIRMAN : Resolution moved—

" That this House recommends to the Government to constitute a Committee to examine the frame-work organisational set-up and working of the Subordinate Judiciary in Tamil Nadu and suggest improvements to promote efficiency, economy, contentment and integrity ".

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, as I rise to move this Resolution, I am quite conscious of the fact that in the present state of emergency, when the dark clouds of war have cast their deadly shadow on our national life, all other issues must recede to the background and pale into insignificance. Nonetheless, since I feel that proper administration of justice is inevitable for the good government of a country even in times of war, I hope that the proposal that I make will receive the due attention and careful consideration of the Government, especially from our Hon. the Minister for Law.

At the outset, I would like to state that I know that my resolution has not got that wide and deep appeal and interest which the resolution that was just now moved by the hon. Member Thiru Rajah Iyer had. This is more a technical matter which has a limited appeal to the few persons engaged in the legal profession and that too, on the criminal side. Nevertheless, I would like to request the Hon. the Minister for Law not to mistake this lack of interest for want of support, because whenever I explained the purpose and content of my proposal to anybody, he has always expressed support for the proposal. Now. I shall proceed to state the proposal and the reasons behind it.

It has been said that the Judiciary should be like Caeser's wife, absolutely above suspicion. In a democratic country, in addition to this,.........

[7th December 1971

MR. CHAIRMAN : Some people have got suspicion. Therefore, they are going to the Supreme Court. (Laughter.)

THIRU D. SANTOSHAM : In a democratic country, in addition to this, it must also be strong and independent, besides being efficient and impartial. It is to secure this end that I make my proposal. In our State of Tamil Nadu, we have long ago realised the importance of separating the Judiciary from the Executive at all levels, even at the lowest level. I think that it was in 1946 that the 'Magistracy' was also separated from the Executive. During these 25 years when we have tried to implement this scheme of separating the Magistracy from the executive functions which the Magistrates were formerly discharging, we have encountered certain defects and difficulties in the functioning of the scheme and it is to rectify these defects and difficulties that I formulate my proposal.

Sir, in this context, I would like to point out that our sister State of Andhra Pradesh has practically stolen a march over Tamil Nadu. When Andhra Pradesh formed part of the composite State of Madras and when they left us to become a separate State, they took with them the framework of the subordinate judiciary as it existed then in the composite Madras State and as it exists even today in Tamil Nadu. But since then, they have effected one important, substantial change which, I consider, has been a substantial improvement on our present framework and I consider that it has rendered their organisational set-up much more rational. They have abolished the cadre of Sub-Magistrates and I Class Magistrates and instead, they have brought existence, a cadre of Munsif-Magistrates as the lowest rung in the ladder of judicial service.

Let me trace the history as to how the cadre of Sub-Magistrates and Sub-Divisional Magistrates came into being. In 1898, when the Criminal Procedure Code was first introduced in our country, the alien Government deliberately desired to concentrate the magisterial powers in the hands of the Executive, so that the magisterial powers may be readily available to them in the collection of revenue, particularly land revenue, which was their main source of income in those days. In those days, the Deputy Tahsildars and Tahsildars were mere promotees from the rank of clerks, but still they had to be vested with magisterial powers so that they might have the force of law behind them when they went for collection work. Therefore, they had to be very careful investing them with powers. A mere Tahsildar or a Deputy Tahsildar might have only the educational qualification of S.S.L.C. and he had no other technical training or knowledge of law except that he gained by passing a few departmental tests and that too with the aid of some books.



[7th December 1971

[Thiru D. Santosham]

So, they first vested them with third-class powers which gave them power to send a person to jail for two months or so. Then, after a period of six months, they vested them with second-class powers which gave them power to send a man to jail for six months. Then, if they prove to be particularly efficient, then they vested them with the I class powers which gave them the right to send a person to jail for two years. Now after the introduction of the separation of the Judiciary in 1946, all our Magistrates are recruited from the Bar. All of them are Law Graduates and that too, the Law Graduates should have put in a service of more than 3 years, that is, active practice of more than 3 years at the Bar. Not merely that. After they are recruited, they are given a long and substantial training. They are started with training and even in the Police Station, they have to serve for some time. Then they are made to sit with the District Magistrate and then they are made to sit with the District Judge and after giving all this training, they are given practical training so that under the tutelage of the District Magistrate and the District Judge, they should try a few cases by way of experiment and then after gaining some knowledge and experience, they are given practical posting as a Sub-Magistrate. When all this training is there with the basic qualification which is nothing short of a Law degree with three years of experience, that is, actual practice at the Bar, why should we make it necessary that they should be vested only with III Class powers at the beginning and then given the II Class powers and then given the I Class powers, ? Of course that practice was necessary, when we recruited S.S.L.C. promotees who became Tahsildars but now that reason cannot be advanced because those days are gone. I submit that when we recruit these Magistrates from among Law Graduates with active practice of more than 3 years at the Bar, give all this training and then place them in charge of a taluk, an entire taluk with only II Class powers, over the same taluk, another I Class Magistrate exercises his powers and then again the District Munsif also exercises civil jurisdiction over that taluk. So three persons are exercising jurisdiction over the same place with more or less overlapping jurisdiction. This I consider to be wasteful and practically irrational. This reminds me of Newton's folly. The Great Scientist Newton, made a cage for a cat and a kitten. Instead of making only one entrance, he put two holes—one for the bigger cat and another for the small kitten to enter—as though the kittens could not enter by the same bigger entrance. Like that, the I Class Magistrates as well as II Class Magistrates exercise overlapping jurisdiction over the same area. Apart from this, this has another evil effect. These Sub-Magistrates, Law Graduates, who are recruited have no promotional avenues. At the most, they can only hope to become Additional I Class Magistrates. Beyond that, if they want to

6-30 p.m.

[7th December 1971

[Thiru D. Santosham]

become District Munsifs or go higher, they have to get selected by the Public Service Commission as District Munsif just as any other Lawyer who wants to become a District Munsif. When there is no promotional avenue, there are two evil effects. First, at the stage of recruitment, really bright and brilliant young men are not recruited and are not attracted to these posts. Only second and third rate practising lawyers come forward to become Magistrates. I think that the consequences of only third rate persons becoming Magistrates and taking the responsibility for the dispensation of justice are too obvious for me to labour about at this stage. There is also another and even greater evil that arises out of this. When a Magistrate finds that there is no more scope for promotion especially when he reaches the age of 45 when he becomes no more eligible for open recruitment as a District Munsif and when he has nothing more to look forward to in the official career, what happens? After that stage, he becomes a prey to the disappointment, despair and frustration and many of these people fall a prey to temptations and become corrupt. I am very sorry to say this. This is a fact which I can vouchsafe for from my active practice before some of these Courts. I know it is a fact but there are some very good Officers also who because of their strength of character are able to resist this temptation but even they because of the subconscious frustration in their minds have become peevish, irritable temperamentally and unbalanced. When the mental make up of a Magistrate who has to hold the balance between the parties becomes so unbalanced, I can only say it is a very unfortunate situation for all concerned.

Secondly, if we abolish the cadre of Sub-Magistrate and I Class Magistrates and bring into existence, onl one cadre of Munsif-Magistrates as it exists in Andhra Pradesh, I expect several good results will follow. First and foremost I think, the best talent, the cream of the intellectuals at the Bar will be attracted to Judicial Service and that would definitely improve the efficiency in the administration of justice. Secondly, to the end of their career, because various promotional avenues will be open to them, they will be eligible to become even High Court Judges, if they show sufficient promise and if their record is unblemished. If they have something to look forward to, to the end of their career, I am sure they will continue to give of their very best. I have heard it said that this may involve some more money for the State. I think this is a fallacy. On the other hand, I definitely feel that this would result in economy. Now Sir, as I was saying just now, over the same area in the same taluk, a II Class Magistrate, a I Class Magistrate, and a District Munsif—all three of them—are exercising jurisdiction. On the other hand, all these three can be substituted by one single Munsif-



[7th December 1971

[Thiru D. Santosham]

Magistrate together with one Bench consisting of Honorary Magistrates. I think in our State at present—I am speaking subject to correction because I am not very sure about the figures which are very often varying...there are about 70 to 80 District Munsifs, about 50 to 60 I Class Magistrates and about 120 Sub-Magistrates—in all roughly 250 to 270 of these officers. On the other hand, I am very confident that if the suggestion that I make is accepted, in all 150 Munsif-Magistrates will be able to do the entire work. I mean one Munsif-Magistrate for each taluk together with a bench or Honorary Magistrates, and some more District Munsifs in big Cities and Municipal Towns will be able to do the entire work. This will also have another good consequence and that will be the benefit of decentralisation. Justice will be brought to the doors of the litigant public. I shall give one example. Thirumangalam is a taluk and Usilampatti is a newly formed taluk by its side. In Thirumangalam a Sub-Magistrate is exercising jurisdiction both over Thirumangalam and Usilampatti taluks. There is also a District Munsif at Thirumangalam exercising jurisdiction over both these taluks. There is a I Class Magistrate at Usilampatti exercising jurisdiction over both these taluks. If the suggestion that I make is accepted, then there could be one Munsif-Magistrate at Thirumangalam and one Munsif-Magistrate at Usilampatti. Now a person at Usilampatti who has a II Class case to answer has to go from Usilampatti to Thirumangalam and travel about 40 miles. So also a man in Thirumangalam taluk who has to answer a I Class charge has to travel a distance of over 40 miles. On the other hand, if my suggestion is accepted, where a person is having a II Class or a III Class charge to answer or is a person having a Civil Suit, he will not have to travel more than 15 miles or so because all the Courts will be established in the Taluk Centre to which he belongs.

I, therefore, submit, Sir, that this will be a very beneficial step forward and this will also make for economy in the administration of justice. But even assuming that my proposal is accepted, it may be objected that there is no necessity for a Committee to go into these, as the High Court will be willing to go into this matter and give advice. The High Court has been in a secluded fortress of its own, practically an ivory tower, and the High Court may not perhaps realise all the difficulties of the litigant public, as the popular representatives of the people realise. The High Court, by its very nature, is also conservative and it would consider what is best for it. I think it is better not to trouble the High Court with this matter. The initiative must actually come from the popular representatives of the people and after the initiative has been taken by the representatives of the people, then it may be

6-40 p.m.

[7th December 1971

[Thiru D. Santosham]

forwarded to the High Court with a mention about all the benelts that will accrue from this and I am sure the High Court will also agree. I therefore, submit that this is a step that will be really conducive to the betterment of the administration of justice and to the benefit of the people asd I, therefore, commend this resolution for the acceptance of the Government, particularly of our dynamic Law Minister.

* திரு. எஸ். டி. ஆதித்தன்: தலைவர் அவர்களே, திரு சந்தோஷம் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானம், நீதிபதிகள் அதாவது கீழ்த்தரமான நீதிபதிகள், அப்படியென்றால் தரைமட்டமான நீதிபதிகள் அல்ல, கீழ்நிலை நீதிபதிகளுக்கு, . . .

Thiru G. SWAMINATHAN: Sir, I want to know what is meant by "கீழ்நிலை நீதிபதிகள்"

Thiru S. T. ADITYAN: It means "lower subordinate judiciary". "கீழ்நிலை நீதிபதிகள்"

Mr. CHAIRMAN: The hon. Member may speak in English.

Thiru S. T. ADITYAN: Mr. Chairman, I shall speak in English.

The Resolution that has been brought forward by my hon. and learned Friend Thiru D. Santosham relates to the constitution of a committee to go into the conditions of service, efficiency, contentment and integrity of the subordinary judiciary of our State. The arguments have come from a person who has had a very long practice at the Bar to his credit, and I think, if I am not very much mistaken, he is the leader of the Criminal Bar at Madurai. Sir, I will apologise myself, since it is long ago, more than 12 years ago that I left the Bar, and regarding the memories that I still cherish about the Bar, some of them are very pleasant and a few of them, a little unpleasant also. I have been at the Bar for about 30 years and I have also led the civil side of the Bar at Tirunelveli. I would, therefore, say that much of the information that my hon. and learned Friend has supplied to this House is certainly based upon his very great experience at the Bar and that the minute details that he has given are certainly worthy of consideration by this august House.

Sir, he has very clearly pointed out that the great benefits that we have received from the separation of the judiciary from the revenue, have, still to a very great extent, to flower into another great reform, namely, the system of Munsif-Mgaistracy. Munsifs belong to the civil arm and the Magistrates belong to the criminal arm and it actually happens that both arms are necessary for the proper administration of justice. One is the left arm and the other



7th December 1971]

[Thiru S. T. Adityan]

is the right arm, the punishing arm. The defect in the present system is not merely the lack of promotion prospects from one cadre to the other. Actually the selection itself seems to be anomalous. They learn the same law, they write the same examinations and they go through the same training, and after all such experience, it appears that some of them are recruited as Magistrates and some of them as Munsifs, and if the Magistrates have to become Munsifs, they have to undergo another selection process. The whole thing seems to be anomalous.

The hon. Member has pointed out that in Andhra Pradesh both of them come under the same cadre, one of them being a stepping stone for promotion to the other. I think in our State also, to some extent, the same system is there. If I am not very much mistaken, the Munsif at Sattur in Ramanathapuram district is also a Magistrate. I think the experience gained at Sattur and other similar places may help us to have the system extended throughout the State.

A Munsif can also try a criminal case. I would like to go a step further and submit that the power of patta-transfer which is now with the Tahsildar on the Revenue side must be given to the civil sides, i.e., to the Munsif-Magistrate, as the Hon. Member says, or I would rather borrow an old revenue term 'the triune officer'. The same officer should have jurisdiction on the civil, criminal and revenue sides. As it now stands today, most of the litigation over which thousands of rupees are earned by my learned brethren of the Bar relate to patta-transfer and they may not be able to get that income, if the patta transfer application has to come to the Munsif. Why can't we make it a rule that as soon as a father dies, the patta-transfer application of the heirs should go to the Munsif of the place by means of an Original Petition? At present, what happens is this. The Tahsildar has absolutely no knowledge of the law. He can be called a 'necessity' and necessity knows no law. Tahsildars can be called 'necessity' as they know no law but can have a hand in the administration of justice.

Thiru K. RAJARAM: Generally Tahsildars are called Taluk Magistrates. If, as the hon. Member says, they know no law, how can they be called Taluk Magistrates?

Thiru S. T. ADITYAN: That is why the criminal jurisdiction has been taken away from the revenue officers and that is why there was separation of judiciary from the revenue side. I was on the point of explaining the present position. I hope the hon. Members may be aware how difficult it is to work out the share of the heirs of a Muslim who is dead, under the Muslim Law, in the matter of inheritance, it requires a very good mathematician, to work out the fraction of shares. One hundred and thirty shares

[7th December 1971

[Thiru S. T. Adityan]

out of 14,388 shares will sometimes be the share of a woman who is distantly related to a Muslim who dies. When the Tahsildar receives the patta-transfer application in that case, what does he do? He sends it perhaps to the Revenue Inspector who in turn sends it on to the Karnam of the Village. The learned Karnam goes. And what does he do? The learned Karnam reports that only the brother of the deceased is the sole heir, because the brother pays him. He brushes aside the claim of the widow, the sister and even the son who may be perhaps in Singapore or Rangoon. What do we get out of it? We get litigation and my learned brothers in the profession get money and this is the ultimate result of it. I submit, Sir, that if the mater comes by means of an Original Petition before the District Munsif, it would be done in a few minutes and justice will be done. The mathematical formula in connection with the inheritance would be available in the text-book and it will be applied and patta-transfer made.

May I commend to this Hon. House a system that, I found, was prevailing in the Malay States? There if we sell a land, what we should do is to endorse on the title deed and we need not write a fresh document for that. The endorsement on the title deed indicating the sale of the property is registered. When I was much younger, it used to be done in our State also. For instance, on the mortgage deed, necessary endorsement is made and then it is registered.

The land system that is obtaining in Malay States is this: Suppose one wants to sell a particular share of a property, say, half or one-third share, he has to go to the land office which is also the Registrar's Office. When the vendor goes and executes a document selling a portion of the property, the department immediately gives notice to all the other sharers of the property, who are the other pattadars for the particular property. The document will not be registered before all the other pattadars are summoned and all the other disputants, including even those who claim one-hundredth share in the property, are heard. In our State, if we go to the Sub-Registrar's office and apply for an encumbrance certificate, we do not get the whole history of the title document relating to the property; and we do not know where we are. If one is asked to find out the title of a person to a particular property, he will have to pay sumptuously to a learned brother of my profession, and he receives the money and then he gives an opinion, which is only doubtful. He says "Perhaps $A$ may be entitled to the property and probably $B$ may also be entitled to a share in it and perhaps $C$ may also be entitled to the property". That is the way in which we get opinions about the title of a person to the property, in our present system of getting encumbrance certificate for 30 years.



7th December 1971]

[Thiru S. T. Adityan]

But in the Malay States, it is not possible. From the encumbrance certificate, you can very clearly say that so and so is entitled to it, because the objections that are possible are raised 6-50 p.m.
before registration itself. There, before registration, everything is decided. Much simplification is necessary in our procedure and is possible under the circumstances.

Sir, one or two other points and I shall have done. I see that our brethren who become Magistrates and Munsifs, actually when they retire from their job, are penniless. I find that Magistrates and Munsifs, when they retire, are almost paupers. Sir, they are administering justice. When they administer justice, it is only proper that you pay for their integrity; that you pay the Magistrate and that you pay for the Munsif an adequate salary. The present salary that is meted out to those people is absolutely insufficient especially if he has got a boy or two, and a girl or two—and I should say that they are very richly endowed with such progeny and Munsifs and Magistrates have large families. Whenever they find that their children have to go to the college, one can easily see their suffering. Sir, I appeal through you that their salary should be revised, their service conditions should be revised, their housing allowance and all those things should be considered. Especially in smaller places where Munsifs are posted, they are not able to get a house. The Government do not provide them with a house. They are not able to get a house. They are not able to get a house which can be considered good from the sanitary point of view or judged by the ordinary standards of life.

Under the circumstances, I heartily recommend that a Committee be appointed to study and examine the framework, the organisational set-up and the working of the subordinate judiciary in our State and to suggest ways and means to promote the efficiency, the economy, the contentment and the integrity of the subordinate judiciary.

I thank you, Sir, for the opportunity given to me.

* மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் கொண்டுவந்த நல்ல நோக்கத்தை நான் முதலிலே வரவேற்று, அவர் கூறிய நல்ல கருத்துக்களையெல்லாம் அரசாங்கம் பரிசீலிக்கும் என்ற உறுதியைத் தர ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டாவைப் பற்றி மிக விளக்கமாகச் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், அவர்கள் ஒரு புதிய யோசனையை, நீதிமன்றங்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற யோசனையைச் சொன்னார்கள். இது பெரிய ஆபத்தை உண்டாக்கும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இன்றைக்கிருக்கிற உயர்நீதிமன்றத் தீர்ப்புப்படி 'Patta is not a title' பட்டா யார் பேரிலே இருந்தாலும் சரி, சரியாக இருந்தாலும் தவறாக இருந்தாலும், நீதி

[திரு. செ. மாதவன்]

மன்றத்திற்குச் செல்வதற்கு உரிமை உண்டு, பட்டாவை நீதிமன்றம் கொடுத்து விட்ட காரணத்தாலேயே ஒருவருக்கு நிலம் சொந்தமாகிவிடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இவைகளுக்கெல்லாம் காரணம், நம்முடைய நாட்டிலே யாருடைய சொத்தை வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும், எந்தக் கிரயத்துக்கு வேண்டுமானாலும், எந்த டாகுமெண்ட் எழுதினாலும், பதிவு செய்கின்ற அதிகாரிக்கு அதை மறுக்க அதிகாரம் இல்லை. மலேயா நாட்டிலே அது வேறு விதமாக இருக்கிறது. நாங்கள் மலேயா நாட்டுச் சட்டத்தையெல்லாம் வரவழைத்து பரிசீலித்துப் பார்த்தோம். அங்கே 'கிரான்ட்' என்று சொல்வது வழக்கம். அந்த கிரான்ட்டை சொந்தக்காரர் ஒன்று வைத்துக்கொள்வார், அரசாங்க அலுவலகத்திலே ஒன்று இருக்கும். இரண்டிலும் எண்டார்ஸ்மென்ட் செய்தால்தான் சட்டப்படி ஒரு இடத்தைக் கிரயம் செய்ததாக எடுத்துக்கொள்ள முடியும். ஆகவே அங்கே அந்தத் தவறு செய்ய முடியவில்லை. இங்கே கொண்டுவரலாம் என்று பரிசீலித்தபோது, நம்முடைய நாட்டைப் போல அங்கே சிறு சிறு லேண்ட் ஹோல்டிங்ஸ் கிடையாது. ஆகவேதான் அங்கே எளிதாகச் செய்ய முடிகிறது. நமது நாட்டிலே அதை அதிக விரைவிலே செய்ய முடியும் என்று நம்பவில்லை. இருந்தாலும் அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசீலித்து வருகிறது.

நமது நீதித் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கெல்லாம் நல்ல சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்பொழுது புதிய சம்பளக் குழு அறிவித்திருக்கிற சம்பளத்தை உற்று நோக்குவார்களானால், ஏராளமாகச் சம்பளம் தரப்பட்டிருக்கிறது என்பதை அறிவார்கள்.

வீட்டுப் பிரச்சினைபற்றி ஒன்றுமே செய்யவில்லை என்றார்கள். இந்த அரசாங்கம் அதற்காகத் தனியாகத் திட்டமிட்டு, நமது வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மேஜிஸ்டிரேட் அளவிலேயிருந்து மாவட்ட அளவிலே எல்லா நீதிபதிகளுக்கும் வீடு கொடுக்கும் திட்டத்தை உருவாக்கி இப்பொழுது பல இடங்களிலே செயல் முறை அளவிலேயுள்ளது. சப்-மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் விரைவிலே கட்டிக்கொடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் தேவையும் நிறைவேற்றப்படுகிறது என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சம்பளம் கூடக் கொடுத்தாலே லஞ்சம் வாங்கமாட்டார்கள், உயர்ந்த 'இண்டகிரிடி' வரும் என்று கூறுவதை முழுமையாக நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். தனி மனிதனின் பண்பாடு வளர்ந்தாலொழிய, உயர்ந்த 'இண்டகிரிடி' வராது. இங்கே வாதாடப்படுவதெல்லாம் மேஜிஸ்டிரேட்டுகளுக்காக. காரணம் 126 போஸ்ட்டுகள் இருக்கின்றன. இவர்களுக்கும் பிரமோஷன் இல்லை என்று சொல்லிவிட முடியாது. டிஸ்டிரிக்ட் முன்சீப்கள் நியமிக்கப்படும்போது, ஒரு குறிப்பிட்ட கோட்டா, சதவிகிதம் சப்-மேஜிஸ்டிரேட்டுகளிடமிருந்து எடுக்க இப்பொழுதே விதி இருக்கிறது. ஆகவே அதிலே அருமையான வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் தமிழ்நாட்டிலே,

'Once an accused always an accused, once a Magistrate always a Magistrate'

என்று சொல்லக்கூடிய அளவுக்கு, இந்தத் துணை மேஜிஸ்டிரேட்டுகளுக்கு அதிக அளவுக்கு நீதித் துறையிலே மேலே செல்வதற்கு வாய்ப்பில்லை என்ற உண்மையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதற்கான பரிகாரம்





[திரு. செ. மாதவன்]

தேட வேண்டும் என்று பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிலே ஒரு முயற்சிதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் சொன்னதுபோல், ஆந்திர மாநிலத்திலே சிவில் கிரிமினல் இரண்டையும் ஒன்றாக ஆக்கி டிஸ்டிரிக்ட் முன்சீஃப்-கம்-மாஜிஸ்டிரேட் என்று போட்டு சிவில் கிரிமினல் அதிகாரம் இரண்டையும் கொடுக்கின்ற முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அது எந்த அளவுக்குச் சரியான முறையில் நடைபெறுகிறது என்பதற்கு நமது அரசு புள்ளிவிவரங்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது. சம்பளக் குழுவிலேகூட இதைக் கொடுத்துப் பரிசிலிக்கும்படி கேட்டிருக்கிறோம். அவர்களுடைய சில கருத்துக்களின் அடிப்படையில், இந்தக் கருத்துக்களைப்பற்றி உயர் நீதி மன்றத்தின் கருத்தையும் கேட்டிருக்கிறோம். இப்போதுகூட சில இடங்களிலே, அதிக வேலைபளு இல்லாத இடங்களிலே, இது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு அதிகாரங்களையும் ஒரே அதிகாரிக்குக் கொடுக்கின்ற முறை இப்பொழுதும் சில இடங்களிலே பின்பற்றப்பட்டு வருகிறது. இது எல்லாப் பகுதிகளிலும் பின்பற்றப்பட வேண்டும் என்ற கருத்துதான் வலியுறுத்தப்பட்டது. இந்த அரசாங்கம் வந்தபிறகு அதற்கும் நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம், பொதுமக்களுக்கு சவுகரியம் ஏற்படுவதற்காக.

வெள்ளைக்காரன் காலத்திலே நீதிமன்றங்களுடைய எல்லை வரம்பு நிர்ணயிக்கப்பட்டது. அதை மாற்றியமைத்து, இன்றைய ஜனநாயக நாட்டிற்கு ஏற்றபடி, பொதுமக்கள் வசதிக்கு ஏற்றபடி, அந்த நீதிமன்றங்களுக்கு எல்லை வரம்பு இருக்க வேண்டும் என்று அதற்கென ஒரு குழு அமைத்து மாவட்ட நீதிபதிகளும் அரசாங்கத்திலே இருக்கிற ஒரு ஐ.ஏ.எஸ். அலுவலரும் சேர்ந்து பரிசீலித்து வருகிறார்கள். பல இடங்களுக்குச் சென்று பொதுமக்கள், வழக்குரைஞர்கள் கருத்துக்களைக் கேட்டு வருகிறார்கள். இன்னும் எளிதாக நீதி கிடைக்க வேண்டும், நடைமுறைவிதிகள் (Procedural law) எளிதாக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, உயர்நீதி மன்றத்திலே பணியாற்றி ஓய்வுபெற்ற நீதிபதி திரு. இராமகிருஷ்ணன் அவர்களை நாம் One-man Commission என்ற முறையிலே நியமித்திருக்கிறோம். அவர்கள் இதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து, ஏற்கனவே மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிற சட்டக்குழு (Law Commission) சொல்லியிருக்கிற சிபாரிசுகளின் அடிப்படையிலேயும், நமது தமிழ்நாட்டுக்கு ஏற்றவாறும் புதிய சிபாரிசுகளைத் தரவேண்டும் என்று அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம். அதோடு சேர்த்து இன்றைக்கு இங்கே பேசப்பட்ட கருத்தையும் நீதித் துறை புனராலோசனை செய்து நல்ல முறையிலே இயங்க, நீதிபதிகளின் வேலைப்பளு, சர்விஸ் கண்டிஷன்ஸ், சம்பளம் இவைகளையெல்லாம் எந்த அளவுக்கு மாற்றலாம் என்று மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து ஆராய்ந்து கருத்துக்களைக் கூறுவதற்கும் ஒரு வாய்ப்பைக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். அந்தக் கருத்தை அறிந்ததற்குப் பிறகு இதைப்பற்றி முடிவு எடுப்பதுதான் நியாயம் என்று கருதுகிறேன். அந்த முயற்சி எடுக்கப்படும் என்ற உறுதியைத் தருகிறேன். பொதுவாக மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ் நாட்டிலே உயர்ந்த அளவுக்கு நீதித் துறை செயல்படுகிறது என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது. ஆங்காங்கே தேவைப்படுகிற அளவுக்கு நீதிபதிகளையெல்லாம் ஏராளமாகக் கொடுத்து வேலைகள் செய்யப்படுகின்றன. உயர்நீதி மன்றங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே ஏராளமான நீதிபதிகள் கூடுதலாக உயர்நீதி மன்றத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[7th December 1971

[திரு. செ. மாதவன்]

அதைப்போலவே செலக்ஷன் கிரேடு டிஸ்டிரிக்ட் ஜட்ஜு என்ற முறையிலே அவர்களுக்கும் அதிகமான வாய்ப்பைத் தர வேண்டுமென்று சொல்லிவருகிறோம். தமிழ் நாட்டிலே நீதித் துறை இன்னும் சிறப்பாகச் செயல்பட ஏராளமான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாலே, இதையெல்லாம் இருக்கின்ற குழுவுக்கே அனுப்பினால் போதும் என்று அரசாங்கம் கருதுவதால், அதை திரு. சந்தோஷம் அவர்கள் ஏற்றுக் கொண்டு, இதே குழு முடிவு சொல்லக்கூடிய வாய்ப்பைத் தருவார்கள் என்று நம்பி, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாமென்று நான் அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Does the hon. Member press the Resolution or beg leave of the House to withdraw it?

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I just want to make one or two statements. I entirely agree with the Hon. the Minister for Law that at present one of the biggest problems is to provide sufficient promotional avenues to Judges and Magistrates. The Hon. Minister himself seems to realise the importance of the problem. The Hon. Minister says that he would refer it to one-man Commission headed by Mr. Ramakrishnan. I am quite willing to accept the proposal provided the Hon. Minister gives an assurance that the particular suggestion made by me to abolish the cadre of First-class and Second-class Magistrates and substitute it by Munsif–Magistrates cadre, would be referred to the Commission and his opinion called for. Subject to that, I am prepared to withdraw my resolution, Sir.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் ஏற்கனவே சொன்னதுபோல் அந்தக் கருத்தையும் அரசாங்கம் பரிசிலித்து உயர் நீதி மன்றத்திற்கு அனுப்பவிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்ததும் அதை "ஒன் மேன் கமிஷனுக்கு" அனுப்பவிருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

The Resolution was, by leave, withdrawn.

*(3) Installation of Raja Raja Chola statue at the Brahadeeswarar Temple.*

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, "தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தைக் கட்டியவனும் சமயப் பணி பல புரிந்தவனும், இலங்கை முதலிய வேற்று நாடுகளை வென்று தமிழ் இனத்தின் சிறப்பை உயர்த்தியவனுமாகிய பெரு மன்னன் இராஜ ராஜ சோழன் சிலையை தஞ்சை பெரிய கோயிலுக்குள் நிறுவ ஆவன செய்யவேண்டி மத்திய அரசை வற்புறுத்துமாறு இம்மன்றம் அரசினருக்குப் பரிந்துரைக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

The resolution was duly seconded.

MR. CHAIRMAN : Resolution moved—

"This House recommends to the Government to urge pon the Central Government to take necessary steps to install at the Brahadeeswarar temple at Thanjavur, the statue of the Great



[7th December 1971

[Mr. Chairman)

Raja Raja Chola who built this great temple who did yeoman service to the Hindu religion and raised the glory of the Tamils by conquering many foreign countries such as Ceylon ".

MR. CHAIRMAN : This resolution will be taken up for further consideration on the next non-official day.

The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow 7.02 p.m.

The House then adjourned.

## VIII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 98. Notification issued with G.O. Ms. No. 2655, Rural Development and Local Administration, dated the 4th December 1971, making rules relating to election of Members of Standing Committees of the Municipal Corporation of Madras. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

99. Notification issued with G.O. Ms. No. 2442, Rural Development and Local Administration, dated the 5th November 1971, making rules for co-option as Councillors of persons belonging to the Scheduled Castes or the Scheduled Tribes and for co-option of women by elected members of the Council under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919). [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

100. Notification issued with G.O. Ms. No. 2443, Rural Development and Local Administration, dated the 5th November, 1971, making rules for the election of Chairmen of Standing Committees under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919). [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919.)]

101. Notification issued with G.O. Ms. No. 2444, Rural Development and Local Administration, dated the 5th November, 1971, making rules for the election of a member to the appointments committee under the Madras City Muunicipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919). [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

[7th December 1971

102. Notification issued with G.O. Ms. No. 1938, Rural Development and Local Administration, dated the 21st August 1971, in regard to date of coming into force of section 3 of the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Act, 1970 (Tamil Nadu Act 12 of 1971). [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. *Reports, notifications and other papers.*

39. Notification issued with G.O. Ms. No. 2058, Rural Development and Local Administration, dated the 8th September 1971, in regard to an amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960.

40. Report and proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971). (English and Tamil).

* Laid on the table of the House on 6—12—1971.



## APPENDIX I.

* [*Vide* answer to starred Question No. 74 on page 12.]

| வரிசை எண். | மாவட்டம். | | தொழில் பழகு ஆசிரியர் வேலை கேட்டு வந்த மனுக்கள் எண்ணிக்கை. | | | 24—6—1971 முடிய நியமிக்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர்கள் எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பி.டி. | செகண்டரி. | ஹையர் எலிமெண்டரி. | மொத்தம். | பி.டி. | செகண்டரி. | ஹையர் எலிமெண்டரி. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | சென்னை .. | 95 | 1,026 | 314 | 1,435 | 9 | 37 | 7 | 53 |
| 2. | செங்கல்பட்டு .. | 15 | 740 | 157 | 912 | 5 | 88 | 19 | 112 |
| 3. | தென் ஆர்க்காடு .. | 29 | 1,293 | 269 | 1,591 | 10 | 75 | 34 | 119 |
| 4. | தஞ்சாவூர் .. | 47 | 1,050 | 345 | 1,442 | 32 | 202 | 42 | 276 |
| 5. | திருச்சிராப்பள்ளி .. | 54 | 2,055 | 698 | 2,807 | 32 | 287 | 79 | 398 |
| 6. | மதுரை .. | 150 | 2,810 | 909 | 3,869 | 40 | 398 | 77 | 515 |
| 7. | இராமநாதபுரம் .. | 71 | 1,873 | 561 | 2,505 | 27 | 306 | 60 | 393 |
| 8. | திருநெல்வேலி .. | 95 | 2,023 | 427 | 2,545 | 23 | 265 | 55 | 343 |
| 9. | கன்யாகுமரி . | 131 | 1,065 | 175 | 1,371 | 15 | 150 | 30 | 195 |
| 10. | சேலம் .. | 47 | 1,281 | 557 | 1,885 | 44 | 295 | 65 | 404 |
| 11. | தர்மபுரி .. | 11 | 408 | 183 | 602 | 9 | 133 | 20 | 162 |
| 12. | வட ஆர்க்காடு .. | 29 | 1,272 | 416 | 1,717 | .. | 163 | 44 | 207 |
| 13. | கோயம்புத்தூர் .. | 127 | 1,779 | 587 | 2,493 | 39 | 352 | 75 | 466 |
| 14. | நீலகிரி .. | 14 | 237 | 73 | 324 | 4 | 39 | 11 | 54 |
| | மொத்தம் .. | 915 | 18,912 | 5,671 | 25,498 | 289 | 2,790 | 618 | 3,607 |

## APPENDIX II

[*Vide* ANSWER TO STARRED QUESTION NO. 83 ON PAGE 17]

The details of the number of students passed out from the College of Arts and Crafts, Madras, in different courses are furnished below:—

| | 1968-69 Men. | Women. | 1969-70 Men. | Women. | 1970-71 Men. | Women. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| FINE ARTS : | | | | | | |
| I.C.C. II Year | 29 | 5 | 36 | 3 | 23 | 7 |
| III Year Diploma Course in Painting. | 15 | 2 | 12 | 4 | 12 | 1 |
| III Year Commercial Art. | 11 | .. | 9 | .. | 5 | 4 |
| III Year Sculpture. | 1 | .. | 4 | .. | 2 | .. |
| Post Diploma Course in (one year course) | | | | | | |
| Painting | 4 | .. | 3 | 1 | 5 | .. |
| Commercial Art | 2 | .. | 2 | .. | .. | .. |
| Sculpture | 1 | .. | .. | .. | 2 | .. |
| Industrial Design | 3 | .. | 6 | .. | 5 | 1 |
| Painting III Year (Old Regulation). | 1 | .. | .. | .. | .. | .. |
| Advance Painting (Old) craft section | .. | .. | 1 | .. | .. | .. |
| Three year diploma course in wood work. | 3 | .. | 6 | .. | 8 | .. |
| Metal work | 3 | .. | 2 | .. | 6 | .. |
| Goldsmithy | 2 | .. | 2 | .. | .. | .. |
| Design | 5 | 1 | 3 | 1 | .. | .. |
| Total .. | 80 | 8 | 86 | 9 | 68 | 13 |



## APPENDIX

| | 1968-69 Men. | Women. | 1969-70 Men. | Women. | 1970-71 Men. | Women. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| CRAFTS : | | | | | | |
| Wood work | | | | | | |
| „ I year | 11 | .. | 11 | .. | 11 | .. |
| „ II year | 6 | .. | 10 | .. | 10 | .. |
| „ III year | 3 | .. | 6 | .. | 8 | .. |
| Metal work | | | | | | |
| „ I year | 8 | .. | 6 | .. | 7 | .. |
| „ II year | 4 | .. | 7 | .. | 5 | .. |
| „ III year | 3 | .. | 2 | .. | 6 | .. |
| Goldsmithy | | | | | | |
| „ II year | 2 | .. | .. | .. | .. | .. |
| „ III year | 2 | .. | 2 | .. | .. | .. |
| Design | | | | | | |
| I year | 1 | 1 | .. | .. | .. | .. |
| „ II year | 4 | 1 | .. | .. | .. | .. |
| „ III year | 5 | 1 | 3 | 1 | .. | .. |
| Total .. | 49 | 3 | 47 | 1 | 7 | Nil |

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Wednesday, the 8th December* 1971.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHI- RARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

### Starred Questions.

*Development of Tamil Language*

* 89. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the State Government have received any financial assistance from the Centre to develop the Tamil language; and

(*b*) if so, the details thereof?

**தமிழ் மொழி வளர்ச்சி.**

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) தமிழ் மொழி வளர்ச்சிக்காக மத்திய அரசிடமிருந்து மாநில அரசு நிதி உதவி ஏதேனும் பெற்றுள்ளதா?*

*(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ)-வும். (இ)-யும். தமிழ் மொழி வளர்ச்சிக்கு என்று எவ்வித நிதி உதவியும் மைய அரசிடமிருந்து பெறவில்லை. ஆனால் நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பல்கலைக் கழக நிலையில் வட்டார மொழிகளில் புத்தகங்களைத் தயாரித்து வெளியிட ஒரு கோடி ரூபாய் நிதி உதவி கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டு ஒரு திட்டத்தை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது.*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த அளவில் இப்போது செயல்பட்டு வருகிறது?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தத் திட்டத்தில் இதுவரையில் பதினாறு லட்சத்து ஆறாயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்த 1971-72-ல் எண்பத்தினாலு லட்சத்து நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 269 புத்தகங்கள் ஏற்கனவே கொண்டுவந்திருக்கிறோம். 152 புத்தகங்கள் ஒரிஜனல் என்று சொல்லப்படுகிறது, சொந்தமாக எழுதப்பட்டவை. 117 மொழி பெயர்ப்பாக இருக்கின்றன. இப்போது தயாரிக்கச் சொல்லப்பட்டிருப்பவைகளில் 448 சொந்தமான புத்தகங்களாகவும் 28 மொழிபெயர்ப்புப் புத்தகங்களாகவும் இருக்கின்றன.*

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மத்திய அரசு இந்தி மொழி வளர்ச்சிக்காக தனி நிதி ஒதுக்கீடு செய்யும்போது, சில மாநிலங்கள் அந்த மாநில மொழி வளர்ச்சிக்கு அதைப் பயன்படுத்துகின்றன. அந்த நிலையில் தமிழின் வளர்ச்சிக் கென்றும் மாநில மொழிகள் அத்தனைக்கும் அந்த வகையில் நிதி ஒதுக்கீடு செய்யும் ஏற்பாட்டிற்கு மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தி மொழிக்குத் தனிச் சலுகை மத்திய அரசு தந்து வருகிறது. கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் கூட மற்ற மாநிலங்களைச் சேர்ந்த கல்வி அமைச்சர்கள் அதை வற்புறுத்தினார்கள். 14 மொழிகளின் வளர்ச்சிக்கும் ஒரே வகையில் நிதி தர வேண்டுமென்றார்கள். இந்தி மொழிக்குத் தனியாக இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 15, 16 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். இந்தி மொழி மாநிலமாக நான்கு மாநிலங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கோடி ரூபாய் என்று வரும்போது, அந்த நான்கு மாநிலங்களும் சேர்ந்து உருவாக்குகிற புத்தகங்கள் இந்தி மொழியில் அவற்றிற்குப் பயன்படுவதாக இருக்கும். மொழி அடிப்படையில் பார்த்தால் தெலுங்கு, கன்னடம், வங்காளம், மகாராஷ்டிரம் ஆகியவற்றிற்கும் அதிகச் சலுகை தர வேண்டுமென்று எல்லோரும் கேட்ட பிறகுதான் இந்த ஒரு கோடியாவது ஒதுக்கித்தர முன்வந்தார்கள். இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழி என்ற வகையில் அதற்குத் தருவதாகக் குறிப்பிடுகிறார்கள் மற்ற மொழிகளுக்கும் அதிகமாக ஒதுக்க வற்புறுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிக்கு மைய அரசிடமிருந்து நிதி பெற்று அதன் மூலமாக புத்தகங்கள் எழுதும் முறை நடை பெறுகிறது. தமிழ் மொழி வளர்ச்சியடைந்த மொழி. தமிழ் நாட்டின் அறிவு நூல் வளர்ச்சிக்கு இந்தப் பணம் செலவழிக்கப்படுகிறதா? மொழி வளர்ச்சிக்கு என்று சொல்வது பொருந்துமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மொழி வளர்ச்சி என்பது புத்தகங்கள் மட்டும் கொண்டு வருகிற முயற்சி தான். தமிழ் மொழியிலே அறிவியல் நூல்கள் இப்போது போதுமானதாக இல்லை. அதற்குத்தான் கொடுக்கிறார்கள் ஒரு கோடி ரூபாய். அதிலும் மாநில அரசு 25 லட்சம் ரூபாய் செலவழித்தால்தான் கொடுப்பார்கள். ஆக ஒன்றே'கால் கோடி ரூபாய் அளவில் இந்தத் திட்டம் உருவாகியிருக்கிறது. மொழி வளர்ச்சிக்கு என்றால், அந்த மொழியில் உள்ள நூல்கள் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துகிறோம்.

**தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) :** பேரவைத் தலைவர் அவர்களே, ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் அகர முதல் தமிழ்ப் பேரகராதி உருவாக்குவதன் தொடர்பாக உதவி செய்ய வேண்டுமென்று அரசிற்கு விண்ணப்பித்திருந்தார். இந்தத் திட்டத்தின் கீழ் அதற்கு நிதி உதவி தரப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ், பெரும்பாலும் கல்லூரிகளிலே பல்கலைக் கழகப் பாடப்புத்தகங்கள் கொண்டுவருவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் சார்பாக தமிழ் மொழி நூல்களுக்குத்தான் இதைப் பயன்படுத்துவார்கள். மற்றவை இத்திட்டத்தின் கீழ் வராது.



**திரு. எஸ். முத்துசாமி :** தலைவர் அவர்களே, இதுவரையில் சட்ட நூல்கள் தமிழில் எழுதுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சில நூல்கள் சட்ட சம்பந்தமாக வெளி வந்திருக்கின்றன. எத்தனை என்ற குறிப்புகள் இல்லை. என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்பும் என்னிடமில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

## *Nationalised Text-Books*

*9c Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the basis on which the private distributors were appointed for selling Nationalised Text-Books in the Districts?

### அரசுப் பாட நூல்கள்

**திரு. ஜீ. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசுப் பாட நூல்களை மாவட்டங்களில் விற்பனை செய்ய தனிப்பட்ட விற்பனையாளர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1970-71-ஆம் ஆண்டில் ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும், அரசுப் பாடப் புத்தகங்களை விற்பனை செய்யும் உரிமையை வழங்க, பதிவு செய்யப்பட்ட புத்தகப் பதிப்பாளர்களிடமிருந்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் குத்தகை விவரம் கோரிப் பின், ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒருவர் வீதம் விற்பனையாளரை நியமித்தது.

1971-72 கல்வியாண்டில் சென்னை மாநகரில் அரசுப் பாடப் புத்தகங்களின் விற்பனையைப் பாடநூல் நிறுவனமே நேரடியாக மேற்கொண்டது. இம்முறைப் படி சில்லரை விற்பனையாளர்கள் மூலமாகவும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு தேவைக் கேற்பவும் புத்தககள் விற்கப்பட்டன. சென்னை மாநகரத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சென்ற ஆண்டு மேற்கொண்ட முறைப்படி மொத்த விற்பனை யாளர்கள் மூலமாகவே தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்படும் அரசுப் பாடப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

**திரு. ஜீ. சுவாமிநாதன் :** மாவட்டங்கள் வாரியாக விற்பனையாளர்கள் தேர்ந் தெடுக்கப்படும்போது எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? பலர் அதற்காக விண்ணப்பம் செய்திருக்கும்போது ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்கள் கொடுக்கிற ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுகிறோம். அதன்படி நியமிக்கப்படு கிறார். அவர் துணை வியாபாரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களுக்கு 5 சதவிகிதம் கழிவு தர வேண்டும். அதையும் கணக்கிட்டு அப்பொறுப்பை ஏற்பவர்கள் எல்லா இடங்களுக்கும் புத்தகங்களைக் கொண்டு செல்லும் அளவிற்குத் துணை டெப்போ வைத்திருக்கிறார்களா என்றும் பார்க்கவேண்டி யிருக்கிறது. புத்தகங்கள் குறிப்பிட்ட ஊர்களுக்குப் போய்ச் சேராத நிலைமை ஏற்பட்டால், பள்ளிகளுக்குச் சங்கடம். அதைப் பார்த்து பெரிய

வியாபாரிகளாகத் தேர்ந்தெடுத்து, கூடுமான வரை ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கு ஒரு விற்பனையாளர் என்ற வகையில் கொடுக்கப்படுகிறது. ஒரு இடத்திற்கு ஒருவருமே வரவில்லை என்றால், அங்கே விரும்புகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய சக்தி, பணம் கொடுக்கிற திறன், ஏற்கனவே அவர்கள் ஒழுங்காக நடந்துகொண்டிருக்கிறார்களா என்பதையும் பார்த்து, அந்நிறுவனத்தின் நிதிக்குழு ஆட்சிக் குழுவின் பரிசீலனையின் பேரில் அளிக்கப்படுகிறது.

**திரு. எம். ராஜா அய்யர் :** அரசுப் பாட நூல்கள் கிடைக்கவில்லை என்ற நிலையைப்பற்றி இம்மன்றம் விவாதித்தபோது பள்ளி மாணவர்கள் கடைத் தெருவில் கூட்டமாக நின்று புத்தகங்களை வாங்கும் நிலைமை இல்லாமல், பள்ளிகளில் இருக்கிற மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இந்தப் புத்தகங்களை விற்கும்படி அனுப்பினால், நல்லது என்ற கருத்து ஒன்று தெரிவிக்கப்பட்டது. அதை ஆராய்வதாக அரசு உறுதி மொழி தந்தது. அந்தத் திட்டம் இந்த ஆண்டும் அமுலுக்கு வந்ததாகத் தெரியவில்லை. அடுத்த ஆண்டாவது அமுலுக்கு வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இத்திட்டத்தை உருவாக்கி செம்மைப் படுத்த முடியுமா என்றுதான் தமிழ் வளர்ச்சி நிறுவனமே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாமா என்று பரிட்சார்த்தமாக சென்னை மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுத்து இந்த ஆண்டு சில்லறை வியாபாரிகள் வாங்கிக்கொள்ளலாம் என்றும் பள்ளிகளிலே நேரடியாக வாங்கிக் கொள்ளலாம் என்றும், அதில் வருகிற கமிஷனைப் பள்ளிகளுக்கு நலம் பயக்கிற பணிகளுக்குக் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. அது வெற்றிகரமாக ஓரளவுக்கு நடந்திருப்பதாகக் குறிப்புகள் இருக்கின்றன. அதை வேறு மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது. அப்படி ஏற்பட்டால், அங்குள்ள பள்ளிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விற்பதற்கு முயற்சிக்கலாம்.

**திரு. சா. கணேசன் :** குறிப்பிட்ட ஒருவருக்குத்தான் விற்பனை உரிமை என்று வைப்பதால் பல்வேறு பள்ளிகளிலே கிட்டத்தட்ட 4, 5 மாதங்களாகியும் கூட பாடப் புத்தகங்கள் கிடைக்காமலும், பாடங்கள் பள்ளிகளில் நடத்தப் பெறாமலும் இருக்கிற நிலைமையை அறிந்து அப்படிப்பட்ட பள்ளிகளோ அல்லது அந்தந்த ஊர்களிலுள்ள சிறு வியாபாரிகளோ நேரடியாகவே அரசு நியமித்துள்ள மாநில விற்பனைத் துறையினிடத்திலிருந்து பெறுவதற்கு வழி வகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த முறையில்தான் ஓரளவுக்கு சென்னை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நடந்தது. மாவட்ட அளவில் பொறுப்பை ஒப்படைத்தால்தான் எந்த இடத்திற்காவது புத்தகம் போக வில்லையென்றால், அவர்களைக் கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது. மாவட்ட அளவில் உள்ளவர்கள் சில்லறை விற்பனையாளர்களை வைத்துச் செய்ய வேண்டும். அவர்கள் இன்னின்னாருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பள்ளிகளிலே நேரடியாகக் கேட்டாலும், கொடுக்கலாம். அந்த முறையில் மாவட்ட விற்பனையாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை இன்னும் ஆராய்ந்து அடுத்த ஆண்டு முறைப்படுத்த யோசனை இருக்கிறது.





**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாவட்ட அளவில் தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கொடுக்கும்போது, குறைந்த அளவு கமிஷன், 3½ சத விகிதம் கமிஷனில் விற்பனை செய்கிறோம் என்று கேட்டும் அதைவிட 5 சத விகிதம் அளவில் கமிஷன் கேட்டவர்களுக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி அதிகக் கமிஷன் கேட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டியதன் அவசியம் என்ன வந்தது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சில சமயம் போட்டா போட்டியில் 3½ சத விகிதம் என்று கேட்டுப் பெறுகிறவர்கள் சரியாகப் பணம் தருவதில்லை என்று சில்லறை வியாபாரிகள் முறையிடுகிறார்கள். அதனால் 5 சத விகிதம் கழிவுத் தொகையில் கொடுக்க வேண்டி வந்தது. சில்லறை வியாபாரிகளுக்குத் தக்க கழிவு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தலின் பேரில் கொடுக்கப்பட்டது. சில இடங்களில் வேறு யாரும் முன்வரவில்லை என்றால், அங்கே தக்கபடி அளிக்கப்படுகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, இப்புத்தகங்களை வினியோகிப்பதில் ஏற்படுகிற காலத்தாழ்வு தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் மாவட்டங்களுக்கு அனுப்புவதில் ஏற்படுவதில்லை. அங்குள்ள தனிப்பட்ட வியாபாரிகள் வாங்குகிற புத்தகங்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு கூடுதல் விலைக்கு விற்று கூடுதல் லாபம் சம்பாதிப்பதற்காக டிமாண்டை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அதனால் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் அதனுடைய கிளைகளை மாவட்டத் தலைநகரந்தோறும் வைத்து, தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் விற்காமல் பள்ளிகளிலும் கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மூலமாகவும் மத்தியக் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தியும் விற்பதற்கு முன்வருமா? மதுரைப் பல்கலைக் கழகத்தின் எல்லாக் கல்லூரிகளுடைய புக் ஸ்டோர்ஸ் கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் சொசைட்டி மதுரையில் இருந்து சிறப்பாகச் செயல்பட்டு, எல்லாப் புத்தகங்களையும் கல்லூரிகளுக்கு விரைவில் கிடைக்கச் செய்கிறது. அந்த முறையில் கல்வி அதிகாரிகளுடன் பரிசிலனை செய்து, அடுத்த ஆண்டில் இத்திட்டம் வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நூல்கள் சென்று சேர்வதில் காலத்தாழ்வு ஏற்பட்டதால், சில இடங்களில் அதிக விலைக்குப் புத்தகங்கள் விற்கப்பட்டன. அது 1970-71-ல் ஏற்பட்டது. இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் அவ்விதக் குறைபாடுகள் நடைபெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போன்று, இந்த நிறுவனமே செய்ய வேண்டுமென்றால், நாம் சிலபல முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். மாவட்ட அளவில் கிடங்குகள், துணை அமைப்புகள் ஏற்படுத்தி, அதற்காகும் நிர்வாகச்செலவும் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புத்தக விற்பனையாளர்கள் கிடங்கு வசதிகளோடு துணை விற்பனையாளர்களை வைத்திருப்பதால், வசதியாக இருக்குமென்று ஒப்படைக்கப்பட்டது. நிறுவனமே ஏற்றுக்கொள்ளதென்றால், அதைப்பற்றி ஆராய வேண்டும்.

MR. CHAIRMAN : The hon. Members are requested to cut short their supplementaries and not to deliver long lectures. Two questions have taken nearly 17 minutes. All the questions have to be finished within 60 minutes.

[8th December 1971

*திரு. கே. எஸ். அபதுல் வகாப் : பாடப் புத்தகங்கள் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டன என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒன்று சில சமயங்களில் அப்படி விற்கப்பட்ட புத்தகங்களைப்பற்றி நானே சட்டசபையில் குறை சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதா? யாராவது தண்டிக்கப்பட்டார்களா? அல்லது அது பரிசிலனை செய்யப்பட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலில் கூறியபடி, இந்த ஆண்டு அப்படி ஏற்படவில்லை. சென்ற ஆண்டு புத்தகம் வெளியிடுவதில் காலத்தாழ்வு ஏற்பட்டதன் காரணமாக, அக்குறைபாடு இருந்தது. இந்த ஆண்டு அது இருக்காது.*

*திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, நாம் இப்போது எங்கு பார்த்தாலும், கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துகிறோம். காஞ்சிபுரத்தில் கூட ஒரு பண்டகசாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, இந்தப் புத்தகங்களை விநியோகிப்பதற்கு தாகர்களை ஏன் வைத்துக்கொள்ள வேண்டும்? கூட்டுறவுகளின் மூலம் விற்றால் நமக்கு எவ்வளவோ செலவு குறையும், தாகர்களிடம் போய் நிற்க வேண்டியதில்லை. அதை அரசு கவனிக்குமா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று, கூட்டுறவுச் சங்கங்கள் பரவலாக அமைந்து, அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தால், அதைக்கூட நாம் செய்யலாம். கூட்டுறவுச் சங்கங்கள் வேறு வேறு வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொறுப்பை அவர்களிடம் விடுவதுபற்றி யோசிக்க வேண்டும். அவை முன்வந்தால், அதைப்பற்றி ஆராயலாம். எந்த வழியில் மாணவர்களுக்கு எளிமையான முறையில் புத்தகங்கள் போய்ச் சேரவேண்டுமென்பதைப் பற்றி நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.*

*Raja Serfoji Government College, Thanjavur.*

* 91 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to start Post-Graduate courses in the Raja Serfoji Government College at Thanjavur; and

(*b*) if so, the details and the stage at which the matter now stands?

*இராஜா சரபோஜி அரசினர் கல்லூரி, தஞ்சாவூர்*

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) தஞ்சாவூரிலுள்ள இராஜா சரபோஜி அரசினர் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக் கல்வியை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?*

*(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை? அது இப்பொழுது எந்நிலையில் உள்ளது?*



8th December 1971]

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1970-71-ம் ஆண்டிலிருந்தே தஞ்சை சரபோஜிக் கல்லூரியில் இயல்பியலிலும் கணிதவியலிலும் பட்ட மேற்படிப்புப் பயிற்சியைத் தொடங்க அரசு அனுமதி வழங்கியது.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : பொருளாதாரத் துறையில் மேற்படிப்பு ஒன்று துவங்கவேண்டுமென்று அங்குள்ள மாணவர்கள் அரசிற்கு விண்ணப்பித்திருக்கிறார்களா? அதுபோன்று மேற்படிப்பு அடுத்த ஆண்டிலிருந்து துவக்கப்படுமா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றிய விவரக் குறிப்பில்லை. பல்கலைக் கழகத்திடம் விண்ணப்பித்தால், அவர்கள் போதுமான ஆய்வு இடவசதி முதலியன இருக்குமானால், அதற்கேற்றவாறு அனுமதி கொடுப்பார்கள். முறைப்படி பல்கலைக்கழக வாயிலாக அதற்கு விண்ணப்பிக்க வேண்டும். கல்லூரிக் கல்வி இயக்குனர் அப்படிப்பட்ட முறையீடு பெற்றிருக்கிறாரா என்ற குறிப்பும் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து கூற முடியும். இட வசதி இருந்தால், பல்கலைக்கழகம் அனுமதி தருவதில் ஆட்சேபனை இருக்காது என்று நினைக்கிறேன்.*

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the fact that applications will have to be made to the University before the end of October, may I know whether the Director of Collegiate Education has put up any proposal regarding starting of new courses in such colleges because needless delay has torpedoed the idea of Government colleges starting any new degree course?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆய்வுதான் ஏற்கனவே சொன்னபோது இப்படி விண்ணப்பிக்கிறவர்கள் ஒரு விண்ணப்பத்தைப் பல்கலைக் கழகத்திற்கும் ஒரு விண்ணப்பத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கும் அனுப்பினால், காலத் தாழ்வு ஏற்படாது என்று குறிப்பிடப்பட்டது. இயக்குனருக்கு முன்கூட்டியே அனுப்பப்பட்டால்தான் அவர் ஆராய்ந்து பார்த்து, எந்தெந்த அளவில் செய்யலாம் என்று பல்கலைக் கழகத்திற்குச் சொல்ல முடியும். பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி, அவர்கள் ஆராய்ந்த பிறகு, கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு வந்து, பிறகு அவர் ஆராய்ந்து பார்க்கக் காலத்தாழ்வு ஏற்படுகிறது. இந்த ஆண்டிலிருந்து அக்டோபர் 1-ம் தேதிக்குள்ளாக டைரக்டருக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டுமென்றும் பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் காலத் தாழ்வு ஏற்படாது என்று நம்புகிறோம்.*

THIRU A. R. DAMODARAN : Am I to understand that the Principals of Government Colleges have been sending applications directly to the University, Sir?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் டைரக்டர் மூலமாகத்தான் போக வேண்டும்.*

[8th December 1971

*Free Midday Meal Scheme.*

* 92 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Tiruchirappalli District Development Council has requested the Government to meet the entire cost of the free Midday Meal Scheme out of raffle funds, and

(*b*) if so, the action taken by the Government in the matter?

இலவச மதிய உணவு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இலவச மதிய உணவு வழங்குவதற்கு ஆகும் முழுச் செலவையும், பரிசுச் சீட்டு நிதியிலிருந்து ஈடு செய்யுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சிக் குழு அரசைக் கேட்டுக் கொண்டது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவது உட்பட, பல்வேறு நலத் திட்டங்களுக்காக பரிசுச் சீட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இலவச மதிய உணவுத் திட்டத்திற்காகும் செலவை ஈடுசெய்ய பரிசுச் சீட்டு நிதியை தற்போது பயன்படுத்த இயலாது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்கு இப்போது 6 பைசா கொடுக்கப்படுகிறது. மீதி 4 பைசா இப்போது ஆசிரியர்கள் மாணவர்கள் வசூல் செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இன்றுள்ள நிலையில் மதிய உணவு கொடுக்க வேண்டுமென்றால் குறைந்த பட்சம் 50 காசு ஆகிறது என்பதை அரசு உணர்ந்து குறைந்தது 4 பைசாவையும் சேர்த்து பத்து பைசாவாகக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 6 பைசா என்ற அளவில் பார்த்தாலும் ஒரு கோடி 87 லட்சம் ரூபாய் தருகிறோம். மேற்கொண்டு 4 பைசா அரசே கொடுக்க 1 கோடி 74 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. கேர் நிறுவனம் கொடுக்கிற பொருள்களை வைத்துக்கொண்டு உணவுக்குச் சமாளிக்கிறார்கள். பால், சோயாபீன்ஸ் முதலியன கேர் நிறுவனத்திடமிருந்து கிடைக்கிறது. ஆறு காசை நாம் தருகிறோம். நான்கு காசை ஊராட்சி மன்றம், பொது மக்கள் தருவதிலிருந்து பெறுகிறார்கள். எப்படியோ போட்டுச் சமாளிக்கிறார்கள். பரிசுச் சீட்டில் வருவதை "தமிழ்நாடு சிறப்பு நல நிதி" என்ற பெயரில் வைத்து மருத்துவ மனை வசதிகளை விரிவாக்கவும், பள்ளிக் கட்டிடங்கள் அமைக்கவும், குடிசைகளை மாற்றவும் ஆன பணிகளில் அரசு மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. தங்கபாண்டியன் : மதிய உணவிற்கு ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் நபர் ஒன்றுக்கு 2 காசு கொடுக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. பெரும்பாலான ஊராட்சி மன்றங்கள் அதைக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லாமல்



8th December 1971]

ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்து கிறார்கள். ஊராட்சி அமைச்சர் அவர்கள் ஊராட்சிப் பொது நிதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்ற விதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா?

Mr. CHAIRMAN : It is not related to the main question.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் இந்தத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் பொது மக்களுக்கு இப்படிப்பட்ட திட்டங்களில் அக்கறையும் ஆர்வமும் ஏற்படும் என்று உருவாக்கப்பட்டது. ஊராட்சி மன்றம் அல்லது ஒன்றிய நிதியிலிருந்து எப்படிப் பெறலாம், வருவாயை எந்த வகையில் அவர்களுக்குப் பெருக்கலாம் என்பதை ஆராய்ந்து வருகிறோம். முழுப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டால், பெரும் தொகையாகும் என்பதால் அதை ஏற்கவில்லை.

திரு. டி. கே. சுப்பையா : இப்போதுள்ள அரசியல் நிலைமையைக் கவனிக்கும்போது அமெரிக்க உதவி தடைப்பட்டதன் காரணமாக கேர் நிறுவன உதவியைக் கொண்டு செயல்பட்ட மதிய உணவுத் திட்டம் பாதிக்கப்பட்டு அதனால் பிள்ளைகள் பாதிக்கப்படாமலிருக்க அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நல்ல வேளையாக கேர் நிறுவனம் என்பது ஒரு தனி அறக் கட்டளையாக அமைந்து அவர்கள் உலக மக்களுக்கு இந்த உதவியைச் செய்து வருகிறார்கள். அமெரிக்க அரசாங்கத்தினுடைய நேரடி உதவியாக இருந்தால், இப்போது பல உதவிகள் அடிபட்டுப்போன மாதிரி அதுவும் அடிபட்டிருக்கும். ஒரு தனி அறக்கட்டளையாக இருப்பதால், இது தடைப்படும் என்று சொல்வதற்கில்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அரசாங்க உதவி 6 பைசாவாகவும் மற்றபடி எப்படியோ 4 பைசா வசூலித்தும் இதை நடத்த வேண்டுமென்று சொல்லும்போது, அந்த 4 பைசா கூட வசூல் செய்யாமல் 6 பைசாவைக் கொண்டே அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல சமாளிக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் வாத்தியார்கள் ஜாஸ்தி ரூபாய் வசூல் செய்வதாகத் தெரியவில்லை. இதை நல்ல வகையில் நடத்த, திட்டமான முறையை அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போதே 1970-71 கணக்குப்படி கிட்டத்தட்ட 18 லட்சம் மாணவர்கள் இம் மதிய உணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள். மதிய உணவு மத்திய சமையல் கூடத்தில் தயாரிக்கப்பட்டு கேர் நிறுவனத்தின் ஆதரவோடு வழங்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்கள் தராவிட்டாலும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் எந்த அளவில் பெறலாம், எந்த அளவில் வசதியைப் பெருக்கலாம் என்று ஊராட்சித் துறை ஆராய்கிறது. அது செம்மைப்பட்டால், பிள்ளைகளுக்குச் சங்கடம் ஏற்படாத நிலைமை ஏற்படும்.

Thiru A. R. DAMODARAN : Sir, in view of the desirability of continuing the midday meal scheme and also of extending the same to all the schools in our State, will the Hon. Minister be pleased to state whether the Government would consider the desirability of charging a cess on land revenue to finance this scheme?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே பல்வேறு வகையில் செஸ் போட்டிருப்பதால், இதற்குப் போட இயலுமா என்று தெரியவில்லை.

[8th December 1971

100-க்கு 100 செஸ் போட்டு நிதி பெருக்குவதில் ஊராட்சி மன்றம், ஒன்றியம் எல்லாம் ஈடுபட்டிருக்கின்றன. இதையும் அதில் சேர்த்தால் தாங்குமா என்று தெரியவில்லை. தாங்குமென்றால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்னை நகரத்திலுள்ள பல கல்லூரிகளில் மதிய உணவு இல்லாமல் மாணவர்கள் வருந்துகிறார்கள் என்பதைப் பத்திரிகையில் பார்த்தேன். கல்லூரிகளுக்கும் மதிய உணவுத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இத்திட்டம் உயர்நிலைப் பள்ளி அளவில் கூட இப்போதில்லை. ஆரம்பப் பள்ளி அளவில்தான் உள்ளது. பல்வேறு கல்லூரிகளில் குறிப்பிட்ட மாணவர்களுக்கு உணவு வழங்குகிற பொறுப்பை சென்னையிலுள்ள ரோட்டரி சங்கத்தினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கல்லூரியில் உள்ள 10 அல்லது 15 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கான பொறுப்பை ஒவ்வொருவர் ஏற்றுக் கொள்ள முன்வந்து அந்தக் கல்லூரிக்கு அத்தொகையை வழங்குகிறார்கள். 20 நாட்களுக்கு முன்னால் ஒரு விழா கூட நடந்தது. கல்லூரி முதல்வர் அழைக்கப் பட்டு, ஒரு ஆண்டு காலத்திற்கு 17, 20 மாணவர்களுக்கு மதிய உணவு தருவதற்கு நிதி அளித்தார்கள். தனிப்பட்ட நிறுவனம் இதுபோன்று முன்வந்து முயற்சியை மேற்கொண்டால், பாராட்டத்தக்கதாக இருக்கும். அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கும்.

தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : தலைவர் அவர்களே, முதல் தர இரண்டாம் தர கோயில்களில் உபரி நிதியிருக்கிற கோயில்களில் மதிய உணவிற்கான நிதி உதவி பெற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த யோசனை இதுவரையில் படவில்லை. அந்த நிதியை வேறு பல வகைக்காக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மருத்துவமனைகள் அமைக்க ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகமான நிதியுள்ள கோயில்களிலிருந்து கொடுக்க வேண்டுமென்று குறிப்புகள் இருக்கின்றன. சில அதை ஏற்றுக்கொண்டன. இந்தத் திட்டத்திற்கும் உதவி செய்ய வருவார்களானால், மிக நன்றாக இருக்கும். அறநிலையப் பாதுகாப்புத் துறையோடு கலந்து பேசி உதவி செய்தால், வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

திரு. சி. வி. ராஜகோபால் : மதிய உணவு என்பது ஏழைக் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவது. பெரும்பாலான குழந்தைகள் படிக்க வேண்டுமென்பதை விட இந்த மதிய உணவிற்காகவே பள்ளிக்கு வருகிறார்கள். அதை நானே சில பள்ளிகளில் பார்த்திருக்கிறேன். ஆகையால் அதைக் குறைக்கலாமா, இதைக் குறைக்கலாமா என்று பார்ப்பதை விட நல்லமுறையில் இதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். வாத்தியார்கள் பாடம் சொல்லித் தருவதை விட்டுவிட்டு வெளியே போய் வசூல் செய்யச் சொல்வதும் அவர்கள் எப்படியோ அதைச் சமாளிப்பதும் இப்போது நடக்கிறது. எனக்கு முன்னால் பேசிய சாமியார் அவர்கள் சொன்னதைப் போல, மடங்களிலிருந்து எடுக்கவோ பணக்காரர்கள் தருவதை ஏற்றுக்கொள்ளவோ வழி செய்து அரசாங்கம் இதற்காகக் கொடுக்கும் தொகையை அதிகப்படுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அந்தத் திட்டம் எப்படி நடைபெறுகிறது என்று தெரியாமல் இங்கே பேசியதை வைத்துக்கொண்டு கேட்கிறார்கள். அரசாங்கம் இதை ஆராய வேண்டும்.



8th December 1971]

திரு. ஜி. சுவாமிநாதன் : on a point of order, Sir, ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரை மாண்புமிகு உறுப்பினர் என்று சொல்லாமல் சாமியார் என்று சொல்லலாமா ?

MR. CHAIRMAN : The conventions are always relaxed in the case of Thiru C. V. Rajagopal.

*Government School for Deaf at Thanjavur*

* 93 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the teachers at the Government School for Deaf at Thanjavur are not qualified in that field; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

அரசினர் செவிடர் பள்ளி, தஞ்சாவூர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள அரசினர் செவிடர் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள், அந்தத் துறையில் தகுதி பெறவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதுபோன்று உள்ள செவிடர் பள்ளியில் பணியாற்றுவதற்கு அந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்கள்தான் இருக்க வேண்டும். பயிற்சி இல்லாதவர்களை இத்தகைய பள்ளிகளில் நியமித்தால், சரியான முறையில் பயிற்சி அளிக்க முடியவில்லை, மாணவர்களுக்கும் அதனால் பயனில்லை என்பதை அரசு உணர்ந்து அந்த ஆசிரியர்களுக்கு அந்தத் துறையில் பயிற்சி அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசு செவிடர் பள்ளி தஞ்சாவூரில் 1968-69-ல் ஏற்படுத்தப்பட்டது. அதில் 5 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். அதிலுள்ள தலைமையாசிரியர் மட்டும்தான் செவிடர் கல்விக்கான சீனியர் டிப்ளமா பெற்றிருந்தார். மற்றவர்கள் ஆசிரியர் பயிற்சி மட்டும் பெற்றிருந்தனர். அதில் தனிப் பயிற்சி பெற்றவர்களைப் போட வேண்டுமென்ற முயற்சி வந்த பிறகு, 1970-71-ல் தலைமையாசிரியர் ஒருவர் பயிற்சி பெற்றவர் போடப்பட்டார். மற்ற நான்கு ஆசிரியர்களும் அதிலிருந்து நீக்கப்பட்டு செவிடர் பயிற்சிக்கான ஜூனியர் டிப்ளமா பெற்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கான பயிற்சி பெற்றவர்களைப் போடுவதன் மூலம்தான் அங்கே பயன் ஏற்படும். இனிமேல் நியமிக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

[8th December 1971

*Service Register*

*94 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state with reference to the answer to Starred Question No. 122 on 7th March 1970—

(*a*) the date on which the teacher was appointed as per the Service Register approved and attested by the Departmental Officer;

(*b*) the date on which G.O. No. 556, Education, dated 24th March 1958 took effect;

(*c*) whether retrospective effect has been given to the Government Order in this particular case; and

(*d*) if so, the reasons therefor?

பணிப் பதிவேடு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 7—3—1970 அன்று உடுக்குறியிட்ட வினா எண். 122-க்கு அளிக்கப்பட்ட விடையை ஒட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) துறை அதிகாரியால் ஏற்பளிக்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்ட பணிப் பதிவேட்டில் உள்ளவாறு, அவ்வாசிரியர் நியமிக்கப்பட்ட நாள் எது?

(இ) (கல்வித் துறை) 24—3—1958-ஆம் நாளிட்ட அரசாணை எண். 556 எந்த நாளன்று செயலுக்கு வந்தது?

(உ) குறிப்பிட்ட இந்நேர்வில் இந்த அரசாணை கடந்த ஒரு நாளிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டதா?

(எ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 27—3—1958.

(இ) 1—4—1958.

(உ) இல்லை.

(எ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த அரசு ஆணை எண். 556 1—4—1958 தேதியிலிருந்து அமுலுக்கு வந்தது. அது முதல் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்களாக இருந்தாலும், அவர்களை ஹையர் கிரேடு சம்பளத்தில் நியமிக்கலாம் என்று சொல்லப்பட்டது. இந்த ஆசிரியரைப் பொறுத்த வரையில் 27—3—1958 அன்றே செகண்டரி கிரேடு ஆசிரியராக நியமிககப்பட்டிருக்கிறார். எட்டு மாதச் சம்பளமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளாக எவ்வளவோ முறை அதிகாரிகளிடம் சொல்லியும் அவர் ஹையர் கிரேடு ஆசிரியராக மாற்றப்பட்டிருக்கிறார். இது அரசு ஆணை 556-க்குப் புறம்பானது அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.



8th December 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த ஆசிரியர் 27—3—1958-ல் வேலைக்கு அமர்ந்தார். அவர் அப்போது ஹையர் கிரேடு பதவிக்கு அமர்த்தப்பட்டுவிட்டார். அங்குள்ள உதவி ஆய்வாளர் அவர்கள் தவறாக செகண்டரி கிரேடு சம்பளத்தில் 'அப்ரூவ்' செய்துவிட்டார்கள். அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, ஹையர்கிரேடு கொடுக்கப்பட்டது. 27—3—1958 லிருந்து 1—4—1966 வரையில் ஹையர் கிரேடு பதவியில் இருந்ததால், செகண்டரி கிரேடு தகுதி இருந்தாலும் ஹையர் கிரேடு சம்பளம் கொடுக்கப்பட்டது. 2—6—1966-ல் பதவி உயர்வு செய்யப்பட்டார். அந்த நாளிலிருந்து செகண்டரி கிரேடு சம்பளம் தரப்படுகிறது. அதற்குப் பிறகு செகண்டரி கிரேடு படித்தவர்கள் அந்தப் பொறுப்பில் வேலை பார்த்தால், செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. அதற்கு முன்னால் எந்தெந்தப் பதவியில் யார் இருக்கிறார்களோ, அந்தப் பதவிக்கான சம்பளம் தரப்பட்டது. 1966-க்குப் பிறகு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதால், செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அந்த 556 என் ஆணை வந்த பிறகுதான் எஸ்.எஸ்.எல்.சி. படித்து இரண்டாண்டுகள் பயிற்சி பெற்றிருந்தாலும், அவர்கள் ஹையர்கிரேடாக இருக்கலாம் என்று ஆயிற்று. அதற்கு முன்னால் எஸ்.எஸ்.எல்.சி, படித்து இரண்டாண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்ற பிறகு, செகண்டரி கிரேடு பதவியில்தான் அமர்த்த முடியும். 1—4—1958-க்குப் பிறகு வந்த முறையை 27—3—1958 லேயே அந்த அதிகாரி அமுலாக்கியதாகச் சொல்வது எப்படி சரியானது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதில் கூறப்பட்டிருப்பது. . .

In the Government Memorandum, dated 10th June 1960 it was ordered that the teachers who appeared for the Secondary Grade T.S.L.C. examination in March 1958 and passed it were not entitled to Secondary Grade scale of pay automatically and if and when they were appointed to Secondary Grade posts they would become eligible for Secondary Grade scale of pay like other Secondary Grade teachers appointed to Secondary Grade posts after 1st April 1958.

Thiru G. SWAMINATHAN: Sir, the Government Order came into effect on 1st April 1958. The teacher in this case was appointed on 27th March 1958 as Secondary Grade teacher, because he had the qualification of S.S.L.C. and also two years' Secondary Grade training. The persons who were appointed after 1st April 1958 to Higher Grade posts were entitled to Higher Grade scales of pay only, even though they had Secondary Grade qualifications.

A person who had been appointed 3 or 4 days earlier to the coming into effect of the Government Order cannot be reverted to the Higher Grade post later on. The department has done a wrong thing, with no relief in spite of repeated representations. The teacher has now gone to the court. I think the department is now trying to solve the problem by saying that the appointment itself was made by a mistake. Will the Hon. Minister kindly look into the problem and do justice to the teacher who is affected?

[8th December 1971

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தவறுதலாக செகண்டரி கிரேடு போஸ்ட் தரப்பட்டுவிட்டதாக பிறகு கண்டுபிடித்து அதன் படி ஹையர்கிரேடு என்று போடப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தனியாக இதுபற்றி விவரம் கொடுப்பார்களானால், டிபார்ட்மெண்டை விளக்கம் கேட்கவேண்டி வரும்.

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, may I point out that when this Government Order specifically states that no retrospective effect could be given, the teacher appointed prior to that date cannot be brought under this Government Order? This is a simple question which needs the examination of the Government. May I request the Hon. Minister to have the whole question examined once again, Sir?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மறுபடியும் இதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி விசாரித்து முழுத் தன்மையும் வெளியிடப்படும்.

*Teachers Provident Fund Accounts*

* 95. *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether part-final withdrawal of amounts from Teachers Provident Fund Accounts in aided schools is permitted for purposes other than house construction;

(*b*) if so, whether Government contribution on shrh withdrawals is denied; and

(*c*) if so, the reasons therefor?

ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கிலிருந்து ஒரு பகுதியை, வீடு கட்டுதலைத் தவிர்த்த ஏனைய காரியங்களுக்குப் பயன்படுவதற்காக இறுதியாக திரும்பப்பெற அனுமதிக்கப் படுமா?

(இ) ஆமெனில், அவ்வாறு திரும்பப் பெறப்படும் தொகை குறித்து அரசின் பங்குத் தொகை மறுக்கப்படுகிறதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்

(இ) ஆம்.

(உ) தற்போதைய விதிகளின்படி ஆசிரியர்களின் வைப்பு நிதியிலிருந்து வீடுகட்டுவதற்காக மீட்கும் தொகை மட்டும் அரசாங்கப் பங்குக்காக (Government Share) கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.



8th December 1971]

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, when these amounts have been received from the subscribers, how is the Government contribution on these advances denied? May I bring to the attention of the Hon. Minister that if a subscriber had Rs. 10,000 to his credit, he may draw a sum of Rs. 8,000 as part-final withdrawal? Why is the Government contribution denied on this sum of Rs. 8,000 at the time of the closing of the Provident Fund account?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேறு வகையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கணக்கிட்டால், விடப்படும் கட்டுத் தொகை மட்டும் கணக்கிடப்படும். இப்போது அரசாங்கம் அப்படி முடிவெடுத் திருப்பதால், அந்த வகையில் மேற்கொள்ளப்படுகிறது.

" The Director of School Education, therefore, considers that Rule 13 (*a*) is also applicable in the case of the amounts withdrawn as part-final withdrawal for purposes other than House Construction ". அந்த வகையில்தான் இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, from the reply of the Hon. Minister, I understand that if such part-final withdrawals are to be used for house construction, Government contribution would be available but not otherwise. But there can be purposes which could be even more laudable than house construction. For instance, there may be a sickness at home for which the part-final withdrawal could be utilised. Does the Hon. Minister mean that no Government contribution would be paid, even if such part-final withdrawal had been used for treatment of a sickness at home? If that is the position according to the rules at present, will the Government kindly re-examine the rules and try to amend them?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற விதிகளை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையை ஆராய்ந்துதான் தக்க முடிவெடுக்க வேண்டும்.

(திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் எழுந்தார்கள்)

மிஸ்டர் சேர்மன் : அமைச்சர்தான் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டாரே. அதற்குப் பிறகு என்ன?

திரு. எஸ். முத்துசாமி : தலைவர் அவர்களே, பி. எஃப். ரூல் என்பது நீண்ட காலத்திற்கு முன்னால் போடப்பட்ட காரணத்தினால், ஆசிரியர்களுக்கு பல்வேறு தொந்தரவுகள் அதனால் ஏற்படுவதால் அந்த பி. எஃப். விதிகளை மாற்ற அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுதான் பரிசீலிக்கப்பட வேண்டுமென்று சொன்னேன்.

## *Pension*

* 96 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have ordered that personal pay should be treated as special pay for the purpose of calculation of pension for teachers;

(*b*) if so, whether there are any cases in the Virudhunagar Educational District where it has not been given effect to ; and

(*c*) the reasons therefor ?

## ஓய்வூதியம்

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத்தைக் கணக்கிடும் காரியத்துக்காக தனிப்பட்ட சம்பளம் சிறப்பு சம்பளமாகக் கணக்கிடப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இது விருதுநகர் கல்வி மாவட்டத்தில் செயலுக்குக் கொண்டுவரப்படாத நேர்வு எதுவும் உள்ளதா ?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். ஆனால் அவ்வாறு கணக்கிடப்படும் மொத்த ஊதியம் ஆசிரியர்களின் அதிகப்படி சம்பள விகிதத்திற்கு (Maximum scale of pay) மேற்படக் கூடாது.

(இ) இல்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிதம்பரநாதன் என்ற ஆசிரியருக்கு சிறப்பு ஊதியம் ஓய்வூதியக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று புகார் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த விகிதமும் மற்றவைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். 'மேக்சிமம் ஸ்கேல்' வரும் அளவில்தான் எடுத்துக் கொள்ளப்படும். மற்றவை கணக்கில் வராது. விருதுநகரைச் சேர்ந்த ஆசிரியரைப் பொறுத்த வரையில் ரூ. 140 வாங்கி மேற்கொண்டு ரூ. 10 சேர்த்துத் தர வேண்டுமென்றபோது மேக்சிமம் ஸ்கேல் ரூ. 140 வந்தது. மேற்கொண்டு ரூ. 10 கொடுக்கிற சூழ்நிலை வரவில்லை. ரூ. 10 கொடுக்க வேண்டுமென்றும் ரூ. 150 கணக்காக வேண்டுமென்றும் சொன்னார்கள். அது சட்டப்படி செல்லாது என்று குறிப்பிடப்பட்டது.



## *Panchayats*

* 97 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to supersede those Panchayats which have a population of less than one thousand on the basis of the 1971 census and merge them with the contiguous panchayats; and

(*b*) if so, the action taken in this regard?

## பஞ்சாயத்துக்கள்

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் மக்கள் தொகை ஆயிரத்துக்குக் குறைவாயுள்ள பஞ்சாயத்துக்களைக் கலைத்துவிட்டு, அவற்றின் பக்கமாயுள்ள பஞ்சாயத்துக்களுடன் அவற்றை இணைக்கும் செயற்குறிப்பு அரசினிடம் உண்டா?

(இ) ஆமெனில், அதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துச் சட்டம் செய்து பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படும்போது, அவசரம் அவசரமாக 500 பேர் ஜனத்தொகை கூட இல்லாமல், 200, 300 ஜனத்தொகை கொண்ட சிறிய பகுதிகள் எல்லாம் பஞ்சாயத்துக்களாக அமைக்கப்பட்டுவிட்டன. இப்போது பிரத்தியட்ச நிலைமையைப் பார்க்கும்போது 100, 200 ஜனத்தொகை கூட இல்லாத பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதைப் பரிசிலனை செய்து மாற்றியமைக்க வேண்டும். சிறிய பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துக்களை நிர்வகிக்கக் கூட தகுதியுள்ளவர்கள் கிடைக்காத நிலைமை இருப்பதால், அதைப் பரிசிலனை செய்து 1,000 ஜனத்தொகை உள்ள பஞ்சாயத்துக்களாக அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போதுள்ள சட்டப்படி 500-க்கு குறைவாக ஜனத்தொகை இருக்கிற எதுவும் பஞ்சாயத்தாக இருக்கக் கூடாது என்றுதான் இருக்கிறது. அந்தச் சட்டம் இன்னும் மாற்றப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல, 200, 300 ஜனத்தொகை கொண்டவையாக இருந்தால், அவற்றைப் பக்கத்திலுள்ள பஞ்சாயத்துக்களோடு இணைக்க வேண்டும். 5,000-க்கு உட்பட்டிருந்தால், ஊராட்சி மன்றம் என்றும், அதற்கு மேற்பட்டிருந்தால் பேரூராட்சி என்றும் அமைக்கும் நிலை வரும். 500-க்கு உட்பட்டிருந்தால், வேறு ஊராட்சியோடு இணைக்கும் நிலை வரும். ஊராட்சி மன்றம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது கூட 300-க்குக் குறையக் கூடாது என்ற விதியிருக்கிறது. ஒரு வட்டாரம் ஓர் ஊராட்சியிலிருந்து மற்றோர் ஊராட்சியில் சேர்க்கப்பட்டாலோ அல்லது தனி ஊராட்சி

யாக ஏற்படுத்தப்பட்டாலோ அன்றி விலக்கப்பட மாட்டாது. ஒரு வட்டாரம் ஓர் ஊராட்சியிலிருந்து விலக்கப்படுவதோ சேர்க்கப்படுவதோ அவ்விதம் விலக்கப்பட்ட அல்லது சேர்க்கப்பட்ட பின்னர் உள்ள ஊராட்சிகளில் வருமானம் போதுமானதாக இருந்து, நிர்வாகத்தை சரிவர நடத்த இயலும் என்றறிந்த பின்னரே செய்யப்படும். ஒரு வட்டாரம் ஓர் ஊராட்சியிலிருந்து பிரிக்கப்பட்டால், அதனுல் அந்த ஊராட்சியின் வருமானம் கணிசமான அளவு குறைக்கப்படுமானல், அவ்விதம் பிரிக்கப்படமாட்டாது. சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் கலந்து ஆலோசிக்கப்பட்ட பின்தான் பிரிக்கப்படும். ஓர் ஊராட்சி ரெவின்யூ கிராமமாக இருந்தால், அதனின்று வட்டாரங்கள் விசேஷக் காரணங்களின்றி பிரிக்கப்படமாட்டாது. ஒன்றுக்கு மேற்பட்ட ரெவின்யூ கிராமத்தைக் கொண்டுள்ள ஊராட்சிகள் பிரிக்கப்படுமுன் வருவாய்த் துறை நிர்வாகப் பிரிவுடன் ஒன்றியதாகவும் ரெவின்யூ கிராமங்கள் பிரிக்கப்படாத வழியிலும் செய்யப்படும். இந்த விதிகளுக்கு மாருக இருந்தால் பக்கத்திலுள்ள ஊராட்சியோடு இணைக்குமளவில் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

*Part-time Degree Course*

* 98 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the total number of students admitted during the year 1970-71 in the Thiagarajar Engineering College and other Engineering Colleges affiliated with the Madurai University for the part-time degree courses; and

(*b*) whether there is any proposal to increase this number?

பகுதி நேர பட்டப் படிப்பு

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பகுதி நேர பட்டப் படிப்பிற்கு, மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்துள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மற்றும் ஏனைய பொறியியல் கல்லூரிகளில், 1970-71-ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(இ) இந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 1970-71-ல் ஒருவரும் சேர்க்கப்படவில்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.



*Cardamom Estates.*

* 99 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Cardamom Estates in the State;

(*b*) whether all of them have been registered with the Cardamom Board; and

(*c*) the various classifications made of them?

ஏலக்காய் எஸ்டேட்டுகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள ஏலக்காய் எஸ்டேட்டுகள் எத்தனை?

(இ) இவை யாவும் ஏலக்காய் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

(உ) அவை எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 817.

(இ) 326 தோட்டங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

(உ) (1) உடைமையாளர் தோட்டம், (2) ஒத்திதார் தோட்டம், (3) குத்தகைதார் தோட்டம், (4)இதர நபர்கள் வசமிருக்கும் தோட்டம்.

*Foot-wear company*

* 100 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any foot-wear company has been started at Madhavaram in Madras City with Italian Collaboration during February or March 1971; and

(*b*) if so, the details thereof?

செருப்புக் கம்பெனி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இத்தாலியர் ஒத்துழைப்புடன் 1971 பிப்ரவரி அல்லது மார்ச்சில் சென்னை மாநகர் மாதவரத்தில் செருப்புக் கம்பெனி ஒன்று துவங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இந்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்தாலிய நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டுடன் தனியார் துறையில் இந்தோ-இத்தாலிய பாத அணி

[8th December 1971

உற்பத்தி நிறுவனம் ஒன்று சென்னையில் பாத அணிகள் செய்வதை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 லட்சம் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5.7 லட்சம்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, இதில் அரசாங்கம் ஏதாவது பணம் முதலீடு செய்திருக்கிறதா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* இல்லை.

THIRU D. SANTOSHAM : Sir, may I know the reason for this Italian collaboration for the mere making of foot-wear? Is it because of the need for raw material which is available in plenty, or is it because we do not have people who know the art of foot-wear making? May I know the reason for this collaboration?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* உற்பத்தியைப் பொறுத்த வரையில், பெரும்பாலும் நம்மிடத்தில் மூலப்பொருள்கள் இருக்கின்றன. சந்தை நமக்குக் கிடைக்க வேண்டும். வெளிநாடுகளில் புதிய ரகங்கள் வரும்போது, அவற்றிற்கு ஏற்றவாறு உற்பத்தியைப் பெருக்கியனுப்ப வேண்டும். இப்போது தோல் பதனிட்டு அதனை அனுப்புகிறோம். முதல் முயற்சியாக அந்தந்த நாட்டு நிறுவனங்களோடு கூட்டு சேர்ந்து அவர்களுடைய தேவைக்கு ஏற்ப 'புாட் ருஸ்டு குட்ஸ்' இங்கே உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கொள்கையில் இது முதல் கட்டம்.

### *Automobile Workshop on Kodai Hills*

* 101 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government Automobile Workshop on Kodai Hills has been closed; and

(*b*) if so, the reason therefor?

### மோட்டார் வண்டி பணிக்களரி, கோடைக்கானல்

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோடைக்கானலிலுள்ள அரசின் மோட்டார் வண்டி பணிக்களரி மூடப்பட்டுள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) & (இ) தமிழ் நாடு சிறுதொழில்கள் கார்ப்பரேசனின் பொதுநோக்குப் பொறியியல் பணிமனைக்கு குறிப்பிட்ட சில காலங்களில் மட்டுமே வேலை கிடைத்ததனாலும், அது தொடர்ந்து நஷ்டத்தில் வேலை செய்து வந்ததாலும் அப்பணிமனை மூடப்பட்டது.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* அந்தப் பணிமனை எவ்வளவு தொகை முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது? எவ்வளவு காலம் நடந்தது? எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது?



8th December 1971]

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* 1967-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் மொத்த நஷ்டம் மூன்றாண்டுகளுக்குச் சேர்ந்து சுமார் ரூ. 2 லட்சம் முதலீடு பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU D. SANTOSHAM : Sir, may I know what use the buildings would be put to after this Automobile Workshop is closed, since I find they are very fine and good buildings?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* வேறு துறைக்குப் பயன்படுமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### *Madurai Circuit House.*

* 102 Q.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to expand Madurai Circuit House buildings; and

(*b*) if so, when the work will be started?

### சுற்றுலா மாளிகை

*திரு. எஸ். எஸ். தென்னரசு :* மாண்புமிகு பொது பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை சுற்றுலா மாளிகை ( Circuit House )-யை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* (அ) ஆம்.

(இ) இவ்வேலைக்கு அரசு அனுமதி இன்னும் அளிக்கப்படவில்லை. அதனால் இவ்வினாவிற்கு இடமில்லை.

### *Radhapuram Channel.*

* 193 Q.—HIRU K. RAMAKRISHNA ACHARI. Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the basis on which water is let into Radhapuram Channel from Pechiparai, Perunchani dams, etc.;

(*b*) whether water is let off from these dams without any regulating system;

(*c*) if so, whether lands in Thovalai and Agastheeswaram Taluks will be affected by this; and

(*d*) if so, the action proposed to be taken by the Government?

**ராதாபுரம் வாய்க்கால்**

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேச்சிப்பாறை, பெருஞ்சாணி முதலிய அணைகளிலிருந்து ராதாபுரம் வாய்க்காலுக்கு தண்ணீர் பாய்ச்சுவது எந்த அடிப்படையில் நடக்கிறது?

(இ) எந்தவிதமான திட்டமும் இல்லாமல் இவ்வணைகளிலிருந்து தண்ணீர் விடப்படுகிறதா?

(உ) ஆமெனில், தோவாளை அகஸ்தீசுவரம் தாலுக்காவிலுள்ள நிலங்கள் இதனால் பாதிக்கப்படுமா?

(எ) ஆமெனில், அரசு எடுக்க உத்தேசிக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் ஏற்கனவே தேங்கும் நீர் கோதையாறு ஆயக்கட்டு நிலங்கட்குப் பயன்படுகிறது. இவ்வணைகளின் உயரத்தை 6 அடி அதிகப் படுத்தியதால் ஏற்படும் கூடுதலான நீரும், மற்றும் சிற்றாறு குறுக்கே கட்டப் பட்டுள்ள இரு அணைகளிலுள்ள நீரும் பட்டணம்கால் மற்றும் ராதாபுரம் வாய்க்கால் புதிய ஆயக்கட்டு நிலங்கட்கு பயன்படுத்தப்படும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை. தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுக்காவிலுள்ள நிலங்கள் கோதையாறு அமைப்பின்கீழ் உள்ளன. அவை இதனால் பாதிக்கப்பட மாட்டா.

(எ) இப்பிரச்சனைக்கு இடமில்லை.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: பேச்சிப் பாறை அணையில் எத்தனை அடி வரையில் இருந்தால், ராதாபுரம் சானலுக்கு தண்ணீர் விடப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. கோதையாறு பாதிக்காதவாறு சிற்றாறு பட்டணம்கால் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதாக தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார்.

*Taxi Drivers Token Strike*

* 104 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether Taxi drivers in Madras City went on one day token strike in the first week of August, 1971; and

(*b*) if so, the reasons therefor?



**டாக்ஸி டிரைவர்கள் அடையாள வேலை நிறுத்தம்**

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில் டாக்ஸி டிரைவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் செய்தனரா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமசந்திரன்: (அ) ஆம் 5—8—1971 அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) ஒப்பந்த ஊர்தி உரிமையாளர்கள் ஓட்டுனர்கள் கோரிய அதிகக் கூலி கொடுக்காததால் வேலை நிறுத்தம் செய்தனர்.

THIRU D. SANTOSHAM: Sir, these taxi strikes are quite frequent in Madras City and the public are put to much inconvenience on such days. Will the Government consider the running of extra buses at least on those days to satisfy the consumers?

THE HON. THIRU S. RAMACHANDRAN: It is not as frequent as the hon. Member pointed out. Anyhow we are running special buses to cope with the demand of traffic. Whenever the taxi-men go on strike, there is profit to the State Transport Department.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, டாக்சிகாரர்களுடைய வேலை நிறுத்தம் ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு நடந்திருக்கிறது என்று அமைச்ருக்குத் தெரியுமா?

THE HON. THIRU S. RAMACHANDRAN: So far as this year is concerned, only once the taxi-men have gone on strike and that too, against the taxi-owners.

*Temples*

* 105 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a number of temples in the State are in financial difficulties consequent on non-payment of rent by tenants; and

(*b*) if so, the action proposed to be taken by the Government thereon?

**கோயில்கள்**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிலக் குத்தகைக்காரர்கள் வாரம் செலுத்தாத காரணத்தால் இம் மாநிலத்தில் பல கோயில்கள் நிதி நெருக்கடிக்குட்பட்டுள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

[8th December 1971

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) & (இ) குத்தகைதாரர்கள் பாக்கிகளைக் காலத்தில் கொடுக்கத் தவறியதால், அறநிலையங்கள் வசூலிக்க வேண்டிய பாக்கிகள் இருக்கின்றன. எனினும் காலப்போக்கில் வசூலை மும்முரப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பலன் தருவதால் அறநிலையங்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படப் போவதில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எத்தனை லட்சம் ரூபாய் மொத்தத்தில் பாக்கியிருக்கிறது? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, எத்தனை லட்சம் ரூபாய் என்கிற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் கோடிக்கணக்கான ரூபாய்கள் வரவேண்டிய பாக்கிகள் இருக்கின்றன. அவைகளுக்கு நடவடிக்கை எடுக்க அற நிலையத் துறை ஆணையர் பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட் 19-வது பிரிவுக்குத் திருத்தம் கோரியிருக்கிறார்கள். இத்திருத்தத்தின் மூலம் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வரும் அறநிலையங்களின் நிலங்களைப் பொறுத்த வரையில் குத்தகைதாரர்களிடமிருந்து கோயில்களுக்குச் சேரவேண்டிய பாக்கிகளைப் பொறுத்த சான்றிதழ்களை அறநிலையத் துணை ஆணையர் அல்லது உதவி ஆணையரே வழங்கும் வகையில் அதிகாரம் அளிக்கப்பட்டால், அத்தகு குத்தகை பாக்கிகளை நிலவரி வசூல் சட்டத்தின் கீழேயே வசூலித்துவிடலாம் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் வருவாய்த் துறை இத்திருத்தம் தேவையில்லை என்றும் இது தொடர்பான வழக்குகளை விரைவில் விசாரித்து முடிக்க ஏற்பாடு செய்யலாமென்றும் கருத்து தெரிவித்தது. அண்மையில் நிலச் சீர்திருத்தம் பற்றிய ஆணையர் இத்துறையில் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் பணி குறித்து ஆய்வு நடத்தியபோது ஒவ்வொரு தனித் துணைக் கோட்டாட்சித் தலைவரும் மாதம் ஒன்றுக்கு 200 வழக்குகளை விசாரித்து, தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும் அறிவுறுத்தியிருக்கிறார். விரைவில் இந்த வழக்குகள் தீர்க்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** அரசாங்க நிலங்களுக்கெல்லாம் கூட குத்தகைக்கு விடும்போது ஆண்டுக் குத்தகையை முன் பணமாகச் செலுத்த வேண்டுமென்ற வரம்பு இருக்கிறபொழுது, இந்தக் கோயில் நிலங்களைக் குத்தகை எடுக்கிறவர்கள் ஒரு வருஷக் குத்தகைத்தொகையை முன் பணமாகக் கொடுக்க வேண்டுமென்று வரம்பு கட்டி விதி விதித்து அதன்படி செயலாற்ற அரசு தக்க ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, நீண்டகாலக் குத்தகை ஒவ்வொரு கோயில் நிலத்தை அனுபவிப்பவர்களிடமிருந்து வருகிறது. பழைய பாக்கிகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கிறோம். மேற்கொண்டு குத்தகைக்கு விடும்போது, அந்த நிலங்களை அத்தகைய முறையில் விடலாமா என்று பார்க்கும்போது, ஏற்கனவே குத்தகை இருப்பதால், அவர்களுக்குச் சாதகமாகச் சட்டம் இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து உறுப்பினருடைய யோசனையை மேற்கொள்ள வேண்டிய நிலைமை வரும்போது கருத்தில் கொள்ளலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** கூட்டுறவுத் துறையில் வரவேண்டிய பாக்கியை வசூலிப்பதற்கு எப்படி அந்தத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கிச் செய்யப்படுகிறதோ, அதே போன்று கோர்ட் நடவடிக்கை



8th December 1971]

மாதிரி அறநிலயத்துறையில் உள்ள அதிகாரிகளுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து அவர்களே அந்தப் பணத்தை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஏற்கனவே குறிப்பிட்டேன். பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட் 19 வது பிரிவிற்குத் திருத்தம் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திருத்தம் செய்து துணை ஆணையர் அல்லது உதவி ஆணையருக்கு அதற்கான அதிகாரம் வழங்க வேண்டுமென்று ஆணையர் குறிப்பு அனுப்பியிருக்கிறார். நிலச் சீர்திருத்தம் பற்றிய ஆணையர் அத்திருத்தம் தேவையில்லை என்றும் மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு 200 வழக்குகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்தால், விரைவில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கலாம் என்றும் சொல்லியிருப்பதால், அந்த முறையில் இப்போது நடைபெறுகிறது.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, ஆலயங்களுக்கு வருகிற வருமானம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சரியாக வசூல் செய்ய முடியவில்லை. வழக்குத் தொடர்ந்தாலும் அதில் முழுவதும் வெற்றி பெற முடியாது. ஆகையால் அந்த நிலங்களை விற்றுவிட்டு அத்தோடு தங்கம், வெள்ளி போன்ற பொருள்களையும் விற்று அவற்றைத் தொழிலில் முதலீடு செய்வதன் மூலம் வருமானம் பெருக அரசு வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

*Temple Tanks*

* 106 Q.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to entrust the maintenance of the Temple Tanks under the control of the Hindu Religious and Charitable Endowments Department to the Public Works Department?

தெப்பக் குளங்கள்

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து அறநிலையங்களுக்குப்பட்ட தெப்பக் குளங்களை Tanks பொதுப் பணித் துறையினரின் பராமரிப்பில் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

*Thiruvalluvar Temple*

* 107 Q.—THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be please to state—

(a) the annual income of the Thiruvalluvar Temple at Mylapore; and

(b) whether there is a proposal with the Government to find ways and means to augment the income of the temple?

[8th December 1971

திருவள்ளுவர் கோவில்

***தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்):*** *மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) மயிலை திருவள்ளுவர் கோவிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு வருவாய் என்ன?*

*(இ) அந்தக் கோவிலின் வருவாயை அதிகப்படுத்த வழி வகை காண அரசுக்குத் திட்டம் உண்டா?*

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:*** *(அ) சராசரி ஆண்டு வருமானம் ரூ. 5,107.*

*(இ) ஆம்.*

***திரு. டி. கே. ஷண்முகம்:*** *தலைவர் அவர்களே, மயிலை திருவள்ளுவர் கோயிலை வெளிநாட்டாரும் விரும்பி வந்து காணுமளவிற்கு விஸ்தரிக்கக் கூடிய செயல் குறிப்பு ஏதேனும் உண்டா?*

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:*** *தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துப்படி, திருவள்ளுவர் ஆலயத்தைத் திருவள்ளுவரின் நினைவாலயமாக விளங்குகிற வகையில், திருக்குறள் சம்பந்தமான ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி, நூலகம் ஏற்படுத்தி, இவைகளைச் செய்வதன் மூலமாக அது ஒரு கலைக் கோயிலாகத் திகழ வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்ததை மேற்கொண்டு அதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.*

***திரு. டி. கே. சுப்பையா:*** *அதனுடைய வருவாயை அதிகப்படுத்த அரசு வழிவகை செய்திருக்கிறதா?*

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:*** *தலைவர் அவர்களே, இந்தக் கோயிலின் முன்புறத்தில் இருக்கிற காலி இடத்தில் கடைகளைக் கட்டி வாடகைக்கு விடும் யோசனை இருக்கிறது. நீண்டகாலமாக ஆரம்பிக்கப்பட்டு முடியாமல் இருக்கிற திருமண மண்டபத்தை விரைவில் முடிக்க வேண்டுமென்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

***திரு. கே. அறிவழகன்:*** *திருவள்ளுவர் கோயிலில் பல புதிய ஆண்டவர்கள் புகுந்திருக்கிறார்கள். அவர்கள் எப்போது புகுந்தார்கள்? அவர்களுடைய பதவிக்காலம் எப்போது முடியும்?*

***மிஸ்டர் சேர்மன்:*** *ஆண்டவர்களைத்தான் கேட்க வேண்டும்.*

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:*** *புதிய ஆண்டவர்கள் புகுந்த தகவல் அரசிடம் இல்லை.*

***திரு. ஜி. சுவாமிநாதன்:*** *பழைய ஆண்டவர்கள், புதிய ஆண்டவர்கள் என்பதற்கு விளக்கம் அளிப்பார்களா?*

***மிஸ்டர் சேர்மன்:*** *போன நூற்றாண்டு, இந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்.*



8th December 1971]

* 108 *Q.*—THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the Agama Procedure followed in the performance of Pooja in the Thiruvalluvar Temple, Mylapore;

(b) whether this procedure is in conformity with the principles enunciated in Thirukkural; and

(*c*) if not, whether there is any proposal with the Government to make arrangements for the performance of Pooja in the temple by following the principles enunciated in Thirukkural?

***தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்):*** *மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) மயிலை திருவள்ளுவர் திருக்கோவிலில் இன்று நடைபெறும் பூசனை எந்த ஆகம வழிப்பட்ட பூசை?*

*(இ) அந்தப் பூசனை முறை திருக்குறளுக்கு உடன்பாடுடையதா?*

*(உ) இல்லையெனில், திருக்குறள் தத்துவ அடிப்படையில் பூசனை நடைபெற ஏற்பாடு செய்ய அரசுக்கு நோக்கம் உண்டா?*

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:*** *(அ) திருவள்ளுவர் கோயிலில் நடைபெறும் பூசை சிவ பூசையை அடிப்படையாகக் கொண்டது.*

*(இ) கற்பூர தீபாராதனை நடைபெறும்பொழுது திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்துப் பாட்டும், திருக்குறள் சிறப்புப் பாயிரத்திலிருந்து பாடல்களும் பாடப்படும். இம்முறை திருக்குறளுக்கு உடன்பாடுடையதுதான்.*

*(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

MR. CHAIRMAN: Now we will take up questions postponed from the list for 7—12—1971.

*Child Welfare Development Scheme*

* 79 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether funds have been received from the Central Government for Child Welfare Development Schemes during 1970-71 and 1971-72; and

(*b*) if so, the details thereof?

குழந்தை நல மேம்பாட்டுத் திட்டம்

***திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:*** *மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில், குழந்தை நல மேம்பாட்டுத் திட்டங்களுக்காக, மத்திய அரசிடமிருந்து நிதிகள் பெறப்பட்டனவா?*

*(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?*

[8th December 1971

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மகளிர்—சிறுவர்களுக்கான ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் நேர்முக உணவளித்தல் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 1970–71-ல் இந்திய அரசிடமிருந்து ரூ. 1,52,666 கிடைத்தது. இந்தப் பணித் திட்டத்தை ரூ. 4,97,240 செலவில் 1971–72-லும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காகத் தங்களது இசைவை இந்திய அரசு தெரிவித்துள்ளது.

### *Fishing Harbour*

* 80 Q.—THIRU K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a fishing harbour at Leepuram, Agastheeswaram Taluk, Kanyakumari District; and

(*b*) if so, when the investigation work will be taken up therefor?

### மீன்பிடி துறைமுகம்

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குமரி மாவட்டம் அகஸ்தீசுவரம் தாலுகா லீபுரம் என்ற இடத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதற்கான ஆய்வு வேலைகள் எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: இது படகுத் துறைக்கு வசதியான இடம் என்பதனால் படகுகளை நிறுத்துவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க ஏதாவது ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உணவு வேளாண்மைத் துறை நிறுவனம் இது குறித்துப் பரிசீலனை செய்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் லீபுரம், முட்டம், குளச்சல் ஆகிய பகுதிகளில் எந்த இடத்தில் இப்படிப்பட்ட மீன்பிடித் துறைமுகம் கட்டலாம் என்று பரிசீலனை செய்யப்பட்டு குளச்சலில் கட்டலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். மீன்துறை துறைமுகம் கட்டுவது என்பது செலவுமிகுந்த திட்டம். படகுகள் ஒருங்கு சேர்த்தல், இடவசதி, மற்றப் படகுகள் வருகை, சாலைப் போக்குவரத்து, ரயில் வசதி முதலியவற்றைப் பொறுத்து, இந்த இடத்தை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். லீபுரத்தில் இருப்பது அமைதியான கடல் சூழ்நிலை உள்ள இடம். நங்கூரம் இட்டு வைக்கலாம் என்று கூறப்படுகிறது. படகுகளைக் கொண்டுவர, நிறுத்த வசதியாக இருக்குமென்று சொல்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நல்ல முறையில் வசதியாக இருக்கும் இடம் குளச்சல் பகுதியில் இருப்பதால், அங்கே மீன்பிடித் துறைமுகம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



8th December 1971]

MR. CHAIRMAN : Questions are over.

NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.)

## II. ANNOUNCEMENT RE MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971), as passed by the Assembly, and signed by him for the concurrence of the Council.

## III. ADJOURNMENT MOTION RE FIRING AT KARUVALAMVANDANALLUR OF SANKARANKOIL TALUK.

MR. CHAIRMAN : I have received notice of a motion from Thiru T. K. Subbiah for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the unprovoked firing at Karivalamvandanallur of Sankarankoil taluk, Tirunelveli district on the peaceful crowd assembled in front of the police station to enquire about the death of Chinnaperumal, a Harijan, who died in the police lock-up due to the indiscriminate beating by the police, on the 19th November 1971 resulting in the death of two Harijans and injuries to many.

The Government have since constituted a Commission to enquire into the incidents of the police firing under the Commissions of Inquiry Act, 1952. I, therefore, withhold my consent for raising the matter.

## IV. CALLING ATTENTION TO HARDSHIP EXPERIENCED BY THE PUBLIC IN MADRAS CITY CONSEQUENT ON INCREASE IN BUS FARES.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, I like to call the attention of the Hon. the Minister for Transport to a matter of urgent public importance, namely, the hardship experienced by the public in Madras City consequent on the increase in bus fares.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the fare structure in the Madras City was last revised in 1964 with a minimum fare of ten paise for the first stage of approximately two kilometers and four paise for every subsequent stage. Owing to scarcity of coins, in 1967, the fares were rounded off to five paise with the result certain redundant stages were created. Consequently, a section of the passengers paid lesser fares though they travelled longer distances and the State Transport Department was deprived of its legitimate revenue. From the 1st October 1971, the redundant stages have been abolished and the fare structure

[Thiru S. Ramachandran]

has been made rational thereby ensuring that a person who travelled a longer distance paid more by way of fare than the one who travelled a shorter distance. Out of the ten lakhs passengers carried by the State Transport buses every day, there has been no increase in fares in respect of 6.8 lakhs who travel only up to six kilometres. In the case of another three lakhs, the increase has been only five paise per ticket as they travel a distance of eight to fourteen kilometres. Only in respect of about twenty thousand people the maximum increase is about 15 paise per ticket.

With a view to avoiding unhealthy competition between the bus operators including the State Transport in the matter of charging of fares, the Government have issued statutory directions for collecting uniform rates of fares in the stage carriages in this State. Under these directions the State Transport has to charge three paise per kilometre along with the private operators in the mofussil routes with effect from 1st October, 1971 as against 2½ paise charged previously. According to the Tamil Nadu Motor Vehicles Rules, a route which has one terminus in the town and has a length of not more than 24 kilometres is a town or city service route. In such routes the city fares can be charged. Prior to 1st October, 1971, 120 State Transport services covering 48 routes which should have been classified as mofussil routes were treated as city routes and in them the city fares were collected, through they were not covered by the description of the city route in the rules. This anomaly was set right with effect from 1st October 1971 and mofussil rates are charged in them. The people who are residing or working outside greater Madras and using these services have now to pay the mofussil rates of fares which are a little higher than the rates for town services. As already pointed out, these people form only a negligible part of the city passengers. However, with a view to lightening the hardship of these people, the State Transport Department is now actively engaged in rationalising the routes which have been re-classified as mofussil routes. Such of these routes which lend themselves to convenient splitting with one terminal in the city and another outside the city, the distance between the two terminals not exceeding 24 kilometres, will be taken up for rationalisation. When this is done, the benefit of lower fares applicable to town services will be available to the passenger population travelling in suburban routes coming within the scope of the proposed rationalisation of routes.

## V. DISCUSSION ON THE ANNUAL FINAANCIAL STATEMENT FOR 1971-72 AND THE SUPPLEMENTARY FINANCIAL STATEMENT 1970-71 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD.

MR. CHAIRMAN: Now the discussion on the Electricity Board Budget will be resumed. Thiru R. Krishnawamy Naidu.



* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, 1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீது மேற்கொண்டுள்ள விவாதத்தில் எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மின்சார வாரியம் மாநில அரசினுடைய வருவாயிலேயே கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறில் ஒரு பங்குத் தொகையை நிர்வகித்து வரும் ஒரு பெரும் ஸ்தாபனமாக இருந்து வருகிறது. இந்த் ஸ்தாபனம் மேலும், மேலும் வளர்ச்சி அடைய வேண்டிய அவசியத்தை நாம் அனுபவபூர்வமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். இந்த வரவு-செலவுத் திட்டம் கிட்டத்தட்ட ரூ. 70 கோடிக்கு அதிகமான தொகையை ஈடுபடுத்திப் போடப்பட்டிருக்கிறது. இந்த இலாகாவிலே 84,000 பேர் பணி புரிவதாக நாம் அறிகிறோம். வருவாய்த் துறையில் பணி புரிபவர்கள், கிராமத்திலுள்ள வெட்டியான், தலையாரி உள்பட பார்க்கின்றபோது, பல்லாயிரக் கணக்கானபேர் இருக்கிறார்கள் என்று நாம் நினைத்திருந்தோம். இப்பொழுது இந்த மின்சார வாரியத்தில் பணி புரிபவர்கள் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, அது எவ்வளவு பெரிய பணியையும் பொறுப்பையும் மேற்கொண்டிருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. மாநில அரசாங்கத்தினுடைய இலாக்காக்களிலே இந்த மின்சார இலாகா---பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே என்னுடைய கருத்து—நல்ல ஒரு இலாகா. தன்னுடைய பலத்திலேயே தன்னை வளர்த்துக்கொண்டு, பொது மக்களுக்கும் நன்மையைச் செய்ய வேண்டிய காரியத்தில் ஈடுபட்டு, அதற்கான வருவாயையும் அதுவே ஈட்டிக்கொண்டு, அது செய்து வரும் பணிகள் பிரத்யட்சமாகத் தெரிகின்றன. அது பொது மக்களுடைய திருப்தியைப் பெருமளவுக்கு அவர்களுடன் நல்ல தொடர்பு கொண்டிருக்கும் ஒரு உன்னத இலாகாவாக மிளிர்கிறது. மற்ற இலாகாக்களை எடுத்துக் கொள்கின்றபோது, அவைகளின் நிதி, திட்டமிடுதல் வேறு விதங்களில் அமைந்துள்ளது. இந்த இலாகா தன்னுடைய பணிகளைத் தானே திட்டமிட்டு தானே நிறைவேற்றி அதன் பலன்களைப் பொது மக்கள் அடையும்படி செய்து வருகிறது. அந்தப் பணிகளைச் செய்வதற்கான நிதி வசதியையும் தானே தேடிக்கொள்வதற்கான வழி வகை செய்துகொள்ளும் நம்பிக்கையையும் பொறுப்பையும் பெற்றுள்ள ஒரு இலாகாவாக மிளிர்கிறது. பல்லாண்டுகளுக்கு முன்னதாக இந்த இலாகா பொது மக்கள் மத்தியில் வாடிக்கைக்காரர்களுக்காகத் தேடித் திரிந்த காலம் இருந்தது. மின்சார பம்ப்செட்டுகள் மூலமாகப் பெறப்படும் தண்ணீர் பயிர்களுக்குக் கேடு செய்யும் என்று விவசாயிகள் நம்பிய காலமுண்டு. அதன் காரணமாக அந்த விவசாயிகள் பம்ப்செட்டுகள் மூலமாகத் தண்ணீர் பெற்று விவசாயம் செய்யத் தயங்கிய காலம் இருந்தது. இன்றைய தினம் வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு இலாகாவாக அது அமைத்துவிட்டது. அதன் மூலமாக நாடும் மக்களும் வளர்ந்து வருகிறார்கள். இந்த மின்சார இலாகாவினுடைய பணி ஓரளவோடு நின்று விடுவதில்லை. எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றதோ, அதையொட்டித் திட்டங்கள் மேலும் மேலும் போடப்பட்டு, தொழில்கள் வளர்வதன் காரணமாக மின்சாரத்தின் தேவை எப்பொழுதுமே இருந்துகொண்டிருக்கிறது. மக்களிடம் எந்த அளவுக்கு மின்சாரத்தின் மூலமாகப் பெரும் பலன்கள் மீது நம்பிக்கை வளர்கிறதோ அந்த அளவுக்கு அதை வழங்கக்கூடிய சக்தியைப் பெருக்குவதற்குத் திட்டமிடப்படுகிறது. அனல் மின்சாரம், நீர் மூலம் கிடைக்கும் மின்சாரம், அணு மின்சாரம் என்று இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

கொண்டு, திட்டமிட்டு இத்தனை 100 மெகவாட் மின்சாரம் கிடைக்கப்படுகிற தென்று அந்த இலாகாவினர் சொல்வதன் மூலமாக நாம் அறிந்துகொள்கிறோம். ஆகவே மேலும், மேலும் திட்டமிடப்படும் ஒரு நாட்டில் ஒரு திட்டத்தை விட மற்றொரு திட்டம் அதிகத் தொகையைக் கொண்டதாகவிருக்கும்போது, திட்டங்கள் எப்படி வளர்ந்துகொண்டு போகிறதோ, அதே போல் அதுவும்
5-10 p.m. அதனுடைய பணிகளும் வளர்ந்துகொண்டு தான் இருக்கும். அத்தகைய ஒரு இலாகாவினுடைய வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கின்ற நேரத்தில், பொதுவாக என்னுடைய கருத்து, சீர்மையும், செய்நேர்த்தியும், நல்ல சிக்கனமும் பல்லாண்டுகளுக்கு முன் நல்ல முறையில் இருந்து வந்தது தற்போது குறைந்துவிட்டதென்று கருதுகிறேன். குடும்பம் சிறியதாகவிருக்கும்போது, நச்சுப் பிச்சு இல்லாமலிருக்கும். அதிகக் காசு தேவைப்படுகிறபோது, குடும்பம் பெரிய குடும்பமாகும்போது முன்னாலிருந்த சீர்மையும், செய்நேர்த்தியும், நல்ல சிக்கனமும் இருப்பதில்லை என்பது என்னுடைய கருத்து.

திரு. எஸ். டி. ஆதித்தன்: இது சுய அனுபவமா?

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: நான் சொன்னது கண்ணுக்கு முன்னால் தெரிகின்ற அனுபவம். ஆகையினால் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் ரோட்டில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் கொண்டு போவதற்காகக் கம்பிகளை அமைக்கும்போது, ரோடுகளை வெட்டிப்போடுகிறார்கள். அந்தப் பகுதிகளை மறுபடியும் மூடுகின்றபோது பழையபடி, முன்னாலிருந்த முறையிலேயே செய்து வைக்கவேண்டியது யாருடைய கடமை என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது யாருடைய பொறுப்பாகவிருந்தாலும், அதை அவர்கள் நன்றாகச் செய்ய வேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு நான் பம்பாய், அகமதாபாத் சென்றிருந்தபோது பிரதான சாலைகளில், ரோடுகளை வெட்டி ஒயர் கொண்டுபோன பிறகு, சரியான முறையில் மூடப்படாமலிருக்கின்றனவா என்று பார்த்தேன். ஒரு இடத்தில் கூட இந்த மாதிரி இல்லை. மூடப்பட்ட இடங்கள் தெரியாமலேயே மூடப்பட்டிருந்தன. அம்மாதிரி இங்கு செய்யப்படாமலிருப்பதால் ரோடுகளில் நடப்பவர்கள், டாக்சிகள் ஓட்டுகிறவர்கள், இன்னும் பலர் இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு மின்சார இலாகாவைச் சபிக்கிறார்கள், குறை கூறுகிறார்கள். இதை மின்சார இலாகாவினர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதிலே தான் சீர்மை, செய்நேர்த்தி என்று சொல்லுகிறேன். மின்சார இலாகா பல்லாண்டுகளுக்கு முன் சிறிய பணிகளையும் கண்ணை கவரும் வகையில் செய்து வந்தது. இப்பொழுது அதன் பணிகள் பெருகிவிட்ட காரணத்தால், இந்தக் குறைபாடுகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்பொழுது நம் முன்னால் பைனான்சியல் ஸ்டேட்மெண்ட், முன்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இப்பொழுதுள்ள நடவடிக்கைகள், 1969-70-ம் ஆண்டு கணக்குகள், அமைச்சர் அவர்களுடைய உரை இணைக்கப்பட்டு, அவைகள் எல்லாம் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது நம்முடைய கருத்துக்களைக் கூறுவதற்கான சந்தர்ப்பத்தை நமக்கு அளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு, அதாவது 1971-72-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை எடுத்துக் கொள்ளும் அதே சந்தர்ப்பத்தில், 1969-72-ம் ஆண்டு நிர்வாக



அறிக்கையும் கிடைத்திருப்பதுபற்றி மகழ்சியடைகிறேன். 1965-66-ம் ஆண்டினுடைய இலாகா நிர்வாக அறிக்கைகள் 1970-71-ம் ஆண்டில் கிடைக்கும்படியாகத்தானிருக்கிறது. இப்பொழுது ஒரு மாதத்திற்கு முன்னால் 1965-66-லிருந்து 1968-69 வரையில் உள்ள மற்ற இலாகாக்களின் நிர்வாக அறிக்கைகள் ஒரு கட்டாக வந்தது. 1969-70-ம் வருடத்திய ஒரு பெரிய துறையினுடைய நிர்வாக அறிக்கை இந்த ஆண்டிலேயே கிடைக்குமளவுக்குச் செய்தமைக்கு இலாக்காவினருக்கு, அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுடைய உரையில் இன்னும் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஸ்டேட்மெண்டில் தரப்பட்ட விவரங்களை நாம் எடுத்துக்கொண்டு பார்க்கும் பொழுது, தொழில்களின் தேவைக்கு 50 சத விதம் மின்சாரம் உபயோகப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். விவசாயிகள் தேவைக்கு 23 சத விதம் மின்சாரம் செலவிட்டிருப்பதாக அதிலிருந்து நாம் பார்க்கிறோம். ஆனால் 50 சத விதம் மின்சாரத்தை உபயோகித்த தொழில் துறையில் வரக்கூடிய மின் கட்டணம் 16.81 கோடி ரூபாய். 23 சத விதம் மின்சாரத்தை உபயோகப்படுத்தும் விவசாயத் துறையிலிருந்து வரக்கூடிய வருமானம் 12.28 கோடி ரூபாய். தனியார் லைசென்சுதாரர்கள் மின்சாரத் துறையை நிர்வகிக்கும் பல இடங்களில் விவசாயத் தொழில் மூலம் அவர்களுக்கு கிடைத்த வருமானம் இதில் சேர்ந்திருக்காது என்று கருதுகிறேன். அவைகளைச் சேர்த்ததால் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு விவசாயமானது மேலும் மேலும் வளர்ந்து வருவதால் மேலும் அது தேவைப்படுவதால் இன்னும் கூட விவசாயிகளுக்கு முழுமையாக மின்சாரம் வழங்கப்படவில்லையென்ற நிலையில் தொழில் துறையிலிருந்து மின்சாரத்துக்கு நமக்கு வருகின்ற வருமான அளவுக்கு விவசாயத் துறையிலிருந்தும் வருமானம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. புள்ளி விவரங்களிலிருந்து ஆண்டுதோறும் வளர்ந்திருக்கக்கூடிய விஷயத்தைப் பார்க்கும்பொழுது, விவசாயத் துறையிலும் வருமானம் தொழில் துறைக்கு ஒப்பாக வரும் என்று கருதுகிறேன். இதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயத் துறைக்கு இப்போதுள்ள கட்டண விகிதத்தை உயர்த்த அவசியம் இல்லையென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்று நான் கருதி மகிழ்ச்சியடைகிறேன். எந்த இடத்திலும் கட்டணம் உயரும் என்ற வாடையே இல்லாமல் இருப்பது மிக மகிழ்ச்சியைத் தருகிறது. அது மாதிரியான நிலைக்கு விவசாயத் துறையிலிருந்து வருமானம் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பதைக் கடந்த வருஷங்களிலிருந்து பார்க்கலாம். தொழில் துறையில் மின் கட்டண வருவாய் எவ்வாறு உயர்ந்து வருகிறதோ அதேபோல அதற்கு போட்டி போட்டுக்கொண்டு விவசாயத் துறையிலிருந்து கிடைக்கக்கூடிய மின் கட்டண வருமானமானது பெருகிக் கொண்டே வந்திருக்கிறது. மொத்தத்தில் ரூ. 67 கோடி நாம் வரவு-செலவுத் திட்டத்தில் பார்க்கிறோம். ரூ. 16 கோடிக்கு மின்சாரத்தை வெளி இடங்களிலிருந்து பெறவேண்டிய நிலையில் இருக்கிறோம். நாம் இதற்காக மொத்தம் மின்சார வாரியத்தின் வருமானத்தில் கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கு வெளியிலிருந்து வாங்குவதற்கு நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று நினைக்கும் பொழுது, நமக்கு அது பெரியதாகப்படுகிறது. அதைக் குறைக்க அதில் தன்நிறைவு பெறுவதற்கு இன்னும் பல்வேறு முயற்சிகள் மின்சாரத்துறையில் இருந்துகொண்டிருக்கின்றன என்று அவர்களுடைய அறிக்கையிலிருந்து

தெரிகிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளவேண்டிய வேலைகள் பற்றியும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் எல்லாம் மேலும் மேலும் எடுத்துக்கொண்டு துரிதமாக முடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ரூ. 67 கோடி வருமானத்தில் 'ரிசர்வ்'க்காக ரூ. 13.81 கோடி, வட்டிக்காக ரூ. 11.40 கோடி, மின் உற்பத்திக்காக ரூ. 8.85 கோடி, நிர்வாகத்திற்காக ரூ. 16.47 கோடி என்று காணப்படுகிறது. நாம் மின் உற்பத்திக்குச் செலவு செய்யும் தொகை ரூ. 8.85 கோடி. 5-20 p.m. ஆனால் மின்சாரம் வெளியிலிருந்து வாங்குவதற்கு ரூ. 16 கோடி செலவழிப்பது என்பது அவ்வளவு நல்லதல்ல. அதைத் தவிர்ப்பதற்குக் கூடுமான எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளுவது அவசியம் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் நிர்வாகத்திலும் கூட இன்னும் சிக்கனத்தை, சீர்மையைக் கடைப்பிடிக்க முடியுமா என்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். ஏனென்றால் அரசு நிர்வாகத்தில் ஊழியர்களை, அலுவலர்களை நியமித்து விட்டால், நியமிப்பது முதலில் கஷ்டமாகத் தோன்றும். நியமித்து விடுவார்களேயானால், நீக்குவது என்பது பெரும் பிரயத்தனமாகிவிடும். அந்த நிலையில் கண்ணுங்கருத்துமாக இருந்து, உழைப்பு நன்கு பயன்படத்தக்க வகையில், சிக்கனத்தை எப்படிக்கையாள முடியும் என்பதை மின்சார வாரியத்தில் உள்ள நிர்வாகிகள் மேலும் மேலும் கவனிக்க வேண்டும் என்பதையும் இந்த சதர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தம் 12 மின் வழங்கும் பிரிவுகளாக 'சிஸ்டம்' களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் எல்லாம் மொத்த வருமானத்தில் ரூ. 6 கோடி 90 லட்சம் சர்சார்ஜ் வருகிறது. சென்னையில் மட்டும் 63 லட்சம் சர்சார்ஜ் விதிக்கப்படுகிறது. ஆகையால் சர்சார்ஜ் மேலும் மேலும் அதிகரிக்கப்படக்கூடாது. அதிகரிக்க மாட்டார்கள் என்பதில் நிச்சயமாக நம்பிக்கை இருக்கிறது. இது போல விவசாயத் துறைக்கு மின்சாரம் வழங்குவதில் இன்னும் கட்டணத்தை உயர்த்தலாமா என்ற எண்ணமே அறவே மனதில் இல்லாத நிலையை இப்போது உருவாக்கியிருப்பது போல் அதை அப்படியே நிரந்தரமாக இருக்க, அம்மாதிரியான முயற்சிக்கு அவர்கள் ஆக்கம் அளிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கத்தினர்கள் கூறிய கருத்துரைகளுக்கு சமாதானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். "வாரியத்தில் நிலையான மின் கட்டணம் சிறு வெளியீடுகள் வடிவத்தில் ஏற்கனவே அச்சிடப்பட்டு . . . மேற்கொள்ள நேரிடும்" என்று இருப்பது திரு. தாமோதரன் அவர்கள் சிறிய விவரங்களை தெரிந்து கொள்ளுவதற்கு வெளியிடவேண்டும் என்று சொன்னதற்கு சமாதானமாக இருப்பது போல் தெரிகிறது. இது தான் நல்ல சந்தர்ப்பம். இந்த சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட விவாதத்திற்கு மத்தியில் இதையும் இந்த விவரங்களையும் அதோடு வெளியிடுவது மிகவும் நல்லது. சிறிய வெளியீடுகள் நான் பார்த்ததாக ஞாபகமில்லை. ஆகையால் எங்கேனும் முடங்கிக் கிடக்கிறதா என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த மின்சாரம் வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற கீழ்மட்ட அலுவலகங்களில் டெலிபோன் இணைப்பு அவசியம் என்று கூறினேன். அந்தக் குறை ஓரளவுக்கு நிவர்த்திக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டும். நாள்தோறும் மின்சார இணைப்புகள் கொடுத்த இடங்களிலிருந்து அவர்களுக்கு தங்களுடைய குறைகளைச் சொல்லிக்



கொள்வதற்கு ஒரு இடத்தில் ஏற்பட்ட குறையைத் தவிர்க்க, அவர்கள் புகார்கள், முறையீடுகள் செய்து கொள்வதற்கு டெலிபோன் மிக மிக அவசியமாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து ஆவனசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நிலவள வங்கியிலிருந்து கடன் பெற்ற விவசாயிகள் பலர் பெற்ற கடனுக்கு ஒரு தவணை, இரண்டு தவணை செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் வந்திருக்கின்றன. மின்சாரம் பெற்று பயன் அடைந்து அவர்கள் திருப்பிச் செலுத்தும் சக்தி அவர்களுக்கு இருக்கும் என்பதை அறிந்து கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் மின்சாரம் வழங்கப்படவில்லை. இரண்டு தவணைகள் கடன் கொடுக்க சந்தர்ப்பங்களும் வந்துவிட்டன. இது ஒரு மிகவும் கடினமான பரிதாபத்துக்குரிய விஷயம். பல்வேறு இடங்களில் அத்தகைய நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இவைகளைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்கான முன் ஏற்பாடுகள் கடன் கொடுக்கும் முன்பே சாத்தியமா இல்லையா என்பதை அறிவதில் தயக்கம் காட்டப்படுகிறது. கடன் வாங்குங்கள், மின்சாரம் வந்துவிடும் என்று சொல்லுகிற வார்த்தைகளை நம்பி வாங்கிவிடுகிறார்கள். இப்படிப் பரவலாக பல இடங்களில் குறைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்குச் சரியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராமங்களில் அரிஜனக் குடியிருப்புகளிலும் பிற இடங்களிலும் கிராமங்களுக்கு மின் வசதியைப் பெருக்குவதற்கு, விளக்கு வசதியைப் பெருக்குவதற்கு திட்டங்களை வகுத்துக் கொண்டு அந்த வேலைகளை மிக வேகமாகச் செய்து கொண்டு வருகிறார்கள். இதைவிட மிக முக்கிய அவசியம், இத்தகைய விவசாய வளர்ச்சிக்குரிய காரியங்கள் தடை படுவதற்கில்லாமல் வேகமாக இதைச் செய்து கொண்டு போவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொழில் துறை, மற்ற காரியங்கள் சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் உரையில் கூட மூன்றாவது பக்கத்திலே 1966-67-லிருந்த மந்த நிலையை உதறித் தள்ளி தொழில் துறையில் மின் சக்தியைப் பயன்படுத்துதலும் பெரும் அளவிற்கு உயர்ந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மின் சக்தி உபயோகத் துறை வளர்ந்திருக்கிற விதம்பற்றிக் கொடுத்திருக்கிற புள்ளி விவர கிராப்களைப் பார்க்கிறபோது, மந்த நிலை கிடையாது. தமிழகத்தில் மந்த நிலை அன்று இருந்ததாகக் கற்பித்துக் கொண்டு அதற்குப் பிறகு வேகமாக வளர்ந்ததாக கனவு காணவேண்டிய அவசியமில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில், என்று கருதுகிறேன். அந்தப்படியாக இல்லாமல், தொழில் துறையிலே இந்த மாதிரியான நடைமுறை பேதங்கள் இருந்துகொண்டு வந்திருக்கின்றன. ஆகவே இந்த மின்சார இலாகாவினர் இப்போது செய்து கொண்டு வரும் வேலைகளில், நான் கூறியது போல, அந்தச் சிக்கனம், சீர்மை, செய்நேர்த்தி ஆகியவைகளில் கவனம் செலுத்த வேண்டும். முழுமை விழாக்கள் நடத்துகின்ற வகையில் ஊதாரித்தனமாகப் பணம் செலவிடப்படுகிறது என்பது எனது கருத்து. மதுரையில் முழுமை விழா நடத்தினார்கள். இதைச் சுருக்கமாக, சிக்கனமாகச் செய்யலாம். அதற்கு அழைப்பிதழ்களுக்காக எவ்வளவு செலவிடப்பட்டிருக்கும் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் முதலில் பாராட்டிப் பேசியதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இப்போது விழா கொண்டாடுவதைப் பற்றிப் பேசுகிறார்கள். முழுமை விழாவைப்பற்றிச் சொன்னதால் இடையில் சொல்ல வேண்டுமென்ப

தற்காகச் சொல்கிறேன். எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் வயிற்றெரிச்சல் படுகிற அளவிலே வாரியத்தினுடைய பணம் ஒரு பைசா கூட செலவு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** வயிற்றெரிச்சல் படக்கூடிய அளவிலே முன்னேற்றம் இருக்கிறது என்றால் புரியவில்லை. ஏதோ அவர்கள் யோசியாமல் வயதிற்குத் தகுந்த ஒரு உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதாகக் கருதுகிறேன். அதை அப்படியே விட்டு விடுகிறேன். எவ்வளவு பணம் செலவானால் என்ன, மக்கள் வரிப் பணம் செலவானால் என்ன, வாரியத்தின் பணம் செலவானால் என்ன? யார் செலவிட்டாலும் இந்தச் செலவுகள் மிக அதிகமானவை.

**டெபுடி சேர்மன்:** தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** கூடிய வரையிலே குறைவாகச் செலவழிக்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன். திட்டமிட்டு வளர்ந்து வரும் ஒரு நாட்டில் எதிர்க் கட்சிக்கோ மற்றப் பேர்களுக்கோ வயிற்றெரிச்சல் படுவ
5-30 p.m. தற்குக் காரணமில்லை என்பதை நான் அறிவேன். திட்டமிட்டு வளர்ந்துவரும் நாட்டில் எல்லாத் தேவைகளும் அதிகப்படும். எல்லாக் காரியங்களும் நடந்து கொண்டே தான் வரும். திட்டமிடப்படாத இடங்களில் அவர் கூறுவது போல வயிற்றெரிச்சல் படுவதற்கு இடமிருக்கும். வயிற்றெரிச்சல் படாத காரியங்களுக்கு வயிற்றெரிச்சல் படக்கூடியவர்கள் இருந்தால்தான் நன்மை ஏற்படும். திட்டமிடப்பட்ட நாட்டில் திட்டங்கள் சரியாக வளர்ந்து வருகிறபோது, சரியான முறையில் வளர்ந்து கொண்டு தான் வரும். வயிற்றெறிச்சல் படுவதற்கு ஒன்றுமில்லை. எந்த முறையில் பேச வேண்டுமோ அந்த முறையில் சொல்கிறேன். வயிற்றெறிச்சல் காட்டிக்கொள்வதில்லை. பொறாமையில்லை. என்னுடைய 50 ஆண்டுக்கால அரசியல் வாழ்வில் நான் நிதானமாக இராமல் இருக்கிறேன் என்று நினைக்கிறீர்களே என்று தான் வருத்தப்படுகிறேன். சண்டை இல்லாத தெருவிற்குச் சண்டைக்குப் போகிறேன் என்று சொல்வது போல் அவர் சண்டைக்குத் தயாராக இருக்கிறார். அந்த முறையில் அவருடைய பேச்சு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** பெரியவர் மன்னிக்க வேண்டும். நான் சொல்லியதைத் தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. பெரியவர், சிறியவர் யாரும் தவறான வார்த்தை சொன்னால் அவர் சொல்வது நியாயம் தான். பணத்தை ஊதாரித்தனமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். விழா கொண்டாடுவது என்பது தவறல்ல. அவருடைய கட்சி ஆட்சி பீடத்தில் இருந்தபோது, ஒரு லட்ச ரூபாய் செலவு செய்து மின்சார விழா கொண்டாடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பணம், வாரியத்தின் பணம் இப்போது இந்த விழாவிற்காகச் செலவிடப்பட்டிருந்தால் சொல்லலாம். ஒரு பைசா இல்லாமல் பெரிய தனவந்தர்கள் முன்வந்து இதற்காகக் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறேன். இதற்கு ஊதாரித்தனம் என்று சொல்வது சாலப் பொருத்தமா என்று கேட்கிறேன். ஒரு பைசா செலவழிக்காமல் இது நடந்திருக்கிறது அப்போது ஒரு லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டதை எப்படிச் சொல்வது? அதற்காகத் தான் சொல்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** நான் சொல்கிறேன், எந்த அரசாங்கத்தில் செலவிட்டாலும் கூட,, மக்களிடத்தில் வசூல் செய்து செலவழித்தாலும் கூட, மக்கள் மனமுவந்து லட்சக்கணக்காக பணம் கொடுத்தாலும் கூட, குறைந்த



அளவிலே செலவழித்து விட்டு இப்போது இருக்கக் கூடிய தேசிய நெருக்கடிக்கு, பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்விற்கான நிதிக்குத் தரப்பட்டிருந்தால் அதை நான் விவேகமுள்ள செயலாகக் கருதுவேன். அதை மிக மிகப் பாராட்டுவேன். ஊதாரித்தனம் என்ற வார்த்தைக்கு வேறு வார்த்தை போட்டால் பொருந்தாது, அடங்காது. இந்த இடத்தில் அது தான் பொருத்தமானது. ஆகையினால் தான் ஊதாரித்தனம் என்று சொல்லுகிறேன். எல்லாச் செலவுகளிலுமே சிக்கனம் வேண்டும் என்று நான் கருதுகிறேன். மொத்தத்தில் நான் சொல்கிறேன், விழாக்களுக்குச் செலவிடக்கூடிய பணத்தை அதிகமாகச் செலவிடாமல் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** மாண்புமிகு தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் அறிக்கை மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற 20 ஆண்டுகளாக பாமர மக்களிடத்தில், விவசாய மக்களிடத்தில் மின்சாரம் என்பது உணவைவிட மிக அத்தியாவசியமான பொருளாக, இன்றியமையாத வஸ்துவாகப் போய்விட்டது. இதனாலே மின்சாரத்தின் தேவை அதிகமாகயிருக்கிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் இப்போது ஏராளமாக நிலவள வங்கிகளின் மூலமாகப் பணம் கொடுக்கிறார்கள், கிணறுகள் தோண்டுகிறார்கள். அதற்கு மின்சாரப் பம்புகளுக்கு வசதி பெற்று கொடுத்தால்தான் அவர்கள் அதனாலே பலன் அடைவார்கள், சுபிட்சம் அடைவார்கள். அதனாலே நாளுக்கு நாள் மின்சாரத்தின் தேவை அதிகமாகிக் கொண்டு வருகிறது. நம் மாநிலத்தில் ஹைட்ரோ எலெக்ட்ரிசிடி ஸ்கீம் மூலம் உற்பத்தியாகும் மின்சாரமானது ஓரளவிற்கு உச்ச நிலையை அடைந்து விட்டது. அனல் மின்சார நிலையம் மூலம் கிடைக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும் கூட, இன்னும் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த நிலையில் இப்போது 6 புதிய மின்சார நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பொதுவாகப் பார்த்தால் 84 ஆயிரம் தொழிலாளர்கள் உள்ள பெரிய ஸ்தாபனத்தை நல்ல முறையில் இயக்கி வருகிறார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வரவரக் கொஞ்சம் ஊழல் ஜாஸ்தியாகியிருக்கிறது என்று சொன்னார்கள். மொத்தத்தில் பார்த்தால், அது ஓரளவிற்கு இருந்தாலும், கிராம மக்களிடத்தில் நல்ல முறையில் அது இயங்கி வருகிறது என்று நான் கருதுகிறேன். நானும் சில சமயங்களில் கம்பிளெயின்டு கொடுத்தால் சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த மின்சார இலாகாவானது இன்னும் சீரும் சிறப்புமாக நடக்க வேண்டுமென்று நினைக்கிறேன். மொத்தத்தில் பார்த்தால், நஷ்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறது. கவர்ன்மென்டில் வாங்கின லோனுக்குக்கூட இன்னும் கட்டவில்லை. போனஸ் 4 சதவிதமாக இருந்ததை 5 சதவிதமாகக் கொடுக்க முதலமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு விஷயம். இந்த மின்சார வாரியத்தை லாபகரமாக நடத்துவதற்கான வழி வகை செய்ய வேண்டும்.

அதிலும் இந்தத் தெரு விளக்குகளுக்கு மீட்டர் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் 94 லட்ச ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட முடியாது என்கிறார்கள். காண்ட்ராக்ட் சிஸ்டத்தின் மூலம் தெரு

விளக்குகள் போடப்படுவதால், எரிக்காவிட்டாலும் கட்டணம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. மீட்டர் போட்டு விட்டால், யாரும் பாதிக்கப்படாமல் இருப்பார்கள். இதிலே குறை சொல்வதற்கு இல்லாதபடி மின்சார போர்டு காரியம் செய்ய வேண்டும். எனவே கட்டாயமாக மீட்டர் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தாற்போல், பெரிய கம்பெனிகள் பல இன்னும் தனியார் கையிலே இருந்துகொண்டு வருகின்றன. சமீபத்திலே பத்திரிகையிலே பார்த்தேன் மத்திய மின்சார அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் இலங்கைக்குப் போய் வந்த போது, இலங்கையிலிருந்து மின்சாரத்தைக் கடல் மூலமாக இந்தியாவிற்குக் கொண்டு வரலாம் என்ற ஒரு ஆலோசனையைக் கூறியிருக்கிறார். இப்படி அவர்களுக்குத் தேவையில்லாத காலத்திலே நமக்கு வேண்டிய மின்சாரத்தை இலங்கையிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் பொருத்தமாகும். இங்கே கிடைக்கிற மின்சாரம் நாளடைவில் நமக்குப் போதுமானதாக இல்லாமல் போய்விடும். எங்கள் பக்கத்தில் மதுரைக்கு அருகில் கப்பலூரில் ஒரு தொழிற் பேட்டை வருகிறது. அதற்கு எவ்வளவோ மின்சாரம் தேவைப்படும். பம்புசெட்டுகள் விரிவடைந்து கொண்டு போய்க்கொண்டிருக்கின்றன. எதிர் காலத்தில் "எக்ஸிஸ்டிங்" மின்சாரத்தை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாது. குந்தா எலெக்ட்ரிக் ஸ்கீம் போன்றவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இனி மேற்கொண்டு அதில் அபிவிருத்தி செய்வதற்கு வழி இருப்பதாகத் தெரியவில்லை. இப்படி இருக்கிற நிலைமையில் மேலும், மேலும் புதிய திட்டங்களைத் தீட்டி ஏதாவது செய்ய முடியுமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரிக் காரியங்களில் மின்சார வாரியம் ஈடுபட்டு அதிகமாகச் செய்து கிராம மக்களுக்கும், தொழில் துறைக்கும் மின் இணைப்பு கிடைப்பதற்கு வேண்டியவைகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக மின்சார வாரியம் நன்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய நிர்வாகத்தில் ஆங்காங்கு ஊழல்கள் இருப்பது சகஜம். மொத்தத்தில் பார்த்தால், நன்றாகத் தான் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்று நினைக்கிறேன். அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரவர்களும் சீரும், சிறப்புமாக இந்தத் துறையை நிர்வகித்து வருகிறார். பொது மக்களிடத்திலே இந்தத் துறை நல்ல பெயர் வாங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் துறையைச் சேர்ந்த தலைவர் மேலும் நன்றாகப் பணிகளைச் செய்வார் என்று நம்புகிறேன். எனவே இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று இதோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. தங்கபாண்டியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கம்போல முதலில் வரவேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் அவருடைய மனக்குறையைக் காட்டிக் கொண்டார். நம்முடைய அனுபவமிக்க உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் இந்த அறிக்கையை வரவேற்றிருக்கிறார்கள். உண்மையிலே நாங்கள் ஆளுங்கட்சிப் பொறுப்பிலிருக்கிற காரணத்தினால், சற்று அடக்கத்துடன் பேசுகிறோம். மாண்புமிகு திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வயதாகிவிட்ட காரணத்தினால், சற்று வயிற்றெரிச்சலோடு பேசினார்கள். ஆனால் மாண்புமிகு திரு. கிருஷ்ண



சாமி நாயுடு அவர்கள் 1967-க்கு முன்னாலே மின்சார வாரியம் எப்படிச் செயல்பட்டது என்பதைப் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். 1967-க்கு முன்னாலே ராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் தொகுதி தெரிந்த அளவிற்கு மற்றப்பகுதிகள் தெரியவில்லை. இன்னும் பச்சையாகச் சொல்வேன். முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜர் போட்டியிட்ட நேரத்தில் பல கிராமங்களில் மின் இணைப்புக் கொடுப்பதற்காக ஏற்கெனவே போடப்பட்டிருந்த தூண்களில் பலவற்றை அவருடைய தொகுதிக்குக் கொண்டு போனார்கள். அவருடைய தொகுதிக்குத் தேர்தல் நேரத்தில் மின்சார இணைப்புக் கொடுத்து மின்சாரம் தாராளமாக வழங்கப்பட்டது. சுமார் 20 கிராமங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1967-க்கு பின்னால் தான் இந்த வாரியம் போர்க்காலத்தில் போர் வீரர்கள் பணியாற்றுவதைப் போன்று பணியாற்றுகிறார்கள். இதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு மதிப்பீட்டுக் குழு பிற மாநிலங்களுக்குச் சென்ற மாதம் சுற்றுப்பயணம் செய்தது. நாங்கள் சென்ற மாநிலங்களில் இரண்டு மாநிலங்களில் தான் தமிழகத்தைப் போல் சிறந்த முறையில் மின்சாரம் வழங்கப்படுகிறது. ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கு நல்ல வாய்ப்பும் வசதியும் இருக்கிற காரணத்தினால், அவர்கள் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறார்கள். பல மாநிலங்களில் மின்சாரம் செல்லாத நிலை இருந்து கொண்டு வருகிறது. ஆனால் தமிழ் நாட்டில் 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டு விடும் என்ற அளவிற்கு இந்தத் துறை வேகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பீஹார் போன்ற மாநிலங்களில் இன்னும் தெரு விளக்குகளே போடவில்லை. நம்முடைய மாநிலத்தில் எல்லா கிராமங்களுக்கும் 1972-க்குள் மின்சார இணைப்புக் கிடைத்துவிடும் என்ற நிலைமையை இந்த வாரியம் உருவாக்கிக்கொண்டு வருகிறது. வேண்டுமானால், காங்கிரஸ்காரர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இதை விடத் திறமையாகச் செய்து காட்டட்டும். இந்தத் துறை செய்து வரும் பணி பாராட்டத்தக்கது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்து மேலும் திறமையாகச் செய்து காட்டட்டும் என்று சொன்னார்கள். அவர்கள் மறுபடியும் ஆட்சிக்கு வரப்போவதில்லை. அதனால் அவர்கள் வந்து செய்ய வேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன்:** ராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் தாலுகாக்களில் மின்சார இணைப்பு எல்லா கிராமங்களுக்கும் கிடைத்திருக்கிறது. இன்று, நான்கு ஆண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அரசாங்கம் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு மின் இணைப்புக் கிடைக்கும்படி செய்திருக்கிறது. 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கண்டிப்பாகக் கொடுக்கப்பட்டு விடும். அந்த அளவிற்கு அந்தத் துறை செயல்பட்டு வருகிறது. ஒரு காலத்திலே கிராமத்துப் பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள், மின்சாரம் என்பது ஏதோ சீமையிலிருந்து கிடைக்கிற பொருள் என்று. ஆனால் இப்பொழுது மின்சாரம் எல்லாக் குக்கிராமங்களுக்கும் தாராளமாகக் கிடைக்கிறது. தாசில்தார், பி. டி. ஓ. போகாத கிராமங்களுக்குக் கூட மின்சாரத் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் பல கஷ்டங்களுக்கு இடையே சென்று மின் இணைப்புக் கொடுத்து வருகிறார்கள். போக்குவரத்து இல்லாத

இடங்களுக்குச் சென்று தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள். இன்னும் 4 மாவட்டங்கள் 1971-க்குள் முழுமைபெற்று விடும். 1972-க்குள் இன்னும் 6 மாவட்டங்களில் மின் இணைப்பு பூர்த்தி செய்வது நிறைவேறி விடும். இவ்வளவு மகத்தான காரியத்தை யார் செய்திருக்க முடியும்? தமிழ்நாடு மின்சார வாரியம் இதைச் செய்திருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்வதற்காக இந்தத் துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றும் கூட சொன்னார்கள், தமிழ் நாட்டில் நீர் மின்சாரம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன என்று. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 2 ஆயிரம் மெகாவாட் கிடைக்கிறது. இன்னும் ஏராளமாக நமக்குத் தேவைப்படுகிறது. தற்போது கிடைக்கிற மின்சாரம் நம்முடைய தேவைக்கு முழு அளவிற்கு இல்லை. ஆகவே தான் புதிய திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய உறுப்பினர்களும், மற்றவர்களும் சொல்கிறார்கள். தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் தென் மாவட்டங்களில் விவசாயக் காரியங்களுக்கும், தொழில் துறைக்கும் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதற்கான திட்டங்களை அரசாங்கமும், மின்சார வாரியமும் உருவாக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, கிராமப்புறங்களில் இப்போது மின் இணைப்புக் கொடுக்கப்படும்போது, "சிங்கிள் பேஸ்" என்ற முறையில் கொடுக்கிறார்கள். மீண்டும் அங்கு ரைஸ்மில், பம்புசெட் போன்றவைகளுக்கு இணைப்புக் கொடுக்கும்போது மூன்று "பேஸ்" முறையில் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர்த்து முதலிலேயே மூன்று "பேஸ்" முறையில் லைன் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1970-71-ல் 10 ஆயிரத்து 16 கிராமங்களுக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மின்சார வாரியம் செய்துள்ள சாதனைபற்றி நாங்கள் சொல்லும்போது, இதைப் போய்ப் பெரிதாகச் சொல்கிறீர்களே என்கிறார்கள். அந்தக் காலத்தில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்க வேண்டுமென்றால், ஏ.இ., டி.இ., எஸ்.இ., ஆகியவர்களைத் தேடிக்கொண்டு போக வேண்டும். அப்படிப் போவதென்றால், எவ்வளவு சிரமம் என்பது கிராம மக்களுக்குத்தான் தெரியும். இப்போது அதெல்லாம் குறைக்கப்பட்டு அவர்கள் திட்டமிட்டு செயல்பட்டு மின் இணைப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கூட சொல்லுவேன். நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு ஒரு யோசனையாக இதைச் சொல்கிறேன், மாவட்டங்கள் தோறும் மனுநீதி செய்கிறோம். மாதத்தின் ஆரம்பத்தில் ஐந்தாம் தேதி அன்று மக்களுடைய குறைகளைத் தெரிந்து கொள்வதற்காக மனுநீதி நாள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதம் 5-ம் தேதி ஒருவர் தன்னுடைய குறையைச் சொன்னால் அடுத்த மாதம் 5-ம் தேதி அவருடைய குறையைப்பற்றி விசாரித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அவருக்கு நீதி வழங்கப்படுகிறது. அதேபோல மின்சாரத் துறையில் மாதத்தில் ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று ஏ.இ., லெவலில், அல்லது மற்ற அதிகாரிகள் லெவலில் மின் இணைப்புக் கோருகிறவர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களுக்கு எந்த மாதத்தில் மின் இணைப்புக் கிடைக்கும் என்பதைத்



தெரிவித்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். இந்தப் பொறுப்பை அந்தத் துறை ஏற்றுக்கொண்டால் கிராமப்புறத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு தற்போதுள்ள தொல்லைகள் பெருமளவிற்குக் குறைக்கப்படும்.

இன்னொன்றையும் கூட இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறை மிகப் பெரிய அளவிற்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. 35 ஆயிரம் பேருக்கு இது வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறது. இருந்தாலும் கீழ் நிலையில் உள்ள பணியாளர்களுக்கு இன்னும் அவர்களின் வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்குக் கிடைக்கும் சம்பளத்திற்கும் இவர்களுக்கும் ஒரு சரியான விகிதத்தில் கணக்கர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் கிடைத்தால் அவர்கள் இன்னும் மன நிறைவோடு பணியாற்றுவார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இப்பொழுது நான் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன். நம்முடைய மின்சார வாரியத்தில் ஏற்கனவே ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்கு மேல் ஒயர் இருக்கிறது. இந்தத் தருணத்தில் தேவைக்கு மேல், மேலும் ஒயர் வாங்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த ஒயர் நம்முடைய தேவைக்கு அதிகமாகவிருப்பதாகச் சொன்னார்கள். மேலும் வாங்கி ஸ்டாக் வைப்பதைவிட, தேவைப்படும்போது புதிதாக வாங்கிக் கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** கேள்விப்பட்டதைச் சொல்லக்கூடாது.

**திரு. வி. தங்கபாண்டியன்:** சாலடால் கேபிள் ஒயர் நம்முடைய மின்சார வாரியத்திற்காக ஆர்டர் கொடுப்பதற்காகப் பரிசீலனையிலிருப்பதாகவும், ஏற்கனவே ஒயர் ஸ்டாக் தேவையான அளவிற்கு இருப்பதாகவும் கேள்விப்பட்டதால், ஆர்டர் கொடுப்பதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒன்று. இந்த மின்சார இலாகாவில் பணியாற்றுகின்ற இன்ஜினியர்களைப் பெரும்பாலும் விவசாய மக்கள்தான் அணுகுகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற மனப்போக்கு இவர்களிடம் காணப்படவில்லை. வருவாய்த்துறையில் பணியாற்றுபவர்களிடம் ஏற்கனவேயிருந்த மனப்போக்கு பெரிதும் மாறிவிட்டது. ஆனால் இந்த மின்சார வாரியத்தில் பணிபுரிகின்ற அசிஸ்டெண்ட் இன்ஜினியர்கள் மனப்போக்கு இன்னும் மாறவில்லை. விவசாயிகளை அலட்சியமாக நடத்தும் போக்குதான் இருந்து வருகிறது. சுதந்திர நாட்டில் இந்த நிலைமை மாறாமல் இன்னும் இருத்தல் கூடாது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** எதை மனதில் வைத்துக்கொண்டு, எந்த வயிற்றெரிச்சலின் காரணமாக இவை சொல்லப்படுகின்றன?

**திரு. வி. தங்கபாண்டியன்:** கண்ணால் பார்த்ததைத்தான் சொல்கிறேன். அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கோபம் வந்தால் நான் என்ன செய்ய முடியும்?

அடுத்தபடியாக, ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கும் எலக்டிரிசிடி டிபார்ட்மெண்டுக்கும் இணக்கமில்லாமல் சில தொல்லைகள் வருகின்றன. ஒரு இடத்தில் ஹைவேஸ் ரோடு சென்று அதில் வேலை செய்யவேண்டுமானால், முறைப்படி அனுமதி பெறுவதற்குப் பல மாதங்கள் தாமதப்படுகிறது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு இந்த இரண்டு துறைகளும் முன்கூட்டியே பேசி உடன்பட்டுச் செய்வார்களேயானால், சுலபமாகச்

காரியம் முடிவடையும். அரசாங்கம் இந்த இரண்டு இலாக்காக்களுக்கிடையே ஒரு இணக்கத்தை, கோ-ஆர்டினேஷன் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மைசூர், கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்து அதிக பட்ச மின்சாரத்திற்கு நம்பியிருக்கும் நிலையை மாற்றி நம்முடைய தேவையை நாமே பெருமளவிற்கு நம்முடைய திட்டங்களை, புதிய திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த மின்சார வாரியத்தின் பணிகளைப் பாராட்டி, இந்த விவாதத்தில் எனது கருத்துக்களைக் கூற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதி
6.50 p.m. நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற சந்தர்ப்பத்தில், எனது நன்றியை முதற்கண் அந்த இலாகாவிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரம் ஏதோ இப்பொழுதுதான் ஆரம்பமானதல்ல. இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்களும் சில முயற்சிகள் எடுத்துக்கொண்டு காரியங்கள் செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் இல்லை என்று கூறிவிடவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, கண்ணாலே பார்த்தாலும் சரி, ஆதாரபூர்வமாக ரிகார்டுகளைப் பார்த்தாலும் சரி, முன்பைவிட இப்பொழுது புரட்சிகரமாக பல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பது புலப்படும். அந்தக் காரணத்தால்தான் எதிர்க் கட்சியிலிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களும், நண்பர்களும் மிக அருமையாகப் பாராட்டுகிறார்கள். அவர்கள் பாராட்டுகின்ற தன்மையிலிருந்து உண்மையை உணரலாம். நம்முடைய தமிழக அரசு மிகப் புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. இருட்டிலே பூச்சிகளாகத் தவித்தவர்களுக்கு நல்ல வெளிச்சத்தை தந்திருக்கிறார்கள். பம்ப் செட்டுகளுக்குக் கரண்ட் இல்லையே என்று ஏங்கித் தவித்த விவசாயிகளுக்குக் கரண்ட் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய மூன்று இலட்சத்தி பதினைந்தாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு புதிய பம்ப் செட்டுகள் போட்டு விவசாயம் செய்வதற்குக் கரண்ட் கொடுத்திருக்கிறார்கள். எல்லா கிராமங்களுக்கும் பம்ப்செட்டு வசதி கிடைக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள். இந்தப் பெரும் முயற்சி பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும். முன்பிருந்த ஆட்சியை விட நாம் மிக அதிகமாகச் செய்திருக்கிறோம் என்பதற்கு கணக்குகள் இருக்கின்றன. எனக்கு அந்தக் கணக்குகளைச் சொல்ல வேண்டுமென்று ஆசை. இதற்கு முன்னால் 1961 முதல் 1966 வரையில் 'நம்பர் ஆப் வில்லேஜஸ் அண்ட் ஹேம்லெட்ஸ் எலக்டிரிபைட்' 10,760-லிருந்து 22,136 ஆக உயர்ந்தது. இது அவர்கள் ஐந்து வருஷத்தில் செய்திருந்தது. அதற்குப் பின்னால் ஐந்து வருஷத்தில் 22,136-லிருந்து வில்லேஜ் எலக்டிரிபிகேஷன் 42,229 ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி வளர்ந்திருக்கிறதென்பதை நாங்கள் சொல்வதோடு கிராமப்புறங்களுக்குச் சென்று பார்த்தால் விளங்கும். இதற்கு முன்னாலிருந்த ஆட்சிக்காலத்தில் திட்டங்கள் இருந்தன. திட்டங்கள் அந்தக் காலத்திலேயே உருவாகியிருந்தன. திட்டங்கள் பயன் தருமளவுக்கு அமைக்கப்பட்டிருந்தாலும், அவற்றைப் புரட்சிகரமாக நிறைவேற்றுவது தற்போதைய அரசுதான். ஏழை மக்களுக்கு என்ன தேவை, விளக்கு இல்லாமல் வாழ்கிறார்களே என்ற நிலைமையை உணர்ந்து, அந்தத் திட்டங்களை உங்களுடைய திட்டங்களாகவிருந்தாலும் எந்த முறையில் செய்தால் பலருக்கும் வெளிச்சம் கிடைக்குமென்று ஆராய்ந்து செய்து வருவது கழக அரசு. சொல்வார்களே, பெரியவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ண



சாமி நாயுடு அவர்கள் பழங்காலத்தவர், அவருக்குத் தெரியும்—இருட்டோ குருடோ என்று சொல்வார்கள். கண்ணிருந்தாலும் வெளிச்சம் இல்லாவிட்டால் குருடர்கள்தான், என்பது பழமொழி. அதற்குக் குறைபாட்டைப் போக்க வேண்டாமா? இன்றையதினம் ஹரிஜனக் காலனிகளுக்கு எல்லாம் வெளிச்சம் சென்றிருக்கிறதே. அதை ஹரிஜன மக்கள் பாராட்டுகின்றார்களே, ஆனால் தயை கூர்ந்து நமது ஆட்சியாளர்கள் கவனிக்க வேண்டியது ஒன்று இருக்கிறது. இன்டஸ்டிரியலிஸ்ட்களுக்குக் கரண்ட் கன்செஷன் ரேட்டில் கொடுக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 'சேம்பர் ஆப் காமர்ஸ்' மூலமாகக் கூட்டம் போட்டு 'கன்செஷன்' கேட்கிறார்கள். அவர்களுடைய தொழில் துறைக்கு கன்செஷன் வேண்டுமென்று தீர்மானம் போடுகிறார்கள். உடனே நம்முடைய அரசாங்கம் தலையை அசைக்கிறது. மூன்று தரப்பிலிருந்து நம்முடைய மின்சார வாரியத்திற்கு வருமானம் கிடைக்கிறது. பெரும்பாலாக இந்தத் தொழிலதிபர்களிடமிருந்து கிடைக்கிறது. இரண்டாவதாக விவசாயிகள் கொடுக்கிறார்கள். மூன்றாவதாக என்னைப் போன்று தலைகாய்ந்த சாதாரண மக்கள் வீட்டுக்காக எடுத்துக்கொள்ளும் கரண்டுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே இந்த மூன்று வகையான மக்கள் தான் மின்சார வாரியத்திற்கு வருமானத்தைத் தருகிறார்கள். ஆனால் இன்டஸ்டிரியலிஸ்ட்களுக்கு அதிகமான 'கன்செஷன்' கொடுக்கிறார்கள். அவர்கள் தான் கொள்ளை கொள்ளையாக லாபத்தைச் சம்பாதிக்கிறார்கள். நிறைய லாபம் என்றால், கண் கொள்ளா லாபம். அப்பேர்ப்பட்டவர்கள் கரண்டைப் பயன்படுத்துகிறார்கள். சிமெண்டு, காஸ்டிக் சோடா அலுமினியம் போன்ற தொழிற்சாலைகளுக்குப் பயன் படுத்துகிறார்கள். அங்கே தான் கோடிக் கணக்கான லாபம் சம்பாதிக்கிறார்கள். மின்சார வாரியத்துக்குப் பணம் கொடுங்கள் என்றால் தயங்குகிறார்கள். குறைவாகக் கொடுக்கின்றனர். அவர்கள் 'கன்செஷன்' கேட்டால் நம் அரசாங்கம் தந்துவிடுகிறார்கள். ஆகவே தயவு செய்து இந்த விஷயத்தில் இன்டஸ்டிரியலிஸ்ட்கள் பெறும் கரண்டுக்குப் பணம் கேட்டு வாங்குங்கள். என்ன கெட்டுவிடுகிறது? அவர்கள் பல கோடிக் கணக்கான ரூபாயை விரயம் செய்கிறார்கள். இதற்குக் கொடுத்தால் என்ன தப்பு? காங்கிரஸ் கவர்ன்மெண்டானாலும், நம் கவர்ன்மெண்டானாலும், அதைக் கண்டிக்க வேண்டிய பொறுப்பு நம் அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. ஆகவே எனக்கும் இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு அதிகமான சலுகைகள் தராமல் அவர்களிடம் பணம் கேட்டுத்தான் வாங்க வேண்டும். சாதாரண மக்கள் மிகவும் ஏழ்மையாக இருப்பவர்கள். அவர்கள் தங்கள் குடிசையில் ஒரே ஒரு விளக்கு போட்டுக்கொள்ள வேண்டுமென்றால், ஒரு யூனிட்டுக்கு 35 நயா பைசா வாங்குகிறார்கள். பெரிய இன்டஸ்டிரியலிஸ்ட்ஸ் பெரிய விவசாயிகள் தகராறு பண்ணுகிறார்கள். அவர்களிடம் 10 நயா பைசா வாங்குகிறார்கள். அவர்கள் தகராறு பண்ணுகிறார்கள், அட்டகாசம் செய்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்குக் கட்டணத்தைக் குறைக்கிறோம். அந்த எண்ணம் இல்லாமல் அதற்கு அப்பாற்பட்டவர்களுக்கு நாம் சற்று இரங்கத்தான் வேண்டும். எல்லோருமே சங்கம் அமைத்துக்கொண்டு கரண்ட் சார்ஜைக் குறை என்று கேட்டால், எப்படிக் குறைப்பது? மின்சாரம் உற்பத்தியாகின்ற பெர்சன்டேஜ் இருக்கிறதே, அது மின்சாரம் உபயோகிப்போரைப் போய் சேருவதற்குள் இடையில் 17 சதவிகிதம் கரண்ட் லாஸ் ஆகிறது. மொத்தத்தில் 17 சதவிகிதம் கரண்டின் கிரயம் என்ன ஆயிற்று? பல லட்ச ரூபாய் ஆகிறதே. அது என்ன கெரோசின், ஸ்பிரிட் போன்றவையா 'எவாப்பரேட்' ஆவதற்கு? கரண்ட் 'எவாப்பரேட்'

ஆகாது என்றுதான் தெரிகிறது. கெரோசின் ஆயில் என்றால் ஒத்துக்கொள்ளலாம். ஸ்பிரிட் என்றாலும் பரவாயில்லை. கரண்ட் லாஸ் ஆகிறது என்றால், அது எங்கே ஓடி விட்டது?

**மிஸ்டர் சேர்மன் : லீக்கேஜ்.**

**திரு. சி. வி. ராஜகோபால் :** லீக்கேஜ் மட்டுமல்ல. அது பல வழிகளில் ஏற்படுகிறது. திருடுகிறார்கள். 'லீக்கேஜ்' வீணாகப் போனால் பரவாயில்லை. உண்மையாகத் திருடுவதால் தான் ஏற்படுகிறது. அதற்குக் கௌரவமான பெயர் லீக்கேஜ் என்று சொல்லுவார்கள். மின்சார வாரியத்தை 17 சதவிகிதம் என்ன ஆகிறது என்று கேட்டால், லீக்கேஜ் என்று சொல்லுவார்கள். இப்படிச் சொல்லக்கூடாது, டிரான்ஸ்மிஷனில் வரலாம். வந்தால் அது மைனர். 2 சதவிகிதம், 3 சதவிகிதம் என்று சொன்னால், உண்மையிலேயே அங்கீகரிக்கப்படலாம். ஆனால் 17 சதவிகிதம் லீக்கேஜ் என்று சொல்லி நான் கேட்டதில்லை. ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு மின்சார வாரியம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் இப்போது இந்த மின்சார வாரியம் பெரிய உதவி செய்திருக்கிறது. வேலையில்லாமல் மக்கள் ஆயிரக்கணக்கில் குவிந்திருக்கிற காலத்தில் வேலை தருகிறார்கள். 'மேனுவல் லேபர்' ம் தருகிறார்கள். 25 ஆயிரம் பேர்களுக்கு வேலை தந்திருக்கிறார்கள் என்றால், அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. தற்காலத்தில் ஒருவருக்கு வேலைவாங்கித் தருவது என்பது முடியாத நிலையில் மின்சார வாரியம் இவ்வளவு பேர்களுக்கு வேலை தந்திருக்கிறது என்றால் அதையும் பாராட்டுகிறேன்.

இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மின்சார வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 'சிட்டி காம்பன்சேட்டரி அலவன்ஸ்' கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அது மிகவும் பாராட்டுக்குரியதாகும். வீடு இல்லாமல், வாசல் இல்லாமல், ரோட்டில் நின்று கொண்டு மின்சார வாரியத்தில் வேலை
6.00 p.m. செய்கிறான் என்றால், அந்தப் பரிதாபத்துக்குரிய தன்மைகளைப் போக்குவதற்கு 'சிட்டி காம்பன்சேட்டரி அலவன்ஸ்' தரப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு 'கரண்ட்' தரப்படுகிறது. அது உற்பத்தியாகும் இடத்திலிருந்து போய்ச் சேருகிற இடத்திற்கு 24 நயா பைசா ஆகிறது. ஆனால் நாம் தருவது 10 பைசாதான். தயவு செய்து இந்த நிலையை மாற்ற வேண்டும். விவசாயிகளுக்குப் பல வகையான சலுகைகள் அளிக்கப்படுகின்றன. லேண்டு டெவலப்மெண்டு பேங்கில் கடன் கொடுக்கப்படுகிறது. மாடு வாங்கப் பணம் கொடுக்கிறோம். எரு வாங்கித் தருகிறோம். ஆகவே இதில் அநியாயமான நஷ்டத்தை உண்டாக்கிக்கொள்ளாமல், மின்சார வாரியம் இவ்வளவு கருணை காட்ட வேண்டியதில்லை. தாராளமாக இருந்தால், மின்சார வாரியம் பிழைத்திருக்க வேண்டும். போட்டிருக்கிற மூலதனத்துக்கு ஏற்ற வருமானம் கிடைப்பதில்லை. பணம் கிளட்டத்தால் 5, 6 வருஷங்களில் 11 சதவிகிதம் 12 சதவிகிதம் கிடைத்திருக்கிறது. இதில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மகா விசித்திரமாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. நாம் மின்சார வாரியத்தில் 'கேப்பிட்டல் அவுட்லே' அதாவது ரூ. 253.28 கோடி மூலதனம் போட்டிருக்கிறோம். நமக்கு வந்திருக்கிற 'கிராஸ் ரெவின்யு' ரூ. 63.36 கோடி என்று காட்டியிருக்கிறார்கள். இப்படி வந்திருக்கிற வருமானத்தை 'கிராஸ் ரெவினியு' என்று சொல்லுகிறார்கள். இப்படிக் காட்டிவிட்டால், தொழிலாளர்



கள் சும்மா இருக்கிறார்களா? ரூ. 61 கோடியாக இருக்கிறதே, எங்களுக்குப் பென்ஷன், கிராட்டியுடி கொடுங்கள் என்று கேட்பார்கள். ஆகவே தயவு செய்து 'கிராஸ் வேல்யு' காட்ட வேண்டாம். எல்லாச் செலவும் போக 'நெட் பிராபிட்' 10 சதவிகிதம்தான் இருக்கிறது என்று சொல்லுங்கள். ரூ. 61 கோடி ரெவினியு என்று இருப்பதை நிகர லாபம் ரூ. 8 கோடி, ரூ. 10 கோடி என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'கிராஸ் ரெவினியு' போட்டுத்தான் நிகர லாபம் காட்டுவது வழக்கம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** நிகர லாபம் இங்கே இல்லை. 'கிராஸ்' தான் இருக்கிறது. நிகர லாபம் என்று இருந்தால், 'கிராஸ்' பற்றிப் பேசியிருக்க மாட்டேன். இன்னொன்று, இதற்குப் போடுகிற செலவு மிக ஏராளமாக இருக்கிறது. கணக்கு எவ்வளவு என்று சொல்லத் தெரியாது. சப்-ஸ்டேஷன்களில் போய்ப்பார்க்கிறேன். ஏராளமான சாமான்கள் கொட்டப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கு நாலு மடங்கு சாமான்கள் கொட்டப்பட்டிருக்கின்றன. அவ்வளவு தேவையா என்பது சந்தேகம். பல வருஷங்களாகக் கிடக்கின்றன. தேவை என்றால், ஒரு வருஷத்தில் செலவாகிவிடும். காஞ்சிபுரம் சப்-ஸ்டேஷன் பக்கத்தில் ஸ்டோர்ஸ் சாமான்கள் எட்டு வருஷமாக அப்படியே இருக்கின்றன. எப்போது செலவு செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே, தேவைப்படுகிற நேரத்தில் நிச்சயமாகப் பயன்படுத்தியாக வேண்டும். தேவையில்லையென்றால், உடனடியாக ½ அணா விலைக்கோ அல்லது 1 அல்லது 1½ அணா விலைக்கோ 'டிஸ்போஸ்' செய்ய வேண்டும். தேவையானால், வைத்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் தீர்த்து விடுங்கள். இரண்டு வருஷம், மூன்று வருஷம் தேவையென்றால் வைத்துக்கொள்ளுங்கள் ஐந்து வருஷத்திற்குப் பிறகும் சாமான் இருக்குமானால், 'டிஸ்போஸ்' செய்ய வேண்டும். மின்சார வாரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஏழு வருஷமாக பைப்கள் கொட்டப்பட்டுக் கிடக்கின்றன.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** செங்கற்பட்டு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் போதிய சாமான்கள் கிடைக்கவில்லையென்று புகார் கொடுக்கிறார்கள் என்பது உறுப்பினருக்குத் தெரியுமா?

**திரு. சி. வி. ராஜகோபால் :** அவர்கள் முக்கியமாக கம்பம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் பழைய பித்தளை சாமான்கள், தேவையில்லாத சாமான்களை டிஸ்போஸ் செய்துவிடுங்கள் என்று சொல்கிறேன். 7 வருஷங்களுக்கு 6 வருஷங்களுக்கு மேல் உள்ள சாமான்களைத் தயவு கூர்ந்து டிஸ்போஸ் செய்யுங்கள் என்று கூறுகிறேனேயொழிய, புதிய சாமான்கள் வாங்கித்தர வேண்டாமென்று சொல்லவில்லை. தேவையான சாமான்களை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி :** மாண்புமிகு தலைவரவர்களே, மின்சார வாரிய அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நாட்டின் வளர்ச்சிக்கு மின்சாரம் மிக மிக முக்கியம். மின்சாரம் எவ்வளவு இந்த நாட்டில் வளர்ந்ததோ அதற்குத் தகுந்த முறையில் நம் நாட்டினுடைய

பொருளாதார வளர்ச்சியும் தொழில் விவசாய வளர்ச்சியும் வளரும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. ஆனால் நாட்டில் இப்போது சென்ற 20 ஆண்டு காலம் இருந்ததைவிட தற்போது சில முக்கியமான மின்சார நிலையங்களை அமைக்க நமது அரசு திட்டமிட்டிருக்கிறது வரவேற்கத் தகுந்த விஷயம். அதோடு நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கோதையாறு மின்சாரத் திட்டம் ஆசியாவில் மிகப் பெரிய திட்டமென்று அறிகிறேன். அந்தத் திட்டம் பூர்த்தியாகி அந்த திட்டத்திலிருந்து மின்சாரத்தை நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு கொண்டுபோய், பலவிதமான தொழில்கள் அங்கு வருவதற்கு ரொம்பவும் சௌகரியமாக இருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் நான் மின்சார வாரிய அமைச்சர் அவர்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மணவாளக்குறிச்சியில் டைடோனியம் டை ஆக்சைடு தொழிற்சாலை ஒன்று மத்திய சர்க்காரால் 20 கோடி ரூபாய் செலவில் ஸ்தாபிக்க வேண்டுமென்ற திட்டம் தயாராக இருக்கிறது என்று அறிகிறேன். ஆனால் அவர்களுடைய கேள்வியானது கேரளாவிலிருந்து மின்சாரம் குறைந்த கட்டணத்திற்குக் கொடுக்கிறார்களா அல்லது தமிழ்நாட்டின் மின்சாரத்தைக் குறைந்த கட்டணத்திற்குக் கொடுக்கிறார்களா என்பது. எந்நாட்டிலிருந்து குறைந்த கட்டணத்தில் கிடைக்கிறதோ அந்த நாட்டில் அதை அமைப்பதற்கு அந்தத் திட்டத்தை உருவாக்கி வருகிறதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இருந்தாலும் தமிழ் நாட்டில் கிடைக்கிற மூலப் பொருளை வைத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமது அரசு எவ்வளவு வேகமாகச் சிபாரிசு செய்யவேண்டுமோ குறைந்த விலையில் மின்சாரம் கொடுத்து அந்தச் சிபாரிசை அரசு செய்யும்படி நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பாகச் சொல்லிய குறைபாடுகளையெல்லாம் கவனித்து பல குறைபாடுகளை நீக்கியதாக அறிக்கையில் பார்த்தேன். அதற்கு நமது மின்சார அமைச்சருக்கும் அந்த போர்டு தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கிடைக்கிற மின்விசை ஏற்றம் காலதாமதமாகக் கூட கிடைக்கவில்லை என்று முழு மன வருத்தத்தோடு இந்த சந்தர்ப்பத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னிடத்தில் ஒரு விவசாயி ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார். அவர் நில வள வங்கியில் வாங்கின கடன் 14—12—1968-ல் 2,400 ரூபாயும், 10—5—1969-ல் 2,100 ரூபாயும் 16—12—1969-ல் 1,500 ரூபாயும் ஆக 6,000 ரூபாய்கள் அவர் கடன் பெற்று விட்டார். அவர் கடன் பெற்று கிணற்று வேலை முடித்து அதோடு அவருக்கு அந்த நிலத்திலிருந்து கடனையும் தீர்த்து பம்பு செட்டு வாங்கி வைத்து அவர் 3 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அவர் கடன்

பிற்பகல் 6-10. வாங்கிய அந்த நில வள வங்கியிலிருந்து அவரை விட்ட பாடில்லை. 16—12—1969-ல் அபராத வட்டியாக ரூ. 6.90, வட்டியாக ரூ. 355.5, அசலுக்கு ரூ. 218.82 ஆக முதல் தவணையாக ரூ. 580.67 பைசா. அந்த நிலத்திலிருந்து எந்த விதமான வருமானமுமில்லாமல் அவர் முதல் தவணை கொடுத்திருக்கிறார். இரண்டாவது ஆண்டுக்கு 2—3—1971 அன்று அபராத வட்டியாக ரூ. 22.22, வட்டியாக 307.18 ஆக ரூ. 329-40 பைசா 29—6—2972-ல் அபராத வட்டி ரூ. 13.1, வட்டி ரூ. 170, அசல் ரூ. 234.51 ஆக எல்லாம் சேர்த்து ரூ. 1,327.61 பைசா அந்த விவசாயி அந்த நிலத்திலிருந்து





எந்தவிதமான வருமானமும் இல்லாமல் கொடுத்து நஷ்டமடைந்திருக்கிறார். அதனுடைய காரணம் என்னவென்றால் நம்முடைய விநியோகம் செய்கிற மின்சாரா இலாகாவில் செயல்திறமை குறைவு. அவர் அடிக்கடி போய் எனக்கு மின்சாரம் வேண்டும், நான் பலவிதமாக நஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னாராம். அதற்கு அங்குள்ளவர்கள் 'ரா மெடீரியல்' கைவசமில்லையென்று சமாதானம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். இது வரையிலும் அவருக்கு இந்த இணைப்பு கிடைத்ததாகத் தெரியவில்லை. இந்த ஒருவருக்கு மாத்திரமல்ல. இதே லைனில் பல லைன்களுக்கும் இணைப்பு கொடுக்கவில்லை. கன்னியாகுமரி ஜில்லாவில் தோவாளை தாலுகாவில் மின்சாரப் பம்புசெட்டுகளே மிகக் குறைவு. அப்படியிருந்தும் இந்த மாதிரி மின்சாரம் கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்கது. அதற்கு உடனடியாக நம் மின்சார இலாகா தலைவரவர்களும் நமது அமைச்சரவர்களும் உடனடியாக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். தலைவருடைய அனுமதியின் பேரில் என்னுடைய குறிப்பை தலைவர் வழியாகக் கொடுக்க திட்டமிட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு திட்டம் நிறைவேறிவிட்டது. அங்கு முக்கியமாக ஒரு சூப்பிரண்டு என்ஜினியர் ஆபீஸ் அமைக்கவேண்டியது மிக அவசியம் என்று பொது மக்கள் கருத்து இருக்கிறது. அதோடு நான் வசிக்கிற தோவாளை தாலுகாவிலும் ஒரே ஒரு செக்ஷன் ஆபீஸ் தான் இருக்கிறது. நான் இருக்கிற ஊரில் ஒரு நூற்பாலையும் இன்னும் ஒரு சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட கன்ஸ்யூமர்களும் இருக்கிறார்கள். அங்கும் ஒரு செக்ஷன் ஆபீஸ் ஸ்தாபிக்கும்படியாக நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நமது மின்சார அமைச்சரவர்கள் சென்ற ஒரு மாதத்திற்கு முன்னதாக விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் கூட்டப்படமாட்டாது என்று அறிவித்ததைப் பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் வீட்டிற்கு வேண்டிய மின்சாரக் கட்டணங்களையும் குறைக்க வேண்டும் என்று சொன்னதை நானும் ஆமோதிக்கிறேன். ஏனென்றால் இப்போது நடுத்தர வகுப்பினரும் மிக ஏழைகளும் கூட மின்சாரத்தை உபயோகப்படுத்தக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அதோடு சாதாரணமாக குடிசைகளில் விளக்குகள் போட வேண்டுமானால் கூட, இந்த மண்ணெண்ணெய் (கெரோசின்) இதர விளக்கு எரிப்பு எண்ணெய் வகைகளில் விலை ஏறிக் கொண்டு வருவதால் கடன் பட்டாவது மின்சார இணைப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து கட்டணத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மின்சார வாரிய அறிக்கையை வரவேற்று நான் இந்த சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

* திரு. ஆர். சாம்பசிவம்: தலைவரவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் புகழ் ஒளி பெரிதா, கதிரவன் ஒளி பெரிதா என்ற போட்டியிருக்கிற நிலையில் மின்னொளி நானும் போட்டி போடுகிறேன் என்ற அளவிலே தமிழகம் முழுவதும் மின்னொளி பரவி வருகிறது. 1967-க்கு முன்பு ராமன் ஆண்டால்

என்ன. ராவணன் ஆண்டால் என்ன என்ற நிலையில் மக்களை அந்த ஆட்சி வைத்திருந்தது. ஆனால் இப்போது மின்னொளி அமைச்சர் ராமன் ஆளுகிறார். மின்சார வாரியம் நல்ல முறையில் பணியாற்றி நாடு முழுவதும் மின் விசையைத் தர அதிகமாகப் பாடுபட்டு வருகிறது.

உண்மையிலே இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. தொழில் துறைக்கு மின்சாரம் கொடுத்தால் லாபம் அதிகமாக வருமென்றாலும், நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் 75 சதவிகித கிராம மக்களுக்கு, விவசாயத்திற்கு, குறிப்பாக தெரு விளக்குகளுக்கும் மின்சாரம் கொடுப்பதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் இப்படிக் கொடுக்கப்படுவதாலே அதிக லாபம் கிடையாது. என்றாலும் நாட்டிலுள்ள மக்களில் முக்கால் பங்கினரான மக்களுக்காகச் செய்ய வேண்டிய கடமையை முதலில் செய்ய வேண்டுமென்ற அக்கறையோடும், விவசாயம் நாட்டின் உயிர்நாடி, அது எல்லாவற்றிற்கும் முதன்மையானது என்ற கருத்தோடும் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதில் மிகுந்த அக்கறை கொண்டு இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

அடுத்தாற்போல், இந்தத் துறையில் வளர்ச்சிக்குத் தக்கபடி திட்டமிட்டு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பது இதை நன்கு பார்த்தால் தெரியும். என்னுடைய மாவட்டத்தில் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட இருக்கிறது. இப்படி இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டு இரண்டாவது தெர்மல் ஸ்டேஷன் கட்டப்பட்டால் அது எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும், காரணம் எங்கள் மாவட்டம் எல்லாத் துறைகளிலும் பின் தங்கிய ஒரு மாவட்டமாகும். நெய்வேலி ஒன்று தான் எங்களுக்கு வரப் பிரசாதமாகும். இப்படி இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டால் அதன் மூலம் பல ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கு அதன் மூலம் நல்ல வாய்ப்புக் கிடைக்கும். என்னுடைய மாவட்டத்தின் வளர்ச்சியில் முதலமைச்சரும், உணவு அமைச்சரும், போக்குவரத்துத் துறை அமைச்சரும், இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரும் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, இந்த இலாகா வளர வளர அதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகுகிறது. அரசாங்க பாங்கிகளில் பலர் வேலை தேடிச் செல்வது போல, மின்சார வாரியத்தில் வேலை பெற வேண்டுமென்று பலரும் கருதுகிறார்கள். காரணம் மற்ற இலாக்காக்களை விட மின்சார வாரியத்தில் சம்பளம் அதிகம். அதிகமான போனசும் கிடைக்கிறது. எனவே பலர் எப்படியாவது மின்சார வாரியத்தில் வேலை பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். அடுத்தாற்போல், இந்தத் துறையில் சில ஆண்டுகளாக 25 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கிற நிலை இருக்கிறது. இது அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மின்சார இலாகாவில் நல்ல பல மாறுதல்களைச் செய்ய அந்தத் துறை முயன்று கொண்டிருக்கிறது. அதுவும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த அவையிலே மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் சொன்னது போல, சில குறைபாடுகள் இந்தத் துறையில் இருக்கின்றன. இப்படி ஒரு பெரிய நிர்வாகமாக இருப்பதால், ஒரு சில குறைபாடுகள் இருக்கத்தான்



செய்யும். இவற்றையும் அகற்றும்படியான உத்தேசத்தோடு இந்தத் துறை சில முறைகளை மேற்கொள்ள இருக்கிறது. இதை அவர்கள் நிச்சயம் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள் மின்னொளி விளம்பரத்திற்கு ஏராளமாகச் செலவு செய்யப்படுகிறது என்று. அது உண்மையிலே மிகையாகச் சொல்லப்பட்டதாகும். நாங்கள் செய்வதை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக இப்படிப்பட்ட விளம்பரங்கள் இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. நாங்கள் செய்வதை மக்கள் தெரிந்துகொள்ளாவிட்டால் இவர்களும் ஒன்றும் செய்யவில்லை போல இருக்கிறதே என்று நினைத்து விடுவார்கள். அரசு மக்களுக்காக என்ன செய்கிறது என்பது அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால், அந்த அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாது. அதற்காகத் தான் நாங்கள் இப்படிப்பட்ட விளம்பரங்களை, நாங்கள் செய்வதைத் தெரிந்து கொள்வதற்காக அனுமதித்து வருகிறோம். இந்தத் துறை எதிர்காலத்திற்கு வேண்டியதை நல்ல முறையில் திட்டமிட்டுச் செய்து வருவதற்காக அதைப் பாராட்டி, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

103. Notification issued with G.O. P. No. 2156, Revenue, dated the 1st August 1971, in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

104. Notification issued with G.O. Ms. No. 1316, Rural Development and Local Administration, dated the 29th May 1971, in regard to an amendment to the Rules relating to the qualifications and recruitment of inferior servants under Municipal Councils, published at pages 158 to 165 of the Rules Supplement to Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 7th November 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

105. Notification issued with G.O. P. No. 2842, Revenue, dated the 25th September 1971, in regard to exemption from liability to sales tax on the sales of Computed Cattle feed by the

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Thursday, the 9th December* **1971.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the **Chair.**

## I. QUESTIONS AND ANSWERS

### Starred Questions.

*Loan of State Transport Buses for the Educational Institutions*

*112 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Educational authorities of (1) the Government (2) the Private Colleges have addressed the State Transport Department for the loan of State Transport Buses for the use of their institutions; and

(*b*) if so, the details thereof?

*கல்வி நிறுவனங்களுக்கு அரசுப் பேருந்துகளைக் கடன் வழங்குதல்*

***திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :*** *மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) (1) அரசுக் கல்லூரிகளின் (2) தனியார் கல்லூரிகளின் கல்வி அதிகாரிகள் தங்கள் கல்வி நிறுவனங்களின் பயனுக்காக அரசுப் போக்குவரத்துத் துறை பேருந்துக்களைக் கடனாக வழங்கக்கோரி அரசுப் போக்குவரத்துத் துறைக்கு எழுதியுள்ளனரா ?*

*(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?*

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, (அ) & (இ) சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களின் தேவையை முன்னிட்டு அவர்களுக்குப் போக்கு வரத்து வசதி அளிக்கும் திட்டம் ஒன்று உள்ளது. இதன்படி கல்லூரிக் கல்வி இயக்குனர் அவர்கள் அதற்கு எவ்வளவு பேருந்துகள் தேவைப்படும் என்பதைக் கண்டறிந்து போக்குவரத்துத் துறை இயக்குநரிடம் தெரிவிக்க வேண்டும். அரசினர் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் கல்வி நிதியிலிருந்து அப்பேருந்துச் செலவு ஈடுகட்டப்படும். மானியம் பெறும் கல்லூரிகளுக்கு ரூ. 11,000 வட்டியில்லாக் கடனாக அரசு வழங்குகிறது. இத்திட்டம் பின்னர், வெளியூர்களில் உள்ள பள்ளிகளுக்கும் கல்லூரிகட்கும் கூட விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.*

*Floating University*

*113 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Floating University from U.S.A. visited this State during March 1971; and

(*b*) if so, the details thereof?

[8th December 1971

Co-operative Milk Supply Societies to their members. [Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

106. Order issued with G.O. R. No. 1824, Revenue, dated the 12th October 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Manager, Cathedral Free Primary School, Madras on 31st October 1971 at Kamadhenu Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

107. Notification issued with G.O. Ms. No. 1776, Home, dated the 23rd July 1970, in regard to amendments to the Tamil Nadu Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

108. Notification issued with G.O. Ms. No. 2396, Home, dated the 25th September 1969 in regard to amendment to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

109. Notification issued with G.O. Ms. No. 83, Home, dated the 7th January 1971, in regard to amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with Home Department Notification S.R.O. No. A 291 of 1960, dated the 18th August 1960 at pages 3-121 of the supplement to Part V of the *Fort St. George Gazette,* dated the 14th September 1960, as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

110. Notification issued with G.O. Ms. No. 2541, Home, dated the 18th September 1971 relating to the reduction of tax to one-third of the normal rate in respect of the following vehicles belonging to the Action for Food Production, Bangalore :

1. Leyland Comet Lorry—MYA 3827.
2. Willy's Jeep—MYO 8356.
3. Land Rover—MYO 8605.
4. TRUCM-2—Chassis No. 14394. Engine No. 260638.

[Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

111. Notification issued with G.O. Ms. No. 2029, Rural Development and Local Administration, dated the 6th September 1971, in regard to amendment to the rules for regulating the grant of



8th December 1971]

gratuities by Mnuicipal Councils to their officers and servants under the Tamil Nadu District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

*B. Reports, Notifications and other Papers.*

* 41. Draft of the rules to regulate the classification, methods of recruitment, conditions of service, discipline and appeal and pension in respect of the Municipal Services (Pensionable) in the State of Tamil Nadu.

---

* Laid on the Table of the House on 7th December 1971.

[9th December 1971

### "மிதவைப் பல்கலைக் கழகம்"

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அமெரிக்க நாட்டிலிருந்து "மிதவைப் பல்கலைக் கழகம்" ஏதேனும் 1971 மார்ச் மாதத்தில் இம் மாநிலத்திற்கு வருகை தந்ததா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கலிபோர்னியாவிலிருக்கும் ஆரஞ்சு என்ற இடத்தில் உள்ள சாப்மென் கல்லூரி நடத்தும் உலகத்தைச் சுற்றி வரும் "மிதக்கும் பல்கலைக் கழகம்" 19—3—1971 அன்று சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்தது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: அந்தப் பல்கலைக் கழகத்தின் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் இருக்கும் ஆரஞ்சு என்ற இடத்திலுள்ள சாப்மென் காலேஜில் இப்படிப்பட்ட மிதக்கும் பல்கலைக் கழகம் (ஃப்ளோட்டிங் யுனிவர்சிடி) என்று ஒரு கப்பலில் இந்த ஏற்பாடுகளை வைத்திருக்கிறார்கள். அதில் 500 மாணவர்கள் தங்கியிருக்கலாம். 35 பேராசிரியர்கள் பயிற்சி தருகிறவர்கள் இருக்கிறார்கள். அதைத் தவிர 30 அலுவலாளர்கள் இருக்கிறார்கள். அதில் 280 பேர் கொள்ளும் மண்டபம் உட்காருவதற்காக இருக்கிறது. 14 வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள் இருக்கின்றன. கடலில் சென்றுகொண்டிருக்கும் போது பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஒவ்வொரு நாட்டிற்கும் சென்று அங்குள்ள பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் சொற்பொழிவுகள், விரிவுரைகள் ஆற்றச் செய்து அதை மாணவர்கள் கேட்பார்கள். எக்ஸ்கர்ஷன் என்ற சுற்றுலா முறையிலும் அந்தப் பகுதிகளுக்குப் போவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில நாடுகளில் ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்குப் போகும் வரை அந்த நாட்டைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், பேராசிரியர்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு அவர்களை விட்டு சொற்பொழிவுகள் ஆற்றச்செய்து மாணவர்கள் அவற்றைக் கேட்டுப் பயன் பெறுகிறார்கள். இது உலகம் முழுவதும் சுற்றும் அளவில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தக் கப்பல் இங்கே வந்தபோது சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், மாணவர்கள் அவர்களை வரவேற்றார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தத்துவப் பேராசிரியர் திரு. மகாதேவன், பொருளாதாரப் பேராசிரியர் திரு. ராஜரத்தினம், தொல்பொருள் பேராசிரியர் திரு. ஏ. ஆர். சுவாமி ஆகியோர் அவர்களுக்குச் சில வகுப்புகள் எடுத்து சொற்பொழிவுகளை நடத்தினார்கள்.

### *Grants for Tamil Language Fighters*

* 109 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to sanction grants to those persons who fought for the development of Tamil as in the case of freedom fighters?



9th December 1971]

### தமிழ் மொழிப் போராட்ட தியாகிகள் மான்யம்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் மொழிக்காகப் போராடி சிறை சென்ற தியாகிகளுக்கு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மானியம் வழங்குவது போன்று மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அத்தகைய செயல் குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

### *Expenditure for the general elections*

* 110. Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the expenditure incurred for the General Elections conducted recently (1971) in Tamil Nadu; and

(b) the amount of expenditure shared by the Central Government?

### பொதுத் தேர்தல் செலவு

திரு. வி. தங்கபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்---

(அ) தமிழ் நாட்டில் அண்மையில் (1971-ல்) நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு ஏற்பட்ட மொத்த செலவுத் தொகை எவ்வளவு?

(இ) இதில் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இது வரை செலவான தொகை ரூ. 1,43,48,700, இத்தொகையில் இன்னும் முடிவு செய்யப்படாத சில இனங்களுக்கான செலவினங்கள் சேர்க்கப்படவில்லை.

(இ) இதில் பாதிச் செலவை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும்.

### *Bangla Desh Refugees Relief Fund*

* 111. Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the amount collected so far from the public by the Government of Tamil Nadu for Bangla Desh Refugees Relief Fund;

(b) the amount so far sent to the fund by the Government from the General Fund and the said collection;

(c) whether the Government have sent aid in kind also for the above fund besides cash; and

(d) if so, the details thereof?

[9th December 1971

### வங்காள தேச அகதிகளின் துயர் துடைப்பு நிதி

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வங்காள தேச அகதிகளின் துயர் துடைப்பு நிதிக்காக தமிழ் நாடு அரசு இதுவரை எவ்வளவு தொகை பொது மக்களிடமிருந்து வசூலித்திருக்கிறது?

(இ) அரசு பொது நிதியிலிருந்தும், மேற்படி வசூலில் இருந்தும் இது வரை மேற்படி நிதிக்கு எவ்வளவு தொகை அரசு அனுப்பியிருக்கிறது?

(உ) ரொக்கமாகவன்றி பொருள்களாக அரசு அனுப்பியிருக்கிறதா?

(எ) ஆமெனில், அதன் விவரமென்ன?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* (அ) பொதுமக்களிடமிருந்து அரசு தொகை எதுவும் வசூலிக்கவில்லை என்றாலும் பொது மக்கள் தாமாகவே முன் வந்து முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்து வருகிற நன்கொடைத் தொகை அவ்வப்போது வங்காள தேச உதவிக் குழுவிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. 8—12—1971 வரையில் அப்படி அனுப்பப்பட்ட தொகை ரூ. 29,923.27.

(இ) தமிழ்நாடு வங்காள தேச உதவிக்குழுவுக்கு முதலமைச்சர் பொது மக்கள் துயர் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 25,000 உதவித் தொகையாக 1—6—1971 அன்று வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்குப் பொது மக்களாலும் அரசாலும் அளிக்கப்பட்ட நன்கொடை 8—12—1971 வரையில் ரூபாய் 1,19,392.68.

(உ) & (எ) மேற்படி தொகை அன்னியில் ரூ. 8,000 பெறுமான மருந்துகளை சென்னையைச் சேர்ந்த சைனமைடு இந்தியா கம்பெனி வழங்கியுள்ளது. அவை ரெட் கிராஸ் சொசைடி மூலமாக அகதிகளுக்கு வழங்க அனுப்பப் பட்டுள்ளன.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:* சென்னை நகரத்திலே இந்த வங்காள அகதிகளுக்கான பொருள்களைச் சேகரித்து அனுப்புவதற்காக, குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையிலிருந்து அறியப்படுகிறது. அந்தக் குழுக்கள் அமைத்ததற்கும் தமிழக அரசிற்கும் தொடர்பு உண்டா? மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அமைக்கப்பட்டதா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* அந்தக் குழுக்கள் பொதுப் பணியிலே ஆர்வம் கொண்டவர்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழக அரசைப் பொறுத்த வரையில் முதலமைச்சர் அதனுடைய புரவலராக இருக்கிறார், அந்தத் தொடர்புதான்.

### *State Institute of Education*

* 114 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have approached the University of Madras for seeking affiliation to the State Institute of Education; and

(*b*) if so, the details?



9th December 1971]

### மாநிலக் கல்வி நிறுவனம்

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலக் கல்வி நிறுவனத்திற்கு ஏற்பளிப்பு செய்யக் கோரி சென்னை பல்கலைக் கழகத்தை அரசு அணுகியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Newspapers for the Government High Schools*

* 115 Q.—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned the purchase of newspapers for the Government High Schools; and

(*b*) if so, the names of the newspapers that are purchased?

### அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செய்தித் தாள்கள்

*திரு. எஸ். எஸ். தென்னரசு:* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செய்தித் தாள்கள் வாங்குவதற்கு அரசு அனுமதித்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், என்னென்ன செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* (அ) இதைப்பற்றி அரசின் மட்டத்தில் யாதொரு ஆணையும் வெளியிடவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* செய்தித் தாள்களை எந்த அடிப்படையில் வாங்குகிறார்கள்?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* அந்தந்தப் பள்ளிகளிலே தனிக் கட்டணம் பெறுகிறார்கள். தனிக் கட்டணம் பெற்று அந்தந்தக் கல்லூரிகளிலுள்ள நிர்வாகத்தினர், ஆட்சிக் குழுவினர் ஆராய்ந்து எவற்றை வாங்குவது என்று தீர்மானிக்கிறார்கள். இன்னின்ன செய்தித் தாள்களைத்தான் வாங்க வேண்டுமென்று அரசாங்கம் எந்த உத்தரவும் போடவில்லை.

*திரு. எஸ். எஸ் தென்னரசு:* எந்தெந்தப் பத்திரிகைகளைப் படிக்கலாம், எவைகளை வாங்கலாம் என்று அரசு வழி காட்டியிருக்கிறதா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தடை செய்யப்படாமல் இருக்கிற பத்திரிகைகள் வாங்குவதற்குரியவை தான். கையில் எவ்வளவு காசு இருக்கிறதோ அந்த அளவுக்கு வாங்கலாம்.

*புலவர் ஓ. அறிவுடை நம்பி:* இலக்கிய மன்றத்திற்கென வசூலிக்கப்படுகிற தொகையிலிருந்துதான் இந்தச் செய்தித்தாள்கள் வாங்கப்படுகின்றன என்று அறிகிறேன். பழைய நிலையில் இலக்கிய மன்றங்களுக்கு வசூலிக்கப்பட்டது போல மீண்டும் வசூலிக்க அரசு ஆணை பிறப்பிக்க முந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தனிக் கட்டண நிதியிலிருந்து வாங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலக்கிய மன்றம் இந்தச் செய்தித் தாள்களைப் பற்றிய கருத்துக்களை மற்றவைகளை வழங்குவதற்குப் பயன்படுகிற தென்று வைத்திருக்கிறார்கள். இலக்கிய மன்றத்திற்குத் திரட்டப்படுகிற தொகை முழுவதும் அந்த மன்றத்திற்காகும் செலவிற்குப் பயன்படும். அதனுடைய கருகக் கூட இதைக் கருதலாம். எந்த வகையில் திரட்டிச் செலவழிக்கிறார்கள் என்பதைத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

*திரு. கே. எஸ். அப்துல் வகாப் :* எந்தெந்தப் பத்திரிகைகளை வாங்கக் கூடாது என்ற குறிப்பு இருக்கிறதா? அப்படியிருந்தால் அவை எந்தப் பத்திரிகைகள்?

MR. CHAIRMAN : Already it has been answered.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அப்படிப்பட்ட பட்டியல் நாம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. பள்ளிகளில் இருப்பவர்களுக்குப் பொறுப்பு இருப்பதாலும், கடமை உணர்ச்சி இருப்பதாலும், எந்தெந்தப் பத்திரிகைச் செய்திகள் மாணவர்களுக்குப் பயன்படுமோ அந்தச் செய்திகளைத் தரும் இதழ்களை மட்டும் வாங்குவதுதான் முறையாகும். மாறுபட்ட நிலைமையிருந்து அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதில் அரசாங்கம் தலையிடு வதற்கு அவசியமேற்படும்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, மாணவர்கள் படிக்கக் கூடாத சில வாரப் பத்திரிகைகள் கூட சில பள்ளிகளில் வரவழைக்கப்படு கின்றன. அதுமாதிரி பத்திரிகைகளை வாங்கக் கூடாது என்று அரசு உத்தர விடுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* முதலிலேயே குறிப்பிட்டேன். அப்படி ஏதாவது இருந்தால், உள்ளபடியே கேடு விளைவிக்கும் என்று தெரிந் தால், அவற்றைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கலாம்.

## *Shift System in Secondary Schools*

* 116 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to introduce shift system in secondary schools to overcome the problem of over crowding in classes; and

(*b*) if so, the stage at which the matter now stands?

## *இடைநிலைப் பள்ளிகளில் ஷிப்ட் முறை*

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வகுப்புகளில் மாணவர்களின் நெரிசலைத் தீர்ப்பதற்காக இடைநிலைப் பள்ளிகளில் ஷிப்ட் முறையைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?





(இ) ஆமெனில், அது இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* ஒரு வகுப்பிற்கு 40 மாணவர்களுக்கு மேலாக இருக்கக் கூடாது என்று மெட்ராஸ் எஜுகேஷனல் ரூலில் சொல்லப்பட்டிருக் கிறது. 55 மாணவர்களுக்கு மேலாக இருந்தால்தான், இன்னொரு வகுப்பு துவக்கலாம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அப்படிச் சொல்வது சட்டத் திற்கே புறம்பானதல்லவா என்பதை அரசு ஆராய்ந்ததா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* வகுப்புக்கு 40 பேர்கள் இருப்பது நல்லது என்ற முறையில் நாம் திட்டமிட்டு வருகிறோம். இருக்கிற நெருக்கடி, பணவசதி, ஆசிரியர்களை நியமிக்கும் தன்மை ஆகியவற்றினைப் பார்க்கும்போது, சில இடங்களில் ஓரளவுக்கு எண்ணிக்கை கூடும்படியாகத்தான் இருக்கிறது. அதைச் செய்யாவிட்டால், ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண் டும் அல்லது வகுப்பினர் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். சில இடர்ப் பாடுகளைத் தாங்கிக் கொண்டாலும் பலருக்குக் கல்வி அளிக்கிறோம் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் எண்ணிக்கை கூடினாலும், பள்ளியை நடத்திக் கொண்டு வருகிறோம். நிதி வசதி பெருகி, ஒரு ஸ்திரத் தன்மை ஏற்பட்ட பிறகு, எதிர்காலத்தில் இந்த நிலைமை சீராகும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

THIRU G. SWAMINATHAN : Sir, rule 18 of the Madras Educational Rules very clearly states that a particular class should not have more than 40 students, and if they want to have more they can have only up to five more with the permission of the District Educational Officer and even for that, the class room should have 450 square feet. Now we are having 55 students in every class, as a matter of policy. Will the Government consider the matter of changing or amending the very rule itself because what the Government are doing is contrary to rule 18 of the Madras Educational Rules?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தனியாக ஆராய வேண்டும்.

*திரு. எம். ராஜா அய்யர் :* தலைவர் அவர்களே, பெரும்பள்ளிகளில் இது மாதிரி வகுப்பறைக்கு 55 பேர்களை வைக்கும் நிலைமை இருக்கலாம். சிறு பள்ளிகளில் 55 பேர் ஒரு வகுப்புக்கு என்று வரும்போது, சில ஆசிரியர்கள் வேலை இழக்கவேண்டியிருக்கிறது. அந்தப் பள்ளிகளிலாவது 1 : 45 என்று எம். இ. ஆர். படி அமுலாக்கி, ஆசிரியர்கள் வேலை இழக்காமல் இருக்க அரசாங் கம் உத்தரவிடுமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* உறுப்பினர் கருத்து கொள்ளப் பட்டு ஆராய்ந்த பிறகு தக்க முடிவெடுக்கலாம்.

## *Pension*

* 117 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that part-time Teachers in High Schools and Lecturers in Aided Colleges are not eligible for pension on Superannuation;

[9th December 1971

(*b*) the number of applications for pension received by the Government on consideration as a special case; and

(*c*) the action taken by the Government in such case?

*ஓய்வு ஊதியம்*

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர்களும், உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேர ஆசிரியர்களும், பணி மூப்பு வயது அடைந்தபின் ஓய்வு ஊதியம் பெறும் தகுதி பெற்றவர்களல்லர் என்பது உண்மையா?*

*(இ) சிறப்பு நேர்வாகக் கருதி, ஓய்வு ஊதியம் வழங்குமாறு கேட்டு அரசுக்கு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?*

*(உ) அத்தகைய நேர்வுகளில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.*

*(இ) ஒன்று.*

*(உ) உயர்நிலைப்பள்ளியில் புரிந்த பகுதி நேர ஊழியம், ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு கணக்கிலெடுக்கப்பட மாட்டாது என மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் 30 ஆண்டுகள் பணியாற்றினால், அவர்களுக்கு ஓய்வுஊதியம் அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சில சமயங்களில் தவிர்க்க முடியாத விபத்துக்களிலோ, நோய் வாய்ப்பட்டாலோ மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் 30 ஆண்டுகளுக்குக் குறைந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க முடியாது என்று சொல்கிறார்கள். தற்போது மாவட்டக் கல்வி அதிகாரிகள் இந்தக் குறையைத் தவிர்த்து ஓய்வூதியம் அளிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இருந்தாலும் எந்த ஆசிரியருக்கும் அவர்கள் கொடுக்க சம்மதிக்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இதுபோன்ற சமயங்களில் ஓய்வுஊதியம் அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 30 ஆண்டு பணியாற்றி 3 மாதம் எதிர்பாராத வகையில் இயற்கைக் கோளாறுகளின் காரணமாக இடர்ப்பாடு ஏற்பட்டிருந்தால், ஓரளவுக்குச் சலுகை காட்டுவதில் ஆட்சேபணை இருக்க முடியாது. அப்படிப்பட்ட வகையில் கவனிக்கலாம். பகுதி நேர ஆசிரியர்களுக்கு ஓய்வுஊதியம் தருவதற்கில்லையென்று சட்டமிருக்கிறது. அதற்குத் தனியாக ரூல் போட முடியாது. அரசாங்கத்தில் அனுமதி கேட்டு நியாயமென்று பட்டால், அந்த அளவுக்குச் சலுகை கொடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கலாம்.*



9th December 1971]

### *Higher Emoluments for Medical Officers*

* 118 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the Medical Officers with M.B.B.S., qualification working in Panchayat Union Dispensaries in Thanjavur District have not yet been paid the higher emoluments as recommended by the Tamil Nadu Second Pay Commission; and

(*b*) if so, the reasons therefor?

*மருத்துவ அதிகாரிகளுக்கு உயர் சம்பளம்*

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் எம்.பி.பி.எஸ். தகுதியுடன் கூடிய மருத்துவ அதிகாரிகளுக்குத் தமிழ் நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளுக்கு ஏற்ப உயர் சம்பளம் இன்னும் கொடுக்கப்பட வில்லையென்பது உண்மையா?*

*(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.*

*(இ) இப்பொருள் அரசின் பரிசிலனையிலுள்ளது.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 9—2—1971 தேதிய அரசு ஆணை 320 படி ஊராட்சி ஒன்றியத்தில் வேலை செய்கிற ரூ. 225 சம்பளம் துவக்கப்பெற்ற மருத்துவர்களுக்கு ரூ. 400 என்று ஊதியம் ஆரம்பிக்கும் வகையில் அனுமதித்திருக்கிறார்கள். அவர்கள் எல்.ஐ.எம். படித்தவர்கள். எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 325 வாங்கியதால் இவர்களுக்கு ரூ. 525 என்ற அளவிலே இப்பொழுது கொடுக்கப்படவில்லை என்ற நிலைமையின் காரணமாக இப்போது எல்.ஐ.எம். படித்தவர்கள் எம்.பி.பி.எஸ். படித்தவர்களைவிட அதிகமாகச் சம்பளம் பெறுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் சில ஊராட்சி ஒன்றியங்களில் இந்த நிலைமை இருக்கிறது. சில ஊராட்சி ஒன்றியங்களில் எம்.பி.பி.எஸ் படித்தவர்கள் அதிகமாகப் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேறுபட்ட நிலைமையிருப்பது அரசிற்குத் தெரியுமா? இதனால் மற்ற பல மருத்துவர்கள் மனச்சோர்வு அடையும் வகையில் கிட்டத்தட்ட எட்டு, பத்து மாதங்களாக இந்த நிலையிருப்பதை தவிர்க்க உடனடியான நடவடிக்கை அரசு எடுக்குமா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களில் 5 வகை மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். இரண்டாவது ஊதியக் குழு அந்தப் பிரிவினரில் ஒரு பிரிவினருக்கு மட்டும் ஊதிய உயர்வு கொடுத்து நிறுத்திவிட்டார்கள். ஆகவேதான் மற்றவை பரிசீலனையில் இருக்கவேண்டியிருக்கிறது. எம்.பி.பி.எஸ். க்கு மற்ற இடங்களில் கொடுப்பதைப்போலத்தான் கொடுக்க வேண்டும். கொடுக்கப்படாததால் விரைவில் பரிசீலனை செய்து அவர்களுக்குக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அது பரிசீலனையில் இருக்கிறது.*

[9th December 1971

திரு. ஜி. சுவாமிநாதன்: இரண்டாவது ஊதியக் குழு எம்.பி.பி.எஸ். சம்பளத்தை நிர்ணயித்திருக்கிறது. எல்.ஐ.எம். டாக்டர்களுக்குச் சம்பளம் நிர்ணயித்திருக்கிறது. அரசாங்கச் சார்பில் உத்தரவிடும்போது எல்.ஐ.எம். மருத்துவர்களுக்கு மட்டும் அனுப்பி விட்டு எம்.பி.பி.எஸ். மருத்துவர்களுக்கான உத்தரவை அனுப்ப மறந்துவிட்டதே தவிர, ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எனக்குத் தந்திருக்கிற தகவலின்படி . . .

"No scale of pay has been fixed for Medical Officers in Panchayat Unions with M.B.B.S. qualification, while Medical Officers in Government service with M.B.B.S. qualification are being paid in the revised scale of Rs. 525–900".

ஆகவேதான் அதற்கு நிர்ணயிக்கவில்லை என்ற காரணத்தால் பரிசீலனையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஒரு பிரிவினருக்கு மட்டும்தான் நிர்ணயித்திருக்கிறார்கள். மற்றவைகளைப் பற்றி விரைவில் முடிவெடுத்து, சேரவேண்டிய தொகை சேருவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்.

### *Transfer of Government Schools*

* 119 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether there is any proposal to transfer Government Schools in Shencottah Taluk and Kanyakumari District to Panchayat Unions of that area; and

(b) if so, the reason therefor?

### அரசுப் பள்ளிகளை மாற்றம் செய்தல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கோட்டை வட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள அரசுப் பள்ளிகளை அப்பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றம் செய்யக்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Employees under the Ramanathapuram Panchayat Union*

* 120 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) the total number of employees under the Ramanathapuram Panchayat Union (Ramanathapuram District);

(b) whether all of them have been granted revised scales of pay as per the recommendations of the Second Pay Commission; and

(c) if not, the reasons therefor?



9th December 1971]

### இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் (இராமநாதபுரம் மாவட்டம்) கீழ்பணிபுரியும் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

(இ) இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளின்படி இவர்களைவருக்கும் திருத்தியமைக்கப்பட்ட சம்பளம் வழங்கப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 190 (ஆசிரியர்கள் 153; மற்றவர்கள் 37).

(இ) (i) 188 (ஆசிரியர்கள் 153; மற்றவர்கள் 35).

(ii) சம்பளம் நிர்ணயிக்கப்படாதவர்கள் — 2.

(உ) கடைநிலை ஊழியர் ஒருவரின் நியமனம் ஒழுங்குபடுத்தப்படாததினாலும், ஒரு பயிற்சி பெற்ற உதவியாளரின் சம்பள நிர்ணயம் அரசின் பரிசீலனையில் இருப்பதாலும், இவர்கள் இருவரின் சம்பளம் புதிய விகிதப்படி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. மற்றவர்களுடைய சம்பளம் நிர்க்கப்பட்டு விட்டது.

**திரு. எம். ராஜா அய்யர்:** பஞ்சாயத்து யூனியனுக்கு அனுப்பப்பட்ட மொழி ஆசிரியர்களுக்குப் புதிய சம்பளம் கொடுப்பதில் காலதாமதம் இல்லாமல் எல்லோருக்கும் 1970-லிருந்து புது விகிதத்தின்படி கொடுக்கப்பட்டதா? இந்த ஆசிரியர்கள் ஆரம்ப ஆசிரியர்களாக ஆரம்பப் பள்ளிக்கு அனுப்பப்பட்ட பிறகு புதிய சம்பளம் கொடுக்க முடியாது என்று பஞ்சாயத்து யூனியன் மறுத்ததால் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இரண்டு பேருக்கும் இன்னும் தரப்படாமல் இருப்பதற்குக் காரணம் கடைநிலை ஊழியர்களுக்கு ஊதியக் குழு சிபார்சுப்படி திருத்தப்பட்ட சம்பளம் முறைப்படுத்தப்படவில்லை என்பதுதான். மற்றவர்களுக்கு ஊராட்சி நியமனம் சம்பந்தப்பட்ட வரையில், அவர்களுக்குச் சாதகமாகச் செய்யவேண்டியிருக்கிறது. அந்த விலக்குகளுக்காக அரசாங்கத்திற்கு குறிப்புகள் அனுப்பியிருக்கிறார்கள். அதன்பேரில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம்.

**திரு. எம். ராஜா அய்யர்:** எல்லா ஆசிரியர்களுக்கும் திருத்தியமைக்கப்பட்ட சம்பள விகிதம் கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மற்றவர்களுக்குத் திருத்தியமைக்கப்பட்ட சம்பளம் கொடுக்கப்பட்டது.

### *School Text Books*

* 121 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government is aware that the school text books are not available at normal price; and

(b) if so, the action taken thereon?

[9th December 1971

**பள்ளிப் பாட நூல்கள்**

திரு. எஸ். முத்துசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிப்பாட நூல்கள் இயல்பான விலைக்குக் கிடைக்கவில்லை யென்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அத்தகைய புகார்கள் எவையும் 1971-72-ம் ஆண்டில் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Second Mine Cut at Neyveli*

* 122 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu have taken up with the Central Government about the necessity of a Second Mine Cut at Neyveli; and

(b) if so, the stage at which the matter now stands?

**நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம்**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய அரசிடம் தமிழ் நாடு அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆமெனில், அது இப்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இந்த அரசின் கோரிக்கையை மத்திய அரசு இதுவரையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை.

*Loans for the Agriculturists*

* 123 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government are aware of the plight of the agriculturists in raising loans from the Nationalised Banks in the State; and

(b) if so, whether the State Government has taken up the matter with the Central Government?

**உழவர்களுக்குக் கடன்கள்**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்கள் பெறுவதில் உழவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாட்டினை அரசு அறியுமா?



9th December 1971]

(இ) ஆமெனில், இது குறித்து மாநில அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இடர்ப்பாடு ஏற்பட்டதாக எந்த நேர்வும் அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*Agricultural Productivity Council*

@ * 65 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up an Agricultural Productivity Council for the State; and

(b) if so. the details thereof?

**வேளாண்மை உற்பத்திக் குழு**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திற்காக வேளாண்மை உற்பத்திக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்திப் பெருக்க மன்றம் ஒன்று ஏற்படுத்துவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

MR. CHAIRMAN: Questions are over.

(*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member)

**II. DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1971-72 AND THE SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1970-71 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD—cont.**

* திரு. டி. கே. பொன்னுவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையையும், 1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையையும் வரவேற்றுப் பேச எனக்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 4—12—1971 அன்றும் அதைத் தொடர்ந்து நேற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றது போலவே, தமிழகம் பூராவும் உள்ள தொழில் துறையில் மின்சாரம் உபயோகிப்போரும், விவசாயத் துறையில் மின்சாரம் உபயோகிப்போரும் வீடுகளில் மின்சாரம் உபயோகிப்போரும் மின் வாரியத்தைப் பற்றி நல்ல அபிப்ராயம் தெரிவிக்கும் நிலையில் இந்த வாரியம் பாடுபட்டிருக்கிறது. இன்றையதினம் அந்த வாரியத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய 34 ஆயிரம் தொழிலாளர்களும் பாராட்டப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய பல்வேறு தொழில் நுணுக்கம் அறிந்தவர்களும், தொழில் நுணுக்கம் அறியாத

@ Postponed from the list of questions for 6th December 1972.

துறை அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தரும் பொழுது அதுவும், அது போன்ற நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்தால் லாபக் கணக்கை காட்டுவதற்கு அதுவும் சாத்தியக் கூறாக அமையும்.

நான் இந்தத் தமிழ் நாடு மின்வாரிய 13-வது ஆண்டு நிர்வாக அறிக்கையில் 61-ம் பக்கத்தில் இருக்கக்கூடிய ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். லைன் மூலமாகவும் டிரான்ஸ்பார்மர் மூலமாகவும் ஏற்படக்கூடிய மின் சக்தி சேதாரம் என்று சொல்லி ஆண்டுக்கு ஆண்டு 17 சதவிகிதம் ஆகிறது என்று கணக்குத் தரப்படுகிறது.

1964-65-ல் 17.4 சதவிகிதம், 1965-66-ல் 17.2 சதவிகிதம், 1966-67-ல் 16.5 சதவிகிதம், 1967-68-ல் 17.6 சதவிகிதம், 1968-69-ல் 17.9 சதவிகிதம், 1969-70-ல் 17.5 என்று சேதாரம் ஆகிறது என கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

எப்படி ஆண்டுக்கு ஆண்டு அதே அளவில் 17 என்ற அளவிலேயே சேதாரம் ஆகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த நிலைமையை போக்கினாலொழிய பலன் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மின்சாரம் ஹைடென்ஷனிலிருந்து லோ டென்ஷனுக்கு வரும்போதும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போகும்போதும் சேதாரம் ஏற்படுவது இயற்கை, நியாயம், முறை.

ஆனால் அந்தச் சேதாரத்தையும் திருட்டுப்போகும் மின்சக்தியையும் ஒருங்கிணைத்துக் கணக்குத் தருவது எப்படிப் பொருத்தமென்று தெரியவில்லை. மின்
4-30 p.m. சக்தியைப் பயன்படுத்தும் தொழில் துறையில் கணிசமானவரும், விவசாயத் துறையில் கணிசமானவரும், வீடுகளில் உபயோகிப்போரில் கணிசமானவரும் மின் சக்தியைக் களவாடுகின்றார்கள். எனக்கு நன்றாகக் கவனமிருக்கிறது. 1968-ம் ஆண்டே இதைப்பற்றி நான் இங்கு தெரிவித்திருக்கிறேன். 1965-ல் திருவள்ளூர் தாலுக்காவில் வரதராசன் என்பவர் செங்கற்பட்டு எலக்டிரிசிட்டியில் ஏ.ஈ. யாக இருந்தார். அப்பொழுது அங்குள்ள விவசாயிகள் எப்படி மின்சக்தியை மீட்டர் ஓடாமலேயே உபயோகிக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அதற்காக வழக்குகளும் போட்டிருக்கிறார். பிறகு வழக்கு வாபஸ் வாங்கப் பட்டதும் அது வேறு கதை. அப்படிப்பட்ட முறையிலே மின் சக்தியை மீட்டர் இல்லாமலேயே உபயோகிக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறதென்பதை அறிந்து அதைத் தடுப்பதற்கு அன்றையதினமே நான் யோசனை கூறினேன். அதைக் கண்காணிப்பதற்காக டிரான்ஸ்பார்மர்களுக்கு மீட்டர்கள் பொருத்தினால் பெருமளவுக்குத் தடுக்கப்படுமென்று சொன்னேன். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

தமிழ் நாடு முழுவதுமுள்ள டிரான்ஸ்பார்மர்களுக்கு எல்லாம் மீட்டர் பொருத்துவதென்றால், ஆறு கோடி ரூபாய் செலவாகிறதென்று சொல்லுகிறார்கள். ஆறு கோடி ரூபாயையும் இந்த ஆண்டிலேயே, அதாவது 1971-72-லியே செலவழித்துப் போட்டுவிட வேண்டுமென்று சொல்ல மாட்டேன். பிராந்தியம், பிராந்தியமாகப் பிரித்து, ஒவ்வொரு பிராந்தியமாகப் போட வேண்டும். அப்படி மீட்டர்கள் பொருத்தப்பட்டால், இப்படிப்பட்ட களவு தடுக்கப்படும்.



அடுத்தாற்போல், இந்த மின் வாரியத்திற்குத் தணிக்கை செய்வதற்கு 1969-70-ஆம் ஆண்டு ரூபாய் 3,000 செலவாகியிருப்பதாகக் கணக்கு காட்டுகிறது. அதே தணிக்கைக்கு 1970-71-ல் 9 இலட்சம் ரூபாயும், 1971-72-க்கு உத்தேசச் செலவாக 9,80,000 ரூபாயும் போடப்பட்டிருக்கிறது. எதனால் இப்படிப்பட்ட வித்தியாசம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது அச்சகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழையாகவும் இருக்கக்கூடும், அல்லது அந்த ஆண்டு தணிக்கை செய்வதற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய அனைத்தும் அனுப்பி வைக்கப்படாமல் இருந்துவிட்டதா? ஒரு ஆண்டு வெறும் 3,000 ரூபாயும் அடுத்த ஆண்டில் அதே வாரியக் கணக்குகளைத் தணிக்கைச் செய்ய 9 இலட்சம் ரூபாய் என்றால் இவ்வளவு பெரிய வித்தியாசம் எப்படி வரக்கூடுமென்று புரியவில்லை.

அடுத்து, இன்றையதினம் நாம் மின் சக்தியைப் பெருக்குவதற்கு நிலக்கரியை உபயோகிக்கிறோம். அறுபது அல்லது அறுபத்தைந்து நாட்களுக்கு முன்னால் நான் ஒரு பத்திரிகைச் செய்தியைப் பார்த்தேன். இப்படிப்பட்ட நிலக்கரிக்குப் பதிலாக பிளாட்டோனம் என்ற ஒரு தாதுப்பொருளை இங்கிலாந்து நாட்டில் பயன்படுத்தப்போவதாகவும், அதன்மூலம் ஏறத்தாழ 90% உற்பத்திச் செலவு குறைகிறதென்றும் அங்கேயிருக்கின்ற பொறியியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். அதன் பலனாக இங்கிலாந்து நாட்டில் இன்றையதினம் கொடுக்கப்படும் மின்சாரக் கட்டணத்தைப் பாதியாகக் குறைக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். நாமும் அப்படிப்பட்ட முறையில் நம்முடைய மின்சார வாரியத்தில் முயற்சிகள் செய்ய வேண்டும். முடிந்தால் நாம் நம்முடைய பொறியியல் வல்லுநர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்து, அந்த முறையை ஆராய்ந்து வந்து அதன் மூலமாகப் பயன் பெற வேண்டும். இங்கே நம்முடைய மின்சார வாரியத்திலிருக்கும் பொறியியல் வல்லுநர்கள் மிகத் திறமை வாய்ந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். நம் நாட்டிலுள்ள பொறியியல் வல்லுநர்கள் பலர் பல்வேறு டிபார்ட்மெண்டுகளிலிருந்துகொண்டு பெரும் சாதனைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பூண்டி ரிசர்வாயரிலுள்ள ரிசர்ச் ஸ்டேஷனில் பணியாற்றும், பொறியியல் வல்லுநர் குமாரசுவாமி அவர்கள் மிகத் திறமையாகக் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார். அவர் இந்தியாவிலுள்ள அத்தனை அணைக்கட்டுகளுக்கும் 'மாடல்' அங்கே செய்துவைத்து, இன்னும் எப்படி மாற்றியமைத்தால், எதிர்காலத்தில் எப்படி நமக்குப் பயன் அதிகமாகத் தருமென்று ஆராய்ச்சி செய்கின்றார். அதனால் பெரும் பலன் எதிர்பார்க்கப்படுகிறது. வல்லுநர்கள் கூறுகிறார்கள், நம்முடைய ஏரிகளிலும், வாய்க்கால்களிலும், மற்ற நீர்த் தேக்கங்களிலும் உள்ள தண்ணீரில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் நீராவியாகப் போய் விடுகிறது. அதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று பி. குமாரசுவாமி அவர்கள் இன்றையதினம் பெரியதொரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். வெற்றி எப்படியும் கிட்டும், ஆனால் எப்போது கிட்டும் என்பதுபற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை.

அப்படிப்பட்ட முறையில் நம்முடைய மின் வாரிய பொறியியல் வல்லுநர்கள் பாடுபட்டு 'ரிசர்ச்' வேலை செய்ய வேண்டும். இந்த வாரியத்தில் நல்ல, திறமையுள்ள பொறியியல் வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சியின் பலனாக நம்முடைய மின் சக்தி உற்பத்தி பெருகி செலவினம் குறைக்கப்பட

[திரு. டி. கே. பொன்னுவேலு] [9th December 1971

வேண்டும். சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னுலிருந்த பைகாரா எஸ். ஈ. மீனுட்சிசுந்தரம் அவர்களை நான் பார்த்துப் பேசினேன். அவர் சொன்னுர் மழை காலங்களில் தண்ணீர் பெருமளவில் பைகாராவில் வந்து சேருகிறது. ஆனுல் அந்த முழுத் தண்ணீரிலிருந்தும் மின் சக்தி நமக்குக் கிடைக்காமல் விரணுகிறது. அதைச் சேகரித்து வைத்து, உபயோகிக்கும் வகையில் விஞ்ஞான ரீதியில் நாம் அதை மாற்றியமைக்க வேண்டும். கோடை காலத்தில் எப்படித் தண்ணீர் முழுமையாகப் பயன்படுகிறதோ, அது போல மழை காலத்திலும் தண்ணீரைப் பயன்படுத்துவது என்பது பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சொன்னுர்.

'ரிசர்ச் செல்' இருக்கிறது. என்ன செய்கிறது என்று தெரியவில்லை. இதுவும் இது போன்ற காரியங்களுக்கும் நாம் ரிசர்ச் செல்லை பயன் படுத்தியாக வேண்டும். நம்முடைய மின்சார வாரியம் மிகப் பெரிய வாரியம். அதற்கு இன்றையதினம் காஸ்ட் அக்கவுண்டஸ் படித்தவர், தெரிந்தவர் செயலாளராக இல்லை. அப்படிப்பட்டவர்கள் இல்லாததன் விளைவாக நமக்கு எவ்வளவு வருவாய், எவ்வளவு செலவு என்பது முறையாகச் சொல்லப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4.40 p.m. இப்படிப்பட்ட ஒரு பெரிய வாரியத்திற்கு அவசியம் காஸ்ட் அக்கவுண்டன்ஸி படித்தவர்கள்தான் நியாயமாகச் செயலாளராக வேலை பார்க்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி, இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று வாரியத்திற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று திறம்பட நடத்தும் மாண்புமிகு அமைச்சர் திரு. ராமன் அவர்களைப் பாராட்டி என் உரையை முடிக்கிறேன்.

* THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I congratulate the Hon. the Minister for Electricity on the excellent report he has placed before this house. Sir, I have got a few points to mention to the Government. I have observed that the lights which have been put in the village as well as in the City are merely taking the place of the old kerosene lamps. In many places, the lighting is insufficient. Even in Madras City, to take an example, if one were to drive in one's car along the Beach road, one finds vapour lamps all over from one end to another. If a person were wearing a dark suit or pant or bush-coat, he would not be seen by the driver because these vapour lamps have the effect of blinding against the coloured dress. I am bringing this clearly to the notice of the Hon. the Minister for Electricity because on many occasions when I went after 8 O' clock by the Beach road, I found it difficult to drive, especially when people wear dark pants, suits and bush coats and walk in the middle of the road. This problem could be solved in one way. Either the vapour lamp could be put on a level with the road only 3' high or in the alternative gas lamps whether the ones that are there in Mount Road can be put on either side of the road so that the roads are well illuminated. Otherwise, it becomes



9th December 1971] [Thiru G. Vasantha Pai]

very difficult for drivers to drive their cars especially when the black-out restrictions are imposed and when it is usual to find people wear the darkest possible dress in the evening, the dark bush coat as well as pant and they cannot easily be discerned.

The next point is about the 84,000 workers and employees of the Electricity Board and amicable relationship which the Hon. Minister claims to have existed between the Board and its employees throughout last year. Sir, I would like to mention that I have got the information that certain engineers went on lightning strike during the course of last year and some proceedings were taken against them which are still pending in spite of the amicable relationship which was restored between the Union and the employees. Sir, I think in the fitness of things, if there are proceedings pending against them the Government must know if there are any-they should be withdrawn. I understand that in the Electricity Board, there are too many Unions. The other day, the suggestion was made by the Hon. the Chief Minister while making a statement about the Simpson Group of Companies that if one among themselves were to lead the Union, that would be a proper and feasible solution for solving a dispute between the labourer and the employer. The same condition must also prevail in the Electricity Board and any outside interference should not be there. There should be one Union for the entire Electricity Board employees and they should elect the Union leader from among themselves without outside interference. That is the suggestion which I am making to the Government and the unions for their acceptance. They avail themselves of the suggestion which I am making for what it is worth.

Then, Sir, I would like to point out that at page 4 of his speech the Hon. the Minister for Eectricity has stated that " to develop the available power resources and make power available in a rational way at reduced cost and in abundance over the whole State, a vast net-work of transmission and distribution lines covering the length and breadth of the State had been formed effectively ". Sir, I feel that in spite of this vast net-work, the rates have not been reduced. I hope they will be reduced in the future. One thing I want to suggest that as part of our Government's gesture which was amply borne out by the statement of the Hon. the Chief Minister. . .

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆக்கபூர்வமான யோசனை கூறினுல் நலமாக இருக்கும்.

THIRU G. VASANTHA PAI : Iam not making a destructive criticism and I am only submitting that the rates have not been reduced.

MR. CHAIRMAN : The hon. Member may suggest the alternative.

THIRU G. VASANTHA PAI: Sir, now that the emergency has been proclaimed, I am only submitting to the Hon. the Minister for Electricity that in regard to the supply of power to those industries which are producing materials used for defence purposes, like Caustic Soda industry, or say, Chloroform industry, or Bleaching Powder industry or Textile industry, whose products are being used in abundance for war purposes, concession in power rate should be given as a step in the right direction. I was only referring to the statement of the Hon. Minister that there is "a vast net-work of transmission and distribution lines covering the length and breadth of the State" for making "power available in a rational way at reduced cost and in abundance over the whole State". While welcoming the statement, I am only pointing out to the Hon. Minister that during the emergency, products which are very much helpful and useful for the defence of our country should be given precedence over the others and that at least the power rates for electricity consumed by these industries which are manufacturing such products in abundance should be reduced as a first step. I think I have made one constructive suggestion and I hope the Hon. Minister will accept it.

Sir, I must congratulate the Hon. Minister on his excellent report which has been placed before the House. During my last visit by car from here to Tiruchi I found that several of the pumpsets were being effectively used. I was happy to find that 1,49,129 agricultural pumpsets were put into use and I am very happy that this is being done. I wish that the Government will succeed in bringing about an agricultural revolution by distribution of electricity at cheaper rates, thereby helping both the consumers and also themselves. Sir, I have nothing further to add except to say that I have not meant anything derogatory against the Hon. the Minister for Electricity. If I have not given any more constructive suggestions, it is because, I admit, I am not well-versed in this field of electrical engineering myself.

4-50 p.m. *திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் விவாதிக்கப்படுகின்ற மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்தை முதற்கண் வரவேற்று, எனது ஓரிரண்டு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமது மின்சார வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு தமிழகமெங்கும் உள்ள கிராமங்களுக்கெல்லாம் 1972-க்குள் மின் இணைப்பு கொடுத்தாக வேண்டுமென்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பத்தைச் செயல்படுத்துகின்ற வகையில் வெற்றி கண்டு, அதிலே ஏறக்குறைய நான்கு மாவட்டங்களுக்கு முழுமையாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இன்னும் இந்த ஆண்டுக்குள்ளேயே மேலும் நான்கு மாவட்டங்களுக்கு அளிக்கும் நிலைமையில் இருக்கிறது. அதிலே எனது மாவட்டமும் ஒன்று என்பதில் நான் பெருமைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆண்டுக்குள் முழுமையாக





எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கிடைத்துவிடும் என்பதை அறிகின்றபோது, நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோதையாறு அணைக்கட்டு மூலமாக இந்த மாநிலத்தின் பெரும் பகுதிக்கு நாம் மின் சக்தி பெறுகிறோம். அந்த அணைக்கட்டு வேலை முடிந்து திறக்கப்பட இருக்கிறது. மின்துறை அமைச்சர் அவர்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து அதைச் சிறப்பாக வாழ்த்தித் திறந்து வைக்க வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அணைக்கட்டுத் திட்டம் இந்த ஆண்டு முடிவு பெற்று முழு அளவில் நாம் மின் சக்தி பெறும் அளவுக்கு இருக்கிறது. இந்த அறிக்கையைப் பார்க்கின்றபோது, இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் 1,000 மெகவாட் மின் சக்தியை மேலும் பெற்றாக வேண்டிய சூழ்நிலை நீக்குமென்றும், ஆகவே பற்றாக்குறையும் தொடரும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நாம் மின் சக்தியை எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அனு மின் சக்தியை அதிகப்படுத்துவதோடு நீர் மின் சக்தியையும் அதிகப்படுத்த ஆராய்ந்துகொண்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பரளியார் திட்டத்தையும் இதில் ஒன்றாகக் கூறியிருக்கிறார்கள்.

உலகருவி, தோவாளை தாலுகாவில் இருக்கிறது. ஆண்டு முழுவதும் அருவி பாய்ந்துகொண்டிருப்பதால், அதில் இத்தகைய மின் சக்தியைக் கொண்டுவருகின்ற ஒரு அணைக்கட்டைக் கட்ட முடியுமா என்று ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாம்பனத்தலையில் ஒரு நீர் வீழ்ச்சி இருக்கிறது. அதிலிருந்து மின் சக்தி கொண்டுவர முடியுமா என்று ஆராயக் கேட்டுக்கொள்ளுகிறேன். அனு மின் சக்தியை விட அனல் மின் சக்தி, நீர் மின் சக்தியைத் தோற்றுவிப்பதில் உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதால், எங்கேயெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அதையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மின் வாரியம் 80,000-க்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட ஒரு பெரும் ஸ்தாபனமாக அமைந்திருக்கிறது. அந்த ஊழியர்கள் நிறைவு உள்ளத்தோடு செயல்படும் நிலையில் அவர்களுக்கு அதிகச் சம்பளமும் போனசும் கொடுக்கப்பட்டதை நான் பாராட்டுகிறேன். அத்தோடு மட்டுமில்லாமல் வருகிற 10 ஆண்டுகளுக்குள் 25,000 பேருக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும் நிலை இருக்கிறது. நாடு முழுவதும் 1972-க்குள் மின் சக்தி வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நான் நம்புகிறேன்.

இறைவுகிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் மின் வாரியம் சிறப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. இதைச் சிறப்பாகக் கவனித்து வருகின்ற மின் வாரியத்தையும், அதைக் கவனித்து வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டி இந்த மின் வாரியத் திட்டத்தை வரவேற்று அமைகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவர் அவர்களே, மின்சார வாரியம் நிதி நிலை அறிக்கைபற்றி என்னுடைய சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். பொதுவாக மின்சார வாரியம் ஒரு சிறந்த குறிக்கோளை முன் வைத்து எல்லா கிராமங்களுக்கும் மக்களின் தேவைக்கு ஏற்ப வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதில் பல குறைகளை நாம் காண்கிறோம். முதல்படியாக எடுத்துக்கொண்டால், பல ஆண்டுகளாக பல முறைகள் இந்த மன்றத்திலும் சரி நம்முடைய பஞ்சாயத்துத் தெரு விளக்குகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறை கூறிவருகிறார்கள். இதுவரை அந்தக் குறை நிவர்த்தி செய்யப்படவில்லை. ஆனால் பஞ்சாயத்தின் வருமானத்தைப் பாழாக்கும் அளவில் பஞ்சாயத்து வருவாயைப் பெருவாரியாக மின்சார வாரியம் அள்ளிக்கொண்டு போகிறது. இது ஒரு பயங்கரமான நிலை. இதை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு பஞ்சாயத்துக்கு சாதாரணமாக சிறிய பஞ்சாயத்தாக இருந்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2,000 வருமானம் வருகிறது. பெரிய பஞ்சாயத்துகளாக இருந்தால், ஆண்டு ஒன்றுக்கு 8,000 ரூபாய் வருமானம் வருகிறது.
5-00 p.m. இந்தப் பஞ்சாயத்துகள் தெரு விளக்குகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 லிருந்து 150 வரை செலவு செய்கின்றன. ஆக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,200 லிருந்து 1,500 வரை இந்த மின்சார வாரியத்துக்கு வழங்குகின்றன. ரூபாய் 500, ரூ. 600 தான் மீதி இருக்கும். மின்சார வாரியம் தவறான முறையில் பஞ்சாயத்துகளிடமிருந்து வசூல் செய்கிறது. எப்படி என்று கேட்டால், எரியாத விளக்குக்கும் எரிந்தது போல பணம் வாங்குகிறார்கள். 'பியூஸ்' ஆன பல்புகளைப் போடுகிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் குறைகளை 3, 4 ஆண்டுகளாகக் கூறி வருகிறோம். ஆனால் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சொல்லுகிறார்கள். ஆனால் ரொம்ப பாலிஷ்டாகச் சொல்லுகிறார்கள்.

என்ன குறை என்று கேட்டால், தெரு விளக்கு எரியவில்லை என்று சொல்லுகிறார்கள். எரியாத விளக்குக்குக் காசு வாங்குகிறார்கள். அந்தக் காசு யாருடைய காசு? பஞ்சாயத்தின் காசு. நாட்டின் முதுகெலும்பு கிராமப் பஞ்சாயத்து என்று சொல்லுகிறோம். அதன் வருமானம் ரூபாய் 2,000-த்தில் 1,500 ரூபாயை மின்சார வாரியம் எரியாத லைட்டை வைத்துக்கொண்டு வாங்குகிறது. இதற்குச் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுரை கார்ப்பரேஷன், கோவை முனிசிபாலிட்டி போன்ற பல முனிசிபாலிட்டிகள் தாங்களே மெயின்டினன்ஸ் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகள் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றன. சென்னை கார்ப்பொரேஷனைப் பார்த்தால், தெரு விளக்குகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் கிராமப் பஞ்சாயத்துகளில் தெரு விளக்குகள் போடப்பட்டும், அவைகள் எரியாமல் காசு வாங்கப்படுகிறது. இது நீண்ட நாளாக உள்ள குறை. இதைப் போக்க வேண்டுமென்றால், தெரு விளக்குகளின் பொறுப்பைக் கூட்டு மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்தக் குறை நிவர்த்தியாகும்.



அடுத்தபடியாக, விவசாயத் துறையில் கனெக்ஷன் கிடைப்பதில் நீண்ட காலத் தாமதம் ஏற்படுகிறது. சில இடங்களில் வருஷக் கணக்கில் தாமதம் ஏற்படுகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், உடனடியாகக் காரியம் நடக்கிறது. மற்றவர்களுக்கு அந்த மாதிரிக் கிடைப்பதில்லை. இது இயற்கை. இது பெரிய வியாதியாக வளர்ந்து வருகிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் காரியம் நடக்கிறது, மற்றவர்களுக்கு காரியம் ஆகவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் 1972-க்குள் தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஊர்களுக்கும் மின்சார வசதி கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான் அரசின் திட்டம். எதிர்க்கட்சியினரின் ஊர்களை அரசு தள்ளிவிடவில்லை. கட்சி மாச்சரியம் ஆட்சிப் பொறுப்பில் உள்ள தி.மு.க. வுக்கு இல்லை என்று தெளிவாகக் கூறிக் கொள்ளுகிறேன். டாக்டர் கலைஞர், உலக கவிஞர் அவர்கள்.

பொன்சாரம் இட்டழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி
எழுபத்திரண்டுக்குள் எங்கனுமே மின் இணைப்பு
என் தமிழ் திருநாட்டில் ஏற்படவே உழைக்கின்றோம்.

என்று ஒரு கவிதையின் மூலமாக இங்கே குறிப்பிட்டார்கள். ஓட்டு போட்டாலும் சரி, போடாவிட்டாலும் சரி 1972-க்குள் தமிழ்நாடு முழுவதும் மின்சார வசதிகள் கிடைக்கும்படி தி. மு. க. சர்க்கார் செய்யும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: இன்றைய தினம் அமைச்சர்கள் தங்களுடைய கட்சிக்காரர்கள் வேண்டுகோள் விடுத்தால், உடனடியாக அதைச் செய்து தர வேண்டுமென்று கூறியிருப்பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கம் இப்படிப்பட்ட உத்தரவு போட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால், எல்லாவற்றையும் செய்து தர வேண்டுமென்று கூறியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னால், அது உடனடியாகச் செய்து தரப்படுவதில்லை. காலதாமதமாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

தெரு விளக்குகள் "பியூஸ்" ஆகி விட்டால், அது உடனடியாக மாற்றப்படுவதில்லை. எனவே அதற்குப் பிரையாரிடி கொடுத்து பியூசான பல்புகளைப் போட வேண்டுமென்று இந்த இலாகாவைக் கேட்டுக்கொள்கிறேன். இதைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். பஞ்சாயத்துத் தெரு விளக்குகள் போடுவதில் பல மோசடிகள் நடைபெறுகின்றன. பஞ்சாயத்துத் தெரு விளக்குகளுக்கு 3 பல்புகள் வரையில் பியுசானால் அவர்களே போடுகிறார்கள். அதற்கு மேல் பியுசாகி விட்டால் பஞ்சாயத்திலிருந்து வாங்க வேண்டும்.

மிஸ்டர் சேர்மன்: மோசடி என்று சொல்வது "அன்பார்லிமெண்டரி". சரியாக இல்லை என்று சொல்ல வேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : பஞ்சாயத்துத் தெரு விளக்குகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. தெரு விளக்குகளுக்கான பல்புகள் எல்லாம் லைன்மேன் வீட்டில் இருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஊரிலே பல்பு தேவைப் பட்டால், அவருடைய வீட்டிற்குப் போனால் கிடைக்கும். அந்த அளவிற்கு மெயின்டேனன்ஸ் சரியாக இல்லை. இந்த நிலை போகவேண்டும். மின்சார வாரியம் சிறப்பான செயல்களைச் செய்து வருகிறது. அதற்காக அந்தத் துறையை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தக் குறையைப் பற்றி உன்னிப் பாகக் கவனித்து வந்தால், அந்தத் துறையில் உள்ள குறைகள் நமக்குத் தெரி யும். இப்படிப்பட்ட குறைகள் இன்னும் நீடித்து நடக்கலாமா, இவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்று யோசித்துப் பார்த்து வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துகளில் 30 சதவிகிதம் டாக்ஸ் போடுகிறோம் என்றாலும் தெரு விளக்குகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. நாம் பல முன்னேற்றகரமான திட்டங்களைப் போட்டு வருகிறோம். எல்லா ஹரிஜன சேரிகளிலும் லைட் போட வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்து வருகிறோம். ஆனால் பியூஸ் ஆன பல்புகளைப் போடுவதால் எந்த விதமான நன்மையும் ஏற் படாது.

மின்சாரம் தயார் செய்வதற்கு அதிகமாகச் செலவு செய்து வருகிறோம். எதிர் காலத்தில் தொழிற்சாலைகளுக்கு அதிகமாக மின்சாரம் தேவைப்படும். ஆனால் பஞ்சாயத்துகளுக்கு மின்சாரம் வினியோகம் செய்வதன் மூலம் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நிலையைக் கவனிக்க வேண்டும். மின்சார வாரி யத்தின் பட்ஜெட்டிலே நிர்வாகச் சீரமைப்புபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தெரு விளக்குகள் சரிவர வேலை செய்து வருகின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தைச் சேர்ந்த சில அதிகாரிகளையும், சட்ட மன்ற உறுப் பினர்கள் இரண்டு மூன்று பேர்களையும், பஞ்சாயத்து கூட்டு மன்றத் தலைவர்கள் சிலரையும் போட்டு, இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் சென்று பார்த்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி சொன்னால், அதிலே உள்ள மோசடி நன்கு தெரியும். நான் பஞ்சாயத்து கூட்டு மன்றத் தலைவராக இருக்கிறேன். என்னுடைய பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தின் கீழே 40 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களில் இரண்டாயிரம் வருமானம் வந்தால், 1,500 ரூபாயைத் தெரு விளக்குகளுக்கு மட்டும் செலவு செய்கிற நிலைமை இருக் கிறது. 8,000 ரூபாய் வருமானம் வந்தால், 5,000 ரூபாய் தெரு விளக்குகளுக் காகச் செலவு செய்யப்படுகிறது. இது மிகவும் மோசமான நிலை. டெவலப் மேன்டிற்காக நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கும்போது, இப்படிப்பட்ட நிலை இருப்பது மோசமாகும். பஞ்சாயத்துத் தலைவர்கள் எங்குபார்த்தாலும், லைட் போடவேண்டுமென்று நினைக்கிறார்கள். நம்முடைய கிராமங்களில் முன்னேற்றகரமான காரியங்களைச் செய்வதற்கு இது இடையூறாக இருக்கிறது. எனவே ஒரு கமிட்டி போட்டு எந்த விதத்தில் இதைச் சீர்திருத்தம் செய்யலாம் என்பதை அரசாங்கமும், இந்தத் துறையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, சேஷசாயிக் கம்பெனி நடத்து வந்தபோது ஒரு ஏ.இ. இன்சார்ச் இருந்தார். ஆனால் அந்தக் கம்பெனியை அரசாங்கம் இன்றைக்கு எடுத்துக்கொண்ட பிறகு அதை நிர்வகிப்பதற்கு ஒரு ஏ.இ. இருந்த இடத்தில் ஒரு பெரிய நிர்வாக அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்போது இருந்த ஏ.இ., டி.இ. கிரேட்டிற்குக் கீழே, ஏ.இ. கிரேட்டிற்குக் கொஞ்சம் கூடுதலாக வைக்கப்பட்டிருந்தார். ஆனால் இன்றைக்குத் தஞ்சாவூரில் இருக்கிற அமைப்பிற்கு 5 டி.இ.க்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குக் கீழே ஒரு பெரிய அமைப்பு இருக்கிறது. சேஷசாயி கம்பெனி இருக்கும் போது, அவர்கள் டவுன் லைட்டை மட்டும் கவனித்துக்கொண்டு வந்தார்கள். கிராமங்களில் தெரு விளக்குகள் போடுவதைப்பற்றி அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்வார்கள். இந்தத் துறை முன்னேற்ற மான காரியங்களைச் செய்யும்போது, 'எபிஷியன்சி' குறைந்து விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். தெரு விளக்குகள் சம்பந்தமாக மோசமான நிலை இருப்பதால், இதைச் சீர்திருத்தம் செய்வதற்கு நிர்வாகம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறி முடித்துக்கொள் கிறேன்.

## III. STATEMENT UNDER RULE 82 *RE.* AIR CRASH NEAR CHINNAMANUR.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த அவைக்கு ஒரு முக்கியத்துவமானதும், வருந்தத் தக்கதுமான செய்தியை வெளியிட வேண்டிய நிலையில் இருக்கிறேன். இன்று காலையில் 11-55-க்கு திருவனந்த புரத்திலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்று மதுரைக்கு 12½ மணிக்கு வந்து சேர வேண்டியது 12-26-க்கு கண்ட்ரோலை விட்டுப் போய் விட்டது என்ற செய்தி கிடைத்து, அதற்குப் பிறகு இப்போது கிடைத்துள்ள செய்தியின்படி அந்த விமானம் மதுரை மாவட்டம் சின்னமனூரிலிருந்து 30 மைல் தொலைவில் தென் மேற்குப்பகுதியில் மேக மலை எஸ்டேட்டில் நொறுங்கி விழுந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதிலே 27 பேர் பிரயாணம் செய்ததாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. 24 பிரயாணிகளைப்பற்றிய முழு விவரம் எதுவும் கிடைக்கவில்லை. அதிலே யாராவது உயிரிழந்திருப்பார்களானால், அவர்க ளுடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## II. DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1971-72 AND THE SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1970-71 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD—*cont.*

**திரு. வி. வெங்கா :** மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் நடை பெற்றுக்கொண்டிருக்கிற இந்த விவாதத்தில் நானும் பங்கு பெறுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக தலைவரவர்களுக்கு நான் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கழக அரசு ஏற்பட்டதற்குப் பிறகுதான் இன்றையதினம் பட்டித்தொட்டிகள் எங்கும் சரியான முறையிலே மின்சாரம் வினியோகிக்கப்பட்டு வருகிறது என்பதை கிராமத்திலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள் பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நடந்து முடிந்த ஊராட்சித் தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியத்

தேர்தல்களில் கழகத்தைச் சேர்ந்த பல நண்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஊராட்சி மன்றத் தலைவர்களாகவும், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களாகவும் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு முழுமையான பொறுப்பு மின்சார வாரியத்தினுடையது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கிராமங்களில் இருக்கக் கூடிய சாதாரண ஏழை எளிய மக்கள் கிராமங்களில் எந்தவித முன்னேற்றமும் இல்லையே, தெரு விளக்குகள் இல்லையே, வளமான பகுதிகளிலே உள்ள மின்சார விளக்குகள் தங்கள் பகுதி களுக்கு வரவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. கழக அரசு வந்ததற்குப் பின்னால் நல்ல முறையிலே மின்சாரம் வினியோகிக்கப் பட்டு அதன் மூலம் ஏழை எளிய மக்களின் மனதிலே மகிழ்ச்சி ஏற்படத்தக்க வகையிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதன் விளைவாகத்தான் தெரு விலே விளக்குகள் எரிகின்ற காட்சியைக் காண்கிறார்கள். கழக அரசினுடைய நிர்வாகம், இந்தத் துறை செயல்படுகின்ற முறை ஆகியவைகள்தான் இதற்கு முக்கிய காரணமாகும். அந்த அளவிற்கு இந்த மின்சாரத் துறையானது கிராமப் புறங்களில் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. 1970-71-ல் 5 ஆயிரத்துச் சொச்சம் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. சென்ற ஆண்டிலே 5,862 மின் இணைப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றது. 2,029 ஹரிஜனப் பகுதிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 1971-72-ல் மின் இணைப்புக்காக 2150 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்கு மேலும் குடியிருப் புகளை வழங்கியிருக்கிறார்கள். அதில் 1971-72 நடப்பு ஆண்டில் மட்டும் 6,200 ஹரிஜனக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது, அது மிகப் பெரிய சாதனையாக இருக்கிறது. இப்பேர்ப் பட்ட சாதனையைப் புரிந்த மின்சார வாரியத்தையும் அதன் தலைமைப் பொறுப் பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் இந்த மன்றத்தின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே தெரு விளக்குகள் சரியாக எரியவில்லையென்று குறைபாடுகளைச் சொன்னார்கள். அது உள்ளபடியே இருக்கக்கூடிய நிலைமை தான். என்னைப் போன்று ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர் பொறுப்பேற் றிருக்கக்கூடிய நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் எடுத்துச் சொன்னார்கள். உள்ள படியே இருக்கத்தான் செய்கிறது. ஆனால் முன்பு இருந்த நிலைமையைக் காட்டிலும் கடந்த ஆண்டு எப்படி இருந்தது என்று ஒப்பிட்டுப் பார்த்தால், இப்போது நிலைமை சற்று முன்னேறி யிருக்கிறது என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. கடந்த ஆண்டு நிதிநிலைத் திட்டத்தில் இதே நிலைமைகளைச் சொல்லி, இது போன்ற நிலைமைகளைப் போக்குவதற்கு நீங்கள் குறைந்தது தெரு விளக்குகளுக்கு மீட்டர் சிஸ்டம் கொண்டு வாருங்கள் என்று குறிப்பிட்டோம். அதை மின்சார வாரியமும் அமைச்சர் அவர்களும் பரிசீலித்து, அதைக் கொண்டுவருவதற்கு ஏறக்குறைய ரூ. 90 லட்சம் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாய்களுக்குத் திட்டம் தீட்டக்கூடிய மின்சார வாரிய மானது இந்த 90 லட்ச ரூபாயைப் பொருட்படுத்தாமல் அருள் கூர்ந்து மீட்டர்கள் ஏற்படுத்தக்கூடிய நிலைமையை உருவாக்கித் தரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இங்கே



சொல்லியிருக்கிறார்கள். கடந்த நிதிநிலை ஆண்டில் உறுப்பினர்கள் சொல்லியதைப் பரிசீலித்து வருஷத்திற்கு மூன்று முறை நல்ல பல்புகளைக் கட்டணமின்றிப் பொருத்துவதற்கு முயற்சி எடுத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் குறைபாடு ஏதோ வார்த்தைக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. உள்ளபடியே அவர்கள் செய்திருக் கிறார்கள். ஆனால் அதில் குறையிருக்கிறது. மூன்று முறையல்ல, நான்கு முறைகூட அந்தத் துறையானது பல்புகளை மாற்றியிருக்கிறார்கள். ஆனால் போடப்பட்ட பல்புகள் 15 நாட்களில் 'பியூஸ்' போய்விடுகிறது. காரணம் என்னவென்றால், மின்சார வாரியமானது தனிப்பட்ட நிறுவனங்களின் ஒப்பந்தக் காரர்களிடம் காண்டிராக்ட் மூலம் பல்புகளைப் பெறுகிறார்கள். ஒப்பந்தக் காரர்கள் ஒப்பந்தத்தைப் பெறும்பொழுது அவர்கள் ஒரு நல்ல குவாலிட்டி, தரமான பல்புகளைக் காண்பிக்கிறார்கள். அவர்கள் வினியோகம் செய்யும் பல்புகள் நமக்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய தரமான பல்புகளா என்றால், நிச்சயமாக இல்லவே இல்லை. இதே பல்புகளை நாம் கடைகளில் வாங்கி வீடுகளில் போட்டால், ஏறக்குறைய ஒரு வருஷம் அல்லது 9 மாதங்கள் எரிகின்றன. ஆனால் மின்சாரத் துறையானது காண்டிராக்ட் மூலமாகப் பெறக் கூடிய பல்புகள் 15 நாட்களுக்கு மேல் நிச்சயமாக எரிவதில்லை. இங்கேதான் 5-10 p.m.
குறையிருக்கிறது. மின்சார வாரியத்தில் மேல் மட்டத்திலும் கீழ்மட்டத் திலும் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பாராட்டக்கூடியவைதான். ஆனால் ஒப்பந்தக்காரர்கள் மின்சார வாரியத்தை ஏய்த்து விடுகிறார்கள். எனவேதான் மின்சார வாரியமே ஒரு பல்பு தொழிற்சாலையைத் துவக்கி, அதன் மூலம் உற்பத்தி செய்து வினியோகம் செய்தால் நிச்சயம் இந்தக் குறைபாடு தவிர்க்கப்பட்டு, நாம் எடுக்கக்கூடிய முயற்சிகள் மேலும் மற்றவர்களால் குறை சொல்ல முடியாத அளவுக்குப் பாராட்டக்கூடிய நிகழ்ச்சி யாக இருக்கும். நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாதாரண ஊராட்சிகள் பல விளக்குகளைப் போட்டு அதன் மூலம் வருவாயை இழக்க நேரிடுகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அது உள்ளபடியே நாம் கண்கூடாகக் கண்ட உண்மைதான். இன்றையதினம் பல கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். அது நியாயமானது, அத்தியாவசியத் தேவையானது என்று ஒப்புக்கொள்ளு கிறேன். அதிலும் குறிப்பாக ஹரிஜன காலனிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் முன் வைப்புத் தொகையைக் கட்டாமலும் சர்க்காரே செலுத்தி இணைப்பைப் பெறுகிறார்கள். இதற்காக இந்த சர்க்காரையும் மின் வாரியத்தையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் இன்றையதினம் இந்தச் சாதாரண பல்புகள் போட்டால், பியூஸ் போய்விடுகிறது. குழல் விளக்கு, சிக்கிங் டியூப் லைட்ஸ் மாற்றலாம் என்று எங்கள் பகுதியில் மாற்றுகிறார்கள். அப்படி மாற்றுகிற நேரத்தில் அதற்கு முன்பாக ரூ. 5 கட்டணம் இருந்தது. அது இன்று ரூ. 7 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த பளு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல அரசு பல நல்ல பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது. உதாரண மாக நாட்டில் சாதாரண மனிதனுக்கு சுகாதாரம் இனமாகவாவது செய்து கொடுக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதுபோல நல்ல குடிநீர் தர வேண்டுமென்று அரசு கருதுகிறது. அது போலவே அத்தியாவசியப் பண்டங்களை மலிவாகக் கொடுக்க வேண்டுமென்று அரசு செயல்பட்டு

வருகிறது. இதற்கெல்லாம் அரசு பொறுப்பேற்கிறது. இந்த மின்சாரமானது. சாதாரண பாமர மக்களுக்கு மிகவும் தேவையானதுதான். எனவே சின்னஞ்சிறு ஊராட்சி மன்றங்கள், 500 பேர்களைக் கொண்ட ஊராட்சி மன்றங்கள், ரூ. 500 வருமானம் உள்ள ஊராட்சி மன்றங்கள், இது போன்ற சிக்கல்களில் சிக்க வைத்து மேலும் கிராமங்கள் அபிவிருத்தி அடைய முடியாத நிலைமைகள் ஏற்படாமல் மின்சாரத் துறைக்கு ஆகும் செலவை அருள் கூர்ந்து அரசு ஏற்றுக்கொண்டு செய்தால் உள்ளபடியே ஊராட்சிகள் கிராமங்களில் வேறு பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்று எடுத்துச் சொல்லி அந்தச் செலவினங்களை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இன்றைய தினம் 1970-71-ல் 59,268 விசை ஏற்றங்களுக்கு, ஒரு ஆண்டுக் காலத்திலே ஏறக்குறைய அரை லட்சத்துக்கு மேல், இணைப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அதிலும் அவர்கள் திட்டமிட்டபடி அவர்கள் கையில் வயர் கிடையாது, கிளாம்புகள் கிடையாது, கம்பிகள் கிடையாது. இந்த நிலைமையிலும் அரசு பசுமைப் புரட்சி என்ற புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கு நாமும் ஒத்துழைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் 59,268 மின் ஏற்றங்களுக்கு ஒரு ஆண்டுக் காலத்திலேயே இணைப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் மின்சார வாரியத்தை நான் பாராட்டுகிறேன். இருந்தபோதிலும் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. அதில் ஆத்தூர், புளியணி, காட்டுக் கடலூர் போன்ற கிராமங்களில் ஏறக்குறைய 6 வருஷங்களாக மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்கிற நேரங்களில் கன்ஸ்டிரக்ஷனுக்குப் போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது போன்ற குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்த விதிமுறைக்குட்பட்டுத்தான் மின் இணைப்பு கொடுக்க செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதற்காகப் பல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைக்குட்பட்டுத் தான் மின் இணைப்பு கொடுக்க வேண்டும். ரெமியுனரேட்டிங் சிஸ்டமாக இருக்கிறதா என்று பார்த்துத்தான் அந்த வாரியம் அமல்படுத்துகிறது. அப்படியானால், ஒரு மின் விசை ஏற்றத்துக்கு இணைப்புக் கொடுக்கிறார்கள் என்றால், அதற்கு ஆகக்கூடிய செலவை அந்த ஏற்றத்தின் மூலமாக. இணைப்பின் மூலமாக 10 ஆண்டுகளில் வருமானம் வருகிறதா என்று கணக்குப் போடுகிறார்கள். வந்தால் இணைப்பு உண்டு. இல்லை, கூடுதலாகத் தொகை செலவானால், இணைப்பு மறுக்கப்படுகிறது. ரெம்யுனரேட்டிவ் சிஸ்டமாக இல்லை, இணைப்பு முடியாது என்கிறார்கள். இன்றையதினம் இந்த நாட்டில் ஜனத் தொகை பெருகியிருக்கிறது. அதற்காக உணவு உற்பத்தியை அதிகம் பெருக்க வேண்டுமென்று அரசு தீவிரமான பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இரண்டு போக நிலங்கள், ஒரு போக நிலங்களையெல்லாம் மூன்று போக நிலங்களாக மாற்றி நல்ல முறையில் செயல்படுகிறது. அப்படிப் பட்ட திட்டங்களை எல்லாம் செயல் படுத்தும்பொழுது இந்த சாதாரணமான இழப்பைப் பொருட்படுத்தாமல் ரெம்யுனரேட்டிவ் என்ற கணக்குப் போடாமல் ஏற்றங்களுக்கு இணைப்புக் கேட்டால், உடனே அதற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை என்று கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு மின் வாரியம் முன் வர வேண்டும். வாரியம் அரசு அமைப்பு அல்ல, நஷ்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது, நாங்கள் ஒரு வியாபார ஸ்தாபனம் என்று



கருதினால், அதன் மூலமாக ஏற்படக்கூடிய இழப்புத் தொகையை அரசாவது வாரியத்திற்கு ஈடுசெய்து கொடுத்து எப்படியாவது மின் இணைப்புகள் விவசாயிகளுக்குக் கொடுக்க வழி ஏற்படுத்த வேண்டும். ஆகவே ஒரு விவசாயி மின் இணைப்புக் கோரி, எந்தக் காரணத்தைக் கொண்டும் மூன்று மாதங்களுக்குள் நிச்சயம் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கக்கூடிய உறுதியை மின்சார வாரியம் அளிக்கவேண்டும். அதில் ஏதாவது சிக்கல்கள் இருந்தால், அதைத் தவிர்க்க அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக வாரியமானது கடந்த ஆண்டுகளில் தொழில் தகராறுகளையெல்லாம் நல்லமுறையில் தீர்த்து சுமுகமாக இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மின் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். பலருக்கு நல்ல வேலை வாய்ப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் வாரியத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்களில் இருக்கக்கூடிய சாதாரண கீழ்த்தர சிப்பந்திகள் அதாவது ஹெல்ப்பர்ஸ் இருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஹெல்ப்பர் உண்டு. 5 வருஷங்களுக்கு முன்பு ஒரு கிராமத்தில் 100 இணைப்புகள் இருந்திருக்கும். அதற்கு ஒரு ஹெல்ப்பர். இன்றைக்கு 100 மின் இணைப்புகள் உள்ள கிராமங்களில் ஆயிரம், இரண்டாயிரம் ஆனபிறகும் ஒரே ஹெல்ப்பர் என்பதால் வேலைப் பளு அதிகரித்து விட்டது. ஹெல்ப்பர்கள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆங்காங்கே பியூஸ் போகிறது என்று சொன்னால், உடனடியாக விவசாயிகள் நன்மை பெறத் தக்க வகையில் ஹெல்ப்பர்களை இந்தத் துறையில் உருவாக்க வேண்டும். வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் 1966-67-ல் இருந்த மந்த நிலையை உதறித் தள்ளி, தொழில் துறையில் மின் சக்தியைப் பயன்படுத்துவதில் பெருமளவுக்கு உயர்ந்துள்ளதென்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே நேற்றையதினம் அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொழில் துறைக்கு மின் கட்டணச் சலுகைகளைக் குறைக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார். உள்ளபடியே அந்த கருத்தை நான் முழுமனதோடு பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல அரசுக்கு தொழில் வளர்ச்சியிலும், தொழிலாளர் நலத்திலும், உற்பத்திப் பெருக்கத்திலும் அக்கறையிருப்பது நியாயம்தான். ஒரு தொழில் ஆரம்பத்தில் வளர்ச்சியடைவதற்கு சலுகைகள் கொடுப்பது நியாயம்தான். இப்பொழுதுள்ள சலுகைகள் நம்முடைய அமைச்சரவையால் கொடுக்கப்பட்டவை அல்ல. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சி அடையாத நேரத்தில் கொடுக்கப்பட்ட சலுகைகள், இன்றையதினம் அந்தச் சலுகைகளைப் பெறும் தொழிற்சாலைகள் நல்ல முன்னேற்றம் அடைந்து, நல்ல வருவாயைப்பெற்று, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் லாபம் பெற்று போனசாக மட்டுமே 20 சதம், 30 சதம் பங்கிட்டுக் கொடுக்கின்ற நேரத்தில், இந்தச் சாதாரண சலுகைகளைத் தாங்களாகவே முன் வந்து அந்தச் சலுகைகள் வேண்டாமென்று விட்டுக்கொடுக்க முன் வரலாம். அப்படிச் செய்ய முன் வராவிட்டால், அரசு தலையிட்டு எந்தெந்தத் தொழில்கள் இன்று தன் காலாலேயே நின்று வளரக்கூடிய நிலையைப் பெற்று விட்டனவோ, அவைகளைக்

[திரு. வி. வெங்கா] [9th December 1971

கண்டுபிடித்து, அவைகளுக்கு மட்டுமாவது ரத்து செய்வதன் மூலமாக இன்றையதினம் நம்முடைய மின்சார வாரியம் பெற்று வரும் நஷ்டத்தை ஓரளவு ஈடு செய்ய முடியும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த பக்கத்தில் மாநில முழுமைக்கும் குறைந்த கட்டணத்தில் பெருவாரியான அளவில் மின்சக்தி கிடைப்பதற்காகவும், மாநிலம் முழுவதற்கும் சீரான முறையில் மின் சக்தியைக் கொண்டு செல்லும் கம்பித் தொடர் இணைப்பும், மின் பங்கீடு கம்பித் தொடர் இணைப்பும் பின்னிப் பிணையப்பட்ட ஓர் அமைப்பு முறை அமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. மாநில முழுவதற்கும் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க வேண்டுமென்பது இந்த அரசினுடைய குறிக்கோளாகவிருக்கிறது. எனவே இன்றையதினம் விவசாயிகள் கொடுக்கும் கட்டணம் அதிகமாகவுமில்லாமல், குறைவாகவுமில்லாமல் நியாயத்தின் அடிப்படையில் இருக்கின்ற காரணத்தால் அதைக் குறைக்க வேண்டாம் என்று கூறிக்கொண்டு இது போன்ற நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க முடியாது என்ற அளவுக்குச் சிறப்பாகத் தயாரித்துள்ளதற்கு அமைச்சர் அவர்களைப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Thiru A. R. DAMODARAN:** Mr. Chairman, Sir before I refer to the working of the State Electricity Board, may I preface my observations with a remark with regard to the publication of the Administration Report? Normally, if it had been a publication of the annual Administration Report of a Government department, I would not have been surprised at the delay of one year and nine months, because, even the report of the Stationery and Printing department for the year 1966-67 was printed by the Printing department in the year 1971 and circulated to the Members of the Legislature. But, though the Tamil Nadu Electricity Board is not a Company under the Companies Act, or a Corporation strictly, I still feel that for a Board of its size and magnitude, it can be a little more prompt in publishing its Administration Report. The report that has been circulated to us is for the year ending 31st March 1970 and they have printed this some time in September
5-20 p.m. 1971, which seems to me to be rather abnormal for a big Board of its size. Sir, the Companies under the Companies Act, whether they are companies of 100, 200 or 300 crores of rupees, have to submit their accounts and print their reports within six months after the end of the accounting period and I would commend this to the Hon. the Minister for Electricity. Perhaps there are some real difficulties which may not be entirely due to human lapses. Perhaps there are difficulties in the Press in the Tamil Nadu Electricity Board where it has been printed. But, I think it would certainly be more useful not only for the Members of the Legislature but also for consumers in Tamil Nadu as well as in other States who may like to know something about the Electricity Board here, if these Administration Reports were published a little earlier, preferably within six months after the end of the accounting period.



9th December 1971] [Thiru A. R. Damodaran]

Sir, having prefaced my remarks with this very brief observation which may not be considered, I hope, as criticism, but nonetheless necessary, considering the fact that the working capital of the Board is increasing everyday and has almost come to the extent of Rs. 450 crores today, I think it is necessary for them to be a little more prompt in the publication of these reports.

Sir, Tamil Nadu is unforunate in that the sources of electric power are extremely limited for us. If we think of hydro-electric power, we have to think of perennially-flowing rivers, and unfortunately we have no perennially-flowing rivers and even the few rivers that bring us water perhaps for six months in the year are in danger of being blocked by other States, and I was rather amused at the suggestion of my hon. Friend Thiru S. Jayarama Reddiar with regard to a very ambitious scheme of bringing electric power from Ceylon to South India. Sir, if we can succeed in bringing power from one State in the Indian Union to another State in the Indian Union, we should consider ourselves singularly fortunate, without going to foreign countries and trying these ambitious schemes. As I said, Tamil Nadu is singularly unfortunate because, if we think of hydro-electric-power, our sources are extremely limited and if we think of thermal power, even there the question of the raw material for the thermal plants arises. We have to get coal from other States or most probably from Bengal, and the shipping costs are increasing, and the price of coal which was about Rs. 40 a ton about 10 or 12 years ago is now somewhere about Rs. 104 or Rs. 105 per ton. So, when we think of thermal plants also to augment the supply to our grid, unfortunately the cost per unit becomes very heavy and in the case of Thermal Stations that are set up in Tamil Nadu, the production cost of electric power becomes almost prohibitive, considering the fact that cheap power is required for various industries to which I shall refer later. But, nonetheless considering the very singular rise in demand for electricity which is now 120 units per capita from 12 units per capita 15 or 17 years ago. I think the Tamil Nadu Electricity Board can legitimately congratulate itself on having done a very fine job of work, considering the various difficulties which it had to face in the casae of raw materials that are required in the termal plants or for our hydro-electric schemes. I therefore, support fully the various proposals that they have outlined for increasing the generating capacity of the grid, particularly the second mine cut at Neyveli, the additional thermal units at Ennore and the power station at Tuticorin. There is one difficulty regarding Neyveli. Sir, in which matter I hope the Hon. Minister will be able to clarify. We have been including the generating capacity of Neyveli Lignity Corporation as part of the Tamil Nadu Electricity Board's generating capacity. Even in the report, they have mentioned that 1220 Megawatts in the generating capacity of the grid as on 31st March 1970 and they have added 500 Megawatts from Neyveli. So, I think we are

industrial development such a cavalier treatment would not be there. It is imperative, it is imperative I repeat, to take an early decision. The rates of domestic tariff can be increased, we cannot take our houses and settle down in Mysore State. The agricultural tariff which is heavily subsidised may be increased if political conditions permit or may not be increased if political conditions do not permit. Nonetheless, even if you increase the agricultural tariff, we cannot take our lines and pumpsets to Mysore or Kerala to do agriculture there. We have to remain where we are.. But in the case of industries, we have to bear in mind that where the electric power is an important raw material and where it forms more than 20 to 25 per cent of the cost of production of the end product, it is imperative that we should study the rates that prevail in our neighbouring States.. I do not say that any special concession should be offered, but at least parity must be observed to see that industries located in Madras are not at a disadvantage as compared to industries located in Kerala and Mysore, the two States which can offer electric power at highly competitive rates. In the case of Kerala, the rate for a large industry consuming 73,000 K.W. units per month at 40 per cent load factor, 250 K.W. is Rs. 10.67 per unit; in the case of Mysore, it is Rs. 68.53 per unit, in the case of Maharashtra, to quote only an example of a highly industrialised State, the rate is Rs. 9.5 per unit, but in the case of Madras, in the thermal area, it is Rs. 18.19 per unit. In the case of a large industry where the consumption is 1000 K.W. at 60 per cent load factor with 3.65 thousand units per month, the rates are even less in other States. In Kerala it is 8.72, in Maharashtra it is 8.74 and in Mysore it is 7.46 whereas in the Madras Thermal area it is 16.49. In the case of heavy industry, where the consumption exceeds 2 million units per month—5,000 kilo watts, the rate in Kerala is Rs. 7.08 per unit, the rate in Maharashtra is Rs. 7.83 per unit, the rate in Mysore is Rs. 6.40 per unit and the rate in the Madras Thermal area is Rs. 13.86 per unit. The rate in the Madras hydel area, for this particular group only is Rs. 7.46 per unit. So, we have the odd situation that whereas in the Thermal area the rate is Rs. 13.68 per unit, in the hydel area, it is somewhere near Rs. 7.48 per unit. Sir, even within the State, highly discriminative treatment is meted out to an industry which is located in Madras and whose cost of production may be 20 per cent more than the cost of production in a factory located in the hydel area. While the Government may plead that they are interested in the dispersal of industry and, therefore, a system of preferential tariff may be adopted, nonetheless this huge difference in tariff cannot be ex-plained by such an argument. I would earnestly plead with the Hon. the Minister for Electricity to sit with the Hon. the Minister for Industries and while unnecessary concessions need not be granted to an industry,—as one hon. Member suggested, they can certainly go through the profit and loss account of these concerns which they publish within six months after the accounting period—where the power consumption charges are a sizable portion of the





cost of production, some effort should be made to keep these industries on parity with those industries which exist in our neighbouring States so that our industry may not suffer. I do not know the reason for this long hibernation period between the proposal made by the Expert group and the decision of the Government, but in such matters, it is imperative that quick decision should be taken because industries cannot be located overnight. It takes years to plan an industry and if we do not offer our rates at the present moment, the location of the industries may very well shift to other areas.

Sir, the Electricity Board has expanded its activities to a very large extent and it is very natural that there should be some complaints about its working here and there. We have heard complaints from the hon. Members of this House about the lighting in the Panchayat Union areas and Municipalities. I was myself connected with a municipality, Sir, I had a lot of complaints about the lighting, renewal of bulbs, etc., and I would strongly urge that in the case of block lighting of Panchayat Unions and bigger Municipalities, meter should be installed and since meter rent is going to be collected from the local bodies, whatever capital expenditure is required for these meters, the return on such capital investment may be charged in the form of meter rent from the local bodies. This would act not only as a check on the number of lamp posts which are without bulbs, but it would also lead to the local bodies effecting economies in electricity consumption if required. I would strongly urge—because this is one of the most popular complaints that have been made and we have even talked about it in the Consultative Council—that this long-standing complaint should be attended to and removed. Otherwise, we will be repeating it year after year and it will only produce needless friction with the Electricity Board. I have my own complaints about the voltage drops in South Arcot district. While I would not like to generalise, I would quote only one example. In the town of Vridhachalam between the period 1st January 1971 and 30th June 1971—a period of 180 days—there were 49 break-downs on the Vridhachalam-Ulundurpet road. The Hon. Minister may ask whether my figures are correct. They are absolutely correct, because I have a pump on the Vridhachalam-Ulundurpet road and the staff there used to complain, " These electric pumps often do not work properly when they are handled by manual labour ". Whenever I went to Vridhachalam they said that the power had gone for ten or fifteen minutes. I said : " There is no use in your complaining. I shall mention this to the Hon. Minister, but he will say : " The records do not contain these particulars, we do not have these facts and you must substantiate these facts ". Hon. Chairman may also say that the facts should be substantiated. Therefore, I asked the staff to note down the breakdowns. There were 39 breakdowns ranging from a period of 3 minutes to three and a half hours. Forty-nine breakdowns in 180 days ranging from 3 minutes to 3½ hours. There may be valid

[Thiru A. R. Damodaran] [9th December 1971

almost considering as if further expansion in Neyveli will be allotted entirely to Tamil Nadu. Sir, a demand has been made by Andhra Pradesh which is highly deficit in power. Kerala and Mysore have not made it because they have other sources of power—hydro electric power—and certainly they do not require power from Neyveli which may cost 5 paise or 5.5 paise per unit. But I think Andhra has made a claim that in any Central Project located at Neyveli which aims at expansion of thermal generation at the Neyveli Corporation the power should be shared with Andhra Pradesh and there seems to be an element of risk in our including any expansion at Neyveli within the Tamil Nadu Electricity Board's requirements of power. I would, therefore, commend for examination—provided this is technically feasible—while we may plead for a second mine cut at Neyveli, whether it would not be possible for us to start the thermal station within the Tamil Nadu Electricity Board's jurisdiction itself. Although lignite is a very difficult raw material to transport, nonetheless, in view of the fact that the Neyveli Complex is in itself a small area, it should be possible for us to convey he ligite by means of conveyor belts which are now being used perhaps to a distance of 5 or 6 miles and to use it in the thermal station which would be managed and operated completely under the control of the Tamil Nadu Electricity Board. In this case we could pay for the lignite that is given to us by the Lignite Corporation and used as a raw material for the thermal plant which the Tamil Nadu Electricity Board ciuld set up. I do not know whether it would be technically feasible, but I do not think it should offer insuperable difficulties because even now the lignite that is now being used at Neyveli is transported by conveyor belts and we could always locate a thermal station. The maximum area that would be required is 20 to 30 acres. There are vast areas where this could be located and I request the Electricity Board to investigate whether this is technically feasible because, as I said, the only material that as available to us in Tamil Nadu as a source of production of thermal power is lignite. We do not have coal, we do not have furnace oil because it is prohibitive. I would therefore, commend this suggestion to the Electricity Board. I would particularly happy to note, Sir, from this Report an outstanding scheme that the Electricity Board has in mind to increase the generating capacity of the grid and it is, Sir, the Kadamparai Pump Storage Scheme which is expected ultimately to generate about 400 M.W. of power. Sir, this is indeed a unique scheme. All of us have thought in the past that for hydel power the water must flow and, therefore, the energy could be used to produce electrical power. But this is a unique scheme in that during night time when the load is not being utilised fully, water is pumped again and by the same process fresh power is to be generated. I think, Sir, that this is a scheme which is well worth pursuing because we will not have to depend on outside sources to an unnecessary extent. I must congratulate the Electricity



9th December 1971] [Thiru A. R. Damodaran]

Board on having this Scheme because it is a very big scheme for 400 M.W. and it is likely to provide the much needed power to our State. Sir, the hon. Members who has spoken in this House have taken cudgels against the Hon. the Minister for Electricity for having granted certain concessions to industries Firstly, Sir, I think they are wrong in making this accusation because the Hon. Minister is not guilty of this charge a all. To my mind, he has not given any big concession so far during the past 4 years expecting for the removal of surcharge at 10 per cent. I think it was done in the year 1969 which was a titbit thrown by the Hon. Minister to please the industrialists in our State and therefore, I think, Sir, he is being rather ministry accused of giving favourable treatment to industrial establishments n our State. When my hon. Friend Thiru G. Vasantha Pai who always leaves the House after making his speech (laughter) referred to the need for not giving subsidy to industrial establishments and the need for rationalisation of the )lectricity tariff to industries located in Tamil Nadu, the Hon. Minister, probably noting the absence of papers in his hand, challenged and said that comparative figures should be given I am glad to say, Sir, that although the challenge has not been accepted by Thiru Vasantha Pai, it is being accepted by me. I will not quote, Sir, the rates that are prevalent all over India.

5.30 p.m.

the need for rationalisation of the Electricity tariff to industries located in Tamil Nadu the Hon. Minister, probably nothing the absence of papers in his hand, challenged and said that comparative figures should be given. I am glad to say, Sir, that although the challenge has not been accepted by Thiru Vasantha Pai, it is being accepted by me. I will not quote, Sir, the rates that are prevalent all over India.

MR. CHAIRMAN : He has admitted that he has not mastered the adventure.

THIRU A. R. DAMODARAN : I will not quote figures from all States of India but from the facts and figures that are available, there is no doubt that the thermal rate prevailing in the Madras State Electricity Board area is the highest in the whole of India. I referred to this last time in my speech. Sir, I was hoping that the Hon. Minister who had announced the appointment of an Expert Committee would have announced a rationalisation of the rate structure by this time but, unfortunately, so many events have intervened and it has not been possible for him to arrive at any decision so far. In fact, Sir, like Parkinson's Law, the Expert Committee which was appointed has now been superseded by another Working Group which is studying the report of the Expert Committee and after the Working Group makes its recommendations, another Expert Committee would be appointed to study the recommendations of the Working Group. It is one of the accepted procedures of Parliamentary life that when we do not want to take a decision on any particular subject, the best way is to appoint a Committee and to sleep without taking a decision. I hope, Sir, in the case of

வர்களும் பொறியியல் வல்லுனர்களும், கலைக்காளர்களும் இந்தப் பாராட்டுதலில் பங்கு பெறுகிறார்கள். இதைத் தலைமையேற்று வழி நடத்திச் செல்லும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

அப்படிப்பட்ட இந்தப் பெரிய ஸ்தாபனம் அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி இன்னும் 5 ஆண்டுகளுக்குள் மேலும் 25 ஆயிரம் புதிய ஊழியர்களைப் பெறவிருக்கிறது. அப்படிப்பட்ட இந்த ஸ்தாபனத்துக்கு தமிழ் நாட்டு சர்க்கார் போனஸ் தரும் ரீதியில் எந்த அளவில் கனிவோடு இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக, அந்த ஸ்தாபனம் நமக்கு லாபத்தை ஈட்டித் தராவிட்டாலும் கூட, போனஸ் சட்டப்படி குறைந்தபட்சமான 4 சதவிகிதம் தரலாம் என்று இருந்தும், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் 5 சதவிகிதம் அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் தர வேண்டுமென்று சொல்லியிருப்பது தொழிலாளர்களைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்படுகிற சர்க்கார் எந்த அளவில் எந்த உணர்ச்சிகொண்டிருக்கிறது என்பதற்கு நல்ல அடையாளம் என்று நான் காட்ட வேண்டியது இல்லை.

சர்க்காரின் மற்றத் துறையினரைப் போலல்லாமல் மின் வாரியத்தில், சர்க்கார் இடும் ஆணைகள் எதுவாக இருந்தாலும் சிரமேற்கொண்டு, உடனடியாகவே நிறைவேற்றுகிறார்கள் என்றால், அது நிச்சயமாக மிகையாகாது. 25, 26 மாதங்களுக்கு முன்னால் டாக்டர் கலைஞர் தமிழகம் பூராவும் 1972 டிசம்பருக்குள் நாம் மின் விளக்குகள் தருவோம் என்று வாக்குறுதி கூறினார்கள். அறிவிப்புசெய்த அன்றைய நிலையில் போதிய சிப்பந்திகள் இல்லை. ஏறக்குறைய 60 ஆயிரம் சிப்பந்திகள் தான் இருந்தார்கள். போதிய தளவாடங்கள் இல்லை. போதிய பணம் இல்லை. இருந்தும் நல்ல முறையில் அந்த வாரியம் செயல்பட்டிருக்கிறது. நான்கு மாவட்டங்களில் மின் விளக்குகள் அனைத்து கிராமங்களுக்கும், எல்லா குக்கிராமங்களுக்கும், தந்துவிட்ட நிலைமையிலும், நான்கு மாவட்டங்களில் 1971-72-க்குள் வந்துவிடக் கூடிய நிலைமையிலும் மிச்சம் இருக்கக்கூடிய ஆறு மாவட்டங்களில் 1972 டிசம்பருக்குள் தரக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது.

இப்படிப்பட்ட முறையில் இன்றையதினம் மின்வாரியம் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மின் வாரியம் தமிழ் நாட்டு சர்க்காருக்குக் கீர்த்தி மிக்க தங்கக் கிரீடத்தை ஒளி வீசும் வைரங்கள் பதித்து அளித்திருக்கிறது என்று கூறினால், மெய்யாகவே அது மிகையல்ல என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட கிரீடத்தை வழங்குவதால் அவர்கள் குறையே இல்லாதவர்கள் என்றால், நான் அது போல மழுப்புவதற்குத் தயாராக இல்லை; பசப்பு வார்த்தையில் நான் ஈடுபட மாட்டேன். செய்யக்கூடிய எந்தக் காரியத்திலும் சில பல குறைகள் இருப்பது தவிர்க்க முடியாதது; அதுபோல மின் வாரியத்திலும் சிலபல குறைகள் இருக்கின்றன.

சில்லறையாகச் சொல்ல வேண்டுமென்றால், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் மின் இணைப்புகள் உடனடியாகக் கிடைக்கும் போக்கில் குறை இன்னும் தொடர்ந்து நீடிப்பதை, விலாசி என்ற முறையில் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.



கிராமங்களில் உள்ள தெருவில் மின் விளக்குகள் எரிவதுபற்றியும், அதற்குக் கட்டணம் வசூலிக்கும் முறை பற்றியும் இன்றையதினம் மின் வாரியம் கொண்டுள்ள போக்கு உடனடியாகவும், கட்டாயமாகவும் மாற்றப்பட வேண்டுமென்ற குறைபாடு இருப்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இவைகளையும், இவைகளைப் போன்ற இன்னும் சில சில்லறைக் குறைகளைப் பற்றியும் பேசுவதைவிட முக்கிய விவகாரங்கள் இரண்டொன்றைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

நேற்றையதினம், மாண்புமிகு உறுப்பினர், பேரறிஞர் அண்ணா அவர்களின் நிழலெனக் கருதப்படும் எனது அண்ணன் சி. வி. ராஜகோபால் அவர்கள் குறிப்பிட்டது போல், உடனடியாகத் தேவையில்லாத பண்டங்களைத் திட்டமிட்டு பல ஆண்டுகளுக்கு முன்பே சேகரித்து வைத்து வைக்கக்கூடிய தன்மை மின் வாரியத்தில் இன்னமும் தொடர்ந்து கையாளப்பட்டுவருகிறது. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வாரியத்தின் தலைவர்களால் சேர்மன்களால் கையாளப்படுகின்றது. இந்த முறை நீடித்திருப்பது நல்லதல்ல என்று வினயமாகவும், வருத்தத்துடனும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் பல்வேறு முறைகளில் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. முடக்கிவைக்கப்பட்ட மூலதனம் என்னும் முறையில் நஷ்டம், இரண்டாவதாக விணாக வட்டிப்பணம் தருகிறோம்; அதனால் விரயமாகும் பணம், மூன்றாவதாக, நீடித்த ஆண்டுகள் இருப்பதால், சொத்து சேதாரமாகிறது. அடுத்தாற்போல், உபயோகிக்கும் நேரத்தில் பண்டங்கள் எவ்வளவோ நவீன மாறுதல்களை இழந்த நிலைமையில் இருக்கிறது. ஐந்தாவதாக, தேவையில்லாமல் கோடவுன் அடைபட்டுக் கிடக்கிறது. இவைகளைப்பற்றியெல்லாம், தலைவர் அவர்களே, கணக்கிட்டாகவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டது போல், சாலிடால் கேபிள் வாங்குவதில் நாம் பணத்தை முடக்குகிறோம். இப்படிப்பட்ட முறையில் அந்தப் பணத்தை முடக்காமல் அதை வேறு எவ்வளவோ உடனடியாகச் செய்தாகவேண்டிய காரியங்களுக்கு மின் வாரியம் பயன்படுத்த வேண்டும்.

நான் உதாரணத்துக்கு ஒன்று சொல்லுவேன். இன்றையதினம் மின் வாரியம் ஏறத்தாழ ரூ. 12 லட்சத்துக்கு மேல் ஆண்டு ஒன்றுக்குக் கட்டிடங்களுக்கு வாடகை என்ற முறையில் செலுத்துகிறது. டிசம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து புதிதாக, ராயலா சென்னை, அண்ணாசாலையிலுள்ள கட்டிடத்தில் 3-வது, 4-வது மாடிகளை மாதம் ரூ. 18 ஆயிரம் வாடகைக்கு நாம் எடுத்திருக்கிறோம். இந்த இடத்தை நாம் வாடகைக்கு எடுப்பதற்குப் பதிலாக நான் முதலில் குறிப்பிட்டபடி முடக்கிவைக்கப்படும் மூலதனத்தைக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்த வேண்டும். ஏற்கனவே சென்னை 157, அண்ணாசாலையில் இருக்கக்கூடிய நமது கட்டிடத்தில் ஏழு அடுக்கு மாளிகைக்கு அடித்தளம் போடப்பட்டு 2 அல்லது 3 அடுக்குகள் தான் கட்டப்பட்டிருக்கின்றன. அதை மேலும் உயரக் கட்டினால், செலுத்திக் கொண்டிருக்கக்கூடிய விணான வாடகைப்பணம் மின் வாரியத்தின் கஜானாவில் தங்கும். மின்சாரத்

reasons for this. Perhaps there is a lot of overloading. I am not a technical person knowing very much about electricity. What little I knew I forgot with my Intermediate Physics. Perhaps the load is too much. Perhaps the transformer capacity has not been increased. I am not able to give the details as to why these breakdowns should occur. What I think is that the Electricity Board, with a working capital of Rs. 450 crores, should ensure quality of service. There is no point in saying that we have laid 55,000 K.M. of E.H.T. and H.T. lines and 137,000 K.M. or L.T. lines, etc. All these are very creditable indeed. But you must get something at the other end. If you do not have proper voltage at the other end, your compment is ruined. It is not a case of an electric fan or light getting switched off and we remaining in the dark. We can put up with these minor inconveniences. When it is a question of sensitive electrical equipment being damaged, then I think we have every right to ask the Electricity Board, " where is the quality that you are giving to your consumers? ". In Vridhachalam, I have a refrigerator petrol pump, the motor of which gets burnt out. So, the next time when I had to repair the motor I had to buy a booster for Rs. 400. So it is the duty of the Electricity Department which is charging almost 34 paise for this type of tariff to ensure quality and I see no reason why there should not be a constant review of the quality of service that is being given. I hope that apart from the quantitative expansion, apart from the wonderful progress that has been made in laying so many kilo metre length of high tension and low tension cables, in electrifying so many villages, in granting electricity to pumpsets, in increasing the number of consumers from 2 lakhs to 19.6 lakhs, some attempt should also be made in seeing that these common defects do not arise causing a great deal of damage to sensitive equipment.

Sir, one word more and I have done and that is about the profitability of the Electricity Board. My hon. friend Thiru C. V. Rajagopal who obviously is not very familiar with the methods of mercantile accounting expressed himself somewhat confused by the commercial accounting of the Electricity Board and the profit and loss account, etc. I must confess, Sir, that while, although I am no stranger to it, it is extremely difficult to pin down what exactly is the net surplus generated by the Electricity Board. The division is perfect. One time they make profit and they give interest. If there is no surplus, they lower the interest. The Venkataraman Committee suggested a 11 per cent return. But in none of the administration reports have I been able to find what exactly has been the return of the Electricity Board, as per the Venkataraman Committee's recommendations. The profit and loss account of the Electricity Board is one which doubtless we have to study with Cost Accountants before we are able to unravel the mystery.

5.40 p.m. Nevertheless, the revenue of the Electricity Board is fairly substantial. One thing I want to mention. It is false for us to say that it is running at a loss and that it is not making as much profit



because a substantial portion of its revenues is being transferred to the Government revenues and it is not accruing to the Electricity Board. I have made this reference in the past and I am sorry to be repetitive about it. But the tax on power contributes nearly 10 to 12 crores of rupees if my memory is correct. I am not able to get the exact figure from the Appendices to the Budget, but it was given in a Memorandum. If my memory is correct, 10 to 12 crores of rupees of tax on consumption of electricity of the Electricity Board accrues to the Tamil Nadu Government's general revenues.

I think, Sir, if the Government were prepared to accept the transfer of this particular resource to the Electricity Board, the Electricity Board would be able to make another 12 crores of rupees as profit and I am sure the objectives of the Venkataraman Committee in achieving a eleven-per cent return would be achieved. Perhaps, it may not be necessary to raise the rates for the agricultural sector and earn a little more unpopularity. Perhaps, all these things could be evened out with the transfer of this revenue to the Electricity Board. I, therefore, suggest to the Hon. the Minister for Electricity that he may discuss this with the Finance Minister and see whether, in view of the fact that we have other items of revenue in the current year, this profitable source of revenue could not be transferred to the Electricity Board. Thank you, Sir.

* திரு. எம். ராமனாதன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, **தமிழ்** நாடு மின் வாரியத்தின் **1971-72**-ஆம் ஆண்டு நிதி நிலை குறித்தும், **1970-71-ம்** ஆண்டு நிதி நிலை குறித்தும் விவாதிக்கின்ற நேரத்தில், நான் அவைகளை வரவேற்று, எனது கருத்துக்களைச்சொல்ல விரும்புகிறேன். அதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் மின் வாரிய அமைச்சர் அவர்கள் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த ஒரு கருத்தினைப் பாடலாக எடுத்துச் சொன்னார்கள். 1972-ஆம் ஆண்டுக்குள் தமிழ் நாடு முழுமைக்கும் மின் வசதி பரவச் செய்து எல்லா மக்களும் மின் வசதி பெறத்தக்க வகையில் ஒரு விரிவான திட்டத்தை இந்த வாரியம் மேற்கொண்டிருக்கிறதென்பதைப் பாடலாக அவர் சொன்னார். அதேபோல் தமிழ் புலவர் ஒருவர் சொன்னது

விழவு அறாத நல் விளங்கொளி மணி நெடுவீதி !
முழவு அறாத நல் மொய் குழலியர் நட வரங்கம் !
மழவு அறாத நல் மங்கலம் பொலிமணி முன்றில் !
உழவு அறாத நல் ஓங்கிடும் குடிகள் !

என்று நாட்டின் சிறப்பினைப் பாடியுள்ளார். அந்த வகையில் இந்த நாட்டிலிருக்கின்ற மக்கள் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் இந்த மின் வாரியம் செயல்படுகிறதென்பதை நான் முழு மனதோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் மற்றும் ஒரு கருத்தை இந்த நேரத்தில் கூறுவது தவறாகாது என்று நம்புகிறேன். ஏனென்றால் தொழில் பகுதி மிகுந்த கோவை மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் "கரண்ட் வெட்டு" இருந்துகொண்டேயிருந்தது.

[திரு. எம். ராமநாதன்] [9th December 1971

இருக்கிறது. இது மாத்திரமின்றி மாதத்திலே ஒரே ஒரு நாள் தான் இந்த நிலையம் வேலை செய்கிறது, இதிலிருந்து கிடைக்கும் மின்சாரம் 50 கிலோ வாட் தான். எனவே இந்தக் காரணங்களினால் மூடிவிடலாம் என்று யோசித்து மூடப்பட்டு விட்டது. என்றாலும் இதை மறு பரிசீலனை செய்து, அதிலிருந்து 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற முறையில் இதை விரிவுபடுத்துவோமானால், அதனால் லாபம் ஏற்படும். ராஜஸ்தானிலிருந்து நிலக்கரி வரவழைப்பதற்கு பதிலாக ஆந்திராவில் சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வரவழைத்தால், சிக்கனமாக இருக்குமா அல்லது நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் தயார் செய்வது லாபகரமாக இருக்குமா என்பதைப் பற்றி மறுபரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியம் எடுத்துக்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும், இந்த அரசின் எல்லா நோக்கங்களையும் மிகத் துரிதமாக நிறைவேற்றும் அமைச்சரவர் களுக்கும், பந்தைய மைதானத்தில் ஓடுகின்ற குதிரையைப் போல பணியாற்றுகிற அமைச்சரவர்களின் சீரிய செயலுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவள்ளுவர் அன்றைக்கு

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

6.00 p.m. என்று பாடினார்கள். இன்றைக்கு அவர் இருந்திருந்தால்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
மின்சாரம் முதற்றே உலகு"

என்று பாடியிருப்பார். இப்படி பெருமைக்குரிய மின்வாரியத்தையும், மின் துறை அமைச்சரையும், பாராட்டி, இந்த நிதிநிலை அறிக்கையை வா லேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மிஸ்டர் சேர்மன்: திருவள்ளுவருக்கு வேண்டுமானால் தபால் எழுதலாம்.

* திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டிற்கான மின் சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையையும், 1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இந்த அவை யில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையின் மீது நான் சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இந்த அறிக்கையின்மீது விவாதம் தொடங்கிய நேரத்தில் நானே குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம். ஒரு பெரிய புத்தகமாகப் போட்டு மேசையிலே வைக்கப்பட்டிருந்தது. அந்தப் புத்தகத்தைப் படிப்பதற்குக் கூட அவகாசம் இல்லாத நிலையில் பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அந்த நிர்வாக அறிக்கை என்கிற புத்தகம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டது போல், 6 தினங்களுக்குப் பிறகு அளித்திருந்தாலும், விவாதம் தொடங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அறிக்கையை 6 தினங்களுக்கு முன்பாகவே பெற்றுக் கொள்ளத்தக்க முறையில் ஏற்பாடு செய்ததற்காக, அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அறிக்கை கவர்ச்சிகரமாக வெளியிடப்



9th December 1971] [திரு. எம். ஆறுமுகசாமி]

பட்டிருக்கிறது. இந்த அறிக்கை வேறு விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கு மானால், இதை நாங்கள் புரட்டிக்கூடப் பார்த்திருக்க மாட்டோம். சிறு பிள்ளைகளுக்கு பாடபுத்தகங்கள் போட்டிருப்பது போல, எல்லா விவரங் களும் படங்களோடு இதில் போடப்பட்டிருக்கிறது. அதற்காக இந்தத் துறையினருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்த மின்வாரியத்தின் அறிக்கையை உள்ளே புகுந்து படித்து அதன் மீது கருத்துத் தெரிவிப்பதற்கு முன்னால் மின் வாரியத்தையும், மின் வாரியத்தை நிர்வாகிக்கும் இளைஞரான மாண்புமிகு அமைச்சரவர்களையும் நான் பாராட்டு கிறேன். சென்ற 13 ஆண்டுகளில் இந்த மின் வாரியம் மிகவும் முன்னேற்றமான காரியங்கள் செய்து வருகின்றது. பந்தயக் குதிரைப்போல் வேகமாக ஓடுவதாக உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலா விட்டாலும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மின்சார வாரியம் நல்ல முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றது என்ற அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன். மற்ற மாநிலங்களில் மின்சாரம் அதிகமாகப் பெறுவதற்கு வாய்ப்புகள் நீர்த்தேக்கங்கள், நிலக்கரி போன்றவை இருக்கின்றன. நமக்கு அப்படிப்பட்ட திட்டங்கள் வகுப்பதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும் உள்ள வாய்ப்புகளைக் கொண்டு அதிக அளவில் மின்சாரத்தை விரிவுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு தலைவன் சொன்னான் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள இல்லத்தரசி ஒரு பொறியாளராக மாறவேண்டு மென்று சொன்னான். அப்போதுதான் தனது நாடு முன்னேற முடியுமென்ற கருத்தை வெளியிட்டான்.

மிஸ்டர் சேர்மன்: ஒவ்வொரு இல்லத்தரசியும் இன்ஜினியராகி விட்டால் யார் சமையல் வேலையைப் பார்ப்பது? மின்சாரத்தை அதிக அளவில் பயன் படுத்த வேண்டுமென்ற கருத்திலே சொல்லியிருப்பார்.

திரு. எம். ஆறுமுகசாமி: சமையல் வேலையைச் செய்வதற்கு இல்லத் தரசிகள் இருக்கக் கூடாது என்பதல்ல. அவர்கள் இருப்பார்கள். ஆனால் மின் சாரத்தைப் பயன்படுத்தி இயந்திரங்கள் அதிக அளவில் வீட்டு வேலைகளைச் செய்வதற்கேற்ற முறையில் இன்ஜினியர்களாக இருக்க வேண்டுமென்ற அர்த்தத் திலே அவர் அப்படிக் குறிப்பிட்டிருக்கலாம். கன்ஸ்யூமர் பொருள்களைப் பயன் படுத்த விஞ்ஞான அறிவு தேவை என்பதற்காக மாவு அரைப்பது, துணி வெளுப்பது போன்ற காரியங்களை இன்று மின்சாரத்தைக் கொண்டு செய் கிறோம். இதற்கான இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு விஞ்ஞான அறிவு தேவை என்பதற்காக அவர் இன்ஜினியராக இருக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லியிருக்கலாம். ஆக மின்சாரம் அவ்வளவு அபரிமிதமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதே அதன் உட்பொருள். மின்சார உற்பத் தியை அதிகப் படுத்தத் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருவதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜகோபால் அவர்கள் மூன்று சாராரும் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட் கிறார்கள். வீட்டிற்குப் பயன்படுத்துகிறவர்கள், விவசாயத்திற்குப் பயன் படுத்துகிறவர்கள், தொழிலுக்குப் பயன்படுத்துகிறவர்கள் என்ற இந்த மூன்று

[திரு. எம். ராமனுதன்] [9th December 1971

இந்த நேரத்தில் நான் மற்றும் ஒரு கருத்தை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டுக்குத் தேவை 1973-74-ல் எவ்வாறு இருக்கும் என்பதைப்பற்றிய குறிப்பை இந்த அறிவிப்பில் தந்திருக்கிறார்கள். அதில் 1973-74-ல் 1835 மெகாவாட் மின்சாரம் நமக்குத் தேவையென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பெறுவதற்கு நாம் 2,200 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திறனை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. அதை நான் பார்த்தபோது ஏறத்தாழ 365 மெகாவாட் அதிக உற்பத்தி செய் தால் தான், இந்த 1835 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று கருதப்படு கிறது. 'லைன் லாஸ்' என்ற முறையில் வரும் சேதம் 5%-க்கு அதிகமாக இருக்கக் கூடாது என்று ஒரு குறிப்பு இருக்கிறது. இப்போது எவ்வளவு 'லைன் லாஸ்' ஏற்படுகிறது என்று பார்க்கும்போது, தந்திருக்கின்ற புள்ளிவிவ ரங்களின் படி 17% ஆக லைன் லாஸ் இருந்தாலும், அது 20% லிருந்து 25% வரை அதிகமாகும் நிலை இருக்கிறது.

மின் துறை நிலையங்களிலிருந்து பவர் ஸ்டேஷன்களுக்கோ அல்லது ரிசிவிங் அல்லது டிஸ்டிரிபியுஷன் நிலையங்களுக்கோ எவ்வளவு யூனிட்டுகள் வருகின்றன என்பதை அளவாக அறிந்துகொள்ள மீட்டர்கள் இல்லை. அப்படி மீட்டர்கள் இருந்தால், எந்த இடத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்க முடியும். பவர் ஸ்டேஷன்களில் இவ்வளவு யூனிட்டுகள் வந்து சேர்ந்திருக்கின்றன என்று குறிப்பு எடுத்துக் கொள்ள மீட்டரும் அதே போல டிஸ்டிரிபுயுஷனுக்கு எவ்வளவு போகிறது என்பதைத் தெரிவிக்கவும் மீட்டர் முறை இருக்குமானால், எந்த இடத்தில் திருட்டு போகிறது அல்லது எந்த இடத்தில் லீகேஜ் ஆகிறது அல்லது தவறாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்களா என்பதும் தெரியும். இப்படி ஒரு மீட்டர் முறை வைத்துக்கொள்ளுவது எதிர்காலத்தில் மிகப் பெரும் அளவுக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்படாமல் கட்டுப்படுத்திக் கொள்ளப் பயன்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காடம்பாறை திட்டத்தின் மூலம் 400 மெகாவாட் உற்பத்தியாகும் என்றால் இப்படி நிறைவேற்றப்படும் ஒரு திட்டத்தின் அளவில் மிகப் பெரிய சேதாரம் இருப்பதனைக் கவனித்து இப்படிப்பட்ட ஒரு பெரிய நஷ்டத்தைக் கட்டுப்படுத்த நம் மின் வாரியம் முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

84,000 தொழிலாளர்களைக் கொண்டிருக்கிறது மின் வாரியம். இவ்வளவு பெரிய பொறுப்புகளை வகித்து வரும் இந்த வாரியம் தொழிலாளர்களுக்கு அளித்திருக்கின்ற சலுகைகளுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக் கிறேன். ஏனென்றால் தமிழக முதல்வர் அவர்கள் 5 சதவிகிதம் போனஸ் கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்கள். 4 சதவிகிதத்திற்கு பதிலாக 5 சத விகிதம் போனஸ் கொடுத்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் மற்றொன்றையும் நான் தொழிலாளர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தோடு கிராக்கிப்படியும் சேர்த்து இப்போது சம்பளம் நிர்ணயித்திருப்பது போல, இந்த வாரியத்தை சேர்ந்த ஊழியர்களுக்கும் கிராக்கிப்படியைச் சம்பளத்தோடு சேர்த்து சம்பளம் நிர்ணயம் செய்தால் ஓய்வு பெறும் ஊழியர்களுக்குப் பென்ஷன் அதிகமாகக்



9th December 1971] [திரு. எம். ராமனுதன்]

கிடைக்கும். இந்த ஆலோசனையை வாரியம் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, அரசு ஊழியர்களுக்குத் தந்திருப்பது போல, திருமணகாலக் கடன் வசதியை மின் வாரிய ஊழியர்களும் பெறும் வகையில் அந்தச் சலுகை யையும் தர வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மின்வாரியத்தின், அலுவலகங்கள் எல்லாம், குறிப்பாக கோவை மாவட்டத்தில் பைகாரா யூனிட்டில் உள்ள 11 வருவாய்த்துறை யூனிட்டுகளும் வாடகைக் கட்டிடங்களில் தான் இருக்கின்றன. 500, 800, 1,000 ரூபாய் வரைக்கும் வாடகை கொடுக்கப்பட்டு வருகிற நிலையிலே இன்றைக்கும் இந்தத் துறையின் அலுவலகம் இருந்துகொண்டு வருகிறது. சென்னையிலே 15,000 ரூபாயிலிருந்து 17,000 ரூபாய் வரை வாடகை கொடுக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி பல லட்சக்கணக்கான ரூபாய் வரை விரயமாகிறது. எனவே இந்த அலுவலகத்திற்கு என்று கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு அறிவிப்பிலே எதிர் காலத்தில் நம்முடைய மாநிலத்திற்குத் தேவைப்படும் அதிக மின்சாரத்திற்காக ஒரு புதிய அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு கருதிக்கொண்டிருக் கிறது என்றார்கள் அதற்காக அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு அனுமதி தாருங்கள் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. இப்படி அமைக்கப்படுகிற அனல் மின்சார நிலையத்தைத் தென் பகுதியில் தூத்துக்குடியில் அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது கேரள அரசு நமக்கு மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. நாளைக்கு கேரள அரசாங்கம் தன்னுடைய தொழில் தேவைக்கு மின்சாரம் தேவை என்று நினைத்தால் நம்முடைய தொழில்கள் பாதிக்கப்படும் ஆகையால் நம்முடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அனல் மின்சாரத் திட்டத்தை மேற்கொள் வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நம்முடைய மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிகுந்த அக்கறையோடு மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருவதுபற்றி மகிழ்ச்சி யடைகிறேன். மதுரை மாவட்டத்தில் சமயநல்லூரில் இன்றைக்கு ஒரு அனல் மின் நிலையம் இருந்தது மூடப்பட்டிருக்கிறது. இதில் 300 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் மாதத்தில் ஒரு நாள் தான் பணியாற்று கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய் இந்த அனல் மின் நிலையத்தின் மூலம் மின் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதனால் நமக்கு அது வேண்டியது இல்லை என்கிற அளவிற்கு அதை மூடிவிட்டார்கள். அதை லாபகரமாக நடத்துவதற்கு வாய்ப்பு இருக்குமானால், இதைப்பற்றி வாரியம் மறுபரிசீலனைசெய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதை நடத்துவதால் பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ராஜஸ்தானிலிருந்து நிலக்கரி வர வேண்டிய அவசியம்

சாராரும் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த மூன்று சாராரும் கேட்பதில் நியாயம் இருந்தாலும்கூட நிலைமையை அனுசரித்து சில காரியங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. எனக்குத் தொழில் நடத்துவதற்கு பெரும் அளவுக்கு நிலம் கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக எனக்குத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ஊதியம் பெற்றுக்கொண்டு சத்தம் போடாமல் வேலை செய்ய உத்தரவாதம் தர வேண்டும், அதற்கு அடுத்தபடியாக வரி முதலியவற்றில் விலக்கு அளிக்க வேண்டும், அதற்கு அடுத்தபடியாக மின்சாரக் கட்டணம் அதிகம் வசூலிக்கக் கூடாது, குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிச் சிலர் உண்டு. இன்னொரு சாரார் விவசாயிகள் உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டும். நாங்கள் சாதாரண ஆட்கள், 100 அடி, 200 அடி என்று கீழேயிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமனாதன் குறிப்பிட்டது போல், அவர் மாவட்டத்தில் ஆண்டு தோறும் மேலும் மேலும் 50, 60 அடிக்குக் கீழே போய் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. தண்ணீரை எடுக்க மின்சார செலவு அதிகம் ஆகிறது, ஆகவே குறைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக பொதுமக்கள் இன்றைக்கு ரேடியோ போன்ற இவைகள் எல்லாம் தேவைப்படுகிறது. மின்சாரம் குறைந்த கட்டணத்தில் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் யாருக்குத் தாங்கும் என்று பார்க்க வேண்டும். உறுப்பினர்கள் திரு. வசந்தபை அவர்களும், எ. ஆர். தாமோதரன் அவர்
6-10 p.m. களும் குறிப்பிட்டார்கள். அதில் ஒரு சின்ன விஷயம் தான் சொல்லுகிறேன். இந்த மூன்று பிரிவில் தாங்கக்கூடியவர்கள் இன்றைக்கும்கூட தொழில் அதிபர்கள் தான். அவர்களுக்கு இருக்கக்கூடிய சலுகையை, இந்த நேரத்தின் நெருக்கடி காரணமாக, தேச பக்தியின் காரணமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். கொஞ்சம் விட்டுத்தர வேண்டுமென்று . . .

THIRU A. R. DAMODARAN: Sir, I may remind the hon. Member that if we increase the power tariff for industries, no industrialist is going to pay out of his pocket but the cost will be added on to the product and my hon. friend Thiru Arumugasami and I will have to pay it to-morrow.

**திரு. எம். ஆறுமுகசாமி**: தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவில் சேர்த்துத்தான் அவர்கள் லாபத்தைப் பெறுகிறார்கள். நானும் புரிந்துகொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: தலைவர் அவர்களே, விவாதம் நடை பெறுகிறதைப் பார்த்தால், தமிழ் நாட்டிலே தொழிற்சாலைகளுக்கெல்லாம் மின்சாரம் மிகக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகிறது என்ற கருத்து பரவலாகப் பேசப்பட்டது என்பதை அறிகிறேன். அது எங்கே ஆபத்தை உண்டாக்குமோ என்ற பயம் இருக்கிறது. காரணம், இந்திய நாட்டிலே தமிழ் நாட்டில் தான் தொழிற்சாலைகளுக்கு அதிகமாக மின்சாரக் கட்டணம் இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் சில தொழிற்சாலைகள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், குறைத்துக் கொடுத்து, நம்முடைய தொழிற்சாலைகள் அதிகமாகக் கொடுக்குமானால் நம்முடைய பொருள் அங்கே விற்பனையாகாது. அந்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் அரசாங்க அளவில்





பரிசீலித்து, குறைத்துக் கொடுக்கிறோம். உதாரணமாக காஸ்டிங் பிளான்ட் அரக்கோணத்தில் ஆரம்பிக்கிறோம். பவர் சார்ஜ் மெட்டீரியலாகப் போகிறது. அங்கே மின் வாரியம் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். இது தவறு என்று சொன்னால், எந்தத் தொழிற்சாலையும் வராது. பக்கத்து மாநிலத்துக்குப் போய்விடும். ஆகவே அப்படிப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி**: தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதன் நிமித்தமாவது சிறு விளக்கத்தைத் தொழில் அமைச்சர் அவர்கள் தந்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். பொதுவாக தொழிற்சாலை என்று சொன்னேன். எல்லாவற்றையும் சொல்லவில்லை. சென்ற ஆண்டும் பேசியிருக்கிறேன். மறுபடியும் நினைவுபடுத்தவேண்டியது இல்லையென்று கருதினேன். சில குறிப்பிட்ட தொழில்களுக்குச் சலுகை கொடுத்திருப்பதைத் தொடர்ந்து நீடிப்பது சரியா என்பதைத் தான் பொதுப்படையாகக் குறிப்பிட்டேன். பொதுவாக எந்தவிதமான சலுகையும் எல்லாவித தொழிற்சாலைகளுக்கும் கொடுக்கக்கூடாது என்ற பொருளில் சொல்லவில்லை. எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், மகாராஷ்டிராவைப் போல் நாம் இரண்டு பங்கு தர்மல் மின்னோட்டம் நீடித்துக் கொண்டிருப்பது ரொம்ப அவசியம்தான் என்பதைத் தான் குறிப்பிட்டேன். ஆகவே அதிகமாகப் போட வேண்டுமென்ற பொருளில் குறிப்பிடவில்லை. அடுத்தபடியாக, மின்சாரம் உபயோகிப்பதில் ஒரு சிறு சங்கடம் இருக்கிறது. நகர்புறங்களில் சில பகுதிகளில் குடியிருப்புப் பகுதிகளில் நாம் மின்சாரத்தை உபயோகித்து, சில காரியங்களைச் செய்ய முடியவில்லை. இந்த அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். "வளர்ச்சிப் பணிகள் மாநில மக்களைத் தொடுவதாக அமையவேண்டுமேயானால் மின்சாரமானது கிராம மக்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டியது மிக மிக அவசியமானதொன்றாகிறது. இந்த உண்மையை உணர்ந்த தமிழக அரசு முக்கியத்துவத்தை அளிக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களில் சிறு தொழில்கள் வளருவதற்கு விவசாயிகளுக்கு பம்பு செட்டுக்கு மின்சாரம் கொடுப்பது மட்டும் போதாது. அது கிராமங்கள் முன்னேறுவதற்கு மின்சாரம் கொடுத்ததாகிவிடாது. அதோடு கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, குறைந்தபட்சம் 2 ஹார்ஸ் பவர் வைத்துக் கொள்வதற்கு எந்த விதமான சங்கடமும் இல்லாமல் அவற்றினை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சில வீடுகளில் தண்ணீர் எடுக்க மோட்டார்கள் வைத்துக் கொள்ளுகிறார்கள். அதில் சங்கடம் இல்லை. அடுத்த வீட்டுக்காரரிடமிருந்து இடைஞ்சல் வருகிறது என்று புகார் வருவதில்லை. கிராமங்களில் கூட அனுமதிக்கிறோம். எல்லா இடங்களிலும் இப்படிச் செய்தால் சிறு தொழில்கள் வளருவதற்கு உதவிகரமாக இருக்கும். 10' × 10' அடி வீடுகளில் கூட மனைவி குடும்பவேலை நேரம் போக மீதி நேரத்தில் சில பொத்தான்கள் செய்யலாம். செய்கிறார்கள். குறைச்சலான பவர் கொடுத்தால் போதும். அதற்குச் சில சங்கடங்கள் இருக்கின்றன. வைத்துக்கொள்ள முடியவில்லை. இன்று இதனை தொழிற்சாலை இருக்கிற பகுதிக்குப் போய்ச் செய்ய வேண்டும். மாவரைக்கும் இயந்திரத்தை அம்பத்தூரில் தொழில் பேட்டையில் போட்டு லாபம் அடைய முடியாது. சந்தனம் அரைக்கிற இயந்திரத்தைத் திருவொற்றியூரில் போட்டு

மைலாப்பூரில் எப்படி மார்க்கட் செய்ய முடியும்? பொத்தானுக்காக தொழிற்சாலை கோயம்புத்தூரில் இருக்கிறது. அதையே சிறு தொழில் என்ற முறையில் பெண்கள் நிர்வாகிக்கும்படியான இயந்திரங்கள் வைத்து கார்க், பொத்தான் போன்றவைகளைச் செய்வதற்கு வசதியாக 2 ஹார்ஸ் பவர் அளவுக்கு, குறைந்த பட்சம் ஒரு மோட்டார் போட்டு, தொழில் செய்வதற்கு உள்ள தடைகளை 'பாட்டல்நெக்ஸ்' நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு அடுத்தபடியாக இந்த அறிக்கையில் ஒரு இடத்தில் மின்சாரக் கூடங்களைக் கையகப்படுத்துவதற்கான செலவு ரூ. 75 லட்சம் என்று காட்டப் பட்டிருக்கிறது. கையகப்படுத்துவதற்கான செலவு என்று சொன்னால் காம்பென்சேஷன் ஈட்டுத்தொகை என்று நினைக்கவில்லை. ஏனெனில் இவ்வாண்டு எந்தத் தொழிற்சாலையையும் கையகப்படுத்தியதாகத் தெரியவில்லை. அடுத்த ஆண்டு இந்தத் தொகை 1 கோடி என்று எதிர்பார்க்கிறார்கள். அக்குவிசிஷன் சார்ஜஸ் என்று போட்டிருக்கிறது இதில். மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் என்பதில் இந்த ஆண்டு 74.01 லட்சம், அடுத்த ஆண்டு 100 லட்சம் என்று போட்டிருக்கிறது. இந்த 100 லட்சத்தில் ஆர்பிட்டிரேஷன் போன்ற காரியங்களுக்குச் செலவிடும் தொகையும் சேர்ந்துள்ளது என்றால், ரொம்பவும் அதிகம் என்பது என் கருத்து. லிட்டிகேஷன், ஆர்பிட்டிரேஷன் இதுமாதிரிக் காரியங்களுக்கு ஒரு பெரும் தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறதோ என்று அச்சப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் தலையை அசைத்ததிலிருந்து அதில்லை, வேறு காரணம் இருக்கலாம் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, அந்தக் காரணத்தைக் கூறுவார்கள் என்று இதனை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன். அடுத்தபடி எல்லோரும் சொன்னார்கள். லைன் லாசஸ் என்று. சென்ற ஆண்டு 17.9 சதவிகிதம். இந்த ஆண்டு 3 சதவிகிதம் குறைந்திருக்கிறது. ஒரு பெரிய மாறுதல் தான். ஏனென்றால் 17.9 லிருந்து 17.6-க்குக் குறைந்திருக்கிறது. 0.1 என்றாலும் மாற்றம் தானே. அந்த வகையில் வரவேற்கிறேன் என்று சொன்னாலும் கூட இதுவும் அதிகம்தான். லைன் லாசல் என்று சொன்னால், இது எங்கே போகிறது என்று தெரியவில்லை. நான் தொழில் நிபுணன் அல்ல. மின்சாரம் என்பது கடைச் சரக்கு அல்ல. மின்சாரத்தைத் திருடுவது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சாமானை தூக்கிக்கொண்டு போக. மோட்டாரா, நகையா, திருடிக் கொண்டு போக. எப்படித் திருடு போகிறது என்று தொழில் நுணுக்க அறிவு இல்லாததால், என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. 2, 3 ஆண்டுகளாகவே திருட்டு போகிறது பற்றி மன்றத்தில் பேசப்பட்டதை நான் கேட்டு வருகிறேன்.

6-20 p.m. இது எப்படி திருட்டுப்போகிறது என்று புரியவில்லை. லைன் லாசல் என்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டதுபோல் ஒரு வேலை லீகேச் இன்னும் வேறுபல முறைகளில் இருக்கலாம் என்று தோன்றுகிறது. நீண்ட தூரம் கொண்டு போவதால் இந்த மின்சாரத்தினுடைய சக்தி குறைந்து அதன் காரணமாகவும் ஏற்படலாம் என்று சொல்லுகிறார்கள். நீண்ட தூரம் கொண்டு போவதைத் தடுப்பதற்கு வழி இருக்கிறதா என்று பார்த்தால், நமது நாட்டில் மாநிலங்களுக்குள்ளேயே அணைக்கட்டு, நதி நீர்ப் பங்கீடுத் தகராறுகள் இருக்கின்றன. பீஹார், சிங்கரேணி, ராஜஸ்தான் ஆகிய இடங்களிலிருந்தும் நிலக்கரி கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதுவும் ஒரு கடினமான



காரியம். இப்படிப்பட்ட நிலையில் நெய்வேலி லிக்னைட் பழுப்பு நிலக்கரியை உபயோகித்து, திருச்சியில் தெர்மல் ஸ்டேஷனை அமைத்து நாம் பயன் அடையலாம் என்று கருதுகிறேன். அதனால் இந்த லைன் லாசசும் குறையும் என்று கருதுகிறேன். நான் திருச்சிக்குப் பக்கத்தில் இருக்கிறவன் என்ற காரணத்தினால் கூறுகிறேன் என்று கருதிவிடக்கூடாது. என்னுடைய இந்தக் கருத்தை ஏறத்தாழ பிரதிபலிக்கும் முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல் சிக்கனமான செலவில் தெர்மல் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். திருச்சி ஒரு நல்ல இடம் என்று நினைக்கிறேன். அதைச் சுற்றி பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் தூத்துக்குடி வேண்டாமென்று சொல்லவில்லை. அங்கு 600 மெகாவாட் சக்தியுள்ள தெர்மல் ஸ்டேஷன் அமைக்க இருப்பதை நான் வரவேற்கிறேன். சேது சமுத்திரம் கால்வாயும் ஆழ்கடல் துறைமுகத்திட்டமும் நிறைவேறி, தூத்துக்குடி பெரிய துறைமுகமாக ஏற்படும் நிலையில் இது மிகவும் அவசியம். அதை நான் மறுக்கவில்லை. தென் மாவட்டங்களைச் சேர்ந்த தலைவர் கோபம் கொள்ளவேண்டாம். நான் சொல்வது திருச்சியில் ஸ்டேஷன் வைத்தால், இந்த லைன் லாசல் குறையும் என்பது தான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நெய்வேலியிலிருந்து தஞ்சாவூர் அருகாமையில் இருப்பதால், இதை தஞ்சாவூரிலேயே அமைக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் 33 மைல் தூரம் தான் உள்ளது. தஞ்சாவூருக்குச் செல்லும் பாதையில் பாதி தூரம் வரையில், அதாவது 15 மைல் வரையில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதேபோல் சேலம் பகுதியில் தொழிற்சாலைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இவை யாவுமே பெரிய தொழில் நகரங்களாக மாறி வருகின்றன. அதோடு கூட புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு உத்திரவாதமும் இதன் மூலமாகக் கொடுக்கமுடியும். நாங்கள் மைசூருக்குப் போய் விடுவோம் என்று சொல்லி பயமுறுத்தும் தொழில் அதிபர்களுக்குக் குறைந்த பட்சம் திருச்சிக்காவது விரும்பிய வளர்ச்சி அளிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். திருச்சியில் இப்படிப்பட்ட தெர்மல் ஸ்டேஷன் வைக்கும் யோசனையை மின்சார வாரியமும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் ஆலோசனையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்தில் வேலை செய்யும் பணியாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன், இந்த ஆண்டு எந்த விதமான கணக்கறும் இல்லை. நல்ல முறையில் சுமுகமாக எல்லாம் அமைந்திருப்பது போற்றத்தக்கது. ஏனெனில் சென்ற ஆண்டு ஊழியர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட தகராறு பற்றியே அவையில் உறுப்பினர்கள் பலரும் அதிகம் பேச நேரிட்டது. அதிலே யாருடைய வாதம் சரி, யாருடைய வாதம் தவறு என்று நான் இப்பொழுது இங்கே குறிப்பிட்டுப் பேச விரும்பவில்லை. அதிலே இந்த சங்கம், அந்த சங்கம் என்று பலவிதமான பிரச்சினைகள் வரும். பொதுவாக பேசி பிரச்னைகள் தீர்க்கப்பட்டது வரவேற்கத்தக்கது. பொதுவாக தொழிலாளர்களோடு சுமுக உறவு இருப்பதற்கு வழி செய்துகொண்டுவரும் நமது மின்சார வாரியத்தையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அதற்காக நான் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டை எப்படி எடுத்துப் பார்த்தாலும்,

[திரு. எம். ஆறுமுகசாமி] [9th December 1971

மின்சாரத் துறையில் மிகுந்த முன்னேற்றம் அடைந்துவருகிறது. அந்த முன்னேற்றம் எந்தக் காரணங்களினாலும் தடைபடாது, 1980-81-க்குள் நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள் அனைத்தையும் அந்த காலத்திற்குள் நிறைவேற்றி மேலும் அதன் மூலமாக முன்னேற்றம் காணுவோம் என்ற நம்பிக்கையை தெரிவித்து முடிக்கிறேன். தலைவர் அவர்களே, வணக்கம்.

*THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, I rise to add my words of tribute to the working of the Tamil Nadu Electricity Board which has been so well praised by the hon. Members who have spoken before me. It is a fine sight to see the villages electrified. The places that were steeped in darkness now have this external illumination. It is of a piece with the work the Government have been doing to spread education in the villages and to ensure internal illumination of the children that are born in those villages. Even as children have educational facilities which provide them internal light, I am happy that the street lights have been provided to all these villages and hamlets. So far as this is concerned, the Government can be very well proud of the fact that so many thousands of villages have been electrified thus far.

In this context, I only wish to make one appeal, Sir. I would like electricity to be made available to educational institutions for purely educational purposes at a concessional rate. These days education is not merely imparting class-room instruction. Very many appliances and apparatus involving the use of electricity have to be utilised to make education really attractive. So, for those gadgets to be used in schools, I would like electricity to be made available at a concessional rate.

I have one special appeal to make, Sir. That is with regard to the Rameswaram temple. The other day the Hon. Minister was there and representation was made that a facility that was available to the temples at Tiruchendur, Palni and Madurai was not available to the temple at Rameswaram. They are charged at 34 paise per unit, whereas these three famous and great temples at Tiruchendur, Palni and Madurai are charged only at the high tension tariff rate of 7 paise per unit. Rameswaram temple is a great temple. It serves an All-India purpose and it serves as a centre of national integration. It is very poorly lighted for all the 24 thousand rupees per annum which the temple is paying for electricity out of its resources. They want this concession, so that with the same amount of Rs. 24,000 they are spending today they could illuminate the temple properly. Thousands of pilgrims flock there. Unfortunately, the corridors are not well-lighted and many of the corners of the temple are steeped in physical darkness and with unsocial elements around there, unfortunate incidents also do happen. So, I would like this concession that has been extended to the three famous temples of Tamil Nadu to be extended to the equally great temple at Rameswaram, so that with the same amount they are spending now, they could illuminate the temple better and attract tourists and make them take with them very



9th December 1971] [Thiru M. Rajah Iyer]

pleasant memories of their visit to this famous pilgrim centre. That would serve the purpose of tourism, I mean of receiving a friend, receiving a pilgrim and sending him back with pleasant memories. Today the people that visit Rameswaram leave that place not with much flavour in them because of this unfortunate aspect of that big temple. I shall be happy if this is made possible in order to ensure this complement to illumination, not merely external illumination but internal illumination also.

I find even today in a number of places boys standing under the street lights and studying for their examinations. Such is the grinding poverty in very many homes. They cannot afford a light, a kerosene lamp in their houses and they come and stand under the street lights and study. I find on bright moonlit nights the street lights are switched off and the poor boys cannot study in the moon light. I would, therefore, like the Municipalities and the Panchayat Boards to keep the street lights burning till at least 10 p.m. in the night, whether moonlit night or new moon night, whatever it may be, so that the switching off of lights could be between 10 p.m. and 4 a.m., if, for no other purpose, at least to help these poor children study under the street lights, as we see happening in very many places. 6-30 p.m.

I am constrained to make just one reference about the financial position of our Tamil Nadu Electricity Board. While our achievements in the spreading of electricity and even the increase in our generating capacity, and in the maintenance and all that have been spectacular, I am afraid our financial position is not quite so laudable. I just made a comparative study of our financial position in 1969-70 and in 1970-71 and according to the figures given to us in 1969-70 out of about Rs. 55 crores, we could have a gross surplus of about Rs. 24 crores and with all that, no net surplus was possible. The same is the case in 1970-71. Though our revenue has gone up to nearly Rs. 67 crores, we are not able to make any net profit whatsoever. My hon. Friend was pointing out that it was all due to the fact that we do not have a Cost Accounting Expert in the Electricity Board. I find there is a very competent technical officer who is an ex-officio member as Accounts Officer there. I do not think it is due to the lack of counsel or accountants there. But there must be something intrinsic in the very working and the activities of the Electricity Board. But, what surprises me a little more than this is that whereas in 1969-70 with a lower revenue, we got a higher contribution to the Government—Rs. 9.68 crores as interest for loans to the Government account according to section 64, I believe, that is what they say, and whereas we made a contribution of 9 crores of rupees with an income of Rs. 55 crores in 1969-70, in 1970-71, with a higher income of Rs. 67 crores, the contribution to the Government was only Rs. 6.49 crores. It has fallen down by about Rs. 3 crores. So, I would like the Board to go into this question of gross profit and net profit we make available from out of the working of the Board.

அப்படி அவர்கள் ஏறி விபத்து ஏற்பட்டால், அந்த வேலைப் பொறுப்பு யாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டதோ அவரிடத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தர வேண்டும். இல்லாவிட்டால், ஹெல்பர்கள் கம்பங்களில் ஏறுமலிருக்கத் தகுந்த முறையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, சிறு தொழில்களை ஆரம்பிக்கக் கூடியவர்கள், ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று நினைத்தால், மின்சார மோட்டார் இன்னும் தேவையான இயந்திர சாதனங்களை நிறுவிக்கொண்டு தான் மின்சார இலாகாவுக்கு மனுப் போட வேண்டும். இப்படிச் செய்த பிறகு மின்சார இலாகா அதிகாரிகள் இந்த இடம் சரியில்லை. இந்த கரண்டு இங்கே கிடைக்காது. இவ்வளவு ரூபாய் செலவாகும் என்றெல்லாம் அதிகாரிகள் பின்னுலே தான் அறிவிக்கிருர்கள்.

தொழில் துவங்குவதற்கு முன்பே அதிகாரிகள் இந்த விவரங்களை எல்லாம் தெரிவித்துவிட்டால், வீண் கால தாமதம் ஏற்படாது. சிறு தொழில்களை ஆரம்பிக்கிறவர்களும் குறுகிய காலத்தில் அதன் பலனை பெறுவார்கள். இதை நான் என் சொந்த அனுபவத்திலிருந்து கூறுகிறேன். என்னுடைய உறவினர் ஒருவர் ஒரு சிறு தொழில் ஆரம்பிக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். எல்லாம் செய்து விட்ட பிறகு மின்சாரத் துறை அதிகாரிகள் 3 பேஸ் கரண்டு இங்கே கிடையாது, அதைக் கொண்டுவர வேண்டுமென்ருல், 1,500 ரூபாய் செலவாகும் என்று சொன்ருர்கள்.

6-40 p.m. அப்படிப்பட்ட நிலைமை வரும்போது, 2,000, 3,000 ரூபாய் போட்டு சிறு தொழில் ஆரம்பிக்கலாம் என்று நினைத்து ஏற்பாடுகளைச் செய்தவர்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். திடீரென்று இப்படி அதிகமாகப் பணம் கட்ட வேண்டுமென்று சொன்ருல் அவர்கள் நிலை குலைந்து போய் விடுகிருர்கள். சிறு தொழிலுக்கு இடம் தகுதியாக இருக்கிறதா என்று முன் கூட்டியே அதிகாரிகள் தெரிவித்தால், சிறு தொழில்களை ஆரம்பிக்கிறவர்களுக்கு வசதியாக இருக்கும். இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மாதிரியான சில நல்ல முறைகளைக் கடைப்பிடித்தால் தமிழகம் தொழில் துறையில் வளர்ச்சி அடையும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு மதுரை மாநகராட்சியில் பூமிக்குள் கேபிள்களைப் புதைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

Mr. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4-00 p.m. tomorrow.

The House then adjourned.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Friday, the 10th December 1971.*

The House met in the Council Chamber, Fort St. George, at four of the Clock, Mr. CHAIRMAN (The Hon. Thiru C. P. CHITRARASU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

Mr. CHAIRMAN : Questions 124, 125 and 126 are postponed.

### *Provident Fund Amount*

* 127 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of aided School Teachers who have not been paid either their Provident Fund amount or pension even after two years of retirement; and

(*b*) the reasons for the delay?

### வருங்கால வைப்பு நிதித் தொகை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எத்தனை பேருக்கு அவர்கள் ஓய்வு பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பும் வருங்கால வைப்பு நிதித் தொகையோ, ஓய்வூதியமோ அளிக்கப்படவில்லை ?

(இ) கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) பிராவிடெண்ட் நிதி 23. ஓய்வூதியம் 54.

(இ) தாமதத்திற்கு காரணங்கள், ஆசிரியர்கள் பணிபுரிந்த விபரங்கள் முழுவதும் தரப்படாமை, மருத்துவச் சான்றிதழ்கள் தராமை, அக்கவுண்டண்ட் ஜெனரல் காரியாலயத்தில் பரிசீலனையில் இருந்து வருதல் ஆகியவை போன்றதாகும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இரண்டாண்டுகளுக்குப் பிறகும் ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு அவர்களுக்கு இந்த வருங்கால வைப்பு நிதியோ ஓய்வு ஊதியமோ அளிக்கப்படவில்லை. அதன் காரணமாக அவர்கள் சிரமப்படுகிருர்கள் என்பதை மனதில் கொண்டு அதை வழங்குவதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

பஞ்சாலைத் தொழிலாளர்களும், பரவலாக இதர தொழிற்கூடங்களில் பணி
யாற்றும் தொழிலாளர்களும் வாரத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே வேலை
செய்வார்கள். அவர்களுக்கு ஊதியம் குறைந்து போகும் நிலை இருந்தது.
அத்தகைய நிலைமை எல்லாம் இன்றையதினம் மாற்றப்பட்டு, வாரத்தில் முழு
மையாகப் பணியாற்றுகின்ற, எல்லா நாட்களிலும் சிறப்பாகப் பணியாற்றுகின்ற
வாய்ப்பை நம்முடைய மின் வாரியம் தந்திருக்கிறது. அதற்காக தமிழ் நாட்டி
லிருக்கின்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் சார்பாக நமது மின் வாரி
யத்திற்கும் அதன் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கும்
நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் அமைச்சர் அவர்கள்
தந்திருக்கின்ற அறிக்கையில்—கோவை, நீலகிரி ஆகிய இரண்டு மாவட்டங்
களுக்கும் எனக்கு பங்கிருக்கின்ற காரணத்தால்—கடந்த ஆறு மாதங்களுக்கு
முன்னால் நீலகிரி மாவட்டம் மின்சார இணைப்பில் பூர்த்தி பெறுகின்ற விழா
நடைபெற்றது. கடந்த ஆண்டு இதே நிதி நிலை அறிக்கையின்போது நீலகிரி
மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் பலவிடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்
படாமலிருந்தது. அதை நான் வலியுறுத்திச் சொன்னேன். இன்றையதினம்
அந்த நீலகிரி மாவட்டம் முழுமைக்கும் மின் வசதி தரப்பட்டிருப்பதற்காக
நீலகிரி மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பம்ப்செட் இணைப்பைப் பொறுத்த வரையில், நம்முடைய
மின் வாரியம் தந்திருக்கின்ற அறிக்கையின்படி, இது வரையில் 5,30,000-க்கு
மேற்பட்ட மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இதில் இன்றைய
நம்முடைய அரசு அமைந்ததற்குப் பிறகு, இரண்டரை லட்சம் பம்ப்செட்டு
களுக்கு மேல் மின் இணைப்பு தந்திருக்கிறது. இந்திய நாட்டிலே மற்ற மாநிலங்
களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், மின் இணைப்புப் பெற்ற பம்ப்செட்டுகளின்
மூலமாக விவசாயம் செய்வதில் முன்னணியில் இருக்கின்ற பஞ்சாப் மாநிலத்
திலும் சரி, மைசூர் மாநிலத்திலும் சரி, கேரள மாநிலத்திலும் சரி, எவ்வளவு
கொடுத்திருக்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால், பஞ்சாப் மாநிலத்தில்
ஏறத்தாழ 1½ இலட்சம் பம்ப்செட்டுகளுக்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது.
மைசூர் மாநிலத்திலும் கேரளத்திலும் ஒரு இலட்சத்திற்கு மேல் கொடுக்கப்
பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் தான் 5,30,000 பம்ப்செட்டுகளுக்கு
மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கூறுகின்ற நேரத்தில் இந்த
அரசினுடைய பசுமைப் புரட்சித் திட்டத்தின் நோக்கத்தையும் நாம்
பாராட்டாமலிருக்க முடியாது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

இப்போது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்ற அந்த விவரங்களையெல்லாம்
5-50 p.m. கூர்ந்து பார்த்தால், தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தி செய்வதற்கான சாத்யக்
கூறுகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைத் தேடிக் கண்டுபிடித்து எல்லா
வாய்ப்புகளையும் நமது வாரியம் நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறது என்று
சொன்னால், அது மிகையாகாது.

5-50 p.m. பாண்டியாறு புன்னம்புழா புனல் திட்டம்பற்றி இந்த அறிக்கையில் குறிப்
பிடப்பட்டிருக்கிறது. அதில் நமக்கும் கேரள அரசுக்கும் பேச்சு வார்த்தையில்
ஏற்பட்டுள்ள சிக்கலின் காரணத்தால், அந்த வேலை தடைப்பட்டிருக்கிறது.



பேச்சு வார்த்தை ஒழுங்காக நடந்து அந்தத் திட்டம் நிறைவேறினால், 100
மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் விவசாயத்துக்காகப் பயன்
படுத்தும் மின்சாரத்துக்கு உரிய கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று
சொன்னார்கள். இந்த விவசாயிகளுக்கு அதிகப்படியான கட்டணம் விதிக்கப்
படுகிறது என்று சொல்லி மிகப் பெரிய சிக்கல் உருவானது கோவை
மாவட்டத்தில்தான். அந்தக் கோவை மாவட்டத்தின் சார்பில் நான் ஒன்றைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக அவனாசி, பல்லடம், கோயம்
புத்தூர் தாலுகாக்களில் விவசாயிகள் 2 பம்ப்செட்டுகள், 3 பம்ப்செட்டுகளைப்
பயன்படுத்தி 150 அடி, 200 அடி ஆழத்திலிருந்து தண்ணீர் கொண்டு
வருகின்றனர். இந்த 3 பம்ப்செட்டுகளும் வேலை செய்வதற்கு $3 \times 9 = 27$ பைசா
செலவாகிறது. பாண்டியாறு புன்னம்புழா திட்டம் அல்லது நெல்லித்துறைத்
திட்டம் நிறைவேற்றி அதன் மூலம் அதிகத் தண்ணீர் வசதி கிடைக்குமானால்,
ஒரு யூனிட்டுக்கு 20 பைசா கொடுப்பதற்கும் கோவை மாவட்ட மக்கள்
தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நான் இன்னொன்றை இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். சுருளியாறு திட்டம், பரலியாறு திட்டம், குந்தா
புனல் மின் திட்டம் போன்றவைகள் விரைந்து செயல்பட்டு வருகின்றன என்று
அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அதேபோல
நெய்வேலியிலும், எண்ணூரிலும், கல்பாக்கத்திலும் எவ்வளவு வாய்ப்புகள்
இருக்கின்றனவோ அவ்வளவு வாய்ப்புகளையும் பயன்படுத்தி, இந்த நாட்டைத்
தொழில் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, எல்லா வகையிலும்
தமிழ் நாடு நிறைவு பெற வேண்டும் என்று முயற்சி எடுக்கும் இந்த அரசை
நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பல குறைகளைச் சொன்னார்கள்.
சில இடங்களில் விளக்கு எரியவில்லை, சில இடங்களில் 15 நாட்களுக்குள் பல்பு
கள் அணைந்து விடுகின்றன என்று சொன்னார்கள். மிகப் பெரிய பொறுப்பை
நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அங்கும் இங்குமாகச் சில குறைபாடுகள்
இருந்தாலும், ஒட்டு மொத்தமாக கடந்த 3, 4 ஆண்டுக் காலத்துக்குள் இந்த
மின் வாரியம் எடுத்திருக்கின்ற முயற்சிகளைத் தொகுத்துப் பார்த்தால், குறை
பாடுகள் என்பது மிகச் சிறிய அளவு தான் இருக்கும் என்பதை இந்த
நேரத்தில் குறிப்பிடாமலிருக்க முடியாது.

கோவை மாவட்டத்தில் குறிப்பாக கோபி, சத்யமங்கலம், தாளவாடி போன்ற
மலைப்பகுதிகளில் நம் மின் வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்கள் 3, 4 குடிசைகள்
உள்ள மலைப்பகுதிகளில் கூட 2,000 அடி, 5,000 அடி உயரமுள்ள மலைக் குன்று
களில் கம்பங்கள் நட்டிட தங்களுடைய உயிரையும் திரணமாக மதித்து விளக்கு
களுக்கு ஒளி தர வேண்டும் என்று பாடுபட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட
சீரிய முயற்சியில் ஏதோ சில குறைபாடுகள் இருக்கலாம். 1972-க்குள் இந்த
நாடு முழுவதும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த வாரியம் எடுத்
திருக்கும் முயற்சியை நான் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[Thiru M. Rajah Iyer] [9th December 1971

I will just make one reference more and I have done. I had very great difficulty in encashing about Rs. 28,000 worth of Electricity Board Bonds gifted to the Ramanathapuram College Fund as public contribution. Whereas the other Government bonds could be sold, it was a mighty job and it took me about $2\frac{1}{2}$ years actually to encash Rs. 28,000 worth of Electricity Board bonds and even then I could do it only at Rs. 92 per hundred, incurring a loss of Rs. 8 per hundred, because, unfortunately, they are $4\frac{3}{4}$ per cent 1975 bonds and not a purchaser could be found for love or money. Even after the bonds were made over, there were objections. Not all objections are raised simultaneously. First the objection raised is that the 'i' has not been dotted. After the objection was answered, again an objection is raised that 't' has not been crossed. I would like all the objections, whatever objections there are, be, as a matter of policy, raised at one and the same time so that it can facilitate easy encashment. But what I am now referring to is the difficulty in the way your encashment of Electricity Board Bonds. With great difficulty I could dump the bonds on a bank which had opened its Branch at Ramanathapuram and which went about collecting deposits. I said to them: 'If your bank is to become popular in this place, you must take over these Rs. 28,000 worth of Electricity Board bonds at the market rate of Rs. 92 per hundred'. So, they took it over from us for about Rs. 25,000 and odd with very great difficulty. I want this sort of difficulty which is found only in the encashment of the Electricity Board Bonds to be removed so that buyers may be enthused to invest in Electricity Board bonds. We are going on with Rural Electrification Scheme. We are approaching people and issuing bonds for about 3.75 crores at $7\frac{1}{2}$ per cent of interest. I am sure the rate of interest is attractive and that itself would certainly enthuse. But if we are to make the people respond quite favourably to invest in Electricity Board Bonds, this sort of bottlenecks should be removed in encashing or in negotiating the Electricity Board Bonds. Thank you, Sir.

* திரு. எம். அய்யாசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது ஓரிரண்டு வார்த்தைகளைக் கூறி நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன். அகில இந்தியாவிலேயே தமிழகம் மின்சாரத் துறையில் இரண்டாவதாக முன்னேற்றம் பெற்றிருக்கிறது என்பது இன்று நேற்று அல்ல, பத்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே நிர்மாணிக்கப்பட்டதொன்று. முதலாவது இடத்தை பாகிஸ்தான் பிரிந்துபோவதற்கு முன்னால் இருந்த பஞ்சாப் மாநிலம் பெற்றிருந்தது. அதற்குப் பிறகு தமிழகம் தான் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கின்றது என்று பல ஆண்டுகளுக்கு முன்னிருந்து கூறப்பட்டு வருகிறது. இன்று மட்டும் தமிழகம் மின்சாரத் துறையில் முன்னேற்றம் பெற்றுவிட்டது என்று மற்றவர்கள் கருதும்படி பேசுவதில் நண்பர்களுக்கு ஆசை இருக்குமானால், அதிலே குறுக்கிட நான் விரும்பவில்லை. ஆனால் அந்த மின்சாரத் துறை வளர்ச்சிக்கு தமிழகத்தில் மின்சாரத்தை நல்ல விதமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் அடிப்படை ஏற்பாடுகளெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே செய்யப்பட்டிருக்கிறது என்று சென்ற தடவையே நான் சொல்லியிருக்கிறேன். அதையே மீண்டும் கூறிக்



9th December 1971] [திரு. எம். அய்யாசாமி]

கொண்டிருக்க விரும்பவில்லை. நான் இரண்டொரு முக்கியமான விஷயங்களை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மின்சாரத் துறையினருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை நகரம் இப்பொழுது மாநகராட்சியாக ஆகியிருக்கிறது. மக்கள் தொகை மேலும் மேலும் பெருகிக்கொண்டே இருக்கிறது. போக்குவரத்து மிக அதிகமாகிக்கொண்டு வருகிறது. சென்னையைப் போல் அல்லாமல் மதுரை மாநகர ரஸ்தாக்கள் எல்லாம் மிகக் குறுகிய அளவில் இருக்கின்றன. ஆனால் அந்த நகரத்தில் மின்சாரக் கம்பிகள் தெருக்களில் ஏராளமாக குறுக்கும் நெடுக்குமாக இருந்துகொண்டிருக்கின்றன. மதுரை மாநகரத்தில் முக்கியமான பல உற்சவங்கள் அவ்வப்போது நடந்துகொண்டு வருகின்றன. மீனாட்சி அம்மன் கோவில், பெருமாள் கோவில், கிருஷ்ணன் கோவில் இவைகளிலே எல்லாம் ஆண்டுக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை தேரோட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதே போல் முகையதின் ஆண்டவர் பள்ளிவாசல் இருக்கிறது. அதில் உருது ஆண்டுதோறும் நடைபெறுகிறது. சந்தனக் கூண்டு சுற்றிவருகிறது. இப்படிப்பட்ட நேரங்களிலே மின்சாரத் துறை ஊழியர்களுக்கு மிக சிரமம் ஏற்படுகிறது. குறுக்கும் நெடுக்குமாகப் போகும் ஒயர்களை அவர்கள் கழட்டிவிட்டு பிறகு அமைக்கும் தொல்லை ஏற்படுகிறது. அந்த வசதியைச் செய்துகொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. சந்தனக் கூண்டு வேறு பல உற்சவங்கள் வருகிற நேரத்தில் இது போன்ற கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன் விழாக்கள் குறைவாக இருந்த காலத்தில் இந்த நிலைமை சரியாக இருந்தது.

இப்போது வீடு தவறாமல் மின்சாரம் போடும் நிலைமை வந்து விட்டது. அதிலும் பல தொழில்களுக்கு ஒரே கம்பியில் 10, 20 ஒயர்கள் இணைக்கப்பட்டு தெருவில் குறுக்கும் நெடுக்குமாக மதுரையில் எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. ஆகவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் வேண்டிக் கொள்ளுவது என்னவென்றால், சென்னை நகரில் உள்ளது போல, மதுரை நகரிலும் பூமிக்கு அடியில் கேபிள்களைக் கொண்டு செல்ல வேண்டும். இந்த நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, மின்சார வாரியத்தின் அதிகாரிகளின் கவனத்துக்கு ஒரு விஷயத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஹெல்பர்கள் என்று பலர் மின்வாரியத்தில் வேலை செய்கிறார்கள். அவர்கள் கம்பங்களில் ஏறக் கூடாது. கம்பங்களில் ஏறி வேலை செய்கிறவர்களுக்கு அவர்கள் உதவியாளர்களாக இருப்பார்கள். உயர் அதிகாரிகளாக இருக்கிற சிலர் இந்த ஹெல்பர்களைக் கம்பங்களின் மேல் ஏறி வேலை செய்யச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏதாவது விபத்துகள் ஏற்பட்டால் அவர்களுக்கு எந்தவித நஷ்ட ஈடும் கிடைக்க வழியில்லை. இந்த மாதிரி விபத்துகளில் சிக்கியவர்கள் மேலிடத்துக்குத் தெரிவிக்கவும் உரிமையில்லாமல் இருக்கிறார்கள். அப்படிச் கேட்டாலும் கம்பங்களில் ஏற உனக்கு உரிமை இல்லையே, நீ ஏன் ஏறினாய் என்று மேலதிகாரிகள் கேட்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் ஹெல்பர்களை மேலே ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிச்சயமாக அவர்களை மேலே ஏறுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்குத் தருகிற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட சிலருக்கு அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்திலிருந்து சில சான்றிதழ்கள் கேட்ட காரணத்தால், அவற்றை ஆசிரியர்களிடமிருந்து வாங்கித் தரவேண்டியிருக்கிறது. ஓய்வு பெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பே அவர்களுடைய கணக்குகள் சரி செய்யப்பட வசதி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. குறிப்பட்ட நிகழ்வுகளில் அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசிலிருந்து விவரங்கள் கேட்கப்பட்டதால், இந்தக் காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கலாம். அவை கிடைத்தவுடன் விரைவுபடுத்த ஏற்பாடு செய்யலாம்.

திரு. எம். ராஜா அய்யர்: 1—6—1970-க்கு முன்னால் 58 வயது பூர்த்தியாகியவர்களுக்கு புது விதப்படி ஓய்வூதியமும் பணிக்கொடையும் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும் அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசில் பழைய நிலைப்படியே விண்ணப்பிக்க வேண்டுமென்று கோருகிறார்கள். இந்த அரசு ஆணை ஏ.ஜி. ஆபீசுக்கு அனுப்பப்பட்டதா? குறிப்பாக இந்தப் பணிக்கொடை எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஓய்வூதியமும் சம்பளத்தில் 3/8 பகுதி போடவில்லை. முன்பு இருந்த நிலையில்தான் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏ.ஜி. ஆபீசிலிருந்து எழுத்து மூலமாக மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. 1-6-1970-க்குப் பிறகு புதிய விகிதப்படி ஓய்வூதியமும் பணிக்கொடையும் கொடுக்கும் ஆணை அவர்களுக்கு அனுப்பப்பட்டு அவை கிடைக்க அரசாங்கம் வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினர் கூறிய விவரக் குறிப்புகள் இல்லை. அவர்கள் கூறியபடி, இப்போது வகுத்திருக்கிற விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

## *Enrolment of Pupils*

* 128 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that instructions were issued by the Director of School Education to the heads of high schools that enrolment of fifty pupils per section is a necessity for appointment of an additional teacher; and

(*b*) if so, the details thereof?

## மாணக்கர்கள் சேர்த்தல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கூடுதலான ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்கு ஒவ்வொரு பிரிவிலும் 50 மாணக்கர்கள் சேர்க்கப்பட வேண்டியது அவசியம் என்று உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இப்போது பள்ளிகளில் வகுப்பறைக்கு உள்ள நெருக்கடியைப் போக்க ஒரு வழி ஷிப்ட் முறையிலே பள்ளிகளை நடத்துவதுதான் என்பது எல்லோரும் அறிந்தது. அமைச்சர் அவர்களும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இதைப்பற்றி எங்கும் பேசிக் கொண்டு வருகிறார்கள். அந்த ஷிப்டு முறை அடுத்த ஆண்டிலிருந்தாவது துவக்கப்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இட நெருக்கடியைக் குறைத்து வசதியாக நடத்துவதற்கு ஷிப்டு முறை ஏற்றதாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றிக் கல்வித்துறை ஆராய்ந்து வருகிறது. எல்லா இடங்களிலும் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. இட நெருக்கடி உள்ள இடங்களில் அடுத்த ஆண்டிலிருந்து நெருக்கடி இல்லாமல் செய்ய வேண்டுமென்று கல்வித் துறை இயக்குனருக்குக் கூறப்பட்டிருக்கிறது.

## *Nationalised Text Books*

* 129 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the total cost including overheads spent by the Government for printing Nationalised Text Books for the academic years 1968–69 and 1969-70;

(*b*) the amount for which they were sold each year; and

(*c*) the profit and loss account, if any?

## அரசுப் பாடப் புத்தகங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968-69, 1969-70 கல்வியாண்டுகளுக்கான அரசுப் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு அரசு நிர்வாகச் செலவு உட்பட ஆன மொத்தச் செலவு எவ்வளவு?

(இ) ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு தொகைக்கு அவை விற்பனை ஆகியது?

(உ) ஆதாயம்-விரயம் இருந்தால் அது எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) 1968–69-ம் ஆண்டில் ரூ. 21.68 லட்சமும் 1969-70-ல் ரூ. 28.05 லட்சமும்.

(இ) 1968-69-ம் ஆண்டில் ரூ. 28-01 லட்சமும்.

1969–70-ல் ரூ. 25.56 லட்சமும்.

(உ) ஓரளவு லாபம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இறுதிக் கணக்குகள் இன்னும் வகுக்கப்படவில்லை.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, இப்போது அரசாங்கத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகிற பாடப் புத்தகங்கள் தனிப்பட்டவர்கள் புத்தகங் களை விட விலை அதிகமாக, அரை ரூபாய் ஒரு ரூபாய் அளவிற்குக் கூடுதலாக, இருப்பதாகப் புகார் வந்திருக்கிறதே, அது அரசிற்குத் தெரியுமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* விலை அதிகம் என்று சொல்ல முடியாது. நானே பார்த்திருக்கிறேன். தனியார் வெளியிடும் புத்தகங்களை விட விலைகள் மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. அடக்க விலைக்கு அதிக லாபமில்லாத வகையில் விற்கப்படுகின்றன. வெளியே இரண்டேமுக்கால், மூன்று ரூபாய் விற்கும் புத்தகங்கள் ஒன்ரை ரூபாய், ஒன்றே முக்கால் ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. ஓரளவுக்கு லாபம் என்று கொஞ்சம் வந்தா லும், அதைக்கொண்டு கவர்ச்சிகரமான அட்டைகளைப் புத்தகங்களுக்கு இடவும் மற்றவைகளுக்கும் அது பயன்படுகிறது. மாணவர்களின் உள்ளங்களைக் கவரு கிற வகையில் வண்ணங்களில் மிருகங்க்ள், மற்றக் காட்சிகள் போட்டு, புத்த கங்களை வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*திரு. எம். ராஜா அய்யர் :* தலைவர் அவர்களே, இந்தப் புத்தக வியாபாரத் தின் மூலமாகக் கிடைக்கிற மொத்த லாபத்தைக் கல்வியின் தரத்தை உயர்த்த வும், ஆசிரியர் நலனைப் பாதுகாக்கவும் பயன்படுத்த திட்டம் இருக்கிறதா ? அதை அரசு எப்படிப் பயன்படுத்தப்போகிறது ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அதைப்பற்றி இப்போது யோசனையில்லை. இதில் வருகிற லாபத்தை அந்தப் புத்தக வெளியீட்டுத் துறையை விரிவுபடுத்தவும் செம்மைப்படுத்தவும் வெளியிடுவதை சீர்படுத்தவும் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

*திரு. கே. எஸ். அப்துல் வகாப் :* அரசாங்கச் சார்பில் வெளியிடும் புத்த கங்களின் மூலமாகக் கிடைக்கும் லாபத்தைக்கொண்டு ஏழைக் குழந்தை களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் கொடுப்பதற்கு வழி செய்யப்படும் என்று முந்தைய கல்வி அமைச்சர் சொன்னார்கள். அப்படி ஏதாவது திட்டம் இருக் கிறதா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* இப்போதே எல்லாவற்றையும் இலவசமாகத் தருகிற முறையில் இல்லை. கட்டுபடியாகிற விலையில் விற்கிறோம். 1968-69-ல் ஏழைச் சிறுவர்களுக்கு பள்ளி இயக்குனர் ரூ. 3,48,000-05 விலை பெறுமான புத்தகங்களை வழங்கியிருக்கிறார்கள். 1969–70-ல் ரூ. 3,26,027.85 பெறுமான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

*திரு. கே. ராஜாராம் :* தலைவர் அவர்களே, பாடப் புத்தகங்களை அரசாங்க மேதான் வெளியிடும் என்று கொள்கை ரீதியில் முடிவு செய்யப்பட்டபிறகு லாபத்தைப்பற்றிச் சிந்திப்பதால் எவ்வளவு வேண்டுமானாலும் விலையை அதிகமாக ஏற்றிக்கொண்டே போகும்படியான மனப்பான்மை ஏற்பட்டு விடும். ஆகையால் லாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் விற்கின்ற கொள்கையைக் கடைப்பிடித்து என்ன அடக்கமாகிறதோ அந்த விலைக்கு மாணவர்களுக்குக் கொடுக்கும்படி செய்தால் நல்லதல்லவா ?





*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அடக்க விலைக்குத் தரலாம். ஆனால் அந்தத் துறையின் வளர்ச்சி மற்றவைகளைச் செய்ய வேண்டுமென்றால், ஓரளவுக்கு லாபம் வரத்தான் வேண்டும். லாபம் என்றால், தனியார் பெறுகிற அளவுக்கு அபரிமிதமான லாபமாக அது இருக்காது. அப்படியிருந்தால் அந்தக் குழுவினர் அதை ஆராய்ந்து வெளியிடும் சூழ்நிலை ஏற்படும்.

*திரு. சா. கணேசன் :* புத்தகங்களை அச்சடிப்பதற்கு அல்லது வெளியிடு வதற்கு ஏற்ற செலவுகளை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது புத்தக அச்சுக்கூலி, காகிதக் கிரயம் மட்டுமா ? வெளியிடுவதற்கான நிர்வாகம், அதிலுள்ள அலுவலர்கள் அவர்களுடைய ஊதியம் அனைத்தும் சேர்ந்ததா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அச்சுக்கூலி, பிற செலவுகள் என்ற வகையில்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் நிர்வாகச் செலவு கள், இதற்காக அமைக்கப்பட்டிருக்கிற டெக்ஸ்ட் புக் சொசைடி டைரக்டர் மற்றவகைச் செலவுகள் இணைந்ததா என்பதற்கு, தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

*திரு. சா. கணேசன் :* ஆகவே அந்தச் செலவுகள் சேர்க்கப்படாமல் அச்சுக்கூலி, காகிதக் கிரயம் ஆகியவை மட்டும் கொண்டு பார்க்கும்போதுதான் ஏதோ 4,000 அல்லது 10 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைப்பதைப் போல இருக் கிறது. அதையும்சேர்த்துக் கணக்கிட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறியபடி 'நோ பிராபிட் நோ லாஸ்' லாப நட்டம் இல்லாது சரிக்கட்டுகிற நிலையில் இதைச் சமன் செய்வதற்கு அரசு வழிவகை வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* முதலில் கூறியபடி, கணக்கு கள் இன்னும் வகுக்கப்படவில்லை. தோராயமாகச் சொல்லப்பட்டதுதான். லாப நட்டம் இல்லாத வகையில் விற்க முடிவெடுப்பதில் சிரமம் இருக்காது. ஆனால் அப்படிச் செய்யாததற்குக் காரணம், வெளியிடும் புத்தகங்கள் அழகான முறையில் இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. இந்தத் துறையை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று முயற்சியிருக்கிறது. லாபம் என்பது 2 சத வீதம் அல்லது 3 சத வீதம் அளவில்தான் இருக்குமே தவிர, வெளியார் விற்பதைப் போன்று அபரிமிதமாக இருக்காது. அவ்வப்போது டெக்ஸ்ட் புக் சொசைடி கூடிக் கலந்து ஆலோசிக்கும்போது இக்கருத்து மனதில் கொள்ளப் படுமென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### *Government Rajah's College, Thiruvaiyaru*

*130 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether the students of the Government Rajah's College, Thiruvaiyaru went on a strike during the month of March 1970; and

(*b*) if so, the reasons therefor?

[10th December 1971

Statistics in Arts Colleges where Ancillary Statistics is taught; and

(*b*) if so, the action taken thereon?

**புள்ளி விவர உதவிப் பேராசிரியர்கள், சிற்றாசிரியர்கள்**

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரியும் புள்ளி விவர உதவிப் பேராசிரியர்கள், சிற்றாசிரியர்கள் ஆகியோரிடமிருந்து, புள்ளி விவரம் துணைப் பாடமாகக் கற்பிக்கப்படும் கலைக்கல்லூரிகளில் உள்ள கணித உதவிப் பேராசிரியர்கள் புள்ளி விவர உதவிப் பேராசிரியர்கள் பதவிகளாக மாற்றம் செய்யுமாறு வேண்டி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) ஆம்.

(இ) கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் எவ்வளவு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பதை பல்கலைக்கழகமே முடிவு செய்கிறது. இப்போதுள்ள இந்த முறையை மாற்றும் செயற்குறிப்பு ஏதும் கல்லூரிக் கல்வித் துறையில் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, in Arts Colleges where Statistics is an ancillary subject, only Assistant Professors in Mathematics are being appointed for the posts. They do not seem to be qualified to take classes in Statistics. When there are Assistant Professors in Statistics competent to take the classes in that subject, may I know the reason why they are appointed only in Medical Colleges and not in Arts Colleges?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அதைக் கூட பல்கலைக்கழகம் தான் குறிப்பிட வேண்டும். கணக்கு எடுப்பவர்கள்தான் புள்ளிவிவரம் பற்றிய வகுப்புகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இரண்டையும் எடுக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். அதில் ஒரு உதவிப் பேராசிரியர் பொறுப்பை புள்ளியியல் நடத்துகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தும் பல்கலைக்கழகத்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். அவர்கள் ஏற்றுக் கொண்டால், அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யலாம். இப்போது அரசாங்கத்தின் செயல்குறிப்பில் இப்படிப்பட்ட முறை எதுவும் இல்லை.

### *House Rent Allowance and Medical Facilities*

* 134 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether the House Rent Allowance and Medical Facilities granted to teachers in Aided-Institutions in the Budget for 1970–71 have been extended to Teachers in aided Colleges in the State; and

(*b*) if not, the reasons therefor?



10th December 1971]

**வீட்டு வாடகைப்படியும், மருத்துவச் சலுகைகளும்**

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970-71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், மானியம் பெறும் நிறுவனங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும், மருத்துவச் சலுகைகளும், இம் மாநிலத்திலுள்ள மானியம் பெறும் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தனியார் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கும்படி 1971 ஏப்ரலில் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர்களுக்கு இலவச மருத்துவ வசதி கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்கிறது.

### *Students' Strike*

* 135 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) the number of colleges closed by students' strike during the year 1970; and

(*b*) the period and reason for which such closures were made in the individual colleges?

**மாணவர் வகுப்புகளுக்குச் செல்லாமை**

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டில் மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்லாமலிருந்தமையால் மூடப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை யாது ?

(இ) தனித்தனிக் கல்லூரிகள் அவ்வாறு எவ்வளவு கால அளவுக்கு மூடப்பட்டன ? அதற்குக் காரணம் என்ன ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) 131.

(இ) கல்லூரிகள் 1 முதல் 94 நாட்கள் வரை பயிற்றுமொழி, கல்லூரிகளில் வசதிகள் பெருக்குவது, மாணவர்களிடையே பூசல்கள் முதலிய காரணங்களை முன்னிட்டு மூடப்பட்டன.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிகளில் நடைபெறுகிற பெரும்பாலான வேலை நிறுத்தங்களுக்கு அரசியல்வாதிகளுடைய தலையீடு தான் காரணமாக இருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அரசியல்வாதிகள் தலையீட்டைத் தடுப்பதற்கு சட்டசபைக் கட்சித் தலைவர்களை ஒன்றுகூட்டி அவர்கள் கல்லூரிகளில் நுழைந்து கேடுகள் விளைவிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பெரும்பாலான கிளர்ச்சிக்கு ஆங்காங்கு மாணவர்களுடைய பூசல்கள், பல வசதிகள் கல்லூரிகளில் இல்லாத தன்மை, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படுகிற மனவேற்றுமைகள், சில இடங்களில் ஆசிரியர்களுக்குள்ளேயே தகராறுகள் ஏற்பட்டு அவர்களை இரண்டு சாராராகப் பிரித்து நடத்துவது போன்றவைகள்தான் காரணமாக இருக்கின்றன. நடைபெறுகின்ற தகராறுகள் அத்தனைக்கும் அரசியல்வாதிகள்தான் காரணமாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஓரளவுக்கு அரசியல் உணர்வுகள் காரணமாக இருக்கின்றன என்று சொல்லலாம். அரசியல் தலைவர்கள் வெளியே இருந்து கொண்டு தூண்டிவிடுகிறார்கள் என்று சொல்ல முடியாது. மாணவர்களிடத்திலும் கட்சி அடிப்படையில் அரசியல் உணர்வுகள் ஏற்படுகின்றன, கட்சி மாச்சரியங்கள் உண்டாகிவிடுகின்றன. அவை ஏற்படாதவாறு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். எந்தப் பிரச்சினை இருந்தாலும் முதலிலேயே கவனிக்கலாம். ஓரளவுக்கு அவகாசம் கொடுத்து ஆராய்ந்து அவற்றின் தன்மைகளை அறிந்து முடிவெடுத்தால், வேலைநிறுத்தம் வராது. சில இடங்களில் எதற்காக எப்போது வேலைநிறுத்தம் ஆரம்பிக்கிறது என்றே மாணவர்களில் பலருக்குத் தெரியாத வகையில் அவர்கள் பள்ளிக்கு, கல்லூரிக்கு வந்தபிறகு தான் அன்று வேலை நிறுத்தம் என்று அறிகிறார்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அவை இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்கள் மூலமாகவே அரசாங்கத்திடமோ, அதிகாரிகளிடமோ பேசி தீர்வு காணலாம். பொதுவாக டிசம்பர் மாதம் வந்தால், அப்போது அரை ஆண்டுத் தேர்வு இருப்பதால் இந்நிகழ்ச்சிகள் பரவலாக வருவதுண்டு. அதன் மூலம் கல்லூரிகள் மூடப்பட்டு பொங்கலுக்குப் பிறகு திறக்கும். மாணவர்கள் இதை தேவையில்லாத பரிட்சை என்று கருதுகிறார்கள். முன்பெல்லாம் செலக்ஷன் என்றே தேர்வு வைத்து, அதில் தேர்ந்தெடுத்தால், முழுப் பரிட்சை எழுதலாம் என்ற நிலை இருந்தது. அதற்காகப் படித்தார்கள். இப்போது இது தேவையில்லாதது என்று நினைத்து இந்த அரையாண்டுத் தேர்வையும் கழிக்கின்ற வகையில் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். சில கல்லூரிகள் மீண்டும் திறந்ததும், அந்தப் பரிட்சையை மறுபடியும் வைத்து எப்படியும் அந்தப் பயிற்சியைத் தந்துவிடுகிறார்கள். ஆகையால் இந்த வேலை நிறுத்தங்களைத் தடுக்கத்தக்க சூழ்நிலையை உருவாக்க என்ன செய்யலாம் என்று கல்லூரி முதல்வர்களைக் கொண்டு பல்வேறு கூட்டங்கள் நடத்தி முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எல்லோருடைய ஒத்துழைப்பும் அரசியல்வாதிகள் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் இருந்தால் அமைதியான சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, has any action been taken against any student during the year 1970 as a result of his having committed some mistake during the strike?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு இல்லை. பொதுவாக சிலபல இடங்களில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி தேசியக் கல்லூரியில் இதற்குக் காரணமாக இருந்தவர்களை டி. சி. கொடுத்து அனுப்பிவிட்டார்கள். திருவையாறு கல்லூரியில் மூன்று பேர்மீது நடவடிக்கை எடுத்து கல்லூரியை விட்டு வெளி





யேற்றுகிற சூழ்நிலை ஏற்பட்டு விடுதியில் இருக்கக் கூடாதென்றும் அனுப்பப்பட்டது. அதில் காரணம் கூறாமல் வெளியேற்றியதாக உயர் நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். பொதுவான முறையில் அவர்கள் செய்தது தவறு என்பதை ஒப்புக்கொண்டாலும், சட்டத்தின் அடிப்படையில் காரணம் காட்டவில்லை என்பதைக்கொண்டு அவரை மீண்டும் சேர்க்க வேண்டுமென்று நீதிமன்றம் கூறியதால் அவர் சேர்க்கப்பட்டார். திருப்பத்தூர் கல்லூரியில் நடவடிக்கை எடுத்து வெளியே அனுப்பியிருக்கிறார்கள். அதன் பிறகு அவர்களே வந்து மன்னிப்பு கேட்கிற அளவில் மன்னிப்பு அருளப்பெற்று சேர்த்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. அதுபற்றிய முழுக் குறிப்புகள் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** கல்லூரிகளில் மாணவர்கள் கழகத் தேர்தல்கள் எல்லாம் அரசியல் அடிப்படையில்தான் நடைபெறுகின்றன. மாணவர்கள் மகாநாடு என்று கூட்டி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் வந்து பேசுகிறார்கள். இதன் காரணமாக அரசியல் அடிப்படையான கிளர்ச்சிகள் கல்லூரிகளில் நடக்கின்றன. ஆகையால் கல்லூரிகளில் அரசியல்வாதிகள் தலையிடுவதை அமைச்சர் அவர்கள் தடுக்க முயல்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி முயற்சித்தாலும் எந்த அளவிற்குப் பயன்படுமென்று தெரியவில்லை. பொதுவாக ஒரு "கோட் ஆப் காண்டக்ட்" ஏற்படுத்தி, அந்த முறையில் வந்தால் தான் முடியும். ஒருகாலத்தில் அரசியல் உணர்வுகள் குறிப்பிட்டவர்களிடம் பரவி குறிப்பிட்ட இடத்தில் ஈடுபடும் நிலைமை இருந்தது. இப்பொழுது பரவலாக அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதைத் தக்க முறையில் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் வேறு பல மாநிலங்கள், நாடுகளைப் பார்க்கும்போது தமிழகம் எவ்வளவோ நல்லமுறையில் இருப்பதாகச் சொன்னாலும், இது போதாது. பரம்பரையாகக் காப்பாற்றப்படுகிற பண்பாடு தமிழகத்தில் இருந்துவருகிறது என்று பெருமைகொள்ளலாம். அத்துடன் திருப்தியடைகிறோம் என்று சொல்வதற்கில்லை. இன்னும் நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் பல இருக்கின்றன.

*Government (Board) High School, Kamuthi*

* 136 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether any teachers serving in the Government (Board) High School, Kamuthi (Ramanathapuram District) have been served with notices of termination of service consequent on the transfer of the school to the Pasumpon Muthuramalinga Thevar Trust;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps, if any, the Government propose to take to retain them in Government service?

[10th December 1971

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி, கமுதி

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ராமநாதபுரம் மாவட்டம் கமுதியிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றப்பட்டதன் விளைவாக அதில் பணிபுரிந்த ஆசிரியர்கள் எவருக்கேனும் பணி நீக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அவர்களை அரசுப் பணியில் நிறுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு கருதியிருப்பின், அது யாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். ஒரு பொறியியல் கற்பவர் ஒரு ஜூனியர் மெக்கானிக் வர்த்தகம் கற்பிப்பவர், ஆகியோருக்கு பணியிலிருந்து நீக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

(உ) இவர்கள் புதிய நிர்வாகத்தில் பணியில் அமர்த்தப்பட்டு விட்டதால் இவர்களை அரசுப் பணியில் வைத்துக்கொள்ளும் பிரச்சினைக்கு இப்போது இடமில்லை.

*Hotels Association*

* 137 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :—

(*a*) whether the representatives of the Madras Provincial Hotels Association and the Madras City Hotels Association met him on 24th July 1971; and

(*b*) if so, the details therefor?

ஹோட்டல்கள் சங்கம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநில ஹோட்டல்கள் சங்கம், சென்னை மாநகரிலுள்ள ஹோட்டல்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் 1971 ஜூலை 24-ஆம் நாளன்று மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தனரா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (*a*) Yes.

(*b*) The Association made a request for exempting the transactions of hotels from Sales Tax. The request has been rejected.

*Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Evicition) Act, 1961.*

* 138 *Q.*—THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIGAR (KUNRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the number of



10th December 1971]

cases registered district-wise in Tamil Nadu during 1970–71, under the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961?

1961-ஆம் ஆண்டு குடியிருப்பு வெளியேற்றப் பாதுகாப்புச் சட்டம்

தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

1961-ஆம் ஆண்டு குடியிருப்பு வெளியேற்றப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் [The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961] தமிழ் நாட்டில் 1970-71-ல் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மாவட்டவாரியாக எத்தனை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மற்ற மாவட்டங்களில் வழக்கு ஒன்றும் பதிவாகவில்லை.

தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அந்த வழக்குகளில் பைசல் செய்யப்பட்டிருப்பவை எத்தனை ? பைசல் ஆகாமல் இருப்பவை எத்தனை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வழக்கு எதுவும் பைசல் ஆனதாக நினைக்கவில்லை.

*Appointment of Teachers*

*S.N.* 4. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Director of Collegiate Education has recently issued an order on the appointment as Teachers of persons holding degrees from Universities outside the State;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether the order has an intention to bar degree holders of other Universities from employment in Government Colleges in the State?

ஆசிரியர்கள் நியமனம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளி மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமிப்பது குறித்து ஆணை ஒன்றை கல்லூரிக் கல்வி இயக்குநர் அண்மையில் வெளியிட்டுள்ளார் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இம்மாநிலத்திலுள்ள அரசுக் கல்லூரிகளில் பிற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் நியமனம் செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தை இந்த ஆணை கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சற்று விரிவான முறையில் விளக்கம் தர விரும்புகிறேன்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் வெளி மாநில பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளை இம்மாநிலக் கல்லூரிகளில் வேலைக்கு அமர்த்துவது பற்றி சுற்றறிக்கை ஏதும் அனுப்பவில்லை. அவ்வாறு சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாக பத்திரிகைகளில் வந்த புகாருக்கு அரசு 23—11—1971 அன்று மறுப்பு தெரிவித்து செய்தி அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. வெளி மாநிலப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களை இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் வேலைக்கு அமர்த்தக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. பத்திரிகைகளில் வந்த தவறான கருத்து Tutors and Demonstrators ஆகிய பதவிகளுக்கு B.A., B.Sc. போன்ற பட்டங்களுக்குப் பதிலாக M.A., M.Sc. போன்ற பட்டதாரிகளை அமர்த்தவேண்டும் என கல்லூரிக் கல்வி இயக்குநர் வெளியிட்ட சுற்றறிக்கை மீது எழுந்ததாகத் தோன்றுகிறது. அச்சுற்றறிக்கையில் பழைய பணி முறை விதியில் உள்ள சென்னை அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழக B.A., B.Sc. பட்டதாரிகள் என்பதற்குப் பதிலாக, புதிதாக தோன்றிய மதுரைப் பல்கலைக் கழகத்தையும் சேர்த்து இனிமேல் சென்னை, அண்ணாமலை அல்லது மதுரைப் பல்கலைக்கழக M.A. அல்லது M.Sc. பட்டதாரிகள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மாநில ஊழியத்திற்கான பொதுவிதியில், வெளிமாநில பல்கலைக் கழகங்கள் அளித்த, தமிழ்நாடு பல்கலைக்கழகப் பட்டங்களுக்கு ஈடான பட்டங்கள் இம்மாநிலத்தில் மாநில அரசு வேலைகளுக்கு ஏற்கத்தக்கவை என்ற விதி அப்படியே உள்ளது. இதில் ஏதும் மாற்றம் இல்லை. ஏடு திருத்துவோர் (Tutor) செய்முறை விளக்குனர் (Demonstrator) போன்ற பதவிகளுக்கு B.A., B.Sc. போன்ற பட்டங்களுக்குப் பதில் M.A., M.Sc. போன்ற பட்டங்கள் வேண்டும் என்ற விதிகூட ஏற்கனவே வேலையில் அமர்த்தப்பட்டவர்களைப் பாதிக்காது. புதிதாக வேலைக்குச் சேர்பவர்களுக்குத்தான் அவ்விதி பொருந்தும்.

அத்துடன் 5—7—1967 அன்று சென்னை பல்கலைக்கழகம் கல்லூரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், தனியே, கல்லூரிகளில் சேராமல் படித்துப் பெற்ற பட்ட மேற்படிப்புக்கான சான்று பெற்றவர்கள் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் ஆசிரியர் வேலைக்குத் தகுதியற்றவர்கள் எனக் கூறியுள்ளது. இவ்விதி சென்னை பல்கலைக்கழகத்தின் கீழ்வரும் கல்லூரிகளில் மட்டும் அமுல் செய்யப்பட்டு, மதுரைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளில் அமுல் செய்யப்படாமல் உள்ளது. ஒரேவித பட்டப்படிப்பு இம்மாநிலத்தில் உள்ள இரண்டு பல்கலைக்கழகத்தால் வேறு வேறு விதமாக மதிக்கப்படாமல் ஒரு கல்லூரியில் அப் படிப்புள்ள ஆசிரியருக்கு மானியம் வழங்கும் அரசு, இன்னொரு கல்லூரியில் அதே தகுதியுடைய மற்றொரு ஆசிரியருக்கு மானியம் மறுக்க வேண்டியுள்ளது. ஆகவே மதுரைப் பல்கலைக்கழகத்தின் கவனத்திற்கு சென்னைப் பல்கலைக்கழகம் விதித்துள்ள நிபந்தனை கொண்டுவரப்பட்டது. வெளியில் இருந்து பட்டமேற்படிப்பு படிப்பவர்கள் பெரும்பாலும் வெளி மாநிலக் கல்லூரிகளில் பட்டம் பெறுவதால் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் விதிப்படி இம்மாநிலத்தில் கல்லூரிகளில் ஆசிரியர் வேலைக்குத் தகுதியற்றவர்



களாகிறார்கள். இவ்விதி 1967 முதல் உள்ளது. இது பல்கலைக்கழகம் விதித்துள்ள நிபந்தனை. அத்துடன் இம்மாநிலத்தில் ஆசிரியர்கள் வெளியிலிருந்து படித்துக்கொண்டே இம்மாநிலப் பல்கலைக்கழகங்களில் மேற்பட்டப் படிப்பு பெற முடியும். அப்படி இம்மாநிலப் பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்ற மேற்பட்டச் சான்றுகளும் இவ்விதி பொருந்தும். ஆகவே வெளிமாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு தடை செய்வதாக கூறுவது தவறு.

THIRU G. SWAMINATHAN: Sir, while thanking the Hon. Minister for the explanation given in the matter, I would like to know whether grants payable to private Colleges for 1970-71 have been cut or withheld where there are graduates who have obtained degrees from Universities outside Tamil Nadu. In certain private colleges, because of the circular the staff members who have graduated from outside Universities have been appointed only temporarily and have not been made permanent. In their cases, promotions have also been withheld because of the circular. Will the Government send a circular to all the Colleges so that the mistaken view could be rectified?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுதான் விளக்கப்பட்டிருக்கிறது. சுற்றறிக்கையில் எந்தத் தவறும் ஏற்படவில்லை. ஏற்கனவே சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்று இருந்தது. இப்போது மதுரை என்பதையும் கூட்டியுள்ளோம். இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகமும் என்று நினைக்க முடியாது. இப்போதுள்ள விதியின்படி இந்தப் பல்கலைக் கழகத்தால் சமமாக மதிக்கப்படுகிற வேறு பல்கலைக் கழகத்தில் அதே தகுதி பெறுகிறார்களா என்றால் அப்படிப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குத் தடையில்லை. டியூட்டர்களுக்கு, டெமான்ஸ்டேட்டர்களுக்கு பி.ஏ., பி.எஸ்.சி. வேடாமென்று எம்.ஏ., எம்.எஸ்சி.-களை எடுக்கலாம் என்று மாற்றப்பட்டிருக்கிறது பல்கலைக் கழக மாணவர்களில் எம்.ஏ., எம்.எஸ்.சி. பட்டம் பெற்று வருகிறவர்களுக்கு எந்தத் தடையும் கிடையாது. ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள் தற்காலிகமாக இருந்தால், தற்காலிகம் என்ற அளவில் போட்டிருக்கலாம். நிரந்தரமாக்கும் நிலைமை வரும்போது, நிரந்தரமாக்கப்படும். அதனால் பாதகம் ஏற்படாது என்பதை இதன் மூலமாக உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, may I know if the same policy is going to be followed so far as the recruitment of teachers to the Government Colleges is also concerned?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன்பு கடைப்பிடிக்கப்பட்ட அதே விதிமுறைகள்தான் இப்போதும் கடைப்பிடிக்கப் படுகின்றன. ஏற்கனவே சாதாரணமாக 10எ(1) என்ற அளவில் தற்காலிகமாக ஆசிரியர்களை நியமித்து, பிறகு சர்வீஸ் கமிஷனுக்குப் போய், அவர்கள் தேர்ந்தெடுத்த பிறகுதான் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். இப்போது ஏராளமானவர்கள் அவ்வேலைக்கு வருவதால் அவர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டு செயல்படுகிறது. மூன்று வேலைக்கு 300 பேர்கள் வருகிறார்கள்.

கேட்டு வாங்கியதாக சொல்வார்களானால், நடவடிக்கை எடுக்கலாம். நன்கொடையாகப் பெற்றதாக வாங்கிக்கொண்டு நன்கொடைச் சீட்டும் தந்திருக்கிறார்கள். அவர்களே தாமாக வந்து நன்கொடை தந்ததாகச் சொல்கிறார்கள். நன்கொடை என்றால், அதைத் தடுக்க முடியாது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று பல்கலைக் கழகத்திற்குக் குறிப்புகள் அனுப்பி கேட்டிருக்கிறது அரசு. பல்கலைக் கழகத்தின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. பல்கலைக் கழகத்தோடு கலந்து பேசி ஏதாவது முடிவெடுத்து இதைத் தடுத்து நிறுத்த என்ன செய்யலாம் என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. டி. கே. சுப்பையா: அப்படிப் பெறுகிற கல்லூரிகள் எவை என்று கேட்கப்பட்டது. அதற்கு சில கல்லூரிகள் என்று மட்டும் அமைச்சர் சொன்னார்கள். பெயர்களைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவற்றின் பெயர்களைச் சொன்னால், அவை போக மற்றக் கல்லூரிகள் நல்லவை என்ற கருத்தும் வந்துவிடும். நமக்கு வந்துள்ள தகவல்களில் பல கல்லூரிகள் விடுபட்டிருக்கலாம். அவையும் நல்ல பெயர் எடுத்துவிடக் கூடுமென்பதால் 'சில' என்றேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: கல்லூரிகளில் இடம் பெற முயற்சித்து பெறமுடியாதவர்களிடமிருந்துதான் அநேகமாக இப்படி நன்கொடை கேட்கிறார்கள் என்ற புகார் வருமென்று நினைக்கிறேன். இடம் கிடைத்தவர்கள் சொல்லமாட்டார்கள். இதைத் தடுப்பதற்கு ஒரே வழி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசினர் கலைக் கல்லூரி, பயிற்சிக் கல்லூரி தோற்றுவித்து நேரடியாகக் கண்காணிக்கும் முறையில்தான் இவற்றைச் செய்ய முடியும். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆங்காங்கு அரசினர் கல்லூரியை அமைப்பது இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் வசதிகளைப் பெருக்குவதற்கும் பயன்படும். சென்னையைப் பொறுத்த வரையில், இரண்டு அரசினர் கல்லூரிகள் இருந்தும், இங்கே சில கல்லூரிகளில் இம்முறையில் ஈடுபடுகிறார்கள். அதற்குக் காரணம் மாணவர்கள் சில குறிப்பிட்ட கல்லூரிகளில்தான் சேர வேண்டுமென்று விரும்புவதுதான். எந்த அளவுக்கு ஒரே கல்லூரியில் குவிகிறார்களோ அந்த அளவுக்கு அந்த மார்க்கெட்டில் விலை ஏறுகிறது. அதிகமான மாணவர்கள் விரும்பும் கல்லூரிகளில் அதிக ரேட்டு வாங்குகிறார்கள். மற்றவை குறைவாக உள்ளன. இதைத் தடுக்க பல்கலைக் கழகத்தோடு கலந்து முடிவெடுக்க வேண்டுமென்று ஒரு குறிப்பை அரசு அனுப்பியிருக்கிறது. விரைவில் பதில் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. டி. கே. சுப்பையா: மாணவர்களைச் சேர்ப்பதற்காக நன்கொடை வாங்கும் போது கட்டிடம் கட்டுவதற்காகவும் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகவும் வசூலிக்க அரசின் அனுமதி கிடைக்குமா! சரியான கணக்கு முதலியவை வைத்திருந்தால், அதை அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வாங்குகிற அத்தனை பேரும் அப்படித் தான் சொல்லி வாங்குகிறார்கள். கல்லூரிக்கு கட்டிடத்திற்காகவும் மற்றவைகளுக்காகவும் என்று தான் வாங்கியிருக்கிறார்கள்.





### *Professor in Tamil*

* 132 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that in a number of Government Colleges there are no posts of Professors in Tamil; and

(b) if so, the names of such colleges and the reasons therefor?

### தமிழ்ப் பேராசிரியர்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பல அரசுக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர் பதவிகள் ஏதும் இல்லையென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய கல்லூரிகளின் பெயர்கள் யாவை? அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு. திரு. இரா. நெடுஞ்செழியன்: எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். தமிழைப் பி.ஏ. வகுப்பில் சிறப்புப்பாடமாகப் பயிற்றுவிக்கும் கல்லூரிகளிலும், நான்கு உதவிப் பேராசிரியர்களுக்கு மேல் பணியாற்றும் கல்லூரிகளிலும் மட்டுமே பேராசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்பது பல்கலைக்கழகத்தின் விதிமுறை இந்த விதிமுறைக்குட்பட்ட எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ்ப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே. பல கல்லூரிகளில் ஆங்கிலப் பேராசிரியர்கள் இருக்கும்போது, தமிழ்ப் பேராசிரியர்கள் நியமிக்கப்படாமல் உதவிப் பேராசிரியர்களே போதும் என்று வைத்திருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படித்தான் இப்போதைய பல்கலைக் கழக விதியிருக்கிறது. பி.ஏ. யில் சிறப்புப்பாடம் தமிழாக இருக்கும் இடங்களில் தமிழ்ப் பேராசிரியர்களை வைத்துக்கொள்ளலாம். நான்கு உதவிப் பேராசிரியர்கள் இருக்கும் இடத்தில் பேராசிரியரைப் போடலாம் என்று விதியிருக்கிறது. அதன்படி நியமிக்கிறார்கள். இவ்விதிக்கு உட்பட்டு வராத கல்லூரிகளில் அப்படியில்லை. ஆங்கிலப் பேராசிரியர்களைப் பொறுத்த வரையில், எந்த அடிப்படையில் நியமிக்கிறார்கள் என்ற குறிப்பில்லை. பல்கலைக் கழக விதிப்படிதான் அரசு நடைமுறைப்படுத்த முடியும்.

### *Assistant Professors and Tutors in Statistics*

* 133 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:—

(a) whether any representation has been received by the Government from the Assistant Professors and Tutors in Statistics working in Medical Colleges for conversion of posts of Assistant Professors in Mathematics into that of Assistant Professor of

[10th December 1971

எப்படியிருந்தாலும் முதலில் 10எ(1) என்ற அளவில் போடப்பட்டு பிறகு, சர்விஸ் கமிஷனுக்குப் போய் தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்குப் பிறகு நிரந்தர மாக்கப்படுவார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, what I wanted to know was whether in the Government Colleges, persons who have taken their degrees from the other Universities would be employed or would not be considered for employment?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தால் ஏற்கப்படுகிற மற்ற பல்கலைக்கழகங்களின் பட்டங்கள் மதிக்கப்படும். இந்த மாநிலத்தில் பிறந்து வளர்ந்து வேறு மாநிலங்களுக்குச் சென்று அங்கே படித்து பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மறுக்கப்படுவதில்லை, ஏற்கப்படுகிறார் கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, if that is not the case, how will the Government be able to implement their policy of having Tamil as medium of education in our Government Colleges? If they are going to employ teachers who have taken their degrees from other Universities, those people will not be able to teach in Tamil in such Colleges. How will the Government appoint such people in Government Colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த வகையிலும் தமிழ் தெரிந் திருக்கிறவர்கள் என்று முதலில் சொன்னேன். இங்கே எஸ்.எஸ்.எல்.சி. வரை யில் படித்தவர்கள் இருக்கிறார்கள். பி.யு.சி. வரை படித்தவர்கள் இருக்கிறார்கள். பிறகு வெளியே சென்று பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெறுகிறார்கள். அதில் பிற மாநிலத்தை, பிற பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பட்டங்கள் இருக்கலாம். ஆகவே என்னென்ன விதிகள் பொருந்த வேண்டுமோ அவை இருந்தால் மறுக் கப்படமாட்டார்கள்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, if knowledge of Tamil is insisted upon before recruiting teachers to Government Colleges, and if not, whether the Government will consider the desirability of putting this condition because Government Colleges have to teach in Tamil medium?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போதே அரசினர் கல்லூரி களைப் பொறுத்த வரையில், தமிழ் பயிற்சி மொழியாக இருப்பதால், தமிழ் அறிந்திருக்க வேண்டுமென்பது நியதியாக இருக்கிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]



10th December 1971]

II. STATEMENT UNDER RULE 82 BY THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN *re* TAXATION MEASURES IN VIEW OF THE EMERGENCY.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Education and Local Administration will now make a statement under Rule 82 of the Council Rules.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இன்று நமது நாட்டை எதிர் நோக்கி நிற்கும் நெருக்கடி நிலையில், நாம் எடுக்கவேண்டிய சில நடவடிக்கை களுக்கான அமைச்சரவையின் முடிவுகளை இம் மன்றத்தின்முன் வைக்க விழை கிறேன்.

2. இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் நம் மீது ஏற்றப்பட்டுள்ள சுமையை ஏற்க, நாடு முழுவதும் ஒருங்கிணைந்து உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு பல்வேறு மாநிலங்களும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என மத்திய அரசு நமக்கு வேண்டுகோள் விடுத்து பல யோசனை களைக் கூறியது. அவை—திரைப்படக் கட்டண உயர்வு, குதிரைப் பந்தய நுழைவுக் கட்டண உயர்வு, குதிரைப் பந்தய வரி உயர்வு, வாகன வரி உயர்வு, பரிசுச் சீட்டின் மீது மேல் வரி, பேருந்துக் கட்டண உயர்வு முதலியவை களாகும்.

3. இன்றுள்ள சூழ்நிலையில் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திட்டத்திற் காகக் கிட்ட இருக்கும் உதவித் தொகை குறைந்துவிடக்கூடுமோ என்ற ஐயமும், அதன் விளைவாக நமது மாநிலத்தின் குறைந்த அளவுத் திட்டப் பணியும் பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது. இந் நிலையில், ஏற்றதொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நம்மாலான கூடுதல் நிதி வசதிகளை இயன்ற அளவு நாமே திரட்டும் முயற்சியில் ஈடுபட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. புறத்தே இருக்கின்ற பகைவர்களுடன் போரிடும் நேரத்தில், நாட்டின் அகத்தே பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளை நிறை வேற்றி செயல்படுத்தத் தக்க நிதி வசதிகளைத் திரட்டும் பணியும், செலவினங் களிலே இயன்ற அளவு சிக்கன முயற்சிகளை மேற்கொள்ளும் பணியும் முக்கியத் துவம் பெறுகின்றன. இவ்வாறு, மத்திய அரசின் முயற்சிக்கு ஆதரவாகவும், நமது திட்டங்களைத் தடங்கலின்றி செயல்படுத்தவும் நிதி திரட்டும் முயற்சிகள் சிலவற்றையும், சிக்கன நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு முடிவு செய் துள்ளது.

4. இதற்கிணங்க, 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயல்படுத்தும் வகையில் கீழ்க்காணும் நிதி திரட்டும் முயற்சிகளை மேற் கொள்ள முடிவு செய்துள்ளோம் :—

(i) ஒரு ரூபாயும் அதற்குக் குறைவாகவும் உள்ள திரைப்பட நுழைவுச் சீட்டுகள் மீது 5 பைசாவும், அதற்கு மேலுள்ள நுழைவுச் சீட்டு களுக்கு 10 பைசாவும் கூடுதல் மேல்வரி விதிக்கப்படும்.

(ii) 5 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் உள்ள குதிரைப் பந்தய நுழைவுச் சீட்டுகள் மீது 50 பைசாவும், அதற்கு மேற்பட்ட நுழைவுச்சீட்டுகள் மீது ஒரு ரூபாயும் கூடுதல் மேல் வரி விதிக்கப்படும்.

### அரசு ராஜா கல்லூரி, திருவையாறு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவையாறு, அரசு ராஜா கல்லூரி மாணவர்கள் 1970 மார்ச் திங்களில் கல்லூரிக்குச் செல்ல மறுத்தனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்லூரி மாணவர்கள் அக்கல்லூரியின் அப்போதைய முதல்வரை வேலைநீக்கம் செய்யும்படி கோரினர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்த முதல்வர் மீது விசாரணை நடத்தப்பட்டதா? அப்படியானால் அதன் முடிவென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல்வர் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார். இன்னும் விசாரணை முடிவாகவில்லை. விசாரணை முடிந்த பிறகுதான் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த வேலை நிறுத்தம் 1970 மார்ச் மாதம் நடந்தது. கிட்டத்தட்ட இரண்டாண்டுகள் ஆகின்றன. ஒரு கல்லூரி முதல்வர் மீது ஏற்பட்ட விசாரணை இரண்டாண்டு காலமாக முடியாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கால தாமதத்திற்குக் காரணம் தெரியவில்லை. ஆனால் அவர் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது என்றும் தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் இதுபற்றி நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

திரு. டி. கே. சுப்பையா : அந்த முதல்வரை நீக்க வேண்டுமென்பதற்கு என்ன காரணங்கள் கூறப்பட்டன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாணவர்கள் எல்லாம் சேர்ந்து அவர் மீது பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். மாணவர்களை நடத்துகிற முறை, மாணவர்களுடன் பேசுகிற வகை தரக்குறைவாக இருப்பதாயும், மாணவிகளிடத்தில் சரிவர நடந்துகொள்ளவில்லை என்றும், மாணவர்கள் விடுதியில் அறையை வைத்துக்கொண்டு அவர் இருக்கிற அறையைத் தாண்டித்தான் செல்லவேண்டியிருப்பதாகவும், இதுபோன்ற குறைகளைச் சொல்லி அவரை நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். தக்க நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி கூறியதற்கிணங்க விசாரணை நடத்தி தற்காலிகமாக அந்த முதல்வரை நிறுத்தி வைத்து பொறுப்பான முதல்வரை நியமித்து சுமுகமான நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, குற்றம் இருக்கலாம். அந்தக் குற்றம் பெரிய குற்றமாகக் கூட இருக்கலாம். ஆனாலும் ஒரு முதல்வர் மீது இரண்டு ஆண்டுக் காலமாக விசாரணை நடத்தி முடிவு காணாமலேயே இன்னும் அவரை வேலைக்கு வைத்துக்கொள்ளவோ அல்லது வேலையிலிருந்து நீக்கவோ செய்யாமல் சஸ்பென்ஷனிலேயே வைத்திருப்பது கல்வித் துறைக்கே பொருத்தமாக, பெருமையாக இல்லை என்பதை உணர்ந்து விரைவில் இதற்கு ஒரு முடிவு கட்ட அரசு முயற்சிக்குமா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் திருவையாறு கல்லூரி அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருப்பதில்லை. சத்திரம் நிர்வாகத்தைச் சேர்ந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள்தான் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட விசாரணைகளில் காலதாமதம் ஏற்பட வேண்டிய அவசியமில்லை என்பதை அரசு உணருகிறது. விரைவில் விசாரணை முடிந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

### *Donations for Admission of Students*

* 131 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that certain private colleges in the State have collected donations for admission;

(*b*) the names of such colleges; and

(*c*) whether there is any proposal with the Government to stop collection of such donations?

### மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள நன்கொடைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள சில தனியார் கல்லூரிகள் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள நன்கொடைகள் வசூலித்துள்ளன என்பது உண்மையா?

(இ) அத்தகைய கல்லூரிகளின் பெயர்கள் யாவை?

(உ) இவ்வாறு நன்கொடைகள் வசூலிப்பதை நிறுத்த அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சில கல்லூரிகள் அவற்றில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

(உ) இப்பிரச்னையை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. வி. தங்கபாண்டியன் : தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், ஆசிரியர் பயிற்சி தனியார் பள்ளிகளிலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு நன்கொடை என்ற பெயரில் ஏராளமான பணம் பெறுகிறார்கள் என்ற புகார் அரசிற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சில கல்லூரிகளைப் பொறுத்தும் சில பள்ளிகளைப் பொறுத்தும் புகார்கள் வந்திருக்கின்றன. புகார்கள் விசாரிக்கும் அளவிற்கு முறையீடாக இருந்தால், தங்களை வற்புறுத்தி கொடு என்று

அவர்களும் மின்சாரத்தின் மீது போடுகிற வரியை ' 'சப்சிடி' போல் கொடுத்து விட்டால் நல்லது என்று கூறினார்கள். வாரியத்தின் 'பாலன்ஸ் ஷீட்' நிதிநிலை அறிக்கையை தனிப்பட்ட முறையில் ஒரு வியாபாரம் நடத்துகிறவன் என்ற அடிப்படையில் லாப-நஷ்டக்கணக்கு பார்க்க வேண்டும். ஆனால் நண்பர் திரு. தாமோதரன் சொன்னபடி 1969-70 நிதிநிலை அறிக்கைதான் இருக்கிறது. நமக்கு ஒரு மெமோராண்டமும் கொடுக்கப்படுகிறது. அதில் 1970-71-க்கு வரவு செலவு இனங்கள் தான் இருக்கின்றன. நிதிநிலை அறிக்கை இல்லை. 1969-70-க்கு ரூ. 3¼ கோடி அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய வட்டிவிகிதத்தைக் வாரியம் கட்டாமலிருக்கிற காரணத்தால், அது நஷ்டம் என்று கணக்குப் போட்டேன். அது சரி என்றே நினைக்கிறேன். நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, நிதிநிலை அறிக்கை இல்லாமல் 1970–71-ம் ஆண்டு சம்பந்தமாக எப்படிப் பேச முடியும் என்று கேட்டபோது, அவர் மின்சார (வழக்கு) சட்டம் 61-வது பிரிவுப் படி நிதிநிலை அறிக்கை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் சட்டசபைக்கு வரவு செலவு இனங்கள் மட்டும் கொடுத்தால் போதும் என்றும் கூறினார். ஆனால் இந்த முறை மாற்றப்பட வேண்டுமென நான் கருதுகிறேன். கொடுக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையிலும் ஆடிட்டர் ரிப்போர்ட் கிடையாது. எந்தத் தணிக்கையாளரும் வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்து குறைபாடுகளை எழுதுவார்கள். சாதாரணமாக தனியார் கம்பெனிக்குக் கூட 10, 20 குறைபாடுகள் எழுதுவதுண்டு. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையில் தணிக்கை அறிக்கை கொடுக்கப்படாததைப் பார்க்கிறோம். இந்த முறை சரியானதல்ல, ஆகவே மேலும் அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய வட்டியைக் கொடுக்காமல் நிறுத்தி விடுவதை வைத்துக்கொண்டே நஷ்டம் என்று பார்த்தால், வாரியத்திற்கு பின் ஆண்டுகளில் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் தவிர்க்க முடியாத காரியம் என்ற காரணத்தால், அரசாங்கம் தனியாக 'சப்சிடி' முறையில் இந்த நஷ்டத்தைத் தவிர்க்கலாம் என்று சிபாரிசு செய்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலுள்ள பியுயல் சர்சார்ஜ்பற்றி நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், பியுயல் சர்சார்ஜ் 7 சதவீதம், 100 சதவீதம் வரை போடுகிறார்கள். அதுவும் பேசின் பிரிட்ஜில் உற்பத்தியாகிற மின்சாரத்துக்குப் போடுகிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம், பியுயல் சர்சார்ஜ் என்பது அனல் மின்சாரத்துக்கு ஆகும் அதிகச் செலவின் காரணமாகப் போடப்படும் ஒன்று என்று நினைக்கிறேன். ஆனால் சென்னையிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள பெரிய நிறுவனங்களுக்குக் கொடுக்கக்கூடிய மின்சாரம் முழுவதும் பேசின் பிரிட்ஜிலிருந்து கொடுக்கப்படுகிறதா என நான் அறிய விரும்புகிறேன். சென்னையிலும் அதற்கு அருகாமையில் உள்ள செங்கற்பட்டு மாவட்டம் இரண்டிலும் கொடுக்கப்படும் மொத்த மின்சாரம் அனல், புனல் ஆகிய இரண்டும் கலந்து என்ன அடிப்படையில் என்று தெரியாத அளவிலேதான் கொடுக்கப்படுகிறது, அதற்கு 70-லிருந்து 100 சதவீதம் சர்சார்ஜ் விதிப்பது சரிதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆனால், அனல் மின்சாரத்திற்கான சர்சார்ஜ் என்று சொல்கிறார்கள். அது உண்மையானால் ஆட்சேபணை இல்லை. புனல் மின்சாரம் வாங்கக்கூடிய பலருக்கு 70 சதவீதம், 100 சதவீதம் சர்சார்ஜ் போட்டால், அது தவறு. அது மட்டுமல்ல. அடிப்படையில் இது மாதிரிப் போடுகிறபோது மாநிலம் முழுவதற்கும் ஒரே மாதிரி



யாக இருக்க வேண்டும். சென்னையில் உள்ளவர்களுக்கு 100 சதவிகிதம், உட்பகுதிகளில் இருப்பவர்களுக்கு ஒன்றுமில்லை என்ற நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். எல்லாத் தொழில்களையும் ஒரேமாதிரியாக நோக்க வேண்டும். சென்னைக்கு ஒன்று மற்ற இடங்களுக்கு இன்னொன்று என்று விதிப்பது தவறு என்று நான் மறுமுறையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார வாரியம் தேவையான பொருள்களை வாங்குகிறது. சாதாரணமாக நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், மின் விற்பனை அதிகமாக இருக்கும் ஆண்டில் வாங்குகிற பொருள்கள் குறைவாகவும், விற்பனை குறைவாக இருக்கும் ஆண்டில் பொருள்கள் அதிகமாக வாங்கிய நிலைமையும் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 1968-69-ல் 9.5 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டில் 8.98 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். 1969–70-ல் விற்பனை ரூ. 4 கோடிக்கும் அதிகமாக இருந்திருக்கிறது. 1968–69-ல் ரூ. 3.95 கோடியும், 1969-70-ல் ரூ. 3.59 கோடி இருப்பும் இருந்திருக்கிறது. குறைந்த அளவில் மின்சாரம் விற்பனை ஆன சமயத்தில் 'ஸ்டோர்' இருப்பு அதிகமாகவும், அதிக மின் விற்பனை சமயத்தில் இருப்பு குறைவானதாகவும், தலைகீழ் நிலைமையாக உள்ளது. இப்படி ஸ்டோர் குறைபாடுகள் பல இருக்கின்றன. பொருள்கள் கிடைப்பதற்குத் தகுந்த மாதிரி வாங்கப்படுகிறது, சில ஆண்டுகளில் பொருட்கள் கிடைக்காத நேரங்களில், அதைப் பார்த்து வாங்கி வைத்துக்கொள்வது நல்லது என்று சொல்லக்கூடும்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : பணம் அப்படி ஒதுக்கப்பட்டிருக்கலாம். ஒரு ஆண்டில் ஆர்டர் செய்தால், சில சமயங்களில் மூன்று வருடங்கள், நான்கு வருடங்கள் ஆகும், ஸ்டோர்ஸ் வந்து சேருவதற்கு. ஒவ்வொரு ஆண்டும் ஆர்டர் போடும்பொழுதே கைக்கு வந்துவிடாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: அதைத்தான் சொல்ல வந்தேன். தனிப்பட்ட நிறுவனங்களில் லீட் டைம் என்று அடிப்படையில் உத்தரவு போட்டு 15 நாட்கள், இரண்டு மாதம், 1 வருடம், 2 வருடம் என்று காலக்கெடு கொடுப்பார்கள். அதே போல் வாங்கும்பொழுது இந்தப் பொருள்களின் தேவையைப் பார்த்து, அதிகமான விலையாக இருந்தால், குறைத்தும் குறைந்த விலையில் இருந்தால், நீண்ட காலம் வைத்துக்கொள்ளும் அளவில் பொருள்களை வாங்கி வைத்துக் கொள்வதும் பலன் தரும். இந்தப் போக்கு இல்லாமல் வாங்கப்படுகிறது என்பதை நான் அறிந்த வகையில் எடுத்துக் கூறினேன். பொருள்கள் வாங்கும் விஷயத்தில் எந்தவித அடிப்படையும் இல்லை என்பதைத் தான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஸ்டோர்சில் இருக்கிறவர்கள் எந்தெந்தப் பொருள்களை வாங்க வேண்டுமென்று நினைத்தார்களோ அந்தப் பொருள்களை அவர்கள் விரும்புகின்ற அளவுக்கு வாங்குகிறார்கள் என்று உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மதராஸ் மாஸ்டர் பிளானுக்காக 6 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்ட கண்டக்டர்கள் இன்னும் கூட ¾ பங்குக்கு மேல் உபயோகப்படாமல் ஸ்டோர்சில் இருக்கின்றன. இதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் அளவிற்கு 6 வருஷத்திற்கு முன்னால் வாங்கியவை அப்படியே இருக்கின்றன. அதனால் எவ்வளவு நஷ்டம் என்று பார்க்கவேண்டுமென்று அமைச்சரின்

(iii) குதிரைப் பந்தய வரியின் மீது 5 சத விதம் மேல் வரி விதிக்கப் படும்.

(iv) தற்பொழுது தனியார் துறையிலும், அரசு நிறுவனத்திலும் உள்ள சாதாரண பேருந்துகளனைத்திலும் கிலோ மீட்டருக்கு 3 பைசா என்ற விதத் தில் கட்டணம் விதிக்கப்படுகிறது. எனினும், இன்று அரசு விரைவுப் பேருந்துகளில் (Express Bus) விதிக்கப்படும் கட்டணம் கிலோ மீட்டருக்கு 3-1/8 பைச . ன். எனவே இதனைத் தக்கவாறு மாற்றி யமைக்கும் வகையில், விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் மட்டும், கிலோ மீட்டருக்கு 4 பைசா விதம் கட்டணம் விதிக்கப்படும்.

(v) ஆவணங்களின் மீது தற்போதுள்ள முத்திரைத்தாள் வரி மீது 2-1/2 சத வித கூடுதல் மேல் வரி விதிக்கப்படும்.

(vi) கார், ஸ்கூட்டர் போன்றவற்றின் மீதான வாகன வரி, 10 சத விதம் உயர்த்தப்படும்.

இவை மூலம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ, முழு ஆண்டில், இரண்டு கோடி ரூபாய் கிட்டும் என நம்புகிறோம்.

5. இவை தவிர, ஜனவரியில் பொ... திருநாளை முன்னிட்டு நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குதவ, சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் ஒன்றும் நடத்தப் படும். இந்த குலுக்கலின் மூலம் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

6. மின்சார வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி, நமது மாநிலமெங்கணும் சிற்றூர்களெல்லாம் ஒளிமயமாக்கும் முயற்சிக்கு. நிதி நிறு வனங்களின் உதவியினைக் கோரும்போதெல்லாம், நமது மின்சாரக் கட்ட ணங்கள், மின்சாரம் வழங்குவதற்கு ஆகும் செலவு முழுவதனையும் ஏற்கும் வகையில் உயர்த்திச் சீரமைக்கப்பட வேண்டும் என அந் நிதி நிறுவனங்கள் கூறி வந்திள்ளன. நீர் மின்சார வசதிகளைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு, நமது மாநிலம், கோடை வறட்சி நாட்களில் மின்சார வெட்டில் துன்புற்று வந்த நிலையை மாற்றிட, அனல் மின்சார வசதியினைப் பெரு மளவில் பெருக்கும் முயற்சிகளில் நாம் வெற்றி கண்டுள்ளோம். இதனால் அண்மைக் காலத்தில் மின்சார வெட்டு ஏதுமின்றி, ஆண்டு முழுவதும் தொடர்ந்து மின்சாரம் வழங்கியுள்ளோம். அதன் விளைவாக, நமது மின்சார உற்பத்திச் செலவுகள் கணிசமாக உயர்ந்துள்ளதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். சிற்றூர்கள் அனைத்திற்கும் விரைந்து மின்வசதி செய்யும் முயற்சியின் விளைவாகவும், பரவலாக பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புகள் தருவதனாலும் மின்சாரத்தை பிரித்து வழங்குவதற்கான செலவு களும் உயர்வு பெற்றுள்ளன. எனவே, இந் நிலையை நன்கு ஆராய்ந்து மின்சாரம் பயன்படுத்தப்படும் பல்வேறு துறைகளிலும் கட்டண விகிதங்களை ஏற்ற முறையில் அமைப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் வேளாண்மை, தொழில் துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கான மின்சாரக் கட்டணங்களை உயர்த்திச் சீரமைக்க பரிந்துரை செய்துள்ளனர். கூடுதல் நிதி





வசதிகள் மிகவும் தேவைப்படும் இந் நிலையில், இப்பரிந்துரைகளை 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.

7. வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்பட்டு, உணவுப் பொருட்கள் சரிவரக் கிட்டாத நிலையில், இந்த அரசு படியரிசித் திட்டத்தைச் செயல்படுத்தியது. கோவை, சென்னை ஆகிய இரு நகரங்களிலும் படியரிசி வழங்க இப்பொழுது ஆண்டொன்றிற்கு 4 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. அரசு தொடர்ந்து எடுத்த தீவிர முயற்சிகளின் விளைவாக வேளாண்மைத் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மாநில முழு தும் உற்பத்திப் பெருகி, தாராளமாக உணவுப் பண்டங்கள் கிடைக்கும் இந் நிலையில், படியரிசித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது தேவையா என அரசு ஆராய்ந்தது. படியரிசித் திட்டம் தற்பொழுது அமுலில் உள்ள சென்னை மாநகரப் பகுதியிலும், கோவையிலும் உள்ள எளியவர்கட்கு நியாய விலையில் அரிசி கிடைப்பதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. எனவே 1972 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல், மாதமொன்றுக்கு ரூ 300-ம் அதற்குக் குறைவாக வும் ஊதியம் பெறுபவர்களுக்கு நியாய விலையில் (Economic Rate) அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்து படியரிசித் திட்டத்தை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இன்றுள்ள இக்கட்டான சூழ்நிலையில், நாட்டின் நலன் கருதிச் செய்யப் படும் இம் முயற்சிகளனைத்திற்கும் மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: இம் மன்றத்தில் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய வரி விதிப்புகள் தற்காலிகமானவையா அல்லது நிரந்தரமாக நிலைத்து விடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசாங்கத்தின் யோசனையின் பேரில் இந்த வரிகள் போடப்படுகின்றன. இதுபற்றி முழு விவரக் குறிப்புகள் தனியாக வரும். நாட்டுப் பாதுகாப்பிற்காக இந்த வரி கள் போடப்பட்டிருக்கின்றன.

## III. CALLING ATTENTION TO STEEP RISE IN PRICE OF RICE IN THE STATE ESPECIALLY MADRAS CITY AND CONSEQUENT DISTRESS CAUSED TO PEOPLE.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the steep rise in the price of rice in the State especially in Madras City and the consequent distress cause to the people in general and to the middle class in Madras City in particular.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Chairman, Sir, the price levels that obtained during February-March 1971 were lower than those that prevailed in February-March 1970.

The increasing trend from May, 1971 till September, 1971 is an annual feature as these are lean months when there will be no harvest. During the period immediately following the harvest the prices are lower and as the arrivals in the market get reduced the prices are bound to increase to an extent. Since October, 1971 the prices of certain varieties of rice have come down after the Kuruvai harvest, but there is an upward trend again.

In order to make rice available to the consumers at cheap rates, fine rice (boiled and raw) has been made available at economic rates. In Madras City, this has been done through Co-operative Institutions and Government Shops already selling rice at subsidised rate and through 75 milk depots. In the districts, fair price shops have been opened for sale of rice at economic rates wherever the Collectors consider necessary. These measures are expected to afford relief to the poorer sections; the harvest of the Samba Crop which will commence shortly is expected to lead to lower prices.

## IV. Discussion on the Annual Financial Statement for 1971–72 and the Supplementary Financial Statement for 1970–71 of the Tamil Nadu Electricity Board—*cont.*

MR. CHAIRMAN : We will now resume the discussion on the Electricity Board Budget. Thiru G. Swaminathan.

* **திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதலாவதாக மின்சார வாரியத்தின் நிதிநிலையைப் பொறுத்தவரையில், ஒரு வாரியம் எந்த அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மின்சார வாரியம் ஒரு 'கமர்ஷியல் கன்சர்ன்' என்ற அடிப்படையில் முன்னர் நடத்தப்பட்டிருந்ததாகவும் அறிகிறேன். ஆனால் நமது வாரியத்தினுடைய நிலைமையைப் பார்க்கும்பொழுது, இந்த வாரியம் லாபத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட வேண்டுமா? அல்லது மக்களுக்கு பயன்தரக் கூடிய 'யுட்டிலிட்டி கன்சர்னாக' நடத்தப்பட வேண்டுமா என்பது மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், அடிப்படையான பிரச்னை என்று நான் கருதுகிறேன். கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாகப் பார்க்கிறபோது, மின்சார வாரியம் என்பது பொதுமக்களுடைய நன்மைக்காக நடத்தப்படுகிற வாரியம், எனவே அதை லாபக் கண்ணோட்டத்துடன் நடத்தக் கூடாது என்ற கருத்து அடிப்படையாக இருப்பதாக நான் கருதுகிறேன். முன்பு அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்களை முதல்வராகக் கொண்ட ஒரு குழு தனது அறிக்கையில் 3 சதவிதமாவது மின்சார வாரியம் நிகர லாபம் பெற வேண்டுமென்று கூறியிருந்தார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த மின்சார வாரியம் நடந்திருக்கிற முறையைப் பார்த்தால், அது கிட்டத்தட்ட ரூ. 3½ கோடி வரையில் 1969-70-ம் ஆண்டில் இழந்திருப்பதையும், பிறகு 1970-71-ல் நான் மிகவும் சிரமப்பட்டுக் கண்டு



பிடித்த புள்ளிவிவரங்களிலிருந்து கிட்டதட்ட ரூ. 8, அல்லது 9 கோடியாவது இழந்திருக்கக்கூடும் என்பதையும், 1971-72-ம் ஆண்டுக்கு இன்னும் ரூ. 3, 4 கோடிகள் நஷ்டம் அதிகமாகிற நிலைமையையும் தான் காண முடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்களை இந்த வாரியம் இழந்து லாப நோக்கு இல்லாமல் நடத்தப்படுவது சரிதானா என்பதை அமைச்சர் அவர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஆனால் லாபகரமாக நடத்த வேண்டுமென்று சொல்லுகிறபோது, மின்சார வாரியத்தை நாட்டு மக்களின் Socio-economic benefit என்ற அடிப்படையிலன்றி லாபத்தைக் கண்ணோட்டமாகக் கொண்டு நடத்துவது சரிதானா என்று கேட்கக்கூடும். லாப நோக்கோடு வாரியத்தை நடத்தாமலிருந்தால் அதில் பல ஊழல்கள் பெற அதனால் நஷ்டம் ஏற்பட்டால் அதற்குக் காரணம் மக்களுக்கு நன்மை செய்கிறோம், எனவே லாப நோக்கோடு நடத்தப்படவில்லை என்று அதிகாரிகள் சொல்லி தப்பித்துக்கொள்வதற்கு காரணமாக அமைந்துவிடக்கூடும் என்று நான் அஞ்சுகிறேன். அப்படியானால் எந்த அடிப்படையில் வாரியம் நிர்வகிக்கப் படவேண்டும் என்று சொன்னால் 3 சத விகிதம் நிகர லாபம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நடத்தி அதே சமயத்தில் பொது மக்களின் சமுதாயப் பொருளாதார நலனுக்காக ஏற்படும் நஷ்டத்தை அரசு 'சப்சிடி' என்ற அடிப்படையில் சரிக்கட்டலாம். இன்றைய தினம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும்பொழுது அதன் செலவு ஒரு யூனிட்டுக்கு 19 நயா பைசா வரையில் ஆகிறது. ஆனால் 9 நயா பைசாவுக்குக் கொடுத்து வருகிறோம். இதைப் பார்க்கும்பொழுது, ஒரு யூனிட்டுக்கு 10 நயா பைசா நஷ்டம் வருகிறது. எனவே லாப நோக்கோடு 19 நயா பைசாவுக்கு மின் இணைப்பு கொடுக்கலாமா என்ற கேள்வி வரும். 10 நயா பைசா நஷ்டப்படுகிறது என்றால், ஆண்டுக்குக் கிட்டதட்ட ரூ. 11 கோடி நஷ்டம். அடுத்த ஆண்டுகளில் இந்த 11 கோடி இன்னும் அதிகரிக்கும். அதே போல் 'இண்டஸ்டிரீஸ்' என்று சொல்லக் கூடிய நிறுவனங்களுக்குக் கிட்டத்தட்ட இதே போன்ற கணக்கின் அடிப்படையில் ரூ. 2½ கோடி அளவில் நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். மெட்ராஸ் அலுமினியம் ஒன்றை மட்டும் பார்த்தால், எனக்குத் தெரிந்த அளவில், கிட்டதட்ட ரூ. 1¼ கோடி சப்சிடைஸ் செய்கிறோம். இது போல் ஒவ்வொரு துறையிலும் குறைந்த விலையில் மின்சாரம் கொடுப்பதைக் கொண்டு, மின்சார வாரியம் ஒரு தனி போர்டாக இருந்தாலும் கூட, அதனுடைய கட்டண விகிதங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தார் நிர்ணயிக்கிறார்களே தவிர, மின்சார வாரியம் நிர்ணயிக்கும் அதிகாரம் பெறவில்லையென்று பார்க்கிறோம். கட்டணத்தைத் தானே நிர்ணயிக்கக் கூடிய அதிகாரங்கள் மின்சார வாரியத்துக்கு இல்லாது போனால், அது தனிப்பட்ட வாரியமாக எப்படி நடக்க முடியும் என்று நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இப்படிக் குறைந்த விலையில் தனிப்பட்டவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமானால், ஒன்று செய்யக்கூடும். 3 சதவீதம் அளவில் நிகர வருமானம் வர வேண்டுமென்று நிர்ணயித்துக்கொண்டு அரசாங்கத்தினுடைய உத்தரவின் காரணமாக, அரசியல் ரீதியான காரணங்களுக்காக, சமுதாய நலன்களுக்காகக் கொடுக்கக் கூடிய மின் இணைப்புகளால் வரக்கூடிய நஷ்டத்தை அரசாங்கமே 'சப்சிடி' என்று தனிப்பட்ட முறையில் வாரியத்திற்குப் பொது நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கொடுத்துவிடலாம். இதைத்தான் நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன்

அத்தோடு மட்டுமல்ல. இந்த நேரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

தொழிலறிந்த ஏழை மக்கள்
தொழில் புரிந்து செல்வர்பால்
அழிவிலா முதல் கொடுக்க
அம்முதற் பணத்தினால்
பழி மிகுந்த அரசு அமைத்துப்
படைகள் தம்மை ஏவியே
தொழில் புரிந்த ஏழை மக்கள்
சோற்றிலே மண் போடுவார்.

அப்படிப்பட்ட அரசு அல்ல கலைஞர் அரசு. 4 சதவிகிதம் ஆக இருந்த போனசை 5 சதவிகிதமாக நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கட்டளையிட்டதை வரவேற்கிறேன்.

மின்சக்தியைப் பொறுத்த வரையில் 1971-72-ல் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி 2185 மெகாவாட்ஸ் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதில் எண்ணூரில் அமைய உள்ள 3 வது கட்ட அனல் மின் நிலையமும் நெய்வேலியில் உற்பத்தியாகும் 600 மெகாவாட் மின்சக்தியும் இத்துடன் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தேவை அதிகமாக இருக்கிறது. உற் பத்திக்கான சாத்யக் கூறுகளையெல்லாம் ஆராயவேண்டும். கல்பாக்கத்தில் அணு மின் உற்பத்தி இன்னும் 3, 4 ஆண்டுகளில் கிடைக்கும் என்ற குறிப்பும் தரப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் நமக்குப் போதாது. இன்னும் ஒரு மின் நிலையம் நமக்குத் தேவை. அது தென் மாவட்டங்களில் அமைய வேண்டும் என்பதை நடுவண் அரசுக்கு நமது அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலி, தூத்துக்குடியில் மேலும் அனல் மின் நிலையங்கள் அமைய நமது அரசு வற்புறுத்தி வருகிறது. இதைப் பாராட்டுகிறேன். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் குறிப் பிட்டுச் சொன்னார்கள் இலங்கை மலையினின்று இழியும் ஆற்று நீரைக்கொண்டு ஜாயிண்டு செக்டார் மூலமாக தமிழ அரசு மின் உற்பத்தி செய்ய வேண்டும் என்று. நடுவண் அரசுடன் பேசி இதைச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்சாலைகளிலும், பெரிய மருத்துவ மனைகளிலும் அடிக்கடி ஏற்படும் வோல்டேஜ் வேரியேசன் என்ற ஏற்றத் தாழ்வால் விலை உயர்ந்த மின் கருவி கள் பாழ்படுகின்றன. எனவே மின் வாரியம் 'ஸ்டபிலைஸ்டு வோல்டேஜ்' கிடைக்கக் கூடிய விதத்தில் அருகிலேயே டிரான்ஸ்பார்மர்களை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. வி. ராஜகோபால் அவர் களும், திரு. வெங்கா அவர்களும் தொழில்களுக்குத் தரப்படுகின்ற கட்டணச் சலுகைகளைத் தடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மகாராஷ்டிரத்தில்



ஒரு யூனிட்டுக்கு 10 காசுதான் வாங்குகிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு யூனிட்டுக்கு 20 காசு வசூலிக்கப்பட்டு வருகிறது. தொழில் வளம் பெருக வேண்டுமானால், 10 காசாகவோ அல்லது 15 காசா கவோ குறைக்க வேண்டும். இப்படிச் செய்து தர வேண்டும் என்று இந்த அரசை வற்புறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விருத்தாசலம், தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஊராகும். அங்கு சிறு தொழில் கார்ப்பொரேஷன் மூலமாக ஒரு பீங்கான் தொழிற்சாலை நடை பெறுகிறது. சிறு அளவில் இன்சுலேட்டரும் உற்பத்தியாகிறது. பீங்கான் தொழிற்சாலையில் வாஷ் பேசின்களும் கிளாசட்சும் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பொருள்களுக்கு இன்றைய தினம் போட்டி அதிகமாக இருக்கிறது. பாரி, இந்துஸ்தான், சேஷசாயி போன்ற பெரிய நிறுவனங்கள் போட்டி போடு கின்றன. விருத்தாசலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அந்தத் தொழிற்சாலை யில் உற்பத்தியாகும் பொருட்கள் இவைகளுடன் போட்டி போட முடியாத நிலையில் இருக்கின்றன. அதனால் நான் பீங்கான் தொழிலை நிறுத்த வேண்டு மென்று சொல்லவில்லை—அதிகப்படியாக இன்சுலேட்டர்களை உற்பத்தி செய்ய வேண்டும்—இது குறித்து சிறு தொழில் கார்ப்பரேசனுடன் மின்சார வாரியம் ஆய்வு நடத்த வேண்டும். ஊராட்சி மன்றங்கள் மின் வாரியத்திற்கு மிகுந்த அளவிற்கு, அதனுடைய சக்திக்கு மேல், வரி செலுத்த வேண்டியிருக்கிறது என்பதை நான் தாழ்மையோடு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஊராட்சி மன்றங்களில் குழல் விளக்குகள் போடுகிறார்கள். ஊராட்சி மன்றமே பராமரிக்குமானால், அதற்கு இரண்டு ரூபாய் வாங்குகிறார்கள். ஊராட்சி மன்றம் அல்லாது மின்வாரியமே பரா மரிப்புச் செய்துவிடுமானால், அதற்கு 5 ரூபாய் வாங்கப்படுகிறது. அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். சில ஊராட்சி மன்றங்கள் 1,000 யூனிட்டுகளுக்கு மேல் எரிக்குமானால், அதுவும் பல்புகளுக்கு மட்டும் யூனிட்டுக்கு 18 காசு விதம் வாங்கப்படுகின்றது. அதைக் கொஞ்சம் கூட்டினாலும் பரவாயில்லை. 25 காசு என விதித்தாலும், பரவா யில்லை. குழல் விளக்குகளையும் சேர்த்து எரிக்கும் எல்லாவித ஊராட்சி களுக்கும் மீட்டர் வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, இந்தத் துறை நல்ல முறையில் இந்தப் பணி நிறைவு பெறுகிற வகையில் பாடுபடுகின்ற மாண்புமிகு அமைச்சர், வாரியத் தலைவர், ஊழியர்கள் அனைவரையும் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

DEPUTY CHAIRMAN : There are seven more hon. Members to speak and the Hon. Minister has to reply. We have to complete the discussion by 7 O'Clock. The hon. Members may take 10 minutes each.

திரு. டி. கே. சுப்பையா : தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்பு கிறேன். இப்படி நான் சொல்லும்போது, என்னுடைய கருத்துக்களை எதிர்ப்பு மனப்பான்மையிலே வெளிப்படுத்துவதாகக் கொள்ளக் கூடாது. இந்த நிதி நிலை அறிக்கையிலே நாங்கள் பேசும்போது, சில விஷயங்களைச்

[திரு. டி. கே. சுப்பையா] [10th December 1971

சொல்கிறேமென்றால், அதிலே உள்ள குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கண்ணோட்டத் துடன்தான் தெரிவிக்கிறேமேயொழிய, ஏதோ குறை சொல்ல வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக அல்ல என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்கிறேன். குறிப் பாக எல்லா அங்கத்தினர்களும், அமைச்சரவர்களும் கூட ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டார்கள். கிராமங்களிலே பஞ்சாயத்தால் நிர்வகிக்கப்பட்டு வரக் கூடிய தெரு விளக்குகள் சரிவர இயங்கவில்லை என்றும் அதற்கான வழி வகை களைக் காண வேண்டும் என்றும் எல்லா அங்கத்தினர்களும் தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள். நிச்சயமாக இந்தக் குறை இருக்கிறது. பல விளக்குகள் எரிவதில்லை. எரிந்து போன பல்புகளில் மூன்று பல்புகளுக்குப் பதிலாக மின்சார வாரியமே புதிய பல்புகளைக் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். இப் படிக் கொடுப்பதை பஞ்சாயத்துத் தலைவரிடமே கொடுத்து, அதை ஈடு செய் தால் அது நிச்சயமாக ஓரளவிற்குப் பலன் அளிக்கும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில் மீட்டர் வைக்க வேண்டும், கணக்கிடும் கருவியை வைக்க வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்தியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் கூட ஒப்புக்கொள்ளும் வகையிலே அதையெல்லாம் 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிப்பதற்குத் திட்டமிட்டு இதற்கென்று மதிப்பிட்டு 90 லட்ச ரூபாய் ஆகும் என்று கணக்கிட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே அந்த எண்ணம் வந்திருக்கிறது. அதிலும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று காத்திராமல், மின்சார போர்டே விரைவில் 1972-க்குள், அது வரையில் காத்திருக்காது, கிராமங்களில் இந்தக் கருவியை அமைக்க வேண்டிய வேலைகளைத் துவக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, முதலமைச்சரவர்கள் 1972-க்குள் ஏனைய கிராமப் பகுதி களுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்ற ஒரு நியதியை எடுத்ததன் காரணமாக இன்றைக்குக் கிராமங்களுக்கு வெகுவேகமான மின் இணைப்பு கொடுக்கப்பட்டு வருவதற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே தருணத்தில் நான் கேட்டுக் கொள்வது பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்க வேண்டும். விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கடன் வாங்கி மோட்டார் வாங்கி வைத்துக்கொண்டு மின் இணைப்புக்காகப் பல மாதங்கள் வரையில் காத்திருக்க வேண்டிய நிலை இருக் கிறது. அவர்களுக்கு விரைவில் மின் இணைப்பு கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசிடமிருந்து கடன் பெற்று அவர்கள் மின்சார மோட்டார் வாங்கி வைத்துக்கொண்டு மின் சார வாரியத்திற்கு மின் இணைப்பிற்காக அலைய வேண்டிய நிலை இருக்கின்றது. என்னுடைய வேண்டுகோள், இப்படிக் கடன் மனு கொடுக்கும்போது, கடன் மனுவை அங்கீகரிக்கும்போதே மின்சார வாரியம் இவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். என்னு டைய பகுதியில் ஏறத்தாழ 50 பேர்களுக்கு மேல் இப்படி மின்சார மோட்டார் வாங்கி வைத்துக்கொண்டு பல மாதங்களாகக் காத்திருந்தும் அவர்களுக்கு இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. அமைச்சரவர்களிடத்திலே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு மின் இணைப்பு



10th December 1971] [திரு. டி. கே. சுப்பையா]

கொடுக்கப்படாததால் அவர்கள் விவசாயத்தைச் சிறப்பான முறையிலே செய்ய முடியவில்லை என்றாலும் அவர்களிடமிருந்து அரசாங்கம் வட்டி வாங்குவது மட்டும் நிற்கவில்லை. எனவே இப்படிப்பட்டவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்த பிறகு வட்டி கொடுத்தால் போதும் என்று அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும். இப்படி மோட்டார் 8, 10 வருஷங்களாகப் பயன் படுத்தப்பட முடியாமல் வைக்கப்பட்டிருப்பதால், அவை பழுதடைந்து விடு கின்றன. எனவே இப்படி அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கி மின்சார மோட்டார் வாங்கி வைத்திருப்பவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கும்படி முதலமைச்சரவர்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் வீடுகளுக்கும், விவசாயத்திற்காக உபயோ கிக்கும் மின்சாரத்திற்கும் மீட்டர் கணக்கு எடுப்பதற்கு வருகிறார்கள். இப்படி மோட்டார்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் கார்டுகளை எலிகள் இழுத்துக் கொண்டு போய்விடுகின்றன. திடீரென்று கணக்கிட அதிகாரிகள் வரும்போது, கார்டு இல்லாததால் 3,000 யூனிட்டுகள் எரிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் கூடுதலாகக் கணக்கிட்டு, 6 ஆயிரம் அல்லது 9 ஆயிரம் யூனிட்டுகள் என்று கணக்கிடப்பட்டு அதற்கான அதிகப் பணம் வசூல் செய்யப்படுகிறது. இதனால் அவர்கள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். எனவே விவ சாயத்திற்காக மோட்டார் வைத்திருப்பவர்கள் மீட்டர் கார்டுகளை பம்புசெட்டு வைத்திருக்கும் இடத்திலேயே வைக்காமல் தங்களுடைய வீடுகளிலே வைத் திருந்து அதிகாரிகள் வரும்போது அவர்களுடன் அதை எடுத்துச் சென்றால் போதும் என்று செய்ய வேண்டும். ஏனென்றால் அதிகமாகப் பணம் வசூல் செய்து விட்டால், அதை மூன்று மாதங்களானாலும் திருப்பிக் கொடுப்பதில்லை. பணம் திரும்ப வருவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. எனவே இந்த முறையைக் கடைப்பிடித்தால், விவசாயிகளுக்கு அதிக வசதியாக இருக்கும். இப்போது நம் கிராமங்களில் பணம் கட்டும்போது, இன்ன தேதியில் உங்களுக்குப் பணம் கட்ட வருகிறோம் என்று தெரிவிக்கிறார்கள். அந்தத் தேதியில் கியூ வரிசையில் காலையிலிருந்து மாலை 3 மணி வரை காத்திருக் கிறோம். அந்த வகையில் தயாராயிருக்கிறோம். கணக்கிட்டுப் பார்த்து இந்தத் தேதியில் வருகிறார்கள் என்ற நிலையை விவசாயிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, திருமானூரைப் பொறுத்த வரையில், முதலில் சர்வீஸ்கள் குறைவாக இருந்தன. இப்போது அதிகமாகிவிட்டது. டால்மியாபுரத் திலிருந்து பணம் வசூலிக்க வருகிறவர் ஒரே நாளில் பணம் வசூலிப்பது என்றால், பணம் கட்டுபவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சர்வீஸ் கள் அதிகமாகிவிட்டபடியால், இரண்டு நாட்கள் கூட ஆகக்கூடும். ஆகவே கலெக்ஷன் செய்ய ஒரு அதிகாரியை நியமனம் செய்ய வேண்டும். அதைச் சீரான, சிறப்பான வகையில் செய்து கொடுத்து இன்னும் விரிவான வகையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எங்கள் பூரண ஒத்துழைப்பு உண்டு என் பதை விவசாயிகளின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

வில்லை என்று சொல்கிறார்கள். ஒரு ஊழியர் திருடினார் என்பதற்காக நட வடிக்கை எடுத்தால், சட்டமன்ற உறுப்பினரோ அல்லது முக்கியமான நபர் களோ அதிகாரிகளைப் பார்த்து, அவர்களை விட்டு விடுங்கள் என்று சிபார்சு செய் தால், அதிகாரிகளால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? இந்த நிலைமை நீடித்தால், நிச்சயமாக மின்சார வாரியம் நல்ல முறையில் இயங்க முடியாது என்று கூற விரும்புகிறேன்.

வாரியத்திலுள்ள கணக்குப்பகுதியில் காலை, மதியம், மாலை ஆகிய வேளை களில் அலுவலகத்திலேயே அமர்ந்து கொண்டு சில மாதங்களுக்கு முன்னால் கோஷம் எழுப்பிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். இதையெல்லாம் அனுமதித் தால் வாரியம் எப்படி ஒழுங்காக நடக்க முடியும்?

இப்போது மின்சார வாரியத்தை அரசாங்கக் கடன்களில் மட்டும் நடத்த முடியவில்லை. இப்போது தேசிய பாங்கிகள், எல்.ஐ.சி. போன்றவைகளிடமும் கடன் வாங்குகிறார்கள். மாநில அரசுக்கு மத்திய அரசு கிராமப்புர மின் இணைப்புத் திட்டங்களுக்காகக் கடன் தருகிறது. நம் அரசு அதை வாங்கி வாரி யத்திற்கு அதிக வட்டி விகிதத்தில் தருகிறது. மத்தியத்திலிருந்து நம்முடைய அரசு 6 சதவிகிதத்திற்கு வாங்கி 7 சதவிகிதத்திற்கு மின்சார வாரியத்துக்குக் கொடுக்கிறது. மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து 3 சதவிகிதம், 4 சதவிகிதத்திற்கு, வாங்கி, மாநில அரசுகளுக்கு 7 சதவிகிதம், 8 சதவிகிதம் என்று தருவது தவறு என்று கூறுகிற நாம் வாரியத்திற்கு இதைக் கடைப் பிடிக்காமலிருப்பது எப்படிச் சரியானதாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் "ரீஜினல் கிரிட்" தேவை என்று சொன்னார். அதற்காக ஒரு கமிட்டியும் போடப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்தில் தான் மின் சக்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. கேரளா, மைசூர் மாநிலங்கள் "ரீஜினல் கிரிட்டைப்" பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. தேவைக்கு அதிகமாகவே அவர்களிடம் மின் சக்தி இருக்கிறது. ஆகவே ஒரு ஸ்டேடுடரி பாடியாக அதை அமைக்கக்கூடிய எல்லா விதமான சாத்தியக் கூறுகளையும் ஆராய வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் வாரியத்தின் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் அடிப்புள்ள இளைஞராக இருக்கின்ற காரணத்தால், நல்ல முறையில் செயல்படுவார் என்று எதிர்பார்த்து என் உரையை முடிக்கிறேன்.

*புலவர் ஒ. அறிவுடை நம்பி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1971–72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதும் 1970-71-ம் ஆண்டு அவை நிதி நிலை அறிக்கையின் மீதும் நான் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் திரு. ராமன் அவர்கள் இங்கே வைத்திருக்கும் இந்த அறிக்கையைப் பாராட்டி நான் சில பல கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த காலம் ஆக்கமாகவும். நிகழ் காலம் நமீப் பெருமையை கொள்ளத் தக்கக் கடமையாகவும், எதிர் காலம் புகழ் மிக்க ஒளி மயமாகவும் திகழ்கிறது என்று எல்லோரும் பாராட்டுவதை நான் இங்கே பாராட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



குறிப்பாக நம் எதிர்த் தரப்பில் இருக்கக் கூடிய பெரியவர்கள் கூட இங்கே மிகச் சிறப்பாக வாரியத்தைப் பாராட்டியது கண்டு நான் மகிழ்ச்சியடைகி றேன். எங்கேனும் கடுமையான வார்த்தைகளை அறுவடை செய்தார்கள் என்றால், அது எதிர்ப்பால் அல்ல, அது வெறுப்பால் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே 13-வது ஆண்டு 1969–70-ம் ஆண்டின் நிர்வாக அறிக்கையையும் தந்திருக்கிறார்கள். மிகச் சிறப்பாக அந்த அறிக்கை விளங்குகிறது. குறிப் பாக மின் வாரியத்தின் வரலாற்றையே அது படம் பிடித்துக் காட்டக் கூடிய தாக இருக்கிறது. இவ்வளவு சிறப்பாகத் தந்திருக்கின்ற அந்த நிர்வாக அறிக்கை தமிழில் இல்லையே என்ற குறை இருக்கிறது. நம்முடைய பொது மக்கள் உளம் நோக்கிப் போகின்ற புனிதத் திருக் கூட்டத் தளநாயகன் டாக்டர் கலைஞர், தமிழ்வேள் தலைமையில் உள்ள நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ராமன் அவர்கள் வழங்கக் கூடிய மின்வாரியத்தின் நிர்வாக அறிக்கை தமிழில் இல்லையே என்ற குறை எனக்கு. (தமிழ்ப் பதிப்பு தரப் பட்டது.) தமிழிலே அந்த அறிக்கை தந்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே தமிழில் தரப்பட்டது எனக்குப் பூரிப்பைத் தருகிறது.

1971-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளில் மின்வசதி அளிக்கப்பட்ட அரிசன குடியிருப்புகள் 11,905. 1972-ல் மேலும் 6,200 குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கப்பட இருக்கிறது. 1972 டிசம்பருக்குள் எல்லாக் குடியிருப்பு களுக்கும் அந்த வசதி அளிக்கப்படும் என்ற செய்தியை அந்த நிதி நிலை அறிக்கை காட்டுவது மெத்த மகிழ்ச்சியைத் தரும் செய்தியாக இருக்கிறது. இந்த நாட்டில் இல்லாதவர்கள், எளியவர்கள், வறுமையில் வாடுகின்றவர்கள், கந்தை அணிந்தும் இரு கையால் மெய்யினைப் போர்த்தியும், மொந்தையிற் கூழை மொய்த்துக் குடித்தும் ஓலை வேய்ந்த குடிசையில் ஒண்டியும் வாழ்ந் திடும் சேரி வாழ் ஆதி திராவிடர்க்குக் குடியிருப்புக்கு வழி செய்திருப்பது மெத்தப் பாராட்டத் தக்கது. டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மின் சாரத்தைக் குறித்துப் பாடிய ஒரு கவிதையை நான் இங்கே நினைவுபடுத்துவது மிகச் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பொன்சாரம் இட்டிழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி
எழுபத்திரெண்டுக்குள் எங்கணுமே மின் இணைப்பு
என் தமிழ்த் திரு நாட்டில் ஏற்படவே உழைக்கின்றோம்

என்று டாக்டர் கலைஞர் அவர்கள் கவிதையில் குறிப்பிட்டது போல், இன்றைய தினம் மின் வாரியம் செயல்பட்டு வருவதைக் கண்டு நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொறுப்பில் இருக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்குப் பொருளாதார பிரச்னை மட்டும் காரணம் அல்ல. சிறிய கோளாறுகள் ஏற்பட்டால், அங்கே இருக்கக்கூடிய மாநகராட்சி மன்ற அதிகாரிகள் நிர்வாகத்தை உடனடியாகச் சீர்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட புதிய மாநகராட்சி மன்றம் இந்த அரசாங்கத்தில் மேலும் நன்மை பெற வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முயற்சிகளை மறு பரிசீலனை செய்து மாநகராட்சி மன்றத்தின் பொறுப்பில் இருப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு தனியார் மின்சார நிறுவனங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் என்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் சபையில் எடுத்துச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். முதலில் தனியார் நிறுவனங்களை மேற்கொண்டு பிறகு பொது நிறுவனங்களை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. காட்டூர் கோபால்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குவதற்கு அனுமதி அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றுகின்றபோது பெரும்பாலும் வரவேற்றுப் பேசியிருக்கின்றார்கள். நானும் அந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்வாரியம் முன்னேறுகின்ற ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது. இந்த மின்சாரத் துறை வெகு வேகமாகவும் நல்ல முறையிலும் பணியாற்றிக் கொண்டு வருகிறதென்பது எல்லோரும் தெரிவித்திருக்கின்ற கருத்தாகும். வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் வளர்ச்சி பெறவும், மக்களுடைய அன்றாடத் தேவைக்கும் மின்சாரம் மிக மிக இன்றியமையாததாகும். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செய்து வருகின்ற நம்முடைய மின் வாரியத்தின் பாங்கு குறித்து அனைவரும் பாராட்டியிருப்பது மிகப் பொருத்தமானதாகும். 1967-ம் ஆண்டுக்கு முன்னால் ஆண்டு தவறினாலும் மின்சார வெட்டு தவறாது என்ற வகையில், தொழிலாளர்களுக்குப் பெரும் பாதகத்தைத் தந்துகொண்டிருந்த நிலைமை மாறி, மறைந்த முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இந்த மின் வெட்டே இல்லை என்ற ஒரு நிலையை உருவாக்கியிருப்பது கண்டு தொழிலாளர்கள் பெரிதும் உவகை அடைந்து, தங்களுக்கு இருந்த பாதகம் துடைக்கப்பட்டு விட்டது என்று மகிழ்கிறார்கள். அதற்காக நான் இந்த மின் வாரியத்தின் பணிகளுக்காகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1972-ம் ஆண்டுக்கு முன்னதாகவே மின் இணைப்பு நாடு முழுவதும் கொடுத்தாக வேண்டும் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அந்த முடிவினை ஒட்டி எல்லாவிடங்களிலும் அதற்கான



இணைப்புக் காரியங்கள் நடைபெறுவது பாராட்டுதலுக்குரியதாகும். இந்தப் பாராட்டு விழாக்கள், நிறைவு விழாக்கள் ஊதாரித்தனமான செலவுகள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் கருத்து தெரிவித்திருந்தாலும், அவைகள் ஊதாரிச் செலவை உள்ளடக்கிய செலவுகள் அல்ல, உவகை அளிக்கின்ற விழாக்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுடைய மனப்பக்குவத்தை அறிந்து, ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வேகமாகத் தனது பணிகளைச் செய்கின்றபோது, அதிலே உயிரோட்டமாக இருந்துகொண்டு பாடுபடுகின்ற தொழிலாளர்களை இந்த நிறைவு விழாக்கள் ஊக்குவிக்கின்ற தன்மையில் அமைந்திருக்கின்றன. இந்த விழாக்கள் சிறப்பாக நடத்தப்படுவதற்குக் காரணம் விழாக்களை ஏற்பாடு செய்வதிலும், அவைகளை விமரிசையாகக் கூட்டுவதிலும் கை தேர்ந்த கட்சி, வல்லமை படைத்த இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துவது தான். மேலும் உதகை நிறைவு விழா உண்மையிலேயே ஒரு பெரு விழாவாக எடுத்துக் காட்டியது. அங்கே தொழிலாளர்களை உவகைக்கு ஆட்படுத்தியது மட்டுமல்லாமல் மேலும் மேலும் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் காரியங்கள் நடைபெற்றன. அந்த வகையில் பணியாற்றினால் தான், பணியாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்பதை உதகை நிறைவு விழா தெரிவித்தது. அதன் அடிப்படையில்தான் இந்த மன்றத்தில் பேசிய அத்தனை பேரும் வாரியத்தைப் பாராட்டுகிறபோது வாரியத்தினை நிர்வகிக்கின்ற அமைச்சர் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அமைச்சர் பாராட்டப்படுவதாக இருந்தால், அங்கே பணி புரியும் 84,000 தொழிலாளர்களும் அந்தப் பாராட்டுதலுக்கு ஆளாகின்றார்கள். அந்த வகையில் இந்த மின் வாரியத்தின் பணிகள் மிகச் சிறப்பாகவும் நல்ல முறையிலும் நடைபெற்று வருகின்றன. இந்த வாரியத்தில் 84,000 தொழிலாளர்கள் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். 84,000 பேர் பணி புரிகின்ற இந்த நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்குமிடையே மிக அமைதியான சுமுகமான உறவுநிலை இருப்பதை இந்த நிதி நிலை அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே தலையீடு இருப்பதாகவும் அது கூடாதென்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சாமிநாதன் அவர்கள் மன்றத்தில் தெரிவித்தார்கள். ஆனால் இதே மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் தொழிலாளர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கை விடவேண்டுமென்ற அளவிலே தனது உரையில் கருத்து தெரிவித்தார்கள். இந்த இரண்டையும் பார்க்கிறபோது ஏதாவது குறை தெரிவிக்க வேண்டுமே என்ற வகையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இங்கே தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும், வாரியத்தின் தலைமைக்கும் இடையே சுமுகமான உறவு சீரிய வகையில் அமைந்திருக்கிறது என்பது தெளிவு. இந்த மின் வாரியத்திலிருக்கிற 84,000 பணியாளர்களுக்கும் முதன் முறையாக இந்தியாவிலேயே முன்னோடியாக ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தி, தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வாழ்வை வளம் உடையதாக்கிய வாரியத்தை நிர்வகிக்கின்ற அமைச்சர் அவர்களுக்கும் வாரியத்தின் தலைமைக்கும் எங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். இந்த மின் வாரியத்தில் உள்ள ஊழியர்களோடு நிர்வாகம் பேச்சு வார்த்தை நடத்திய பாங்கும், ஊதியக் குழு பரிந்துரைகள் விரைவில் அமுல்படுத்திய முறையும் தொழிலாளர்கள் உள்ளத்தில் என்றென்றும் நின்று பாராட்டத்தக்க வகையில்

அமைந்திருந்தன. தாற்காலிக தினக் கூலிகளாக 34,000 பேர் இன்றையதினம் இந்த வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 31,000 பேர் 1969-ல் இருந்தார்கள். இந்த 34,000 பேர்களும் இந்த மின் வாரியத்தின் நிர்வாகத்தால் அளிக்கப்பட்ட ஊதிய உயர்வால் முன்பு தினம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்வு பெற்றிருந்தவர்கள் 1971 ஏப்ரல் 1-ம் தேதி முதல் மேற்கொண்டும் 25 காசு உயர்வாகப் பெற்று வருவது குறித்து இந்த அரசை, தொழிலாளர் அரசை, இந்த வாரியத் தலைமையை நான் பாராட்டக் கடமைப்பட்டவன். 1,950 பேர்களுடைய பதவியை ஒழுங்கு படுத்தி அதனால் அவர்கள் பயன் அடைந்ததும் வரவேற்கத்தக்க அம்சங்களில் ஒன்று. அதே போல் ஊழியர்களுக்கு மலை வாழ்வுப் படி 10 சதம் உயர்த்தி அளித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும். தொழிலாளர்களுக்குப் பயணப்படியை உயர்த்தித் தந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இயக்குதல் பராமரிப்பு பிரிவுகளில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் 1949 ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் 240 நாளைக்கு மேல் பணியாற்றினால், அவர்களுக்கு உதவித் தொகை, வருங்கால வைப்பு நிதி—இந்தப் பயன்கள் அளிக்க உறுதி தரப்பட்டிருக்கிறது. இதைச் சொல்லுகிறபோது, இந்த மின் வாரியத்தில் பல ஆண்டுக் காலமாக தினக் கூலித் தொழிலாளர்களாகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் 1967-க்கு முன்னால் சொந்தப் பெயரில் 240 நாள் சேர்ந்தாற்போல் வேலை செய்ய முடியாது. 239 நாட்கள் சொந்தப் பெயரில் வேலை செய்தால், 240-வது நாள் தாண்டிப்போனால் ஒன்று அவனுடைய பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும், அல்லது 240-வது நாள் வேலைக்கு வரக் கூடாது. அந்தத் துண்டிப்பு ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் வேலைக்கு வர வேண்டும். இங்கே இப்பொழுது தாற்காலிக தினக் கூலிகளுக்கு 1967-க்குப் பின்னால் ஒரு புது பட்டியலே உண்டாக்கி வைத்திருப்பது மட்டுமல்லாமல், துணிச்சலோடு அவர்களே ஒரு சங்கத்தை அமைத்து அவர்கள் நடத்தும் பாங்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிக்குப் பின் வந்திருக்கிற காரணத்தால், இந்த மாமன்றத்தில் அந்த 34,000 தொழிலாளர்களுடைய சார்பில் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவன் ஆவேன். அந்த 34,000 தினக் கூலித் தொழிலாளர்களும் இன்றையதினம் தங்களுக்கு ஒரு சங்கத்தை அமைக்கின்ற பாங்கையும், பயம் இல்லாத தன்மையையும் நல்ல தன்னம்பிக்கையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததற்கு பின்னால்தான் பெற்றிருக்கிறார்கள். இந்தப் புதிய மாறுதலாலேயே தான் தாற்காலிக தினக் கூலித் தொழிலாளர்களுக்குக் கூட அன்றாடம் ஒரு ரூபாய் உயர்வு என்கிற ஊதிய உயர்வுக்கு உறுதி சொல்லப்பட்டதும் அதை ஏற்றுக்கொண்ட பாங்கினையும் இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டவன். தொழிலாளத் தோழர்களுக்கு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 4 சதம் போனசை, 5 சதமாகக் கூடுதலாக்கிக் கொடுத்ததற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வரவேற்றது போல் நானும் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

ஆனாலும் இந்தத் தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் குறைந்தபட்ச போனசாக 8 1/3% வேண்டும் என்று டில்லியில் இத் தொழிலாளர் மாநாட்டில் நம்முடைய அரசின் சார்பில் நம் அரசின் எண்ணத்தை அங்கே பிரதிபலித்திருக்கிறார். இது எதைக் காட்டுகிறது என்றால், நம்முடைய அமைச்சரவைக்கு குறைந்தபட்ச போனசாக இன்னும் கூடுதலாகத் தரப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கம் இருந்தாலும், சட்டம் டில்லியில்



மாற்றப்பட வேண்டும். இதற்கும் மேலாகக் கிடைக்க வேண்டுமானால், சட்டத் திருத்தத்தால் தடைப் படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். அடுத்த ஆண்டு இந்த நிதி நிலை அறிக்கையில் விவரங்கள் தருகிறபோது, நிச்சயமாக இதை விட அதிகமாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த மின் வாரியத்தில் 84,000 தொழிலாளர்கள் பல்வேறு சங்கங்களில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பல்வேறு தொழிற் சங்கங்கள் இருப்பது உண்மை. அந்த மின் வாரியத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்டது, 200-க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டது தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம். இதனை அங்கீகரிக்க வேண்டுமென்று வேண்டுகோளையும் மின் வாரியத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மின் வாரியம் ஆவன செய்ய வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தச் சங்க அங்கீகாரத்துக்கு "செக் ஆப் சிஸ்டம்", உள்ளபடியே உறுப்பினர்கள் எந்தச் சங்கத்தை விரும்புகிறார்கள் என்பதற்கு அவர்களுடைய வருமானத்திலேயே, அதாவது சம்பளத்திலேயே சங்கத்துக்குச் செலுத்துகிற உறுப்பினர் கட்டணத்தைப் பிடிக்கச் செய்து, அதில் எந்தச் சங்கத்துக்கு மிகப் பெரும்பான்மை இருக்கிறதோ அந்தச் சங்கம் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று நான் வாரியத்தின், அரசின் மேலான கவனத்துக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இது தவிர, அங்கு அங்கீகரிக்கப்பட்ட சம்மேளனத்துக்கு அந்தக் காலம் காலவாதியாகியிருக்கிறது. எனவே காலாவதி ஆகி விட்ட நிலைமையில் இந்தச் சங்கத்தை அங்கீகரிப்பதில் குறுக்கீடு ஏதும் இருப்பதற்கில்லை என்று நான் இங்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அங்கே பணியாற்றுகிற ஊழியர்கள் அக்கௌன்ட்ஸ் டிபார்ட்மெண்டில் உட்கார்ந்து கொண்டு கோஷம் போடுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள். 84,000 பேர் பணியாற்றுகிற அந்த மிகப் பெரிய வாரியத்தில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கலாம். ஆனாலும் அங்கே இருக்கின்ற ஊழியர்கள் அனைவரும் பொதுத் துறையில் எல்லாத் துறைகளையும் விட பரவாயில்லை என்று எல்லோராலும் பாராட்டத் தக்க வகையிலும், வேகமாகவும், முறையாகவும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே தான் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, இந்த வாரியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், வாரியத் தலைவர் அவர்களையும் அனைத்துத் தொழிலாளர்களையும் நான் பாராட்டுகிறேன்.

தமிழ் நாடு மின்சார வாரியம் ரூபாய் 400 கோடிக்கு மேலே மூலதனமாகக் கொண்ட ஒரு மிகப் பெரிய பொதுத் துறை ஆகும். இந்த நிர்வாகம் சீராக நடைபெற தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கு மேலும் மேன்மை தரும் வகையில் நிர்வாகப் பொறுப்புகளில் தொழிலாளர்கள் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அடிப்படையில் வாங்குவதால் நஷ்டம் ஏற்படும் வாய்ப்பு அதிகப்படுகிறது என்பதையும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, "லைன் லாசஸ்" என்பதைப் பற்றிப் பேசினார்கள். நான் அறிந்த வரையில் "ஜெனரேஷன் லாஸ்" என்று சொல்லக்கூடிய உற்பத்தி நஷ்டம் நம்முடைய மாநிலத்தில் அனல் மின்சாரத்திற்கு 10 சதமும் புனல் மின்சாரத்திற்கு 1 சதமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதை வாரியத்திலுள்ளவர்கள் கண்காணிக்க வேண்டும். கம்பித்தொடர்களின் மின் இழப்பு 17.3 என்ற அளவில் ஏற்படுகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி ஆண்டுக்காண்டு 0.5 சதவிகிதம் குறைந்து வருகிறது என்று சொன்னார். கணக்கிட்டுப்பார்த்தால் ஆண்டுக்கு இரண்டு சதம் குறைந்தால், ஒரு கோடியே இருபது லட்சம் மீதமாகும் வாய்ப்பு நமக்கு இருக்கிறது என்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஒரு சதம் அல்லது இரண்டு சதம் குறைந்தாலும், அரசாங்கத்திற்கு மிகுந்த அளவில் லாபம் இருப்பதால், அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்படி வெளியாரிடமிருந்து வரவேண்டிய பாக்கிகளைப் பார்க்கிற போது, 1969–70-ல் இரண்டு கோடியே 60 லட்சம் ரூபாய் வரவேண்டியிருந்தது. அதற்கு முந்தைய ஆண்டில் கிட்டதட்ட ரூ. 1 கோடி 77 லட்சம் வரவேண்டியிருந்தது. இந்த ஆண்டு பார்க்கிறபோது, கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மின்சாரம் வாங்கியவர்கள் பணம் கொடுப்பதில் அதிகத் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. தொழில் துறையிலிருக்கிறவர்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்களைக் கட்டாமல் வைத்திருக்கிறார்கள். பெரிய உற்பத்தியாளர்கள், 10 லட்சம், 15 லட்சம் வரையில் கூட மின்சார வாரியத்திற்குப் பணம் கட்டாமல் இருக்கிறார்கள். அப்படிக் கொடுக்காமல் இருப்பதால், என்ன லாபம் என்று பார்த்தால், தாமத சர்சார்ஜ் போட்டால் கட்டிவிட்டு, அந்தப் பணத்தை வியாபாரத்தில் வைத்துக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது 10 சதம், 15 சதம் வட்டி கொடுத்தாலும், பணம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்படி 10 லட்சம், 15 லட்சம் என்று வைத்திருந்தால், அதனால் வருகிற லாபம் தனிப்பட்ட முதலாளிகளுக்கு சர்சார்ஜ் கட்டுவதை விட அதிகப்படியாக பலன் தரும் என்று கணக்கிடுகிறார்கள்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு என்ன அடிப்படையில் மின் கட்டணம் விதிப்பது என்பதைப்பற்றிப் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. அதைப் பற்றிப் பலர் பேசினார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னேன் விளைகின்ற பொருள்களின் அடிப்படையில் மின் கட்டணம் விதிக்க வேண்டுமென்று சொன்னேன். எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் ஒரு எக்கருக்கு 200 ரூபாய் வீதம் ஒரு வேலி என்று சொல்லுவார்கள் அது 6 எக்கருக்குச் சமம்—1,200 ரூபாய் தான் நெல்லுக்குக் கிடைக்கும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு எக்கருக்கு 2,000 ரூபாய் கரும்பு போன்றவற்றில் கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பார்க்கிற போது 9 பைசா அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சமமாகப் போட்டால், சரியான கணக்காக இராது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நான் பேசுகிறபோது எடுத்துச் சொன்னதற்கு, பயிர்களைப்



பார்த்துக் கணக்கிடுவது எப்படி சாத்யம் என்று கேட்டார்கள். ஒரே இடத்தில் நெல் போடுவார்கள். அதே நிலத்தில் மற்றொரு தடவை மஞ்சள் அல்லது கரும்பு போடுவார்கள். அதைக் கணக்கு வைத்துக்கொண்டிருக்க முடியுமா என்று கேட்டார்கள். தற்பொழுதுள்ள விவசாய வருமான வரிக் குறிப்புகளிலிருந்து இப்பொழுது நிர்ணயிக்க முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உற்பத்தியாகும் பொருள், அதனால் கிடைக்கும் லாபம் என்ற அடிப்படையில் மின் கட்டணம் விதிப்பது தான் நியாயமானது. வீடுகளில் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு இப்பொழுது விதிக்கப்படும் கட்டணம் விசித்திரமான நிலைமையில் இருக்கிறது. 50 யூனிட்வரையில் 32 பைசா. அதற்கு மேல் 50 யூனிட் வரை 27 பைசா. அதற்கு மேல் உள்ளதற்கு 24 பைசா. இப்படியாக 32, 27, 24 என்று குறைந்து கொண்டேபோகிறது. எழை மக்களாக இருக்கிறவர்கள் 50 யூனிட்டு வரையில் தான் உபயோகிக்க வசதி உடையவர்கள். ஆனால் அவர்களுக்கு 32 பைசா என்ற நிலை இருக்கிறது. பணக்காரராய் இருக்கிறவர்கள் யார் அதிகப்படியாக மின் சக்தியை உபயோகிக்கும் சக்தி உடையவர்கள் என்று கருதிக்கொண்டிருக்கிறோமோ அவர்களுக்கு அதிகம் போடுவதற்குப் பதிலாக, குறைத்து இந்த 32, 27, 24 என்று இருப்பதை மாற்றி 24, 27, 32 என்று போட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே அடிப்படையில் 'ஆல் எலக்டிரிக் ஹோம்' என்ற அளவில் பிளாக் சார்ஜையும் சேர்த்து இப்பொழுது 150 யூனிட் வந்ததும், கிட்டதட்ட 24 பைசாவாக இருக்கிறது. 150 யூனிட்டுக்கு மேல் போனால், 24 பைசா 17 பைசாவாகக் குறைகிறது. இவர்களுக்குள்ள இந்தச் சலுகையையும் மாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவாக மின்சாரத் துறை தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள், அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று கூறினார்கள். சலுகைகள் கொடுப்பதைப்பற்றி ஆட்சேபணையில்லை. தொழிலாளர்கள் தங்களது வேலையை ஒழுங்காகச் செய்கிறார்களா என்று கண்காணிக்கும் பொறுப்பும் அரசாங்கத்திடம் அவசியம் இருக்க வேண்டும். மின்சார இலாக்காவில் உள்ளவர்கள் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் மீட்டர் போடும் விஷயத்திலே நடந்துகொண்ட விதத்தை உதாரணத்துக்குச் சொல்கிறேன். மின்சார இலாக்காவில் மீட்டர் இல்லை, நீங்கள் வாங்கிக் கொடுத்தால் நாங்கள் போடுகிறோம் என்று சொன்னார்கள். நாங்களே வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்லி, வாங்கிக் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொடுத்த பிறகு, ஒரு மீட்டருக்கு மின்வாரியக் கணக்கில் பதிந்துவிட்டதாகப் பின்னர் அறிந்தேன். ஒரு வீட்டுக்கு வேண்டிய மின்சார ஒயர் வாங்கிக் கொடுக்கும்படி தனிப்பட்ட முறையில் வாங்கிகொள்கிறார்கள். ஒரு தடவை பார்ட்டியிடமிருந்தும், மற்றொரு தடவை ஸ்டோர்ஸ்-ல் இருந்தும் வாங்கிக்கொண்டு வந்து போடுகிறார்கள். தனிப்பட்ட முறையில் வாங்கியதற்குக் கணக்கில்லை. இந்த மாதிரிப்பல குற்றங்கள் நடைபெறுகின்றன. கொடுக்கப்பட வேண்டிய பொருள்களுக்கும் ஊழியர் வாங்கியதற்கும் அலுவலகத்தில் கணக்கிருக்கிறதே தவிர, அதை அவர் உபயோகித்தாரா என்பதற்கு எந்தக் கண்காணிப்பும் இல்லை.

அடுத்தபடியாக, இந்த ஊழியர்கள் திருடுகிறார்கள் என்றால், உடனே அவர்கள் மீது அதிகாரிகளால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட முடிய

நிர்வாகத்தில் பங்கு என்றால் மேல் தட்டில் மட்டும் இல்லாமல், நிர்வாகத் பங்கு தின் ஒவ்வொரு மட்டத்திலும் தொழிலாளர்களுக்கு இடம் அளிக்கிற அமைய வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிரந்தரமான ஊழியர்களைத் தேர்வு செய்யும் போதும், எழுத்தர், காவலர் போன்ற பொறுப் புக்கு ஆட்களை எடுக்கும்போதும், ஏற்கனவே அன்றாட தினக் கூலி ஊழியர் களாகப் பணியாற்றுகிறவர்களை அமர்த்திக்கொள்ள வேண்டும். தேவைப் பட்டால், வயது வரம்பினைத் தளர்த்தி அவர்களை நிரந்தர வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏறத்தாழ 34,000 பேர் தினக் கூலித் தொழிலாளர்களாக அங்கே பணி யாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வாரிய நிதிநிலை அறிக்கையில் மேலும் 25,000 பேருக்கு 5 ஆண்டுகளில் வேலை வாய்ப்பு உருவாகும் நிலைமை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற இந்த நேரத்தில் இது வரவேற்கக் கூடிய ஒன்று தான். அதே நேரத்தில் இங்கே பணியாற்றுகிற இந்த 34,000 பேருக்கும் இந்தத் திட்டத்தில் முடிந்த அளவுக்கு நிரந்தரவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1967-க்கு முன்னாலே கட்டுமான திட்டத்தில் பணியாற்றுகிறவர்கள் அந்தத் திட்டம் முடிந்து விட்டால் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டுமென்ற நிலை இருந்தது. ஆனால் 1967-க்குப் பின்னாலே அந்த நிலை இல்லாது அவர்கள் வேறு புதிய திட்டங்களில் மாற்று வேலைக்குச் செல்வதற்கான வாய்ப்புத் தரப்பட்டிருக் கிறது. இதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவையும் தெரிவித்து, அந்த 34,000 பேர்களையும் இதுவரையில் பாராட்டத் தக்க வகையில் பராமரித்துள்ள இந்த வாரியம் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் அந்தப் பணியாளர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்து, மிகச் சிறப்பாக பணியாற்றுகிற அரசுக்கும் மின் வாரிய அமைச்சர் அவர்களுக்கும், அதே போல் வாரியத்தின் தலைவர் அவர்களுக்கும், வாரியத்தில் பணியாற்றுகிற 84,000 ஊழியர்களுக்கும் நன்றி கூறி என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. ஆர். தர்மலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையைக் குறித்தும் பாராட்டிப் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாடு மின்சார வாரி யத்தை வரவேற்றுப் பேசினார்கள். ஆனால் நம்முடைய மாற்றுக் கட்சி நண்பர் கள் கடைசியாக குறை சொல்ல வேண்டும் என்பதற்காக குறை கூறிப் பேசி யிருக்கிறார்கள்.

இங்கே தந்திருக்கும் குறிப்பைப் பார்த்தால், அவர்கள் குறை பேசியதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றுமில்லை. இதற்கு முன்பு ஆட்சியிலே அமர்ந்திருந்தவர்கள் 15 ஆண்டுக் காலத்தில் 22,137 கிராமங் களுக்கு மின்சாரம் வழங்கினார்கள். ஆனால் நம்முடைய தி.மு.க. ஆட்சி, மாண்புமிகு பேறிஞர் அண்ணா அவர்களும், அதைத் தொடர்ந்து இன்றைக்கு ஆட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர் தமிழ்வேள் டாக்டர் கலைஞர் அவர்களும்



இந்த 4 ஆண்டுக் காலத்தில் 20,000 கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். கடந்த 15 ஆண்டுக் காலத்தில் ஆட்சி நடத்தியவர்கள் கொடுத்தது 22,137 கிராமங்களுக்கு, ஆனால் 4 ஆண்டுக் காலத்திலே தி.மு.க. கொடுத்தது 20,000-க்கு மேலே.

இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும் நேரத்தில் அவர்கள் காழ்ப்புணர்ச்சியில் இப்படிப் பேசி வருகிறார்கள் என்று தெரிகிறது. 1971-ம் ஆண்டு நடைபெற்ற உப தேர்தலிலே கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்த காரணத்தால், கிராமத்திலுள்ள மக்கள் பெருவாரியாக ஆதரவு தந்திருக்கிறார்கள். சென்ற தேர்தலிலே தி.மு.க. வுக்கு மக்கள் பெருவாரியாக வாக்களித்து 184 பேரைச் சட்ட மன்றத்துக்கும் 24 பேரை டெல்லி நாடாளுமன்றத்துக்கும் அனுப்பினார்கள். இதைப் பார்க்கிற நேரத்தில் தான் அவர்களுக்குக் கொஞ்சம் காழ்ப்புணர்ச்சி ஏற்படுகிறது.

மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விழா நடத்துவது சரியில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தெரிவித்தார்கள். நான் மின்சார வாரியத்திற்கும், மின்சார அமைச்சர் மாண்புமிகு திரு. ராமன் அவர்களுக்கும், இது போன்ற விழாக்களை இன்னும் பெருமையாகக் கொண்டாட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, எங்களுக்குக் காழ்ப்பு உணர்ச்சி ஏற்படவில்லை. நாங்கள் திட்டமிட்டுச் செய்த காரியங்கள் பலன் கொடுப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறோம், காழ்ப்பு உணர்ச்சி கொள்ளவில்லை.

திரு. ஆர். தர்மலிங்கம்: நான் பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன். ஆனால் அவர்கள் மின்சார வாரியம் ஏற்பாடு செய்த விழாவிற்கு இவ்வளவு செலவு செய்யலாமா என்று குறிப்பிட்டார். இது அவ்வளவு பொருத்தமானதாக நான் கருதவில்லை. பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து இந்த விழாவிற்குச் செலவு செய்யப்படவில்லை. இந்த வாரியத்தின் பணத்திலிருந்து இந்த வாரியத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தனிப்பட்டவரின் பெயரை வைத்திருக்கிறார்கள். அது எந்த வகையிலே பொருத்தமுடையது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த விழாவிற்கு வாரியத்தின் பணமோ, அரசாங்கத்தின் பணமோ செலவு செய்யப்படவில்லை. இந்த மின்வாரியம் மின்சாரத்தை விரிவு படுத்தியதால் பலன் பெற்ற தனிப்பட்டவர்கள் நிதி கொடுத்து, அவர்களாக முன்வந்து நன்கொடை கொடுத்து அதிலிருந்து இந்த விழாவிற்கு செலவு செய்யப்பட்டு அது சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்றால், அது புள்ளி விவரங்களைப் பொறுத்துத் தான் சொல்லலாம் என்று கருதுகிறேன். அதே போல மின் இணைப்பு அளிக்கப்படுவதிலே வேளாண்மைக்கு விசை ஏற்றங்களுக்கு 1951-ல் இருந்து 1967 வரையில் 15 ஆண்டுக்காலத்தில் அவர்கள் ஆட்சி செய்தபோது 2 லட்சத்து 56 ஆயிரத்து 594 மின் இணைப்புகள் தான் கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய டாக்டர் தமிழவேள் கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொறுப்புக்கு வந்த

மத்திய அரசினரைக் கேட்டுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தில் லைன் லாஸ் என்று சொல்லுகிற அளவில் 17% மின்சாரம் வீணாக்கப் படுகிறது. ஒவ்வொரு வருஷமும் புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள். எந்த வருஷத்தைப் பார்த்தாலும், 17% அளவில் இருக்கிறதே ஒழிய, 17%-ஐக் குறைக்கலாம் என்ற எண்ணம் வாரியத்திலுள்ள அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்று நினைத்தால், அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இருப்பதாகவே தெரியவில்லை. ஏராளமான கிராமங்களில் மின் கம்பங்களிலிருந்து நேராகவே மின்சாரத்தை பம்புசெட்டுகளுக்கு எடுத்துவிடுகிறார்கள். சில பகுதிகளில் மீட்டரைத் திருப்பி வைத்து மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள். இப்படிப்பட்ட திருட்டுகள் ஏராளமாக நடைபெறுகின்றன. அப்படி நடைபெறுகிற இடங்களில் உள்ள அதிகாரிகளின் மேல் புகார் செய்தால், அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்களா என்றால், அதற்குப் பதிலாக யார் புகார் செய்கிறார்களோ அவர்கள் சொல்லுகிற காரியங்களைத் தடைப்படுத்துகிற நிலைதான் இன்றையவரையில் மின்சார வாரியத்தில் இருக்கிறது. எப்படியும் 'லைன் லாஸ்' என்ற இந்த மின்சார சேதாரத்தைக் குறைக்க அதிகாரிகள் முயற்சி எடுக்க வேண்டும். அதற்கேற்ற நிலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. கே. பொன்னுவேலு ஒரு கருத்தைக் கூறினார்கள். ஒவ்வொரு டிரான்ஸ்பார்மரிலும் மீட்டர் இருக்க வேண்டும். எவ்வளவு மின்சாரம் செலுத்தப்படுகிறது, எவ்வளவு வினியோகிக்கப்படுகிறது, எவ்வளவு அதில் சேதாரம் ஏற்படுகிறது என்பதைக் கணக்கிட வேண்டுமென்று சொன்னார்கள். அந்த மின்சார சேதாரத்தைத் தவிர்க்க வேண்டுமென்ற கருத்தையே இங்கு பேசிய உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள். அதை மின்சார வாரியம் கணக்கில் எடுத்து, சேதாரத்தைத் தவிர்ப்பதில் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் அவர்களைப் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மின்சார வினியோகம் சரியாக நடைபெற வேண்டுமென்றால், இப்போது ஒரே நிர்வாகத்தின் கீழ் மின் உற்பத்தியும் வினியோகமும் இருக்கின்றன. இதனால் பலவிதமான சிக்கல்கள் ஏற்பட்டு, எந்தக் காரணமாக இருந்தாலும், எந்த ஒரு கிராமத்திலும் பெரிய அளவில் மின்சாரத்தை உபயோகப்படுத்துகிற காரியமானாலும், சென்னைக்கு வந்து சீப் என்ஜினியர் அங்கீகாரத்தைப் பெறவேண்டிய அவ்சியம் இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு இந்த மின்சார வினியோகப் பொறுப்பு முழுவதையும் ஆந்திராவில் கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப் போலவே மைசூரில் மின்சார வினியோகத்திற்கு ஒரு தனி வாரியத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், மின்சார வினியோகத்தை நகர சபைகளிடமும் ஊராட்சி ஒன்றியங்களிடமும் ஒப்படைத்தால், அந்த அமைப்புகளுடைய நிதி நிலை வசதிகளும் ஓரளவு நல்ல முறையில் இருப்பதற்கு வசதியாக இருக்கும். மின்சாரத் திருட்டுகளைக் கண்காணிக்கின்ற ஒரு நிலைமையும் ஏற்படும். குறிப்பாக கோவை, மதுரை, பொள்ளாச்சி போன்ற நகரங்களில் மின்சார வினியோகத்தை நகரசபைகளே நடத்தி வருகின்றன. எந்த ஒரு வீட்டில் மின்சாரத் திருட்டு ஏற்பட்டாலும், மின்சாரம்





தவறாக உபயோகித்தாலும், உடனடியாகக் கவுன்சிலர்களுக்கு வந்து புகார்கள் செய்கிறார்கள். அவர்கள் நேரடியாகச் சென்று அந்தக் காரியத்தைத் தவிர்க்க முடிகிறது. இன்றையதினம் கிராமங்களில் அப்படிப்பட்ட நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள் கையில் மின்சார வினியோகப் பொறுப்பைக் கொடுத்தால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 300-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்கள் அந்தத் திருட்டுப் போவதைக் கண்காணிக்கும் நிலைமை ஏற்படும். இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு மின்சார வினியோகத்தைப் பொறுத்த வரையில், ஊராட்சி ஒன்றியங்களிடமும் நகராட்சி மன்றங்களிடமும் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். ஏற்கன்வே நல்ல முறையில் நடைபெற்றுவருகிற கோவை, மதுரை, பொள்ளாட்சி, கரூர் நகரசபைகள் நடத்தி வருகிற மின்சார வினியோகத்தை அரசாங்கம் எடுப்பதாக ஒரு அறிவிப்பிலிருந்து தெரிகிறது. அந்த முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மின்சார இலாகாவைப் பொறுத்த வரையில் சாமான்கள் வாங்குவதில் எந்தவிதமான கண்காணிப்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. என்ஜினியர்கள் பார்த்து இந்த ஆண்டு இந்த கம்பெனியில் வாங்கலாம், இவற்றில் இவ்வளவு வாங்கலாம் என்று கணக்குப் போட்டு வாங்குகிறார்களே தவிர, அதைக் கண்காணிக்கின்ற அளவில், நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எந்த ஒரு அமைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இதில் கொஞ்சம் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். மின்சார இலாகா வாங்குகிற சாமான்களைக் கண்காணிக்க, தனியாக ஒரு அமைப்பு அரசாங்க மட்டத்திலாவது அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப் போலவே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள், "எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் இந்த மாநிலத்தில் வந்து தொழில்களை ஆரம்பியுங்கள். உங்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறோம்" என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆனால் மின்சார இலாகாவுக்குத் தேவையான சாமான்களைத் தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய கம்பெனிகளிடத்தில் அந்த மின்சார சாமான்களை நம்முடைய வாரியம் வாங்குகிறார்களா என்றால் இல்லை. இன்னும் வெளி மாநிலங்களிலுள்ள கம்பெனிகளில் மின்சார வாரியத்திற்குத் தேவையான சாமான்களை வாங்குவதில் அக்கறை காட்டுகிறார்களே தவிர, தமிழகத்திலுள்ள கம்பெனிகளில் வாங்குவதில்லை. குறிப்பாகக் கூறவேண்டுமென்றால், 1972-ம் ஆண்டுக்குள் தமிழகம் முழுமையாக மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லுகிறோம். பல்புகளைப்பற்றிச் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஒரு பல்பு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான ஒரு திட்டம் போட்டு, ஒரு பல்பு தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். 1972-ம் ஆண்டில் தமிழகம் பூராவும் மின்சாரம் கொடுத்த பிறகு எதற்காக பல்பு தொழிற்சாலை தேவை? அது பல்பு ரிப்பேர் செய்யக்கூடிய தொழிற்சாலையாக இருக்குமேயன்றி உற்பத்தி செய்யப் போகிறார்களா என்று அதிகாரிகள் சிந்திக்க வேண்டும். அரசாங்கம் இதைக் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் வெளி மாநிலங்களிலிருந்து பல்புகளை வாங்குவதில் அதிகாரிகள் அக்கறை காட்டுகிறார்களே தவிர, சமீபத்தில் ஒரு பல்பு தொழிற்சாலையை அமைத்து, நமக்குத் தேவையான பல்புகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அதிகாரிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த பல்பு தொழிற்சாலையை

**திரு. எஸ். எஸ். தென்னரசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய மின்சாரக் கொள்கையை வரவேற்று கடந்த இரண்டு தினங்களாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். பாராட்டுவது கூடாது என்ற கருத்தைக் கொண்ட அரசியல் வாதிகள் கூட மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், தங்களுடைய இதயத்தை மறைக்க முடியாத அளவுக்கு பாராட்டுரை நல்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். கடந்த 40 ஆண்டுக் காலமாக மின்சார வாரியமானது செய்திருக்கக்கூடிய சாதனைக்கு ஈடாக கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழக அரசு அந்தச் சாதனைகளைச் செய்து முடித்திருக்கிறது. எந்த நாட்டிலேயும் இல்லாத அளவுக்கு ஒரு அரசாங்கம் மின்சார வாரியத்துக்கென ஒரு கொள்கையை வகுத்து, 1972-க்குள் தமிழ் நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விளக்குகள் போட்டுவிடுவோம் என்று சொல்லுகிற அளவுக்கு எந்த நாட்டிலும் ஒரு அரசாங்கம் பிரகடனம் செய்யவில்லை. அந்த அளவுக்குப் பெருமை மிக்க அரசாங்கமாக, சாதாரணக் குடிசையில் கூட விளக்கு எரிகிற வகையில், கொள்கைப் பிரகடனம் செய்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அடுத்தபடியாக, மின்சார வாரியம் என்பது ஒரு சக்தி. அது வேளாண்மைத் துறைக்கும் தொழிற் துறைக்கும் சாதாரணக் குடும்பத்தாருக்கும் பயன்படக்கூடிய நிறுவனமாகும். தமிழ்நாட்டில் விவசாயத் துறையில் ஏறத்தாழ இந்தியாவிலே எவ்வளவு பம்புசெட்டுகள் இருக்கின்றனவோ அதில் மூன்றில் ஒரு பங்கு மட்டும் தமிழ்நாட்டில் இருக்கின்றன. மொத்தம் 14, 15 மாநிலங்களில் மொத்தமாகக்கூட கணக்குப் பார்த்தால், தமிழ் நாட்டில் தான் மிக அதிகப்படியான பம்புசெட்டுகள் சக்தி பெற்றிருப்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சாதனைக்கு ஒரு எடுத்துக்காட்டு. அது மிகப் பெரிய சிறப்பு. 1967-க்குப் பிறகு தமிழ் நாட்டில் மின்சார வெட்டு ஏற்பட்டதில்லை என்பதை மட்டும் மனதில் கொள்ள வேண்டும். 1967-க்கு முன்னால் ஒவ்வொரு ஆண்டும் மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது. அது சாதாரணப் பிரச்னை அல்ல. அதனால் எத்தனையோ விதமான காரியங்கள் தடைப்பட்டிருக்கின்றன. தொழில் துறையானாலும் சரி, உணவுத் துறையானாலும் சரி, அதைப் போல் வேறு எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், ஒரு ஆண்டு மின்சார வெட்டு ஏற்பட்டு, அதனால் பொருளாதாரப் பிரச்னைகள் பாதிக்கப்பட்டிருப்பதையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். அப்படிப் பட்ட மின்சார வெட்டு 1967-க்குப் பிறகு தமிழகத்தில் நடைபெறவில்லை என்பதை நாம் பெருமையோடு சொல்லலாம். பல நண்பர்கள் வேறு சில கருத்துக்களை வலியுறுத்தினார்கள். ஹரிஜன குடியிருப்புகளுக்கு நாம் அதிகமாகச் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும், அதற்கு என்ன காரணம் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக மின்சாரம் கொடுக்கிறபோது, கன்ஸ்டிரக்ஷன் என்ற நிறுவனத்தை உருவாக்குவதற்கு, மின்சார அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஆகக்கூடிய செலவில் ஒரு பகுதியை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருப்பதன் விளைவாகத்தான் அதிகமான குடியிருப்புகளுக்கு விளக்கு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். 1967-க்கு முன்னால் இரண்டாயிரம் குடியிருப்புகளுக்கு மட்டுமே நாம் விளக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தோம்.



ஆனால் 1967-க்குப் பின்னால் 20 ஆயிரம் கிராமங்களுக்கு அவற்றில் இருக்கக்கூடிய ஹரிஜனக் குடியிருப்புகளுக்கு இன்றையதினம் தமிழக அரசு மின்சார விளக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது. அதற்கு முக்கிய காரணம், ஏற்படக்கூடிய செலவில் ஒரு பகுதியையும் பின்பு கன்ஸ்டிரக்ஷன், மெயின்டனன்ஸ் என்று சொல்லக்கூடிய நிர்வாகச் செலவில் ஒரு பகுதியையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பது. அதன் விளைவாக சாதாரண ஏழைகள் வீட்டில், ஹரிஜன மக்களின் குடிசையில் இன்றைக்கு மின்சார விளக்கு இருப்பதைப் பார்க்கிறோம்.

மிக முக்கியமானது 1967-க்கு முன்னால் சால்வன்சி மதிப்பீட்டுத் தொகையை கோட்டாட்சித் தலைவரிடம் வாங்க வேண்டும். ஒரு சாதாரண பஞ்சாயத்துத் தலைவர் ஒரு கிராமத்துக்கு விளக்கு தேவைப்பட்டு அதற்கு சால்வன்சி பெறுவதற்கு வெகு தொலைவில் இருக்கக்கூடிய பெரிய அதிகாரியை நாடி ஏறக்குறைய 2 மாதம் 3 மாதம் அலைந்துதான் பெறவேண்டும் என்று விதி இருந்தது. இன்றைய அரசாங்கம் அதை நீக்கிவிட்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலமாக அதற்கு சால்வன்சி பெற்றுக்கொள்ளலாம் என்று இலகுவான வழியை ஏற்படுத்திக் கொடுத்து, இன்றைக்கு சாதாரண கிராமங்களில் கூட முயற்சி செய்து, நாள் கணக்கில் வேண்டாம். 2, 3 தினங்களில், விளக்கு பெறுவதற்கான வாய்ப்பு பெற்றிருக்கிறோம். இங்கே நம்முடைய நண்பர்கள் பலர் வலியுறுத்தினார்கள்.

எல்லாக் கிராமங்களிலும் மீட்டர் வைக்க வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இதில் பாதகம் இருப்பதாகச் சில நண்பர்களும், சாதகம் இருப்பதாக மற்றும் சில நண்பர்களும் எடுத்துச் சொன்னார்கள். அது வரவேற்கத் தக்கது. பஞ்சாயத்துத் தலைவர்கள் மீட்டர் வைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய அரசாங்கம் கணக்கிட்டு சில இடங்களில் மீட்டர் வைத்தால், அதிகமாக சார்ஜ் வரக்கூடும். ஒரே மீட்டர் வைத்தால் அரசாங்கத்துக்கு லாபம் வரும் என்றும் பஞ்சாயத்துக்கு அதிகச் செலவு ஆகும் என்றும் இரண்டு தரப்பான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. மொத்தத்தில் மீட்டர் வைத்தால் பஞ்சாயத்துக்கு நஷ்டம் சர்க்காருக்கு வருமானம். சர்க்காருக்கு நஷ்டம், பஞ்சாயத்துக்கு வருமானம் ஏற்படக்கூடிய நிலைமையிருப்பது வரவேற்கத் தக்கது என்பதை வலியுறுத்தி மீட்டர் வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன். அதோடு ஹரிஜனக் காலனிகளுக்கு ஆகக்கூடிய செலவில் ஒரு பகுதியை இன்றைக்கு அரசாங்கம் கொடுக்கிறது. ஹரிஜனக் காலனிகளுக்கு மட்டும் ஆகின்ற செலவுகளை முழுவதுமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று பரவலாகப் பேசப்படுகிறது. மதுரை மின்சார நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்போவதாக ஒரு வதந்தி அடிபடுகிறது. அது வதந்தியாகத் தான் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். மதுரைக்கு ஒரு சிறப்பு உண்டு. சபைக்குத் தெரியும். ஆனால் மதுரை போன்ற விளக்கு ஒளி சென்னைக்குக் கூட கிடையாது. அப்படி விளக்கு ஒளி வீசும் நகரம். அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்காமல் மதுரை மாநகராட்சியின்

தோடு எடுத்து வைத்துக்கொண்டு பார்த்து, நியாயத்தோடு அணுக வேண்டும். தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் உள்ள நிலங்கட்கு ஏராளமான நீரைத் தேக்கி, கோடிக்கணக்கான ரூபாய் செலவில் அணைகள் கட்டி வளமான காரியங்களை செய்தோம். அங்கனமே அந்த நீரிலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தை ராமநாதபுரம் போன்ற வறட்டுப் பிராந்தியங்களிலே வேளாண்மை, விவசாயம் செழிப்பதற்கு மிகக் குறைவான கட்டணத்தில் கொடுக்க வேண்டும். இது மிகப் பொருத்தமான பொருளாதார முறை என்பதனையும் நாம் மனதில் உணர வேண்டும். அதைப் போலவே பம்ப்செட்டுகளுக்கும் மற்ற எதற்குமே, பொதுவாக மின் இணைப்பு வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்த பதினைந்து நாட்களுக்குள் அது கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால், ஏன் கொடுக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பி, விளக்கம் கேட்டு அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக கிராமங்களிலுள்ள மக்கள் நலம் பெறுவதோடு மட்டுமின்றி நம்முடைய ஆட்சியிலே, நிர்வாகத்திலே லஞ்சம் வளர்வது தடைபடும் என்பதையும் மனதில்கொண்டு செயல்பட வேண்டும்.

இனி இந்த வாரியத்திற்குச் சொந்தமான மின் கம்பங்களில் பியூஸ் போவதென்பது சாதாரணமான ஒரு நிகழ்ச்சியாக எங்கும் காணப்படுவதாக இருக்கிறது. பல இடங்களில் நான் நேரில் கண்டேன். 15 ஆம்ப்ஸ் பியூஸ் போடவேண்டிய இடத்தில் 5 ஆம்ப்ஸ் பியூஸ் போட்டுவிட்டு வந்து விடுகிறார்கள். அது இரண்டு மணி நேரம் அல்லது இரண்டு நாட்கள் போன பிறகு பிய்ந்துவிடுகிறது. பொதுவாகவே நம்முடைய கரண்ட் ஒழுங்காக 'புளோ' ஆவதில்லை. 230, 240 வோல்டேஜ் எப்பொழுதுமே கிடைப்பதில்லை. 160-லிருந்து 240, 260 ஆகப் போகும் நிலையில் இருக்கிறது. அந்த நிலையில் திடீரென்று பியூஸ் போய்விடுகிறது. மறுபடியும் அதைக் கொண்டுவந்து போடுவதற்குள் சம்பந்தப்பட்டவர்கள் படும் பாடும், அவர்களுக்கு ஏற்படும் இழப்பும் நாடறிந்த ரகசியம் என்பதை உணர்ந்து அதற்குத் தக்க செயல் முறையை வகுக்க வேண்டுமென்று புலப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல் இந்த மின் வலு குறைந்து போவது சம்பந்தமாக ('கரண்ட் டராப்') பலர் பேசினார்கள். போதிய அளவுக்கு டிரான்ஸ்பார்மர்கள் இல்லை என்று நான் நினைக்கிறேன். ஆயிரம் விளக்குகள் இருந்த பகுதிகளில் இன்றைய தினம் 5,000 என்ற அளவில் கன்ஸுமர்கள் பெருகியிருக்கிறார்கள். ஆயிரம் என்ற அளவுக்குப் போடப்பட்ட டிரான்ஸ்பார்மர் 5,000 வரை போக வேண்டுமானால், முடியாத காரியம். இத்தனை கன்ஸுமர்களுக்கு இத்தனை அளவு என்று வரம்பு கட்டி, தேவையான அளவு டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தி நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும்.

அங்ஙனமே மின்சார ஊழியர்கள் தெரு விளக்குகளைப் பொறுத்தவரைச் செய்யும் தவறுகளைப் பலர் அறிவார்கள். ஏதோ ஒன்றாவது கம்பத்தில் விளக்கு சரியில்லை என்று சொல்லி சம்பந்தப்பட்ட துறையினருக்குத் தெரிவித்து அது சரி செய்யப்பட்ட உடனேயே இரண்டாவது கம்பத்தில் விளக்குப் போய்விடும் காட்சியைச் சாதாரணமாகப் பார்க்க முடிகிறது. இரண்டாவது கம்பத்திலுள்ள பல்பை எடுத்து முதல் கம்பத்தில் போட்டுவிட்டு, இந்த பல்பை



எடுத்து இரண்டாவது கம்பத்தில் போட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். நூற்றுக்கணக்கான சான்றுகளையும், சாட்சிகளையும் விட்டு இதை நிரூபிக்க முடியும்.

அடுத்தபடியாக, பம்ப்செட்டுகள் உள்ள இடங்களில் விளக்கு போடுவது சம்பந்தமாக ஒரு வார்த்தை. இப்பொழுது விவசாயத்திற்கு ஆகப் பம்ப்செட்டுகள் போடப்பட்டுள்ள இடத்தில் ஒரு விளக்கு போட்டுக் கொள்ள மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அது கூடாது என்று சொல்லவில்லை. அது நியாயமே. அதேபோல குடியிருக்கிறவர்கள் வசதிக்காக ஓவர்-ஹெட் டாங்க்கில் தண்ணீர் சேர்ப்பதற்கு பம்ப்செட் ஒரு அறையில் வைத்திருந்தால் அங்கே விளக்கு எரிக்க, இந்தக் கரண்டை உபயோகிக்கக் கூடாதென்று போடப்பட்டிருக்கிறது. அதற்காக வேறு ஒரு மீட்டரிலிருந்து அந்த பம்ப்செட்டு இருக்கின்ற அறைக்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஒரு விளக்கு, இன்றியமையாதது. குடிநீர் வசதியாக இருந்தாலும் சரி, வாணிபத்திற்கு இருந்தாலும் சரி, விவசாயத்திற்கு இருந்தாலும் சரி, அந்த பம்ப்செட்டு இருக்குமிடத்தில் ஒரு லைட் போட்டுக் கொள்ளலாம் என்று விதி விதிப்பது நியாயம், அவசியமுமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் விண்ணப்பித்து முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதற்காக வேறு இடத்திலிருந்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதிலே ஏதாவது தடை இருந்தால், சட்டத்தில் திருத்தம் அல்லது விளக்கம் செய்ய வேண்டுமானால், அதைச் செய்வது நியாயம், அவசியம் என்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன். ஒரு பம்ப்செட்டுக்கு ஒரு விளக்கு, 40, 60, 100 வாட் என்பதல்ல, ஒரு விளக்கு என்று மட்டும் இருந்தால் போதும்.

வருமானம் நம்முடைய துறையில் குறைவு என்று சொல்லப்படுகிறது உண்மை. வருமானம் இன்றைய நிலையில் குறைவு தான். குறைவு என்பதற்காக சார்ஜுகளை ஏற்றிக் கொண்டு போவது பொருத்தமாக இராது. ஏற்கனவே தனியாரோ அல்லது கம்பெனிகளோ இருந்த இடங்களில் எத்தனை ஹௌஸ் கனெக்ஷன்ஸ் அல்லது விவசாய சம்பந்தமான கனெக்ஷன்ஸ் இருந்தன? அதற்கு எவ்வளவு பேர் வேலை பார்த்தார்கள்? எவ்வளவு எஞ்சினியர்கள் இருந்தார்கள்? எவ்வளவு வான்கள், அல்லது லாரிகள் அல்லது மோட்டார் ஜீப்புகள் இருந்தன? இவற்றையும் கணக்கெடுத்து, இப்போது உள்ள நிலையில் கணக்கெடுத்துப் பார்த்தால் இன்றைக்கு பல மடங்காக விரயம் ஆகிறது தெரியும் என்று பணிவோடு தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

காரைக்குடி எலெக்டிரிசிட்டி கம்பெனியை நாங்கள் நடத்திக் கொண்டிருந்தோம். அப்போது எல்லோருக்கும் ஒரு யூனிட்டுக்கு 15 காசு என்று கொடுத்துக்கொண்டிருந்தோம். 16% லாபம் பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துக்கொண்டிருந்தோம், 10-ம் தேதிக்குள் பணம் கட்டிவிட்டால் 10% டிஸ்கௌண்ட் என்றும் போட்டிருந்தோம். அவ்வளவு லாபம் வந்து கொண்டிருந்தது.

காரைக்குடியில் விளக்குகள் கூடி விட வில்லை. இன்றைக்கு 10% அல்லது 15% கூடியிருக்கலாம். அன்று இருந்த அதிகாரிகளைப் போல் இன்று 6 மடங்கு அல்லது 8 மடங்கு இருக்கிறார்கள். அன்று இருந்த வான்களைப் போல் பல மடங்கு வாகனங்கள். இத்தகைய அனாவசியச் செலவுகளைக் குறைக்க

பிறகு, இந்த 4 ஆண்டுக் காலத்திலே சுமார் 5 லட்சத்து 50 ஆயிரத்துச் சொச்சம் மின் இணைப்புகள் இதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக அவரைப் பாராட்டுகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர். . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இப்போது உள்ள உற்பத்தி ஏற்பாடுகளை அவர்கள் செய்து விட்டார்கள். கழக ஆட்சி வந்த பிறகு, எவ்வளவு அதிக உற்பத்திக்கு அவர்கள் திட்டமிட்டார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. ஆர். தர்மலிங்கம் :** நான் கூறிக்கொள்கிறேன் 1951-ல் ஏப்ரல் மாதத்திலே ஆரம்பித்தவர்கள் பெரிய வசதி படைத்தவர்களுக்கு, கிராமங்களில் உள்ள பணக்காரர்களுக்கு, மிட்டா மிராசுகளுக்கு மட்டும் மின்வசதியைச் செய்துகொடுத்து வந்தார்கள். ஏழை எளிய மக்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருப்பவர்களுக்கு மின்வசதி கொடுக்கப்படாமல் கவனிக்கப்படாமல் இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இன்றைக்கு மின்வசதி கிடைக்கிறது என்றால், அதற்கு நம்முடைய கழக அரசாங்கம் தான் காரணம் என்பதைப் பெருமையோடும், பூரிப்போடும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டு முதலமைச்சர் தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் 1972-க்குள் எப்படியும் தமிழ் நாட்டிலே உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுத்தாக வேண்டும். அதோடு வேளாண்மையில் ஈடுபட்டுள்ள அத்தனை பேர்களுக்கும் மின்வசதி கிடைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதிலே மிக வேகமாக நம்முடைய தமிழ்நாட்டு மின்சார வாரியம் மிக்க பொறுப்போடு பாடுபட்டுக் கொண்டு வருகிறது. இப்படிப் பாடுபட்டுக்கொண்டு வருகிற நேரத்தில் சிற்சில குறைகள் இருக்கலாம். அவைகளை நிவர்த்தி செய்வதற்காகக் குற்றச் சாட்டுகளாகக் குறிப்பிடப்படுமானால், அதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விவசாயத்திற்காகக் கொடுக்கப்படும் மின் வசதிக்குக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் முதலமைச்சர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களையும், மின் வாரியத்தையும் தலைவரின் மூலமாகக் கேட்டுக் கொள்வேன். இப்போது கொடுக்கப்படும் கட்டணத்தை விட இன்னும் குறைவான கட்டணத்தில் விவசாயிகளுக்கு மின் விசை கொடுக்கப்பட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு விவசாயிகள், நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அடிக்கடி குறிப்பிடுவதுபோல, உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவு கோல் கூட மிஞ்சாது என்ற நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம் சில நேரத்திலே வானம் பொய்த்து விடுகிறது. அதனால் கிணற்றிலே தண்ணீர் கிடைப்பதில்லை. இதனால் மின் வாரியத்திற்கு அவர்கள் கட்டணம் செலுத்த முடிவதில்லை. எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. விவசாயிகள் மின்சாரக் கட்டணம் கட்டுவதற்கு வட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள். பிறகு வட்டி கட்ட முடியாமல் நிலத்தை விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய முறையில் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள் நாம் தொழிலுக்குக் கொடுக்கிற மின்சாரத்திற்கு அதிகக் கட்டணம் வசூல் செய்கிறோம் என்று.



நம்முடைய அண்டை மாநிலமான மைசூரிலும், மகாராஷ்டிரத்திலும் நம்மை விட 7, 8 பைசா குறைவாக வாங்குகிறார்கள். நாம் அதிகமான விலையில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியா முழுவதும் தொழில் மயமாகிக் கொண்டு வருகிறது. அங்கெல்லாம் மின்சாரம் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. இங்கேயும் நாம் தொழிலதிபர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுத்தால், தொழிலதிபர்கள் இங்கே வந்து தொழில்களைத் துவக்க ஊக்கம் ஏற்படும். மற்ற மாநிலங்களில் குறைவான விலையில் மின்சாரம் கொடுக்கப்படுவதால், அங்கே அவர்கள் தொழில்களைக் கொண்டு போய் விடுகிறார்கள். அதனால் இங்கே தொழில் வளர முடியாமல் போகிறது. இங்கே தொழில் ஆரம்பித்தால், அதனால் தொழிலதிபர்களிடமிருந்து நமக்கு அதிக வரி வரும். அது மட்டுமல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையத் தக்க வாய்ப்பு இருக்கிறது. இங்கே தொழிற்சாலைகள் ஆரம்பித்தால், அதன் மூலம் அவர்கள் வாங்குகிற கச்சாப்பொருள்களுக்கு நம்முடைய சர்க்காருக்கு வரி கொடுக்கிறார்கள். அவர்கள் கச்சாப் பொருள்களை உபயோகித்து உற்பத்தி பண்ணுகிற பொருள்களுக்கு சேல்ஸ் டேக்ஸ் கட்டுகிறார்கள். அதற்கு சர்சார்ஜ் கட்டுகிறார்கள். இன்கம்டாக்ஸ் கொடுக்கிறார்கள். இதனால் நமக்கு அதிக வருமானம் வருகிறது. ஆகையால் நாம் இன்னும் அண்டை மாநிலங்களில் இருப்பது போல், மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தால், அதனால் தொழில்கள் இங்கே பெரும் அளவில் வளரத் தக்க வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை மீது பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்து, இந்த மின்சார வாரியத்தையும், அந்த இலாகா அமைச்சரையும் தமிழக முதலமைச்சர் தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் :** தலைவரவர்களே, 1971-72-ஆம் ஆண்டின் மின் வாரிய நிதி நிலை குறித்து என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதியை 1972-க்குள் செய்து கொடுக்க வேண்டுமென்று உறுதி செய்து இன்றையதினம் வேகமாக நம்முடைய மின்சார வாரியம் இப்படி மின் இணைப்பு கொடுப்பதில் ஈடுபட்டிருப்பது உள்ளபடியே பாராட்டுதலுக்குரிய விஷயமாகும். என்றாலும் நம்முடைய உற்பத்தியைப் பொறுத்த வரையில் பார்த்தால், 1972-க்குள் தமிழக முழுவதும் மின்சார மயமாகி விட வேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஏனென்றால் மின்சார உற்பத்தி மிகக் குறைவாகவே இருந்து கொண்டிருக்கிறது. நாம் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை எதிர்பார்த்துத் தான் இந்தக் காரியங்களைச் செய்துகொண்டிருக்க வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். எதிர் காலத்திலே பிற மாநிலங்களிலிருந்து கேரளம், மைசூர், ஆந்திரா போன்ற மாநிலங்களில் தொழில் வளர்ச்சி வேகமாக ஏற்படுகிற நிலையில், நமக்கு மின்சாரம் கிடைக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே நம்முடைய மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்குத் திட்டமிட்டு வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், நெய்வேலி அனல் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு, அதிகப் படுத்துவதற்கு

வேண்டும். எவ்வளவு சிக்கனம் செய்ய வேண்டுமோ அவ்வளவு சிக்கனம் செய்ய வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தற்காலிக மின் இணைப்பு கேட்கிறார்கள் பலர். அவர்களுக்கு 5 ரூபாய் செலவாகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கு என்று குறிப்பிட்டார்கள். விவசாயத்துக்குக் கொடுக்கப்படுகிற பம்ப்செட்டிலா அல்லது குடிநீருக்குக் கொடுக்கப்படுகிற பம்ப்செட்டிலா என்பதைத் தெளிவாகக் கூறினால் நல்லது.

**திரு. சா. கணேசன்:** தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். விவசாயத்துக்குப் பயன்படுத்தும் பம்ப்செட்டுக் கனெக்ஷனிலிருந்து ஒரு விளக்கு வைத்துக்கொள்ளலாம் என்று உத்திரவு இருக்கிறது. குடிநீருக்காக ஓவர்-ஹெட் டாங்க் வைத்து பம்ப்செட்டைப் பயன்படுத்தினால், விளக்குப் போட அனுமதியில்லை என்று சொல்லுகிறார்கள். அந்த பம்ப்செட்டுக்காக இருக்கிற சிறிய ரூமிற்கு விளக்கு வேண்டுமென்றால், வேறொரு மீட்டரிலிருந்து கனெக்ஷன் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இது வீண் விரயம் இல்லையா என்பது தான்கேள்வி. ஒரு விளக்கு அங்கே எறிந்துவிட்டால் நஷ்டமில்லை. உபயோகிக்கிறவர்களுக்கு இப்பொழுது சிரமமாக இருக்கிறது என்பதற்காகத் தான் இதைத் தெரிவிக்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** இருபது நிமிடம் ஆகிறது.

**திரு. சா. கணேசன்:** தாற்காலிகமாக மின் இணைப்பு கொடுப்பதற்கு செலவு ஐந்து ரூபாய் ஆகலாம். ஐம்பது ரூபாய் டெபாசிட் கட்டச் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தப் பணம் கணக்குப் பார்த்துச் செட்டில் ஆகித் திரும்பி வருவதற்குக் காலதாமதம் ஆகிறது. ஓராண்டுக் காலம் கூட ஆகிறது. ஒரு மின் இணைப்பு நீக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் கணக்கை 'செட்டில்' பண்ணி பாக்கிப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு வரம்பு கட்ட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பொது ஸ்தாபனங்களில் கணக்குகள் தீர்க்கப்படாமல் போய்விடுகின்றன. ஆங்காங்கே உள்ள சூப்பரண்டெண்டிங் இன்ஜினியர்கள் கணக்குகளை முடித்துவிட அதிகாரங்களைக் கொடுத்துவிடலாம் என்று கேட்டுக்கொண்டு இதையெல்லாம் அரசு செய்யும் என்ற நம்பிக்கையோடு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் என்பது போல மின்சார வாரியம் பற்றி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அவையில் குறை சொல்லி, எங்களால் கேட்க முடியாத அளவுக்குக் குறை சொல்லிப் பேசிக்கொண்டிருந்த நண்பர்கள், இன்று பிறர் ஒரு வார்த்தை கூட சொல்வதைச் சகிக்க முடியாத அளவுக்கு மின்சார வாரியத்தை மென்மேலும் புகழ்ந்து கொண்டிருப்பதைக் கேட்கும்போது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது.



பொதுவாக மின்சார வாரியம் 13 ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்தது. கடந்த 4, 5 ஆண்டுக் காலமாக மின்சார வாரியம் நல்ல நிலைமையில் மேலும் வளர்ச்சி 6-30 p.m. யடைவதற்குக் காரணமாக தி.மு.க. வின் ஆட்சி இருந்தது என்று சொல்லி, அதை நண்பர்கள் புகழும்போது குறைகளை மறைக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் இந்த வாரியம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. நல்ல குழந்தை நன்றாக இருக்கிறது என்று கேட்கும்போது, அதைப் பெற்ற நேரத்தில் இருந்த மகிழ்ச்சியை விட இப்போது அடைகிற மகிழ்ச்சி அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தத் தரப்பிலிருந்து ஏதேனும் குறைகள் சொல்வதாக இருந்தால், அவைகள் நல்ல எண்ணத்தில் தான் சொல்லப்படுகின்றனவே தவிர, அரசாங்கத்தைக் குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. முதலில் நமது மாநிலத்தில் நீர் மின் விசையிலும், அனல் மின் விசையிலும் மற்றும் மைசூர், கேரளா முதலிய மாநிலங்களிலிருந்து வாங்குவதையும் சேர்த்தால், 5,597 மில்லியன் யூனிட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன. இதில் 4,574 மில்லியன் யூனிட்டுகள் விற்கப்படுகின்றன. 978 மில்லியன் யூனிட்டுகள் குறைவாக இருக்கின்றன. இந்தக் குறைவுக்கு 'டிரான்ஸ்மிஷன் லாஸ்' என்று பொதுவாகச் சொல்லுவார்கள். இன்று பேரவையின் ஆளும் கட்சியின் தலைவரும், நமது கல்வி அமைச்சருமான மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் முன்பு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் இதை மிகவும் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். அன்று மின்சார வாரியத்தின் சேர்மன் ஆக இருந்தவர் அப்பாதுரை முதலியார். அவர் உடனடியாகக் கவனிக்கிறோம் என்று சொல்லி அடுத்த வருஷத்திலே நாம் பாராட்டும் அளவுக்கு, குறைத்துக் காண்பித்தார். ஆனால் மீண்டும் இப்போது அந்த டிரான்ஸ்மிஷன் லாஸ் அதிகமாகப் போய்க்கொண்டிருப்பது வருத்தத்தைக் கொடுக்கிறது. இது எனக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தை நடத்துகிற அமைச்சர்களுக்கும் வருத்தத்தைத் தான் கொடுக்கும். இவ்வளவு மோசமாக இருக்கத் தேவையில்லை. மேல்நாடுகளில் எப்படி இருக்கிறது என்று பார்த்தால் 9%-க்கு மேல் இல்லை.

டிரான்ஸ்மிஷன் லாஸ் இருக்கத் தான் செய்யும். ஆனால் இவ்வளவு அதிகமாக இருக்கத் தேவையில்லை. இது உண்மையான டிரான்ஸமிஷன் லாஸ் என்று சொன்னால், அதை நாம் நம்ப முடியாது. இதில் பலர் திருடுகிறார்கள். இதற்கு வேறு வார்த்தை என்னால் சொல்ல முடியவில்லை. எவ்வளவு பவர் திருடப்படுகிறது? மின்சார வாரியம் இதில் கண்காணிப்பாக இருக்க வேண்டும். ஸ்பெஷல் சி.ஐ.டி. போட்டு எங்கே எப்படித் திருடப்படுகிறது என்று கண்காணிக்க வேண்டும். இதற்காக போலீஸ் இலாகாவில் ஸ்பெஷலாக ஒரு பிரிவு நியமித்தால் கூட, மாநில அரசாங்கத்துக்கு ஒரு நஷ்டமும் ஆகாது. இதனால் அரசுக்கு அதிக லாபம் தான் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதோடு ஸ்டேஷன் கன்சம்ஷன் 45 மில்லியன் யூனிட் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்டேஷன் கன்சம்ஷன் என்று சொல்லும்போது மின்சார வாரியத்தின் உத்தியோகஸ்தர்களுக்கும், மற்றவர்களுக்கும் இலவசமாக சப்ளை செய்யப்படுவதும் இதிலே இருக்கும் என்று எண்ணுகிறேன். விவரமாகச் சொல்லாததனாலே ஸ்டேஷன் கன்சம்ஷன் என்பதைப்பற்றி நாம் கவனிக்க

கிராமங்களில் உள்ள மக்கள் ஒரு மாதம் பணம் கட்டவில்லையென்றால், 'டிஸ்கனெக்ட்' செய்து விடுகிறார்கள். ஆனால் மதுரையிலும், கோவையிலும் உள்ள மில் அதிபர்கள் லட்சக் கணக்கில் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாலை நேரங்களில் வோல்டேஜ் குறைவதனால் அதிகச் சேதம் ஏற்படுகிறது. குறிப்பாக விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய மோட்டார்கள் பழுதடைந்து விடுகின்றன. அவை எரிந்து விடுகின்றன. அதைப் பழுது பார்க்க வேண்டுமென்றால், 60, 70 ரூபாய் ஆகும். அதுவும் உடனடியாகப் பழுது பார்க்கப்பட முடியாமல், 15 நாட்கள் ஆகும். ரிவைண்டிங் செய்வதற்குக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சரியான டிரான்ஸ்பார்மர் இல்லாததால் வோல்டேஜ் குறைந்து விடுகிறது என்கிறார்கள். இங்கே கூட எம்.எல்.ஏ. க்கள் ஹாஸ்டலில் வோல்டேஜ் குறைவதால், அடிக்கடி பல்புகள் 'பியூஸ்' ஆகி விடுகின்றன. டிரான்ஸ்பார்மரை மாற்றியமைத்து விட்டால், வோல்டேஜ் குறைவது தடுக்கப்படும் என்கிறார்கள். எனவே இதை மாற்றியமைக்கிற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் இந்தச் சென்னை நகரத்தில் அதிலும் மாம்பலம் பகுதியிலும், கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் நம்முடைய ஹாஸ்டலிலும் கரண்டு பெயிலியர் ஏற்படுகிறது. மாம்பலத்தில் அடிக்கடி வோல்டேஜ் Fall ஆகிறது. லைட் இல்லாமலும் இருக்கிறது. இதற்கு அதிகமான சக்தியுள்ள டிரான்ஸ்பார்மர் கொண்டு வரவேண்டும். அதற்கு வேண்டிய பணம் அதிகம் செலவழித்து நல்ல முறையில் பவர் சப்ளை குறையாமல், வோல்டேஜ் குறையாமல், பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னொரு குறை சென்ற முறை பேரவையில் ஒரு அங்கத்தினர் எழுப்பியிருக்கிறார். அதற்கு அரசாங்கம் பதில் சொல்லி போலீஸ் இலாகாவிற்கு அனுப்பியிருக்கிறோம். இன்னும் அதைக் கண்காணித்து வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியத்தில் எஸ்கார்ட்ஸ் என்ற கம்பெனியுடன் கான்டிராக்ட் செய்து கொண்டு வேலை ஆரம்பிப்பதற்கு முன்னால் ரூ. 32 லட்சம் முன் பணமாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவில் எந்த முறைப்படி கொடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கம் கண்டிக்கும், இதை ஒப்புக்கொள்ளும் என்று சொல்ல முடியாது. இதற்கு யார் பொறுப்பு? எந்தவிதமான ஒப்பந்தமும் இல்லாமல் வேலையும் ஒப்புக்கொள்ளாமல் முன் பணமாக ரூ. 32 லட்சம் அரசாங்கப் பணத்தைக் கொடுக்க மின்சார வாரியத்துக்கு யார் அதிகாரம் கொடுத்தது? இதை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டு பதில் சொல்லியிருக்கிறார்கள். இதை நாங்கள் கண்காணிக்கிறோம், போலீசாரிடம் கொடுத்திருக்கிறோம். சி.ஐ.டி. பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது இது என்ன நிலைமையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இந்த சந்தேகத்தை நாளைக்கு விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப்பற்றிப் பேசப்படுகிறது. தொழிலாளர் பிரச்னை கௌரவமாக நடக்க வேண்டும். ஒட்டன் சத்திரத்தில் ஒரு தொழிலாளி மின்சார வாரியத்திற்கு சுமார் 4, 5 லட்சம் நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறார்.



அங்கிருக்கிற டிரான்ஸ்பார்மர் எரிந்து போய்விட்டது. வேலியே பயிரைத் தின்றால், எப்படி விவசாயம் நடக்கும்? வாரியத்தைச் சேர்ந்த தொழிலாளிகளே டிரான்ஸ்பார்மர்களையும் மெஷின்களையும் கெடுக்கும்படியாக நொறுங்கும்படி. அவர்களே செய்தால், இவர்களை வைத்து எப்படி வேலை வாங்குவது? இதைக் கண்டித்துப் பேசுவதாகச் சொல்வது தவறு. இது பொதுஜனச் சொத்து. மக்கள் சொத்துக்கு ஆபத்து ஏற்பட்டால், அவர்கள் யாராக இருந்தாலும், தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும். அரசாங்கம் இப்பேர்ப்பட்டவர்களைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. தகுந்த முறையில் தண்டனை கொடுக்க வேண்டும். பேசின் பிரிட்ஜிலும் நடந்திருக்கிறது. இம்மாதிரிக் காரியங்கள் நடந்தால், தக்கபடி கவனிக்க வேண்டும். என்ன வந்தாலும், பார்த்துக் கொண்டு சும்மா இருப்பது தவறு என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போதுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் பிரைவேட் எலக்டிரிசிட்டி அண்டர்டேக்கிங்ஸ் லைசன்சுதார்களிடமிருந்து படிப்படியாக எடுத்துக்கொள்ளப் போகிறோம், நேஷனலைஸ் செய்யப் போகிறோம் என்று அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் அரசாங்கம் இருக்கும் பொழுதும் இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. நேஷனலைசேஷன் ஆரம்பித்தார்கள். இப்போதுள்ள அரசாங்கம் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. தேசியமயமாக்குவதில் இந்தப் பிரச்னையில் அவ்வளவு முன்னேற்றம் இருப்பது என்று பாராட்ட முடியாது. வருந்தத்தக்க முறையில் அவர்கள் எதுவும் செய்யவில்லையென்று சொன்னாலும் கூட, மாயவரம், மன்னார்குடி, திருவாரூர் லைன் பார்த்துக்கொண்டிருந்த நிறுவனத்தை 'நேஷனலைஸ்' பண்ணியிருக்கிறார்கள். இந்த வருஷம் செய்தார்கள் என்று எண்ணுகிறேன். 6-50 p.m.

அரசாங்கத்திடமே பவர் வாங்கி அதை அவர்கள் விற்று இன்னொருவர் லாபம் எடுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதே போல் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் அவர்கள் சொன்னமாதிரி, ஸ்தல ஸ்தாபனங்கள் நம்முடைய அங்கங்கள். அவைகள் நடத்தும் அமைப்பை எடுப்பதில் அவசரப்படத் தேவையில்லை. தனியார் லைசன்சுதார்கள், இன்னும் ஏழு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. கும்பகோணம் எலக்டிரிசிட்டி சப்ளை கார்ப்பரேஷன், நாகப்பட்டணம் எலக்டிரிசிட்டி கார்ப்பரேஷன், செங்கோட்டை எலக்டிரிக் சப்ளை கம்பெனி, சேலம்-ஈரோடு எலக்டிரிக் சப்ளை ஏஜன்சி, திருச்சி-ஸ்ரீரங்கம் எலக்டிரிசிட்டி கார்ப்பரேஷன், திருநெல்வேலி-தூத்துக்குடி எலக்டிரிசிட்டி கம்பெனி, வேலூர் எலக்டிரிக் சப்ளை கார்பரேஷன் ஆக இந்த ஏழு நிறுவனங்களை நாம் தேசியமயமாக்குவதில் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை. துரிதமாகத் தேசியமயமாக்க அரசாங்கம் முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் தாமதிப்பது நல்லதல்ல. மின்சார வாரியத்தில் ஏராளமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். போதுமான வேலை கொடுங்கள் என்று கேட்கின்றனர். ஆகவே இந்தத் தனியார் கம்பெனிகளைத் தேசியமயமாக்கிவிட்டு அதற்குப் பிறகு மதுரையோ, கோவையோ, பொள்ளாச்சியோ, மற்ற ஊர்களில் இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தி வரும் நிறுவனங்களைத் தேசியமயமாக்கும் விஷயத்தை வைத்துக்கொள்ளலாம். ஆகவே இந்த ஏழு தனியார் லைசன்சுதாரர்களை உடனே தேசியமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களைப் பொறுத்த வரையில், கிராமப் பஞ்சாயத்துகளுக்கு சப்ளை செய்யும் மின்சக்திக்கு மீட்டர் வைக்க வேண்டுமென்ற பிரச்னை வெகுநாளாக இருக்கிறது. ரூபாய் 90 லட்சம் செலவாகும் என்று 'எஸ்டிமேட்'

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

## Saturday, the 11th December 1971.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the Clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Service Conditions of Teachers*

* 142 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Committee appointed to go into the service conditions of teachers, has submitted its report to the Government; and

(*b*) if so, the details thereof?

*ஆசிரியர்களின் பணி நிலைமைகள்*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி. மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) ஆசிரியர்களின் பணி நிலைமைகள் குறித்து ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அரசிடம் பணிந்து அனுப்பியிருக்கிறதா ?*

*(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பரிசீலனைக்குப் பின் அறிக்கை அவை முன் வைக்கப்படும்.*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்போது தனியார் பள்ளிகளிலே வேலை செய்யும் ஆசிரியர்களுடைய வேலைப் பாதுகாப்புக்காகக் கொண்டு வரப்படுகிற சட்டம் இந்தக் கமிட்டியின் அறிக்கையின் அடிப்படையில் வருவதாக இருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்பாக அந்த அறிக்கை வைக்கப்படுமா ?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த அறிக்கையின் மீதுதான் அந்தச் சட்டம் வரப்போகிறது. அந்தச் சட்டம் அடுத்த தொடர்க் கூட்டத்தில் கொண்டுவரப்படுமென்று முன்பு கேள்விக்கு பதில் சொல்லும்போது கூறினேன். அது நிதித்துறை பரிசீலனையில் இருக்கிறது. இங்கே சட்டமாக்கக் கொண்டுவரும்போது மாண்புமிகு உறுப்பினர் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பேற்படும்.*

*Assistant Professors of Mathematics*

*143 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that only Assistant Professors of Mathematics are handling Statistics classes in Government Colleges where that subject is taught as an ancillary or special; and

(b) if so, the reasons therefor?

**கணித உதவிப் பேராசிரியர்கள்**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புள்ளி விவரவியல் துணைப் பாடமாக அல்லது சிறப்புப் பாடமாக பயிற்றுவிக்கப்படும் அரசுக் கல்லூரிகளில், புள்ளி விவர இயல் வகுப்புகளை கணித உதவிப் பேராசிரியர்கள் மட்டுமே நடத்துகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கணித இயல் மேற்படிப்பில் புள்ளி விவரத்தை சிறப்புப் பாடமாக கற்றவர்கள், பட்டப் படிப்பிலும், பட்ட மேற்படிப்பிலும், புள்ளி விவர இயல் கற்பிப்பதை பல்கலைக் கழகம் அனுமதிக்கிறது. புள்ளி விவர இயலை துணைப்பாடமாய் கற்பிக்கும் அரசினர் கலைக் கல்லூரிகளில் புள்ளி விவர இயல் துணைப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவதை பல்கலைக் கழகம் வற்புறுத்துவதில்லை.

*Clash in Triplicane*

*139 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there was any clash between two groups on 1st August 1971 in Triplicane, Madras;

(b) if so, the details thereof; and

(c) the number of persons injured?

**திருவல்லிக்கேணியில் மோதல்**

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, திருவல்லிக்கேணி பகுதியில் இரு கோஷ்டியினரிடையே 1-8-1971-ம் நாள் மோதல் ஏதேனும் ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

(உ) காயமுற்றவர்கள் எத்தனை பேர் ?





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1–8–1971-ல் ஏறக்குறைய 100 இந்து பக்தர்கள் சிந்தாதிரிப்பேட்டை தர்மராஜா கோவிலில் நடக்கும் தீமிதி விழா தொடர்பாக, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றுவிட்டு ஊர்வலமாக சிந்தாதிரிப்பேட்டைக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தனர். ஊர்வலத்தினர் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையிலுள்ள பெரிய மசூதியை நெருங்கியபோது, அவர்கள் 'கோவிந்தா' 'கோவிந்தா' என்று நாமசங்கிர்த்தனம் செய்வதற்கும், மணி அடிப்பதற்கும் முஸ்லிம்களின் கூட்டம் ஒன்று மறுப்பு தெரிவித்தது. இந்து ஊர்வலத்தினர் இதை எதிர்த்தனர். இதன் காரணமாக, இந்த இரண்டு கூட்டத்தினரிடையேயும் மோதல் ஏற்பட்டது.

(உ) இந்த மோதலில் 15 பேர் காயமடைந்தனர்.

*Travelling Allowance Drawn by the Honourable Ministers*

*140 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the travelling allowance drawn by the Hon'ble Ministers of this State during the months of December 1970, January and February 1971?

**மாண்புமிகு அமைச்சர்கள் பயணப்படி**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1970-ம் ஆண்டு டிசம்பர், 1971-ம் ஆண்டு சனவரி, பிப்ரவரி ஆகிய திங்கட்களில் இம் மாநிலத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் வாங்கிய பயணப்படி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு விவர அறிக்கை@ மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*Travelling and Daily Allowances Drawn by the Honourable Ministers*

*141 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the amount of Travelling and Daily Allowances drawn by the Hon'ble Ministers in the State during 1970–71?

**மாண்புமிகு அமைச்சர்களின் பயணப்படியும் நாட்படியும்**

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1970-71-ம் ஆண்டில் மாநிலத்தின் மாண்புமிகு அமைச்சர்கள் பெற்ற பயணப்படியும் நாட்படியும் எவ்வளவு?

---

@ Printed as Appendix I on pages 50-51.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு விவர அறிக்கை @ மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: ஒரு மாதத்தில் இவ்வளவுதான் டி.ஏ. ஒரு அமைச்சர் வாங்கலாம் என்று உச்ச வரம்பு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உச்சவரம்பு எதுவும் இல்லை. கூடுமான வரையில் டி.ஏ. அதிகம் வாங்காத அளவுக்கு அமைச்சர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று அமைச்சர்களுக்குள்ளே ஒரு வரையறை செய்யப்பட்டுள்ளது.

## *Colleges of Rural Higher Education*

*144 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of colleges of Rural Higher Education in the State;

(b) the number of graduate and post-graduate teachers turned out of such colleges each year; and

(c) whether there is any provision for employment of such graduates and post-graduates in development blocks?

## கிராமிய உயர் கல்விக் கல்லூரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள கிராமிய உயர் கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாது?

(இ) ஒவ்வோராண்டிலும் அக் கல்லூரிகளில் பயின்று வெளிவரும் பட்டதாரி ஆசிரியர்கள், பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?

(உ) மேற்சொன்ன பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் பயின்றோருக்கு வளர்ச்சி வட்டாரங்களில் வேலை வாய்ப்பளிக்க வகை ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இரண்டு.

(இ) இந்த இரண்டு கல்வி நிலையங்களிலிருந்து இதுவரை 937 இளங்கலை பட்டதாரிகளும் 104 முதுகலை பட்டதாரிகளும் தேர்வு பெற்றனர். ஆண்டுவாறு தேர்வு பெற்றவர்களின் விபரங்கள் தற்சமயம் இல்லை.

(உ) ஆம்.

@ Printed as Appendix II on pages 52-53.



THIRU G. SWAMINATHAN: How many of such graduates and post-graduate teachers are employed in development blocks at the present moment?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, டெவலப்மெண்ட் பிளாக்குகளில் எவ்வளவு இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை, பல்வேறு வகையில் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். கோவாப்பரேடிவ் இன்ஸ்பெக்டர்களாகவும், கிராஜுவேட் டீச்சர்களாகவும், எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களாகவும், ரிசர்ச் அசிஸ்டெண்ட்களாகவும், ஹெல்த் எஜுகேட்டர்களாகவும், பாங்க் அசிஸ்டெண்ட்களாகவும், ஆபீஸ் அசிஸ்டெண்டுகளாகவும் இடம் பெற்றிருக்கிறார்கள். 50 சதவீதம் நேரடியாகவும் அல்லது மறைமுகமாகவும் டெவலப்மெண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

THIRU G. SWAMINATHAN: Sir, is there any proposal to completely utilise the services of such Rural Education Graduates and post-Graduates without wastage of their talents?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* ஹெல்த் எஜுகேட்டர்கள், எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் போன்ற வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்துகிறோம். அவர்கள் தனித்திறமை அவற்றில் பெற்றிருப்பதால், அந்த வேலைக்குப் பயன்படுத்துவதன் மூலமாக நலமேற்படும் என்பதால், அவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது.

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:* இந்த டிப்ளமா வாங்கியவர்கள் ஆங்கில டியூட்டராக இருக்கிறார்கள். முதல் வகுப்பு அதில் வாங்கியவர்களுக்கு ஆங்கில டியூட்டர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. "D.R.S." வாங்கி ஆங்கில டியூட்டராக வேலை செய்கிறவர்களுடைய பணி "ரெகுலரைஸ்" ஆகாமல் இருக்கிறது. இதற்குக் காரணம் பல்கலைக் கழகத்தில் இந்த டிப்ளமா டீச்சிங் போஸ்ட்டுக்கு பொருத்தமானதாக முடிவெடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்த டிப்ளமா வாங்கியவர்கள் டியூட்டராக நியமிக்கப்பட பாதுகாப்பளிக்க அரசு முன்வருமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* நான் சொல்ல வேண்டிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினரே குறிப்பிட்டிருக்கிறார். பல்கலைக் கழகத்திற்கு வேண்டுமானால், மறுபடியும் அரசு எழுதலாம். பல்கலைக் கழகம் சம்மதித்தால், அதன் பேரில் அவர்களுடைய சர்வீசு ரெகுலரைஸாகவும் அந்த அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தை மாற்றியமைக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

## *Provident Fund Accounts of Elementary School Teachers*

*145 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the amounts to the credit of the Provident Fund Accounts of Elementary School Teachers under the defunct Thanjavur District Board were transferred to the credit of the respective Panchayat Unions;

(*b*) whether the Panchayat Union, Kodavasal, got such credit;

(*c*) if so, the details thereof; and

(*d*) if not, the reason therefor?

*தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு.*

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செயலற்றுப் போன தஞ்சாவூர் மாவட்டக் கழகத்தின் கீழ் முன்னர் பணியாற்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் உள்ள தொகைகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளுக்கு மாற்றப்பட்டனவா ?

(இ) குடைவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்கு அவ்வாறு தொகை மாற்றப்பட்டதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(எ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இந்தக் கணக்கில் குடைவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 70,840.70 அளவிற்கு (வரவு) கிடைத்துள்ளது.

(எ) இவ்வினா எழவில்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, is it a fact that the District Collector of Thanjavur has discouraged teachers who have been serving under the defunct Panchayat Union, Kodavasal from claiming the amount standing to the credit of their Provident Fund Account for the period of their service?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரமில்லை. அந்த யூனியனுக்கு எவ்வளவு தொகை மாற்றப்பட்டது என்ற குறிப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று இருந்தால், தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.





*Government Arts Colleges*

* 146 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the names of Government Arts Colleges opened in the State, since June, 1964;

(*b*) the amounts of public contribution received for the opening of each Government College; and

(*c*) the stage at which the construction of permanent building for each Government College now stands?

*அரசுக் கலைக் கல்லூரிகள்*

*திரு. எம். ராஜா அய்யர் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1964 ஜூன் முதல் இம் மாநிலத்தில் துவக்கப்பட்ட அரசுக் கலைக் கல்லூரிகளின் பெயர்களென்ன ?

(இ) ஒவ்வொரு அரசுக் கல்லூரியையும் தொடங்க பொது மக்களிடமிருந்து வரப் பெற்ற நன்கொடைத் தொகை எவ்வளவு ?

(உ) ஒவ்வொரு அரசுக் கல்லூரிக்காகவும் நிலையான கட்டிடங்கள் கட்டும் பணி எந்நிலையில் உள்ளது ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* ஒரு விவரப் பட்டியல்@ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*திரு. எம். ராஜா அய்யர் :* தலைவர் அவர்களே, இந்தப் பட்டியலிலிருந்து 1966-ம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 33 கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகளைத் தவிர மற்ற 31 கல்லூரிகள் ரூ. 5 லட்சம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதில் பல கல்லூரிகள் ஒரு லட்சம் ரூபாய் என்றும், சில கல்லூரிகள் அதற்குக் குறைந்தும் கொடுத்திருக்கின்றன. அப்படியிருந்தும் அந்தக் கல்லூரிகளுக்கு பர்மனென்ட் பில்டிங் கட்டப்பட்டிருக்கிறது. சேதுபதி கவர்ன்மென்ட் காலேஜ், ராமநாதபுரம், கட்டிடம் இன்னும் முடியவில்லை. அதைத் துரிதப்படுத்தி கட்டிடம் முடிய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* 1964-லிருந்து கணக்குகள் தரப்பட்டிருக்கின்றன ஏற்கனவே கல்லூரிகள் வேண்டுமென்று கேட்கிறவர்கள் ரூ. 5 லட்சமும் இடமும் தருகிறோம் என்று வாக்குறுதி தருகிறார்கள். அதன் பேரில் அனுமதி அளித்து கல்லூரியைத் துவக்குகிறோம். முதல் தவணை ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். பிறகு அவர்களைத் தேட

@ Printed as Appendix III on pages 54–63

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்] [10th December 1971

ஏற்படுத்துவதில் மிகத் தீவிர கவனம் செலுத்தி 1972-க்குள் அந்தத் தொழிற்
சாலையைத் தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

கட்டணத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமி
நாதன் அவர்கள் சொல்லிய கருத்துக்கள் மிகவும் கவனத்துக் குரியவையாகும்.
அதையும் அரசாங்கம் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. காட்டூர் கோபால்
தொழிற் சங்கங்களைப்பற்றிய நிலைமைகளைச் சொன்னார்கள். இன்றையதினம்
மின்வாரியத்தைப் பொறுத்த வரையில், தொழிலாளர்கள் பிரச்னை இல்லையென்
ருலும், நம்மைவிடக் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கம் அதிகார பூர்வமான சங்கமென அங்கீக
ரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளியே உள்ள அரசியல் கட்சிகள் திராவிட
முன்னேற்றக் கழக அரசாங்கம் தொழிற் சங்கங்களைக் கைப்பற்ற வேண்டு
மென்ற நோக்கத்தோடு வெளியில் தொழிலாளர் பிரச்னைகளை அதிகப்படுத்தி,
தொழிற் சங்கங்களில் ஊடுருவுகிறது என்று பிரச்சாரம் செய்கின்றன. ஆனுல்
ஏராளமான உறுப்பினர்களைக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்கள் நடத்துகின்ற மின் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம்
இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. அதன் காரணம் என்னவென்று புரிய
வில்லை. கம்யூனிஸ்ட்சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தக்கூடிய சங்கத்துக்கு இந்த
அரசு அங்கீகாரம் கொடுக்கவில்லையென்று நினைத்தால், மிகவும் வேதனைக்குரிய
விஷயமாக இருக்கிறது. அரசாங்கம் இதை உடனடியாகக் கவனித்து மின்
தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தை அங்கீகரிக்கக்கூடிய வகையில் தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை
அளித்தமைக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நேரம் குறைவாக
இருப்பதால் விஷயத்தை மட்டும், விருப்பத்தை மட்டும், தேவையை மட்டும்
புலப்படுத்திக் கொண்டு அமைய முன்வருகிறேன். மின் உற்பத்தி, அதனுடைய
விநியோகம் இவை எல்லாம் வளர்ந்து வருகிற நெறியை நான் மனமாரப்
பாராட்டுகிறேன். காங்கிரஸ்காரர்கள் அமைத்தது, திராவிட முன்னேற்றக்
கழகத்துக்காரர்கள் வளர்த்தது என்றெல்லாம் சொல்லுவதை நான் விரும்ப
வில்லை. யார் ஆட்சிபீடத்தில் இருந்தாலும், மக்களுக்கு வேண்டியதைச்
செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கடமை உணர்வில் செய்து
கொண்டு வருகிற முறையில் இருக்கிற நன்மைகளைப் பாராட்டுவதோடு குறை
களை எடுத்துக் காட்டுவதற்கும் தேவைகளை உணர்த்துவதற்கும் தான் குறிப்பாக
நமக்குக் கடமை உண்டு என்பதை மட்டும் புலப்படுத்திக் கொண்டு ஒன்றை
மிகவும் பாராட்டுகிறேன். "1972-க்குள் எங்கும் மின்சாரம்" என்ற ஒரு
நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு அந்த ஒரு வரம்புக்குள் மின் வாரியம்
செயல்பட்டு நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முன்வருகிற அரசின்
அந்த உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். அதே காலத்திலே பரவல் மட்டும்



10th December 1971] [திரு. சா. கணேசன்]

பயனில்லை. பரவல் தரமுடையதாகவும் செம்மையானதாகவும் இருக்க
வேண்டும் என்பதையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டும் என்று கூற விரும்பு
கிறேன்.

மின் உற்பத்திப் பெருக்கம், விநியோகம், வளர்ச்சி இவைகளைப்பற்றிப்
பேசுகிற அதே நேரத்தில், மின் தடை ஏற்படுவது மிக அதிகமாகியிருக்கிறது
என்ற உண்மையையும் மறந்து விடக்கூடாது. இரண்டு ஆண்டுகளுக்கு
முன்னால் பக்கத்திலிருக்கின்ற சிங்கப்பூர் நாட்டுக்குச் சென்றிருந்த போது,
அங்கு ஒரு விழாவில் போடப்பட்டிருந்த ஏராளமான விளக்குகளைப் பார்த்து
விட்டு "இவ்வளவு அநியாயமாகப் போட்டிருக்கிறீர்களே, உங்களுக்கு மின்
தடை ஏற்படாதா?" என்று கேட்டேன். என்னை அழைத்துச் சென்று அந்த
அரசாங்கத்தின் செயலர் ஒருவர் 'There was no current failure for the
last twenty years' என்று சொன்னார். எனக்கு ரொம்பத் திருப்தியாக
இருந்தது. ஆனால் for the last 20 days கூட எங்களுடைய ஊரிலே
கரண்ட் பெயிலியர் இல்லை என்று சொல்லிக்கொள்ள முடியவில்லையே என்று
எனக்கு வருத்தம் ஏற்பட்டது. , அதற்குக் காரணத்தை விசாரித்தேன். அந்த
நாட்டிலே ஆங்காங்கே ஆட்டோமேடிக் ஜெனரேட்டர்கள் வைத்திருக்கிறார்கள்.
அதன் காரணமாக கரண்ட் தட்டுப்பாடானாலும் சரி, பெய்லியர் ஆனாலும் சரி,
விளக்குகளோ, ஃபேன்களோ மின் விசைக் குறைவினால் தடை படுவதில்லை என்ற
ஒரு அருமைப்பாட்டை உணர்ந்தேன். அதை நம்முடைய மின் துறையினர்
கையாள வேண்டும். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்
கொள்கிறேன். நான் தொழிலதிபர் அல்ல. தொழில் துறையில் எந்த வித
மான தொடர்பும் எனக்கு இல்லை. நாடு உருப்பட வேண்டுமானால், தொழில்
வளம் பெற வேண்டும். உற்பத்தியும் பெருக வேண்டும், அதன் மூலமாகத் தரம்
சிறப்பதோடு விலையும் குறையும். அதற்கு மின்சாரம், பெட்ரோல் போன்ற
வைகள் அடிப்படைத் தேவைகள் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.
ஆகவே ஏதோ தொழில் துறைக்கு மின்சாரத்தைக் குறைந்த விலைக்குக்
கொடுப்பதால், முதலாளிகள் லாபம் அடைகிறார்கள் என்று கூறுவது பொருந்
திய பொருளாதாரக் கணக்கு முறையாகாது என்று நான் புலப்படுத்திக்கொள்ள
விரும்புகிறேன். தொழில் வளம் பெற்றால், தொழிலாளர்கள் பலர் வளம் பெறு
வார்கள், அதன் மூலமாக மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ந்து, சராசரி
வருமானம் ஏறி, மனிதனுடைய சராசரி வாழ்க்கைத் தரம் ஆகியவைகள்
எல்லாம் உயரும் என்ற பாங்கை மறந்து விடக்கூடாது. ஆகவே தொழில்
துறைக்கு மற்ற எந்த மாநிலத்தையும் விட நம்முடைய மாநிலத்திலே மிகக்
குறைந்த கட்டணத்தோடு பிற வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று நான்
அழுத்தமாக விண்ணப்பித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் பல கனம்
உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள், நம்முடைய மாநிலத்திலுள்ள தொழில்
துறையினர் வேறு மாநிலங்களுக்குச் சென்று விடக்கூடாது என்று. அதைச்
சுட்டிக்காட்டிவிட்டு அமைய விரும்பவில்லை. வேறு நாடுகளிலும் இதர மாநிலங்
களிலும் உள்ள தொழில் துறையினர்களை இந்த மாநிலத்திற்கு வாருங்கள்
என்று ஆகர்சிக்கும் முறையில், அவர்களை ஈர்க்கும் வகையில் நம்முடைய
அமைப்புகள், வசதிகள், இருக்க வேண்டும். அதுதான் ஆட்சிக்கும், அரசுக்கும்
நாட்டுக்கும், மக்களுக்கும் நலம் பயப்பதென்பதை நான் புலப்படுத்திக்கொள்
கிறேன். அதே நேரத்தில் விவசாயத்தைப்பற்றிச் சொன்னால், சில விஷயங்
களை வெறும் சட்ட எழுத்து உணர்ச்சியோடு மட்டுமின்றி, மனிதாபிமானத்

*Skilled Manpower*

* 149 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Directorate of Employment and Training has conducted any survey regarding the shortage of skilled man-power in the private and public sectors in this State; and

(b) if so, the findings of the survey

*தேர்ச்சி பெற்ற பணியாளர்*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில், தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் தேர்ச்சி பெற்ற பணியாளர் கிடைக்காததைப்பற்றி வேலை வாய்ப்பு, பயிற்சி இயக்குநர் அலுவலகம் ஆய்வு ஒன்றை நடத்தியதா ?

(இ) ஆமெனில், அந்த ஆய்விலிருந்து தெரியவருவது என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

MR. CHAIRMAN : Questions 150 and 151 are postponed.

*Hydel Power Projects*

* 152 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that a number of Hydel Power Projects on which investigations have been completed by the Tamil Nadu Government are awaiting approval of the Planning Commission; and

(b) if so, the names of the projects and the proposed capacity of each such project?

*புனல் மின்சாரத் திட்டங்கள்*

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புனல் மின்சாரம் தயாரிக்கும் பல திட்டங்கள் குறித்து தமிழ்நாடு அரசு ஆய்வுகள் செய்து முடித்திருந்தும் திட்ட ஆணைக் குழு அவற்றிற்கு இன்னும் ஏற்பளிப்பு வழங்காமலிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்தத் திட்டங்களின் பெயர்களும், திட்டம் ஒவ்வொன்றின் உத்தேச உற்பத்தித் திறனும் யாவை ?



மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) பின்வரும் நான்கு புனல் மின் திட்டங்கள் மட்டுமே தற்போது திட்ட ஆணைக் குழுவின் இசைவை எதிர்பார்த்து உள்ளன.

| திட்டம். | அமைக்கக் கருதியுள்ள திறனளவு. |
|---|---|
| 1. மேல்தாமிரவருணி புனல் மின் நிலையத்தின் முண்டந்துறை நிலையம். | 30 மெகாவாட் |
| 2. நெல்லித்துறை புனல் மின் திட்டம் | 50 மெகாவாட் |
| 3. சோழத்திப்புழா புனல் மின் திட்டம் | 60 மெகாவாட் |
| 4. பரலையாறு புனல் மின் திட்டம் | 35 மெகாவாட் |

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த நான்கு திட்டங்களுக்குத்தான் ஆணைக்குழு ஏற்பளிப்பு வழங்காமல் இருக்கிறதா ? இன்னும் ஏதாவது திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நிதிநிலை அறிக்கையில் அது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். 5 திட்டங்கள் இருக்கின்றன. இன்னும் சில திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : எவ்வளவு நாட்களாக அத்திட்டங்கள் ஆணைக் குழுவினால் முடிவெடுக்கப்படாமல் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இரண்டு மூன்று ஆண்டுகளாக இருக்கின்றன. இந்த ஆண்டு நெல்லித்துறை, சுருளியாறு, சிறுவாணி இவைகளைத் துவங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 400 மெகவாட்டில் காடம்பாறை திட்டத்தை எடுத்துக்கொண்டிருப்பதால், இத்திட்டங்களில் காலதாமதம் ஏற்பட்டது.

*Rest House*

* 153 Q.—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal before the Forest Department to construct a Rest House in Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

*ஓய்வு விடுதி*

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், வன இலாகாவினால், ஓய்வு விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) தற்சமயம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

[11th December 1971

வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்துக்கொண்டு நிதியை வசூலிக்கிற நிலைமை ஏற்படுகிறது. மூன்றாண்டுகளுக்கு ரூ. 5 லட்சமும் 40 ஏக்கர் நிலமும் வந்தால் தான், அனுமதி தர முடியும். இந்த இரண்டு மூன்று ஆண்டு காலத்திற்குள் இதற்காக 5 லட்சம் ரூபாய் எல்லாக் கல்லூரிகளும் வசூலித்திருக்கின்றன. இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன் வந்ததால் சிலவற்றில் குறைவாக வந்திருக்கின்றன. குறைவாக வந்த இடத்திலும் மேற்கொண்டு நிதி திரட்ட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லப்பட்டிருக்கிறது. ராமனாத புரம் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது என்று கருதுகிறேன். மேற்கொண்டு இந்த ஆண்டு அதற்கு எவ்வளவு செலவாகப் போகிறது என்ற விவரக் குறிப்பில்லை. கிட்டதட்ட 5 லட்சத்தை எட்டிப் பிடிக்கும் அளவில் கட்டியிருக்கிறார்கள். அதைப் பொறுத்து சிறு தொகைதான் கட்ட வேண்டிய அவசிய மிருக்கிறது. கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக் கிறது. விரைவில் கட்டப்படும்.

*Rice Bags*

* 147 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether large quantities of rice bags were seized from Madras merchants about 28th June 1971; and

(*b*) if so, the details thereof?

*அரிசி மூட்டைகள்*

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 ஜூன் 28-ஆம் நாள் வாக்கில், சென்னை வணிகர் களிடமிருந்து ஏராளமான அரிசி மூட்டைகள் கைப்பற்றப் பட்டனவா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்னை மாநகரில் அரிசி மண்டி ஒன்றில், கணக்கில் வராத இருப்பில் வைத்திருந்த. சுமார் ரூபாய் ஐம்பதினாயிரம் மதிப்புடைய 669 அரிசி மூட்டைகள் 25—6—1971-ஆம் நாளன்று சென்னை, குற்றப்புலனாய்வுத் துறை, உணவுப் பிரிவினால் கைப்பற்றப்பட்டன.

*Financing Corporation*

* 148 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to set up a Financing Corporation to help tenants for the purchase of lands from landholders; and

(*b*) if so, the details of the Scheme?



11th December 1971]

**கடன் வழங்கும் கழகம்**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நில உரிமையாளர்களிடமிருந்து, குத்தகைக்காரர்கள் நிலங்களை வாங்குவதற்கு உதவி செய்வதற்காக கடன் வழங்கும் கழகம் ஒன்றை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அர சிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் டெல்லியில் நடந்த அமைச்சர்கள் மகா நாட்டில் கலந்துகொண்ட நமது தொழில் அமைச்சர் அவர்கள் இதுபோன்ற கடன் வழங்கும் கழகம் ஒன்றை மாநில அரசு ஆரம் பிக்க வேண்டுமென்றும் மத்திய அரசு அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சரின் கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அமைச்சர்கள் மகா நாட்டில் ரிசர்வ் பாங்கு எந்த அளவில் உதவி செய்யும் என்று பரி சீலிக்கப்பட்டது. நம்முடைய அரசாங்கச் சார்பில் பரிசீலனை செய்யப்பட்டது. ரிசர்வ் பாங்கு அதற்கு ஆட்சேபணையாக, இது போன்று அன்புரடக்டிவ் (unproductive) திட்டங்களுக்குப் பணம் கொடுக்க முடியுமா என்ற பிரச்னையைக் கிளப்பினார்கள். அத்தோடு விடப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இப்போது தேசிய மயமாக்கப்பட்ட பாங்கிகளிலிருந்து மாநில அரசே பணம் கடன் வாங்கி இதுபோன்று கடன் வழங்கும் கழகம் ஆரம்பிக்கலாம். 15 ஏக்கருக்குக் குறைவாக உள்ள நிலச்சுவான்தார்கள் அதை வைத்துக்கொள்வதில் லாபமில்லை என்று விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். குத்தகைக்காரர்களிடம் நிலம் இருப்பதால் அதை விற்க முடியாமல் இருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தத்தைச் சிறந்த முறையில் அமுலாக்கவும் 15 ஏக்கருக்குக் கீழ் உள்ள நிலங் களை அரசு எடுக்கவும் உதவியாக இருக்குமென்பதால் இதுபோன்ற கழகத்தை ஆரம்பிக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே இதைப்பற்றி ஆராய்ந்ததில் அரசாங்கத்திற்கு ரூ. 2 கோடி அளவுக்குப் பணம் வேண்டியிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 2,000 வைத்துக்கொண் டாலும் 30 லட்சம் ஏக்கர் வாங்கவேண்டியிருக்கிறது. அதற்கு 600 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இப்போது அது சாத்தியமில்லை என்று விட்டிருக்கிறோம்.

வேண்டும். இவ்வளவு யூனிட் ஸ்டேஷன் கன்சம்ஷன் செய்வதென்றால், எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்? இடையிலே 17 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ் ஆகிறது. முன்பு டிரான்ஸ்மிஷன் லாஸ் 17.9 இருந்தது. 1970-71-ல் இது 17.6 ஆகக் குறைந்திருக்கிறது. .3 குறைந்தது. ஆனால் இது மறுபடியும் அதிகரித்து விட்டது. எனவே இதைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் குறையை அழுத்த மாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போன வருடமே சொன்னேன் கன்சம்ஷன் டாக்ஸ் ரூ. 9 கோடி வந்தது. மின்சார வாரியத்திற்கு நஷ்டமில்லை. நல்ல லாபம். தொழில் களுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. இதை அதிகப் படுத்தி விவசாயத்திற்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தின் விலையைக் குறைக்க வேண்டும் என்று பல உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள். தொழில்களுக்கு சப்ளை செய்யப்படும் மின்சாரத்தின் விலையைக் கூட்டினால், அதனால் தொழில் அதிபர்களுக்கு அதிகக் கஷ்டம் இருக்காது. கன்சம்ஷன் டாக்ஸ் மூலம் மின் சார வாரியத்திலிருந்து கிடைக்கும் லாபம் இன்றைக்கு அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இது அவ்வளவு சரியில்லை. 11 கோடி, 12 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. இதை அரசாங்கமே எடுத்துக்கொள்கிறது. இது சரியல்ல என்பது என்னுடைய வாதம். அரசு அமைத்த ஒரு செயற்குழு வின் பரிந்துரைகளைப்பற்றி அரசு ஒரு நல்ல பதிலைச் சொல்லி இருக்கிறது. இது பரிசீலனையில் இருப்பதை அரசு தெரிவித்திருக்கிறது. கன்சம்ஷன் டாக்சை மின்சார வாரியத்திற்கு மாற்றி விட வேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. இதை அரசு ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மக்கள் மனதிலே மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்த வேண்டுமென்கிற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது. மின்சாரத்தை நாளுக்கு நாள் அதிகமாக உபயோகிக்கிறார்கள். உதாரணமாக 1951-ல் மின் சக்தியைப் பயன் படுத்தியவர்களின் எண்ணிக்கை 2.5 லட்சம். 1971-ல் இது 21 லட்சமாகும். இப்படி 10 மடங்கு வளர்ந்திருக்கிறது. 1951-ல் ஒரு நபர் 12 யூனிட்டை உபயோகித்தார். ஆனால் 1970-71-ல் ஒரு நபர் 122 யூனிட்டைச் சராசரியாக உபயோகித்தார். அவ்வளவு தூரம் விரிவடைந்திருக்கிறது. இப்படி மின்சாரம் உபயோகிக்கப்படுவது வளர்ந்து வருவதைப் பார்க்கும்போது, நாம் அகலக் கால் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் நிர்வாகத்தை சிக்கனப்படுத்த வேண்டும், நிர்வாகத்தைத் திருத்தி யமைக்க வேண்டும். ஏற்கெனவே நிர்வாகச் சீர்திருத்தத்தை அரசாங்கம் மேற் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையைச் சீர்திருத்தி அமைத்து விட்டார்கள். அது ஒரு வகையில் நல்ல முறையில் செயல்பட ஆரம்பித்திருக் கிறது. இம்மாதிரி மின்சார வாரியத்தின் நிர்வாகம் சீர்திருத்தியமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அவருடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இதற் 
6-40 p.m. கென்று ஒரு குழு அமைக்கப்பட இருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை வந்து விட்டது. மதுரையில் இது புதிய முறையில் சீர்திருத்தி அமைக்கப் பட்டிருக்கிறது. மதுரையில் ஒரு மாவட்டத்தில் அமலுக்கு வந்திருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் இதை வெகு சீக்கிரம் அமலுக்குக் கொண்டு வருவதற்கு



நிர்வாகம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஒரு குழு கொடுத்த அறிக்கையை இன்னொரு குழு ஆராய்ந்து பார்க்கும். அந்தக் குழு கொடுத்த அறிக்கையை மற்றொரு குழு ஆராய்ந்து பார்க்கும். இப்படி மாறி மாறி ஆராய்வதிலே காலம் கழிக்கப்படும். இதுதான் வழக்கம். எனவே இந்த முறையில் அல்லாமல் அந்தக் குழு கொடுத்த அறிக்கையை உடனடியாக அமல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்டவர்கள் தொழில் நடத்துகிறவர் களுக்கு நல்ல சௌகரியங்களைச் செய்து தருவதற்கு வேண்டிய சீர்திருத் தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. இதை வெகு சீக்கிரம் நிறைவேற்றுவதற்கு அனுமதியை வழங்க மத்திய சர்க்காரை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு மகிழ்ச்சிகரமான விஷயம் கல்பாக்கம் இரண்டாவது அணு மின் நிலையத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்திருக்கிறது. அதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் அணு மின்சக்தி வந்து விட்டால், நம்முடைய மின்சாரத் தேவை பூர்த்தியாகி விடுமென்று நாம் நினைத்துக் கொண் டிருந்தோம். ஆனால் இந்த இரண்டாவது அணு மின் நிலையம் வந்த பிறகும், நம்முடைய மின்சாரத் தேவை பூர்த்தியாகாத நிலையில் இருப்போம். அந்த அளவிற்கு நாம் வளர்ச்சியடைந்துகொண்டு போகிறோம் என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைக் கொண்டு வந்தால் தான் மாநிலத்தின் தென்பகுதியில் ஓரளவிற்கு நம்முடைய மின்சாரத் தேவை பூர்த்தியடையும் என்ற நிலை இருப்பதால், அதை உடனடியாகக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது வாரியத்தின் இன்ஜினியர்கள் செய்திருக்கும் சாதனை பாராட்டுக்குரியதாகும். ஏற்கெனவே மின்சாரம் எடுத்த பிறகு, அதே கழிவு நீரை மறுபடியும் மேலே ஏற்றி மீண்டும் இந்த நீரை உபயோகப்படுத்தி மின் சாரம் தயார் செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு யோசனையை வேறு எந்த மாநிலத்திலும் செயலுக்குக் கொண்டுவரவில்லை. நம்முடைய இன்ஜினியர்கள் தான் முதன் முதலாக இதைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய பொறியாளர் களின் இந்தச் சாதனையைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டியது அவசியமாகும். இப்படிப்பட்ட சிறந்த முறைகளை அமுல் செய்வதோடு இருக்கும் குறைகளையும் அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் சிரமப்பட்டுச் செய்கிற காரியங்களால் பயனடைகிற மில் அதிபர்கள் லட்சக்கணக்கான பணத்தை-மின் கட்டணத்தை செலுத்தாதிருக்கிறார்கள். அந்த முறையில் கோடிக் கணக்கான ரூபாய் பாக்கி யிருக்கிறது. அதோடு அண்டை மாநிலங்களான மைசூர், ஆந்திரா போன்ற வற்றிலிருந்து நமக்கு வரவேண்டிய பணமும் பல லட்சக் கணக்காகும். இதைப் பேசித் தீர்த்து நமக்கு வர வேண்டிய பணத்தை வாங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி பாக்கி இருப்பதற்கு இந்த அரசு மட்டுமல்லாமல் இதற்கு முன்பு இருந்த அரசும் தான் பொறுப்பாகும். இப்படிக் காலதாமதமாகியும் இன்னும் வராமல் இருந்துகொண்டிருக்கிறது மில் அதிபர்கள் பல லட்சக் கணக்கான ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால்

[11th December 1971

* 6 *S.N. Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any written representations have been received by the Government from any particular person or from any of the trade unions about the agreement signed between the management and the workers and about the election held for the Simpson Group Companies Worker's and Staff Union; and

(*b*) if so, the action taken thereon?

*திரு. காட்டூர் கோபால் :* மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிம்சன் அண்டு குரூப் கம்பெனிகள் தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் சங்கத்தின் தேர்தல் பற்றியும் அங்கு நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றியும் எவரிடமிருந்தாவது எந்தத் தொழிற் சங்கத்திடமிருந்தாவது எழுத்து மூலமான முறையீடுகள் அரசாங்கத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

*மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :* (அ) சிம்சன் மற்றும் குரூப் கம்பெனிகள் தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் சங்கத்தின் தேர்தல் பற்றியும் அங்கு நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைப்பற்றியும் எந்தத் தொழிற்சங்கமும் இதுவரை எழுத்து மூலமான முறையீட்டை எங்களுக்குத் தரவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

*மிஸ்டர் சேர்மன் :* ஐந்தாவது கேள்விக்குள்ள பதில்தான் இதிலும் இருக்கிறது என்று நினைக்கிறேன். இதற்கும் பதில் தேவையா ?

*திரு. காட்டூர் கோபால் :* தலைவர் அவர்களே, இது வேறு கேள்வி.

*திரு. எம். ஆறுமுகசாமி :* சிம்சன் கம்பெனியில் இருக்கிற சங்கங்களில் நம்முடைய சபையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. காட்டூர் கோபால் அவர்களைத் தலைவராகக் கொண்ட சங்கம் மைனாரிடியினருக்கு மட்டும் பிரதிநிதித்துவம் உள்ளது என்றும், மெஜாரிடியினர் இதை ஆதரிக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். அப்படி மற்றொரு சங்கம் மெஜாரிடியினரைக் கொண்டதாக இருக்கிறதா ? அங்கீகாரம் பெறாவிட்டாலும் நடைமுறையில் இருக்கிறதா ?

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :* தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் நிர்வகித்து வருகிறது ஒரே சங்கம் தான். அது திரு. காட்டூர் கோபாலைத் தலைவராகக் கொண்ட சங்கம்.



11th December 1971]

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ADJOURNMENT MOTION re. arrest Tin)n -IK DHANUSHKODI AND SANGAMESWARAN, EDITOR AND SUB-EDITOR RESPECTIVE OF "NAVA-SAKTHI" A TAMIL DAILY UNDER DEFENCE OF INDIA RULES

MR. CHAIRMAN : I have received notice of a motion from Thiru K. Rajaram, Leader of the Opposition, for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the wrongful arrest of Thiruvalargal Danushkodi and Sangameswaram, Editor and Sub-Editor respectively of "Navasakthi", a Tamil Daily under the Defence of India Rules for writing an editorial and an article in the daily "Navasakthi" by which a scare has been created in the minds of the journalists that the Defence of India Rules are being used for curtailing the freedom of the press.

I want to know from the Hon. the Leader of the Opposition how the matter falls within the scope of the rules governing adjournment motions.

* *திரு. கே. ராஜாராம் :* மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று காலையில் நவசக்தி பத்திரிகையின் ஆசிரியரும் உதவி ஆசிரியரும் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் கிடைத்தது. பொதுவாக அவர்கள் தேசப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய நிலைமையில் ஒரு கட்டுரையையும் தலையங்கத்தையும் எழுதியதாகவும் அதற்காகக் கைது செய்யப்பட்டதாகவும் கேள்விப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் விசாரித்ததில், அவர்கள் 'டிபன்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ்' 43 (1) பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கேஸ் போடப்படும். இது பாதுகாப்பில் வைக்கக்கூடிய ஒரு விஷயம் அல்ல என மிக உயர்ந்த நிலைமையில் பொறுப்புள்ள அதிகாரிகள் கூறினார்கள். அதன் பேரில் இப்போது அவர்களை ஜாமீனில் விடுவிக்க வேண்டுமென்று கேட்டதற்கு ஜாமீனில் விடுவதற்கான செக்ஷன் இல்லையென்று தள்ளி விட்டார்கள். எனக்குத் தெரிந்த வரையில் இம்மாதிரி திடீரென்று கைது செய்தது பொதுவாக பத்திரிகை உலகுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் எழுதியிருக்கக்கூடிய கட்டுரையும் தலையங்கமும் முதலமைச்சரைப் பொறுத்தவரையில், அவர்களைத் தனிப்பட்ட முறையிலும் முதலமைச்சர் என்ற முறையிலும் ரொம்பத் தகாத முறையில் தாக்கியிருப்பதாக முதலமைச்சர் கருதுகிறார்கள். ஆனால் இது தேசப் பாதுகாப்புக்கு எந்த வகையில் குந்தகம் விளைவிக்கும் என்று தெரியவில்லை.

[11th December 1971

*Simpson Group Companies*

*5 Q.—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the persons who met the Hon. Minister on 15th November 1971 and discussed with him about the problems of workers in the Simpson Group Companies:

(b) the capacity in which they have met and discussed with him; and

(c) the details thereof?

சிம்ப்சன் குருப் கம்பெனிகள்

**திரு. காட்டூர் கோபால் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 15–11–1971 அன்று சிம்ப்சன் தொழிற்சாலை தொழிலாளர் பிரச்னை சம்பந்தமாக யார் யார் தங்களைச் சந்தித்துப் பேசினார்கள்?

(இ) அவர்கள் எந்த ரீதியில் சந்தித்துப் பேசினார்கள்?

(உ) அவற்றின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** (மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சார்பில்) : திருவாளர்கள் எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை, கே.டி.கே. தங்கமணி, M.L.A என். எம். மணிவர்மா. அப்பன்ராஜ், எஸ். எம். நாராயணன், ஆர். குசேலர் ஆகிய தொழிற் சங்கத் தலைவர்கள் 15–11–1971 அன்று என்னை தலைமைச் செயல கத்தில் சந்தித்துப் பேசினார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற அடிப்படையில் பொதுவாக தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்ற முறையில் என்னை சந்தித்துப் பேசியிருக்கி றார்கள். பேசிய பிறகு கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டது.

1. தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலைகளுக்கு உள்ளும் புறமும் பாதுகாப்புத் தொடர்ந்து இருக்குமென்றும் அதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்கவேண்டாம் என்றும் திட்ட வட்டமாகக் கூறப்பட்டது.

2. தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எவரையும் பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்க அரசு ஆவன செய்யும் என்று உறுதியளிக்கப்பட்டது.

3. ஸ்ரீ ராம விலாஸ் பஸ் கம்பெனியில் ஆட்குறைப்பு செய்யப் பட்டவர்களுக்கு, சிம்ப்சன் குரூப்பைச் சார்ந்த இதர தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக் கிடைக்க அரசு முயற்சி செய்யுமென்றும், இதுபற்றி எற்கெனவே சிம்ப்சன் குரூப் கம்பெனி தொழிலாளர்கள் மற்றும் சிப்பந்திகள் சங்கங்கள் அரசிடம் தொழிற் தகராறு எழுப்பியிருக் கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.



11th December 1971]

**திரு. காட்டூர் கோபால் :** தலைவர் அவர்களே, சிம்ப்சன் நிறுவன தொழிற்சாலையில் அங்கிகரிக்கப்பட்ட தொழிற் சங்கம் இருக்கிற பொழுது, இப்படி வெளியார்கள் வந்து கலந்து பேசுகிற நிலைமை பற்றி அரசினுடைய கொள்கை என்ன? நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழில் நிர்வாகத் திற்கும் தொழிற் சங்கத் தலைவருக்கும் ஏற்படும் வேறுபாட்டை அதிகாரப் பூர்வமாக பேசித் தீர்த்துக்கொள்வது அந்தத் தொழில் நிறுவனத்திலுள்ள தொழிற்சங்கத்துடன்தான். பொதுவாக யாராவது இதுபற்றிப் பேச வேண்டுமென்று விரும்பி வந்தால், சந்தித்துப் பேசுவது வழக்கமாக இருக்கிறது. ஆனால் இந்த விவகாரத்திற்கு அதிகாரபூர்வமாக முடிவு காணவேண்டு மென்றால், அதைத் தொழிற்சாலையிலுள்ள தொழிற் சங்கப் பிரதி நிதியுடன்தான் பேசி முடிவெடுக்கப்படும்.

**திரு. கே. ராஜாராம் :** இப்போது அந்த நிலவரம் எப்படியிருக் கிறது, தொழில் தகராறு தீர்ந்துவிட்டதா? எல்லோரும் வேலைக்குச் சென்றுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போலவே, சட்டப் பேரவையிலே கட்சித் தலைவர்கள் சிலரும் எடுத்துச் சொன்னதற்கிணங்கவும் இந்தத் தொழில் தகராறு விரைவில் தீர வேண்டுமென்று அரசு கொண்டிருக்கிற அக்கரைக் கேற்பவும், தொழிற் சங்கத்தினுடைய தலைவர்கள் சிலரை— ஆக்ஷன் கமிட்டி என்று அமைத்துக்கொண்டிருப்பவர்களை— சந்தித்து நான் இரண்டு முறை நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் இணைந்திருக்க பேச்சுவார்த்தை நடத்தி, பல உறுதி மொழிகள் அளிக்கப்பட்டன. தொழிலாளர்களிடத்தில் கலந்து பேசிவிட்டு, பிறகு ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் என்பதற் கான அளவில் என்னிடத்திலிருந்து அவர்கள் பிரிந்து சென்றார்கள். ஆனால் அவர்கள் தொழிலாளர்களிடத்தில் சந்தித்துப் பேசுவதற் கிடையில் அவர்களுடைய ஆக்ஷன் கமிட்டியில் வேறு சிலர் இன்னும் அந்தத் தீவிர வாதத்தில் இருக்கிற காரணத்தால், ஆக்ஷன் கமிட்டியில் உள்ளவர்களின் முயற்சி வெற்றி பெற முடியாத அளவில் இன்னும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப முடியாமல் இருக் கிறார்கள். அடிசன் போன்ற நிறுவனத்தில் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி விட்டார்கள். எப்படியும் விரைவில் இந்தத் தொழில் தகராறு முடிந்து விடுமென்று அரசு நம்புகிறது.

**திரு. கே. ராஜாராம் :** முதலமைச்சர் நம்புவதைப் போலவே நானும் நம்புகிறேன். அநேகமாக தகராறுகள் பூராவும் தீர்க்கப் பட்டு, மிகச் சிறிய இரண்டொரு விஷயங்கள்தான் தீராமலிருப்ப தாக நேற்று இரவு தகவல் கிடைத்தது. அதையும் விடா முயற்சி யோடு முதலமைச்சர் அவர்கள் மற்ற வேலைகளின் மத்தியில் இதில் கவனம் செலுத்தி மீண்டும் அழைத்து நாளைக்குப் பேசி முடிப்பார் களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[11th December 1971

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: மிகச் சிறிய விஷயம் என்று சொல்வது, இப்போதிருக்கிற தலைவரை மாற்ற வேண்டுமென்பது. இந்தச் சிறிய விஷயத்தைக் கல்யாணத்தில் தாலி கட்ட வேண்டாமென்று புரோகிதர் திருமணத்தில் சொல்வதைப் போலச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விஷயத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், இப்போது வேலைக்குச் செல்லுங்கள் என்று கூறி வேறு பல உறுதிமொழிகளை அளித்திருக்கிறேன். அவர்கள் அதற்கு இணங்கி வந்ததாகத் தெரியவில்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி**: சிம்சன் தகராறு சம்பந்தமாக அமைச்சர் அவர்களை ஆக்ஷன் கமிட்டியார் சந்தித்தார்கள் என்று சொன்னார்கள். அந்த ஆக்ஷன் கமிட்டியார் தொழிற் சங்கத்திற்கு மட்டும் பிரதிநிதித்துவம் வகிக்கிறவர்களா? அரசியல் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறவர்களா? அரசியல் கட்சிக்காரர்கள் என்றால், எந்தெந்தக் கட்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள்? எந்த அடிப்படையில் வந்து பேசினார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இந்தக் கேள்விகள் எல்லாம் நான் அவர்களைப் பார்த்து ஏன் கேட்டிருக்கக் கூடாது என்று நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் இந்தக் கேள்வியின் மூலமாகக் கேட்டிருக்கிறார்கள். நான் இவைகளையெல்லாம் அவர்களிடம் கேட்கவில்லை.

**திரு. கே. ராஜாராம்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, இதுபோன்ற விஷயங்களுக்குத் தகுந்த பதிலை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதுகூட முக்கியமான விஷயமாக இப்போதில்லை என்று அறிகிறேன். தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற ஒருசிலரைப் படிப்படியாக சில தவணைகளில் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது ஒரு விஷயம். அத்தனை பேரையும் இப்போதே ஒருமிக்க வேலைக்( எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது மற்றொரு விஷயம். இதில்தான் சிரமம் இருக்கிறது என்று சொன்னார்கள். அடுத்தபடி, தலைவரை உடனடியாக மாற்ற வேண்டுமென்ற பேச்சை ஒத்தி வைத்திருப்பது போலவும் கூடிய சீக்கிரம் தேர்தல் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, யூனியன் தேர்தலைப் பொறுத்த வரையில், பைலா படி அது நடைபெறும் என்று ஏற்கனவே உறுதிமொழி அளித்திருக்கிறேன். அதற்கான தேதி கண்டிப்பாக மாற்றப்பட மாட்டாது என்றும் அறிவித்திருக்கிறேன். எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்திலிருந்து சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையால் வேலையி



11th December 1971]

லிருந்து நீக்கப்பட்டவர்கள் 98 பேர்கள் என்று கருதுகிறேன். வெளியூர்களில் உள்ளவர்களையும் சேர்த்து 125 பேர்கள் இருக்கிறார்கள். அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று திரு. காட்டூர் கோபால் அவர்களைத் தலைவராகக் கொண்டிருக்கும் சங்கம் இப்போது கோர்ட்டுக்குப் போய் அந்த விஷயம் இப்போது கோர்ட்டில் இருக்கிறது. திரு. காட்டூர் கோபால் அவர்களே, அவர்களை வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வாதிடுகிறார்கள், போராடுகிறார்கள். லேபர் கோர்டில் அந்த விஷயம் இருக்கிறது. அதற்குள் உடனடியாக 98 பேர்களையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மூன்றாவது முறையாக தொழிற் சங்கத் தலைவர்கள் நம்முடைய மேலவைத் தலைவர் அறையில்தான் என்னைச் சந்தித்தார்கள். அப்போது சொன்னேன். நிறுவனத்தோடு தொழிலாளர் நல அமைச்சரும் நானும் பேசியபோது, ஏற்கனவே 200 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் படிப்படியாக வேலையில் எடுத்துக்கொள்வது என்று நிறுவனத்தார் உறுதி அளித்திருப்பதால், அவர்களை எடுத்துக்கொண்ட பிறகு, இவர்களை எடுத்துக் கொள்ள உறுதி அளித்தார்கள். ஆகவே ஒரு மாதத்திற்குள் அனைவரையும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று உறுதி அளித்தேன். அதற்குப் பிறகும் நேற்றைய தினமும் நடைபெற்ற கூட்டத்தில் என்ன பேசியிருக்கிறார்கள், எப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பதைக் காங்கிரஸ் கட்சிப் பத்திரிகையில் விளக்கமாக வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தலைமை வகித்த காங்கிரஸ் கட்சி சார்பாக தொழிற் சங்கத்தில் இருக்கிற நண்பர் மணிவர்மா அவர்கள் என்னைச் சந்தித்த விவரத்தை மட்டும் எடுத்துச் சொல்லிவிட்டு மீண்டும் சந்திப்பேன் என்று பேசி முடித்திருக்கிறார்கள். மற்றவர்கள் பேசும்போது, முதலமைச்சரைக் கைது செய்ய வேண்டுமென்றும், தமிழ்நாட்டின் யாகியாகான் கருணாநிதிதான், அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்றும் இப்படியெல்லாம் பேசியது மட்டுமல்லாமல், மீண்டும் பி. ராமமூர்த்தி, இடதுசாரிக் கம்யூனிஸ்ட் தலைவர் பேசுகிற நேரத்தில், திரு. காட்டூர் கோபால் பதவியிலிருநது நீக்கப்பட வேண்டும், அதைப் போலவே இப்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீண்டும் பரிசீலித்து வேறு ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்றும் அதுவரையில் போராட்டம் ஓயப்போவதில்லை என்றும் தொழிலாளர்களிடத்தில் பேசியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று சொன்னார்கள். ஆனால் அப்படிப் பேசும்போது யாரோ ஒருவர் எழுந்து குறுக்கே கேள்வி கேட்டதற்காக அந்தத் தொழிலாளரைக் கூட்டத்தில் இருந்தவர்கள் நையப் புடைத்திருக்கிறார்கள். வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இப்போது இதுதான் நிலவரம். ஆக்ஷன் கமிட்டியிலுள்ள பலருக்கு இது தீர வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. தீர்ந்துவிட்டால் நாம் என்ன ஆவது என்று சிலருக்கு எண்ணம் இருக்கிறது. இந்த நெருக்கடியில் நிலைமை இருக்கிறது.

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

வருகிவிட்டேன், அமெரிக்காவுக்கு வால் பிடிக்கிறேன், பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருக்கிறேன் என்ற அளவுக்குத் தொடர்ந்து நவசக்தியில் எழுதப்பட்டு வந்திருக்கிறது.

தலைவர் காமராஜ் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நானும் கேள்விப்பட்டேன். குறிப்பின் மூலமும் பார்த்தேன். பத்திரிகையிலும் படித்தேன் பிரதமரிடமும் முதலமைச்சரிடமும் இந்த நேரத்தில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று மிகவும் கண்ணியத்தோடு குறிப்பிட்டிருந்தார். நான் இதைக் காலையில் பேரவையிலும் குறிப்பிட்டேன், அதற்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த அரசியல் காரணத்திற்காகவும் எடுத்துக்கொண்ட நடவடிக்கை அல்ல. அப்படி இருந்தால், அரசியல் தலைவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கும். தேச விரோதப் போக்குக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தடுப்புக் காவல் சட்டத்தின் பேரால் எதுவும் பேச முடியாமல் தடுக்கப்படுகிறது என்பதல்ல. வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அவருடைய நியாயத்தை எடுத்துச் சொல்ல வழி வகை இருக்கிறது. இந்த விஷயம் வழக்கு மன்றத்தில் இருக்கின்ற காரணத்தால், சபை நடவடிக்கையை ஒத்தி வைத்து அதிக நேரம் பேசத் தேவையில்லை. தலைவர் அவர்கள் இதற்கு அனுமதி வழங்கவேண்டாம் என்ற என் எண்ணத்தைக் கூறி அமருகிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டது பற்றி மகிழ்ச்சி. ஆனால் பொதுக் கூட்டம் நடந்தது 8-ம் தேதி இரவு. அன்று இரவுதான் திரு. காமராஜ் அவர்களும் காங்கிரஸ்காரர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கூறினார்கள். ஆட்சேபிக்கப்படுகிற அந்தக் கட்டுரை அதற்கு முன்னாலேயே எழுதப்பட்டது. இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு காரியங்களை நடத்த வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் விளக்கம் தரப்பட்டதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இவ்வளவு கடுமையாக நடவடிக்கை எடுத்தால், மற்றப் பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு பீதி உண்டாகும். இதை எப்படிச் செய்து சுமுக சூழ்நிலை ஏற்படுத்த முடியுமோ அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : I have heard both sides. Arrests made under the Defence of India Rules cannot form the subject-matter of adjournment motion. The Government have taken steps under the Defence of India Rules. I, therefore, withhold consent to the raising of the matter.

STATEMENT UNDRE RULE 82 BY THE HON. THE CHIEF MINISTER ABOUT DISTRIBUTION OF KEROSENE THROUGH RATION CARDS

MR. CHAIRMAN : Now the Hon. the Chief Minister will make a statement under rule 82 of the Council Rules.



[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் வழங்குவதில் பற்றுக்குறை எதுவும் இருக்காதென்று இந்திய அரசு உறுதியளிக்கும் அந்த நேரத்தில், அவசர நிலை முன்னிட்டு பிற மிக முக்கியக் காரியங்களுக்கு இன்றியமையாத பொருள்களை அனுப்ப வேண்டியிருப்பதையொட்டி, மண்ணெண்ணெய் அந்தந்த இடங்களுக்கு வந்து சேருவதில் சற்றுத் தாமதம் ஏற்படக் கூடுமென்றும், அதனால் அங்கங்கே மண்ணெண்ணெய் பற்றுக்குறை ஏற்படக் கூடுமென்றும், எனவே அவசியமான இடங்களிலும் இயன்ற இடங்களிலும் மண்ணெண்ணெயைப் பங்கிட்டு அளிக்கலாமென்றும் இந்திய அரசு கூறியுள்ளது. இதனையொட்டி குறைந்த வருமானமுள்ளவர்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் விளக்குகளுக்கே மண்ணெண்ணெயைப் பெரிதும் பயனபடுத்தக் கூடுமாதலால், ஏழை எளியவர்கள் தங்கள் குறைந்த அளவு தேவையைப் பெரும் பொருட்டு மாநிலத்தின் பகுதிகளனைத்திலும் மண்ணெண்ணெய் வழங்குவதற்காகப் பங்கீட்டு அட்டைகள் கொடுக்கப்படலாமென்றும், இந்திய அரசு இம்மாநிலத்திற்குத் திங்கள் தோறும் அளிக்கிற மொத்த மண்ணெண்ணெய் அளவினையொட்டி மக்களுக்கு ஒவ்வொரு கால அளவிற்கும் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவை முறைப்படுத்தலாமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. வீட்டுப் பயனுக்கன்றி பிற பயன்களுக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துகிறவர்கள் தங்களுக்கு வேண்டிய குறைந்த அளவு தேவைகளுக்கு அனுமதிச் சீட்டுகளைப் பெறவேண்டும். சுருங்கச் சொன்னால் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிப்பதில் முழு அளவு கட்டுப்பாடு கொண்டு வரப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் எவ்வளவு தேவையென்று கணக்கிட்டு மண்ணெண்ணெய்ப் பங்கீட்டு அட்டைகள் அச்சிட்டு வழங்குவதற்கு ஒருசில காலமாகும். எனவே அட்டைகள் வழங்கப்படும் வரை மண்ணெண்ணெய் விற்பனையை விழிப்புடன் கவனித்து வருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சில்லரை விற்பனையாளர் ஒவ்வொருவருக்கும் பங்களவு வரையறுத்து உணவுப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் பிறப்பிக்கும் குறிப்பிட்ட ஆணைகள் மீது அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குமாறு மொத்த விற்பனையாளருக்குக் கட்டளை பிறப்பிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. மண்ணெண்ணெயை அதிகமாக வாங்கிப் பதுக்கும் வாய்ப்பினைக் குறைக்கும் பொருட்டு, சில்லறை விற்பனையில் ஒரு சமயத்தில், ஒருவருக்கு 3 லிட்டருக்கு மேல் விற்கக் கூடாதென்றும் வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், ஒழுங்குமுறைக்குட்பட்ட பிற நிறுவனங்கள் மூலமாகவும் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய இயன்றவரை ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் சில்லரை விற்பனையாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 200 லிட்டருக்கு மேல் வழங்காதிருக்குமாறு மொத்த விற்பனையாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். வரையறுக்கப்பட்

[திரு. கே. ராஜாராம்]

முதலமைச்சர் அவர்களும் தேசப் பாதுகாப்புக்கு உகந்த முறையில் நடந்துகொள்ளவில்லையென்ற முறையில் கட்டுரை இருக்கிறது. இன்னும் அதிகமாக தேசப் பாதுகாப்புக்கு உகந்த முறையில் இருக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்தக்கூடிய பத்திரிகையில் எட்டாம் தேதி இரவு தலைவர் காமராஜ் அவர்கள் செய்த பிரசங்கத்தைப் பற்றியும் வந்திருக்கிறது. முதலமைச்சருக்குத் தெரியும். இந்த யுத்த முயற்சிகளுக்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும், இதில் காங்கிரஸ்காரர்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற பல விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள். தேசம் என்று, மாற்று அரசியல் கட்சிக்காரர்கள் எல்லாம் தங்களுடைய கட்சி மனப்பான்மையை விட்டு ஒருமித்து ஒரே கட்சி, ஒரே தலைவர், அது இந்திரா காந்தி என்றும், மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒரே தலைவர் நம் முதலமைச்சர் என்ற முறையிலும் நாம் அரசியல் நடத்தி வர வேண்டும், யுத்தம் முடியும் வரை அரசியல் கட்சி பேதம் என்பதே இருக்கக்கூடாது, யுத்த முயற்சிக்கு எல்லாவித உதவிகளையும் செய்ய வேண்டுமென்று பேசினார்கள். அவர்கள் பேச்சு எந்தப் பத்திரிகையில் வந்ததோ அதே பத்திரிகையில்தான் இந்தத் தலையங்கம் வந்தது. ஆனால் இவர் இரவு 9 மணிக்குப் பேசினார். தலையங்கம் பகலில் அடித்துவிட்டார்கள். இவ்வளவுதான் விஷயம். முதலமைச்சர் அவர்கள் இரண்டொரு நாள் பொறுத்திருக்கலாம், எப்படிப் போகிறார்கள் என்று பார்த்திருக்கலாம். அவசரப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று என்னைப் பொறுத்தவரையில் நினைக்கிறேன். கொஞ்சம் பொறுமையாகப் போகவேண்டிய நிலையில் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நவசக்தி ஆசிரியர் தனுஷ்கோடியைப் பொறுத்த வரையில் தேசத்துக்காகப் பாடுபட்டு சுதந்திரத்திற்காக 3 முறை நான்கு வருஷங்கள் சிறை சென்றிருக்கிறார். அவர் ஒரு தியாகி. 1932-லேயே சிறை சென்றவர். அவர் தேசப் பாதுகாப்புக்குக் குந்தகமாக நடந்து கொள்ளுவார் என்று யாருமே எண்ண முடியாது, யாரும் சொல்ல முடியாது. கட்டுரை எழுதியவர் இன்னார் என்று அவர் சொல்லித்தான் கைது செய்திருக்கிறார்கள். 'ச' என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார். இவ்வளவு சீக்கிரம் கடுமையான நடவடிக்கை எடுத்தது எல்லாப் பத்திரிகைகளைச் சேர்ந்தவர்களுக்கும் பீதியையும் அதிர்ச்சியையும் உண்டு பண்ணியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் பொறுமையாக நடந்திருக்கலாம் என்பது என் அபிப்பிராயம். இதைப்பற்றிச் சற்று விவரமாக விவாதம் செய்ய வேண்டும். அரசாங்கத்தின் யுத்த முயற்சிகளுக்கு இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு பூராவும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிற சூழ்நிலையில் அது கெட்டு விடாமலிருப்பதற்கு சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து ஒன்றிரண்டு மணி நேரம் விவாதம் செய்து, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த உதவி செய்ய வேண்டு



[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முதலமைச்சர் அவர்களும் அதற்கு இணங்குவார்கள் என்று நினைக்கிறேன்.

MR. CHAIRMAN : I want to know from the Hon. the Chief Minister the viewpoint of the Government.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனுஷ்கோடி அவர்களிடத்தில் நாட்டுப் பற்றுக்குக் காட்டுகிற அந்த மதிப்பை முதலமைச்சர் ஒருவருக்கு இருக்கிற நாட்டுப் பற்றுக்குக் கொடுத்ததாகத் தெரியவில்லை. உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஏனென்றால் அவர்கள் இந்த நேரத்தில் அதிர்ச்சியடைந்ததைச் சொன்னார்கள். ஒரு நாட்டின் முதலமைச்சர், இந்தியாவினுடைய பாதுகாப்பு இன்றைக்கு நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிற நேரத்தில், இந்தியாவுக்கு விரோதமான காரியத்தில் ஈடுபடுகிறார் என்று தொடர்ந்து 3, 4 நாட்கள் ஒரு பத்திரிகையில் எழுதப்படுகிற நேரத்தில் அதிர்ச்சி அடையாமல் இருந்தார்களா என்று நான் கேட்பதற்கு முன்பு, எனக்குத் தெரியும் ஏன் அதிர்ச்சி அடைந்தார்கள் என்று. அவர் அதிர்ச்சியை என்னைப் போன்றவர்களிடம் காட்டிக் கொள்ள முடியுமே தவிர, அந்த இடத்தில் காட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் அவரைப் போன்ற சில நல்லவர்களும் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன். இந்தப் பத்திரிகை நவசக்தியைப் பொறுத்த வரையில், நான் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்த மறு நாளிலிருந்து ஏதோ அமெரிக்காவுக்கு இந்தியாவைக் காட்டிக் கொடுத்து நான் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருக்கிற சூழ்நிலையில் இருப்பது போலவே கதைகள் கட்டிவந்தார்கள். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கு நான் அமெரிக்காவிலிருந்து ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அங்கே மருத்துவத் துறை மிக நேர்த்தியாகப் பணியாற்றுகிறது, அதைப் போன்ற வாய்ப்பு வசதிகளைத் தமிழ் நாட்டில் நான் பெருக்க விரும்புகிறேன் என்று. இந்தக் கடிதத்தையும் பத்திரிகையில் போட்டுக் கருணாநிதி அமெரிக்கதாசனாகிறார் என்று எழுதுகிறது. அமெரிக்கா அரசாங்கம் இன்றைய சூழ்நிலையில் இந்தியாவுக்கு விரோதமானது என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அதற்காக அமெரிக்காவில் இருக்கிற மருந்துகளை, நல்ல காரியங்களை, அமெரிக்காவில் இருக்கிற நல்ல மக்களை வெறுக்க வேண்டுமென்று எந்த நியதியும் கிடையாது. அதைப்போல கலைவாணர் அரங்கத்தில் பேசிய நேரத்தில், இங்கு மேலவையிலும் சட்டப் பேரவையிலும் கொண்டுவரப்பட்ட இந்திய பாதுகாப்பை ஒட்டிய தீர்மானத்தை முன்மொழிந்தும் வழிமொழிந்தும், அதன் பிறகு இறுதியாகப் பேசிய நேரத்திலும் மிகத் தெளிவாகவும் குறிப்பிட்டிருக்கிறேன். அமெரிக்க அரசு இன்றைக்கு இந்தியா பக்கம் இல்லாவிட்டாலும், அமெரிக்காவில் இருக்கிற மக்கள் இந்தியா பக்கம் இருக்கிறார்கள். அதைப் போலவே உலக

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

டுள்ள விற்பனை விலைகள் கடைகளிலும் கைவண்டிகளிலும் எழுதி வைக்கப்பட வேண்டும். ஒருவருக்கு ஒரு சமயத்தில் 3 லிட்டருக்கு மேல் விற்கக் கூடாது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அரசுப் பங்கீட்டுக் கடைகள் மூலமாகவும் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கைவண்டிக்காரர்கள் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதை கூர்ந்து கவனித்து வருவதற்காக, குறிப்பிட்ட இடங்களில் அந்த வண்டிக்காரர்கள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதாக இந்திய எண்ணெய்க் கழகம் முன்வந்துள்ளது. இந்தக் கழகத்தின் பெட்ரோல் நிலையங்கள் தவிர, அரசுக் கிடங்குகளிலும், பங்கீட்டுக் கடைகளிலும் தேவையான பணியாளர்கள் இருப்பர் என்பதைக் கருதி, இவ்வாறு
பிற்பகல் 4-40 மண்ணெண்ணெய் விற்க ஏற்பாடு செய்யலாமென அக்கழகத்திற்குக் கூறப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் ஒரு முறை வாங்கியவரே மீண்டும் மீண்டும் வாங்கினால், இவ் விற்பனை ஒழுங்கு முறையின் நோக்கத்தையே அது முறியடிப்பதுடன், நெருக்கடியான இந்த நேரத்தில் மண்ணெண்ணெய்ப் பற்றாக்குறை நிலவுகிறதென்ற உணர்வினைத் தோற்றுவிக்கும். எனவே, தங்களுக்குக் குறைந்த அளவிற்குத் தேவைப்படும் மண்ணெண்ணெயை மட்டுமே வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும், இயன்ற வரையில் சமையலுக்கு வேறு எரிபொருளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் பொது மக்களை வேண்டுகிறேன்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் பணி புரியும் ஆசிரியர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு, தலைக்கு இருவர் அல்லது மூவரை அழைத்து வராவிடின் தற்காலிக பணி நீக்கம்—மாறுதல்—ஊதியம் நிறுத்தி வைக்கப்படுதல்—பி.எஃப். கடன் கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்படுதல் போன்ற இன்னல்கள் இழைக்கப்பட்டுள்ளதால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மேலவைத் தலைவர் அவர்களே, குடும்பநலத் திட்டம் ஒரு தேசிய திட்டமாகும். உண்மையில் குடும்பநலத் திட்டம் நம்முடைய பொருளாதார வளர்ச்சியில் ஓர் இன்றியமையாத பகுதியாகும். மக்கள் பெருக்கத்தால் தோன்றிய கடுமையான நிலைமையை நாடு முழுவதும் உணரவேண்டுமென்பது குடும்ப நலத் திட்டத்தின் நோக்கமாகும். குடும்பநலத் திட்டத்தின் வெற்றி நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் திட்டத்தின் கருத்துக்களைப் பரப்புவதைச் சார்ந்திருக்கிறது. மக்கள் பெருக்கத்தின் பிரச்னையை நோக்கும் போது பெரும்பாலான மக்கள் குடும்பநலத் திட்டத்தில் ஆர்வம் கொள்ளுமாறு செய்தல் வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் குடும்பநலத் திட்டத்தின் நோக்கம் நிறைவேற தன் பங்கினை ஆற்றிடவேண்டும். இந்த நோக்கம் ஈடேற





[மாண்புமிகு திரு. க. அன்பழகன்]

தாமாகவே பணியாற்ற முன்வரும் ஆர்வமுள்ள அனைவரின் பணியையும் பயன்படுத்த வேண்டும். அறிவைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியப் பெருமக்கள் போன்றோர்களின் பணியை இத்திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும். பொது மக்களிடத்தில் அவர்களுக்குள்ள செல்வாக்கை அரசு பெரிதும் கவனத்தில் கொண்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டுதான் அரசு ஊழியர்களையும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் ஊழியர்களையும், அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களையும் அறுவை சிகிச்சை முறை பரப்புவதற்கு பிரச்சாரம் செய்யவும் ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் ரூ. 10 மதிப்பூதியம் பெறவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அறுவை சிகிச்சைக்காக நபர்களைக் கொண்டுவருவதில் அரசு ஊழியர்கள் அல்லது மற்றவர்கள் மீது வற்புறுத்தவோ, வலுக்கட்டாயமோ கூடாதென்று அரசினால் தெளிவாக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் ஊழியர்களையோ மற்றவர்களையோ அறுவை சிகிச்சைக்காக நபர்களைக் கொண்டு வரும்படி வற்புறுத்தக் கூடாதென்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கும் மேற்கண்ட ஆணை பொருந்தும்.

திருநெல்வேலி, வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்டங்களிலிருந்து அறுவை சிகிச்சைக்கு நபர்களைக் கொண்டு வர வேண்டுமென்று ஆசிரியர்களை வற்புறுத்துவதாகவும் அவ்வாறு கொண்டு வரத் தவறினால் ஊதியம் கொடாமை, ஆண்டு ஊதிய உயர்வு கொடாமை, தற்காலிக வேலை நீக்கம் போன்ற தண்டனைகளுக்கு அவர்கள் உள்ளாக்கப்படுவதாகவும் சில புகார்கள் வந்துள்ளன. இந்தப் புகார்கள்பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள் அறிக்கை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். பனமரத்துப்பட்டி, நங்கவல்லி வட்டாரங்களில் மூன்று ஆசிரியர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதாக சேலம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு சிறப்பு அறிக்கை அனுப்பியுள்ளார். ஆனால் அவ்வாசிரியர்கள் குடும்பநலத் திட்டத்திற்குச் சற்றும் தொடர்பில்லாத வேறு பல காரணங்களுக்காக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பள்ளிக்கூடத்திலுள்ள மரங்களை அனுமதியின்றி வெட்டி விற்றதற்காகவும், பனமரத்துப்பட்டி ஒன்றியத்திலுள்ள ஒன்றியத்தின் தொடக்கப் பள்ளிக்கூடங்களின் தலைமை ஆசிரியர்கள் கூட்டம் பள்ளி நேரத்தில் ஏற்பாடு செய்ததற்காகவும் பனமரத்துப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தவறாக நடந்து கொண்டதற்காகவும் அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். நங்கவல்லி வட்டாரத்தின் ஆசிரியர், வட்டார வளர்ச்சி அலுவலர் பள்ளி நேரத்தில் பள்ளிக்கு வருகை புரிந்தபோது விடுப்போ அல்லது அனுமதியோ இன்றி வாராமல் இருந்ததற்காக தற்காலிக வேலை நீக்கம் பெய்யப்பட்டுள்ளார். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் சேலம் மாவட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவராகவும், செயலாளராகவும் இருந்த காரணத்தால் அவர்கள் தங்களுடைய

திரு. எஸ். முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் இப்படி ஆசிரியர்கள் கூட்டணியைப்பற்றித் தவறான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். தமிழ் நாடு

தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் இந்தத் தவறான கருத்துக்கு பதில் சொல்ல வேண்டியது என் கடமையான காரணத்தால், நான் பேசுகிறேன். ஆசிரியர் கூட்டணி அரசுக்கு எதிராகவோ, தேசியத் திட்டங்களுக்கு எதிராகவோ பிரச்சாரம் செய்யவில்லை. ஆசிரியர் கூட்டணியின் அதிகார பூர்வமான ஏட்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஆசிரியர்கள் எதிர்க்கவில்லை என்பது தெளிவாக எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் கூட்டணி அதிகார பூர்வமாக பத்திரிகையில் குடும்பக் கட்டுப்பாடு பற்றி அது ஒரு தேசியத் திட்டமென்றும், அதை ஆசிரியர்கள் எதிர்க்கவில்லையென்ற அளவிற்கும் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வேறு எந்த வகையிலும் பிரசாரம் செய்யப்படவில்லை. ஆனால் ஆசிரியர்கள் இதற்காகக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள், அதிகாரக் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவர்கள் இதற்கு 2 ஆள், 3 ஆள் கொண்டுவரவில்லை என்பதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தைக் காட்டாமல் வேறு காரணங்களைக் காட்டி, அவர்கள் மேல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். சஸ்பென்ஷன் போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். ஒரு ஆசிரியர் பெற்றோர் ஒருவரை அழைத்துச் சென்று ஆறுவை சிகிச்சை செய்துவிட்டார். உடனே அந்தப் பெற்றோருடைய பிள்ளைகளும் ஊராரும் மற்றவர்கள் எல்லாம் கூடி ஆசிரியர் கூட்டிச் சென்று ஆறுவை செய்தது தவறு என்று முடிவு செய்துள்ளார்கள். 1,500 ரூபாய் அபராதம் விதித்துள்ளார்கள். அந்த ஆசிரியர் அதே இடத்தில் 500 ரூபாய் கட்டி விட்டு ஆயிரம் ரூபாய்க்கு பாண்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். எவ்வளவு கொடுமை! எனக்குத் தெரிந்து எல்லா ஆசிரியர்களும் 50 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரையில் தங்களுடைய சம்பளத்திலிருந்து கொடுத்து கேஸ்களைப் பிடித்து வர வேண்டிய நிலை இருக்கிறது. இதை இந்த நேரத்திலே அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதை நான் உண்மையாகக் கூறுகிறேன். இதற்கு ஒரு விசாரணை வையுங்கள். அதிகாரிகள் சொல்வதை அப்படியே எப்போதும் நம்பாமல் இதை மீண்டும் பரிசீலனை செய்து விசாரணை நடத்த வேண்டுமென்று அமைச்சரவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

Mr. CHAIRMAN : ' Call attention notice ' கொடுக்கிற மெம்பர்களுக்கு :

" A member may, after questions and with the previous permission of the Chairman, call the attention of a Minister to any



Mr. CHAIRMEN.

matter of urgent public importance and the Minister may then make a brief statement on the matter or ask for time to make a statement later.

There shall be no debate on such statement at the time it is made."

## V. GOVERNMENT MOTION.

### *Suspension of Rule 23 (1) of the Council Rules.*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

" தமிழ் நாடு சட்ட மன்ற விதிகளின். 23 (1)-வது விதி நீக்கி வைக்கப்பட்டு, இந்த அவை 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 11 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது "

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Mr. CHAIRMAN : The question is—

" That rule 23 (1) of the Tamil Nadu Legislative Council Rules be suspended and this House do resolve to transact Government business on Saturday, the 11th December 1971."

The motion was put and carried.

## VI. DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1971–72 AND THE SUPPLEMENTARY FINANCIAL CTATEMENT FOR 1970–71 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD.

Mr. CHAIRMAN : Now we will take up the discussion on the Electricity Board Budget. The Hon. the Minister for Electricity will now reply to the debate.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** மேலவைத் தலைவரவர்களே, 1971–72-ம் ஆண்டின் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதும், 1970–71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் நடந்த விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கலந்துகொண்டு நல்ல ஆலோசனைகளை நல்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட நல்ல ஆலோசனைகளை நல்கியதற்காக என்னுடைய நன்றியினை அத்தனை பேருக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் பொதுவாக இந்தத் தடவை குறைகள் குறையப்பட்டு எல்லோரும் நல்ல முறையிலே பாராட்டுகின்ற அளவிலே வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் அமைந்திருந்ததைப் பார்க்கும் போது, நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

நமது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற போது

" ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய் "

எனக் குறிப்பிட்டார்கள். அவர்கள் காலத்திலே பிறந்த மின்சார வாரியத்தை இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிற அரசு நல்ல முறையிலே பாதுகாத்து இன்றைக்கு நல்ல பயன் அளிக்கத் தக்க

[மாண்புமிகு திரு. க. அன்பழகன்]

பதவியைப் பயன்படுத்தி சங்கத்தின் கூட்டத்தைக் கூட்டி ஆசிரியர்களுக்கு உண்மையைத் திரித்துக்கூறி ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி இதுபற்றி மாவட்ட ஆட்சியாளரிடம் எடுத்துரைத்த பிறகு, மாவட்ட ஆட்சியாளர் அனைத்து ஊராட்சி ஆணையாளர்களுக்கும் தற்காலிக வேலை நீக்க ஆணைகள் இருப்பின் அவற்றை நீக்கும்படி ஆணையிட்டுள்ளார். மேலும் ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து பணியாற்றுமாறு அவர்கள் ஒத்துழைப்பைக் கோரிப் பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இப்பொருள் பற்றி ஆசிரியர்களின் பிரதிநிதிகளோடும் விவாதிக்கப்பட்டது. இதன் பலனாக தவறான கருத்துக்கள் நீக்கப்பட்டன. ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து குடும்பநலத் திட்டப் பணிக்கு ஒத்துழைப்பைத் தர ஒப்புக்கொண்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள், இப்பொழுது குடும்பநலத் திட்டம் வெற்றி பெற தாமாகவே முன்வந்து முழு ஒத்துழைப்பையும் தருவதாக மாவட்ட ஆட்சியாளர் கூறுகிறார்.

சேலம் மாவட்ட ஆசிரியர்கள் தற்போது நடந்துகொள்ளும் முற்போக்கான முறை நம் மாநிலத்தின் பிற மாவட்டங்களும் பின்பற்றத்தக்க வகையில் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மேலும் ஒவ்வொரு குடிமகனும் குடும்பநலத் திட்டம் வெற்றி பெற தன் பங்கினைச் செய்ய தீவிர ஆர்வம் கொள்ள வேண்டும் என்று அரசு கருதுகிறது. அதே நேரத்தில் அதிகாரிகள் வற்புறுத்தல் முறைகளைக் கையாளாமல் மக்கள் தாங்களாகவே முன்வந்து குடும்ப நலத் திட்ட முறைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

* **திரு. எஸ். முத்துசாமி :** இந்தக் குடும்பநல அறுவை சிகிச்சை காரணமாக, பல்வேறு ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள், கொடுமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை
பிற்பகல் 4-50 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக இதைப்பற்றி ஒரு மணி நேரம் இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். தீர்மானமும் கொடுத்துள்ளேன். இதுபற்றி ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்பதற்கு ஆதாரமாக என்னிடமுள்ள போட்டோஸ்டட் காபிகளைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களின் பார்வைக்கு அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அரசாங்கத்தினுடைய மேலதிகாரிகள் மூலமாக ஆசிரியர்களை வற்புறுத்துவதில்லை. குடும்பநலத் திட்டத்திற்காக ஆசிரியர்களை வற்புறுத்த வேண்டாமென்று திட்டவட்டமாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டு நடத்துகிற இந்தக் காரியத்தில் அவர்கள் ஆசிரியர்களை வற்புறுத்துவதில்லை. ஆனால் இப்படிக் கட்டாயப்படுத்துகிறார்கள்



[மாண்புமிகு திரு. க. அன்பழகன்]

என்று தவறாகச் சொல்லி ஆசிரியர்களைத் தூண்டிவிட விரும்புகிறார்கள். இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறவர்கள் தங்களுக்குக் கீழே உள்ள அதிகாரிகள், ஊழியர்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். ஒரு காலத்திலே ஆசிரியர்கள் தங்களுக்கு இந்தப் பொறுப்பு அளிக்கப்படுமானால், அதிலே ஒரு நான்கு பேரை அறுவை சிகிச்சைக்கு அழைத்து வந்தால், 40 ரூபாய் கிடைக்குமே என்ற காரணத்தால், இதிலே ஆர்வம் காட்டினார்கள். இப்படி ஆர்வம் காட்டுகிற நிலை இன்றைக்கு இல்லாத காரணத்தால், இதற்கு ஒத்துழைக்க ஆசிரியர்கள் விரும்பாத காரணத்தால், அவர்கள் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. ஆசிரியர்களிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது என்றால், அன்றைக்கு கிராமங்களில் இவர்கள் தான் அறிவாளிகள் என்று கருதப்பட்டது. அவர்கள் சொன்னால், அவர்களுக்கு இருந்த மதிப்பின் காரணமாக சாதாரண மக்கள் இந்தக் குடும்பநலத் திட்டத்தை ஒப்புக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்ற கருத்தில் அவர்களிடத்தில் இது ஒப்படைக்கப்பட்டது. எங்காவது அதிகாரிகள் தவறு செய்திருப்பார்களானால், மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்தது போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களிடம் தெரிவித்தது போல, எந்த இடத்திலாவது தவறு நேர்ந்திருக்குமானால், அந்த இடத்திலேயே நீக்கப்படும். ஆனால் இப்படிப்பட்ட தவறுகள் எல்லா இடத்திலேயும் நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. உள்ளபடியே ஆசிரியர்கள் வாழ முடியாத அளவிற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்றோ, குடும்பநலத் திட்டத்திற்கு ஒத்துழைக்காதவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்றோ தவறாக எண்ணிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே 42-வது விதியின் கீழ் இதற்குத் தரப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** ஆசிரியர்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே இம்மாதிரிப் பிரசாரம் செய்த காரணத்தினால் அதிகாரிகள் இப்படி ஆசிரியர்களை வேலை செய்யச் சொல்லியிருக்கலாம் என்ற கருத்து மாவட்டங்களில் பரவி வருவதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மிஸ்டர் சேர்மன் :** உறுப்பினர் அவர்கள் சொல்வது புரியவில்லை.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** குடும்ப நலத் திட்டம் அரசாங்கத்தின் கொள்கை. இதை எதிர்த்து ஆசிரியர்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்களை அரசாங்கம் தெரிந்துகொண்டு இப்படி ஆசிரியர்கள் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு அதிகாரிகள் முயற்சி எடுத்துக் கொண்டு வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

நாடுகளில் சில நாடுகள் நம் பக்கம் இல்லாவிட்டாலும் அந்த நாட்டு மக்கள் அனுதாபம் எல்லாம் நம் பக்கம்தான் இருக்கிறது என்று தெளிவாகக் கூறியிருக்கிறேன். இவ்வளவுக்கும் பிறகு ஒரு கட்சி யின் அதிகாரபூர்வமாக இருக்கிற ஒரு பத்திரிகை—அது அதிகார பூர்வமான பத்திரிகை இல்லையென்று கூறிவிட்டார்கள், மகிழ்ச்சி— பெரிய தியாகியைக் கொண்டிருக்கிற ஒரு பத்திரிகையில் இப்படிப் போடுகிற இந்த நடவடிக்கை ஒரு குறிப்பிட்ட கட்சியைப் பாதிக் கிற நடவடிக்கை அல்ல என்பதையும் தனிப்பட்டவர்களைப் பாதிக்கிற நடவடிக்கை என்பதையும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பத்திரிகையில் எழுதப்பட்ட வாசகங்கள் எவ்வளவு கொடூரமானவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் துரோகத்துக்கு துணை போகிறார் கருணாநிதி என்று ஒரு படம். அன்னப்பட்சியில் உட்கார வைத்து, கிரீடத்தை வைத்து, படம் போட்டு கடைசியில் எழுதியிருக்கிறார்கள். "இப்போது மூன்று வாரம் அமெரிக்காவில் விருந்தாளியாக இருந்ததற்கு நன்றி செலுத்த வேண்டியதுதான். இதற்காக நாட்டையே பாதிக்கக் கூடிய வகையில் விலை கொடுப்பதா?" நாட்டையே விலைக்கு விற்கக் கூடிய நிலை ஏற்படலாமா? என்ற தோரணையில் எழுதப் பட்டிருக்கிறது. மேலும் எழுதுகிறார், "இப்படிப் பேசுவது கருணாநிதியாக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை. இன்று முதன் மந்திரி பதவியில் இருந்து அவர் அமெரிக்காவுக்கு வால் பிடிப்பது தேச பக்தி உடையவர்களுக்குக் கவலை அளிக்காமல் இருக்க முடியாது." நான் தேசபக்தியற்ற முதலமைச்சர் என்று சொல்கிற நேரத்தில், இந்த அரசையும் சேர்த்துத் தேசபக்தியற்ற நிலைமையில் இன்றைக்கு யாகியாகானுக்கு அனுசரணையாகப் பாகிஸ்தானுக்கு ஆதரவாக, ஒரு சூழ்நிலையை இங்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் குற்றச் சாட்டிலிருந்து அவர் எவ்வளவு பெரிய தேசபக்தராக இருந் தாலும், இன்றைக்குத் தேச விரோதமான காரியத்தில் ஈடுபட் டிருக்கிறார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லையென்று கருதுகிறேன். அடுத்த நாள் "அவசரகாலம் ஆட்சி யாளர்" என்ற தலைப்பில் போட்டிருக்கிறார்கள். தனிப் பட்ட முறையில் என்னை மட்டுமல்ல. அதில் மக்கள் ஐந்தாம் படைகளை அனுமதிக்கக்கூடாது என்று ஆரம்பித்து, "நம் நாடே போரில் ஈடுபட்டு இருக்கிறது. நமது நாட்டுக்காக, நாட்டு மக்க ளுக்காக மத்திய சர்க்கார் போரை நடத்துகிறது. இப்படிப் போர் நடத்தும் மத்திய சர்க்காருக்கு முழு மனதான ஒத்துழைப்பை அளிக்க வேண்டியது ராஜ்ய சர்க்கார்களின் சட்டரீதியான கடமை யாகும். இப்படிப்பட்ட நிலைமை இருக்க நமக்கு வாய்ந்திருக்கும் முதன்மந்திரி கருணாநிதி அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார்" என்ற அளவுக்கு அதில் குறிப்பிடப்பட்டிருக் கிறது. இந்த அளவுக்கு எழுதிவிட்டு கடைசியாக முடிக்கிற





[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

நேரத்தில்கூட விவரம் அறிந்தவர்களும், தேச பக்தி கொண்டவர் களும், நாட்டு நலனிலும், பாதுகாப்பிலும் சுதந்திரத்திலும் அக்கறை கொண்டவர்கள் முதலமைச்சரின் பேச்சை அலட்சியப் படுத்தி விட முடியாது என்று எழுதப்பட்டிருந்ததால் முதலமைச் சர் பொறுப்பில் இருக்கிற என்னுடைய தேச பக்தியும், இந்த அமைச்சரவையின் தேச பக்தியும் இந்த சர்க்காருடைய தேச பக்தியும் எந்த அளவுக்கு இன்றைய தினம் கேள்விக்கு உரியதாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தக் கட்டுரைகள் தொடர்ந்து வருகிற நேரத்தில் அவரிடம் கூட நான் பேசினேன். அவர் ரொம்பவும் வருத்தப்பட்டார். யார் அவர்களுக்குச் சொல்வது என்று அவர் கூடச் சொன்னார். அவர் போன்றவர்களாலேயே சொல்ல முடியாது என்று சொன்னால், அவர் களாகவே தெரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்க வேண்டும் என்ற அளவில் தான் இன்று போலீசார் நடவடிக்கை எடுத்திருப்ப தாக அறிகிறேன்.

நான் அமெரிக்க அரசையும், அமெரிக்க மக்களையும் தனியாகப் பிரித்துப் பேசுவது இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் எவ் வளவு முக்கியம் வாய்ந்தது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நான் அமெரிக்கா சென்ற நேரத்தில் பல செனட்டர்களைச் சந்தித் தேன். நிக்சன் கட்சியைச் சேர்ந்த கூப்பரைச் சந்தித்தேன். அவர் இந்தியாவுக்கு அனுசரணையாக இருந்தார். நான் கென்னடி யை சந்தித்த நேரத்திலும் ஹம்ப்ரேயைச் சந்தித்த நேரத்திலும் அவர்களுக்குச் சொன்னேன் நீங்கள் செனெட் சபையில் பேசிய தோடு மட்டும் இருந்தால் போதாது. இந்தியாவின் நிலையை ஆதரித்து அறிக்கைகளை விட வேண்டும் என்று கேட்டுக்கொண் டேன். நிச்சயமாக அறிக்கைகளை விடுகிறோம், உங்கள் பிரதம ரிடத்தில் சொல்லுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

அதற்கு ஏற்ப அவர்களும் கடந்த 2, 3 நாட்களாக அறிக்கைகளை விட்டு வருவதையும் நாம் பார்க்கிறோம். அதை வைத்துத்தான் பேரவையில் நான் பேசும்போதும் குறிப்பிட்டேன் அமெரிக்க நாட்டிலுள்ள முக்கியஸ்தர்களின் ஆதரவெல்லாம் நமக்குக் கிடைக்கும் என்று. ஆகவே நிக்சனின் ஆதரவு நமக்குக் கிடைக்கா விட்டாலும், அமெரிக்கப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும் என்று சொன்னேனேயல்லாமல், அந்த அரசுக்கு வக்காலத்து வாங்கவில்லை.

நேற்றைய தினமணிப் பத்திரிகையில் அருமை நண்பர் சிவ ராமன் எழுதியிருக்கிறார். 6-ம் தேதி நான் என்ன சொன்னேனோ அதையேதான் அவரும் சொல்லியிருக்கிறார். வேண்டுமென்றே 3, 4 நாட்களாகத் தேசத் துரோகி ஆகிவிட்டேன், தேச பக்தி அற்ற

சொல்லப்படுகிறது. ஸ்டெப்டௌன் ( step down ) டிரான்ஸ்பார்மருக்கு 2 சதம். டிஸ்டிரிபூஷன் டிரான்ஸ்பார்மருக்கு 2 சதம், லோட் லாஸ் 6 சதம். கிட்டத்தட்ட இப்படியாக 16, 16½ சதம் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட இழப்பு இருக்கும் என்று சொல்லுகிறார்கள். இந்த நஷ்டத்தை நாங்கள் 17 சதம் இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையில் சொன்னால் 3, 4 ஆண்டுகளாகப் போடப்பட்டிருக்கிற கம்பியின் நீளம் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். அதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில் உள்ள அளவுக்கு இல்லை என்பது புலப்படும். இன்றைய தினம் ஆந்திராவில் 20 சதம், அஸ்ஸாமில் 20 சதம், ராஜஸ்தானில் 23 சதம், உத்திரப்பிரதேசத்தில் 20 சதம், பீஹாரில் 18 சதம், எந்த இடத்திலே பார்த்தாலும் இழப்பு . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 17 சதம் இழப்புக்குக் குறைவாக நாட்டிலே எந்த மாநிலத்திலும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகின்றாரா ?

5·00 p.m. மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : பொதுவான நியாயம் அவைவர்களுக்குச் சாதகமான கருத்தைச் சொல்வது தான். நமது கம்பி நீளத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது, சராசரியில் பார்க்கிறபொழுது இந்த மின்சக்தி இழப்பு தமிழ்நாட்டில் குறைவாக இருக்கிறது என்பதை மிகத் தெளிவாகச் சொல்ல முடியும். அதற்கு கணக்கும் இருக்கின்றது, தருகிறேன்.

இன்றைய தினம் பம்புசெட்டுகளுக்கு விரைவில் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்ற குறையை இரு தரப்பு உறுப்பினர்களும் எடுத்துச்சொன்னார்கள். ஆகியிருக்கின்ற காரியங்கள், செய்து முடிக்கப்பட்டிருக்கிற கிராமங்கள் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். 3—12—71 வரையில் நான் பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு முன்னால் கணக்குச் சொல்லுகிறேன்—569,453 பம்புசெட்டுகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. 31—3—1967 வரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்படுவதற்கு முன்னாலிருந்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 289,903. இந்த 4 ஆண்டுகளில் போடப்பட்டிருக்கிற பம்புசெட்டுகள் 229,550 ஆகும். ஆக மொத்தம் கிட்டத்தட்ட 20, 30 ஆண்டுகளில் போடப்பட்டிருக்கிற பம்புசெட்டுகளை நாங்கள் 4 ஆண்டுகளில் போட்டிருக்கிறோம். நாட்டிலிருக்கிற மொத்த பம்புசெட்டுகளில் நாடு முழுவதற்கும் இருக்கிற கணக்கில் 3-ல் 1 பங்கு பம்புசெட்டுகள் தமிழ் நாட்டிலேயே போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே இது முன்னேற்றம் அல்லவா ? ஆண்டு ஒன்றுக்கு 66,000 என்று இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் இது 1 அல்லது 1½ லட்சம் என்று ஏறும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.



அதே நேரத்தில் கிராமப்புறங்களில் கிராமப்புற மின் இணைப்பையும் பார்க்க வேண்டும். 60,439 கிராமங்களுக்கு தமிழ் நாட்டில் இதுவரையில் மின்சாரம் போடப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற 79,544 கிராமங்களுக்கு மின்சாரம் போட இருக்கிறோம். 31—3—67 வரையிலும் 30,250 கிராமங்களுக்குப் போடப்பட்டிருந்தது. ஹரிஜனச் சேரிகளுக்குப் போடப்பட்டிருந்தது 2,362. இந்த 4 ஆண்டுகளில் செய்துள்ள சாதனை 11,996. ஹரிஜனச் சேரிகளை நீங்கள் பார்க்க வேண்டும். இவ்வளவு ஆண்டுகளாக நம் நாட்டில் மின்சாரத்தை விரைவாகக் கொடுத்து வந்தாலும், ஹரிஜனச் சேரிகள் புறக்கணிக்கப்பட்டன என்பதை யாரும் மறுக்க முடியாது. 2,000 ஹரிஜனச் சேரிகள் இந்த 4 ஆண்டுகளில் மின் இணைப்பு பெற்றிருக்கின்றன. மீதமுள்ள 11,000 சேரிகளுக்குப் போட வேண்டும். ஹரிஜன நல இலாக்கா மூலமாக காபிடல் எக்ஸ்பெண்டிசரோடு சப்சிடியாக அரசாங்கத்தின் மூலமாகத் தொகை ஒதுக்கி அதைப் போட இருக்கிறோம். இன்றையதினம் ஹரிஜன மக்கள் என்றாலே, அவர்களுக்குத் தனிப்பட்ட உதவி செய்ய வேண்டும் என்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆர்வம். இன்று காலையில் என்னை அழைத்து ஒரு உத்திரவைச் சொன்னார்கள். இந்த ஆண்டிலிருந்து அத்தனை சேரிகளிலும் விளக்கு எரிக்கிற சார்ஜ், கன்சர்வன்சி சார்ஜ் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்று அறிவிக்கும்படி என்னிடம் சொன்னார்கள். இதன் மூலமாக ஹரிஜன மக்களுக்கு மட்டும் நல்லது செய்யவில்லை. இந்தச் சுமையை பஞ்சாயத்துகளிலிருந்து கொஞ்சம் தளர்த்திக்கொள்வதன் விளைவாக ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் சற்று நிதி அதிகம் பெற்று வேறு பல வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும் என்ற அளவில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 20,00,944 மின்சாரக் கட்டணத்திற்காக ஹரிஜனக் காலனிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல. தொழிற்சாலைகளுக்குள்ள கட்டணத்தைப்பற்றிப் பேசினார்கள். உறுப்பினர் திரு. ஆறுமுகசாமியைப் போன்றவர்கள் தொழிற்சாலைகளுக்குக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒரு பக்கம் விவசாயிகளுக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வீடுகளில் விளக்குகளுக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். தொழிலாளர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்காக மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று சொல்லுகிறார்கள். இருக்கின்ற நிலைமையைப் பார்க்க வேண்டும். உறுப்பினர் [illegible] அவர்கள் பேசவில்லை. உறுப்பினர் திரு. வசந்த [illegible] கோபாலன் தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளுக்கு அதிகக் கட்டணம் போடுகிறோம் என்று புள்ளி விவரம் கொடுத்தார்கள். புள்ளி

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி] [11th December 1971

விவரம் கொடுத்தால், பரிசீலிக்கிற கட்டத்தில் இருக்கிறேன். சீரமைப்பு செய்கிற கட்டத்தில் இருக்கிறோம் என்பதற்காக புள்ளி விவரங்கள் கொடுக்கச் சொன்னேன். அவர்கள் 3, 4 மாநிலங்களைச் சொல்லி அவர்களுக்குச் சாதகமாக இருப்பதை எடுத்துச் சொன்னார்கள். மொத்தத்தில் சாதக பாதகம் பற்றிச் சொல்லவில்லை. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் நாம் எப்படி இருக்கிறோம் என்பதை ஓரளவுக்குச் சபைக்குச் சொல்லுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ். 10 ஹார்ஸ் பவர். 15 சதவிகிதம் ஆப் 24 ஹவர்ஸ். தொழில் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு ஆந்திராவில் 21.22 பைசாவாக இருக்கிறது. அஸ்ஸாமில் 17 பைசாவாக இருக்கிறது. பீஹாரில் 21 பைசாவாக இருக்கிறது. நான் கொடுக்கின்ற கணக்கு சமீபத்தில் மத்திய அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட கணக்கு. குஜராத் மாநிலத்தில் 18.57, ஹரியானாவில் 14.90 பைசாவாக இருக்கிறது. மத்தியப்பிரதேசத்திலும் மகாராஷ்டிரத்திலும் 19. பஞ்சாப் யூனியன் டெரிட்டரியில் 12. ராஜஸ்தானில் ஹைட்ரோ பவர் 15.5. தெர்மல் 29.90. தமிழ்நாட்டில் 15.20. தெர்மல் 19 பைசா. மொத்தமாகச் சொல்லுகிறேன். 16.20-க்கு நாம் இங்கே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்மைவிட அதிகமாக 25 பைசா ஒரிசாவில் இருக்கிறது. 21 பைசா ஆந்திராவில் இருக்கிறது. 17 பைசா அஸ்ஸாமில் இருக்கிறது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமாகச் சுமத்தியிருக்கிறோம் என்ற குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்லுகிறேன். இங்கு இருப்பது சுமாராக இருக்கிறது. இது லோடென்ஷன் ஹை டென்ஷன் பற்றிச் சொல்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லுகிறேன். மீடியம் இண்டஸ்ட்ரீஸ் 50 சதவிகிதம். கி.வா. 30. இதற்கு விகிதத்தைப் பார்த்தால், 20.09 ஆந்திராவில், அஸ்ஸாமில் 16.35. பீஹாரில் 21.21. குஜராத்தில் 18.01. மகாராஷ்டிரத்தில் 19. மைசூரில் 11.61. நாகாலாண்டில் 20. தமிழ்நாட்டில் 16.06. தெர்மல் 18.01. இதைப் பார்க்க வேண்டும். இரண்டு விதமான தொழிற்சாலைகளுக்கும் குறைவும் இல்லை, கூடுதலும் இல்லை. இதற்கு நியாயமான காரணங்களும் இருக்கின்றன. ஹை டென்ஷன் என்று சொல்லுகிறார்கள். நேற்றையதினம் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஹை டென்ஷன் இந்தியாவில் அதிகமாக இருக்கிறது. அதை இன்றைக்குச் சீரமைப்பதில் யோசிக்க வேண்டிய கட்டத்தில்
5.10 p.m. இருக்கிறோம். ஆந்திராவில் 11 பைசா. பீஹாரில் 14 பைசா. குஜராத்தில் 13 பைசா. கேரளாவில் 12.47 பைசா. மைசூரில் 8.86. தமிழ்நாட்டிலே 14.21 பைசா. ஒப்பிட்டுப் பார்க்கும்போது சற்று அதிகமாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். சீரமைப்பில் ஹை டென்ஷன் பெரிய தொழிற்சாலைகளில் எடுக்கிறார்கள். அதைப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். கமிட்டி ரிப்போர்ட் வந்திருக்கிறது. பரிசீலனை செய்து சீரமைப்பு செய்ய நினைத்துக் கொண்டிருக்கிறோம். அங்கே எல்லாம் குறைவாக இருக்கக்



11th December 1971] [மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்]

காரணம் மைசூரில் ஹைட்ரோ பவர் உள்ளதேயாகும். கேரளாவில் ஹைட்ரோ பவர் மிகவும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும். நாம் ஹைட்ரோ பவர் நாலில் ஒரு பகுதி வைத்திருக்கிறோம். தெர்மல் போதாது என்று வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். மிகவும் சீப்பாக குறைந்த செலவில் உற்பத்தி செய்கிறவர்கள் கிட்டத்தட்ட நம் அளவுக்கு இருக்கிறார்கள். நாம் அதிகமாகப்பணம் செலவு செய்து கொடுக்கிறவர்கள். சுமாரான அளவில் இருக்கிறோம் என்பதை தயவுசெய்து மனதில் கொள்ள வேண்டும். விவசாயிகளுக்குக்கூட அதிகமாக கன்செஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மைசூரில் குறைத்து விட்டார்கள். ஆந்திராவில் குறைத்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கணக்கு இருக்கிறது. ரொம்பவும் அவர்கள் குறைக்கவில்லை. பத்து பைசா நம் கை பொறுப்பாக ஏற்றுக் கொண்டிருப்பது தமிழ்நாட்டில்தான். ஆந்திராவில் 15 பைசா. அஸ்ஸாமில் 16 பைசா. பீஹாரில் 18 பைசா. குஜராத்தில் 16 பைசா. ஹரியானா 16.23 பைசா. கேரளாவில் 9.90 பைசா. மத்திய பிரதேசத்தில் 13 பைசா. மகாராஷ்டிரத்தில் 18 பைசா. மைசூரில் 12 பைசா. ஒரிசாவில் 13 பைசா. தமிழ்நாட்டில் மட்டும் டாக்ஸ் உள்பட 10.8 பைசா என்பதைப் பார்க்க வேண்டும். உற்பத்தி செய்கிற டெக்கில்கூட குறைந்த விலையில் மலிவான கட்டணத்தில் கொடுக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இவ்வளவு இடைஞ்சல்களுக்கிடையே தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நான்கு ஆண்டுகளில் இந்த இலாகாவை விரிவுபடுத்தியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அவ்வளவு தூரம் வேலை செய்ய என்ன காரணம்? தஞ்சாவூர் என்ற ஒரு தனி ஜில்லா அமைப்பு இல்லை. தர்மபுரியில் ஜில்லா அமைப்பு இல்லை. கோயம்புத்தூரை இரண்டாகப் பிரித்து ஈரோட்டுக்கு மாவட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டது. மூன்று பெரிய சென்டராக உருவாக்கியிருக்கிறோம். வட ஆற்காடில் ஒரு புதிய சென்டர் ஏற்படுத்தலாமா, கன்னியாகுமரியில் தனி சென்டர் வேண்டுமென்று கேட்கின்றனர், அதை ஏற்படுத்தலாமா என்று பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். ஆப்பரேஷன் மெயின்டனன்ஸ்—இதிலும் டிவிஷன் 33 இருந்தது. இப்போது 49 இருக்கிறது. சப்-டிவிஷன் முதலில் 102 இருந்தது. புதிதாக 107 சப்-டிவிஷன்கள் ஆப்பரேஷனில் இருக்கிறது. கன்ஸ்ட்ரக்ஷனில் 9 இருந்தது. புதிதாக போடப்பட்டு இப்போது 25 டிவிஷன்கள் இருக்கின்றன. அதே கன்ஸ்ட்ரக்ஷனில் சப்-டிவிஷன் 25-74 போடப்பட்டு இப்போது 99 இருக்கிறது. இலாகாவை விரிவுபடுத்த 20 ஆயிரம் பேர்களுக்கு நான்கு ஆண்டுகளில் வேலை கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் எவ்வளவு பெரிய சாதனை என்று பார்க்க வேண்டும். படித்த பட்டதாரிகள் என்ஜினியர்கள் வேலை கிடைக்காத சூழ்நிலையில் எவ்வளவு பேர் கஷ்டப்படுகிறார்கள். சிக்கனமாக இருக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் ஓரளவுக்கு வேலை வாய்ப்பு நாளுக்கு நாள் கொடுத்தாக வேண்டும். அதுவும்

[மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்] 11th December 1971]

மீட்டரைப்பற்றிச் சொன்னார்கள், பஞ்சாயத்துகளில் எல்லாம் மீட்டர். போட வேண்டும் என்று. இதில் ஆட்சேபணை இல்லை. நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மின்சாரக் கடன் சலுகைகளைத் தந்திருக்கிறோம். இப்படிப் பல்வேறு சலுகைகளை அளிக்கும் சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்றால், வாரியத்தின் நிதிநிலையை உயர்த்தியாக வேண்டும். பம்ப்செட் வைத்திருக்கிறவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டம் தான். நாட்டில் வறுமை இருக்கிறது. பல கோடிக்கணக்கான மக்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையை எல்லாம் முன்னிட்டு சில கஷ்டங்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறி, பல்வேறு கருத்துக்களுக்குப் பதில் சொல்லாமலிருந்தாலும் அவைகள் எல்லாம் கவனிக்கப் படும் என்று உறுதி கூறி அமருகிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு, தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். எஸ்கார்ட்ஸ் கம்பெனிக்கு 30 லட்சம் ரூபாய் முன்பணமாக, காண்டிராக்ட் கூட இல்லாமல், வேலை செய்யாமலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். அதில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

இரண்டாவதாக அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகளில் மீட்டர் வைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். நகரப் பஞ்சாயத்துகளும் முனிசிபாலிடிகளும் மீட்டர் வைத்துக்கொள்ள விரும்புகின்றன. கிராம பஞ்சாயத்துகள் 13,000 இருக்கின்றன. அவைகளுக்கும் மீட்டர் வைப்பது என்றால் செலவு அதிகமாகும். அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நகரப் பஞ்சாயத்துகளுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் முதலில் வைப்பது நலம். இதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 90 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். எஸ்கார்ட்ஸ் கம்பெனி பற்றிக் கேட்டார்கள். அந்த விஷயத்தில் விஜிலன்ஸ் இலாகா மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை ரகசியம் என்பதால் மேற்கொண்டு சொல்வதற்கில்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி :** சில தொழிற் கூடங்களை அரசு எடுத்துக்கொள்வதற்காக ரூபாய் 75 லட்சமும் ஒதுக்கப்பட்டது. ஆசியன் [illegible] நிறுவனத்துக்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பணம் எந்த வகையில் செலவு செய்யப்பட்டது என்று விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** ஏற்கனவே நாம் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். சட்டப்படி நோட்டிபிகேஷன் கொடுத்து அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்கப்படுகிறது.



11th December 1971]

**திரு. டி. கே. சுப்பையா :** விவசாயத் துறையில் பம்புசெட்டுகளுக்கு மோட்டார் அனுமதியுடன் வாங்கப்பட்ட பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இப்போதுள்ள சூழ்நிலையில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பேர் சர்க்காரிலிருந்து கடன் வாங்கி மோட்டார்கள் வாங்கிவைத்தும் பல ஆண்டுகளாகியும் அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. சர்க்காரிலிருந்து வாங்கப்பட்ட கடன்கள் முடங்கிக் கிடக்கின்றன. இதற்கு ஏதாவது உடனடியாக ஏற்பாடு செய்ய அரசு செயல் குறிப்பு உள்ளதா என விளக்கம் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** கோஆர்டினேஷன் அடிப்படையில் தமிழ் நாட்டில் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கிறோம். மாநில வரலாற்றில் இது வரையில் 60 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்கப்படவில்லை. எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் கொண்டு வரப்பட்டது. இதற்கென்று 12 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். இன்னும் 4, 5 ஆண்டுகளிலே இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். மத்திய அரசு 10 ஆண்டுகளில் தீர்க்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறது.

* **திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, விவசாயிகள் கூட்டுறவுகள் மூலமும், அரசாங்கத்தின் மூலமும் கடன் பெற்று மோட்டார்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். இது உபயோகப்படாமல் இருக்கிறது. இவ்வாறு கொடுக்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு இரண்டு மூன்று தவணைகளும் வந்து வசூலாக்கப்படுகிறது. கடன் வாங்கியதன் பலனை விவசாயி அடையவில்லை. இவற்றிற்கு மின்சாரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத்தான் கனம் அங்கத்தினரவர்கள் அறிய விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** ஒரு ஸ்கீம் சாங்ஷன் செய்த உடனே பம்புசெட் வாங்கிக்கொள்கிறார்கள். கூட்டுறவு இலாகா மூலம் கடன் பெற்று பம்பு செட்டு வாங்கி வைத்துக்கொள்கிறார்கள் 25 பம்புசெட்டு சாங்ஷன் செய்யப்பட்டால், இரண்டொருவர் தயாராக வாங்கி வைத்துக்கொண்டு விடுகிறார்கள். 10, 15 பேர் தயாராக இல்லாமல் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 6, 7 லட்சம் அப்ளிகேஷன்கள் இப்படிக் காத்துக்கொண்டிருக்கின்றன. முதலிலே 60 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி இரண்டு லட்சம் பம்பு செட்டுகளுக்குக் கொடுப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அளவிலே வைத்திருக்கிறது என்பதைப் பார்த்து மகிழ்ச்சியினை அடைந்தார்கள். அவர்கள் மொத்தமாகச் சொன்னார்கள் எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலே சில கருத்துக்களை, சில குறைபாடுகளைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னார்கள். அவர்கள் இப்படிச் சொல்ல வேண்டுமென்ற நியாயமிருந்தாலும், என்னைப் பொறுத்த அளவிலே, எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் செய்த சாதனைகளை விமர்சிப்ப தென்றால், தவறாகவே சொல்ல வேண்டும் என்ற கொள்கை இருக்க வேண்டியதில்லை. தமிழ் நாட்டு மின்சார வாரியம் நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நான் விவாதத்தைத் துவங்குவதற்கு முன்னால் தமிழ் நாட்டிலுள்ள மின் வாரியம் எந்த அளவுக்குப் போற்றப்படுகிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நாட்டினுடைய தலைவராக இருக்கிற இந்திய ஜனாதிபதி அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னால் சென்னையில் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள் :

"At present Tamil Nadu has got a stable Government and it is in the leading in the whole of India in many respects, for example, rural electrification."

இன்றையதினம் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலையான அரசாங்கம், இந்தியாவில் இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது, உதாரணத்திற்கு மின்சார வாரியம் என்று எடுத்துக் காட்டினார். அதற்குப் பின்னாலே இந்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருக்கிற டாக்டர் கே. எல். ராவ் தமிழ் நாட்டு மின்சார வாரியத்தினுடைய சாதனைகளைப் பாராட்டி இந்த நாடு மேற்கொண்டிருக்கிற 10 ஆண்டுத் திட்டம் எல்லா இடங்களிலும் நடைபெறுமானால், 10 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்திய நாட்டில் 60 சதம் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இன்றைய தினம் தமிழ் நாட்டில் டாக்டர் கலைஞர் அவர்கள் மூலமாக 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் உருவாக்கப்பட்ட விரைவு திட்டம் விரைவாகச் செயல் படுவதன் வாயிலாக வர இருக்கிற 1972-ம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் நாட்டில் சிற்றூர்கள், பட்டிதொட்டிகள் எல்லாம் மின்சார இணைப்பு பெறுகின்ற முயற்சியில் ஈடுபட்டு, வெற்றியும் கண்டிருக்கிறோம். இது வரையிலே மின்சார வாரியம் காட்டி யிருக்கிற சாதனைகளை நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டி யிருக்கிறேன். நான்கு மாவட்டங்களில் முடித்திருக்கிறோம். இன்னும் 4 மாவட்டங்களை மூன்று மாதத்திற்குள்ளேயே முடிக்கவிருக்கிறோம் என்று சொன்னேன். நான் பிறரைக் குறை கூறுவதற்காக இவற்றைக் கூறவில்லை. நிறையைக் கூறுகிறபோது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தங்களைக் குறை சொல்வதாக தயவு செய்து கருத வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த ஆளும் கட்சிக்கும் தனது சாதனைகளை எடுத்துச் சொல்லுவதற்கு



உரிமை உண்டு என்பதோடு அது தலையாய கடமை என்ற முறையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் பொதுவாக இந்த அதிகமாகப் பணம் செலவு செய்து கொடுக்கிறவர்கள். சுமாரான அளவில் இருக்கிறோம் என்பதை தயவுசெய்து மனதில் கொள்ள விவரங்களைச் சொல்லுவதற்கு முன்னால் 'லைன் லாசஸ்' என்று எல்லோரும் பேசியதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் 17 சதம் லைன் லாஸ் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை நிவர்த்தி செய்தார்களா, குறைத்தார்களா என்று கேட்டார்கள். என்னைப் பொறுத்த வரையிலே, தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற மின்சாரத்தினுடைய லாஸ்—இழப்பு ஏனைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகக் குறைவானதாகும். ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் முன்னேற்றம் என்று குறிப்பிடுகிறபோது, இதிலேயும் சற்று முன்னேற்றம் இருக்கக் கூடாதா என்று கேட்கிறேன். தமிழ் நாட்டில் போட்டது போல், ஹரியானாவில் இப்படிப்பட்ட மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப் படவில்லையா என்று சொன்னால், தமிழ் நாட்டில் 6-ல் ஒரு பகுதியே பரப்பளவாக ஹரியானா மாநிலம் கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதோடு தமிழ் நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஹரியானா மின்சார வாரியத்தில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம்—இழப்பு 27.2 சதம். அதற்குப் பிறகு தொழில் துறையிலும், மின்சாரத் துறையிலும் வேகமாகப் பலன் பெறுவதாக பஞ்சாப் மாநிலத்தைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அந்த பஞ்சாப் மாநிலத்தில் 34.1 சதம் இழப்பு. ஆண்டுக்காண்டு 17 சதம் என்று நானே சொல்லியிருக்கிறது. அதில் கொஞ்சம் முன்னேற்றம் காட்டக் கூடாதா என்று கேட்கிறார்கள். ஆனால் இந்த 3, 4 ஆண்டுகளில் போடப்பட்ட ஹை டென்ஷன், லோ டென்ஷன் நீளங்கள் எவ்வளவு தெரியுமா ? இந்த உலகத்தை 5 முறை சுற்றும் அளவுக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் மைல் தூரம் அளவுள்ள கம்பிகளைப் பின்னிப் பிணைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட இழப்பு, அதைக் கருதும்போது, அதிகமில்லை என்பது வல்லுநர்களின் கருத்தாகும். வல்லுநர்கள் கூறியிருப்பது நம் இழப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத்தான் இருக்கிறது. சாதாரணமாக இப்படிப்பட்ட இழப்புச் சக்தியில் ஏற் பட்டிருக்கிற நஷ்டம்—இழப்பு 27.8 சதம். அதற்குப் பிறகு டம்ளரில் தண்ணீரை எடுத்துக்கொண்டு பத்து முறை அதை மற்றொரு டம்ளரில் ஊற்றி, ஊற்றி மாற்றினால், அதன் மூலமாக இறுதியில் தண்ணீரின் அளவு கொஞ்சம் குறைந்தே காணப்படும். இதை நாம் அனுபவத்தில் காணலாம். மின் சக்தி டிரான்ஸ்பரில் கம்பியில் போகிறபோது, சூடு ஏறி இழப்பு சக்தி ஏற்படுகிறது. ஒரு டிரான்ஸ்பார்மரிலிருந்து இன்னொன்றுக்குப் போகிறபோது, இழப்பு ஏற்படுகிறது. கடைசியில் டிஸ்டிரிபூஷன் பாயிண்ட்டுக்குப் போகிறபோது இழப்பு ஏற்படுகிறது. சப்-டிரான்ஸ்பார்மர் அங்கு செல்லும்போதும், 0.5 இழப்பு என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. ஹை டென்ஷன் இழப்பு 5 சதம் தாராளமாக இருக்கலாம் என்று

[11th December 1971

(Mr. Chairman in the Chair)

## VII. GOVERNMENT BILLS.

### *The Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971.)*

MR. CHAIRMAN : The Hon. the Minister for Public Health will move the motion.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Chairman, I move—

" That the Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Bill, 1971@ (L.A. Bill No. 25 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

Mr. Chairman, hon. Members may be aware that the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1971, which was taken up during the last session of the Legislature was referred to a Joint Select Committee consisting of 13 members from the Legislative Assembly and 6 members from the Legislative Council for
5-30 p.m. consideration.

The suggestions and comments received have also been examined by the Joint Select Committee. The Committee held five sittings on the whole and considered the Bill clause by clause. The report of the Committee and the Bill as amended by the Joint Select Committee has been circulated to members already. Some of the changes incorporated by the Committee in the Bill are as follows :—

(1) The title of the Bill has been changed as " The Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Act, 1971 ".

(2) Provision has been made for election of three members from among themselves by Practitioners registered under items (*b*) and (*c*) of sub-clause (1) of clause (15).

(3) The provision for including the District Medical Officer as a member of the Council has been omitted.

(4) The provision for the office of Vice-President of the Council has been omitted.

(5) Instead of election of President, provision has been made for nomination of the President by the Government from among the members who are registered practitioners.

(6) Provision has been made for the payment of daily and travelling allowances to the members of the Council and the members of the Executive Committee.

(7) The words " such practice has been the sole means of earning his livelihood " in clause 15 (1) (*b*) of the Bill have been omitted

@ Printed as Appendix IV on pages 64-84.



11th December 1971] [The Hon. Thiru K. Anbazhagan]

(8) The Council has been invested with various powers such as establishment of institutions for instruction in Homoeopathic system, affiliation of such institutions, withdrawal of such affiliation, conduct of examinations, provision of regulations for courses of study, conferment of degrees, issue of certificates and diplomas.

(9) The words " before the commencement of this Act " in clause 15 (*b*) (ii) have been substituted by the words " on the date of the application. "

(10) The fine for the first offence has been raised from Rs. 300 to Rs. 500.

(11) The penalty of imprisonment for the second or any subsequent offence has been raised from six months to one year.

(12) The Schedule has been so amplified as to include the qualifications described in the second Schedule to the model Bill of the Government of India.

(13) The G.D.I.M. (Homoeopathy) diploma awarded by the Board of Indian Medicine, Hyderabad has been included in the Schedule.

I may say, in this connection, that the salient features of the Bill have already been explained to the Hon. Members at the time of referring the Bill to the Joint Select Committee. There is at present no enactment governing the registration of practitioners of Homoeopathy. The Government have decided to recognise ' Homoeopathy ' and have legislation enacted to govern the principles and practice of Homoeopathic Medicine and also to provide for the development of the Homoeopathy System of Medicine.

With these words, Sir, I commend the Bill as passed by the Legislative Assembly for the consideration of the House.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971), as passed by the Asembly, be taken into consideration ".

* THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, while initiating the discussion on the Homoeopathy Bill, at the outset, I wish to congratulate the Hon. the Minister for Health on having got through this Bill in the Joint Select Committee in a record-time of five sitting Actually a Bill of this nature was contemplated even during 1967 and it was more or less in cold storage during all these four years. Doubts were also expressed whether the discussion in the Joint Select Committee would be over within a period of six months or one year. I was also a member of the Select Committee which was got up last year before the General Elections. At that time, during consideration by the Members of the Select Committee, it was thought that it might be necessary for the Select Committee to visit other States

in India to study the working of the Homoeopathy Councils there, especially in Calcutta, Madhya Pradesh, Andhra Pradesh and Kerala. On the very day the committee had programmed to leave on tour our Assembly was dissolved. The members who were all prepared to go on a visit to other States, could not go. I was singularly unfortunate in not being able to visit the other States as a Member of a Select Committee on another occasion also. I was a Member of the Public Accounts Committee and when that Committee was supposed to leave for North India the Parliament was dissolved and we could not go. However it was now found not necessary to see the working of the Councils in the various States and the Joint Select Committee was able to finalise the Bill within five sittings. In this connection also I wish to congratulate the Hon. the Minister for Health on having steered the Bill in such a fine manner and finalised it within such a short time. At this particular juncture, I wish to say a few words regarding the system of Homoeopathy. This system is in vogue for more than a century now and it has got its own individual advantages. I should say that the practitioners of allopathy in this State and in other States of this country are not appreciative of the Homoeopathy system and the different kinds of remedies that it can provide for curing many diseases. I heard the Hon. the Minister for Health when he inaugurated the College Union of the Thanjavur Medical College recently when he said that the Practitioners belonging to allopathic system of medicine should be able to appreciate whatever is good in the other systems of medicine. Speaking on the impression created on the audience in the Hall, I was able to see that both the students and doctors belonging to allopathic system of medicine were not very appreciative of the opinion expressed by the Hon. Minister.

The homoeopathy system possesses wonderful and potential drugs that is what they say. The system takes into consideration, the individual variations of the patients. In allopathic system a medicine intended for a particular ailment is given to all the patients. If a patient complained of head-ache or constipation, the same medicine is administered to him irrespective of his individual behaviour, mood, and the nature of his body. Homoeopathy is the only system which takes into consideration all the aspects of the body of the particular individual and the practitioners say that every individual is different by his nature. But because of the specific therapeutic nature of this particular system, it may not be able to cater to the needs of a large number of patients. Nowadays when we go to any hospital, particularly big hospitals, we find thousands of patients waiting for treatment, and I do not know whether homoeopathy will be able to cater to the needs of such a large number of patients who are at present looked after by the allopathic system of medicine. However, the homoeopathy system has got its own strong points which have to be appreciated.



Again, what I have found in homoeopathy is that it is able to cure many chronic diseases like asthma and eczema which the allopathic system is unable to cure. The homoeopaths are able to cure such chronic diseases, because the whole system is based on what they call the law of similars—' Simila, Simili, Similibus ' which means that if a drug, when administered, produces a particular indication in an individual, then the same drug could be given to him for removal of the ailment having the same kind of indications. So, we should also apppreciate the system on which homoeopathy treatment is based.

10. அரசினர் கலைக்கல்லூரி, நாமக்கல்—இளங்கலை பொருளியல் பகுதி-12, ஆங்கிலம்.

11. தர்மபுரம் ஞானாம்பிகை அரசினர் கலைக்கல்லூரி (மகளிர்), மாயூரம்—இளங்கலை வரலாறு.

12. திரு. மீனாட்சி அரசினர் கலைக்கல்லூரி (மகளிர்), மதுரை—இளங்கலை பொருளியல் (சிறப்பு), இளங்கலை விலங்கியல், புவியியல் மேற்படிப்பு.

13. அரசினர் கலைக்கல்லூரி, மேலூர்—இளங்கலை வரலாறு, வணிகயியல்.

ஆகியவை இந்த ஆண்டு புதிதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, புதிய பட்டப் படிப்பு துவங்க வேண்டுமென்று எத்தனை கல்லூரிகள் விண்ணப் பித்துள்ளன ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. ஆனால் இந்த ஆண்டு வழங்கப் பட்டிருக்கிற நிலைமையில் இடவசதியைப் பொறுத்தும் அதற்கு மற்ற வசதிகள் எந்த அளவுக்கு செய்து கொடுக்கப்படுகின்றன என்பவற்றைக் கண்டும் பல்கலைக் கழகம் அனுமதிக்கின்றது. விழுப்புரத்தில் எக்னாமிக்ஸ் பாடம் வைப்பதற்கு இடமில்லை என்று மறுத்துவிட்டார்கள். திண்டுக்கல்லில் தமிழ் ஆங்கிலம் பி.ஏ. வைப்பதற்கு இடமில்லை என்று மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படி போதுமான இடவசதி இருந்தால், அவற்றிற்கு வழங்கப் படுகிறது. எத்தனை கல்லூரிகள் என்ற விவரம் இல்லை.

*திரு. எம். ராஜா அய்யர் :* ராமநாதபுரத்திலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் நேச்சுரல் சயன்ஸ், கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ் படித்த மாணவர்களுக்கு பட்டப்படிப்பிற்கு வழியில்லாமல் இருக்கிறது.

[13th December 1971

இப்போது கணிதமும், பொருளாதாரமும்தான் இருக்கின்றன. இரண்டாவது குரூப் எடுத்துப் படித்த மாணவர்கள் பட்டப்படிப் பிற்குத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எடுத்துப் படிக்கக் கூடிய அளவில் விஞ்ஞானப் பிரிவு அடுத்த ஆண்டு ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இடவதியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இடவசதி ஏற்படுகிற சூழ்நிலை இருக்குமானால், அடுத்த ஆண்டு அதற்கு முயற்சி செய்யலாம்.

*Bachelor Degree and Master Degree in Commerce*

* 158 Q.—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the location of Government Colleges in which facilities for the study of Bachelor Degree and Master Degree in Commerce exist at present, i.e., during the year 1971–72?
at present,i.e., during the year 1971--72?

**வணிகயியல் பாட முறையில் பட்டப் படிப்பும். பட்ட மேற் படிப்பும்.**

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தற்போது, அதாவது 1971-72-ம் ஆண்டில் வணிகவியல் பாடமுறையில் பட்டப் படிப்பும், பட்ட மேற்படிப்பும் படிப் பதற்கான வசதிகளையுடைய அரசுக் கல்லூரிகள் எந்தெந்த இடங்களில் உள்ளன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.காம், எம்.காம் படிப்பதற்கு வசதிகள் உள்ள அரசு கல்லூரிகளாவன :—

(1) மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்—பி.காம்.

(2) மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை—பி.காம்.

(3) பெரியார் ஈ. வி. ஆர். கல்லூரி, திருச்சிராப்பள்ளி—பி.காம்., எம்.காம்.

(4) அரசினர் கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்—பி.காம்.

(5) அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி, செய்யார்—பி.காம்.

(6) அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி (ஆண்கள்), நாமக்கல்—பி.காம்.

(7) திரு. கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல்லூரி, விருத்தாசலம்—பி.காம்.

(8) சிக்கண்ணா அரசினர் கலைக்கல்லூரி (ஆண்கள்), திருப்பூர்—பி.காம்.

(9) அரசினர் கலைக் கல்லூரி, மேலூர்—பி.காம்.



13th December 1971]

THIRU K. S. ABDUL WAHAB : Sir, since the nationalisation of banks, there is heavy demand for seats for B. Com. and M. Com. courses. Will the Government consider extending more facilities to cope with demand?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது பி.காம்., எம்.காம்., எடுத்துப் படிக்க அதிகமான மாணவர்கள் முன்வருவதால், பல கல்லூரிகளில் இடம் ஒதுக்கு கின்ற முயற்சி இருக்கிறது. சென்ற ஆண்டு அதிகமாக்கப்பட்டது. ஏற்கனவே அரசினர் கலைக் கல்லூரியில் அதிக இடமில்லாமல் இருந்தது. சென்ற ஆண்டு 9 அரசினர் கல்லூரிகளில் பி.காம்., எம்.காம்., கொண்டுவரப்பட்டன. அதற்கு அதிகமாக மாணவர்கள் விரும்புவதால், எங்கெங்கு வாய்ப்பு ஏற்படுகிறதோ, அங்கு ஏற்படுத்தலாம் என்ற யோசனையை அரசு கல்லூரிக் கல்வி இயக்குனர் மூலமாகப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்திருக் கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அடுத்த ஆண்டு எந்தெந்தக் கல்லூரிகளில் ஆரம்பிக்கலாம் என்று அரசு உத்தேசித் திருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அதற்கான குறிப்புகள் வரவில்லை. இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் கழித்துத்தான் அதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

*Tagore Memorial Auditorium*

* 159 Q.—THIRU T. K. SHANMUGAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state with reference to the answer given to Short Notice Question No. 1, dated 27th March 1969 on the floor of the House—

(a) the stage at which the present construction of Tagore Memorial Auditorium in Madras stands; and

(b) when the construction of that auditorium will be completed?

**தாகூர் நினைவுக் கலை அரங்கம்**

திரு. டி. கே. ஷண்முகம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் 27—3—1969-ம் தேதி யன்று குறுகிய கால வினா எண் 1-க்கு அளித்த விடையை யொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னையில் தாகூர் நினைவுக் கலை அரங்கம் கட்டுவது தற்போது எந்நிலையில் உள்ளது ?

(இ) அக்கலை அரங்கம் எப்பொழுது கட்டி முடிவு பெறும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது இந்தத் தேர்வு நடைபெற்றதற்குப் பின்பு மறுபடியும் அமைக்கப்படவில்லை. ஏற்கனவே 1968-ல் கல்வி கலந்தாய்வுக் குழு ஒன்று, பரிந்துரைக் குழு ஒன்று அமைக்கப்பட்டன. அதனுடைய கால வரையறை முடிந்துவிட்டது. பொதுத் தேர்தல் நடைபெற்றதற்குப் பிறகு திருத்தியமைக்கப்பட வேண்டும். இரண்டு குழுக்கள் இருப்பதைவிட இரண்டுமே பரிந்துரைக் குழுக்களாக இருப்பதால், இரண்டையும் இணைத்து வலிவுள்ள குழுவாக அமைக்க அரசாங்கத்தில் யோசனை இருக்கிறது. விரைவில் குழு அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

*Salary of the Elementary School Teachers*

* 156 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that the salary of the Elementary School Teachers belonging to many Panchayat Unions in Tirunelveli District has not been paid for months ;

(b) if so, the reasons for the delay ; and

(c) the action proposed to be taken by the Government in this matter?

*தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சம்பளம்*

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதக் கணக்கில் சம்பளம் வழங்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர் அனைவருக்கும் 1971 அக்டோபர் வரை சம்பளம் வழங்கப் பட்டுள்ளது. (அக்டோபர் திங்களில் அளிக்கப்பட்ட செப்டம்பர் திங்களுக்கான சம்பளம்).

(இ) & (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருநெல்வேலி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாதக் கணக்கில் சம்பளம் கொடுக்கப்பட வில்லை என்ற புகார் அடிக்கடி இருந்துகொண்டே இருக்கிறது. இதைத் தடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது அதைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடு செய்துதான் ஜனவரி 1-ம் தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிகிற ஆசிரியர்கள் சம்பளத்தை நேரடியாக டிரஷரியிலிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்து, ஊராட்சி ஒன்றியத்தோடு நிதி சம்பந்தமான கணக்கு சம்பந்தமாக அரசாங்கம் நேரடியாகத் தொடர்பு கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஜனவரி 1-ம் தேதியிலிருந்து தவறாமல் சம்பளம் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** ஆசிரியர்களுக்கான சம்பளம் முழுமையும் அரசாங்கத்தால் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையை அந்தச் சம்பளத்திற்கு உபயோகப்படுத்தாமல் பஞ்சாயத்து யூனியன்கள் வேறு வகையில் செலவழித்துவிடுகின்றனவா? ஏன் அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது? அதை அமைச்சர் அவர்கள் தெரிந்துகொண்டிருக் கிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்-:** தலைவர் அவர்களே, தனி சேனல் வழியாக நிதி திரட்டி ஊராட்சி ஒன்றியம் ஆசிரியர் களுக்குச் சம்பளம் கொடுக்கிறது. இதில் கிட்டத்தட்ட 87% அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. 13% ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக் கொள்கிறது. சில ஊராட்சி ஒன்றியங்கள் தர முடியாமல் இருக்கிறார்கள். ஏற்கனவே நாம் கொடுத்த பணத்தை வேறு வகையில் செலவழித்துவிடுகிறார்கள். சென்ற ஆண்டு முதல் கண்டிப்பாக உத்தரவு போட்டு ஆசிரியர்களுக்குத்தான் அது செலவழிக்கப்பட வேண்டுமென்றிருந்தது. சில ஊராட்சி ஒன்றி யங்களில் ஏற்படுகிற தகராறு காரணமாக, ஆசிரியர்கள் 2, 3 மாதம் சம்பளம் வாங்காமல் இருக்கக் கூடாது என்றுதான் ஜனவரி 1-ம் தேதியிலிருந்து டிரஷரியிலிருந்து சம்பளத்தை நேரடியாக வாங்கித்தரவும், ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சேரவேண்டிய பணத்தை நாம் 'புக் அட்ஜஸ்ட்மெண்ட்' என்ற முறையில் வரவு வைத்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** முன்பு ஜில்லா போர்டு காலத்தில் கல்வி நிதி தனியாக இருந்தது. அதை வேறு பொது நிதியோடு சேர்க்கக்கூடாது. வேறு பொதுச் செலவுக்கும் உபயோகிக்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு இருந்தது. அது ஸ்டேச்சு டரியாகத் தடுக்கப்பட்டது. இப்போது ஒரு கண்டிப்பான உத்தரவின் மூலம் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி தனியாக இருக்க வேண்டுமென்றும், ஆசிரியர் சம்பளம் அதிலிருந்து தரப்பட வேண்டுமென்றும், வேறு பொதுச் செலவிற்கு அதை உபயோகிக்கக்கூடாது என்றும் அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்ற ஆண்டு முதலே அப்படிப்பட்ட உத்தரவு இருக்கிறது. இப்போது எந்த விதத்திலும் அதற்கு இடம் இருக்காது. ஆசிரியர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாமல் தவிர்க்கப்படும்.

[13th December 1971

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) சென்னையில் தாகூர் நினைவுக் கலை அரங்கம் கட்டும் வேலை 1960-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதற்குச் செலவு ரூ. 15.32 லட்சம் என்று மதிப்பிடப்பட்டது. இவ்வேலை, தேசிய நெருக்கடி காரணமாக 1962-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 1964-ம் ஆண்டில் மேற்கொண்டு வேலை தொடங்கப்பெற்று, 1965 பாகிஸ்தான் போர் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. 1969-ம் ஆண்டு மறுபடியும் இவ்வேலையை தொடங்க உத்தேசிக்கப்பட்டது. இதற்கிடையில் விலைகள் ஏற்றம் காரணமாக, ஏற்கனவே திட்டமிட்டபடி, இக்கலையரங்கினை கட்டி முடிப்பதற்கு முடியாதென்றும், திருத்திய திட்டப்படி ரூ. 22 இலட்சம் தேவைப்படுவதாகவும் தலைமைப் பொறியியல் வல்லுநர் அறிவித்துள்ளார்.

இவ்வரங்கத்தில் 1,500 பேர் மட்டுமே இருந்து பார்க்கக்கூடிய இடவசதி செய்வதாக பழைய திட்டத்தில் உள்ளது. ஆனால் குறைந்த அளவு 3,000 அல்லது 3,500-க்கு மேற்பட்ட இடவசதியுடன் இக் கலையரங்கத்தைக் கட்டி முடிப்பதற்கு தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படியும் கட்டிடங்கள் அமைப்பதில் சில மாறுதல்கள் செய்யும் பொருட்டும் புதிய திட்டம் ஒன்றை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பும்படித் தலைமைப் பொறியியல் வல்லுநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இந்த முயற்சியைத் தொடரும்போது இப்போதும் பாக்கிஸ்தான் போர் வந்து சேர்ந்திருக்கிறது.

**திரு. டி. கே. ஷண்முகம் :** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக கலை அரங்கம் கட்டுவதற்கு மீண்டும் மத்திய அரசிடம் ஏதாவது தமிழக அரசு மானிய உதவி கோரியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதற்குப் பொதுவாகவே எல்லா மாநிலத்திற்கும் கொடுக்கும் வகையில் தாகூர் நூற்றாண்டு விழாவையொட்டி ரூ. 2½ லட்சம் தந்தார்கள். அதற்குமேல் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தரவும் மாட்டார்கள். மற்ற மாநிலங்கள் கிடைத்த ரூ. 5 லட்சத்தைக் கொண்டே முடித்துவிட்டார்கள். நாம் பெருமளவில் ரூ. 15 லட்சத்தில் திட்டம் போட்டோம். அது ரூ. 22 லட்சமாகி பிறகு ரூ. 30 லட்சத்தில் வந்திருக்கிறது. 22—9—1971 அன்று மூன்று திங்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்களும் நானும் மற்றைய பொறியியல் அதிகாரிகளை அழைத்துக்கொண்டு போய் இடத்தைப் பார்த்தோம். கிட்டத்தட்ட ரூ. 5½ லட்சம் மண்ணுக்குள்ளே போய்விட்டது. மேற்கொண்டு ரூ. 22 லட்சம் வேண்டும். முன்பு 1,500 பேர் அமரும்படி போட்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் அதைப் பார்த்துவிட்டு 3,000 பேர்கள் உட்காரும் அளவில் செய்தால்தான், அது பயன்படும் என்று அதற்காக வரைவு திட்டம்படி தலைமைப் பொறியாளரிடம் கேட்டிருக்கிறோம். அது வந்தவுடனே அந்த அளவில் அமைக்கலாம் என்று அரசு கருதுகிறது.



13th December 1971]

**திரு. எஸ். ஜெயராம செட்டியார் :** எந்த இடத்தில் அது கட்டப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கிரீன்ஸ் ரோடில், போலீஸ் காலனிக்குப் பக்கத்தில் லயோலா காலேஜுக்குப் போகும் வழியில் இருக்கிறது.

*Weaving Instructor*

* 160 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Weaving Instructor serving in the Madurai Labour Welfare Union High School, Madurai has not been paid his salary for the past fifteen months; and

(*b*) if so, the reasons therefor?

*நெசவு ஆசிரியர்*

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரையிலுள்ள மதுரை தொழிலாளர் நல ஒன்றிய உயர்நிலைப் பள்ளியில் (Madurai Labour Welfare Union High School, Madurai) பணிபுரியும் நெசவு ஆசிரியருக்குக்கடந்த 15 திங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) பள்ளியின் நிர்வாகிக்கும் ஆசிரியருக்கும் இடையில் தகராறு உள்ளது. ஆசிரியர் நீதி மன்றத்தில் நிர்வாகி மீது வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கின் முடிவு தெரிந்ததும், ஆசிரியருக்கு சேர வேண்டிய சம்பளத்தைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

*Sales-Tax*

* 161 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Agents selling the chassis of motor cars, lorries and buses for Madurai, Ramanathapuram and Tirunelveli districts have not remitted arrears of Sales Tax for the last 4 or 5 years;

(*b*) if so, the names of those five firms; and

(*c*) the action taken against them?

[13th December 1971

விற்பனை வரி

*திரு. பி. திருஞானசம்பந்தம் :* மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மோட்டார் கார், லாரி, பஸ் Chassis விற்பனை உரிமையாளர்கள் (Agents) கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளில் விற்பனை வரி பாக்கி கட்டாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அக்கம்பெனிகளின் பெயர்கள் யாவை?

(உ) அவர்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ), (இ) & (உ) மதுரை விற்பனைவரி கோட்டத்தில் கார், லாரி பஸ் Chassis முதலியன விற்கும் நான்கு முதன்மையான விற்பனையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் மூவர் விற்பனை வரியை அவ்வப்பொழுது செலுத்தி விடுகிறார்கள். நாலாமவர் வரி பாக்கியை செலுத்துவதற்கு அதற்குரிய விதிகளுக்குட்பட்டு தவணை அளித்திருக்கிறது. அந்த விற்பனையாளரது பெயரையோ அல்லது மற்ற விபரங்களையோ வெளியிடுவதற்கு தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை விற்பனை வரிச்சட்டம் பிரிவு 57 (1) தடைவிதிக்கிறது.

* 162 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the amount of arrears of Sales Tax pending over one year in the State; and

(*b*) the steps proposed to be taken by the Government for the collection of the same?

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் ஓராண்டிற்கும் மேலாக நிலுவையாக இருக்கும் விற்பனை வரித் தொகை எவ்வளவு?

(இ) அதை வசூலிப்பதற்கு அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

The Hon. Thiru P. U. SHANMUGAM : (*a*) The amount of arrears of sales tax as an 31st March 1971, under the Tamil Nadu General Sales Tax Act, 1959 is Rs. 3,44,19,852 and under Central Sales Tax Act is Rs. 2,09,35,081.

(*b*) The Commercial Tax Officers and the Deputy Commissioners of Commercial Taxes have been instructed by the Board of Revenue to see that all arrears pending over 10 years are either collected or, if irrecoverable, got written off. The collection of arrears of tax is being closely watched and the existing arrears will be reduced to the maximum extent possible in the coming months.



13th December 1971]

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, இந்த லாரி பஸ் விற்பனையாளர்களில் ஒருவர் இருவரிடமிருந்து நான்கு ஆண்டுகளாக பாக்கியுள்ளதாகச் சொன்னார்கள். எவ்வளவு பாக்கி வைத்திருக்கிறார்கள்? எதற்காக பாக்கி வைத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கட்டுவதற்குக் கொஞ்சம் அவகாசம் கேட்டிருக்கிறார்கள். விதிகளுக்கு உட்பட்டு அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய இரண்டு லட்சம் ரூபாய் பாக்கியிருக்கிறது.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* பத்து ஆண்டுக்ளுக்கு மேலாக விற்பனை வரியில் பாக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வளவு காலமாக அந்த வரி பாக்கியிருப்பதற்கான காரணம் என்ன? உடனடியாக வசூலிக்காமலிருப்பதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நீதிமன்றத்தில் சில விசாரணையில் இருக்கின்றன. சீக்கிரமாகப் பைசல் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* அந்த 20 லட்சம் பாக்கியால் நீதி, மன்றத்தில் இருப்பது எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனியாகக் கேள்வி கேட்டால், சொல்ல முடியும்.

*Employment Exchange Office*

* 163 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to give allowances to the registrants for employment in the Employment Exchange Office; and

(b) if so, the details thereof?

வேலை வாய்ப்பு அலுவலகம்

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :* மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை நாடி பதிவு செய்துள்ளவர்களுக்கு படிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (மாண்புமிகு தொழில் அமைச்சர் சார்பில்) :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

[13th December 1971

THIRU G. SWAMINATHAN : Sir, will the Hon. Minister state the number of persons who are in the live register of Employment exchange during the last two years?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I have no information, Sir.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஒரு சிறு திருத்தம். முந்திய கேள்விக்கு பதில் சொல்லும்போது நீதி மன்றத்தில் சில வழக்குகள் இருக்கின்றன என்று சொன்னேன். அதில் டிபார்ட்மெண்ட் அப்பீல் என்றும் இருக்கிறது. அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*Sub-Magistrate's Court of Srivilliputhur*

* 164. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a Sub-Magistrate's Court at Srivilliputhur; and

(*b*) if so, when a decision will be taken in this regard?

ஸ்ரீவில்லிபுத்தூரில் சப் கோர்ட்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூரில் சப் கோர்ட் திறக்கும் யோசனை அரசின் பரிசீலனையிலிருந்து கொண்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது முடிவு எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மற்றும் (இ) இம் மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்) (குற்றவியல்) (கிரிமினல்) நீதி மன்றங்களின் அதிகார வரம்பினை ஆராயும் குழு, இப்பொருள் பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

*Tractors.*

* 165 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of tractors allotted to Tamil Nadu, out of those imported from East Germany; the date on which they were received; the number distributed;

(*b*) whether it is a fact that the ryots refused to purchase the tractors; and

(*c*) if so, the reasons therefor?



13th December 1971]

டிராக்டர்கள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிழக்கு ஜெர்மனியிலிருந்து தருவிக்கப்பட்ட டிராக்டர் களில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்டவை எத்தனை ? எப்பொழுது வந்தன? எத்தனை செலவாயின?

(இ) அந்த டிராக்டர்களை விவசாயிகள் வாங்க மறுத்தனர் என்பது உண்மையா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ), (இ) & (உ) பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[Note :—An asterisk (*) at the commencement of a the speech indicates revision by the Member.]

II. CALLING ATTENTION TO THE INCREASING INCIDENTS OF DRUG ADDICTION AMONG THE STUDENTS BELONGING TO THE COLLEGES IN *MADRAS* CITY AND THE STEPS PROPOSED TO BE TAKEN BY THE GOVERNMENT.

திரு. ஜி. சுவாமிநாதன் : கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" சென்னை மாநகரிலுள்ள கல்லூரி மாணவர்கள் கஞ்சா, அபினி போன்ற போதைப் பொருள்களை உட்கொள்வது, நாளுக்கு நாள் பெருகிவருவது பற்றி அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக் கைகள் குறித்து ".

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்னை நகரக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவரிடையே போதை மருந்து உட்கொள்ளும் பழக்கம் பற்றிய தகவல் ஏதும் இதுவரை வரவில்லை. இது பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும் இயலாது என்றும் துறைத் தலைவர்களால், துணை விடுதிக் காப்பாளர் அல்லது உள்ளுரையும் ஏடுதிருத்துபவர்களாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்குத் தக்க கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மேலும் அவர்களது பாதுகாப்பிற்குட்பட்ட மாணவர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்து வருமாறும், அம்மாதிரி நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிவிக்கு மாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சென்ற செப்டம்பர் 9-ம் தேதி இந்து பத்திரிகையில் கட்டுரை ஒன்று வந்தது. அதில் சென்னை நகரத்தில் சில கல்லூரிகளிலுள்ள மாணவர்கள் விரிவான

@ Printed as Appendix on pages.

[திரு. ஜி. சுவாமிநாதன்]

[13th December 1971

முறையில் இந்த போதைப் பொருள்களைச் சாப்பிடுகிறார்கள். அதற்குக் காரணம் மலேசியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் அபினி, கஞ்சா போன்றவைகளைக் கல்லூரிகளின் எதிரில் விற்பதாக அந்தப் பத்திரிகையில் போட்டிருந்தார்கள். இதைக் கருத்தில்கொண்டு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலில் கூறியபடி, இதுபற்றி விளக்கங்களோ, குறிப்புகளோ அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. பத்திரிகையில் வந்ததற்குப் பிறகு நாங்களே கல்லூரி விடுதி வார்டன்களுக்கு இதுபற்றிக் கண்காணிப்புடன் இருக்க வேண்டும், அப்படி ஏதாவது நிலைமைகள் இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கூறியிருக்கிறோம்.

## III. Presentation of the First Supplementary Statement of Expenditure for 1971-72.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 14.45 கோடியாகும். இதில் ரூ. 7.32 கோடி வருவாய்க் கணக்கின்கீழ் வருவதாகும். எஞ்சிய தொகை, மூலதன, கடன் கணக்குகளைச் சார்வதாகும். இந்த துணை மதிப்பீடு, எங்ஙனம் ரூ. 14.45 கோடி ஆயிற்று என்பதற்கு சில செலவினங்களைச் சுட்டிக் காட்டுவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

2. இந்திய அரசு கிராமப்புற வேலை வாய்ப்புக்கான திட்டத்திற்கு முதலில் ஒதுக்கிய தொகை நமது மாநிலத்தின் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையையும் மக்கள் தொகையையும் ஒப்பு நோக்கின் மிக்க குறைவாக இருந்தது. இத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்ற ரூ. 295 லட்சம் தேவைப்படும். இதை நாம் மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியதன் பேரில் நமக்கு அளிக்கவிருந்த உதவியின் தொகை ரூ. 1,62.50 லட்சத்திலிருந்து ரூ. 2,65.50 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டது. நாம் கோரிய நிதி உதவி கிட்டும் என்ற அடிப்படையில், ஆண்டுதோறும் இதற்காக ரூ. 295 லட்சம் தொடர் செலவில் நிறைவேற்றுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



13th December 1971]

[டாக்டர் மு. கருணாநிதி]

3. உணவில் ஊட்டச் சத்தின்மையை நீக்கி, குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க, சென்னை மாநகரிலும், கோயம்புத்தூர். மதுரை, திருச்சி நகராட்சிகளிலும் ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட ஏனைய 17 நகரங்களிலும் குடிசைப் பகுதிகளில் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு அளிக்கும் திட்டம், ரூ. 66 லட்சம் தொடர் செலவில் நிறைவேற்றப் பட்டு வருகிறது ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 1,56,000 சிறுர்கள் பயனடைகிறார்கள்.

4. கிராமங்களில், குறிப்பாக அரிசனக் குடியிருப்புகளில், மின்வசதி செய்து கொடுப்பதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்காக, மின்சார வாரியம் மேற்கொள்ளும் மூலதனச் செலவில் ஒரு பகுதியை ஈடுசெய்ய வேண்டியுள்ளது. இந்த ஆண்டு இப் பணிக்காக மின்சார வாரியத்திற்கு மூலதனச் செலவிற்கு முன்கூட்டியே உதவித் தொகை அளிக்கும் வகையில் ரூ. 20 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

5. இம் மாநிலமெங்கெனும் வடகிழக்குப் பருவமழை பரவலாகப் பெய்தது நமக்கு மனநிறைவு அளித்துள்ளது என்றாலும், இவ்வாண்டின் முற்பகுதியில் இம் மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சிநிலை இருக்கத்தான் செய்தது. அந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் இன்னலை களையவும், குடிநீர் வசதி வழங்கவும், ரூ. 120 லட்சம் செலவு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

6. இளைஞர் அணிக்காக ஆண்டுதோறும் ரூ. 36.80 லட்சம் செலவழிக்க அரசு அனுமதித்துள்ளது.

7. இடைக்கால வரவு-செலவுத் திட்ட காலத்தில் அறிவிக்கப்பட்ட மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (State Industries) (Promotional Corporation of Tamil Nadu) இப்போது நிறுவப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு முனைந்து பாடுபடுவதே இக்கழகத்தின் முதன்மை நோக்கமாகும். அரசிற்கே முழுதும் சொந்தமான இக் கழகத்தின் பங்கு மூலதனத்திற்காக ரூ. 100 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுத்துறை (Joint Sector) தூத்துக்குடியில் நிறுவப்பட்டுவரும் உரத் தொழிற்சாலை நிறுவனத்துக்கு, அரசின் சார்பில் பங்கு மூலதனம் செலுத்த வகை செய்யும் பொருட்டு, தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்கு கூடுதலாக நிதி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப, முன்பு பெற்றுள்ள நிதி ஒதுக்கத்துக்கு மேலாக ரூ. 80 லட்சம் செலுத்த இந்தத் துணை மதிப்பீடுகளில் மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

[13th December 1971

[டாக்டர் மு. கருணாநிதி]

8. தமிழ் நாடு கைத்தறி-நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) துணிகளை வாங்கி விற்பனை செய்யும் கொள்கையினை முனைந்து மேற்கொள்வதற்காக, குறைந்த வட்டி வீதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியிட மிருந்து பெருந்தொகை கடன் வாங்க வகை செய்யும் பொருட்டு, இந்த அரசு சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கு மேற்கொண்டும் ரூ. 20 லட்சம் வழங்கியதற்கும் இத் துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பங்கு மூலதனத்திற்கும் அரசு மேற்கொண்டு வழங்கிய ரூ. 75 லட்சத்திற்கும் இத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், உலக வங்கி இவற்றின் உதவி கொண்டு, பெரும் அளவில் கடன் கொடுக்கும் வேலைத் திட்டத்தினை மாநில நிலவள வங்கி மேற்கொண்டிருக்கும் இந் நிலையில் இந்த வங்கியின் நிதி வசதியினை செம்மைப்படுத்துவதற்கு இது உறு துணையாக இருக்கும்.

9. இம் மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களுக்கும், கிராமங் களுக்கும் குடிநீர் வழங்குவதென்ற திட்டவட்டமான நோக்கத் துடன் நிறுவப்பட்டுள்ள தமிழ் நாடு குடிநீர் வழங்கு கழிவு நீரகற்று வாரியத்திற்கு நடைமுதல் மூலதனக் கடனாக ரூ. 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத் தொகையினையும் துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ளோம்.

10. தமிழ் நாடு காவல் துறை ஆணைக்குழு செய்த பரிவுரைகள் சிலவற்றை அரசு ஏற்றுக்கொண்டு, இம் மாநிலக் காவல் படையினைப் புதுமைப்படுத்தி மாற்றியமைக்க ரூ. 40.63 லட்சம் செலவு செய்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

11. துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ள முக்கியமான செலவினங்கள் சிலவற்றையே நான் சுருங்கக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்பில் இந்த இனங்களைப் பற்றிய மேல் விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ள ஏனைய திட்டங்கள் குறித்து சிறப் பாகக் குறிப்பிட்டு சொல்லவேண்டிய அவசியம் இல்லை எனக் கூறிக்கொண்டு, 1971-72-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடு களை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

## IV. PRESENTATION OF THE STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE FOR 1967-68

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் தலைவர் அவர்களே, 1967-68-ஆம் ஆண்டில் சில மானியங்களின்கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டு விட்டதால், அம்மாதிரி ஏற்பட்ட அதிகப்படியான செலவினங்களை ஈடுசெய்வதற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மன்றத்தின்முன் வைக்க முன்வந்துள்ளேன்.



13th December 1971]

2. இந்த அதிகப்படியான செலவினங்களை ஆய்வு செய்த 1970-71-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர், 1967-68-ஆம் ஆண்டிற்கான அனுமதித்த மானியங்களுக்கும் சாட்டிய ஒதுக்கீடுகளுக்கும் மேல் அதிகப்படியான செலவினங் களைப் பற்றிய தங்கள் அறிக்கையில் 5-வது பத்தியில் கண்டுள்ள படி அதிகப்படியான செலவினங்களுக்கான மானியக் கோரிக்கை களைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அனுப்பும்படி பரிந்துரைத் தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிவுரைக்கிணங்க, 1967-68-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில், மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 1,78.44 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு தேவை. இம் மன்றம் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## V. NON-OFFICIAL BUSINESS.

### (i) BILL.

MR. CHAIRMAN : The hon. Member Thiru D. Santosham is not in his seat. I will move on to the next item.

### (ii) RESOLUTIONS.

### (1) Freedom to choos the medium of instruction in Schools and Colleges—*cont.*

• THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, it is exactly one year since this Resolution was replied to by the Hon. the Education Minister. Sir when the Hon. the Minister for Education replied to this, we had not the advantage of Dr. A. L. Mudaliar Committee's report, which has been placed before this House to-day. Sir, the Hon. the Education Minister expressed the view that he agreed with several Members of this House who had evaluated the merits of the English language and its usefulness to our country. He had also given a long list of languages which had attained commercial and international importance like the French language in the 17th, 18th and 19th centuries, and the English language in the 20th century. Throughout his speech, the Hon. Minister emphasized the importance of the English language and told us also that it was no part of the effort of the Government to minimise the importance of the English language, but his sole desire was to improve the conditions under which the regional language functioned. 4-30 p.m.

[Thiru G. Vasantha Pai]

[13th December 1971

Sir, my Resolution had no bearing at all on minimising the importance of the Tamil language. All that I was asking for was that scientific and mathematical studies might be continued to be conducted in English. Unfortunately the word only created a lot of commotion in this House and there was severe criticism against me by hon. Members Thiru Shanmugam, Thiru Arivazhagan, Pulavar Arivudai Nambi and several others who said that the word " only " meant that the only medium of instruction should be ' English '.

MR. CHAIRMAN : It is quite natural in a democratic set-up.

THIRU G. VASANTHA PAI : Yes, Sir. I do not object to it. I am only replying to the hon. Members that what I meant was that English should be continued as a medium of instruction in scientific and mathematical subjects till Tamil was developed with vocabulary incorporating all those terms covering the subjects as had been done in other countries. I do not say for a moment that Tamil should be completely overlooked.

I am glad that the Hon. the Chief Minister who has returned from his American tour has met the scientists at the Chicago University and has also requested them to come to this country as visiting Professors. Sir, I had also an opportunity to meet those scientists, some of whom the Hon. the Chief Minister might not have had the opportunity to meet because Dr. G. N. Ramachandran, who was the Head of the Physics Department, about whom I had an occasion to talk in this House had accepted an assignment in the Indian Institute of Science in Bangalore because he was not wanted by this University. Sir, I met the visiting Professors whom the Hon. the Chief Minister met. I had a discussion with them about the regional language. I was very closely and intimately connected with Dr. C. V. Raman and just a year before his death, when I met him, he said that 95 per cent of the people of the scientific world talk and think in English. Sir, his was what Dr. C. V. Raman told us and it was oft repeated by those Scientists whom the Hon. the Chief Minister met in the University of Chicago. Sir, I do not for a moment say. . .

THIRU K. ARIVAZHAGAN : On a point of clarification, Sir. From the statement of the hon. Member Thiru Vasantha Pai, it looks as if all Scientists support English medium. Recently, Thiru M. G. K. Menon, Chairman of the Electronic Commission of India in his address at the Indian Institute of Technology during convocation, has said that regional languages should be used in the Universities and Colleges and even in technical and scientific institutions.



13th December 1971]

THIRU G. VASANTHA PAI : Sir, I am aware of Thiru M. G. K. Menon's speech and what the hon. Member Thiru Arivazhagan means. The hon. Member was a Professor of Economics in Thiagaraja College. And did not lecture in Technology which he studied in Tamil. My point is that persons who are acquainted with Tamil technology and have studied other subjects with Tamil as medium of instruction are not able to put things across because of the diminising vocabulary in scientific terminology in Tamil. I do not say that Tamil cannot come up to the standard of English. It may even out-beat the English language in 40 years. I do not say anything derogatory to Tamil. I am only saying that so far as scientific development is concerned, English may be allowed to co-exist. I am not saying anything derogatory to Tamil. I have not said anything derogatory to Tamil. I am thinking not merely of myself because I have got good knowledge of English and probably no knowledge of Tamil. Because of my good knowledge of English, I was able to get along throughout the world except France and I was able to get along with English. Only in France I found some difficulty and the French taxi drivers were a regular nuisance to me. I had this difficulty because I do not know French. I could not even say in French, the words ' sub-way ' or anything like that. In every other place, English was understood and I could get along with my knowledge of English. I am only saying for these reasons that English should co-exist. Even Dr. A. L. Mudaliar's report referred to brain drain. Even the Hon. the Chief Minister said before this House that he met a conplement of Indian Scientists at Chicago whom he addressed. The Hon. the Chief Minister, the Hon. the Education Minister and the Hon. the Minister for Food have also gone abroad. (Interruption) I found from the Travelling Allowance Bill that something was stated against the name of the Hon. the Minister for Food also.

HON. MEMBERS : Not the Hon. the Minister for Food.

THIRU G. VASANTHA PAI : Sir, I am sorry I made a mistake. It was the Hon. the Minister for Industries. I am only referring to those Hon. Ministers who have gone abroad..........

THE HON. THIRU P. U. SHANMUGAM : It does not mean that I may not go.

THIRU G. VASANTHA PAI : Sir, I wish every one of the Hon. Ministers goes abroad because there is a lot of things to learn in other countries which may be brought to our country without impairing our tradition and culture. The people of America are very good though the American Government may not be. I found that the American people are very communicative and very much interested in our culture and in exchange of views. They are receptive without inhibition. The Hon. the Chief Minister himself said

that the American people are good. He did not mean the Government. We may have a quarred with the Government, but not with the people. We gave got a lot to learn from other countries. I wish every one of the Hon. Ministers and hon. Members of hte Ruling Party goes abroad because they will have an idea of what the people abroad are doing. If English is shut out, and if we do not give the coice of medium of instruction in English to the students what would happen is, our younger generation would be denied the opportunity to learn about the tradition and culture of the people abroad. Sir. I know many Hon. Ministers are not against English because I am glad to see that the Hon. Ministers' children are also taking English medium.

4-40 p.m. I am not saying that they are against it. Sir, I found on a little research that many of the children of our Ministers have opted for English medium. Though they are fighting against us here when they talk about it, they are not able to put up such a fight against their children. That is a good thing, because the future generation should be moulded in the proper way and I am happy about it.

What I was referring to is this: When our people go abroad, they achieve the greatest thing. In America, as I told the House, when I was abroad. I found a gold medal in the hands of one Madrasi and I was told it was of a weight of 17 sovereigns. On the one side of the medal, there was the effigy of Kennedy and on the other side, it is inscribed: "Alabama Apollo 8 Mars-V, Recipient A.C. Buch." I was quite surprised to see this and I hav been to his house and learnt that he was a Madrasi. His house is in Marco Polls, Los Angles. He has married a American lady. I stayed with him as guest for some time and I had exchange of ideas with him. He was working in Madras with K. P. V. Sheik Mohamed Rowther & Co. on a small salary. He went away from here and he is an Electronics Engineer and he was one of the eight people who were given the highest place of honour along with the President, at the launching pad in Appollo 8 Mission from Nasa. Sir, I have had the opportunity of meeting a number of our people. What made them so big is that they were able to communicate and understand the language which is international and is becaming inter-plaetary language. So, we should not stand in the way of our children coming up. He is a youngman of 35 years of age and I was roud to see a letter from Vermer Van Brawn to Mr. Buch commending his valuable contribution which. as soon as I returned to India, I forwarded to our Prime Minister. I went to UCLA Universiy and I put that letter in the photostat machine and I got a photostat copy of the letter and then returned the original to him. I sent a copy to he Prime Minister, saying that here is a man who has done yeoman service to the country, who is not known in this Country. I am proud that he is a man from Madras. I also met another great Scientist Dr. G. N. Rama-



chandran, I also met Dr. Krishnaswamy and another great Scientist Dr. Srinivasan and a number of other people in the United States who have all achieved miraculous things. What every one of them told me was that their library was the English library, that their source of information was English literature and scientifi books and except a few of them who also knew Russian and French, all the others did not know any other language than English. They scaid that they got all knowledge through English language and also got enormus encouragement of the Government there which would make them spend all their life in a foreign country. [Thiru K. Arivazhagan rose . . . .] Sir, I am not yielding. When the Hon. the Chief Minister mentioned the other dy that he had asked those persons to visit this country, I was personally very happy because I felt that the first unofficial mbassador would come to us and take our literature, our wealth of information knowledge also to United States. Sir, I may just point out that the Indian culture is spreading past in the United States and I found many of our philosophies are gaining ground in the United States. I would not be surprised to find very soon even Tirukkural in the libraries of the United States. There the people are wanting to get information on our philosophy, religious and other things of this country, because they are sick of money. There are only a few like President Nixon who want wars for the purpose of diverting the attention of the people. But there are many in the United States who would like to learn from other countries. Our means of communcation is English language only till Tamil language is learnt by them. I never say that Tamil language should not be known to them. We must make so famous a language as it was in the days of Sangham epoch. But I would only say that when we have got a ready made means of commnication in English language we should not lose sight of it.

I am glad that the Hon. the Minister for Education also said that he agreed with Thiru Damodran, myself and several other speakers who spoke for the resolution and that they were not going to lose the advantages of English language that had been gained. Sir, in those circumstances, I thought that my resolution would be automaticcally accepted by this House, because there was no difference in view held by the Gevernment and by me. I am willing to delete the word only in my resolution. *I only request that English language should* be preserved along with Tamil language for at least 10 years in the Universities, *so that people learnt Tamil language and English language.* I have stated that so far as teaching of Science and Mathematics is concerned, all instruction should only be given in English. I am now willing to delete the word 'only'. Let instruction be given in English along with Tamil medium.

One thing I would make bold to say is that the Report of Mudaliar Committee which has been placed before the House clearly says as one of the recommendations made in its interim report that "the Committee is of the opinion that opportunity to choose the medium

[Thiru G. Vasantha Pai]

of instruction should be available to the students ". At page 4 of the report, the Committee says " looking at the state of our country at present, we are conscious of the fact that the country suffers from illiteracy, poverty, lack of opportunities for gainful employment and all these have brought about tensions of a high order. We hope and trust that whatever may be the complexion of the Government at the Centre or in the State, the authorities concerned will take a realistic view of the situation and will not come to their own conclusions ignoring the well-considerel arguments and pleas placed before them by the intellectuals of the country... "—Sir, it is in this connection that I referred to the speech of Dr. C. V. Raman delivered at Vidyodaya School, just some time before his death, in which he said that ' if English goes, 95 per cent of the persons who are talking in English will suffer, because 95 per cent of the Scientists talk and exchange views only in English—" who are no less anxious to carve out for their country a place under the Sun. It is on these grounds and not out of any fanatical attitude that we do plead once again that the choice of medium of instruction must be given to the students for the present. And for a long time to come, English must continue to be a subject of study for the Degree and higher courses in the Universities. " Sir, this is a Committee which was presided over by Dr. A. Lakshmanaswami Mudaliar, former Vice-Chancellor of our Madras University and which was composed of the present Vice-Chancellors of Madras and Madurai Universities, Dr. Chandran D. S. Devanesan and Thiru G. R. Damodaran. We must accept this Committee's report and take a realistic view of the situation. Having accepted its interim report, I hope the Government will accept its final report also. I also hope and trust that my resolution will be accepted in toto, because it does not really cross swords with the Government's point of view. I am only pleading for the acceptance of the resolution which is for the benefit of the poeple of our country and of Tamil Nadu, since they must have opportunities to show their talents abroad. They should not lose sight of English language which is at the present context not only an inter-national language but also an inter-planetary language and we must not only encourage the study of English language but also give the right to the students to choose their medium of instruction.

Sir, the Hon. Minister, referring to Thiru Damodarn's resolution—I am not definite whether in reply to the resolution or in the Policy Note on Education—has said: How can the students demand admission to schools and colleges as a fundamental right? How can the students say that they want only English ? Then we cannot have in our Colleges. Tamil as a medium of instruction. To that my answer is: I am not saying that all the students who apply get admission into Colleges but after the students apply and get admission into the institutions, they must be given the option of choosing Tamil or English medium. I am not saying that all



[Thiru G. Vasantha Pai]

the students who apply must be given admission. It is not at all possible, because our educational institutions are all limited in nature and the total number of students who could be admitted in our Schools and Colleges is also, therefore, limited. But, once they get admission into the institutions, they must be given the choice whether to take English medium or otherwise. Sir, the Hon. Minister's speech..........................

MR. CHAIRMAN : The hon. Member had promised the other day that he would not take more than 20 minutes for his reply.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, I have just taken only 15 minutes and I will finish my reply in another five minutes.

I am referring to page 149 of the Official Report of the proceedings of the House of 28th November, 1970, wherein the Hon. Minister has given statistics about the number of students studying in Tamil and English medium in 1970-71. In the Pre-University Course, in Tamil medium, there are 12,756 students in Government colleges and 7,882 in aided colleges, making in all 20,638 out of the total number of students of 70,058, whereas in English medium there are 4,515 students in Governmet colleges and 44,905 in aided colleges, totalling 49,420. Approximately 50,000 students out of about 70,000 students are in the English medium. Similarly, Sir, in B.A. degree course, the total number of students in Tamil medium sections is 4,027, while those in English medium numbered 14,581, out of the total number of students of 18,608. Similarly, Sir, in B.Sc. degree course, the number of students in Tamil medium is oly 2,282, against 12,455 students in English medium out of a total of 14,737. Sir, these figures show that our youngsters, rightly or wrongly, feel that they should have an opportunity to study through the English medium. Sir, I think, we are all on the wrong side of 50 or nearing 50 and we cannot really lay the rule for our youngsters, because they are our future masters. I only appeal to the Government to leave the choice of medium to the students. Let it be understood that for the teaching of Science and Mathematics, till our country reaches a stage of scientific development, we should have English side by side with Tamil as medium of instruction. Until Tamil language comes to the level of absorbing English terminology and of using its own terminology, let English continue side by side with Tamil. English language can go away after 40 years. This is my only request and I hope this House will adopt the resolution which I have brougt without any dissent. Thank you.

MR. CHAIRMAN : Is the hon. member pressing his Resolution?

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I am pressing my Resolution.

MR. CHAIRMAN : Does the Hon. Minister want to make any statement ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, இந்தப் பிரச்னை சென்ற ஆண்டில் தொடங்கி இன்னமும் இருந்து கொண்டு இன்று வந்து சேர்ந்திருக்கிறது. இதைத் துவங்கிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றே
4-50 p.m. என்னுடைய உரையில் தெளிவுபட எடுத்துச் சொன்னேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், நாங்கள் ஆங்கிலத்திற்கு விரோதிகள் அல்ல என்று திட்டவட்டமாக, தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏனெனில் இந்தியாவில் வேறு பல இடங்களில் ஆங்கிலமே கூடாது என்ற வெறுப்புணர்ச்சி உள்ளது. அந்த வெறுப்புணர்ச்சியின் அடிப்படையில் இங்கே எந்தப் பணியிலும் நாம் ஈடுபடவில்லை. ஆங்கிலத்தினுடைய நன்மைகள், அதனால் ஏற்படுகின்ற சிறப்புகளை எடுத்துச் சொன்னேன். இரண்டு மொழித் திட்டத்தை எடுத்திருக்கிற காரணங்களை சொல்லியிருக்கிறோம். ஆங்கிலத்தால் உலகத்தில் ஏற்படுகின்ற நன்மைகளை நானே கூட குறிப்பிட்டுச் சொன்னேன். ஆகவே ஆங்கில அறிவு என்றென்றும் இருக்க வேண்டும். 40 ஆண்டு காலத்திற்காவது வேண்டுமென்று அவர் சொன்னார். 40 ஆண்டுகள் அல்ல, நாங்கள் சொல்லும்போது, 'Hindi never, English ever' என்று சொல்லியிருக்கிறோம். ஏனென்றால் உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு உள்ள நிலையில் ஆங்கிலம் தான் இருக்கிறது. உலகத்தோடு வணிகத் தொடர்பு, அறிவியல் தொடர்பு, அரசியல் தொடர்பு, மற்றும் பல்வேறு தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலம் தான் தேவைப்படுகிறது. பிற நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கு ஆங்கில அறிவு தேவைப்படுகிறது. அப்படிப் பலன் தரக்கூடிய ஆங்கில அறிவு வேண்டுமென்பதற்காக தமிழ் அறிவு, ஆங்கில அறிவு இரண்டும் வேண்டுமென்ற காரணத்தினால், வேறு எந்த மாநிலத்தையும்விட இந்த மாநிலத்தில் மூன்றாவது வகுப்பிலிருந்து கட்டாயம் ஆங்கிலக் கல்வி தர வேண்டுமென்ற நிலை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. நாம் ஆங்கிலத்தினுடைய முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கவேயில்லை. அதே நிலைமையில் அந்த அறிவு தமிழர்களுக்குப் பயன்படுகிற சூழ்நிலை வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தமிழ் வர வேண்டுமென்ற நிலைமையில் கூட அல்ல. ஏராளமான தமிழ் மக்கள் அடிப்படை அறிவைப் பெற வேண்டுமென்பதற்காக, தமிழில் பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்ற நிலைமைகளை எடுத்துச் சொன்னோம். தமிழில் கற்றுக் கொள்கிற நிலைமைகள் ஏற்படுவதன் மூலம் தெளிவாக அறிந்து கொள்கிற சூழ்நிலை ஏற்படும். மெல்ல மெல்ல தமிழ் பாட மொழியாக வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சிகளைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னேன். இன்று நேற்று அல்ல, 1928, 1929-இல் பல்கலைக்



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

கழகக் கல்வி வல்லுனர்கள் முயன்று பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று 1936-இல் எஸ்.எஸ்.எல்.சி வரை வந்து நின்று விட்டார்கள். அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்றிருக்குமானால், வேறு பல நாடுகள் போன்று நம் நாடு இருந்திருக்கும். 1936-37-இல் எஸ்.எஸ்.எல்.சி-யில் மற்றப் பாடங்களைத் தமிழில் சொல்லிக்கொடுப்பது நடைமுறையில் இருந்தது. கல்லூரி தாண்டுகிற நிலைமை வராமல், 1936 இலிருந்து 1957-58 வரையிலும் முயற்சி எடுக்கப்படாமல் இருந்தது. அதன் காரணமாக மாறுதல் ஏற்படவில்லை. அதை நாம் மெல்ல மெல்லக் கொண்டு வருகிறோம். அவசரப்பட்டு கொண்டுவரவில்லை. சாதக பாதகங்களை நாங்களும் உணர்கிறோம். தமிழ் நாட்டிலிருக்கிற வேலை வாய்ப்புகள், இங்குள்ள இதர மாநில மாணவர்கள் நிலைகள் இவைகளை உள்ளடக்கி வைத்துத் தான் என்றைக்கேனும் ஒரு நாளைக்கு மொழிப் பயிற்சியில் தமிழ் ஆக்கம் பெற வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். மேலும் தமிழ் வளம் பெற வேண்டுமென்பதற்காக அல்ல. மக்கள் அறிவு பெற வேண்டுமென்பதற்காகத் தான். இன்னமும் சொல்லியிருக்கிறோம். அறிவியல் பாடங்கள் மூலமாக, கணக்கியல் பாடங்கள் மூலமாகத் தமிழ் வளம் என்ற நோக்கமல்ல. உரைநடை மூலம், கவிதை மூலம் தமிழ் வளர முடியும். இந்த அறிவியல் மூலம் தமிழ் வளர வேண்டுமென்ற நிலைமை அல்ல. அறிவியல் அறிவை மாணவர்களுக்குப் புரிய வைக்கவேண்டுமென்ற அடிப்படையில் செய்கிறோம். கல்லூரிகள், மற்ற இடங்களில் "இண்டர்நேஷனல் டர்ம்ஸ்", அறிவியல் சொற்களை அப்படியே கையாள வேண்டுமென்ற குறிப்புகள் கல்லூரிகளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. தமிழில் படிக்கிற போது, எந்தச் சொல்லைக் கற்றுக் கொள்கிறார்களோ. அதோடு நின்றுவிட முடியாது. ரெஃபரன்ஸுக்கு ஆங்கிலப் புத்தகங்களைத் துணை கொள்ளும்போது தமிழில் என்ன சொல்லைப் படிக்கிறார்களோ அதே சொல் ஆங்கிலத்தில் இருக்கும். இண்டர்நேஷனல் டர்ம்ஸ் கலைச் சொற்களை அப்படியே கையாள்வது நல்லது என்று தான் புத்தகங்களை எழுதுகிறவர்களுக்கும் கூறியிருக்கிறோம். அதற்காக வட்டம் என்பதை 'சர்கிள்' என்று சொல்லவேண்டுமென்ற அவசியமில்லை. அதற்காக கோடு என்பதை 'லைன்' என்று சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை, அதற்காக புள்ளி என்பதை 'பாயிண்டு' என்று சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. அதற்காக எலக்ட்ரான், புரொட்டான், நியூட்ரான் என்ற சொற்களை தமிழில் தேடி அதைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அப்படியே தமிழில் கையாளலாம் என்ற முறையில் தான் கையாளப்பட்டு வருகிறது. மெல்ல மெல்ல எடுத்துக் கொள்ளப்படுகிறதே தவிர, அவசரப்பட்டு திணிக்கிற முயற்சியில் ஈடுபடவில்லை என்ற கருத்து விளக்கங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. வேறு தனியார் கல்லூரிகளை வற்புறுத்தாமல் கஷ்டங்கள், அதிகப்பணச் செலவு, மற்றவைகள் ஆனாலும் கூட,

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

[13th December 1971

அரசாங்கக் கல்லூரிகள் தாங்கும் என்ற முறையில் கூட நாம் முயற்சி செய்தோம். தமிழில் மட்டும் கொண்டுவர வேண்டுமென்பதற்காக எண்ணங்கள் தெரிவிக்கப்பட்டன. அந்த அடிப்படையில் டாக்டர் ஏ. எல். முதலியார் குழு அமைத்து அவர்கள் சிபாரிசு செய்தார்கள். அந்தச் சிபாரிசை எடுத்துக் கொண்டு இப்போது ஆங்கிலத்திலே அதிக வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் 95 செக்ஷன்களைப் புதிதாக பல்வேறு அரசாங்கக் கலைக் கல்லூரிகளில் ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை ஏராளமான பொருள் செலவுக்கு இடையில் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் படிக்க, தமிழில் படிக்க வாய்ப்பு இருக்கிறது. தனியார் கல்லூரிகளைக் கேட்டுக்கொள்கிற நிலையில் தான் இருக்கிறோம். ஏ. எல். முதலியார் கமிட்டி சிபாரிசுப்படி, தனியார் கல்லூரிகளைக் கேட்டுக்கொள்கிற நிலையில் தான் இருக்கிறது. வற்புறுத்துகிற நிலையில் இல்லை. இப்போது கூடப் பார்த்தால், தமிழ் புகுமுக வகுப்பிற்கு 20 ஆயிரம் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 53 ஆயிரம் இடங்கள் ஆங்கிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று நாங்கள் அவசரப்படவில்லை. வேகமாகக் கொண்டுவரவில்லை. மெல்ல மெல்ல கொண்டு வருகிறோம். அவசரப்படவில்லை. பெரும்பாலான பி.எஸ்.ஸி வகுப்புகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. எம்.ஏ., எம்.எஸ்.சி போன்ற போஸ்டு கிராஜுவேட் வகுப்புகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. மருத்துவக் கல்லூரி முழுவதும் ஆங்கிலத்திலேதான் நடைபெறுகிறது. வெட்டரினரி கல்லூரி முழுவதும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகிறது. பொறியியல் கல்லூரி முழுவதும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகிறது. அவசரப்பட்டு அவைகளையெல்லாம் நாளைக்கே மாற்ற வேண்டும், இரண்டாண்டு காலத்திலே மாற்ற வேண்டும் என்பதல்ல, அடிப்படையிலே மெல்ல மெல்ல நகர்களில் ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். என்றைக்காவது ஒரு நாளைக்கு, மற்ற நாடுகளைப்போல தமிழ் மொழியிலே அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு, தமிழகத்திலே எல்லா மக்களும் தமிழின் மூலம் அறிவு பெற துவங்க வேண்டும் என்பதற்காகத் துவக்குகிறோம். காலம் நீடித்தாலும் நீடிக்கலாம். ஆனால் என்றைக்கேனும் ஒரு நாள் அது நடைபெற வேண்டும் என்று ஆரம்பித்திருக்கிறோம். எல்லாம் மாறிவிட்டது, கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை. வேறு நாடுகளுக்குச் சென்று, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான். ஜெர்மனி, போன்ற நாடுகளுக்குச் சென்று அறிவைப் பெருக்குவதற்கான வாய்ப்பு தடுக்கப்படவில்லை. ஏராளமானவர்கள் சென்று அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அதையும் மனதிலே வைத்துக்கொண்டுதான் அரசாங்கம் நிதானமாகச் சென்று கொண்டிருக்கிறது.



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

13th December 1971]

இன்றைக்கு காலையிலேகூட நான் ஒரு மாநாட்டை திறந்து வைத்துவிட்டு வந்தேன். அது ஆங்கிலப் பேராசிரியர்கள் மாநாடு. இன்றைக்கும் நாளைக்கும் இரண்டு நாட்கள் நடக்கின்றது. ஆங்கில கல்வியை எப்படி திருத்தமாகவும், சீரிய முறையிலும் சொல்லிக் கொடுக்கலாம் என்பதற்கான மாநாடு. பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியோடு நடக்கிறது. அதிலே இருக்கிற விற்பன்னர்கள் இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற ஆங்கிலப் பேராசிரியர்களெல்லாம் ஆங்கிலத்தைத் திறம்படக் கற்றுக்கொடுக்க, சைதாப்பேட்டை ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியிலே நடக்கிற அந்த மாநாட்டை காலை 11 மணிக்கு துவக்கி வைத்து விட்டு வந்தேன். என்றைக்கும் ஆங்கில அறிவு துணை செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நாம் பணிகள் செய்துகொண்டு வருகிறோம். பத்தாவது படித்து வெளியேறுகிற மாணவன் ஆங்கிலம் தமிழ் இரண்டிலேயும் எழுதப் படிக்க பேச ஆற்றல் பெறுகிற அளவுக்கு இடமளிக்க எந்த அளவுக்கு 'சிலபஸ்' போட வேண்டுமோ அந்த அளவுக்கு 'சிலபஸ்' போட வேண்டும் என்று தான் தலைமை ஆசிரியர்கள் மாநாட்டிலே கேட்டுக் கொண்டிருக்கிறோம். பத்தாவது படித்து வெளியேறுகிற மாணவர் ஆங்கிலத்திலே பேசவும், எழுதவும், உணர்ந்துகொள்வதற்கான ஆற்றலையும் தருகின்ற அளவுக்கு பள்ளி படிப்புக்கு ஏற்பாடு அமைய வேண்டும். அப்பொழுதான் கல்லூரிக்கு வருகிறபோது பாடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியும். இப்பொழுது பி.ஏ., பி'எஸ்ஸி. வகுப்புகளிலே. கீழே கொடுக்க வேண்டிய அளவுக்கு மொழி அறிவு கொடுக்கப்படாத காரணத்தால், ஆங்கிலம் தமிழ் மொழி அறிவு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே அக்கறை காட்டத்தான் பல்வேறு வகையிலே பணியாற்றி வருகிறது. இப்பொழுது அரசினர் கல்லூரிகளிலே 20,000 இடங்கள்தான். தனியார் கல்லூரிகளிலே 53,000 இடங்கள் இருக்கின்றன. இதில் எந்த இடங்களை வேண்டுமானாலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கலாம். அப்ளிகேஷன்கள் போட்ட பிறகு ஆங்கிலப் பிரிவு, தமிழ் பிரிவு ஏற்படுத்துவதில் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அரசினர் கல்லூரிகளிலே ஆங்கிலத்திலே படிப்பதற்கும், தமிழிலே படிப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. தனியார் கல்லூரிகளிலே அவர்களை தமிழில் பாடம் கற்பிக்க கேட்டுக் கொள்கிற நிலையிலேதான் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்கள் கொண்டிருக்கிற கருத்தின் அடிப்படை நோக்கத்தை ஆதரிக்கிற வகையிலேதான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அவர்கள் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியில் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, I have already stated that I am correcting the wording of my resolution, by deleting the word 'only'.

[13th December 1971

THIRU V. R. NEDUNCHEZHIYAN : The hon. Member has stayed in his resolution all instruction in Science subjects and Mathematics only be given in English " and that English be compulsory in the Degree courses along with Tamil......... ".

THIRU G. VASANTHA PAI : Sir, I have omitted the word ' only ' in the resolution.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதைப் பல்கலைக் கழகந்தான் முடிவுசெய்ய வேண்டும். நாம் முடிவு செய்வதற்கில்லை. நாம் பாலிசிதான் கொடுக்கலாம். இப்பொழுதுகூட தமிழ் பி.ஏ.க்கு ஆங்கிலம் கட்டாயமாக இருக்கிறது. வகுப்பிலே போஸ்ட் கிராஜுவேட், படிக்கிறவர்களுக்கு ஆங்கிலம் கட்டாயம்தான். தமிழ் எம்.ஏ. ஏழு பேப்பர்கள் எழுதுகிறார்கள் என்றால், 3 பேப்பர்கள் ஆங்கிலத்திலே எழுத வேண்டும். தமிழக அரசு ஆங்கிலத்தைப் புறக்கணிக்கிற நிலையிலே இல்லை. அதற்கு ஆக்கம் தருகிற அளவிலேதான் இருக்கிறது. கட்டாயமாக அந்த மொழியை வைத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், ஆங்கிலம்தான் கட்டாயமே தவிர எல்லாப் பள்ளிக்கூடங்களிலேயும் தமிழ் கட்டாயப்படுத்தப்படவில்லை. எல்லோரும் அவர்கள் ஏற்றுக் கொள்கிற தாய்மொழியோடு ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும். அந்த நிலையிலே பார்த்தாலும் இன்றைக்கும் ஆங்கிலத்திற்குத் தான் ஏற்றம் இருக்கிறதே தவிர, அந்த இடத்தை இன்னமும் தமிழ் பெற்றுவிடவில்லை. ஆகையினாலே குஜராத்தி பள்ளிகளிலே தாய்மொழி குஜராத்தியையும், ஆங்கிலத்தையும் கட்டாயமாகப் படிக்கின்றார்கள். அங்கே தமிழ் இல்லை. அதுமாதிரி 13 பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. ஆகவே இந்தத் தீர்மானத்தின் நோக்கத்தை அடிப்படை தன்மைகளை ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிற காரணத்தாலும், இருமொழிக்கொள்கையை வைத்திருக்கிற காரணத்தாலும், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் குழுவின் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தாலும், இதைத் தீர்மான வடிவிலே கொண்டுவந்து கட்டாயப் படுத்த நிபந்தனைகள் விதிக்காமல், இந்தக் கருத்துக்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, முக்கியத்துவம் தரப் படுகிறது என்று கூறி இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. RAJARAM : Sir, I want a small clarification from the Hon. the Education Minister. I would like to know whether the Government have accepted the recommendations of Dr. Mudaliar Committee in full.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் கொடுத்த அறிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலத்திற்கு இன்னும் வசதிகள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தமிழிலே விஞ்ஞானப் புத்தகங்கள் எல்லாம் வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அது மாறுபட்ட கருத்து அல்ல. தமிழ்



13th December 1971]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

மட்டுமே இருக்கிற கல்லூரிகளிலே ஆங்கிலத்திற்கு வாய்ப்பு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதிலே முரண் இல்லை'

THIRU G. VASANTHA PAI : Sir, what about the choice of medium ? Have the Government accepted the recommendation in that regard ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 'சாயஸ் ஆஃப் மீடியம்' என்றால், மாணவர்கள் எதை விரும்புகிறார்களோ அதைக் கொடுக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் விரும்புவதானால், அது நடைபெறுவது சாத்தியமல்ல. 20,000 இடங்கள் தமிழுக்கு 52,000 இடங்கள் ஆங்கிலத்திற்கு அதற்குத் தகுந்தாற்போல் எடுத்துக்கொள்ளப்படும். அப்படித்தான் கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ் பாட்டனி, போன்ற பாடங்களை மாணவர்கள் அத்தனைபேரும் கேட்பார்களானால், முடிகிற காரியமல்ல. நேச்சுரல் சயன்ஸ்தான் எல்லா மாணவர்களும் கேட்பார்கள். ஆனால் நேச்சுரல் சயின்சுக்கு இவ்வளவு இடங்கள்தான் என்று இருக்கிறது. அந்த இடங்கள் தீர்ந்ததற்குப் பிறகு எக்கனாமிக்ஸ், பி.காம், ஹிஸ்டரி, பாலிடிக்ஸ் என்று கேட்பார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, I was not asking about all that. I want to know whether, after a student is admitted into an institution, the option is left to him to choose either English or Tamil medium.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாணவர்களுக்கு 5-00 p.m.
அந்த உரிமை இருக்கிறது. ஆங்கிலத்தையும் கேட்கலாம், தமிழையும் கேட்கலாம். இன்னதுதான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிற நிலை இல்லை.

**திரு. சி.வி. ராஜகோபால் :** மாணவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறபோது, அங்கே இருக்கிற பிரின்சிபால் இருக்கிறாரே, அவர் நீ இதுதான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாணவர்களுக்கு அதிகாரம் கிடையாது. உரிமை இருக்கிறது. பிரின்சிபால் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. 80 இடங்கள் இருந்தால், அவை தீர்ந்துவிட்டன என்று சொல்லக் கூடும். அதற்குப் பிறகு 'சஜஷன்ஸ்' சொல்லக்கூடும். தமிழிலே வேண்டுமானால் இடமிருக்கிறது என்று சொல்லக் கூடும். அதைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும், இதை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** ஸ்தானங்கள் காலியாக இருக்க, அதற்கு மேற்பட்டு விண்ணப்பங்கள் தருகிறார்கள் என்றால், அதை எவ்வாறு கொடுப்பது ?

[13th December 1971

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

*மிஸ்டர் சேர்மன் :* உரக்க புரியும்படி சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார் :** குறிப்பிட்ட அளவு ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றன. ஆனால் அதற்கு மேற்பட்டு அப்ளிகேஷன்கள் ஆங்கிலம் வேண்டுமென்று கேட்டால், அதிலே எப்படிக் கொடுப்பது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** குறிப்பிட்ட இடங்களுக்கு அதிகமாக விண்ணப்பங்கள் இருந்தால், தரம் உள்ளவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அரசினர் கல்லூரிகளைப் பொருத்த வரையிலேயும், மார்க் அடிப்படையிலே கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதை போர்டிலே போட வேண்டுமென்றும் இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மொத்த மார்க் அடிப்படையிலேயா, தமிழிலே வாங்குகிற மார்க் அடிப்படையிலேயா அல்லது ஆங்கிலத்திலே வாங்குகிற மார்க் அடிப்படையிலேயா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மொத்த மார்க் அடிப்படையில் தேர்ந்தெடுத்த பிறகு, ஆங்கிலப் பிரிவா என்று வரும்போது ஆங்கிலத்திலே இருக்கிற மார்க்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the speech of the Hon. the Minister for Education, I am not pressing the Resolution.

The Resolution was by leave, withdrawn.

## (2) INSTALLATION OF RAJA RAJA CHOLA STATUE AT THE BRAHADEESWARAR TEMPLE—*cont.*

* **திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இராஜ ராஜ சோழனின் சிலையை தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்குள் நிறுவுவதற்காக மத்திய அரசினருக்கு பரிந்துரை செய்யும் இந்தத் தீர்மானத்தை நான் முன் மொழிவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தீவிரமான போர் நடந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில்—அதுவும் நம்முடைய வீரர்கள் மிகச் சிறந்த முறையிலே பாகிஸ்தானுடைய பல பகுதிகளை பிடித்தும், பங்களாதேஷின் பல பகுதிகளை கைவசப் படுத்தியும் திறமையான முறையில் அவர்கள் நாட்டிற்காக பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது நம் நாட்டின்—குறிப்பாக தமிழகத்தின் மாவீரனும், தமிழகத்திற்கு பெரிய வெற்றிகளைத் தேடித் தந்தவனுமான இராஜ ராஜ சோழனுடைய சிலையை தஞ்சை பெரிய கோயிலுக்குள் நிறுவுவதற்காக வந்துள்ள தீர்மானம் இந்த சமயத்திலே வந்தது மிகவும் நல்லது என்று நான் நினைக்கிறேன். இராஜ ராஜ சோழனின் சரித்திரத்தில் அவன் ஈழ நாட்டிலே பெரிய வெற்றிகளை கண்டதும், முன்னீர் பழம்தீவுகள் பன்னீராயிரத்தை வென்றதும் அவனுடைய வீரத்துக்கு



13th December 1971]

[திரு. ஜி. சுவாமிநாதன்]

சான்றாக அமைந்திருக்கின்றன. இராஜ ராஜ சோழன் நாட்டிற்கு பெரிய வெற்றியை தேடித் தந்த மன்னன் என்பது மட்டுமல்லாமல் இப்பொழுதெல்லாம் நம்முடைய கோயில்களிலே தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டுமென்று நமது அற நிலைய அமைச்சரும் இந்த அமைச்சரவையும் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே மறைந்திருந்த திருமுறைகளைத் தேடி தில்லை கோவிலில் கரையான் பிடித்திருந்த அவற்றைக் கொண்டு வந்து தஞ்சை பெரிய கோயிலில் 48 ஓதுவார்களை அமர்த்தி, (நண்பர் திரு. தி. க. சண்முகம் அவர்களுக்கு எத்தனை ஓதுவார்கள் என்பது இன்னும் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.) 24 மணி நேரமும் அவற்றை ஓதச் செய்த பெருமை இராஜ ராஜ சோழனுக்கு உண்டு. தமிழ் அர்ச்சனையை நமது கோயில்களிலே முதன் முதலாக துவங்கியவன் என்ற முறையிலும் அவனை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதுவும் இந்த நாட்டிலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே இப்பொழுதுள்ள, 'ரெவின்யூ முறை' என்று சொல்லப்படுகிற மாவட்டத்தை, தாலுகா அடிப்படையிலான முறையை சிறப்பாக அமைத்து நடத்திய பெருமையும் இராஜ ராஜ சோழனுக்குண்டு. அப்படிப்பட்ட சிறப்பு மிக்க தமிழ் மன்னன் சிலையை அவன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலுக்குள்ளே வைக்கும் பொருட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய உறுப்பினர் திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் ஒரு குழு தஞ்சையிலே அமைக்கப்பட்டது. அதுவும் இந்த அமைச்சரவையின் ஆதரவோடு குறிப்பாக முதலமைச்சருடைய ஆதரவோடு அந்த கமிட்டி அமைக்கப்பட்டு, அதற்காக ரூபாய் 15,000 அளவில் வசூல் செய்யப்பட்டு ஒரு சிலை எடுக்கப்பட்டது. அந்தச் சிலையை எப்படி அமைக்க வேண்டும் என்ற காரண காரியங்கள் ஆராயப்பட்டு அப்பொழுது இராஜ ராஜ சோழன் மீசை உள்ளவராக இருந்தாரா, மீசை இல்லாதவராக இருந்தாரா, தஞ்சை கோயிலுக்குள்ளே இருக்கிற சித்திரத்தின் உருவ தோற்றத்திலேயே செய்யலாமா என்று யோசனைகள் எல்லாம் செய்யப்பட்டு சிலை வடிக்கப்பட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த சமயம் வந்திருந்த பொழுது உருவாக்கப்பட்டுக்கொண்டிருந்த சிலை அவ்வளவு நல்லதாக இல்லை. அது ஓரளவுக்கு பெண்மைத் தன்மை கொண்டதாக இருக்கிறது. எனவே அது ஆண்மை தன்மை கொண்டதாக மீசை வைத்து. கையிலே வாளும் கொடுத்து அந்தச் சிலையைச் செய்யுங்கள் என்றார்கள். அந்த விதத்திலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சிலை செய்யப்பட்டு கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்னால் அதைக் கோயிலுக்குள்ளே வைக்கவேண்டும் என்று இந்த அவையிலே பேசப்பட்டு, கல்வி அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லி, மத்திய அரசாங்கத்தினருக்கு எழுதினார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் 6 10 p.m.
இதற்காக மத்திய அரசுக்கு கடிதம் எழுதியும், பிரதம மந்திரியிடம்

[13th December 1971

[திரு. ஜி. சுவாமிநாதன்]

இது பற்றி பேசியும் விரைவிலேயே இந்தச் சிலையை கோயிலுக்குள்ளே அமைக்கவிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கும் மேலாக ராஜராஜன் சிலையை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்குள்ளே குழு தேர்ந்தெடுத்த இடத்திலே வைக்கப்போகிறோம் என்றும் சொன்னார்கள். ஆனால் அந்தச் சிலை, கோயிலின் வாயிலுக்குப் பக்கத்திலே துணியாலும், சாக்காலும் சுற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது கடந்த 1½ ஆண்டுகாலமாக. அது மழையாலும் பனியாலும் பாதிக்கப்படுகிறதே என்று மக்கள் எல்லாம் தொல் பொருள் ஆராய்ச்சி துறையினரைக் கேட்டதற்குப் பிறகு ஒரு கொட்டகை போடப்பட்டிருக்கிறது. நான் முன்பு இந்த அவையிலே பேசும் பொழுது சொன்னேன், இந்தச் சிலையானது "வாயிற் காப்போன்" போல் அங்கே நின்று கொண்டிருக்கிறது என்று. எனவே ராஜராஜன் சிலையை கோயிலுக்குள்ளே அதற்குரிய இடத்திலே வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்கு மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் சம்மதம் அளிக்கவில்லை என்று அறிகிறோம். காரணம், அந்த கோயிலின் அழகு கெட்டுவிடும், அதனுடைய புராதன தன்மை கெட்டுவிடும் என்று சொல்லுகிறார்களாம் அவர்கள். இதே தொல் பொருள் இலாகாவினர் அந்தக் கோயிலுக்குள்ளே ஒரு பக்கத்தில் மிருகங்களுக்கான மருத்துவ மனையை அனுமதித்து அதாவது "ஆர்ட்டிபிஷியல் இன்செமினேஷன் சென்ட்டர்" என்பதை வைத்து கோயிலுக்குள்ளே சுவாமியை வணங்குவதற்காக செல்லுபவர்கள் எல்லாம் இந்த முறைகளையும் பார்த்துக் கொண்டு பிறகு ஆண்டவனை தரிசனம் செய்யுங்கள் என்ற நிலைமையினை 15, 20 ஆண்டுகளாக வைத்திருக்கிறார்கள். இப்படி நடத்திக் கொண்டிருப்பவர்கள், கோயிலுக்குள்ளே இருக்கும் ஒரு நந்தவனத்திலாவது இந்தச் சிலையை வைக்க அனுமதிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. அது மட்டுமல்லாமல், இராஜ ராஜ சோழனின் சிலையை முதன் முதலாக நாம் அங்கே வைக்கப் போவதுமில்லை. அவனுடைய சிலை முதலிலேயே கோயில் கட்டும் பொழுதே அங்கே இருந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இருக்கும் சிலை ராஜேந்திர மன்னனுடைய சிலை என்று சொல்லுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இந்த தஞ்சை பெரிய கோயிலுக்காக இராஜ ராஜ சோழன் கொடுத்திருக்கிறான்; அதுவும் அவன் ஈழத்திலே பெரும் வெற்றி கண்ட பொழுது. 1,25,000 ஏக்கர் நிலங்களை ஈழத்திலேயே இந்த கோயிலுக்காக எழுதி வைத்திருந்தான் என்பதை திரு. சா. கணேசன் அவர்கள் கூட நேற்று என்னிடம் சொன்னார். ஆனால் கோயிலின் சொத்துக்களை எல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு போனவர்கள் அந்த கோயிலுக்குள்ளே இருந்த இராஜராஜ சோழனின் சிலையையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இது மட்டுமன்றி பிரகதீஸ்வரர் கோயிலின் நிலை இன்றைய தினம் மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற கோயில்களிலே தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் சிறந்த கோயில் என்று கேள்விபட்டு,



13th December 1971]

[திரு. ஜி. சுவாமிநாதன்]

வெளி நாடுகளிலே இருப்பவர்கள் எல்லாம் வந்து அதை பார்க்கும் நிலை இருக்கிறது. அது மிகச் சிறந்த கோயில் என்று டோக்கியோவில் கூட பேச நான் கேட்டேன். ஒவ்வொரு நாளும் வெளிநாட்டவர் 20, 30 பேர் என்ற அளவில் அந்த கோயிலை பார்க்க வருகிறார்கள். அப்படி வருபவர்களுக்கு தஞ்சையில் தங்குவதற்கு இடமில்லை, செல்வதற்கு ஊர்திகள் இல்லை என்றாலும் கூட நடந்து கஷ்டப்பட்டு அங்கே வந்து பார்த்தால், கோயிலிலே காணப்படும் நிலைமை அவர்களுக்கே துயரத்தை அளிப்பதாக இருக்கிறது. அவ்வளவு மோசமான நிலைமையிலே வைக்கப்பட்டிருக்கிறது. மரம், செடி போன்றவைகள் எல்லாம் கோயிலுக்குள்ளேயே வளர விடும் நிலைமையும் இருக்கிறது. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கூட இங்கே சொன்னார்கள் அந்த கோயிலின் சீர்கேடான நிலைமையைப் பற்றி மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்ன போது, அது நல்ல நிலையிலேயே இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள் என்று. ஆனால், நாம் அப்படி கருத முடியவில்லை. அத்தோடு மத்திய அரசு அந்த கோயிலை பழுதுபார்க்க ஐந்தாண்டுகளுக்கு கொடுக்கவிருக்கும் பணம் கிட்டத்தட்ட 2½ இலட்சம் ரூபாய் என்கிறார்கள். ஆனால் அங்கிருந்து கோயிலுக்கு இதுவரை ஆண்டுக்குக் கிடைப்பது 25,000 ரூபாய் தான் என்றும், எனவே இதைவிட நல்ல நிலைமையில் அதை வைக்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவேதான் நமது கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாம் இந்தக் கோயிலை எடுத்துக்கொண்டால், யுனெஸ்கோ உதவியுடன் அதை நல்ல முறையில் பராமறிக்கலாம் என்று. அந்த நிலைமையிலே நாம் செய்யலாம் என்றாலும் அதை எடுத்துக் கொள்ளும் உரிமையை நமக்குக் கொடுக்க மத்திய அரசு விரும்பவில்லை. நாம் பல பிரச்சினைகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியும் அவற்றை அவர்கள் இதுவரையில் கவனிக்கவில்லை. அதை எல்லாம் இங்கே ஒவ்வொன்றாகச் சொல்ல நான் விரும்பவில்லை என்றாலும், ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ராஜமன்னார் குழு அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பினோம், அதைப் பரிசீலனை கூட செய்யமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். காவேரி தண்ணீர் பிரச்சினைப் பற்றிச் சொன்னோம். மைசூர் அரசு கட்டுகிற அணைகளுக்கு இடைக்காலத் தடையிட முடியாது என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வலியுறுத்த வேண்டிய அவசியம் இருந்தது என்றாலும் கூட, இராஜ ராஜ சோழனின் சிலையை தஞ்சை பெரிய கோயிலுக்குள்ளே நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை மிகச் சாதாரணமான ஒன்றாகும். மிகச் சிறிய காரியமும் கூட, மத்திய அரசே இதைச் செய்யலாம். இதைக் கூட பிடிவாதமாக அவர்கள் மறுப்பது ஏன் என்று நமக்குப் புரியவில்லை. எனவே, இராஜ ராஜன் சிலையை, ஏதாவது ஒரு கால கட்டத்திற்குள்ளே, 1½ ஆண்டு காலமாக கேட்பாறற்று கிடக்கும் நிலையை மீண்டும் வளர்த்தாமல், அதாவது 3 அல்லது 6 மாதத்திற்குள் பெரிய கோயிலுக்குள்ளே வைத்து, இராஜ ராஜ

[13th December 1971

[திரு. இ. க. சண்முகம்]

வகையிலும் இழுக்கு ஏற்படாது என்பதனை நாம் நன்றாக அறிவோம். அவ்வாறு ஏற்பட அவர்கள் அனுமதிக்கமாட்டார் என்பது உறுதி. நான் சார்ந்துள்ள தமிழரசுக் கழகம். நாட்டுப் பற்றோடும் மொழிப் பற்றோடும், தெய்வப்பற்றினையும் போற்றிக் காத்து வரும் கழகமாகும். இந்த மூன்று பற்றுக்களும் தமிழர்களுக்குத் தேவையென்பதற்கு முன்னோடியாக நின்று வாழ்ந்து காட்டியவர் இராஜராஜ சோழப் பெருமன்னன். எனவே இத் தீர்மானத்தைக் கொள்கையளவிலே ஏற்றுக்கொள்வது மட்டும் போதாது. ஒருகால வரம்பு வைத்து அதற்குள் தமது முடிவினை அறிவிக்குமாறு மத்திய அரசினை வற்புறுத்த வேண்டும். உரிய நேரத்திற்குள் நம் நேர்மையான வேண்டுகோளுக்குப் பதில் கிடைக்கவில்லையானால், தமிழக அரசு தாமே பொறுப்பேற்று, தமிழக முதல்வர், தமிழ்வேல், டாக்டர் கலைஞர் அவர்களின் தங்கக் கையாலேயே இராஜராஜ சோழப் பெருமன்னனின் திருவுருவச்சிலைக்குத் திறப்பு விழா நடத்த வேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

முன்பொருமுறை தமிழக அரசே பேரவையிலும் மேலவையிலும் இதுபற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னதாக எனக்கு நினைவிருக்கிறது. எனவே அரசின் அந்த எண்ணத்தைத் தூண்டுவது தான் இத்தீர்மானமாகும். இத்தீர்மானத்தினை நிறைவேற்றி அரசு இந்த அவைக்கு அளித்த வாக்குறுதியினை பெருமைக்குரிய வகையில் நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு வேண்டிக் கொண்டு தீர்மானத்தை வழிமொழிந்து அமைகிறேன். **வணக்கம்.**

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலுள்ள விஷயம் தமிழ் நாட்டு மக்களின் உணர்ச்சி வசப்பட்ட ஒரு நிலைமையாகப் போய்விடுமோ என்று அச்சமுறுகிறேன். ஏனெனில் இது பல முறை பல இடங்களிலும் பேசப்பட்டு முன்னொரு முறை முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு வேகமாக இந்த விஷயத்தில் தன்னுடைய அபிப்ராயம் தெரிவித்தார் என்பது நமக்கெல்லாம் தெரியும். பொதுவாக நான் விரும்புகிறேன்—ஒரு மாநில முதலமைச்சர் எழுதும் கடிதங்கள், அமைச்சரவை மத்திய அரசுக்கு எழுதும் கடிதங்கள் உரிய கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பது கண்டு மிகவும் வருந்துகிறேன். இம்மாதிரியே போய்க்கொண்டிருந்தால் இது நாட்டுக்கு நல்லதல்ல. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் திருமலைநாயக்கருக்குச் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அதே மாதிரி கூட அல்ல. அதை விட மிகவும் மேன்மையான முறையில், உலகத்திலே எங்கும் கண்டிராத முறையில் ஒரு சித்திர வேலைப்பாடு மிகுந்த தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலின் கோபுரத்தின் அமைப்பு எல்லோராலும் வேறு எங்கும் உலகத்தில் பார்க்க முடியாத அம்சமாகக் கட்டப்பட்ட சின்னம். அத்துடன் ராஜராஜ சோழனின் சரித்திரம் தமிழ் நாட்டுக்கு ஒரு தனி மதிப்பைக் கொடுக்கக் கூடிய சரித்திரம். அப்பேர்ப்பட்ட ராஜராஜ



13th December 1971]

[திரு. கே. ராஜாராம்]

சோழனின் பெருமையை இந்த அவையின் உறுப்பினரும் நமது சகாவுமான திரு. தி. க. சண்முகம் அவர்கள் நாடகமாக நடத்தி, அதைப் பார்க்கும்போது, மெய் மறந்திருந்தவர்கள் நாம். அம்மாதிரி ஒரு பெரிய சரித்திர சம்பந்தமான ஒரு புருஷனின் சிலையை அவன் கட்டிய கோயிலில் வைத்து நாம் மரியாதை செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமை. அந்தக் கடமை உணர்ச்சியைத்தான் தெரிவித்துக்கொள்கிறோமே ஒழிய, இது நம் பெருமைக்குரிய விஷயமான ஒரு காரியம் மட்டுமல்ல. அப்பேர்ப்பட்ட ராஜராஜனின் சிலை அவர்கள் கட்டிய கோயிலுக்குள் வைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினால்—அதே கோயிலுக்குள் மிருக வைத்தியசாலையும், மாட்டு வைத்தியசாலையும், செயற்கை முறை கருத்தரிக்கும் காரியாலயமும் வைக்க இடம் கொடுத்த—மத்திய அரசு ராஜராஜனின் சிலையை அங்கே வைக்க சம்மதம் தராமலிருப்பதென்பதையும் அதற்கு ஆட்சேபம் தெரிவிப்பதென்பதையும் நம்மாலே சகித்துக்கொள்ள முடியவில்லை. இந்த உணர்ச்சியை தெரியப்படுத்தி முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்குத் தனியாகக் கடிதம் எழுத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரிக் காரியங்களில் குறுக்கிடுவது தகாத காரியம். அப்படியிருந்தால் தொல்பொருள் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட இலாகா கண்காணிப்பில் இருந்து எடுக்கப்பட்டு, இல்லை, விலக்களித்து அதை நம்மிடத்தில் ஒப்படைக்கட்டும். நம்முடைய கோயிலை அவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அது வேண்டாம். அதை விட்டு விலக்களிக்கட்டும். நாமே பார்த்துக்கொள்வோம் என்று கூட இம் மாநில அரசாங்கம் சொல்ல வேண்டும். அந்த ராஜராஜ சோழனின் சிலைக்கு உரிய மரியாதை கொடுத்து அதை எங்கே வைக்க வேண்டுமோ அங்கு வைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்குத் தனியாக தாமதமின்றி ஒரு 'டி.ஓ' கடிதம் எழுத ஏற்பாடு செய்ய வேண்டும். மற்றபடி காவேரிப் பிரச்சினைபற்றியும் வேறு பிரச்சினைகள் பற்றியும் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள். இப்போது அதையெல்லாம் பேசலாம், உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்களாக ஆகிவிடும். இந்த நேரம் நாம் ஒற்றுமையாக இருந்து ஒரு பெரிய தேசத்தின் ஆபத்து காரணமான விரோதியுடன் போராடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அம்மாதிரி உணர்ச்சி வசப்பட்டு காரியங்களைத் தூண்டக்கூடாது என்ற எண்ணத்தில்தான் நானும் மற்றவர்களும் எண்ணுகிறோம். முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் எழுதி சீக்கிரம் இதற்கு அனுமதி பெறுவார்கள் என்று நம்புகிறேன். இது மிக நல்ல காரியம். காரியத்தை வளர விட்டு விட்டோம். இப்போது சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தச் சபையின் முழு ஆதரவும் இந்தத் தீர்மானத்துக்கு உண்டு. தமிழர்கள் 4 கோடி பேர் பின்னால் இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எழுத வேண்டும் என்று கோரி அமருகிறேன். வணக்கம்.

[13th December 1971

[திரு. ஜி. சுவாமிநாதன்]

சோழ மன்னனைப் பெருமைப்படுத்தும் வகையில் தமிழினத்தையும் பெருமைப்படுத்தும் வகையில் மத்திய அரசை வற்புறுத்துமாறு இம்மன்றம் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

(Deputy Chairman in the Chair)

* திரு. தி. க. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தினை வழிமொழிந்து பேசுவதிலே நான் மிகவும் பெருமையடைகிறேன். மா மன்னன் இராஜ ராஜ சோழன் வரலாற்றோடு என்னுடைய நாடகக் கலைப் பணியின் வரலாறும் பிரிக்க முடியாதவாறு பிணைந்து கிடக்கிறது என்பது நாடறிந்த ஒன்றாகும். எனவே, இராஜ ராஜ சோழனின் சிலை சம்பந்தப்பட்ட பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட இந்த தீர்மானத்தை அந்த மாமன்னனுடைய பெரும் புகழினைத் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் பரப்பிய ஒரு கலைத் தொண்டன் என்ற பெருமிதத்தோடு வரவேற்கிறேன்.

இராஜ ராஜ சோழப் பெரு மன்னனின் உருவச் சிலை ஆலயத்தின் நுழை வாயிலில் இருப்பதால், அந்தப் பெரு மன்னனின் மகத்தான பெருமைக்கோ புகழுக்கோ குறையொன்றும் நேர்ந்துவிடாதென்பதை நாம் அனைவரும் உணர்வோம் என்றாலும், அச்சிலையினை "ஆலயத்திற்குள்ளே வைக்கக் கூடாது" என்று மத்திய அரசு ஆணையிட்டிருப்பது தமிழினத்தாரின் உள்ளத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது என்பதனை நான் இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இது தமிழினத்தின் தன்மானப் பிரச்சினை ஆகிவிடுகிறது.

தமிழ் நாட்டை ஆண்ட ஆந்திர மன்னர்களின் உருவச்சிலைகள் தமிழகத்தின் ஆலயங்களுக்குள்ளே இருப்பதைப் பார்க்கின்றோம். அவ்வாறிருக்கும்போது, தமிழ் நாட்டின் சொந்த மகனான சோழப் பெருமன்னன் இராஜ ராஜ சோழனின் திருவுருவச் சிலை அவனாலேயே உருவாக்கப்பட்ட ஆலயத்திற்குள்ளே இருக்கக் கூடாதென்பது உண்மையிலேயே நம்மால் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. இப்படியொரு அவலநிலை வடபுலத்து இந்து மாமன்னர்களின் உருவச்சிலைகளுக்கு ஏற்பட்டிருக்குமானால், அங்குள்ள உணர்ச்சி மிகுந்த மக்கள் எவ்வாறு நடந்துகொண்டிருப்பார்கள் என்பதைச் சிறிது கற்பனை செய்து பார்க்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். அப்பொழுதுதான் எவ்வளவு உணர்ச்சிகளை இந்தப் பிரச்னையில் என் போன்ற தமிழ் மக்கள், கலையுள்ளம் கொண்ட பெருமக்கள் அடக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும். ஒன்று மட்டும் சொல்வேன். தமிழ் மக்கள் மிகுந்த பொறுமைசாலிகள்தாம். ஆனால் சொரணை யற்றவர்கள் அல்லர். தஞ்சைப் பெருவுடையார் கோயில்,



13th December 1971]

[திரு. தி. க. சண்முகம்]

இராஜேந்திர சோழனால் உருவாக்கப் பெற்ற கங்கைகொண்ட சோழபுரம் கோயில் இவையெல்லாம் பழைய சின்னங்களைப் பாதுகாத்து வரும் துறையின் பொறுப்பாக மத்திய அரசின் நிர்வாகத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மெய்தான். ஆனால், அதே நேரத்தில் நாள்தோறும் மக்கள் ஏற்று வழிபட்டு வரும் ஆலயமாகவும் அது விளங்கி வருகிறது என்பதனை மறந்துவிடக்கூடாது. தமிழர்கள் செய்த நற்பேற்றின் காரணமாக, தஞ்சைப் பெரிய கோயில் வெறும் நினைவுச்சின்னமாக மட்டுமே இருந்துவிடவில்லை. கடவுள் வழிபாட்டுத் தலமாகவும் அது விளங்கி வருகிறது என்பதனை மத்திய அரசுக்கு நினைவுபடுத்துவது நம் கடமையாகும். ஆண்டவனை வழிபடும் முன்பு அவர் அடியார்களை வழிபடுவது நம் வழக்கம். இராஜராஜசோழப் பெருமன்னன் தேசத்தின் மன்னனாகவும் இருந்தான். தெய்வத் தொண்டனாகவும் திகழ்ந்தான். அவன் காலத்திலே சைவசமயம் மறுவாழ்வு பெற்றது. தழைத்தோங்கியது. தமிழ் மொழியும் மறுமலர்ச்சி பெற்றது. நானறிந்தவரையில் வட்டெழுத்து முறையினை மாற்றி, இன்றைக்கு நாம் கையாண்டு வரும் நடைமுறையிலிருந்து வரும் தமிழ்மொழியின் வரிவடிவ முறையினை உருவாக்கியதே இராஜராஜசோழ மன்னன் தான் என்பதை வரலாறு கூறுகிறது. சாம்ராஜ்யம் அமைக்கும் தரமும், ஆண்மையும், ஆற்றலும் தமிழருக்கு உண்டு என்பதை அம் மாமன்னன் உலகுக்கு உணர்த்தினான்.

இவ்வளவு பெருமைகளுக்குரிய மன்னனுடைய சிலையினை, செந்தமிழ் மறவனுடைய திருவுருவச்சிலையினை நம் தீந்தமிழ்நாட்டுக் கோயிலுக்குள்ளே வைக்கக் கூடாதென்று சொல்ல, இதைப் பற்றி எதுவுமே அறியாத டில்லியில் உள்ள மற்றவர்களுக்கு உரிமையோ, நீதியோ இருப்பதாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழக அரசு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் கொண்டு வந்துள்ள இத்தீர்மானத்தினை இப்போது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளுமென்றே நான் உறுதியாக நம்புகிறேன். தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில் ஆகியவற்றின் நிர்வாகத்தைத் தமிழக அரசிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று கூட நம் அரசு கேட்டிருப்பதாக அறிகிறேன். நண்பர் திரு. ஜி சுவாமிநாதன் அவர்கள் சோழநாட்டைச் சேர்ந்தவர். மாவட்டத்தின் தலைநகரான தஞ்சையிலேயே வாழ்ந்து வருபவர். எனவே இந்தப் பிரச்னையில் அவருடைய உணர்ச்சியினை நான் வரவேற்கிறேன்.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் 5-20 p.m.
சோழவளநாட்டைச் சேர்ந்த பெருமகனாவார். தஞ்சைத் தொகுதியில் பிரதிநிதியாகக் கூட ஒரு முறை சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர். அப்படிப்பட்ட பெருமகனார் அவர்கள் முதல்வராக இருக்கும் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு, சோழசாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்திக்கு எந்த

[13th December 1971

[திரு. மு. கருணாநிதி]

நிறைவேறாமல் செய்து விடுவார்கள், மத்திய சர்க்காரிடத்தில் இருப்பதுதான் நியாயம் என்று தலையங்கம் எழுதினார்கள். ஆனால் இந்த சர்க்கார் எந்தக் கோயில்களிலும் பூஜை, நைவேத்தியங்களை நிறுத்திவிடவில்லை. சொல்லப்போனால் இந்த சர்க்கார் ஓடாத தேர்களை ஓட்டிக்கொண்டிருக்கிற சர்க்காராக இருக்கிறது என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இதைப் பாராட்டி அவர்கள் எழுதாவிட்டாலும், வரவிருக்கின்ற ஒன்றைத் தடுப்பதற்குத் தயாராக இருந்தார்கள். நம்முடைய உரிமைகளை இப்படிக் கொடுக்காமல் தடுப்பது மத்திய அரசு கூட அல்ல. கொடுக்கக் கூடாது என்று தடுத்துக் கொண்டு நம்மிடத்தில் பல பேர் இருக்கிறார்கள். இதைவிட வேறு உதாரணம் தேவையில்லையென்று கருதுகிறேன். ராஜராஜ சோழன் சிலையை அங்கே வைக்க வேண்டுமென்று சொன்னபோது, மாநில உரிமைகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியும். சிலையைக் கூட நம்மால் வைக்க முடியவில்லையென்று எதிர்க் கட்சித் தலைவர் அங்கலாய்த்துக் கொண்டார்கள். அதைப் போல அரசின் சார்பில் முதல்வர் என்ற முறையில் கருத்தை ஒரு முறை குறிப்பிட்டபோது, ஒரு வாரப் பத்திரிகையில், மாநில சுயாட்சி பெரிது என்று எண்ணிக்கொண்டிருந்தோம். ராஜராஜ சோழன் சிலையை வைப்பது தானா மாநில சுயாட்சி என்று எழுதி, ராஜராஜசோழன் சிலையைக் கேவலப்படுத்த, மாநில சுயாட்சியைக் கேவலப்படுத்த அதற்கு ருசியாக இருந்தது. தமிழர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இப்படி எழுதினார்கள். இப்படிப்பட்ட உரிமைகளுக்கு, சுதந்திரங்களுக்கு, அதிகாரங்களுக்கு இன்றைக்குத் தடையாக இருப்பவர்கள் மத்திய சர்க்கார் என்று கூறி வருத்தப்பட்டுக்கொள்வதில் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை. நமக்கு எதிரிகள் நம்மிடத்தில் நமக்குத் தெரியாமல் நம்மோடு சேர்ந்தே இருக்கிறார்கள். வெளிப்படையாகவே வருகிறார்கள். ராஜராஜ சோழன் சிலை வைப்பது சாதாரணமான காரியம் என்றெல்லாம் இன்றைக்கு எழுதுகிறார்கள். நாம் சிலை வைத்தால்தான் என்ன, இவ்வளவு தூரம் பிரச்னையான பிறகு எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொண்ட பிறகு வேண்டுமானால் சிலை வைத்த பிறகு, மதிப்பார்கள். ஏற்கெனவே வைக்கப் பட்டிருந்தால், இது சொத்தை. சோடை என்று எழுதித் தள்ளியிருப்பார்கள். ராஜராஜ சோழன் அருமை பெருமைகளை, இந்தச் சிலை வைப்பதற்காக அரசு கட்சி சார்பற்று எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டுவதற்கு தமிழ் நாட்டில் யாராவது இருக்கிறார்களா என்றால், இல்லை. அந்த அளவிற்குக் குறுகிய மனப்பான்மையில் வளர்ந்துகொண்டிருக்கிறோம். சிலப் பதிகாரம் தீட்டிய. சேர நாட்டினுடைய மன்னனாகத் தகுதி படைத்தவர் என்று நிமித்திகனால் பதவி துறந்த இளங்கோவடிகளுக்கு சிலையைக் கடற்கரைச் சாலையில் வைத்தோம். அதைச் சரியாகக்கூடப் பார்க்காமல் புகைப்படத்தைப் பார்த்து இளங்கோ



13th December 1971]

[திரு. மு. கருணாநிதி]

வடிகள் கையில் வாள் இருக்கலாமா என்று எழுதியது, அந்தப் பத்திரிகை. நம்முடைய துரதிருஷ்டம் அமெரிக்காவிற்கும் போய் கொண்டிருக்கிறது. அங்கே போனால் அமெரிக்காவில் இருக்கிற தமிழர்கள் என்னைக் கேட்கிறார்கள். இளங்கோவடிகள் கையில் எப்படி வாள் கொடுத்தீர்கள் என்று கேட்கிறார்கள் அவர்கள் நேராகப் பார்க்காமல் வாள், வாள் என்று சொல்கிறார்கள். இளங்கோவடிகள் கையில் வாள் இல்லை. வாள் கீழே போடப்பட்டிருக்கிறது. புகைப்படம் எடுத்தவர்கள் வேறு 5-40 p.m.
கோணத்தில் எடுத்த காரணத்தினால் வாளைக் கை தொட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது: வாள் கையில் இருக்கிறதா இல்லையா என்று நேரில் பார்த்தால், தெளிவாகத் தெரியும் என்று சொன்னதற்குப் பிறகு அமெரிக்காவில் இருக்கிற தமிழர்கள் சமாதானமானார்கள். இப்படி வாரப் பத்திரிகையில் எழுதப்பட்டதும் தினசரிப் பத்திரிகையில் அதைப்பற்றித் தொடர்ந்து எழுதிய அந்தப் பத்திரிகை அங்கிருந்த எனக்கு அனுப்பப்பட்டது, அதைப் பார்த்து நான் திடுக்கிட்டேன். இளங்கோவடிகளுக்கு வாள் கொடுக்கலாமா என்று இருந்தது. பத்திரிகைக்கு எவ்வளவோ ஆட்கள் இருக்கிறார்கள். அவர்களால் நிருபர்களைக் கொஞ்சம் போய்ப் பார்த்துவிட்டு வரச் சொல்லி வாள் இருக்கிறதா இல்லையா என்று பார்த்துவிட்டு எழுதுவதற்குக்கூட முடியவில்லை. அவ்வளவு அவசரம். இந்த அரசைத் தாக்கவேண்டுமென்பதில் அவ்வளவு ஆர்வமாக அவசரமாக இருக்கிறார்கள். உண்மையைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கு, தெரிந்துகொள்வதற்குக் கவலைப்படுவதில்லை. சிலை வைக்கின்ற நேரத்தில் இந்த நிலைமை இன்றைக்குக் கவலைக் குரியதாக ஆகிவிட்டது. முதலில் நாம் அந்த மன மயக்கத் திலிருந்து விடுபட்டாக வேண்டும். வெளி நாடுகளில் பல ஊர்கள் சிலை ஊர்களாக இருக்கின்றன. இத்தாலிக்கு, ரோமாபுரிக்குச் சென்றால், திரும்பியப் பக்கம் எல்லாம் சிலைகளைப் பார்க்கலாம். வாஷிங்டன் சென்றால், திரும்பிய பக்கம் எல்லாம் சிலைகளைப் பார்க்கலாம். வாஷிங்டன் நகரத்தில் ஒரு பெரிய தூணை வாஷிங்டன் நினைவாக நிறுத்தியிருக்கிறார்கள். அதற்கு முன்னால் அமெரிக்க நாட்டில் நீக்ரோக்களின் அடிமை விடுதலைக்காகப் போராடிய ஆப்ரஹாம் லிங்கனின் மிகப் பிரம்மாண்டமான சிலையை நிறுவியிருக்கிறார்கள். அதற்கு முன்னால் கென்னடியின் கல்லறை இருக்கிறது. கென்னடியின் கல்லறை, அதற்கு முன்னால் ஆப்ரஹாம் லிங்கனின் சிலை, அதற்கு முன்னால் வாஷிங்டனுடைய நினைவுத் தூண். ஜெஃபர்ஸனுடைய நினைவு மண்டபமும் அங்கே இருக்கிறது. இவ்வளவும் நேராக இருக்கின்றன. இங்கே இருப்பவர்களைப் போன்ற ஒரு பத்திரிக்கைக்காரர் வாஷிங்டனில் இருந்தால் என்ன எழுதியிருப்பார்? கென்னடியின் சமாதி கோயிலுக்கு முன்னாலே நந்திபோல ஆப்ரஹாம் லிங்கனை உட்கார வைத்திருக்கிறார்கள். அதற்கு முன்னால் துவஜஸ்தம்பத்தைப் போல வாஷிங்டனின் நினைவுத் தூண் இருக்கிறது என்று எழுதி

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தையொட்டி, தீர்மானத்தை முன்மொழிந்த நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும், கலைஞர் திரு. தி. க. சண்முகம் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் எதிர்க் கட்சித் தலைவரவர்களும் சொன்ன கருத்துக்கள் எதற்கும் இந்த அரசு மறுப்புக் கருததுக்களை எடுத்துச் சொல்கிற நிலையில் இல்லையென்பதை மன்றத்தில் இருக்கிற அனைவரும் நன்றாக அறிவார்கள். ராஜராஜ சோழன் சிலையை எப்போது வைப்பது என்பதுதான் இப்போது பிரச்சினையே தவிர, ஏன் வைப்பது என்பது பிரச்சினையல்ல. இந்தச் சிலை வைக்க வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினை எதுவும் எழவில்லை. பொதுவாக இந்த அரசு தமிழ் நாட்டினுடைய பெரும் வீரர்களுக்கும், தமிழ் சான்றோர்களுக்கும் இந்திய நாட்டினுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட பெரியவர்களுக்கும், தமிழ் வளர்த்த நல்லவர்களுக்கும், தமிழ் சமுதாயத்தை தட்டி எழுப்பிய பெரியவர்களுக்கும் சிலை வைக்க வேண்டும், அவர்களை காலா காலத்திற்கும் மக்கள் நினைவிலே வைத்துக் கொள்ளத் தக்க அளவிற்கு எதிர்காலச் சந்ததியினரும் அவர்களுடைய அரும் தொண்டு, அளவற்ற ஆற்றல், பொதுப் பணி, தமிழ்ப்பற்று, வீரம், விவேகம் இவைகளையெல்லாம் நினைவிலே கொண்டிட வேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு சிலைகளை அமைத்து வருவதை இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் நன்றாக அறிவார்கள். அப்படிச் சிலை வைப்பது சில நேரங்களில் வேறு சிலரால் கேலிக்குரியதாக ஆக்கப்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாமல், அந்தப் பணியை இன்றைய அரசு நல்ல முறையில் ஆதரித்து வருகிறது. அரசே இந்தச் சிலை வைக்கின்ற காரியங்களில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், அந்தப் பணியை ஆற்ற வருகின்ற பொதுநல நோக்கு படைத்தவர்கள், வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள் இவர்களையெல்லாம் ஆதரிப்பதன் மூலம் இந்தச் சிலைகள் தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்திட வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. ஆகவே இந்த வரிசையில் தமிழ் நாட்டினுடைய பழம்பெரும் மான மறவனும், கடல் கடந்தும் தமிழனுடைய வீரப் புகழைப் பாடியவனும், வெளி நாடுகளிலே தமிழக் கொடியைக் கம்பீரமாகப் பறக்க விட்ட பெருமைக்குரியவனும், தமிழர்களுடைய உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தவனுமான ராஜராஜ சோழன் சிலையை தஞ்சைப் பெரிய கோயிலிலே அமைப்பதற்கு நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் குறிப்பிட்டதைப் போல, குழு ஒன்று உருவாக்கப்பட்டு எப்படி அந்தச் சிலை அமைய வேண்டுமென்று அந்தக் குழுவால் யோசனைகள் எல்லாம் கூறப்பட்டு, நீண்ட நெடு நாட்கள் அந்தச் சிலை வடிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சிலையும் உருவான பிறகு அதை வைப்பதிலே கிட்டத்தட்ட இரண்டாண்டுக் காலம் இன்றைக்குத் தாமதமாகிவிட்டிருக்கிறது. இந்தத் தாமதம்கூட ஒரு வகையில் நல்லது என்று தான் நான் கருதுகிறேன். இல்லாவிட்டால், ராஜ



[திரு. மு. கருணாநிதி]

ராஜசோழன் வீரப் புகழை இந்த மாமன்றத்தில் இவ்வளவு நேரம் நாம் எடுத்துப் பேசியிருக்கமாட்டோம். அப்போதே சிலை வைக்கப்பட்டிருந்தால், இரண்டொரு பத்திரிகைகள் அவன் கையில் வாள் இருக்கிறது, முடி இங்கே இருக்கிறது, சிலை தேவை 5-30 p.m. தானா என்று எழுதப்பட்ட பத்திரிகை விமரிசனங்களோடு அந்த சிலை பற்றிய விவகாரம் முடிந்து போயிருக்கும். ஒரு வேளை மத்திய அரசு, ராஜராஜ சோழன் புகழை மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசி, அது இந்த மாமன்றத்தினுடைய நடவடிக்கைப் புத்தகத்தில் அச்சேறி, அதுவும் ஒரு காலத்தில் இந்த மாமன்றத்தினுடைய நூல் நிலையத்திலே ராஜராஜ சோழன் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துச் சொல்கிற ஒரு அத்தியாயமாக அமைய வேண்டுமென்ற பெரு நோக்கோடு மறைமுகமாக இந்தக் காரியத்தைச் செய்திருக்குமோ என்று நான் கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மிகுந்த வேதனையோடு குறிப்பிட்டார்கள். மாநிலங்களுடைய கோரிக்கைகளை மத்திய அரசு இப்படி அலட்சியப்படுத்துவது நல்லதல்ல என்று குறிப்பிட்டார்கள். மாநிலங்களுடைய கோரிக்கைகளை அலட்சியப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் மாநில உரிமைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் இன்றைக்குப் பேசிய இதே வேகத்தோடு இந்த நெருக்கடி நிலையெல்லாம் தீர்ந்து, இதே மன்றத்தில் மாநில உரிமைகளுக்காகத் தீர்மானம் நிறைவேற்றுகிற நேரத்தில், 4 கோடி மக்கள் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள் என்று இப்போது சொன்ன மாதிரி, இதே வார்த்தையை அப்போதும் அவர் சொல்வார் என்று நம்புகிறேன். அவர் இந்த மன்றத்திலிருந்து அந்த வார்த்தையைச் சொல்கிற அந்தப் பொன்னாளை நான் எதிர் பார்க்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை தமிழகத்தில் கட்சிச் சார்பற்ற நிலைமையில் மாநில உரிமைகளைப் பெறுவதற்கு ஏற்படுமானால், நிச்சயமாக ராஜராஜ சோழன் சிலை வைப்பதற்கு மாத்திரமில்லை. இன்னும் பல்வேறு உரிமைகளை நாம் பெற முடியும். தஞ்சாவூர் கோயிலை இந்தப் பழம் பொருள்களைப் பாதுகாக்கின்ற நிறுவனத்திலிருந்து விடுவித்து, தமிழ் நாடு அரசின் மேற்பார்வையில் வைக்கப்பட வேண்டுமென்று கேட்டபோது, மத்திய சர்க்கார் பதில் சொல்வதற்கு முன்பே நம் நாட்டுப் பத்திரிகைகள் சில முந்திக் கொண்டு இதை எதிர்த்துத் தலையங்கம் எழுதினார்கள். கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் எங்கோ ஒரு கூட்டத்தில் தப்பித் தவறிச் சொல்லிவிட்டார். மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் கோயில்களைத் தந்து விடவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் சொன்னதுதான் தாமதம், அவர் அப்படிக் குறிப்பிட்டவுடனே மத்திய சர்க்காரிடமிருந்து என்ன பதில் வருகிறது என்று காத்திராமல், பத்திரிகைகளெல்லாம், இந்த சர்க்காரிடத்தில் ஒப்படைக்காதீர்கள், இது திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இவர்கள் பூஜை, நைவேத்தியங்கள்

[திரு. மு. கருணாநிதி]

யிருப்பார்கள். நல்ல வேளை, அப்படிப்பட்ட குதர்க்கவாதிகள் அங்கே பத்திரிகையாசிரியர்களாக இல்லாத காரணத்தால், அவைகளையெல்லாம் எழுதவில்லை. அங்கே மூலைக்கு மூலை சிலை வைக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்திலும் அப்படித்தான். மேல் நாடுகளுக்குச் சென்றுவந்தவர்களுக்குத் தெரியும், சிலை வைப்பது என்பது அப்படி யொன்றும் அதிசயமானதல்ல. ஆகவேதான் நாம் இப்பொழுது ராஜராஜ சோழன் சிலையை வைக்க வேண்டுமென்று எண்ணுகிறபோதுகூட, அதுவும் கேலிக்குரிய ஒன்றாக ஆகிவிட்டிருக்கிற காரணத்தால், நாம் சிலை வைக்க வேண்டுமென்று கேட்கிற நேரத்தில், நாம் எழுத எழுத கேலி செய்யச் செய்ய மத்திய சர்க்கார்கூட சாதாரணமாகக் கருதுகின்ற அளவுக்கு இன்றைக்கு நிலைமை தமிழ் நாட்டிலே உள்ள நாம் உருவாக்கிவிட்டோம். கட்சிச் சார்பற்ற முறையிலே சிலை வைக்கப்பட்டிருக்கிறது. கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனாருக்குச் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. சுப்பிரமணிய பாரதியாருக்குச் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்த்த மேல்நாட்டு அறிஞர்களுக்கெல்லாம் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டு அறிஞர்களுக்கும் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ராஜராஜ சோழனுக்கு சிலை வைப்பது என்பது, நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, ஒரு உணர்ச்சிமயமான காரியமாக ஆகிவிட்டது. இந்தச் சிலையை எங்கே வைப்பதென்பது பிரச்சினைக்குரியதொன்றாக இன்றைக்கு ஆகியிருக்கிற காரணத்தால், அதை வைப்பதற்குத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மிக வருத்தத்தோடு சொன்னதைப் போல. அந்தச் சிலை சாக்கினாலும் துணியினாலும் சுற்றப்பட்டு, தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு முன்னாலே வைக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே கொடுமையாக இருக்கிறது. துவாரபாலகரைப் போல், ராஜராஜ சோழன் சிலை கோயில் கோபுரத்திற்கு வெளியில் மூலையிலே சாக்கினால் கட்டப்பட்டு மூடிவைக்கப்பட்டிருக்கிற அந்தக் காட்சியைப் பார்க்கும்போது, நல்ல தமிழ்ப் பற்றுள்ளவர்கள், தமிழ் நாட்டு வரலாற்றை அறிந்தவர்கள், ராஜராஜ சோழனைப்பற்றிப் புரிந்து கொண்டிருப்பவர்கள் மனம் உருகாமல் இருக்க முடியாது. நான் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பு, டெல்லியில் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெறும்போது, நேராகவே தலைமை அமைச்சரிடம் சொல்ல வேண்டும் என்பதற்காகவே, தஞ்சாவூருக்குச் சென்று, பிரகதீஸ்வரர் கோயிலில் உள்ள இடத்தையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு. அங்கே இருக்கிற மத்திய அரசின் அலுவலரையும் அழைத்துச் சென்று ராஜராஜ சோழன் சிலையை இந்த இடத்திலே வைக்கலாம் என்று இடத்தையும் குறித்துக்கொண்டு சென்றேன். இப்பொழுது நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். முன்பெல்லாம் மன்னர்கள் காலத்தில் குறவஞ்சி நடனம் ஆடிய இடம், அதற்கு எதிரிலே



[திரு. மு. கருணாநிதி]

நடராஜர் ஆலயம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு மேடை காலியாகவே இருக்கிறது. அந்த மேடையிலே அந்தச் சிலையை வைக்கலாம் என்கின்ற கருத்தை நான் தலைமை அமைச்சரிடத்திலே படத்தோடு விளக்கிச் சொன்னேன். நாளைக்கே கவனிக்கிறேன் என்று இலாகாவிற்கு அனுப்பினார்கள். நாளைக்கு என்பது, கடைகளிலே போடுவார்களே, ' இன்று ரொக்கம் நாளை கடன் ' என்று, அந்த ' நாளை ' ஆகவே ஆகிவிட்டிருக்கின்றது. தஞ்சாவூர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், மாமல்லபுரம், இப்படிப்பட்ட இடங்களெல்லாம் தமிழ் நாட்டின் அரசாங்கத்தினுடைய கையிலே. நிர்வாகத்திலே இருக்குமானால், இன்னும் அவைகளைச் செம்மையான முறையிலே நம்மால் வைத்திருக்க முடியும். இன்றைக்குத் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தைப் பார்த்தால், எங்கே பார்த்தாலும் செடிகொடிகளும் மரங்களும் அடர்ந்திருக்கிற தோற்றத்தைத்தான் காண முடியும். கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்றால், அது இன்னும் எத்தனையாண்டுக்காலம் இருக்கும், எவ்வளவு ஆண்டுக்குள் இருந்த இடமே தெரியாமல் போய்விடும் என்ற அளவுக்குத்தான் அது இருக்கின்ற காட்சியை நாம் காண முடியும். இவைகள் எல்லாம் இந்த அரசாங்கத்தின் கையிலே ஒப்படைக்கப்படுகிற காரணத்தால், இந்தியாவின் ஒருமைப்பாடு ஒன்றும் கெட்டுவிடாது. இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, ஒரு வழிபடுகின்ற இடமாக தஞ்சாவூர் கோயில் இருக்கிறது. அதே போல கங்கைகொண்ட சோழபுரம் கோயிலும், நமது டி.கே.எஸ். அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, வழிபடுகின்ற இடமாகத்தான் இருக்கின்றது. அவைகளையெல்லாம் தமிழக அரசின் நிர்வாகப் பொறுப்பிலே வைத்தால், எந்தவித ஆபத்தும் அந்தக் கோயிலுக்கு வந்துவிடாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரைக் கோயிலிலே திருமலை நாயக்கர் சிலை இருக்கிறது என்று, மீனாட்சி அம்மன் இருக்கிற கர்ப்பக்கிரகத்திற்குப் பக்கத்திலே இருக்கிற பிரகாரத்திலேயே திருமலை நாயக்கருடைய சிலை இருக்கிறது. இத்தனைக்கும் மதுரைக் கோயில் முழுவதையும் திருமலை நாயக்கரே கட்டியதல்ல. அது கடம்பவனமாக இருந்து—அதைக்கூட காட்சியாக வைத்திருக்கிறார்கள்—கடம்பவனத்திலே சிறு அளவுக்குக் கோயில் உருவாகி, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, கடைசியாக திருப்பணியைத்தான் திருமலை நாய்க்கர் செய்தார் என்று இருக்கிறது. அந்தத் திருப்பணிசெய்த திருமலை நாயக்கருக்கே சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அங்கே இருக்கிற அம்பிகையின் ஆலயத்திற்குப் பக்கத்திலேயே வைக்கப்பட்டிருக்கிறது. இராமேஸ்வரம் கோயிலிலே சேதுபதியின் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தஞ்சாவூரிலே அந்தக் கோயிலை முழுவதும் கட்டிய ராஜராஜ சோழனின் சிலை வைப்பதற்கு இன்றைக்குத் தடை இருக்கிறது என்றால், உள்ளபடியே அது மாநிலங்களினுடைய

என்று சொல்லுவார்கள். ஆனால், தமிழனின் தனித் தன்மையை வளர்த்தவர்களின் சரித்திரங்களையெல்லாம் நாம் ஆராய்ந்து பார்த்தால், குறிப்பாக மறைமலை அடிகளை, சேதுப்பிள்ளை அவர்களை, கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களை, திரு. வி. க. அவர்களை, பரிதிமால் கலைஞர் அவர்களைப் பார்த்தால் தெரியும், இவர்கள் எல்லாம் தமிழ்க் கல்லூரிகளிலே மாத்திரம் படித்துவந்த சாதாரண புலவர்கள் இல்லை என்பது. இவர்கள் வேறு துறைக் கல்வியும், அறிவும் பெற்றவர்களாக இருந்ததால்தான், இவர்கள் தமிழுக்கு உயர்ந்த சேவையைச் செய்திருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது நான் இங்கே கொண்டுவந்துள்ள தீர்மானத்தின்படி, இந்தத் தமிழ்க் கல்லூரிகளை இன்றுள்ள தலைமை அடிப்படையிலே வைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களின் அங்கங்களாக வைக்காமல், தனி ஒரு பல்கலைக் கழகத்தின்கீழே கொண்டு வர வேண்டும் என்று கோருவதுதான். அப்படிச் சொல்லுவதன் நோக்கம், இவைகளை இன்று நாம் ஒரு தனிப் பல்கலைக் கழக அமைப்பிலே கொண்டு வந்தால்தான் நாம் இவற்றிற்கு என்று தனியான ஒரு பாட திட்டத்தையும், தனியான முறையிலே மாற்றங்களையும் வழங்க முடியும் என்பதுதான். அத்தோடு மட்டில்லாமல், பல்கலைக் கழகம் என்று வரும்பொழுது, இதற்குத் தனியாக நிதி உதவி, தனியாக அங்கீகாரம் வழங்கக் கூடிய அதிகாரங்களும் வருகின்றன. இந்தப் புதிய பல்கலைக் கழக அமைப்பிலே இன்றுள்ள "வித்வான்" பட்டப் படிப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். ஏனென்றால் இப்பொழுது "வித்வான்" பட்டம் பெறுபவர்களுக்கு வேலை வாய்ப்புகள் நிறைய உள்ளன. தமிழ்ப் புலவர்கள், தமிழ் ஆசிரியர்கள் எல்லாம் அப்படிப் படிக்கும் மாணவர்களுக்கு வெறும் ஒரு மொழியைச் சொல்லிக் கொடுக்கக் கூடிய பணி மட்டும் போதாது. நிர்வாகப் பொறுப்புகள் எல்லாம் அப்படிப் பட்ட தமிழ்ப் புலவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆகவே,
6.10 p.m. அவர்களும் பள்ளிகளிலேயும் கல்லூரிகளிலேயும் முதல்வராகவும், தலைமை ஆசிரியராகவும் வர சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்கக் கூடிய காலம் இது. அப்படி அவர்கள் கேட்பதிலே தவறு கிடையாது. அப்படி அவர்களுக்குச் சலுகைகளை வழங்குவதன் மூலம், தமிழ் மொழியின் ஏற்றத்தையும், தமிழ் ஆசிரியர்களின் சமுதாய உயர்வைக் காட்டுவதாகவும் அமையும் என்று சொல்லிக்கொள்வேன். ஆகவே, அதற்கு ஏற்ப இன்றுள்ள தமிழ்ப் பாடத் திட்டத்திலே மாற்றம் வேண்டும். அந்தத் தமிழ் பாடத் திட்டம் பழமைப் பற்றினைக் கொண்டதாக இருக்கின்றது. அவற்றிலே ஓரளவுக்கு வைத்துக்கொண்டு, பல புதிய மாற்றங்கள் இந்தத் தமிழ் கல்வித் திட்டத்திலே அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிலே குறிப்பாக மிக முக்கியமான ஒரு புதிய அமைப்பாக நான் கருதுவது, ஆங்கில மொழிப் பயிற்சியை இந்தத் தமிழ்ப் பாடத் திட்டத்திலே கொண்டுவர



வேண்டும். ஆங்கில மொழியை இணைத்துப் படிக்கும்பொழுது தான், அவர்கள், தமிழனுடைய சிறந்த தன்மைகளை எல்லாம் ஒவ்வொன்றாக உணர முடியும் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது எங்கு பார்த்தாலும் உலகமெங்கினும் குறிப்பாக அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள பல பல்கலைக் கழகங்களிலே பார்க்கிறோம், 'மாடர்ன் லேங்குவேஜுகளை' படிப்பதையே ஒரு நல்ல பட்டப்படிப்பாகக் கருதுகிறார்கள். இந்தியாவில் கூட கல்கத்தாவிற்கு அருகேயுள்ள ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்திலே 'கம்பாரட்டிவ் லிட்ரட்சர்', 'கம்பாரட்டிவ் லேங்குவேஜ்' என்ற பாடத் திட்டங்களைக் கொண்ட பட்டப் படிப்புகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, இத்தகைய பாடத் திட்டங்களையெல்லாம் நாம் புதிதாக அமைக்கக் கூடிய திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே கொண்டுவர வேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன்.

இன்னும் மிக அவசியமான ஒரு புதிய பாடத் திட்டம் நிர்வாகத் துறை. 'அட்மினிஸ்டிரேஷன்', அனுபவத்தையும் இந்தக் கல்வி பட்டதாரிகளுக்கு நாம் கொடுக்க வேண்டும். அதே போன்று 'சைகாலஜி' 'சோஷியாலஜி' என்ற கோர்சின் 'பேசிக் சயன்சில்' ஒரு 'சையன்டிஃபிக் ஆட்டிட்யூட்' நாம் முழு அளவில் கொண்டு வராத வரைக்கும் அது வெறும் ஒரு மொழிவெறியைத் தான் கொடுக்குமேயல்லாமல், மொழிப் பற்று என்ற தெளிவான நோக்கத்தை உணரச் செய்யாது என்று கருதுகிறேன். ஆகவே இந்தத் தமிழ்ப் பாடத் திட்டத்தில் அடிப்படை விஞ்ஞானத்தைக் கொண்டுவர வேண்டும். அதே போன்று இந்தத் தமிழ்க் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி இருக்க வேண்டும். இவையெல்லாம் சிறிய பிரச்னைகள் என்றாலும், நான் இந்த அவையினுடைய கவனத்திற்குச் சில அடிப்படைப் பிரச்சினைகளைக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக, தமிழ்க் கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியர் என்பதும் கிடையாது. தமிழ்ப் புலவர்களுக்கு உடற் பயிற்சி, உடல் வலிமை தேவையில்லை என்பது இந்த அரசாங்கத்தின் நோக்கமல்ல என்பதை அறிவேன். ஆனால் அப்படி ஒரு மனப்பான்மை வளர்ந்துவிடாது, தமிழாசிரியர்கள் என்பவர்களுக்குச் சில தேவைகள் கிடையாது என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே தமிழைப் படிப்பவர்கள், தமிழாசிரியர்கள் மனப்பான்மை காலத்திற்கேற்ப மாறி அமையவில்லை என்று நான் நினைக்கிறேன். இன்று தமிழ்க் கல்லூரியில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க ஒரு ஆசிரியர் கிடையாது. ஏன்? இன்னும் சொல்லப் போனால், நூல் நிலையம் அமைக்கக் கூட இந்த அரசாங்கம் எந்த மானியமும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுவது போல் தோன்றுகிறது. நூல் நிலையத்திற்கு 'கிராண்ட்' கிடையாது. பெஞ்ச், நாற்காலி வாங்குவதற்கு 'பர்னிச்சர் கிராண்ட்' கிடையாது. கட்டிடம் கட்டுவதற்கு எந்த

[13th December 1971

[திரு. மு. கருணாநிதி]

உரிமைகள் எந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்தால் மதிக்கப்படுகின்றன என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டேயல்லாமல் வேறு அல்ல. அவர்களே கூட ராஜராஜ சோழன் யார் என்று புரிந்துகொண்டு, அவனைக் கேவலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்கின்ற காரியமாக யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் ராஜராஜ சோழனைப் பற்றிக் கூட கவலைப்பட மாட்டார்கள். ஒரு மாநிலம் கேட்டு உடனடியாக இசைகிறேன் என்று உரைத்துவிட்டால், நமது கவுரவம் என்ன ஆவது, என்ற அந்தப் பிரச்சினையிலேதான் தாமதம் காட்டுகிறதே தவிர வேறு அல்ல. தாமதம் காட்டினால்தான் அதற்குப் பெயர் மத்திய சர்க்கார். இல்லாவிட்டால் மத்திய சர்க்காராக இருக்க முடியாது. ஆகவே தான் தாமதப்படுத்துகிறார்கள். இப்பொழுது காட்டவேண்டிய அளவுக்குத் தாமதம் காட்டியாகிவிட்டது, மத்திய சர்க்கார் என்ற பெயர் நிலைத்தாகிவிட்டது. இனிமேலாவது அந்தத் தாமதத்தைத் தவிர்த்து இந்தச் சிலை வைக்கும் அனுமதியை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுடைய உணர்ச்சிக்கு இந்த 5-50 p.m. அரசின் உணர்ச்சி எந்த அளவுக்கும் குறைந்ததல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், கலைஞர் சண்முகம் அவர்களும் குறிப்பிட்டதைப்போல, அந்தத் தீர்மானத்தின் கொள்கையை இந்த அரசு நிச்சயமாக ஒப்புக்கொள்கிறது. அதைத் தீர்மான வடிவிலே ஆக்குவதற்கு இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு தீர்மானம், மத்திய அரசை எதிர்ப்பதைப்போல. நாம் போடுவது இந்த நேரத்திலே நல்லதல்ல என்ற காரணத்தால், இந்தத் தீர்மானத்தை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தச் சிலை வைப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும், நெருக்கடி நிலைமை நீருகிற அளவுக்குக் கவனிக்காமல் இருந்தாலும், அது தீர்ந்து எந்த வகையிலே சிலை வைக்க வேண்டுமோ அந்த வகையிலே வைக்கப்படும், ஆனால் நிச்சயமாக அந்தச் சிலை நாம் நினைக்கின்ற இடத்திலே வைக்கப்படும் என்று கூறி அமர்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Is the hon. Member Thiru G. Swaminathan pressing his resolution, or is he withdrawing it ?

திரு. ஜி. சுவாமிநாதன் : முதலமைச்சர் அவர்கள் பேசியதற்கு ஒப்ப, இந்தத் தீர்மானத்தை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

The Resolution was, by leave, withdrawn.



13th December 1971]

*(3) Setting up of a Thiruvalluvar Tamil University.*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

"தமிழ், அறிவியல் முறையில் தமிழ், மற்றும் ஏனைய மொழிகளின் வளர்ச்சிக்காக, கீழ்திசைக் கல்லூரிகள் அனைத்தையும் இணைத்து இம்மாநிலத்தில் திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க, இம் மன்றம் அரசினருக்குப் பரிந்துரை செய்கிறது."

திரு. டி. கே. சுப்பையா : தலைவரவர்களே, நான் வழிமொழிகிறேன்.

MR. CHAIRMAN : Resolution moved—

"That this House recommends to the Government to set up a Thiruvalluvar Tamil Universitiy in the State, affiliating all the Oriental Colleges, for promotion of Tamil and other languages on scientific lines".

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் கொண்டுவந்ததன் நோக்கம் மிகத் தெளிவாக இருக்கின்றது. தமிழ் மொழியும் தமிழர் வாழ்வும் ஏற்றம் பெற்றுள்ள இந்தச் சூழ்நிலையிலே பல தமிழ்க் கல்லூரிகள் இந்த மன்றத்திலே எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பது பற்றிச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை சொல்வதற்கு முன்பாக எவ்வாறு தமிழ்க் கல்லூரிகள் இந்த மாநிலத்திலே தொடங்கப்பட்டன, அந்த தமிழ்க் கல்லூரிகளுக்கு எத்தகைய சமுதாய நிலை இருந்துவந்திருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இன்று சுமார் 21 தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். இவைகள் அனைத்தும் சுமார் 30, 35 ஆண்டுகளுக்கு முன்பாக, ஆங்கிலேயனுடைய ஆட்சி நடந்தபோது, ஆங்கிலக் கல்வி பெற்றவர்களுக்கல்லாமல், ஏதோ தமிழைக் கொஞ்சமாவது பயில வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதற்காக, வித்வான்கள் என்ற பெயரிலே, தமிழ் ஒரு பட்டப்படிப்பாகக் கூட அல்லாமல், ஒரு டைட்டில் என்ற பெயரிலே அமைக்கப்பட்டன. அவ்வாறு ஆங்கிலேயர்களால் இந்தக் கல்லூரிகள் தொடங்கப்பட்ட காரணத்தினால், தமிழைப் படித்தவர்களுக்குக், குறிப்பாக தமிழ் புலவர்களுக்கு, சமுதாயத்திலே ஒரு அந்தஸ்து என்பதில்லாமல் இருந்தது. அந்த நிலைமை இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது என்று சொன்னால் மிகையாகாது. அதற்கு என்னையே ஒரு உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றாலும் சொல்லலாம். தமிழ்ப் பற்றின் காரணமாக, ஒரு தமிழ் வித்வானாக வேண்டுமென்று ஆசைப்பட்டு, நான் பச்சையப்பன் கல்லூரிக்குச் சென்று,

[Thiru M. Rajah Iyer] 13th December 1971]

in my place nearly 30 years ago. It grew up as a very big Hostel till it was handed over to the Government. From the very first day of its inception, I refused to call it a Harijan Hostel. It was called the Vivekananda Hostel where not only Harijans but also backward classes were accommodated. A few members of the forward classes also were accomodated. All of them lived together so that the so—called forward classes could shed their superiority complex and the backward classes could come up in a spirit of real equality, suited for a classless society. Likewise, would it not be proper for the present University to give encouragement for the development of Tamil language also. Even in the sphere of colleges, we do not want narrow Colleges which specialise in a particular function but we want comprehensive Colleges where not only science, but arts and languages would be taught. So, I would like the Government to bear this aspect of the question in mind and to see whether a sep- bear this aspect of the question in mind and to see whether a separate University as such is necessary for the development of Oriental languages. The University has to develop not only Oriental languages but English language also. It has to develop science ; it has got to develop arts; it has got to develop literature. All these things could co-exist. A Professor in Tamil University might be somebody shining in solitary glory whereas I want the Professor of Tamil to be no less important than the Professor of English in the Tamil University ; no less important than the Professor of Physics, Chemistry or Science sitting on terms of perfect equality with other Professors in a comprehensive University instead of an isolated University. In that case all degrees would be considered to be equally important. I can understand a separate University for agriculture, I can understand a separate University for technological studies but an academic University as such, should not be split still further into water-tight compartments as an English University, Tamil University or Sanskrit University. I can understand a University being constituted for the academic side ; I can understand a University for agriculture or techonology or literature. Let all languages be developed equally. If the Oriental languages suffer from disabilities, it is up to us to remove them. It is no use ti say that they do not have a physical education teacher there. It is very unfortunate. If they do not have grants, let us give a massive grant to the Oriental Colleges as such. But what purpose would be served by starting a separate University? I would like the Government to bear this very much in mind so that our grants could be utilised fir the development of the University where all languages would be equal to one another and not a University which would be isolated and
6·30 p.m. usplit up into various water-tight-compartments.

DEPUTY CHAIRMAN : Does any other hon. Member want to speak?

(No hon. Member rose)



*1971 டிசம்பர் 13]*

DEPUTY CHAIRMAN : The Hon. Minister will now speak.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற கீழை நாட்டுக் கல்லூரிகள்—'ஓரியண்டல் காலேஜஸ்' என்று சொல்லப்படுபவைகளையும் தமிழ்க் கல்லூரிகளையும் ஒன்றாக இணைத்து தனி பல்கலைக் கழகம் வேணடும், அதற்குத் திருவள்ளுவர் பெயரிட்டு 'திருவள்ளுவர் பல்கலைக் கழகம்' அமைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள். ஓரியண்டல் காலேஜஸ் என்று சொல்லப்படும் தமிழ்க் கல்லூரிகள் தமிழகத்தைப் பொறுத்த வரை 21 கல்லூரிகள் இருக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் 16 கல்லூரிகளும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழ் 5 கல்லூரிகளும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியது போல், பல்கலைக் கழகம் என்பதற்குச் சில இலக்கணங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உலகம் முழுவதும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் அதைத் 'திருவள்ளுவர் பல்கலைக் கழகம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பிள்ளை பெற்றெடுத்த பின் தான் பெயர் வைக்க வேண்டும். அதுபற்றி யோசிக்க வேண்டும். பிள்ளை பெற்றெடுத்துவிடுகின்ற நோக்கம் நிறைவேறுமேயானால், பெயர் வைப்பதில் எந்த மறுப்புரையும் கிடையாது. அப்படியொரு பல்கலைக் கழகம் அமைக்க முடிவு செய்யும் சூழ்நிலையில், திருவள்ளுவர் பெயர் வைக்கவேண்டுமென்பதில் யாருக்கும் மறுப்புரை இருக்க நியாயமில்லை. இப்பல்கலைக் கழகம் ஏற்படுத்தும் தன்மையிலே நம்மிடையே வேறுபாடுகள் இருக்கின்றன. தமிழுக்குத் தரும் ஏற்றங்கள் தமிழாசிரியர்கள் மற்றவைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். 25, 30 ஆண்டுகளுக்கு முன்பு புலவர், வித்வான் படித்த பிள்ளைகளை மற்றவர்கள் நடத்திய விதத்திலும், இப்போது நடத்திக்கொண்டு வரும் விதத்திலும். எவ்வளவோ மாறுபாடுகள் வந்திருக்கின்றன. அந்தப் புலவர்களை நடத்துவதில் தகுதிகள், திறமைகள், ஆகியவற்றில் பல்வேறு முறைகளில் எவ்வளவோ, மாற்றங்கள் கொண்டுவந்து, கிட்டத்தட்ட மற்றவர்களுக்குச் சமமாக ஆக்கும் தன்மையில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறோம். தலைமை ஆசிரியருக்கு என்னென்ன தகுதி வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்தத் தகுதி படைத்த தமிழாசிரியர்கள் இப்போது உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக வருகிறார்கள். அதே தகுதி பெற்ற தமிழாசிரியர் கல்லூரி முதல்வராக வருவார் என்று தகுதி வகுத்திருக்கின்றோம். அந்தத் தகுதி பெற்ற தமிழ் அறிஞர்கள் பேராசிரியர்கள் கூட பல்வேறு கல்லூரிகளில் முதல்வராக இருக்கிறார்கள், அது மட்டுமல்லாமல், தமிழில் படித்து மேல் பட்டப்படிப்பு பெற்ற, 6-10 p.m.

[திரு. வி. ஈஸ்வரமூர்த்தி] [13th December 1971

வித 'கிராண்டும்' கிடையாது.. ஆகவே இந்த அடிப்படையில் எவ்வாறு அந்தக் கல்லூரிகள் 35 ஆண்டுகளாக இயங்கி வந்திருக்கின்றன என்று நினைத்தால், வியப்பைத்தான் தருகிறது. ஒரு நிர்வாகம் என்றால், அங்கே 'வாட்ச்மென்', 'அட்டெண்டண்ட்' இருக்க வேண்டும். அரசாங்கத்திடத்திலிருந்து நிதி பெறுவதற்கு சில முறைகள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் தமிழ்க் கல்லூரிகளைப் பொறுத்த வரை அங்கே 'அட்டெண்டர்',
6·20 p.m. 'வாட்ச்மேன்' கிடையாது.

There is no procedure for applying for and receiving grant.

ஆகவே இவற்றையெல்லாம் சேர்த்து சிக்கிரத்தில் ஓரிரு ஆண்டில் செய்துவிட முடியும் என்று நான் நம்பவில்லை. ஆனால் இவற்றைப் பற்றிச் செயல் முறையில் சிந்திக்க வேண்டிய நேரம் வந்திருக்கிறது. குறிப்பாக 'ட்ரெயினிங் க்ளாஸ்', தமிழ்ப் புலவர் படித்தவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு மாநிலத்திலேயே ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. ஏன் இந்த அவல நிலை ஏற்பட வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்த ஒன்றிரண்டு தமிழ்க் கல்லூரிகளிலாவது ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளை இணைத்துவிடலாம் என்று இந்த நேரத்தில் யோசனை சொல்ல விரும்புகிறேன். இங்கே அதைப்பற்றி நீண்ட நேரம் பேசுவதற்கு இது பொருத்தமான நேரம் என்று நான் கருதவில்லை. இதைப் பற்றி நாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்யவேண்டிய ஒரு கட்டத்துக்கு வந்துவிட்டோம். இந்தக் கல்லூரிகளை நாம் மூன்றாம் தரக் கல்லூரிகளாக பாவித்து வைத்துக் கொண்டிருப்பது இனியும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழாசிரியர் உயர்வுக்கும் ஒரு சரியான வழிகாட்டியாக அமையாது என்று கூறிக்கொண்டு இந்தப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு உடனடியாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி, அதற்கு முன்பு உயர்மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழு அல்லது விசாரணைக் குழு அமைத்து, இந்தத் தமிழ்க் கல்லூரிகளுடைய நீண்ட கால வளர்ச்சிக்கு ஒரு சரியான அடிப்படை அமைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். இந்தப் பழைய கல்லூரிகளை பல்கலைக் கழகத்தினிடமே தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம் என்று எளிதாக யோசனை சொல்வார்கள். ஆனால் எனக்குப் படுகிறது—பழைய பல்கலைக் கழகங்கள் ஒரு அடிப்படையில் வளர்ந்திருக்கின்றன. அவைகள் ஒரு 'எம்.ஏ.' பட்டம் கொடுப்பதையும் ஒரு 'பி.ஏ.' பட்டம் கொடுப்பதையும் நீண்ட நாள் பெரிய காரியமாகக் கருதி வந்திருக்கும் காரணத்தால், இந்த வித்வான் பட்டங்கள் வழங்குவதை அவர்கள் தன் பெரும் பொறுப்பாகக் கருதவில்லை. என்னதான் தமிழைப்பற்றிப் பேசினாலும், ஆசிரியர்களுடைய பெருமைகளைப்பற்றிப் பேசினாலும், தமிழ் வித்வான் என்றால். சமுதாயம் மதிப்பதில்லை. அதே சமயத்தில் ஒரு பி.ஏ. என்றால் மதிக்கிறோம். மகாவித்வான் என்றால் கூட மதிப்பதில்லை. ஒரு 'எம்.ஏ.' என்றால் மதிக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் நாம் அவர்களை இந்த ஆங்கிலக்



13th December 1971] [திரு. வி. ஈஸ்வரமூர்த்தி]

கல்வித் திட்டத்துக்காக அமைக்கப்பட்ட பல்கலைக் கழகங்களின் கீழ் வைத்துக்கொண்டு ஒரு அடிமையைப் போல் மூன்றாம் தர குடிமகனைப் போல் நடத்துவதை விட்டு, அவர்களை விடுதலை செய்து தனியாக ஒரு புதிய பல்கலைக் கழகம் அமைத்து அதன்கீழ்க் கொண்டுவர வேண்டும். அதன் மூலம் தமிழ் மொழிக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் ஏற்றம் அளிக்க வேண்டுமென்று கூறிக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை சபையின் விவாதத்திற்கு விடுகிறேன். வணக்கம்.

* THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, when I listened to the speech of the hon. Member, I had a feeling that he was making out a strong case for starting Orientol Colleges rather than for founding a Universiy as such. I was just brushing up my memory about the functioning of a University, not what Cardinal Newman said in the 19th centuary, but what had our 'Kothari Commission' to say about the University and developmet of languages? Is there any recommendation that for the development of language there should be a separate University as such? The hon. Member a speech on the Resolution falls into two categories. He wants a University and he wants it to be named the Thiruvalluvar University. Regarding the latter part of the Resolution, the naming the University, there could be no difference of opinion at all. It is not likely to meet the same fate as the Arabindo University in Pondicherry. It is not likely to face any opposition at all. Every University in Tamil Nadu could be the Thiruvalluvar University. He was making out a case for greater encouragement to Oriental Colleges and he was not unaware of the state to which mere Tamil Degree or Diploma holders will be reduced unless they had their knowledge supplemented with a knowledge of the English language. He made it very clear that a Tamil University, as such, Thiruvalluvar University as such, was not intended to promote Tamil only though, of course, this is a comprehensive Resolution for Oriental University and not Tamil University alone. Sanskrit, Arabic, Persian and other Oriental languages have to come under the auspices of this University. I only want to share with this House my misgivings whether for this narrow restricted purpose a University as such is necessary and whether it will not form one of the disciplines which the University has got to promote. The University stands for research, for development of various faculties among which, of course, Tamil language and literature, Sanskrit language and other Oriental languages not mentioned by my hon. Friend should necessarily form a part. Sir, I say this because a separate Tamil University may suffer from all the disabilities of separation and isolation. These are days when things come together. These are days of integration and national integration as such. I think it militates against the very purpose of life to-day to think of separate existence. I was responsible for founding a small Harijan hostel

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

வேண்டும். அப்படிப்பட்ட பல்கலைக் கழகம் உலகத்தில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் யுனிவர்சிடி என்று பெயர் வைத்தார்கள். பல கலைகளை ஒன்றாக இணைத்து விரிவாக ஆக்கிக்கொண்டு செல்வதன் காரணமாக, அப்படிப் பெயர் வைத்தார்கள். ஆக இந்த 21 தமிழ்க் கல்லூரிகளில் குறிப்பிட்ட ஓரளவு மட்டுமே சொல்லி, பட்டங்கள் தராத அளவிற்கு, பட்டயங்கள் தருகின்ற அளவிற்கு வைத்திருக்கிறோம். ஆகவே இவைகளை யுனிவர்சிடிகளாக வைக்கின்ற முறை வராது. இதிலே கூட பல மாற்றங்களைச் செய்திருக்கிறோம். ஏற்கெனவே 5-வது படித்தவர்கள், 4-வது படித்தவர்கள் வித்வான் படித்து வருகிறார்கள். அதற்குப் பிறகு நாம் மாற்றங்கள் செய்து எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் முதல் நிலை என்றும், கீழே படித்தவர்கள் இரண்டாம் நிலை என்றும், முதல் நிலை பெறுவதற்கு 10 ஆண்டுகள் பயிற்சி பெற்று வரவேண்டும் என்றும் நாம் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். தமிழ் அறிவு மட்டும் இருந்து என்ட்ரன்ஸ் எக்சாமினேஷன் எழுதி வித்வான் படிப்பதற்கு யாரும் சேரலாம் என்று வைத்து, அதை யுனிவர்சிடியாக ஆக்க வேண்டுமென்றால், அதற்குத் தகுதிகளை வைக்கவேண்டிய நிலைமைகள் வரும். தனிப் பல்கலைக் கழகம் என்று கேட்டால், கணக்குக்கு பல்கலைக் கழகம், வரலாற்றுக்குப் பல்கலைக் கழகம், நேசுரல் சயன்சுக்கு பல்கலைக் கழகம் என்று கேட்டால் எப்படியோ அப்படிப்பட்ட சூழ்நிலை இதில் வரும். அதற்கு அவசியமில்லை. இதிலே மாற்றங்கள் செய்ய வேண்டுமென்றால், சிலபஸ் மற்றவைகளை மாற்றலாம். இந்த அறிவு போதாது, கூடுதல் அறிவு வேண்டுமென்றால் முயற்சிகள் எடுக்கலாம். அதற்காகக் குழுவை அமைத்து ஆராயலாம். தகுதி பெற்ற மாணவர்களுக்கு அறிவு போதாது, அவர்கள் வேறு சில அறிவுகள் பெற வேண்டும். ஃபிலாலஜி போன்ற அறிவு இருந்தால் நல்லது என்று சொன்னால், இப்படிப்பட்ட மாற்றங்கள் வேண்டுமானால், அதற்கு முயற்சி செய்யலாமே தவிர, தனி பல்கலைக் கழகம் ஏற்படுத்துதற்கான கூறுபாடுகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி குறிப்பிடுவதுபோல், பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது என்பது இயலாத ஒன்று என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழுக்கு ஏற்றம் தருகிற வகையில் மாற்றங்கள் செய்யலாம் என்று கூறி நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

DEPUTY CHAIRMAN : Is the hon. Member Thiru V. Isvarmurti pressing his resolution, or is he withdrawing it ?

THIRU K. ARIVAZHAGAN : On a point of clarification, Sir. I would like to know whether the Government would take steps to convert the Vidwan Degree into B.A. Degree ?





[திரு. வி. ஈஸ்வரமூர்த்தி]

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. The hon. Member can ask for clarification only after the speech of the Hon. Minister.

* திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மதிப்பிற்குரிய ராஜா அய்யர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களின் படி, இத்தகைய தனியான பல்கலைக் கழகம் ஏற்படுத்தினால், பல்கலைக் கழகத்தினுடைய இலக்கணத்தின்படி ஒரு பரந்த நோக்கத்தை மாணவர்களிடத்திலே உண்டுபண்ணாமல் குறுகிய நோக்கத்தை மாணவர்களுடைய உள்ளத்திலே ஏற்படுத்தும் என்று அச்சம் தெரிவித்தார்கள். நான் மிகத் தெளிவாகச் சொன்னேன், தமிழனுடைய தனித் தன்மைகளையெல்லாம் வெளிபடுத்தும்படி சேவை செய்தவர்கள், மறைமலை அடிகள். சேதுபிள்ளை, கா. சு. பிள்ளை, பரிதிமாற் கலைஞர் போன்றவர்கள், மிகப் பரந்த தமிழ்க் கல்வி படித்தவர்கள் பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக விளங்க முடியும் என்பதற்கு உதாரண புருஷர்கள் ஆவார்கள். ஒரு பல்கலைக் கழகம் ஒரு தனி நோக்கத்திற்காக ஏற்படுத்தினால், அது ஒரு குறுகிய நோக்கத்தை உண்டுபண்ணுமா, பரந்த நோக்கத்தை உண்டு பண்ணுமா என்பது விவாதத்திற்குரிய ஒரு கருத்து. நான் நிச்சயமாக நம்புகிறேன். ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதுதான் அந்த நோக்கத்தை மிக உயர்ந்த முறையிலே சமுதாயத்திலே கொண்டுவருவதற்குக் கருவியாக இருக்கும். உதாரணத்திற்குச் சொன்னால், இன்றையப் பத்திரிகையிலே நான் பார்த்தேன். "ஆந்திர தேசத்தினுடைய முதலமைச்சர் சமஸ்கிருத பல்கலைக் கழகம் என்ற அமைப்பினை அவசரச் சட்டத்தின் மூலம் நான் கொண்டுவர இருக்கிறேன்," என்று ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். சமஸ்கிருத பல்கலைக் கழகம் கொண்டுவந்தால் அது சமஸ்கிருத வெறியர்களை உருவாக்கும் என்று நிச்சயமாக அஞ்சவேண்டியதில்லை. அது சமஸ்கிருத மொழியைப் பல கோணங்களிலிருந்து பயில்வதற்குத் தேவை. பல்கலைக் கழகத்தினுடைய இலக்கணத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இங்கே சொன்னார்கள். அதில் வாதத்திற்குரிய கருத்து எதையும் சொல்ல விரும்பவில்லை. யுனிவர்சிடி என்றால், பல்கலைக் கழகம் என்று பொருள் என்று யார் கொடுத்தார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். யுனிவர்சிடி என்ற கருத்தே, ஒரு நோக்கத்திற்காக ஒரு இடத்திலே மாணவர்களும் ஆசிரியர்களும் இருந்து படிக்க வேண்டும் என்ற பொருளிலேதான் செய்யப்பட்ட ஒரு சொற்றொடராகும். இப்பொழுது யுனிவர்சிடி என்ற தொடர் இருக்கக் கூடாது, 'மல்டிவர்சிடி' என்று இருக்க வேண்டும் என்ற புதிய சித்தாந்தமே மேற்கு நாடுகளிலே உருவாகி வருகிறது. யுனிவர்சிடி

நமது அறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின்கீழ் தமிழ் படிக்க வேண்டுமென்று கருதி விண்ணப்பம் செய்தேன். அவர் என்னுடைய மார்க்குகளை எல்லாம் பார்த்துவிட்டு, "நீங்கள் ஒரு டாக்டராகவோ, என்ஜினியராகவோ படிக்கக் கூடிய தகுதிகள் எல்லாம் பெற்றிருக்கின்றீர்கள். ஆகவே, தயவு செய்து தமிழை நீங்கள் தனித்துப் படித்துக்கொள்ளலாம். இங்கே சேர்ந்து படிப்பது உங்களுடைய எதிர்காலத்தை பாதிக்கும்" என்று அறிவுரை சொன்னார்கள். ஆனால் அப்பொழுது நான் இளைஞனாக இருந்து நான் கவிஞனாக வரவேண்டும் என்ற ஆசை என்னுடைய உள்ளத்திலே இருந்ததாலோ என்னவோ, நான் பிச்சனூர் கவிராயர் என்ற பெயரிலே எழுதிய ஒரு புத்தகத்தைச் சுட்டிக் காட்டி, நான் தமிழைப் படிக்க வேண்டும் என்று சொன்னேன். நான் அப்பொழுது 'டி' குரூப்பைப் படித்துக்கொண்டிருந்தேன். ஆங்கிலத்திலே திறமை இல்லாதவர்களுக்கு தனியாக ஒரு பாடம் சொல்லிக்கொடுப்பார்கள். அப்பொழுது கல்லூரி முதல்வர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வந்து, 40 மார்க்குகள் மேலே வாங்கியவர்கள் யாராவது உண்டா என்று கேட்பார். பல தடவை நான் ஒருவன் தான் ஆங்கிலத்திலே அதிக மார்க் வாங்கியவனாக
6·00 p.m. இருந்தேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தான் எனக்கு விஷயம் தெரிந்தது. மற்ற வகுப்புகளிலே இடம் கிடைக்காதவர்கள் தான் தமிழ் படிக்க வருகிறார்கள் என்று. 'டி' குரூப் படித்து விட்டு, மாநிலக் கல்லூரி ஒன்றிலே ஒரு பட்டப் படிப்பு தமிழிலே படிக்க வேண்டுமென்று முயற்சி செய்தேன். அப்பொழுது முதல்வர் என்னை அழைத்துச் சொன்னார் "தம்பி, நீ இளைஞனாக இருக்கிறாய்; நீ தமிழ் படித்துவிடு; நீ தமிழை மட்டும் தான் படிக்க வேண்டும்; நீ வேறு எந்தப் பட்டப் படிப்பும் படிப்பதற்கு தகுதியற்றவன்" என்று சொன்னார். அது எனது மனதிலே ஆழமாகப் படிந்தது. அப்பொழுது நான் இளைஞனாக இருந்து அதன் காரணமாக வந்த ஆர்வமோ என்னவோ, இந்தச் சென்னைப் பல்கலைக் கழகத்திலே நான் ஒரு பட்டப்படிப்பு படிப்பது என்று முடிவு செய்துகொண்டேன். நான் வட இந்தியாவிற்குச் சென்று சாந்திநிகேதனிலே படிக்கும் வாய்ப்பும், அதற்குப் பிறகு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே படிக்கும் நிலைமையும் எனக்கு ஏற்பட்டது. அங்கே ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலேயே உயர்ந்த பட்டப்படிப்பாகக் கருதுவது "கிரேட்ஸ்" என்ற பட்டங்களைப் பெற்றவர்களைத்தான். அதாவது கிரேக், லத்தீன் மொழியிலே பெறக்கூடிய பட்டப்படிப்பு அது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே படித்து அந்த நாட்டின் பிரதம அமைச்சராக வந்தவர்களிலே பலர் இந்த "கிரேக்" மொழியிலே பட்டம் பெற்றவர்கள் தான் என்று சொல்லுகிறார்கள். அதற்கு உதாரணமாக ஒருவரைச் சொல்ல வேண்டுமென்றால், பிரதமராக இருந்த ஹரால்டு மாக்மில்லனைச் சொல்லுவார்கள். அங்கு சொல்லுகிறார்கள், இந்தக் கிரேக்க மொழியிலே பட்டப்படிப்பு ஒருவர்





ஆக்ஸ்போர்ட்டிலே படித்து வெளிவந்துவிட்டால், அவர் எந்தத் துறையில் வேண்டுமானாலும் சென்று சிறிய முறையிலே பணியாற்ற முடியும் என்று. அதாவது அது ராணுவத் துறையாக இருந்தாலும் சரி, அரசியல் துறையாக இருந்தாலும் சரி. அப்பொழுது தான் ஒரு தனி மொழியின் முக்கியத்துவம் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது என்பதை அறிந்தேன் நான். ஆனால் அதே சமயத்தில் தமிழிலே பட்டப்படிப்பு படிப்பதை தமிழ் நாட்டிலே எவ்வளவு கேவலமாக நினைக்கிறார்கள் என்பதையும் நினைத்துப் பார்த்தேன். ஆகவே ஒரு குறிப்பிட்ட மொழியிலே படிப்பதை உலகப் பல்கலைக் கழகங்களிலே எவ்வளவு பாராட்டுகிறார்கள் என்பதை நான் தெரிந்துகொண்டேன். அந்த அடிப்படையிலே நான் தமிழகக் கல்லூரிகளைப் பற்றி சிந்தித்துப் பார்த்தபொழுது பல உண்மைகள் வெளியே வருகின்றன. ஏன் இந்தத் தமிழ்க் கல்லூரிகளுக்கு மூன்றாம் தர நிலை கொடுத்திருக்கிறோம் என்று யோசனை செய்து பார்த்தால், அதற்கு ஒரு காரணம், ஆங்கிலேயர்கள் எந்த நோக்கத்தோடு தமிழ்க் கல்லூரிகளை நிறுவினார்களோ அதே கண்ணோட்டத்திலே இன்றும் நாம் அவைகளை நடத்தி வருகிறோம் என்பது தான்; இப்படி நான் சொன்னால், அது மிகையாகாது என்று நான் கருதுகிறேன். உதாரணமாகச் சொல்லப் போனால், ஆயிரம் பிள்ளைகள் கொண்ட ஒரு ஆர்ட்ஸ் காலேஜுக்கு அதாவது அரசினர் கலைக் கல்லூரிக்கு நாம் சுமார் 3 இலட்சம் ரூபாய் செலவு செய்கிறோம். ஆனால் தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய 21 தமிழ்க் கல்லூரிகளை எடுத்துக் கொண்டால், அவைகளுக்கு நாம் மொத்தமாகக் கொடுக்கக் கூடிய நிதி ஒரு இலட்சம் ரூபாய் தான் வருகிறது. இந்த ஒரு இலட்சம் ரூபாயைக் கூட முழு உதவித் தொகையாகக் கொடுப்பதில்லை நாம். இந்த நிலையிலே முழு உதவித் தொகையாக இவைகளுக்குக் கொடுக்க முன் வந்தால், இந்த 21 கல்லூரிகளுக்கு 3 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆகாது. இன்று தமிழ்க் கல்லூரிகள் என்ற பெயராலே, நாம் எத்தகைய நிலையிலே இவைகளை நடத்தி வருகிறோம் என்பதைச் சற்று யோசனை செய்து பார்க்க வேண்டும். அவைகள் எல்லாம் பெயரளவில்தான் கல்லூரிகளாக இருக்கின்றனவே தவிர, அவைகளெல்லாம் உண்மையிலேயே நிர்வாக அடிப்படையிலேயும் சரி, சம்பள அடிப்படையிலேயும் சரி, உயர் நிலைப் பள்ளிகள் அடிப்படையிலேதான் செயல்பட்டு வருகின்றன. தமிழ்க் கல்லூரிகள் என்ற பெயரிலே நாம் தமிழ் உயர் நிலைப் பள்ளிகளைத் தான் செயல்படுத்தி வருகிறோம் என்று நான் சொன்னால், இங்கே இருப்பவர்கள் அதை ஆட்சேபணை செய்ய மாட்டார்கள் என்று கருதுகிறேன். இவ்வாறு நாம் தமிழ்க் கல்லூரிகளை நடத்தி வருவதால், நாம் எத்தகைய தமிழ்க் கல்வியை வளர்க்கிறோம் என்பதை யோசிக்க வேண்டும். ஏன் இந்த அடிப்படையிலே நாம் இவைகளை நடத்துகிறோம் என்றால், தமிழனுடைய தனித் தன்மை கெட்டுப் போகாமலிருப்பதற்காக வேறு மொழிக் கல்வி, வேறு பாடங்கள் இதோடு இணைக்கப்படாமல் இருக்கின்றன

[1971 டிசம்பர் 13

[திரு. வி. ஈஸ்வரமூர்த்தி]

என்றால், பல கலைகளைக் கொண்ட கழகமாக இருக்க வேண்டும் என்பது வாதத்திற்குரிய கருத்து என்று அடக்கத்தோடு சொல்ல விரும்புகிறேன். அது முக்கியமான கருத்து அல்ல. பல்கலைக் கழகம் என்பது பல இலக்கணங்களைக் கொண்டது. நிச்சயமாக இந்தக் காலத்திலே ஒரு இலக்கணத்தை வைத்துக் கொண்டு பல்கலைக் கழகம் போன்ற விஷயங்களை முடிவு செய்ய முடியாது. ஜவகர்லால் நேரு யுனிவர்சிடி என்று டெல்லியிலே தொடங்கியிருக்கிறார்கள். அது எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டிருக்கிறது. சாந்திநிகேதனை மகாகவி தாகூர் அவர்கள் தொடங்கிய போது, இது ஒரு பல்கலைக் கழகமா, ஒரு பள்ளிக்கூடம் என்று ஆங்கிலம் படித்தவர்கள் எல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்று அது இந்தியாவின் தேசியக் கல்விக்கே ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறதைப் பார்க்கிறோம். அங்கே பெரிய கட்டடங்களோ அல்லது டிபார்ட்மெண்டோ இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்காகச் சொல்கிறேன். நான் அங்கே மாணவனாக இருக்கும்போது, சர் சி. பி. இராமசாமி அய்யர் தலைமையிலே ஒரு குழு வந்தது. அங்கே ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைவராக இருந்தார்கள். அவர்கள் சர் சி. பி. இராமசாமி அய்யரிடம் சொன்னார்கள். 'இந்த சாந்திநிகேதனில் மொழி சம்பந்தமாக மட்டுமே படித்துக் கொண்டிருந்தால் போதாது. அவர்களுக்கு விஞ்ஞான அறிவும் கொடுக்க வேண்டும், அதைப் பற்றி ஆராய்ந்து பரிந்துரை செய்ய வேண்டும்' என்றார். அதற்கு, சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள், "இந்தப் பல்கலைக் கழகத்திற்கு விஞ்ஞானக் கல்வியைக் கொண்டு வந்தால், நிச்சயமாக இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய தனித்தன்மையே கெட்டுப் போய்விடும். ஆகவே, எந்த நோக்கத்திற்காக மகாகவி தாகூர் அவர்கள் இதைத் தொடங்கினார்களோ அதே நோக்கத்திற்காகவே இது இருக்க வேண்டும்," என்ற ஒரு முக்கிய கருத்தைத் தெரிவித்தார்கள். அதே போன்று கல்கத்தாவிலே ரவீந்திர பாரதி என்ற பெயரில் ஒரு பல்கலைக் கழகம் இயங்கி வருகின்றது. அங்கு சங்கீதம், நாட்டியம், ஓவியம் போன்ற கவின் கலைகள் மட்டும்தான் சொல்லித்தரப்படுகின்றன. ஆகவே, பல்கலைக் கழகம் என்பது ஏதோ நினைத்தாற்போல் தொடங்க வேண்டும் என்பது என் நோக்கமல்ல. பரந்த நோக்கம் இருக்க வேண்டும். அதற்குப் பல்கலைக் கழகம் என்ற பெயர் வர தகுதி வேண்டும். பல்கலைக் கழகம் என்றால், நாம் நினைக்கிற கருத்துப்படி ஒரு இலக்கணம், அதற்கு ஒரு மரபு இருக்க வேண்டும் அல்லது மரபு ஏற்படுத்தப் பட வேண்டும். அதற்கு ஒரு 'டிரடிஷன்' இருக்க வேண்டும். பத்து பேர் கூடி அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, இது பல்கலைக் கழகம் என்று சொல்லிவிட்டால், அதிகார ரீதியில் வேண்டுமானால், அதைப் பல்கலைக் கழகம் என்று சொல்லலாம். ஆனால் மற்ற பல்கலைக் கழகங்கள் அவற்றை அங்கீகரித்து விட முடியாது. எப்படி நாடுகளை அங்கீகரிப்பதற்கு அந்த டெரிடரியைப் பிடிக்க



[1971 டிசம்பர், 13

[திரு. வி. ஈஸ்வரமூர்த்தி]

வேண்டுமோ அதிலே அரசாங்கத்தை நிலைக்கச் செய்ய வேண்டுமோ அதே போன்றே பல்கலைக் கழகத்தை உருவாக்கி, மற்றப் பல்கலைக் கழகங்கள் அதையும் அங்கே சொல்லிக்கொடுக்கக் கூடிய பாடத்தையும் அங்கீகரிக்க வேண்டும். அதுதான் இலக்கணமாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே எனக்குத் தெளிவாகப்படுகின்றது, இன்றைக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய மரபு, டிரடிஷன், தமிழ்க் கல்வி வளர்வதற்கு ஒரு சாதகமான மரபு இல்லை. 'டிரடிஷன்' என்று நிச்சயமாக நான் சொல்ல மாட்டேன். அதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் டிரடிஷனே, மரபே, தமிழ்க் கல்விக்கு ஒரு இடையூறாக இருந்து வந்திருக்கிறது, இடையூறாக இருந்து கொண்டிருக்கிறது என்று கூட மிகப் பணிவோடு நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். மைசூர் பல்கலைக் கழகத்திலே கன்னட மொழிப் பிரிவிலே 21 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலே, எத்தனை ஆசிரியர்கள் தமிழ் பிரிவிலே இருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். (6-30 p.m.) ஏன் அந்த நிலைமை என்றால், அதைப் பல்கலைக் கழகத்தினுடைய குறையாகச் சொல்ல முடியாது. அப்படி ஒரு மரபு, அதற்கு விளக்கம் என்னவென்றால், அந்த மரபு அப்படி அமைந்திருக்கிறது. அதற்கு மேல் நான் சொன்னால், அது கல்வி பற்றிய பிரச்சினையாக இருக்காது, வேறு பிரச்சினையாகப் போய்விடும் என்ற காரணத்தால், கூற விரும்பவில்லை. நாம் தனியாக, தமிழ் மொழிக்காக, தமிழ் மொழியைப் படித்தவர்கள் சமுதாயத்திலே உயர்வு பெறவேண்டும் என்ற சிறந்த நோக்கத்திற்காக ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தினால்தான், சமுதாயம் தமிழ்க் கல்வி பெற்றவர்களுக்கு ஆதரவு கொடுக்கும். அந்தச் சமுதாய உயர்வு கொடுக்கப் பட வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்திலேதான் தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றேன். விவசாயத்திற்கும், டெக்னிகல் சப்ஜெக்ட்ஸ்க்கும் பல்கலைக் கழகம் வேண்டும் என்றார்கள். கல்கத்தாவிலே புள்ளி இயல், இண்டியன் ஸ்டாடிஸ்டிகல் இன்ஸ்டிட்யூட்—புள்ளி இயலுக்கு மட்டுந்தான் இருக்கிறது. அது உலகமெல்லாம் பாராட்டக்கூடிய அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. டாட்டா இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபண்டமெண்டல் ரிசர்ச் இருக்கிறது. அதைப் பல்கலைக் கழகம் என்று சொல்லாவிட்டாலும் பல்கலைக் கழக அங்கீகாரம் பெற்ற, யூனிவர்சிடி ரெகக்னைஸ்டு, யூனிவர்சிடி ஸ்டேட்டஸ் பெற்ற இன்ஸ்டிட்யூட்டுகள் பல இருப்பதைப் பார்க்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இன்ஸ்டிட்யூட்டுக்கும் யூனிவர்சிடிக்கும் என்ன வித்தியாசம் ?

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இரண்டு சொற்கள் மட்டுமல்ல, இரண்டு கான்சப்ட்ஸ் நாம் இன்ஸ்டிட்யூட் என்று சொல்லலாம். 'லண்டன் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸ்' என்று சொல்கிறார்கள். அது

[13th December 1971

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

தன்மையிலே வருகின்ற ஒரு பொருளை நாம் கொண்டுவிடக் கூடாது. அது பற்றி ஆக்ஸ்பர்டு டிக்சனரியிலே போட்டிருக்கிறார்கள்.

"University means 'Educational Institution designed for instruction or examination or both of students in all or many of the more important branches of learning; conferring degrees in various faculties and often embodying colleges and similar institutions; members of this collectively; team, crew and etc., representing a university"

என்று இந்த இலக்கணத்தின் அடிப்படையிலே தான் உலகத்திலே இருக்கின்ற எல்லா பல்கலைக் கழகங்களும் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் வைக்க முடியுமா என்று அவர்கள் கேட்டால், வைக்க முடியும். அப்படி வைப்பது சரி தான். ஆனால் இப்பொழுது அது தேவையா என்று கேட்டால், தேவையில்லை என்று தான் சொல்லுவேன். மற்றப் பல்கலைக் கழகங்கள் அந்தத் தேவையினை இப்பொழுது தருகின்றன என்ற அடிப்படையிலே தான் அப்படிச் சொல்லப்படுகிறது. இந்தக் கருத்து காலம் வளர, வளர மேலும் பலம் பெறும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஏதோ ரஷ்யாவில் அப்படி மொழிக்கு என்று ஒரு பல்கலைக் கழகம் இருப்பதாகக் கேள்வி. இப்படி தமிழ் மொழிக்கு என்று ஒரு பல்கலைக் கழகம் நம்முடைய வசதியும், வாய்ப்பும் பெருகும் காலத்திலே ஏற்கக்கூடிய ஒரு கோரிக்கையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தக் கருத்தை அறிந்து உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் தாம் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தைத் திருப்பிப் பெற்றுக் கொண்டமைக்காக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

The Resolution was, by leave, withdrawn.

6-40 p.m. DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. to-morrow.

The House then adjourned.

## VI. PAPER LAID ON THE TABLE OF THE HOUSE

### A. Statutory Rules and Orders

Nil.



13th December 1971]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

### B. Reports, Notifications and Other Papers

* 43. Statement made by Hon. Dr. M. Karunanidhi, Chief Minister under Rule 82 of the Tamil Nadu Legislative Council Rules on 10th December, 1971 in regard to the decision taken by the Cabinet to augment the resources in order to meet the serious situation caused by the emergency.

† 44. Copy of G.O. Ms. No. 3691, Public (Civil Defence II) Department, dated 10th December 1971 regarding constitution of a State Committee for National Defence Aid and three other Committees.

45. Report of Dr. A. L. Mudaliar Committee on the medium of instruction in Colleges.

46. Reply to the assurance given by the Hon. Minister for Public Health on 2nd March 1968 in respect of Starred Question No. 157, by late Thiru N. R. Thiagarajan.

## APPENDIX.

(*Vide Answer to Starred Question No. 165 on page 438.*)

(அ) 1969-ல் அரசு வாணிகக் கழகம் கிழக்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்த 100 ஆர்.எஸ். 09 டிராக்டர்கள், தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்திற்கு இந்திய அரசால் ஒதுக்கப்பட்டன. அவைகளில் இதுவரை 19 (பத்தொன்பது) விற்பனையாயின.

(இ) & (உ) உண்மையில்லை. என்றாலும் இந்த டிராக்டர்களின் கட்டுமானத்தில் சில குறைபாடுகள் பின்னர் காணப்பட்டன. ஆனால் இக்குறைபாடுகளை ஜெர்மானிய தொழில் நுட்ப வல்லுநர்கள் துணைகொண்டு சோதித்துப்பார்த்து சரி செய்யப்பட்டு, சில மாற்றங்களும் செய்யப்பட்டன.

குறிப்பு :—

1969-ல் அரசு வாணிகக் கழகம் கிழக்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்த 100 ஆர்.எஸ். 09 டிராக்டர்கள், தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்திற்கு இந்திய அரசால் ஒதுக்கப்

* Circulated to all M.L.Cs. on 10th December 1971.

† Laid on the Table of the House on 11th December 1971.

[1971 டிசம்பர், 13

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

டாக்டர் பட்டம் பெற்ற டாக்டர் மு. வரதராசனார் பல்கலைக் கழகத் துணைவேந்தராக ஆகியிருக்கிறார்கள். தமிழுக்கு ஏற்றம் தருவோம். அதைக் கற்க உரிய இடம் தருவோம் என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த நிலை ஓரளவுக்கு மாறியிருக்கிறது. உதாரணத்துக்குச் சொல்லப் போனால் 25, 30 ஆண்டுகட்கு முன்னர் மாணவர்களால் கேலிக்குரிய நிலையில் இருந்த நிலை போய், இப்போது மாணவர்களால் அதிகமாக விரும்பப்படும் ஆசிரியர்கள் தமிழாசிரியர்கள் என்ற அந்த உயர்ந்த நிலை பள்ளிகளுக்கு வந்திருக்கிறது. அவர்கள் மாணவர்களிடத்தில் அதிகச் செல்வாக்கு படைத்தவர்களாக விளங்கும் சூழ்நிலை கூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கும்போது, பல்கலைக் கழகம் என்பதற்குச் சில இலக்கணங்களை வகுத்திருக்கிறார்கள். துவக்கப் பள்ளி, உயர் துவக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, இரண்டாண்டு இண்டர்மீடியட், புகுமுக வகுப்பு, அதற்குப் பிறகு இரண்டாண்டு பட்டப்படிப்பு. இரண்டாண்டு மேற்பட்டப் படிப்பு, இவ்வாறு பல் வேறு துறைகளில் பல்வேறு அறிவு ஆற்றல்களைப் பயிற்றுவிக்கின்ற பல்கலைக் கழகத்திற்கு சின்டிகேட், செனெட் அவை என்று பல் வேறு முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே நாம் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்றால். அந்த இலக்கணத் திற்கு ஒட்டிவருகிற சூழ்நிலை ஏற்பட வேண்டும். ஆனால் இங்கே நாம் தமிழ்க் கல்லூரிகளை வைப்பதற்குக் காரணமே, தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கு தமிழ் மட்டுமே தெரிந்தால் போதும் என்ற ஒரு நிலைமை இருந்தது. அதனால் அதிலே மட்டும் பயிற்சி பெற்றவர்களை வைக்கலாம் என்று கல்லூரிகளோடு இணைக்காமல் தனியாக எடுத்து தனிக் கல்லூரிகளாக அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்க் கல்லூரிகளில் வெறும் டைட்டில்ஸ், பட்டயங்கள் தான் வழங்கப்படுகின்றன. அதிலே தமிழ் மொழி பற்றிய இலக்கணங்கள், இலக்கியங்கள் தான் அறிந்துகொள்கிற அளவிற்கு வைக்கப்படுகின்றன. ஓரளவிற்கு கல்வெட்டுகள் வரலாறு சொல்லப்படுகின்றது. 4 ஆண்டுக்கால முயற்சியில் இலக்கண இலக்கிய பயிற்சியோடு டைட்டில்ஸ் கிடைக்கின்ற அந்த 21 கல்லூரிகளை ஒரு பல்கலைக் கழகத்தினுடைய இலக்கணத்தின் கீழே நிலை நிறுத்துவது என்பது இயலாத ஒன்று. அப்படி ஆக்க வேண்டுமென்றால், என்ன செய்ய வேண்டுமென்றால், பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்ப் பிரிவு பி.ஏ., எம்.ஏ., ஆகிய பிரிவுகளையெல்லாம் தனியாகக் கொண்டு வந்து இணைத்து, அதை ஒரு தனிப் பல்கலைக் கழகமாக்கி, அதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்து, அப்படிப்பட்ட சூழ்நிலை வர வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படித்து, பிறகு பி.ஏ. படித்து, பட்டம் பெறுகிற மாதிரி, அதற்குப் பிறகு இரண்டாண்டுக் காலம் படித்து மேற்பட்டப்படிப்புப் படித்து, பட்டம் பெறுகிற மாதிரி பல்கலைக் கழகம் வைக்கலாம்.



1971 டிசம்பர் 13]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஆகவே இந்த 21 கல்லூரிகளை மட்டும் இணைத்து, ஒரு பல்கலைக் கழகம் அமைப்பது பல்கலைக் கழகம் என்ற சொற்றொடரின் பொருளை உள்ளடக்கியதாகாது. சில பல மாற்றங்கள் செய்யலாம் என்றால். நாம் கொண்டு வரலாம். பாடத் திட்டங்கள், சிலபஸ், மற்றவைகளில் புதிதாகச் சேர்க்க வேண்டுமானால், சேர்க்கலாம். பல்கலைக் கழகங்கள் பல்வேறு துறைகளைப் பற்றி விளக்குகின்ற வகையிலும் பல்வேறு நிலைமைகளைப் பெற்றிருக்கின்ற காரணங் களினால் பல்கலைக் கழகங்கள் என்று பெயர் பெறுகின்ற விலங்கின இயல், கணித இயல், மற்றவைகளிலே ஆராய்ச்சி செய்து பாடம் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகள் பல்கலைக் கழகங்களிலே செய்யப் பட்டிருக்கின்றன. அதே முறையில் தமிழ் மொழிக்கு, சமஸ்கிருத மொழிக்கு ஆங்கில மொழிக்கு வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் தான் பல்கலைக் கழகங்கள் வளர முடியும். பல்கலைக் கழகங்களில் பல்வேறு பொருள்களுடைய தன்மைகளை உள்ளடக்கிய வகையில் நடைபெறுகின்றன. எந்த மாதிரி பல்கலைக் கழகமானாலும் அதற்கு வகுக்கப்பட்டிருக்கின்ற இலக்கண முறைகள் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. அந்த முறையில்தான் இந்த 21 ஓரியண்டல் காலேஜ்கள் வித்வான். சிரோன்மணி போன்ற இந்தப் பட்டங்களை வழங்குகின்ற அளவிலே இருக்கின்றன. அதன் நோக்கமே மிகக் குறுகிய அளவிலே இலக்கணம், இலக்கியம், மொழி பற்றிய அறிவு உடையதாக இருக்கிறது. அதைப் பல்கலைக் கழகத்தினுடைய ஸ்டேடஜிக்கு, தகுதிக்கு உருவாக்கிக் கொண்டு வருவது என்பது இயலாத ஒன்று. அந்தத் துறை முழுவதையும் தனியாக எடுக்க வேண்டும். அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி பல்வேறு வகைகளில் வளர்ந்து பட்டப்படிப்பு என்ற இலக்கணத்தோடு வளர்ந்து நின்று தனி அறிவு பெற்றிருக்கின்ற காரணத்தினால், அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி, வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்று ஆகியிருக்கிறது. அதைப் போன்று தான் டெக்னாலஜிகல் அல்லது டெக்னிகல் யுனிவர்சிடி என்று அமைகின்றது. இந்தப் பல்கலைக் கழகம் என்று கேட்டால் எப்படியோ அப்படிப்பட்ட சூழ்நிலை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி கருதுகிறார் களோ, அவைகளை இப்போதிருக்கிற சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்றப் பட்டங்களுக்கு இணையான முறையில் அங்கு தமிழ் மொழியில், சமஸ்கிருதத்தில். ஆங்கிலத்தில் ஆராய்ச்சி பெற்ற ஏற்றங்களைப் பெறுவதற்கு வழி வகைகள் இருக்கின்றன. அந்த முறைகள் இருக் கின்ற காரணத்தினால், 'சிலபஸ்' போன்ற வகைகளில். குறிப்பிடு 6-20 p.m. கின்ற முறையில் சில பல மாற்றங்கள் செய்யலாமே தவிர, 21 கல்லூரிகளை ஒன்றாக இணைத்துப் பல்கலைக் கழகமாக்குவது என்பது பல்கலைக் கழக இலக்கணத்திற்குப் பொருந்தி வராது என்ற காரணத்தினால். அந்த அளவிற்குக் கொண்டுவரவேண்டு மானால், பல்கலைக் கழகத்திலிருந்து தனியாக எடுத்து வைக்க

[1971 டிசம்பர், 13

[திரு. வி. ஈஸ்வரமூர்த்தி]

ஸ்கூல் அல்ல. ஒரு பல்கலைக் கழகம். இன்ஸ்டிட்யூட் என்று ஏன் சொல்கிறோம் என்றால், யூனிவர்சிடி என்று சொல்வதற்கு ஏதாவது 'டெக்னிகல் அப்ஜக்ஷன்ஸ்' இருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. திருவள்ளுவர் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், தமிழ்க் கல்லூரி என்றுகூட வைத்துக்கொள்ளலாம். பெயரைப்பற்றிக் கவலைப்படவில்லை. அது பல்கலைக் கழக அந்தஸ்து பெற்ற, பல்கலைக் கழக அங்கிகாரம் பெற்ற அமைப்பாக இருந்தால்தான், அங்கே தமிழ்க் கல்வி பெறுபவர்களுக்கு, பட்டதாரிகளைப் போன்ற படிப்பு இருந்தால்தான், சமுதாயத்திலே மதிப்பு ஏற்படும். தமிழை இன்னும் ஆழமாகவும், அகலமாகவும் படிக்க ஒரு தனி அமைப்பு தேவைப்படுகிறது. கல்வெட்டு என்று சொல்கிறோம். எத்தனை புலவர்கள் கல்வெட்டுப் படித்தவர்கள் இருக்கிறார்கள், எத்தனை புலவர்கள் ஒரு கல்வெட்டைப் படிப்பதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள்? நாம் ஏதோ பரீட்சைக்காக வைத்திருக்கிறோமே அல்லாமல் ஒரு சைன்டிஃபிக் கோர்சாக, முறையாகப் பயிற்சி கொடுக்கக்கூடிய ஒரு திட்டமாக தமிழ்க் கல்லூரிகளிலே இருக்கக் கூடிய பாடத்திட்டங்கள் இல்லை என்ற காரணத்தால்தான், நான் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்றேன். நான் இதை நம் அரசாங்கம் இப்பொழுதே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. நான் அத்தகைய நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இன்னும் பல ஆண்டுகள் கழித்துப் பார்க்கும்போது, இதைப் முன்னாலேயே செய்திருக்கலாமே, தவறிவிட்டோமே, என்று நினைக்கக் கூடிய சூழ்நிலை வரலாம். ஆகவே ஒரு தூரப் பார்வையோடு ஒரு லாங்ரேஞ் வியூவோடு சொல்கிறேன். அந்த அடிப்படையிலே சிந்திக்கத் தொடங்குவோம் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இதை வற்புறுத்த விரும்பவில்லை. அந்த அடிப்படையிலே அரசாங்கம் என்னுடைய கருத்துக்களை ஏற்றுச் செயல்பட முன்வர வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டு, அதை வற்புறுத்தவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, மாண்புமிக்க உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் இந்தத் தீர்மானத்தை என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளும் இந்த நேரத்திலே ஒரு விளக்கத்தைக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தன்னுடைய தீர்மானத்திலே கூறும்பொழுது சொல்லுகிறார்கள் "தமிழ், அறிவியல் முறையில் தமிழ், மற்றும் ஏனைய மொழிகளின் வளர்ச்சிக்காக, கீழ்த்திசைக் கல்லூரிகள் அனைத்தையும் இணைத்து இம்மாநிலத்தில் திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க, இம் மன்றம் அரசினருக்குப் பரிந்துரை செய்யவிருக்கிறது" என்று இருக்கிறது. இந்த 21 கீழ்நிலைத் தமிழ்க் கல்லூரிகளை இணைத்து ஒரு



1971 டிசம்பர் 13]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல்கலைக் கழகத்தின் அமைப்பிலே அமைக்க முடியாது என்பதற்கான காரண காரியங்களைத்தான் நான் விளக்கிக் கூறினேன். ஆனால், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்க முடியுமா என்றால், முடியும் என்பேன். எனவே, அதற்கு என்று அமைக்க முடியாது என்று சொல்லவில்லை நான் அமைக்க முடியும். ஆனால் அது பல்கலைக் கழக இலக்கணப்படி அமைக்கப்பட வேண்டும் என்று தான் சொன்னேன். நம்மிடத்திலே ஏராளமான பணம் இருந்து, அதற்கான வசதிகள் இருந்தால், தமிழுக்காகத் தனிப் பல்கலைக் கழகங்கள் கூட அமைக்கலாம். கடைசிவரை பி.ஏ., எம்.ஏ. படிக்க 'லிங்குவிஸ்டிக்' மொழியைப் படிப்பவர் தவிர வேறு யாரும் அங்கே போய்ப் படிக்க முடியாது என்றும் வைக்கலாம். இந்த 21 கீழ்நிலைக் கல்லூரிகளை வைத்து ஒரு பல்கலைக் கழகம் அமைப்பது என்பதுதான் பொருந்தாது. எனவே தான் அப்படி அமைப்பது 'குறுகிய நோக்கம்' என்று சொல்லாமல். 'குறுகிய அளவு' என்று தான் சொன்னேன். பல்கலைக் கழக இலக்கணப்படி அது அமையாது என்று சொன்னேன். அப்படி அமைப்பது 'குறுகிய நோக்கம்' என்று நான் சொல்லவில்லை. அப்படி வைக்க முடியுமா என்று கேட்டால், வைக்க முடியும். இங்கே ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் கொண்டுவர வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தால், அதிலே நியாயம் இருக்கும். ஆனால், நமக்கு நிதி வசதி இல்லை, எனவே இப்பொழுது அது தேவையில்லையென்று வேண்டுமானால் பதில் வந்திருக்கும். இப்பொழுதிருக்கும் சூழ்நிலையிலே தமிழ் முன்னேற்றத்திற்காக இருக்கும் பல்கலைக் கழகங்களே நன்றாகச் செயல்படுவதால், அந்தக் கீழ்நிலைக் கல்லூரிகளை எல்லாம் தனியாக எடுத்து, ஒரு பல்கலைக் கழகத்தின் கீழே வைப்பதன் மூலமாக மாநில அளவிலே நாம் பெரும் செலவுகளை ஏற்றுக்கொள்ளும் வகையிலே இருக்கும். ஆகவே, இப்பொழுதிருக்கும் நிலைமையிலேயே அவைகள் இணைந்திருப்பது நல்லது என்று நான் பதில் சொல்லியிருக்கக் கூடும். ஆனால், இந்த 21 கீழ்நிலைக் கல்லூரிகளைச் சேர்த்து அதற்காக ஒரு பல்கலைக் கழகம் அமைப்பது இயலாத ஒன்று என்று நான் சொன்னேனே தவிர, ஒவ்வொரு சப்ஜெக்டையும் வைத்துக் கூட ஒரு தனிப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தக் கூடும். குறிப்பாக 'மியூசிக்குக்கு' என்று ஒரு பல்கலைக் கழகம் வைக்கலாம். ஆனால், அது பல்கலைக் கழக இலக்கணப்படி அமைக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அதைப் போலவே 'ஆர்ட்டுக்கு' கூட தனிப் பல்கலைக் கழகம் வைக்கலாம். 'ஹியூமானிட்டேரியன் வேல்யூவுக்கு'க் கூட ஒரு தனிப் பல்கலைக் கழகம் வைக்கலாம். அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் இப்பொழுது இருக்கும் பல்கலைக் கழகங்கள் அந்த நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றுகின்றன. 'யுனிவர்சிடி' பற்றி உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். யுனிவர்சிடி என்றால் 'யுனிபார்ம்' என்ற

APPENDIX.

| Serial number and part. | Existing arrangements. | Modifications made. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Clutch plates. | 200 dia x 2·5 thick lining not sufficient to transmit the 20 HP derived from Engine. | Clutch Plate and Linings changed to 225 dia x 3·5 thick lining. |
| | Transmission torque 13 KPM. | Transmission Torque increased to 20 KPM. |
| 2 Clutch Release Bearing. | Sealed type to be greased when Engine is overhauled. | Grease lubrication Hose and Nipple added to facilitate frequent greasing by a grease gum. |
| 3 Hose pipe from injection pump to filter. | Rubber Hose. | Replaced by Metal Hose. |
| 4 Diesel Tank. | No strainer provided. | Strainer provided. |
| 5 Filter-diesel. | One gravity type filter not effective. | Replaced by one gravity type filter, paper type and one Duel-pressure type Filter. |
| Hydraulic filter. | Sealed type not easily cleanable. | Replaced by an open type, can be cleaned effectively. |
| 6 Cut-out. | Single coil type. | 3 Coil-type cut-out Indian made PMP added for better control of Voltage and Amperes and for charging batteries at Idling speed also. |
| 7 Electrical cables. | Aluminium Cables fitted. | Replaced by copper Cables for more current-carrying capacity. |
| 8 Lights. | Head light glasses fixed by means of a Rubber holder, which gets loose after some time, and due to heat, and drops off during work. | Replaced by Local Head, lights with Metal Holders for glass. Also the Tail lamps replaced for more elegant appearance. |
| 9 Heater plug. | 1.7 V Plug-melts on longer operation, and gets in between piston and cylinder thereby damaging these. | Replaced by 10·7 V, Enclosed type plug. |
| | All four spark connected in series with a resistance. | Resistance removed and the plugs connected in parallel to give better performance |
| 10 Hydraulic pump. | Plastic bush used as Bearing cover. This results in Air getting into oil due to shrinkage of plastic Bush. | Replaced by Aluminium Bush. |





APPENDIX—*cont.*

| Serial number and part. | Existing arrangements. | Modifications made. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11 Hydraulic hoses from Hydraulic Pump to Distributor and distributor to Hydraulic lift cylinder. | Thick Rubber Hoses fouling with Clutch lever parts, and prevent, sometimes the full release of clutch. | Replaced by metal Hoses which are more compact and thus do not foul with clutch lever and withstand higher pressure. |
| 12 Dynamo. | Sealed type. Present cooling arrangement inadequate. | Opening made on both ends to provide ventilation of the Radar and Starter. Sheet metal chuts removed in view of this. |
| | | Needs addition of gauze over the openings to prevent dust. |
| 13 Battery. | German. | Replaced by AMCO batteries. |

## THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Tuesday, the 14th December 1971.*

The House met in the Council Chamber, For St. George, at four of the clock, Mr. Chairman (The Hon. Thiru C. P. Chitrarasu) in the Chair.

### I. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Tamil Development and Research Council*

* 166 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Development and Research Council has published any books on its research; and

(*b*) if so, the details thereof?

*தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம்*

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி*: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம் தனது ஆராய்ச்சியின் பலனாக புத்தகங்கள் எதனையும் வெளியிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*: (அ) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஓர் ஆலோசனை கூறும் அமைப்பாக செயல்படுகின்றதே தவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. எனவே இம்மன்றம் இதுவரை ஆராய்ச்சி நூல் எதையும் வெளியிடவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி*: தலைவர் அவர்களே, இந்த மன்றம் தமிழ்நாட்டு வரலாறு History of Tamil Nadu தொகுத்து வெளியிடும் திட்டத்தைச் செயல் படுத்தப்போவதாக ஒரு குறிப்பு நான் பார்த்ததாக ஞாபகம். அதுபற்றி ஏதாவது செய்திருக்கிறதா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*: தலைவர் அவர்களே, இம்மன்றம் நேரடியாக அந்த நடவடிக்கையிலே ஈடுபடவில்லையே தவிர, பல்வேறு நடவடிக்கைகளுக்கு தனித்தனி முறைகளைக் கையாண்டு வருகிறது. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் தமிழக வரலாற்றை எழுத வேண்டுமென்ற

[13th December 1971

பட்டன. இந்த 100 டிராக்டர்களையும் 1970 ஏப்ரலில் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் பெற்றுக்கொண்டது. இவ்வாறு வரப் பெற்ற டிராக்டர்கள், குடியானவர்களுக்குக் கொடுக்கப்படு முன்பு, இதற்கென முகமையில் அனுப்பப் பெற்ற ஜெர்மானிய தொழில் நுட்ப வல்லுநர் குழு துணை கொண்டு இணைக்கப்பட்டுச் சோதித்துப் பார்க்கப்பட்டன. 100 டிராக்டர்களின் மொத்த விலை சற்றேக்குறைய ரூ. 11 லட்சமாகும்.

2. இந்த ஆர்.எஸ். 09 டிராக்டர் 20 பரித்திறன் கொண்டது, "கருவிகள் தாங்கி" வகையைச் சேர்ந்தது இந்த டிராக்டரின் வடிவமைப்பு வழக்கமான வகை டிராக்டர்களினின்றும் பெரிதும் மாறுப்பட்டுள்ளது. இந்த டிராக்டரின் முன் பகுதியில் பல்வேறு வேலைகளுக்கு ஏற்ற கருவிகள் பல இணைக்கப்படலாம். விற்பனை உட்பட ஒவ்வொரு டிராக்டரின் சில்லறை விற்பனை விலை ரூ. 14,191 ஆகும்.

3. தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் 1970-ல் 13 டிராக்டர்களை விற்பனை செய்தது. குடியானவர்கள் தெரிவித்த சில குறைபாடுகள் கிழக்கு ஜெர்மானிய யந்திரப் பழுது பார்க்கும் பொறியாளர்களின் உதவியுடன் சரிசெய்யப்பட்டன. பஞ்சாப், குஜராத், ஆந்திரப் பிரதேசம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள ஏனைய வேளாண்-தொழில் கழகங்கள் வழங்கிய கிழக்கு ஜெர்மானிய டிராக்டர்களில் காணப்பட்ட குறைபாடுகளும் இந்திய அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டன. டிராக்டர்களில் குறைபாடுகளுக்கான காரணங்களை ஆய்ந்தறிய தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை இந்திய அரசு நியமித்தது. குறைபாடுகள் பட்டியலிடப்பட்டன. "ஒப்பந்தக்" குறிப்பில் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய யோசனைகள் கூறப்பட்டன. இந்த ஒப்பந்தக் குறிப்பு கிழக்கு ஜெர்மானியத் தொழில் நுட்ப வல்லுநர்களாலும், இந்திய அரசுப் பிரதிநிதிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தக் குறிப்பிற்கிணங்க, ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்டு வேளாண்-தொழில் கழகங்களிடம் முடங்கிக் கிடக்கும் டிராக்டர்களுக்குச் சில மாற்றங்களைச் செய்வதற்கு கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் ஒப்புக் கொண்டனர். இதன்படி தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்திடமுள்ள கிழக்கு ஜெர்மானிய டிராக்டர்களில் 12—3—1971 தொடங்கி கிழக்கு ஜெர்மானிய தொழில் நுட்ப வல்லுநர்கள் மேற்பார்வையின் கீழ் மாற்றங்கள் செய்யப்பட்டன. குடியானவர்களுக்கு ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

4. இந்தத் தயாரிப்பில் உள்ள (இப்போதுள்ள ஏற்பாடுகள்) குறைபாடுகளையும் அதன் பின்னர் 1971 மார்ச் தொடங்கி கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் செய்த மாற்றங்களையும் இத்துடன்



13th December 1971]

இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கை விரிவாகக் காட்டும். மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர், அண்மையில் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்தால் 6 டிராக்டர்கள் விற்பனை செய்யப்பட்டன. குடியானவர்களிடமிருந்து இதுவரை எவ்வித முறையீடும் வரப் பெறவில்லை.

5. டிராக்டர்களில் குறைபாடுகள் இருப்பதாக 12 பேர் குறை இரந்துள்ளனர். இந்த 12 பேர்களுள் கீழ்க்காணும் 3 பேர்கள், வேறுவகை டிராக்டர்களை மாற்றிக்கொள்வதற்காக தங்களிடமுள்ள டிராக்டர்களைத் திருப்பிக் கொடுத்துவிட விரும்புகின்றனர்:—

1. திரு. கே. துரைசாமி ரெட்டி, செங்கற்பட்டு மாவட்டம்.

2. திரு. சி. முத்து கவுண்டர், தருமபுரி மாவட்டம்.

3. திரு. ஏ. சவுந்தரராஜன், சேலம் மாவட்டம்.

கீழ்க்காணும் 2 குடியானவர்கள், பணத்தைத் திருப்பிக் கேட்டு, டிராக்டர்களைத் திருப்பி அனுப்பிவிட விரும்புகின்றனர்.—

1. திரு. கே. எம். பானு நாய்க்கர், செங்கற்பட்டு மாவட்டம்.

2. திரு. எஸ். காசிலிங்கக் கவுண்டர், கோயம்புத்தூர் மாவட்டம்.

மூன்று பேர்கள் டிராக்டர்களை வைத்துக் கொள்ளக் கூடும். எஞ்சியுள்ள நால்வர் இந்த டிராக்டர்களுக்குப் பதிலாக வேறு வகை டிராக்டர்களை விரும்புகின்றனரா அல்லது பணத்தைத் திரும்பப்பெற விரும்புகின்றனரா என்னும் பதிலை இவர்களிடமிருந்து தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் எதிர்ப்பார்க்கிறது.

6. மாற்றி அமைக்கப்பட்ட ஆர்.எஸ். 09 கிழக்கு ஜெர்மனி டிராக்டர்கள் எவையேனும் மனநிறைவளிக்கும் வகையில் வேலை செய்யவில்லை எனில், குடியானவர்கள் அவற்றைக் கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்களுக்குத் திருப்பி அனுப்பி டிராக்டர் ஒன்றுக்கு ரூ. 10,600-ல் ஆண்டொன்றுக்கு 8 சதவிகிதம் தேய்மானத் தொகையாக கழித்துக் கொண்டு, மீதியை பெற்றுக் கொள்ளலாம் என்று இந்திய அரசு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்திற்கு முன்னர் அறிவித்திருந்தது. 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதி வரை மாற்றியமைக்கப்பட்டுள்ள டிராக்டர்களை மட்டுமே திரும்பப் பெற்றுக்கொள்ள கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் தயாராக இருப்பதாக இந்திய அரசு, தமிழ்நாடு வேளாண்-

[14th December 1971

முயற்சியை மேற் கொள்ள டாக்டர் மு. வரதராசன் அவர்கள் தலைமையில் தனிக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அதற்கான பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி மன்றம் பல்வேறு யோசனைகள் தெரிவித்து, அதன் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ் எழுத்துக் களுக்குச் சரியான ரோமன் எழுத்துக்களை உருவாக்குதல், எழுத்துச் சீர் திருத்தம் செய்தல், தமிழ் மக்களின் ஆதாரபூர்வமான வரலாறு தயாரித்தல், தமிழ்த் தந்தி முறைத் தட்டச்சு உருவாக்குதல், தமிழில் தந்திச் செய்திகளை அனுப்ப ஏற்பாடு செய்தல், ஆகிய முன்னேற்றங்கள் குறித்த முயற்சிகளை இம்மன்றம் அரசுக்குப் பரிந்துரையாக அனுப்பி வைக்கின்றது. தமிழ் நூல் களின் விவர அட்டவணை தயாரிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து, 1867 முதல் 1957 வரை பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களின் அட்டவணை தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1910-ம் ஆண்டு முடியப் பதிவு செய்யப்பட்ட நூல்களைக் குறித்த தொகுப்புகள் 1964-க்குள் முடிக்கப்பட்டன. 1867 முதல் 1910 வரைக்கான விவர அட்டவணை நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. மற்றவை தயாரிக்கப்படுகின்றன. தமிழ் வளர்ச்சிக் கழகம் ஏற்படுத்தி, அதில் சிறந்த நூல்கள் என்று கருதப்படுகிற நூல்கள் வெளியிடு வதற்கான முயற்சிகளில் ஆராய்ச்சி மன்றத்தின் தீர்மானம் வாயிலாக உருவாக்கப்பட்டு, அது 200 நூல்களை வெளியிட்டது. இது தவிர தொழில் நுட்ப அறிவினைப் பெருக்கும் வகையில் மருத்துவம், அரசியல், வேதியல், போன்ற அறிவியல் நூல்களுக்கான அகராதியை வெளியிட்டுள்ளது. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் ஒரு பிரிவாக கல்லூரித் தமிழ்க் குழு அமைக்கப்பட்டு, இவை செய்யப்பட்டன. சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. 20 தனிப் பிரிவுகளின் கீழ் தமிழில் வெளியிடப்படும் சிறந்த தமிழ் நூல்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு தலைப்பின்கீழ் முதற் பரிசாக ரூ. 2,000, இரண்டாம் பரிசாக ரூ. 1,000 கொடுக்கப்பட்டு வருகிறது. நாட்டுப்பாடல்கள், இலக்கியங்கள் சேகரிப்பதற்காகக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அவர்கள் நாட்டுப் பாடல்களைத் திரட்டி வைத்திருக்கிறார்கள். தமிழ்க் கலைக்களஞ்சியம் வெளியிட ரூ. 4,31,552 அளிக்கப்பட்டு அதில் 9 தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. ரூ. 1,45,000 சிறுவர் கலைக்களஞ்சியம் வெளியிட அளிக்கப்பட்டது. அதில் மூன்று தொகுதிகள் வெளிவந்தன. கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் ஆராய்ந்து படியெடுத்து மொழிபெயர்த்து வெளியிடுவதற்காக தமிழ் வரலாற் றுக் கழகத்திற்கு ரூ. 53,000 வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சி மன்றத் தின் உட்குழுவின் முடிவின்படி ஆராய்ச்சியாளர்கள் நியமிக்கப்பட்டு கன்னியா குமரி கோயில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்பற்றியும் தனி நூல்கள் எழுதப்பட்டன. அதேபோன்ற திரு. கே. கே. பிள்ளை எழுதிய சுசீந்திரம் கோயில் என்னும் நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடுவதற்காக ரூ. 1,000 முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. குழந்தை இலக்கிய ஆராய்ச்சி செய்வதற்காக ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் குழந்தை இலக்கிய ஆராய்ச்சி குறித்து விரிவானதொரு திட்டத்தையும் அறிக்கையையும் அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். புதிய சிறந்த நூல்களை வெளியிட முன்வருகிறவர்களை ஊக்கு விக்க அந்நூலாசிரியர்கள் வெளியிட முன்வந்தால், அவர்களுக்கு 1,000 படிகள் அச்சிடும் செலவில் பாதித் தொகையை அரசு மானியமாக வழங்குகிறது. இப்படியாக பல வகைகளில் இந்த மன்றம் செயல்பட்டு வருகிறது.



14th December 1971]

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம் முன்பு வெளியிட்டுள்ள நூல்களை விட இப்போது வெளியிடும் நூல்களின் விலை அதிக மாக இருப்பதால், பலரும் அதை வாங்கத் தயங்குகிறார்கள். ஆகவே விலையைக் குறைத்து அச்சிட்ட நூல்கள் பயனுள்ள வகையில் விநியோகிக்கப்பட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதில் லாப நோக்கம் இல்லை, கட்டுப்படியான விலையில்தான் குறைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் கூறியதைப் போல இருந்தால், எவ்வளவு நூல்கள் இருக்கின்றன என்ற கணக்கைப் பார்த்து அவை விலைபோகாமலிருந்தால், நாம் மானியம் கொடுத்துத் தான் விலையைக் குறைக்கவேண்டி வரும். அதைத் தனியாக ஆராயலாம்.

## *Tamil Nadu Public Libraries Act, 1948*

* 167 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the Tamil Nadu Public Libraries Act, 1948; and

(*b*) if so, the details thereof?

### 1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டம்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டத்தைத் திருத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) 1948-ம் ஆண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் கண்ட நிர்வாகச் சிக்கல்களை நீக்கவும், நூலகங் களின் பணிகளைச் செம்மைப்படுத்துவதற்கான அதிகாரங்களைப் பெறவும் சில திருத்தங்களை அந்தச் சட்டத்தில் செய்ய அரசு பரிசீலனை செய்து கொண்டிருக் கிறது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** முக்கியமான மாற்றங்கள் என்ன என்று அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஏற்கனவே செஸ் விகிதம் போதுமான அளவுக்கு இல்லாததால் செஸ்ஸைக் கொஞ்சம் அதிகமாக்க வேண்டு மென்று அண்மையில் கூடிய ஆலோசனைக் குழுவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த நூலகங்களுக்குத் திரட்டப்படுகிற மானியம் மற்ற நிதிகள் வகை யாவும் நிர்வாகச் செலவைக் கட்டுப்படுத்துவதற்குத்தான் பயன்படு

கிறதே தவிர, புதிய நூல்கள் வாங்கி நூலகங்களில் சேர்ப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. பல இடங்களில் ஒரு புத்தகம் கூட வாங்காமல் இருக்கிறார்கள். ஆகையால் அதற்கான நிதி வசதியைப் பெருக்கவேண்டியிருக்கிறது. ஆணைக் குழுவின் தலைவர் கடமை, அதிகாரங்கள், செயலாளரின் கடமைகள், அதிகாரங்கள் இவையெல்லாம் வரையறுக்கப்படாமல் இருக்கின்றன. அப்படியிருப்பது ஐயத்திற்கு இடமாக இருப்பதால், அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற உணர்வு ஏற்படுகிறது. நூலகங்களைப் பொறுத்து அரசு மேற்கொள்ள வேண்டிய அதிகாரங்கள் என்ன என்பதையும் அதற்கும் அரசிற்கும் என்ன தொடர்பு என்பதையும் குழப்பமில்லாமல் தெளிவாக்க வேண்டும். குற்றம் செய்கிறவர்களை ஆணைக் குழு திருத்துவதற்கு சட்டத்தில் இடமில்லை. இப்படி அனுபவத்தில் ஏற்பட்ட குறைபாடுகளைக் கண்டு, அதற்கேற்ப திருத்த, யோசனை இருக்கிறது. பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் அதைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாவட்ட நூலகச் செயலாளராக இருப்பவர் இப்போது மாவட்டக் கல்வி அதிகாரியாக இருக்கிறார். அவருடைய மற்றக் கடமைகளைச் செய்து கொண்டு இதையும் செய்யவேண்டியிருப்பதால், சரியாகக் கவனிக்க முடியவில்லை என்ற கருத்து இருக்கிறது. அதனால் புதிதாக ஒரு செயலாளரை முழு நேர ஊழியராக நியமித்தால், அவரிடம் முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டால், சௌகரியமாக இருக்குமென்ற கருத்து இருக்கிறது. அதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற ஆணைக் குழுக் கூட்டத்தில் இந்தக் கருத்து விவாதிக்கப்பட்டு முழு நேரச் செயலாளரை நியமிக்கலாம் என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாநில அளவில் இதைக் கவனிப்பதற்கு தனி இயக்குனர் நியமித்து அவர்களுக்குக் கீழே செயலாளரை அங்கங்கே அமைத்துக்கொள்ளலாம் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கத்தில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவை எடுக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் இந்தச் சட்டத் திருத்தத்தில் ஒன்றாக இருக்கும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, இது நூலகச் சட்டத்தைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும், சட்டமன்றத்தில் உள்ள நூலகம் பற்றி ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். தற்காலப் புத்தகங்கள் அங்கே கிடைப்பதில்லை. புத்தகங்களைச் சரியான முறையில் சேகரிப்பதற்கு இரண்டு அவையில் உள்ள அங்கத்தினர்களைப் பொறுக்கி ஒரு ஆலோசனைக் குழுவை ஏற்படுத்தி தற்காலப் பத்தகங்களைச் சேகரித்து வைக்க அரசு வகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதற்கு ஒரு ஆலோசனைக் குழு வேண்டுமென்ற அவசியமில்லை. ஹவுஸ் கமிட்டி இருக்கிறது. அவர்களே ஆராய்ந்து சொல்வார்களானால், அதற்கான நடவடிக்கையை எடுக்கலாம். என்ன நிலைமை என்பதை ஆராய வேண்டும். நம்முடைய சட்டமன்றத் துறையிலுள்ள நூலகம் மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்று. நாம் பெருமைப்படக் கூடிய ஒன்றாகும். மைசூருக்கு நான் போயிருந்தபோது அங்கே குறிப்பிட்டார்கள். சென்னையில் உள்ளதைப் போல பத்தில் ஒரு பங்கு கூட அங்கே இல்லை என்று அந்தச் செயலாளர் குறிப்பிட்டார். அப்படி மிகச் சிறந்த பழமை



யான, வேறு இடங்களில் கிடைக்காமல் உள்ள, புத்தகங்களைக் கொண்ட நூலகம் இது. உறுப்பினர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. ஏதாவது செய்ய வேண்டுமென்றால், தனியாக ஆராய்ந்து செய்யலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பார்லிமெண்ட் லைப்ரரியில் Prem clipping Service என்று வைத்திருக்கிறார்கள். பத்திரிகையில் வருகிறவற்றைத் தனியாக எடுத்து ஒட்டி வைத்திருக்கிறார்கள். அது சமயத்தில் உறுப்பினர்களுக்குப் பயன்படுகிறது. அதுபோன்று நமது அரசால் இங்கே ஏற்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சாதாரணமாகச் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். நூலகங்களில் அது இருக்கிறதா இல்லையா என்ற குறிப்பில்லை. அதைப்பற்றி ஆராயலாம்.

### *Experiments in Education*

* 168 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Officers of the Education Department were deputed by the Government to study the experiments in education in other States; and

(*b*) if so, the details thereof?

### கல்வியில் சோதனைகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏனைய மாநிலங்களில் கல்வியில் செய்துள்ள சோதனைகள் பற்றி ஆய்வு செய்ய அரசால் கல்வித் துறை அதிகாரிகள் எவரேனும் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1970 மேலும் 1971 ஆண்டுகளில், அவ்வப்பொழுது இம்மாநிலக் கல்வித்துறை உயர் அலுவலரின் ஓரிருவர் பிற மாநிலங்களுக்குச் சென்று அங்கு சில நாட்கள் தங்கி அம்மாநிலங்களில் கல்வித்துறையில் நிகழும் சிறப்பான நடவடிக்கைகளையும் முன்னோடித் திட்டங்களையும் பயின்று திரும்பி வந்திருக்கின்றனர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: குறிப்பாக எந்த அம்சத்தில் சீர்திருத்தம் செய்வதாக ஆலோசனை கூறியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு மே திங்களில் டெல்லியில் நடைபெற்ற மாநிலக் கல்வித் துறை செயலாளர்கள் மகாநாட்டில் ஒரு முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலுள்ள முக்கியமான உயர்மட்ட கல்வித் துறை அதிகாரிகளை வேறு பல மாநிலங்களுக்கு அனுப்பி அங்குள்ள நிலைமைகளை நேரடியாகக் கண்டு அந்தந்த மாநிலங்களிலுள்ள தனிச் சிறப்புகளை நாம் ஏற்று செயல்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்று தீர்மானம் செய்தார்கள். அதில் ஏற்படுகிற செலவுகளை மத்திய அரசு ஏற்றுக்

தொழில் கழகத்திற்கு இப்போது தெரிவித்துள்ளது. இந்த டிராக்டர்களை மாற்றியமைக்கும் பணி இம்மாநிலத்தில் 1971 மார்ச்சிலிருந்து தொடங்கிச் செய்யப்பட்டதால் மேலே, இந்திய அரசுக் கடிதத்திற்கிணங்க, இந்த டிராக்டர்களில் எதுவும் கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்களால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆகவே விற்பனை செய்யப்படாதவை உட்பட மாற்றி அமைக்கப்பட்ட, மாற்றி அமைக்கப்படாத எல்லா டிராக்டர்களையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் கடிதம் அனுப்பியுள்ளது. இவர்களிடமிருந்து பதிலைக் கழகம் எதிர்பார்க்கிறது.

7. இதற்கிடையில் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் இதை இயக்குநர்கள் குழு முன்பு வைத்தது இயக்குநர்கள் குழு 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் தேதி அன்று நடத்திய அதன் கூட்டத்தில், ஆர்.எஸ். 09 டிராக்டர்களைத் திருப்பிவிடுவது குறித்து விவாதித்தபிறகு, கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்குட்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரில், குடியானவர்கள் திருப்பித்தரும் டிராக்டர்களை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் தீர்மானித்தது:—

(1) ஆர். எஸ். 09 டிராக்டரைத் திருப்பிவிட விரும்பி அதைக் கழகத்திடம் ஒப்படைத்துவிட்ட அதன் சொந்தக்காரருக்கு, கிழக்கு ஜெர்மானிய கம்பெனி கொடுக்கக்கூடிய தொகை கொடுக்கப்படும்.

(2) கிழக்கு ஜெர்மானிய கம்பெனி டிராக்டர்களை எடுத்துக் கொண்டு தொகை கொடுத்தாலன்றி, கழகம் தொகை கொடுக்காது. இந்தத் தொகைக்காக நிதி உதவும் நிறுவனங்களுக்குக் கழகம் உத்தரவாதக் கடிதம் கொடுக்கும். இந்த உத்தரவாதக் கடிதத்தின் பேரில் நிதி உதவும் நிறுவனம் குடியானவர் புதிய டிராக்டர் வாங்கிக் கொள்ள இரண்டாவது கடன் கொடுக்கலாம்.

(3) வங்கிகளால் கடன்கள் அனுமதிக்கப்பட்டவுடனேயே, இந்தக் குடியானவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிய டிராக்டர்கள் கொடுக்கப்படும்.

(4) மாற்றி அமைக்கப்பட்ட அல்லது மாற்றி அமைக்கப்படாத எல்லா டிராக்டர்களுக்கும் அவை கிழக்கு ஜெர்மானியத் தயாரிப்பாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குட்பட்டு, இது பொருந்தும்.

(5) (முதலில் டிராக்டருடன் கொடுக்கப்பட்ட) எல்லா இணைப்புகளையும் துணைக் கருவிகளையும் ஆர்.எஸ். 09 டிராக்டர் சொந்தக்காரர்கள் அந்த டிராக்டர்களுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும்.





(6) ஆர்.எஸ். 09 டிராக்டர்கள் வாங்கக் கடன் ஏதும் வாங்காதவர்களைப் பொறுத்தமட்டில், முன்னுரிமை அடிப்படையில் குடியானவருக்குக் கொடுக்கப்படும் புதிய டிராக்டர் விலையில் மேலே (1)-ல் சொல்லிய தொகையைக் கழகம் கழித்துக்கொள்ளும். மேலும், வேறு டிராக்டர் வாங்குவதாக இல்லை என்று கழகத்திற்கு அவர் உறுதி அளிப்பதன் பேரில், கழகம், மேலே (1)-ல் குறிப்பிட்ட தொகையை ரொக்கமாக அவரிடம் கொடுக்கும் அல்லது ஆர்.எஸ். 09 டிராக்டர் வாங்கக் கடன் கொடுத்த நிறுவனத்துக்குக் கொடுக்கும்.

(7) மாநில, மத்திய அரசுகள், இந்திய அரசு வாணிகக் கழகம் வசூலித்த வரிகள், நிதிக் கட்டணங்கள் செலுத்தியதால் குடியானவருக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடாகத் தொகை எதுவும் அவருக்குக் கொடுக்கப்பட மாட்டாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கும் முடிவுக்கிணங்க இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(8) டிராக்டர் கைமாறும்போது வில்லங்கம், எதுவுமில்லாமலும் மாற்றிக்கொடுப்பதற்குக் குடியானவர் முழு உரிமையுள்ளவராக இருந்தால் மட்டுமே திருப்பிக் கொடுக்கப்படுகிற டிராக்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விற்பனையாகாத டிராக்டர்கள் திருப்பப்படுவது குறித்து கிழக்கு ஜெர்மானியக் கம்பெனியுடன் கலந்து கொண்டு இந்திய அரசு முடிவு எடுக்கவேண்டியிருப்பதால் இதை உடனடியாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு இந்திய அரசுக்கு எழுதுவதென தமிழ்நாடு வேளாண்-தொழில் கழக இயக்குநர் குழு தீர்மானித்துள்ளது. அதன்படி இது குறித்து மைய அரசுக்கு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் எழுதியுள்ளது. அதன் முடிவு இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றது.

*திரு. டி. கே. ஷண்முகம் : தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநகரத்தில் காவல் துறையில் மிகச் சிறந்த கரகக் கலைஞர்கள் பணிபுரிந்து வருவதை நான் அறிவேன்; பலமுறை பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். எனவே அந்தக் கரகக் கலைக் குழுவின் தலைவருக்கு இந்தப் பரிசு கொடுக்கும்படியான வாய்ப்பை அளிக்க அரசு அன்போடு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கரக ஆட்டத்திற்கான பரிசைச் சிலர் பெற்றிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. இத்தகைய பரிசுகள் அதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவினால் ஆராயப்பட்டு பரிந்துரை செய்வதன் மூலம் வழங்கப்படுகின்றன. அரசாங்கம் அதை நேரடியாகத் தர இயலாது.*

*மிஸ்டர் சேர்மன் : போலீஸ்காரர்கள் கரக ஆட்டம் ஆடி பரிசு வாங்குவதை விட அவர்கள் போலீஸ் வேலையை நன்றாகச் செய்து பரிசு வாங்கலாமே?*

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கிராமக் கலைகளைப் பற்றிய புராதன நூல்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதைத் தேடி ஆராய்ந்து பார்த்து, அவற்றை மறுபடியும் அச்சிடவோ அல்லது அதைப் பத்திரமாகச் சேகரித்து வைக்கவோ ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டிருக்கின்றனவா? காவடிச் சிந்துகளில் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து இரண்டு மூன்று பதிப்புகள் அச்சாகியிருக்கின்றன. அவை பொருத்தமாக இல்லை. பல பிழைகள் அதில் இருக்கின்றன. ஆகையால் இந்தப் பழங்கால நூல்களை அறிந்தவர்கள், அவற்றைக் கவனத்தில் கொண்டிருக்கிறவர்கள், ஆராய்ந்து இதிலுள்ள குறைகளைப் போக்கி சரியாக அச்சிட அரசு ஏற்பாடு செய்யுமா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பாக நாட்டுப் பாடல்கள், இலக்கியங்கள் திரட்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு சிலவற்றைச் சேகரித்தது. அவை மிகக் குறைவாக இருப்பதால், அப்படியே இருக்கின்றன. சங்கீத நாடக சங்கத்தின் மூலமாக கிராமிய நடனங்கள் வேறு இதுபற்றிய இலக்கியங்களைத் தொகுத்து வெளியிட முயற்சி செய்யலாம். அதற்கு அச்சங்கத்தைக் கேட்கும் முயற்சியை மேற்கொள்ளலாம்.*

## *Stadia*

* 170 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) the number of Stadia constructed by District Sports Councils for public use in mofussal as on date; and

(*b*) whether there are any proposals to construct more Stadia in the State?



*திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—*

*(அ) இன்றுள்ளபடி, வெளியூர்ப் பகுதிகளில் பொதுமக்களின் பயனுக்காக, மாவட்ட விளையாட்டுக் குழுக்களால் கட்டப்பட்டுள்ள விளையாட்டு அரங்குகளின் எண்ணிக்கை என்ன?*

*(இ) இம் மாநிலத்தில் மேலும் விளையாட்டு அரங்குகள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) மூன்று, வட ஆற்காடு, திருச்சி, நீலகிரி.*

*(இ) ஆம்.*

*திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் இது மாதிரி விளையாட்டு அரங்கு கட்டுவதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா? ஆமெனில் எந்த இடத்தில்?*

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட விளையாட்டுக் குழு திருப்பத்தூரில் ஒரு விளையாட்டு அரங்கும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு விளையாட்டு அரங்கும் கட்ட யோசனை கொண்டுள்ளது. அதற்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

## *Tutors and Demonstrators*

* 171 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Government have fixed M.A., or M.Sc., as the minimum qualification for appointment of Tutors and Demonstrators in Government Colleges;

(*b*) if so, the details thereof; and

(*c*) the number of such qualified candidates who have applied for temporary appointments in Government Colleges during 1971–72?

### நெறிமுறை ஆசிரியர்கள் கட்புல விளக்குநர்கள்

*திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :*

*(அ) அரசுக் கல்லூரிகளில் நெறிமுறை ஆசிரியர்களாகவும்* **Tutors** *அல்லது கட்புல விளக்குநர்களாகவும்* **(Demanstrators)** *நியமனம் செய்யப்படுவதற்கு எம்.ஏ.எம்.எஸ். ஸியைக் குறைந்த அளவுத் தகுதியாக அரசு வரையறுத்துள்ளதா?*

*(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?*

[14th December 1971

### கிருஷ்ணா, கோதாவரி, காவிரி ஆறுகளை இணைத்தல்

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி* : மாண்புமிகு பொது பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கிருஷ்ணா, கோதாவரி, காவிரி ஆறுகளை ஒன்றாக இணைப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்குமாறு இந்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

*மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா* : (அ) & (இ) இல்லை.

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி* : இப்படி ஒரு திட்டத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதாக நான் படித்த ஞாபகம். ஆகவே இதுபற்றி அரசு ஆலோசனை செய்ய வில்லையா ? அல்லது பரிசீலனை செய்யவில்லையா ?

*மிஸ்டர் சேர்மன்* : இருக்கிறது அல்லது இல்லை என்று சொல்ல வேண்டும். உறுப்பினர் ஞாபகமாக இருக்கிறது என்று சொல்வது சரியில்லை.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா* : திட்டத்தைப் பற்றி மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டதா என்று கேட்டதற்கு, இல்லை என்று சொன்னேன். "இர்ரிகேஷன் கமிஷன்" இங்கே வந்தபோது, இந்தப் பரிந்துரையை இர்ரிகேஷன் கமிஷனிடத்தில் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு*: கிருஷ்ணா, கோதாவரி, காவிரி ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்குச் செயல்குறிப்பு இல்லாவிட்டாலும், கங்கை, காவிரி, தாம்பிரவருணி ஆகியவைகளை இணைக்க மத்திய அரசு குழு நியமித்து முடிவு செய்யப்போகிறதே, அப்படி வரும்போது இவை அதில் இணைந்து விடுமா ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா* : கங்கை-காவிரியை இணைக்க ஒரு திட்டம் மத்திய அரசாங்கத்தின் நினைவில் இருக்கிறது.

We have also suggested that investigation for linking Krishna and Godavari as the tail-end reach of the Grand Feeder Canal and diversion of surplus waters of Godavari at Pochampod may be taken up immediately.

இந்தத் திட்டத்தையும் கங்கை-காவிரித் திட்டத்தையும் நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள்

*திரு. கே. ராஜாராம்* : தலைவர் அவர்களே, கங்கையிலிருந்து காவிரி வரையில் இணைப்பு என்ற திட்டம் வரும்போது, அதைத் தாம்பிரவருணி வரையில் நீட்டிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் செய்யுமா ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா* : கங்கை-காவிரி இணைக்கப் படும்போது, அதற்கான திட்டத்தை நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக வற்புறுத்துவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை.



14th December 1971]

### *Siruvani Comprehensive Scheme.*

*174 Q.—THIRU G. SWAINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reason for the delay, if any, in the implementation of Siruvani comprehensive Scheme to augment the drinking water-supply to Coimbatore City ?.

### சிறுவாணி அடங்கல் திட்டம்

*திரு. ஜி. சுவாமிநாதன்* : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

கோயம்புத்தூர் நகருக்குக் குடிநீர் வழங்கலை அதிகப்படுத்துவதற்கான சிறுவாணி அடங்கல் திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் இருப்பின், அதற்கான காரணம் யாது ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The final concurrence of the Kerala Government is required for the commencement of the work on this Scheme and the same is awaited. The construction of the dam is to be carried out by the Kerala Government. It is hoped that the work will commence at an early date, soon after an agreement in this behalf is signed and executed by both the Governments of Tamil Nadu and Kerala.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know where this reservoir will be built, whether in the territory of Kerala State or within our own State, who will pay for the construction of the reservoir and who will supervise the same?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Chairman, Sir, the reservoir is to be constructed within the territory of Kerala State. The Kerala Government have to undertake the execution of the reservoir project and the amount is to be spent by the Tamil Nadu Government. The supervision will be done by a joint Board of Engineers of Kerala and Tamil Nadu.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know the quantity of water the Kerala Government have consented to supply to us?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, the Kerala Government have consented to give 1.3 T.M. Cft. of drinking water to Coimbatore.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, may I know whether there is any need to enter into an agreement with the Kerala Government ?

[14th December 1971

(உ) 1971-72-ல், அரசுக் கல்லூரிகளில் தற்காலிக நியமனங்களுக்காக விண்ணப்பித்துக் கொண்ட தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : (a) yes.

(b) With a view to raise the academic standards, persons possessing I or II Class degree of M.A., or M.Sc., or Hons., of a University in the State of Tamil Nadu will be appointed for the post of Tutors and Demonstrators in Government Colleges.

| | | | |
|---|---|---|---|
| (c) | 1 | Tamil .. .. .. .. | 715 |
| | 2 | English .. .. .. .. | 152 |
| | 3 | Mathematics .. .. .. | 182 |
| | 4 | Physics .. .. .. .. | 159 |
| | 5 | Chemistry .. .. .. | 78 |
| | 6 | Economics .. .. .. | 266 |
| | 7 | History .. .. .. .. | 76 |
| | 8 | Botany .. .. .. .. | 66 |
| | 9 | Zoology .. .. .. .. | 106 |
| | 10 | Geography .. .. .. | 20 |
| | 11 | Commerce .. .. .. | 36 |
| | 12 | Social Science .. .. .. | 5 |
| | 13 | Telugu .. .. .. .. | 12 |

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, may I know whether the appointment of these M.A.'s and M.Sc.'s. as Tutors and Demonstrators will mostly affect the B.A.'s and B.Sc.'s who are already there in Government Colleges as Tutors and Demonstrators? May I also know, Sir, whether such instructions have been given to aided Colleges or whether the aided Colleges will recruit only Post-graduates as Tutors and Demonstrators and whether such a policy would affect the Tutors and Demonstrators who are already employed in aided Colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே நிரந்தரமாக வேலை பார்ப்பவர்களை இது எந்த வகையிலும் பாதிக்காது. இனி மேல் வேலைக்கு எடுத்துக் கொள்பவர்களுக்கு எம்.ஏ., எம்.எஸ்ஸி., இருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர் : அரசினுடைய கொள்கை திட்டவட்டமாக இருந்தாலும், பல தனியார் கல்லூரிகளில் ஏற்கனவே ஐந்து, பத்து ஆண்டுகள் வேலை பார்த்து பி.ஏ., பி.எஸ்ஸி., முதல் இரண்டாவது கிரேடு அனுபவப்பட்டு வேலை செய்கிறவர்களை அனுப்பிவிட்டு அந்த இடத்தில் எம்.ஏ., எம்.எஸ்ஸி., மூலமாக நிரப்புகிறார்கள். இருக்கிற டெமான்ஸ்ட்ரேட்டர்கள் பி.ஏ. பட்டம் தான் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் குறையாகச் சொல்லி வெளியே அனுப்புகிறார்கள். இதை அரசு தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே வேலைக்கு அமர்த்தப் பட்டவர்கள் அனுப்பப்படக் கூடாது என்று உத்தரவிருக்கிறது. ஏதாவது குறிப்பிட்ட நிகழ்ச்சியை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.



14th December 1971]

*Senthamizh Kalloori.*

* 172 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether representations have been received requesting the Government to take over Senthamizh Kalloori at Madurai; and

(b) if so, the action taken thereof ?

செந்தமிழ்க் கல்லூரி

திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரையில் உள்ள செந்தமிழ்க் கல்லூரியை அரசு ஏற்று நடத்துமாறு முறையீடுகள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாநில அரசு கீழைநாட்டு மொழிக்கல்லூரி எதுவும் நடத்தாத காரணத்தாலும், செந்தமிழ்க் கல்லூரியின் நிர்வாகமே தொடர்ந்து அக்கல்லூரியை நடத்த நிர்மானித்துள்ளபடியாலும், மாநில அரசு அக்கல்லூரியை ஏற்று நடத்துவதற்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்த செந்தமிழ்க் கல்லூரியை நடத்தும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இப்போது ஏதோ தகராறு இருப்பதாக அரசிற்குத் தெரியுமா? அந்தத் தகராறு தீர்ந்து பாண்டித் துரைத் தேவரால் ஸ்தாபிக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கம் நடைபெறுவதற்கு அரசினர் அவர்களுடைய செல்வாக்கை உபயோகிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது இரு குழுவினர் அதற்கு உரிமை கொண்டாடத் துவங்கியிருப்பதால் வழக்குமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அந்த இடங்கள் 'சீல்' வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழக்கு முடிந்ததற்குப் பிறகு இப்படிப்பட்ட குழப்பங்களுக்கு இடமில்லாத வகையில் சீராக்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

*Linking of the Rivers Krishna, Godavarai and Cauvery.*

* 173 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether the Government have requested the Union Government to examine the feasibility of linking of the rivers Krishna, Godavari and Cauvery; and

(b) if so, the details thereof ?

[14th December 1971

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The lease deed has not been revised. The lease amount has been revised.

THIRU G. SWAMINATHAN : May I know the rate at which we were being charged and the present rate we have agreed to give?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: In the supplemental lease deed signed on 29th May 1970, between the Governments of Tamil Nadu and Kerala, the acreage rent was raised from Rs. 5 to Rs. 30 for every acre of land dimised and granted to the Government of Tamil Nadu by the Kerala Government and this is subject to revision once in thirty years.

THIRU G. SWAMINATHAN : Sir, I understand from the statement of the Hon. Minister that the lease amount has been revised from Rs. 5 to Rs. 30. May I know the reason why such a large increase in the rate has been made and the necessity for such revision while we have got a lease for a period of 99 years ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The original agreement was entered into several years ago. The Kerala Government stressed the need to revise the rate of rent and the Tamil Nadu Government consented to it.

*திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: இதன் மூலமாக எவ்வளவு ரூபாய் அதிகத் தொகையாக கேரள அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டியிருக்கும்?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாம் ஏற்கனவே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40,000 கொடுத்து வந்திருக்கிறோம். இப்போது கணக்குப் போட்டுப் பார்த்தால், எவ்வளவு அதிகம் என்று தெரியும்.*

THIRU G. SWAMINATHAN : May I know whether any revised agreement has been made regarding power generation at Periyar House?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : My hon. Friend may put a separate question and I shall furnish him the details.

*திரு. கே. ராஜாராம்: ஏக்கருக்கு ரூ. 5-லிருந்து ரூ. 30 ஆக உயர்த்தப் பட்டிருப்பது விளைநிலங்களுக்கா? தண்ணீர் சேமித்து வைத்திருக்கும் குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமா?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நீர்த்தேக்க-தண்ணீர் நிற்கிற அந்த இடத்திற்கு மாத்திரம்தான்.*

### *Vaigai–Peyanaru Scheme*

* 151 £ Q.—PULAVAR THIRU O. ARIVUDAI NAMBI (on behalf of THIRU S. S. THENNARASU) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

£ Postponed from the list of Questions for 11th December 1971.



[14th December 1971

(a) whether the Government have any proposal to execute the scheme of Vaigai-Peyanaru (Azhagar Dam); and

(b) the details thereof?

**வைகை-பேயனூறு திட்டம்**

*திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :*

*(அ) வைகை-பேயனூறு (அழகர் அணை) திட்டம் பற்றி அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?*

*(இ) அதன் விவரங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.*

*(இ) திருச்சிராப்பள்ளி ஆய்வுப் பிரிவின் மேற்பார்வைப் பொறி யாளரால் வைகை-பேயனூறு திட்டம் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டு மென்று அரசு ஆணையிட்டது.*

### *All-India Examinations.*

* 177 Q.—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether any Training Institute is to be set up in Madras to impart training for Backward Classes students to write All-India Examinations ; and

(b) if so, the details thereof?

**அனைத்து இந்தியத் தேர்வுகள்**

*திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :*

*(அ) அனைத்து இந்தியத் தேர்வுகளை எழுத பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு சென்னையில் பயிற்சி நிலையம் ஏதேனும் அமைக்கப்படவிருக்கிறதா?*

*(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. க. ராசாராம் : (அ) ஆம்.*

*(இ) அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்காக, பின் தங்கிய வகுப்பினர்களிலிருந்து 50 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க சென்னையில் சிறப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.*

### *District Soliders', Sailors' and Airmen's Board.*

*178 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the names of Districts where full-time Secretaries have been appointed for the office of the District Soldiers', Sailors' and Airmen's Board ; and

[14th December 1971

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The agreement has not been signed. Correspondence is going on between the Kerala and Tamil Nadu Governments. The details are being worked out and we hope the agreement will be signed at an early date.

Thiru G. SWAMINATHAN : Sir, may I know whether the water-supply will be sufficient for the present population of Coimbatore, and if so, for how many years, the Government think, it will be sufficient ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : So far as I know, it will be sufficient up to 1980.

### *Poigai Dam Scheme.*

* 175 Q.—Thiru K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether a resolution has been passed at the meeting of District Development Council held on 29th December 1970 regarding the Poigai Dam Scheme of Aramboli Panchayat Union, in Kanyakumari District and sent to Tamil Nadu Government; and

(*b*) if so, the action taken thereon ?

### பொய்கை அணை திட்டம்

திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி பஞ்சாயத்து யூனியனிலுள்ள பொய்கை அணை திட்டம் பற்றி 1970 டிசம்பர் 29-ஆம் தேதி நடந்த மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி தமிழ் நாடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பொய்கை காலின் இரு கிளைக்கால்வாய்களுக்கும் தேவையான சில சீரமைப்புகள் வருகின்றன. இதன்பின் இவற்றின் செயலாற்றலை சில பருவங்களுக்கு கவனித்த பின்னர்தான் இந்நீர்த்தேக்கத் திட்டம் முடிவு செய்யப் படும்.

### *Somasila Project.*

* 176 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to seek the Drinking Water from Semasila Project from Andhra Government; and

(*b*) if so, the details thereof ?



14th December 1971]

### சோமசிலத் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சோமசிலத் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்குமாறு ஆந்திர அரசைக் கேட்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கிருஷ்ண-கோதாவரி பாசன ஆணைக்குழு அளித்த தீர்ப்பின்படி, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக 1,500 கோடி கனஅடி நீர் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 500 கோடி கனஅடி நீரை சோமசிலா நீர்த்தேக்கத்திலிருந்து தர ஆந்திர மாநில அரசும் ஒப்புக்கொண்டுள்ளது. சோமசிலத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இதுபற்றி ஆந்திர மாநில அரசுடன் கடிதத் தொடர்பு மேற்கொள்ளப்படும்.

### *Periyar Waters.*

* 150 £ Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of Kerala is demanding increased royalty for the supply of Periyar Waters to Tamil Nadu;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken by the Government thereon ?

### பெரியாற்று நீர்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரியாற்று நீரைத் தமிழ் நாட்டுக்கு வழங்குவதற்காக அதிகப் படியான உரிமைத் தொகையைக் கேரள அரசு கோருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Thiru G. SWAMINATHAN : Sir, may I know whether the Periyar lease deed has been revised recently ?

---

£ Postponed from the list of questions for 11th December 1971.

[14th December 1971

(b) the reason for selecting only some districts for such appointments?

மாவட்டக் காலாட் படை—கப்பற் படை—விமானப் படை வாரியம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) "மாவட்ட காலாட் படை—கப்பற்படை—விமானப் படை வாரிய" அலுவலகத்திற்காக முழுநேரச் செயலாளர்கள் எந்தெந்த மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்?

(இ) அந்த நியமனத்திற்காக, சில மாவட்டங்களை மட்டும் தெரிந்தெடுப்பதன் காரணமென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, சென்னை.

(இ) இம் மாவட்டங்கள், பெருமளவில் இராணுவத்துக்கு ஆட்கள் சேர்க்கப்பட்ட பகுதிகளாகும்.

THIRU G. SWAMINATHAN: May I know the reason why there is no full-time Secretary at Thanjavur even though there are a large number of ex-army men in Thanjavur district?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்த மாவட்டங்களில் மட்டுமல்லாமல் செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தர்மபுரி மாவட்டங்களிலும் தற்போது ராணுவத்தினர் எண்ணிக்கை பெருகியிருப்பதால், அந்த மாவட்டங்களிலும் முழு நேரச் செயலாளர் நியமிக்க சமீபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சோல்ஜர் செய்லர் & ஏர்மேன் போர்டு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU G. SWAMINATHAN: May I request the Hon. Minister to state the reason why the present Office Building of District Soldiers, Sailors and Airmen Board at Thanjavur is now being occupied by the Employment Exchange and why they are not having any Office Building at present at Thanjavur?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அலுவலகத்தைப் பற்றிய செய்தி எதுவும் என்னிடம் இல்லை. முழு நேரச் செயலாளர் நியமனம் பற்றிய கேள்வியாக இருப்பதால், அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

## *Chatram Department.*

*179 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the income derived from Chatram Department under the control of the Collector of Thanjavur yearwise from 1967; and

(b) the reasons for the lowering of income, if it is so?



14th December 1971]

சத்திரம் துறை

வர்களால் திடீரென்று இந்தியாவின் நிலைமைக்கு எதிராக இந்திய நாட்டிலிருந்து வெளியாகும் சுயராஜ்யா பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. எப்போதுமே சுயராஜ்யாவில் "'Dear Reader'" என்ற பகுதியில் சி.ஆர். என்று கையெழுத்திட்டு திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் எழுதப்படுவதாகும் இந்த வாசகம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1967-ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டு வாரியாக, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டுப்பாட்டின் கீழுள்ள சத்திரம் துறையிலிருந்து கிடைக்கும் வருவாய் யாது?

(இ) வருவாய் குறைந்திருந்தால், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அ) 1967-68 முதல் 1970-71 முடிய ஆண்டு வாரியாக கீழ்க்கண்டபடி வருமானம் வந்துள்ளது.

| ஆண்டு. | வருமானம். |
|---|---|
| 1967–68 | 7,14,380 |
| 1968–69 | 8,09,660 |
| 1969–70 | 7,65,780 |
| 1970–71 | 9,14 908 |

(இ) வருமானத்தில் குறைவு இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்த வருவாய் முழுவதும் வந்து சேர்ந்து விட்டதா? இன்னும் வரவேண்டியிருந்தால் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வந்து சேர்ந்து விட்டது. இப்போது சொன்னது வருவாயினுடைய கணக்குதான்.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

## II. ADJOURNMENT MOTION RE-STATEMENT OF THIRU C. RAJAGOPALACHARI IN 'SWARAJYA' ABOUT INDO-PAKISTAN SITUATION.

MR. CHAIRMAN: I have received notice of a motion from Thiru S. Muthuswamy, M.L.C. for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely,

திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் 11—12—71-ம் தேதிய "சுயராஜ்யா" என்ற ஆங்கில நாளிதழில் "யாக்யாகான் ஈத் பெருநாளில் விடுத்துள்ள செய்தியின் மீது சந்தேகம் கற்பித்ததன் மூலம், இந்தியப் பேரரசு இந்தப் பிரச்சினையை (இந்தியா-பாகிஸ்தான் பிரச்சினையை) பெரிதாக்கிவிட்டது" [The situation (Indo-Pak situation) was aggravated by the Government of India, expressing doubts about sincerity of Yahya Khan's Id offer of friendliness"]. என்று தேச பாதுகாப்புக்கும் தேச ஒருமைப்பாட்டுக்கும் எதிராக மக்களைத் தூண்டும் வகையில் எழுதியுள்ளதைக் கண்டிக்கும் பொருட்டும், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கையை விவாதிக்கவும்'.

***மிஸ்டர் சேர்மன் :*** வாசகங்கள் அப்படி தொனிக்கவில்லை. நீங்கள் பயன்படுத்தும் வாசகங்களில் குறிப்பிட்ட அந்த தொனியிருக்கின்றது. ஒருவரைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், எது பார்லிமெண்டரி, எது அன்பார்லிமெண்டரி என்பதைப்பற்றிப் புத்தகம் இருக்கிறது. அவைகளைப் பார்த்து என்ன வார்த்தையைப் பயன்படுத்தலாம் என்று உறுப்பினர் ஆராய்ந்து சொல்வது சரியாக இருக்குமென்று கருதுகிறேன்.

I want to know from the hon. Member how the matter falls within the scope of the rules governing adjournment motions.

* ***திரு. எஸ். முத்துசாமி :*** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்திய நாடு மிக நெருக்கடியான கால கட்டத்தில் இருந்து வருகிறது என்பதை இந்த நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் அறிவான். அவசர நிலை நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டு, நாட்டு மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றி சாதாரணமாக இருக்கக் கூடிய ஒவ்வொரு குடிமகனும் அறிந்திருக்கக் கூடிய நேரமாகும். இந்த நேரத்தில் நாட்டின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், எந்த பத்திரிகை செய்தியைப் பற்றிய விஷயங்கள் வெளிவந்தாலும், அவைகளை அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக செய்திப் பத்திரிகை வாயிலாக அறிகிறேன். இன்றைக்கு மிகப் பொறுப்பான பதவி வகித்தவர் முதல் இந்திய கவர்னர்-ஜெனரலாக இருந்தவர், தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்தவர், இந்திய நாட்டிலே அரசியல் அறிஞர் என்று மக்களால் கருதப்படுபவர், திருவாளர் ராஜகோபாலச்சாரியார் அவர்கள் டிசம்பர் 11, 1971 'சுயராஜ்யா' பத்திரிகையில் இந்த நாட்டின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் ஒரு விஷயத்தை எழுதியிருக்கிறார். அந்த விஷயம் சாதாரணமானதல்ல. நாட்டு மக்களை இந்த நாட்டின் பாதுகாப்பிற்கு எதிராகத் தூண்டும் முறையில் இருக்கிறது. இது அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னையாகும். சர்தாரணமாக டி.ஐ.ஆர்.ஐ. இந்திய அரசாங்கம் கொண்டு வந்து விட்ட பிறகு, நாடு பூராவும் ஒரே மனிதனைக நிற்கும் நிலையில், நாம் போரிலே ஈடுபட்டுள்ள நேரத்தில் நாட்டின் உணர்ச்சிகளுக்கு எதிராக, இந்தியத் தலைமை செய்தது தவறானது, என்று எழுதியுள்ளதன் மூலம் இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாகும் என்பதை மேற்குறித்த இந்த வாசகத்திலிருந்து அறிய முடிகிறது. ஆதலால் இதை எதிர்த்து மாணவர்கள் கூட யாகியாவுக்கு ஆதரவு காட்டும் தேசதுரோகி இராஜாஜியைக் கைது செய் என்று அச்சிடப்பட்டு "வால்போஸ்டர்" ஒட்டியிருப்பதை இந்த நேரத்தில் சென்னை நகரத்தில் காண்கிறோம். யாகியா கான் ஈத் பெருநாளுக்கு விட்ட செய்தியின் ஒற்றுமை உணர்ச்சியை இவர்கள் (இந்திய அரசு) சந்தேகித்த காரணத்தால் போர் உண்டாகியிருக்கிறது என்றும், இந்தப் போர் அரசால் தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைப்போன்றும் இந்திய அரசால் போர் மூண்டிருக்கிறது என்பதைப் போலவும், எழுதியுள்ளார். இது வரை இந்தியத் தலைமை நிலைகுலையாது, நேர்மை குலையாது செயல்பட்டு வருகிறது என்று இதுவரை பேசி எழுதிவந்தவர், திடீரென்று அவருக்கு ஏதாவது செய்தி வந்து அதன் மூலம் நிக்சனுடைய மறு பிறவிபோல் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த பயங்கரமான வாசகத்திலிருந்து இது ஒரு நாட்டுக்குச் செய்யும் துரோகச் செயல் என்று நான் கருத வேண்டியிருக்கிறது. அந்த வாசகம் அப்படிக் குறிப்பிடுகின்றது. நிக்சன் செய்தது நியாயம் என்பது போல் பேசுகிறார்கள். இது வரை இந்திய நிலைமை ஆதரித்துக் கொண்டிருந்த



இதுகாறும் பஞ்சாயத்துச் சட்டம் எப்படி செயல்பட்டு வந்திருக்கின்றது, பஞ்சாயத்துக்களுடைய வளர்ச்சி எவ்வாறு இருக்கிறது, அதில் ஏற்பட்டுள்ள அனுபவபூர்வமான குறைபாடுகள் என்ன, நிதிவகையிலும், நிர்வாக வகையிலும் ஏற்பட்டுள்ள தடங்கல்கள், குறைகள் என்ன என்பதை ஆராய்வதற்காக ஒரு

**The situation (Indo-Pak.) was aggravated by the Government of India, expressing doubts about sincerity of Yahya Khan's Id offer of the friendliness.**

யாகியா கான் சின்சியாரிட்டியைப் பற்றி இந்த நாட்டு மக்களின் அரசாங்கத்தின் சரியான நடவடிக்கைகளை தனிப்பட்ட முறையில் உடகார்ந்திருக்கும் ஒரு பெரியவர், மிக உயர்ந்திருப்பதாகக் கருதப்படும் ஒரு பெரியவர்—அவருக்கு எப்படி யாகியாகானின் சின்சியாரிடியைப்பற்றி அபிப்பிராயம் வந்திருக்கிறது என்று நமக்குப் புரியவில்லை. என்ன இரகசிய உறவு இவருக்கு வந்துள்ளது ? இது மிகப் பயங்கரமான விஷயமாகும். நாட்டின் பாதுகாப்பிற்கு எதிராக எழுதிய பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். கரண்ட் பத்திரிகை நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிராக எழுதியுள்ளது, அதன் ஆசிரியர் கைது செய்யப்பட்டிருக்கிறார். நவசக்தி பத்திரிகையில் இந்த நாட்டின் அரசிற்கு, அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக எழுதப்பட்ட காரணத்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டுக்கு ஊறு விளைவிக்கக் கூடியவர்கள் எவ்வளவு பெரியவர்களானாலும், பணக்காரர்களாக இருந்தாலும், செல்வாக்கு மிக்கவர்களானாலும், யாராக இருந்தாலும் தவறான அவர்களது செய்கையைத் தவறுதான் என்று சுட்டிக் காட்டுவது அவசியம். இது மிகச் சாதாரணமான விஷயம் அல்ல. மிகப் பயங்கரமான விஷயம். அதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன். ஆகவே, இந்த பயங்கர விஷயத்தை விவாதிக்க அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைப்பது சரியாக இருக்குமென்பதாலும், அரசு இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தே தீரவேண்டுமென்று சொல்லி அதற்கான முயற்சிகள் மேற்கொள்ள உதவியாக இருக்குமென்பதாலும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதிக்க வேண்டுகிறேன். இந்த நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை இது. அன்றாட நிகழ்ச்சி அல்ல. இதன்மீது நடவடிக்கை எடுக்கும் முறையில் இந்தத் தீர்மானத்தை ஏற்று அவையை ஒத்தி வைத்து விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஜி. சுவாமிநாதன் :*** ஒரு பெரியவர் எழுதிய விஷயத்தைப்பற்றி எடுத்துச் சொல்வதில் தவறில்லை. ஆனால் துரோகி என்றும், காட்டிக் கொடுப்பவர் என்றும், நிக்சனின் மறுபிறவி என்றும் இந்த மன்றத்தில் சொல்வது சரியானதல்ல என்று நினைக்கிறேன். அந்தத் தலைவரைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டதால், மற்ற தலைவர்கள் மீதும் யாரும் இந்த சபையில் இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவர ஏதுவாகும்.

***திரு. எஸ். முத்துசாமி :*** தலைவர் அவர்களே, நான் வாசகங்கள் அப்படித் தொனிக்கின்றன என்றுதான் சொன்னேன், நான் மிக உன்னிப்பாக ஆய்ந்து வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறேன். இந்த வாசகங்கள் தனி மனிதனைப் பற்றிச் சொல்லப்படவில்லை.

[14th December 1971

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்ற ஆண்டு இதே நேரத்தில் இந்தியாவைக் காப்போம் என்ற குரலுக்குச் சொந்தமாக இருந்த பெரியவர் இந்த ஆண்டு "ஸ்வராஜ்யா" பத்திரிகையில் இப்படி ஒரு கட்டுரையை எழுதியிருப்பதும், அதைவிட மோசமான முறையில் அதனை 'கல்கி' பத்திரிகையில் 12—12—71 இதழில் வெளியிட்டிருப்பதும் உள்ளபடியே வருந்தத் தக்க விஷயமாகும். சமாதான காலத்தில் எந்த ஒரு கருத்தையும் கூறவோ விமரிசனம் செய்யவோ எல்லோருக்கும் உரிமை உண்டு. ஆனால் நாடு போரில் ஈடுபட்டு நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும்போது, எந்த ஒரு கருத்தும் விமரிசனமும் எதிரிக்குப் பயன்படும் வகையில் அரசுக்கும் விரோதமாக வெளியிடப்படுமேயானால், அதனைப் பாதுகாப்புச் சட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது நல்லதல்ல, நாட்டுப் பாதுகாப்புக்கும் உகந்ததல்ல. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் 'கரண்ட்' பத்திரிகை ஆசிரியர் காரக்கா உட்பட பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அண்டை மாநிலமான கேரளத்தில் கூட பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு இது போன்று எதிரிக்கு இடம் தரும் வகையில் அரசுக்கும், நாட்டுக்கும் விரோதமாகக் கருத்துக்கள் வெளியிடும் நிலைமை வராவண்ணம் பார்த்துக்கொள்ளும். ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்ற கருத்தைத் தலைவரவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

MR. CHAIRMAN: I have heard both sides. In view of the Hon. the Chief Minister's reply, I withhold my consent for raising the matter.

## III. DISCUSSION ON THE FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOC 1971-72.

மிஸ்டர் சேர்மன்: உறுப்பினர்கள் 11 பேர் பேசுவதாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அத்தனை பேரும் பேசுவது சரி என்று நினைத்தால், ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நலம் என்று கருதுகிறேன்.

* திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கை சபையில் வைக்கப்பட்டிருக்கின்றது. இது சம்பந்தமாக இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இவைகள் இப்போது செயலாற்றும் தன்மை குறித்து பல்வேறு கருத்துக்கள் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் குறை கண்டவர்கள் பலர் சம்பந்தப்பட்ட பத்திரிகையிலும் அதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். இந்தச் சட்டம் எதற்காகச் செய்யப்பட்டது? விரிவாக, பரவலான முறையில் நல்ல ஜனநாயகத்துக்கு ஒத்த வகையில் எப்படிச் செயல் படவேண்டும் என்று கருதினோமோ, அதே முறையில் வளர்ச்சி காணவில்லை என்ற பொது அபிப்பிராயம் நிலவும் இந்த சந்தர்ப்பத்தில், ஒரு ஆய்வுக் குழு நியமித்து



[14th December 1971 [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

ஆய்வுக் குழுவை அரசு நியமித்து அதன் அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சரிவர நிதி வசதி இல்லாத காரணத்தினால், அவைகள் எல்லாம் பெயரளவில் தான் செயல்படுகின்றன. அதைப் போலவே நிதிவசதியின்மையால் கிராமப் பஞ்சாயத்துக்களும் ஆக்க பூர்வமான காரியங்களைக் கிராம மக்களுக்குத் திட்டமிட்டுச் செய்ய முடியாத ஒரு நிலையிலே இருந்து வருகின்றன. ஏதோ இந்த ஸ்தாபனங்களிலே இருப்பவர்கள் ஒரு அதிகாரத்தை பகித்திருக்கிறார்கள் என்ற உணர்ச்சி பொது மக்கள் மத்தியிலே நிலவுகின்றதே தவிர, இந்த ஸ்தாபனங்கள் எந்த வகையிலே பணி புரிந்துவருகின்றன, அதனால் கிராம மக்கள் எந்த அளவுக்குப் பயன்பெற்றார்கள் என்று பார்ப்போமானால், அவைகளுடைய நிர்வாகமும் பயனும் மோசமுடையதாகவே இருக்கின்றன. எனவே, இவைகளையெல்லாம் சீர்படுத்தும் நிலைமையிலே இந்த அரசு காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம வேலைவாய்ப்புத் திட்டப்படி கூட இப்பொழுது இந்தத் தமிழகத்திலே மனுக்கள் கோறப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலேயும் செயல்படுத்தப் போவதாக நான் கருதுகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் எந்த வகையிலே யாருக்கு வேலை அளிக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். ஒரு குடும்பத்திலே வயது வந்தவர்கள் நிறைய இருந்து, அவர்கள் எல்லாம் வேலையில்லாமல் அவதிப்படும் பொழுது, ஒரு வட்டாரத்திற்கு 100 பேர் என்று பொருக்கி எடுக்கும்பொழுது, அத்தகைய குடும்பங்களிலே இருப்பவர்களில் வயது வந்த ஒருவருக்காவது ஒரு வேலை கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும். அத்தகைய குடும்பங்களிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விதி முறைகளிலே சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்லுவதை நான் சந்தேகிக்கிறேன். காரணம், அதில் பல விதமான குறுக்கீடுகளும் செல்வாக்குகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதாக நான் அறிகின்றேன். ஆகவே, அதுபற்றி இந்த முறையிலே அத்திட்டம் செயல்பட்டிருக்கிறதா என்பதை இந்த அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஆட்சியாளர்கள் பதவிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே, கோழிப் பண்ணையால் ஆதாயம் இல்லை என்ற எண்ணங்கள் நிலவி வந்தன. இப்பொழுது அந்தப் பண்ணைகள் எல்லாம் நல்ல விதமாகச் செயல்படுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக கிராமங்களிலே இருப்பவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. விவசாயம் செய்பவர்கள் நல்ல வகையிலே அந்தத் தொழிலைச் செய்வார்களேயானால், நல்லதொரு வேலை வாய்ப்பையும், நல்ல வருமானத்தையும் அது அளிக்கும் தொழிலாக இன்றிருக்கிறது. எனவே, அதை மேலும் ஊக்குவிக்க இந்த அரசாங்கம் காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

14th December 1971]

கொள்கிறது. முழுவதும் ஏற்றுக்கொள்வதாக ஒப்புதல் அளித்தது. மத்திய அரசின் கோரிக்கையின் பேரில் சிலபல அதிகாரிகள் இந்த மாநிலத்திலிருந்து வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். 1970 பிப்ரவரியில் ஐந்து பேர்கள் அனுப்பப்பட்டார்கள். திரு. எஸ். ராமானுஜம் என்பவர் 1970 பிப்ரவரியில் பீகார் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டார். பாட நூல் வெளியீட்டு நிறுவனம் எப்படியிருக்கிறது, கிராமியப் படிப்பு நிறுவனம் எப்படியிருக்கிறது, வித்தியாலயம் என்பவை எப்படி நடக்கின்றன என்பவற்றைக் கண்டு வந்தார். திருமதி விசாலாட்சி, முதன்மைக் கல்வி அதிகாரி, தஞ்சாவூர் நான்கு நாட்கள் கேரளாவுக்குச் சென்று தனியார் கல்வி நிலையங்கள், நிறுவனங்கள். தொடக்கப் பள்ளிகளில் ஷிப்டு முறை நடப்பதையும் கண்டு வந்தார்கள். மாநிலக் கல்வி நிறுவனங்களைப்பற்றி ஆறு நாட்கள் இருந்து பார்த்துவிட்டு வந்தார்கள். திருமதி ஆர். காந்திமதி, தமிழகக் கல்வி நிறுவன இயக்குனர் அவர்கள் மைசூருக்குச் சென்று முதியோர் கல்வித் திட்டம், நிர்வாகம் பற்றி பார்த்துவிட்டு வந்தார்கள். திரு. பி. தர்மராஜன், முதன்மைக் கல்வி அதிகாரி, மகாராஷ்டிரத்திற்குச் சென்று மாநிலக் கல்வி நிறுவனம், முதியோர் கல்வி, ஆகியவற்றினைக் கண்டு 8 நாட்கள் தங்கி வந்தார்கள். திரு. எம். சாம்பசிவம்; முதன்மைக் கல்வி அதிகாரி, செப்டம்பர் 1970-ல் ராஜஸ்தான் சென்று நான்கு நாட்கள் இருந்து தொழில் படிப்பு, கல்வித் தேர்வு முறையில் சீர்திருத்தம் பற்றிக் கண்டு வந்தார்கள். திரு. கே. கந்தசாமி, முதன்மைக் கல்வி அதிகாரி பிப்ரவரி 1971-ல் பஞ்சாப்புக்குச் சென்று ஆறு நாட்கள் இருந்து விஞ்ஞானப் பாடத்திட்டம் பற்றி கண்டு வந்தார். திரு. ஆர். திருஞானசம்பந்தம், துணைக் கல்வி அதிகாரி, 1971 செப்டம்பர் மாதம் ஐந்து நாட்கள் மகாராஷ்டிரம் சென்று வந்தார். இதைப் போல பிற மாநிலங்களிலிருந்தும் 30 பேர்கள் கொண்ட கல்வித் துறைத் தலைவர்கள் தமிழகத்திற்கு வந்து பள்ளிச் சீரமைப்பு மகாநாட்டைப் பார்த்துவிட்டு, மதிய உணவு சமையல் கூடம் முதலியவற்றைக் கண்டு சென்றிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நம்முடைய அதிகாரிகள் இவ்வளவு பேர் வெளி மாநிலத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்ததனால் ஏதாவது பலன் விளைந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மற்றவர்களை விட நாம் சிறந்த அளவில் பல வகைகளில் இருக்கிறோம் என்ற கணக்கு வந்திருக்கிறது. சில இடங்களில் புத்தகம் வெளியிடுவதில் நம்மைவிட மற்றவர்கள் விரைவாகச் செய்திருக்கிறார்கள். நாமும் அப்படிக் கொண்டு வர முடியும் என்ற சூழ்நிலையைப் பெற்றிருக்கிறோம். கேரளத்தில் தனியார் துறை பள்ளிகள், அவற்றின் சட்டதிட்டங்கள் பற்றி ஆராய்ந்து ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பிற்கான சட்டதிட்டங்களை ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிற மாநிலங்கள் செய்யும் சீர்திருத்தங்களை மனதில் வைத்துக்கொண்டு நாம் அவ்வப்போது எடுக்கும் நடவடிக்கைகளை இணைத்துச் செய்து வருகிறோம்.

திரு. எம். ராஜா அய்யர்: இந்தக் கல்வித் துறையில் உள்ள பெரிய சோதனை பள்ளிக் கல்வி 10 ஆண்டா அல்லது 11 ஆண்டா என்பதுதான். இப்போது அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பத்து ஆண்டுகள் என்று எந்த மாநிலங்களில் இருக்கிறது என்பதைக் கண்டு வந்து ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க அரசு முயற்சிக்குமா? மிகவும் முக்கியமான விஷயம் இது.



14th December 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆராயவேண்டிய விஷயம்தான். டாஸ்க் ஃபோர்ஸ் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. திட்டக் குழுவில் கல்விக் கென்று தனிப் பிரிவு வைத்து அந்தப் பணிக் குழு 'டாஸ்க் ஃபோர்ஸ்' இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. பக்கத்திலுள்ள மூன்று மாநிலங்களிலும் 10 ஆண்டுக் கல்வி வைத்திருக்கிறார்கள். முன்பு இண்டர்மீடியட் வரை ஒரு கட்டம் இருந்தது. இப்போது அதைப் புகுமுக வகுப்பு என்று வைத்திருக்கிறது. இது மாணவர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ பயன்படவில்லை என்று கூறப்படுகிறது. அதை ஒரு முடிவான படிப்பாகக் கொள்ள முடியவில்லை. மூன்றாண்டு பட்டப் படிப்பு வைப்பதும் இரண்டாண்டு இண்டர்மீடியட் படிக்கும் முறையும் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. யை விட்டால் பட்டப்படிப்புக்கு வழி வகுக்கப்பட வேண்டும். "டாஸ்க் ஃபோர்ஸ்" இதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

## *Rural Arts*

* 169 Q.—THIRU T. K. SHANMUGAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether Tamil Nadu Sangeetha—Nataka Sangam is encouraging rural arts like Therukuthu, Bommalattam, Kavadi, Karagam and Villupattu; and

(b) the persons who obtained degrees and prizes in these fields?

### கிராமக் கலைகள்

திரு. டி. கே. ஷண்முகம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தெருக்கூத்து, பொம்மலாட்டம், காவடி, கரகம், வில்லுபபாட்டு போன்ற கிராம கலைகளுக்கு தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் ஊக்கம் அளித்து வருகிறதா?

(இ) இத்துறையில் பட்டமும் பரிசும் பெற்றவர்கள் யார் யார்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கிராமியக் கலைக்குழுக்களுக்கு இயன்றவரை உதவி மானியம் தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம் வழங்கி வருகிறது. மேலும் இத்துறையில் மிகச் சிறந்த கலைஞர்களை சங்கம் தேர்ந்தெடுத்து பாராட்டும், விருதும் வழங்கி கௌரவிக்கிறது. அதன்படி தெருக்கூத்துக் கலைஞர் திரு. புரிசை நடேச தம்பிரான், புரவியாட்டக் கலைஞர் திரு. டி. சி. சுந்தரமூர்த்தி, காவடியாட்டக் கலைஞர் திரு. எஸ். டி. சுந்தரம் ஆகியவர்களை 1969-69 திலும் வில்லுப்பாட்டுக் கலைஞர் (டாக்டர்) சாத்தூர் பிச்சைக்குட்டி, கரகநாட்டிய கலைஞர் திண்டுக்கல் திரு. ஸ்ரீரங்கம் செட்டியார் அவர்களை 1969-70 திலும் தெருக்கூத்துக் கலைஞர் திரு. மதுரை சிவஞான பாண்டியன், கரகக் கலைஞர் மதுரை திரு. அங்குபிள்ளை அவர்களை 1970-71-லும் சங்கம் கௌரவித்துள்ளது.

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [14th December 1971

கொள்ளக் கூடிய சங்கம், அனுப்பும் சங்கத்தினுடைய பைலா படி இந்தச் சங்கம் நடக்க வேண்டும் என்கிறார்கள். இன்னொரு சங்கத்தினுடைய பைலா படி இந்தச் சங்கம் நடத்துகொள்ள வேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் ஆணை பிறப்பிப்பது உண்டா? இது நடைபெறுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் இந்த மாதிரி அதிகாரியால் உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது. இதற்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. மார்க்கெடிங் சொசைடி போர்டிலே சூப்பர்வைசிங் யூனியன் பிரதிநிதி அங்கம் வகிக்க வேண்டுமானால், மார்க்கெடிங் சொசைடி பைலா படி நடக்க வேண்டும். அந்த யூனியன் பைலா படி நடக்க வேண்டுமென்று சொல்ல முடியுமா? இந்தக் கவுன்சிலுக்கு ஒரு தொகுதியிலிருந்து ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் கவுன்சில் அந்தந்த தேர்தலுக்காக நியமித்துள்ள விதிகளின்படி தான் தேர்ந்தெடுக்க வேண்டும். வேறு விதமாகத் தேர்ந்தெடுத்து, நாங்களெல்லோரும் இப்படித் தேர்ந்தெடுக்கிறோம் என்று சொன்னால், அரசு ஒப்புக் கொள்ளுமா, கவுன்சில் ஒப்புக் கொள்ளுமா? ஏன் இப்படி விசித்திரமாகச் செய்கிறீர்கள் என்று கேட்டால், அந்த அதிகாரி முகத்தைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கிறது. ஒரு பதிலும் சொல்ல மறுக்கிறார். இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறை பெரிய துறை. ஒரு மாவட்டத்தில் மார்க்கெட்டிங் சொசைடி தலைவர் உர விநியோகம் செய்யக் கூடிய ஒரு சாதாரண அலுவலர் ஏதோ குறைபாடாக நடந்து கொள்கிறார், அவரை நீக்க வேண்டுமென்று சொன்னால், அவரை நீக்க முடியாது. அவர் வெளியேற மாட்டேன் என்று சொல்கிறார். அவருக்கு ஜாயிண்ட் ரெஜிஸ்ட்ரார் மறைமுகமான சப்போர்ட்டு, அமைச்சருடைய சப்போர்ட்டு என்று சொல்லப்படுகிறது. அவர் வெளியேற முடியாது என்று சொல்வதற்குக் காரணம் வேறு விதமாக என்ன இருக்க முடியும்? இதைப்போன்று எவ்வளவோ சொல்ல முடியும். எனக்குச் சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. பல சொல்லலாம். கடைசி முறையாகக் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து நீங்கள் பார்க்க வேண்டும். இது ஒரு நல்ல துறை. அதனுடைய ஆரம்ப சம்பிரதாயங்களுக்கு மாசு பட்டு களங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது. அதில் பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். சமீபத்தில் இயற்றப்பட்ட சட்டத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் கிடைக்கக்கூடிய லாபத்தில் 100-க்கு 5 சதவீதம் கூட்டுறவு அபிவிருத்திக்கென ஒரு நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது நியாயமல்ல. இரண்டு சதவீதம் ஏற்கெனவே தமிழ் நாடு கூட்டுறவு யூனியனுக்கு அந்தத் துறையைப்பற்றிப் பிரச்சாரம் செய்து பல வகைகளிலும் வளப்படுத்த லாபத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. 5 சதவீதம் என்று இப்போது சொல்லப்படுகிறது. ராமநாதபுரம் மத்திய கூட்டுறவு நில வள வங்கியில் மொத்தத்தில் ஒரு கோடி ரூபாய் அளவிலே பங்குத் தொகை இருந்தால், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குத் தொகை 50, 60 லட்சம் இருக்கிறது. மாநில அளவில் எடுத்துக்கொண்டு பார்த்தால், மாநில வங்கி, மத்திய வங்கி இவைகளெல்லாம் எவ்வளவு பங்குத் தொகை சேமித்து வைத்திருக்குமோ, அதை விட அதிகமாகக் கிராமச் சங்கங்களின் பங்குத் தொகை இருக்கிறது. இந்தப் பங்குத் தொகைக்கு லாபத்திலே 5 சதவீதம் ஒதுக்கி விட்டால், டிவிடெண்டு கொடுக்க முடியுமா? டிவிடெண்டு கொடுக்கக் கூடிய சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன? அந்த நம்பிக்கைக்கு இவைகள் குறை



14th December 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

பாடாக அமையும் என்று கருதுகிறேன். தாலுகா அளவிலே மேற்பார்வை யூனியன் இருக்கிறது. தாலுகா அளவிலே கூட்டுறவு யூனியன் என வேறு ஸ்தாபனங்கள் அமைக்கப்படுகின்றன. இதிலே இன்னாரை அமைப்பாளராக, கன்வீனராக நியமிக்கவேண்டும் என்று உத்திரவு இருக்கிறது. இவர் தான் அமைப்பாளர் என்று நியமிக்கிறார்கள். தாலுகா அளவிலே ஆரம்பித்து மாவட்ட மாநில அளவிலும் யூனியன்கள் ஏற்படுகின்றன. தமிழ் நாட்டு யூனியனோடு அந்த யூனியன்கள் இணைக்கப்படுகின்றன. இப்போது நியமன முறையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி 5 சதவீதமாகக் கிடைக்கக் கூடிய நிதியை அவர்களிடத்தில் கொடுக்கப் போகிறார்கள். இதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு நோக்கத்தோடு செயல்படுகிறதா என்று சந்தேகப்படுவதில் காரணம் இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். நில அடமான, நில வள வங்கிகள் சம்பந்தமாக இந்த பட்ஜெட்டில் கூட பல காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை மேம்படுத்த பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடன் கொடுக்கும் முறையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ரிசர்வ் பாங்கு, உலக பாங்கு ஸ்தாபனங்களுடைய பிரதிநிதிகளாக நில வள வங்கிகளிலிருந்து கொடுக்கக் கூடிய கடன் 10 ஆயிரம் கடன் கேட்டால் 100-க்கு 10, அதாவது ஆயிரம் ரூபாய் கடன் கேட்டாரானால் அவர் 100 ரூபாய் கட்டுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். 40 ஆயிரம் ரூபாய் டிராக்டர் வாங்கக் கடன் கேட்டாரானால் 10 ஆயிரம் ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டுமென்ற நிபந்தனைகள் இருக்கின்றன. சுபிட்சம் நிலவக்கூடிய காலத்தில் இது நல்ல திட்டமாக இருக்கலாம். அப்போது தான் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படும் என்று கருதலாம். ஆரம்ப நாளிலே முதலிலே அவ்வளவு நிபந்தனைகள் இருப்பது விவசாய வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்காது. ஆகவே அவர்களோடு கலந்து பேசி ஆவன செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாகத்தில் மேன்மேலும் பல தலையீடுகள் இருக்கின்றன. இதை முக்கியமாக முதலமைச்சரவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். போலீஸ் ஸ்டேஷனில் ஆளும் கட்சியினுடைய அங்கத்தினர்களோ அல்லது அலுவல் புரிகிறவர்களோ, அனுதாபிகளோ அங்கேயே குடியிருப்பது போல இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே காப்பி சாப்பிடுவது, தந்த சுத்தி முதல் சயன சேவை வரை, இருக்கிறார்கள். இத்தகைய நிலவரம் காணப்படுகிறது. 5-00 p.m.
இதனால் எத்தனையோ குறைபாடுகள் ஏற்படுகின்றன. தலையீடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அநீதி ஏற்பட்டிருக்கிறது. பலருக்குக் கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில பெரியவர்களை, சக்தி வாய்ந்தவர்களை ஏதாவது விவகாரங்களில் ஈடுபடுத்தி, குற்றம் செய்யாதவராக இல்லாவிட்டாலும், யார் குற்றம் செய்திருக்கிறார்களோ அவரோடு சேர்ந்தவராகவோ அனுதாபியாகவோ இருப்பதாகச் செய்து கேஸ் போட்டு தொல்லை கொடுக்கப்படுகின்றன. இப்படித் திட்டமிட்டு கீழிருந்து மேல் வரைக்கும் காரியங்கள் நடைபெறுகின்றன. இப்போது அனைவரும் ஒன்றுபட்டிருப்பது போல், இந்தியாவில் இதன் மூலமாக ஒற்றுமை அதிகமாகி, கருத்துக்களில் ஒன்றுபட்டு, அரசியலை நல்ல வகையில் உருவாக்குவதற்கான சூழ்நிலைகளில் நல்ல மாற்றம் ஏற்படுவ

[திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு] [14th December 1971

கடந்த செப்டம்பர் வரையில் அரசாங்க புல்டோசர்களுக்கு மணி ஒன்றுக்கு ரூபாய் 35 என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அக்டோபர் மாதத்திலேயிருந்து அது மணிக்கு 60 ரூபாய் வாடகை என்ற அளவிலே
பி.ப. 4·50 உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசாங்க டிராக்டர்களுக்கும் அப்படித்தான் உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு அப்படிக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால், ஒரு புல்டோசர் ஒரு நாளைக்கு 10 மணி நேரம் வேலை செய்யும் என்றால், 350 ரூபாய் கொடுக்க வேண்டிய இடத்திலே 600 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. ஒரு பொது நலப் பள்ளி தன்னுடைய நிலத்தைச் சமப்படுத்துவதற்கு ஒரு புல்டோசர் வேண்டுமென்று கேட்டு, 1970-ஆம் ஆண்டு விண்ணப்பித்ததன் பேரில், விவசாய இலாகாவினர் அதை 15 மாதங்கள் கழித்துத்தான் கொடுத்தார்கள். அப்பொழுது நீங்கள் அக்டோபர் மாதத்திலேயிருந்து மணிக்கு 60 ரூபாய் என்று கொடுக்கவேண்டும் என்ற நிலைமையினைச் சொன்னார்கள். எனவே, அந்த ஸ்தாபனமும் 3 நாளைக்கு 1,800 ரூபாய் செலுத்தி அந்த புல்டோசரை வாங்கி வேலை செய்திருக்கிறது. மண்ணிலே ஈரம் இருக்கும்பொழுது அந்த புல்டோசர் தேவைப்பட்டபோது தராமல் காலதாமதம் செய்யப்பட்டு அது கொடுக்கப்பட்டது. எனவே, இப்படி முன் பணம் செலுத்தி பதிவு செய்திருப்பவர்களுக்காவது இந்த வாடகை உயர்வு இருக்காது என்று சொல்லி, அதிகமாக வசூலித்திருந்தால் அதைத் திருப்பித் தர ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வறட்சி நிலை இருக்கிறது. ஏதோ பரவலாக மழை பெய்திருந்தாலும், சில இடங்களிலே வறட்சி நிலை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் உரையிலே கூட இந்தக் குறைபாடு சொல்லப்பட்டிருக்கிறது. துரதிருஷ்ட வசமாக எங்கள் பகுதியிலே தொடர்ந்து இன்னும் அந்த வறட்சி நிலை மாறவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு வகையில் பார்த்தால், கடந்த 4 வருஷங்களைக் காட்டிலும் இந்த வருஷம் மழை குறைவாக இருந்த காரணத்தினால், வறட்சி நிலைமை நீடிப்பதோடு, வறண்ட கிணறுகள் அப்படியே இருக்கின்றன. பொதுவாக ராமநாதபுரம் ஜில்லா முழுவதும் இந்த நிலைமை தான் இருக்கிறது. அதுவும் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இதே சந்தர்ப்பத்திலே கூட்டுறவுக் கடன் வசூல் போன்றவைகளுக்கெல்லாம் கூட அங்கே கெடுபிடிகள் இருந்து வருகின்றன. அதை எல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டும். முன் நான் சொன்னது போல் நாம் எத்தனையோ ஆராய்ச்சிகளை நடத்துகிறோம். ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலே அதிகமான மழை சாதாரணமாகப் பெய்யும். மேற்குத் தொடர்ச்சி மலையைத் தொடர்ந்து இருக்கக் கூடிய பகுதி அது. இப்பொழுது ஏன் அங்கே மழை திடீரென்று குறைந்தது என்பதைப்பற்றி ஒரு ஆராய்ச்சி செய்ய வேண்டும். இப்படி வழக்கமாக அதிக அளவிலே மழை பெய்துகொண்டிருந்த ஒரு இடத்திலே ஏன் மழை இப்பொழுது குறைந்தது என்பதற்கான காரணங்களைக் கண்டு பிடிக்கும் நோக்குடன் அப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சியினை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது என்ன முயற்சி, எப்படி அது செய்யப்பட வேண்டும் என்பதிலே நான் நுழையத் தயாராகயில்லை. அதைப் பற்றி அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



14th December 1971] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

அடுத்து, கூட்டுறவு வங்கிகள் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள். அண்மையில் புதிய சட்டத்தின்படி மாவட்டக் கூட்டுறவு வங்கியின் தேர்வுகள் நடைபெற்றன. மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்காக இந்தத் தேர்தல் நடக்கும்பொழுது, சட்டத்திற்கு மாறாக தவணை கடந்த சங்கங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், வாக்களித்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் முன்பு கூட இந்த அவையிலே சொன்னபோது, ஏன் இதைப்பற்றி வழக்குத் தொடரவில்லை என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்டார். இந்தத் தேர்தலை நடத்துபவர்கள் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள்; அதுவும் கெஜட் ரேங்க் அதிகாரி அவர்கள் தான் இப்படிச் சட்டத்தை மீறுபவர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் முன்னிலையில் தான் தேர்தல் நடக்கின்றது. இவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், அவர்களிடத்திலே இப்படிச் சட்டம் மீறப்படுகிறது என்று. அப்படிப்பட்டவர்களிடமே என்னை அப்பீல் செய் என்று சொல்லுகிறார்கள். இதைத்தான் நான் அன்றைக்கும் சொன்னேன். நான் அப்பொழுதும், இப்பொழுதும் சொல்லுவதை இந்த அரசு கவனித்ததா என்பதை அறிய விரும்புகிறேன். இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், இத்தகைய காரியங்கள் பல நடைபெற்று வருகின்றன, அவைகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும். இந்த இடத்திலே ஒரு சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மாவட்ட விற்பனை விநியோக சங்கத்திற்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க, காலம் நிர்ணயிக்கப்பட்டது. இரண்டு பேர் தான் அதற்கு 'நாமினேஷன்' போட்டார்கள். போட்டி இல்லை. அதற்கு என்று குறிப்பிட்ட மகா சபை கூட்டத்திலே டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிப்பது தான் பாக்கி. ஆனால், மறு நாள் காலையிலேயே இரண்டு நாமினேஷன்களைப் பரிசிலனை செய்ய போர்டு கூட்டம் கூட்டியிருக்கும்பொழுது அங்கேயிருக்கும் ஜாயின்ட் ரிஜிஸ்டிரார் அங்கே வந்து, மாநில அரசு இந்த இரண்டு ஸ்தானங்களுக்கும் இன்னும் 2 மாதத்திற்குப் பதவிக் காலத்தை நீடித்திருப்பதால் இந்தத் தேர்தலை நடத்த அவசியமில்லை, இந்தக் கூட்டத்திற்கு அவசியமில்லை என்று சொல்லுகிறார். அதுவும் இந்த அரசின் உத்தரவை வாய் மூலமாக அவர் பெற்றுச் சொல்லுகிறார். இதை எல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டும். இதை ஒரு குறையாகவும், இந்த அரசின் மீது மாசு கற்பிப்பதற்காகவும் தான் இதை நான் சொல்லவில்லை என்பதை இந்த அரசு உணர வேண்டும். கூட்டுறவுத் துறையிலே இத்தகைய குறைகள் மலிந்து விட்டன என்று சொல்லிக் கொள்கிறேன். அந்தத் துறையிலே இருக்கும் பெரிய அதிகாரிகள் எல்லாம் இது சரிதான் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று இந்த அரசு கருதுமானால், அது சரியில்லை என்று நான் கருதுகிறேன். அந்த அதிகாரிகளின் மனது இதை எல்லாம் பார்த்துத் துன்பப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன், கூட்டுறவுத் துறையில் என்ன நடக்கிறது என்று. நான் இப்போது சொல்கின்றேனே இதன் மூலமாக என்ன நடக்கிறது என்று அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு சங்கத்திலிருந்து இன்னொரு சங்கத்திற்குப் பிரதிநிதி வர வேண்டுமென்று சொன்னால், பிரதிநிதியை ஏற்றுக்

தற்கு இந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செலவினங்களுக்கு மேல் மதிகமாகச் செலவாவதற்குக் காரணங்கள் என்ன என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. காரண காரியங்களைச் சொல்கிற போது பஞ்சு மார்கெட் சம்பந்தமாக வரும் ரிபோர்ட் போல கொடுப்பவர்கள் கொடுத்ததாகவும், வாங்கியவர்கள் வாங்கினதாகவும் இத்தனை கண்டி பஞ்சு விற்பனை என்றும் ஏதாவது எழுத வேண்டுமென்பதற்காக எழுதுவது வழக்கம். அந்த மாதிரியில் செலவு மிக அதிக்க செலவல்ல என்று குறிப்பிட்டிருக்கிறது. பேப்பர் அதிகமாகக் கிடைக்காததினால் அதிக செலவுகளுக்கான விளக்கங்கள் போடப்படவில்லையா? இன்னும் கருத்துக்களைப் புரியும்படியாக, அதிகச் செலவினங்களுக்கான காரணங்களைக் குறிப்பிடும்போது இன்னும் சற்று விவரமாகக் குறிப்பிட வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு உரையை முடிக்கிறேன்.

* திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, நான் முதலமைச்சர் அவர்கள் அவை முன் வைத்துள்ள இந்தத் துணை மதிப்பீடுகளுக்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கல்வி மானியத்தில் இங்கு குறிப்பிட்டுள்ள புதுப் பணிகள் எல்லாம் வரவேறகத்தக்கவை. இது குறித்து ஆசிரியர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டவர்கள். ஆசிரியர்களாக இல்லாதவர்களையும் அரசு மறந்து விடவில்லையென்பதற்காக உதவி பெறும் பயிற்சிப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு எப்படி வீட்டு வாடகைப்படி வழங்குவதற்கு அரசு ஒப்புக் கொண்டிருக்கிறதோ அதே போல ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கும் கொடுக்கத் தீர்மானித்திருப்பதை வரவேற்க வேண்டும். ஆனால் ஒரே ஒரு குறை இன்னும் இருக்கிறது. ஆசிரியர்கள் வல்லாத பணியாளர்களுக்கு இன்னும் ஓய்வு ஊதியம் கொடுக்கப்படவில்லை. அவர்களைப் போல பல அரசுப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு ஓய்வு ஊதியம் கிடைக்கும்போது, ஒரு சிறு எண்ணிக்கையுள்ள உதவி பெறும் உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அல்லாத நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே வேலை பார்க்கிறவர்கள் . எழுத்தர்கள். பணியாளர்களுக்கும் இந்த ஓய்வு ஊதியத்தைக் கொடுக்கும்படியாக அரசை அங்கே வேலை பார்க்கின்றவர்கள் சாதாரண மிக ஏழையான பணியாட்கள். அவர்களுக்கெல்லாம் இவ்வோய்வூதியம் கட்டாயம் கிடைக்குமாறு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மனமாரக் கூறினார்கள். பயிற்சி பெற்று பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்த சிலரை. அந்தப் பள்ளிகளில் இருக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்துவிட்டது என்று கூறி, அந்த ஒரு காரணத்திற்காக வெளியேற்றுதபடி மிகைப்படியான பதவிகளை—சூப்பர் நியூமரரி போஸ்ட்ஸ்—உண்டுபண்ணி திருவாங்கூர், கொச்சி மாநிலத்தில் இருக்கிற ஆசிரியர்களுக்கு இம்மாதிரியாக நான்கு லட்ச ரூபாய் செலவில், வைத்துக்கொண்டிருக்கும்படி செய்ததற்காக அவர்கள் இவ்வரசைப் பாராட்டினார்கள். இந்த நிலையானது திருவாங்கூர் கொச்சியை மாத்திரம் பொருத்தது அல்ல. நம் நாட்டிலும், குறிப்பாக கிராமப் பகுதிகளில், பெரும்





பட்டினங்களைத் தவிர பிற இடங்களில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாம் அங்கே படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. ஆரம்பப் பள்ளிகளிலேயும் உயர்நிலைப் பள்ளிகளிலேயும் மாணவர்கள் குறைவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அக்காரணங்களை இங்கே சொல்வதற்கு நேரமில்லையாகையால், இந்தக் குறைபாடானது திருவாங்கூர் கொச்சியை மாத்திரம் பொருத்த தனிப்பட்ட குறைபாடு இல்லை என்பதை அரசு அறிந்து, பிற உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைகின்றபடியினாலே, ஒரு ஐந்து ஆண்டுகள் வேலை பார்த்த ஆசிரியர்கள், நிரந்தரமாக இருக்கக் கூடிய ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிட்டால், அவர்களை சூப்பர் நியூமரரி டீச்சர்ஸ்; மிகைப்படியான பதவிகள் அந்த போஸ்ட்ஸ் என்று உண்டுபண்ணி அவர்களை ஆதரிக்க வேண்டுமாறு ஆசிரியர்களின் சார்பில் நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, மிகவும் பாராட்டவேண்டிய ஒரு புதுப்பணி என்னவென்றால் தொழில் நுட்ப நிறுவனங்களில் நல்ல ஆசிரியர்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக பி.எச்.டி. போன்ற உயர்பட்டம் பெறுவதற்காக நாம் ஆசிரியர்களை அனுப்புகிறோம். இது சம்பந்தமாக ஒரு குறையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது மிகவும் பாராட்டத்தக்க ஒரு முறையாகும். ஆசிரியர்கள் சிறந்த அநுபவம் பெற்றவர்களாக இருப்பதுடன், அவர்கள் சிறந்த தகுதி பெற்றவர்களாக இருப்பதற்கு உயர்மட்டப்படிப்புக்கு மேல் பிஎச்.டி. பட்டம் பெறுவதற்காக நாம் 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்து இன்ஸ்டிட்யூட்களுக்கு ஆசிரியர்கள் கிடைப்பதற்காக அனுப்புகிறோம். ஆனால் நம் நாட்டிலுள்ள அரசுக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய அசிஸ்டென்ட் ப்ரபசர்ஸ்—உதவிப் பேராசிரியர்கள்—தங்கள் சொந்தச் செலவில் இரண்டு ஆண்டுகள் சென்று படித்து பிஎச்.டி. பட்டம் பெற்றுக்கொண்டு வருகின்றார்கள். அவர்கள் திரும்பும்பொழுது, ஒரு பெரும் கஷ்டத்திற்கு ஆளாகின்றார்கள். இந்த இரண்டு ஆண்டுகளுக்கு அவர்களுக்கு அவர்கள் பெறக்கூடிய ஊதிய உயர்வு கொடுப்பதில்லை. அவர்கள் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. சம்பளம் இல்லாதபடி அவர்கள் விடுமுறை எடுத்து, அவர்கள் ஊதிய உயர்வையும் இழந்து, திரும்ப அந்தக் கல்லூரிக்கு வரும் பொழுது அந்தக் கல்லூரியிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள்—பேராசிரியர்களுக்குக் கீழே உள்ள ஸ்தானத்தைப் பெற்று ஜூனியர்களாக ஆகிவிடுகின்றனர். அவர்கள் பிஎச்.டி. பட்டம் பெற்றும் கூட பேராசிரியர் பதவி வரும்போது, அவர்களுக்குக் கீழேயுள்ள ஜூனியராக இருக்கக்கூடிய அசிஸ்டன்ட் ப்ரொபசர்களுக்கு இவர்கள் ஜூனியராகிவிடுகிறார்கள். ஆகையினால் இம்மாதிரியான பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களைப் பேராசிரியர் பதவிக்கு உயர்த்துவதற்கு அவர்களுடைய தகுதிகளை நாம் சிறப்பாகக் கருத வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு 52-வது பக்கத்தில் ஒரு குறிப்பைப் பார்க்கிறேன். அதைப் பார்த்த பிறகுதான் ஏன் அரசு இத்தனை காலமாக ஒரு நல்ல பணியைச் செய்ய அதில் 5.14 p.m. காலதாமதத்தை உண்டுபண்ணியது என்று நான் அறிந்துகொள்ள முடிகிறது. அரசு 20—7—71-லேயே ஆணையிட்டது. ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கெல்லாம் 2—10—1970-க்கு முன் ஓய்வுபெற்ற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கெல்லாம் ஒரு மாத ஓய்வு ஊதியம் போனசாக உண்டு என்று அறிவித்திருக்கிறது. இந்த

*[திரு. ஏ. பி. ஜனார்த்தனம்]* [14th December 1971

ஏன் மக்கள் நம்மை ஆதரிக்கிறார்கள், ஏன் நம்முடைய முற்போக்குத் திட்டங்களுக்கு ஆதரவு சேருகின்றது என்று எண்ணுகிற நேரத்திலே, அவர்களுக்குப் பயன்படும்படியாக, கடைசிக் குடிமகனுக்குக்கூட போய்ச்சேரும் படியாகப் பல திட்டங்கள் போடப்பட்டு அவர்கள் அத்தனை பேரும் உவகை ெருபம் நிலை இருக்கும் காரணத்தால்தான், நமக்கு ஆதரவு பெருகி வருகிறது. குடிசை மாற்று வாரியம் போன்று பல திட்டங்களைப் பார்க்கும் நேரத்திலே நாட்டு மக்கள் நம்மிடத்தில் வைத்திருக்கும் நல்லெண்ணத்திற்குத் தகுந்தபடி நாம் நடந்துகொள்கிறோம். நேற்று, அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும், அந்த அனுபவங்களையெல்லாம் கைக்கொள்ளவேண்டும், அதில் சிறந்தவைகளை எல்லாம் கடைப்பிடிக்கவேண்டும் என்று இங்கே சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் பெருமக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் தங்களுடைய வெளிநாட்டு அனுபவங்களையெல்லாம் இந்தச் சிறந்த நேரத்தில் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் உணருகிறேன். அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்றபோது தொழிலதிபர்களுடனும் வல்லுநர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி அதன் பயனாகச் சில திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். மாண்புமிகு கலைஞர் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே டிஸ்னிலாண்ட் போன்ற இடங்களைக் கண்ட நேரத்தில், நம்முடைய நாட்டுக் குழந்தைகளுக்கும் இப்படி ஒன்று இருந்தால் அவர்கள் எவ்வளவு மகிழ்வார்கள் என்று அவருடைய எண்ணம் தமிழகத்திற்குச் சிறகடித்துப் பறந்து வந்திருக்கிறது. அதே போல் அரிசன நலத் துறை அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் அந்தமான் சென்ற நேரத்தில் யார் யாரை அங்கே குடியேற்றலாம், அதற்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைக் கண்டு வந்திருக்கிறார்கள். நண்பர் திரு. அரங்கண்ணல் அவர்கள் சிங்கப்பூர் பகுதியில் வீடு கட்டும் முறை, அதன் அழகு, சுத்தம் இவற்றைப் பார்த்து நம் நாட்டில் மனைகள் கட்டுவதில் தன்னுடைய அறிவைத் திரட்டி வருகிறார்கள். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நம்முடைய அமைச்சர்கள் உல்லாசமாக ஊர் சுற்றவில்லை. ஓரளவு பயன் பெற்று அந்தப் பயனைத் தருவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஏழ்மை குடியில் பிறந்து மெல்ல மெல்ல, படிப்படியாகக் கோட்டையைப் பிடித்தவர்கள். அவர்கள் இந்தத் திட்டங்களில் ஊறி அத்தனை மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்ற துடிப்புடன் இருப்பதில் ஆச்சரியம் இடையாது. நம்முடைய முதலமைச்சரைப்பற்றி என்னும் நேரத்தில்—நான், அண்மையில் பிரிட்டிஷ் அரசியல்பற்றி ஒரு நூல் படித்தேன். டேவிட் லாயிட் ஜார்ஜ் என்ற பெரியவர் வேல்ஸ் என்ற பகுதியில் பிறந்தார். பிரிட்டிஷ் நாட்டில் ஒரு மூலையில் வேல்ஸில் பிறந்தவர் அந்த சாதாரணக் குடிமகன். அவருடைய மாமனார் ஒரு காலணித் தொழிற்சாலை ஒன்று வைத்திருந்தார். அந்தத் தொழிற்சாலையில் அரசியல் கற்று படிப்படியாக நெம்பர் 10, டௌனிங் தெருவுக்கு வந்து சேர்ந்தார்—இதே போல் திருவாரூர் மலையைக் கரையில் அரசியல் தொடங்கி கடைசியாகக் கோட்டைக்கு வந்து சேர்ந்ததைப் பார்க்கும் போது 'we meet somay parallels'' நாம் இது மாதிரி நல்ல அனுபவங்களைக் காணும் நேரத்தில் நம்முடைய போக்கு சரியாகத் தான் இருக்கின்றது. எண்ணங்கள் சரியாக இருக்கின்றன. நாம் திசை திரும்பி விடவில்லை. மெல்ல மெல்ல பகுத்துப் பகுத்து இந்த நிலைமைக்கு வந்திருக்



14th December 1971] *[திரு. ஏ. பி. ஜனார்த்தனம்]*

கிறோம் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். 40 ஆண்டுக் காலமாக எவ்வளவோ பாடுபட்டு தொண்டை வலிக்க வலிக்கப் பேசி, அடிவயிறு நோக நோகப் பேசி, 5·20 p.m. நாடெங்கும் முழக்கமிட்டு, குரல் கெட்டு, கல்லடி பட்டு, எவ்வளவோ இன்னல்களைத் தாங்கி, இந்த நாட்டில் நல்ல பல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கனவு கண்டோம். அந்த நிலைகள் உருவடைய ஆட்சி ஒரு கருவி. அதை வைத்து முடிந்தவரை செய்து வருகிறார்கள்.

இங்கிலாந்து நாட்டில் தொழிற்கட்சி பதவிக்கு வரும் முன்பு சுமார் 40 ஆண்டுக் காலமாக—கடந்த நூற்றாண்டில், பல பெரியவர்கள் அங்கு வந்து ஊழல்களை எடுத்துக் காட்டினார்கள், சார்லஸ் டிக்கன்ஸ், போன்றவர்கள் மாரிஸ் போன்றவர்கள் முழக்கம் செய்து இந்தச் சூழ்நிலைகள் நீக்கப்பட்டாக வேண்டுமென்று போராட்டம் நடத்தினார்கள் . . —டாக்டர் ஜார்ஜ் பார்னட்ஷா எச்.ஜி. வெல்ஸ் இவர்களைச் சேர்த்துக் கொண்டு, Fabin சொஸைடி என்று வகுத்துக்கொண்டு உயர் எண்ணம் மலரும் சோலையாக வெப் தம்பதிகள் விளங்கி வந்தார்கள். நான் ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், நம்முடைய மாமன்றத்தில் நாங்கள் இங்கே வந்துவிட்டோமென்றால், திடீரென்று வந்துவிடவில்லை. இது ஒரு 'கிரேட் சேன்ஜ்' என்று தெரியலாம். ஆனால் இதற்கு மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக அடிப்படைகள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த அடிப்படையின் பயன் ஆண்டு தோறும் கோடிக்கோடியான மக்கள் துயர் துடைப்பது. "நாம் வாழ வேண்டாமா, நமக்கு வசதி வேண்டாமா, நம் இழிவு நீங்க வேண்டாமா, நமக்கு ஏற்றம் இருந்திருக்கின்றதா ?" என்று ஸ்வாமி விவேகானந்தர் அவர்கள் முன்பு குறிப்பிட்டது போல், இது சூத்திரர்யுகம். அது குடிசை மக்கள் இயக்கமாக மாறி, அந்த மக்களின் எண்ணத்தையும் உயிரோட்டத்தையும் அறிந்து, அவர்கள் கனவின் பிரதிபலிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் விளங்குகிறார்கள். அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் துணை மதிப்பீடுகளை தான் வரவேற்கிறேன்.

* **திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு திரு. ராஜா அய்யர் அவர்கள் நான் சொல்ல விரும்பிய முக்கியமான சில விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பட்டதாரி ஆசிரியர்களுடைய சம்பள பிரச்னைபற்றி, அந்தத் தொகுதியைச் சேர்ந்த பட்டதாரிகளின் வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில், நான் அமைச்சரவைக்கு மறுமுறையும் அறிவுறுத்த விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, இந்த மன்றத்தில் பல தடவை அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டும் என்று கல்வியமைச்சர் அவர்களை நானும் மற்ற பல மாண்புமிகு உறுப்பினர்களும் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு இரண்டாவது ஊதியக் கமிஷனால் சிபாரிசு செய்யப்பட்ட சம்பளம் 275 ரூபாய், என்ற அளவில் தான் இருக்கிறது. அவர்களுக்கு 325 ரூபாய் என்ற அளவிலாவது கொடுக்கப்படவேண்டும். அவர்கள் படித்த படிப்புக்கேற்ப, பட்டங்களுக்கேற்ப ஊதியம் அளிக்கப்படும் என்றும் அமைச்சரவர்கள் கவனித்து ஆவன செய்வார்கள் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பட்டதாரி ஆசிரியர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்தத் துணை மதிப்பீட்டைப் பார்க்கும் போது அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என்பதைக்கண்டு மிகுந்த மன வருத்தம் அடைகிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக செலக்ஷன் கிரேடு ஆசிரியர்கள் பற்றி மாண்புமிகு திரு. ராஜா அய்யர் அவர்கள் சொன்னார்கள். அதிலே உள்ள ஒன்றுக்கொன்று தாரதம்மியமான முறைகள் களையப்படவேண்டும். அரசாங்கப் பள்ளிகளில் 33-1/3 சத விகிதம், முன்னாள் டிஸ்டிரிக்ட் போர்டு, கழக உயர்நிலைப்பள்ளிகளில் 25 சத விகிதம், தனியார் பள்ளிகளில் 10 சத விகிதம் என்று இப்படி பல்வேறு பட்ட நிலைமைகளில் செலக்ஷன் கிரேடு முறை வைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி 15 ஆண்டுகள் ஒரு பள்ளியில் தொடர்ந்து பணியாற்றியவர்கள் எல்லோருக்கும் செலக்ஷன் கிரேடுக்குரிய ஊதியம் கொடுக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளாக ஓய்வு ஊதியத்தைப் பொறுத்தவரை நம்முடைய அரசு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து அண்மையில் இறந்த ஆசிரியர் குடும்பத்தாருக்கு மாதத்திற்கு 50 ரூபாய் அடிப்படையாகக் கொடுக்கவேண்டுமென்ற முறையை வகுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் குடும்பத்துக்கு ரூ. 50 கொடுக்கும்போது உயிரோடிருக்கும் பல ஆசிரியர்கள் ரூ. 30 ஓய்வு ஊதியமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஓய்வு ஊதியத்தைப் பொறுத்து விசித்திரமான நிலைமைகள் நிலவுகின்றன. மாதம் ரூ. 30 வாங்கும் எல்.டி. ஆசிரியர்கள், ரூபாய் 35 பெறும் இடைநிலை ஆசிரியர்கள், ரூபாய் 60 பெறும் பி.டி. ஆசிரியர்கள் என்ற நிலைமையுள்ளது. அமைச்சர் அவர்கள் இதை மனத்தில் கொண்டு எல்லா ஆசிரியர்களுக்கும், அவர்கள் கடைசியாக வாங்கிய மாத சம்பளத்தில் 3/8 பகுதியை சீரான முறையில் 6—3—67-க்கு பிறகு ஓய்வு பெற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ஆனால் 'செலக்ஷன்கிரேடு' பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம், ஓய்வு ஊதியம் ஆகியவற்றைப் பற்றிப் பேசும்பொழுது இப்பொழுதே கல்விக்காக அதிகச் செலவு செய்யும்பொழுது மேலும் பணத்தை இச்சலுகைகளுக்காக எப்படி ஒதுக்க முடியும் என்ற பிரச்சினை பல சந்தர்ப்பங்களிலே இங்கு பேசப்பட்டது. கல்வி அமைச்சர் அவர்கள் கூட நாங்கள் கல்விக்காக மாநில வரவு செலவுத் திட்டத்தில் 25 சதம் முதல் 30 சதம் வரை செலவு செய்து கொண்டிருக்கும்பொழுது இதற்கு மேல் எப்படி அதிகமாகச் செலவு செய்ய முடியும் என்று பல இடங்களிலே பேசி வருகிறார்கள். தி.மு.க. அரசு வந்த பிறகு இலவச கல்வித் திட்டத்தை பி.யு.சி. வரையிலும் கொண்டு வந்திருக்கிறோம். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இந்த இலவசக் கல்வித் திட்டத்தின் சலுகைகளை எல்லோருக்கும் அளிக்க வேண்டுமா என்று பார்க்க வேண்டும். நல்ல வசதி உள்ள குடும்பங்களிலேயுள்ள பிள்ளைகள் கூட இந்தச் சலுகைகளைப் பெற்றுப் படிக்கிறார்கள். மாதம் 1,000 ரூபாய், 2,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய மருத்துவர் வீட்டுப் பிள்ளைகள் கூட இந்தச் சலுகைகளைப் பெறுகின்றனர். ஒரு வகுப்பிலே 55 பேர் இருக்கிறார்கள் என்றால், அதிலே 15, 20 பேர் தாங்களாகவே பணம் கட்டி படிக்க வசதி உள்ளவர்களுக்கும் இந்த இலவசக் கல்வியின் சலுகை கிடைப்பதால், ஏழை குழந்தைகள் பலருக்கு மற்ற சலுகைகளை இன்னும் பரந்த அளவிலே கொடுக்கவும் ஆசிரியர்களுக்கு அதிகச் சலுகைகள் அளிக்கவும் முடியாமல் போகிறது. இந்த நிலையில் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி கொடுக்கப்போகிறோம் என்று வேறு சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த இலவச கல்வித் திட்டத்தைப் பற்றிப் புனர் ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறி வந்துள்ள விஷயம்



தஞ்சையிலேயுள்ள மருத்தவக் கல்லூரிக்கு பார்வையாளர் தங்கும் அறை ஒன்று கட்டித் தரவேண்டுமென்பதாகும். நமது அமைச்சர் அவர்கள் கூட இந்த மன்றத்திலே பதில் அளிக்கும்பொழுது சென்ற ஆண்டிலேயே அது கட்டப்படவிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அது இன்னமும் கட்டி முடிக்கப்பெறாமல், இந்த ஆண்டும் அதற்கு எந்த விதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை என்று பார்க்கும்பொழுது நான் வருத்தமடைகிறேன். பார்வையாளர் தங்குவதற்கான ஒரு அறையைக் கட்டித் தரவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, செங்கிப்பட்டியிலே மகாத்மா காந்தி காசநோய் மருத்துவமனை என்று ஒன்றிருக்கிறது. அங்கே சேர விரும்பும் நோயாளிகள் பதிவு செய்து 6 முதல் 9 மாதங்கள் ஆகியும் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. சாதாரண மக்கள் இப்படிப் பதிவு செய்துவிட்டு, 6 மாத காலம் தனிப்பட்ட முறையில் மருத்துவ சிகிச்சை செய்துகொள்வதற்கான வசதியோ, வாய்ப்போ இல்லாமல் இருக்கிறார்கள். பதிவு செய்து 9 மாதம் ஒரு வருடம் கழித்து அந்த நோயாளிக்கு இடம் கொடுக்கப்படும்பொழுது, அதற்குள் நோயாளி இறந்துவிடும் நிலைமையும் இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே இருப்பது இந்த செங்கிப்பட்டி மகாத்மா காந்தி காசநோய் மருத்துவமனை ஒன்றுதான். அங்கே சென்று பதிவு செய்து கொண்டால் குறைந்த பட்சம் ஒரு மாதம் அல்லது 15 நாளைக்குள்ளே இடம் கிடைக்கும் என்பதான ஒரு ஏற்பாட்டினை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நோய் முற்றியிருப்பவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியாளரிடம் உடனே சேர்க்கச் சொல்லி 5.30 p.m.
தனி அனுமதி வாங்கி வந்தால் சேர்க்கப்படலாம் என்றிருக்கிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செல்பவர்கள் எல்லாம் மோசமான உடல் நிலைமையிலேயுள்ளவர்கள். எனக்குத் தெரிந்து, ஒரு அம்மையார் தன்னுடைய கணவனுக்கு காசநோய் முற்றி, பல மருத்துவமனைகளிலே மருத்துவம் செய்தும், குணமடையாமல், கையிலே பணம் இல்லாத காரணத்தினால் தன்னுடைய தாலியைக் கூட விற்றுவிட்டு, என்னிடம் வந்து காசநோய் மருத்துவமனையிலே சேருவதற்காக தனி அனுமதியை மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து வாங்கிக் கொடுக்கச் சொன்னார்கள். நான் அவருக்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி வாங்க முடியவில்லை. முயன்றும் இடமில்லாத காரணத்தினால் இப்படி பல நூற்றுக் கணக்கானவர்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு, செங்கிப்பட்டி காச நோய் மருத்துவமனைக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கீடு செய்து, அங்கு செல்லுபவர்களுக்கு 15 நாட்கள் அல்லது 1 மாதத்திற்குள்ளே இடம் கிடைக்கும் என்ற நிலைமையினை ஏற்படுத்த வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவல் துறையை அடிப்படையாக வைத்து ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது எல்லையில் இந்திய-பாகிஸ்தான் சண்டை நடக்கும் இப்பொழுது டி.ஐ.ஆர். என்ற பாதுகாப்புச் சட்டம் இருக்கும் நேரத்தில் ஜனநாயக நாட்டில் இருந்து கொண்டிருக்கும் நாம், எதை, எதைப் பேசலாம், எதை எதைப் பேசக்கூடாது என்ற வரைமுறைகள் வேண்டும். நாட்டினுடைய பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும்

[திரு. எம். ராஜா அய்யர்] [14th December 1971

அறிவிப்பு ஜூலையிலேயே வந்திருந்தும் நேற்றுவரையிலும் பல ஆசிரியர்கள் அதைப்பெறமுடியவில்லை—இன்று காலையில் எனக்குக் கிடைத்த கடிதம் இது, மன்னார்குடியிலிருந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில்—அவர்கள் நடந்து நடந்து நடந்து சலித்துப் போனார்கள். ஏமாற்றம் அடைந்து, "ஏன் எங்களுக்கு அரசு ஆணையிட்ட ஓய்வு ஊதியம், ஒரு மாத போனசை இந்த ஊர் கஜானா கொடுக்க மறுக்கிறது என்பது ஒரு புதிராக இருக்கிறது" என்கின்றனர். அவர்கள் ஏதோ அரசு ஆணையிட்டும் இந்த அதிகாரிகள் மறுக்கிறார்களே என்று குறை கூறினார்கள். ஏதோ சுவாமி வரம் கொடுத்தும் பூசாரி கொடுக்கவில்லை என்று கூறுவார்களே, அதைப் போல இருந்தது என்று பல வயதான தள்ளாத வயது ஆசிரியர்களெல்லாம் சென்று ஒரு மாத போனஸ் கிடைக்கவில்லை என்று திரும்பி வந்திருக்கிறார்கள். ஏனென்றால் அக்கவுன்டென்ட் ஜெனரல் இது பற்றிய ஆணையை ட்ரஷரிகளுக்கு அனுப்ப வில்லை என்று கருதுகிறேன். அதற்கு இங்கே ஒரு விளக்கக்குறிப்பு இருக்கின்றது. இதனை உடனே அக்கவுன்டன்ட் ஜெனரல் அவர்களுக்கு தெரியப்படுத்த இம்மாதிரியான ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு இந்த ஒரு மாத போனசை இனிமேல் காலதாமதம் இல்லாமல் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. அரசு மிகத் தாராளமான மனதுடன் ஆசிரியர்கள் மத்தியில் எந்தவிதமான வேறுபாடும் இருக்கக் கூடாது என்பதற்காக 1—6—1970-க்குப் பின்னாலே 58 வயதைப் பூர்த்தி செய்கின்ற எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியான ஓய்வூதியம், அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது கடைசி 12 மாத சராசரிச் சம்பளத்தைக் கணக்கிட்டு அதில் 3/8 பாகத்தை ஓய்வூதியமாகக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறது. இந்த ஆணை அக்கவுன்டென்ட் ஜெனரலுக்குச் சென்றதாகத் தெரியவில்லை. பல ஆசிரியர்களுடைய ஓய்வூதிய மனுக்கள் எல்லாம் அக்கவுண்டென்ட் ஜெனரல் அலுவலகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படுகின்றன. மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு "நீங்கள் இவர்களுக்கு 3/8 பங்கு ஓய்வூதியம் கேட்டிருக் கின்றீர்கள். அவர்கள் தனியார் பள்ளியில் வேலைசெய்கின்ற ஆசிரியர் அல்லவா? 30 ரூபாயோ, 60 ரூபாயோ, 75 ரூபாயோ பழைய நிலைப்படியேதான் அவர்களுக்கு ஓய்வூதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று இன்றைக்கு அக்கவுண்டென்ட் ஜெனரலிடமிருந்து ஆணை திரும்பிவருகின்றது. அரசு ஆணையின் பிரதியையே கொடுத்து, "அரசு ஆணை இருக்கிறது, ஓய்வு பெற்ற போது எந்தச் சம்பளத்தை வாங்கினாரோ, அதில் 3/8 ஓய்வூதியம், தனியார் பள்ளி ஆசிரியர்களானாலும் 3/8 ஓய்வூதியம்," என்ற குறிப்புடன் மாவட்டக் கல்வி அதிகாரி அனுப்பியவுடன் அக்கவுன்டென்ட் ஜெனரல் திருப்பி அனுப்பு கின்றார், "இவர்களுக்கு 75 ரூபாய் பழைய நிலைப்படியே நீங்கள் பென்ஷனை நிர்ணயிக்க வேண்டும்" என்று. இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஏனென்றால் அந்தப் பென்ஷனை நிர்ணயிக்க வேண்டும். கடைசியில் வாங்கிய சம்பளத்திலிருந்து இந்தப் பென்ஷனைத்தள்ளி அவர்களுடைய புதுச் சம்பளம் 60-வது வரை நிர்ணயிக்க வேண்டும் அக்கவுன்டென்ட் ஜெனரலுக்கு இந்த ஆணை சென்றிருந்துங்கூட ஏன் அவர்கள் புதுத் திட்டத்தின்படி இந்த ஓய்வூதியத்தை அனுமதிக்க மறுக்கின்றார்கள் என்பது ஒரு பெரும் புதிராக இருக்கின்றது. இதை அரசு சீக்கிரமே தீர்த்து வைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்.



14th December 1971]

(Deputy Chairman in the Chair.)

* திரு. ஏ. பி. ஜனார்த்தனம்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய துணை மதிப்பீடுகளை வரவேற்று சிறிது பேச ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்திலே நம்முடைய உடலெல்லாம் இங்கிருந்தாலும் உள்ளமெல்லாம் வங்கத்திலேதான் இருக்கிறது. நம்முடைய வீரர்கள் அங்கே கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு மக்களை விடுவிப்பதிலே தங்களுடைய முழு ஆற்றலையும் செலுத்தி வருகிறார்கள். இந்த இந்திய நாடு முழுதும் ஒருமுனைப் பட்டு எழுந்து எதிரிக்கு பதிலடி தர வேண்டும் என்ற ஆர்வத்தோடு இன்றைக்கு கிளர்ந்து நிற்கின்ற நேரத்திலே, நாம் நமக்கே உரிய ஜனநாயக மரபுப்படி டெல்லியிலே பாராளுமன்றத்தையும், இந்தப் பகுதியிலே நம்முடைய மன்றத்தையும் நடத்திக்கொண்டிருப்பது ஜனநாயகத்தினுடைய செம்மையைக் காட்டுகிறது. நமக்குள்ளே எத்தனை வேற்றுமைகள் இருந்தாலும், நமக்குள்ளே எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அத்தனையும் புதைத்து விட்டு

தறுக்கினால் பிற தேசத்தார்
தமிழன்பால் என நாட்டான்பால்
வெறுப்புறு குற்றம் செய்தார்
ஆதலால் விரைந்தன்னாரை
நொறுக்கினார் முதுகெலும்பை
என்ற செய்தி கேட்டு
இன்பக் கேணியில் குதிக்குநாள்
எந்த நாளோ?

என்று புரட்சி கவிஞர் வேறொரு சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டதைப் போல், நம்முடைய வீரர்கள் இன்றைக்கு எதிரியினுடைய முதுகெலும்பை முறித்துப் போட்டிருக்கிறார்கள். தமிழகத்திலிருந்து குருதி தருவோர், பணம் தருவோர், ஆள் தருவோர், உதவி தருவோர், உணர்ச்சி தருவோர், ஊக்கம் தருவோர் இப்படிப் பட்டியல் நீண்டபடி இருக்கிறது. சிறு துளி பெரு வெள்ளம் ஆகிறது. நாம் அத்தனை பேரும் அதிலே முனைந்திருக்கிற நேரத்திலே இந்தத் துணை மதிப்பீடுகளின் மூலம் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் சில திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அவைகளை நாம் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கடந்த 50 ஆண்டுக் காலமாக யார் யார் முன்னேற வேண்டும் என்று துடித்தோமோ, யார் யாருக்கு வாழ்வு வர வேண்டும் என்று துடித்தோமோ அவர்களுக்கெல்லாம் வாழ்வு தரவும், அவர்களுக்கெல்லாம் நலம் தரவும் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக நமக்கெல்லாம் மிக மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒரு திட்டம் அரிஜனக் குடியிருப்புகளிலே மின் வசதி இலவசமாகச் செய்யப்படுகிறது என்பது. அதேமாதிரி குழந்தைகள் சத்துணவுத் திட்டம். அத்தனை திட்டங்களையும் போற்றுகிற வகையில் பொதுமக்களைக் கவருகின்ற வண்ணம் இந்தத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

[திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்] [14th December 1971

கால்நடையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமப் பகுதிகளில் விவசாயத்தைப் பொறுத்த வரையில், கால்நடை முக்கியமானது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். கால்நடை வளர்ச்சிக்கு, கால்நடை அபிவிருத்திக்கு இந்த அரசு ஏதாவது செய்ய வேண்டுமென்பதைத்தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கிராமப் புறங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் ஒன்றிரண்டு காரியங்கள், மாடுகள் வாங்கிக் கொடுத்தல் போன்றவைகள், முன்பு செய்துகொண்டிருந்தார்கள். அவைகள் போதுமானதாக இல்லையென்று கருதி இப்போது நிறுத்திவிட்டார்கள். கால்நடைக்காக மானியங்கள் அளிக்கப்பட வேண்டும். உயர்தர ஜாதிப் பசு மாடுகளை, எருமை மாடுகளை வாங்கிக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். கால்நடைச் செல்வத்தைப் பெருக்க வேண்டுமானால், அதற்குரிய உயர்ந்த ஜாதி ரகங்களைக் கொடுத்தால்தான், கால்நடை வளர்ச்சியும் பலமும் பெற முடியும். அந்த வகையில் கால்நடை வளர்ச்சி பற்றியும் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(Mr. Chairman in the Chair.)

* THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, in the shadow of an emergency, it is very difficult for some of us to press for more and more benefits and more and more demands; but, nonetheless, Sir, in view of the fact that these Statements have been placed before this House, we cannot allow our case to go by default, and therefore, if I venture to stress certain requirements, it is only with the hope that at least after the emergency, some of these much-needed things would be done by the Government.

This Supplementary Demand contains very many good features, and although I will not take up the time of the House in complimenting the Government, I would be failing in my duty if I do not praticularly mention that provision has been made in this Supplementary Budget for the Special Nutrition programme for children amounting to over Rs. 30 lakhs as also provision for motor cycles and cycles to rural police stations amounting to over Rs. 16 lakhs, provision for modernisation of the police force amounting to Rs. 2,61,400, provision for additional staff that has been created in the Government Hospitals—we have spoken in our speeches during the budget discussion about the lack of staff in Government Hospitals—and also provision for agricultural programmes for cultivation of H.B. 3 cumbu, tapioca, etc.

It is realised by all of us, Sir, that especially at this time, production-oriented expenditure is vitally necessary and I am glad that in the field of agriculture, considerable sums have been set apart for this purpose.

Having referred to these very good features of the Supplementary Budget or Demands, I would now pass on to some of the items which I would like the Government to consider. The first point is with reference to Public Health. As I



14th December 1971] [Thiru A. R. Damodaran]

mentioned, I am glad that a special Nutrition Programme for children of 0-3 years has been drawn up; but I feel that at least in the next year's budget, a minimum health service programme should be drawn up for school children between the ages of 5 and 11. Recently the Hon. the Minister for Public Health, Thiru Anbazhagan, when he was in Cuddalore, referred to a survey that was conducted in Thanjavur among school children and we were all shocked at the statistics he revealed of the prevalence of various diseases among school children between the ages of 5 and 11. He informed us that in Thanjavur town, about 7 to 8 per cent of the children were afflicted with early stages of leprosy, about 10 or 11 percent were suffering from Tuberculosis, and about 30 to 32 per cent were suffering from mal-nutrition and other diseases. He stressed this aspect and said that 'if we want healthy citizens, we will have to look after our school children at young and tender age'.

Any welfare-oriented State, Sir, which has the interest of all sections of the people, must initiate a minimum programme for taking care of the health of our school children. If we can start a State-wide programme at least after the next Budget, it would be of great help to the poor people, especially those who do not have the facilities for receiving medical treatment at expensive Nursing Homes or Hospitals. It is vitally necessary and some sort of a scheme with contributions from the better-placed sections of our society can also be thought of, so that we may have a minimum medical service programme whereby we can have a medical check-up of all school children between the ages of 5 and 11. I mention school children, because it will be easier for the administration to provide the facilities that will be required. I hope, Sir, that at least in the next Budget, due provision would be made for this.

I am sorry I have to be parochial on this occasion. There is one great difficulty in our Cuddalore Government Headquarters Hospital and that is this: A patient who is afflicted with heart disease has no hope of survival in Cuddalore Town. Considering the fact that some of us are advancing in age, I think it is high time that an E.C.G. Electro-Cordiograph equipment was provided in each of our District Headquarters Hospitals. This is easily available with the private practitioners but it is not available for the poor patients. I think we must have this most essential equipment because more people die to-day of heart disease than of any other disease.

Now, I turn, Sir, to the Public Works, to mention one item, which has attracted my notice and that is in regard to a question that I have asked the other day also with regard to the over-bridge that has been put up at Tambaram. Our Highways Department is a very efficient department and our Highways Department is noted for the wonderful work that it is doing in

இன்னும் கூட குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 4, 5 மாதங்கள் மின்சாரக் கட்டணும் கட்டாமல் பல பஞ்சாயத்துக்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இம் மாதிரியான பஞ்சாயத்துக்களையெல்லாம் மீண்டும் பழையபடியே கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றியமைத்துவிட வேண்டும். ஏனென்றால் கிராமப் பஞ்சாயத்து மக்களிடமிருந்து வரிப்பணம் பெறுகிறது. அப்படியிருந்தும், அந்த ஸ்தாபனங்கள் எந்த விதமான நல்ல காரியங்களையும் அந்தக் கிராம மக்களுக்குச் செய்துகொடுக்க அவைகளின் நிதி நிலைமை இடம் கொடுப்ப தில்லை. ஆகவே, நிர்வாகச் செலவுக்காக என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டுபோனால், அந்தப் பஞ்சாயத்துக்களின் கீழே வரும் கிராமங்கள் எந்த விதமான அபிவிருத்தியும் அடைய முடியாது. எனவே, அவையெல்லாம் மறுபடியும் கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றியமைக்கப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வசதியில்லாத பஞ்சாயத்துக்களை இரண்டாகப் பிரித்து, கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும், துணை மதிப்பீட்டிலே குடிநீர்த் திட்டத்திற்காக சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.
5-40 p.m, இப்பொழுது பவானியிலிருந்து சென்னிமலை வரை அரசாங்கத்தாலே ஒரு பெரிய மதிப்பீடு போட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியி லேயுள்ள 10, 20 பஞ்சாயத்துக்களுக்கு அந்தக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குடிநீர் வழங்கப்படுவதில் ஒவ்வொரு பஞ்சாயத்தையும் கணக்கில் கொண்டு வந்தது உண்மை. ஆனால் 5 ஆயிரம் ஜனத்தொகை உள்ள கிராமங் களில் குடிநீர் ஒரேயொரு பகுதிக்கு மட்டும், 5 ஆயிரம் பேராக இருந்தால், ஆயிரம் பேர் இருக்கிற பகுதிக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது. 5 ஆயிரம் பேர் உள்ள பஞ்சாயத்திலே 600 பேர், 1,500 பேர் மட்டும் குடிநீரைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்திற்கு அரசாங்கத்தால் மானியம் வழங்கப் படுகிறதா அல்லது கடன் வழங்கப்படுகிறதா என்று தெரியாது. கிட்டத்தட்ட ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை 10 ஆண்டுகளில், 15 ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்த மாதிரிக் கட்டுவதினால் பொதுவாக அந்தப் பகுதி யிலுள்ள பஞ்சாயத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பொதுவாக வரி ஏற்படுகிறதே யொழிய, தனிப்பட்ட எந்த ஊர் பயனடைகிறதோ அந்த ஊருக்கு மட்டும் வரி விதிப்பதில்லை. இதனால் பெரும்பாலான மக்கள் தண்ணீரை உபயோகப்படுத் தாமல், வரி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இன்னும் கூடுதலாகச் சிறிய தொகை செலவு செய்து, ஒரு பஞ்சாயத்து என்றால், ஒரு பகுதிக்கு மட்டுமல்லா மல், எல்லாப் பகுதி மக்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். விவசாயக் காரியங்களுக்காக பஞ்சாயத்து யூனியனில் முதன்மையான காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. விவசாயத் திற்கென்று தனிப் பிரிவு கூட ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அமைக்கப் பட்டு வருகிறது. பஞ்சாயத்து யூனியனிலே டிராக்டர்கள், டஸ்டர், ஸ்ப்ரேயர் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் வாங்கப்பட்டிருக்கின்றது, வாங்கி 4, 5 ஆண்டுக் காலம் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். அவைகள் எந்த அளவிலே விவசாயிகளுக்கு உபயோகப்பட்டன என்றால், ஒன்றும் இல்லையென்று சொல்ல



முடியும். சிறிய சாமான் பழுதடைந்தால் கூட, ரிப்பேர் செய்வதில் காலதாம தம் ஆகிறது. இதிலே பெரிய முதலீடு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் போடப்பட்டிருக்கிறது. இந்த முதலீடுகளைப் பொறுத்து, அதனால் மக்களுக்கு ஏதாவது பலன் ஏற்படுகிறதாவென்றால், ஒன்றுமில்லை என்றுதான் சொல்லப்பட வேண்டும். ஆகவே இதையும் கவனித்து அவைகளை உடனடியாகச் சீரமைப் பதற்கும் விவசாயக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிஜன மக்களைப்பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிட்டார்கள். அவர்கள் பகுதிகளுக்கெல்லாம் இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சரி யான குடியிருப்பு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட கீழ் பவானி பகுதியைச் சேர்ந்த மக்கள், அந்தப் பகுதிகளில் கசிவு நீர் ஏற்பட்ட இடங்களி லிருந்து வெளியேறிய அந்த அரிஜன மக்களுக்குக் குடியிருப்பு வசதி கிடை யாது. ஆண்டுதோறும் ஏதோ ஓரளவிற்குக் குறைந்தபட்சம் 40, 50 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இப்போது இரண்டாண்டுகளாக இல்லையென்று கருதுகிறேன். அவர்கள் குடியிருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். திரு. கிருஷ்ண சாமி நாயுடு அவர்கள் இதைப்பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். கூட்டுறவைப் பொறுத்த வரையில், இன்னும் விவசாயிகளுக்குக் கிராமப் பகுதிகளில் சரியான முறையில் கடன் கிடைப்பதில்லையென்ற குறை இருந்து வருகிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமென்று கருதுகிறேன். கடன் மனு கொடுத்த விவசாயி, குறிப்பாகச் சொல்லப்போனால், கீழ்பவானியில் தண்ணீர் வருகிறது, பயிர் நடலாம் என்று கடன் மனு கொடுத்தால், நடவு நட்டு களை யெடுத்த பின்புதான் கடனால் அவனுக்குப் பிரயோசனம் ஏற்படுகிறது. ஆரம்பச் செலவுகளுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே அந்த வகையில் ஏதாவது ஒரு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று ஏற்கெனவே பல தடவை குறிப்பிட்டிருக் கிறேன். அதை அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய மாவட்டத்தில் மத்திய பாங்கினுடைய தலைவராக இருந்தவந்த அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் அந்தப் பதவியிலிருந்து விலகியபின்பு இன்னொரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஓராண்டு காலமாகிறது. தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தயவு செய்து அதையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். துணை மதிப்பீடுகளில் பல வருஷங்களாக அதிகப்படி செலவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. கோவை ஜில்லாவில் வறண்ட பிரதேச மான அவிநாசி, பல்லடம், தாராபுரம் போன்ற பகுதிகளுக்காக பல ஆண்டுக ளாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள் கூறி வந்தும், அவைகளைப் பற்றி எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லையென்று கருதுகிறேன். கோவை ஜில்லாவிலே பஞ்சப் பிரதேசமான பகுதிக்கு, வறண்ட பிரதேசங்களான அந்தப் பகுதிக்கு நீர் வளம் கிடைக்க தயவு செய்து அரசு ஏதாவது முயற்சி எடுத்து, தண்ணீர் வசதி கொடுத்து, அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்கள், ஏழை மக்கள் பயன் பெறத்தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

laying roads and National Highways. But, I think there is some designing defect in this overbridge which has been constructed at a cost of Rs. 21 lakhs. Any ordinary maistry, when he puts up an asbestos cement roof over four brick walls, knows that he has to give certain gradient to the asbestos sheeting so that rain water may flow. But, unfortunately, in the construction of this overbridge, almost perpendicular beams have been constructed to a height of 70 or 80 feet, with the result that even after 10 milli-metre of rain, the central portion of the overbridge has started collapsing and it has become a dangerous hazard to Highways traffic. Sir, I do not wish to cast any reflection on the Highways; but, in view of the fact that provision has been made in this Supplementary Budget for the formation of a Circle in Highways and Rural Works for execution of National Highways works and also for the appointment of an Additional Chief Engineer (Highways), I would recommend to the Hon. Minister that he may kindly look into this matter, because I think it is a serious reelection in the technical efficiency of the Highways' design of this particular overbridge.

Sir, my hon. Friend the Minister for Co-operation is not here. But, he has provided a lot of loans as share capital to co-operative institutions and to Small Industries Corporation of Tamil Nadu. There is one difficulty, we have, Sir, in that loan capital to printing works is unfortunately not being provided. We have very good Printing Works in South Arcot and for the past six years, it has been earning a revenue of Rs. 25,000, after providing for depreciation, etc., on an invested share capital of Rs. 60,000. But, unfortunately, when we have tried to approach various financial nstitutions for long-term loans for construction of a new building for the Press as well as for purchase of additional machinery, we found, there seems to be no particular financing agency which is in a position to advance loans for such works. I hope that the Hon. the Minister for Co-operation who has a large number of schemes to advance loans to various co-operative institutions would also be able to help the Printing Works in various districts to develop in the way in which they should by giving some loans, through some of the central co-operative institutions.

Sir, I have to refer to Education. It is impossible for us not to refer to it because it is always attracting a lot of notice and I would like to reinforce the plea that has been made by my hon. Friend Thiru Rajah Iyer as well as by my hon. Friend Thiru Swaminathan when they stressed that some consideration is required for the plea of the Graduate teachers in our high school holding high qualifications who have been pleading for a long time that their pay should be revised in proportion to their qualifications. I have already referred to this in my speech during the Budget discussion and there is really room



for dissatisfaction. I am glad that the Government have not closed their minds on this issue as seen from the speeches of the Hon. the Education Minister and the Hon. the Chief Minister, who have stated that the question is still open and that they have not made up their minds. I hope that even though it may not be possible during this national emergency to grant any particular revised scale of pay, their plea for a starting salary of Rs. 325 would be considered by the Government. We are recruiting our teachers for so many national purposes, not only in Family Planning drive but also in Mid-day Meals programme, possibly in defence effort also and I would request the Hon. the Chief Minister and the Hon. the Education Mnister to consider their plea and do something to redress their long standing demand.

Sir, reference has been made to the provision of some funds for the Parallel medium courses in our Colleges. 5-50 p.m.
Last year I referred to this difficulty that it was impossible to start adequate medium courses in our Government Colleges because the preparation had not yet been made by the Directorate of Collegiate Education. I hope, Sir, that at least during the coming academic year, apart from the recruitment of staff, which has been provided for in the supplementary demands, some thought would be bestowed on the question of how to provide accommodation in these Government Colleges. The Colleges have two sections at least working at the same time. Sir, in these two sections working with parallel media, there is another difficulty in that new courses cannot be started for B.Com., M.Com., B.Sc., in the Government Colleges because of lack of building accommodation. My hon. Friend wanted more and more buildings to be constructed. But I am afraid I cannot ask for all these things because all these require a lot of expenditure. I would, therefore, request the Education Minister to take up the matter again with the Madras University whether a shift system could not be introduced at least in certain Government Colleges. I do not say that it should be done throughout the State, but it may be done at least in certain Government Colleges because I take it that for a period of another 3 or 5 years, there is likely to be a heavy cut in building expenditure. I hope, Sir, that this issue will be taken up before the end of the academic year so that we may be able to give adequate accommodation and adequate teaching facilities to the students studying in these Colleges.

Sir, I would like to end with a particular note of thanks to the Hon. the Chief Minister for having provided Rs. 5 lakhs for a Cricket Stadium at Madras. I realise that people may consider me to be flippant to talk of a Stadium at a time when our country is facing such an emergency. But this has been a longstanding need and on behalf of the Cricket lovers in our State and as a Cricketer myself, I am very proud that we are going to have a first class Cricket Stadium which will be

[Thiru A. R. Damodaran] [14th December 1971

equal to the Brabourne Stadium in Bombay. A provision of Rs. 15 lakhs has been made and I hope, Sir, that the Government will stand by this commitment. I am sure that they will earn enough money by charging taxes on the tickets that may be given for admission to the Stadium. But I am particularly glad that this long-felt need of the Cricket Association has been recognised and the Government have been generous enough to give such a handsome grant for the Stadium.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் நம்முடைய அவையின் முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய துணை மதிப்பீட்டை தான் நெஞ்சார செங்கற்பட்டு மாவட்ட மக்களின் சார்பாக வரவேற்று, என்னுடைய கருத்துரைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் இந்தத் துணை மதிப்பீட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய செலவினங்களானது முழுமையாக கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளெல்லாமே செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகை என்பதிலே நாம் மெத்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த அதிகப்படியான தொகைகளை ஒதுக்கி செலவு செய்யாமல் இருந்திருப்போமானால், உள்ளபடியே நம்மை உருவாக்கிய கிராமப் புறத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியவர்கள் என்ற முறையில் ஆளாகியிருந்திருப்போம். ஆனால் அதையெல்லாம் உணர்ந்துதான், நம்முடைய முதல்வர் அவர்கள் இன்றைய தினம் மிக அதிகப்படியாக கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அப்படி உருவாக்கித் தருகிற நேரத்தில் கூட, ஊராட்சிகளின் மூலமாக இந்த வேலை வாய்ப்புகள் நடைபெற்றால், நேர்மையாகவும் நீதியாகவும் நல்ல முறையிலே நடைபெறும் என்பதை உணர்ந்து, ஊராட்சிகளைக் கௌரவிக்கக்கூடிய வகையிலே முதல்வர் அவர்கள் இந்த நல்ல திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மத்திய அரசானது தமிழகத்தில் எந்த அளவிற்கு ஏழை விவசாயிகள் கிராமப் புறங்களில் வேலையற்றிருக்கிறார்கள் என்று நல்ல முறையிலே கணக்கிடவில்லையென்றால் கூட, நம்முடைய முதலமைச்சரவர்கள் கடந்த 40 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாக அன்றாட வாழ்க்கையைக் கிராமப்புற மக்களோடு பழகுகின்ற நிதியில் அமைத்துக்கொண்டதன் காரணமாக, கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை குறைவாக இருக்கும் என்று உணர்ந்து, மத்திய அரசு உதவி ஒதுக்குகிறதோ இல்லையோ அதற்கு முன்பாக இந்தத் திட்டத்தில் மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை விஸ்தரித்திருக்கிறேன் என்று இந்தத் திட்டத்தை விஸ்தரித்திருப்பதற்கு ஊராட்சிகளின் சார்பாகவும் ஊராட்சிகளில் வேலையற்றிருப்பவர்களின் சார்பாகவும் முதலமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே கூட அமுல்படுத்துகின்ற நேரத்தில் மன்ற உறுப்பினர்களால் ஐயப்பாடு தெரிவிக்கப்பட்டது. இந்தக் கிராமப்புற வேலை வாய்ப்புக்கு வருபவர்கள் உள்ளபடியே அவர்கள் குடும்பத்தில் வேலையற்றவர்களாக இருந்து, அந்தக் குடும்பத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா என்று ஐயப்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் பெரியவர்



14th December 1971] [திரு. வி. வெங்கா]

திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கிளப்பினார்கள். நான் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவன் பொறுப்பை ஏற்றிருக்கின்ற காரணத்தால், நடைமுறை உணர்ந்திருக்கிற காரணத்தால், நான் இந்தக் கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அரசினர் விதியிலேயே அந்தப் பணிக்கு அமர்த்தக்கூடிய நபரானவர் ஊராட்சி மன்றத் தலைவரிடமிருந்தும், அந்த ஊராட்சியின் மணியக்காரரிடமிருந்தும் அந்தக் குடும்பத்திலே வேறு யாரும் வேலை செய்யவில்லை, அந்தக் குடும்பத்திலே எல்லோரும் வேலையற்றிருக்கிறார்கள், இவர் வேலைசெய்துதான் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற அத்தாட்சி காட்டினால்தான், பிறகு அவரைத் தேர்வு செய்யக்கூடிய தேர்வுக் குழு அந்த அத்தாட்சி பெற்றவரை நம்பிக்கைவைத்து தேர்வுசெய்கின்றார்கள். ஊராட்சித் தலைவர்களிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இல்லை. அதே மாதிரியாக கிராம முன்சிப்புகளிலே ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இல்லை. அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். எனவே அந்தத் தேர்வு முறையானது பாகுபாடின்றி, கட்சிக் கண்ணோட்டமின்றி உள்ளபடியே வாழ்வை நடத்த வக்கற்றவர்கள்மட்டுமே தேர்ந்தெடுக்கப் பட்டு அங்கே நியமிக்கப்படுகிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருபதாண்டுகள் ஆகியும் சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகும் இன்னும் கிராமப புறங்களிலே இணைப்புச்சாலைகள் இல்லாத நிலையிலேதான் நாடு இருந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் உணர்ந்து ஊராட்சி மன்றங்களின் மூலமாக அந்தத் திட்டத்தை இப்பொழுது அளித்திருக்கிறது. எந்தப் பகுதியில் இணைப்புச் சாலைகள் இல்லையோ, அதையெல்லாம் அங்கே ஊராட்சி மன்றங் 6·00 p.m.
களிலே இருக்கக்கூடிய குழுவானது நல்ல முறையிலே பரிசிலித்து புதிய ரோடுகளை ஏற்கனவே உள்ள சாலைகளைப் பராமரிப்பதல்ல புதிய இணைப்புச் சாலைகளை உருவாக்குவதற்கு முதலமைச்சரின் திட்டமானது வழிவகை செய்கிறது என்ற காரணத்தால், உள்ளபடியே ஊராட்சிகளின் சார்பாக நமது மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இன்றைய தினம் ஏழைக் குழந்தைகளுக்காக சத்துணவை அளிப்பதற்காக ஒரு சிரிய திட்டத்தை நமது அரசானது முக்கியமானதாக எடுத்துக் கொண்டு அமல்படுத்துகிறார்கள். இன்றைய தினம் நெருக்கடியான சூழ்நிலையில், நமது கஜானா காலியாக இருக்கிற காலத்தில், பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத் தீட்டுகிற நேரத்திலேகூட நமது முதலமைச்சர் அவர்கள் இது போன்ற சிறப்பான திட்டத்தை மேன்மேலும் விரிவாக்கிக்கொண்டிருப்பதற்காக உள்ளபடியே வருங்கால சமுதாயத்தினர் சார்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நமது நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கடலூரில் பேசும்போது குழந்தைகளும் மாணவர்களும் எந்த அளவுக்கு வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள் என்று. இன்றையதினம் குழந்தைகளுக்கு வியாதிகள் வருகின்றன என்றால், குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுத்தால் மட்டும் போதாது. அவர்களுடைய பெற்றோர்களுக்கு சத்தான உணவு கிடைக்க வழி செய்ய வேண்டும். ஏற்கனவே, 10, 12 ஆண்டுகளுக்கு முன்பாக சாதாரண உணவேகூட, அரிசியேகூட கிடைக்காத சூழ்நிலை தமிழகத்திலே இருந்தது என்பதை யாரும் மறந்துவிடுவதற்குத் தயாராக

வகையில் நாம் பேசக்கூடாது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும். இந்த சந்தர்ப்பத்தில் எல்லா கட்சியினரும் அரசாங்கத்திற்கு ஆதரவு தரத் தயாராக இருக்கிறார்கள். அரசாங்கம் இந்த சமயத்திலே எடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் காரியங்களைத்தான் மக்கள் செய்ய வேண்டும் என்பதும் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயமாகும். எல்லா கட்சியினரும் நாட்டின் நலனுக்காகத் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, சிலர் சற்றுமுன் இந்த அவையில் குறிப்பிடப் பட்டபடி இன்னவற்றை பெரியவர் எழுதலாமா, அவர் நாட்டுத் துரோகி யல்லவா, எழுதப்பட்டவை நாட்டின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்காதா என்று இங்கே பிரச்சினைகளைக் கிளப்பிவிட்டால், அவையே நாட்டின் பாது காப்பிற்குத் தீங்குவிளைவித்துவிடக் கூடும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அது போன்ற காரியங்களை எல்லாம் நிறுத்திக்கொள்வது நல்லது என்றும் நான் நினைக்கிறேன். அமெரிக்க நாட்டைப் பார்க்கும்பொழுது அங்குள்ள செனட்டர் கென்னடி போன்ற பெரிய தலைவர்கள் எல்லாம் நிக்சனின் வியட்நாம் கொள்கையைக் கண்டித்துப் பேசுகிறார்கள். இப்படி அவர்கள் ‘பாலிசி’ என்ற அடிப்படையிலே சொல்லும்பொழுது, அவர்களுக்கு நாட்டுப் பற்று இருக்கிறதா என்று சந்தேகிக்காமல் அமெரிக்க நாட்டிற்கான நல்ல கருத்துக்களைச் சொல்லுகிறார்களா இல்லையா என்று தான் பார்க்கிறார்கள். அதைவிட்டு, இங்கே சொல்லப்பட்டதைப்போல் ராஜாஜி அவர்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் தன்மையிலே சுவராஜ்யா பத்திரி கையிலே எழுதிவிட்டார், அவர் நாட்டிற்கு விரோதி, நிக்சனின் ஏஜெண்ட் என்று எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் நாட்டினுடைய பாதுகாப்பிற்கு நாம் இடையூறுகள் செய்தவர்களாக ஆவோம் என்று நான் சொல்ல விரும்பு கிறேன். அப்படி நான் குறிப்பிடும்பொழுது நம்முடைய சக்திகளை விரயம் செய்யும் அளவில், நம்முடைய வீரர்கள் சரியாக சண்டையிட முடியாத நிலையில் நம்முடைய அரசுக்குத் தீங்குவிளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தான் நாட்டின் விரோதிகள். அதைவிட்டு நாட்டின் நலனைக் கருதி தங்களுடைய அபிப்பிராயங்களை இந்த ஜனநாயக நாட்டிலே சொல்லுகிறவர் களை எல்லாம் நாம் நாட்டிற்கு விரோதி என்று சொன்னால், எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூட சொல்ல முடியாத துர்பாக்கிய மான நிலைமை ஏற்பட்டுவிடும். அதுவும் பேச்சு உரிமைக்கு மதிப்பு கொடுத் திருக்கும் இந்த நாட்டில், நாட்டின் பாதுகாப்பையே கருதி நல்லதைச் சொல்லுபவர்கள் சொல்லட்டும். அதைப்பற்றி நாம் தனிப்பட்ட முறையிலே தாக்க வேண்டாம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, “யாகியாகானின் நட்புறவு உணர்ச்சியைப் புரிந்துகொள்ளாதது இந்தியாவின் அறியாமை ஆகும்” என்ற கருத்து இந்தியாவிற்குச் சார்புடைய கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜீ. சுவாமிநாதன்:** ராஜாஜி அவர்கள் பாதுகாப்பிற்குக் குந்தகமாக ஏதாவது செய்தாரா என்றுதான் பார்க்கவேண்டும். அவர் எப்பொழுதுமே ஆலோசனை சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் சொல்லியதைக் கேட்டிருந்தால், இந்த நிலைமை வந்திருக்காதே என்பதற்காகத்தான் அப்படி எழுதுகிறார்கள். அதை விட்டுவிட்டு, அவரை இப்படி எழுதியதின் மூலம் நாட்டிற்கு விரோதி, அமெரிக்காவின் ஐந்தாம் படை என்று சொல்லிக்



கொண்டே போனால் அது நாட்டிற்கே நல்லதல்ல என்று சொல்லிக்கொள் கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் அவரைத் தனிப்பட்ட முறையிலே, அவர் நாட்டிற்கு விரோதி, பகைவர் என்ற வாதத்திலே இறங்க வில்லை. யாகியாகான் ரம்ஜான் பண்டிகையின் போது நட்புறவு உணர்ச்சியோடு பேசினார் என்றும், அதைப் புரிந்துகொள்ளாதது இந்தியாவின் அறியாமை ஆகும் என்றும், யாகியாகான் நல்ல நோக்கத்திலே இருந்தார் என்றும், இந்தியாதான் பாகிஸ்தான் நட்புறவு உணர்ச்சியைப் புரிந்துகொள்ளவில்லை என்கிற பொருள் ஏற்படுகிறதா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஜீ. சுவாமிநாதன்:** அதை ஏற்றுக்கொண்டிருந்தால், இந்த அளவுக்குச் சண்டை முற்றியிருக்காது என்ற அளவிலேதான் அப்படிச் சொல்லியிருக்கிறார். நாட்டிலே நடக்கவிருக்கும் போரைத் தடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத் துடன்தான் அப்படி அவர் குறிப்பிட்டிருக்கிறார். நான் குறிப்பிடுவது எல்லாம் நம் நாட்டின் சுதந்திரத்திற்குப் பாடுபட்ட முதுபெரும் பெரியவர் ஒருவரை இப்படி எல்லாம் தனிப்பட்ட முறையிலே தாக்குவது கூடாது என்பதுதான் என்று கூறி நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்:** 1971-72-ஆம் ஆண்டிற் கான செலவு குறித்த முதல் துணை மதிப்பீடுகளின் பேரில் ஒரு சில வார்த்தை களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கல்வியைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிக்க உறுப்பினர் திரு. ராஜா ஐயர் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் ஆசிரியர்களின் நிலை, ஆசிரியர்களின் ஊதியம் இவைகளைப் பற்றி விபரமாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் பெரும்பாலான கிராமங்களிலே சரியான முறையிலே பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இல்லாமல், பள்ளிக்கூடம் நடந்து வரு கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். பள்ளிகள் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றால், அதற்குத் தகுந்தமாதிரிக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் தெரிந்திருக்கிறோம். சில கிராமங் களிலே மரத்தடியிலே கூட, இன்னும் சொல்லப்போனால் மிகவும் மோசமான கீற்றுக் கொட்டகைகளிலேகூட, பள்ளிகள் நடைபெறுகின்றன. இவையெல்லாம் தவிர்க்கப்படும் அளவிலே அரசினர் காரியங்களை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தற்பொழுது புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு “அப்பரண்டிஸ் கோர்ஸ்” என்ற முறையிலே 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆசிரியர்களையும் மற்ற எல்லா ஆசிரியர்களைப் போல் கருதி, மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்களை அந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்கள்பற்றி ஒரு சில வார்த்தைகள். கிராமப் பகுதிகளிலே 5,000 ஜனத்தொகை, 10,000 ரூபாய் வருமானம் என்ற அடிப் படையிலே பல கிராமப் பஞ்சாயத்துக்களை நகர் பஞ்சாயத்துக்களாக மாற்றி யமைத்திருக்கிறார்கள். இந்த 5,000 ஜனத்தொகையுள்ள பஞ்சாயத்துக்களிலே 10,000 ரூபாய் வருமானம் வந்தால், நகரப் பஞ்சாயத்துக்களாக மாற்றியமைக் கப்பட்டவுடனே, அங்குள்ள நிர்வாகஸ்தர்களுக்கே சம்பளம் கூட கொடுக்க முடியாமல் கஷ்டப்படுவதை நாம் பார்க்கிறோம். அங்கே ஒரு எக்ஸிகூட்டிவ் ஆபீசர், ஒரு அடெண்டர், பியூன், மற்றும் தெருக்கூட்டுபவர்கள் போன்று இம் [illegible]ரியான ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க, பணம் போவதில்லை.

[திரு. வி. வெங்கா] [14th December 1971

மாடல் கிராமம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு அந்தக் குறிப்பிட்ட கிராமத்தை அவர்கள் உருவாக்குகிறார்கள். அந்தப் பணியை நீடித்துக்கொண்டு செல்வோமானால், கிராமம், நகரம் என்ற வேறுபாடு இல்லாமல், கிராமங்களிலேயிருந்து நகரங்களுக்குக் குடியேறி, குடிசைகளைப் போட்டுக்கொண்டு நகரங்களின் அழகைச் சீர்குலையச் செய்யக்கூடிய நிலையில்லாமல் ஆங்காங்கே வசதியையும் செய்து சுகமாக வாழ்க்கையை நடத்துவதற்கு முன்னோடியாக அந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, அதற்காகவும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் போலீஸ் துறைக்கு மிக நல்ல முறையிலே ஒரு போலீஸ் கமிஷனை ஏற்படுத்தி காவலருக்கு என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அதைக் களைவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சியினைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அச்சரப்பாக்கம் காவல் நிலையத்தில் தொலைபேசி இல்லாத குறை நீண்ட நெடு நாட்களாக இருக்கிறது என்பது முதலமைச்சர் அவர்களுக்கே தெரியும். அவர்கள் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த நேரத்தில், அச்சரப்பாக்கம் பக்கத்தில் ஒரு ஆக்சிடெண்ட் ஏற்பட்டுவிட்டது. அது அச்சரப்பாக்கம் காவல்நிலைய எல்லைக்குட்பட்டது. அவர்கள் திண்டிவனம் சென்று நாலு மணி நேரம் கழித்துத்தான் சென்னைக்குத் தகவல் கொடுக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே அதைப் போக்க, அங்கே ஒரு தொலைபேசி அமைக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பொதுப்பணித் துறை மிக நல்ல முறையில் பணியாற்றி நாட்டின் எதிர்காலத்தை அபிவிருத்தி செய்ய நல்ல முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆயிரம் மைல்களாவது அரசுத் துறைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நல்ல முயற்சியில் பொதுப் பணித் துறை, மாண்புமிகு முதல்வருடைய ஆணையினைப் பெற்றுச் செயல்பட்டு வருகிறார்கள். இதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய சொந்த லாபம் கருதி, ஒரு சொந்த வேண்டுகோள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அச்சரப்பாக்கம் ஆணைக்குப்பம் தொழுப்பேடு சாலையானது நான் வசிக்கும் கிராமத்தின் பக்கம் செல்கிறது. அதை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தேன். இன்றையதினம் நிதிவசதி பற்றாக்குறை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை 1971-72-ஆம் ஆண்டிலாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, உள்ளபடியே இந்த அறிக்கை மிக நல்ல முறையில் அமையப் பெற்றிருக்கிறது. மக்களுக்கு வசதிகள் பெருகி பல்வேறு இனங்களில் காரியம் செய்திருக்கிறார்கள். அது நியாயமான செலவினங்கள் என்று பாராட்டி இந்த அறிக்கையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*திரு. ஏ. பொன்னப்ப நாயுடு: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் துணை பட்ஜெட் மீது சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை இந்தப் பகுதிகளில் இந்த ஆண்டு மழையில்லாமல் பெருவாரியான நிலங்கள் தரம்பாகவே இருக்கின்றன. மணிலா மாகுல் கூட போதுமான மழை ஆவணி,



14th December 1971] [திரு. ஏ. பொன்னப்ப நாயுடு]

புரட்டாசியில் இல்லாமல் விதைக்குக்கூட இல்லாமல் விவசாயிகள் அவஸ்தைப் படுகிறார்கள். துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்று சொல்வார்கள் 'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது பெரியோர் வாக்கு.

மிஸ்டர் சேர்மன்: பட்ட காலிலே பட்டால்தான் நல்லது. (சிரிப்பு) 6.10. P.M.

திரு. ஏ. பொன்னப்ப நாயுடு: 1967-ல் வெள்ளம் வந்து, அதனால் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பெரும் கஷ்டமடைந்தார்கள். அப்புறம் இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை 1969-இலும் அந்தப் பகுதி மழையின்றி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு, அங்கே பஞ்சநிவாரண வேலை நடந்து வந்தது. அங்கே விவசாயிகள் செய்த பயிரெல்லாம் காய்ந்து அதனாலே பாதிக்கப்பட்டார்கள். அது போலவே இவ்வாண்டும் தொடர்ந்து மழையில்லாமல் இன்னும் பெருவாரியான நஞ்சை நிலங்கள் தரம்பாக இருக்கின்றன. கொஞ்சமாவது சாகுபடிக்கு கிணறு 'போரிங்' போட்ட இடங்களில் தண்ணீர் கிடைக்காமல் மிகக் கஷ்டப்படுகிறார்கள். சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள் பட்ட காலிலே பட்டால் நல்லது என்று. அப்படியல்ல அங்கே இருக்கும் நிலைமை. இராமநாதபுரம் ஜில்லாவில் எப்படித் தொடர்ந்து கஷ்டப்படுகிறார்களோ, அதே போல் அத்தனை காலமாக இந்தப் பகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்படி விவசாயிகளுக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, விவசாயக் கூலிகள் மிகவும் கஷ்டப்பட்டு வேலையின்றி வாடுகிறார்கள். அவர்களுக்கு வேலையும் கிடைக்கவில்லை. கிடைத்தாலும் வாங்குவதற்கு உணவு விலைகள் ஏறியிருப்பதனால் வாங்கும் சக்தி கிடையாது. இந்தப் பகுதியில் அரசாங்கம் இதை உடனடியாகப் பரிசீலித்து, அங்கே அடுத்த ஆண்டுக்கு வரி வசூலை நிறுத்தி வைத்து எவ்வளவு தூரம் விளைபொருள் விளைகின்றதோ அந்த நிலங்களுக்கு மட்டும் தீர்வை வாங்கிக்கொண்டு மற்றவைகளுக்கு வரி வஜா செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, மணிலா விதை கெட்டு, காணிக்கு ஒரு மூட்டை மணிலா கொட்டை கூட கிடைக்கவில்லை. அதுவும் சள்ளை கொட்டையாக இருக்கிறது. அப்பகுதியில் பெருவாரிப் பணம் மணிலா மூலமாகத்தான் விவசாயிகளுக்கு வரும். அது கெட்டுவிட்டால் அடுத்த ஆண்டு மணிலா வரியைத் தள்ளுபடி செய்து, அந்தப் பகுதி விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சர்க்கார் கடன்களை அங்கே இருக்கும் கலெக்டர், சப்-கலெக்டர் வாரா வாரம் சென்டர் போட்டு கடன்களை துரிதவகையில் வசூல் செய்யவில்லை என்று கிராம அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்து துரிதமாக வசூல் செய்ய வேண்டுமென்று தொந்தரவு செய்கிறார்கள். அதைக்கூட அரசாங்கம் ஒரு வருட காலத்திற்கு—இந்தக் கூட்டுறவுத் துறைக் கடன்கள், சர்க்கார் கடன்கள், பஞ்சாயத்து யூனியன் மூலம் கொடுக்கும் கடன்கள்—ஒத்திவைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அங்கே திண்டிவனம் தாலுக்காவில் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள கிராமங்களில் பஸ் போக்குவரத்து போய்க்கொண்டிருக்கிறது. அந்த ரோடுகள் எல்லாம் மிக கலகம் அடைந்து அதற்கு 'மெட்டல்' போடாமல் பஸ்கள் செல்லும் நேரத்தில் அந்தப் பாதையில் பாலங்கள் கட்டாமலிருப்பதால், அந்த பஸ்கள் சரியாக ஓடுவதில்லை. அதை மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் கவனித்து, அந்தக் கிராமப் புறங்களில் பஸ் போகும் பாதைகளிலெல்லாம் 'மெட்டல்' போட்டு அரசாங்கமே எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கிராமப்

[திரு. ஏ. பொன்னப்ப நாயுடு] [14th December 1971

பஞ்சாயத்துக்களில் போதுமான நிதி கிடையாது. இந்த சபையிலே கூட பலர் இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். 500 ஜனத்தொகைக்கு ஒரு பஞ்சாயத்து என்று அமைத்திருக்கிறோம். அதில் 1,000-மும் இருக்கும் 2,000, 3,000-மும் இருக்கும். 500 ஜனத்தொகை உள்ள கிராமங்களில் எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. போதுமான நிதி வசூலில் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும். அதற்கு அந்தப் பஞ்சாயத்துக்களை ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்தாக அமைப்பதற்கு அரசாங்கம் பரிசீலித்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களில் நீண்ட காலமாக ஒரு குறை இருந்து கொண்டே இருக்கிறது. அதில் 'ஏ, பி, சி, டி' என்று 4 பிரிவுகளாக, பஞ்சாயத்து அமைக்கும்போது, அப்போது அந்தத் துறையிலிருந்த காரியதரிசி அவசர கோலமாக அதை அமைத்து விட்டார்கள். எங்கள் ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியன், அது 'ஏ' கிளாஸ். அது ரொம்பப் பிற்பட்ட பகுதி. அங்கே பொருளாதார நிலைக்கும் வழி கிடையாது. அதை 'ஏ' கிளாஸ் என்று எடுத்திருக்கிறார்கள். அதனால் எந்தக் காரியமும் பஞ்சாயத்து யூனியன் மூலமாகச் செய்ய முடியவில்லை. இந்தப் பாரபட்சம் கூடாது. அதைப் பல முறை பலர் எடுத்துச் சொல்லியும் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதில் முக்கிய கவனம் செலுத்தி 'ஏ, பி, சி, டி' என்ற பிரிவுகளை மாற்றி ஒரே அடிப்படையில் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சமமாக நிதி கிடைப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓங்கூர் ஆற்றில் அணை கட்ட வேண்டுமென்று நான் வந்த நாளிலிருந்து பல முறை இந்தச் சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். திண்டிவனம் தாலுகாவில் தென் பகுதியில் வீடூர் அணை கட்டினார்கள். அதன் மூலம் 3,000 ஏக்கரா நிலங்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கிறது. அதே போல வட பகுதியில் ஓங்கூர் அணை கட்டாததால், அங்கே பல ஏரி கலங்கல் தண்ணீர் செஞ்சி தாலுகாவிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. அது சமுத்திரத்தில் விழுந்து வீணடிக்கப்படுகின்றது. எவ்வளவோ அணைகள் கட்டியிருந்தாலும் கூட, பெரிய நீர்ப்பாசன அணைக்கட்டுகள் எங்கள் தாலுகாவில் கிடையாது. இப்படி ஒரு நிலை அங்கே இருக்கிறது. அங்கே அணை கட்டினால் 10 கிராமங்களுக்கு சுமார் நான்கு அல்லது ஐந்தாயிரம் ஏக்கராவுக்குப் பாயும். அந்த அணையை விவசாயிகளுக்குக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும்.

இதைப்பற்றி ஜில்லா கவுன்சிலிலே கூட அதாவது பிளாக் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே கூட எடுத்துச் சொல்லி, என்ஜினியர்கள் சர்வே செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, விவசாயிகளின் கஷ்டங்களைத் தான். அதைப் போல் விவசாயக் கூலிகளுக்கும் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பகுதிகளிலே பஞ்ச நிவாரண வேலைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்றும், நான் முன்பு சொன்னதைப் போல் கடன்கள் வசூலிப்பதைச் சிறிது காலத்திற்கு ஒத்திப்போட வேண்டுமென்றும் கேட்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



14th December 1971]

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினைத் தந்தமைக்காக எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே, குழந்தைகளுக்கு சத்துணவு அளித்தல், ஆஸ்பத்திரிகளிலே 6 22. P.m.
காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், போலீசுக்குத் தேவைப்படுகின்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்ற வாகன வசதிகள் செய்து கொடுத்தல் போன்றவைக்காக அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி கிராமப் புறங்களிலே இருக்கின்ற ஏழை, ஹரிஜன மக்களுக்கு— வெளிச்சம் இல்லாமல் வாடி வதங்கிக் கிடக்கின்ற மக்களுக்கு வெளிச்சம் தருவதற்காக என்றும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமில்லை, இந்தத் துணை மானியக் கோரிக்கையைக் கவனிக்கும் நேரத்திலே, இன்று பெரும்பாலும் வேலையின்றி தவித்துக்கொண்டிருக்கின்ற மக்களுக்கு வேலை தர ஏராளமான திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே இதற்கு முன்னாலே ஆற்றலுள்ள மன்னன் இந்த நாட்டை எப்படிக் காப்பாற்றுவானோ, நாட்டை எப்படி வறுமையில்லாமல் வைப்பானோ அந்த "தியரி" அந்த அடிப்படை உண்மைகள் எல்லாம் இதிலே இருக்கின்றன. சத்துணவு குழந்தைகளுக்கு வழங்குவதற்காக ஒரு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் ஏறக்குறைய இங்கே தந்திருக்கிறார்கள். உள்ளபடியே இங்கே இருக்கின்ற அருமை நண்பர்கள் எல்லாம் அறிவீர்கள், சென்று பார்க்க வேண்டும்—சென்று பார்ப்பதற்கு குடிசைகளிலே மெலிந்த குழந்தைகள் இருக்கிறதே; எலும்பும் தோலுமாகத் தானே அவைகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்த்த காரணத்தினாலோ என்னவோ, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகளோடு பழகியதாலோ என்னவோ, எதிர்காலத்திலே இந்த நாட்டிற்கு அவைகள் குழந்தைகளாக இருக்க வேண்டும், அதுவும் இந்த நாட்டை அவைகள் ஆளவேண்டும் . . .

**திரு. ஜி. சுவாமிநாதன்:** எதிர்காலத்திலே குழந்தைகள் எப்படி நாட்டை ஆள முடியும்? 6·20. P.M.

**திரு. சி. வி. ராஜகோபால்:** அந்த மெலிந்து போன குழந்தைகள் நன்றாக வளர்ந்து, என்னைப் போல் அல்லாமல் திரு. கிருஷ்ணசாமி நாயுடு போல் வளர்ந்து, அறிவும் பெற்று வாழ வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே, உள்ளபடியே இது எல்லோரும் பாராட்டக்கூடிய விஷயம். கூட்டுறவுத் துறையைப்பற்றி எனக்கு முன்னாலே திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கவலையோடு சொன்னார்கள். அவர் சொன்னார், இந்தத் துறைக்கு 'முகம் இல்லை', அப்படி முகம் இருந்து பார்த்தால், அது பரிதாபகரமாக இருக்கிறது என்றார். முகத்திலே ஒன்றுமே இல்லை. முகத்தைப் பார்த்து பரிதாபப்படுபவர்கள் கொஞ்சம் தான். விஷயம் இருக்கிறதா என்று தான் கவனிக்க வேண்டுமே தவிர, வேறு ஒன்றுமில்லை. கூட்டுறவு நிர்வாகத்திலே உள்ளபடியே நிறைய கஷ்ட நஷ்டங்கள் இருப்பதாகச் சொன்னார். இதற்கு முன்னாலே கூட அது இருந்திருக்கிறது. எங்கள் ஊரிலே கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் பாங்க் இருந்தது. திவான் பகதூர் வேதாசலம் அவர்கள் அதுவும் என்னுடைய சொந்தக்காரர் தான் அதிலே பெரிய பதவியிலே இருந்தார். அந்த பாங்க் சில வசதி வாய்ப்பு உள்ளவர்களுக்குத் தான் பயன்பட்டதே தவிர, ஏழை எளியவர்களுக்குப் பயன்பட்டதா என்று எண்ணிப் பார்த்தால், இல்லை என்று தான் சொல்லுவேன். ஆகவே, அப்பொழுது அதிலே

[திரு. வி. வெங்கா] [14th December 1971

இல்லை. ஆனால் அந்த நிலைமை நீங்கி இன்றையதினம் நமது முதலமைச்சர் தலைமையில் இயங்கக்கூடிய அரசின் விவசாயத் துறையானது பசுமைப் புரட்சியை உருவாக்கி, நியாய விலையிலே கட்டுப்படியாகக் கூடிய விலையிலே கிராமப்புறங்களிலேயெல்லாம் நல்ல அரிசியைக் கிடைக்கச்செய்திருக்கிறது. அப்படி அரிசியைக் கொடுக்கிற நேரத்திலே அவர்களுக்கு முட்டையும் பாலும் மாமிசமும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அந்த அளவுக்கு நம் நாட்டிலே இருக்கக்கூடிய கால்நடைத் துறையானது விருத்தியடைந்திருக்கிறதா என்றால், இல்லை என்று நிச்சயமாக இந்த மன்றத்திலே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஓர் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாக பெரிய அசுர வேகத்திலே விவசாயத் துறையானது வளர்ந்திருக்கிறது. அந்த விவசாயத் துறை மேலும் முழுமையான நன்மை கிராம மக்களுக்குச் செய்ய வேண்டுமென்றால், முன்னேற வேண்டுமென்றால், அதற்கு ஏற்ற அளவிலே கால் நடைத் துறையும் வளர வேண்டும். நமது பூகோள ரீதியிலே பார்க்கிறபோது, என்ன தான் விஞ்ஞான உபகரணங்கள் உபயோகப்படுத்தப்பட்டு விவசாயம் செய்யப்பட்டாலும், கால்நடையைப் பேணிக்காத்தால்தான் சத்தான உணவை வழங்க முடியும். இன்றைய தினம் மத்திய அரசின் பெரு மானியத்தைக் கொண்டு நல்ல முறையிலே தமிழகத்திலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதே மாதிரியாக சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக மத்திய அரசிடத்திலே அதிகமான பணம் குவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைப் பெறுவதற்கு ஏற்ற ரீதியிலே நமது கால்நடைத் துறையானது நல்ல பல திட்டங்களைத் தீட்டி நமது விவசாயத் துறை வளர்ந்திருக்கக்கூடிய அளவுக்கு வளர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் இன்றைய தினம் கூட்டுறவுத் துறையானது நல்ல முறையிலே, ஏழை மக்களுக்கு வசதி செய்யக்கூடிய அளவிலே நாட்டிலே வளர்ந்திருக்கிறது. இங்கே கூட நமது பெரியவர் அவர்கள் ஏதேதோ குளறுபடிகள் இருக்கின்றன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய அனுபவத்தை மட்டும், அது அதிக நேரம் எடுத்துக்கொள்ளாது என்பதற்காகச் சொல்கிறேன். நான் குடியிருக்கிற கிராமத்திலே ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதற்கு ஏற்கனவே தலைவர் ஒருவர் இருந்தார். எங்களது அரிஜனக் காலனியைச் சேர்ந்த அருமை நண்பர் ஒருவர், மூன்று ஏக்கரா நிலம் வைத்திருப்பவர், தனக்கு பம்ப்செட் போட வேண்டும் என்று, தன்னை அங்கத்தினராக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று பழைய தலைவரிடத்திலே எடுத்துச்சொல்லிய நேரத்தில், இவர்கள் எல்லாம் வருமானம் அற்றவர்கள், இவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்தால் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால், அதை யார் கொடுப்பது, நான் உன்னை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள மாட்டேன், கடன் இல்லை என்று சொல்லி விட்டார். உங்களுக்குத் தைரியம் இருந்தால், கடன் மனுவைப் பரிந்துரை செய்யுங்கள், உங்கள் மீது வசூலிப்பார்கள் என்று அதைரியம் ஏற்பட்டால், அந்தப் பொறுப்பிலே இருந்து விலகிக் கொள்ளுங்கள், நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி, அதற்கு இசைவு தராத காரணத்தால், அவரே ராஜிநாமா கொடுத்தபிறகு, ஒரு பெரியவரைத் தலைவராக்கி சாதாரண ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக அரிஜனங்களுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இது ஏதோ எங்களது கிராமத்திலே மட்டும் ஏற்படுகிற காரியமாகக் கருதவில்லை. செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரான காஞ்சிபுரத்திலே உள்ள மத்திய வங்கிக்கு வரும் போது கிராமச் சங்க நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது, இதே சங்கடங்கள்



14th December 1971] [திரு. வி. வெங்கா]

ஒவ்வொரு கிராமத்திலேயும் மாவட்டம் முழுவதும் இருக்கிறது என்கிறார்கள், இது மாவட்டம் முழுவதும் இருக்கிற பிரச்சினை மட்டுமல்ல. மாநிலம் முழுவதும் இருக்கிற பிரச்சினை. இன்றையதினம் தேர்வுகளிலே ஏதோ முறைகேடுகள் நடக்கின்றன என்று தங்கள் அனுபவத்தை எடுத்துச் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, அது போன்ற தவறுகள் இல்லையென்று அறுதியிட்டு என்னால் கூற முடியும். இன்றைய தினம் இந்த அரசு பொறுப் பேற்றபிறகு, அந்தத் துறையானது பல்கிப்பெருகி பல துறைகளிலேயும் வளர்ச்சியடைந்து அனைத்தையும் ஒன்றாக இணைத்துக்கொண்டு இந்த நாட்டிற்கே தேவையான ஒரு துணையாக கூட்டுறவுத் துறையானது மிக நல்ல முறையிலே பணியாற்றுகிறது என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அரிஜனக் குடியிருப்புகளுக்காக இன்றைய தினம் நல்ல முறையிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊராட்சிகளுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்கு முன்பு ஒரு கம்பத்திலே தெரு விளக்கு எரிய வேண்டுமென்றால், அதற்குக் காப்புத் தொகையை ஊராட்சி மன்றங்கள் கட்ட வேண்டும். ஆனால், அவைகள் வசதியற்ற நிலையிலே இருக்கின்றன. மேலும் அவை மீது பளுவைச் சுமத்தக்கூடாது என்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரிஜனக் காலனிகளுக்குக் கொடுக்கக்கூடிய தெரு விளக்குகளுக்கு அரசே காப்புத் தொகையைக் கட்டத் தயாராக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லி, கணிசமான தொகையை அதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், அங்கே எரியக்கூடிய விளக்குகளுக்கு உண்டாகும் கரண்ட் செலவைக்கூட நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதிமொழியைப் பெற்று நமது மின்சார அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பாக இந்த அவையிலே அறிவித்தார்கள். அதை அறிவிக்குமாறு செய்வித்த நமது முதலமைச்சர் அவர்களை அரிஜன மக்களின் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், நாட்டிலே உள்ள பட்டதாரிகளைக் குறித்தெல்லாம் அவர்கள் பெறக்கூடிய சம்பளங்கள் எந்த அளவிற்குப் பெறவில்லை என்பதையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்தில் வேலையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதிலே நமது முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அதற்காகத்தான் ஒரு இளைஞர் அணியைத் துவக்கி, ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி, நல்ல முறையிலே அந்த இரண்டாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல திட்டத்தை அவர்கள் இங்கே அறிமுகம் செய்திருக்கிறார்கள். எங்களது ஊராட்சி ஒன்றியப் பகுதியிலேகூட ஒரு நான்கு கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டதாரிகள் பி.ஏ., பி.எஸ்சி., எம்.எஸ்சி., என்று படித்தவர்கள் கிராமச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கல்லூரி மாணவர்கள் என்று கருதிக்கொள்ளாமல், ஒரு சாதாரண விவசாயியாகவே மாறி நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்கள். அவர்களும் ஏதோ ஓரளவுக்கு வசதியைப் பெறுகிறார்கள், சம்பளத்தைப் பெறுகிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் ஆற்றக்கூடிய மகத்தான பணியானது ஒரு

இருந்தவர்கள் எல்லாம் பெரிய பகதூர்கள், பட்டா மிராசுகள், ஜமீன்தார்கள் போன்றவர்கள் தான். இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. எம். அண்ணாமலை என்பவர்—12 கோடிக்குப் பெருமானவர் அங்கே வந்து அமர்ந்த பிறகு, பக்கத்திலேயுள்ள ஏழைகள் எல்லாம் கடன் வாங்கிக்கொண்டு போகலாம் என்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படை எண்ணங்கள் எல்லாம் அதிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏழைகள் இன்றைக்கு அனுபவிக்கிறார்கள். அதிலே சில காலம் ஏதோ நாம் மன்னராக இருந்துவிட்டோம் என்பதற்காக இனி பொறுமைப்பட்டாகவேண்டிய காலம் இல்லை இது. இது ஏழைகளுக்காகவும், ஏழைகள் சர்க்காராகவும் இருந்து வருகிறது என்பது தான்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: கூட்டுறவுத் துறை வளர்ந்து வருகிறதா அல்லது இல்லையா என்பதுபற்றி நான் பேசவில்லை. அப்படி அந்தத் துறை ஏழைகளுக்காக இருப்பதை வரவேற்கிறேன். கூட்டுறவுத் துறையிலே சட்டத்திற்கு மாறாக, பைலாக்களுக்கு மாறாக நடைமுறையிலே தில்லுமுல்லுகள் செய்யப்படுகின்றன என்பதைத் தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்படி கூட்டுறவுத் துறையிலே 'தில்லுமுல்லுகள் செய்யப்படுகின்றன' என்று உறுப்பினர் அவர்கள் வார்த்தைகளை உபயோகிப்பது சரியில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, அந்த வார்த்தைகளை அவர் திரும்பப் பெறுவது நல்லது என்று நான் நினைக்கிறேன். இப்படி 'அன்பார்லிமென்டரி வார்த்தைகளை' உபயோகிக்கக் கூடாது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: தில்லுமுல்லுகள் செய்கிறார்கள் என்று நான் சொன்னேனே தவிர, அவை பார்லிமென்டரி வார்த்தைகளா, அல்லது அன்பார்லிமென்டரி வார்த்தைகளா என்று நான் பேசவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால்: சட்ட நுணுக்கங்களைப்பற்றித் தான் அப்படிப்பட்ட வார்த்தைகளை உபயோகித்துப் பேசினார்கள் அவர்கள். எனினும் கூட்டுறவுத் துறை ஏழைகளுக்காகவே நல்ல காரியங்கள் செய்வது கண்டு எனக்கும் மகிழ்ச்சிதான் என்று அவர் சொன்னது வரவேற்கத் தகுந்தது. உடனே அவர் இந்த இலாகாவிலே தில்லுமுல்லுகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார். தில்லுமுல்லுகள் ஏற்கனவே நடந்ததை வைத்துத் தான் இப்பொழுது இருக்கும் ஆட்சியாளர்கள் அதன் பேரில் கேசு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அதே போல் தில்லுமுல்லுகள் நடந்தால், இந்த அரசு விடப்போவதில்லை. இப்படி கேசு போடுவதைக் கண்டு எதிர்க்கட்சி உறுப்பினருக்கு வேண்டுமானால் கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். காரணம் என்னவென்றால், அப்படிப் போடுபவர்களோடு இன்னும் 4 பேரையும் சேர்த்துக் கேசு போடவில்லையே என்பதாக இருக்கலாம். நம்முடைய ஆட்சியிலே மன்னர்கள் எல்லாம் அனுபவித்தார்கள். அதைப் போலவே கோடிக்கணக்கான மக்களும் அனுபவிக்கிறார்கள். இதற்கு முன்னாலேயும் தான் விலைவாசிகள் ஏறிக்கொண்டு போயிருக்கின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகள் இல்லையென்றால், அரிசி படி 3 ரூபாயிலிருந்து 5 ரூபாய்க்குக் கூட விற்பார்கள். இப்பொழுது கூட அரிசி 3 ரூபாய் தான் படி. அரிசியே இல்லாத காலம் ஒன்று இருந்ததை தான் கேள்விப்பட்டிருக்கிறேன். பை நிறையப் பணம் கொண்டு போனாலும் கை நிறைய அரிசி கிடைக்காத காலம் இருந்தது. இப்பொழுது அரிசியின் விலை ஒரு கால் ரூபாய் அல்லது அரை ரூபாய் வேண்டுமானாலும் ஏறியிருக்கலாம்.



நிறையப் பணம் கொடுக்கிறோமே என்.ஜி.ஓக்களுக்கு. 22 கோடி ரூபாய் கொடுக்கவில்லையா; எப்படிக் கொடுப்பது? எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் வேண்டும் என்பதற்காக நிறையக் காரியங்களைச் செய்கிறோமே. இப்பொழுதாவது பி.ஏ. படித்தவர்களுக்கு வேலை உண்டு என்றிருக்கிறதே. இப்படி வேலை கொடுப்பதன் மூலம் பணம் பரவலாக்கப்படுகிறதே. பணம் ஒரு இடத்திலே தானே அப்பொழுது இருந்தது. அதை நோக்கி ஏழைகள் அன்றைக்குப் போவார்கள். ஆனால் இன்றைக்கு அந்தப் பணம் பரவலாக்கப்பட வேண்டும் என்று பலருக்கு வேலை வாய்ப்புகளை அளித்திருக்கிறார்கள். பஞ்சாயத்துகளிலே ரோடுகள் போடுவது, கிராம மக்களுக்கு வசதி ஏற்படுத்துவது, பலர் வறுமையால் வாடக் கூடாது என்பதற்காக வேலை வாய்ப்புத் திட்டம் இவை அத்தனையும் இதிலே கண்டிருக்கிறதே. 8, 10 ஆண்டுகளுக்கு முன்னால் வேலையில்லாத் திண்டாட்டம் நிறைய இருந்தது. இப்பொழுது அப்படியில்லை. கடைக்குப் போய் ஏராளமாகச் சாமான்களை வாங்குபவர்கள் அதிகமாக இன்றைக்கிருக்கிறார்கள். இந்த யுத்த நெருக்கடி காலத்திலே நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் ஒன்று தான். இது மிக ஆபத்தான நேரம். இப்பொழுது நம்முடைய மக்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள்; நமது வீரர்கள் ரத்தத்தைச் சிந்துகிறார்கள், உயிரை இழக்கிறார்கள்; நம்முடைய பொருள்களும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. சர்வாதிகாரியான யாகியா கான் நம் நாட்டின் ஜனநாயகத்தை அழிக்க வேண்டுமென்ற நிலைமையிலே, நம்முடன் சண்டையிலே ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்திலே, தமிழ் நாட்டிலே இருக்கும் மக்கள் ஒன்றை உணர வேண்டும். இப்பொழுதும் உணர்ந்து தான் இருக்கிறார்கள். இன்னும் உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனவே இந்த யுத்தத்தைபொட்டி அதிகமாக தமிழ்நாட்டு மக்களாகிய நாம் கவலை கொண்டிருக்கிறோம். 4½ கோடி மக்களும் கவலை காட்டுகிறோம் என்பதற்கு அடையாளமாக களியாட்டம் அதிகமாக இருப்பதைக் கொஞ்சம் குறைத்து, வாரத்திற்கு ஒரு நாளாவது விரதம் என்று வைத்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். இறந்திருக்கின்ற மக்களை நாம் மனதிலே கொள்கிறோம். நமக்கு இவ்வளவு பெரிய சங்கடங்கள் ஏற்பட்டிருப்பதால், வாரத்திற்கு ஒரு நாளிலே ஒரு ஹோட்டலையாவது இந்த ஊரிலே நாம் மூடிக் காட்ட வேண்டும். ஒரு நாளைக்கு மூன்று சினிமாக்கள் ஓடுவதை இரண்டு என்றாவது ஆக்க வேண்டும். ரேஸ் வாரத்திற்கு ஒரு தடவை நடப்பதால் அது இருந்துவிட்டுப் போகலாம். பரவாயில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, மேற்கூறியவற்றில் ஏதாவது ஒன்றையாவது செய்யும் வகையிலே நமது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்த 1971-72-ம் ஆண்டின் துணை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக இந்தத் துணை மானியத் தொகையில் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு 295 லட்ச ரூபாய், கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய், ஒதுக்கி அத்தகையவர்களுக்கு வேலை கொடுக்கிற ஒரு ஏற்பாட்டினைச் செய்ததற்காக, மத்திய சர்க்கார் உதவி குறைவாக இருந்தாலும் கூட, அதை ஈடுகட்டி நம்முடைய அரசாங்கம் காரியம் செய்து வருவதற்காக அதை மனதார வரவேற்கிறேன்.

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்] [14th December 1971

அடுத்து, அரிஜன நலம், பழங்குடி மக்களுக்கு என்று துணை மானியத் தொகையில் 86 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக அரிஜனக் குடியிருப்புகளுக்கு 20 லட்ச ரூபாய் மின்சார விளக்கு வசதி செய்வதற்காக ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி, பெரும்பாலான கிராமங்களிலே இன்னும் தனியார் கிணறுகளிலே தான் அரிஜனங்கள் குடி தண்ணீர் எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அப்படி தமிழகம் பூராவிலும் எவ்வளவு பகுதிகளில் தனிப்பட்டவர்கள் கிணறுகளில் குடி தண்ணீர் எடுக்கப்படுகிறது என்று அரசாங்கம் ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளில் உள்ள அரிஜன மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி கிடைக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். இந்தக் குடி தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால், பொதுவாகத் தேர்தல் வருகிற நேரங்களில் யார் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கிறார்களோ அவர்கள் சொல்கிறபடி வாக்களிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதை உடனடியாக அரசாங்கம் மாற்றியமைப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதைப் போலவே வறட்சிப் பகுதிகளுக்கு குடி தண்ணீர் வசதிகளுக்காகவும் பிற வசதிகளுக்காகவும் 120 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக கோவை மாவட்டத்தில் பல்லடம், அவினாசி, கோவை ஆகிய மூன்று பகுதிகள் தொடர்ந்து வறட்சியாகவே இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளைத் தொடர்ந்து வறட்சியாகவே வைத்திருப்பதைவிட அங்கே இருக்கக்கூடிய பரம்பிக்குளம் ஆளியாறு வாய்க்காலிலிருந்து ஒரு தடவை விவசாயத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு முன்பாக ஒரு வார காலம் தண்ணீர் விட்டால், குளம் குட்டைகளை நிரப்பி அங்குள்ள மக்களுக்கு வறட்சியிலிருந்து நிவாரணம் அளிப்பதற்கும் குடி தண்ணீர் வசதி செய்வதற்கும் ஓரளவு வசதியாக இருக்கும். இதையும் அரசாங்கம் கவனத்தில் இருத்தி வருங்காலத்தில்
6-30 p.m. இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த முடியுமாவென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைப் போலவே அவினாசிப் பகுதிக்கு கீழ் பவானி பாசனப் பகுதி வாய்க்காலிலிருந்து வருடத்திற்கு ஒரு வாரம் தண்ணீர் விட்டால், அந்தப் பகுதியிலுள்ள குளம் குட்டைகளை நிரப்பிவிடலாம். குடி தண்ணீர் வசதியும் விவசாயக் கிணறுகளுக்குத் தண்ணீர் ஊற்றும் கிடைக்க வசதியாக இருக்கும். இதையும் அரசாங்கம் கவனித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே குடி நீர் வாரியம் என்ற திட்டத்திற்கு அரசு கடனாக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இது வரவேற்கவேண்டிய ஒன்றாகும். 1972-ம் ஆண்டுக்குள் முதல்வர் அவர்களால் தமிழகம் பூராவிலும் எல்லா கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது என்ற அடிப்படையில் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், கோவை, சிங்காநல்லூர் ஆகிய இரண்டு நகரங்களில் மக்கள் 20 ஆண்டுக் காலமாக குடி தண்ணீர் வசதியின்றி மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போதும் இதற்கு வழி வகை செய்யப்படும் என்று எதிர்பார்த்தேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையிலும் அதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. அரசு 1½ லட்சம் மக்கள் உள்ள அந்த சிங்காநல்லூர் நகரத்தில் பூமிக்கடியிலே நீர் ஊற்றுக்கள் இருக்குமா என்று ஆய்ந்து பார்த்து, குடி தண்ணீர் வசதியைப் பெருக்க வழி வகை செய்ய வேண்டும். நிரந்தரமான தண்ணீர்த் திட்டத்தை, அதற்காகவென்று ஒரு திட்டத்தை, நெல்லித்துறைத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும், இந்தத் திட்டம் எப்போது நிறைவேறும் என்று இப்போதும் கூறுவதற்கு இல்லாத நிலையில்,



14th December 1971] [திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்]

அந்தப் பகுதியில் மின்சார வாரியம் இந்த நெல்லித் துறைத் திட்டத்தில் தண்ணீர் எடுப்பதற்கு இடையூறாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த மக்களுக்கு குடி தண்ணீருக்காகப் பயன்படக்கூடிய இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு—சிறிதளவு மின்சார உற்பத்தி குறைந்தாலும் பரவாயில்லை—அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் துணை மதிப்பீடுகளை வரவேற்று என் சிற்றுரையை முடிக்கிறேன்.

* **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு தலைவரவர்களே, பொதுவாக இது ஒரு சடங்கு. ஏற்கெனவே இன்று துணை மானியக் கோரிக்கையாக வந்திருக்கும் இந்த அறிக்கையில் கண்டிருக்கும் தொகைகளில் பெரும் பகுதி செலவழிக்கப்பட்டுவிட்ட நிலைமை. அங்கீகாரத்திற்கு நம் முன்னால் வந்திருக்கிறது. யுத்தம் ஆரம்பித்து சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகவே இனிமேலாவது எந்தெந்தத் திட்டங்களில் செலவழிக்கப் போகும் தொகைகளை நாம் குறைக்க முடியும் என்பதை அரசு ஆலோசிக்க வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் நாம் இருக்கிறோம். துணை மானியக் கோரிக்கையில் வந்திருக்கும் தொகைகளில் ஏதாவது அதிகமாக "எக்ஸ்ட்ரா வகன்ட்" ஆக ஊதாரித்தனமாக இருக்கிறதா, கைவிடச் சொல்லலாமா என்று துருவிப் பார்த்த அளவிலே, இவைகள் அவசியமான தொகைகளாகத் தென்படுகிறதேயொழிய, இவை போதாது, இன்னும் கூட அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று சொல்லும்படியான அளவிற்குத் தான் இருக்கின்றன. ஆகையினால் அரசு இதில் அதிகக் கவனம் செலுத்தி சிக்கனக் குழு ஒன்றை நியமித்து, நம் செலவுகளைக் குறைத்து உடனடியாக வரவு செலவைச் சரிக்கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையெனில் இந்த வருஷமும் பெரும் தொகை துண்டு விழக்கூடிய நிலை ஏற்படும். இதனுடைய பலனை அடுத்த வருஷத்தில் நாம் அனுபவிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். மத்திய அரசிலிருந்து எதிர் பார்க்கும் தொகைகள் கிடைப்பது கடினம். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு சர்க்கார் சொன்னபடி தொகைகளைக் கொடுத்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால் ஒரு சிக்கனக் குழுவை நியமித்து, எந்தெந்த வகையில் சிக்கனம் செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில வள வங்கிக்கு உலக வங்கியிலிருந்து நிதி உதவி பெற்று இங்கு அதை விஸ்தரிக்க வேண்டுமென்ற நிலைமையில் இப்போது காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் இதற்காக வகுத்துக்கொண்டிருக்கும் முறைகள் விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டத்தை உண்டுபண்ணும்படியான நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் முந்திய அரசு, காங்கிரஸ் அரசுக் காலத்தில் ஒரு ஆயிரம் ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்றால், 5 சதவீதம் பங்குகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருந்தது. அடுத்தபடியாக, 1967-க்குப் பின்னால் இந்த 5 சதவீதம் கூட அதிகம் என்று இரண்டு சதவீதமாகக் குறைத்தார்கள். மக்களுக்கு அதிக வசதியாக இருக்க வேண்டுமென்று இரண்டு சதவீதத்தை பங்குகளாகப் போட்டால் போதும் என்று விவசாயிகளுக்கு அதிக வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் மாற்றியமைத்து வசதி ஏற்படுத்திய அரசு, இப்போது இரண்டு மாதங்களுக்கு முன்னால் 10 சதவீதம் பங்குகள் எடுக்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்திருப்பது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். இதைப் பொதுவாக அமைச்சரவையே ஆலோசித்ததோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் மட்டும் ஆலோசித்தாரோ தெரியாது. இது அமைச்சரவையின்

[திரு. கே. ராஜாராம்] [14th December 1971

பொறுப்பு. மக்களுக்கு 10 ஆயிரம் கடன் வாங்க வேண்டுமானால், ஆயிரம் ரூபாய் முன் பணமாகக் கட்ட வேண்டுமென்றால், கஷ்டமாகத் தெரியும். விவசாயிகளுக்கு நல்லது செய்வதாக நினைத்த அரசு மாறுபட்ட நிலைமையில் செய்திருக்கிறது. இப்போது அதிகமாக டெபாசிட் கட்ட வேண்டும், 10 ஆயிரம் ரூபாய் கடன் வேண்டுமென்றால், ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்வது மக்களுக்கு எந்த வகையில் வசதியைக் கொடுக்கும் என்று அறிந்து முன்பிருந்த நிலைமைக்கே 5 சதவீதத்திற்கே மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டியதொன்று.

மற்றொன்று. இந்த நிலவள வங்கியில் கடன் பெறுபவர்கள் கிணறு வெட்டினால், கிணற்றுக்கு 500 ரூபாய் விதம் மானியம் தருவார்கள். கோயம்பத்தூர் மாவட்டத்திலே இன்னும் கொஞ்சம் அதிகம் கொடுப்பார்கள். மதுரை மாவட்டத்திலே ஜில்லாக்களில் 500 ரூபாய் மானியம் என்று வைத்துக் கொண்டு மீதியைத்தான் கடனாக வைத்துக்கொள்வார்கள். அதைத் திடீரென்று மத்திய அரசின் உத்தரவின் பேரில் இனிமேல் மானியம் வேண்டியதில்லை என்று நிறுத்தி விட்டது. ஆனால் ஏற்கனவே வாங்கிய கடன்களுக்குக்கூட இதை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்குக் காலம் நிர்ணயிக்காமல் மத்திய அரசிடமிருந்து உத்தரவு வந்ததால், எந்தத் தேதியிலிருந்து வெட்டிய கிணறுகளுக்கு மானியம் இல்லை என்று தெரியாது, எல்லோருக்கும் மானியம் கொடுப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். இது விவசாயிகளின் பிரச்சினை. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6-40 p.m. அது மட்டுமல்லாமல், டிராக்டர் வாங்குவதற்குக் கடன் வாங்கினால், நிலவள வங்கியில் அதற்கு 25 சத விதம் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஒரு டிராக்டர் விலை 40,000 ரூபாய் என்றால், அதில் 10,000 ரூபாயை முதலில் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். 10,000 அல்லது 12,000 ரூபாய் கையிலிருந்தால், ஒரு சிறு டிராக்டரை வாங்கிக்கொள்வார்கள். சொத்தையும் ஜாமின் வைத்து வாங்கும்போது, 10,000 ரூபாய் ரொக்கமாகக் கட்டி வாங்க வேண்டும் என்பது அவர்களை அதிகமாகத் தொல்லைப்படுத்தும் என்பதை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

பொதுவாக வீடு இல்லாத பிரச்சினை பரவலாக இருக்கிறது. கோவை, மதுரை, சென்னை போன்ற பெரிய ஊர்களுக்கு மட்டுமல்ல. இந்த மூன்று ஊர்களில் மட்டும் ஏழைகளுக்கு வீட்டு வசதி வாரியத்தினர் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். டெனமெண்ட்ஸ் கட்டிக் கொடுக்கிறார்கள். வாடகைக்கும் கட்டிக் கொடுக்கிறார்கள். வசதி உள்ளவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காகவும், அரசாங்க அலுவலர்களுக்கும் கூட கட்டிக்கொடுக்கப்படுகிறது. அதே போல 10, 20 வருஷங்களாக நகரங்களிலேயும் வீடுகட்டும் சொசைடிகளை அரசாங்கம் ஏற்படுத்தி அவைகளுக்கு தாராளமாக வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. கடந்த மூன்று வருடங்களாக பெரிய நகரங்களில் கட்ட பணம் அதிகமாகச் செலவிடுவதால் நகரப் பஞ்சாயத்துகளில் கட்டிடம் கட்டும் சொசைடிகளுக்கு மிகவும் வசதி குறைந்துவிட்டது. திருமங்கலம் கோவாபரேடிவ் வீடுகட்டும் ஒரு சொசைடி நன்றாக நடந்து வரும் சொசைடி என்று பெயர் பெற்றது. டிபால்டே கிடையாது. 15 வருஷமாக நடந்து வருகிறது. ஆனால் அதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக போதுமான பணவசதி அரசாங்கத்திலிருந்து ஒதுக்கப்படவில்லை. 4 அல்லது 5 பேர்களுக்குத்தான் பணம்



14th December 1971] [திரு. கே. ராஜாராம்]

கிடைக்கிறது. ஆகவே நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் ஏற்கனவே வீடுகள் கட்டிக்கொண்டிருக்கும் சொசைடிகளுக்கும் பணம் கொடுத்து ஆதரிக்க வேண்டும். பணம் தேவை என்று ஜாயிண்ட் ரெஜிஸ்டிராரைக் கேட்டால், சர்க்காரிடம் போய் நீங்கள் சிபாரிசு செய்யுங்கள, பணம் கிடைத்தால் கொடுக்கிறோம் என்கிறார்கள். பணம் அறவே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். 10, 12 மனுக்கள் போட்டபடியே இருக்கின்றன. அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்..

சென்னையில் கொசுத் தொல்லை சகிக்க முடியவில்லை. இதை எப்படியாவது ஒழிக்க வேண்டும். இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டம் என்னவோ நல்ல திட்டந்தான். ஆனால் அந்த திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னாலேயே பக்கிங்ஹாம் கெனாலை சரி செய்திருக்க வேண்டும. பக்கிங்ஹாம் கெனாலிலிருந்து வரும் தண்ணீர் பூராவும் கூவத்திலேதான் விழுகிறது. மற்ற இடத்திலே எல்லாம் ஆற்றுத் தண்ணீர் சமுத்திரத்திலே போய் விழும். இங்கே கூவம் சமுத்திரத்திலே சங்கமமாகும் இடத்திலே பக்கிங்ஹாம் கெனால் சேருகிறது. இங்கிருந்து தண்ணீர் மேற்கு முகமாகப் போய் ஆறெல்லாம் நாற்றம் பரவுகிறது. ஆகவே எச்சரிக்கையோடு பக்கிங்ஹாம் கெனால் தண்ணீர் கூவம் ஆற்றில் விழாமல் செய்திருக்க வேண்டும். அதைச் சுத்தம் செய்து நாற்றத்தை நிறுத்த வேண்டும். இந்த ஆறு கொசுக்களின் பிறப்பிடமாக இருக்கிறது. எம்.எல்.ஏக்கள் தங்கியிருக்கும் ஹாஸ்டலிலே கொசுத் தொல்லை மிக அதிகமாக இருக்கிறது. அங்கே முதல் இரண்டு மாடிகள் வரை கொசுத் தொல்லை மிக அதிகமாக இருக்கிறது. மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மாடிகளில் கொசு இல்லை. பொதுவாக இதைக் குறைப்பதற்கு கார்ப்பரேஷன் நல்ல நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் கார்ப்பரேஷனைத் தூண்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போன பட்ஜெட்டின்போது நான் அரசாங்கத்தை வெகுவாக வேண்டிக்கொண்டேன். நமது மாநிலம் எப்போழுதுமே இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைவிட, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.,
அகில இந்தியப் பரீட்சைகளில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று வந்திருக்
இந்த ஆண்டு இரமண்டே பெயர்தான் தமிழ்ப் பெயர் தென்படுகிறது. ஒரு
இந்த ஆண்டு இரண்டே பெயர்தான் தமிழ்ப் பெயர் தென்படுகிறது. ஒரு வேளை அவர்கள் கூட பாலக்கோட்டையைச் சேர்ந்தவர்களோ என்னவோ தெரியவில்லை. அதை முதலமைச்சரிடம் வேண்டிக்கொண்டேன். அதற்குத் தனி மானியக் கோரிக்கையில் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அகில இந்தியப் பரீட்சைகளில் பயிற்சி கொடுக்க என்று பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது. யாராக இருந்தாலும், முற்பட்ட வகுப்பினருக்கும் இந்தப் பயிற்சி கொடுக்க வேண்டும். அவர்களுக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.எஃப்.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அகில இந்தியப் பரீட்சைகளுக்குச் செல்வதற்கான "கோச்சிங்" உதவியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே பொதுவாக அதிகமாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், காவல் துறை மிகவும் நல்ல முறையில் செயல்பட்டிருக்கக்கூடிய துறை என்று நாம் நினைக்கிறோம். அப்படித்தான்

[திரு. கே. ராஜாராம்] [14th December 1971

இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் சிலவிடங்களில் காவல் துறையைச் சேர்ந்த ஸ்டேஷன்களில் இருக்கக்கூடிய சர்க்கில் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள், குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலையிலே இருக்கக்கூடிய அவர்கள், குற்றவாளிகளை ஆதரித்து யார் கஷ்டம் அடைந்தார்களோ, யார் தாக்கப்பட்டார்களோ, அவர்களைத் தண்டனைக்குள்ளாக்கும் முயற்சியைச் செய்கிறார்கள். நான் ஊரையும் பெயரையும் சொல்லி அதை அதிகமாக எடுத்துக்காட்டவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஆகவே அது சம்பந்தமாக எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய மனுவை முதலமைச்சரிடம் நான் கொடுக்கிறேன். மதுரை ஜில்லாவில் இரண்டொரு வாரங்களுக்குள் நடந்த விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகவே ஒரு மனு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை முதலமைச்சரிடம் கொடுக்கிறேன். தயவுசெய்து, இதை அங்கே நேரடியாக அபிப்பிராயமறிய அனுப்பிப் பார்க்க விடாமல், சென்னையிலேயிருந்து யாராவது ஒரு சி.ஐ.டி.யை அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன். இதுமாதிரி நாம் நடக்கவில்லையென்றால், இது ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல, யார் எப்பொழுது ஆண்டாலும் கீழே இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களின் கடமை என்ன என்பதை உணர்ந்து நடக்க வேண்டும் என்பதைப் பார்ப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை மட்டும் தெரிவித்து, அந்த மனுவை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதை நேரடியாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் துணை மானியத்தைப்பற்றி நான் அதிகம் பேசவேண்டிய அவசியமில்லை. யுத்த நேரம். சிக்கனம்தான் முக்கியம். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவாவர்களே, இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்ட துணை மானியக் கோரிக்கை மீது எதிர்க் கட்சித் தலைவரவர்களும், ஏனைய கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்தக் கருத்துரைகளின் முதற்கட்டம் கிட்டத்தட்ட துணை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதமாக இல்லாமல், கல்வி மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதம் போல் இருந்தது. நான் கூட கல்வியமைச்சரிடத்திலே சொன்னேன். நான் எழுந்து போய்விடலாம் போலிருக்கிறது, நீங்களே இந்தக் கருத்துரைகளுக்குப் பதிலளிக்கலாம் என்று கூறினேன். அந்த அளவிற்குக் கல்வித் துறை பற்றிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

அதிலே குறிப்பாக, திரு. ராஜா அய்யர் அவர்கள் தனியார்ப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற போனஸ், ஓய்வு ஊதியம் இவைகளை அரசு ஆணை பிறப்பித்திருந்தும் அக்கவுண்டண்டு ஜெனரல் டிரெஷரி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்காததால், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற கருத்தினைச் சொல்லி, இது பற்றிய விவரங்கள் தேவையென்று குறிப்பிட்டார்கள். இந்தச் செலவினத்தைப் பொறுத்த வரையில் அரசு உடனடியாக ஆணை பிறப்பித்திருந்தும்கூட, இந்தச் செலவினம் நியூ சர்வீஸ் (New) Seervic es —புதுப்பணியிலேதான் வரவேண்டுமென்ற ஒரு பிரச்னையை



[14th December 1971 [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

அக்கவுண்டண்டு-ஜெனரல் எழுப்பியதன் காரணமாக, அது சம்பந்தமாக நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு கடைசியாக இப்பொழுது அது புதுப்பணியிலே தான் வர வேண்டுமென்று ஒப்புக்கொண்டு முதல் துணை மானியக் கோரிக்கையிலே அது புதுப்பணி என்ற தலைப்பிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இனிமேல் தாமதமில்லாமல் ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகை நிச்சயமாக போய்ச் சேருகின்ற நிலைமை ஏற்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 5 ஆக இருந்ததை 2 ஆக மாற்றி, பிறகு 10 ஷேர் என்கிற அளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது சரியான தகவலா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவர்கள் கூறியது சரியான தகவலாக இருக்குமானால், மீண்டும் கிராமப்புறத்திலுள்ள ஏழை எளிய மக்கள் பயன்பெறும் அளவுக்கு எந்த வகையில் மாற்றியமைக்கப்பட முடியுமோ, அந்த வகையில் மாற்றியமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியை மாத்திரம் நான் தரக்கடமைப்பட்டிருக்கிறேன். பத்தாயிரம் ரூபாயில் குழாய்க் கிணறு வெட்ட வேண்டுமானால், ஆயிரம் ரூபாய் அதற்கு முன் பணமாகக் கொடுக்க வேண்டும் என்பது சரியானதல்ல. பத்தாயிரம் ரூபாயில் குழாய்க் கிணறு வெட்ட வேண்டுமென்றால், அதற்கு வங்கியிடமிருந்து ஒன்பதாயிரம் ரூபாய் கிடைக்கும் என்பது இன்றைக்கு உள்ள நிலைமை. 9,000 ரூபாயை வங்கி கொடுக்கிறது. மிச்சமுள்ள தொகையை விவசாயிகள் தாங்களே போட்டுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்கிறதேயல்லாமல் . . .

**திரு. கே. ராஜாராம்:** இது நல்ல யோசனையாக இருக்கிறது. ஆனால் அந்த 1,000 ரூபாயையும் வேலை செய்து கழித்துக்கொள்வார்கள். ஆனால் 1,000 ரூபாயை முதலில் கட்டு என்று வங்கியில் சொல்கிறார்கள். அதுதான் கஷ்டமாக இருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** பங்குத் தொகை போக மேற்கொண்டு 1,000 ரூபாய் கேட்கிறார்கள்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எனக்குத் தரப்பட்ட தகவலின்படி, பத்தாயிரம் ரூபாயில் குழாய்க்கிணறு வெட்டுவதென்றால், ரூபாய் 9,000 வங்கி ஏற்றுக்கொள்வது என்றும், ஆயிரம் ரூபாய் அவர்கள் பணமாகவோ அல்லது உழைப்பின் மூலமாகவோ சரிக்கட்ட வேண்டுமென்றும் நியதி இருக்கிறது. அதற்கு மாறாக எங்கேயாவது நடைபெற்றிருக்குமானால், அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் தகவல் இருக்குமானால், அதை அரசுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, துணை மானியக் கோரிக்கையில் பல புதுக்கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையில் எப்படி வாய்ப்பைப் பயன் 6.50
படுத்திக் கொண்டு பல்வேறு பொதுக் கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றார் p.m.
களோ, அதைப் போலவே பல்வேறு பொதுக் கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய நண்பர் திரு. வெங்கா அவர்கள் இந்தத் துணை மானியக் கோரிக்கையை இறுதிவரை பாராட்டிவிட்டுக் கடைசி

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி] [14th December 1971

இந்த ஆண்டு அரிசனக் காலனிகளைப் பொறுத்த வரையில், நம்முடைய உறுப்பினர் திரு. பி. வி. ராஜகோபால் அவர்களும், ஏனைய மாண்புமிக்க உறுப்பினர்களும் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல், ஏராளமான மின் வசதியைச் செய்து கொடுப்பதற்குத் திட்டமிட்டு, அந்தக் காலனிகளிலே இருக்கின்ற மக்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றில்லாமல், மின் வாரியத்திற்குத் தேவையான தொகையை அரசே முன் பணமாக வழங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டு, அந்த வகையிலே அந்த நல்ல காரியம் வெகு வேகமாக நடைபெற்றிருக்கிறது. தமிழகத்திலேயுள்ள அரிசனக் காலனிகளின் மொத்தத் தொகை 20,235. இதிலே 1967 மார்ச் மாதம் வரையில் மின் வசதி அளிக்கப்பட்ட காலனிகள் 2,034 தான். அதாவது 2,500 காலனிகள் தான் மின் வசதி பெற்றிருக்கின்றன. 1967-க்குப் பிறகு 1971-72 வரை மின் வசதி ஆனால் அதற்கும் மேலாக 1—12—1971 முடிய மின் வசதி அளிக்கப்பட்டிருக் அளிக்கப்பட்ட அரிசனக் காலனிகள் 7,112 என்று நான் இருக்கவேண்டும். கின்ற காலனிகள் ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்ட 2,000 காலனிகளையும் சேர்த்து 14,543 என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. ஆகவே நாம் குறிப்பிட்ட இலக்குக்கு மேலாகவே 5,000 அரிசனக் காலனிகளுக்கு மின் விளக்கு வசதி அளித்திருக்கிறோம். மொத்தம் 20,000 காலனிகளிலே கடந்த 4, 5 ஆண்டுகளில் ஏற்கனவே இருக்கும் 2,000 காலனிகளையும் சேர்த்து ஏறத்தாழ 15,000 அரிசனக் காலனிகளுக்கு மின்வசதி அளித்திருக்கிறோம். மிச்சமுள்ள 5,000 காலனிகளுக்கு வெகு விரைவிலேயே மின் வசதியை நாம் அளிக்கவிருக்கிறோம். அதற்கான தேவைப்பட்ட தொகையையும் இந்த நிதி மதிப்பீட்டுக் கோரிக்கையிலே இடம் பெற்றிருக்கிறது.

நிதிநிலை அறிக்கையிலே இளைஞர் அணிபற்றி அறிவிக்கப்பட்டது. அந்த இளைஞர் அணியினுடைய பணிகள் எவ்வாறெல்லாம் அமையும் என்பதற்கான கருத்தையும் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்பொழுதே நான் தந்திருக்கிறேன் என்றாலும், அந்த அணி என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்ய அமைக்கப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தை இந்த அவையிலேயும் குறிப்பிடுவது பொருத்தம் என்று கருதுகிறேன். அந்த இளைஞர் அணியினைச் சார்ந்தவர்கள் கிராம மக்களிடையே முறையான சில கலை நிகழ்ச்சிகளை நடத்தி அம் மக்கள் பொழுதுபோக்கு பெற வாய்ப்பில்லாமல் இருப்பதை மாற்றிடவும், காரியங்களைச் செய்வார்கள். அதற்காகக் கிராமப் புறங்களிலே "கிராம இளைஞர் சங்கங்களைத்" தொடங்கி அதன் மூலம் கிராமப் புறங்களிலே சிறப்பான பல பொழுது போக்கு முறைகளைப் பற்றிக் கொள்ளும் வாய்ப்பினை அவர்களுக்கு நல்குவார்கள். அத்தோடு கிராமங்களிலே சுற்றுப்

அவர்களுக்குக் கற்பித்து, கிராமத்தை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமையினை ஏற்படுத்தவும் ஒரு புதிய முறை மூலம் முயற்சி செய்வார்கள். அந்தப் புதிய முறையின்படி "ரசாயன முறை கழிவிடங்களை" உபயோகிக்குமாறு கிராமத்தாரை வற்புறுத்துவது என்பது மிக முக்கியமான ஒரு நடைமுறையாகும். இந்த இளைஞர் அணியினர் பணியாற்றும் அத்தகைய கழிவிடங்கள் "கொக்குப் புழு நோயும்" மற்ற பிற நோய்களும் நீங்குவதற்கு ஏற்றவகையிலே திரம்பட முயற்சி எடுக்கும் நடவடிக்கைகள் ஆகும். மேலும் அந்த இளைஞர் அணியினர் கிராமப்புறங்களிலே திட்டமிட்டுச் செய்யப்படும் சமூக அநீதிகளை எதிர்த்துப் பிரசாரம் செய்வார்கள். அத்தோடு ஆங்காங்கே



14th December 1971] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

காணப்படும் வகுப்பு வேற்றுமை, தீண்டாமை போன்றவைகளை எதிர்த்தும், தற்காலத்திற்கு ஒவ்வாதவை என்று கருதுபவைகளையும் எதிர்த்தும், அவைகளினால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய தீமைகளை எதிர்த்தும் பிரசாரம் செய்யும். வேளாண்மைத் தொடர்பான காரியங்களிலேயும் ஈடுபட்டு, இந்த அரசினர் காட்டும் நல்ல முறைகளைக் கிராமங்களிலே பரப்பிடவும் இந்த அணியினர் உதவி செய்வர். அத்தோடு சிறப்பாக அம்மை குத்துவது, காலரா டைபாய்டு போன்ற வியாதிகளினால் பாதிக்கப்படுவோருக்கு ஊசி போடுவது என்கிற அன்றாட சுகாதார நடவடிக்கைகளையும், நற் பணிகளையும் மக்களுக்குக் கற்பிக்கவும் இந்த அணியினர் பாடுபடுவர்.. அத்தோடு குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கும் இந்த இளைஞர் அணித் தொண்டர்கள் பயன்படுத்தப்படவிருக்கிறார்கள். இந்த அணியினருக்கான பயிற்சிகள் எல்லாம் இப்பொழுது நடைபெற்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதற்கட்டமாக இவர்களில் பிரிக்கப்பட்ட இரண்டு பகுதியினர் அக்டோபர், நவம்பர் மாதங்களிலே பயிற்சி பெற்றார்கள். வளர்ச்சி வட்டாரங்களிலே ஆக்கப்பணி புரிவதற்காக பயிற்சி பெற்றவர்கள் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். மூன்றாவது பகுதி டிசம்பர் 15 ஆம் தேதி அவர்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று தங்கள் பணியினைத் தொடங்கவிருக்கிறார்கள். மொத்தம் 2,000 பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் 8 அல்லது 9, சிலவிடங்களிலே 10 என்கின்ற அளவுக்கு வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு, அங்கேயெல்லாம் இளைஞர் அணியினர் சென்று தங்கள் வேலைகளைச் செய்யவிருக்கிறார்கள். அண்மையிலே கூட அவர்கள் சில கிராமங்களிலே எந்தெந்த வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடித்தார்கள் என்பது பற்றி தமிழக அரசாங்கத்தினரால் வெளியிடப்படுகின்ற 'தமிழரசு' பத்திரிகையிலே பிரசுரித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கண்டிருக்க முடியும் என்று கருதுகிறேன். இந்தச் சமயத்திலே மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் உங்களுடைய வட்டாரத்திலே அவர்கள் ஆற்றுகின்ற பணிகளை நீங்களும் கவனித்து அவர்களுக்கு உற்சாகம் அளித்திடவும், ஊக்கம் தந்திடும் வகையிலேயும் உங்களுடைய ஒத்துழைப்பை நல்கிடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இன்னும் எந்தெந்த வகைகளிலே அவர்களைப் பயன்படுத்தினால், மக்களுக்கு அதிக நன்மை விளையும் என்பவற்றை அறிந்து, உங்களுடைய யோசனையை இந்த அரசுக்கு வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வத்தலகுண்டு பற்றிய ஒரு மனுவை என்னிடத்திலே அளித்து, அதை நல்ல முறையிலே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைப் பற்றிச் சொல்லும்பொழுதே கூட, அவர்கள் எந்தப்பக்கமும் இருந்து பேசாமல் பொதுவாக அதிலே உண்மை என்னவென்பதை ஆராய்ந்து முடிவு எடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு வத்தலகுண்டிலே பஞ்சாயத்து யூனியன் தேர்தல் நடந்தபொழுது, இப்பொழுது அந்த யூனியனிலே தலைவராக இருப்பவருக்கு எதிராக இருக்கும் உறுப்பினர்கள் அதிகம் பேர் வெற்றி பெற்றிருந்தார்கள். ஆனால் தலைவர் தேர்தல் நடைபெறும் காலத்திலே நான்கு பேருக்கு ஓட்டு அளிக்கும் உரிமை கிடையாது என்று வழக்கு மன்றத்திலேயிருந்து ஒரு ஸ்டே ஆர்டரை தலைவர் அவர்கள்

## THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Wednesday, the 15th December 1971.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

### I. QUESTIONS AND ANSWERS.

*Starred Questions.*

*Underground Drainage Scheme, Kancheepuram.*

* 180 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to State :—

(a) whether any underground drainage scheme for Kancheepuram was inaugurated by about 16th May 1971 ; and

(b) if so, the details thereof ?

*புதைச் சாக்கடைத் திட்டம், காஞ்சீபுரம்*

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1971-ஆம் ஆண்டு மே திங்கள் 16 ஆம் தேதி அளவில் காஞ்சிபுரத்தில் புதைச் சாக்கடைத் திட்டம் ஏதாவது தொடங்கி வைக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) ஆம். காஞ்சிபுரம் நகராட்சித் தலைவர் திரு. கே. டி. எஸ். மணி தலைமையில் காஞ்சிபுரம் கழிவு நீரகற்றும் திட்டம், 16-5-1971 அன்று மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே இருந்ததை அபிவிருத்தி செய்வதற்காகப் போடப் பட்டிருக்கிறதா? அல்லது புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தத் திட்டத்திற்கு சுமார் 105 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 17-6-1970-ல் தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இத்திட்டம் பல நகரங்களுக்குத் தேவைப்படுகிறது. தஞ்சை போன்ற நகரங்கள் இருக்கின்றன. சில நகரங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. எந்த அடிப்படையில் சில நகரங்கள் மட்டும் பொறுக்கி எடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தஞ்சை விடுபட்டுப் போய்விடாது என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி] [14th December 1971

பெற்றுக்கொண்டு வந்ததால், அந்த 4 பேர் ஓட்டளிக்காமலேயே தலைவர் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அந்த 4 பேரும் ஓட்டளிக்க முடியாததுபற்றிப் பரபரப்பு அடைந்தார்கள். வழக்கு மன்றத்திற்கு அதை எடுத்துச் சென்றார்கள். ஆனால், அந்த நேரத்திலே அதை எதிர்த்துப் போராட முடியாத காரணத்தினால் தேர்தல் நடந்தது நடந்ததுதான், தலைவர் தேர்தல் செல்லுபடியானதுதான், தலைவர் தேர்தலிலே ஓட்டளிக்க முடியாதவர்கள் உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருக்கலாம் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்துவிட்டது. எனவே, அந்த நான்கு பேரும் இப்பொழுது உறுப்பினர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். தலைவருக்கு எதிரான உறுப்பினர்கள் அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தினால், எந்தத் தீர்மானம் வந்தாலும், அதைத் தோற்கடிக்கக் கூடிய வலுவை இவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** அந்த விஷயமே இல்லை நான் குறிப்பிட்டது. ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றியே அல்ல. ஊராட்சி மன்றக் கூட்டத்திலே நடைபெற்ற கலவரங்களைப்பற்றித் தான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத் தொடர்ந்து வைஸ் பிரசிடென்ட்டு கொண்டு வந்த ஒரு தீர்மானம் பெரும்பாலான உறுப்பினர்கள் காரணத்தினால், தேர்தல் நடந்தது நடந்ததுதான், தலைவர் தேர்தல் செல்லுபடி நேரத்திலே, வைஸ் பிரசிடென்ட் அதற்குக் காரணமான உறுப்பினரை விரட்டிச் சென்று கத்தியால் குத்தியதாகவும்—அதாவது தீர்மானத்தை எதிர்த்தவரைக் கத்தியால் குத்தியதாகவும், கத்தியால் குத்தப்பட்டவர் வைஸ் பிரிசிடென்ட், பிரிசிடென்ட் ஆகியோர் தூண்டுதலின் பேரில் தான் அப்படி குத்தியதாகவும் ஒரு போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்திருப்பதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அப்படியிருந்தாலும், அதை மேலும் விசாரித்து அதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து ஏற்ற நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியை நான் இங்கே கூறிக்கொள்கிறேன். இந்தத் துணை மானிய மதிப்பீட்டின் மீது நம்முடைய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூட்டுறவுத் துறை பற்றிய பல்வேறு விளக்கங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எப்பொழுது பேச எழுந்தாலும், கூட்டுறவுக்கு முக்கியத்துவம் தந்து பேசுவது தான் வாடிக்கை. அந்த வகையிலே பேசியிருக்கிறார்கள். இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சரும் இருந்து பேசியிருந்தால், இந்த மன்றத்திற்கு மிக தேவையான பல விஷயங்கள் கிடைத்திருக்கும். ஆனாலும் நம்முடைய நண்பர் திரு. ராஜகோபால் அவர்கள் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையைப் பற்றி குறிப்பிடும்பொழுது, யார் யாரிடமோ இருந்த அந்தத் துறை இன்றைக்குச் சாதாரண மக்களிடத்திலே வந்திருக்கிறது என்ற உண்மையை எடுத்துக் காட்டினார்கள். குறைபாடுகள் இருக்கலாம், நம்முடைய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டதைப் போல் குறைபாடுகள் இருக்கும்பொழுது அவைகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டியது தான். அவர்கள் அந்தக் குறைபாடுகளை பொதுவாகச் சொல்லுவதை விடுத்து எங்கெங்கே என்னென்ன குறைபாடுகள் நடந்திருக்கின்றன என்று எழுதித் தர ஆசைப்படுவார்களேயானால், அந்த அடிப்படையிலே அதுபற்றி ஆய்வு செய்வதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அவர்கள் இங்கே 10, 15 தடவை பொதுப்படையாகப் பேசியிருக்கிறார்கள். இந்த இடத்திலே இன்னின்ன நடந்தது என்ற விவரங்களை அவர்கள்



14th December 1971] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

எழுதித் தருவார்களேயானால், அவைகளைக் கவனிக்கலாம்; எங்கே குற்றம் இருந்தாலும், அது கண்டிக்கப்பட வேண்டியது தான். தடுத்து நிறுத்தப்பட வேண்டியது தான். நிச்சயமாக இந்த அரசின் சார்பிலே அந்த நடவடிக்கைகாரர்களிடமிருந்து கூட்டுறவுத் துறை ஏழை எளியவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையிலே சாதாரண மக்களிடம் வந்திருக்கிறது. அவர்களே கூட சொன்னார்கள், அதைப்பற்றி எனக்கு ஆத்திரம் கிடையாது, எரிச்சல் கிடையாது என்று. அந்த வகையிலே தான் நாம் அணுக வேண்டும் என்று குறிப்பிட்டு, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசியபொழுது நல்ல பல கருத்துக்களை இந்த அரசுக்கு எதிர்க் கட்சித் தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் தந்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்து, இதை ஏற்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

## IV DISCUSSION ON THE STATEMENT OF DEMANDS FOR GRANTS TO COVER EXCESS EXPENDITURE RELATING TO THE YFAR 1967—1968.

MR. CHAIRMAN: Does any Member want to speak?

(No hon. Member rose.)

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. to-morrow.

The House then adjourned.

[15th December 1971

### Recreation Clubs

*181 *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether any raids have been conducted by the Police in Madras City during May, 1971 on the Recreation Clubs; and

(*b*) if so, the details thereof?

### பொழுது போக்குக் குழாங்கள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரில், பொழுது போக்குக் குழாங்களை 1971 மே திங்களில் காவலர்கள் திடீரெனச் சோதனையிட்டார்களா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 1971 மே திங்களில் சென்னை மாநகரக் காவல்துறையினரால் ஐம்பத்தொரு பொழுது போக்குச் சங்கங்கள் (Recreation Clubs) திடீர்ச் சோதனையிடப்பட்டன. சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தின் 45, 46 ஆவது பிரிவுகளின் கீழ், விடுதியில் சூதாட்டம் நடத்திய குற்றத்துக்காக 54 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. விசாரிக்கப்பட்ட 48 வழக்குகளில், 47 வழக்குகளில், குற்றவாளி கட்குத் தண்டனையளிக்கப்பட்டது. ஒரு வழக்கு விடுதலையில் முடிந்தது; ஐந்து வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. எஞ்சிய ஒரு வழக்கில் துப்புத் துலக்கப்பட்டு வருகின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: கிளப்களில் ரம்மி போன்ற ஆட்டங்களில் பணம் வைத்து விளையாடலாம், அதற்கு அனுமதி உண்டு என்று சொல்கிறார்கள். எந்த மாதிரி ஆட்டங்கள் ஆடலாம், எவை சூதாட்டமாகும் என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கிளப்களில் ஆடுகிற ஆட்டம் பணம் வைத்து ஆடப்படுவதில்லை. டோக்கன் வைத்து விளையாடுகிறார்கள். பிறகு ரகசியமாக அவைகளையெல்லாம் பணமாக மாற்றிவிடுகிறார்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, இதுபோன்ற சூதாட்டங்கள் அதிகமாக பொழுதுபோக்குக் கழகம் என்ற பெயரில் நடைபெறுவதால், இந்தப் பொழுது போக்குக் கழகங் களுக்கு உரிமம் வழங்குவதில் அதிகக் கண்காணிப்பு செய்து கடுமையான நிபந்தனை விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது அவர்களுடைய லைசென்சை ரத்து செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை. இதற்காகவும் மற்றக் காரணங்களுக்காகவும் இந்தச் சட்டத்தை அறவே எடுத்துவிட்டு வேறு மசோதாவை இந்த அரசு தயாரித்துள்ளது. புது மசோதா 36வது பிரிவில் லைசென்சை ரத்து செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.



December 1971]

திரு. சா. கணேசன்: 'இம்மாதிரி ரிகிரியேஷன்' அல்லது பொழுதுபோக்கு மன்றம் என்ற பெயரில் வைத்துக்கொண்டு, வேறு எந்தவிதமான படிப்பு அல்லது விளையாட்டு 'Indoor games and Out door games' என்று எதுவும் இல்லாமல் சூதாட்டம் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு செயல்படுவதால், பல கஷ்டமும் தீமையும் ஏற்படுகிறதை உணர்ந்து, விரைவில் அதைத் தடுத்து செம்மையான நிலை நிலவ தக்க சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருகிறதா? அதற்கு என்று ஏதாவது ஒரு ஆலோசனைக் கமிட்டி போட்டு, சட்டத்தைத் தயாரிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கம்பெனிகள், நூல் நிலையங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்றவை மத்திய அரசுச் சட்டம் 'Registration of Societies Act, 1860-ன் கீழ் 20-வது பிரிவின் படி பதிவு செய்யப்படுகின்றன. முதலில் சொன்னேன். இந்த லைசென்சை ரத்து செய்வதற்கு இப்போது சட்டத்தில் இடமில்லை. அதற்கான திருத்தங்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: சில சந்தர்ப்பங்களில் முனிசிபல் நகரங்களில் சிறிய சிறிய மற்ற ஊர்களிலும் கூட இத்தகைய மன்றங்கள் பொதுமக்களுக்குத் தீங்கிழைக்கும் வகையில் நடைபெறுகின்றன என்று நான் சொல்லியபோது, முதலமைச்சர் அவர்கள் அதை நம்மால் தடை செய்ய முடியாது என்று கூறினார்கள். இப்போது வரக்கூடிய இந்தச் சட்டத்தின் மூலம் அத்தகைய குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க இந்த மசோதா வகை செய்யும் என்று முதலில் தெரிவித்தேன். அது மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட இடங்களில் சூதாட்டம் நடக்கும்போது, அடிக்கடி போலீசார் தலையிட்டு அவர்களைக் கைது செய்வதாலும், தடுப்பதாலும் அனேகமாக பொழுதுபோக்குக் கூடங்கள் கலைக்கப்பட்டுவிடுகின்றன. இந்தக் கேள்வியின் மூலம் போலீசார் மேலும் தீவிரமாக இருப்பார் களானால், இவைகளைத் தடுத்துவிடலாம்.

THIRU A. R. DAMODARAN: Sir, all card games do not necessarily mean that gambling is involved because contract Bridge is a game of skill. Sir, I was under the impression that Rummy also was excluded from the list of games involving gambling because we are all guilty of playing rummy. I would like to know from the Hon. the Chief Minister, on very authoritative grounds whether Rummy is gambling and if it is considered gambling, whether it would be removed from the list because all of us would be found guilty of playing Rummy?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்த ஆட்டமாக இருந் தாலும் அதில் பணம் புழங்கினால், அது சூதாட்டமாகத்தான் கருதப் படுகிறது.

[15th December 1971

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த ஸ்டவ் அடுப்புகளால் விபத்து ஏற்படுவது உண்மைதான். அவர்கள் சொல்வதைப் போல, 1969-ல் 18 பேர்களும், 1970-ல் 22 பேர்களும், 1971-ல் 31—5—1971 வரையில் 18 பேர்களும் இந்த ஸ்டவ் அடுப்புகள் வெடித்ததால் இறந்திருக்கிறார்கள். அஜாக்ரதையின் காரணமாக உபயோகிப்பவர்கள் விபத்திற்கு ஆளாகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு எந்த ஸ்டவ் அடுப்புகளை எப்படிச் செய்ய வேண்டுமென்று யோசனை சொல்வதற்கு, செயல் குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. சில நேரங்களில் தற்கொலைக்கு இந்த ஸ்டவ் அடுப்புகள் காரணமாக இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இந்த ஸ்டவ் அடுப்புகள் சாதாரணமாக அணைவதில்லை. தண்ணீரைத் தெளித்து அதை அணைக்கிறார்கள். மண்ணெண்ணெயோடு தண்ணீர் கலப்பதால், அடுத்த முறை பற்ற வைக்கும்போது ஸ்டவ் வெடித்து எண்ணெய் உடல் பூராவும் சிதறி புடவை மீது தீப்பிடித்து இறக்கிறார்கள். இது முக்கியமான விஷயம். ஆகவே இதைச் சரியாகக் கண்காணிக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. சுவாமிநாதன் அவர்களுடைய விவரமான கேள்வியை பத்திரிகைக்காரர்கள் அப்படியே பத்திரிகையில் போடுவார்களானால், இந்த விபத்துக்களிலிருந்து பெண்கள் தப்பிப்பார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் சமையல்கூட அனுபவங்களை நன்றாக உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

### *World Tamil Conference, 1970*

* 184 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the amount spent by the State Government for sending a delegation to the Third World Tamil Conference, at Paris in the year 1970?

### *உலகத் தமிழ் மாநாடு, 1970*

**திரு. வி ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1970-ஆம் ஆண்டில் பாரிசில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் குழு ஒன்றை அனுப்புவதற்கு மாநில அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஜூலை திங்கள் 1970-ம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழ் மகாநாட்டுக்கு தமிழ் நாட்டுப் பிரதிநிதி குழுவை அனுப்பியதின் காரணமாக அரசுக்கு சுமார் ரூ 88,000 செலவாகியது.



15th December 1971]

THIRU G. VASANTHA PAI: Is it a fact that except the delegates from Tamil Nadu, all the others spoke in languages other than Tamil?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பெரும்பாலும் எல்லோரும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டையும் அறிந்தவர்கள்தான் சென்றிருக்கிறார்கள்.

### *District Development Council Meetings*

* 185 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to nominate non-officials as Chairman of the District Development Council meetings, instead of the District Collector;

(*b*) if so, from which date that system will come into force; and

(*c*) if not, whether the Government will examine the same?

### *மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்கள்*

**திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பதிலாக அதிகாரபற்றற்றவர்களைத் தலைவர்களாக அமர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அந்த முறை அமுலுக்கு வரும்?

(உ) இல்லையெனில் அரசு அதுபற்றி பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் சட்டம், சட்டமாவதற்கு முன்பே இம்மன்றங்களில் தலைவர் மாவட்ட ஆட்சியாளராக இருப்பதைவிட ஏன் ஒரு தேர்தெடுக்கப்பட்ட அதிகார பற்றில்லா ஒருவராக இருக்கக்கூடாது என்ற வினா சட்டக்குழுவாலும், அரசினராலும் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியாளரே அதன் தலைவராக இருப்பது நல்லதொரு முறை என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளது.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் ஜில்லா பரிஷத் என்று வைத்திருக்கும்போது, அதைப் பின்பற்றி இங்கேயும் மாவட்ட ஆட்சித் தலைவர் என்கிற அரசு அலுவலர் இல்லாமல் உத்தியோகப் பற்றற்றவர் தலைவராவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதாவது தலைவர் தேர்ந்

[15th December 1971

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, நகர்ப் புறங்களில் மாத்திரம் இல்லாமல் கிராமப்புறங்களில், உதாரணமாக எங்கள் கிராமத்தில் உசிலம்பட்டி கிராமத்தில் இதைத் தொழிலாக வைத்து நடத்துவதன் மூலம் சம்பாத்தியம் செய்வதற்கு, கிளப்கள் என்று வைத்துக்கொண்டு எல்லா ஊர்களிலும் நடத்துகிறார்கள். அதைத் தடுப்பதற்கு சீக்கிரத்தில் முயற்சி எடுத்தால், பொது ஜனங்களுக்கு நன்றாக இருக்கும். அதை அரசு கவனிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கிளப்கள் என்ற பெயரால் இப்படிப்பட்ட ஆட்டங்களை நடத்தி கள்ளக்காசிலே நிறையபேர் சம்பாதிக்கிறார்கள். இது கிராமங்களில் நடைபெறுகின்ற ஒன்று. இதைத் தடுப்பதற்கான மசோதா கொண்டுவரப்படுவதாகச் சொன்னேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, are the Government aware that in the Cosmopolitan Club and Gymkana Club cases as well as in the Secunderabad Club Cases, the Supreme Court has held that Rummy is a game of skill and it does not come within the meaning of gambling?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அப்படியிருக்கலாம். ஆனால் ரம்மி என்கிற ஆட்டம் சூதாட்டம் இல்லை என்று கூறப்பட்டிருக்கலாம். ரம்மியில் பாயிண்டுக்கு இவ்வளவு காசு என்று வைக்கும்போது, அது சூதாட்டமாகக் கருதப்படும் என்று கருதுகிறேன். நீதிமன்றத்தின் தீர்ப்புபற்றி எனக்குத் தெரியாது.

THIRU G. VASANTHA PAI : The Supreme Court has held that it is a game of skill and is not gambling.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் தாராளமாக ஆடலாம், மசோதா வரும்வரையில்.

*General Elections*

* 182 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the number of arrests made by the Police in the Madras City from 1st March to 31st 1971 in connection with the General Elections; and

(*b*) the action taken on those arrested?

**பொதுத் தேர்தல்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுத் தேர்தல் தொடர்பாக சென்னை மாநகரில் 1971 மார்ச்சு 1-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாள் வரை காவலர் கைது செய்த நபர்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) கைது செய்யப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



15th December 1971]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) சென்னை மாநகரில் 1—3—1971 முதல் 31—3—1971 வரை 619 பேர் காவலரால் கைது செய்யப்பட்டனர். 452 பேர் மீது நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டார்கள். 52 பேர் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப் பட்டனர். மற்றும் 58 பேர் நீதிமன்றங்களினால் தண்டிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். 9 பேர் ஜாமீன் கொடுக்குமாறு நீதி மன்றங்களினால் கோரப்பட்டனர். 13 பேர் மீதிருந்த வழக்குகள் துப்புத் துலக்க முடியாதவையாகக் கருதப்பட்டன. மூன்று வழக்குகள் குறித்துப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. எஞ்சிய 26 வழக்குகள் நீதி மன்றங்களில் விசாரணையில் உள்ளன.

*Bursting of Kerosene Stoves*

* 183 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that several deaths have occured on account of their burstin gof burning Kerosene stoves in the State; and

(*b*) if so, the steps proposed to be taken by the Government to avert such accidents in future?

**மண்ணெண்ணெய் ஸ்டவ்கள் வெடித்தல்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் மண்ணெண்ணெய் ஸ்டவ்கள் வெடித்ததால் பலர் இறந்தனர் என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், எதிர்காலத்தில் இத்தகைய விபத்துகளைத் தவிர்க்க அரசு எடுக்கத் திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுப்பதற்கு என்று தனியாக செயல் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** குறைந்த விலையில் ரூ. 10 அல்லது 12-க்கு மெல்லிய தகரத்தில் ஸ்டவ் அடுப்புகள் பல இடங்களில் உருவாக்கப்பட்டு விற்கப்படுகின்றன. வீடுகளில் அவற்றைப் பற்ற வைக்கும்போது, மண்ணெண்ணெயுடன் தண்ணீர் கலந்திருப்பதால் அவை வெடித்து பல இடங்களில் பெண்கள் இறந்திருக்கிறார்கள் என்பது எனக்கும் தெரியவந்துள்ளது. அதை உடனடியாகக் கவனித்து இந்த ஸ்டவ் தயாரிப்பு, விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? எனக்குத் தெரிந்த வரையில், நூற்றுக்கணக்கான பேர் திடீரென்று இதனால் இறந்திருக்கிறார்கள் என்பதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[15th December 1971

### *Staff of the Veeramamunivar Middle School*

* 186 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the staff of the Veeramamunivar Middle School, Ochanthattu, Ilayangudi Range, Ramanathapuram District, have not been paid any increments for the past two years, and revised scales of pay since 2nd October 1970, and

(*b*) if so, the reasons therefor?

### *வீரமாமுனிவர் நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள்*

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இளையாங்குடி சரகம், ஒச்சந்தட்டு, வீரமாமுனிவர் நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊதிய உயர்வும் 2-10-1970 முதல் திருத்தியமைக்கப்பட்ட சம்பள விதங்களும் கொடுக்கப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் இளையாங்குடி சரகம், ஒச்சந்தட்டு என்ற ஊரிலும் வீரமாமுனிவர் நடுநிலைப்பள்ளியின் நிர்வாகியின் மீது பலவிதமான ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவர் மீதான காவல் துறையினரின் வழக்கு ஒன்று விசாரணையில் உள்ளது. ஆகவே அப்பள்ளி நிர்வாகியின் பதவி இடம் காலியாக உள்ளதால் அப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதிலும், திருத்தியமைக்கப்பட்ட சம்பள விகிதத்தில் பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை உறுதி செய்வதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. அச்சரகப்பள்ளித் துணை ஆய்வாளரை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல், அதே போன்ற—அவர்களது பணி நிலை பற்றிய பொருள்கள் ஆகியவற்றை மேலே கூறப்பட்ட வழக்கு முடியுமட்டும், கவனிப்பதற்காக அப்பள்ளியின் நாளாளராகப் பணியாற்ற அனுமதிக்கலாம் என்ற பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு தற்பொழுது ஏற்றுக்கொண்டு விட்டது.

**திரு. எம். ராஜா அய்யர்:** தலைவர் அவர்களே. இந்தப் பள்ளி நிர்வாகியின் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் இருப்பதால், பள்ளி ஆசிரியர்கள் கஷ்டப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. பல பள்ளிகளில் இப்படி பள்ளி நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்போது, ஆசிரியர்களுக்கு இரண்டு வருஷ காலமாகச் சம்பளம் மாதா மாதம் வாங்கிக் கொடுப்பதற்கு நிர்வாகிகள் இல்லையென்ற காரணத்திற்காக, ஆசிரியர்கள் எல்லாம் அவல நிலைமைக்கு ஆளாகாதவாறு காப்பாற்ற அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?



15th December 1971]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பள்ளி நிர்வாகி இல்லாத காரணத்தால், சங்கடங்கள் ஏற்படுகின்றன என்ற கருத்து வந்து, பள்ளித் துணை ஆய்வாளரே அந்த வழக்கு முடியும் வரையில் இருந்து, நிர்வாகப் பணிகளை ஆற்ற வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குனர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகையால் இனி ஆசிரியர்களின் சங்கடம் நீங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**திரு. எம். ராஜா அய்யர்:** அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பட்டு விட்டதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரமில்லை. இப்போது பொறுப்பு அவர்களிடத்தில் விடப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கலாம்.

### *Physical Training Teachers*

* 187 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR, KUNRAKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to appoint the unemployed physical training teachers, in the middle and high schools; and

(*b*) if not, whether the Government will consider this proposal?

### *உடற்பயிற்சி ஆசிரியர்கள்*

**திரு. சி. வி. ராஜகோபால்** (தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வேலை வாய்ப்பின்றி இருக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்களை நடுத்தரப் பள்ளிகளிலும் உயர்தரப் பள்ளிகளிலும் நியமனம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லை என்றால், இத்திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) பரிசீலனை செய்யப்படும்.

### *Pandits Training*

* 188 *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the Government have received any representation from the Teachers-Students undergoing Pandits Training in Teachers' College, Saidapet, Madras, during the last week of June 1971;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?

### பண்டிதர் பயிற்சி

**திரு. எஸ். முத்துசாமி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் பயிற்சி பெறும் மாணவர்களிடமிருந்து 1971 ஜுன் திங்கள் இறுதியில் முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) & (உ) வினாவிற்கு இடமில்லை.

### *Government Hospital, Sivagangai*

*189 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether any representation has been received to expand the Government Hospital at Sivagangai, Ramanathapuram district; and

(b) if so, the action taken thereon?

### அரசினர் மருத்துவமனை, சிவகங்கை

**திரு. பி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமனாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் உள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்த அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) மேற்படி கோரிக்கைகள் மக்கள் நலம் மற்றும் குடும்ப நல இயக்குநரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### *Hospitals in Madras City*

*190 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Hospitals in Madras City are making their purchases from the Central Medical Depot only?



### சென்னை மாநகர் மருத்துவமனைகள்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

சென்னை மாநகரில் உள்ள மருத்துவமனைகள் மத்திய மருந்து நிலையத்திலிருந்து தான் மருந்துகள் வாங்கி வருகின்றனவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தற்போது மருந்துகள் வாங்குகிற முறையிலே சரியான சமயத்தில் அவை மருத்துவமனைக்கு வருவதில்லை. சமயத்தில் எம். எஸ். டி. விலை அதிகமாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். மத்திய மருந்து நிலையம்தான் எம். எஸ். டி. என்று நினைக்கிறேன். அது உண்மையானால், வாங்கும் முறையில் அதில் இடர்ப்பாடு இருப்பதாகச் சொல்லப்படுவது அரசிற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மத்திய நிலையத்திலிருந்து தான் பெரும்பாலும் மருந்துகள் இதுகாறும் வாங்கப்பட்டன. அப்படி வாங்குவதில் 'பேடண்ட் மெடிசன்' என்ற பெயரில் மருந்துகள் மத்திய நிலையத்தில் சில நேரங்களில் விலை அதிகமாக உள்ளதாக அவர்களாலேயே கூறப்பட்டு, இதுவும் அரசாங்க மருத்துவ மனையில் வாங்கும் வழக்கம் ஏற்பட்டது. அண்மையில் மருந்துகள் என்னென்ன முறையில் வாங்குவது, அரசாங்க நிதி நிலைமைக்கு ஏற்ப, நிறைந்த பயனுள்ளதா என்று அறியப்பட்டு, அதன் விளைவாக பொதுவாக எந்த நிறுவனமாக இருந்தாலும், அவர்கள் டெண்டர் கோருகிறபோது தாங்கள் இன்னின்ன கட்டணங்களில் தர முடியும் என்பதைத் தெரிவிக்கலாம் என்றும் அப்படித் தெரிவிக்கப்பட்ட மருந்துகளில் சிறப்பான தகுதியுள்ள திறன் குறையாத அளவில் எந்த நிறுவனங்களில் விலை குறைவாக இருக்கிறதோ அங்கிருந்து வாங்கிப்பெறலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டு, இந்த மருந்துகளை மத்திய அளவில் சென்னை, தமிழகம் முழுவதற்கும் சேர்ந்து சுகாதாரத் துறையின் தலைமை அலுவலகத்தினுடைய குழுவினரின் மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு, தேர்ந்தெடுத்து, பிறகு பல்வேறு மாவட்டங்களுக்கு அவை வாங்கும் முறையில் அனுமதிக்கப்படுகிறது, அந்த முறையில் மத்திய மருத்துவ நிலையம் கைவிடப்படவில்லை. ஆனால் அங்கிருந்து மட்டும்தான் பெற வேண்டுமென்ற முறை கைவிடப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தற்போது மத்திய மருந்து நிலையத்தில் மருந்து இருக்கிறதா என்று விசாரித்து அவை இல்லை என்று தெரிவிக்கப்பட்டால்தான் மற்ற இடங்களில் வாங்கலாம் என்ற நிலை இருந்தது. அந்த முறை இப்போதும் இருக்கிறதா?

*1971 டிசம்பர் 15]*

மாநில அளவில் மத்திய நிலையம் ஆரம்பிக்கலாம் என்ற யோசனை அரசிடம் உண்டா? அதைப் போல கேரளத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது அரசிற்கு தெரியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இதுவரையில் இருந்த முறையில் "Non-availability certificate" இந்த மருந்து இல்லை என்று சொன்னால், அதை வாங்கலாம் என்ற முறை இருந்தது. இப்போது அரசிற்குத் தரப்பட்டிருக்கிற ஆலோசனை . . . .

One of the recommendations is that a Drug Committee each consisting of specialists of the different branches of medicine including pharmacology should be constituted to select medicines and to approev rates and the firms for supply and that the Medical Stores Depot may also be asked to quote and for such of those items where Medical Stores Depot rates are cheaper, order could be placed with Medical Stores Depot என்று இருக்கிறது.

The Government have accepted the above recommendation.

இதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி இப்போது இருக்கிறது.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** தலைவர் அவர்களே, டாக்டர்கள் சில மருந்துகளைக் குறிப்பிட்டு வாங்க வேண்டுமென்று சொல்கிறபோது, அந்த மருந்துகள் இங்கே உள்நாட்டில் கிடைப்பதில்லை. வாலியம் என்ற மருந்து சொல்லப்பட்டது. அது கிடைக்கவில்லை. அந்த மாதிரி மருந்துகளை சர்க்காரே 'இம்போர்ட்' செய்து வியாதியஸ்தர்களுக்குத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, எல்லா மருந்துகளையும், நம்முடைய நாட்டிலே கிடைக்காத மருந்துகளை வரவழைப்பது என்பது நம்முடைய அரசுக்கு நேரடியாக இயலாத ஒன்று. மத்திய அரசினுடைய செலாவணித் திட்டத்தைப் பொறுத்து, வெளிநாட்டில் இருக்கிற மருந்துகளில் சில, சில நேரங்களில் பலருக்குத் தெரிவிக்கப்பட்டு அந்த இடங்களிலிருந்து பெறவேண்டியிருப்பதால் அவ்வப்போது அதற்காக முயற்சிக்க வேண்டியிருக்கிறது. திட்டவட்டமாக இவ்வளவு மருந்துகள் தேவை என்று சொல்லி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நிலைமையில் இப்போது இல்லை.

### *Thanjavur Medical College*

*191 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether it is a fact that a representation has been made by the Merchants Association, Thanjavur, during August 1970 regarding opening of an out-patient Department at Thanjavur Medical College campus; and

(*b*) if so, the action taken thereon?



15th December 1971]

### தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி வளவுக்குள், வெளி நோயாளிப் பிரிவு ஒன்று தொடங்கப்பட வேண்டும் என தஞ்சாவூர் வியாபாரிகள் சங்கம் 1970 ஆகஸ்ட் திங்களில் முறையீடு செய்து கொண்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் பகுதி ஆரம்பிக்க இயலாது என்று கருதப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** புறநோயாளிகள் பகுதி ஆரம்பிக்க, வேண்டிய வசதிகள் இருந்தும் இயலாது என்று என்ன காரணத்தால் சொல்லப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சில சிறப்புப் பகுதிகளுக்கான மருத்துவர்களும், இதே போல ராஜா மிராசுதார் மருத்துவமனையில் சில சிறப்புப் பணிக்கான மருத்துவர்களும் இன்றைக்குப் பணியாற்றி வருகிறார்கள். சிறப்புப் பணிக்காகப் பணியாற்றுகிற அனைவரும் ஒரே இடத்தில் இல்லாமல் சிலர் சில இடங்களில் இருப்பதால், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்புகிற நிலைமை ஏற்படுகிறது. Referred **out-patient** என்ற நிலைமையில் வருகிறவர்களுக்கு சிகிச்சை அளிக்கும்போது, புறநோயாளியாக இல்லாமல் அனுமதிக்கப்பட வேண்டியவர்களை கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதில் குறைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு மருத்துவக் கல்வி இயக்குனர் மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. இப்போது ஓரளவு நிறைவேறியிருக்கின்றன. நகர்ப்புற மக்களுக்கு நகர நடுவில் இருக்கிற மருத்துவ மனைக்கு வருவது புறநோயாளிகள் என்ற வகையில் வசதியாக இருப்பதாலும், இரண்டு இடங்களிலும் அமைப்பதற்கு இயலாததாலும் இப்போது இருக்கும் இடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்

**திரு. சி. வி. ராஜகோபால்:** மருத்துவ மனைக்கு வருகிற நோயாளிகளில் டையாபடிஸ் என்கிற நீரிழிவு நோய்க்கான இன்சுலின் என்ற மருந்து கிடைக்கவில்லை என்று வெளியே பேசப்படுகிறது. உண்மையா? அது முக்கியமாக அவர்களுக்குத் தேவையான மருந்தாக இருப்பதால், அவற்றைப் பெற்று கிடைக்கும்படி ஆட்சியாளர்கள் செய்வார்களா?

[15th December 1971

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்த விவரம் எனக்குத் தெரியவில்லை. நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எப்போது போனார்கள் என்று தெரிந்தால், விசாரித்து நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தற்போது மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை நகரத்திற்கு மூன்று நான்கு மைல்கள் தள்ளியிருக்கிறது. அதைச் சுற்றி பல சிற்றூர்கள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் அவசரமான நிலைமைகளுக்கு வந்து சிகிச்சை பெற காசுவாலிடி டிபார்ட்மெண்ட் அங்கே வைக்கப்படுமா? பாம்பு கடித்தால் கூட அங்கேயுள்ளவர்கள் நான்கு மைல் கடந்து நகரத்திற்குக் கொண்டுவரப்படுகிற சங்கட நிலைமையை உணர்ந்து, அதைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அப்படி எதிர்பாராது தவிர்க்கமுடியாத காரணங்களுக்கு ஆளாகிறவர்களுக்கு என்ன செய்யமுடியும் என்பதை அரசு பரிசீலிக்கும். அவுட் பேஷண்டுக்குத் தனியாக பிளாக் கட்டினால் ஒழிய, அங்கே வேறு இடவசதி இப்போதில்லை. கட்டி முடிக்கிற நிலைமை ஏற்படும்போது, அங்கத்தினரின் விருப்பம் மிகவும் எளிதாக நிறைவேறும்.

## *Employees Quarters*

* 192 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Minister for Public Health be plased to state—

(a) whether all the categories of employees working in Government Hospitals (including clerks) have been provided with quarters; and

(b) if not, whether arrangements will be made to construct quarters for them?

## ஊழியர் குடியிருப்புக்கள்

**திரு. சி. வி. ராஜகோபால் (திரு எஸ். எஸ். தென்னரசு சார்பில்)** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மருத்துவ மனையில் பணிபுரியும் எல்லாவித ஊழியர்களுக்கும் (குமாஸ்தாக்கள் உட்பட) குடியிருப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) இல்லை என்றால், வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) தற்போது அரசிடம் அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை.



15th December 1971]

## *Beggars Rehabilitation Scheme*

* 193 Q.—THIRU T. K. SHANMUGHAM (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any provision has been made for children who are begging in places like Railway Stations and Bus stands, under the Beggars Rehabilitation Scheme; and

(b) if so, the details thereof?

## பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்

**திரு. டி. கே. ஷண்முகம் (திரு. எஸ். எஸ் தென்னரசு சார்பில்):** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரயில் நிலையம், பஸ் நிலையம் போன்ற இடங்களில் பிச்சை எடுக்கும் இளம் சிறுர்களுக்கு பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. கே. ஷண்முகம்:** தலைவர் அவர்களே, ஆலயங்களின் நுழைவாயிலில் பிச்சைக்காரர்கள் இரு மருங்கிலும் உட்கார்ந்து கொண்டிருப்பதும் சிறிதும் குறையவில்லை. பொதுமக்கள் வழிபடும் ஆலயங்களில் பிச்சைக்காரர்கள் இருப்பது தமிழர்களின் தன்மானத்திற்கு இழிவுள்ளதாக இருப்பதால், அதைத் தடை செய்வதற்கு பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டப்படி அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஏற்கனவே தமிழகத்தில் 1945-ம் ஆண்டு பிச்சைக்காரர் தடுப்புச் சட்டம் செயலில் உள்ளது. அந்தச் சட்டத்தின்படி பிச்சை எடுப்பவர்களைக் கைது செய்து, வழக்குத் தொடரப்பட்டு, தண்டனையும் தரப்படுகிறது. முதல் முறையாக ஒரு மாதச் சிறைத் தண்டனை ஐந்து ரூபாய் அபராதம், இரண்டாவது முறையில் ஆறு மாதம் சிறைத் தண்டனை தரப்படுகிறது. அவர்களைப் பிடித்து வந்து காவல் நிலையங்களில் வைத்தால், அவர்கள் தப்பியோடி விடுகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Sir, in fortherance to the question put by my hon. friend, may I know whether the Government are aware that the leprous beggars are still begging in front of every way-side hotel? Will the Government take them to the rehabilitation centres so that they would not infect the public with the disease that they have got?

[15th December 1971

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதற்காகத்தான் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குத் தகுந்த வகையில் மருத்துவம் அளித்து வசதி செய்து தருவதற்கு மூன்று இல்லங்களை அரசு மேற்கொண்டு ரூ. 21 லட்சம் செலவில் துவக்கவிருக்கிறது. அந்த இல்லங்களுக்கு தெருவில் பிச்சையெடுக்கும் தொழுநோய்க்காரர்களை போலீசார் கைது செய்து வழக்கு மன்றத்திற்குச் சென்று, பிறகு கொண்டுவருகிறார்கள். சில நேரங்களில் குடும்பம் குடும்பமாக இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அவர்களாகவே இந்த இல்லங்களில் வந்து சேருகிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** முக்கியமாக திருத்தலங்கள் என்று சொல்கிற இடங்களில், பழனி போன்ற தலங்களில், இளம் சிறார்களாக இருக்கிற பிச்சைக்காரர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இருப்பதை நான் அண்மையில் அங்கே சென்றிருந்தபோது பார்த்தேன். அப்படி பிச்சைக்காரர்கள் திருத்தலங்களில் இருப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அப்படிப்பட்ட இல்லங்களைக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்கிறது. கட்டிடங்கள் கட்டப்படவில்லை. எட்டு டார்மிடரி இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதுவரையில் 200 பேர்களை அதில் சேர்த்துக்கொள்ள வசதியிருக்கிறது. 24 டார்மிடரி இல்லங்கள் கட்டினால், அப்போது 750 பேர்களை அதில் சேர்த்துக்கொள்ளலாம். பருகூர், உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களில் 750 பேர் சேரும் அளவில் மூன்று இல்லங்கள் கட்டுகிறோம். கட்டி முடித்தபிறகு கட்டாயமாக அவர்களைக் கைது செய்து அங்கே கொண்டுவந்து வைக்கலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** ஆலயங்களின் வழி நெடுகிலும் இருக்கும் பிச்சைக்காரச் சிறுவர்களுக்கு பிச்சை அளிக்காமல் இருக்க பக்தகோடிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிக் கேட்கப் பட முடியாது. அது தவறும் கூட என்று கருதுகிறேன்.

**திரு. பி. நாராயணசாமி :** பழனி ஆண்டவனைப் பிச்சை எடுக்கிற கோலத்தில் வைத்துக் காண்கிறார்களே, அந்தக் கோலம் ஆண்டவனுக்குக் கொடுக்கப்படலாமா ? அதை மாற்ற முயற்சிப்பார்களா ?

**மிஸ்டர் சேர்மன் :** திருப்புகழைப் பாடப் பாட வாய் மணக்கும் என்று சொல்கிறார்கள். பல் விளக்காமல் இருக்க முடியுமா என்ன ? (சிரிப்பு)

### *Directory of Social Service Organisation*

*191 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to publish a Directory of Social Service Organisation in this State ; and

(*b*) if so, the stage at which the matter now stands?



15th December 1971]

### சமூகப் பணி நிறுவனங்களின் குறிப்பேடு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள சமூகப் பணி நிறுவனங்களின் குறிப்பேடு ஒன்றை வெளியிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ANNOUNCEMENTS.

### (1) *Message from the Governor.*

MR. CHAIRMAN : I have received a message from the Governor recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971.

### (2) *Messages from the Assembly.*

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 50 of 1971), as passed by the Legislative Assembly and certi-signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :—

(1) The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971).

(2) The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971).

(3) The Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 49 of 1971).

(4) The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 52 of 1971).

யாக, அச்சரப்பாக்கத்துக்கு ஒரு தொலைபேசி வேண்டுமென்ற அளவில் முடித்தார்கள். அவ்வளவு பேசியதும் இந்தத் தொலைபேசிக்காகத்தான் (சிரிப்பு) என்று நான் கருதிக்கொள்ளாவிட்டாலும், இதை ஒரு வாய்ப்பாக வைத்து தன்னுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதுதான் உண்மையாகும். துணை மானியக் கோரிக்கையில் அதிகச் செலவு ஏதுமில்லை என்கிற அளவுக்கு அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று என்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். எங்கே தீவிரமாகப் பாராட்டி விட்டோமோ என்று பயந்து, பிறகு இன்னும் மிக ஜாக்கிரதையாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படித்தான் போக சிக்கனமாகச் செலவு செய்ய ஒரு சிக்கனக் குழு அமைக்க வேண்டுமென்றும் வேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்னதைப் போல், நிச்சயமாக இந்த அரசு மேலும் சிக்கனமாகக் காரியங்கள் செய்வதற்கு முன்வரும் என்பதையும் சிக்கனக்குழு அமைக்க வேண்டிய தேவை இல்லாமலேகூட, அரசினுடைய செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையில் இருக்கின்றன என்பதையும், செலவழிக்க எண்ணினாலும், செலவழிக்க பணம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதனை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல், இப்போதுள்ள நெருக்கடி நிலைமையில் மத்திய அரசிடத்திலிருந்து எவ்வளவு எதிர்பார்க்கிறோம், எவ்வளவு கிட்டும் என்பதைக் கணக்கில் வைத்து, அந்த அளவுக்கு நம்முடைய பல திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் பல உதவிகளின் பெயரால், நடைமுறைகளின் பெயரால் செலவழிக்க திட்டமிடாதவைகளிலும் எந்த அளவுக்குச் செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்—என்பதையெல்லாம் சிந்தித்துப்பார்த்துத் தான் அடுத்தடுத்து நம்முடைய நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் அதிகமாக இவ்வளவு செலவானதற்கான காரணங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் மற்றவர்களும் சுட்டிக் காட்டியது போல், சத்துணவுத் திட்டத்திற்கு அதிலே சிறப்பாக 3 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதற்குத் திடீர்ச் செலவாக ரூ. 60 லட்சம் ஒதுக்கப்பட்டு 1,56,000 குழந்தைகளுக்கு சென்னை, மதுரை போன்ற நகரங்களிலும், ஒரு லட்ச மக்கள் இருக்கின்ற ஏனைய 17 நகரங்களிலும் இந்தத் திட்டத்தினை இப்போது அமல்படுத்தி வருகிறோம். சத்துணவுத் திட்டம் என்பது சில ஆண்டுகட்கு முன்பு அலட்சியப்படுத்தப் பட்ட ஒன்றாக இருந்தது, இன்றைக்கு அனைத்து நாடுகளும் போற்றி, அதை வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்கிற அளவுக்கு அக்கறையோடு நடத்தப்படும் ஒரு திட்டமாக ஆகிவிட்டிருக்கின்றது என்று உலக வங்கித் தலைவர் திரு. மக்நமாரா அவர்கள் அண்மையில் நடைபெற்ற கவர்னர்கள் மாநாடு ஒன்றில் சத்துணவுத் திட்டத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து உரை ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார்கள். நான் அவரைச் சந்தித்த நேரத்தில் இதை அவர்களிடத்தில் சுட்டிக் காட்டி, சத்துணவுத் திட்டத்திற்கு மத்திய அரசின் சார்பில் மாநில அரசுகளுக்கு வழங்கப்படுகின்ற அந்த உதவியைக் கோடிட்டுக் காட்டி, எங்களுடைய முக்கிய குறிக்கோளாக இருக்கும் சத்துணவுத் திட்டம் இந்தியாவில் மேலும் நல்ல முறையில் பரவுவதற்கு நல்ல உதவிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். நோய் நொடிகள் வந்த பிறகு





தடுப்பது என்பதைவிட, வருவதற்கு முன்பு தடுப்பதற்கு மருந்துகள் இருந்தாலும், அந்த மருந்துகளை விட மிக முக்கியமான தடுப்பாக கருதப்பட்டிருப்பது சத்துணவுதான். நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், நாம் வயிறார உண்ணத்தான் பழகிக்கொண்டிருக்கின்றோம், வயிறார உணவு என்பதை மாற்றி, வலிவான உணவு என்ற நிலைமைக்கு அவர்கள் வந்தாக வேண்டும் என்கிற முறையில்—நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் இரவு வீட்டிலே ஊறவைத்திருந்த பழைய சோற்றை எடுத்துச் சாப்பிடுவது, பிற்பகலிலேயும் அந்தச் சோற்றையே சாப்பிடுகிறார்கள்—நிறைய உணவு சாப்பிடுவது என்ற பழக்கத்தைக் கிராமப்புறத்திலும் நகர்ப்புறங்களிலேயும் நாம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். அதை விடுத்துச் சத்துள்ள உணவுகளை மேற்கொள்வது என்ற அந்தக் குறிக்கோளுக்கு நாம் வந்தாக வேண்டும். அதை பிரச்சார முறையில் செய்தாக வேண்டும். சத்துணவுத் திட்டம் குழந்தைகளிடத்திலும் அவர்களுடைய பெற்றோர்களிடத்திலும் பிரசாரம் செய்யப்பட்டு, இது வரையில் அளிக்கப்படாத காரணத்தால், நம்முடைய இந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் எத்தனை குழந்தைகள் சிறு வயதிலேயே பயங்கரமான நோய்களுக்கு ஆளாகின்றனர் என்கின்ற எடுத்துக் காட்டு இருந்தும், லட்சக்கணக்கான குழந்தைகள் சவலைப் பிள்ளை என்ற பெயரால் உடல் வீங்கி, கால் கை பெருத்தும், நடக்க முடியாத அளவுக்கு ஜீவனற்ற நிலைமையில் போய், கண் ஒளி மங்கியும், நோய் வாய்ப்படும் குழந்தைகளுடைய கஷ்டங்களை நாம் காண்கிறோம். ஏழை எளியோர்கள் வீட்டில் எவ்வித மாற்றமில்லாமல் நடுத்தர மக்கள் வீட்டில் கூட சத்துணவுத் திட்டத்தைச் சரிவர புரிந்துகொள்ளாத காரணத்தால், அவர்கள் நோய் நொடிகளை தடுக்கும் சக்தியை இழந்து விடுகிறார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என்னுடைய அருமைத் தாயார் அவர்கள் நான் பிற்பகல் உணவு சாப்பிடுவதற்குப் போனால் உணவு படைப்பதற்கு முன்பு ஒரு ஆப்பிள் பழத்தை எடுத்துச் சாப்பிடுவதைப் பார்த்து அம்மா சொல்வார்கள், சாப்பிடும் நேரத்தில் இதையெல்லாம் ஏன் சாப்பிடுகிறாய் என்று சொல்வார்கள். ஏதோ ஆப்பிள் நல்ல உணவல்ல என்பது போலவும் அவர்கள் போடும் சாதத்தைச் சாப்பிட்டால்தான் சத்துணவு என்பதைப்போல் கருதிக்கொண்டிருந்த ஒரு நிலைமை முன்பு வரை இருந்தது. அது மெல்ல மெல்ல மாறி வருகிறது. அது மேலும் நம்முடைய நாட்டில் கிராமங்களிலும், நகரப் பகுதிகளிலும் சில காலத்திற்கு முன்பு வரை இருந்தது. அது மெல்ல மெல்ல மாறி வருகிறது. அது மேலும் மாறி சத்துணவை மேற்கொள்வதற்கு நாம் அனைவருமே பழகிக்கொள்வதற்கான ஒரு சூழ்நிலையைப் பிரச்சாரம் மூலம் செய்தாக வேண்டும். ஆகவே, இன்றைக்கு மூன்று வயதுக்கு மேற்பட்ட 1,56,000 குழந்தைகளுக்கு நாம் இந்தச் சத்துணவு அளிக்கிறோம் என்பது அடையாள பூர்வமாகச் செய்யும் காரியமே தவிர, அது தமிழ் நாட்டிலிருக்கிற எல்லா ஏழை எளியவர் வீட்டுக் குழந்தைகளுக்கும் நல்லது செய்து விட்டோமென்று சொல்வதற்கு இல்லை. அதைச் செய்தாக வேண்டும். அதைப் பெரிய ராணுவ நடவடிக்கை போல் எடுத்துக் கொண்டு செய்தால், எதிர்காலத்தில் நல்ல வலிவுள்ள பிரஜைகளை நம்முடைய நாட்டில் நாம் உருவாக்க முடியும். நோயற்ற வாழ்வுள்ளவர்களை ஈட்டுவதற்கு இன்றைக்கு நடைபெறும் இந்தச் சத்துணவுத் திட்டம் மேலும் விரிவாக்கப்படும், அதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

[15th December 1971

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I beg to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, namely, the steps being taken by way of Air Raid Precaution and Civil Defence in amil Nadu.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம் நாட்டில் மேற்கு எல்லைகளில் யாதொரு தூண்டுதலும் இன்றிப் பாகிஸ்தான் நடத்திய விமானத் தாக்குதலின் விளைவாக, மத்திய அரசு நெருக்கடி நிலையை அறிவித்து, நம் நாடு முழுவதும் 1968-ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்தி உள்ளது. வங்காள தேசத்தின் தகராறுகளினால் ஏற்பட்டுள்ள நிலையினை இவ்வரசும் உணர்ந்துள்ளதோடு, அதற்கேற்ப முன் கூட்டியே நல்ல ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அதிகாரிகளைக் கொண்ட சிவில் பாதுகாப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, நிலைமையைப் பரிசீலிக்கவும், தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பெறுகின்றன.

காவல் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவியில் உள்ள அதிகாரி ஒருவர் சிவில் பாதுகாப்பு இயக்குநராக நியமிக்கப் பட்டுள்ளார். நம் மாநிலம் முழுவதும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவர் பொறுப்பாளி ஆவார். அவருக்கு உதவி செய்ய காவல் துறை துணை சூப்பரின்டென்டென்ட் பதவித் தரத்தில் உள்ள ஒருவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கார் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் சிவில் பாதுகாப்பு இயக்குநர் அலுவலகத்திற்கு அளிக்கப் பெற்றுள்ளன.

1962, 1965-ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானும், சீனாவும் நம் நாட்டின் மீது படையெடுக்க முயன்றபோது, நம் நாட்டிலுள்ள 19 கடற்கரை நகரங்களுக்காகவும், உள் பகுதியிலுள்ள தொழிற் சாலைப் பகுதிகளுக்காகவும் திட்டப்பெற்ற சிவில் பாதுகாப்புத் திட்டங்கள் தற்கால நிலைமைக்கேற்ப சீர் செய்யப்பெற்றுத் தயாராக உள்ளன. தமிழகத்திலுள்ள கடற்கரைப் பகுதிகளைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்துக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிவில் பாதுகாப்புச் சட்டம், சிவில் பாதுகாப்பு விதிகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளாக நகரத்திலும், மாவட்டங்களிலும் சிவில் பாதுகாப்புக் கன்ட்ரோலர்களை நியமித்தல், சிவில் பாதுகாப்பு அணிகளை ஏற்படுத்தல் ஆகியவை போன்ற பாதுகாப்புப் பணிகள் அனைத்துக்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள எல்லா மதங்களின் ஆலயங்கள், அரசு நிறுவனங்கள், பொதுக் கட்டிடங்கள், ஆகியவற்றை விமானத் தாக்குதலின்போது பாதுகாக்க மத்திய அரசிடமிருந்து பெறப் பெற்ற குறிப்புரைகளின்படி சிவில் பாதுகாப்பு இயக்குநர் ஆணைகள் பிறப்பித்துள்ளார்



15th December 1971]

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

சிவில் பாதுகாப்புக் குழுவின் முடிவுகளைத் தொடர்ந்து சென்னை நகரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் 27-11-1971, 6-12-1971 ஆகிய இரு நாட்களில் இருட்டடிப்பு ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் ஒத்திகையின்போது, நாளும், நேரமும் முன்னதாகவே அறிவிப்பு செய்யப்பட்டது. இரண்டாம் ஒத்திகையின்போது, நேரத்தைப் பற்றி முன்னறிவிப்பு செய்யாமலேயே, குறிப்பிட்ட மூன்று நாட்களுள் யாதேனும் ஒரு நாளில் ஒத்திகை நடைபெறும் என்று அறிவிப்பு செய்யப் பட்டது. அடுத்த ஒத்திகை நாள் குறிப்பிடாமலேயே நடத்தப் படும். இந்த ஒத்திகைகள் மிகவும் வெற்றிகரமாகவே நடைபெற்றுள்ளன. நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் விமானத் தாக்குதலுக்கான அபாயச் சங்கொலி கேட்கப்பெறும் பரப்பினை அதிகரிக்க, தற்போது உள்ள 40 அபாயச் சங்குகளுக்குக் கூடுதலாக, மேலும் 60 அபாயச் சங்குகள் பொருத்தப்படும். தகுந்த 12 இடங்களில் அபாயச் சங்குகளைப் பொருத்த 60 அடி உயரமுள்ள இரும்புச் சிகரங்களும் அமைக்கப்படும். 4.40 p.m.

THIRU G. VASANTHA PAI : May I bring to the attention of the Hon. the Chief Minister that the papers have published how the City looked during the black-out from the University Buildings Clock tower as well as the Transport shed?

MR. CHAIRMAN : The hon. Member should have known that on a statement made in response to a call-attention notice no discussion or argument is allowed.

THIRU G. VASANTHA PAI : Sir, I was only bringing the facts to the notice of the Hon. the Chief Minister.

MR. CHAIRMAN : The Call Attention Notice given notice of by Thiru V. Thangapandian is postponed.

## IV. GOVERNMENT BILLS.

### (1) *The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill*, 1971 (*L.A. Bill No.* 38 *of* 1971.).

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. I want to bring to the notice of the House that when we are saying that we should have utmost economy during the emergency, we should not consider the Bill but postpone its consideration to another day.

THE HON. THIRU S. MADHAVAN : It is not a point of order, Sir. The hon. Member is only giving his opinion.

தலைவரவர்களே, சட்ட பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் : 38/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென நான் முன்மொழிகிறேன்.

---

@ Printed as Appendix I on pages 1–62.

[திரு. செ. மாதவன்] [15th December 1971

இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யும்போது பற்பல செலவுகள் ஏற்படுகின்றன. அவற்றை ஓரளவு சரிக்கட்டிக்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ரூ. 100-ஐ ஈட்டுப்படியாக 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் அளிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

பேரவை உதவித் தலைவருக்கும், மேலவை உதவித் தலைவருக்கும் கொடுக்கப்படும் ஊர்திப்படியினை மாதத்திற்கு ரூ. 100-ல் இருந்து 200 ஆக உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

இறந்துபோன சட்டமன்ற உறுப்பினரது பதவிக்காலம் முடிவடையாத காலத்தில் அன்னார் குடும்பத்தினருக்கு மாதம் ரூ. 100 படியாக வழங்கப்படும் என்று 1970ஆம் ஆண்டில் இவ்வரசு சட்டமியற்றியது. இச் சட்டம் அமுலுக்கு வருமுன்பே இறந்து போன பல சட்ட மன்ற உறுப்பினர்களது குடும்பத்தினர் இந்தப் படியைத் தங்களுக்கும் வழங்க விண்ணப்பத்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் இந்தச் சலுகையைத் தருவதற்கும் இந்தப் படியினை 1967-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் அல்லது அதற்குப்பின் இறந்து போன சட்ட மன்ற உறுப்பினர்களது குடும்பத்தினருக்கு வழங்குவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

தற்பொழுது தமிழ் நாடு 1951-ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் சம்பளம் அல்லது படியினது உரிமம் விடுதல் ரத்து செய்ய யாதொரு விதித்துறை இல்லை. எனவே இந்தச் சம்பளம் அல்லது படியினது உரிமம் விடுதல் ரத்து செய்வதற்காக மேற்படி சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இப்போது மேலவை முன் உள்ள இம் மசோதாவில் இது குறித்து விதித்துறைகளும் அமைந்துள்ளன. இம்மேலவை, இத்தீர்மானத்தை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, I feel that this Bill should not be brought before this House at this juncture. We are in a state of emergency and we are imposing on ourselves the extreme economy measures in all fields and in all walks of life. It will be a bad example for legislators like us to set before the country to increase our own salary during the emergency when we have said that we will give moneys to the war fund, to the National Defence Fund. I request that the consideration of this Bill may be postponed till the emergency is over and it may be returned to the Assembly with a recommendation that the Bill will be taken up after the emergency. I think that it will be in consonance with the spirit of patriotism of every one of us and we shall not allow any move to increase our own salary and enrich ourselves.



15th December 1971]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தத் தொகையை அதிகப்படுத்தித் தருவது என்கின்ற இந்த முடிவு நெருக்கடி நிலை ஏற்பட்ட பிறகு செய்யப்பட்டதல்ல. அதற்கு முன்பே, பல மாதங்களுக்கு முன்பே, சட்டப் பேரவையிலே இது அறிவிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இப்பொழுது சட்டப் பேரவையிலும் இது நிறைவேற்றப்பட்டு, இங்கே வருகிறபோது இது தேவையில்லை என்று கூறுவதற்காகச் சொல்லப்படுகின்ற காரணம் தேசப்பற்று, நாட்டு நெருக்கடி என்ற அடிப்படையிலே சொல்லப்படுவதால், சட்டப் பேரவையிலே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் அந்த அடிப்படையிலே இதைக் கண்ணுறாமல் நிறைவேற்றிவிட்டார்கள் என்கின்ற ஒரு தவறான கருத்துக்கு ஆளாக நேரிடும். தேசப் பாதுகாப்பு நிதிக்கு தாராளமாக யாரும் பணம் தரலாம். இந்த அதிகப்படியாக வாங்குகின்ற பணத்தை நெருக்கடி நிலை தீருகிற வரையிலே கூட பணம் வாங்க வேண்டாம் என்று எண்ணுகிற உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் போன்றவர்கள், அதைப் பெற்றுக் கொள்ளாமல், நெருக்கடி நிலை தீருகிற வரையிலும் தேசப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கினால், அதை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எந்தவிதத் தடங்கலாகவும் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக தேசப் பாதுகாப்பு, அதிகப் படியான தொகை வழங்குவது, இந்த இரண்டையும் ஒன்றோடொன்று இணைத்துக் குழப்புவது தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். மேலும் நாம் அனைவரும் ஏதோ தேசப் பாதுகாப்பில் ஈடுபடாது இப்படிப்பட்ட பாதுகாப்பில் ஈடுபடுகிறோம் என நம்மை நாமே குற்றம் சாட்டிக்கொள்கிறோம் என்றும் தோன்றும். ஆகவே இந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு. இது தேவையில்லை என்று கூறுவது நல்லதல்ல என்று இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 5, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. I want to know whether there is voting on a Money Bill.

THIRU K. RAJARAM : It is not certified as a Money Bill.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971), as passed by the Assembly, be passed".

[15th December 1971

MR. CHAIRMAN : The question is—

" That the Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 38 of 1971), as passed by the Assembly, be passed ".

The motion was put and carried and the Bill was passed.

THIRU G. SWAMINATHAN : On a point of clarification, Sir, This Bill deals with money and is a Money Bill. I do not know how it has not been certified as a Money Bill. This is actually a Money Bill and no vote could be taken on it.

MR. CHAIRMAN : The Hon. Speaker certifies a Bill as a Money Bill if it is a Money Bill. He has not certified this Bill as a Money Bill.

(2) *The Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971).*

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேலவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு சட்ட மன்ற (தகவின்மை நீக்கல்) (திருத்த சட்டமுன் வடிவு @ (சட்ட பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் முன் மொழி கிறேன்.*

*தமிழ் நாடு 1967-ஆம் ஆண்டு சட்ட மன்ற (தகுதியின்மை நீக்குதல்) (திருத்த) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 3/1967) 2-வது பிரிவு, மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் எதுவும், அந்தப் பதவி வகிப்பவர் சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை அல்லது அவ்வாறு உறுப்பினராக இருப்பதைத் தகுதியற்றதாக ஆக்காது அல்லது இதுவரை என்றுமே தகுதியற்றதாக ஆக்கியிருப்பதாகக் கருதப்பட மாட்டாது எனக் கூறுகிறது. இது சட்டமாகிய பின், பல்வேறு நிர்வாகக் காரியங்களுக்காக பல குழுக்களும், வாரியங்களும், தமிழ் நாடு அரசாலும் இந்திய அரசாலும் அமைக்கப்பட்டன. (இந்திய அரசு அமைத்த) ஆதாயப் பதவிகள் குறித்த இணைக்குழு இத்தகைய அமைப்புகளில் ஒருவர் உறுப்பினர் பதவி, செயலாளர் பதவி அல்லது தலைவர் பதவி வகிப்பது, நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவரைத் தகுதியற்றவராக்கக் கூடாது என்று பரிந்துரை செய்துள்ளது. இத்தகைய அமைப்புகளில் தமிழ் நாடு மாநிலச் சட்டமன்ற*
4-50 p.m. *உறுப்பினர்கள் இருக்கலாம் அல்லது சட்ட மன்ற பேரவைக் காயினும், மேலவைக்காயினும் தேர்தலில் போட்டியிட விழைபவர்கள் இருக்கலாம். எனவே, இத்தகைய அமைப்புகளில் உறுப்பினர் பதவி அல்லது செயலாளர் பதவி அல்லது தலைவர்*

@ Printed as Appendix II on pages 626-628.



15th December 1971] [*திரு. செ. மாதவன்*]

*பதவியை வகிப்பவர், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக அல்லது அவ்வாறு உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி யற்றவராகாமலிருக்க, தமிழ் நாடு 1967-ஆம் ஆண்டு சட்டமன்ற (தகுதியின்மை நீக்குதல்) சட்டத்தின் விவர அட்டவணையில் இத்தகைய குழுக்களும், வாரியங்களும், சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*இப்போது இம்மேலவை முன் வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன் வடிவு அதற்கிணங்க சில விதித்துறைகளைத் தன்னகத்தே கொண் டுள்ளது. இம்மேலவை இதனை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

MR. CHAIRMAN : Motion moved—

" That the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

* THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, I find there
are two items mentioned here, namely, State Advisory Committee
for the Territorial Army in Delhi and in the State of Bihar. I
want to know whether anybody from our State is a member of
these committees. Out of 30 Committees now included, all the
other 28 items are meaningful. I do not understand why the
State Advisory Committees for the Territorial Army in Delhi and
in the State of Bihar have been included.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மத்திய அர*
*சாங்கம் இதுபோன்ற குழுக்களை அமைக்கும்போது, பாராளுமன்ற*
*உறுப்பினராக இருந்தாலும் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்க*
*ளாக இருக்க வாய்ப்பு கிடைத்தாலும் சரி, பாராளுமன்ற உறுப்பி*
*னர்களாக இருந்து அவர்கள் மறுபடி சட்டமன்றத்திற்கு தேர்த*
*லில் நின்று வரும்போது, இது போல ஆட்சேபணைகளைக் கிளப்பக்*
*கூடாது என்று யோசனை கூறுகிறார்கள். அந்த யோசனையை*
*ஏற்றுக்கொண்டு, நியமிக்கப்படுகிற குழுக்களிலே இந்த அவையில்*
*இருப்பவர்கள் அல்லது போட்டி போட விரும்புகிறவர்களுக்கு*
*விதி விலக்கு இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டு*
*வரப்பட்டிருக்கிறது.*

* THIRU M. RAJAH IYER : Sir, I wanted to know the reason
why the State Advisory Committees for the Territorial Army in
Delhi and in the State of Bihar have alone been specified. Can
we not say " State Advisory Committees on Territorial Army in
any State of India "?It may be that in the other States also such
Advisory Committees may come to function at a later stage. If
we are adding the Committees which are outside the State, we can
include the State Advisory Committees for the Territorial Army
in any State in the country. so that the membership of such
Committees will not be a disqualification for seeking election to
the Legislative Assembly or Council. I am referring to items
Nos. 54 and 56. Can we not say " State Advisory Committees
for the Territorial Army in any State in the country "?

[15th December 1971

THE HON. THIRU S. MADHAVAN : I want to explain the position. The Joint Committee on Offices of Profit set up has recommended these names to be included. That is why we have included them.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971) as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, I move—

"That the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Bill, 1971 (L.A. Bill No. 41 of 1971) as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) *The Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 49 of 1971).*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி (திருத்த பதவிக்கால நீடிப்பு) சட்ட முன்வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

1971-ம் ஆண்டின் சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) சட்டத்தினால், சென்னை மாநகராட்சி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக் காலம் 1-11-1973 வரையிலும் நகராட்சி மன்றங்களின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 1-5-1974 நண்பகல் வரையிலும், நீட்டிக்கப்பட்டுள்ளது. இக்காலங்களுக்குப் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமானது, மேற்கூறிய சட்டத்தினால், ஐந்தாண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்துக்கும் இது போன்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கேற்ப 1971-ம்

@ Printed as Appendix III on pages 628–629.



15th December 1971]

[திரு. மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன்]

ஆண்டின் மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக் கால நீட்டிப்பு) மசோதா இந்த மேலவையின் முன் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளது. அதில்,

(அ) மதுரை மாநகராட்சி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 1-5-1974-ம் நாள் நண்பகல் வரை நீட்டிக்கப்படவும் ;

(இ) அதற்குப் பின்னர் சாதாரணத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக நிர்ணயிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர, இன்னொரு பிரிவும் இம்மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, இதர சட்டங்களில் நகராட்சிக்குப் பொருந்தக்கூடிய இனங்களெல்லாம், மதுரை மாநகராட்சிக்கும் சமமாகப் பொருந்துவதற்கு வகை செய்யும் முறையில் நான்காம் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. மதுரை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டதனால், சட்டங்களை அம்மாநகராட்சிக்குப் பொருந்தும்படி செய்ய அல்லது பொருள் விளக்கங்களை அளிப்பதிலுள்ள சில சிரமங்களை அல்லது ஐயப்பாடுகளை இப்பிரிவு அகற்றும். இச்சொற்களோடு இம் மசோதாவை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுமென இம் மேலவைக்கு பரிவுரை செய்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 49 of 1971) as passed by the Assembly, be taken into consideration."

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே. இப்போது சென்னை மாநகராட்சியிலே வருடாவருடம் மேயர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அப்படி இல்லாமல் 5 வருடத்திற்கும் தொடர்ச்சியாக இந்த மேயர் இருக்க வகை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மேயர் ஆண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால் இந்த உறுப்பினருடைய பதவிக்காலம் 5 ஆண்டுகள். இதே 5 ஆண்டுக் காலம் நகராட்சி மன்றங்களுக்கும் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கும் தருகிற முறையில் இவர்களுக்கும் தரப்பட்டிருக்கிறது. மேயர் ஆண்டிற்கு ஒரு முறை தான் தேர்ந்தெடுக்கப்படுவார்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 49 of 1971), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 5, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1971-ம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி (திருத்த பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 49/1971) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The question is—

"That the Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Bill, 1971 (L.A. Bill No. 49 of 1971), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

*(4) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 50 of 1971).*

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மேலவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1971) பரிந்துரைகள் செய்யப் படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டு மென்று நான் முன் மொழிகிறேன்.

1964-ம் ஆண்டு இந்திய நாணய (திருத்த) சட்டம் (மத்திய சட்டம் 17/1964) நிறைவேற்றப்பட்டதன் விளைவாக, மேற்படி சட்டத்தில் வருகிற "நயா பைசா", "நயா பைசா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காசு" என்னும் சொல் அமைத்துக் கொள்ளப்படவேண்டும். அதற்கேற்ப தமிழ் நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் 4-வது பிரிவைத் திருத்தக் கருதப் படுகிறது.

ஒவ்வொரு காட்சிக்கும் "காட்சி வரி" எனப்படும் கூடுதல் வரியை விதிக்க, மேற்படி சட்டத்தின் 4-எ பிரிவு வகை செய்கிறது. ஆனால், காட்சி என்ற சொல்லுக்குச் சட்டத்தில் பொருள் விளக்கம் கூறப்படவில்லை. எனவே, தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கைகள் சட்டத்தின் 4-எ பிரிவுக்குப் பிறகு ஒரு விளக்கத்தைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் காட்சி என்னும் சொல்லுக்குப் பொருள் விளக்கம் கொடுப்பதெனக் கருதப்படுகிறது.

மேற்படி சட்டத்தின் கீழ்ச் சேரவேண்டிய நிலுவைகளை, நிலவரி நிலுவையைப் போல் வசூலிப்பதற்கு, மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவு வகை செய்கிறது. அத்தகைய வசூல்கள் தற்போதைய விதித்துறைகளின் கீழ் முன்னரே உள்ள வில்லங்கங்களுக்கு உட்பட்டவையாகும் என்று நீதிமன்றங்கள் தெரிவித்

@ Printed as Appendix IV on pages 629-632.



[மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்]

துள்ளன. எனவே, மேற்படி சட்டத்தின் கீழ்ச் சேரவேண்டிய தொகைகள் நிலவரி தொடர்பாக அரசுக்குள்ள உரிமைக்குட்பட்டு, உரிமையாளர்களின் சொத்தின் மீதுள்ள எல்லா உரிமைக் கோரிக்கைகளையும் விட மேலோங்கி நிற்கும்.

யாரிடமிருந்து உரிமையாளருக்குத் தொகை சேரவேண்டுமோ அல்லது தொகை சேரவேண்டியதாய் இருக்குமோ அவரிடமிருந்து அல்லது உரிமையாளருக்காக அல்லது அவரது கணக்கில் தொகை வைத்துள்ள அல்லது பின்னர் வைத்திருக்கக்கூடிய ஒருவரிடமிருந்து மேற்படி சட்டத்தின் கீழ்ச் சேரவேண்டிய தொகைகளை வசூலிக்க தற்போதைய சட்டத்தில் வகை செய்யப்படவில்லை. மேலும், கலைக்கப்பட்ட கூட்டு பங்கு நிறுவனங்களிடமிருந்தோ அல்லது பாகப் பிரிவினையான இந்துக் குடும்பங்களிடமிருந்தோ மேற்படி சட்டத்தின் கீழ்ச் சேர வேண்டிய தொகைகளை வசூலிக்கவும் இச்சட்டத்தில் வகை செய்யப்படவில்லை. மேற்படி சட்டத்தின் கீழ்ச் சேர வேண்டிய தொகைகளைச் செவ்விய முறையில் வசூலிக்க வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் கண்டுள்ள விதித் துறைகளுக்கிணங்க இச்சட்டத்திலும் ஏற்ற விதித் துறைகளைச் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

மேற்படிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் கீழ் நடக்கும் ஒரு விசாரணையின் தொடர்பாக சாட்சியம் கூறவும் ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டவும் ஒருவருக்கு சம்மன் அனுப்பி வரவழைப்பதற்கு தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளைச் சேர்ந்த 58-எ, 59, 60 ஆம் விதிகள் வகை செய்கின்றன. இது குறித்து சட்டத்திலேயே திட்டவட்டமான விதித்துறை செய்யப்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. மசோதாவின் 7-வது பிரிவு இதற்கு வகை செய்கிறது.

இச்சட்டத்திற்கெதிரான குற்றங்களை இசைந்து தீர்த்துக்கொள் வதற்கு சட்டம் இப்போது வகை செய்கிறது. விதிகளுக்கெதிரான குற்றங்களையும் இசைந்து தீர்த்துக்கொள்ள இந்த விதித் துறையில் வகை செய்யப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. 5-00 p.m.

நடைமுறைக்கு வசதியாய் இருக்கும்பொருட்டு, வரி, கட்டணம் அபராதம் அல்லது செலுத்தத்தக்க வேறு ஒரு கட்டணத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகையையும் மிக அண்மையிலுள்ள ரூபாய்க்கு முழுமையாக்க இம்மசோதா வகை செய்கிறது.

தமிழ்நாடு 1964-ம் ஆண்டு வரி வசூல் சட்டம் சென்னை மாநகருக்கு நீட்டிக்கப்பட்டதன் விளைவாக மேற்படி சட்டத்தின் 10-எ பிரிவைத் தக்கவாறு திருத்த இம்மசோதாவின் 5-வது பகுதி முற்படுகிறது.

மேலவைத் தலைவரவர்களே, இம்மசோதாவை ஏற்குமாறு இம் மேலவையினை நான் வேண்டுகிறேன்.

(Deputy Chairman in the Chair.)

தெடுக்கப்பட்டவராக வருவதற்கு முயற்சிக்கப்படுமா? தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருந்தால், இன்னும் உற்சாகமாகவும் ஊக்கம் அளிப்பதாகவும் இருக்கும். அதைப் பின்பற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஆந்திர மாநிலத்திலுள்ள ஜில்லா பரிஷத் எப்படி அமைந்திருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இது சம்பந்தமாக பல திட்டங்கள் அரசின் கவனத்திற்கு வந்து அவை ஆராயப்பட்டன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கொண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அமைந்திருக்கின்றன. அவை அந்தந்த மாவட்டத்திற்கான வளர்ச்சிப் பணிகளை ஆராய்ந்து அவற்றை விரைவாக நடைமுறைப்படுத்த எந்தப் பகுதியையும் புறக்கணிக்காமல் பார்த்துக்கொள்ள ஆட்சியாளர்களுடைய கவனத்திற்கு அவற்றைக் கொண்டுவர இப்படியான பணியைச் செய்துவருகின்றன. கொள்கை அடிப்படையில், குறிக்கோள் அடிப்படையில், அந்தத் திட்டங்கள் நிறைவேற்ற முடிவு காண்பது இம்மன்றத்தின் பணியாக இல்லை. பொதுவாக அங்கே நடைபெறுகின்ற பணிகளுக்கு முழுப் பொறுப்பாளியாக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். அவர் இதற்குத் தலைவராக இருப்பதால், உறுப்பினர்கள் எழுப்புகிற வினாக்களுக்கு தக்க விடையளித்து, பரிகாரம் காணுவது எளிதாக இருக்கிறது. மற்ற பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் கலந்துகொள்கிறார்கள். ஒருவரைத் தேர்ந்தெடுத்தால், அதனால் ஏற்படுகிற வேறுபாடுகளினால் இப்போதிருக்கிற நிலைமை கெடுவதற்கு ஏதுவாகும். பிறகு கட்சி அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கும் நிலைமை வரும். மாவட்ட ஆட்சித் தலைவர் என்றால், எல்லாக் கட்சிக்காரர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுவாக இருப்பார். இல்லாவிட்டால், அவரவர்கள் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அதனால் கட்சி அடிப்படையில் முடிவெடுக்கும் நிலைமை வரும். அந்தந்த மாவட்டத்தில் உள்ள பணிகளின் விவரம் தெரியாதவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே உட்கார்ந்திருந்தால், உறுப்பினர்கள் எழுப்புகிற வினாக்களுக்கு பதில் அளிக்க முடியாமல், சட்டசபை சபாநாயகரைப்போல, நீ பேசு, நீ பேசாதே, உட்கார் என்று சொல்லும் அளவில் தான் பணியாற்ற முடியும். ஆகையால் மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பது நல்லது என்ற கருத்து இருக்கிறது.

**திரு. அய்யணன் அம்பலம்:** கிராம வளர்ச்சித் துறைக்கும் மன்றத்திற்கும் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருப்பதால், இதை மீண்டும் பரிசிலனை செய்து வளர்ச்சி மன்றங்களுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் கிராம மக்களுக்கும் பஞ்சாயத்து ஒன்றியம், வளர்ச்சி முறைபற்றி ஆராயுமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வளர்ச்சி மன்றங்கள் பெரும்பாலும் ஆலோசனை மன்றங்களாகத் தான் இருக்கின்றன. அதற்கான சில அதிகாரங்களை அதிகமாகத் தரும்போது, வேண்டுமானால் இதை ஆராயலாம். ஊராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியங்களுக்கு இன்னும் இன்னின்ன அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பது பொருத்தமாக இருக்கும். வளர்ச்சி மன்றங்களுக்கு இப்போதிருப்பதைவிட அதிக அதிகாரங்கள் கொடுக்கும்போது அதை மாற்றுகிற சூழ்நிலை வரலாம். அந்தத் தலைவருக்கு சில பல அதிகாரங்கள் இருந்தால், அந்த அளவிலும் அது மாறலாம். இப்போது அப்படியல்ல. மாவட்டங்களில் உள்ள பிரச்சினையை உடனுக்குடன் தெரிந்து செயலாற்றுவதற்காக ஆறு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இம்மன்றம் கூடுகிறது. ஆகையால் அம்மன்றத்தின் பணிகள், அதிகாரங்கள் மாறும்போது இதைக் கவனிக்கலாம்.

**திரு. வி. வெங்கா:** ஆந்திர மாநிலத்தில் இயங்கி வருகின்ற ஜில்லா பரிஷத் என்பது நம்முடைய வளர்ச்சி மன்றங்களைக் காட்டிலும் சிறப்பாக இயங்குகிறது என்ற கருத்து பொதுவாக இருக்கிறது. ஜில்லா பரிஷத் ஆந்திராவில் எப்படி நடக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து அது ஏற்புடையதாக இருந்தால், அமுல்படுத்த முயல்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதை ஆராயும் முயற்சியை மேற்கொள்ளலாம். அதில் பலன் இருந்தால், ஏற்பதில் தவறிருக்காது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டங்கள் எந்த முறையில் நடத்தப்பட வேண்டுமென்பதற்கான விதிகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போது நடைமுறையில் அக்கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறாமல் இருப்பதையும் பலர் ஒரே சமயத்தில் எழுந்து பேசுவதும் அதனால் மாவட்ட வளர்ச்சிப் பணிகளைச் சரிவரச் செய்ய முடியாமல் இருப்பதையும் உணர்ந்து நம்முடைய சட்டமன்றங்களில் இருப்பதைப் போல, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எப்படி இயங்க வேண்டுமென்று விதிமுறை வகுக்க அரசு முன்வருமா? அத்துடன் வளர்ச்சி மன்றங்களின் சிபாரிசுகள் சரிவர அரசினால் ஏற்று நடத்தப்படவில்லை என்ற புகாரும் இருக்கிறது என்பதும் அரசிற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாக கூட்டங்கள் எப்படி நடைபெற வேண்டும் என்பதைப் பற்றி அதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவர் வரும்போது பார்க்கலாம். பொதுவாக வளர்ச்சி மன்றங்களின் நோக்கங்களைக் குறிக்க விதிமுறைகள் இருக்கின்றன.. அதை நடத்துவதில் பலவித சிரமங்கள் இருக்கின்றன என்றால், அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவரும் அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்தால், அரசு ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.